# விதையொன்று வளர்கிறது



அருட்பணி பிலிப்ஸ் இயேசுதாசன் அ.ம.தி.

# விதையொன்று வளர்கிறது

**கிறிஸ்தவம்**

க.பொ.த. உயர் தரம்

தரம் 13

(புதிய பாடத் திட்டம் 2009)

**அருட்பணி பிலிப்ஸ் இயேசுதாசன் அ.ம.தி.**

நூலின் பெயர் : விதையொன்று வளர்கிறது

ஆசிரியர் : அருட்பணி பிலிப்ஸ் இயேசுதாசன் அ.ம.தி.

பக்கங்கள் : 770

கடதாசி : 70 gsm

அழுத்தகம் : மெக்லின் அச்சகம், கொழும்பு 12.

வெளியீடு : அமல உதயம், உப்புவெளி, திருமலை

திகதி : 15 ஆவணி 2010

# அறிமுகம்

சென்ற வருடம் தேசிய கல்வி நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட க.பொ.த. உயர் தர வகுப்புகளுக்கான புதிய பாடத் திட்டத்துக்கு அமைய, "கிறிஸ்தவம்", "கிறிஸ்தவ நாகரீகம்" என்ற பாடங்களுக்கான பாட நூல்கள் எப்பொழுது வெளிவருமென உயர் தர வகுப்பு மாணவ மாணவிகளும், ஆசிரியர்களும் ஆவலோடு காத்திருப்பதை நான் நன்கு அறிவேன். இந்த வருட நடுப் பகுதியில் அப் பாடங்களுக்கான முதற் புத்தகங்கள், அதாவது தரம் 12 க்கான "கிறிஸ்தவம்", "கிறிஸ்தவ நாகரிகம்" என்ற பாடங்களுக்குரிய பாட நூல்கள் "மனித வார்த்தையில் இறை வார்த்தை", "கடுகு மரம்" என்ற தலைப்புகளில் வெளிவந்தன. அது இப்பொழுது உங்களுக்குக் கிடைத்திருக்குமென நம்புகிறேன். அதைத் தொடர்ந்து, இப்பொழுது "கிறிஸ்தவம்" என்ற பாடத்குரிய இரண்டாம் பாகம், அதாவது தரம் 13 க்கான பாட நூலை "விதையொன்று வளர்கிறது" என்ற தலைப்பில் வெளியிடுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். கிறிஸ்தவத்தை தங்கள் உயர்தரப் பரீட்சைக்கு ஒரு பாடமாக எடுக்கும் மாணவ மாணவிகளுக்கும், அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இது பெரும் மன ஆறுதலை அளிக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

இந்த இரண்டாம் புத்தகத்திறகு "விதையொன்று வளர்கிறது" என்ற தலைப்பைக் கொடுத்திருக்கிறேன். ஏனெனில் இப் பகுதி பெரும்பாலும் திருச்சபையின் வரலாற்றையே உள்ளடக்குகிறது. அதாவது நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து, ஒரு சிறிய கடுகு விதைபோல் பன்னிரு சீடர்களுடன் எருசலேமில் ஆரம்பித்த திருச்சபை எப்படி கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக துளிர் விட்டு, மெதுவாக மெதுவாக வளர்ந்து, பல நாடுகளிலும் தன் கிளைகளைப் பரப்பி, ஒரு பெரிய விருட்சமாக வளர்ந்திருக்கிறது, இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதே இங்கு நாம் படிக்கும் விடயமாகும். திருச்சபையின் ஆரம்பம் தொட்டு, இன்று வரையிலான அதன் வளர்ச்சி, அதாவது, அதன் ஆரம்பம், அமைப்பு. வழிபாட்டு முறை, அதன் அபிவிருத்தி, அதன் விரிவடைவு, அது புரிந்துள்ள நற்செயல்கள்,

அதற்கு ஏற்பட்ட குரோதங்கள், அது முகங்கொடுத்த சவால்கள், அதற்குக் கிடைத்த வெற்றிகள், தோல்விகள் போன்றவற்றைப் பற்றிய விபரங்களின் தொகுப்பையே நாம் படிக்கிறோம்.

திருச்சபையின் வரலாற்றைக் கற்பதன் வழியாக நாம் பல நன்மைகளை அடைகிறோம். நம் முன்னோர்கள் எவ்வாறு கிறிஸ்தவத்தை வாழ்ந்தனர்? தம் விசுவாசத்தைக் காப்பாற்றுவதற்காக எத்துணை தியாகங்கள் செய்தனர்? அவ் விசுவாசத்தை மற்றவர்களுடன் எவ்வாறு பகிர்ந்து கொண்டனர்? அதனை எவ்வாறு எங்கும் பரப்பி வளர்த்தனரென நாம் அறிய வரும் பொழுது, அவ் விசுவாசத்தின் உயர்ந்த பெறுமதியை நாம் உணர்ந்து, எம் விசுவாசத்தை மதித்து உறுதிப்படுத்தவும், அதைப் பாதுகாக்கவும், எம் மதப் பற்றை வளர்த்து அதிகரிக்கவும் தூண்டப்படுகிறோம். தொடர்ந்து எம்மைச் சுற்றி வாழும் இன்னும் அதை அறியாதவர்களுக்கு அதை அறிவிக்கவேண்டிய நம் கடமையை உணர்ந்து, நாமும் அப் பணியில் ஈடுபட உந்தப் படுகிறோம். அது மட்டுமன்றி, நம் மறை வாழ்விலும் பணியிலும் குறுக்கிடும் எதிர்ப்புகளையும், இடையூறுகளையும், சவால்களையும் நாம் எதிர்கொள்வதற்கு வேண்டிய மன உறுதியையும், துணிவையும் பெற்று, அதற்குரிய வழிமுறைகளையும் அறிய வருகிறோம்.

வரலாற்று நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் நடைபெறுகின்றன. எம் முன்னோர்கள் தம் மத வாழ்வில், தம் மதத்தின் வரலாற்றில் பல கலாபனைகளையும், எதிர்ப்புகளையும், மத விரோதிகளையும் சந்தித்தனர். அதேபோல் நாமும் இன்று நம் மதவாழ்வில் பலதரப்பட்ட கலாபனைகள், எதிர்ப்புகள், மத விரோதிகளைச் சந்திக்கிறோம். இன்னும் சந்திக்க வேண்டி ஏற்படும். எனவே அத்தகைய சந்தர்ப்பங்களில், நாம் மனம் தளராது, துணிவுடன் அவற்றிற்கு முகங் கொடுக்க, விடாமுயற்சியுடன் விசுவாசத்தில் இறுதிமட்டும் உறுதியாய் நிலைத்திருக்க திருச்சபை வரலாறுபற்றிய அறிவு நமக்குப் பெரிதும் உதவியாயிருக்கும். மேலும் இன்று நம் நாட்டில் திருச்சபைக்கு எதிராக பல பொய்ப் பிரச்சாரங்களும், அதன் செயல்பாடுகள்பற்றிய தப்பான கதைகளும் பரப்பப்படுகின்ற வேளையில், அதன் உண்மையை நாம் அறியவும், மற்றவர்களுக்கு அதை அறியக் கொடுக்கவும் திருச்சபையின் வரலாற்றைப் படிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். சுருங்கக் கூறின்,

திருச்சபையின் கடந்த கால வரலாற்றை அறியவருவது, நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் நம் கிறிஸ்தவ வாழ்கைப் பயணத்தை மன உறுதியுடன் மேற்கொள்ளவும், திருச்சபையை நம் நாட்டில் கட்டியெழுப்புவதற்கும் பெரும் உதவியாக அமையும்.

எனவே திருச்சபையின் கடந்த கால வரலாற்றை அறிய வருவதற்கும், எதிர்கால வரலாற்றை ஆக்க பூர்வமான முறையில் எழுதுவதற்கும் "விதையொன்று வளர்கிறது" என்ற நூல் பெரும் உதவியாக இருக்கும் என்பது என் நம்பிக்கை. உங்கள் பரீட்சையை திறம்பட எழுதுவதற்கு மட்டுமல்ல, உங்கள் வாழ்வை சிறந்த முறையில் வாழ்வதற்கும் இந் நூல் பயன்பட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன். நன்றி!

அருட்பணி பிலிப்ஸ் இயேசுதாசன் அ.ம.தி.

அமல உதயம்,
உப்புவெளி.
திருமலை.
21 வைகாசி 2010

## ஆசியுரை

திருச்சபையின் வரலாற்று ஏடுகள் பல்வேறு மொழிகளில், வேறுபட்ட வடிவங்களில், காலத்திற்குக் காலம் வெளிவந்து கொண்டிருந்தாலும், நம் ஈழத் திருநாட்டில் தமிழ் மொழியில் திருச்சபை வரலாறு பற்றிய நூலானது மிக அருமையாகவே காணப்படுகிறது. இதன் காரணமாக கிறிஸ்தவத்தை, கிறிஸ்தவ நாகரீகத்தை தமிழ் மொழியில் பயிலும் உயர்தர மாணவ மாணவிகள், அவர்களுககு கல்வி புகட்டும் ஆசிரியர்கள் சிறந்த திருச்சபையின் வரலாற்று ஏடொன்று தமிழ் மொழியில் இல்லாமையின் காரணமாக பல இக்கட்டு இடைஞ்சல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர்.

இக்கால கட்டத்தில் அருட்தந்தை பிலிப்ஸ் இயேசுதாசன் அடிகளார் உயர்தர வகுப்பு மாணவ மாணவிகளின் நலன்கருதி, தமிழ் மொழியிலே வடிவமைத்த "விதையொன்று வளர்கிறது" என்ற திருச்சபை வரலாற்று ஏடானது மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இவர் இவ் ஏட்டிலே, ஈராயிரம் ஆண்டு கால திருச்சபையின் வரலாற்றை இரத்தினச் சுருக்கமாக வெளியிட்டுள்ளார். இவ் ஏடானது எத்தனையோ உயர்தர கிறிஸ்தவ தமிழ் மாணவ மாணவியர், ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வது மட்டுமல்ல, நீண்ட காலமாக நிலவி வந்த சிறந்த திருச்சபை வரலாறு பற்றிய நூல் தமிழில் இல்லாமை என்ற குறையையும் நிறைவு செய்கின்றது. இவ் ஏடானது உயர்தர பரீட்சைக்காக தங்களை ஆயத்தம் செய்யும் மாணவ மாணவிகளுக்கு மட்டுமல்ல. இன்னும் தமிழ் மறைமாவட்டங்களிலே பணிபுரியும் மறை ஆசிரியர், அருட்தந்தையர், அருட் செல்வர், செல்வியர் அனைவருக்குமே சிறந்ததோர் திருச்சபையின் வரலாற்றுக் கையேடாகவும் விளங்குகின்றது. அழகு தமிழ், எளிய மொழி நடை, தெளிவான கருத்துக்கள், விரிவான விளக்கங்கள் ஆகியன இந் நூலின் சிறப்பு அம்சங்களாகும்.

அருட்தந்தை பிலிப்ஸ் இயேசுதாசன் அடிகளார் அனுபவம் வாய்ந்த ஓர் எழுத்தாளர். இவர் தமிழ் மொழியில் மாத்திரமல்ல, ஆங்கில மொழியிலும் எத்தனையோ வரலாற்று நூல்களை அண்மைக்காலத்தில் வெளியிட்டுள்ளார். அண்மையில் அவர் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்குகென வெளியிட்டுள்ள "மனு வார்த்தையில்

இறைவார்த்தை", "கடுகு மரம்" என்ற நூல்கள் பலரின் மதிப்பையும், பாராட்டையும் பெற்று விளங்கும் சிறந்த நூல்களாகும்.

அருட்தந்தை பிலிப்ஸ் இயேசுதாசன் அடிகளார் எழுத்துத் துறையில் மட்டுமல்ல, மறை ஆசிரியர், உயர்தர வகுப்பு மாணவ மாணவியர், அருட் செல்வர்கள், செல்விகள் போன்றோருக்கு கிறிஸ்தவத்திலே, திருச்சபையின் வரலாற்றுத் துறையிலே கருத்தரங்குகள், பயிற்சிப் பாசறைகள், பரீட்சை மீளாய்வுகள் போன்றவற்றை நடாத்துவதிலும் சிறந்த அனுபவம் பெற்றவர். இவரது அயரா முயற்சியானது ஈழத்திருநாட்டில் தமிழ் நூல்கள் பெருகிட வழிசமைப்பது மாத்திரமல்ல, இன்னும் அதிகமான தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் உருவாகுவதற்கும் வழிகோலுகின்றது. இவர் மேற்கொண்டுள்ள எழுத்துத் துறைக்கு இவர் திருவிவிலியக் கல்வியிலே பெற்றுள்ள பாண்டித்தியம், குருமாணவர்களைப் பயிற்றுவிப்பதில் இவர் கொண்டுள்ள பல்லாண்டு அனுபவம், அமல மரித் தியாகிகளின் போதகத் துறையில் இவர் ஆற்றிய அளப்பரிய சேவை ஆகியன இவருக்கு உறு துணையாக உள்ளன.

இவர் எழுத்துத் துறையில் கொண்டுள்ள ஆர்வம் மென்மேலும் வளம் பெற்று, இன்னும் நல்ல பல நூல்களை உருவாக்கி, தமிழர் தாயகத்திற்கு அளப்பெரிய தொண்டுகள் புரிந்திட என் இதயபூர்வமான வாழ்த்துக்களோடு, இறை ஆசியை வேண்டி நிற்கிறேன்.

தேசிய குருமடம், அம்பிட்டியா.
31. வைகாசி 2010

அருட் திரு றெஜினோல்ட் லூசியன் அ.ம.தி.
பேராசிரியர் - திருச்சபை வரலாற்றுத் துறை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அறிமுகம் | iii |
| | ஆசி உரை | vi |
| 6.0. | பல நூற்றாண்டுகளாக இடம்பெற்ற திருச் சபையின் வளர்ச்சியை இனங்கண்டு, இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்குப பங்காளிகளாவர். | 1 |
| 6.1. | திருச்சபையின் ஆரம்பகாலம் பற்றிய விடயங் களைத் தெரிந்து கொள்வர். | 1 |
| 6.1.1. | திருச்சபையின் ஆரம்ப காலம் | 3 |
| 6.1.1.1. | தூய ஆவியின் வருகை | 5 |
| 6.1.1.2 | யூத பின்னணிக் காலத்தில் கிறிஸ்தவம் | 11 |
| 6.1.1.3. | திருச்சபையின் விசேட பண்புகள் | 13 |
| 6.1.1.4 | புனித ஸ்தேவான் | 16 |
| 6.1.1.5. | திருச்சபையின் வளர்ச்சி | 22 |
| 6.1.1.6. | எருசலேம் பொதுச்சங்கம் கூடப்பட்ட பின்னணி | 30 |
| 6.1.1.6.1. | எருசலேம் பொதுச் சங்கம் | 33 |
| 6.1.1.6.2. | எருசலேம் சங்கத்தின் தீர்மானங்கள் | 35 |
| 6.1.2. | புனித பவுலின் மறைத்தூதுப் பயணங்கள் | 37 |
| 6.1.2.1. | புனித பவுலின் வாழ்வும் பணியும் | 38 |
| 6.1.2.2. | சவுலின் அழைத்தலும் மனமாற்றமும் | 39 |
| 6.1.2.3. | புனித பவுலின் மறைத் தூதுப் பயணங்கள் | 43 |
| 6.1.2.3.1 | புனித பவுலின் முதல் மறைத் தூதுப் பயணம் | 44 |

| | | |
|---|---|---|
| 6.1.2.3.2. | பவுலின் இரண்டாவது மறைத்தூதுப் பயணம் | 48 |
| 6.1.2.3.3. | பவுலின் மூன்றாவது மறைத்தூதுப் பயணம் | 59 |
| 6.1.3. | புனித பவுலின் முக்கிய படிப்பினைகள் | 65 |
| 6.1.3.1. | இறையருள் | 67 |
| 6.1.3.2. | கிறிஸ்துவின் தலைமைத்துவமும் தாழ்ச்சியும் | 72 |
| 6.1.3.3. | உயிர்ப்பும் மறுவருகையும் | 81 |
| 6.1.3.3.1 | இறந்தவர்களின் உயிர்ப்புப் பற்றிய பவுலின் படிப்பினை | 88 |
| 6.1.3.3.2. | கிறிஸ்துவின் (இரண்டாம்) மறுவருகை | 93 |
| 6.1.3.4. | குடும்ப வாழ்வு | 98 |
| 6.1.3.5. | சகோதரத்துவமும் ஒற்றுமையும் | 103 |
| 6.1.3.6. | தூய ஆவியின் கொடைகளும் கனிகளும் | 107 |
| 6.2. | திருச்சபைத் தந்தையர்களின் காலத்தில் திருச்சபையின் வளர்ச்சியை ஆராய்வர். | 117 |
| 6.2.1. | திருச்சபையில் தோன்றிய முக்கிய பேதகங் களும், அவற்றிற்கு எதிராகக் கூடப்பட்ட திருச் சபையின் பொதுச் சங்கங்களும் | 120 |
| 6.2.1.1. | முக்கிய பேதகங்கள் | 123 |
| 6.2.1.1.1. | ஆரிய பேதகம் | 124 |
| 6.2.1.1.2. | மசதோனிய பேதகம் | 128 |
| 6.2.1.1.3. | பெலாஜிய பேதகம் | 129 |
| 6.2.1.1.4. | நெஸ்தோரிய பேதகம் | 131 |
| 6.2.1.1.5. | இயுக்திக்கேய பேதகம் | 134 |

| | | |
|---|---|---|
| 6.2.1.1.6. | மோனோத் தேலா பேதகம் | 138 |
| 6.2.2. | திருச்சபைத் தந்தையர்கள் | 139 |
| 6.2.2.1. | புனித யுஸ்தின் | 141 |
| 6.2.2.2. | தேர்த்தூலியன் | 143 |
| 6.2.2.3. | ஒரிஜன் | 145 |
| 6.2.2.4. | புனித அத்தனாசியுஸ் | 147 |
| 6.2.2.5. | புனித எரோம் | 149 |
| 6.2.2.6. | புனித அகுஸ்தினார் | 151 |
| 6.2.2.7. | புனித அலெக்சாந்திரியா சிறில் | 155 |
| 6.3. | ஐரோப்பாவில் முதன் முதல் திருச்சபை பரவியமை பற்றிய வரலாற்றை விளங்கிக் கொள்வர். | 157 |
| 6.3.1. | ஐரோப்பாவில் திருச்சபை வளர்ச்சி அடைதல் | 160 |
| 6.3.2. | மத்திய காலம் (10-12ம் நூற்றாண்டு வரை) | 168 |
| 6.3.3. | மத்திய காலத்தில் திருச்சபையில் நிகழ்ந்த விசேட சம்பவங்களும், மாற்றங்களும் | 175 |
| 7.0. | ஐரோப்பாவில் திருச்சபை எதிர்கொண்ட சவால் களும், அவற்றை வெற்றி கொண்ட விதத்தை யும் கற்பதோடு, விசுவாசத்தை உறுதி செய்வர். | 185 |
| 7.1. | ஐரோப்பிய திருச்சபை பிளவுபட்டமை பற்றிய விடயங்களை அறிந்து கொள்வர். | 185 |
| 7.1.1. | திருச்சபை பிளவுபட்டமைக்கான சமய பின்னணி | 185 |
| 7.1.2. | மார்ட்டின் லூத்தரின் புரட்சி (1483-1546) | 197 |
| 7.1.3. | சுவிங்ளியின் புரட்சி (1484-1531) | 207 |

| | | |
|---|---|---|
| 7.1.4. | கல்வினின் புரட்சி (1509-1564) | 210 |
| 7.1.5. | எட்டாவது ஹென்றி அரசரின் புரட்சி (1509-1547) | 217 |
| 7.1.6. | மேற்கத்தேய சபை தொடர்ந்தும் பிரிவு படுதல் | 228 |
| 7.2. | உலகியல் கொள்கையின் எழுச்சியையும், திருச்சபையின் செயற்பாடுகளையும் விபரிப்பர் | 237 |
| 7.2.1. | திருச்சபையின் புனரமைப்பும் மறுமலர்ச்சியும் (1500-1750) | 237 |
| 7.2.2. | திரிதேந்தின் சங்கம் (1545-1563) | 240 |
| 7.2.3. | திருச்சபையின் சீரமைப்பில் திருத்தந்தையரின் பங்களிப்பு | 245 |
| 7.2.4. | திருச்சபையின் சீர்திருத்தத்தில் பங்களிப்புச் செய்த முக்கிய குருக்கள், துறவிகள் | 257 |
| 7.2.5. | திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு உதவிய துறவற சபைகள் | 264 |
| 7.2.6. | நவீன காலத்தில் திருச்சபையில் நிகழ்ந்த விசேட சம்பவங்களும், மாற்றங்களும் (1750-1960) | 274 |
| 7.2.7 | நவீன காலத்தில் சில முக்கிய திருத்தந்தை யர்கள் (1846-1963) | 281 |
| 7.3. | உலகில் திருச்சபையின் பங்களிப்பை விளங்கி, மக்களின் முன்னேற்றத்திற்காக தம்மை அர்ப்பணிப்பர். | 295 |
| 7.3.1. | கல்வித் துறையில் திருச்சபையின் பங்களிப்பு | 296 |
| 7.3.2. | விஞ்ஞான, தொழில் நுட்பத் துறையில் திருச்சபை யின், கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் பங்களிப்பு | 302 |
| 7.3.3. | கலைத் துறையின் வளர்ச்சிக்கு திருச்சபையின் பங்களிப்பு | 308 |

| | | |
|---|---|---|
| 8.0. | இலங்கைத் திருச்சபையின் வரலாற்றைக் கற்பதோடு, இலங்கைக் கிறிஸ்தவ திருச் சபையை இனங்கண்டு, சாட்சியம் பகர்வர். | 326 |
| 8.1. | ஐரோப்பிய காலத்தில் இலங்கைத் திருச்சபை யின் ஆரம்பத்தையும், அதன் வளர்ச்சியையும் விளக்குவர். | 326 |
| 8.1.1. | போர்த்துக்கேயரின் வருகைக்கு முற்பட்ட காலம். | 328 |
| 8.1.2. | போர்த்துக்கேயர் காலம் (1505-1657) | 337 |
| 8.1.2.1. | போர்த்துக்பேயர் இலங்கைக்கு வந்ததற்கான காரணங்கள் | 337 |
| 8.1.2.2. | டொம் லோறென்ஸோ டி அல்மெய்டா இலங்கைத் தீவில் வந்திறங்குதல் | 340 |
| 8.1.2.3. | போர்த்துக்கேயரின் வருகையின்போது இலங்கை யில் நிலவிய அரசியல் பின்னணி | 342 |
| 8.1.2.4. | அரசர் தர்மபாலா திருமுழுக்குப் பெறல் | 348 |
| 8.1.2.5. | போர்த்துக்கேய மறைபரப்பாளர்களின் பணி | 350 |
| 8.1.2.6. | போர்த்துக்கேயர் கால கலகங்களும், துன்புறுத்தல்களும் | 371 |
| 8.1.3. | ஒல்லாந்தர் காலம் (1658-1796) | 379 |
| 8.1.3.1. | போர்த்துக்கேய ஆட்சியின் முடிவும், ஒல்லாந்தரின் ஆட்சியின் உதயமும் | 379 |
| 8.1.3.2. | ஒல்லாந்தர் முன்னிலையில் கத்தோலிக்கரது அனுபவங்கள் | 382 |
| 8.1.3.3. | ஒல்லாந்தரின் துன்புறுத்தல்கள் முன் கத்தோலிக்க விசுவாசிகள் | 386 |
| 8.1.3.4. | ஒல்லாந்தர் காலத்தில் மறை பரப்புப் பணி | 389 |

| | | |
|---|---|---|
| 8.1.3.5. | ஒல்லாந்தரின் காலத்தில் கல்வி அபிவிருத்தி | 396 |
| 8.1.3.6. | ஒல்லாந்தரின் ஆட்சியினால் கிட்டிய நன்மைகள் | 398 |
| 8.1.3.7. | புனித யோசப் வாஸ் அடிகளாரது இலங்கை வருகை | 401 |
| 8.1.3.8. | புனித யோசப் வாஸ் அடிகளாரின் மறைப்பணி | 406 |
| 8.1.3.9. | உள்நாட்டுக் கலைக்கு அருட்திரு ஜாகோமே கொன்சால்வெஸ் அடிகளாரின் பங்களிப்பு | 419 |
| 8.1.3.10. | ஒறற்ரோறியன் மறைப் போதகர்களது பணி | 424 |
| 8.1.4. | ஆங்கிலேயர் காலம் (1796-1948) | 431 |
| 8.1.4.1. | ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றுதல் | 432 |
| 8.1.4.2. | ஆங்கிலேயர் காலத்தில் முழுமையான மதச் சுதந்திரம் | 438 |
| 8.1.4.3. | ஆங்கிலேயர் காலத்தில் இலங்கை வந்த மறைத்தூதுப் பணியினர் | 440 |
| 8.1.4.4. | ஆங்கிலேயர் காலத்தில் கத்தோலிக்க திருச்சபை | 445 |
| 8.1.4.5. | முழுமையான மதச் சுதந்திர காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | 452 |
| 8.1.4.6. | ஆங்கிலேயர் காலத்தில் கிறிஸ்தவ கல்வியின் வளர்ச்சி | 457 |
| 8.1.4.7. | சுதந்திர இலங்கையை உருவாக்குவதில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு | 469 |
| 8.2. | சுதந்திர இலங்கையில் திருச்சபை தொடர்பான விடயங்களை அறிந்து, அதற்கேற்ப செயற்படுவர். | 474 |

| | | |
|---|---|---|
| 8.2.1. | சுதந்திர இலங்கையில் திருச்சபை எதிர்கொண்ட பிரச்சினைகள் | 478 |
| 8.2.1.1. | கிறிஸ்தவ பாடசாலைகளை அரசு சுவீகரித்தல் | 481 |
| 8.2.1.2. | கிறிஸ்தவர்கள் மீதான இரக்கமற்ற விமர் சனங்கள் | 486 |
| 8.2.1.3. | இனக் கலவரங்களும், அமைதிச் செயற் பாடுகளும் | 488 |
| 8.2.1.4. | அடிப்படை வாத கிறிஸ்தவ இயக்கங்கள் | 490 |
| 8.2.2. | இலங்கைத் திருச்சபையில் 2ம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் தாக்கங்கள் | 493 |
| 8.2.2.1. | திருவழிபாடு | 494 |
| 8.2.2.2. | "இறைமக்கள்" எனும் எண்ணக் கரு | 497 |
| 8.2.2.3. | பொது நிலையினரின் மறைத் தூதுப்பணி | 499 |
| 8.2.2.4. | கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமையும், உரையாடலும் | 500 |
| 8.2.2.5. | கிறிஸ்தவமல்லாச் சமயங்களுடன் உரையாடல் | 503 |
| 8.2.2.6. | குருத்துவ, துறவற வாழ்வு | 507 |
| 8.2.2.7. | மக்கள் தொடர்பாடல் ஊடகம் | 509 |
| 8.2.2.8. | மனிதத்துவம், மனித உரிமைகள், மற்றும் கடமைகள் | 512 |
| 8.2.3. | தற்கால சமூகத்தில் இலங்கைத் திருச்சபை | 514 |
| 8..3. | இலங்கைச் சமூகத்தில் திருச்சபையின் பங்களிப்பை விளக்குவர் | 524 |
| 8.3.1. | கல்வித் துறையில் இலங்கைத் திருச்சபையின் பங்களிப்பு | 524 |

| | | |
|---|---|---|
| 8.3.2. | பண்பாடு, கலைத் துறையில் இலங்கைத் திருச்சபையின் பங்களிப்பு | 545 |
| 8.3.3. | சமூக சேவையில் திருச்சபையின் பங்களிப்பு | 552 |
| 9.0. | கிறிஸ்தவ திருவழிபாட்டில் பங்குபற்றுவதன் வழியாக கிறிஸ்தவ வாழ்வு வளர்ச்சியடைகிறது என்பதை விளங்கி, வாழ்வில் கடைப்பிடிப்பர். | 556 |
| 9.1. | விசுவாசத்தை வளர்க்க திருவழிபாட்டின் பங்களிப்பை ஆராய்வர். | 556 |
| 9.1.1. | தொடக்க கால கிறிஸ்தவ சமூகமும் திரு வழிபாடும் | 556 |
| 9.1.2. | கீழைத் தேய கத்தோலிக்க திருச்சபையின் வழிபாட்டு முறைகள் | 581 |
| 9.1.3. | மேலைத்தேய கத்தோலிக்க திருச்சபைகளின் திருவழிபாட்டு முறைகள் | 587 |
| 9.2. | அருளடையாளங்களைப் பெறுவதன் முக்கியத்து வத்தை விளக்குவர் | 590 |
| 9.2.1. | இயேசுக் கிறிஸ்துவே அருள் அடை யாளங்களின் மையம் | 590 |
| 9.2.2. | இயேசுக் கிறிஸ்துவே கடவுளின் முதன்மையான அருள் அடையாளம் | 593 |
| 9.2.3. | திருச்சபை: இயேசுக் கிறிஸ்துவின் அடிப்படை, ஆரம்ப அருள் அடையாளம் | 597 |
| 9.2.4. | திருமுழுக்கு அழைப்பு | 601 |
| 9.2.5. | நற்கருணையும் ஒற்றுமையும் | 616 |
| 9.3. | புதிய கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தூய ஆவியின் முக்கியத்துவத்தை விளக்குவர். | 630 |

| | | |
|---|---|---|
| 9.3.1. | திருவிவிலியத்தில தூய ஆவியார். | 631 |
| 9.3.2. | உலகில் தூய ஆவியின் செயற்பாடு | 646 |
| 9.3..3. | தூய ஆவியும் சான்று பகரலும் | 652 |
| 10.0 | நவீன சமூக போராட்டங்களின் மத்தியில் மனித நேயத்துடன் செயற்படுவர் | 661 |
| 10.1 | மானிட சமூக வாழ்வு பற்றிய கிறிஸ்தவ சிந்தனையை விளக்குவர் | 661 |
| 10.1.1. | மனித மாண்பு | 662 |
| 10.1.2. | பெண்கள் பற்றிய கிறிஸ்தவ சிந்தனை | 674 |
| 10.1.3. | மனிதனின் சமூக வாழ்வு | 683 |
| 10.1.4. | மனித வளர்ச்சியும் கிறிஸ்தவ பங்களிப்பும் | 688 |
| 10.2. | தற்கால சமூக முரண்பாடுகளையும், கிறிஸ்தவர்களின் பொறுப்பையும் பற்றி விளங்கிக் கொள்வர். | 698 |
| 10.2.1. | முரண்பாடுகளைக் களைதலும், அமைதியைப் பேணலும். | 699 |
| 10.2.2. | சூழல் பாதுகாப்பும் கிறிஸ்தவனின் பொறுப்பும் | 708 |
| 10.3. | கிறிஸ்தவ ஒன்றிப்புக்காவும், பல்வேறு சமயங்களுடன் உரையாடலுக்காகவும் மிகப் பொறுப்புடன் செயற்படுவர். | 721 |
| 10.3.1. | இலங்கையிலுள்ள முக்கிய கிறிஸ்தவ சபைகள் | 722 |
| 10.3.2. | கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான ஒன்றிப்பு | 732 |
| 10.3.3. | பல்வேறு சமயங்களுடனான உரையாடல் | 746 |

**தேர்ச்சி 6.0.** பல நூற்றாண்டுகளாக இடம்பெற்ற திருச்சபையின் வளர்ச்சியை இனங்கண்டு, இன்றைய திருச்சபை யின் வளர்ச்சிக்குப் பங்காளிகளாவர்.

**தேர்ச்சி மட்டம் 6.1.** திருச்சபையின் ஆரம்பகாலம் பற்றிய விடயங் களைத் தெரிந்து கொள்வர்.

திருச்சபையென்பது அனைத்துலக மீட்பராம் இறைமகன் இயேசுக் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை கொண்டு, அவருடைய போதனைகளை ஏற்று, அவர் பெயரால் திருமுழுக்குப் பெற்று, அவர் ஏற்படுத்திய அதிகாரத்தின் வழிநடத்துதலின் கீழ் வாழ்வோரின் சமூகத்தையே நாம் திருச்சபையென்று அழைக்கிறோம். இன்று தம்மைத் திருச்சபையென்று அழைத்துக்கொள்ளும் பலவித சபைகளைக் காண்கிறோம். ஆனால் இவற்றிலிருந்து உண்மைத் திருச்சபையை இனங் கண்டுகொள்ள, உண்மையான திருச்சபையின் சிறப்புப் பண்புகளாக ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தொலிக்கம் என்னும் நான்கு இலட்சணங்கள் உள்ளன.

**ஏகம்** என்னும் பதம் சபையினர்களுக்கிடையில் உள்ள ஒருமைப்பாட்டைக் குறிக்கிறது. இந்த ஒற்றுமை அவர்கள் ஏற்று விசுவசிக்கும் மறை உண்மைகளிலும், அவர்கள் கீழ்படிந்து வாழும் தலைமைத்துவத்தின் ஒருமைப்பாட்டிலும், அவர்கள் பங்கெடுக்கும் பொதுத் திருவழிபாடுகளிலும், திருவருட்சாதனங்களிலும் காணக்கிடக்கின்றன.

**பரிசுத்தம்** என்பது திருச்சபையின் மாசுமறுவற்ற தன்மையைக் குறிக்கிறது. திருச்சபை பாவிகளைத் தன் உறுப்பினர்களாகக் கொண்டிருந்தாலும், அது தன்னிலே மாசுமறுவற்றது. மேலும் அது பாவிகளாகிய தன் உறுப்பினர்களைப் பரிசுத்தமாக்கும் போதனை-களையும், திருவருட்சாதனங்களையும் கொண்டுள்ளது.

**கத்தோலிக்கம்** என்பது திருச்சபை எந்தவொரு நாட்டினருக்கும், இனத்தவருக்கும், பண்பாட்டுக்கும் மட்டுப்படுத்தப் பட்டதல்ல. அது அனைத்து நாட்டினருக்கும், அனைத்து பண்பாடுகளுக்கும், அனைத்து

மொழியினருக்கும், அனைத்துக் காலத்துக்கும் உரியது என்ற திருச்சபையின் பொதுத் தன்மையைக் குறித்து நிற்கிறது.

**அப்போஸ்தொலிக்கம்** என்பது இறைமகன் இயேசுக் கிறிஸ்துவால் தாபிக்கப்பட்ட திருச்சபை, திருத்தூதர் (அப்போஸ்தலர்) காலந்தொட்டு, இன்று வரை தொடர்ச்சியாக இருந்து வருவதைக் குறிக்கிறது. அதன் தலைமைத்துவமும் திருத்தூதர்களைத் தொடர்ந்து, முறிவின்றி நீடித்து வருவதையும் உணர்த்துகிறது.

இந் நான்கு இலட்சணங்களையும் தன்னகத்தே ஒருங்கே கொண்டுள்ள கிறிஸ்தவர்களின் சமூகத்தையே இங்கு நாம் திருச்சபையென அழைக்கிறோம். திருச்சபையின் ஆரம்ப காலம் எனும்போது அச் சபையின் ஆரம்பந்தொட்டு, முதல் மூன்றாண்டு வரையிலான காலப் பகுதியைக் குறிப்பிடுகின்றோம். அதற்கு இடைப்பட்ட காலத்தில் இடம் பெற்ற திருச்சபையின் தாபகம், ஆரம்பம், அமைப்பு, வழிபாட்டு முறை, அதன் அபிவிருத்தி, அதன் விரிவடைவு, அது புரிந்துள்ள நற்செயல்கள், அதற்கு ஏற்பட்ட குரோதங்கள், அது முகங்கொடுத்த சவால்கள், அதற்குக் கிடைத்த வெற்றிகள், தோல்விகள் என்பனவற்றின் விபரங்களின் தொகுப்பையே குறிப்பிடுகிறோம்.

திருச்சபையின் ஆரம்ப கால விபரங்களை நாம் திருத்தூதர் பணி நூலிலும், நான்கு நற்செய்திகளிலும், திருத்தூதர்களின் திருமுகங்களிலும், அப்போஸ்தொலிக்க பிதாக்களின் நூல்களிலும், மறைவு நூல்களிலும் படிக்கலாம். திருத்தூதர் பணி நூலில் நாம் திருச்சபை எருசலேமில் பரிசுத்த ஆவியின் வருகையுடன் ஆரம்பித்தது முதல், அது யூதேயா, சமாரியா, கலிலேயா, அந்தியோக்கியா, மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளெங்கும் பரவி, இறுதியாக உரோமையை அடைந்ததுபற்றிய வரலாற்றைப் படிக்கிறோம். மேலும், திருத்தூதரின் காலத்தை அடுத்து, அதாவது முதலாம் நூற்றாண்டின் முடிவிலும், இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வாழ்ந்து, அக்காலத் திருச்சபையின் படிப்பினைகள், வாழ்க்கை முறைகள், வழிபாடுகள், அமைப்பு முறைகள் பற்றி எழுதிய எழுத்தாளர்களை நாம் அப்போஸ்தொலிக்க பிதாக்களென்று அழைக்கிறோம். இவர்கள் அநேகமாக திருத்தூதர்களின் சீடர்கள். இவர்கன் ஆதித் திருச்சபையில் திருத்தூதர்களின் படிப்பினைகள், கிறிஸ்தவர்களின் வாழ்க்கை

முறைகள். திருவழிபாட்டு முறைகள், அதன் அதிகார அமைப்பு போன்றவைபற்றி மிகவும் பிரமாணிக்கமாய் எழுதியிருக்கிறார்கள். எனவே பண்டைகாலத் திருச்சபையின் வரலாற்றைப் படிப்பதற்கு அப்போஸ்-தொலிக்க பிதாக்களின் நூல்களும் மிகப் பெறுமதி வாய்ந்தவை.

அக்காலத்தில் எழுதப்பட்ட திருத்தூதர்களின் திருமுகங்கள், பேதுருவின் மறைபரப்புப் போதகம், பர்ணபாவின் கடிதம், பவுலின் பணி நூல், யோவானின் பணி நூல் போன்ற மறைவு நூல்களும் ஆதித் திருச்சபைபற்றி அறிவதற்கு எமக்கு உதவுகின்றன. இவைகள் பெரும்பாலும் திருத்தூதர்களிடமிருந்து பரம்பரைச் சொத்தாக ஏற்றுக் கொள்ளப்பட்டவையாக, அப்போஸ்தொலிக்க மரபை எதிரொ-லிப்பவையாக இருக்கின்ற படியால் ஆதித் திருச்சபையின் வரலாறுபற்றி அறிய எங்களுக்கு மிகவும் உதவுகின்றன. அக்காலத்தைய சில கிறிஸ்தவர்களல்லாத, பிளேவியஸ் யோசவ், ரசிற்றஸ், பிளினி போன்ற வரலாற்று ஆசிரியர்களின் நூல்களும் எங்களுக்கு உதவுகின்றன.

## 6.1.1. திருச்சபையின் ஆரம்ப காலம்

அனைத்துலக மீட்பராக உலகில் பிறந்த கிறிஸ்து, “காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி, நற்செய்தியை நம்புங்கள்” என்ற பறைசாற்றலுடன் தம் மீட்புப் பணியை ஆரம்பித்தார். அனைத்துலக மீட்பராகிய கிறிஸ்துவின் பணியானது யூத இனத்துக்கோ, அல்லது ஏதாவது பிறிதொரு குறிப்பிட்ட இனத்துக்கோ அல்லது குறிப்பிட்ட காலத்து மக்களுக்கோ அல்ல, மாறாக எக்காலத்திலும், எந் நாட்டிலும் வாழும் அனைத்துலக மக்க-ளுக்கும் உரியது. இயேசு தம் பணியின் ஆரம்பத்திலிருந்தே இதை உணர்ந்து செயல்பட்டார். எனவே தமக்குப் பின் தம் பணியைத் தொடர்ந்து ஆற்ற, உலகின் இறுதி எல்லைவரை, காலத்தின் முடிவுவரை வாழும், வாழப் போகும் அனைத்து மனுக்குலத்தினருக்கும் தம் மீட்புப் பணியைத் தொடர்ந்தாற்ற தம்மேல் நம்பிக்கை வைத்து, தம் போத-னைகளை ஏற்றுக் கொண்டவர்களில் பன்னிருவரைத், தம் சீடர்களாகத் தெரிந்தெடுத்து, அவர்களைத் தம்முடன் வைத்துக் கொண்டார். அவர்கள் தம் வாழ்விலும், பணியிலும் பங்கெடுக்க வேண்டுமென விரும்பினார். அவர்களும் இயேசுவின் அழைப்பை ஏற்று தம் வீடு வாசல்கள், சொந்த பந்தங்கள், தொழில் துறைகளைத் துறந்து, அவரிடம் வந்து,

அவரோடு தங்கியிருந்து, அவருடன் உண்டு குடித்து, அவர் சென்ற இடமெல்லாம் அவருடன் சென்று, அவர் நீண்ட போதனைகளைக் கேட்டு, அவர் செய்த அரும்பெரும் செயல்களைக் கண்டு, அவரோடு நெருங்கி ஒன்றித்து வாழ்ந்து வந்தார்கள்.

இயேசு அவர்களுக்கு தம் அரசைப் பற்றிய ஆழ்ந்த மறை உண்மைகளை தம் போதனைகள், உவமைகள், புதுமைகள் வழியாக தெளிவாகக் கற்பித்து உணர்த்தினார். அவர்களின் சந்தேகங்களை-யெல்லாம் தெளிவுபடுத்தி. இறையரசிற்குரிய புரட்சிகரமான மனநிலை, மனப்போக்கு, விழுமியங்கள், மதிப்பீடுகள், அனைத்துப் பண்புகளிலும் அவர்களைப் பயிற்றுவித்தார். அவர்களை தான் இஸ்ராயேலருக்கு அறிவித்து, அழைப்பு விடும் இறையரசின் இயல்பை, அதன் வாழ்வை மக்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டும் உண்மைச் சான்றுக-ளாய்த் திகழும் ஓர் புலன்களுக்கடுத்த அடிப்படை அமைப்பாக உருவாக்கினார். பின்னர் அப் பன்னிரு சீடர்களுடன் வேறு எழுபத்திரண்டு சீடர்களையும் தேர்ந்து கொண்டார். அவர்களுக்கு இறையரசுக்காக வாழத் தேவையான சகல அறிவையும், ஆற்றலையும் வழங்கியது-மல்லாமல், அவர்களுக்கு அவர்கள் பணியில் செயல்முறைப் பயிற்சியும் அளித்தார். இயேசுவின் வாழ்க்கையின் இறுதியில் அவருடைய சீடர்களின் தொகை 120 ஆக அதிகரித்திருந்தது. இயேசு தமக்குப் பின், தம்மிடமாக நின்று, அவர்களுக்குத் தலைமைதாங்கி, வழிநடத்த தம் சீடர்களுள் ஒருவரான பேதுருவைத் அவர்களுக்குத் தலைவராகவும் ஏற்படுத்தினார்.

இவ்வாறாக தாம் தேர்ந்தெடுத்த சீடர்களுக்கு தமக்குப்பின் தம் பணியைத் தொடர்ந்தாற்ற சிறப்புப் பயிற்சி அளித்து, தேவையான சகல உள்கட்டமைப்புகள் அனைத்தையும் செய்து முடித்த இயேசு, தாம் அவர்களைப் பிரிந்து விண்ணகம் செல்லுமுன், "விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்-பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத்.28:18-20) எனப் பணித்தார்.

அதே வேளையில், "இதோ என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ் வல்லமையால் ஆட்கொள்ளப்படும்வரை இந்நகரத்திலேயே இருங்கள்" (லூக்.24:49) என்று கூறிச் சென்றார். இயேசுவின் பணிப்-புரைக்கு அமைய அவருடைய பன்னிரு சீடரும் தாங்கள் தங்கியிருந்த மேல்மாடி அறைக்குச் சென்றார்கள். அவர்களோடு இயேசுவின் தாய் மரியாளும், வேறு சில பெண்களும், ஏனைய சகோதரர்களுமாக ஏறக்குறைய 120 பேர் அந்த அறையில் கூடினார்கள். அவர்கள் எல்லோரும் இயேசு வாக்களித்த தூய ஆவியின் வருகைக்காக விழித்துக் காத்திருந்து, அந்நாட்களைச் செபத்தில் செலவழித்தார்கள். இவ்வாறாக இயேசு தம் இவ்வுலக வாழ்நாளின்போது, தமக்குப் பின் தம் மீட்புப் பணியை உலகத்தின் கடைசி எல்லை வரைக்கும், அதன் இறுதி நாள் மட்டும் தொடர்ந்தாற்றவுள்ள திருச்சபைக்குரிய உள்கட்டமைப்பு அனைத்தையும் செய்துவிட்டுச் சென்றார்.

### 6.1.1.1. தூய ஆவியின் வருகை

(தி.தூ.ப. 2:1-13)

இயேசுவின் விண்ணேகத்தைத் தொடர்ந்து, அவருடைய சீடர்கள் 120 பேர். அவரின் பணிப்புரைக்கு அமைய, மேல்மாடி அறையில், அவருடைய தாய் மரியாளுடன் ஒன்று கூடி செபித்துக்கொண்டு, அவர் வாக்களித்த தூய ஆவியின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். இயேசுவும் தாம் வாக்களித்த தூய ஆவியை அனுப்புவதற்கு யூதர்களின் பெந்தக்கோஸ்தே தினத்தைத் தெரிந்து கொண்டார். யூத மதத்தில் மூன்று முக்கியமான திருவிழாக்கள் உண்டு: முதலில் பாஸ்கு விழா அல்லது கடத்தல் விழா, அடுத்து கூடாரத் திருவிழா, அடுத்து வாரங்களின் விழா. ஆரம்பத்தில் பாஸ்கா விழா அறுவடையின் ஆரம்ப விழாவாகக் கொண்டாடப்பட்டது. வாரங்களின் விழா அறுவடையின் முடிவு விழாவாகக் கொண்டாடப்பட்டது. அன்று இஸ்ராயேலர் தம் விளைநிலங்களின் புதுப் பலன்களின் முதல் கதிர்க்கட்டுக்களை காணிக்கையாக அளித்து, இறைவனுக்கு மகிழ்வுடன் நன்றி செலுத்தினர். பின்னர் பாஸ்கு விழா இஸ்ரயேலர் எகிப்திய அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற்று, சுதந்திர மக்களாக

வெளியேறியதை நினைவு கூரும் நாளாகக் கொண்டாடப்பட்டது. பாஸ்கா விழாவிற்குப் பின்வரும் ஐம்பதாம் நாள், அதாவது ஏழு வாரங்களின் பின் கொணடாடப்பட்ட வாரங்களின் விழா, கிரேக்க மொழியில் ஐம்பது எனப் பொருள்படும் "பெந்தக்கோஸ்து" விழா என அழைக்கப்பட்டது. இவ் விழா பின்னர் எகிப்திலிருந்து இஸ்ராயேலர் வெளியேறிய ஐம்பதாம் நாள், அவர்கள் சீனாய் மலையில் யாவேயோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவு கூரும் நாளாக, இறைவன் மோசேயிடம் பத்துக் கட்டளைகளை அளித்த நாளாகக் கொண்டாடப்பட்டது. அத் தினத்திலேயே இஸ்ரயேலர் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக, இறைமக்கள் குலமாக உருவாகியதை நினைவு கூர்ந்தனர். இயேசுவும் அத்தினத்திலேயே தம் சீடர்களைப் புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக, புதிய இறைமக்கள் சமூகமாக, புதிய இஸ்ராயேலாக, திருச்சபையாக உருவாக்கத் திட்டமிட்டிருந்தார்.

இவ்விழாக்களின் போது யாவே தம் திருப்பெயருக்கெனத் தாம் தேர்ந்து கொண்ட இடத்தில், இஸ்ரயேலரைத் தம் முன் வரப் பணித்திருந்தார். பாஸ்கா விழாவிற்கு பாலஸ்தீனாவிலுள்ள யூதர்களே அதிகமாக எருசலேம் வந்தனர். ஆனால் வாரங்களின் அல்லது பெந்தேகோஸ்து விழாவிற்கு உலகெங்கும் சிதறுண்டு வாழும் யூதர்கள் பெருந்திரளாக எருசலேம் சென்றனர். இத் திருவிழாவிற்காக உலகெங்கும் சிதறுண்டு வாழும் யூதர்கள் (பார்த்தர், மேதியர், எலாமியர், மெசப் பொத்தேமியா, யூதேயா, கப்பதோக்கியா, போந்து, ஆசிய நாடுகளில் வாழ்கிறவர்கள், பிரிகியா, பம்பிலியா, எகிப்து சீரேன் நகரையடுத்த லிபியாவின் பகுதிகளில் வாழ்கிறவர்கள், உரோமையர், கிரேக்கர், அரேபியர்) பெருந்திரளாக எருசலேமில் குழுமியிருந்த வேளையில்தான் தூய ஆவியின் வருகையுடன் திருச்சபை பிறந்தது. அத் தினத்தில்தான் இயேசுவை விசுவசித்தவர்கள் .திருமுழுக்குப் பெற்று, புதிய இறை மக்கள் சமூகமாக, புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக, புதிய இஸ்ரயேலராக உருவாகினரென்பது குறிப்பிடத்தக்கது.

**தூய ஆவியின் வருகை**

ஆண்டவர் இயேசுவின் கட்டளைப்படி அவருடைய சீடர்கள், ஏறக்குறைய 120 பேர், இயேசு தம் இறுதி இரவுணவை உட்கொண்ட மேல்மாடி அறையில், இயேசுவின் தாய் மரியாவுடன், செபித்துக்

கொண்டு, வாக்களிகப்பட்டிருந்த தூய ஆவியின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். ஐம்பதாம் நாள் திருவிழாவன்று திடீரென பெந்தக்கோஸ்தே நிகழ்ச்சி இடம்பெற்றது. இந் நிகழ்ச்சி எங்களுக்குத் திருத் தூதர் பணி நூலில் தரப்பட்டிருக்கிறது (தி.தூ.ப. 2:1-13). அங்கு நடந்ததை தெளிவாகக் கூற முடியாமல் திருத் தூதர் பணி நூல் ஆசிரியர் தத்தளிப்பதை நாம் காண்கிறோம். "கொடுங்காற்று வீசுவது **போன்ற** ஒரு இரைச்சல்... நெருப்புப் **போன்ற** பிளவுற்ற நாவுகள்" பழைய ஏற்பாட்டில், சீனாய் மலையில், இறை மாட்சியை விபரிக்கப் பயன்படுத்திய சொற்களை ஆசிரியர் இங்கு பயன்படுத்தி, தூய ஆவி இறைவன் என்பதையும், அவர் மேலிருந்து இறங்கி வருவதையும், அவருடைய பிரசன்னத்தையும், இறை நீதியையும் உணர்த்துகிறார். நெருப்பு இறுதிக் காலத்தின் தூய்மையின் அடையாளம். காற்று வீசுதல் ஆவியை, புதிய சக்தியை அளிப்பதைக் காட்டுகிறது. தூய ஆவி பிளவுபட்ட நா வடிவில் அங்கு கூடியிருந்த ஒவ்வொருவர் மேலும் வந்திறங்கியது வலியுறுத்தப்படுகின்றது. "**ஒவ்வொருவர்** மேலும் வந்தமர்ந்து... **அனைவரும்** தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு... அவர்கள் **ஒவ்வொருவரும்** வெவ்வேறான மொழிகளில் பேச" என்று மும்முறை கூறுகின்றார். அதாவது தூய ஆவி எல்லோருக்கும், முழுத் திருச்சபைக்கும் அளிக்கப்படுகிறார். இவ்வளவு காலமும் நடந்தது போல் ஒரு சிலருக்கு (இறைவாக்கினர், இயேசு) ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் அளிக்கப்பட்டது போலல்ல, ஆனால் அங்கு கூடியிருந்த அனைவர் மேலும் தூய ஆவி வந்திறங்கினார். "அவர்கள் அமர்ந்திருந்த வீடு **முழுவதும்**". தூய ஆவி வந்திறங்கியதல்ல, மாறாக அவர் அனைவர் மேலும் வந்திறங்கியதே பெந்தக்கோஸ்து நிகழ்சியின் தனிச் சிறப்பு. இதை இறைவாக்கினர் யோவேல் முன்னறிவித்திருந்தார்: "இறுதி நாளில் **எல்லோர்** மேலும் ஆவியைப் பொழிவேன்" (யோவே. 2:28-32). தூய ஆவியின் வருகை சீனாய் மலையில் இறைவன் மோசேக்கு காட்சி கொடுத்ததை எமக்கு நினைவூட்டுகிறது. இது ஒரு புதிய யுகத்தின் ஆரம்பத்தை, புத்துயிர் அளிக்கப்படுவதை, புதிய இஸ்ரவேலர் இனம் உருவாகுவதை, திருச்சபையின் பிறப்பை குறிக்கின்றது.

இயேசுவின் சீடர்கள் தூய ஆவியைப் பெற்றதற்கான வெளி அடையாளங்களாக தூய ஆவியின் செயற்பாடுகள் அருங்குறிகளாகத்

தரப்படுகின்றன. படிப்பறிவில்லாத கலிலேயர் அயல் மொழிகளில் பேசத் தொடங்கினர். இவ்வாறு அயல் மொழிகளில் பேசுவதை மற்றவர்கள் தத்தம் சொந்த மொழியில் கேட்டனர். இந் நிகழ்வு எமக்கு பாபேல் கோபுர நிகழ்ச்சியை (மொழிக் குழப்பம், மக்கள் சிதறுண்டு செல்லுதல்) நினைவுபடுத்துகிறது. ஆனால் இங்கு வெவ்வேறு மொழி பேசுகின்றவர்கள் ஒன்று சேருகின்றார்கள். சீடர்கள் அயல் மொழிகளில் பேசுவது, அவர்கள் பணி அகிலமெங்கும் தேவை என்பதைக் காட்டுகிறது. பெந்தக்கோஸ்து விழாவிற்காக உலகெங்கு-மிருந்து வந்திருந்த யூதர்கள் தத்தம் மொழிகளில் நற்செய்தி போதிக்கப்படுவதைக் கேட்பது, சீடர்கள் நற்செய்தியை உலகெங்கும் சென்று, பல இன மக்களுக்கும் பல்வேறு மொழிகளிலும் போதிக்க வேண்டுமென்பதைக் காட்டுகிறது. தூய ஆவி கிறிஸ்துவின் சீடர்கள் உலகெங்கும் சென்று எல்லா இன மக்களுக்கும் நற்செய்தியைப் போதிக்கத் தூண்டி, அவர்களை வழிநடத்தி உதவி செய்கிறார் என்பதை ஆசிரியர் நமக்குத் தெளிவாக உணர்த்துகிறார். இயேசுவின் கதி தமக்கு ஏற்பட்டுவிடுமோ எனப் பயந்து, பூட்டிய அறையில் ஒழிந்திருந்த சீடர்கள் துணிவுடன் வெளியே வந்து, அனைத்துலகிலுமிருந்து வந்திருந்த அத்தனை தொகை மக்கள் முன்னிலையில் அச்சமின்றிப் போதித்தது, தூய ஆவியின் கொடைகளை அவர்கள் நிறைவாகப் பெற்றிருப்பதைக் காட்டுகிறது. கிறிஸ்தவம் அனைத்துலக மதம் என்பதை நாம் இங்கு தெளிவாகக் காண்கிறோம்.

பழைய யூத சம்பிரதாயத்தின்படி, ஆரம்பத்தில் பெந்தக்கோஸ்து விழா அறுவடையின் முடிவு விழாவாகக் கொண்டாடப்பட்டது. பின்பு அவ்விழா இஸ்ராயேலர் சீனாய் மலையில் இறைவனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை, இறைவன் மோசேக்கு பத்துக் கட்டளைகளை அளித்ததை நினைவு கூரும் விழாவாகக் கொண்டாடினர். ஆனால் புதிய ஏற்பாட்டில் இன்று கிறிஸ்தவர்கள் பெந்தக்கோஸ்து விழாவை தூய ஆவியின் வருகையின் விழாவாக, திருச்சபையின் பிறப்ப விழாவாக, திருச்சபை செயலூக்கம் பெற்றதை நினைவு கூரும் விழாவாக கொண்டாடுகின்றனர். சீனாய் மலை உடன்படிக்கை வழியாக இஸ்ரயேலர் இறைமக்கள் குலமாக உருவாகிய தினத்திலேயே புதிய இஸ்ரயேல் குலம், திருச்சபை, தூய ஆவியின் வருகையுடன் உருவாகியது குறிப்பிடத்தக்கது.

பெந்தக்கோஸ்து நிகழ்சியின்போது காணப்பட்ட இறைமாட்சியின் அடையாளங்கள் மறைந்துவிட்டன. ஆனால் திருச்சபைக்கு கொடுக்கப்பட்ட அரும் பெரும் கொடையாகிய தூய ஆவியானவர் என்றும் திருச்சபையில் இருக்கிறார். தனது தலைவராம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை எதிர்கொள்ளச் செல்லும் திருச்சபையின் திருப்பயணத்தின்போது, ஆவியானவர் அதை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, அன்பில் ஒற்றுமைப்படுத்தி, நற்செய்தியை அறிவிக்கும் பணியில் வழிநடத்தி, பாதுகாத்து வருகின்றார். பெந்தக்கோஸ்து விழாவிலே கிறிஸ்துவின் பாஸ்கா அதன் உச்ச நிலையை அடைகிறது. இயேசு இறந்து, உயிர்த்தெழுந்து, இறைத் தந்தையின் வலப்பக்கம் உயர்த்தப்பட்டு, அப்போஸ்தலர் மீது தம் ஆவியை அனுப்பியதில் தம் மீட்புப் பணியை முற்றுப் பெறச் செய்தார். ஆகவே பெந்தக்கோஸ்து விழா கிறிஸ்தவர்களுக்கு இயேசுக் கிறிஸ்துவின் மீட்புப் பணியின் நிறைவு விழாவென்பதைப் பார்க்கிறோம்.

**திருச்சபையின் ஆரம்பம்**

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பெற்று, புத்துயிரும் செயலூக்கமும் பெற்றவர்களாய், அப்போஸ்தலர்கள் உடனடியாகத் தம் புது வாழ்வை, பணியை ஆரம்பித்தனர். பன்னிருவரும் எழுந்து நிற்க, பேதுரு மற்ற எல்லோருடைய பெயராலும் உரையாற்றுவதாகக் காட்டி, பேதுருவின் தலைமைத்துவத்தை ஆசிரியர் உணர்த்துகிறார். பேதுருவே முதல் மறையுரையை ஆற்றுகிறார். படிப்பறிவற்ற, கோழை மீன்பிடித் தொழிலாளியாகிய பேதுரு, பெந்தக்கோஸ்து விழாவிற்காக் கூடியிருந்த அத்தனை ஆயிரம் யூத மக்கள் முன்னிலையில் துணிவுடன் எழுந்து-நின்று பேசிய போது பரிசுத்த ஆவியே அவர் வழியாகப் பேசினார். தனது உரையின் ஆரம்பத்தில் பேதுரு பெந்தககோஸ்து நிகழ்ச்சியில் இறைவன் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக இறைவாக்கினர் யோவேல் வழியாக முன்னறிவித்ததே நிகழ்ந்ததென விளக்கினார். “இறுதி நாட்களில் நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன். உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர்”.அந்நாட்களில் உங்கள் பணியாளர் பணிப்பெண்கள் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன். அவர்களும் இறைவாக்குரைப்பர்... (யோவே. 2:28-32). இறைவாக்கினர் யோவேல் பெந்தக்கோஸ்து நாளிலே

இறைவாக்கினர் முன்னறிவித்துக் காத்திருந்த நாளை, ஆண்டவரின் வாக்குறுதி நிறைவேறிய நாளை, புதிய யுகம், திருச்சபை ஆரம்பமாவதைக் காண்கிறார்.

**பேதுருவின் உரை**

தொடர்ந்து பேதுரு ஆற்றிய முதல் உரையில் திருத்தூதர்களின் போதனையின், நற்செய்தியின் முக்கிய சாரம்சம்சத்தை, மையக் கருத்தை (கெறிக்மா) அறிவிக்கிறார். இச் சாரம்ச அறிவிப்பு வடிவம் திரும்பத் திரும்ப திருத்தூதர் பணி நூலில் வரும் மறையுரைகளில் காணப்படுகிறது. முதலில் இயேசுவுக்கு நடந்ததெல்லாம் பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளின் நிறைவாகவே இடம்பெற்றன என்பது எண்பிக்கப்படுகிறது. தொடர்ந்து இயேசுவில் மெசியா வந்துவிட்டார், மெசியா பற்றிய இறைவாக்குகள் நிறைவேறிவிட்டன, புதிய சகாப்தம் உதயமாகிவிட்டது என விளக்கப்படுகிறது. அடுத்து, தாவீதின் குடும்பத்தில் பிறந்த இயேசு, போதித்து, அருங்குறிகள் செய்து, சிலுவையில் அறையப்பட்டு, கொலைசெய்யப்பட்டார். இறந்த இயேசு இறைவனால் இறந்தவர்களிடமிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு, ஆண்டவரும் மெசியாவும் ஆக்கப்பட்டார். இப்பொழுது அவர் இறைவனின் வலது பக்கத்தில் அமர்ந்திருக்கிறார் என்பது வலியுறுத்திக் கூறப்படுகிறது. அந்த இயேசு தம் அரசை இவ்வுலகில் நிலைநிறுத்த மீண்டும் மகிமையுடன் திரும்பி வருவார். இறுதியாக இயேசுவில் மட்டுமே நமக்கு மீட்பு உண்டெனக் கூறி, போதனை முடிவடைகிறது. இந்த நற்செய்தியின் சாரம்ச (கெறிக்மா) அறிவிப்பின் வடிவத்தை நம் திருத் தூதர் பணி நூலில் காணப்படும் ஏனைய மறையுரைகளிலும் காண்கிறோம். (தி.தூ.ப. 2:14-36: 3:11-26: 10:34-43)

கடவுளே இயேசுவை இஸ்ரயேலர் மத்தியில் அனுப்பி, அவர் செய்த புதுமைகள், அருங்குறிகள் வழியாக அவர் யாரென்று காண்பித்தார். ஆனால் இஸ்ரயேலரோ திருச்சட்டம் அறியாத உரோமையரைக் கொண்டு அந்த இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். இவையெல்லாம் தற்செயலாக அல்ல, மாறாக இறைவனின் திட்டப்படியும், முன்னறிப்பின் படியுமே நடந்தன. ஆனால் கடவுள் அவரை சாவில் இருந்து விடுவித்து, உயிர்த்தெழச் செய்தார்.

அவருடைய உயிர்த்தெழுதலுக்கு அவர் உயிர்த்தெழுந்த பின் அவருடன் உண்டும், குடித்தும் வந்த அவருடைய சீடர்களே சாட்சிகள். கடவுளின் வலப்பக்கத்திற்கு உயர்த்தப்பட்ட இயேசு தம் தந்தையிடம் கேட்டு சீடர்களுக்கு அனுப்பிய பரிசுத்த ஆவியின் வருகையே அன்று நடந்த பெந்தக்கோஸ்தே நிகழ்ச்சி. நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே கடவுள் உயிர்த்தெழச்செய்து, ஆண்டவரும் மெசியாவுமாக்கினார் என்பதை இஸ்ரயேலர் அனைவரும் அறிந்திருக்கட்டும். இவ்வாறு பேதுரு கூறி, இஸ்ரயேலர் செய்த இறைக் கொலைப் பழியை அவாகளுக்கு உணர்த்தினார்.

பேதுரு ஆற்றிய முதல் மறையுரையின் விளைவாக இஸ்ரயேலர் தாம் செய்த மாபெரும் குற்றத்தை உணர்ந்தனர். மனம்வருந்தினர். உள்ளம் குத்துண்டவர்களாய், அப்போஸ்தலர்களிடம் இப்போது தாங்கள் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டனர். பேதுரு அவர்களை மூன்று காரியங்கள் செய்யுமாறு ஆலோசனை வழங்கினார்: 1. மனம்மாறுங்கள். 2. உங்கள் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவதற்காகத் திருமுழுக்குப் பெறுங்கள். 3. நெறி கெட்ட இந்தத் தலைமுறையில் இருந்து விலகி வாழ்ந்து, உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அத்தினமே பேதுருவின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்ட மூவாயிரம் பேர் திருமுழுக்குப் பெற்று, திருச்சபையில் சேர்ந்து கொண்டனர். மறு நாள் பேதுரு சாலமோன் மண்டபத்தில் ஆற்றிய மற்றொரு உரையால் ஏறக்குறைய 5000 பேர் இயேசுவின் மேல் விசுவாசம் கொண்டு, திருமுழுக்குப் பெற்று, திருச்சபையில் இணைந்தனர். இவ்வாறாக தூய ஆவியின் வருகையுடன் ஆரம்பமாகிய திருச்சபை நாளுக்கு நாள் வளர்ந்து பரவியது.

### 6.1.1.2 யூத பின்னணிக் காலத்தில் கிறிஸ்தவம்

பாலாஸ்தீனா தேசத்தில், யூதர்களின் நாடாகிய யூதேயாவில், யூத மதத்தின் தலைநகரமாகிய எருசலேமில், யூதர்களின் பெருவிழாவாகிய பெந்தேகோஸ்து விழாவன்று, அவ் விழாவிற்காக அனைத்துலகிலுமிருந்து வந்து கூடியிருந்த யூதர்கள் மத்தியில், பரிசுத்த ஆவியின் வருகையுடன் கிறிஸ்தவம், திருச்சபை பிறந்ததெனப் பார்த்தோம். அத மட்டுமல்ல, இயேசு ஒரு யூதர். அவர் யூதமக்கள்

மத்தியில் பிறந்து, ஒரு யூதனாகவே வாழ்ந்தார். அவருடைய பெற்றோர்கள் அவரை யூத மதம், பண்பாடு. கலாச்சாரத்திலேயே வளர்த்தனர். தொடர்ந்து அவர் யூதர்களுக்கே அவர் தம் நற்செய்தியைப் போதித்தார். யூதர்களிடமிருந்தே அவர் தம் முதற் சீடர்களைத் தெரிந்தெடுத்தார். அவர்களும் ஆரம்பத்தில் யூதர்களுக்கே நற்செய்தியைப் போதித்தனர். பெந்தேகோஸ்து விழாவிற்காக எருசலேமில் கூடியிருந்த யூதர்களே முதலில் நற்செய்தி போதிக்கப்படுவதைக் கேட்டு, மனந்திருந்தி, திருமுழுக்குப் பெற்று, திருச்சபையில் சேர்ந்தனர். அவர்கள் பலஸ்தீனாவிலிருந்து வந்திருந்த எபிரேய மொழி பேசும் யூதர்களாக இருந்தாலென்ன, அல்லது பாலஸ்தீனாவுக்கு வெளியிலிருந்து வந்திருந்த கிரேக்க மொழி பேசும் யூதர்களாக இருந்தாலென்ன, அவர்கள் அனைவரும் யூதர்களே. ஸ்தேவானின் மறைசாட்சி மரணத்த அடுத்து எருசலேமிலிருந்து எங்கும் சிதறுண்டு ஓடிய சீடர்களும், தாம் சென்ற இடங்களில் தம் இனத்தவர்களாகிய யூதர்களுக்கே நற்செய்தியைப் போதித்து மனந்திருப்பினர். திருத்தொண்டர் பிலிப்பு சென்று நற்செய்தியைப் போதித்து, திருச்சபையில் சேர்த்த சமாரியர்களும் பிரிந்து சென்ற யூதர்களே. எனவே யூதர்களையே முற்று முழுவதும் உறுப்பினர்களாகக் கொண்டிருந்த ஆரம்ப திருச்சபை, யூத மத, பண்பாடு கலாச்சாரத்தைத் தழுவியதாகவே இருந்தது. அது யூத சமுதாயத்தின் ஒரு சிறு சமூகமாகவே காணப்பட்டது.

அது மட்டுமல்ல, கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையாகவே தோன்றியது. ஆதிக் கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதர்களாக இருந்ததால் தங்களுடைய பழைய யூத மத அனுட்டானங்களை, சடங்கு சம்பிரதாயங்களை கைவிட வேண்டுமென அவர்கள் கருதவில்லை. முதலில் கிறிஸ்துவும், பின்பு திருத்தூதர்களும், தொடர்ந்து ஆதிக் கிறிஸ்தவர்களும் எருசலேம் ஆலயத்திற்கும், யூத செபக்கூடங்களுக்கும் சென்று, அங்கு நடைபெற்ற யூத வழிபாடுகளிலும், பலிகளிலும், செபங்களிலும் பங்கெடுத்து வந்தனர். அவர்களின் திருவிழாக்களையும், செப நேரங்களையும், வழிபாட்டு அபிநயங்கள், வார்த்தைகளையும் தொடர்ந்து கடைப்பிடித்தனர். யூதர்களின் முக்கிய அறச் செயல்களான நோன்பு, செபம், தருமம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். கிறிஸ்தவர்களுக்கென்று அப்பம் பிட்குதல்,

திருமுழுக்கு, பகிர்தல் போன்ற சிறப்பு வழிபாடுகள் இருந்தாலும், அவர்கள் யூத மத பழக்க வழக்கங்களையே கடைப்பிடித்து வாழ்ந்தனர். திருத்தூதர்களின் போதனையால் அவர்கள் வழிநடத்தப்பட்டாலும், கிறிஸ்தவர்களுக்கென்று ஒரு வேத நூல் இருக்கவில்லை. யூதர்களின் வேத நூலையே (Tanak–பழைய ஏற்பாடு) ஆரம்ப கிறிஸ்தவர்களும் தங்கள் வேத நூலாகப் பயன்படுத்தினர். இந்த நிலை 70ம் ஆண்டில் எருசலேம் ஆலயம் உரோமையரால் தரைமட்டமாக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து 80ம் ஆண்டளவில் கூட்டப்பட்ட யூத ஜம்னியா சங்கத்தினால் கிறிஸ்தவர்கள் யூதர்களின் செபக் கூடங்கள், வழிபாடுகளுக்கு வருவது தடைசெய்யப்பட்டு, அப்புறப்படுத்தப்படும் வரைக்கும் நீடித்தது.

### 6.1.1.3. திருச்சபையின் விசேட பண்புகள்

(தி.தூ.ப. 2:42-47 4:32-37 5:12-16 6:1-7)

கிறிஸ்துவின்மேல் விசுவாசம் கொண்டு, அவர் பெயரால் திருமுழுக்குப் பெற்று, அவர் ஏற்படுத்திய அதிகாரத்தின் வழிநடத்துதலின் கீழ் வாழ்ந்த திருச்சபையின் அங்கத்தவர்களான எல்லோரும் ஒன்று கூடி, ஒரே சமூகமாக வாழந்தார்கள். ஆதிக் கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதர்களாக இருந்ததால் அவர்கள் தங்களுடைய பழைய யூத மத அனுட்டானங்களை, சட்டம், சடங்கு. சம்பிரதாயங்களைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வாழ்ந்தமையால், திருச்சபை யூத சமுதாயத்தில் ஒரு சிறு சமூகமென்றும், கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையென்றும் கருதப்பட்டு வந்தது. எனினும் இவ் ஆதிக் கிறிஸ்தவ சமுதாயத்தில், அவர்களை ஏனைய யூத மக்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டிய, கிறிஸ்தவத்தை யூத மதத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டிய சில சிறப்புப் பண்புகளும் இருந்தன. “அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்” (தி.தூ.ப. 2:42). ஆதித் திருச்சபையின் மத வாழ்வில் நாம் நான்கு முக்கிய சிறப்புப் பண்புகளைக் காண்கிறோம். ஆதிக் கிறிஸ்தவர்கள் பேதுருவின் மறையுரை வழியாக தாங்கள் பெற்றுக் கொண்ட முதல் விசுவாசத்தை, தொடர்ந்து அப்போஸ்தலர்களின் போதனைகளை கேட்பதன் வழியாக வளர்த்து உறுதிப்படுத்தினர்.

இறைவனை, கிறிஸ்துவை, மறையுண்மைகளை, வேத நூலை மென்மேலும் கற்றறிய ஆவலும் ஆர்வமும் உள்ளவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் எல்லோரும் திருத்தூதர்களின் தலைமைத்துவத்தின் கீழ் பொதுவாழ்வில் பங்கெடுத்து, ஒவ்வொருவருடன் அந்நியோன்னியமாகப் பழகி, நட்புறவுடன் உறவாடி, பொறுப்புணர்வுடன் நடந்தனர். உண்மைக் கிறிஸ்தவனுக்கு அடையாளமாக கிறிஸ்து கூறிய அன்பிலும், ஒற்றுமையிலும் ஒன்றித்து வாழ்ந்தனர். உடமைகள் நிலபுலன்கள் உள்ளோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப பகிர்ந்து அளித்தனர். பிறர் நல் வாழ்வில் அக்கறை கொண்டவர்களாய், அவர்களின் தேவைகளை நிறைவு செய்பவர்களாய் வாழ்ந்தனர். "அப்பம் பிடுதல்" என்பது நற்கருணையைக் குறிக்கும் ஒரு சொற்றொடராகும். ஆதிக் கிறிஸ்தவர்கள் எருசலேம் ஆலயம், செபக் கூடங்களுக்கு சென்று, அங்கு நடைபெறும் யூத பலிகளிலும், வழிபாடுகளிலும், செபங்களிலும் பங்கெடுத்தாலும், ஒவ்வொரு நாளும் தங்கள் தனியார் வீடுகளில் ஒன்று கூடி, கிறிஸ்தவர்களுக்கே உரித்தான நற்கருணை வழிபாட்டில் எளிய உள்ளத்தோடும், பேருவகையோடும் பங்குபற்றினர். ஓய்வு நாளையும் பிரமாணிக்கமாக அனுசரித்தனர். மேலும், தனித்தனியே மட்டுமல்ல, அவர்கள் எல்லோரும் ஒரே குடும்பமாக, ஒரே சமூகமாக ஒன்று கூடி, இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, தம் தேவைகளுக்காகவும், பிறருடைய தேகைளுக்காகவும் அவர் உதவியை வேண்டினர். இவ்வாறு அவர்கள் செபத்தில் இறைவனோடு ஒன்றித்து, ஒரு செபிக்கும் சமுதாயமாக இருந்தனர்.

மேலும் அவர்கள் இறைவன் தங்களோடு, தங்கள் மத்தியில் பிரசன்னமாக இருக்கிறார் என்ற உணர்வுடன், தேவ பயத்துடனும், பயபக்தியுடனும் வாழ்ந்தனர். இவ்வாறு உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் சமுதாயமாக வாழ்ந்தனர் அவர்கள் மத்தியில் திருத்-தூதர்கள் வழியாக பல புதுமைகளும் அரும் செயல்களும் நடைபெற்-றன. உடமைகள் நிலபுலன்கள் உள்ளோர், அவற்றையெல்லாம் பொதுப் பொருளாகக் கொண்டு, எவ்வித வேற்றுமையோ வேறுபாடோ இன்றி, ஒற்றுமையாக வாழ்ந்தனர். இவர்களின் சமூக வாழ்க்கை கும்ரான் சமூகத்தின் வாழ்க்கையை ஒத்ததாக இருந்தது. அவர்களின் அன்பு நிறைந்த ஒற்றுமையான வாழ்க்கை ஏனையோரைக் கவர்ந்தது. ஆகவே

அவர்கள் ஏனைய மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். இறைவனுடைய அருளும் ஆசீரும் அவர்களுக்குத் தாராளமாகக் கிடைத்தன. நாளுக்கு நாள் பல புது அங்கத்தவர்கள் அவாகளின் சமூகத்தில் சேர்ந்தனர்.

இவ்வாறு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்கள் தங்களுக்குள் ஒரு புது உறவு ஏற்பட்டுள்ளதை உணர்ந்தவர்களாய், அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிரும் உள்ளவர்களாய் இருந்தனர். அவர்களுக்குள்ளே எபிரேய மொழி பேசும் யூதர்களும், கிரேக்க மொழி பேசும் யூதர்களும் இருந்தாலும், திருமுழுக்கின் போது அவர்களை ஆட்கொண்ட தூய ஆவியே அவர்கள் அனைவரையும் நெருக்கிப் பிணைத்திருந்தார். அவர்கள் அனைவரும் இவ்வுலகப் பொருட்களிலே எவ்வித பற்றும் அற்றவராய் இருந்தார்கள். தத்தம் உடமைகளை தமக்குச் சொந்தமானதாய்க் கருதாமல் பொதுப் பொருட்களாகக் கொண்டு வாழ்ந்தனர். அப்படி செய்ய வேண்டும் என்ற கட்டளை எதுவும் இல்லாமலே தாமாக முன்வந்து, கிறிஸ்துவுக்காக, அவர் போதனையின்படி அனைத்தையும் துறந்தனர். ஏதாவது தேவையில் இருப்பவர்களை அங்கு காண முடியவில்லை. ஏனெனில் அவர்களின் தேவைகள் உடனடியாக மற்றவர்களால் நிறைவு செய்யப்பட்டன. நிலபுலன்கள் உடையோர். அதை விற்று, பணத்தை கொணர்ந்து அப்போஸ்தலர்களின் காலடியில் வைத்தனர். இது அவற்றை இறைவனுக்கு காணிக்கை ஆக்குவதைக் குறிக்கிறது. திருத்-தூதர்கள் அவற்றை அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப பகிர்ந்து அளித்தனர். இதன் விளைவாக அவர்களுக்குள் எவ்வித வேற்றுமையோ வேறுபாடோ காணப்படவில்லை. மேலும் அவர்களின் வாழ்க்கையிலே அறப்பணி முக்கிய இடத்தை எடுத்தது. கைம்பெண்கள், அனாதைகள், முதியவர்கள் போன்றோர் சிறப்பாகக் கவனிக்கப்பட்டார்கள்.

முதல் கிறிஸ்தவர்களின் அன்பு நிறைந்த, பகிர்ந்து வாழும் முன்மாதிரிகையான வாழ்க்கையின் நிமித்தம் மற்றவர்கள் அவர்கள்மேல் நல்லெண்ணம் கொண்டவர்வர்களாய், அவர்களை பெரிதும் மதித்தனர். பலர் அவர்களடைய வாழ்க்கையால் கவரப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, திருமுழுக்குப் பெற்று, திருச்சபையில் சேர்ந்தனர். திருச்சபையும் நாளுக்குநாள் வளர்ந்தது. வளரும் திருச்சபையில்

எல்லாம் நிறைவாக இருக்கவில்லை. பெலவீனமுள்ள மக்களால் ஆனதே திருச்சபை. சில குறைபாடுகளும் காணப்பட்டன. இதை நாங்கள் அனானியா, சபிராள் கதையிலும், கிரேக்க மொழிபேசும் யூத கிறிஸ்தவர்களுக்கும், எபிரேய மொழி பேசும் யூத கிறிஸ்தவர்களுக்குமிடையே ஏற்பட்ட பிணக்கிலும், யூத கிறிஸ்தவர்களுக்கும் புறவினக் கிறிஸ்தவர்களுக்குமிடையே ஏற்பட்ட பிரச்சினையிலும் காண்கிறோம்.

## 6.1.1.4 புனித ஸ்தேவான்

(தி.தூ.ப.. 6,7)

திருச்சபை வளர்ந்து, கிறிஸ்தவர்களின் தொகை அதிகரிக்க, அவர்களின் பொது வாழ்வில் சில பிரச்சினைகள் தோன்றின. திருத்தூதர்கள் நற்செய்தியைப் போதிப்பதில் முழு மூச்சாய் ஈடுபட்டிருந்தபடியால், கிறிஸ்தவ சமூகத்தில் அன்றாடம் நடைபெற்ற அறப்பணியைச் சரிவரச் செய்ய அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. எனவே எருசலேம் வாழ் பலஸ்தீன யூத கிறிஸ்தவப் பெரியோர்களே அதை முன்னின்று செய்து வந்தனர். ஆனால் காலப்போக்கில் கிரேக்க மொழி பேசும் யூதக் கிறிஸ்தவர்கள் தம் கைம்பெண்கள் அன்றாடப் பந்தியில் சரியாகக் கவனிக்கப்படவில்லையென, எபிரேய மொழி பேசுகின்ற யூதர்களுக்கு எதிராக, திருத்தூதர்களிடம் முறைப்பாடு செய்தனர். இப்பிரச்சினையைத் தீர்க்க, திருத்தூதர்கள் சீடர்கள் அனைவரையும் உடனடியாக ஒன்று கூட்டினர். "நாங்கள் கடவுளது வார்த்தையைக் கற்பிப்பதை விட்டுவிட்டுப் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவது முறையல்ல" எனக் கூறி, பந்தி பரிமாறுவதற்கென சீடர்களிலிருந்து ஏழு பேரைக் கவனமாகத் தெரிந்தெடுக்கும்படி கேட்டனர். அவர்களுடைய தகைமை, அவர்கள் மக்கள் மத்தியில் நன்மதிப்புள்ளவர்களாயும், தேவ ஆவி அருளும் வல்லமையும், ஞானமும் நிரம்பப் பெற்றவர்களாயும் இருக்க வேண்டுமெனக் கூறினர். அவ்வாறே விசுவாசிகள் தம்மிலிருந்து நம்பிக்கையும், தூய ஆவியும் நிறைந்த எழுவரைத் தெரிவு செய்தனர். திருத்தூதர்கள் அவர்கள் மேல் கைகளை விரித்து, இறைவனை வேண்டி, அவர்களை அறப்பணிக்கென நியமனம் செய்தனர். அவர்களே திருச்சபையில் முதல் நியமனம் பெற்ற பணியாளர்கள். திருச்சபையின் முதற் பணியாளர்கள் போதிப்பதற்கல்ல,

அறப் பணி செய்யவே நியமனம் பெற்றார்களென்பது குறிப்பிடத்தக்கது. யூத மரபுப்படி, கைகளை விரித்துச் செபித்தல், பணிகள் கைமாறுவதையும், அதிகாரம் அளிப்பதையும், குறிக்கிறது. அவர்கள் ஏழு பேரின் பெயர்களும் கிரேக்கப் பெயர்களாகவிருப்பதால், அவர்கள் அனைவரும் கிரேக்க மொழி பேசும் யூதர்களாய் இருந்தார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள் பந்தி பரிமாற, அதாவது அறப்பணிக்கென நியமனம் பெற்றாலும், பின்பு அவர்கள் (உதா. பிலிப்பு, ஸ்தேவான்) நற்செய்திப் பணியிலும், திருமுழுக்கு அளிப்பதிலும், புதுமைகள் செய்வதிலும், ஈடுபடுவதைக் காண்கிறோம். இங்கு இவர்கள் 'திருத் தொண்டர்கள்' (தியாக்கோன்) என அழைக்கப்படாவிடினும், பின்பு அவர்களே திருத் தொண்டர்கள் என அழைக்கப்பட்டனர்.

**யூதர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்தல்**

ஆரம்ப கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதர்களாக இருந்தாலும், கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையாகக் கருதப்பட்டாலும், ஆரம்பத்திலிருந்து யூதர்கள் கிறிஸ்தவர்களை சந்தேகக் கண்ணுடன் நோக்கி, அவர்களை வெறுத்தார்கள். கிறிஸ்தவ சமூகத்தினருக்கும் யூதர்களுக்குமிடையே அடிக்கடி முரண்பாடுகளும், மோதல்களும் ஏற்பட்டு, அவை ஒரு பெரிய யூத கலாபனையாக விஸ்வரூபம் எடுத்தது. யூதர்கள் என்ன காரணத்திற்காக இயேசுக் கிறிஸ்துவை வெறுத்து, அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்களோ, அதே காரணத்திற்காகவே அவர்கள் கிறிஸ்துவின் சீடர்களையும், கிறிஸ்தவர்களையும் வெறுத்துப் பகைத்தார்கள். ஆதித் திருச்சபை எருசலேம் எங்கும் அவ்வளவு விரைவாகவும் துரிதமாகவும் பரவியதும் அங்கு பெரும்பான்மையாக வாழ்ந்த யூதர்களுக்கு எரிச்சலையும், வெறுப்பையும், பகைமையையும் மூட்டி வளர்த்தது. யூதத் தலைவர்களான சதுசேயரும், பரிசேயரும், தலைமைக் குருக்களும் கிறிஸ்தவர்கள் பரவி வளர்ந்தால், சமுதாயத்தில் தங்கள் செல்வாக்கு அற்றுப் போய், தங்கள் பதவிகளும் பறி போய்விடுமென அஞ்சினர். எனவே அவர்களும் கிறிஸ்தவர்களை எதிர்த்து, வெறுத்துப் பகைத்தனர். இவ்வாறாக பல காரணங்களுக்காக யூதர்கள் கிறிஸ்தவர்களை எதிர்த்து, வெறுத்துப் பகைத்தனர்.

யூதர்கள் ஒரு மெசியாவை எதிர்பார்த்திருந்தாலும், அவர் ஒரு இலௌதீக மெசியாவாக, அரசனாக இருப்பாரென்றும், அவர் ஒரு பெரிய ஆயுதப் படையைத் திரட்டி, உரோமையருடன் போர் தொடுத்து, அந்நிய ஆதிக்கத்திலிருந்து தமக்கு அரசியல் விடுதலையைப் பெற்றுக் கொடுப்பாரென்றும் எதிர்பார்த்திருந்தனர். ஆகவே அவர்கள் மாட்டுத் தொழுவத்தில், ஒரு ஏழைத் தச்சனின் மகனாகப் பிறந்த இயேசுவை தாம் எதிர்பார்த்த மெசியாவாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கவில்லை. இயேசுவின் போதனைகளும், செயற்பாடுகளும், அவர்களின் எதிர்பார்ப்பிற்கு முரணாகவிருந்தபடியால், அவர்கள் அவரை மெசியாவாக ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் இயேசுவை மெசியாவாக மட்டுமல்ல, இறைமகனாகவும் ஏற்று விசுவசித்தனர். மேலும் கிறிஸ்தவர்கள் இயேசுவின் இறைக் கொலைப் பழியை யூதர் மேல் சுமத்தினர். அவர்களின் முன்னோர்கள், ஆபிரகாம், யோசேப்பு, மோசே வழியாகப் பேசிய பரிசுத்த ஆவிக்குச் செவிகொடுக்கவில்லையென்றும், இயேசுவின் வருகையை முன்னறிவித்த இறைவாக்கினரைக் கொலை செய்தனரென்றும் கூறி, அவர்களோ அந்த இயேசுவையே உரோமையரைக் கொண்டு கொலை செய்தார்களெனக் குற்றம் சுமத்தினர். "நீங்கள் திருச்சட்டம் அறியாதோர் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள்". மேலும் சதுசேயரோ, யூதக் குருக்களோ உயிர்ப்பிலும், மறுவுலக வாழ்விலும் நம்பிக்கை அற்றவர்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை ஏற்று விசுவசித்து, அந்த உண்மையைத் திரும்பத் திரும்பப் போதித்து, இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு அவரைக் கண்ட தாமே சாட்சிகளென்றும் கூறினர். அந்த இயேசு இப்பொழுது மறுவுலகில் இறைவனின் வலப்பக்கத்தில் அமர்ந்திருப்பதாகவும் எடுத்துரைத்து, அவர் பெயரால் பல புதுமைகளையும், அற்புதங்களையும் செய்தனர். அதுமட்டுமன்றி, கிறிஸ்தவர்கள் யூதப் பரம்பரைப் பழக்கவழக்கங்களையோ, மோசேயின் சட்டங்களையோ அவ்வளவு பெரிதாக மதிக்கவில்லை. கிறிஸ்துவின் அன்புக்கட்டளைக்கும், அன்புச் சமூகமென்ற கிறிஸ்தவ மனப்பான்மைக்குமே முக்கியத்துவம் கொடுத்தனர். ஆனால் யூதர்கள் எருசலேம் ஆலயம் உரோமையரால் தரைமட்டம் ஆக்கப்பட்டதற்கும், தாங்கள் உரோமையரால் துன்புறுத்தப்படுவதற்கும், கிறிஸ்தவர்கள் இயேசுவை மெசியாவாக ஏற்றுக் கொண்ட பாவமே

காரணமென, அவர்கள் மேல் பழியைப் போட்டனர். இவ்விதமான பல காரணங்களுக்காக யூதர்கள் கிறிஸ்தவர்களை எதிர்த்து, வெறுத்துப் பகைத்தனர். ஆதிக் கிறிஸ்தவ சமூகத்திற்கும் யூத சமூகத்திற்குமிடையில் ஆரம்பத்திலிருந்து வளர்ந்து வந்த பகை விரைவில் ஒரு பெரிய பூகம்பமாக வெடித்தது.

**திருத்தொண்டர் ஸ்தேவானின் மறைசாட்சி மரணம்**

ஆதிக் கிறிஸ்தவ சபையில் பந்தி பரிமாறவென திருத்தொண்டர்கள் எழுவர் நியமனம் பெற்றாலும், அவர்கள் அறப்பணியில் மட்டுமல்ல, நற்செய்திப் பணியிலும், திருமுழுக்கு அளித்து விசுவாசிகளை திருச்சபையில் சேர்ப்பதிலும், புதுமைகள் அரும் அடையாளங்கள் செய்வதிலும் ஈடுபட்டிருந்தரென ஏற்கனவே பார்த்தோம். இவர்களில் ஸ்தேவான் முக்கியமானவர். அவர் யெளன பண்பாட்டு யூதக் கிறிஸ்தவர்களின் தலைவராகச் செயற்பட்டார். அருளும் வல்லமையும் நிறைந்த அவர் மக்களிடையே பல புதுமைகளைச் செய்து, ஞானத்தோடு போதித்தார். ஒரு நாள் உரோமைய சீரேனே அலக்சாந்திரியா, சிலிசியா, ஆசிய நாடுகளில் இருந்து வந்திருந்த யெளன பண்பாட்டு யூதர்கள் அவரிடம் வந்து, அவர் போதனையையிட்டு அவரோடு வாதாடினர். யெளன பண்பாட்டு யூதர்கள் தங்கள் பரம்பரை மத நிறுவனங்களில் அதிக ஆர்வம் உடையவர்கள். யூதர்களே இறைவனால் விசேட விதமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இனமென்றும், ஏனைய இனங்கள் இறைவனுக்குத் தேவையில்லை என்றும், அவர்களை நரக நெருப்புக்கென்றே இறைவன் படைத்ததாகவும் கருதினர். அவர்களைத் தங்கள் சமூகத்தினுள் கொண்டுவருவதென்பது யூதர்களுக்குக் கனவிலும் நினைக்க முடியாததொன்று. மேலும் யூதர்களுக்கு பலி ஒப்புக்கொடுக்கப்படும், இறைவனை உண்மையாக வழிபடும் ஒரே இடம் எருசலேம் ஆலயமாகும். அவர்களுக்கு மோசேயின் சட்டமும் முக்கியமானது. அவற்றை எவராலும் ஒருபோதும் மாற்றமுடியாது, அழிக்க முடியாதென்பது அவர்கள் கருத்து.

ஆனால் ஸ்தேவானோ அனைத்துலகையும், அனைத்து மக்களையும் கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கும் இலட்சியம் உடையவர். இறைவன் மனித கைகளினால் கட்டப்பட்ட ஆலயத்தில் அல்ல, அவர்

எங்கும் இருக்கிறார். ஆகவே எருசலேம் ஆலயத்தின் காலம் முடிவடைந்து விட்டதென்றும், நற்செய்தியை நோக்கியிருந்த மோசேயின் சட்டமும் நற்செய்தியின் போதனையுடன் அர்த்தமற்றதாகி விட்டதென்றும் கருதியவர். ஸ்தேவானின் ஞானத்தையும், அவர் வழியாகப் பேசிய பரிசுத்த ஆவியையும் யூதர்களால் எதிர்த்து வாதாட முடியவில்லை. எனவே அவர்கள் ஸ்தேவான் மோசேக்கும், கடவுளுக்கும் எதிராக பழிச்சொல் கூறியதாகச் சொல்லி, மக்களையும், மூப்பர்களையும், மறைநூல் அறிஞர்களையும் அவருக்கு எதிராகத் தூண்டி விட்டனர். எல்லோரும் ஒன்று கூடி, அவரைக் கைது செய்து தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்தி, அவர் மேல் பல பொய்க் குற்றங்களைச் சுமத்தினர். குறிப்பாக ஸ்தேவானுக்கு எதிராக மூன்று குற்றங்கள் சுமத்தப்பட்டன:

1. புனித இடத்திற்கும, திருச்சட்டத்திற்கும் எதிராகப் பேசியது.
2. நசரேத்தூர் இயேசு இவ்விடத்தை அளித்து விடுவார் எனக் கூறியது.
3. இயேசு, மோசே நமக்குக் காட்டிய முறைகளை மாற்றி விடுவார் எனக் கூறியது.

எனவே தலைமைக் குரு ஸ்தேவானை விசாரித்தார். ஆனால் ஸ்தேவானோ தம் சொந்த நியாயத்தை எடுத்துக் கூறாமல், தம் மறையின் விசுவாசத்தை எடுத்துக் கூறினார். எபிரேயரின் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துக் கூறி, எப்படி அவர்களின் முன்னோர்கள் ஆபிரகாம், யோசேப்பு, மோசே வழியாக பேசிய தூய ஆவிக்கு தொடர்ச்சியாக செவி கொடுக்க மறுத்து, அவரை எதிர்த்தனர் எனக் காட்டினார். அவர்களைப் போல் அவர்களின் வாரிசுகளான யூதர்களும் தூய ஆவியை எதிர்ப்பதாகச் சாடினார். திருச்சட்டத்திற்கு எதிராக பேசியதாக யூதர்கள் ஸ்தேவான் மேல் குற்றம் சுமத்த, அவரோ யூதர்கள் அத் திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்கவில்லை என அவர்களைக் குற்றம் சாட்டினார். மேலும் கடவுள் இஸ்ராயேலுக்கு வெளியிலுமிருந்து மக்களைத் தனக்கெனத் தெரிந்தெடுக்கலாம் என்றும், எருசலேம் ஆலயத்திற்கு வெளியேயும் மக்கள் கடவுள வழிபட வேண்டுமென்றும் கூறி, கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையல்ல, ஆனால் ஒரு புதிய தனி மதம் என்ற கருத்துக்களையும் உணர்த்தினார். இறுதியாக,

இயேசுவின் வருகையை முன்னறிவித்த இறைவாக்கினரை அவர்களின் முன்னோர்கள் கொடுமைப்படுத்தி கொலை செய்ய, அவர்களோ இப்போது அந்த இயேசுவையே கொலை செய்து விட்டார்கள் எனக் கூறி, இயேசுவின் இறைக் கொலைப் பழியை அவர்கள் மேல் சுமத்தினார். இது யூதர்களுக்கு மிகுந்த ஆத்திரத்தை மூட்டியது. தொடர்ந்து ஸ்தேவான், இதோ "வானம் திறந்திருப்பதையும், மானிடமகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்" எனக் கூறிய பொழுது, அவர்கள் ஆவேசம் அடைந்து அவர் மேல் பாய்ந்து, அவரை நகருக்கு வெளியே தள்ளிக் கொண்டுபோய், கல்லால் எறிந்தனர். ஸ்தேவானோ "ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்" எனக் கூறி, "ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்" என்று தம்மைக் கொலை செய்பவர்களுக்காக மன்றாடி, உயிர் துறந்தார். ஸ்தேவானின் மரணம் கிறிஸ்துவின் மரணத்தை ஒத்ததாக இருந்தது.

ஸ்தேவானின் கொலை ஒரு பெரிய யூத கலாபனையின் ஆரம்பமாய் இருந்தது. குறிப்பாக கிரேக்க மொழி பேசும் யூதக் கிறிஸ்தவர்கள் (யௌன பண்பாட்டினர்) மிகவும் கொடூரமாக துன்புறுத்தப்பட்டார்கள். எபிரேய மொழி பேசும் யுதர்களான அப்போஸ்தலர் எருசலேமில் மறைமுகமாக வாழ, ஏனைய கிரேக்க மொழி பேசும் கிறிஸ்தவர்கள் சிதறுண்டு எருசலேமிற்கு வெளியே, யூதேயாவின் நாட்டுப் புறங்களுக்கும், சமாரியா, தமாஸ்கு, பெனிசியா, சைப்பிரஸ், கலிலேயா, அந்தியோக்கியா வரைக்கும் ஓடிப் போனார்கள். இவ் யூத கலாபனையில் முக்கிய பங்கெடுத்தவர் சவுல். இவ்வாறு சிதறுண்டு ஓடிய கிறிஸ்தவர்கள் தாம் சென்ற இடங்களிலெல்லாம் நற்செய்தியை அறிவித்தனர். ஸ்தேவானின் மறைசாட்சி மரணமும், அதைத் தொடர்ந்து ஆரம்பமாகிய யூத கலாபனையுமே நற்செய்தி எருசலேமிற்கு வெளியே பரவுவதற்கு வழி செய்தன. உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவிக்கப் பணிக்கப்பட்ட சீடர்கள், எருசலேமிலேயே இவ்வளவு காலமும் நற்செய்தியைப் போதித்தனர். ஆனால் இங்கு கடவுள் மக்கள் செய்யும் தீமையைப் பயன்படுத்தி, தம் திட்டத்தை நிறைவேற்றுவதைக் காண்கின்றோம்.

## 6.1.1.5. திருச்சபையின் வளர்ச்சி

பெந்தக்கோஸ்து தினத்தன்று எருசலேமில் பரிசுத்த ஆவியின் வருகையுடன், ஒரு சிறிய கடுகு மணிபோல், 120 சீடர்களுடன் ஆரம்பித்த திருச்சபை, வெகு விரைவில் மிகத் துரிதமாக வளர்ந்து, படர்ந்து, பெரும் விருட்சம்போல உலகெங்கும் பரவியது. திருச்சபை அவ்வாறு விரைவாகப் பரம்பியமைக்கு பலர் பலவிதமாகப் பங்களிப்புச் செய்திருக்கின்றனர். திருச்சபை ஆரம்பித்த காலத்தில் பாலஸ்தீன நாடு உரோமையரின் ஆட்சியின் கீழ், உரோமைப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. எனவே எருசலேமில் ஆரம்பமாகிய திருச்சபை படிப்படியாக உரோமைப் பேரரசெங்கும் இலகுவாகப் பரவக்கூடியதாகவிருந்தது. முதலில் நாம் உரோமைப் படைவீரரைக் குறிப்பிடலாம். பாஸ்கா, பெந்தெகோஸ்து திருவிழாக் காலங்களில் கடமைக்காக பேரரசின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து எருசலேம் சென்றிருந்த உரோமைப் படைவீரர்கள், தம் கடமைகளை முடித்துக்கொண்டு தம் சொந்த நாடுகளுக்குத் திரும்பிச் சென்றபொழுது, அவர்களும் தாம் எருசலேமில் கண்ட கிறிஸ்வின் மரணம், உயிர்ப்பு போன்ற நிகழ்ச்சிகளையும், பெந்தெகோஸ்து நிகழ்ச்சிகளையும் தம் ஊரவருக்கு எடுத்துக் கூறியிருப்பார்கள். அடுத்து உரோமைப் பேரரசின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பெந்தேகோஸ்து திருவிழாவிற்காக எருசலேமில் பெருந் திரளாகக் கூடியிருந்த கிரேக்க மொழிபேசும் (யௌன பண்பாட்டு) யூதர்கள், திருவிழா முடிந்து தம் நாடுகளுக்குத் திரும்பிச் சென்றதும், எருசலேமில் தாம் கண்ட நிகழ்ச்சிகளையும், அங்கு தாம் கண்டதையும், கேட்டதையும், நடந்தவற்றையும், திருத்தூதர்களின் போதனைகளையும் நிச்சயமாக மற்றவர்களுக்கு எடுத்துக் கூறியிருப்பார்கள்.

எனினும், பெந்தக்கோஸ்தே தினத்தன்று பரிசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட அப்போஸ்தர்களின் மறை பரப்பு ஆர்வத்தினாலும், தீவிர போதனையாலும், அவர்கள் செய்த புதுமைகள் அருங்குறிகளாலும் ஆயிரக் கணக்கானோர் (3000, 5000) மனந்திருந்தி, கிறிஸ்துவின்மேல் விசுவாசம் கொண்டு, திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தனர். ஆதிக் கிறிஸ்தவ சமுதாயத்தில் காணப்பட்ட அன்பு, ஒற்றுமை, பகிர்தல், சமத்துவம் போன்ற பண்புகள் நிறைந்த எடுத்துக்காட்டான

வாழ்க்கையால் பலர் கவரப்பட்டு, திருச்சபையில் இணைந்தனர். புனித ஸ்தேவானுடைய வேதசாட்சி மரணமும், அதைத் தொடர்ந்து எருசலேமில் ஆரம்பித்த யூத கலாபனைகளும் இதற்கு வழிசமைத்துக் கொடுத்தன். எருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், குறிப்பாக யௌன பண்பாட்டினர், எருசலேமிலிருந்து வெளியேறி, நாலாபக்கமும் சிதறுண்டு, யூதேயா, சமாரியா, செசாரியா, லிஸ்திரா, யோப்பா, தமஸ்கு. பெனிசியா, சைப்பிரஸ், கலிலேயா, அந்தியோக்கியா போன்ற நாட்டுப் புறங்களுக்கு ஓடினர். இவ்வாறு சிதறுண்டு ஓடிய மக்கள் தாம் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்தனர். அதன் வழியாக பல்லாயிரக் கணக்கானோரை மனந்திருப்பி, திருச்சபையில் இணைத்தனர்.

அவர்களில் ஒருவரான திருத்தொண்டர் பிலிப்பு சமாரியா நாட்டுக்குச் சென்றார். இவர் பந்தி பரிமாற நியமனம் பெற்ற எழுவர்களில் (திருத்தொண்டர்களில்) ஒருவர். யூதர்கள் சமாரியரை கலப்பு (அரை) யூதர்களாக, தரம் குறைந்தவர்களாக, தீட்டுப்பட்டவர்களாகக் கருதி, ஒதுக்கி வைத்திருந்தனர். யூதர்கள் அவாகளுடன் எந்தவித தொடர்போ, சகவாசமோ வைத்திருக்கவில்லை. ஆனால் பிலிப்பு சமாரியாவிற்குச் சென்று, இழிவாகக் கருதப்பட்ட சமாரியருடன் தங்கி, அவர்களுக்கு நற்செய்தியைப் போதித்தார். கலாபனையானது நற்செய்தி அறிவிப்பைத் தடைசெய்து விடவில்லை. மாறாக அதற்கு உதவியாய் அமைந்தது. பிலிப்பு சமாரியர்களுக்கு இயேசு மெசியாவைப் பற்றியும், இறையரசைப் பற்றியும் அறிவித்தார் அத்துடன் பேய் பிடித்தவர்கள், உடல் ஊனமுற்றோர், முடக்குவாதக்காரர் பலரைக் குணமாக்கி, அருங்குறிகள் பல செய்தார். பிலிப்பு ஆற்றிய அற்புதங்களால் கவரப்பட்ட மக்கள், அவரின் போதனைகளுக்கு ஆர்வமுடன் செவிமடுத்து, இயேசுவின்மேல் விசுவாசம் கொண்டனர். பிலிப்பு அவர்களுக்கு ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு அளித்தார். யூதர்கள் நற்செய்தியை ஏற்க மறுத்து, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த, சமாரியர், பதித யூதர் நற்செய்தியை ஏற்று, விசுவசிப்பது குறிப்பிடத்தக்கது.

சமாரியாவில் பணிபுரிந்த பிலிப்பு ஒருநாள் இறைதூதனால் எருசலேமிலிருந்து காசாவுக்குப் போகும் பாலைநிலப் பகுதிக்குப் போகும் படி பணிக்கப்பட்டார். பிலிப்பு அங்கு சென்ற போது, அவ்வழியே எத்தியோப்பிய அமைச்சரும், அண்ணகருமாகிய ஒருவர் எருசலேம்

சென்று கடவுளை வணங்கிவிட்டு, தமது தேரில் காசாவுக்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தார். அவர் யூத மதத்தைத் தழுவிய அல்லது கடவுள் பயமுள்ள ஒரு புறவினத்தவர். தூய ஆவி பிலிப்புவை அத் தேரை நெருங்கிச் செல்லுமாறு தூண்டினார். அமைச்சர் வேத நூலில் இசையாஸ் ஆகமத்தில் துன்புறும் ஊழியன் பற்றிய பகுதியைப் படித்துக் கொண்டு சென்றார். பிலிப்பு அவரை அணுகி, அவர் வாசிப்பது அவருக்கு விளங்குகிறதா எனக் கேட்டார். அவரோ "யாராவது விளக்கிக் காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்து கொள்ள முடியும்" என்று கூறி, பிலிப்புவைத் தேரில் ஏறித் தன்னருகில் அமருமாறு அழைத்தார். பிலிப்புவும் தேரில் ஏறி, அவரருகே அமர்ந்து, துன்புறும் ஊழியன் பகுதியிலிருந்து தொடங்கி இயேசுக் கிறிஸ்துவின் நற்செய்தியை அவருக்கு அறிவித்தார். போகும் வழியில் ஓர் இடத்தில் தண்ணீர் இருந்தது. அப்போது அண்ணகர் "இதோ, தண்ணீர் உள்ளதே, நான் திருமுழுக்குப்பெற ஏதாவது தடையுண்டா?" எனக் கேட்டார். தேரை நிறுத்தி, இருவரும் கீழே இறங்க, பிலிப்பு அவருக்குத் திருமுழுக்கு அளித்தார். தண்ணீரிலிருந்து அவர்கள் வெளியேறிய உடனே, பரிசுத்த ஆவி பிலிப்புவை அங்கிருந்து தூக்கிச் சென்று, அசோத் என்னும் நகரில் விட்டார். பிலிப்பு அங்கிருந்து செசாரியா வரை நற்செய்தியைப் போதித்துக் கொண்டு சென்றார்.

பரிசுத்த ஆவியே புறவினத்தவரை திருச்சபையில் சேர்ப்பதை நோக்காகக் கொண்டு திருச்சபையை படிப்படியாக வழிநடத்துகிறார். முதலில் எபிரேய மொழி பேசும் யூதர்களும், கிரேக்க மொழி பேசும் யூதர்களும் திருச்சபையில் சேர்ந்தனர். பின்பு கலப்பு அல்லது அரை யூதர்களான சமாரியர் திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் சேர்ந்தனர். இப்பொழுது யூத மதத்தைத் தழுவ ஆயத்தப்படுத்தும் அல்லது கடவுள் பயமுள்ள புறவினத்தவர், எத்தியோப்பிய அண்ணகர் திருமுழுக்குப் பெற்றார். அடுத்த படி முழுக்க முழுக்க புறவினத்தவர்கள் திருச்சபையில் சேர்வார்கள்.

பிலிப்பு சமாரியாவில் ஆற்றிய பணி, சமாரியர்கள் நற்செய்தியை ஏற்று கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டது, அவர்கள் ஆண்டவர் பெயரால் திருமுழுக்குப் பெற்றது பற்றிய செய்திகளை எருசலேமிலிருந்த திருத்தூதர்கள் கேள்விப்பட்டனர். ஆகவே சமாரியாவில் உருவாகி-

யிருந்த திருச்சபையைத் தரிசித்து, அதை அங்கீகாரம் செய்ய பேதுரு-வையும் யோவானையும் அனுப்பி வைத்தார்கள். சமாரியர்கள் ஆண்டவர் இயேசுவின் பெயரால் திருமுழுக்குப் பெற்றிருந்தனரேயன்றி, பரிசுத்த ஆவியை இன்னும் பெறவில்லை. பேதுருவும் யோவானும் சமாரியா-வுக்குச் சென்று, சபையினரைச் சந்தித்து, அவர்கள் பரிசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்படுமாறு இறைவனை வேண்டினார்கள். தங்கள் கைகளை அவர்கள் மீது வைத்து, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அளித்தார்கள். தொடர்ந்து பேதுருவும் யோவானும் சமாரியாவின் பல ஊர்களிலும் நற்செய்தியைப் போதித்தார்கள்

பேதுரு பிலிப்புவால் லிஸ்திரா, யோப்பா, செசாரியா போன்ற இடங்களில் தாபிக்கப்பட்ட திருச்சபையைத் தரிசித்தார். லிஸ்திராவில் ஜனேயா என்ற முடக்கு வாதக்காரனைக் குணமாக்கினார், யோப்பாவில் தொற்கா (பெண் மான்) என்றழைக்கப்படும் தபித்தா என்ற பெண்ணைச் சாவிலிருந்து உயிர்த்தெழச் செய்தார். இப்புதுமைகளின் வழியாகப் பலர் இயேசுவில் விசுவாசம் கொண்டனர். யோப்பாவில் தோல் பதனிடும் சீமோன் வீட்டில் பல நாட்கள் தங்கியிருந்தார். இவ்வளவு காலமும் நற்செய்தி போதிக்கப்பட்டு, நற்செய்தியை ஏற்றுத் திருச்சபையில் சேர்ந்தவர்கள் அனைவரும் யூதர்களும், யூத மதத்தைத் தழுவியவர்களும் என்பது குறிப்பிடத் தக்கது. இவ்வளவு காலமும் யூதர்களே கிறிஸ்தவர்கள் ஆகலாம் என்ற கருத்து நிலவி வந்தது.

**முதல் புறவினத்தவர் திருச்சபையில் சேருதல்**

இக் காலத்தில் செசாரியாவில் கொர்ணேலியு என்ற ஒரு உரோமைய நூற்றுவர் தலைவர் இருந்தார். அவரும், அவர் வீட்டாரும் கடவுள் பக்தர்கள். கடவுளுக்கு அஞ்சி நடப்பவர்கள். இடைவிடாமல் செபிப்பவர்கள். யூதர்களுக்கு அறங்கள் பல செய்தவர்கள். ஒரு நாள் பிற்பகல் மூன்று மணியளவில் கடவுளின் தூதர் அவருக்குத் தோன்றி, கடவுள் அவரது மன்றாட்டைக் கேட்டுள்ளாரென்றும், யோப்பாவில் தோல் பதனிடும் சீமோன் வீட்டிலிருக்கும் பேதுருவை வரவழைக்கும் படியும் கூறினார். கொர்ணேலியு உடனே தன் ஊழியர் இருவரையும், பக்தியுள்ள ஒரு படைவீரரையும் பேதுருவிடம் அனுப்பினார். மறுநாள் பேதுருவும் யோப்பாவில் தன் செபங்களை முடித்து விட்டு, நண்பகல்

உணவிற்கு ஆயத்தமாகும் வேளையில் ஒரு காட்சி கண்டார். வானம் திறந்து, கற்பாறை போன்ற ஒரு பாய் விரிப்பு நான்கு மூலையிலும் கட்டி இறக்கப்பட்டது. அவ் விரிப்பில் தரையில் ஊர்வன, நடப்பன, வானில் பறப்பன யாவும் இருந்தன. "பேதுரு, இவற்றைக் கொன்று சாப்பிடு" என்ற குரல் கேட்டது. பேதுரு பதிலாக, "வேண்டவே வேண்டாம், ஆண்டவரே, தீட்டானதும், தூய்மையற்றதுமானது எதையும் நான் ஒருபோதும் உண்டதேயில்லை" என்றார். மீண்டும் அக்குரல், "தூய்மை-யானது எனக் கடவுள் கருதுவதைத் தீட்டாகக் கருதாதே" என்றது. இப்படி மூன்று முறை நடைபெற்றது. ஆதியில் கடவுள் உலகையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்த பொழுது, அவையெல்லாம், அதாவது, சகல மனிதரும், விலங்குகளும், பறவைகளும் நல்லதெனக் கண்டார். ஆனால் யூதர்கள் சில விலங்குகள், பறவைகளையும், சமாரித்தர், புறவினத்தவர் போன்ற சில மனிதர்களையும் தீயவை, தீட்டுள்ளவை, பாவிகள் என ஒதுக்கி வைத்தார்கள்.

பேதுரு காட்சியின் பொருள் விளங்காது சிந்தித்துக் கொண்டிருக்கையில், கொர்ணேலியு அனுப்பிய ஆட்கள் வந்து கதவைத் தட்டவே, கீழே இறங்கி அவர்களோடு போகுமாறு ஆவியானவர் அவருக்குக் கூறினார். மறுநாள் பேதுரு, யூதக் கிஸ்தவர்கள் ஆறு பேருடன், செசாரியா சென்றபோது, கொர்ணேலியு, தன் சுற்றத்தாரோடும், நண்பர்களோடும், அவர்களை வரவேற்றார். பேதுரு அவர்களை நோக்கி, "ஒரு யூதன் பிற குலத்தவரிடம் செல்வதும், அவர்களோடு உறவாடுவதும் முறைகேடு என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் யாரையும் தீட்டுள்ள-வர்கள் என்றோ, தூய்மையற்றவர் என்றோ சொல்லக் கூடாது எனக் கடவுள் எனக்குக் காட்டினார். ஆகவே நீங்கள் என்னை வரவழைத்த போது, மறுப்புக் கூறாமல் வந்தேன்" என்றார். அதற்குக் கொர்ணேலியு தான் கண்ட காட்சியைக் கூறி, ஆண்டவர் பேதுருவுக்குக் கூறிய-தெல்லாவற்றையும் கேட்கத் தாம் கூடியுள்ளதாகச் சொன்னார்.

அப்பொழுது பேதுரு, "கடவுள் ஆள் பார்த்துச் செயற்படு-வதில்லை என்பதை நான் உண்மையாக உணர்கிறேன். எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து, நேர்மையாகச் செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர்" எனக்கூறி, கிறிஸ்தவத்தின் அடிப்படை உண்மைகளைச் சுருக்கமாகக் கூறினார். எங்கும், எல்லாருக்கும் நன்மை

செய்து கொண்டே சென்ற இயேசுவைக் கொலை செய்தனர். ஆனால் கடவுள் அவரை உயிர்ப்பித்தார். அவரின் வாழ்விற்கும், உயிர்ப்புக்கும் தாமே சாட்சியெனக் கூறி, அவரே வாழ்வோரையும், இறந்தோரையும் நடுத்தீர்க்க கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர் என மக்களுக்கு அறிவிக்கும் படியாக தங்களுக்குப் பணித்தாரென்றார். அவரை விசுவசிக்கும் அனைவரும் அவரது பெயரால் பாவமன்னப்புப் பெறுவரென இறைவாக்கினர் கூறினரெனவும் எடுத்துரைத்தார்.

பேதுரு பேசிக்கோண்டிருக்கையில், அதைக் கேட்டுக்கொண்டிருந்த அனைவர் மீதும் தூய ஆவி இறங்கி வரவே, அவர்கள் எல்லாரும் பல மொழிகளில் பேசி, கடவுளைப் போற்றினர். அனைவர் மேலும் பரிசுத்த ஆவி இறங்கினதாகக் கூறி, ஆசிரியர் இந் நிகழ்ச்சியை இன்னொரு பெந்தெக்கொஸ்து போல் வர்ணிக்கிறார். புறவினத்தார் மீது பரிசுத்த ஆவி இறங்கியது, பேதுருவோடு யோப்பாவிலிருந்து வந்திருந்த யூதக் கிறிஸ்தவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. அப்போது பேதுரு, நம்மைப் போல் இவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றபின், இவர்கள் திருமுழுக்குப் பெறுவதற்கு யார் தடைசெய்ய முடியும் என்று கூறி, அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கக் கட்டளையிட்டார். அன்று கொர்ணேலியு குடும்பத்தார், சுற்றத்தார், நண்பர்கள் அனைவரும் திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் சேர்ந்தனர்.

பேதுரு எருசலேம் திரும்பிய போது, அவர் விருத்தசேதனம் செய்யாதவர்களின் வீட்டிற்குப் போய், அவர்களோடு சாப்பிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. கொர்ணேலியுவுக்குத் திருமுழுக்குக் கொடுத்ததல்ல, அவருக்கு விருத்தசேதனம் செய்யாமல், அவரை யூதராக்காமல், அவருக்குத் திருமுழுக்குக் கொடுத்ததும், தீட்டுப்பட்டவர்களான புறவினத்தவருடைய வீட்டிற்குப்போனதும், அவர்களுடன் விருந்தோம்பியதுமே பெரிய குற்றங்களாக கருதப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. பேதுரு நடந்ததைச் சொல்லவே, திருத்தூதர்களும், ஏனைய சகோதரர்களும் அமைதி அடைந்து கடவுளைப் போற்றினர். பரிசுத்த ஆவியே புறவினத்தாரை திருச்சபையில் சேர்க்க வழிநடத்தினார். திருச்சபையின் தலைவராகிய பேதுருவே முதல் புறவினத்தவருக்குத் திருமுழுக்கு அளித்தார். புறவினத்தவரான கொர்ணேலியு திருச்சபையில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, புறவினத்தவர்கள் பெரும் தொகையில்

திருச்சபையில் சேரத் தொடங்கினர். இவ்வாறு பல்வேறுபட்ட வழிகளில் கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி பேரரசெங்கும் போதிக்கப்பட்டு, அங்கெல்லாம் திருச்சபை தாபகம் பெற்றது.

எருசலேம் சங்கத்தில் எடுக்கப்பட்ட "எவரும் ஒரு யூதனாகாமல், விருத்த சேதனம் செய்யாமல் கிறிஸ்தவனாகலாம்" என்ற தீர்மானமும் ஆயிரக் கணக்கான புறவினத்தவர்கள் திருச்சபையில் இணைவதற்கு வழி சமைத்துக் கொடுத்தது. குறிப்பாக புனித பவுல் மேற்கொண்ட பல மறைபோதக பயணங்களினால் பல்லாயிரக்கணக்கான யூதர்களும், புறவினத்தவர்களும், கிறிஸ்துவின்மேல் விசுவாசம் கொண்டு, திருமுழுக்குப் பெற்றனர். இவ்வாறாக அப்போஸ்தலர் காலத்திலேயே திருச்சபை எருசலேம், யூதேயா, சமாரியா, கலிலேயா, அந்தியோக்கியா, சிப்புருஸ் தீவு, பம்பிலியா, கலாத்தியா, பேர்கா, பிசியா நாட்டு அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, டேர்பே, பிலிப்பி, எபேசு, தியாத்திரா, சர்தை, இலவோதிக்கேயா, தெசலோனிக்கா, கொரிந்து, உரோமை, சிமிர்னா, போந்து, கப்பதோச்சியா, சின்ன ஆசியா, பித்தினியா போன்ற நாடுகளில் பரவியிருந்ததை நாம் திருத்தூதர் பணி நூலிலும், திருவெளிப்பாடு நூலிலும், புனித பேதுருவின் திருமுகங்களிலும் படிக்கிறோம். மூன்றாம் நூற்றாண்டில் திருச்சபை ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களில், மசதோனியா, எகிப்து, கிறீஸ், இல்லிரியா, இத்தாலி, இஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, பேசியா, அரேபியா போன்ற நாடுகளிலெல்லாம் தாபிக்கப் பட்டிருந்தது.

இப்படியாக எருசலேமில் ஒரு சிறிய கடுகு மணிபோல் ஆரம்பித்த திருச்சபை, முதல் மூன்று நூற்றாண்டுகளில் படிப்படியாக வளர்ந்து, படர்ந்து விரைவில் பல நாடுகளுக்கும் பரவி, பெரியதொரு விருட்சமாக மாறியதற்கு ஏதுவாகப் பல காரணிகள் இருந்தன. அவற்றில் பின்வருபவன குறிப்பிடத்தக்கவை:

1. கிறிஸ்து "இதோ! உலக முடிவுமட்டும் நான் உங்களோடு இருப்பேன்" என வாக்களித்த அவரது பிரசன்னமும், அருளும்.

2. பரிசுத்த ஆவியின் வருகையினால் ஆதிக் கிறிஸ்தவர்கள் பெற்ற வல்லமையும், அருங்கொடைகளும், அவருடைய செயற்பாடும்.

3. திருத்தூதர்களின், மனந்திரும்பிய ஆதிக் கிறிஸ்தவர்களின் அப்போஸ்தொலிக்க ஆர்வம். அவர்களின் தீவிர போதனை.

4. இயேசுவின் பெயரால் அவர்கள் ஆற்றிய புதுமைகள், அற்புதங்கள்.

5. கிறிஸ்தவ சத்தியங்களின் வலிமை. சத்தியமே இறுதியில் வெல்லும்.

6. ஆதிக் கிறிஸ்தவர்களின் எடுத்துக்காட்டான வாழ்க்கை, பிறரன்பு, தூய்மை.

7. திருத்தூதர்களும், விசுவாசிகளும் தாம் விசுவசித்த சத்தியங்க-ளுக்காக, தாம் சான்று பகர்ந்த உண்மைகளுக்காக தம் உயிரையே கொடுத்தமை.

8. வேத கலாபனைகளின்போது, கலாபனைகாரர்முன் கிறிஸ்தவர்கள் காட்டிய பொறுமை, தைரியம் கலாபனைக்காரரையே சிந்திக்க வைத்தன. வேதசாட்சிகளின் இரத்தம், திருச்சபையின் வித்தாக மாறியது.

9. அழியாத ஆன்மா, பாவ மன்னிப்பு போன்ற சத்தியங்களால் மக்களுக்குக் கிடைத்த மன ஆறுதல்.

10. அடிமை வாழ்வில் துவண்டு, கொடுமைகளை அனுபவித்த மக்களுக்கு கிறிஸ்தவம் கொடுத்த ஆறுதல், அமைதி, மறுவுலக வாழ்வு.

11. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மத உணர்வு, மத மறுமலர்ச்சி. கிறிஸ்தவத்தின் மதக் கொள்கைகள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

12. உரோமைப் பேரரசின் அமைப்பு, நிர்வாகம், அதன் கீழ் எங்கும் நிலவிய அமைதி, அங்கிருந்த நல்ல வீதிகள், போக்குவரத்து வசதிகள், எல்லா நாடுகளும் ஒரே ஆட்சியின் கிழ் இருந்தமையால் எங்கும் தங்குதடையின்றி பாதுகாப்பாக பயணம் செய்யக்கூடிய ஏற்பாடுகள், எங்கும் கிரேக்கம் பேசப்பட்டதால், கிரேக்க மொழியில் எங்கும், எவருடனும் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தமை, இவையெல்லாம் கிறிஸ்தவம் எங்கும் எளிதில் பரவுவதற்கு தாராளமாய் உதவின.

திருச்சபை தன் வரலாற்றின் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் பல எதிர்ப்புகளுக்கும், இடையூறுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. திருச்சபைக்கு எதிராக அதற்கு வெளியிலிருந்து முதலில் யூத கலாபனைகளும், அடுத்து உரோமைய கலாபனைகளும் எழுந்தன. பின்னர் அதற்கு உள்ளிலிருந்தே பல வேதபேதகங்கள், திரிபுக் கொள்கைகள் எழுந்து அதன் வளர்ச்சிக்கு பெரும் இடைஞ்சலாகவிருந்தன. எனினும் இத்தனை தடைகள் எதிர்ப்புக்கள் மத்தியிலும், அந்த முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் திருச்சபை வளர்ந்து பரவியதைப்போல் வேறெந்தக் காலத்திலிலும் அது வளரவில்லை. இக்காலத்தில் திருச்சபை அங்கத்தவர்களின் தொகையிலும், கிறிஸ்தவ சமூகங்களின் தொகையிலும் மட்டுமல்ல, அதன் விசுவாச வாழ்விலும், நிர்வாக அமைப்பிலும், வழிபாட்டு முறைகளிலும், இறையியல், மறைக் கல்வியிலும் பெரும் வளர்ச்சி கண்டது. அக்காலத்தில் இடம்பெற்ற யூத, உரோமைய கலபனைகளும், தோன்றிய பேதகங்களும் அதற்கு உதவின. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மத உணர்வும், மறுமலர்ச்சியும் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாய் அமைந்தன. எனவேதான் திருச்சபையின் வரலாற்றில் முதல் மூன்று நூற்றாண்டுகளையும் திருச்சபையின் "வீர வரலாற்றுக் காலம்" என்றழைப்பர்.

## 6.1.1.6. எருசலேம் பொதுச்சங்கம் கூடப்பட்ட பின்னணி

கொர்னேலியு திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் இணைந்த நிகழ்வு திருத் தூதர் பணி நூலில் மூன்று முறைகள திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வலியுறுத்தப்படுகிறது. ஏனெனில் அது திருச்சபையின் வரலாற்றிலே, குறிப்பாக அதன் வளர்ச்சியிலே ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அதன் விளைவாக புறவினத்தவர்களும் திருச்சபையில் சேருவதற்கு வழிசமைத்துக் கொடுத்தது. எனவே கொர்ணேலியுவின் மனமாற்றத்தைத் தொடர்ந்து செசாரியாவிலும், அந்தியோக்கியாவிலும், பவுலின் முதல் மறைத்தூதுப் பயணத்தையடுத்து மத்தியதரை நாடுகளிலும், புறவினத்தவர் திருச்சபையில் பெருமளவில் சேர்ந்தனர். யூதர்கள் கிறிஸ்துவை மெசியாவாக ஏற்க மறுக்க, புறவினத்தவர்கள் பெருந் தொகையாக கிறிஸ்துவில் விசுவாசம்

கொண்டு, திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தனர். அதன் விளைவாக இவ்வளவு காலமும் யூத மயமாகவிருந்த திருச்சபை, இப்பொழுது படிப்படியாக புறவினமயமாக மாற ஆரம்பித்தது. அதை எருசலேமில் வாழ்ந்த யூத பழமைவாதிகள் விரும்பவில்லை.

எனவே இப்புதிய சூழல் ஆதித் திருச்சபையில் ஓர் பெரும் பிரச்சினையை உருவாக்கியது. இவ்வளவு காலமும் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளை எனக் கருதி வந்த யூத கிறிஸ்தவர்களின் மனதில் பல கேள்விகளை எழுப்பின. கிறிஸ்தவத்திற்கும் யூத மதத்திற்குமிடையே உள்ள தொடர்பு, உறவு என்ன? கிறிஸ்தவம் ஒரு தனி மதமா அல்லது யூத மதத்தின ஒரு கிளையா? புறவினத்தவர்கள் திருச்சபையில் சேரும்பொழுது நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் என்ன? அவர்கள் விருத்தசேதனம் செய்துகொள்ளாமல், மோசேயின் சட்டங்களை ஏற்றுக் கடைப்பிடிக்காமல், அதாவது ஒருவர் யூதனாகாமல் கிறிஸ்தவனாக வர முடியுமா? ஆரம்பத்தில் எருசலேமில் வாழ்ந்த பாலஸ்தீன யூதர்களுக்கும், எருசலேம் வந்திருந்த சிதறுண்டுபோன யூதர்களுக்கும் மட்டுமே நற்செய்தி போதிக்கப்பட்டது. அவர்களே முதலில் மனம் திரும்பி நற்செய்தியை ஏற்று, திருச்சபையில் சேர்ந்தனர். ஆதிக் கிறிஸ்தவர்கள் எல்லோரும் யூதர்களாக இருந்த படியாலும், அவர்கள் தொடர்ந்து எருசலேம் ஆலயம், மற்றும் யூத செபக்கூடங்களுக்குச் சென்று அங்கு நடைபெறும் வழிபாடுகளில் பங்குபற்றியமையினாலும் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளை, பிரிவு என்ற கருத்து எருசலேம் சபையில், யூத கிறிஸ்தவர்கள் மத்தியில் ஊன்றி இருந்தது. ஆரம்ப கிறிஸ்தவர்கள் எல்லோரும் யூதர்கள் என்ற படியால் விருத்தசேதனம் செய்யப்பட்டவர்களாய், யூத வேத நூலை அறிந்தவர்களாய், மோசே சட்டங்களை கடைப்பிடிப்பவர்களாய் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் சீரழிந்த பழைய இஸ்ராயேலர் மத்தியில் தூய்மையான புதிய இஸ்ராயேலராய் இருந்தனர்.

ஆனால் விரைவில் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் கீழ், திருத்தூதர்களின் தீவிர போதனைகள், மறைபரப்புப் பயணம், ஆதிக் கிறிஸ்தவர்களின் முன்மாதிரிகையான வாழ்க்கை போன்றவற்றால் கவரப்பட்டு, பல புறவினத்தவர்கள் நற்செய்தியை ஏற்று, திருச்சபையில்

சேர்ந்தனர். இப் புறவினக் கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் செய்யப்படா-தவர்கள், யூத வேத நூலையோ, மோசேயின் சட்டங்களையோ அறியாதவர்கள், இஸ்ராயேலரோடு எவ்வித தொடர்பும் இல்லாதவர்கள். ஆகவே இவர்கள் மத்தியில் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளை, பிரிவு அல்ல, மாறாக அது ஒரு தனி மதம், ஒரு புது மதம் என்ற கருத்து வளர்ந்தது. இவ்வாறு ஆதித் திருச்சபையில் ஒரு பதட்ட நிலை உருவாகியது. குறிப்பாக சீரிய அந்தியோக்கியாவில் பர்ணபாவும், பவுலும் பராமரித்து வளர்த்து வந்த யூத கிறிஸ்தவர்களையும், புறவினக் கிறிஸ்தவர்களையும் கொண்ட கலப்புத் திருச்சபையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஏற்கனவே பேதுரு புறவினத்தவரான கொர்நேலியுவின் வீட்டிற்குப் போய், அங்கு அவர்களுக்குத் திருமுழுக்கு அளித்து, அவர்களோடு உண்டு, குடித்து, விருந்தோம்பி வந்தபொழுது இப்பிரச்சினை தலைதூக்கியது. ஆனால் பேதுரு பரிசுத்த ஆவியின் வழிநடத்தலின் படியேதான் தான் அவ்வாறு செய்ததாக விளக்கிய-தனால், ஒருவாறு அமைதி ஏற்பட்டது. ஆனால் உள்ளுக்குள்ளே இப்பிரச்சினையும், பதற்றமும் வளர்ந்தன. அண்மைக் காலங்களில் சீரியா, அந்தியோக்கியா இளந் திருச்சபையின் துரித வளர்ச்சியும், அதன் சுதந்திரப் போக்கும், கலாத்திய நாடுகளான பிசிதியா அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா போன்ற இடங்களில் பவுல் யூதர்களை இழிவாகப் பேசியதும், அதன் விளைவாக நடந்த சம்பவங்களும் இப்பிரச்சினைகளை மீண்டும் கிளப்பி விட்டன. விருத்தசேதனம் செய்யப்படாதவர்கள், மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடிக்காதவர்கள், யூதனாக முதலில் மாறாதவர்கள், திருமுழுக்கு பெற முடியாது, திருச்சபையில் சேர முடியாது, மீட்புப் பெற முடியாதென்பது எருசலேமில் வாழும் யூதப் பழமைவாதக் கிறிஸ்தவர்களின் கருத்து. நற்செய்தியை ஏற்று, கிறிஸ்தவத்தைத் தழுவிய பரிசேயரும் இக்கொள்கையை ஆதரித்தனர். இறுதி நாளில் மோசேயின் சட்டத்தைக் கடைப்பிடித்தவர்களே மீட்புப் பெறுவரென்பது அவர்களது கருத்து.

இப் பிரச்சினை இப்படியாக வளர்கையில், எருசலேமிலிருந்து சில யூதப் பழமை வாதிகள், தாங்களாக சீரியா அந்தியோக்கியாவுக்குச்

சென்று, மோசேயின் முறைமைப் படி விருத்தசேதனம் செய்துகொள்ளாமல், மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடிக்காமல், முதலில் ஒரு யூதனாக மாறாமல் அவர்கள் திருமுழுக்குப் பெற முடியாது, திருச்சபையில் சேர முடியாது, கிறிஸ்தவனாக வர முடியாது, மீட்புப் பெற முடியாதெனப் புறவினக் கிறிஸ்தவர்களுக்குப் போதித்தனர். ஆனால் பவுலும், பர்னபாவும் அதை முழு மூச்சாக எதிர்த்து வாதாடினர். வாதம் பெரும் வாக்குவாதமாக மாறியது. அந்தியோக்கிய யூத-புறவினக் கலப்புத் திருச்சபையிலே இது பெரிய குழப்பத்தையும், பிளவையும் ஏற்படுத்தி, அதன் அமைதியைக் குலைத்தது. எனவே இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவே அந்தியோக்கிய சபையினர் பவுலையும், பர்னபாவையும், மற்றும் சிலருடன் எருசலேமிலுள்ள திருத்தூதர்கள், மூப்பர்களிடம் சென்று, அதற்குரிய தீர்வு கண்டு வர அனுப்பி வைத்தனர்.

## 6.1.1.6.1. எருசலேம் பொதுச் சங்கம்

(தி.தூ.ப. 15:1-29)

எருசலேம் பொதுச் சங்கமே திருச்சபையின் வரலாற்றிலே கூடப்பட்ட முதல் பொதுச் சங்கமாகும். இது எருசலேமில், திருச்சபையின் தலைவரான பேதுருவின் தலைமையின் கீழ், 50ம் ஆண்டளவில் கூடியது. இதில் திருச்சபையின் பல்வேறு சமூகங்களிலிருந்து அழைக்கப்பட்ட திருத்தூதர்களும், மூப்பர்களும் பங்கெடுத்தனர். சீரிய-அந்தியோக்கிய திருச்சபையில் யூத கிறிஸ்தவர்களுக்கும் புறவினக் கிறிஸ்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினக்கு உரிய தீர்வு காணும் நோக்குடனேயே அது கூடப்பட்டது. அதாவது கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையா, அல்லது ஒரு தனி மதமா? ஒருவர் கிறிஸ்தவனாக வருவதற்கு முன் விருத்தசேதனம் செய்து, ஒரு யூதனாக வரவேண்டுமா, இல்லையா? அவர்கள் மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமா, இல்லையா? இவற்றை ஆராய்ந்து, சரியான தீர்வு கூறுவதே எருசலேம் சங்கம் கூடப்பட்டதின் நோக்கமாகும்.

சங்கத்தில் பங்கெடுத்த உறுப்பினர்கள் மத்தியில் இரு முக்கிய குழுக்கள், கட்சியினர் இருந்தனர். ஒன்று பவுல், பர்னபா தலைமையிலான புறவினக் கிறிஸ்தவர்கள். மற்றது எருசலேம் ஆயரான யாகப்பர்

தலைமையிலான யூதப் பழமை வாதிகளும், பரிசேயக் கட்சியினரும். சங்கத்தின் ஆரம்பதில் இரு குழுவினரும் தத்தம் கருத்துக்களை எடுத்துக் கூறி, நீண்ட நேரம் வாதம், பிரதி வாதம் செய்தனர். இறுதியில் கூட்டத்திற்கு தலைமை வகித்த பேதுரு எழுந்து, தம் கருத்துக்களை முன் வைத்தார். அவர் செசாரியாவில் கொர்ணேலியுவின் திருமுழுக்கின் போது தம் அனுபவத்தை எடுத்துக் கூறி, "உள்ளங்களை அறியும் கடவுள் நமக்குத் தூய ஆவியைக் கொடுத்தது போல் அவர்களுக்கும் கொடுத்து அவர்களை ஏற்றுக்கொண்டார். நம்பிக்கையால் அவர்கள் உள்ளங்களைத் தூய்மைப் படுத்தினார். நமக்கும் அவர்களுக்கும் இடையே அவர் எந்த வேறுபாடும் காட்டவில்லை ஆகவே நம் மூதாதையரோ, நாமோ சுமக்க இயலாத நுகத்தை இப்பொழுது இந்தச் சீடருடைய கழுத்தில் வைத்து, கடவுளை ஏன் சோதிக்கிறீர்கள். ஆண்டவர் இயேசுவின் அருளால் நாம் மீட்புப் பெறுவது போலவே அவர்களும் மீட்புப் பெறுகிறார்களென நம்புகிறோம்" என்றார். பேதுருவின் இவ் உரை எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்க்மான முடிவாக அமைந்தது. விருத்தசேதனமல்ல, விசுவாசம் தான் எம் எல்லாரையும் தூய்மையாக்குகிறது. மோசேயின் சட்டங்கள் அல்ல, இயேசுவின் அருள்தான் எம் எல்லோருக்கும் மீட்பு அளிக்கின்றது. பேதுருவின் முடிவை எல்லோரும் அமைதியாக ஏற்றுக்கொண்டனர். சங்கத்தின் முடிவு புறவினக் கிறிஸ்தவர்களுக்கு சாதகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

பேதுருவின் உரையை அடுத்து, பவுலும் பர்னபாவும் தம் மறைதூதுப் பயணத்தின் போது புறவினத்தாரிடையே கடவுள் தம் வழியாகச் செய்த அற்புதங்களையும், அருங்குறிகளையும் எடுத்துக்கூறி, அவையெல்லாம் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தையும், அவரின் வழிநடத்தலையும் காடடுகின்றன என்றனர். கடைசியாக, திருத்தூதரும், எருசலேம் சபையின் தலைவருமான யாகப்பர் தம் முடிவுரையைக் கூறினார். பேதுரு தம் உரையில் கூறியதை மீண்டும் வலியுறுத்தி, அதற்கு ஆதாரமாக இறைவாக்கினர் ஆமோஸ் முதலில் யூதரும், அடுத்து புறவினத்தாரும் மீட்புப் பெறுவர் எனக் கூறியதை (ஆமோ.9:11-12) எடுத்துக் காட்டினார். ஆகவே நாம் புறவினத்தாருக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது, அவர்கள் விருத்தசேதனம் செய்யவேண்டியதில்லை எனக் கூறினார். பழமை வாதியான யாகப்பர் இவ்வாறு கூறுவது அவரது பெருந்தன்மையை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை

காட்டுகின்றது. எனினும் எருசலேம் சங்கத்தின் இத் தீர்மானம் யூதக்கிறிஸ்தவர்களின், குறிப்பாக பரிசேயரின் கருத்துக்கு எதிராக அமைந்த படியால், அவர்களையும் திருப்தி செய்ய, புறவினத்தவர்கள் யூதர்களுடன் தொடர்பு கொள்ளும் போது, பந்தி அமரும்பொழுது, அவர்களுக்கு அருவருப்பு கொடுப்பனவற்றை, யூத சட்டப்படி அவர்கள் வெறுப்பவற்றை, அதாவது சிலைகளுக்கு படைக்கப்பட்ட உணவு, கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்தவை, மிருக இரத்தம், பரத்தமை போன்றவற்றை விலக்குவது கிறிஸ்தவர்களின் நல்லுறவுக்கு உகந்ததெனக் கூறினார்.

## 6.1.1.6.2. எருசலேம் சங்கத்தின் தீர்மானங்கள்

இப் பிரச்சினை சீரிய-அந்தியோக்கியா சபையில் ஆரம்பித்த படியால், அச்சபைக்கு சங்கத்தின் தீர்மானத்தை சங்கத்தின் சார்பாக அறிவிக்க வேண்டியிருந்தது. எனவே, எருசலேம் சபையில் முதன்மையான இடம் பெற்றிருந்த பர்னபா என்னும் யூதாவையும், சீலாவையும், பவுல், பர்னபாவுடன் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. சங்கத்தின் தீர்மானத்தை ஒரு கடிதத்தில் எழுதி, அந்தியோக்கியா, சீரியா, சிலிசியாவில் பரவியிருந்த புறவினச் சபைகளுக்கு கொடுத்து அனுப்பினர். அதில், எருசலேமில் இருந்து அந்தியோக்கியாவுக்கு வந்து, புறவினத்தவர்கள் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்று போதித்தவர்களுக்கு தாம் எவ்வித அதிகாரமும் கொடுக்கவில்லை என்றும், தங்கள் பெயரால் வரும் யூதாவும், சீலாவுமே பரிசுத்த ஆவியினதும் தங்களினதும் முடிவுகளை அவர்களுக்கு விளக்குவார்கள் என்றும் கூறி, அம்முடிவுகளை எழுத்தில் கொடுத்தனர்:

1. இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எந்தச் சுமையையும் உங்கள்மேல் சுமத்தக்கூடாது.
2. சிலைகளுக்குப் படைக்கப்பட்டவற்றைத் தவிருங்கள்.
3. மிருக இரத்தத்தைத் தவிருங்கள்.
4. கழுத்து நெரிக்கப்பட்டு செத்ததின் இறைச்சியைத் தவிருங்கள்.
5. பரத்தமையைத் தவிருங்கள்

இத் தீர்மானங்களைப் பரிசுத்த ஆவியின் முடிவுகள் எனக் கூறி, திருச்சபையின் மற்றைய விடயங்களில் பரிசுத்த ஆவி அவர்களை வழிநடத்தியது போல், இவ்விடயத்திலும் பரிசுத்த ஆவியே தங்களை வழிநடத்தியதாகக் காட்டப்படுகின்றது. மேலும், சங்கத்தின் முடிவுகளை மும்முறை கூறுவதன வழியாக அதன் முக்கியத்துவமும் உணர்த்தப்படுகின்றது. சில வேத நூல் வல்லுநர் முதல் தீமானத்தைத் தவிர, ஏனைய நான்கு தீர்மானங்களும் எருசலேம் சங்கத்தில் விவாதிக்கப்பட்ட பிரச்சினையோடு தொடர்பற்ற படியால், அவை உணவு ஒழுங்கு பற்றிய வேறொரு சங்கத்தில் எடுக்கப்பட்ட தீமானங்களென்பர். எருசலேம் சங்கத்தின் தீர்மானம் புறவினத்தவருக்குச் சாதகமாக அமைந்த படியால், திருத் தூதர் பணி நூலின் ஆசிரியர் இத் தீமானங்களையம் இங்கு புகுத்தி, பிரச்சினைக்கு எவ்வாறு கலந்துரையாடலின் வழியாக இரு தரப்பாரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய, இரு தரப்பாரையும் திருப்தி செய்யக்கூடிய ஒரு சமரச முடிவு கிடைத்ததென்று காட்ட விளைகிறாரெனக் கூறுவர். எருசலேம் பொதுச் சங்கமோ, கலந்துரையாடலோ இடம்பெற்றிருக்காவிடின், ஆதித் திருச்சபை அந்தியோக்கிய, அல்லது புறவினத் திருச்சபையென்றும், எருசலேம் அல்லது யூதத் திருச்சபையெனறும் பிளவுபட்டிருக்கக்கூடிய ஆபத்து இருந்ததை நாம் மறுக்க முடியாது. யூதாவும், சீலாவும், பவுல், பர்னபாவுடன் அந்தியோக்கியா சென்று, சபையைக் கூட்டி, கடிதத்தை வாசித்து, சங்கத்தின் முடிவை அறிவித்தனர். அது அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

எருசலேம் சங்கத்தின் தீமானம் உண்மையாக திருச்சபையின் வாழ்வில், அதன் வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. விருத்தசேதனம் அல்ல, விசுவாசம்தான் எம்மைத் தூய்மையாக்குகிறது. யூதசட்டஙகள் அல்ல, இயேசுவின் அருள்தான் எமக்கு மீட்பளிக்கிறது. ஆகவே யூதமதத்திற்கும், கிறிஸ்தவத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கிறிஸ்தவம் ஒரு தனி மதம். அது ஒரு அனைத்துலக மதம். ஒருவன் விருத்தசேதனம் செய்யாது, யூத சட்டங்களை கடைப்பிடியாது, யூதனாகாது, கிறிஸ்தவனாகலாம். எவனும் தன் கலை, கலாச்சாரத்ததை, பண்பாட்டை, மொழியை, இனத்தை, தனித்துவத்தை கைவிடாது திருச்சபையில் அங்கத்தவனாகலாம். எந்தவொரு பண்பாடும், கலாச்சாரமும், மொழியும் திருச்சபைக்கு புறம்பானதல்ல. யூதரும்,

புறவினத்தவரும் எவரும் திருச்சபையில் ஒன்றே. அனைவரும் சமமானவர்கள். இவையெல்லாம் திருச்சபையின் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தின.

## 6.1.2. புனித பவுலின் மறைத்தூதுப் பயணங்கள்

ஆரம்ப திருச்சபையின் வளர்ச்சியிலே பெந்தக்கோஸ்து நிகழ்வும், அதைத் தொடர்ந்து ஆரம்பித்த அப்போஸ்தலர்களின் தீவிர போதகமும், திருத்தொண்டர் ஸ்தேவானின் மறைசாட்சி மரணமும், அதைத் தொடர்ந்து கிரேக்க மொழி பேசும் கிறிஸ்தவர்கள் எருசலேமிலிருந்து தப்பியோடிச் சென்ற இடங்களில் எல்லாம் நற்செய்தியை அறிவித்ததும், உரோமைய நூற்றுவர் தலைவர் கொர்ணேலியுவின் மனமாற்றமும், அதைத் தொடர்ந்து புறவினத்தவர்கள் திருச்சபையில் சேர ஆரம்பித்ததும், எருசலேம் சங்கத்தின் தீர்மானமும், அதன் வழியாக புறவினத்தவர்கள் தங்குதடையின்றி திருச்சபையில் இணைய வழி திறக்கப்பட்டதும் மைல் கற்களாக அமைந்தன. ஆனால் அவை எல்லாவற்றிற்கும் மேலாக வேத விரோதி சவுலின் மனமாற்றமும், அதைத் தொடர்ந்து அவர் மேற்கொண்ட மறைத்தூதுப் பயணங்களும் ஆரம்ப திருச்சபின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றின. கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி, கிறிஸ்துவத்தை அழித்துக் கொண்டிருந்த வேத விரோதி சவுலை, இறைவன் தேர்ந்தெடுத்து, புறவினத்தவர்களின் அப்போஸ்தலராக அவர்களுக்கு நற்செய்தியைப் போதிக்க அனுப்பினார். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியைப் பொறுப்புடன் ஏற்றுக் கொண்ட சவுல், அதை நிறைவேற்ற பல மறைத் தூதுப் பயணங்களை மேற்கொண்டு, மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளெங்கும் சென்று, ஏன், அக்காலத்தில் உலகின் கடை எல்லையென கருதப்பட்ட உரோமை வரைக்கும் சென்று, பல எதிர்ப்புகள், துன்பங்கள் மத்தியில் நற்செய்தியை அறிவித்து, பலரை மனந்திருப்பி, அங்கெல்லாம் கிறிஸ்தவ சமூகங்களை ஏற்படுத்தினார். எனவே ஆரம்ப திருச்சபையின் வளர்ச்சியை அறிய விரும்புகின்றவர்கள் அவர் வாழ்வையும், பணியையும் அறிந்திருப்பது அவசியம்.

## 6.1.2.1. புனித பவுலின் வாழ்வும் பணியும்

சவுல் ஒரு கிரேக்க மொழி பேசும் யூதர். யௌன பண்பாட்டினர். அவர் சின்ன ஆசியாவில் சிசிலியாவிலுள்ள தார்சு என்ற கிரேக்க நகரத்தில் கி.பி. 10 ஆண்டளவில் பிறந்தவர். அவருடைய பெற்றோர் பென்ஜமின் குலத்தைச் சேர்ந்தவர்கள். அவருக்குத் திருமணமான ஒரு தங்கையும் இருந்தார் (23:16). சவுலின் உரோமைய இலத்தீன் பெயர் பவுல். தங்கள் யூதப் பெயரோடு மற்றொரு உரோமைய அல்லது கிரேக்க பெயரை வைத்திருப்பது அந்நாட்களில் பலஸ்தீனாவுக்கு வெளியே வாழ்ந்த யூதர்களுக்கு சாதாரண வழக்கமாகும். சவுலின் தந்தை ஒரு உரோமைக் குடிமகனாய் இருந்தார். சவுல் தார்சு குடிமகனாகவும், அதே வேளையில் ஒரு உரோமைக் குடிமகனாகவும் இருந்தார் (தி.தூ.ப. 21:9, 22:25). அவர் சிறுவனாக இருந்த பொழுது தார்சுவில் கிரேக்கத்தால் பாதிக்கப்பட்ட யூதத்துவத்தில் பயிற்சி பெற்றார். அவர் இளைஞனாக இருந்த பொழுது, இயேசுவின் மரணத்திற்குப் பின் எருசலேமிற்கு சென்றார். அவர் இயேசுவை அவரது இவ்வுலக வாழ்வின் போது காணவில்லை (22:3). சவுல் எருசலேமில் மிகப் புகழ் பெற்ற சட்ட வல்லுநரான கமாலியேலின் கீழ் வேத நூலை நன்கு பயின்றார். பாலஸ்தீன யூதத்துவத்தின் பாரம்பரியங்களை நன்கு கற்றார். அவர் சட்டங்களைக் கற்றது மட்டுமல்ல, அவற்றை மிக நுணுக்கமாகக் கடைப்பிடித்த ஒரு பரிசேயனாகவும் மாறினார் (23:6). அவருக்கிருந்த மதப்பற்றும், மறைநூலைப் படிக்கவிருந்த ஆர்வமும் அவரை சட்ட அறிவிலும், மறை ஆர்வத்திலும் வல்லவராக்கியது. அவர் ஓர் சிறந்த ராபியாகவும் செயற்பட்டார். தோல் பதனிடுவது அல்லது கூடாரம் அமைப்பது அவரது தொழிலாகவிருந்தது. உருவத்தில் சிறியவராயும் ஆனால் உணர்ச்சி நிறைந்தவராயும் இருந்தார்.

யூத மறையில் அவருக்கு இருந்த பற்றும், யூத சட்டத்தில் அவருக்கு இருந்த அறிவும், அவரது மத ஆர்வமும் அவரைக் கிறிஸ்தவர்களுக்கு எதிராக எழச் செய்தன. அவர் ஒரு இளைஞனாக ஸ்தேவானின் கொலையிலே பங்கெடுத்ததைக் காண்கிறோம் (7:58). அதை அடுத்து எருசலேமில் தொடங்கிய யூத கலாபனையிலே சவுல் மிக மும்முரமாக ஈடுபட்டார் (8:3). யூத மறையின் மேல் உள்ள பற்றினால் கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவர்களையும் அழிக்கத் தீவிரமாக

உழைத்தார். வீடுவீடாகச் சென்று, ஆண்களையும் பெண்களையும் இழுத்துச் சென்று, சிறையில் அடைத்தார். அவரின் பெயரைக் கேட்கவே கிறிஸ்தவர்கள் அஞ்சினார்கள். தமாஸ்கு நகரில் கிறிஸ்தவர்கள் இருந்ததைக் கேள்விப்பட்ட சவுல், அவர்களைக் கைது செய்து எருசலேமுக்கு இழுத்து வர, தலைமைக் குருக்களின் உத்தரவுப் பத்திரத்துடன், வேறு சிலரோடு தமாஸ்கு நகரத்தை நோக்கிப் பயணம் சென்றார்.

## 6.1.2.2. சவுலின் அழைத்தலும் மனமாற்றமும்

சவுல் யூத மதப் பற்றினாலும், யூத சட்டத்தின் மேல் கொண்டிருந்த ஆர்வத்தினாலும் கிறிஸ்தவத்தின்மேலும் கிறிஸ்தவர்கள்மேலும் ஆவேசம் கொண்டவராய், கோபம் பொங்கியெழ, சீறிக்கொண்டு, தமாஸ்குவை நோக்கிப் பயணம் செய்து, நகரத்தை நெருங்கினார். அவ்வேளை தமாஸ்குப் பாதையில் அவருக்கு ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அது அவரது வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. திடீரென்று வானத்திலிருந்து தோன்றிய ஒரு ஒளி அவரைச் சூழ்ந்து கொண்டது. ஒளியின் பிரகாசத்தினால் பார்வை தெரியாது, சவுல் கீழே விழுந்தார். அப்போது ஒரு குரலொலியைக் கேட்டார். "சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" என அக் குரலொலி கேட்டது. சவுல் ஒன்றும் விளங்காதவராய், "ஆண்டவரே நீர் யார்?" என்று கேட்க, அக் குரல் "நீ துன்புறுத்தும் இயேசு நானே. நீ எழுந்து நகருக்குள் செல். நீ என்ன செய்ய வேண்டும் என்பது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றது. அவருடன் கூடப்பயணம் செய்தவர்கள் அக் குரலைக் கேட்டனர், ஆனால் ஒருவரையும் காணவில்லை. பின்னர் பவுல் தான் அவ்வேளை காட்சியில் உயிர்த்த இயேசுவைக் கண்டதாகப் பல முறைகளில் கூறுவதை நாம் காண்கிறோம். பார்வையற்றிருந்த சவுலை அவரோடு கூடப் பயணம் செய்தவர்கள், கைகளைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு போய் தமாஸ்குவில் சேர்த்தனர். இங்கு சவுல் மூன்று நாட்களாக ஒன்றும் குடியாமலும், சாப்பிடாமலும் பார்வையற்றிருந்தார்.

அந்நாட்களில் தாமஸ்குவில் இயேசுவின சீடரில் ஒருவரான அனனியாவுக்கு ஆண்டவர் தோன்றி, சவுலிடம் சென்று அவருக்குப்

பார்வை அளிக்குமாறு கூறினார். சவுலின் பெயரைக் கேட்கவே அச்சமுற்ற சீடரை ஆண்டவர் உறுதிப்படுத்தி, "நீ செல். அவர் பிற இனத்தவருக்கும், அரசருக்கும், இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்து கொண்ட கருவியாய் இருக்கிறார். என் பெயரின் பொருட்டு அவர் எத்துணை துன்புறவேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக் காட்டுவேன்" எனக் கூறி, அனுப்பி வைத்தார். அப்படியே அனனியா சவுலிடம் சென்று, "சகோதரர் சவுலே, நீர் வந்த வழியில் உமக்குத் தோன்றிய ஆண்டவராகிய இயேசு நீர் மீண்டும் பார்வை அடையவும், தூய ஆவியால் ஆட்கொள்ளப் படவும், என்னை உம்மிடம் அனுப்பினார்" எனக் கூறி, அவருக்குப் பார்வை அளித்தார். உடனே சவுல் எழுந்து அனனியாவிடமிருந்து திருமுழுக்குப் பெற்றார்.

தமாஸ்குப் பாதையில் சவுலுக்கும் உயிர்த்த இயேசுவுக்கு-மிடையே நடைபெற்ற இச் சந்திப்பு, சவுலின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. திருத் தூதர் பணி நூலில் ஆசிரியர், பவுல் மூன்று முறைகள் இவ் அனுபவத்தைப் பற்றிப் பேசுவதாகத் தந்து, அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். இவ் அனுபவம் கிறிஸ்துவின் பகைவனாகிய சவுலை அவரின் அப்போஸ்தலனாக, திருத்தூதராக மாற்றியது. கிறிஸ்தவர்களின் விரோதியாகிய சவுலை கிறிஸ்தவர்களின் நண்பனாக மாற்றியது. கிறிஸ்தவத்தை அழிக்கப் புறப்பட்ட சவுலை, கிறிஸ்தவத்தை எங்கும் போதித்துப் பரப்பும் திருத்தூதராக மாற்றியது. தன் புதிய பணியை உணர்ந்த பவுல், அதே மத ஆர்வத்துடனும், பற்றுறுதியுடனும் தம் புதுப் பணியை நிறைவேற்றப் புறப்பட்டார். முதலில் அவர் தமாஸ்குவிலிருந்த செபக்கூடங்களுக்குச் சென்று, "இயேசுவே இறைமகன்", "இயேசுவே மெசியா" என்று போதித்தார். இதைக் கேட்ட அனைவரும் ஆச்சரியப்-பட்டனர். ஆனால் யூதர்களோ அவரைக் கொல்லத் தேடினர். எனவே அவர் எருசலேம் சென்று, சீடர்களுடன் இணைய முயன்றார். ஆனால் ஒருவரும் அவர் மனம் திரும்பிவிட்டதாக நம்ப, அவரை ஏற்றுக்கொள்ள முன் வரவில்லை. அவர்கள் அவருக்குப் பயந்தனர். ஆனால் பர்னபா அவரைத் திருத்தூதர்களிடம் இட்டுச் சென்று, அவரை அறிமுகம் செய்து வைத்தார். எருசலேமிலும் அவர் துணிவுடன் இயேசுவின் நற்செய்தியைப் போதித்து, கிரேக்க மொழி பேசும் யூதருடன் வாதிட்டார்.

அவர்களும் அவரைக் கொல்லத் தேடவே, சீடர்கள் இரகசியமாக அவரைச் செசாரியாவுக்கு அழைத்துச் சென்று, தார்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள்.

பவுல் ஆற்றிய பணிகளையும், அவர் எழுதிய திருமுகங்களையும் நாம் படிக்கும் பொழுது, அவரது ஆள்த்தன்மையைப்பற்றி நாம் சிறிது அறியவருகிறோம். திருமுகங்களில் காணப்படும் உணர்ச்சி மிகுந்த போக்கு, பவுல் ஆழ்ந்த வலிய மனவெழுச்சி, ஆர்வமுடையவரென்பதையும், அவரது கூரிய, கட்டுப் பாடுடைய அறிவையும் காட்டுகிறது. மறை பரப்புப் பயண விபரிப்புகளில் தலைமை தாங்குதல், மற்றும் அமைப்புகளை நிறுவுவதில் அவரது ஆற்றல், அவருடைய நட்புறவான ஆள்த்தன்மை, திறந்த பரந்த மனம் என்பன தெரிகின்றன. தான் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்ற ஆர்வம் மட்டுமல்ல, தம்மால் நற்செய்தியை எச்சூழ்நிலையிலும் அறிவிக்க முடியும் என்ற மன உறுதியும் அவரிடத்தில் காணப்படுகிறது. உடல் தோற்றத்தில் பவுல் குட்டையான உடல், வழுக்கைத் தலை, வளைந்த கால்கள், கட்டான உடல், ஒன்றையொன்று தொடும் கண் புருவங்கள், வளைந்த மூக்கு உடையவரென்று கி.பி. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த "பவுலின் பணி நூல்" என்ற மறைவு நூல் கூறுகின்றது.

**சீரிய அந்தியோக்கியாவில் நற்செய்தி**

ஸ்தேவானின் மறைசாட்சி மரணத்தை அடுத்து, எருசலேமில் தொடங்கிய யூத கலாபனையின் நிமித்தம் சிதறுண்டு ஓடிய கிறிஸ்தவர்கள் பெனிசியா, சைப்பிரஸ், அந்தியோக்கியா போன்ற இடங்களுக்குச் சென்றார்கள். இவர்களில் அதிகமானோர் கிரேக்க மொழி பேசும் யூத கிறிஸ்தவர்கள், யௌன பண்பாட்டினர். இவர்கள் தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் நற்செய்தியை அங்கிருந்த யூதர்களுக்கு அறிவித்தார்கள். அக்காலத்தில் உரோமை, அலெக்சாந்திரியாவிற்கு அடுத்ததாக, உலகின் மூன்றாவது பெரிய நகரமாக சீரிய அந்தியோக்கியா திகழ்ந்தது. அதுவே கிரேக்க பண்பாட்டின் மையமாக இருந்தது. இது பல இன மக்களும் வாழ்ந்த ஒரு அழகான நகரம். அங்கு ஒரு பெரிய யூத சமுதாயமும் இருந்தது. அந்தியோக்கியாவிற்கு ஓடிச் சென்ற யூத கிறிஸ்தவர்கள் ஆரம்பத்தில் அங்கிருந்த

யூதர்களுக்கே நற்செய்தியை அறிவித்தனர். கொர்ணேலியுவின் மனமாற்றத்தையும், திருமுழுக்கையும் தொடர்ந்து, சைப்பிரசு, சிரேன் நாடுகளிலிருந்து சில கிரேக்க மொழி பேசும் யூத கிறிஸ்தவர்கள் அங்கு வந்து, இறைவனின் ஆவியால் வழிநடத்தப்பட்டு, அங்குள்ள புறவினக் கிரேக்கர்களை அணுகி அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தனர். அவர்களின் போதனையைக் கேட்ட பெரும் திரளான புறவினத்தவர்கள் நற்செய்தியை ஏற்று, இயேசுவில் விசுவாசம் கொண்டு, திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தனர். இது திருச்சபையின் வரலாற்றில் ஒரு புரட்சிகர முன்னேற்றமான நிகழ்ச்சியாக இருக்கிறது. இங்குதான் முதன் முதல் திருச்சபை புறவினத்தவர்களைத் தாமாகத் தேடிச் சென்று, அவர்களுக்கு நற்செய்தியைப் போதிப்பதைக் காண்கிறோம். இதை நோக்கியே தூய ஆவி இவ்வளவு காலமும் திருச்சபையை வழிநடத்தினார். முதலில் யூதர்களுக்கு நற்செய்தி போதிக்கப்பட்டது. பின்பு அரை யூதர்களான சமாரியர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பின்பு யூத மதத்தைத் தழுவிய புறவினத்தவனான எத்தியோப்பிய அண்ணகனுக்கு, அவனுடைய அழைப்பின் பேரில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பின்பு கடவுள் பயமுள்ளவனான, அதாவது யூத மதத்தின் விளிம்பிலிருந்த புறவினத்தவனான கொர்ணேலியுவுக்கு, அவனுடைய அழைப்பின் பேரில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஆனால் இங்கு தான் முதன் முறையாக கிறிஸ்தவர்கள் முழுக்க முழுக்க புறவினத்தவர்களை, கிரேக்கர்களைத் தாங்களாகத் தேடிச் சென்று அவர்களுக்கு நற்செய்தியைப் போதிப்பதைக் காண்கிறோம். பல கிரேக்கர்கள் நற்செய்தியை ஏற்று, கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு, திருமுழுக்கு வழியாகத் திருச்சபையில் சேர்க்கப்பட்டனர். அந்தியோக்கியாவில் தான் முதன் முதல் யூதக் கிறிஸ்தவர்களும், புறவினக்கிறிஸ்தவர்களும் அங்கத்துவம் வகித்த ஒரு "கலப்புத் திருச்சபை"யைக் காண்கிறோம்.

இச் செய்தி எருசலேமிலிருந்த அப்போஸ்தலர் சபையை, தாய்த் திருச்சபையை எட்டவே, அவர்கள் அந்தியோக்கியா சென்று, அங்குள்ள திருச்சபையைத் தரிசித்து, விடயங்களை விசாரித்து அறிய பர்னபாவை அனுப்பினார்கள். இந்த பர்னபா ஒரு யௌன பண்பாட்டு யூதர் இவரின் மறுபெயர் சூசை. இவர் சைப்பிரஸ் தீவைச் சேர்ந்தவர். ஒரு நல்லவர், மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். பரிசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்-

பட்டு, விசுவாசமும் நற்பண்புகளும் நிறைந்தவராய் இருந்தார். இவரே முதன் முதலாக தம் நில புலன்களை விற்று பணத்தை மக்களின் தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கும் படியாக அப்போஸ்தலர்களின் பாதத்தில் வைத்த தயாள உள்ளங் கொண்ட தர்மசீலர். பர்னபா அந்தியோக்கியா சென்று, திருச்சபையைத் தரிசித்து, அங்கு கடவுளின் அருட் செயல்களைக் கண்டு மன மகிழ்ந்தார். கிறிஸ்தவர்களை ஆண்டவரைச் சார்ந்திருக்குமாறு கூறி அவர்களை ஊக்குவித்தார். அவர் பணி வழியாக இன்னும் பலர் திருச்சபையில் சேர்ந்தனர். எனவே அவர் தர்சு நகர் சென்று, சவுலையும் தமக்கு உதவிக்கு அழைத்து வந்து, இருவரும் ஓராண்டு காலம் அங்கிருந்து, மக்களுடன் உறவாடி, அவர்களுக்குப் போதித்தனர். "சகோதரர்", "புதிய நெறியைச் சார்ந்தவர்கள்", "புதிய வழியினர்", "சீடர்கள்" என அழைக்கப் படடு வந்த கிறிஸ்துவின் சீடர்கள், அந்தியோக்கியாவில் தான் முதன் முறையாக "கிறிஸ்தவர்கள்" என அழைக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப் பெயர் யூதர்களிடமிருந்து அவர்களைப் பிரித்துக் காட்ட புறவினத்தவர்களால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பெயர். இது திருச்சபையின் வாழ்க்கையில் ஒரு சிறப்பான கட்டம். கிறிஸ்தவம் யூத மதத்திலிருந்து பிரிந்து போன ஒரு கிளையெனக் கருதப்படாமல், அது ஒரு தனி மதம் என கருதப்படுவதை நமக்குக் காட்டுகிறது.

## 6.1.2.3. புனித பவுலின் மறைத் தூதுப் பயணங்கள்

பவுலின் மறைப் பணி பற்றி லூக்கா திருத் தூதர் பணி நூலில் தரும் விபரிப்பை அடிப்படையாகக் கொண்டு, அதை பவுலின் மூன்று மறைத்தூதுப் பயணங்களாக வகுப்பது வழக்கம். அவற்றுள் முதலாவது பயணம் அந்தியோக்கியாவிலிருந்து சைப்பிரஸ் தீவுக்கும், தென் கிழக்கு சின்ன ஆசியாவில் உள்ள நகரங்களுக்கும், பர்னபா, யோவான் மாற்குவின் தோழமையுடன் மேற்கொள்ளப்பட்டது. இது ஏறக்குறைய மூன்று ஆண்டுக் நீடித்தன (கி.பி.46-49). அவரின் இரண்டாவது மறைத் தூதுப் பயணமும் அந்தியோக்கியாவிலிருந்து தொடங்கியது. பவுல் எருசலேமிலிருந்து சங்க முடிவை அறிவிக்க தங்களுடன் அந்தியோக்கியாவுக்கு வந்திருந்த சீலாவைக்

கூட்டிக்கொண்டு புறப்பட்டார். அந்தியோக்கிய சபையினர் அருள் வழங்கும் ஆண்டவர் பணிக்கென அவர்களை அனுப்பி வைத்தனர். இடையில் திமோத்தேயுவும், லூக்காவும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் (கி.பி.50-52) நீடித்த இவ் இரண்டாம் மறைத் தூதுப் பயணம், பவுலின் மூன்று மறைத்தூதுப் பயணங்களிலும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்தப் பயணத்தின்போதே பவுல் ஐரோப்பாவுக்கு சென்று, பிலிப்பி, தெசலோனிக்கா, அத்தென்ஸ், கொரிந்து போன்ற நாடுகளில் நற்செய்தியை அறிவித்தார். பவுலின் மூன்றாம் மறைத் தூதுப் பயணமும் அந்தியோக்கியாவிலிருந்தே ஆரம்பமாகியது. தமக்குத் துணையாகத் திமொத்தேயுவையும், தீத்துவையும் அழைத்துக் கொண்டு, தரை மார்க்கமாகப் பயணம் செய்தார். இப் பயணத்தினபோது முக்கியமாக எபேசில் இரண்டு ஆண்டுகள் (கி.பி.52-54) பணிபுரிந்தார். சிலர் பவுல் செசாரியாவிலிருந்து உரோமைக்குக் கைதியாக கொண்டு செல்லப்பட்ட பயணத்தை (58) அவரின் நான்காம் மறைத் தூதுப் பயணமென அழைபபர். ஏனெனில் அப் பயணதின்போதும், அவர் கைதியாகக் கொண்டு செல்லப்பட்டாலும், அவ் வேளையிலும் அவர் மறைப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

## 6.1.2.3.1 புனித பவுலின் முதல் மறைத் தூதுப் பயணம் (கி.பி.46-49)

(தி.தூ.ப. 15:4-35)

பர்னபா. பவுல் அந்தியோக்கிய திருச்சபை துரிதமாக வளர்ந்து வலுவடைந்தது. எருசலேம் யூதக் கிறிஸ்தவர்களின் மையமாகத் திகழ, அந்தியோக்கியா காலப்போக்கில் புறவினக் கிறிஸ்தவர்களின் மையமாக மாறியது. ஒரு நாள் அந்தியோக்கிய சபையிலிருந்த இறைவாக்கி-னர்களும், போதகர்களும் ஆண்டவரை வழிபடுகையில், தூய ஆவி பர்னபாவையும், சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்காக ஒதுக்கி வைக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டார். எனவே அவர்கள் நோன்பிருந்து, செபித்து. அவ் இருவர் மீதும் கைகளை விரித்து, இன்னமும் நற்செய்தியைக் கேள்விப்படாத மக்களுக்கு அறிவிக்க அவர்களை அனுப்பி வைத்தனர். தூய ஆவியே திருச்சபையை

வழிநடத்தி, புறவினத்தாருக்கு நற்செய்தியை அறிவிக்க பவுலையும் பர்னபாவையும் அனுப்புவதைக் காண்கிறோம். அந்தியோக்கிய திருச்சபையே முதன் முதலாக உலகெங்கும் நற்செய்தியை அறிவிப்ப-தற்கு மறைபரப்பாளர்களை அனுப்பத் தீர்மானித்தது. பர்னபாவும், பவுலும் யோவான் மாற்கைத் தமக்கு உதவியாக அழைத்துக் கொண்டு, தம் பயணத்தைத் தொடங்கினர். இந்தப் பயணம் 3 ஆண்டுகள் (46:49) வரை நீடித்தது. பர்னபாவின் தலைமையிலேயே பயணம் ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது. அவர் சைப்பிரசு தீவினர். அங்குதான் அவர்கள் முதலில் சென்றார்கள். இந்தப் பயணம் ஏறக்குறை மூன்று ஆண்டுகள் நீடித்தது. அந்தியோக்கியாவின் துறைமுகமாகிய செலூக்கியாவரை தரை வழியே சென்று, அங்கிருந்து சைப்பிசுக்கு கப்பல் ஏறினார்கள்.

**சைப்பிரஸ் தீவில் நற்செய்தி**

மறைத் தூதுவர்கள் சைப்பிரசின் கிழக்குத் துறைமுகமான சாலமியை அடைந்தனர். அது ஒரு சன நெருக்கமான துறைமுகம். அங்கு பல யூத செபக்கூடங்கள் இருந்தன. எனவே அவர்கள் செபக்கூடங்களுக்குச் சென்று போதித்தனர். பின்பு தரை வழியாக சைப்பிரசின் தலைநகராகிய பாப்போ சென்றனர். இதுவே பர்னபாவின் பிறப்பிடம். அங்கிருந்த சைப்பிரசு தீவின் ஆளுநன் செர்கியு பவுலு கடவுளின் வார்த்தையைக் கேட்க விரும்பி, பர்னபாவையும் சவுலையயும் வரவழைத்தான். ஆனால் அவனுக்குப் பணிபுரிந்த யூத மந்திரவாதி எலிமா என்னும் பார்ஏசு, ஆளுநன் நம்பிக்கை கொள்ளாதபடி, அவர்கள் அவனிடம் போவதைத் தடுத்தான். அப்போது சவுல் அம் மந்திரவாதி-யைக் கண்டித்து அவனைக் குருடாக்கினார். நடந்ததைக்கண்ட ஆளுநன் செர்கியு பவுலு மனம் திரும்பி, இயேசுவில் விசுவாசம் கொண்டார். இது உரோமை ஆளுநர் கிறிஸ்தவத்தின் மேல் கொண்டிருந்த நன்மதிப்பைக் காட்டுகிறது. இவ்விடத்திலிருந்து சவுல் 'பவுல்' என்று அழைக்கப்படுவதையும், தூதுக் குழுவுக்கு பர்னபாவிற்குப் பதிலாக பவுல் தலைமை தாங்குவதையும் அவதானிக்கிறோம்.

**பிசிதியா அந்தியோக்கியாவில் நற்செய்தி**

பின்பு மறைத் தூதுவர்கள் பாப்போவிலிருந்து கப்பலேறி, பெருகை நகரைச் சென்றடைந்தனர். இது சின்ன ஆசியாவின் தென்

கரையிலுள்ள பம்பிலியாவின் துறைமுகம். இங்கு யோவான் மாற்கு குறிப்பிடப்படாத ஏதோ காரணத்திற்காக மனம் நொந்து, தூதுக் குழுவைப் பிரிந்து எருசலேம் திரும்பினார். பவுலும் பர்னபாவும் மிகவும் கடினமான பாதை வழியாகத் தொடர்ந்து பயணம் செய்து, பிசிதியா அந்தியோக்கியாவை அடைந்தார்கள். இது கலாத்தியா மாநிலத்திலிருக்கும் பிசிதியா மாவட்டத்தின் செழிப்பான முக்கிய வர்த்தக நகரம். இங்கு செபக்கூடத் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஓய்வு நாளில் செபக் கூடத்தில் அவர்கள் யூதர்களுக்குப் போதித்தனர். இங்கேயே பவுலின் முதல் நீண்ட மறையுரையைக் காண்கிறோம். இம்மறையுரை பேதுரு பெந்தக்கோஸ்து தினத்தன்று கொடுத்த மறையுரையை ஒத்திருக்கிறது. இஸ்ரயேலரின் வரலாற்றிலே இறைவனின் அரும்செயல்களை எடுத்துக் கூறி, இறைவன் அளித்த வாக்குறுதியின்படி தாவீது வழிமரபிலிருந்து பிறந்த, திருமுழுக்கு யோவான் முன்னறிவித்த இயேசுவை, எருசலேமில் வாழும் தலைவர்களும், மக்களும், இறைவாக்கினரின் வார்த்தைகளைப் புரிந்து கொள்ளாமல், பிலாத்துவைக் கொண்டு அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றனர். ஆனால் கடவுள் அவரை உயிரோடு எழுப்பினார். உயிர்த்தவரைக் கண்ட அவரின் சீடர்கள் இதற்குச் சாட்சிகளெனக் கூறி, அவரில் நம்பிக்கை வைக்கும்படி அவர்களை அழைத்தார். மௌனமாகவும், அமைதியாகவும் உரையைக் கேட்ட மக்கள், அடுத்த ஓய்வு நாளுக்கும் வந்து பேசும் படி அவர்களை அழைத்தனர். பல யூதர்களும், யூதம் தழுவியவர்களும் விசுவாசம் கொண்டனர். அடுத்த ஓய்வு நாள் அவர்கள் உரையைக் கேட்பதற்கு நகரம் முழுவதும் செபக் கூடத்தில் கூடியிருந்தது. மக்கள் திரளைக் கண்ட யூதர்கள் பொறாமை கொண்டு, பவுலை எதிர்த்துப் பேசி, குழப்பம் உண்டாக்கி-னார்கள். யூதர்கள் நற்செய்தியைப் புறக்கணிக்க, புறவினத்தவர்கள் அதை நம்பினர். அப்போது பவுலும் பர்னபாவும், “கடவுளின் வார்த்-தையை உங்களுக்குத்தான் முதலில் அறிவிக்க வேண்டியிருந்தது. ஆனால் நீங்கள் அதை உதறித்தள்ளி, நிலைவாழ்வுக்குத் தகுதியற்ற-வர்களென்று உங்களுக்கு நீங்களே தீர்ப்பளித்துக் கொண்டீர்கள். எனவே நாம் புறவினத்தாரிடம் செல்கிறோம். ஏனெனில், ‘உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினத்தாருக்கு ஒளியாக ஏற்படுத்துவேன்’ என ஆண்டவர் எங்களுக்குக் கட்டளையிட்-

டுள்ளார்" என்றார். இதைக்கேட்ட புறவினத்தோர் மகிழ்ச்சியடைந்து கடவுளைப் போற்றினர். பலர் விசுவாசம் கொண்டனர். ஆனால் கடவுளின் அரும் கொடைகள் புறவினத்தவருக்குக் கிடைப்பதை யூதர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே அவர்கள் மதிப்புக்குரிய பெண்களையும், முதன்மைக் குடிமக்களையும் தூண்டி, குழப்பம் உண்டாக்கி, பவுலையும், பர்னபாவையும் நாட்டிலிருந்து விரட்டி விட்டார்கள்.

**இக்கோனியா, லீஸ்திராவில் நற்செய்தி**

அங்கிருந்து வெளியேறிய பவுலும் பர்னபாவும், அந்தியோக்கியாவிற்கு தென்கிழக்காயிருந்த இக்கோனியாவிற்குச் சென்று, அங்கேயும் யூதர்களுடைய செபக்கூடங்களில் பல நாட்களாகப் போதித்து, பல புதுமைகளைச் செய்தனர். பெரும் திரளான யூதரும், கிரேக்கரும் இயேசுவில் நம்பிக்கை கொண்டனர். ஆனால் நம்பிக்கை வைக்காத யூதர்கள் புறவினத்தவரைத் தூண்டி விட்டு, குழப்பம் உண்டாக்கினர். இதன் விளைவாக நகர மக்கள் இரண்டாகப் பிரிந்தனர். நம்பிக்கை வைக்காத யூதர்கள் புறவினத்தவருடன் சேர்ந்து அவர்களுக்குக் கல்லால் எறியத் திட்டமிடவே, பவுலும் பர்னபாவும் அங்கிருந்து புறப்பட்டு, லிஸ்திராவுக்குச் சென்றனர். இது ஒரு உரோமைக் குடியேற்ற நகர். அங்கு பவுல் தன் உரையைக் கேட்க வந்திருந்த ஒரு முடவனைக் குணமாக்கினார். இதைக் கண்ட மக்கட் கூட்டம் "தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன" எனக் கூறி, பர்னபாவை சேயுசு (யூப்பிற்றர்) என்றும், உரையாற்றிய பவுலை எமர்கு (மெர்குரி) என்றும் அழைத்தனர். சேயுசு கோயில் அர்ச்சகன் காளைகளையும் பூமாலைகளையும் கொணர்ந்து, மக்களுடன் சேர்ந்து அவர்களுக்குப் பலியிட முயற்சித்தான். இதைக் கண்ட பவுலும் பர்னபாவும், "மனிதர்களே, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போன்ற மனிதர்கள் தாம்" எனக் கூறித் தடுத்து, கடவுளிடம் திரும்பும் படியாக அவர்களை அழைத்தனர். ஆனால் அந்தியோக்கியாவிலிருந்தும் இக்கோனியாவிலிருந்தும் யூதர்கள் வந்து, அவர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டி, கல்லால் எறிந்து குழப்பம் உண்டாக்கினர். எனவே பவுலும் பர்னபாவும் அங்கிருந்து லிஸ்திராவுக்குத் தென்கிழக்காயிருந்த தேர்பேவுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்துப் பலரைச் சீடராக்கினர். பின்பு திரும்பி வரும் வழியில் தாம் முன் சென்ற லிஸ்திரா, இக்கோனியா,

அந்தியோக்கியா ஆகிய நகரங்களுக்குச் சென்று அங்குள்ள சீடர்களை, துன்பங்கள் வழியாகத்தான் நாம் இறையரசில் நுழையவேண்டுமென உறுதிப்படுத்தி அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தினார்கள். பின்பு பிசிதியா வழியாக பம்பிலியா வந்து, பெருகை நகரில் நற்செய்தியை அறிவித்துவிட்டு, அத்தாலியாவிலிருந்து கப்பலேறி சீரியா அந்தியோக்கியா வந்து சேர்ந்தனர். இங்கு சபையைக் கூட்டி கடவுள் தங்கள் வழியாகச் செய்ததை, தங்கள் அனுபவங்களை அவர்களோடு பகிர்ந்து கொண்டனர். பவுல் சென்ற இடங்களிலெல்லாம் கிரேக்க மொழி பேசும் யூதர்களே (யௌன பண்பாட்டினர்) குழப்பம் விளைவித்ததை அவதானிக்கிறோம். பவுலின் இந்த முதல் மறைத் தூதுப் பயணம் ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் எடுத்ததாகக் கூறப்படுகிறது.

பவுலின் முதல் திருத்தூதுப் பயணம் குறுகியதாயிருந்தாலும், வெற்றியானதென்றே கூறவேண்டும். யூதர்களில் அநேகரை மனந்திருப்ப முடியாவிட்டாலும், பல புறவினத்தவர்கள் விசுவாசம் கொண்டனர். பாப்போவின் ஆளுநர் செர்கியு பவுலு விசுவாசம் கொண்டது குறிப்பிடத்தக்கது. பிசிதியா அந்தியோக்கியாவில் நல்ல வரவேற்பும் பலனும் கிடைத்தன. இக்கோனியாவில் யூதர்கள், கிரேக்கர் பலரும் விசுவாசம் கொண்டனர். லிஸ்திராவிலும் அவருக்கு வெற்றி கிடைத்தது. யூதர்களிடமிருந்து எதிர்ப்புக்கள் கிளம்பினாலும், அவர் பல சபைகளைத் தாபித்து, அவற்றிற்கு மூப்பர்களை ஏற்படுத்தினார். பவுல் இவற்றிற்காக இறைவனுக்கு நன்றி கூறினார்.

### **6.1.2.3.2. பவுலின் இரண்டாவது மறைத்தூதுப் பயணம்** (கி.பி.50-52)

(தி.தூ.ப. 15:36-18:23)

எருசலேம் சங்கம் முடிந்த பின், அந்தியோக்கியா திரும்பி வந்த பவுலும், பர்னபாவும், சில காலம் அங்கு தங்கியிருந்து, மக்களுக்குப் போதித்துப் பணிபுரிந்தனர். அப்போது பவுல் கலாத்தியாப் பகுதியில் தான் தாபித்த சபைகளைத் தரிசித்து, அவர்களை ஊக்குவித்து, உறுதிப்படுத்தி, எருசலேம் சங்கத்தின் தீர்மானங்களை

அவர்களுக்கு அறிவித்து, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க விரும்பினார். பவுல் பர்னபாவையும் தம்முடன் வரும்படி கேட்டபொழுது, அவர் தங்களுடன் தன் உறவினரான யோவான் மாற்குவையும் அழைத்துச் செல்ல விரும்பினார். ஆனால் பவுல், தன் முதல் பயணத்தின்போது இடையில் குழப்பிக் கொண்டு எருசலேமுக்குத் திரும்பிச் சென்ற யோவான் மாற்கை திரும்பவும் தம்முடன் அழைத்துச் செல்ல விரும்பவில்லை. கலப்பையில் கை போட்டபின் திரும்பிப் பார்ப்பவன் ஆண்டவரின் சீடனாகவிருக்கத் தகுதியற்றவன் என்றார். இதையிட்டு பவுல்-பர்னபாவுக்கிடையே பெரிய விவாதம் எழுந்தது. பவுல் தான் கலாத்தியாவுக்கு எழுதிய திருமுகத்தில், 2:14-16 இல் தங்களுக்குள் அங்கெழுந்த கருத்து வேறுபாடு பற்றித் தெளிவாகக் கூறுகின்றார். அந்தியோக்கியாவில் புறவினக் கிறிஸ்தவர்களுடன் உண்டு குடித்து, பந்தியமர்ந்து வந்த பேதுருவும், பர்னபாவும், எருசலேமிலிருந்து சில பழமைவாதிகள் வந்த போது, அவர்களுக்குப் பயந்து அதை நிறுத்தி விட்டனர். இது அவர்கள் யூதக் கிறிஸ்தவர்கள்தான் உண்மைக் கிறிஸ்தவர்களென்று இன்னும் கருதி நடப்பதைக் காட்டியது. இவ்வாறு அவர்கள் உண்மைக்கேற்ப நடக்கத் தவறியமையால், பவுலுக்கும் அவர்களுக்குமிடையே தர்க்கம் ஏற்பட்டதாகக் கூறுகிறார். இத் தர்க்கம் எவ்வளவு பாரதூரமாய்ப் போனதென்றால், பவுல்-பர்னபா உறவை நிரந்தரமாக முறித்துவிட்டது. பர்னபா பவுலிடமிருந்து பிரிந்து, யோவான் மாற்கை அழைத்துக் கொண்டு சைப்பிரசுக்குச் சென்றார். பவுலோ எருசலேமிலிருந்து சங்க முடிவை அறிவிக்க தங்களுடன் அந்தியோக்கியாவுக்கு வந்திருந்த சீலாவைக் கூட்டிக்கொண்டு, தம் இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தை மேற்கொண்டார். இடையில் திமோத்தேயுவும், லூக்காவும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். அந்தியோக்கிய சபையினர் அருள் வழங்கும் ஆண்டவர் பணிக்கென அவர்களை அனுப்பி வைத்தனர். ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் நீடித்த இவ் இரண்டாம் மறைத் தூதுப் பயணம், பவுலின் மூன்று மறைத்தூதுப் பயணங்களிலும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

பவுலும் சீலாவும் அந்தியோக்கியாவிலிருந்து தரைமார்க்கமாகப் புறப்பட்டு, முதலில் சீரியா, சிலிசியாவிலுள்ள சபைகளைத் தரிசித்து, அங்கு சங்கத்தின் தீர்மானங்களை எடுத்துக் கூறி, போதித்து அவர்களை உறுதிப்படுத்தினர். பின்பு பயணத்தைத் தொடர்ந்து தெருபை, லிஸ்திரா

நாடுகளுக்குச் சென்றனர். லிஸ்திராவில், அவ்விடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சீடர் திமொத்தேயுவைச் சந்தித்தனர். அவருடைய தாய் ஒரு யூதப் பெண். தந்தை ஒரு புறவினக் கிரேக்கர். திமொத்தேயு வேதநூலில் நன்கு பயிற்சி பெற்றவர். மக்களின் நன் மதிப்பைப் பெற்றிருந்தார். பவுல் அவரைத் தன் பயணத் தோழனாக கூட்டிச் செல்ல விரும்பினார். அவர் தந்தை ஒரு கிரேக்கர் என்பதை அனைவரும் அறிந்திருந்தனர். எனவே, விருத்தசேதனம் அவசியமற்றதாய் இருந்தாலும், நற்செய்திப் பணிக்கு அது ஒரு இடைஞ்சலாக இருக்கக் கூடாதென்பதற்காக, அங்கு வாழ்ந்த யூதரின் பொருட்டு பவுல் திமொத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்வித்தார். இது நற்செய்திக்காக பவுல் எக் கொள்கையையும் விட்டுக்கொடுக்க, வளைந்து போக ஆயத்தமாயிருந்த்ர என்பதைக் காட்டுகிறது. எருசலேம் சங்கம் புறவினத்தவர்கள் திருச்சபையில் சேர விருத்தசேதனம் அவசியமில்லையெனக் கூறியதேயன்றி, யூதர்கள் விருத்தசேதனம் செய்வதை அது தடைசெய்யவில்லை. திமொத்தேயு ஒரு யூதரென்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பவுல், சீலா, திமொத்தேயுவுடன் நகரங்களைத் தரிசித்து, எருசலேம் சங்கத்தின் முடிவுகளை அவர்களுக்கு அறிவித்து, அவற்றைக் கடைப்பிடிக்குமாறு கூறினார். இவ்வாறு திருச்சபை விசுவாசத்தில் உறுதி பெற்று வளர்ந்தது. பரிசுத்த ஆவி அவர்கள் ஆசியாவில் நற்செய்தி போதிப்பதையும், பித்தீனியாவுக்குச் செல்வதையும் தடுக்கவே, அவர்கள் பிரிகிய, கலாத்தியப் பகுதிகளைக் கடந்து, மீசியா வழியாக துரோவாவை அடைந்தனர். துரோவா சின்ன ஆசியாவின் வடமேற்குக் கரையிலுள்ள ஒரு துறைமுகப் பட்டினம். அங்கு பவுல் ஒரு காட்சி கண்டார். பவுல் தம் மறைத்தூதுப் பயணங்களின் போது கண்ட ஐந்து காட்சிகளுள் இதுவே முதலாவது (தி.தூ.ப. 16:6-10, 18:9-10, 22:17-21, 23:11. 27: 23-24). அக் காட்சியில் மசிதோனியர் ஒருவர் தோன்றி, "நீர் மசிதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும்" எனக் கேட்டார். அதுவே இறை சித்தமென உணர்ந்த பவுல், அங்கு செல்லத் தீர்மானித்தார். இங்கு பவுல் குழுவினரோடு அப்போஸ்தலர் பணி நூலின் ஆசிரியரான லூக்காவும் சேருவதை அவதானிக்கிறோம் (தி.தூ.ப. 16:10).

**பிலிப்பியில் நற்செய்தி**

மறைதூதுக் குழுவினர் துரோவாவிலிருந்து கப்பலேறி நெயாப்பொலி துறைமுகம் சென்றடைந்து, அங்கிருந்து தரை மார்க்கமாக மாசிதோனியாவிலுள்ள ஒரு முக்கிய நகரமாகிய பிலிப்பிக்குச் சென்றார்கள். பிலிப்பி ஒரு உரோமைக் குடியேற்ற நகரம். யூதரில் ஒரு சிறிய தொகையினரே அங்கு வாழ்ந்தனர். ஆகவே அங்கு அவர்களுக்கென்று ஒரு செபக்கூடம் இருக்கவில்லை. அவர்கள் ஆற்றங்கரையிலேயே இறைவேண்டலுக்காக ஒன்று கூடுவர். பவுல் அவ்விடத்திற்குச் சென்று, அங்கு கூடியிருந்த பெண்களுக்குப் போதித்தார். ஐரோப்பாவில் முதல்முதல் பிலிப்பியில்தான் நற்செய்தி போதிக்கப் பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. பவுல் பிலிப்பியில் ஆற்றிய பணியின் போது இடம்பெற்ற நான்கு முக்கிய சம்பவங்களைக் காண்கிறோம். 1) லிதியாவின் மனமாற்றம் (16:11-15) 2) மந்திரம் கூறும் பணிப்பெண்ணிடமிருந்து அசுத்த ஆவியை விரட்டுதல் (16:16-18) 3) பவுலும் சீலாவும் சிறையில் இடப்படல் (16:19-34) 4) பவுலும் சீலாவும் விடுதலை செய்யப்படல் (16:35-40). யூதர் இறைவேண்டலுக்காகக் கூடுமிடத்தில் சில பெண்கள் கூடியிருந்தனர். பவுல் அவர்களுக்குப் போதித்தார். அவர் போதனையைக் கேட்ட பெண்களுள் ஒருவரான லீதியா கடவுள் பயம் கொண்ட அல்லது யூத மதத்தை தழுவிய, தியாத்திரா நாட்டைச் சேர்ந்த ஒரு புறவினப் பெண். அவள் செந்நிற ஆடைகள் வியாபாரம் செய்யும ஒரு பணக்காரப் பெண். அவர் பவுலின் போதனையைக் கேட்டு நற்செய்தியை ஏற்று, தன் வீட்டாருடன் திருமுழுக்குப்பெற்று திருச்சபையில் சேர்ந்தார். இவரே முதன்முதல் ஐரோப்பாவில் மனம்திரும்பி கிறிஸ்தவத்தை தழுவியவர். அவர் பவுலிடம், "நான் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டவளென நீங்கள் கருதினால் என் வீட்டுக்கு வந்து தங்குங்கள்" என அழைப்பு விடுத்து, அவர்களைத் தம் வீட்டில் தங்க வைத்தார். அவரின் வீடே பிலிப்பியில் பவுலின் பணித்தளத்தின் மையமாக மாறியது குறிப்பிடத்தக்கது.

பவுல் தம் பயணத் தோழர்களுடன் ஆற்றங்கரைக்குச் செல்லும் போது, குறி சொல்லும் ஆவி பிடித்திருந்த ஒரு அடிமைப் பெண் பல நாட்களாக அவரைப் பின் தொடர்ந்து வந்து "இவர்கள் உன்னத

கடவுளின் பணியாளர்கள், மீட்பின் வழியை உங்களுக்கு அறிவிக்கின்றவர்கள்" என உரக்கக் கூறி வந்தார். இதனால் எரிச்சல் கொண்ட பவுல் ஒரு நாள் "நீ இவரை விட்டுப் போகுமாறு இயேசு கிறிஸ்துவின பெயரால் உனக்கு கட்டளையிடுகிறேன்" எனக் கூறி, அவரிடமிருந்து அவ் ஆவியை விரட்டிவிட்டார். இதன் விளைவாக அவளை அடிமையாக வைத்திருந்த எசமானர்கள் தங்களுக்கு வருமானம் கொணர்ந்த வாய்ப்பெல்லாம் போய்விட்டதே எனக் கோபம் கொண்டு, பவுலையும், சீலாவையும் பிடித்து, சந்தைக்கு வெளியே ஆட்சியாளரிடம் இழுத்துச் சென்றார்கள். அவர்களைத் தலைமை நடுவர்கள் முன் நிறுத்தி, "இவர்கள் யூதர்கள். உரோமையராகிய நாம் ஏற்றுக்கொள்ளவோ, செயல்படுத்தவோ தகாத முறைமைகளை இவர்கள் அறிவிக்கிறார்கள்" என அவர்கள் மீது குற்றம் சுமத்தினர். யூதர்கள் உரோமையரை மனந்திருப்புவது ஒரு குற்றமாகக் கருதப்பட்டது. இதைக் கேட்ட மக்கள் திரண்டெழுந்து அவாகளைத் தாக்கினார்கள். நடுவர்களோ அவர்களின் மேலாடைகளைக் கழற்றிவிட்டு, நன்றாக அவர்களை சாட்டையால் அடித்து, சிறையில் அடைத்துக் காவல் செய்யுமாறு தம் சிறைக்காவலர் ஒருவருக்குக் கட்டளையிட்டனர். அவர் அவர்களை உட்சிறையில் தள்ளி, கால்களைத் தொழுமரத்துடன் பிணைத்து விட்டார். அன்றிரவு பவுலும், சீலாவும் கடவுளுக்குப் புகழ்பாடி இறைவனை வேண்டினர். அப்பொழுது திடீரென அங்கு ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது, சிறைக்கூடக் கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டன. அனைவரின் விலங்குகளும் கழன்று விழுந்தன. சிறைக்கூடக் காவலர் விழித்தெழுந்து, கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டிருந்ததால், கைதிகள் அனைவரும் ஓடிவிட்டனர் என எண்ணி, தற்கொலை செய்து கொள்ள முற்பட்டார். ஆனால் பவுல் உரத்த குரலில், "நீர் உமக்குத் தீங்கு ஏதும் செய்து கொள்ளாதீர். நாங்கள் அனைவரும் இங்கு தான் இருக்கிறோம்" என்று சொல்லி அவரைத் தடுத்தார். அது உண்மை என்று அறிந்த காவலர் பவுலையும் சீலாவையும் வெளியே தம் வீட்டிற்கு அழைத்து வந்து, அவர்களது காலடியில் விழுந்து, "பெரியோரே, மீட்படைய நான் என்ன செய்ய வேண்டும்" எனக் கேட்டார். அதற்கு அவர்கள், "ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை வையும். அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள்" என்றனர். தொடர்ந்து அவர்கள், அவருக்கும் அவர் வீட்டாருக்கும் ஆண்டவரின் வார்த்தையை

அறிவித்து, அன்றிரவே அவர்கள் எல்லோருக்கும் திருமுழுக்குக் கொடுத்தனர். காவலரோ அவர்களின் காயங்களைக் கழுவி மருந்து போட்டு, தம் வீட்டாருடன் அவர்களுக்கு விருந்தளித்து மகிழ்ந்தார்.

விடிந்த பின் தலைமை நடுவர்கள் பவுலையும் சீலாவையும் விடுதலை செய்யும் படியாக காவல் அதிகாரிகளிடம் சொல்லி அனுப்பினர். இது பவுல் சீலாவிடம் அறிவிக்கப்பட்ட பொழுது, அவர்கள் மிகவும் கோபம் கொண்டு, "நாங்கள் உரோமைக் குடிமக்கள். முறையான தீர்ப்பு இன்றியே அவர்கள் எங்களை பொது மக்கள் முன் நையப்புடைத்து சிறையிலடைத்தார்கள். இப்போது எங்களை யாருக்கும் தெரியாமல் வெளியேற்றப் பார்க்கிறார்களா? அது நடக்காது. அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்துச் செல்லட்டும்" என்று கூறினார்கள். ஒரு உரோமைக் குடிமகனை தண்டனைத் தீர்ப்பில்லாமல் சாட்டையால் அடிப்பது, சிறையிலடைப்பது சட்டப்படி அரச தண்டனைக்குரிய ஒரு பெரும் குற்றமாகும். தலைமை நடுவர்கள், பவுலும், சீலாவும் உரோமைக் குடிமக்களென்பதைக் கேள்விப்பட்டதும், அச்சம் கொண்டு, அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு, நகரை விட்டுப் போகுமாறு அவர்களை வேண்டினர். பவுலும், சீலாவும் சிறையிலிருந்து வெளியேறி, லீதியாவின் வீட்டிற்குச் சென்று, அங்கிருந்த சபையினரை ஊக்குவித்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டனர். இப் பிலிப்பிய சமூகம் தான் பவுலுக்கு எப்போதும் பிரமாணிக்கம் உள்ளதாகவும், மிகவும் பிரியமானதாகவும் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

**தெசலோனிக்காவில் நற்செய்தி**

பின்பு அவர்கள் தெசலோனிக்காவுக்குச் சென்றார்கள். அது மசதோனியாவின் தலைநகரம். முக்கியமான துறைமுகப் பட்டினம். தொடர்ச்சியாக மூன்று ஓய்வு நாட்களில் அங்கிருந்த செபக் கூடத்திற்குச் சென்று போதித்தார்கள். வேதநூலை அடிப்படையாக வைத்து, இறந்து உயிர்த்தெழுந்த இயேசுவே மெசியா என்று எண்பித்தார்கள். யூதரில் சிலரும், யூதத்தைத் தழுவிய புறவினத்தவாகள், குறிப்பாகப் பணக்காரக் கிரேக்கப் பெண்கள் பலரும், அவர்களின் போதனையை ஏற்று, திருச்சபையில் சேர்ந்தனர். யூதமதத்தைத் தழுவிய புறவினக் கிரேக்கரை பவுல் மனந்திருப்பியதனால் பொறாமை கொண்ட யூதர்கள், ஊர்ச்

சண்டியர்களைக் கூட்டிக் குழப்பம் உண்டாக்கினர். பவுலையும், சீலாவையும் கண்டு பிடிக்க முடியாததால், அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்காரனாகிய யாசோனையும், சில கிறிஸ்தவர்களையும் நகராட்சி மன்றத்தினிடம் இழுத்து வந்து, "உலகமெங்கும் கலகம் உண்டாக்குகிற இவர்கள் இங்கேயும் வந்து விட்டார்கள். யாசோன் இவர்களைத் தம் வீட்டில் வரவேற்றிருக்கிறான். இவர்கள் இயேசு என்னும் இன்னுமொரு அரசன் இருப்பதாகக் கூறிச் சீசருடைய சட்டங்களுக்கு எதிராகச் செயல்படுகின்றனர்" எனக் குற்றம் சாட்டினர். நகராட்சி மன்றத்தினர் அவர்களைப் பிணையில் விடுதலை செய்தனர். அங்கிருந்த கிறிஸ்தவ சமூகத்தின் நன்மையைக் கருதி, சபையினர் வேண்டுகோளுக்கிணங்க, அன்றே இரவோடு இரவாக, பவுலும், சீலாவும் அங்கிருந்து புறப்பட்டு பெரேயா சென்றனர்.

பெரேயாவிலும் யூதரின் செபக் கூடம் ஒன்று இருந்தது. அங்கு சென்று போதித்தனர். பெரேயா மக்கள் தெசலோனிக்கரைவிடப் பரந்த மனப்பான்மை உடையவர்கள். பவுலுக்கும் சீலாவுக்கும் நல்ல வரவேற்பு இருந்தது. யூதர்கள், கிரேக்கப் பணக்காரப் பெண்கள், ஆண்களெனப் பலர் விசுவாசம் கொண்டனர். இதைக் கேள்விப்பட்ட தெசலோனிக்க யூதர்கள், அங்கு வந்து, குழப்பம் உண்டாக்கிக் கலகம் செய்தனர். எனவே சீலாவையும், தீமொத்தேயுவையும் சபையினரோடு விட்டு விட்டு, பவுல் ஏத்தென்சுக்குச் சென்றார். எத்தனையோ எதிர்ப்புக்கள், உயிருக்கே ஆபத்து வந்தபோதும், பவுல் மனந்தளராது, திரும்பிப் பார்க்காது, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட நற்செய்திப் பணியை முன் எடுத்துச் செல்வது குறிப்பிடத் தக்கது. கலப்பையில் கை போட்டவன் திரும்பிப் பார்க்கக் கூடாதென்ற கிறிஸ்துவின் போதனையை இங்கு காண்கிறோம்.

**ஏதென்சுவில் நற்செய்தி**

பவுல் ஏத்தென்சுவில் சீலா, தீமொத்தேயுவுக்காகக் காத்திருந்த-பொழுது, ஏதென்சு நகரைச் சுற்றிப் பார்வையிட்டார். அக்காலத்தில் கலையிலும், கல்வியறிவிலும் மேம்பட்டு விளங்கியது ஏதென்சு நகரம். பல நாடுகளிலுமிருந்து அறிஞர்கள் அறிவைத தேடி அங்கு செல்வர். தம் அறிவை இன்னும் வளர்க்க வேண்டுமென்ற அறிவுப் பசி அங்குள்ள மக்களுக்கு இருந்தது. அம்மக்களின் அறிவுப் பசியின் சின்னமாக

அங்கிருந்ததுதான் அரயோப்பாகு என்னும் மன்றம். ஏத்தென்சு பல தெய்வங்களைக் கொண்டிருந்த ஒரு நகரம். கிரேக்க நாடு முழுவதிலும் காணப்பட்ட தெய்வங்களின் சிலைகளிலும் பார்க்க அதிகமான தெய்வச் சிலைகள் ஏத்தென்சுவில் இருந்தனவென்றும், அங்கு ஒரு மனிதனைச் சந்திப்பதிலும் பார்க்க, ஒரு தெய்வத்தைச சந்திப்பது இலகுவென்றும் கூறுவர். பவுல் யூதர்களின் செபக் கூடத்தில் யூதர்களோடும், யூதத்தைத் தழுவிய புறவினத்தவரோடும் உரையாடினார். வெளிச் சந்திகளில் வேறு மக்களோடும், எப்பிக்கூரர், ஸ்தொயிக்கர், போன்ற மெய்யியல் அறிஞர்களோடும் உரையாடி, இயேசுவையும், அவரின் உயிர்த்தெழுதலைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து வந்தார். எப்பிகூரர் எல்லா உண்மை அறிவுகளும் புலன்கள் வழியாகவே வருகிறதென்ற கொள்கை உடையவர்கள். மனித ஆன்மாவின் அழியாத் தன்மையை மறுத்தார்கள். தெய்வங்கள் இருப்பதை வெளிப்படையாக மறுக்கா விட்டாலும், அவர்கள் எட்டாத் தொலைவில் இருக்கிறார்கள். அவர்களுக்கு மனித வாழ்வில் இடமில்லை, அக்கறையுமில்லை என்ற கொள்கையுடையவர்கள். இறைபராமரிப்பை மறுதலித்தார்கள். எல்லாம் தற்செயலாகவே நடைபெறுகின்றன. மரணத்துடன் எல்லாம் முடிவடைகின்றன என்ற கொள்கை உடையவர்கள். ஆனால் ஸ்தொயிக்கர் சீனோ என்பவரின் தத்துவத்தைப் பின்பற்றியவர்கள். இயற்கை உலகைப் படைத்து பராமரித்து வரும் சக்தியே கடவுள். கடவுள் அரூபியானவர். அவ் அரூபியிலிருந்து பறந்த பொறிகளே மனித உயிர்கள். எல்லாம் இறைவனின் திட்டப்படியே நடைபெறுகின்றன. ஆகவே வாழ்வில் குறுக்கிடும் நன்மையோ, தின்மையோ, அனைத்தையும் நல்மனத்துடன் ஏற்றுக் கொள்ளவேண்டும். உலகின் ஒழுங்கில், அழகில் இறைவன் தம்மை வெளிப்படுத்துகின்றார். இத்தெய்வீக அறிவோடு வாழபவனே பேரறிஞன். இயற்கைச் சட்டங்களை ஏற்றுக் கொள்வது மனச்சாட்சியின் படி நடப்பதே என்பது இவர்கள் கருத்து. பவுல் ஒரு வேற்றுத் தெய்வத்தை அறிவிக்கிறாரென நினைத்த சிலர், அவரை அரேயோப்பாகு மன்றத்துக்கு அழைத்துச் சென்று, அவர் போதிக்கும் புதிய போதனையைப் பற்றி அறிய விரும்புவதாகக் கூறி, அவரைப் பேச அழைத்தனர்.

பவுல் அரேயோப்பாகு மன்றத்தில், அங்கு கூடியிருந்த கிரேக்க அறிஞர்களுக்கு அளித்த உரையானது, அவர் மற்ற இடங்களில்

யூதர்களுக்கு ஆற்றிய உரைகளிலிருந்து வேறுபட்டது. யூதர்களுக்குப் போதிக்கையில் அவர் வேத நூலை மேற்கோள் காட்டியே போதித்தார். ஆனால் இங்கு, கிரேக்க கவிஞர்களையும், ஞானிகளையும் மேற்கோள் காட்டிப் பேசுகிறார். அதுமட்டுமன்றி, அவர் உரையில் தத்துவச் சிந்தனைகள் காணப்படுகின்றன. கிரேக்கரும் விளங்கக் கூடிய இயற்கை இறையியலைப் பயன்படுத்தி, இறைவெளிப்பாட்டு உண்மைகளை விளக்குவதைக் காண்கிறோம். இங்கு திருமறை உண்மையும், மனித பண்பாட்டு முறையும், ஒன்றையொன்று சந்தித்து, உரையாடுகிறதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது. அவரின் உரையிலே மனித பண்பாடு வளர்த்த தத்துவ சாஸ்திர மணம் கமழ்கின்றது. கிரேக்க மக்களின் பின்னணிக்கேற்ப, அவர்கள் பழக்க வழக்கங்களைப் பயன்படுத்தி, உயிர்த்த கிறிஸ்துவைப் போதிக்கிறார.

பவுல், ஏதேன்சு மக்களின் தொழுகைக் கூடங்களில் தான் கண்ட "அறியாத தெய்வத்திற்கு" அர்ப்பணிக்கப்பட்டிருந்த பலிப்பீடத்தைப் பயன்படுத்தி, தன் உரையை ஆரம்பித்தார். அவர் கண்ட ஆயிரக்கணக்கான தெய்வங்களின் சிலைகள் அவருக்கு வெறுப்பை மூட்டினாலும், அவைகளிலே ஏதென்சு மக்களின் மதப்பற்றை தான் காண்பதாகக் கூறி, அவர்களைப் பாராட்டினார். அவர்கள் வழிபடும் தெய்வங்களில் ஒன்றாகிய "அறியாத தெய்வத்தை" தாம் அவர்களுக்கு அறிவிக்கப் போவதாகக் கூறி, உண்மைக் கடவுளை அவர்களுக்கு அறிவித்தார். கடவுளைத் தவிர, உலகிலுள்ள அனைத்தும் அந்த உண்மைக் கடவுளின் படைப்புக்களே. விண்ணையும் மண்ணையும், அதில் உள்ள அனைத்தையும் படைத்து, ஆண்டு நடத்தி வரும் அவ்வுண்மைக் கடவுளின் பிள்ளைகளே நாம். அவரிலேயேதான் நாம் வாழ்கிறோம், இயங்குகிறோம், இருக்கிறோம் எனக் கூறி, அதற்கு ஆதாரமாக கிரேக்க ஞானியான அரட்டசின் "நாம் அவருடைய பிள்ளைகளே" என்ற கூற்றை மேற்கோள் காட்டினார். அக் கடவுள், அவரின் படைப்பாகிய மனிதன், தன் கைகளால் கட்டும் கோவில்களிலும், பொன் வெள்ளி கொண்டு செய்யும் சிலைகளிலும் அல்ல, மாறாக அவர் எங்கும் இருக்கிறார். நாம் அவரைத் தேடிக் கண்டடையும்படியாக எம் அருகிலேயே அவர் இருக்கிறார் எனக் கூறி, சிலை வழிபாட்டிற்கு எதிராகப் போதித்தார். முன்னர் நாம் அறியாமையினால் அப்படி எண்ணியிருந்தாலும், இப்பொழுது கடவுள் இயேசு கிறிஸ்து வழியாக

தம்மை முழுமையாக வெளிப்படுத்தி, யாவரும் மனம்மாற வேண்டுமெனக் கட்டளையிட்டிருக்கிறார். அதற்கமைய அவர் நமக்குத் தீர்ப்பிடும் நாள் வருகிறது எனக் கூறி, அதற்கு ஆதாரமாக கடவுள் இயேசுவை உயிர்த்தெழச்செய்ததைக் குறிப்பிட்டார். பவுல் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசிய உடனே, சிலர் கிண்டல் செய்தனர். வேறு சிலர், "இதைப் பற்றி மீண்டும் வந்து பேசும், கேட்போம்" என்றனர். பவுலின் உரை ஏதென்சில் அவ்வளவு பலன் கொடுக்கவில்லை. தியோனிசியு, தமாரி போன்ற ஒரு சிலரே நம்பிக்கை கொண்டனர். பின்பு பவுல் அங்கிருந்து புறப்பட்டு கொரிந்துக்குச் சென்றார்.

**கொரிந்தில் நற்செய்தி**

கொரிந்து, ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்குப் போகும் குறுகிய வழியிலிருந்த ஒரு துறைமுகப் பட்டினம். உரோமைய மாநிலமான அக்காயாவின் தலைநகரம். பல நாட்டவர்களும் அங்கு வாழ்ந்தனர். யூதர்களுக்கென்று ஒரு செபக்கூடமும் இருந்தது. அநேக தேவாலயங்களும், விளையாட்டு மைதானங்களும் இருந்தன. அக்காலத்தில் அது விளையாட்டில் பிரசித்தி பெற்ற நகரமாயிருந்தது. பல மக்களும் வந்து போகும் வாணிபத் தலமாக இருந்ததால், ஒழுக்கக்கேடுகளும், குறைகளும் மலிந்து, சிற்றின்பக் கேளிக்கைகளின் நகரமாக காட்சி கொடுத்தது. அந்நாட்களில் உரோமைப் பேரரசிலேயே மிகக் கேடு கெட்ட நகரமாக கருதப்பட்டது. ஏதென்சில் இருந்து கொரிந்து வந்தடைந்த பவுல், யூத ராபி என்ற முறையில், எவரின் தயவிலும் தங்கியிராது தன் கைகளால் உழைக்க விரும்பினார். வேலை தேடிய போது, அண்மையில் உரோமையிலிருந்து பேரரசரால் வெளியேற்றப்பட்ட யூதர்களில் ஒருவரான அக்கிலாவையும், அவருடைய மனைவி பிரிஸ்சில்லாவையும் சந்தித்தார். அவர்களும் பவுலைப் போல் கூடாரம் செய்வதைத் தம் தொழிலாகக் கொண்டிருந்ததால், பவுல் அவர்களோடு தங்கியிருந்து வேலை செய்தார். ஒவ்வொரு ஓய்வு நாளும், செபக்கூடம் சென்று யூதருக்கும் கிரேக்கருக்கும் போதித்தார். பலர் விசுவாசம் கொண்டனர். அப்பொழுது சீலாவும் திமோத்தேயுவும் மசதோனியாவிலிருந்து அவரிடம வந்து சேர்ந்தனர். எனவே பவுல் நற்செய்தியை அறிவிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். இயேசுவே மெசியா என்று யூதர்களுக்கு போதித்த போது, அவர்கள் அவரை

எதிர்த்தனர். எனவே பவுல், "உங்கள் அழிவுக்கு நீங்களே பொறுப்பு. நான் அல்ல. இனிமேல் நான் புறவினத்தாரிடம் செல்கிறேன்" எனக் கூறி, செபக்கூடத்தை விட்டு வெளியேறி, அதை அடுத்திருந்த கடவுள் பக்தன் தீத்து யுஸ்துவின் வீட்டிற்குச் சென்று, அங்கு போதித்தார். செபக்கூடத் தலைவன் கிறிஸ்புவின் வீட்டாரும், கொரிந்தியர் பலரும் விசுவாசம் கொண்டனர். ஆண்டவரும் காட்சியில் பவுலுக்குத் தோன்றி, "அஞ்சாதே, பேசிக்கொண்டே இரு. நிறுத்தாதே, ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன்" என்று ஊக்கமூட்டி, உதவியை வாக்களித்தார். எனவே பவுல் கொரிந்தில் ஒன்றரை ஆண்டுகள் தங்கியிருந்து நற்செய்தியைப் போதித்தார். பவுலின் போதனையால் தொடர்ந்து இன்னும் பலர் விசுவாசம் கொள்வதைக் காணச் சகிக்காமல், யூதர்கள் திரும்பவும் அவருக்கெதிராக ஒருமித்தெழுந்து, நடுவர்மன்றத்துக்கு அவரை இழுத்து வந்து, ஆளுநர் கல்லியோ முன் நிறுத்தினர். "இவன் திருச்சட்டத்திற்கு எதிரான முறையில் கடவுளை வழிபடுமாறு மக்களைத் தூண்டி விடுகிறான்" என்று குற்றம் சுமத்தினர். ஆனால் அவரோ யூதர்களின் மதம், திருச்சட்டத்தைப் பற்றிய பிரச்சினையில் தலையிட விரும்பாமல், அவர்களை மன்றத்திலிருந்து விரட்டிவிட்டார். பவுல் தொடர்ந்து, அங்கு தங்கிப் போதித்தார். தம் நேர்த்தியை நிறைவேற்ற கெங்கிரேயா நகரில் தன் முடியை வெட்டிக்கொண்டார். யூதர், கடவுள் தமக்குச் செய்த நன்மைகளுக்க நன்றி கூற நேர்த்தி வைத்து, முடிவளர்த்து, அதை வெட்டிக்கொள்வது வழக்கம். பின் பவுல் அக்கில்லா, பிரிஸ்கில்லாவுடன் சீரியாவுக்குக் கப்பலேறினார். அவர்கள் எபேசுவை அடைந்தபோது, பவுல் அவர்களிடமிருந்து பிரிந்து, செபக்கூடத்திற்குச் சென்று யூதர்களோடு விவாதித்தார். அவர்கள் அவரைத் தங்களோடு சில நாட்கள் தங்கும்படி கேட்டபோது, "கடவுள் விரும்பினால் நான் மீண்டும் உங்களிடம் திரும்பி வருவேன்" எனக் கூறி, எபேசிலிருந்து கப்பலேறி செசாரியா சென்றார். அங்கிருந்து தரை வழியாக எருசலேம் சென்று, திருச்சபையினரைச் சந்தித்து, தம் பணி பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டு. அந்தியோக்கியா திரும்பினார்.

இவ் இரண்டாம் திருத்தூதுப் பயணம் மூன்று ஆண்டுகள் (கி.பி.50-52) நீடித்தன. இப்பயணத்தின் முக்கிய நிகழ்வு, பவுலின் பணி சின்ன ஆசியாவைக் கடந்து, ஐரோப்பாவில் முதல் முறையாக நற்செய்தி போதிக்கப்பட்டதாகும். பிலிப்பியிலும், தெசலோனிக்காவிலும்,

கொரிந்திலும் பவுல் ஆற்றிய நீண்ட பணியும், தாபித்த சபைகளும் சிறப்புள்ளவை. முக்கியமாக பல பணக்காரக் கிரேக்கப் பெண்கள் திருச்சபையில் சேர்ந்தனர். அவர்கள் பவுலுடன் திருத்தூதுப் பணியில் முழுமையாக ஈடுபட்டனர். லீதியாவின் வீடே பிலிப்பியில் பவுலின் பணியின் மையத் தளமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. கொரிந்தில் அக்கிலாவும், மனைவியும், பவுலுடன் மிகவும் உழைத்தனர். பல விசுவாசிகள் திருத்தூதுப் பணியில் பல்வேறு வகையில் பங்கெடுத்தது ஏனைய சபைகளுக்கு ஒரு மாதிரியாக அமைகிறது. கிரேக்க யூதர்கள் (யௌன பண்பாட்டினர்) பவுலுக்கு அவர் சென்ற இடமெல்லாம் தொடர்ந்தும் பிரச்சினை கொடுத்துக்கொண்டே இருந்தனர். உரோமைய அதிகாரிகள் கிறிஸ்தவர்களில் கொண்டிருந்த நல்லெண்ணம் குறிப்பிடத்தக்கது.

## 6.1.2.3.3. பவுலின் மூன்றாவது மறைத்தூதுப் பயணம் (கி.பி. 52-54)

(தி.தூ.ப. 18:23-21:20)

அந்தியோக்கியாவில் சில காலம் தங்கி ஓய்வு எடுத்தபின் பவுல், தம் மூன்றாம் மறைத் தூதுப் பயணத்தை ஆரம்பித்தார். தமக்குத் துணையாகத் திமொத்தேயுவையும், தீத்துவையும் அழைத்துக் கொண்டு, தரை மார்க்கமாகப் பயணம் செய்தார். தீத்து கிரேக்கப் பெற்றோருக்குப் பிறந்தவர். அந்தியோக்கியாவில் பவுலால் மன-மாற்றப்பட்டவர். பவுலோடு எருசலேம் சங்கத்துக்குச் சென்றவர். யூத பழமைவாதிகள் அவருக்கு விருத்தசேதனம் செய்ய விரும்பியபொழுது, பவுல் அதை அனுமதிக்கவில்லை. பவுல் அவரை "அன்பு மகன்" என்றழைத்தார். பிற்காலத்தில் கிறீற் நகர ஆயராக நியமனம் பெற்றார். பவுல் முதலில் கலாத்தியா, பிரிகியா வழியாகச் சென்று, தாம் தாபித்த சபைகளைத் தரிசித்து, சீடர்களை உறுதிப்படுத்தினார். பின் அங்கிருந்து புறப்பட்டு, நேரடியாக எபேசுக்குச் சென்றார்.

### எபேசில் நற்செய்தி

எபேசு உரோமைய ஆசியாவின் தலைநகரம். செல்வம் கொழிக்கும் அழகிய நகர். பிள்ளைப்பேற்றின் கடவுளாக வழிபடப்பட்டு

வந்த தேவதை அர்த்தமி (தியானா) வின் ஆலயங்களும், வழிபாடுகளும் அங்கு நிறைந்திருந்தன. ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாகிய, அவளின் பெயரால் கட்டப்பட்ட ஆலயமும் அங்கேயே இருந்தது. அது அநேக பிறநாட்டு மக்களைக் கவர்ந்தது. எபேசு நகரம் அவள் ஆலயத்திலும் வழிபாட்டிலும், மாயவித்தைகளிலும், பேய்க்காரி-யங்களிலும் பேர்பெற்று விளங்கிற்று. பொற்கொல்லர் அவளினதும், ஆலயத்தினதும் வடிவங்கள் செய்து விற்று, பெருந்தொகைப் பணம் சம்பாதித்தனர். அங்கு பவுல் மூன்றாண்டுகள் தங்கியிருந்து பணி புரிந்தார்.

பவுல் எபேசுக்குச் சென்றபொழுது அங்கு தூய ஆவியினாலன்றி, யோவானின் திருமுழுக்குப் பெற்ற சில சீடர்களைச் சந்தித்தார். அது அவர் அங்கு தம் பணியை ஆரம்பிப்பதற்கு உதவியாக இருந்தது. அவர்கள், பவுல் செல்லுமுன் அங்கு சிலகாலம் பணியாற்றிய, அப்பொல்-லோவினால் திருமுழுக்கு அளிக்கப்பட்டவர்கள். இந்த அப்பொல்லோ அலெக்சாந்திரியாவிலிருந்து வந்த ஒரு யூதர். ஒரு தலைசிறந்த மறைபோதகர். கிரேக்க தத்துவ சாஸ்திர பயிற்சி பெற்ற ஒரு ஞானி. அவர் யோவானின் திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார். ஆனால் இயேசு கிறிஸ்துவை மனுக்குல மீட்பராகவும், பரிசுத்த ஆவியின் வருகையையும் அறிந்திருக்கவில்லை. அவர் எபேசுக்கு வந்து நற்செய்தியைப் போதித்து, ஒரு சபையை தாபித்து ஊக்குவித்தார். அவர் பவுலின் போதனைக்கு சற்று மாறுபட்ட போதனையையே போதித்தார். அதில் உலக ஞானத்தின் வாடை வீசியது. அவர் எபேசு செபக்கூடத்தில் துணிவுடன் நற்செய்தியைப் போதித்ததை, முன்னர் பவுலுடன் வந்து எபேசில் தங்கியிருந்த அக்கில்லாவும், பிரிசில்லாவும் கேட்டனர். அவர்கள் அவரை தங்களுடன் அழைத்துச் சென்று, கடவுளின் நெறியை அவருக்கு தெளிவாக விளக்கிக் கூறினர். பின்னர் அவர் அக்காயா போக விரும்பியபொழுது, அங்குள்ள சகோதரர்கள் அவரை ஏற்றுக்கொள்ளுமாறு சிபார்சுக் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தனர்.

பவுல் அப்பொல்லோவிடமிருந்து யோவானின் திருமுழுக்கைப் பெற்றிருந்த அரைகுறையான பன்னிரண்டு சீடர்களுக்கு, பரிசுத்த ஆவியினால் திருமுழுக்கு அளித்தார். அவர் அவர்கள் மீது கைகளை

வைத்துப் பரிசுத்த ஆவியை அளித்தபொழுது, அவர்கள் பரவசப் பேச்சுப் பேசி, இறைவாக்கு உரைத்தனர். பவுல் அங்கிருந்து செபக்கூடத்திற்குச் சென்று, மூன்று மாதங்களாக இறையாட்சியைப் பற்றி மக்களோடு உரையாடி, துணிவோடு போதித்து, அவர்களை நம்பச்செய்தார். நம்ப மறுத்த சிலர் அவர் நெறியை இகழ்ந்து பேசவே, அவர் செபக்கூடத்தை விட்டு, எபேசில் இருந்த 'திரன்னு' மன்றத்தில் நாள்தோறும் விவாதித்தார். இரண்டு ஆண்டுகளாக அவர் போதித்ததன் விளைவாக ஆசியாவில் வாழ்ந்த பலர், யூதரும், கிரேக்கரும், ஆண்டவர் வார்த்தையைக் கேட்டனர். ஆண்டவரும் பவுல் வழியாக பல அற்புதங்களைச் செய்தார். அவர் உடலில் பட்ட துணிகளை நோயாளர் மீது வைக்க, அவர்கள் குணமடைந்தனர். பொல்லாத ஆவிகளும் வெளியேறின. பேயோட்டும் யூதர்கள் சிலர், "பவுல் அறிவிக்கும் ஆண்டவரின் பெயரால்" பேயோட்ட முயன்றனர். ஸ்கேவா என்னும் தலைமைக்குருவின் ஏழு மக்கள் இவ்வாறு ஆண்டவர் பெயரால் பேயோட்ட முயன்ற போது, பொல்லாத ஆவி அவர்களிடம், "இயேசுவை எனக்குத் தெரியும், பவுலையும் எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் யார்?" எனக்கேட்டு, அவர்கள் மேல் பாய்ந்து அவர்களைத் திணறடித்தது. இதைக் கேள்விப்பட்ட பலர் அச்சம் கொண்டு, தங்கள் தவறை ஏற்று, ஆண்டவரைப் போற்றி, அவரில் நம்பிக்கை கொண்டனர். மாய வித்தைகள் செய்வோர் தம் நூல்களைச் சுட்டெரித்தனர். இவ்வாறு ஆண்டவரின் வார்த்தை வல்லமையுடன் எங்கும் பரவியது. பவுல் எபேசில் தம் பணியை முடித்துக் கொண்டு, மசதோனியா, அக்காயா வழியாக எருசலேம் சென்று, பின் உரோமைக்குப் போகத் தீர்மானித்தார். எனவே தம் பயணத் தோழர்களில் இருவரை நேரத்துடன் மசதோனியாவுக்கு அனுப்பி விட்டு, தான் இன்னும் சிறிது காலம் அங்கு தங்கியிருந்தார்.

**எபேசில் கலகம்**

பவுல் எபேசில் சிலை வழிபாட்டிற்கும், மாய வித்தைகள், பேய்க் காரியங்களுக்கும் எதிராகப் போதித்து, மக்களை உண்மை மறைக்கு மனந்திருப்பினார். அவர்கள் தம் சிலை வழிபாட்டை விட்டு, சபையில் சேர்ந்தனர். அர்த்தமியின் (தியானா) ஆலயத்திற்கு வருவோரின் தொகையும், பொற்கொல்லருக்கும், கைவினைஞருக்கும் கிடைக்கும் வருவாயும் குறைந்தன. இதனால் ஆத்திரமுற்ற திமேத்திரியு என்ற

பொற்கொல்லன், ஏனைய பொற்கொல்லர்களையும், கைவினைஞர்களையும் ஒன்று திரட்டி, பவுலுக்கும், கிறிஸ்தவ நெறிக்கும் எதிராகக் கலகம் உண்டாக்கினார். பவுல் மக்களின் மனதை மயக்குகிறார், கையால் செய்யப்பட்ட தெய்வங்கள் தெய்வங்களல்லவென்று போதிக்கிறார். இதனால் நமக்கு ஆபத்து ஏற்படும். நம் தொழிலும் மதிப்பை இழந்துவிடும். எம்மாபெரும் தேவதை அர்த்தமியின் மாண்பும் அழிந்துவிடும். அவள் ஆலயத்தின் பெயரும் மங்கிப் போகுமெனப் பிரச்சாரம் செய்தனர். இதைக் கேட்ட எபேசியர் வெகுண்டெழுந்து, "எபேசின் அர்த்தமி வாழ்க" என்று கத்தினர். பவுலின் தோழர்கள் இருவரைப் பிடித்து, அரங்கத்துக்கு இழுத்துக் கொண்டு சென்றனர். நகர் முழுவதும் குழப்பம் ஏற்பட்டது. பவுல் தன் சீடரிடம் செல்ல விரும்பினார். ஆனால் ஏனைய சீடர்களும், ஆட்சியாளரும் அது ஆபத்தானதெனக் கூறி, அவரைத் தடுத்து நிறுத்தினர். மககள் "எபேசின் அர்த்தமி வாழ்க" என்று இரண்டு மணித்தியாலங்களாகக் கத்தினர். நகர ஆணையாளர் மக்களை அமைதிப் படுத்தி, தியானாவின் வல்லமையை எம் எல்லோருக்கும் தெரியும், அவள் வழிபாட்டை எவரும் எளிதில் அழிக்க முடியாதெனக் கூறி, மக்களை ஆறுதல் அடையச் செய்தார். மேலும் பவுலின் தோழர்கள் தெய்வங்களை இழிவு படுத்துவோரோ, தேவதையைத் தூற்றுவோரோ அல்லவெனக் கூறி, தெமேத்திரியுவுக்கும், அவன் கைவினையர்களுக்கும் எவர்மீதாவது தப்பான வழக்கு இருந்தால், ஆளுநரிடம் சென்று தீர்த்துக் கொள்ளட்டும் என்றார். அல்லது நாங்கள் தான் கிளர்ச்சி செய்ததாக எங்கள் மீது பழி வந்துவிடுமெனக் கூறி, கூட்டத்தைக் கலைத்து விட்டார். கலகம் ஓய்ந்த பின், பவுல் சீடர்களை வரவழைத்து, அவர்களுக்க ஊக்கமளித்து, வாழ்த்துக் கூறி, மசதோனியாவுக்குச் சென்றார்.

**எருசலேம் தாய்ச் சபைக்கு பொருளுதவி திரட்டுதல்**

பவுல் துரோவா, பிலிப்பி, தெசலோனிக்கா வழியாகப் பயணம் செய்து, அச் சபைகளுக்கு அறிவுரைகள் பல கூறி, கொரிந்து சென்றடைந்தார். பவுலின் அந்த மசதோனிய தரிசிப்பு எருசலேம் தாய்ச் சபைக்கு கிளைச் சபைகளின் பண உதவியை பெறுவதற்காகவே என வல்லுநர் கூறுவர். அதற்கு ஆதாரமாக கொரிந்தில் காணப்பட்ட ஏழு புதுப் பயணத் தோழர்களைக் குறிப்பிடுவர். அவர்கள் தங்கள்

தங்கள் சபைகளிலிருந்து தங்கள் பங்களிப்பை கொணர்ந்தவர்கள் எனக் கூறுவர். பவுல் மூன்று மாதங்கள் கொரிந்தில் தங்கி விட்டு, அங்கிருந்து கப்பலேறி, பாஸ்காவிற்கு எருசலேம் செல்ல திட்டமிட்டிருந்தார். ஆனால் யூதர்கள் அவருக்கெதிராக சதித்திட்டம் செய்ததால், அத் திட்டத்தை மாற்றி, மசதோனியா வழியாகவே தம் பயணத் தோழர்களுடன் திரும்பவும் பயணம் சென்றார். வழியில் பாஸ்கா விழாவை பிலிப்பியில் கொண்டாடிவிட்டு, துரோவா சென்று ஒரு வாரம் தங்கினார். அங்கிருந்து புறப்படுவதற்கு முதல் நாள் வாரத்தின் முதல் நாளாயிருந்ததால் அப்பம் பிட்க சபையினர் அனைவரும் மூன்றாம் மாடியில் கூடினர். இறுதி இரவாயிருந்ததால் பவுல் நள்ளிரவுவரை அவர்களோடு தொடர்ந்து பேசினார். அப்போது பலகணியிலிருந்து பவுல் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த யுத்திகு என்ற இளைஞன் அயர்ந்து தூங்கி மூன்றாம் மாடியிலிருந்து கீழே விழுந்தார். அவரைத் தூக்கியபொழுது அவர் இறந்து விட்டதைக் கண்டனர். ஆனால் பவுல் "அமளியை நிறுத்துங்கள். இவர் உயிரோடு-தான் இருக்கிறார்" எனக் கூறி. அவரை அணைத்துக் கொண்டு, அவர் மேல் படுத்து, அவரை உயிர்ப்பித்தார். பின்பு அப்பம் பிட்டு, தொடர்ந்து அதிகாலை வரை அவர்களோடு உரையாடினார். காலையில் அங்கிருந்து புறநப்பட்டு தரை வழியாக மிததிலேன் நகருக்குச் சென்று, கப்பலேறி, கியூ தீவு, சாமு தீவு வழியாக மிலேத்து சென்றார். பவுல் எபேசுக்குச் சென்று ஆசியாவில் இன்னும் காலத்தைத் தாழ்த்தாமல், பெந்தக்கோஸ்துவுக்கு எருசலேம் செல்ல விரும்பினார். எனவே மிலேத்திலிருந்து எபேசுவுக்கு ஆளனுப்பி, மூப்பர்களை அங்கு வரவழைத்தார்.

**பவுலின் பிரியாவிடை உரை**

மிலேத்துவில் எபேசு சபை மூப்பர்களுக்கு பவுல் ஆற்றிய பிரியாவிடை உரை மிகவும் உணர்ச்சிகரமானது. நாம் வேத நூலில் காணும் யாக்கோபு, மோசே, யோசுவா, தாவீது போன்ற பெரியோர்களின் பிரியாவிடை உரையை ஒத்ததாக அமைந்திருப்பதை அவதானிக்கிறோம். இதுவே திருத் தூதர் பணி நூலில் நாம் காணும் பவுல் கிறிஸ்தவர்களுக்கு ஆற்றிய ஒரேயொரு உரையாகும். இது அனைத்துச் சபைகளுக்கும் அவர் விட்டுச்சென்ற சாசனமாக அமைகிறது. முதலில்

தான் இவ்வளவு காலமும் அத்தனை எதிர்ப்புக்கள், கஷ்டங்கள் மத்தியில் அவர்கள் மத்தியில் ஆற்றிய பணியை ஞாபகப்படுத்தினார். தான் வீடுவீடாகச் சென்று, அவர்களைச் சந்தித்து ஆண்டவரின் வார்த்தை அனைத்தையும் ஒழிப்புமறைப்பின்றி தெளிவாக துணிவுடன் எடுத்துரைத்து, கடவுளிடம் அவர்களை இட்டு வந்ததை நினைவூட்டினார். பின்பு எருசலேமில் தனக்குக் காத்திருக்கும் சிறைவாழ்வு, துன்பங்களைப் பற்றி தூய ஆவியின் வழியாக தான் முன் எச்சரிக்கை செய்யப்பட்டதை அறிவித்து, இனி அவர்கள் தன் முகத்தைக் காணமாட்டார்கள் எனக் கூறி, இறைவன் தன்னிடம் ஒப்படைத்த பணிக்கு இறுதி மட்டும் பிரமாணிக்கமாயிருப்பதே தன் விருப்பமென்று சொன்னார். தொடர்ந்து மூப்பர்களிடமிருந்து தன் எதிர்பார்ப்பை எடுத்துரைத்தார். தூய ஆவியே அவர்களைக் கடவுளின் திருச்சபைக்குக் கண்காணிப்பாளராக ஏற்படுத்தியதால், மந்தையைக் கவனமாகப் காத்துக்கொள்ளும்படி அறிவுரை கூறினார். வரவிருக்கும் போலிப் போதகர்களையும், பிரிவினைகளையும் பற்றி எச்சரித்து, கடவுளின் அருள் வார்த்தைக்குப் பிரமாணிக்கமாயும், தன் முன்மாதிரிகையைப் பின்பற்றியும் வாழும்படி கூறினார். இறுதியாக அனைவரும் முழந்தாள் படியிட்டு இறைவனை வேண்டினர். பின்பு அவர்கள் அவரைக் கட்டித் தழுவி, முத்தமிட்டு, கண்ணீர் விட்டுக் கதறி, வழியனுப்பி வைத்தனர்.

பவுலும் அவரின் பயணத்தோழர்களும் மிலேத்துவிலிருந்து, எருசலேமுக்குக் கப்பலேறினர். கோபு தீவு. ரோது வழியாக பத்தாரா சென்று, அங்கு கப்பல் மாறி, சீரியா வழியாக தீர் சென்றனர். அங்கு கப்பலிலிருந்து சரக்குகள் இறக்குமட்டும், ஏழுநாட்கள் அங்கிருந்த சீடர்களுடன் தங்கினர். அவர்கள் தூய ஆவியால் ஏவப்பட்டு, அவர்களை எருசலேமுக்குப் போகவேண்டாமெனத் தடுத்தனர். ஆனால் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு தாலமாய் வழியாக செசாரியா சென்றடைந்து, தங்கள் கடல் பயணத்தை முடித்துக் கொண்டனர். அங்கு திருத்தொண்டர் பிலிப்புவின் வீட்டில் பல நாட்கள் தங்கினர். அவரின் திருமணமாகாத நான்கு பெண் மக்களும் இறைவாக்குரைத்தனர். அப்போது யூதேயாவிலிருந்து அங்கு வந்த இறைவாக்கினர் அகபு, பவுலின் இடைக்கச்சையை எடுத்து தம் கைகளையும், கால்களையும் கட்டி, "இக்கச்சைக்குரியவனை எருசலேமில் யூதர்கள் இவ்வாறு கட்டிப் புறவினத்தவரிடம் ஒப்படைப்பார்கள். தூய ஆவியார் தாமே இப்படிக்

கூறுகிறார்" என்றார். இதைக் கேட்ட அனைவரும் பவுலை எருசலேமுக்குப் போகவேண்டாமெனத் தடுத்தனர். ஆனால் பவுல், "நான் ஆண்டவரின் பெயருக்காக எருசலேமில் கட்டப்படுவதற்கு மட்டுமல்ல, சாவதற்கும் தயார்" என்று கூறினார். பின்பு அவர்கள் செசாரியாவிலிருந்து புறப்பட்டு எருசலேமுக்குச் சென்றார்கள். பவுலும் அவர் குழுவினரும் எருசலேமுக்குச் சென்ற பொழுது சபையினரால் மகிழ்வுடன் வரவேற்கப் பட்டனர். பவுல் யாக்கோபு, மற்றும் அனைத்து மூப்பர்களிடமும் சென்று, அவர்களை வாழ்த்தி, தம் திருப்பணி மூலம் கடவுள் புறவினத்தாரிடையே செய்ததை ஒவ்வொன்றாக அவர்களுக்கு விளக்கிக் கூறினார். அவர்கள் எல்லோரும் கடவுளைப் போற்றினர்.

பவுலின் மூன்றாவது மறை தூதுப் பயணத்தில் அவர் எபேசு நகரத்தில் மூன்று ஆண்டுகள் ஆற்றிய பணி மகத்தானது. அங்கு அவர் ஒரு பெரிய சபையை ஸ்தாபித்தது குறிப்பிடத்தக்கது. எபேசில் தம் உடன் ஊழியர்கள் ஆபத்தில் சிக்கிய பொழுது, தன் உயிருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் பாராமல், அவர்களின் உதவிக்குச் செல்லத் துடித்தது அவர்களில் அவருக்கிருந்த அன்பையும், கரிசனையையும் காட்டுகிறது. மேலும் அவர் தலத் திருச்சபைகளுக்கு தம் தாய்த் திருச்சபை மட்டிலுள்ள கடமைகளை உணர்த்தி, அதனுடன் உறவை வளர்த்தது பாராட்டத்தக்கது. பவுல் சென்ற இடங்களிலெல்லாம் சபையினர் அவரை மகிழ்வுடன் வரவேற்றனர். இது திருச்சபை எவ்வாறு மூலை முடுக்கெல்லாம் பரவியிருந்ததென்பதைக் காட்டுகிறது. எருசலேமில் தமக்கு ஆபத்துள்ளதைத் தெரிந்திருந்தும், பவுல் ஆண்டவர் அவரிடம் ஒப்படைத்த பணிக்கு இறுதிமட்டும் பிரமாணிக்கமாயிருக்க துணிவுடன் சென்றது போற்றுதற்குரியது. மேலும், பவுல் தம் ஒவ்வொரு மறைதூதுப்பணியின் பின், எருசலேம சென்று, மூப்பர்களுக்கு தம் பணி பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பது, தாய்த் திருச்சபைக்கும் அவருக்குமிடையே இருந்த நல்லுறவை, திருச்சபையின் ஒற்றுமையைக் காட்டுகிறது.

## 6.1.3. புனித பவுலின் முக்கிய படிப்பினைகள்

புறவினத்தவர்களின் அப்போஸ்தலரான புனித பவுல் மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகள் எங்கும் சென்று. நற்செய்தியை

அறிவித்து, பல்லாயிரக் கணக்கான மக்களை மனந்திருப்பினார். கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொண்டவர்களுக்குத் திருமுழுக்கு அளித்து, அவர்களை ஒரு கிறிஸ்தவ சமூகமாக, சபையாக ஏற்படுத்தி, அவர்களை இடையிடையே சந்தித்து, இடையிடையே அச் சபைகளுக்குத் திருமுகங்கள் எழுதி, அவர்களை உற்சாகப்படுத்தி, வழிநடத்தினார். அவர் முதல் புறவினத்தவர்களின் அப்போஸ்தலர் மட்டுமல்ல, அவரே முதல் கிறிஸ்தவ இறையியலாளரும் ஆவார். யூத மதத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பரிசேயராகிய அவர், யூத சட்டங்களையும், பாரம்பரியங்களையும், இறையியலையும் நன்கு அறிந்திருந்தார். கிரேக்க தத்துவ சிந்தனையிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். ஆனால் தன் தமஸ்கு அனுபவத்தின் அடிப்படையில் அவற்றை மீளாய்வு செய்து, புதிய கண்ணோட்டத்தில் நோக்கி, புதிய கருத்துக்களை விளங்கிக் கொண்டார். அதன் விளைவாக உருவாகியதே அவருடைய கிறிஸ்தவ இறையியல் சிந்தனைகள்.

புதிய ஏற்பாட்டில் புனித பவுல் ஒரு சிறந்த போதகராக அல்ல, மாறாக ஒரு சிறந்த எழுத்தாளராகவே புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறார். பவுலே அதை ஏற்றுக்கொள்கிறார். அக் காலத்தில் இருந்த கடிதம் எழுதும் இலக்கிய முறையை கிறிஸ்தவ நற்செய்திபற்றிய தம் கருத்துக்களைப் பரப்பவும், அவற்றை பல்வேறு கிறிஸ்தவ சபைகள் முகங்கொடுக்கும் வெவ்வேறு குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு ஏற்ப விளக்கம் அளிக்கவும், சம்பாஷனை நடையில் எழுதிப் பயன்படுத்தினார். சிறப்பாக அவர் அக்காலத்தைய கடித எழுத்தமைப்பு முறையை தம் நற்செய்திப் பரப்பும் பணிக்கு சிறந்த முறையில் கையாண்டார். அவருடைய படிப்பினைகளின் முக்கியமான கருத்துக்கள் அவருடைய திருமுகங்களில் விரிவாகவும், தெளிவாகவும், ஒழுங்காகவும் எழுதப்பட்டுள்ளன. எனவேதான் அவரின் திருமுகங்கள் "அப்போஸ்தொலிக்க திருமுகங்கள்" என அழைக்கப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில் புனித பவுல் எழுதியதாகக் கூறப்படும் 13 திருமுகங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஏழு திருமுகங்கள் (1 தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1,2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன்) என்பவை மட்டுமே உண்மையாக அவரால் எழுதப்பட்டவையாக இன்று விவிலிய வல்லுநரகள் ஏற்றுக்கொள்கின்றனர். ஏனையவை அவருடைய சீடர்களால் புனித பவுலின எழுத்தமைவைக் கொண்டு, அல்லது

அவரது மரணத்தின் பின்னர் அவருடைய புனைப் பெயருடன் எழுதப்பட்டவை எனவும் கூறுவர். இப்பொழுது புனித பவுலின் திருமுகங்களில் காணப்படும் சில முக்கியமான கருத்துக்களைப் பார்ப்போம்.

### 6.1.3.1. இறையருள்

(உரோ. 2:12-19, 7:7-20, கலா. 3:15-29)

ஏற்புடைமை அல்லது மீட்பு இறைவன் நமக்கு அளிக்கும் ஒரு இலவசக் கொடை, அது ஒரு இறையருள் என்பதே புனித பவுல் போதித்த முக்கிய நற்செய்தியாகும். அவரின் முக்கிய படிப்பினையாகும். அவரின் முக்கிய படிப்பினையில் வருகின்ற இரு பிரதானமான சொற்கள்: 'இறையருள்', 'மீட்பு' என்பனவாகும். இறையருளை உணர்த்துவதற்கு புனித பவுல் பயன்படுத்தும் கிரேக்க பதம் 'காரிஸ்' (charis). அது 'இரக்கம்' அல்லது 'நிலையான அன்பு' அல்லது 'இறைவனின் இலவசக் கொடை' எனப் பொருள்படும். மீட்பை உணர்த்துவதற்கு அவர் பயன்படுத்தும் கிரேக்க சொல் 'டிகையோசுனே' (dikaiosune). அது ஒருவர் இறைவனுக்கு ஏற்புடையவராகுதல், இறைவன் திருமுன் நீதிமானாகக் காணப்படுதல், இறைவன் ஒருவருக்கு நீதியாகக் கருதுதல், இறைவனோடு முன்னைய நேரிய உறவு நிலையை ஏற்படுத்தல் அல்லது இரட்சணியம் அடைதல், விடுதலை அடைதல் எனப் பல விதமாக விளக்கப்படுகிறது.

திருவிவிலியத்தில் கடவுள் தம்மை அன்பின் கடவுளாக வெளிப்படுத்தியிருக்கிறார். இறைவனின் அன்பு பற்றிய வெளிப்பாடு இயேசுக் கிறிஸ்துவில், அதாவது அவரைச் சிலுவை மரணத்துக்கு கையளிப்பதிலும், பின் உயிர்த்தெழச் செய்வதிலும் முழுமை அடைகிறது. இயேசுக் கிறிஸ்துவில் வெளிப் படுத்தப்படும் இறைவனது அன்பிலிருந்து அவரது அருளைப் பிரிக்கமுடியாது. இயேசுக் கிறிஸ்துவின் அருள் சிலுவை வழியாக வருகிறது. இயேசுக் கிறிஸ்துவில் நாம் கொள்ளும் விசுவாசம், மற்றும் அருள் வழியாக விசுவசிக்கும் எல்லோரையும் இறைவன் இலவசமாக தமக்கு ஏற்புடையவர்கள் ஆக்குகிறார். ஆகவே ஏற்புடைமை அல்லது மீட்பு அல்லது இரட்சணியம் இறைவன் நமக்கு அளிக்கும் இலவசக் கொடை, இறையருள். எனவே நாம் விருத்தசேதனம், மற்றும் சட்டம் சார்ந்த செயல்களால் அல்ல,

மாறாக நம்பிக்கையினால், குறிப்பாக இயேசுக் கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையினாலேயே இறைவனுக்கு ஏற்புடையவராகுகிறோம் என்பதே புனித பவுலின் வாதமாகும்.

சீனாய் மலையின் உடன்படிக்கையுடன்தான் இஸ்ராயேல் இனம், யூத மதம் உருவாகியது. "நான் உங்களுக்குச் சொல்வதெல்லாம் நீங்கள் செய்தால், நான் உங்களுக்குக் கடவுளாய் இருப்பேன். நீங்கள் எனக்கு மக்களாய் இருப்பீர்கள்". கடவுள் அவ் உடன்படிக்கை மூலம் இஸ்ராயேல் இனத்தை தம் மக்களாகத் தேர்ந்து கொண்டார். இத் தேர்வோடு அவர்களுக்குச் சில வாக்குறுதிகளையும் அளித்தார். ஆனால் அவ் வாக்குறுதிகளுக்குச் சில நிபந்தனைகளையும் விதித்தார். இஸ்ராயேலர் அவருக்குச் செவிமடுக்க வேண்டும். மோசே வழியாக அவர் கொடுத்த கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். வரப்போகும் மீட்பில் பங்குபெற அச் சட்டம்தான் இஸ்ராயேலர்களுக்கு அடிப்படை-யான சமய வழிமுறையாக அமைந்தது. இஸ்ராயேலரை இறைவனின் திருவுளத்தோடு தொடர்பு படுத்துவதே அச் சட்டத்தின் நோக்கமாகும். யூத மதம் சட்டத்தின்பால் கொண்டிருந்த பக்தியினால் அது மாண்பு பெற்றது. ஆனால் சட்டத்தை இவ்வாறு பற்றிக்கொண்டதினால் சில ஆழமான, அடிப்படையான ஆபத்துக்களும் ஏற்பட்டன. உதாரணமாக, இறைவன் முன் மனிதனின் ஏற்புடைமைக்கு இறைவனின் அருளை அடிப்படையாகக் கொள்ளாமல், மனிதனின் சட்ட அனுசரிப்பையும், விருத்தசேதனத்தையும், அவன் புரியும் நற்செயல்களையும் அடிப்படையாகக் கொள்ளும் கருத்து உருவாகி வளர்ந்தது. அதன்படி மனிதன் தன்னைத் தானே இறைவனுக்கு ஏற்புடையவன் ஆக்கிக் கொள்கிறான் என்ற கருத்து வளர்ந்தது.

பவுல் ஒரு யூதர். அதிலும் ஒரு பரிசேயர். சட்டத்தின்மேல் அதிக பற்றுள்ளவர். அதை நுணுக்கமாகக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். அதன் நிமித்தமே கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவர். சட்டமே அவருக்கு எல்லாமாக இருந்தது. சட்டததை பிரமாணிக்கமாகக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலமாகவே மீட்பை எதிர்பார்த்தவர். தன்னுடைய மிட்பு தான் செய்யும் நற்செயல்களிலேயே தங்கியுள்ள-தெனக் கருதினார். "நான் இஸ்ரயேல் இனத்தவன். எபிரேயப் பெற்றோருக்குப் பிறந்த எபிரேயன். திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில்

பரிசேயன். இச் சட்டத்தில் எனக்கிருந்த ஆர்வத்தால் திருச்சபையைத் துன்புறுத்தினேன்" (பிலி. 3:5). எனினும் தமாஸ்குப் பாதையின் அனுபவம், அங்கு அவர் உயிர்த்த ஆண்டவராகிய இயேசுவை எதிர்கொண்டது, அனைத்தையும் மாற்றிவிட்டது. தமஸ்கு அனுபவம் அவருடைய சட்டம் பற்றிய கோட்பாட்டை மீளாய்வு செயயத் செய்தது. ஆண்டவர் தம்மோடு ஐக்கியப்படுத்திய திருச்சபையைத் துன்புறுத்திய பாவியென்பதை பவுல் உணர்ந்தார். தான் கொடிய பாவியாக இருந்த வேளையிலும், ஆண்டவர் தனக்குத் தோன்றி, தன் பாவங்கள மன்னித்து. பரிசுத்த ஆவியை அளித்து, தன்னைத் தமக்கு ஏற்புடையவராகத் தேர்ந்து கொண்டார். அந்த ஏற்புடைமையை, பாவ மன்னிப்பை, பரிசுத்த அவியின் வரங்களை, மீட்பைத் தான் பெற்றுக் கொண்டது சட்டத்தைக் கடைப்பிடித்ததற்கு பரிசாக அல்ல, மாறாக இறைவனின் இலவசக் கொடையாக, தான் அவர்மேல் வெளிப்படுத்திய விசுவாசத்திற்குப் பதிலாக ஆண்டவர் தந்த இறையருளாகக் கண்டார். எனவே மீட்பு, ஏற்புடைமை என்பது தகுதியற்ற தனக்கு இறைவன் தந்த இலவசக் கொடை, காட்டிய இரக்கமெனக் உணர்ந்தார். அன்று முதல் அதுவே அவருடைய போதனையின் மையக் கருத்தாக அமைந்தது.

இயேசு ஏற்படுத்தப்போகும் புதிய உடன்படிக்கையில் சட்டம் ஆழ்ந்த மாற்றம் பெறப்போவதை ஏற்கனவே இறைவாக்கினர் எசேக்கியேல் முன்னறிவித்திருந்தார். இனிமேல் கற்பலகைகளில் எழுதப்பட்ட புறச் சட்டங்கள் மட்டுமல்ல, ஒவ்வொருவரின் நெஞ்சத்திலும் பதிக்கப்பெற்றுள்ள உள் சட்டங்களும் கடவுள்பற்றி அறியச் செய்யும். மனித இதயம் மாறி, உள்ளார்ந்த ஆவியின் தூண்டுதலால் இறைவனின் சட்டங்களையும், கட்டளைகளையும் மனிதன் கடைப்பிடிப்பான் (எசே. 36: 26). மறைநூல் அறிஞர்களும் பரிசேயரும் மக்களின் கடின இதயத்தின் நிமித்தம் சட்டத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை இயேசு ரத்துசெய்து, சட்டத்தை அதன் ஆரம்ப நிலைக்கு திரும்பவும் மாற்றி, அப் புதிய கட்டளையை கடைப்பிடிக்க வேண்டிய ஆற்றல்மிக்க மாதிரியும், ஆவியின் உள்ளார்ந்த வலிமையையும் அளித்தார். சட்டத்தின்பால் கொண்டிருக்கும் மனநிலையால் மனிதனின் முடிவிலா ஊழ் நிர்ணயிக்கப்பட்ட நிலை மாறி, அவன் இயேசுவின்பால் கொண்டிருக்கும் மனநிலையால் அது நிர்ணயிக்கப்படும் புதிய நிலை உருவாகியது. "இப்பொழுது கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடைய-

வராக்கும் செயலுக்கும் திருச்சட்டத்திற்கும் தொடர்பில்லை" (உரோ. 3:21). இப் பின்னணியில்தான் நாம் புனித பவுல். சட்டம், இறையருள், கடவுளுக்கு ஏற்புடையவராகுதல்பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களை விளங்கிக்கொள்ள வேண்டும்.

புனித பவுல் இறையருளின் சட்டத்துக்கு மேலான உன்னத தன்மையை நமக்கு உணர்த்துகிறார். எமக்குச் சட்டம் கிடைப்பதற்கு நானூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஆபிரகாம், சட்டத்தினாலல்ல, தம் விசுவாசத்தினால்தான் இறைவனுக்கு ஏற்புடையவரானார். எவரும் சட்டம் சார்ந்த செயல்களால் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆவதில்லை. ஆபிரகாமுக்கு இறைவன் வாக்குக்கொடுத்த மீட்பரே இயேசு. "உன் வழியாக மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்" (தொ.நூ.12:3). ஆபிரகாம் தம் விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவரானதுபோல, நாமும் இறைவன் ஆபிரகாமுக்கு வாக்களித்து, இப்போது அனுப்பியுள்ள இயேசுக் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வதாலேயே இறைவனுக்கு ஏற்புடையவராகுறோம். யூதர்கள் சரி, புறவினத்தவர் சரி, நாம் அனைவரும் மீட்புப் பெறுவது, இறைவன் முன் ஏற்புடையவர்களாவது சட்டத்தினாலல்ல, சட்டம்சார்ந்த செயல்களினாலுமல்ல, இயேசுக் கிறிஸ்துவில் நாம் கொள்ளும் விசுவாசத்தினாலேதான், அதாவது இறையருளினாலேயே.

மீட்பு சட்டம் சார்ந்த நற்செயல்களால் அல்ல, மாறாக அது விசுவாசத்தினால் நமக்குக் கிடைத்த இறைவனின் நன்கொடையென்பதற்கு புனித பவுல், கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் இன்னொரு காரணம் தருகிறார் (கலா. 3: 1-14). கலாத்தியர் சட்டத்தைப்பற்றியே கேள்விப்படாமல் இருந்தவேளை. பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள். அதற்குக் காரணம் சட்டம் சார்ந்த அவர்களின் நற்செயல்கள் அல்ல, மாறாக அவர்கள் இறையன்பு பற்றிய நற்செய்தியைக் கேட்டு இறைவனில் விசுவாசம் கொண்டமையே.

மனிதன் சட்டத்தை அனுசரிப்பதால் அல்ல, மாறாக இயேசுக் கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தினால் மட்டுமே அவன் கடவுளுக்கு ஏற்புடையவன் ஆகிறான். ஏற்புடைமை இறைவனின் ஒரு இரக்கச் செயல். இறைவனின் அன்புக் கொடை. அது ஒரு இறையருள் என்பதே பவுலின் போதனையாகும். ஆகவே விருத்தசேதனம் செய்வது,

காலங்களைக் கடைப்பிடிப்பது போன்ற யூதச் சடங்குகளை அனுசரிப்பதெல்லாம் வீண். மனிதன் சட்டத்தை அனுசரிக்கும் தனது செயல்களினால் தன்னையே ஏற்புடையவன் ஆக்குகிறான் என்ற யூதரின் கருத்தை பவுல் கடுமையாகத் தாக்குகிறார். மாறாக, இயேசுவின் கல்வாரிப் பலி மூலம் இலவசமாய், இறையருளால் மனிதன் இறைவனுக்கு ஏற்புடையவன் ஆகிறான் என்ற உண்மையை வலியுறுத்துகிறார். சட்டம் கடவுளிடமிருந்து வருவது. அது புனிதமானது, நல்லது, ஆன்மீகமானது (உரோ. 7: 12-14). அது இஸ்ராயேலுக்கு இறைவன் அளித்த தனிச் சலுகை. ஆனால் அது தானாகவே ஊனியல்பான மனிதனை மீட்க இயலாதது (உரோ. 7: 14). சட்டமின்றி பாவமில்லை. சட்டத்தை அறியாதவன் சட்டத்தை மீற முடியாது. சட்டம்தான் பாவத்துக்கு வரைவிலக்கணம் கூறுகிறது. ஒரு செயலை சட்டம் விலக்குவதால்தான், மனிதன் அதைச் செய்ய விருப்பம் கொள்கிறான், அதைச் செய்யத் தூண்டப்படுகிறான், அதனால்தான் அவன் தான் செய்ய விரும்பாததை, அதாவது பாவத்தைச் செய்கிறான். ஆகவே, சட்டம்தான் மனிதனை பாவத்துக்கு இட்டுச் செல்கிறது. மனித பெலவீனத்துக்கு ஆளாக்குகிறது. மனிதனை பாவத்தின் அடிமையாக்குகிறது. சட்டம்தான் பாவத்துக்கு உயிர் கொடுக்கிறது. ஒழுக்க நெறியிலும் கூட அது நல்லது கெட்டது பற்றி அறிவிக்கிறதேயன்றி, நல்லதைச் செய்ய ஆற்றல் தருவதில்லை (உரோ. 7: 16). பாவம் என்ன என்பதை கூறுகிறது. ஆனால் அதனுடைய ஆற்றலிலிருந்து தப்புவது எப்படியெனக் கூறுவதில்லை. தீமையிலிருந்து மனிதனை விடுவிக்காமல், சட்டம் அதற்குள்ளேயே மனிதனை தள்ளுகிறது.

மீட்பு மனித நற்செயல்களால் அன்று, இறையருளால், கிறிஸ்துவில் இறைவன் நம்மீது காட்டிய பரிவினாலேயே கிட்டியது. "கடவுள் கிறிஸ்து இயேசு வழியாக நமக்குச் செய்த அந்த அருளாலேயே நீங்கள் நம்பிக்கையின் வழியாக மீட்கப் பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயலல்ல, மாறாக இது கடவுளின் கொடை. இது மனித செயல்களால் ஆனது அல்ல" (எபே. 2: 8-9). புனித பவுல் நாம் இறையருளின் வழியாகவே மீட்புப் பெறுகிறோம், அது கடவுளின் நன்கொடை, அதை நாம் ஏற்றுக் கொள்கிறோமே தவிர, நாங்களாக அதைப் பெறவில்லை, எம்மால் அதைப் பெற்றுக் கொள்ளவும் முடியாதென வலியுறுத்துகிறார். கடவுள் அளவில்லாதவர். நாம் பாவம்

செய்யும்போது சட்டத்துக்கு எதிராகவல்ல, அளவில்லாத கடவுளுக்கு எதிராகவே பாவம் செய்கிறோம். ஆகவே பாவம் அளவில்லா கனாகனம் உடையது. அதிலிருந்து விடுதலைபெற நாம் அளவில்லாத பரிகாரம் செய்யவேண்டும். அற்ப, அளவுள்ள பாவிகளாகிய நாம் ஒரு போதும் அளவில்லாத பரிகாரம் செய்ய முடியாது. நாம் செய்யும் எந்தப் பெரிய, எவ்வளவு நற்செயல்கள்தானும் அளவுள்ள பேறு உள்ளவையே. ஆகவே நாம் நாமாக நம்மை பாவத்திலிருந்து விடுவிக்க முடியாது. நாம் நாமாக எம்மை இறைவன் திருமுன் நீதிமான்களாக்க முடியாது.

இதே கருத்தை வலியுறுத்த, புனித பவுல் தான் உரோமைய-ருக்கு எழுதிய திருமுகத்தில் இன்னொரு காரணம் தருகிறார். நாம் கடவுளோடு சரியான உறவு கொள்வதெப்படி? நாம் கடவுளுக்கு ஏற்புடையவராவது எப்படி? இதற்கு யூத மதம் அளிக்கும் விடை: ஒரு மனிதன் சட்டம் கூறுபவை அனைத்தையும் நுணுக்கமாக கடைப்பிடிப்பதன் வழியாக இறைவனோடு சரியான உறவை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அதே வேதநூல் கூறுகிறது: "நேர்மையானவரே இல்லை, ஒருவர் கூட இல்லை... எல்லாரும் நெறி பிறழ்ந்து போயினர்". (தி. பா. 14:1-3,53:1-3). அதாவது சட்டத்தின் அனைத்து கட்டளைகளையும் நுணுக்கமாகக் கடைப்பிடிக்கும் ஒரு மனிதனும் இல்லை. ஆகவே இறைவனோடு சரியான உறவுகொள்ளக் கூடிய மனிதன் ஒருவனும் இல்லை. இப்படிப்பட்ட சட்டத்தினால் பயன் என்ன? மனிதன் சட்டத்தை அறிந்து, அதை நுணுக்கமாகக் கடைப்பிடிக்க முயலும்போதுதான் தன் இயலாமையை உணர்கிறான். சட்டம் மனிதனுக்கு அவனது பெலவீனத்தை, பாவநிலையை உணர்த்து-கின்றதே அன்றி, ஒருபோதும் மீட்பு அளிப்பதில்லை. கடவுள் மனிதரை தமக்கு ஏற்புடையவராக்கும் செயலுக்கும், திருச்சட்டத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை. அது இறைவனின் இலவசக் கொடை.

## 6.1.3.2. கிறிஸ்துவின் தலைமைத்துவமும் தாழ்ச்சியும்

புனித பவுல் தமது திருமுகங்களில் இயேசுக் கிறிஸ்துவை பல பெயர்களால் குறிப்பிடுகின்றார்: கிறிஸ்து இயேசு, இயேசு கிறிஸ்து, ஆண்டவர் இயேசு, ஆண்டவர் இயேசு கிறிஸ்து. இவற்றுள் அவர்

அதிகமாக விரும்பிப் பயன்படுத்தும் சொல் "ஆண்டவர்". அதுவே இயேசு பற்றிய பவுலின் முதல் அனுபவம். தமாஸ்குப் பாதையில் உயிர்த்த இயேசு அவரை எதிர்கொண்ட பொழுது, பவுல் அவரிடம், "ஆண்டவரே! நீர் யார்?" என்று கேட்டார். "ஆண்டவர்" என மொழி பெயர்க்கப்படும் "Kurios" என்ற கிரேக்க சொல், எபிரேயத்தில் "யாவே" என்ற பெயரின் மொழி பெயர்ப்பாகும். அதுவே உயிர்த்த கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட முதற் பெயராகும். அது இறைவனுக்குரிய மகிமையை, அதிகாரத்தை, தலைமைத்துவத்தை, ஆராதனையைக் குறித்து நிற்கின்றது. இனிமேல் அவர்தான் படைப்பு முழுவதற்கும் ஆண்டவர். அதாவது அனைத்தும் அவருக்குச் சொந்தம். அனைத்தையும் ஆண்டு நடத்துபவர் அவரே. பவுல் தம்முடைய திருமுகங்களில் இயேசுவின் இந்த அதிகாரத்தை, தலைமைத்துத்தை மிக விரிவாக, ஆழமாக விபரிக்கிறார். உதாரணமாக அவர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் உயிர்த்த இயேசுவுக்கு "ஆண்டவர்" என்ற பெயர் கொடுக்கப்படு-வதையும், அதற்கான காரணத்தையும், அதன் பொருளையும் விளக்குகிறார்:

> கடவுள் வடிவில் விளங்கிய அவர். . . தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து, தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப் பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக "இயேசுக் கிறிஸ்து ஆண்டவர்" என எல்லா நாவுமே அறிக்கையிடும். (பிலி.2:6-11)

இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட "ஆண்டவர்" என்ற புதிய பெயர் அவருடைய புதிய நிலையைக் காட்டுகின்றது. அவரது மகிமையில் இறைவனுக்கே உரிய மகிமையையும், அதிகாரத்தையும், ஆராதனையையும், தலைமைத்துவத்தையும் பெறுகின்றார். அதாவது தந்தை மகன் இயேசுவுக்கு எல்லாப் படைப்புகளையும் ஆளும் அதிகாரத்தை வழங்கியுள்ளார் என்பதை எடுத்தியம்புகின்றது. தொடர்ந்து

உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில், "வாழ்ந்தாலும், இறந்தாலும், நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம். ஏனெனில் இறந்தோர்மீதும், வாழ்வோர்மீதும் ஆட்சி செலுத்தவே, கிறிஸ்து இறந்தும் வாழ்கிறார்" (உரோ.14:8-9) எனப் பவுல் கூறுகிறார்.

புனித பவுல் தம்முடைய திருமுகங்களில் இயேசுக் கிறிஸ்துவின் தலைமைத்துவத்தைப்பற்றி மேலும் இரு முக்கிய உண்மைகளை வலியுறுத்துகிறார்.

> "இயேசு கட்புலனாகாத கடவுளது சாயல், படைப்பனைத்திலும் தலைப் பேறு. ஏனெனில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை, அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர். அனைத்தும் அவர் வழியாய் அவருக்காகப் படைக்கப்பட்டன" (கொலோ.1:15-16).

கிறிஸ்துவின் தலைமைத்துவம் பற்றிய பவுலின் படிப்பினையை நோஸ்டிக்க பேதகத்தின் பின்னணியிலயே நாம் விளங்க வேண்டும். நோஸ்டிக்கரின் கருத்துப்படி கடவுளிடமிருந்து புறப்பட்ட பல சக்திகளில் (aon) ஒன்றே இயேசுக் கிறிஸ்து. எனவே அவர் இணையற்ற, ஒப்பற்ற, தனிப்பட்ட ஒருவரல்ல. மேலும் இயேசுக்கிறிஸ்து கடவுளின் முழுமையான வெளிப்பாடு என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இதற்கு எதிராகவே பவுல் இயேசுக் கிறிஸ்துவின் தனித்துவத்தை, இணையற்ற தன்மையை, தலைமைத்துவத்தைப் பற்றிப் பேசுகிறார். "சாயல்" என்பதற்கு பவுல் பயன்படுத்தும் "Eikon" எனும் கிரேக்க பதம், பிரதிநிதித்துவம், வெளிப்பாடு எனப் பொருள்படும். எனவே பவுல் இயேசு கடவுளின் முழுமையான வெளிப்பாடு என்கிறார். கடவுளை மனிதர் கண்டு, அறிந்து, விளங்குமளவிற்கு இயேசு அவரை நிறைவாக பிரதிநிதித்துவம் செய்கிறார். அவர் இறைவனின் அசலான, பிரமாணிக்கமான படம், ஓவியமாயிருக்கிறார். கடவுளின் சகல பண்புகளும், தனியான குணாதிசயங்களும் இயேசுவில் காணப்படுகின்றன. அதாவது, சுருங்கக் கூறின், இயேசு கடவுளாயிருக்கிறார். தொடர்ந்து பவுல் இயேசுவுக்கும் படைப்புகளுக்கும் இடையே உள்ள தொடர்பு, உறவு பற்றிப் பேசுகிறார். இயேசு

"படைப்பனைத்திலும் தலைப் பேறு" என்கிறார். எபிரேய, கிரேக்க சிந்தனையில் "தலைப் பேறு" என்ற சொற்றொடர் இயேசு படைப்புகளில் முதலானவர் எனப் பொருள்படுவதில்லை. மாறாக அது மகிமையை, மாட்சிமையைக் குறிக்கின்றது. அதாவது படைப்புகள் எல்லாவற்றின் மகிமையிலும் அதிசிறந்த மகிமை, மாட்சிமை உடையவர் இயேசுக் கிறிஸ்துவெனக் கூறுகிறார். அவர் எல்லாப் படைப்புக்களுக்கும் முன்னதாகச் செனித்தவரெனக் கொள்ளலாம். விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை, அதாவது அனைத்துப் படைப்புகளும் அவராலேயே படைக்கப்பட்டன. அது மட்டுமல்ல, அனைத்தும் அவருக்காகவே படைக்கப்பட்டன. இயேசு ஆரம்பத்தில் படைப்புகள் அனைத்தையும் படைத்தவர் மட்டுமல்ல, அவரே இறுதியில் படைப்பின் நோக்கமாக, குறிக்கோளாக, முடிவாக இருக்கிறார். மேலும் அவரே படைப்பனைத்தையும், அவற்றின் ஆரம்பத்திற்கும், முடிவிற்கும் இடைப்பட்ட காலத்தில், கட்டிக் காப்பவர். அதாவது இந்த உலகைக் கட்டிக் காக்கும் இயற்கைச் சட்டங்கள், விதிகள் எல்லாம் அவரின் உள்ளத்தின் வெளிப்பாடேயாகும்.

கிறிஸ்துவுக்கும் உலகிற்குமிடையே உள்ள தொடர்பு பற்றிப் பேசிய பவுல், இயேசுவுக்கும் திருச்சபைக்குமிடையே உள்ள உறவு, தொடர்பு பற்றியும் பேசுகிறார்:

> திருச்சபையாகிய உடலுக்குத் தலையும், தொடக்கமும் அவரே. எல்லாவற்றுள்ளும் முதன்மை பெறுமாறு இறந்து உயிர்த்தெழுவோருள் அவர் தலைப் பேறு ஆனார். தம் முழு நிறைவும் அவருள் குடிகொள்ளக் கடவுள் திருவுளம் கொண்டார் (கொலோ.1:18-19).

இயேசு அவர் உடலாகிய திருச்சபையின் தலை, திருச்சபை தலையாகிய அவரால் இயங்கும் உடல். திருச்சபை இயேசுவின் உடல், இயேசு திருச்சபையின் தலை. உடல் தலையின் வேலையாள். ஆகவே இயேசுவே திருச்பைக்கு உயிர்கொடுக்கும் அதன் ஆவி. அவரே திருச்சபையின் தொடக்கம். அவரிடமிருந்தே திருச்சபை பிறந்தது, உருவாகியது. அதாவது முதல் படைப்பாகிய உலகம் கிறிஸ்துவின் படைப்பு, அதேபோல் புதுப் படைப்பாகிய திருச்சபையும் அதே கிறிஸ்துவின் படைப்பே. கிறிஸ்துவே இறந்து உயிர்த்தவர்களில்

முதலானவர். கிறிஸ்து வாழ்ந்து இறந்துபோன ஒருவரல்ல, மாறாக இன்றும் உயிரோடு வாழ்பவர். அவரை இன்றும் நாம் சந்திக்கிறோம், அனுபவிக்கிறோம், அவர் இன்றும் நம் மத்தியில் உயிரோடிருக்கிறார். பாவத்தை வென்று, மரணத்தை வென்று, எதிர்ப்புகள், தடைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து, வெற்றியீட்டிய வீரானாக இருக்கிறார். அவர் உயிருள்ள ஆண்டவர், அவர்தான் திருச்சபையின் மூலமும், ஆரம்பமும், அவரே திருச்சபையை வழிநடத்துபவர், அவர் மூலமாகவே திருச்சபை சகல ஆன்மீகக் கொடைகளையும் பெறுகிறது. அவரே தம் உயிர்ப்பின் வழியாக அனைத்திற்கும் ஆண்டவர். இவ்வாறு இயேசுவில் கடவுள் முழுமையாக இருக்கிறார். அவர் கடவுளின் முழுமையான பிரதிபலிப்பாக. ஓவியமாக, கடவுளை பிரமாணிக்கமாக பிரதிநிதித்துவம் செய்பவராக இருக்கிறார்.

**கிறிஸ்துவின் தாழ்ச்சி**

இயேசு படைப்புகள் அனைத்தினதும், திருச்சபையினதும் தலைவராக இருக்கிறார். இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் தம் தலைமைத்துவம் எத்தகையது, எப்படிச் செயல்படுகிறதென்பதை தம் சீடர்களுக்கு விளக்கியிருக்கிறார்.

> “பிற இனத்தவர்களின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடி மக்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள். இதை நீங்கள் அறிவீர்கள். உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராய் இருக்கட்டும். இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” (மத்.20:25-28).

இயேசுவின் தலைமைத்துவம் அதிகாரம் செலுத்துவதில், அடக்கி ஆள்வதில் அல்ல, மாறாக, தொண்டாற்றுவதில், பணிபுரிவதில் செயற்படுகின்றது. மேலும் இறுதி இரவுணவின் போது, தம் சீடர்களின் காலடிகளைக் கழுவிய பின், இயேசு அவர்களுக்குக் கூறிய வார்த்தைகளும் முக்கியமானவை.

> நான் உங்களுக்குச் செய்தது என்னவென்று உங்களுக்குப் புரிந்ததா? நீங்கள் என்னைப் 'போதகர்' என்றும், 'ஆண்டவர்' என்றும் அழைக்கிறீர்கள். நீங்கள் அவ்வாறு கூப்பிடுவது முறையே. நான் போதகர்தான், ஆண்டவர்தான். ஆகவே ஆண்டவரும், போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக் கிறீர்கள். நான் செய்ததுபோல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன். பணியாளர் தலைவரைவிடப் பெரியவர் அல்லர். தூது அனுப்பப்பட்ட வரும் அவரை அனுப்பியவரை விடப் பெரியவர் அல்ல என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (யோவா.13:12-16).

இயேசுவின் தலைமைத்துவம் அதிகாரம் செலுத்துவது அல்ல, மாறாக பணி செய்வது. அடக்கி ஆள்வது அல்ல, ஊழியம் செய்வது. அதை அடிப்படையாக வைத்து, .பவுல் இயேசுவின் தலைமைத்துவம் செயற்படும் விதத்தைப் பற்றி, அதன் தன்மைபற்றி விபரிக்கிறார்.

> ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் அருள் செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். இவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்" (2கொரி.8:9).

இவ் வசனத்தில் காணப்படும் எளிமையான கருத்து, பிலி. 2:6-11 இல் வரும் பாடலில் விரிவாக, முழுமையாக விவரிக்கப்படுகிறது. சமூகத்தின் நன்மைக்காக ஒவ்வொரு கிறிஸ்தவனும், தன் இறையுரிமையை கைவிட்டு அடிமை மனிதனாக வந்த கிறிஸ்துவைப்போல், தங்கள் உரிமையையும் சக மனிதரின் நல்வாழ்வுக்காகத் தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்பதே பவுலின் போதனையின் நோக்கமாகும். கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ளிருக்கும் சகல வேற்றுமைகளையும், தற்பெருமைகளையும் களைந்து, தங்கள் சொந்த கௌரவத்தையோ, சிறப்புரிமைகளையோ தேடாமல், தன்னலம் விடுத்து பிறர் நலம் தேடும் பெருங்குணத்துடன், பணிசெய்ய விளையும் தாழ்ந்த உள்ளத்துடன், பரஸ்பர அன்பில் ஒற்றுமையாக வாழ கிறிஸ்தவர்களை

அழைத்த பவுல், அவர்களுக்கு இயேசுக் கிறிஸ்துவின் வாழ்வை, தாழ்மையான தலைமைத்துவத்தை ஒரு முன்னுதாரணமாக அளிக்கிறார. இயேசு ஒரு தாழ்மையுள்ள தலைவர்.

இப் பாடலின் ஒவ்வொரு வசனமும் கிறிஸ்து என்னும் மறையுண்மையின் வெவ்வேறு நிலையை எமக்கு எடுத்துக் கூறுகிறது. முதற் பகுதி இயேசு தம்மை முற்றுமுழுதும் வெறுமையாக்குதலையும், இரண்டாம் பகுதி இறைவன் அவரை அதி உன்னத நிலைக்கு உயர்த்துவதையும் அழகாகக் படம்பிடித்துக் காட்டுகிறது:

2: 6 - **இறைமேன்மை**: "கடவுள் வடிவில் விளங்கிய அவர்". - "வடிவு" என்பதற்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல் எச் சூழ்நிலையிலும் மாறாத தன்மையைக் குறிக்கிறது. அதாவது ஒருவரின் இயல்பான நிலையைக் குறிக்கிறது. இங்கு இயேசுவின் முன்னைய நிலை எடுத்துக் கூறப்படுகிறது. இயேசு அடிப்படையில் மாற்றமுடியாத தெய்வீக இயல்பை உடையவர். எந்நிலையிலும் என்றும் அவர் இறைவனே. இருந்தும் அவர் இறைவனுக்கே உரிய மகிமை, வல்லமை, ஆற்றல், அறிவு போன்ற புற உரிமைகள் ஒன்றையும் பற்றிக் கொண்டிருக்கவில்லை. அவற்றை தனக்கென்று மூடிமறைத்து வைத்திருக்கவில்லை. தன் சொந்த நலனுக்காக, மகிமைக்காக அவற்றைப் பயன்படுத்தவில்லை.

2: 7 - **மனுவுருவில் வெறுமையாகுதல்**: "தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார்". வெறுமையாக்குவதற்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல், ஒன்றுமில்லாமல் அனைத்தையும் முற்றுமுழுவதும் துறப்பதை, இல்லாமல் செய்வதைக் குறிக்கிறது. இங்கு இயேசுவின் மண்ணக வாழ்வின் நிலை வர்ணிக்கப்படுகிது. இயேசு மனுவுருவான மறைபொருளை பவுல் மிகவும் உயிருள்ள முறையில் விபரிக்கிறார். அவர் மனுஷீகத்தை எடுப்பதற்காக, தானாகவே விரும்பி, தன்னுடைய தெய்வீகத்தை முற்றுமுழுவதும் வெறுமையாக்கினார். தனது உரிமை, மகிமை, ஆற்றல் அனைத்தையும் துறந்தார். பழைய ஆதாம் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விரும்பி, பாவத்தைக் கட்டிக் கொண்டான். இங்கு புதிய ஆதாம், கடவுளாயிருந்தும், அந்த உரிமையை உதறித் தள்ளுகிறார். அவர் முற்றுமுழுவதும் உண்மை மனிதனாக வந்தது மட்டுமல்ல, அடிமையின்

வடிவை ஏற்றுக்கொண்டார். இங்கு திரும்பவும் வடிவம் மாற்ற இயலா இயல்பைக் குறிக்கிறது. இயேசு மனிதன் போல், அடிமைபோல் நடிக்கவில்லை. ஆனால் உண்மையில் மனிதனானார், மனிதனுடைய இன்ப துன்பம், கவலை, வேதனை, ஏழ்மை அனைத்திலும் பங்கு கொண்டார். பாவத்தைத் தவிர, மற்றனைத்திலும் மனிதனுக்கு ஒப்பானார். மனிதனாகியது மட்டுமல்ல, அவர் ஒரு அடிமையானார். அடிமையென்பவன் தனக்கென்று வாழாதவன், தனக்கென்று எவ்வித உரிமையும் இல்லாதவன். மற்றவனுக்கென்றே வாழ்பவன். அவனின் காலம், நேரம், ஆற்றல், அறிவு அனைத்தும் மற்றவனுக்கே சொந்தம். அனைவருக்கும் ஆண்டவனாயிருந்தவர் அனைவருக்கும் அடிமையானார். "மனிதருக்கு ஒப்பானார்". - இங்கு பயன்படுதப்படும் சொல் நிலையற்ற தன்மையை. மாறக் கூடிய இயல்பைக் குறிக்கிறது. அதாவது, இயேசு என்றும் மனிதன் அல்ல. அடிமை அல்ல. ஒரு குறிப்பிட்ட காலத்துக்கே மனிதனாயிருந்தார்.

2: 8 - **இறுதியான சிலுவை இழிவு**: மனிதனாக உலகிற்கு வந்த கிறிஸ்து உலகில் ஆற்றிய மீட்புப் பணியை இரத்தினச் சுருக்கமாகப் பவுல் கூறுகிறார். "தம்மைத் தாழ்த்தி, மரணமட்டும், சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிந்தார்". கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்வில் மிளிர்ந்த பண்புகளான தாழ்மை, கீழ்படிவு, சுயபரித்தியாகத்தை பவுல் அழகாகக் கூறுகிறார். அவர் மக்கள்மேல் ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை, அதிகாரம் செலுத்த, அடக்கி ஆள விரும்பவில்லை. மாறாக அவர்களுக்குப் பணிபுரியவே விரும்பினார். அவர் தன் விருப்பம்போல் வாழ விரும்பவில்லை, மாறாக இறைத் தந்தையின் விருப்பப்படியே வாழ விரும்பினார். அவர் தம்மை உயர்த்திக்கொள்ள விரும்பவில்லை, மாறாக மக்களுக்காக தம் மகிமை அனைத்தையும் துறக்கவே விரும்பினார். ஆதாம் தற்பெருமை கொண்டு, தானும் கடவுள் போல் ஆகவேண்டுமெனப் பேராசை கொண்டு, இறைவனுக்கு கீழ்ப்படிய மறுத்து, மானிடத்துக்கு அழிவைத் தேடினான். இங்கு அதற்கு முற்றுமுழுவதும் எதிர்மாறான முறையில் இயேசு செயல்பட்டு, மானிடத்துக்கு வாழ்வை அளிக்கிறார். சிலுவை மரணம் ஒரு அடிமைக்கு, தன் உரிமைகள் அனைத்தையும் இழந்த ஒருவனுக்கே உரிய தண்டனை முறை. இதுவே இழிவின் கடைசி எல்லை. அவமானத்தின்

உச்ச கட்டம். தாழ்மை, கீழ்ப்படிவு, பணி, சுயபரித்தியாகமே இயேசுவின் தலைமைத்துவத்தின் முக்கிய இலட்சணங்கள்.

2: 9 - **உயர்வு பெறுதல்**: தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ளுகிறவன் உயர்த்தப் படுவானென புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் படிக்கிறோம். கிறிஸ்துவின் சுய பரித்தியாகம், அவரின் சுய வெறுமையாக்கல் அவருக்கு எந்தவொரு மனிதருக்கும் கிடைக்காத மாட்சிமையைக் கொணர்ந்தது. இங்கு இயேசுவின் மகிமை நிலையைக் காண்கிறோம். அவர் சாவைவென்று, புத்துயிருடன், புதுப் பொலிவுடன், வெற்றி வீரனாக உயிர்த்தெழுந்தார். இறைவனே அவரை உயிர்த்தெழச் செய்தார். அவரை மகிமைப் படுத்தினார் கிறிஸ்துவின் அளவு கடந்த அன்புத் தியாகத்தின் நிமித்தம், இறைவன் அவரை மாட்சிமைப் படுத்தி, அவருக்கு எல்லாப் பெயருக்கும் மேலான பெயரை அளித்தார். வேதநூலில் புதிய பெயர் கொடுப்பது, ஒரு மனிதனின் வாழ்வில் ஒரு புதிய நிலை, கட்டம் ஆரம்பமாகுவதைக் குறிக்கிறது. ஆபிராம் ஆபிரகாமானபோது, அவர் இறைவனின் வாக்குறுதியைப் பெற்றார். யாக்கோபு இஸ்ராயேலானபோது, இறைவன் அவரோடு ஒரு புதிய உறவு கொண்டார். இயேசுவுக்குப் புதுப் பெயர் கொடுக்கப்பட்டது அவர் விண்ணகத்துக்கு உயர்த்தப்பட்டு, இறைவனின் வலது பக்கத்தில் அமர்த்தப்பட்டு, மகிமைப் படுத்தப்படுவதைக் குறிக்கிறது. இயேசுவுக்கு இறைவன் கொடுத்த புதுப் பெயர் "ஆண்டவர்". இப் பெயரினாலேயே ஆதித் திருச்சபையில் இயேசு அழைக்கப்பட்டார். அது இயேசு அனைத்து உயிர்களுக்கும் உரிமையாளன், அரசர்க்கெல்லாம் அரசர், அவர் இறைவன் எனப் பொருள்படும். தன்னைத் தானே அடிமை-யாக்கியவனுக்கு இறைவன் கொடுத்த பரிசு-அவர் அவரை ஆண்டவர் ஆக்கினார்.

2: 10 - **படைப்புகள் அனைத்தும் வழிபடுதல்**: மூவுலகமும் வழிபடுதல் இறைவனுக்கே உரியது. இறைவனுக்கே உரிய அந்த வழிபாடு இங்கு இயேசுக் கிறிஸ்துவுக்கு கொடுக்கப்படுகிறது. அனைத்துலகும் விருப்புடன் முன்வந்து இயேசுவை வழிபடுகின்றது, ஆராதிக்கின்றது. இயேசு, தம் அன்புத் தியாகத்தினால், அனைத்துப் படைப்புகளின் இதயங்களையும் வென்றுவிட்டார். தன் அனைத்து மகிமையையும், சிலுவை மரணத்தை ஏற்கும் அளவிற்கு, தியாகம் செய்த இயேசுவின்

முன்னிலையில், மனித இதயங்கள் உருகி, எல்லாத் தடைகளும் தகர்த்தெறியப்பட்டு, அவர் முன் மண்டியிட்டுக் கிடக்கின்றன.

2: 11 - "**இயேசுக் கிறிஸ்து ஆண்டவர்**" என அறிக்கையிடுதல்: இப் பாடலின் உச்ச கட்டம். ஆதிக் கிறிஸ்தவர்கள் செய்த தம் விசுவாச அறிக்கையை எல்லா மனித நாவும் அறிக்கையிடும். தன் சுயநலமற்ற தியாகத்தினால் வலிமையற்ற அடிமையின் நிலைக்கு தம்மைத் தாழ்த்தியவர், இறைவனின் ஆணைப்படி, இப்பொழுது மூவுலக ஆண்டவராக பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறார். "தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக": இவையெல்லாம் நடந்தேறியதன் இறுதி நோக்கம், முழு உலகையும் இறைவனின் ஆட்சியின், மகிமையின் கீழ் கொண்டு-வருவதே. இயேசு இவற்றையெல்லாம் செய்தது, தம் மகிமைக்காக அல்ல, இறைத் தந்தையின் மகிமைக்காகவே செய்தார். "அனைத்துமே மகனுக்கு அடிபணியும் போது, தமக்கு அனைத்தையும் அடிபணியச் செய்த கடவுளுக்கு மகனும் அடிபணிவார். அப்போது கடவுளே அனைத்திலும் அனைத்துமாயிருப்பார்" (1கொரி.15:28). இயேசு அனைத்து மனிதரையும் தம்பால் ஈர்த்து இழுத்தது அவர்களை இறைவனிடம் இட்டுச் செல்வதற்காகவே. கிறிஸ்துவின் நோக்கம் அனைவரையும் கடவுள்பால் ஈர்ப்பதேயாகும்.

## 6.1.3.3. உயிர்ப்பும் மறுவருகையும்

(1 தெச. 5:1-11)

**"உயிர்ப்பு" : எண்ணக் கரு**

உயிர்ப்பு அல்லது உயிர்த்தெழுதல் என்பது ஒருவரைக் கடவுள் மரணத்தினின்று உடலோடு எழுப்புவதைக் குறிக்கிறது. இது உலக முடிவில், இறுதித் தீர்வையின்போது இறந்தவர்கள் அனைவரினதும் உடலை இறைவன் மீளவும் உயிர்பெறச் செய்வதைக் குறிக்கும். இது பழைய நலிந்து இறந்த உடலுக்கு மீளவும் உயிர் அளிப்பதை-யல்ல, மாறாக முற்றுமுழுவதும் உருமாற்றம் பெற்ற உடல்-ஆன்மாவுடன் கூடிய மனிதராக எழுப்பப் படுவதைக் குறிக்கிறது. அதன்பின் அவர்கள் பழைய நோய் நொடிகளுடன் தொடர்நது பழைய வாழ்வை வாழ்வ-தில்லை. ஆனால் முற்றிலும் புதிய வாழ்வு வாழுவர். இவ்வாறாக உயிர்த்தெழுகின்றவர்கள் மீண்டும் இறப்பதில்லை. ஆனால்

உயிர்த்தெழுதல் என்பது பிளேற்றோவின் கிரேக்க தத்துவத்தில் காணப்படும் மனித ஆன்மாவின் அழியா நிலையைக் குறிக்கவில்லை. மேலும் நாம் உயிர்த்தெழுதலை (resurrection), இறந்தவர்போல் இருப்பவரை மீளவும் உயிர்பெறுச் செய்தலோடு (resuscitation) ஒன்றுபடுத்துவதில்லை. உதா. இயேசு தொழுகைக் கூடத் தலைவன் யாயிருடைய மகளை மீள உயிர்பெறச் செய்தது (மாற்.. 5:41-42), அல்லது இலாசரை உயிர்பெறச் செய்தது (யோவா. 11:38-44). அவர்கள் தம் பழைய நலிந்த உடலுடனேயே மீண்டும் உயிர் பெற்றனர். தங்கள் பழைய வாழ்வையே மீண்டும் தொடர்ந்து வாழ்ந்தனர். சொற்ப காலத்தின் பின் மீளவும் இறந்தனர். ஆனால் உயிர்த்தெழுபவர் ஒருபோதும் மீண்டும் இறப்பதில்லை.

**இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பு**

இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பு கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை உண்மையாகும். இயேசுக் கிறிஸ்து தம் பாடுகள், மரணம், உயிர்ப்பின் வழியாகவே மனுக் குலத்தை மீட்டார். அவர் சாவை வென்று, மரணத்தை வென்று, வெற்றி வீரனாக உயிர்த்தெழுந்திருக்காவிடின், அவர் வழியைப் பின்பற்றும் நாமும் ஒரு நாள் உயிர்த்தெழுவோம் என்பதை நம்பி, ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் முன் கூறியபடி உயிர்த்து எழுந்ததுதான் நமக்கு இந்த நம்பிக்கையை அளிக்கின்றது. ஆதித் திருச்சபையில் அப்போஸ்தலர்களின் மிக முக்கிய போதகத்தின் சாரம்சம் "கிறிஸ்து உயிர்த்துவிட்டார்" என்பதே ஆகும். உயிர்த்த கிறிஸ்துவிற்கே அவர்கள் சான்று பகர்ந்தனர் "கடவுள் அவரை மரண வேதனையினின்று விடுவித்து உயிர்த்தெழச் செய்தார். கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்" (தி.தூ.ப.2:24,32). "வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுவிட்டீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகள்" (தி.தூ.ப.3:15). "நீங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிருடன் எழுப்பினார்" (தி.தூ.ப.4:10). இந்த நம்பிக்கையே நம் கிறிஸ்தவ வாழ்வுக்கு அர்த்தமும் பொருளும் கொடுக்கின்றது. ஆகவேதான் புனித பவுல், "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கின்ற

நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும். நாங்களும் கடவுளின் சார்பில் பொய்ச் சான்று பகர்வோர் ஆவோம்" (1 கொரி.15:14-15). என்கிறார்.

அவர்களைத் தொடர்ந்து, நான்கு நற்செய்தியாளர்களும் தம் நற்செய்திகளில் கிறிஸ்து மெய்யாகவே உயிர்த்தெழுந்தாரென்று வலியுறுத்திக் கூறுகின்றனர். கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை எவரும் கண்டதாகக் கூறாவிடினும், உயிர்த்த கிறிஸ்துவை பலர் கண்டதாகக் கூறுகின்றனர். இயேசுவின் உயிர்த்த உடலை பலர் தொட்டுப் பார்த்திருக்கின்றார்கள். பெண்களும், சீடர்களும கண்ட வெறுமையான கல்லறையும் கிறிஸ்து உயிர்த்ததை உறுதிப்படுத்துகின்றது. அவற்றை எல்லாம் ஆதாரமாகக் கொண்டே மெய்யாகவே இயேசு தான் முன்னறிவித்தபடி உயிர்த்தெழுந்தாரென கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். வெறுமையான கல்லறையும், குறிப்பாக உயிர்த்த இயேசுவின் தரிசனங்களுமே, கிறிஸ்து உண்மையாகவே உயிர்த்தார் என்பதற்கு ஆதாரங்களாக இருக்கின்றன.

### பழைய ஏற்பாட்டில் உயிர்த்தெழுதலும், மறுவுலக வாழ்வும்

பழைய ஏற்பாட்டில், குறிப்பாக முதல் நூல்களில், பொதுவாக உயிர்த்தெழுதல், மறுவுலக வாழ்வுபற்றிய கருத்து, அறிவு காணப்படுவதில்லை. அக்காலத்தில் ஒருவர் இறைவனுடன் கொண்டுள்ள உறவு, தொடர்பு அவருடைய மரணத்துடன் முடிவு அடைகிறதெனக் கருதப்பட்டது. அக்காலத்து மக்களின் கருத்துப்படி மறுவுலக வாழ்வு என்று ஒன்றுமில்லை. நல்லவர்களுக்கு வெகுமதியும், தீயவர்களுக்கு தண்டனையும் இவ்வுலகத்திலேயே அளிக்கப்படுகின்றன. நல்லவர்களுக்கு இவ்வுலகிலேயே நீண்ட கால ஆயுளும், அதிகமான மனைவி, மக்கள், சந்ததியும், நிலபுலன்களும், சொத்தும், சுகபோகமும் கிடைக்கும். மாறாக தீயவர்களுக்கு குறுகிய கால ஆயுளும், சொற்ப சொத்துக்களும் சுகபோகங்களுமே கிடைக்கும். கி.மு. 2ம் நூற்றாண்டு வரை யூதர்கள் மத்தியில் உயிர்ப்பு, மறுவுலக வாழ்வு பற்றிய தெளிவான கருத்து நிலவவில்லை. எனினும் அவர்கள் உயிர்ப்பு பற்றிய இறைவெளிபாட்டு உண்மையை ஏற்றுக் கொள்வதற்கு படிப்படியாக வெவ்வேறு சிந்திக்கும் முறைகளினால் ஆயத்தப்படுத்தப் பட்டார்கள். மனித வாழ்வானது பொதுவாக மரணத்துடன் முடிவு பெறுவதாக நோக்கப்பட்டாலும், பழைய ஏற்பாட்டில் ஆங்காங்கே கடவுளின் மீட்கும்

வல்லமையில் நம்பிக்கையை காட்டும் சில கூற்றுக்களைக் காண்கிறோம். அழியும் தருவாயில் இருந்த ஒரு தனி மனிதனோ அல்லது ஒரு தேசமோ கடவுளால் மீட்கப்பட்டு பாதுகாக்கப்பட்டதாக வாசிக்கிறோம். "கடவுள் என்னுயிரை மீட்பது உறுதி. பாதாளத்தின் பிடியிலிருந்து விடுவித்து என்னைத் தூக்கி நிறுத்துவார்" (தி.பா.49:15). இறை-வாக்கினரின் வாக்குகள் வலிமை குன்றி, வேதனையுறும் இஸ்ராயேலர் மீண்டும் நிலைநிறுத்தப் படுவரெனக் கூறுகின்றன. "இறந்த உம் மக்கள் உயிர் பெறுவர். அவர்களின் உயிரற்ற உடல்கள் மீண்டும் எழும்" (எசா.26:19). இறைவாக்கினர் எசேக்கியேல் எவ்வாறு பள்ளத்தாக்கில் உள்ள உலர்ந்த எலும்புகள் ஆவியின் பொழிவினால் மீண்டும் உயிர்-பெறும் என அழகாக வரைகிறார். "என் மக்களே! நான் உங்கள் கல்லறைகளைத் திறந்து, உங்களை அவற்றிலிருந்து வெளிக் கொணர்கையில், நானே ஆண்டவர் என்பதை அறிந்து கொள்வீர்கள். என் ஆவியை உங்கள் மீது பொழிவேன். நீங்களும் உயிர் பெறுவீர்கள்" (எசே.37:13).

தனி மனிதரின் உயிர்ப்பு பற்றிய உண்மை இஸ்ராயேலரின் வரலாற்றின் இறுதிக் காலத்திலேதான் காணப்படுகின்றது. அதுவும் பழைய ஏற்பாட்டின் சில தனிப்பட்ட பந்திகளிலேதான் காணக்கிடக்-கின்றன. முதல்முறையாக தனியாரின் உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்தவர் இறைவாக்கினர் தானியேல் ஆவார். "இறந்துபோய் மண் புழுதியில் உறங்குகின்ற அனைவருள் பலர் விழித்தெழுவர். அவருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவர். வேறு சிலரோ வெட்கத்திற்கும், முடிவில்லா இழிவுக்கும் உள்ளாவர் ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும், பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண்மீன்களைப் போலவும், என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளி வீசித் திகழ்வர்" (தானி.12:2-3). விவிலிய வல்லுநர்களின் பொதுவான கருத்துப்படி இங்கு இறைவாக்கினர் மானிடர் அனைவரினதும் அல்லது பொதுவான உயிர்த்-தெழுதலைப் பற்றி அல்ல, மாறாக நல்லவர்களையும், தீயவர்களையும் உள்ளடக்கும் இஸ்ராயேலரைப்பற்றியே பேசுகிறார். தானியேல் இறைவாக்கினரின் நூலில் காணப்படும் இத் தனியாரின் உயிர்ப்புபற்றிய உண்மை ஒரு தனிமைப் படுத்தப்பட்ட கருத்தாகவே கி.பி. 2ம் நூற்றாண்டு மட்டும் இருந்து வந்தது. அது பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விசுவாச உண்மையாக இருக்கவில்லை. எனினும்

கிரேக்க மன்னர் அந்தியோக்கு எப்பிபானினால் (கி.மு.175-164) யூதர்கள் கொடுமையாக துன்புறுத்தப்பட்ட காலக்கட்டத்தில், தனியாரின் உயிர்ப்பு பொதுவாக பக்தியுள்ள யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விசுவாச உண்மையாக இருந்தது. இறந்தவர்கள் மீளவும் உயிர்த்தெழுவர், இறைவன் மறுவாழ்வில் நீதிமான்களுக்கு கைமாறு வழங்குவார் என்ற உண்மையில் உறுதியான விசுவாசம், தளராத நம்பிக்கையோடு மக்கபேய சகோதரர்கள், தங்கள் விசுவாசத்துக்காக மறைசாட்சி மரணத்தை எதிர்கொள்ள சற்றேனும் தயங்கவில்லை (2மக்.7:9,11,-14,23,29). ஞானாகமத்தின் 2ம், 3ம், அதிகாரங்கள் நீதிமான்கள் துன்புறுத்தப்படுவதையும், மறுவாழ்வில் அவர்கள் கைமாறுபெறுவதையும் அதிகமாக எடுத்துக் காட்டுகின்றன. எவ்வாறு மறுவாழ்வில் நம்பிக்கையற்ற அறிவிலிகள் நல்லவர்களை துன்புறுத்துகின்றனரெனக் கூறி, சாவை விடுத்து, வாழ்வைத் தேடும்படியாக அறிவுரை கூறுகின்றது. ஞானாகமம் மறுவாழ்வில் மாசற்றவர்களுக்குக் கிடைக்கும் பரிசை இறைவனுடன் நிலையான வாழ்வு எனக் காட்டுகிறது (2:22-23). ஏனொக், பாருக், எஸதிராஸ் போன்ற பழைய ஏற்பாட்டு மறைவு நூல்களும் பொதுவான உயிர்ப்பையும், அதன்பின் இடம்பெறும் பொதுத் தீர்வையையும் பற்றிப் பேசுகின்றன. உயிர்த்தெழுதலை நம்புவதற்கு யூதர்கள் கொண்டிருந்த கடவுள் வாழ்வுக்கும் சாவுக்கும் ஆண்டவர் என்ற விசுவாசமே காரணமாக அமைந்திருந்தது. கடவுள் நம்பிக்கைக்குரியவர். எனவே துன்புறும் நீதிமான்கள் ஒரு மறுவுலக வாழ்வை எதிர்பார்க்கலாம்.

**இயேசுவின் காலத்தில் உயிர்த்தெழுதலும் மறுவுலக வாழ்வும்**

இயேசுவின் காலத்தில் நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படும் தனி மனிதருக்கு அல்லது சமூகத்துக்கு கடவுளின் கைமாறாக உயிர்த்தெழுதல் அல்லது நிலை வாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை பொதுவாக எல்லோரிடமும் காணப்படவில்லை. நற்செய்தியாளர்கள் இயேசுவின் பணிக் காலத்தில், உயிர்த்தெழுதலை, மறுவாழ்வை ஏற்றுக்கொண்ட பரிசேயருக்கும், அதை ஏற்க மறுத்த சதுசேயருக்கும் இடையே உயிர்த்தெழுதல், மறுவாழ்வு பற்றிய தர்க்கங்கள் நிகழ்ந்ததைக் குறிப்பிடுகிறார்கள் (மாற்.12:18-27). பரிசேயர்கள் இறப்புக்குப் பின் மறுவாழ்வு ஒன்றுண்டு என விசுவசித்து,

உயிர்த்தெழுதலை எதிர்பார்த்திருந்தார்கள். அவர்கள் கருத்துப்படி உயிர்த்தெழுதல் என்பது பிரிந்த உடலும், அழியா ஆன்மாவும் மீண்டும் இணைந்து, முன்னைய இவ்வுலக வாழ்வை, கூடிய இறை ஆசீருடன், தொடர்ந்து வாழ்வதையே குறித்தது. மேலும் உயிர்த்தெழுதல், மறுவுலக வாழ்வுபற்றிய நம்பிக்கையை கும்ரான் சமூகத்தினரிடையேயும் காண்கிறோம். அவர்கள் தங்கள் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதில் மிகக் கவனம் எடுத்தது அவர்கள் உயிர்த்தெழுதலில் கொண்டிருந்த நம்பிக்கையைச் சுட்டுகின்றது. நற்செய்திகளில் இயேசு மக்கள் உயிர்த்தெழுதல் பற்றி கொண்டிருந்த தவறான கருத்துக்களை படிப்படியாகத் தூய்மைப்படுத்தி, அதை ஆன்மீகப்படுத்துவதைக் காண்கிறோம். "வருங்கால வாழ்வைப் பெறத் தகுதி பெற்ற யாரும் இறந்து உயிர்த்தெழும்போது திருமணம் செய்து கொள்வதில்லை. இனி அவர்கள் சாக முடியாது. அவர்கள் வான தூதரைப்போல் இருப்பார்கள். உயிர்த்தெழுந்த மக்களாய் இருப்பதால் அவர்கள் கடவுளின் மக்களே" (லூக்.20:35-36). மேலும் அவர் பழைய ஏற்பாட்டில் கடவுள் ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் என அழைக்கப்படும் வாசகங்களை சதுசேயர்களுக்குச் சுட்டிக்காட்டி, அவர்கள் இன்றும் ஒரு இடத்தில், ஒரு வடிவில் வாழ்கின்றார்கள் என்பதை உணர்த்தினார். ஏனெனில் "கடவுள் இறந்தோரின் கடவுள் அல்லர். மாறாக வாழ்வோரின் கடவுள். ஏனெனில் அவரைப் பொறுத்த மட்டில் அனைவரும் உயிருள்ளவர்களே" (20:38). இயேசு உயிர்த்தெ-ழுதலைப் பற்றி மலைப் பொழிவிலும் (மத்.5:29), வேறு பல இடங்களிலும் போதித்தார் (மத்.10:2818:8 மாற்.9:42-47 லூக்.14:14). யோவானின் நற்செய்தியின்படி, இயேசுக் கிறிஸ்துவே இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்பவர் (யோவா.6:39.44.54). மேலும் இயேசுவுடன் விசுவாசத்தின் வழியாய் நாம் கொள்ளும் ஒன்றிப்பே அதற்கு ஆதாரம். "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவா.11:25). நல்லவர்கள் மட்டுமல்ல, தீயவரும் உயிர்த்தெழுவர். "அப்போது கல்லறைகளில் உள்ளோர் அனைவரும் அவரது குரலைக் கேட்டு வெளியே வருவர். நல்லன செய்தோர் வாழ்வு பெற உயிர்த்தெழுவர். தீயன செய்தோர் தண்டனைத் தீர்ப்புப் பெற உயிர்த்தெழுவர்" (யோவா.5:28).

**புதிய ஏற்பாட்டுக் காலத்தில் உயிர்த்தெழுதலும் மறுவுலக வாழ்வும்**

அக்காலத்தைய கிரேக்க சிந்தனையாளரின்படி, எப்பிக்கூரர், ஸதொயிக்கர் அனைவரும் தனிப்பட்ட ஒருவரின் நிலை வாழ்வை மறுத்தனர். அவர்களி கருத்தின்படி ஒருவர் இறக்கும் பொழுது அவரது ஆன்மா உடலை விட்டுப் பிரிந்து, முற்றாக மறைந்து விடுகிறது. ஆனால் பிளேற்றோவின் தத்துவத்தைப் பின்பற்றியவர்கள் ஆன்மாவின் நிலை வாழ்வை நம்பினர். ஏனெனில் அவர்களின் கருத்துப்படி ஆன்மா விண்ணைச் சார்ந்தது, அழியாதது, ஆனால் உடல் மண்ணைச் சார்ந்தது. அது அழியக் கூடியது. ஆன்மா உடலில் சிறைப்பட்டிருக்கின்றது. இறப்பில் ஆன்மா உடலிலிருந்து விடுதலை பெறுகின்றது. ஆன்மா உடலில் வாழும்போது உலகப் பொருட்களில் பற்று வைக்காமல் வாழ்ந்திருந்தால், தத்துவ ஞானத்தைப் பின்பற்றி, உண்மை, நன்மைத்-தனத்தில் நிலைத்திருந்தால் அது உடலிலிருந்து விடுதலைபெற்று, விண்ணை அடைந்து விடுகிறது. ஆதற்கு எதிர்மாறாக வாழ்ந்திருந்தால், அது மனித அல்லது மிருக பருப்பொருள் நிலையை அடைந்து விடும்.

ஆனால் கிறிஸ்தவர்களின் வாழ்வில், உயிர்ப்பில் நம்பிக்கை கொள்வது கிறிஸ்தவத்தின் அடிப்படைச் சத்தியங்களில் ஒன்றாகும். உயிர்ப்பில் கொண்டிருக்கும் கிறிஸ்தவ நம்பிக்கையானது வெறுமனே சில யூதர்கள் மத்தியில் காணப்பட்ட நம்பிக்கையின் வளர்ச்சியோ, அல்லது கிரேக்க தத்துவத்தின் அழியா ஆன்மா பற்றிய சிந்தனையோடு சம்பந்தப்பட்டதோ அல்ல. மாறாக கிறிஸ்தவ நம்பிக்கையும், அதன் விளக்கமும் “நீங்கள் சிலுவையிலறைந்து கொலை செய்த இயேசுவை கடவுள் உயிர்த்தெழச் செய்தார்” என்ற ஈஸ்டர் அடிப்படைப் போதகத்தை ஆரம்பமாகக் கொண்டது. “கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்” (தி.தூ.ப.2:32). “வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுவிட்டீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகள்” (தி.தூ.ப.3:15). இவ்வாறு உயிர்த்தெழுதல் பற்றிய பல பகுதிகளை புதிய ஏற்பாட்டில் நாம் காண்கிறோம்.

## 6.1.3.3.1 இறந்தவர்களின் உயிர்ப்புப் பற்றிய பவுலின் படிப்பினை

(1 கொரி. 15:3-11)

புனித பவுல் ஒரு யூதர். அதிலும் அவர் ஒரு பரிசேயர். எனவே ஏனைய பரிசேயரைப் போல அவர் இறந்தவர்களின் உயிர்ப்பிலும், மறுவுலக வாழ்விலும் நம்பிக்கை உள்ளவர். பரிசேயர்கள் இறப்புக்குப் பின் மறுவாழ்வு ஒன்றுண்டு என விசுவசித்து, உயிர்த்தெழுதலை எதிர்பார்த்திருந்தார்கள். எனினும் முதல் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒருவர் இறந்தபின் நடப்பது என்ன? உயிர்ப்பு என்றால் என்ன? என்பதைப் பற்றிய தெளிவான கருத்துக்கள் இருக்கவில்லை. அவர்கள் உடனடியாகக் இயேசுவின் இரண்டாம் வருகை தாம் உயிருடன் இருக்கும்போதே இடம்பெறுமெனக் காத்திருந்தார்கள். ஆனால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தாமதமாகியது. அதற்கிடையில் சில கிறிஸ்தவர்கள் இறக்கத் தொடங்கினர். அப்பொழுதுதான், அவர்கள் இறந்தவர்கள் இயேசுவை எதிர்கொள்ள மாட்டார்களா? இறந்தவர்களுக்கு என்ன நடக்கும்? என்பது பற்றியும் சிந்திக்கத் தொடங்கினார்கள். அவர்கள் கருத்துப்படி உயிர்த்தெழுதல் என்பது பிரிந்த உடலும், அழியா ஆன்மாவும் மீண்டும் இணைந்து, முன்னைய இவ்வுலக வாழ்வை, கூடிய இறை ஆசீருடன், தொடர்ந்து வாழ்வதையே குறித்தது. ஆனால் பவுல் உயிர்த்த கிறிஸ்துவை தமாஸ்குப் பாதையில் நேருக்கு நேர் கண்டார், சந்தித்தார். அந்த அனுபவத்தின் விளைவாக அவருடைய உயிர்ப்புபற்றிய கருத்திலே தெளிவும், வளர்ச்சியும் ஏற்பட்டது. அவர் அச் சிக்கலுக்கான தகுந்த அறிவுரையை வழங்கினார். “ஆண்டவர் வரும்போது கிறிஸ்துமீது நம்பிக்கை கொண்ட நிலையில் இறந்தவர்கள், முதலில் உயிர்தெழுவர். பின்னர் உயிரோடு எஞ்சியிருக்கும் நாம், மேகங்களில் எடுத்துக் கொண்டு போகப்பட்டு, வான்வெளியில் ஆண்டவரை எதிர்கொள்வோம்” (1 தெச.4:16-17). உயிர்ப்பு பற்றிய பவுலின் முழுமையான படிப்பினையை அவருடைய திருமுகங்களில், குறிப்பாக 1 கொரி. 15 இல் நாம் காண்கிறோம்.

கிறிஸ்துவின் உயிர்ப்பை விசுவசித்த கொரிந்தியர் சிலர், இறந்தோர் உயிர்த்தெழுவர் என்பதை நம்ப மறுத்தார்கள். பவுல்

அதைப் பயன்படுத்தி, உயிர்ப்பு பற்றிய பூரண விளக்கம் அளிக்கிறார். அவர்கள் இறந்தவர்களின் உயிர்ப்பை நம்ப மறுத்தால் கிறிஸ்துவின் உயிர்ப்பில் நம்பிக்கை கொள்வதில் அர்த்தமில்லை. "இறந்தோர் உயிர்த்தெழ மாட்டாரெனில் கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றாகிவிடும். கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால், நாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றது" என்கிறார். ஆனால் இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். "நான் பெற்றுக்கொண்டதும், முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே: மறை நூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறை நூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். பின்னர் அவர் கேபாவுக்கும், அதன்பின் பன்னிருவருக்கும் தோன்றினார். பின்பு ஐநூற்றுக்கும் மேற்பட்ட சகோதரர், சகோதரிகளுக்கு ஒரே நேரத்தில் தோன்றினார். பிறகு யாக்கோபுவுக்கும், அதன்பின் திருத்தூதர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியில் தப்பிப் பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார். . .நானோ, மற்றத் தூதர்களோ யாராயிருந்தாலும், இதையே பறைசாற்றுகிறோம். நீங்களும் இதையே நம்பினீர்கள்" (1 கொரி. 15:3-11). இங்கு உயிர்த்த இயேசு எங்கு, எப்பொழுது தோன்றினாரெனக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் கிறிஸ்து உயிர்த்தார். பலருக்குத் தோன்றினார். அப்போஸ்தலர்களுக்குத் தோன்றிய உயிர்த்த இயேசு தனக்கும் தோன்றினாரென்பதையே பவுல் வலியுறுத்த முனைகிறார்.

கிறிஸ்துவின் இறப்பு, அடக்கம், உயிர்ப்பு என்பன எமது நம்பிக்கையின் அடிப்படைக் கூறுகள். அவையே எமது சொந்த உயிர்ப்பின் ஆதாரம் எனபதை பவுல் எடுத்தியம்புகிறார். கிறிஸ்து தம் மரணத்தின் மேல் கொண்ட வெற்றியை எங்கள் மரணத்தின்மேல் கொள்ளும் வெற்றியினால் நிறைவு செய்யவேண்டும்.

> இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஒரு மனிதர் வழியாகச் சாவு வந்ததுபோல, ஒரு மனிதர் வழியாகவே இறந்தோர் உயிர்த்தெழுகின்றனர். ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்கு உள்ளானதுபோல, கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர் பெறுவர்.

ஒவ்வொருவரும் அவரவர் முறை வரும்போது உயிர் பெறுவர். கிறிஸ்துவே முதலில் உயிர் பெற்றார். அடுத்து, கிறிஸ்துவின் வருகையின்போது, அவரைச் சார்ந்தோர் உயிர பெறுவர். அதன் பின்னர் முடிவு வரும். ஏல்லாப் பகைவரையும் அடிபணிய வைக்கும் வரை அவர் ஆட்சி செய்தாக வேண்டும். (1கொரி.15:20-23)

பவுல் அவர்களுக்கு எதிராக கிறிஸ்து உடலுடன் உயிர்த்தது பல தெளிவான சாட்சியங்களால் எண்பிக்கப்பட்ட உறுதியான உண்மை எனக் கூறுகிறார். "நான் பெற்றுக் கொண்டதும்... உங்களிடம் ஒப்படைத்ததும்" (1கொரி.15:3) இவ்வாறு மொழிபெயர்க்கப்படும் கிரேக்க சொற்கள் மிகப் பிரமாணிக்கமாக கையளிக்கப்படுவதைக் குறிக்கும் சிறப்புச் சொற்கள் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இங்கு பவுல் தான் அப்போஸ்தலர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட உண்மையையே தன்னுடைய சபைகளுக்கு தானும் பிரமாணிக்கமாக கையளிப்பதாகக் கூறுகிறார். பவுலின் இந்த விசுவாச அறிக்கையின்படி பாஸ்கா மறைபொருளில் நான்கு நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றன: (1) கிறிஸ்து இறந்தார் (2) அடக்கம் செய்யப்பட்டார் (3) உயிருடன் எழுப்பப்பட்டார் (4) பலருக்குத் தோன்றினார். அவர் அடக்கம் செய்யப்படுவது அவருடைய இறப்பை நிச்சயப் படுத்துவது-போல, அவருடைய தரிசனம் அவருடைய உயிர்ப்பையும் நிச்சயப் படுத்துகின்றது. கிறிஸ்துவின் உடலின் உயிர்ப்பு இப்பொழுது திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவோடு ஒன்றித்திருப்பவர்களுடைய உடலின் உயிர்ப்பையும் நிச்சயப்படுத்துகின்றது என்கிறார். கிறிஸ்து சாத்தானின்மேல், பாவததின்மேல், சாவின்மேல் கொண்ட வெற்றி, இறந்தவர்களின் உயிர்ப்பில் முழுமை அடைகிறது. "ஒரு மனிதர் வழியாக வாவு வந்ததுபோல, ஒரு மனிதர் வழியாகவே இறந்தோர் உயிர்த்தெழுகின்றனர். ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானதுபோல கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர் பெறுவர். கிறிஸ்து முதலில் உயிர் பெற்றார். அடுத்து கிறிஸ்துவின் வருகையின்போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர்" (1கொரி. 15:21-22). இறந்தவர்களின் உயிர்ப்பு திருத்தூதர்களின் படிப்பினையிலிருந்து நாம் பெற்றுக்கொண்ட கிறிஸ்துவின் உயிர்ப்பின்

தவிர்க்கமுடியாத, இயல்பான விளைவாகும். கிறிஸ்துவின் மனிதத்தை ஏற்றுக் கொள்வோமேயானால், கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு மனிதனின் உயிர்ப்பு. எனவே கிறிஸ்தவர்கள் அத்தகைய அனுபவத்தை எதிர்பார்க்கலாம். நம் விசுவாசம், திருமுழுக்கு வழியாக நாம் கிறிஸ்துவோடு, அவர் வாழ்வோடு, அவர் இறப்பு, உயிர்ப்போடு ஒன்றிக்கின்றோம் (1கொரி.1:13) கிறிஸ்து இயேசுவில் நாம் கொள்ளும் விசுவாசத்தின் வெளிப்பாடே திருமுழுக்காகும். கிறிஸ்துவின் பெயரால் அளிக்கப்படும் திருமுழுக்கு திருமுழுக்குப் பெறுபவரை நம் ஆண்டவரின் இறப்போடும், புதைக்கப்படுதலோடும், உயிர்த்தெழுதலோடும் இணைக்கின்றது (உரோ.8:3: கொலோ.2:12). தண்ணீரில் மூழ்குவித்தல் கிறிஸ்துவின் இறப்பையும், புதைக்கப்படுதலையும் குறிக்க, தண்ணீரிலிருந்து வெளிவருதல் கிறிஸ்துவோடு இணைந்து உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாய் இருக்கிறது. பாவத்திற்கு சாவதும், வாழ்வைக் கொடையாய் பெறுவதும் இணைபிரியாதவை. கிறிஸ்து தம் இரண்டாம் வருகையின்போது செய்யப்போகும் முதல் வேலை தம்மீது நம்பிக்கை கொண்டு இறந்தவர்களை உயிர்ப்பித்தல் என்பது பவுலின் கருத்து.

**உடலின் உயிர்ப்பு**

கொரிந்தியர்கள் சிலர் உடலின் உயிர்ப்பை மறுத்தனர், அடக்கம் செய்யப்பட்ட உடல் சிதைந்து, உக்கி, உருக்குலைந்து, மறைந்து விடுகின்றது. அது எப்படி மீண்டும் உயிர் பெற முடியும். கிரேக்க தத்துவ ஞானிகளின் அழியா ஆன்மாவையே அவர்கள் ஏற்றனர். உடலின் உயிர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் உடலானது ஆன்மாவின் செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்கிறது. எனவே இறந்தவர்கள் எப்படி உயிர்த்தெழுவர்? உயிர்த்த உடல் எப்படி இருக்குமெ? எனக் கேள்விகள் எழுப்பினர். இறந்தவர்கள் எத்தகைய உடலுடன் உயிர்த்தெழுவரென்ற கேள்விக்குப் பவுல் அவர்கள் முற்றுமுழுவதும் உருமாற்றம், மாற்றுரு பெற்ற உடலுடன உயிர்த்தெழுவர். அங்கு உடலின் இறப்பும், தொடர்ச்சியும், உருமாற்றமும் இருக்கும் எனக் கூறி, அதை விளக்குவதற்கு விதைகள், மிருகங்கள், விண்மீன்கள் போன்ற உதாரணங்களைப் பயன்படுத்தி, உயிர்த்தெழும் உடலின் இயல்பை விளக்குகிறார். மண்ணில் புதைக்கப்படும் விதை, அங்கு மடிந்து, பின்னர் புதிய உருவிலான கன்றாகத் துளிர் விடும்.

விதையைப்பற்றி நன்கு அறிந்திருந்தால் தவிர, அது எந்த உருவத்தை எடுக்குமெனத் தெரியாது. அதேபோன்றுதான் உயிர்த்த உடலும் இருக்கும். உயிர்த்த உடல் ஆவிக்குரிய இயல்பைக் கொண்டது. இங்கு மடிதல், வேற்றுமை, தொடர்ச்சி என்ற மூன்று அம்சங்களும் இடம்பெறுகின்றன. உதாரணமாக, மா விதையை விதைத்தால், அது நிலத்தில் விழுந்து, உக்கி, மடிந்து, மாற்றுருவுடன் முளைக்கின்றது. கடவுள் தம் விருப்பப்படி ஒவ்வொரு விதைக்கும் அதற்குரிய உருவைக் கொடுக்கின்றார். அதே விதை, ஆனால் மாற்றுரு. அடக்கம் செய்யப்பட்ட உடலும், உயிர்த்தெழும் உடலும், விதைக்கப்படும் விதையும், முளைக்கும் பயரும்போல உருவில் வேறுபடுகின்றன. அங்கு தொடர்ச்சியும், உருமாற்றமும் காணப்படுகின்றன.

அதேபோல் கடவுள் மானிடருக்கும், விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், மீன்களுக்கும் வெவ்வேறான ஊனைக் கொடுக்கிறார். கதிரவனுக்கும், நிலவிற்கும், விண்மீன்கள் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு சுடரைக் கொடுக்கிறார். ஆனால் முதல் உருவுக்கும், இரண்டாவது உருவுக்கும் தொடர்ச்சி இருக்கிறது. முதல் இயல்பு மா விதை. இரண்டாவது இயல்பு மா மரம். அதேபோன்று பவுல் இறந்த உடலுக்கும், உயிர்த்த உடலுக்குமிடையே நான்கு எதிர் மறையான பண்புகளையும், நான்கு உடன்பாடான பண்புகளையும் தந்து விளக்குகின்றார்.

| **இறக்கும் உடல்** | **உயிர்க்கும் உடல்** |
|---|---|
| அழிவுக்குரியது | அழியாதது |
| மதிப்பற்றது | மாண்புக்குரியது |
| வலுவற்றது | வல்லமையுள்ளது |
| மனித இயல்பு கொண்டது | ஆவிக்குரிய இயல்பு கொண்டது |

இதனை மேலும் விளக்க பவுல் முதல் ஆதாமையும், கடைசி ஆதாமையும் ஒப்பிடுகின்றார்.

| முதல் ஆதாம் | கடைசி ஆதாம் |
|---|---|
| மண்ணைச் சார்ந்தவர் | விண்ணைச் சார்ந்தவர். |
| உயிருள்ள மனிதர் ஆனார் | உயிர் தரும் ஆவி ஆனார் |
| முதல் மனிதன் வழியாக சாவு வந்தது | கடைசி மனிதன் வழியாக உயிர்ப்பு வந்தது |

கிறிஸ்துவின் உடல் உயிர்ப்பில் மகிமையடைந்து, தூய ஆவியை முழுமையாகக் கொண்டிருந்தது. உயிர்த்த கிறிஸ்தவர்களின் உடல்களையும் ஆவி ஆட்கொள்ளுகிறது. அதன் வழி அவை ஆவிக்குரிய இயல்பை எடுக்கின்றன. சுருங்கக் கூறின் உயிர்ப்பு பற்றிய பவுலின் முக்கிய படிப்பினை: இறந்தவர்களின் உயிர்ப்பின் நம்பிக்கையானது இயேசுவின் உயிர்ப்பினை அடித்தளமாகக் கொண்டது (1கொரி.6:14, 2கொரி.4:14, 13:4, உரோ.6:5-8, 8:11). "இறந்தோரினின்று உயிர்த்தெழுந்தவர்களின் முதற் கனி அவரே" (1கொரி.15:20).

## 6.1.3.3.2. கிறிஸ்துவின் (இரண்டாம்) மறுவருகை

புனித பவுல் கிறிஸ்துவின் மருவருகையைப்பற்றி படிப்பிப்பதை விளங்குவதற்கு, அவர் பிறந்து, வாழ்ந்து. வளர்ந்த யூத மதப் பின்னணியை நாம் அறியவேண்டும். அதை நாம் பழைய ஏற்பாட்டுப் பின்னணியில், அதாவது அங்கு "ஆண்டவரின் நாள்" பற்றி கூறப்பட்டுள்ளதின் பின்னணியில்தான் விளங்கிக் கொள்ளலாம். ஏனெனில் ஒருவர் கொண்டிருக்கும் விசுவாசத்தின் அடிப்படையில்தான் அவர் கூறுவதை நாம் விளங்கவேண்டும். பவுல் ஒரு யூத பரிசேயன். இறுதிக் காலங்களைப் பற்றி யூத மதம் கூறுவதை நன்கு அறிந்து ஏற்றிருந்தவர். யூதர்கள் தாங்களே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், இறைவனுக்குச் சொந்தமான மக்கள் என்பதில் பெருமை கொண்டவர்கள். எனவே தாங்கள்தான் அதைத்துலகையும் ஆளவேண்டியவ்கள், உலக வல்லமையை தங்கள் கரத்தில் கொண்டிருக்க வேண்டியவ்கள் எனக்கருதினர். ஆனால் அவர்களின் தொடர்ச்சியான அடிமைத்தன வாழவு அது தங்கள் சொந்த முயற்சியினால் அடைய முடியாத இலக்கு என்பதை அவர்களுக்கு உணர்த்தியது. அது இறைவனின்

நேரடித் தலையீட்டினால் மட்டுமே இயலும் என்று நம்பி, அத்தகைய தலையீட்டை எதிர்பார்த்திருந்தார்கள். அந்தப் பின்னணியில் யூதர்கள் எல்லாக் காலங்களையும் இரண்டாக வகைப்படுத்துவர். ஒன்று நிகழும் யுகம், மற்றது வரப்போகும் யுகம் இக்காலம், மற்றது எதிர்வரும் காலம். இக்காலம் மிகத் தீயது, கொடியது. திருத்த முடியாத அளவுக்கு கெட்டது. பாவம், சாவு, அழிவுக்கு உட்பட்டது. இக் காலத்தில் மக்களும், படைப்புகளும். உலகமும் தீய சக்தியின், சாத்தானின் ஆட்சியின் கீழ் உள்ளன. இக்காலம் துன்ப துயரங்கள் நிறைந்தது. ஆனால் வரப்போகும் காலம் அதற்கு எதிர்மாறாக, நல்லது. அழிவில்லாதது. ஆண்டவர் சாத்தானையும், தீய சக்திகளையும் தோற்கடித்து, அனைவரையும் விடுவிப்பார். இவ் வரப்போகும் காலத்தில் உலகம் கடவுளின் ஆட்சியின் கீழ் இருக்கும். அது கடவுளின் காலம். எங்கும் சமாதானமும், அமைதியும். மகிழ்ச்சியும் நிலவும் காலம். இரண்டு காலங்களுக்கும் இடையில்தான், அதாவது எதிர்வரும் காலத்தின் விடிவின்போதுதான் “ஆண்டவரின் நாள்” உள்ளது. அது இக்காலத்தின் இறுதிக் கட்டத்தில், அதாவது இறுதிக்காலத்தில், வரப்போகும் காலத்தின் விடிவின்போது இடம்பெறும். அது பொல்லாத நாள், பயங்கரமான நாள். அந்த நாளில்தான் இக்காலம் முற்றுப் பெற்று, வரப்போகும் காலம் உதயமாகும். அந்த நாளில்தான் இறைவன் மெசியாவை அனுப்பி, சாத்தானுடன் இறுதிப் போர் செய்து, அவனைத் தோற்கடித்து, உலகத்தை விடுவிக்கும் நாள். அந்த நாளில் பூமியதிர்ச்சிகளும், பூகம்பங்களும் ஏற்பட்டு, பிரபஞ்சமே அசைக்கப்படும். ஆத்துடன் உதயமாகும் புதிய யுகத்தில் நாம் இறைவனின் ஆட்சியின் கீழ், இறையரசில் அமைதியாக வாழ்வோம். அந் நாளிலேயே இறந்தவர்கள் உயிர்த்தெழுவர். இறந்தவர்களை உயிர்பெறச் செய்வதுதான் வரப்போகும் புதிய யுகத்தின் முதற்கட்ட வேலையாகும்.

இறுதிக் காலத்தைப் பற்றிய யூதர்களின் இத்தகைய விசுவாசத்தோடு வாழ்ந்தவரே புனித பவுல். தமாஸ்கு பாதையில் அவர் உயிர்த்த இயேசுவை எதிர்கொண்ட பொழுது, அவர் வாழ்க்கை-யிலேயே ஒரு பெருந் திருப்பம் ஏற்பட்டது. கிறிஸ்து உயிர்த்தெழுந்து விட்டாரென்றால், வரப்போகும் காலம் ஏற்கனவே வந்துவிட்டது. அப்படியாயின் இந் நிகழ்காலம் முற்றுப் பெற்றுவிட்டது. இறைவனுக்கும் சாத்தானின் தீய சக்திகளுக்குமிடையிலான இறுதிப் போர், இறுதித்

தீர்க்கமான சமர் நடைபெற்றாகிவிட்டது. சாத்தான் தோற்கடிக்கப்பட்டு விட்டான். தீய சக்திகள் அழிக்கப்பட்டு விட்டன. மரணம் தோற்கடிக்கப் பட்டுவிட்டது. அப்படியாயின் அவ் இறுதிப் போர் எங்கு நடைபெற்றது? ஆர் அந்தப் போரை முன்னின்று நடத்தியது? அது கல்வாரியிலேயே இடம்பெற்றிருக்க வேண்டும். ஆகவே இயேசுக் கிறிஸ்துவே இறைவனால் வாக்களிக்கப்பட்ட, இறவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்ட, இஸ்ராயே-லரால் எதிர்பார்க்கப்பட்ட மெசியா, மீட்பர் என முடிவு செய்தார். இக் காலம் முடிந்துவிட்டது. வரப்போகும் காலம் உதயமாகிவிட்டது. எனினும் இன்னும் முழுமையாக வரவில்லை. அது வந்த கொண்டிருக்கிறது. சாத்தான் தோற்கடிக்கப்பட்டு விட்டாலும், அவனுடைய தீய சக்திகள் சில இன்னமும் எங்கும் சிதறுண்டு, ஒழிந்து, மறைந்து செயல்பட்டு வருகின்றன. இப்பொழுது நாம் இக்காலத்துக்கும் வரப்போகும் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் இருக்கிறோம். அதை மெசியாவின் காலம் என்றழைக்கின்றோம். இம் மெசியாவின் காலத்தில், மெசியா சாத்தானிடமிருந்து மீட்டுக் கைப்பற்றிய அரசைப் படிப்படியாக தம் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்து, வரப் போகும் புதிய காலத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார். ஒழிந்திருக்கும் தீய சக்திகளை தேடிக் கண்டுபிடித்து. அழித்து வருகின்றார். அப்பணியில் அவர் தாபித்த திருச்சபை அவருக்கு உதவிக் கொண்டிருக்கிறது. திருச்சபையின் பணி வழியாக எஞ:சியிருக்கும் அனைத்து தீய சக்திகளும் அழிக்கப்-பட்டு, அனைத்துப் படைப்புகளும் இயேசுவின் அட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டபின், விரைவில் இயேசுக் கிறிஸ்து மீண்டும் திரும்பி வருவார். அப்பொழுது முழுமையாக தம் கட்டுப்பாட்டிற்குள் கொணரப்பட்ட அரசை இறைவனிடம், அவருடைய ஆளுகைக்குள் ஒப்படைப்பார். இதுவே "ஆண்டவரின் நாள்" என அழைக்கப்படுகிறது. இறைவனின் ஆட்சியின் கீழ்த்தான் வரப்போகும் புதிய காலம் நிறைவாக. முழுமையாக இடம்பெறும்.

கிறிஸ்தவ மதம் பேணி வளர்க்கப்பட்ட தொடடில் யூத மதமாகும். பவுல் "ஆண்டவரின் நாளை" கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு தொடர்ப்பு படுத்துகிறார். இயேசுக் கிறிஸ்து திரும்பி வந்து, முழு அரசையும் தம் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொணர்வதை நிறைவு செய்து, அதை இறைவனிடம் ஒப்படைக்கும் நாள் "பரூசியா" (Parousia) என்றழைக்கப்படும். புதிய ஏற்பாட்டில் அந் நாள்

"கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாள்" என அழைக்கப்படுகிறது. "கட்டளை பிறக்க. தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க, கடவுளுடைய எக்காளம் முழங்க, ஆண்டவர் வானினின்று இறங்கி வருவார்" (1தெச.4:16). ஆந்த நாள் பயங்கரமான நாள். ஏனெனில் அந்நாளிலேயே அவர் நமக்கு நீதி வழங்க வரும் நாள். எனவே அவ் வேளையில் நாம் சாதகமான தீர்ப்புப் பெறுவதற்கு வழி, நாம் இப்பொழுது இயேசுவில் விசுவாசம் கொண்டு, அதற்கேற்ற வாழ்க்கை வாழவேண்டும். "இவ்வாறு நம் ஆண்டவர் இயேசு தம்முடைய தூயோர் அனைவருடனும் வரும்பொழுது, நம் தந்தையாம் கடவுள் முன் நீங்கள் குற்றமின்றித் தூய்மையாக இருக்குமாறு..." (1தெச.3:13). அந்த நாள் ஆண்டவர் முழு மனுக்குலத்துக்கும் தீர்ப்பு வழங்க வரும் நாள். அந் நாள் திடீரென, திருடனைப் போல், எவரும் எதிர்பாராத வேளையில் வரும். எனவே மக்கள் இந்த நாள் எப்பொழுது வருமென அறிய ஆவலாயிருந்தனர். அந்த நாள் தாம் ஆயத்தமில்லாமல், பாவ நிலையில் இருக்கும் வேளை வந்துவிடுமோவெனப் பயந்து ஏங்கினர். இயேசுவே அந்த நாள் எப்பொழுது வருமென எந்தவொரு மனிதனும் அறியான், தனக்கும் தெரியாது. இறைத்தந்தை மட்டுமே அறிவாரெனக் கூறியிருக்கிறார் (மாற்.13:32). ஆனால் அது மக்களின் ஆவலை நிறுத்த-வில்லை. தொடர்ந்தும் மக்கள் அந் நாள் எப்பொழுது வருமோவென ஏங்கிக் கொண்டிருந்தார்கள். இத்தகைய பயத்திலும், ஏக்கத்திலும், எதிர்பார்ப்பிலும் இருந்தவர்களுக்கே புனித பவுல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிப் பேசுகிறார்.

புனித பவுல் தான் எழுதிய அனைத்துத் (கலாத்தியர், எபேசியர் தவிர்ந்த) திருமுகங்களிலும், "ஆண்டவரின் நாள்" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார் (1தெச.5:2 2தெச.2:2 1கொரி.1:8 2கொரி.1:14 பிலி.2:16). ஆரம்ப மடல்களில் அது விரைவாக நடைபெறுமென்றும், தன் வாழ் நாளிலேயே நடைபெறுமென்றும் கூறுகிறார (1தெச.5:23 உரோ.13:11-12 1கொரி.7:29). ஆனால் அது நடைபெறத் தாமதித்த் பொழுது, நான்கு வருடங்களுக்குப் பின்னர் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்-தில், அந்நாளில் உயிர்த்தெழுபவர்களில் தானும் ஒருவராயிருபாரெனக் கூறுகிறார் (1கொரி.6:14) தம் பணியில் முதிர்ச்சியடைந்தபோது, அதன் அண்மைத் தன்மை அருக, அதற்காக எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று அறிவுறுத்துகிறார் (பிலி.3:20-21). புனித பவுல் 1 தெச.

5:1-11 இல் ஆண்டவரின் நாள், கிறிஸ்துவின் மறுவருகையைப்பற்றி இரண்டு விடயங்களைச் சொல்கிறார். முதலாவது ஆண்டவரின் நாளின் வருகை, கிறிஸ்துவின் மறுவருகை திடீரென இடம் பெறும். இரவில் திருடன் வருவதுபோல் யாரும் காத்திராத, எதிர்பாராத வேளையில் வருமென்று சொல்கிறார். எனினும் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன் உலகில் இட்பெறும் சில அடையாளங்களைக் குறிப்பிடுகிறார்: "இறைவனுக்கு எதிரான கிளர்ச்சி முதலில் வந்தே தீரும். பின்னர், நெறிகெட்ட மனிதன் வெளிப்பட வேண்டும். அவன் அழிவுக்குரியவன். கடவுளின் கோவிலில் அமர்ந்துகொண்டு, தன்னைக் கடவுளாய்க் காட்டிக்கொள்பவான். அவன் சாத்தானின் ஆற்றலால் வருவான். அவன் எல்லாவகைப் போலியான வல்ல செயல்களையும், அருஞ்செயல்-களையும் செய்வான். ஆழிந்து போகிறவர்களை முற்றிலும் ஏமாற்றித் தீங்கிழைப்பான்" (2தெச.2:3-12).

இரண்டாவது, மனிதன் எதிர்பாராமல் அந்த நாளில் சிக்கிக் கொள்வதற்கு காரணமே இல்லையென்கிறார். இருளில் வாழ்பவன், தீய செயல்களைச் செய்பவனே, ஆயத்தமில்லாத வேளையில் ஆண்டவர் வந்தால் சிக்கி மாட்டிக்கொள்வான். ஆனால் ஒளியில் வாழும் கிறிஸ்தவனுக்கு, அந் நாள் எப்போது வந்தாலும் ஒன்றுமில்லை. கிறிஸ்தவனின் நிலையை விளக்குவதற்கு புனித பவுல் ஒளி "இருள், பகல்" இரவு என்ற ஒப்புவமையைப் பயன்படுத்தி, பாவிகளின் நிலையை-யும் கிறிஸ்தவர்களின் நிலையையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். கிறிஸ்துவின் மேல் கொண்ட விசுவாசத்தின் வழியாக அவரோடு ஒன்றித்து, பாவத்திறகு மரித்து, புத்துயிரோடு அவருடன் எழுந்திருக்கும் கிறிஸ்தவன், என்றும் அவரிலேயே வாழ்கிறான். "கிறிஸ்துவோடு இணைந்திருப்போருக்கு இனித் தண்டனைத் தீர்ப்பே கிடையாது" (உரோ.8:1). எனினும் இன்னமும் சாத்தானின் தீய சக்திகள் முழுமையாக அழிக்கப்படாமல் இருப்பதனால், தீய சக்திகள் மத்தியில் கிறிஸ்தவன் விழிப்போடும், அறிவுத் தெளிவோடும் வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால், அவன் எந் நேரமும் அந்நாளைச் சந்திக்க ஆயத்தமாயிருப்பான். நடந்தாலென்ன, உறங்கினாலென்ன, அவன் ஏற்கனவே கிறிஸ்துவோடு இருக்கிறான். ஆதலால் அவன் எந்நேரமும் ஆயத்தமாகவே இருக்கிறான். எனவே ஆண்டவரின் நாளுக்கு அவன் அஞ்ச வேண்டியதில்லை என்கிறார்.

ஆண்டவர் வரும் நாள் எப்பொழுது வருமென்று எவருக்கும் தெரியாது, இருந்தும், நாம் வேண்டிய சில அவசர காரியங்களைச் செய்வதற்கு கடைசிநேரம் மட்டும் காத்திருக்கக் கூடாது. ஆகவே பவுல் கிறிஸ்தவன் நேரத்தோடு செய்யவேண்டிய சில காரியங்களைச் சொல்கிறார். பகலைச் சார்ந்த நாம் அறிவுத் தெளிவோடு இருப்போம். விசுவாசம், அன்பு, நம்பிக்கை என்னும் கிறிஸ்தவனுக்குரிய பண்புகளோடு வாழ்வோம் என்கிறார். பவுலின் இந்த அறிவுரை கிறிஸ்தவ திருமுழுக்கின்போது அளிக்கப்படும் அறிவுரைபோல் தோன்றுகிறது. இறைவன் நம்மை தம் கோபத்துக்கு ஆளாக்கவல்ல, மாறாக கிறிஸ்து இயேசு வழியாக நாம் அனைவரும் மீட்பு பெறுவதையே விரும்புகிறார். ஏனெனில் நாம் வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் தம்மோடு வாழவேண்டுமென்றே இயேசு நமக்காக இறந்தார். கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தனுக்குமிடையே உள்ள விசேட உறவே கிறிஸ்தவர்களின் மீட்புக்கு ஆதாரம். எனவே ஒருவருக்கொருவர் ஊக்க மூட்டி, வளர்ச்சியடையச் செய்யுமாறு பவுல் புத்திமதி கூறுகிறார். நாம் எதை மறந்தாலும், ஆண்டவர் அண்மையிலுள்ளார் என்பதை மறக்கக்கூடாது. "மரனாத்தா" (Maranatha) "ஆண்டவர் வந்துவிட்டார்" அல்லது "ஆண்டவரே வாரும்" (1கொரி.16:12).

### 6.1.3.4. குடும்ப வாழ்வு

(1கொரி.7:1-16 எபே. 5:22-30 கலா.3:28)

பவுலின் குட்டித் திருச்சபையென அழைக்கப்படும் கிறிஸ்தவ குடும்ப வாழ்வு பற்றிய படிப்பினைகளை அவருடைய திருமுகங்களில், குறிப்பாக 1 கொரி. 7:1-16, எபே. 5:22-30, கலா. 3:28 இல் படிக்கிறோம். கிறிஸ்தவ குடும்பமே திருச்சபையின் உயிர்நாடி. திருச்சபையானது பல கிறிஸ்தவ குடும்பங்களால் கட்டியெழுப்பப்பட்ட கடவுளின் பெரிய குடும்பமாக இருக்கிறது. எனவே கிறிஸ்தவ குடும்ப வாழ்வுக்கும், திருச்சபையின் வாழ்வுக்குமிடையே நாம் நெருங்கிய உறவை, தொடர்பை எதிர்பார்க்கலாம். புனித பவுல் கிறிஸ்தவ குடும்ப வாழ்வுபற்றிக் கொண்டிருக்கும் கருத்தில் நாம் ஒருவித வளர்ச்சி ஏற்படுவதை அவதானிக்கிறோம்.

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்திலே, கொரிந்தியர் திருமண வாழ்வைப் பற்றிக் கேட்டிருந்த கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கிறார் (1கொரி.7:1-16). கேள்வி வெளிப்படையாகத் தரப்படாவிட்டாலும், பவுலின் விடையிலிருந்து கேட்கப்பட்ட கேள்வியை நாம் ஒருவாறு ஊகிக்கலாம். சில கொரிந்தியரின் கருத்துப்படி, உடல் தீயது. ஆகவே அதை நாம் அடக்கவேண்டும், அழிக்க வேண்டும். முடியாவிடின் அதற்கு இயல்பாகவுள்ள சகல ஆசைகளையும். நாட்டங்களையும், உணர்வுகளையும் நாம் மறுதலிக்க வேண்டும், அடக்கி ஒடுக்க வேண்டும். ஆகவே ஒருவன் முழுமையான கிறிஸ்தனாக வரவிரும்பினால், வாழ விரும்பினால், அவன் உடல் சம்பந்தமான விடயங்களை முழுமையாக விலக்கி, திருமணம் செய்யாமலிருக்க வேண்டுமா? இத்தகைய கேள்வியொன்றுக்கே பவுல் விடை கூறுகிறார்போல் தோன்றுகிறது. மேலும் இப்பகுதியில் புனித பவுல் கூறுவதை நாம் சரியாக விளங்குவதற்கு கொரிந்திய மக்கள் வாழ்ந்த சூழலையும் நன்கு அறிந்திருக்கவேண்டும். அக்காலத்தில் வாணிப நகரமான கொரிந்து பரத்தைமை, விபசாரம், சிற்றின்ப கேளிக்கைகளுக்கு பெயர்போன இடமாக இருந்தது. பாவத்துக்கு ஏதுவான இடங்களும், பாவச் சோதனைகளும் மலிந்திருந்தன. மேலும் பவுல் மெசியாவின் காலம் கெதியில் முடிவுக்கு வருமெனவும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை விரைவில் வருமென்றும் காத்திருந்ததையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். இப் பின்னணியில்தான் பவுல் இங்கு கூறுவதை நாம் விளங்கிக்கொள்ள முடியும்.

பவுலின் பதில் செயல்முறையானதொன்றாகத் தெரிகிறது. தன்னைப் போல் எல்லோரும் திருமணம் செய்யாமலிருப்பதே நல்லதெனக் கூறுகிறார். ஆனால் அதற்கு கடவுளின் விசேட அருட்கொடை வேண்டும். எல்லோருக்கும் அக் கொடை கிடைப்பதில்லை. எனினும் கொரிந்திய சூழலின் நிமித்தமும், மனிதப் பெலவீனத்தின் நிமித்தமும் திருமணம் செய்வது தன்னடக்கமில்லாத சிலருக்கு நல்லது எனக் கூறுகிறார் (1கொரி.7:1,6-7). ஒவ்வொருவரும் தத்தம் நிலையை, நாட்டத்தை, பெலவீனத்தை அறிந்து செயல்பட வேண்டுமென்கிறார். பவுலின் இக் கூற்று காமப் பாவத்திலிருந்து தப்புவதற்காகவே அவர் திருமணத்தை அனுமதிப்பது போலத் தெரிகிறது. பின்பு அவர் மணமாகாதவர்களுக்கும், கைம்பெண்களுக்கும் வழங்கும்

ஆலோசனையிலும் இக் கருத்தே காணக்கிடக்கிறது: "அவர்களும் என்னைப் போலவே இருந்துவிட்டால் நல்லது. எனினும் அவர்கள் தன்னடக்கம் இல்லாதவர்கள் என்றால் திருமணம் செய்து கொள்ளட்டும். ஏனெனில் காமத்தீயில் உருகுவதைவிடத் திருமணம் செய்து கொள்வதே நல்லது" 1கொரி.7:8-9). ஆகவே இங்கு பவுல் திருமணத்தைப் பற்றி ஒரு எதிர்மறையான, குறைந்த மனப்பான்மை உடையவராகக் காணப்படுகிறார்.

தொடர்ந்து பவுல் திருமணத்தின் இயல்பு, கடமைகள், உரிமைகள் பற்றிப் பேசுகிறார். திருமணம் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படும். ஒரு கூட்டு ஒப்பந்தம், உடன்படிக்கை. கணவனாவது, மனைவியாவது ஒரு தலைப் பட்சமாக, தன்னிச்சையாகச் செயல்பட முடியாது. கூட்டு ஆலோசனையின்படி, கூட்டுச் சம்மதத்தின்படியே ஒழுக வேண்டும். கணவனும் மனைவியும் ஒருவரொருவருடனேயே வாழவேண்டும். கணவன் மனைவியை தன் உடல் இச்சைகளைத் திருப்தியாக்கும் கருவியாகவோ, மனைவி கணவனை தன் உடல் இச்சைகளைத் திருப்தி செய்யும் கருவியாகவோ கணிக்கவோ, பயன்படுத்தவோ கூடாது. கணவனின் உடல் மனைவிக்கே சொந்தம். மனைவியின் உடல் கணவனுக்கே சொந்தம். திருமண உறவில் ஒருவர் மற்றவருடைய உரிமைகளை மதித்து நடக்க வேண்டும். ஒருவர் மற்றவருடைய திருமண உரிமையை மறுக்க முடியாது. திருமண உறவிலே, கணவனும் மனைவியும், உடல் ரீதியிலும் சரி, ஆன்மீக ரீதியிலும் சரி, தம் ஆசைகளின் முழு நிறைவை, திருப்தியைக் காணவேண்டும். இறைவேண்டுதலுக்காக, கூட்டுச் சம்மதத்துடன், இருவரும் சில காலத்துக்கு பிரிந்து இருக்கலாம். ஆனால் உணர்ச்சிகளை அடக்க முடியாதபோது, சாத்தானின் சோதனைக்கு ஆளாகாமல், இருவரும் விரைவில் மீண்டும் கூடிவாழவேண்டும்.

திருமணமானவர்களுக்கு புனித பவுல் கொடுக்கும் அறிவுரையில் கணவனும் மனைவியும் பிரிந்து வாழக் கூடாதெனக் கூறி, அது ஆண்டவரின் கட்டளையென்கிறார். அப்படிப் பிரிந்து வாழவேண்டி ஏற்பட்டாலும், மறு திருமணம் செய்யக்கூடாது. ஆனால் விரைவில் இருவரும் ஒப்புரவாகவேண்டும். அடுத்து, விசுவாசிகளுக்கும், விசுவாசிகளல்லாதவருக்கும் இடையே செய்துகொண்ட திருமணத்தைப்

பற்றி பேசுகையில், ஆண்டவர் இது பற்றி ஒன்றும் கூறாதிருந்த படியால், பவுல் தன்னுடைய சொந்தக் கருத்துக்களைக் கூறுகிறார். திருமணம் செய்த விசுவாசிகளும், அவிசுவாசிகளும் கூடிவாழக் கூடாது, மாறாக அவிசுவாசியை திருப்பி அனுப்பிவிட வேண்டுமென்ற கருத்து கொரிந்தில் இருந்தது. அதுமட்டுமல்ல, திருமணமான அவிசுவாச தம்பதிகளில், ஒருவர் விசுவாசம் கொண்டால், விசுவசியாதவரை அனுப்பிவிடவேண்டு-மென்ற கருத்தும் இருந்தது. அதற்கு எதிராகப் புனித பவுல், விசுவாசி-யாயில்லாத கணவனோ, மனைவியோ விசுவாசியான மனைவியோடோ, கணவனோடோ வாழ உடன்பட்டால், ஒருவரையொருவர் விலக்கி விடாமல், இருவரும் கூடிவாழவேண்டும். ஏனெனில் விசுவாசமுள்ளவரின் விசுவாசத்தால் விசுவாசமில்லாதவர் தூயவராகிறாரெனக் கூறுகிறார். ஆனால் விசுவசியாதவர் பிரிந்த வாழ விரும்பினால் அவ்வாறு செய்ய முடியும். அவ்வேளையில், விசுவாசியான கணவனோ, மனைவியோ எவ்வித கட்டுப்பாடுமின்றி, வேறு திருமணம் செய்து கொள்ளலாம். இதைப் "பவுல் அளிக்கும் விதிவிலக்கு" (Pauline Privilege) என்பர். எனினும் அவர்கள் கூடி வாழ்வதையே பவுல் விரும்புகிறார். ஏனெனில் விசுவாசியான தம்பதி விசுவசியாத தம்பதியை மீட்படையச் செய்யலாம் என்பது அவர் கருத்து.

புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலும் திருமணம்பற்றிய இன்னும் சில கருத்துக்களைத் தருகிறார் (எபே.5:22-30). இங்கு திருமணம்பற்றிய பவுலின் உண்மையான முதிர்ச்சியான கருத்துக்களைக் காண்கிறோம். தம்பதிகளிடையிலான உறவு அதி உன்னதமானது, புனிதமானது. பவுல் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள உறவை கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உறவுக்கு ஒப்பிடுகிறார். இவ் உறவுக்கு அடிப்படையாக அன்பு உள்ளது. பவுல் கணவன் மனைவிமேல் கொண்டிருக்க வேண்டிய அன்பைபற்றிய தம் கருத்தைத் தருகிறார். அது ஓர் தியாக அன்பு. கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்ததுபோல், கணவனும் தன் மனைவியை அன்பு செய்ய வேண்டும். அது ஒருபோதும் சுயநலந் தேடும் அன்பாக இருக்கக் கூடாது. திருச்சபை தனக்கு ஏதாவது நன்மை செய்யுமென எதிர்பார்த்து, கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்யவில்லை. மாறாக, தான் திருச்சபைக்கு ஏதாவது நன்மை செய்யலாமென்று கருதியே அதனை அன்பு செய்தார். கிறிஸ்து

திருச்சபைக்குத் தலையாய் இருப்பதுபோல், கணவனும் மனைவிக்கு தலையாயிருக்கிறார். இது அதிகாரம் செலுத்தும் தலைமைத்துவம் அல்ல, ஆனால் அன்பு செய்யும் தலைமைத்துவம். மேலும் திருச்சபை ஆண்டவருக்குப் பணிந்திருப்பது போல் மனைவியரும் தங்கள் கணவருக்குப் பணிந்திருத்தல் வேண்டுமென்கிறார் பவுல். இப் பணிவும் பயத்தினால் அல்ல, மாறாக அது அன்பிலிருந்து உருவாகும் பணிவாக இருக்கவேண்டும். கிறிஸ்து திருச்சபைமேல் கொண்டிருந்த அன்பு, திருச்சபையைத் தூய்மையாக்கி, இறைவனுக்கு சொந்தமாக்கியது. கணவனின் அன்பும் மனைவியைத் தூய்மையாக்கும், அவரை இன்னும் நல்லவராக்கும் அன்பாக இருக்க வேண்டும். கணவனின் அன்பு மனைவியில் கர்சனையுள்ள, அவள் நல்வாழ்வில் அக்கரையுள்ள அன்பாக இருக்கவேண்டும். கணவன் தன் உடலை தான் அன்பு செய்வது போல். தன் மனைவியையும் அன்பு செய்யவேண்டும். இது ஒரு பணிபெறும் அன்பல்ல, மாறாக பணிசெய்யும் அன்பு. கணவன் மனைவிமேல் கொள்ளும் அன்பு ஒருபோதும் முறிக்க முடியாத அன்பு. இவ் அன்புக்காக கண்வன் தன் தாய் தந்தையை விட்டு, தன் மனைவியோடு கூடியிருப்பான். இருவரும் ஒரே உடலாயிருப்பார்கள். ஒரு உடலின் உறுப்புக்கள்போல இருவரும் இணைந்து இருப்பார்கள். கணவன் தன்மீது அன்பு கொள்வது போல, தம் மனைவியின் மீதும் அன்பு செய்ய வேண்டும். மனைவியும் தன் கணவனை மதித்து வாழவேண்டும். இவ்வாறு பவுல் கணவன்-மனைவிக்கிடையே இருக்க-வேண்டிய பரஸ்பர அன்பை, மதிப்பை, உறவை வர்ணிக்கின்றார். கிறிஸ்துவில் வாழும் அவர்களுக்குள் ஆண் - பெண் என்ற வித்தியாசம், வேறுபாடு இருக்கக் கூடாது, அவர்கள் இருவரும் கிறிஸ்துவில் ஒன்றாயிருக்கிறார்கள் (கலா.3:28). இருவரும் இறைவன் சாயலில் படைக்கப்பட்டவர்கள் எனவே இருவரும் இறைவன் முன்னிலையில் சமமாக இருக்கிறார்கள்.

தொடர்ந்து புனித பவுல் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே இருக்கின்ற கடமைகள், பொறுப்புகள் பற்றிப் பேசுகின்றார். பிள்ளைகள் பெற்றோருக்குப் கீழ்படிந்து வாழவேண்டும். பெற்றோர் பிள்ளைகளைக் கண்டித்து, திருத்தி, அறிவு புகட்டி வளர்க்க வேண்டும். "பிள்ளைகளே! உங்கள் பெற்றோ-ருக்குக் கீழ்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது.

'உன் தந்தையையும் தாயையும் மதித்து நட' என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை. 'இதனால் நீ நலம் பெறுவாய். மண்ணுலகில் நீடுழி வாழ்வாய்' என்பதே அவ் வாக்குறுதி. தந்தையரே! உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி வளர்த்து வாருங்கள்" (எபே.6:1-4).

## 6.1.3.5. சகோதரத்துவமும் ஒற்றுமையும்

அனைத்துலக மீட்பராம் கிறிஸ்துவை தங்கள் ஆண்டவராக ஏற்று, அவரது போதனைகளைப் பின்பற்றி, அவரே ஏற்படுத்திய அதிகாரத்திற்கு கீழ்படிந்து வாழ்வோரின் கூட்டமே திருச்சபை. பவுல் தம் தமாஸ்கு பயணத்தின்போது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையிலான மறை பொருளை, ஒப்புமையின் வெளிபாட்டினைக் கண்டு உணர்ந்தார். "சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்...? நீ துன்புறுத்தும் இயேசு நானே". அந்த அனுபவத்தினால் கிளர்ந்தெழுந்த சிந்தனை வளர்ந்து, பின்பு அவர் எழுதிய திருமுகங்கள் எங்கும் பரவலாகக் காணக்கிடக்கிறது. பரிசுத்த ஆவியின் அருளினால் இயேசுக் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொண்டு வாழ்பவர்கள் கிறிஸ்துவுடனும், ஒருவரொருவருடனும் கொண்டுள்ள உடன்பாட்டை, திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவின் மீட்புச் செயலில் பங்குகொண்டு அவரில் வாழ்வோருக்கிடையில் உள்ள சகோதரத்துவத்தை, ஒற்றுமையை, பரிசுத்த ஆவி தம் அருட்கொடைகளால், செயற்பாட்டினால் தெளிவாக்கும் திருச்சபையின் ஒன்றிப்பை அவர் சிந்தித்தார். அக்காலத்தில் வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளில், குறிப்பாக கொரிந்திய சபையில் காணப்பட்ட பிளவுகள், பிரிவுகளைச் சந்தர்ப்பங்களாகப் பயன்படுத்தி, பவுல் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கவேண்டிய சகோதரத்துவம், ஒற்றுமை பற்றிய தம் ஆழ்ந்த கருத்துக்களை நமக்குத் தெளிவாகத் தருகிறார்.

கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்திலே, புனித பவுல் திருச்சபையின் சகோதரத்துவத்தை, ஒற்றுமையை மிகவும் அழகாக உருவகிக்கிறார். நாம் எல்லோரும் ஒரு மனித உடலின் உறுப்புகளுக்குள்ளே காணப்படும் ஒற்றுமையை, அவை

ஒன்றோடொன்று ஒத்துழைப்பதைப் பார்த்து வியந்திருக்கிறோம். புனித பவுல் திருச்சபையை, கிறிஸ்தவ சமூகத்தை அத்தகைய ஒரு உடலாகக் காண்கிறார். "நீங்கள் கிறிஸ்துவின் உடலாக இருக்கிறீர்கள்". இக் கூற்றில் ஆழ்ந்த பல கருத்துக்கள் இருக்கின்றன. கிறிஸ்து இப்பொழுது இவ்வுலகில் உடலோடு இல்லை. ஆகவே அவர் இன்று இவ்வுலகில் ஏதாவது ஒரு வேலையைச் செய்ய விரும்பினால், அதைச் செய்ய அவர் ஒரு மனிதனைத் தேடவேண்டும். ஒரு நோயாளியைக் குணமாக்க விரும்பினால், ஒரு வைத்தியரைத் தேடவேண்டும். ஒரு கதை கூற விரும்பினால் அதைக் கூற ஒரு மனிதனைத் தேடவேண்டும். சுருங்கச் சொல்லின், அவர் ஏதாவதொரு வேலை செய்வதற்கு நாங்களே அவரது வேலை செய்யும் கரங்கள், தேவைக்கு ஓடிப் போக நாங்களே அவரது கால்கள், நற்செய்தியைப் போதிக்க, நாங்களே அவரது வாய். இதுதான் கிறிஸ்தவனின் மாண்பு: அவன் இவ்வுலகில் இயேசுவின் உடலில் ஒரு பகுதியாக, ஒரு உறுப்பாக இருக்கிறான். "யூதரானாலும், கிரேக்கரானாலும், அடிமைகளானாலும், உரிமைக் குடி மக்களானாலும், நாம் எல்லோரும் ஒரே தூய ஆவியினால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்" (1 கொரி.12:13). இதிலிருந்து திருச்சபை முறையாகச் செயல்படுவதற்கு, அதன் அங்கத்தவர்கள் மத்தியில் இருக்கவேண்டிய ஒற்றுமையின் அவசியத்தைப் பவுல் காண்கிறார். ஒரு உடலானது தேகசுகத்துடன் செயலூக்கம் கொண்டதாக இருப்பதற்கு, ஒவ்வொரு உறுப்பும் தத்தம் வேலையைச் நன்றாகச் சரிவரச் செய்ய வேண்டும். உறுப்புகளுக்குள்ளே எரிச்சலோ, பொறாமையோ இல்லை. ஒரு உறுப்புடைய வேலையை இன்னொரு உறுப்பு அபகரிப்பதில்லை. இவ் உருவகத்திலிருந்து பவுல் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையில் இருக்கவேண்டிய சில விடயங்களை எடுத்துக் கூறுகின்றார்.

நாம் செய்யும் வேலை மட்டுமல்ல, திருச்சபையின் ஏனைய உறுப்பினர்கள் செய்யும் வேலையும் எமக்குத் தேவையென்பதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும். திருச்சபை சீராக இயங்குவதற்கு, நான் செய்யும் வேலை மட்டுமல்ல, ஒவ்வொருவர் செய்யும் வேலையும் முக்கியம். திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினரும், மற்ற உறுப்பினர்களை மதிக்கவேண்டும். அவர்கள் மிக இழிவான வேலைகளைச் செய்தாலும், அவையும் எமக்கு முக்கியம் தேவை. ஒரு உறுப்பு

அல்லது ஒரு அங்கம் வேலை செய்யாமல் இருக்குமென்றால், முழு உடலும் பாதிக்கப்படும். அதுபோல் திருச்சபையின் ஒரு உறுப்பினன் தன் வேலையைச் செய்ய மறுத்தால், நாமெல்லோரும் பாதிக்கப்படுவோம். "முழு உடலும் கண்ணாயிருந்தால், கேட்பது எப்படி? முழு உடலும் காதாயிருந்தால் முகர்வது எப்படி?....கண் கையைப் பார்த்து 'நீ என்க்குத் தேவையில்லை' என்றோ, கால்களைப் பார்த்து 'நீங்கள் எனக்குத் தேவையில்லை' என்றோ சொல்ல முடியாது. மாறாக, உடலில் மிக வலுவற்றனவாய் தோன்றும் உறுப்புக்களே மிகவும் தேவையானவை". நாம் ஒவ்வொருவரும் ஏனைய உறுப்பினர்களோடு அனுதாபப்பட வேண்டும். அழுவாரோடு அழவேண்டும். மகிழ்வாரோடு மகிழவேண்டும். உடலின் ஒரு உறுப்பு வேதனைப் பட்டால், அது மற்ற உறுப்புகளையும் பாதிக்கிறது. உதாரணமாக, பல்லில் வலியென்றால், அது ஏனைய உறுப்புகளையும் பாதிக்கிறது. ஆகவே எனது இயக்கம், எனது சபை, எனது குடும்பம் என்று சொல்லி, அதற்கு அப்பால் பார்க்கத் தெரியாதவன் திருச்சபையின் இயல்பை இன்னமும் நன்றாக உணரவில்லை என்பதே அர்த்தம்.

எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் பவுல் கிறிஸ்தவர்கள் ஒற்றுமையாக வாழ வேண்டியதற்கு இன்னொரு காரணம் கொடுக்கிறார் (எபே.4:3-5). முதலில் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையே உள்ள உறவை ஒரு உடலுக்கும் அதன் தலைக்கும் இடையே உள்ள உறவுக்கு ஒப்பிடுகிறார் (எபே.1:22-23). ஒரே உடல்தான் உள்ளது. கிறிஸ்துவே அவ் உடலின் தலை. திருச்சபை கிறிஸ்துவின் உடல். பிளவுபட்டிருக்கும் உறுப்புகளைக் கொண்டு தலை செயலாற்ற முடியாது. மேலும் கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் ஒரே ஆவியானவரே உயிரளிக்கிறார். அவர்கள் எல்லோரும் ஒரே எதிர்நோக்கைக் கொண்டவர்கள், அவர்கள் எல்லோரும் ஒரே நம்பிக்கையுடன்தான் வாழ்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் ஒரே ஆண்டவர். எல்லோரும் ஒரே விசவாசத்திலும், ஒரே திருமுழுக்கிலும் பங்கு கொண்டு, ஒரே கடவுளை தம் ஒரே தந்தையாகக் கொண்டிருக்கிறார்கள். அக் கடவுளே எல்லோருக்குள்ளும் இருந்து, எல்லோர் மூலமாகவும் செயலாற்றுகிறார். எனவே கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒன்றாக ஒரு மனத்துடன் வாழ்ந்து, அந்த சகோதரத்துவத்தை, ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டுமென அறிவுரை கூறுகிறார். இவ்வாறு புனித பவுல் திருச்சபைக்கும் கிறிஸ்து-

வுக்கும் உள்ள உறவையும், கிறிஸ்தவர்களுக்குள்ளே உள்ள உறவையும் வலியுறுத்தி, அதைக் கட்டிக் காக்கும்படி அறிவுரை வழங்குகிறார்.

புனித பவுல் இந்த கிறிஸ்தவ அன்பு. சகோதரத்துவம், ஒற்றுமை பற்றி தம் திருமுகங்களில் பல இடங்களில் எழுதியிருக்கிறார். குறிப்பாக அவர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் எழுதியிருக்கும் அன்பின் உன்னத நிலைபற்றிய கவிதை அழகானது, அர்த்தமுள்ளது, பொருள் செறிந்தது (1கொரி.13). சிலர் புதிய ஏற்பாட்டிலே மிகவும் அழகான பகுதி இதுவேயெனக் கூறுவர். பவுல் அன்பின் மேன்மையை, மாண்பினை எடுத்துக் கூறுவதுடன் ஆரம்பிக்கிறார். மனிதன் ஆவியின் எல்லா அருட்கொடைகளையும் கொண்டிருந்தாலும், அவனிடத்தில் அன்பு இல்லையேல் அவை அனைத்தும் அர்த்தமற்றவை, பயனற்றவை என்கிறார். பன்மொழிப் பேச்சு, பரவசப் பேச்சு, இறைவாக்குரைக்கும் ஆற்றல், ஞானம், அறிவு, நம்பிக்கை, வாரி வழங்கும் பண்பு, பரித்தியாகம் இவையெல்லாம் அன்பின்றி, ஒலிக்கும் வெண்கலமும், ஓசையிடும் தாளமும் போலாகும். அவை ஒன்றுமில்லாமைக்கு ஒப்பாகும் என்கிறார். அன்பில்லாமல் எதற்கும் மதிப்பில்லை. இவையெல்லாவற்றிற்கும் அர்த்தத்தை, பொருளை, பெறுமதியைக் கொடுப்பது அன்பேயாகும். அதுவே நம் கிறிஸ்தவ வாழ்விற்கு அடித்தளமுமாகும்.

கிறிஸ்தவம் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே ஒரு புதிய உறவை அறிமுகம் செய்திருக்கிறது. இப் புதிய உறவில் சாதி, இனம், குலம் போன்ற சகல புற வேற்றுமைகளும் அழிக்கப்படுகின்றன. “யூதரானாலும், கிரேக்கரானாலும், அடிமைகளானாலும், உரிமைக் குடிமக்களானாலும் நாம் எல்லோரும் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்” (1 கொரி.12:13). கிறிஸ்துவில் வாழ்பவருக்குள் இவ் வேற்றுமைகள் கிடையாது. இப் புதிய உறவு சகல சரீர, இரத்த உறவுகளையும், குடும்ப, சமூக உறவுகளையும் தாண்டிச் செல்கிறது. “திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள். இனி உங்களிடையே யூதர் என்றும், கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும், உரிமைக் குடிமகன் என்றும் இல்லை. ஆண் என்றும், பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்” (கலா.3:28-29). இக் கருத்தை நாம் புனித பவுல் பிலமோனுக்கு எழுதிய

திருமுகத்திலும் காண்கிறோம். பவுல் ஒரு அடிமையான ஒனேசிமை, "எனக்குச் சிறையிலிருந்தபோது பிள்ளையான ஒனேசிம்" என அன்புடன் அழைக்கிறார். ஒருவனை கிறிஸ்து இயேசுவிடம் இட்டுச் செல்வது ஒருவனை இவ் உலகில் பெற்றெடுப்பதிலும் பார்க்க மேன்மையானதாகப் பவுல் கருதுகிறார். மேலும் பவுல் ஒனோசிமின் எசமானாகிய பிலமோனை அவன் அடிமையை அவனுடைய அன்புச் சகோதரனாக ஏற்றுக்கொள்ளும்படி கூறுகிறார் (பில.1:16). பிலமோன் பவுலை ஏற்றுக் கொள்வதுபோல், ஒனொசிமையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்கிறார் (பில.1:17). இவையெல்லாம் கிறிஸ்தவ அன்பு சகல சரீர, இரத்த, சமூக உறவுகளையும் கடந்து செல்லும் ஒரு மேன்மையான உன்னத அன்பென்பதை எமக்கு உணர்த்துகின்றன.

## 6.1.3.6. தூய ஆவியின் கொடைகளும் கனிகளும்

(1கொரி.12, 14:1-18)

புனித பவுலின் படிப்பினைகளில் தூய ஆவிபற்றிய கருத்து மிக முக்கியமானதாகும். தூய ஆவி என்பவர் மூவொரு கடவுளின், பரிசுத்த பரம திரித்துவத்தின் மூன்றாம் ஆளாகிய இறைவனாக இருக்கின்றார். "ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!" (2கொரி.13:13). தூய ஆவி வெறும் பெயரற்ற வல்லமை அல்ல, ஆற்றல் சக்தியல்ல, மாறாக ஒரு தெய்வீக ஆள். தூய்மைப் படுத்தும், வழி நடத்தும், சான்று பகரும், அன்பு செய்யும் ஒரு தெய்வ ஆள். தூய ஆவியாரே கடவுளுக்கும் மனிதருக்குமிடையே நட்புறவை ஏற்படுத்துகின்றவர். அவரே எங்கள் மத்தியில் இன்று ஆண்டவரின், கிறிஸ்துவின் பிரசன்னமாக, உடனிருப்பாக இருக்கிறார். எனவே அவர் "ஆண்டவரின் ஆவி", "கிறிஸ்துவின் ஆவி" என அழைக்கப்படுகின்றார். அவர் இறைவனின் கொடை. நற்செய்தியைக் கேட்டு, இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளுகிறவர்களுக்கு இறைவன் அளிக்கும் இலவசக் கொடை. தூய ஆவியாரை எவரும் தம் சொந்த முயற்சியால், தாம் செய்யும் நற்செயல்களினால் அடைய முடியாது. இறைவன் விரும்பி அளிக்கவேண்டும்.

> "உங்களுக்குத் தூய ஆவியை அளித்து, உங்களிடையே வல்ல செயல்களை ஆற்றுபவர் எதை முன்னிட்டு அவ்வாறு செய்கிறார்? நீங்கள் சட்டம் சார்ந்த செயல்களைச் செய்வதாலா? அல்லது நற்செய்தியைக் கேட்டு, நம்பிக்கை கொண்டதாலா? ஆபிரகாமைப் பாருங்கள்! அவர் கடவுள்மீது நம்பிக்கை கொண்டார். அதைக் கடவுள் அவருக்கு நீதியாகக் கருதினார். ஆகவே நம்பிக்கை கொண்டு வாழ்பவர்களே ஆபிரகாமின் மக்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்" (கலா.3:5-7).

புனித பவுல் தூய ஆவியை பேசப்படும், அல்லது போதிக்கப்படும், அல்லது விவாதிக்கப்படும் எண்ணக்கருவாக அல்ல, மாறாக வாழ்விலே கண்டுணரப்படவேண்டிய, உறவு கொள்ளப்படவேண்டிய ஒருவாராகவே காண்கிறார். அவர் தூய ஆவியின் ஆளுமையில் அல்ல, அவரின் செயல்கள், ஆற்றல்களிலேயே அதிக ஆர்வம் காட்டுகிறார். புனித பவுலின் தூய ஆவிபற்றிய சிந்தனைகளின் தொடக்கத்தை யூத மதத்திலேயே காணவேண்டும். யூத மதம் ஆவியை படைப்பிலும், இயற்கையிலும் செயற்படும் கண்களுக்குப் புலப்படாத ஆற்றலான இறைவனின் ஆவியாக, இறைவாக்கினரின் தூண்டுதலின் ஊற்றாகிய ஆவியாகக் கண்டது. புனித பவுல் உரோமையருக்கு எழுதிய கடிதத்தில், தூய ஆவியார் பற்றிப் பேசும் பகுதியில் (8:1-18), இரு சொற்கள் அடிக்கடி வருகின்றன. அதில் ஒன்று "ஊனியல்பு", மற்றது "ஆவி". அவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணான கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பவுல் இவ்விரு சொற்களையும் என்ன கருத்தில் இங்கு பயன்படுத்துகிறாரென்பதை நாம் சரியாக அறியாமல், பரிசுத்த ஆவி பற்றி அவர் கூறுவதை நாம் விளங்கிக்கொள்ள முடியாது. "ஊனியல்பு"க்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல் "சார்க்ஸ்". அச் சொல்லை அவர் சிலவேளைகளில் "உடல்", அல்லது "மனித பார்வையில்" என்ற கருத்துக்களில் பயன்படுத்துகிறார். ஆனால் இங்கு அச் சொல்லை கிறிஸ்தவ வாழ்வுக்கு எதிர்மாறானதாக பயன்படுத்துகிறார். அவர் கிறிஸ்தவர்களைப் பற்றிப் பேசும்போது, அவர்கள் முன்பு ஊனியல்பின்படி வாழ்ந்ததாகக் குறிப்பிடுகிறார். "நாம் நமது ஊனியல்பின்படி வாழ்ந்தபோது, சட்டத்தை ஒரு வாய்ப்பாக்கிக் கொண்டு, பாவ இச்சைகள் நம்முடைய உறுப்பில் செயலாற்றின" (உரோ.7:5).

ஊனியல்புக்கு ஏற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாதென்கிறார் (உரோ.8:8). மேலும் ஊனியல் மனநிலை கடவுளுக்கு எதிரானதென்றும், அத்தகைய மனநிலை கொண்டுள்ளோருக்கு வருவது சாவேயென்கிறார் (உரோ.8:6,8). அவர் கிறிஸ்தவர்களை நோக்கி, அவர்கள் ஊனியல்பைக் கொண்டிருக்கவில்லை என்று சொல்கிறார். ஆகவே அவர் இங்கு ஊனுடல் என்ற சொல்லால் பெலவீனமும் பாவ நாட்டமும், இச்சைகளும் உள்ள மனித இயல்பையே குறிப்பிடுகிறார் என்பது தெளிவாகிறது. அவர் இங்கு கிறிஸ்துவுக்கு வெகு தொலைவில், உலக ஆசாபாசங்களை, சிற்றின்பங்களை நாடிநிற்கும் மனிதனின் பாவ இயல்பையே குறிப்பிடுகிறார். ஆகவே ஊனியல்புக்கேற்ப வாழ்வதென்னும்போது, இறைவனால், இறையன்பினால் நடத்தப்படாமல், பாவ ஆசையாலும், நாட்டத்தாலும் நடத்தப்படுவதைக் காட்டுகிறது.

அடுத்து, "ஆவி"யைக் குறிக்க பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல் "நெயூமா". பழைய ஏற்பாட்டில் இதற்கான எபிரேயச் சொல் "ரூஆக்". இது ஆவியை மட்டுமல்ல, காற்றையும் குறிக்கும். எனவே அசைவு, வீச்சு, சக்தி, வலிமை, ஆற்றல் என்ற கருத்துக்களையும் உள்ளடக்குகிறது. நாம் பெருங் காற்று பெலத்தோடு வீசுவதைப்பற்றிப் பேசுகிறோம். பழைய ஏற்பாட்டில் இச் சொல், மனித சக்திக்கு, ஆற்றலுக்கு அப்பாற்பட்ட, ஒரு தெய்வீக சக்தியை, வலிமையை, ஆற்றலையும் குறித்து நிற்கிறது. இது புது வாழ்வின் ஆற்றல் மிகுந்த அடிப்படைச் சக்தி. இறைவனின் வாழ்வளிக்கும் வல்லமை. புனித பவுல் இப்பகுதியில் முன்பு பாவப் பெலவீனமுள்ள மனித இயல்பின் தயவில் வாழ்ந்த, அதனாலேயே நடாத்தப்பட்ட மனிதனின் பரிதாப நிலையையும், இப்பொழுது ஆற்றலமிக்க இறைவனின் ஆவியால் நிரப்பப்பட்டு, வெற்றியுடன் வாழும் கிறிஸ்தவனின் வாழ்கை நிலையையும், ஒப்பிட்டு, வேறுபடுத்தி, தூய ஆவியின் ஆற்றலை நமக்கு உணர்த்துகிறார். தன் கீழ்படியாமையினால் பாவம் செய்த முதல் மனிதனாகிய ஆதாமுடன் தொடர்புள்ள எல்லா மனிதரும் சாவைத் தேடிக் கொண்டதுபோல், இப்போது தன் நிறைவான கீழ்படிதலினால் இறைச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றிய கிறிஸ்துவோடு தொடர்புகொள்பவர்கள் தங்களுக்கு வாழ்வைத் தேடிக் கொள்கிறார்கள். கிறிஸ்துவின் மீட்புச் செயலினால் இப்பொழுது மனிதர், பாவ நாட்டமுள்ள மனித இயல்பினால் அல்ல, தூய ஆவியினால்

ஆட்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு அப்பாற்பட்ட சக்தியை, ஆற்றலைக் கொண்டிருக்கிறார்கள்.

ஊனியல்பினால் நடாத்தப்பட்ட மனிதனின் வாழ்வின் மையம், குறி, தன்னலமே. உடல் உணர்ச்சி, இச்சை, தற்பெருமை, பேராசை போன்றவற்றிலிருந்து எழும் அவன் ஆசைகளே அவனுக்குச் சட்டம். ஆனால் தூய ஆவியினால் நடாத்தப்படும் மனிதன் இயேசுக் கிறிஸ்துவில் வாழ்கிறான். அவன் கிறிஸ்துவினால் ஆட்கொள்ளப்பட்டவன். கடவுளே அவன் வாழ்வின் மையம், குறி. கிறிஸ்துவின் மனமே அவன் மனம், கிறிஸ்துவின் விருப்பமே அவன் விருப்பம், அதுவே அவன் சட்டம். ஊனியல்பினால் நடாத்தப்படுபவனின் வாழ்வும், ஆவியினால் நடாத்தப்படுபவனின் வாழ்வும் இரு எதிர்த் திசைகளை நோக்கிச் செல்கின்றன. ஊனியல்பினால் நடாத்தப்படுபவன் அதன் ஆசைகளினாலும், செயல்களினாலும் ஆட்சிசெய்யப்பட்டு, கடவுளிடமிருந்து வெகு தூரம் விலகிச் சென்று, தன் சாவின், அழிவின் பாதையில் போய்க்கொண்டிருக்கிறான். அவன் தற்கொலை செய்யும் ஒருவனுக்கு ஒப்பாகிறான். ஆனால் தூய ஆவியினால் நடாத்தப்படுபவன் விண்ணகத்தை, கடவுளை நோக்கிச் முன்னேறிச் சென்று, இந்த உலகிலே இருக்கும் பொழுதே, ஒரு விதத்தில், நித்திய வாழ்வில் நுழைகிறான். சாவு அவனுக்கு வாழ்வின் வாயிலாக மாறுகிறது. ஆவியைக் கொண்டிருப்பவர்கள் கடவுளுக்குச் சொந்தமானவர்கள். தூய ஆவியே அவர்களுக்கு உயிர். அந்த ஆவி, கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்ததுபோல், அவர்களின் சாவுக்குரிய உடலையும் ஒருநாள் உயிர்த்தெழச் செய்யும்.

அதுமட்டுமல்ல, தூய ஆவி எங்களைக் கடவுளின் சுவீகார மக்களாக்குகின்றார் எனப் புனித பவுல் கூறுகிறார் (கலா.4:6 உரோ.8:14). இதனால் புனித பவுல் கூறுவதை நாம் சரியாக விளங்குவதற்கு, உரோமையர் மத்தியில் ஒரு சுவீகாரம் செய்யப்பட்ட மகனின் நிலையை நாம் அறிந்திருக்க வேண்டும். இது ஒரு பாரதூரமான விடயம். சுவீகாரம் செய்வதன் வழியாக, தந்தைக்கு சுவீகார மகனின் மேல் முழு அதிகாரமும், உரிமையும் கிடைக்கின்றன. அவனின் வாழ்வும் சாவும் சுவீகாரத் தந்தையின் கையிலேயே உள்ளன. சுவீகார மகன் தனது பழைய குடும்பத்திலிருந்த சகல உரிமைகளையும் இழக்கிறான். ஆனால்

அதேவேளையில் தான் சேரும் புதிய குடும்பத்தில் சகல சட்டபூர்வமான உரிமைகளையும் பெறுகிறான். தன் புதுத் தந்தையின் சொத்துக்களுக்கு வாரிசு ஆகிறான். சுவீகார மகனுடைய பழைய வாழ்வு, பழைய பாவம், பழைய கடன் எல்லாம் அழிக்கப்பட்டு, பழையன ஒன்றுடனும் எத் தொடர்புமில்லாத, புதுக்கப் பிறப்பவனைப்போல், ஒரு புதிய வாழ்வில் நுழைகிறான். தூய ஆவி கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே ஒரு புதிய உறவை ஏற்படுத்துகிறார். தூய ஆவி ஒருவனைக் கடவுளின் சுவீகாரப் பிள்ளையாக்கும் பொழுது இவற்றையெல்லாம் அவனுக்குச் செய்கிறார். ஒருகாலத்தில் பாவ ஊனியல்பின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் இருந்த எங்களை தூய ஆவி முற்றுமுழுக்க கடவுளுக்குச் சொந்தமானவர்கள் ஆக்குகின்றார். பழைய இயல்புக்கு இனிமேல் எங்கள் மேல் எந்தவித உரிமையும் இல்லை. பரிசுத்த ஆவி எங்கள் பழைய பாவங்கள், பாவக் கடன்கள் அனைத்தையும் அழித்துவிட்டார். அவர் எங்களுக்கு கடவுளோடு இணைந்த ஒரு புதிய வாழ்வை அளிக்கிறார். கடவுளுக்கு உரியவை அனைத்தின்மேல் நாங்களும் கிறிஸ்துவோடு இணைந்து உரிமையாளர் ஆகச் செய்கிறார். எமக்கு கடவுளை உரிமையோடு தந்தையென்று அழைக்கும் பாக்கியத்தையும் தருகின்றார். கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்காளிகள் ஆவதுபோல், அவரது உத்தானத்திலும் பங்காளிகள் ஆகுகின்றோம். சுருங்கக் கூறின், தூய ஆவி பாவியாகிய மனிதனை, அவனுடைய பாவக் கடனையெல்லாம் அழித்து, கடவுள் பிள்ளையாக்கி, அவனைக் கடவுளின் நெருங்கிய பிரசன்னத்தின் மகிமைக்கு உரியவனாக்குகின்றார். இவ்வாறு எமது ஆன்மீக வாழ்வு தூய ஆவியின் செயற்பாட்டினால் கட்டியெழுப்பப்படுகிறது.

புனித பவுல் தம் திருமுகங்களில் தூய ஆவியின் பினவரும் செயற்பாடுகளைக் குறிப்பிடுகின்றார்.

- கடவுளின் கொடைகளை மனிதருக்கு வழங்குபவர் (1கொரி.12:1).
- கடவுளின் அன்பை மனிதரின் இதயங்களில் பொழிபவர் (உரோ.5:8)
- உங்களைக் கடவுளின் சுவிகாரப் பிள்ளைகளாக்குகின்றவர் (கலா.4:6)

- கடவுளின் பிள்ளைகளாக எம்மை வழிநடத்துகின்றவர். (உரோ.8:14)
- தந்தையை அணுகிச் செல்ல உதவுபவர் (எபே.2:18).
- நாம் கடவுளின் பிள்ளைகளெனச் சான்று பகர்பவர் (உரோ.8:16).
- கடவுளை "அப்பா, தந்தையே" என அழைக்கத் தூண்டுபவர் (உரோ.8:15)
- வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்பவர் (உரோ.8:26).
- நமக்காகத தந்தையிடம் பரிந்து பேசுபவர் (உரோ.8:27).
- கடவுளிடம் அன்புகூர்பவர்களோடு ஒத்துழைப்பவர் (உரோ.8:28).
- நம் இதயம் எனும் வீட்டில், கோவிலில வாழ்பவர் (1கொரி.3:16).
- எமக்கு விடுதலை அளிப்பவர் (2கொரி.3:17)
- எம்மைத் தூய்மையாக்குபவர் (2தெச.2:13).
- கனிகளால் எம்மை அலங்கரிப்பவர் (கலா.5:22).
- எம்மை உயிர்த்தெழச் செய்பவர் (1கொரி.15:44).

இவையெல்லாம் தூய ஆவியின் ஆற்றல்கள், செயற்பாடுகள். இவற்றையெல்லாம் ஒரு கிறிஸ்தவன் தன் வாழ்வில் அனுபவிக்கிறான்.

**தூய ஆவியின் கொடைகளும் கனிகளும்**

பரிசுத்த ஆவி யாரென்பதையும், அவர் நமது ஆன்மீக வாழ்வில் ஆற்றும் வியத்தகு செயல்களையும் எடுத்து விளக்கிய புனித பவுல், அதே பரிசுத்த ஆவி நமக்கு அளிக்கும் விசேட அருட் கொடைகளைப் பற்றிப் பேசுகிறார். "அருட்கொடைகள்" என்பது "காரிஸ்மா" என்ற கிரேக்க சொல்லின் தமிழாக்கம். இதற்கு இறைவன் கருணையோடு வழங்கும் "இலவசக் கொடைகள்" என்பது பொருள். இதனை "அருள்" என்ற சொல்லாலும் குறிக்கலாம். இறைவன் நமக்களிக்கும் கொடை-களுள் தலைசிறந்தது பரிசுத்த ஆவியே. அத் தூய ஆவியானவர் நமது உள்ளங்களில் உறைகிறார். தாம் எமக்கு விரும்பி அளிக்கும் அருட்கொடைகளின் வழியாக தம்மையே எமக்கு வெளிப்படுத்துகின்றார். தொடக்க காலத் திருச்சபையில் இக் கொடைகள் நிறைந்து

காணப்பட்டன. அவற்றைப் பயன்படுத்துவதினால் சில பிரச்சினைகளும் எழுந்தன. எனவே புனித பவுல் தம் திருமுகங்களில் இக் கொடைகளின் தன்மை, பண்பு, பயன் பற்றித் தெளிவாகப் பேசுகிறார். அவர் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்தில் இதுபற்றிய சில கருத்துக்களை முன்வைக்கிறார். கொரிந்து நகரிலே வளர்ந்த திருச்சபையில் பரிசுத்த ஆவியின் கொடைகளில் ஒன்றாகிய பரவசப்பேச்சு நிறைந்து காணப்பட்டது. இதனால் வேண்டாத விளைவுகள் சில தோன்றின. இந்தப் பரவசப்பேச்சு, புறமறையினரின் வெறியாட்ட வழிபாட்டை ஒத்திருந்ததால், அது தவறான எண்ணங்களுக்கு வழி வகுத்தது. இச் சிக்கலுக்கு தீர்வுகாணும் முகமாக புனித பவுல் இங்கு பரிசுத்த ஆவியின் அருட்கொடைகள் பற்றித் தெளிவாகப் பேசுகிறார்.

1 கொரி. 12 இல், புனித பவுல் முதலில் பரிசுத்த ஆவியே நாம் "இயேசுவே ஆண்டவர்" என அறிக்கையிடுவதற்கு எமக்கு ஆற்றல் அளிப்பவர் எனக் கூறுகிறார். அதாவது எமக்கு இயேசுவில் விசுவாசத்தை அளிப்பவர் அவரே. இதுவே பரிசுத்த ஆவி நமக்கு அளிக்கும் முதற் கொடை. பரிசுத்த ஆவி அளிக்கும் விசுவாசம் என்னும் கொடையினால் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொள்பவர்களுக்கு, அந்த ஒரே ஆவியானவர் தொடர்ந்து அளிக்கும் ஏனைய பல கொடைகளைக் கூறுமுன், இக் கொடைகளை அவர் அளிப்பதன் நோக்கத்தை பவுல் வலியுறுத்துகிறார். "பொது நன்மைக்காகவே தூய ஆவியானவரின் செயற்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது" (1 கொரி. 12: 7). இக் கொடைகளெல்லாம் எங்கள் சொந்த, தனிப்பட்ட நன்மைகளுக்காக அல்ல, மாறாக பொது நன்மைக்-காக, கிறிஸ்தவ சமுதாயத்தின், திருச்சபையின் நன்மைக்காகவே அளிக்கப்படுகின்றன. பல்வேறு உறுப்புகள் ஒரே உடலின் நலனுக்காகச் செயல்படுகின்றன. அதேபோலப் பல்வேறு அருட்கொடைகள் ஒரே நோக்கில், கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையின் பொதுநல-னுக்காக ஒன்று சேர்ந்து செயல்படுகின்றன. ஆகவேதான் எல்லாருக்கும் எல்லா கொடைகளும் அருளப்படுவதில்லை. கிறிஸ்தவ சமுதாயத்தில் வெவ்வேறு பணியாற்றும் வெவ்வேறு நபருக்கு, வெவ்வேறு கொடைகள் பகிர்ந்து அருளப்படுகின்றன. இவையெல்லாம் கடவுளிடமிருந்து வருவதால் அவையெல்லாம் கடவுளின் பணிக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

புனித பவுல் முதலில் ஞானம் நிறைந்த சொல் வளத்தையும், அறிவுசெறிந்த சொல் வளத்தையும் குறிப்பிடுகிறார். இவை இரண்டும் ஒன்றுபோல் தோன்றினாலும், ஞானம் இறைவனுடன் தொடர்புகொள்வதால் பெறப்படும் அவர்பற்றிய ஆழ்ந்த உண்மைகளை அறியும் ஆற்றலையும், அறிவு அந்த ஞானத்தை நம் அன்றாட வாழ்க்கையில் செயல்முறையில் பயன்படுத்தும் ஆற்றலையும் குறிக்கிறது. அடுத்து பவுல் இந்த ஞானத்தையும், அறிவையும் ஏற்றுக்கொள்ளும் விசுவாசத்தைக் குறிப்பிடுகிறார். முதலில் நாம் இயேசுவைக் கடவுளாக ஏற்றுக் கொள்ளும் விசுவாசம் பற்றிப் பார்த்தோம்.. அதை நாம் "தேவ புண்ணியம்" என அழைக்கிறோம். இங்கு நாம் ஞானத்தையும், அறிவையும் ஏற்றுக்கொள்ளும் விசுவாசத்தைப்பற்றிப் பேசுகிறோம். இங்கு பவுல் உள்ளத்தால் அவற்றை ஏற்றுக் கொள்வதைப் பற்றி மட்டுமல்ல, அவற்றைச் செயற்படுத்தும் ஆற்றலையும், அவற்றின்படி வாழ்வதையும் (பிரமாணிக்கம்) குறிப்பிடுகிறார். அடுத்து பவுல் பரிசுத்த ஆவியின் இன்னொரு கொடையாகிய பிணி தீர்க்கும், நோயாளிகளைக் குணப்படுத்தும் ஆற்றலைக் குறிப்பிடுகிறார். இது ஆதித் திருச்சபையில் பரவலாகக் காணப்பட்ட அருட்கொடைகளில் ஒன்றாகும். இன்று திருச்சபையில் மீண்டும் இக்கொடையைக் காண்கிறோம். பின்பு பவுல் வல்ல செயல் செய்யும் ஆற்றலைக் குறிப்பிடுகிறார். இது பேயோட்டும் ஆற்றலைக் குறிக்கிறது. அக்காலத்தில் எல்லா நோய்களும் அசுத்த அரூபியின் வேலையாகக் கருதப்பட்டன. எனவே அசுத்த அரூபிகளை ஓட்டுவது திருச்சபையின் பணிகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. இன்றும் இப்பணியைக் காண்கிறோம். தொடர்ந்து, பவுல் இறைவாக்கு உரைக்கும் ஆற்றலையும், ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றலையும், பரவசப் பேச்சுப் பேசும் ஆற்றலையும், அதனை விளக்கும் ஆற்றலையும் குறிப்பிடுகிறார். இன்று நாம் பரிசுத்த ஆவியின் கொடைகள்: ஞானம், பத்தி, அறிவு, விமரிசை, திடம் பக்தி, தேவபயமெனக் கூறுகிறோம்.

ஆவியின் அருட்கொடைகளை பவுல் தரம் வாரியாகப் பிரித்து, வரிசைப்படுத்திக் கூறாவிடினும், நாம் அவற்றை அவற்றின் பயன்நோக்கிப் பல வகையாகப் பிரிக்கலாம். சில அருட்கொடைகள் திருப்பணிகளுடன் தொடர்பு உடையவை. இப் பணிகளில் நாம் அப்போஸ்தலத்துவப் பணி, இறைவாக்குரைக்கும் பணி, போதிக்கும் பணி, நற்செய்தி விளக்கப் பணி, மேய்ப்புப் பணி போன்றவற்றைக் குறிப்பிடலாம். மற்றும் சில

அருட்கொடைகள் ஊழியம் புரிதல், போதித்தல், ஊக்க மூட்டுதல், இரக்கச் செயல்கள் போன்ற திருச்சபையின் நலனுக்குத் துணை நிற்கின்றன. ஞானம் செறிந்த பேச்சு, அறிவு செறிந்த பேச்சு, விசுவாசம், நோய்களைக் குணமாக்கும் ஆற்றல், புதுமை செய்யும் ஆற்றல், பல்வகைப் பரவசப் பேச்சு, ஆவிகளைத் தேர்ந்து தெளியும் திறன் போன்ற அருட்கொடைகள் இவ் வகையைச் சாரும். தனிக் கிறிஸ்தவனின் வாழ்வும், திருச்சபையின் பொதுப் பணிகள் அனைத்தும் இந்த ஆவியின் அருட்கொடைகளையே சார்ந்து இருக்கின்றன. புதிய இறைமக்கள்மீது இறைவன் தம் ஆவியானவரை அளவின்றிப் பொழிகின்றார். ஆவியானவர் தம் அருட்கொடைகள் வழியாக அவர்களை ஆண்டு நடத்துகிறார்.

இறுதியாகப் புனித பவுல், பரிசுத்த ஆவியானவரின் கொடைகளுள் அதிசிறந்த கொடையாகிய அன்பு பற்றிப் பேசுகிறார். எல்லாக் கொடைகளுக்கும் அடிப்படையாக இருப்பது அன்பு. அன்பு என்ற கொடையில்லாமல், மற்றக் கொடைகளெல்லாம் வீணிலும் வீண் என்கிறார். இந்த அன்பு என்ற ஆவியின் கொடையின் பதினைந்து குணாதிசயங்களைப் பவுல் குறிப்பிடுகிறார்: பொறுமை, நன்மை செய்தல், பொறாமையின்மை, தற்புகழ்ச்சியின்மை, இறுமாப்பின்மை, இழிவானது செய்யாமை, தன்னலமின்மை, எரிச்சலின்மை, தீங்கு நினையாமை, தீவினையில் மகிழாமை, பொறுமை, விசுவாசம், நம்பிக்கை, மன உறுதி. இவற்றில் சில அன்பின் எதிர்நிலைப் பண்புகளாகவும், சில அன்பின் நேர்நிலைப் பண்புகளாகவும் உள்ளன. மற்றெல்லா அருட்கொடைகளும் அழிந்து போன பின்பும், அன்பு என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும். ஆகவே அனைவரும் அதையே நாடவேண்டும், விரும்பித் தேடவேண்டுமென்கிறார்.

அதேவேளையில் புனித பவுல், ஊனியல்பின் செயல்களுக்கு எதிராக, பரிசுத்த ஆவியின் கனிகளென: அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் போன்றவற்றை குறிப்பிடுகிறார் (கலா.5:22). அன்புக்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல் "அகப்பே". இது எப் பிரதிபலனையும் எதிர்பாராமல், மற்றவர்கள் என்ன தீங்குதான் எமக்குச் செய்தாலும், மற்றவரின் நன்மையையே விரும்பும் பண்பைக் குறிக்கிறது. இது ஒரு

உள்ளத்தின் உணர்வு மட்டுமல்ல, இதயத்தின் உணர்வுமாகும். மகிழ்ச்சியெனக் குறிப்பிடப்படுவது இவ்வுலக பொருட்களால், அல்லது வெற்றியால் ஏற்படும் மகிழ்ச்சியல்ல, மாறாக மத சம்பந்தமான, கடவுளிடமிருந்து வரும் ஒரு மகிழ்ச்சியாகும். அமைதியென்பது பிரச்சினைகள் இல்லாததால் கிடைக்கும் அமைதி அல்ல, நாம் கடவுள் பராமரிப்பில் வாழ்கிறோம் என்ற சிந்தனையிலிருந்து கிடைக்கும் அமைதியைக் குறிக்கிறது. பொறுமை என்பது எவர் எத்தீமை செய்திடினும், பழிவாங்கும் எண்ணமின்றி, கடவுள் நம்மை மன்னிப்பதுபோல் அவர்களை மன்னித்து, பொறுமையுடன் இருப்பதைக் குறிக்கிறது. பரிவு, நன்னயம் என்பன கிறிஸ்து பாவிகள் மட்டில் காட்டிய இரக்கம், நன்மைத் தனத்தைக் குறிக்கின்றன. நம்பிக்கையென்பது மற்றவர்கள் எம்மீது நம்பிக்கைகொள்ளக் கூடிய முறையில் வாழ்வது அல்லது பிரமாணிக்கமாயிருப்பது. கனிவு என்பது சுய மறுதலிப்பை, மற்றவர்கள்மேல் கர்சனை கொண்டு நடப்பதைக் குறிக்கிறது. இறுதியாக தன்னடக்கம் என்பது தன் உணர்வுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும், மற்றவர்களுக்கு பணியாளர்போல் இருக்கும் ஆற்றலைக் குறிக்கிறது.



**தேர்ச்சி மட்டம் 6.2.** திருச்சபைத் தந்தையர்களின் காலத்தில் திருச்சபையின் வளர்சியை ஆராய்வர்.

"பலமுறை, பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்" (எபி.1:1). கிறிஸ்துவே இறைவெளிபாட்டின் முழுமை, நிறைவு. இறைவன், மனிதன், இறைவன் மனிதனுடன் கொண்டுள்ள உறவு, மனித பாவம், இறைவனின் மீட்புத் திட்டம் என்பவைபற்றிய மறையுண்மைகளை இயேசு தம் வாழ்கை, போதனை, செயல்கள், குறிப்பாக தம் பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக எமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். தாம் வெளிப்படுத்திய இவ் வெளிபாட்டு உண்மைகளெல்லாம் உலக முடிவுமட்டும் வாழும் அனைத்துலக மக்களுக்கும் கிடைக்கவேண்டுமென விரும்பிய இயேசு, தம் சீடர்கள் குழுவை (திருச்சபையை), "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். என் தந்தை என்னை அனுப்பினது போல் நானும் உங்களை அனுப்புகிறேன். நீங்கள் போய் எல்லா மக்களினத்-தாரையும் சீடராக்குங்கள்... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களுக்குக் கற்பியுங்கள்" எனக் கூறி ஏற்படுத்தி, அனுப்பிவைத்துச் சென்றார். அன்றுதொட்டு திருச்சபை, அதாவது கிறிஸ்துவின் சீடர்கள் கிறிஸ்துவைப்போல், தம் வாழ்கை. போதனை, செயல்கள், வழிபாடுகள் வழியாக இறைவெளிபாட்டு உண்மைகளை மக்களுக்கு அறிவித்து வந்திருக்கின்றனர். இவ்வாறு திருச்சபை தான் கிறிஸ்துவிடமிருந்து பெற்ற இறைவெளிபாட்டு உண்மைகளை, தம் வாழ்க்கை, போதனை, வழிபாடுகள் வழியாகப் பரம்பரை பரம்பரையாக கையளித்து வரும் மறையுண்மைகளின் தொகுப்பையே நாம் "திருச்சபையின் பாரம்பரியம்" (மரபு) என அழைக்கிறோம். இவ்வாறு தொடர்ந்து வளர்ந்து அனைத்துக் கால மக்களுக்கும் கிடைத்து வரும் திருச்சபையின் பாரம்பரியம் பல வெவ்வெறு காலக்கட்டங்களில் எழுத்து வடிவமும் எடுத்தன.

**1. அப்போஸ்தொலிக்க பிதாக்கள்**

திருச்சபையின் வரலாற்றில் முதலாம் நூற்றாண்டிலே, அதாவது அப்போஸ்தலர் காலத்திலே, அப்போஸ்தலர்களும், நற்செய்தியாளர்-

களும் தாம் கண்டு கேட்ட கிறிஸ்துவின் போதனைகள், செயல்கள், வாழ்கை, பாடுகள், மரணம், உயிர்ப்பு, மேலும் திருச்சபையின் ஆரம்பம், வாழ்வு, போதனை, வழிபாடு, வளர்ச்சி, அமைப்பு பற்றி எழுதி வைத்திருக்கிறார்கள். அந் நூல்களின் தொகுப்பை நாம் "புதிய ஏற்பாடு" என அழைக்கிறோம். அப்போஸ்தலர்களையும், நற்செய்தியாளர்களையும் தொடர்ந்து, முதலாம் நூற்றாண்டின் முடிவிலும், இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் திருச்சபையின் வாழ்க்கை, அதன் அமைப்பு, வழிபாட்டு முறைகள், போதனைகள் பற்றி எழுதிய எழுத்தாளர்களை நாம் "அப்போஸ்தொலிக்க பிதாக்கள்" என அழைக்கிறோம். அவர்கள் அநேகமாக அப்போஸ்தலர்களின் சீடர்களாக அவர்களின் வாரிசுகளாகவே இருந்தார்கள். அவர்களின் எழுத்தாக்கங்கள் அப்போஸ்தலர்களின் படிப்பினைகளை எதிரொலித்தன. இவர்கள் ஆதித் திருச்சபையின் போதனைகள், அப்போதிருந்த அதன் அதிகார அமைப்பு முறைகள், வாழ்க்கை, வழிபாட்டு முறைகள, அருட்சாதனங்கள் அளிக்கப்பட்ட முறைகள் போன்றவைகளை மிகப் பிரமாணிக்கமாய் நமக்குத் தந்திருக்கிறார்கள். எனவே அந்நூல்கள் மிகவும் பெறுமதி உள்ளவையாகக் கணிக்கப்படுகின்றன. அவைகளில் முக்கியமானவை: டிடாக்கே. (பன்னிரு அப்போஸ்தலர்களின் படிப்பினைகள்), ஹேர்மஸ் ஆயன், புனித சாந்தப்பரின் கடிதங்கள், புனித இஞ்ஞாசியாரின் திருமுகங்கள், கும்ரான் (சாக்கடல்) ஏடுகள் என்பனவாகும்.

## 2. சத்தியத்தின் பாதுகாவலர் (அப்போலோஜிஸ்ற்: தர்க்கவியலாளர்)

திருச்சபையின் வரலாற்றிலே, இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகள் திருச்சபை கொடூர கலாபனைகளையும், துன்புறுத்தல்களையும் எதிர்கொண்ட காலம். இக் காலத்திலும் இறைவன் அறிவும், பேச்சுத் திறனும், எழுத்தாற்றலும் நிறைந்த தந்தையர்களை திருச்சபைக்கு அளித்தார். இவர்கள் துன்புறுத்தபட்ட கிறிஸ்தவர்களுடன் ஆளுநர்கள், கலாபனைக்காரர்கள் முன்சென்று, கிறிஸ்தவர்கள் சார்பாக துணிவுடன் வாதாடினர். அவர்கள் சார்பாக காப்புரைத்தனர். பேரரசரும், ஆளுநரும் அல்ல, உரோமையர்களே கிறிஸ்தவர்கள் மேல் கொண்டிருந்த வெறுப்புணர்வால் கிளர்ந்தெழுந்து, கிறிஸ்தவர்களை கொணர்ந்து ஆளுநர்முன் நிறுத்தினார்கள். ஆளுநர்கள் உரோமையரின் முறைப்பாடுகளை அவ்வளவு ஆதரிக்கவில்லை. எனவே அவர்கள்

பேரரசர்களையும், ஆளுநர்களையும் திருச்சபை மட்டிலும், கிறிஸ்தவர்கள் மட்டிலும் பொறுமையும், சகிப்புத் தன்மையும் உடையவர்கள் ஆக்கலாம் என்ற நம்பிக்கையுடன், கிறிஸ்து வேத சுயாதீனத்தை அவர்கள் முன் தெளிவாக எடுத்துக் காட்டினர். கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை சரியென்பதையும், அவர்கள் சுமத்தப்பட்ட குற்றங்கள் பொய்யானவை என்பதையும் நியாயம் காட்டி, விளக்கி, எண்பித்தனர். மேலும் அக்காலத்தில் உரோமைய அஞ்ஞான அறிஞர்கள், கல்விமான்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக, அவர்கள் விசுவசிக்கும் வேத சத்தியங்களை எதிர்த்து துண்டுப் பிரசுரங்களையும், சிறு நூல்களையும் எழுதி வெளியிட்டு. கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பொய்ப் பிரச்சாரம் செய்தனர். தப்பறைகளைப் போதித்தனர். இவர்களுள் சிறப்பாக நாம் செல்சஸ், சமோசற்ற லூசியன் என்பவர்களைக் குறிப்பிடலாம். எனவே அவர்களின் பொய்ப் பிரச்சாரத்துக்கு தக்க பதிலளிக்கும் முறையில், கிறிஸ்தவ எழுத்தாளர்கள் கிறிஸ்தவ விசுவாச சத்தியங்களின் உண்மையைக் காரணங்கள் காட்டி, நியாயப்படுத்தி, நிலைநிறுத்தி, பல நூல்களை எழுதினார்கள். பேதகருக்கு விரோதமாக கிறிஸ்தவ விசுவாச சத்தியங்களின் பரம்பரைப் படிப்பினைகளை சரியாக விளக்கி நிலைநிறுத்தினார்கள். இவர்களின் நூல்கள் பொதுவாக கிறிஸ்தவர்கள் சார்பாக எழுதப்பட்ட காப்புரைகளாகும். இந் நூல்களை பேரரசர்களுக்கே அர்ப்பணம் செய்தனர். இவர்கள் விசுவாச சத்தியங்களை நியாயம் கூறி, ஆதரித்துப் பாதுகாத்தபடியால் அவர்கள் "சத்தியத்தின் பாதுகாவலர்" (அப்போலஜிஸ்ற்) என அழைக்கப்பட்டனர். இவர்களுள் நாம் அத்தோனியன் குவாட்றாற்றுஸ், அரிஸ்ரீடஸ், யுஸ்தின், ரற்சியன், இரனேயுஸ், அலெக்சாந்திரிய சாந்தப்பர், தேத்தூலியன், ஒரிஜென் என்பவர்களைக் குறிப்பிடலாம்.

### 3. திருச்சபையின் தந்தையர் (வேதபாரகர்: மறைபோதகர்கள்)

திருச்சபையின் கலாபனைக் காலம் 313ம் ஆண்டு பேரரசர் கொன்ஸ்தாந்தின், சிற்றரசன் லிசினியசுடைய ஆலோசனையுடன், "மிலான் அரச சாசன"த்தைப் பிரகடனம் செய்ததை அடுத்து முடிவுக்குக் கொணரப்பட்டது. அன்றிலிருந்து திருச்சபையின் வரலாற்றில் ஒரு புது யுகம் ஆரம்பமானது. இதை நாம் திருச்சபையின் சுதந்திரக் காலம் அல்லது சுதந்திர யுகம் என அழைக்கிறோம். கலாபனைக்

காலத்திலே (முதல் மூன்று நூற்றாண்டுகளில்) திருச்சபைக்கு, அதற்கு வெளியே, புறம்பே வாழ்ந்த யூதர்கள், உரோமையர், அஞ்ஞானிகளிடமிருந்து துன்புறுத்தல்கள், இக்கட்டு, இடைஞ்சல்கள் வந்தன. ஆனால் சுதந்திர யுகத்தில் (நான்காம், ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில்), அவர்களைவிட மிகக் கொடிய பகைவர்கள் திருச்சபைக்கு உள்ளிருந்தே எழுந்தனர். அவர்களால் திருச்சபை மிகவும் துன்புறுத்தல்களுக்கு ஆளானது. அவர்கள்தான் தப்பறைகளைப் போதித்த பேதகரும், அவர்கள் போதித்த வேதபேதகங்களும், பதிதங்களும் ஆகும். ஆனால் இறைவன் இக்கால கட்டத்திலும் தம் திருச்சபையைக் கைவிட்டுவிடவில்லை. அவர் இறை அறிவிலும், புண்ணியத்திலும், பரிசுத்ததனத்திலும் சிறந்து விளங்கிய போதகர்களையும், எழுத்தாளர்களையும் திருச்சபைக்கு அளித்து உதவினார். இவர்கள் கிறிஸ்தவ மறை உண்மைகளை தெளிவாகத் துணிவுடன் எடுத்துப் போதித்து, பேதகங்களுக்கு எதிராகப் பல நூல்களை கிரேக்க, இலத்தீன் மொழிகளில் எழுதி, பேதகர்களை மனந்திருப்பி, திருச்பையில் சேர்த்தார்கள். இதனிமித்தம் இவர்கள் “வேதபாரகர்” என அழைக்கப் பட்டனர். இவர்களையே இன்று குறிப்பாக “திருச்சபையின் தந்தையர்” என அழைக்கிறோம். இவர்கள் வாழ்ந்த காலமாகிய நான்காம், ஐந்தாம்:, ஆறாம், ஏழாம் நூற்றாண்டுக் காலத்தையே திருச்சபையின் தந்தையரின் காலமென அழைப்பர்.

## 6.2.1. திருச்சபையில் தோன்றிய முக்கிய பேதகங்களும், அவற்றிற்கு எதிராகக் கூடப்பட்ட திருச்சபையின் பொதுச் சங்கங்களும்

திருச்சபை கிறிஸ்தவ மக்களைக் கொண்ட ஒரு சமுதாயம். பல மக்கள் ஒன்று கூடி வாழும் சமுதாயத்திலே பலதரப்பட்ட பிரச்சினைகளும், கருத்து வேறுபாடுகளும் ஏற்படுவது சகஜம். அத்தகைய சந்தர்ப்பங்களில் மக்கள் ஒன்றுகூடி கூட்டு ஆலோசனைசெய்து, சில முடிவுகள், தீர்மானங்கள் எடுக்கவேண்டிய தேவைகளும் எழுவது இயல்பே. திருச்சபை அதற்கு விதிவிலக்கல்ல. திருச்சபையின் வரலாற்றிலே பல பிரச்சினைகளும், விசுவாச சத்தியங்களைப்பற்றிய கருத்து வேறுபாடுகளும், சட்டம், ஒழுங்கு பற்றிய சிக்கல்களும் எழுந்தி-

ருக்கின்றன. அதைத் தீர்ப்பதற்காக மாகாண சங்கங்கள், பிராந்திய சங்கங்கள், பொதுச் சங்கங்களென பல தரப்பட்ட சங்கங்கள், ஆயரவைகள் (Synod) கூடியதைக் காண்கிறோம். இவற்றில் முக்கிமானவை அனைத்துலக அதிகாரம் கொண்ட திருச்சபையின் பொதுச் சங்கங்கள் ஆகும். அனைத்துலக திருச்சபையின் கர்தினால்மார்களும், ஆயர்களும், இறையியலாளர்களும், துறவறசபைகளின் தலைவர்களும், திருச்சபையின் பிரதிநிதிகளும் மத வாழ்கை, கொள்கை, கோட்பாடு, சட்டம், ஒழுங்கு, ஓழுக்கம் சம்பந்தமான சில முக்கிய விடயங்களை ஆராய, அவைபற்றி கலந்து-ரையாட, அவைபற்றி தீர்க்கமான முடிவுகளை எடுக்க, சட்ட ஒழுங்கு-களை ஏற்படுத்த, தப்பறையான கொள்கைகளிலுள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டி, அவற்றைக் கண்டனம் செய்ய அனைத்துலக திருச்-சபையின் தலைவராகிய திருத்தந்தையின் தலைமையில் உத்தியோ-கபூர்வமாக ஒன்றுகூடுவதையே நாம் திருச்சபையின் பொதுச் சங்கமென அழைக்கிறோம். கிறிஸ்தவ உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் ஆயர்களும், பிரதிநிதிகளும், திருத்தந்தையின் தலைமையில் பொதுச்சங்கத்தில் ஒன்றுகூடுகின்றதினால். பொதுச்சங்கத்தின் தீர்மானங்கள் அனைத்துலகிற்கும் செல்லுபடியானவை. திருச்சபையின் பொதுச் சங்கங்கள் திருச்சபையின் தலைவராகிய திருத்தந்தையினால் கூடப்படவேண்டும். அவர் அல்லது அவரின் பிரதிநிதியே அதற்குத் தலைமை தாங்குவார். அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் திருத்தந்தையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். திருத்தநதையின் அனுமதியின்றி கூடப்படும் சங்கங்களும், அவரால் அங்கீகரிக்கப்படாத அவற்றில் எடுக்கப்படும் தீர்மானங்களும் சட்டபூர்வமற்றவையாக, செல்லுபடியற்றவையாகக் கருதப்பட்டன. எனினும் திருச்சபையின் ஆரம்ப காலங்களில், அக்கால அரசியல் சூழ்நிலைகளின் நிமித்தம், பொதுச்சங்கங்களில் உரோமைப் பேரரசர் கூடிய ஈடுபாடு கொள்வதை நாம் காண்கிறோம். உதா. பேரரசர் கொன்ஸ்தாந்தின் நிசேயா சங்கத்தைக் கூட்டுவதைக் காண்கிறோம். நலிந்து போயிருந்த பேரரசின் ஒற்றுமையைப் பாதுகாத்தல், பேரரசர் என்ற முறையில் திருச்சபையைப் பாதுகாப்பது தங்கள் பொறுப்பு என்பதை உலகிற்குக் காட்டுதல் போன்ற தங்கள் அரசியல் இலாபம் கருதி அவர்கள் அவ்வாறு செயற்பட்டிருக்கலாம். எனினும் பாப்புவின் அங்கீகாரத்துடனேயே அவை

இடம்பெற்றன. அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அவரால் அங்கீகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதித் திருச்சபையில் யூதப் பழமைவாதிகளுக்கும் புறவினக் கிறிஸ்தவர்களுக்குமிடையே விருத்தசேதனம், மோசேயின் சட்டங்கள்பற்றிப் பிரச்சினை ஏற்பட்டபோது, அப்போஸ்தலர்களும், மூப்பர்களும், பேதுருவின் தலைமையில் எருசலேமில் ஒன்றுகூடி, அதுபற்றிய தீர்க்கமான முடிவுகள் எடுத்ததை நாம் காண்கிறோம் (தி.தூ.ப.15:6). அவ் எருசலேம் பொதுச் சங்கமே திருச்சபையின் முதல் பொதுச் சங்கமெனக் கருதப்படுகிறது. இப் பொதுச்சங்கங்கள் பொதுவாக அது நடைபெற்ற இடங்களின் பெயராலேயே அழைக்கப்படுகின்றன. உதா. எருசலேம் சங்கம், நிசேயா சங்கம், கல்செடோன் சங்கம். முதல் ஐந்து நூற்றாண்டுகளில் நடைபெற்ற பொதுச்சங்கங்கள் அனைத்தும் பொதுவாக கீழைத்தேய நாடுகளிலேயே (நிசேயா, கொன்ஸ்தாந்திநோபிள், எபேசு, கல்செடோன்) நடைபெற்றன. ஏனெனில் ஆரம்ப காலங்களில் திருச்சபையானது கூடுதலாக கீழைத்தேய நாடுகளிலேயே பரவியிருந்தது. அதுமட்டுமல்ல. அக்காலத்தில் கொன்ஸ்தாந்திநோப்பிளே பேரரசின் புதிய தலைநகரமாக இருந்தது. இன்றுவரை அதுபோன்று 21 திருச்சபையின் பொதுச் சங்கங்கள் நடைபெற்றுள்ளன. 1965ம் ஆண்டில் முடிவுற்ற 2ம் வத்திக்கான சங்கம் இறுதியாக நடைபெற்ற திருச்சபையின் பொதுச்சங்கமாகும்.

மூன்றாம் நூற்றாண்டின் முடிவில் கீழைத்தேய கிறிஸ்தவ உலகில். அலெக்சாந்திரிய இறையியல் கல்லூரி, அந்தியோக்கிய இறையியல் கல்லூரியென இரு முக்கிய கிறிஸ்தவ இறையியல் கல்லூரிகள் இருந்தன. அலெக்சாந்திரிய இறையியலாளர்கள் உயர்ந்த இலட்சியங்களைக் கடைப்பிடிப்பவர்கள். அந்தியோக்கிய இறையியலாளர்கள் செய்து முடிக்கக்கூடியவற்றையே கூறுபவர்கள். வேதாகமத்துக்கு விளக்கம் கூறுவதில் அலெக்சாந்திரியர் உருவக விளக்க முறையைப் (allegorical) பின்பற்றினர். அந்தியோக்கியர் சொல்லுக்குச் சொல் விளக்கம் கூறும் முறையைப் (literal) பின்பற்றினர். இறையியலில் அலெக்சாந்திரியர் இறையியல்பு, திரித்துவத்தின் ஒருமைப்பாடு என்பனவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தனர். அந்தி-யோக்கியர் திரித்துவத்தின் மூன்று ஆட்கள், கிறிஸ்துவில் மனித.

தெய்வ இயல்புகள என்பனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இறையியலின் அணுகுமுறையில் அவர்களுக்குள் இருந்த தவறற்ற கருத்து வேறுபாடுகள், காலப்போக்கில் தீவிரமடைந்து, போட்டி பூசலுக்கும், இறுதியில் பேதகங்கள், தப்பறைகளுக்கும் இட்டுச் சென்றன. பேதகம் (பதிதம்) என்பது தப்பறையான போதகமாகும். வேதநூலிலும், திருச்சபையின் பாரம்பரியத்திலும் வெளிப்படுத்தப் பட்டிருப்பதாக திருச்பை போதிக்கும் இறைவெளிபாட்டு உண்மைகளை ஏற்க மறுப்பது பேதகமாகும். திருச்சபையின் மரபுமுறைப் போதனைகளுக்கும், கிறிஸ்தவ சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கமுறைகளுக்கும் ஒவ்வாத, முரணான படிப்பினைகளையும், ஒழுக்கங்களையுமே நாம் பேதகமென அழைக்கிறோம். திருச்சபையின் ஆரம்பத்திலிருந்து கிறிஸ்தவ விசுவாசத்தில் சிறிய சிறிய பேதகங்களும், தப்பறையான போதகங்களும் காணப்பட்டாலும், நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் பல முக்கிய பேதகங்கள் தோன்றி, கிறிஸ்தவர்களின் விசுவாச வாழ்வைச் சீர்குலைத்தன. அவற்றிற்கு தீர்வு காணும் நோக்குடனேயே, அதாவது திருச்சபையின் சரியான படிப்பினைகளை விளக்கிக் கற்பிக்கவும், தப்பறைகளை மறுத்துக் கண்டனம் செய்யவும் திருச்சபையின் முதல் நான்கு பொதுச்சங்கங்களும் கூடப்பட்டன.

### 6.2.1.1. முக்கிய பேதகங்கள்

திருச்சபையின் பாரம்பரிய போதனையிலே பரம திரித்துவம் (மூவொரு கடவுள்: ஒரு கடவுள் மூன்று ஆட்கள்), பரம திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனின் மனித அவதாரம், கிறிஸ்து மெய்யான இறைவனும் மெய்யான மனிதனுமாயிருக்கிறாரென்ற மறையுண்மைகள் முக்கியமாகக் கருதப்பட்டன. நான்காம் நூற்றாண்டில் இம் மறையுண்மைகளுக்கு எதிரான தப்பறைப் பேதகங்கள் எழுந்தன. இப் பேதகங்களை இறையியல் பேதகங்கள் (ஆரிய பேதகம், மசடோனிய பேதகம், பெலாஜிய பேதகம்), கிறிஸ்துயியல் பேதகங்கள் (நெஸ்தோரிய பேதகம், இயுக்திக்கேய பேதகம், மோனோதெலைத்த பேதகம்) என இரு வகைப் படுத்துவர். ஆரிய பேதகத்தின்படி கிறிஸ்து கடவுளல்லர். மசடோனிய பேதகத்தின்படி பரிசுத்த ஆவி கடவுளல்லர். பெலாஜிய பேதகத்தின்படி எம் மீட்புக்கு ஒரு மீட்பரோ, இறை அருளோ

தேவையில்லை. நெஸ்தோரிய பேதகத்தின்படி கிறிஸ்துவில் தெய்வ ஆள், மனித ஆளென இரண்டு ஆட்கள் உண்டு. இயுக்திக்கேய பேதகத்தின்படி கிறிஸ்துவில் தெய்வ இயல்பு மட்டுமே உண்டு. மோனோதெலோ பேதகத்தின்படி கிறிஸ்துவில் தெய்வ சித்தம் மட்டுமே உண்டு. இவற்றில் சிலவற்றை விரிவாக பார்த்து, அவற்றிற்கெதிராக திருச்சபையின் நடவடிக்கைகளையும் ஆராய்வோம்.

## 6.2.1.1.1. ஆரிய பேதகம்

ஆரிய பேதகம் அந்தியோக்கிய இறையியல்-திருவிவிலியக் கல்லூரியிலேயே மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உருவாகியது. அதன் தாபகரான லூசியன் என்னும் குருவே "வார்த்தை கடவுளிலும் கீழானவர். கிறிஸ்து நிறைவான கடவுளுமல்லர். நிறைவான மனிதனுமல்லர். கிறிஸ்து இறைவனின் படைப்பு" என்னும் தப்பறையான கருத்து பரவுவதற்குப் பொறுப்பானவர். அவர் இறப்பதற்கு முன் மனந்திரும்பினாலும், அவரின் தப்பறையான போதகம் எங்கும் பரவியது. இப் பேதகத்தை ஆதரித்தவர்களுள் அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த குருவான ஆரியுஸ், நிக்கோமெடியா ஆயரான எயுசேபியுஸ், கல்செடோனிய மாறிஸ், அந்தியோக்கிய லெயோன்ரியுஸ் என்பவர்கள் முக்கியமானவர்கள். அலெக்சாந்திரியாவில் குருவாகவிருந்த ஆரியுஸ் என்பவரே அதன் முக்கிய போதகராவார். எனவே அப் பேதகம் ஆரிய பேதகமென அழைக்கப்படுகின்றது. வார்த்தை கடவுள் அல்லர். அவர கடவுளிலும் கீழானவரென்ற கொள்கையை ஆதரித்த ஆரியுஸ், அதை நியாயப்படுத்த தத்துவ சாஸ்திரத்தில ஆதாரம் தேடினார். அனைத்தையும் கடந்த, அனைத்திற்கும் அப்பாற்பட்ட, இணையற்ற இறைத்தந்தை படைப்புகள் வழியாயன்றி தன்னை வெளிப்படுத்த முடியாது. ஏனெனில் செனிக்கும் எம்முறையும் அவர் பிரிபடக் கூடியவர், மாறுபடக் கூடியவர், உடல் உள்ளவரெனப் பொருள்படும். எனவே அவர் மட்டும் இறை இயல்பைக் கொண்டுள்ளவர். அவருடைய மகன் இயேசு இறைவனல்லர். நித்தியரல்லர். ஏனெனில் பிதாவினால் படைக்கப்படுமுன் அவர் இருக்கவில்லை. அவர் இறைவனுக்குக் கீழானவர். அவர் ஒரு படைப்பு. மேலும் மகன் உண்மையாகவே மகனென்றால், தந்தை மகனுக்கு முன் இருந்திருக்க வேண்டும். ஆகவே மகன் இல்லாத காலம் இருந்திருக்க வேண்டும். எனவே மகன் நித்தி-

யரல்லர், ஆகவே கடவுளல்லர். தந்தைக்குச் சமமானவரல்லர். கடவுளுக்குக் கீழானவர் (Subordinationism). அவர் படைக்கப்பட்டவர். படைப்புகளில் மூத்தவர். மகன் கடவுளல்லராயின், அவர் யார்? அவர் வார்த்தை, கடவுளிடமிருந்து புறப்பட்ட சக்திகளின் முழுமை. இறைவன் நிறைவுள்ளவராக இருக்கிறபடியால், அவர் சடப் பொருளோடு நேரடித் தொடர்பு கொள்ள முடியாது ஆகவே இறைவன் உப தெய்வமாகிய வார்த்தை வழியாகவே உலகைப் படைத்தார். கிறிஸ்து இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தும் இடைநிலையாளர் மட்டுமே. சுதனும், பரிசுத்த ஆவியும் கடவுளல்லர். ஆனால் மேன்மையான படைப்புக்களே. வார்த்தை மனுவுரு எடுத்தார். ஆனால் அவ் உடலுக்கு ஆன்மா இல்லை. வார்த்தைதான் அவ் உடலுக்கு உயிர் கொடுத்த ஆன்மா. இதுவே ஆரியுசின் போதனையாகும். இப் பேதகம் பின்னர் இயுக்திக்கேய பேதகம், நெஸ்தோரிய பேதகம், பெலாஜிய பேதகம் போன்ற பல தப்பறைகளுக்கு வழிவகுத்தது.

ஆரிய பேதகத்தினர் தங்கள் தப்பறையான போதனையின் உண்மைக் கருத்துக்களை மறைத்து, அழகிய சொற்றொடர்களைப் பயன்படுத்தி, தப்பறையைத் தந்திரமாகப் போதித்துப் பரப்பினர். ஆரியுஸ் சின்ன ஆசியா, கிறீஸிலுள்ள தனது நண்பர்களான ஆயர்களுக்கு தம் பேதகத்தை ஆதரிக்குமாறு கடிதங்கள் எழுதினார். பல கல்விமான்களும், கன்னிகைகளும், பொது மக்களும் அவர்களின் போதனைகளால் ஏமாந்தனர். நிக்கமேடியாவின் ஆயர் எயுசேயியுஸ் அவருக்கு ஆதரவளிக்க முன்வந்தார். எனவே ஆரிய பேதகம் மிகத் துரிதமாகப் பரவியது. அதைக் கண்ட அலெக்சாந்திரிய ஆயர் அலெக்சாந்தர் ஆரியுசை அத் தப்பறைகளைப் போதிக்க வேண்டாமென தடைசெய்தார். ஆனால், அவர் தொடர்ந்தும் பேதகத்தைப் பரப்பவே, 320ம் ஆண்டில் ஆயர் அலெக்சாந்திரியாவில் எகிப்திய, லிபிய ஆயர்கள் 100 பேருடன் ஒரு சங்கத்தைக் கூட்டி, ஆரியுசைக் கண்டித்து, அவரைச் "சபிக்கப்பட்டவர்" (anathematized) என அறித்தார். மேலும் அவரைத் திருச்சபையிலிருந்து விலக்கி, நாடு கடத்தினார். ஆனால் இவ்வளவு காலமும் தன் தப்பறைகளுக்கு எழுத்துவடிவம் கொடுக்காதிருந்த ஆரியுஸ், அவரின் நண்பர் நிக்கமேடியா ஆயர் எயுசேபியுசின் ஆதரவுடன் "தாலியா" என்னும் ஆரிய பேதகம் பற்றிய நூலை எழுதி, தொடர்ந்தும் தம் பிரச்சாரத்தைச் செய்தார். கீழைய நாடுகளெங்கும் குழப்பம்

அதிகரிக்கவே, திருச்சபையின் உத்தியோகபூர்வ பாதுகாவலாரான பேரரசர் கொன்ஸ்தாந்தின் பிரச்சினையில் தலையிடவேண்டி ஏற்பட்டது.

**நிசேயா பொதுச் சங்கம்** (325)

ஆரிய பிரச்சினைக்குத் தீர்வு காண, பேரரசர் கொன்ஸ்தாந்தின் பல முறை முயற்சித்தார். தன் நண்பனும், கோர்டோவா ஆயருமாகிய கோசியுஸ் ஊடாக திருச்சபையின் அமைதியைக் குழப்பவேண்டாமென அலெக்சாந்திரிய ஆயர் அலெக்சாந்தருக்கும், ஆரியுசுக்கும் கடிதம் எழுதினார். ஆனால் அவர்கள் கேட்பதாக இல்லை. எனவே பேரரசர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க, பாப்பு சில்வெஸ்ரர் 1 இன் அங்கீகாரத்துடன் திருச்சபையின் பொதுச் சங்கம் ஒன்றைக் கூட்டினார். பேரரசரின் பாதுகாவலில், கோர்டோவா ஆயர் கோசியசின் தலைமையில், திருத்தந்தையின் பிரதிநிதிகளான வைற்றஸ், வின்சென்ற் என்ற உரோமைய குருக்களின் உதவியுடன். பித்தினியாவிலுள்ள நிசேயாவில், பேரரசரின் கோடை மாளிகையில், 325ம் ஆண்டு வைகாசி மாதம், 20ம் திகதி அப் பொதுச் சங்கம் கூடியது. இச் சங்கம் ஆவணி மாத முடிவு மட்டும் நீடித்தது. திருச்சபையின் இம் முதலாம் பொதுச் சங்கத்தில் 318 ஆயர்கள் பங்கெடுத்தனர்.

நிசேயா பொதுச் சங்கம் பேரரசரின் ஆரம்ப உரையுடன் தொடங்கியது. அவையிலே இரு பிரிவினருக்குப் பதிலாக மூன்று பிரிவினர் காணப்பட்டனர்: முதலில் பாரம்பரிய கொள்கையை ஆதரித்து, ஆரியுசைக் கண்டனம் செய்ய விரும்பிய பெரும்பான்மையினர். இவர்களுக்கு தியாக்கோன் அத்தனாசியுஸ் தலைமை தாங்கினார். அடுத்து பேதகர் ஆரியுசை ஆதரிக்கும் மிகச் சிறுபான்மையினர் 22 பேர். அடுத்து, இருவர்களுக்குமிடையில், ஆரியுசின் விசுவாச உச்சாரணத்திலுள்ள சில செற்றொடர்களை மாற்றியமைத்து, அவரைக் காப்பாற்ற, அவருடன் சமரசம் செய்துகொள்ள விரும்பியவர்கள். இவர்களுக்கு குள்ளத்தனமும். கெட்டித்தனமும் கொண்ட நிக்கமெடியா ஆயர் எயுசேபியுஸ் தலைமை தாங்கினார். அவருக்கு உதவியாக செசாரியாவைச் சேர்ந்த எயுசேபியுஸ் இருந்தார். முதலில் நிக்கமெடியா ஆயர் எயுசேபியுஸ் ஆரியருக்குச் சாதகமான ஒரு விசுவாச அறிக்கையை முன்வைத்தார். அது அவையினரால் நிராகரிக்கப்பட்டது. பின் செசாரியா எயுசேபியுஸ் தன்னுடைய விசவாச அறிக்கையை

முன்வைத்தார். தியாக்கோன் அத்தனாசியார் ஆரிய பேதகத்தை எதிர்த்து, திருச்சபையின் பாரம்பரிய கொள்கைக்காக வாதாடினார். "ஒரே பொருளானவர்" போன்ற சில சொற்றொடர்களின் மாற்றங்களுடன் செசாரியா எயுசேபியுசின் விசுவாச அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இறுதியில் சங்க அவையினர் திருச்சபையின் போதனையைத் தெளிவாக எடுத்துக்கூறி, கிறிஸ்துநாதர் பிதாவுக்குச் சரியொத்தவராக இருக்கிறார், பிதாவோடு ஒரே பொருளாயிருக்கிறார், அவர் மெய்யான கடவுளாயிருக்கிறார் எனப் பிரகடனம் செய்து, ஆரியுசைக் கண்டனம் செய்து, நிசேயா விசுவாச அறிக்கையை எழுதிவைத்தனர். மாமரிக்கா-வைச் சேர்ந்த தியோனாஸ், ரோலோமேயைச் சேர்ந்த செகுன்டஸ் என்ற இரு ஆயர்களைத் தவிர ஏனைய ஆயர்கள் அனைவரும் நிசேயா விசுவாச அறிக்கையையும், ஆரியுசின் கண்டனத்தையும் ஆதரித்தனர். விசுவாச அறிக்கையை ஆதரித்து கைச்சாத்திட மறுத்த அவ் ஆயர்கள் இருவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். பொதுச் சங்கம் தொடர்ந்து வேறு முக்கிய விடயங்களை ஆராய்ந்தது.சங்கத்தில் ஒழுங்குகள், சட்டங்கள் பற்றி எடுக்கப்பட்ட வேறு தீர்மானங்கள்:

1. ஆரியரையும், அவரது முக்கிய சீடர்களையும் திருச்சபையிலிருந்து வெளியேற்றல்.
2. மனம் வருந்திய பகிரங்க பாவிகளை திருச்சபையில் மீண்டும் ஏற்றுக்கொள்ளல்
3. அவர்களை திருச்சபில் சேர்க்கும்போது அவர்களுக்கு மீண்டும் திருமுழுக்கு அளிக்கத் தேவையில்லை.
4. பாஸ்கு விழா பற்றிய உரிய திகதியொன்றை உறுதி செய்தல்.
5. குருக்களுக்கான ஒழுங்கு சட்டங்களை விதித்தல்.
6. வழிபாடுகள், திருப்பலி நடாத்துதல் பற்றி தேவையான சட்டதிட்ட விதிகளை முன்வைத்தல்.
7. உரோமை, அந்தியோக்கியா, அலெக்சாந்திரியா போன்ற மூன்று நகரங்களின் ஆயர்களுக்கு விசேட ஆட்சி அதிகாரங்களை ஒப்படைத்தல்.

8. எருசலேம் ஆயருக்கு விசேட கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

இறுதியில் திருச்சங்கம் ஆவணி மாத முடிவில் நிறைவு எய்தியது. ஆரிய பேதகத்தை முடிவுக்குக் கொணர்வதற்காகவே நிசேயா சங்கம் கூடப்பட்டாலும், அதன் பிரச்சாரம் சங்கத்துக்குப் பின்னரும் தொடர்ந்து நடைபெற்றது. ஆரிய பேதகத்துக்கு எதிராகப் போராடியவர்களுள் தியாக்கோன் அத்தனாசியார், கப்படோசிய பிதாக்களான புனித பசில், புனித கிரகோரி நாசியென்ஸ் என்பவர்கள் முக்கியமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## 6.2.1.1.2. மசதோனிய பேதகம்

ஆரிய பேதகத்தைத் தொடர்ந்து, நான்காம் நூற்றாண்டில் கொன்ஸ்தாந்திநோபிள் பேராயராகவிருந்த மசதோனியுஸ் ஒரு புதுப் பேதகத்தை உண்டு பண்ணினார். தூய ஆவியின் தெய்வீகத்தை மறுப்பதே அப் பேதகம். ஆரிய பேதகத்தின் தொடர்ச்சியே. ஆயர் மசதோனியுஸ் முன்னர் ஆரிய பேதகத்தைப் பின்பற்றிய சிலரை தம் சீடர்களாகத் தேர்ந்து கொண்டார். மகன் கடவுள் அல்லவென்றால், தூய ஆவியும் கடவுளல்லர் என்பது அவரின் வாதம். பரிசுத்த ஆவி மகனால் படைக்கப்பட்டவர். அவர் தந்தையினதும், மகனினதும் பணியாளராகச் செயல்படுகிறார். மசதோனிய பேதகத்துக்கு எதிராகப் புனித பசில், அத்தனாசியார், நிஸ்ஸா கிரகோரியார், அம்புறோசியார் போன்றோர் எதிர்த்துப் போராடினர். முதலில் சில சிறிய மாகாண சங்கங்கள் கூடப்பட்டு, இப் பேதகம் தடைசெய்யப்பட்டது. இறுதியில் இப் பேதகங்களால் திருச்சபையின் ஒருமைப்பாட்டிற்கும், பேரரசின் அமைதிக்கும் தடை ஏற்படுவதை உணர்ந்த பேரரசர் தியோடோசியஸ், திருத்தந்தையின் அனுமதியுடன், கொன்ஸ்தாந்திநோபிளில் 381 இல் ஒரு பொதுச் சங்கத்தைக் கூட்டினார். திருத்தந்தையின் பிரதிநிதியான அந்தியோக்கிய ஆயர் மெலீசியசின் தலைமையில் 180 ஆயர்கள் கூடிய கொன்ஸ்தாந்திநோபிள் சங்கத்தில் மசதோனிய பேதகம் கண்டனம் செய்யப்பட்டது.

**கொன்ஸ்தாந்திநோபிள் சங்கம்** (381)

மசதோனிய பேதகத்தைக் கண்டனம் செய்ய திருச்சபையின் இரண்டாம் பொதுச் சங்கம் கொன்ஸ்தாந்திநோபிளில் 381இல் கூடப்பட்டது. கீழ் நாட்டு ஆயர்கள் அனைவரும் (180 பேர்) கூடி, மசதோனிய பேதகத்தைக் கண்டனம் செய்து, நிசேயா விசுவாச அறிக்கையில் தூய ஆவியின் தெய்வீகத்தைப் பற்றிய வார்த்தைகளைச் சேர்த்தனர். "பிதாவினின்றும், சுதனின்றும் புறப்படும் ஆண்டவரும், உயிர் அளிப்பவருமான தூய ஆவியையும் விசுவசிக்கின்றேன். இவர் பிதாவோடும், சுதனோடும் ஒன்றாக ஆராதனையும், மகிமையும் பெறுகின்றார். தீர்க்கதரிசிகளின் வாயிலாகப் பேசியவர் இவரே". பரிசுத்த ஆவியின் இறைத்தன்மை வலியுறுத்தப்பட்டது. இச் சங்கத்தில் நிசேயா சங்கத்தின் முடிவுகள் மீண்டும் வலியுறுத்தப்பட்டு, ஆரிய பேதகமும், மசதோனிய பேதகமும் கண்டனம் செய்யப்பட்டன. இச் சங்கம் திருச்சபையின் பொதுச் சங்கம் அல்ல. ஏனெனில் அனைத்துலக ஆயர்களும் சமூகளிக்கவில்லை. திருத்தந்தையோ, அவரது பிரதிநிதியோ தலைமை தாங்கவில்லை. எனினும் பின்னர் 6ம் நூற்றாண்டில் இச் சங்கமும், அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் திருத்தந்தையாலும், மேல் நாட்டு ஆயர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, திருச்சபையின் பொதுச் சங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 6.2.1.1.3. பெலாஜிய பேதகம்

இப்பேதகம் பெரிய பிரித்தானியாவில் முனிவராயிருந்த பெலாஜியுஸ் (324-420) என்பவரினால் ஏறக்குறைய 400ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. இது பெலாஜியுஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டபடியால் "பெலாஜிய பேதகம்" என அழைக்கப்படுகின்றது. இது சென்ம பாவம், இறையருள் பற்றியது. அவருடைய கருத்துப்படி, "ஒரு மனிதன் தன் இயல்பான சக்தியினால் நிலை வாழ்வு, மீட்பு அடைய முடியும். ஆதித் தாய் தகப்பன் தமது கீழ்படியாமையினால் தமக்குத் தாமே தீங்கு செய்துகொண்டனரேயன்றி, அப் பாவம் அடுத்தவரில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. ஒவ்வொரு மனிதரும் உலகில் பிறக்கும் பொழுது, நம் ஆதிப் பெற்றோர் பாவத்திற்கு முன்னிருந்த பரிசுத்த நிலையிலேயே பிறக்கின்றனர். எனவே சென்ம பாவம் என்று ஒன்றில்லை. ஆகவே நம்மை எவரும் இரட்சிக்க, மீட்க

வேண்டியதில்லை. சிறு பிள்ளைகள் பாவம் கட்டிக் கொள்ளாத நிலையில் உள்ளதால் திருமுழுக்கின்றி அவர்கள் மோட்சம் அடைவார்கள்". அதாவது, நம் ஆதிப் பெற்றோர் தங்கள் பாவத்தினால் தங்களுக்கு மட்டும் தீங்கிழைத்துக்கொண்டனர். அப் பாவம் மற்றவர்களைப் பாதிக்கவில்லை. எனவே மனித சித்தம் எவ்வித இறை அருளும் இல்லாமல் தானாக நல்லதையோ கெட்டதையோ தேர்வு செய்யக் கூடியது. ஆதாம் கட்டிக்கொண்ட பாவம் அவருடைய சந்ததியினருக்கு அவர் விட்டுச் சென்ற ஒரு துன்மாதிரிகையான செயல் மட்டுமேயன்றி, வேறு எந்த விதமான பாதிப்பையும் அவர்களில் ஏற்படுத்தவில்லை. இயேசு நமக்குச் செய்தது ஒரு முன்மாதிரிகையான வாழ்க்கையை வாழ்ந்து காட்டியது மட்டுமே. மனிதர் செய்யும் பாவங்களுக்கு அவர்களே பொறுப்பு. எனவே சென்ம பாவம் என்று ஒன்றுமில்லை. ஆகவே நம்மை எவரும் மீட்க வேண்டியதில்லை. ஒரு மீட்பர் அவசியமுமில்லை. இறையருளின்றி நாங்கள் நாங்களாகவே நிறைவுள்ளவர்களாக வாழலாம். எங்களை நாங்களே மீட்டுக் கொள்ளலாம் எனபது அவர்களுடைய வாதம்.

பெலாஜியுஸ் பலஸ்தீனா சென்று, எருசலேமில் தன் பேதகத்தைப் போதித்து. பல துறவியர்களை தன் வழியில் திருப்பினார். கிறிஸ்தவ சொற்களான சென்ம பாவம், திருமுழுக்கு, இறையருள், மீட்பு என்பவற்றை முற்று முழுவதும் புதிய கருத்துக்களில் பயன்படுத்தி, மக்களை ஏமாற்றினார். இப் பேதகம் ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும் மிகத் துரிதமாகப் பரவியது. இப் பேதகத்தை எதிர்த்துப் போராடியவர்களுள் கிப்பே நகர ஆயரான புனித அகுஸ்தினார் முக்கியமானவர். அவர் பெலாஜியருக்கு எதிராக சென்ம பாவம், மனிதனின் சுய விருப்பம், இறை அருட் கொடை பற்றிய விளக்கங்களுடன் பல பிரசுரங்களை எழுதினார்.

**கார்த்தேஜ் சங்கம்** (418)

418ம் ஆண்டில் கூடிய கார்தேஜ்-மிலேவி திருச்சங்கம் பெலாஜியுஸ் பேதகத்தைக் கண்டனம் செய்து, பெலாஜியுசையும், அவருடைய கூட்டாளியான சொலோஸ்தியுசையும் திருச்சபையிலிருந்து நீக்கியது. பின்னர் திருத்தந்தை முதலாம் இன்னொசென்ற் திருச்சங்கத்தின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு, அதற்கான பிரகடனத்தைச் செய்தார்.

பேரரசர் ஒனோரியுஸ பெலாஜியுசையும், சொலோஸ்தியுசையும் நாடுகடத்தினார். 431இல் கூடிய எபேசு திருச் சங்கமும் இவர்களைக் கண்டித்தது. ஆறாம் நூற்றாண்டுடன் இப் பேதகம் மறைந்து விட்டது.

### 6.2.1.1.4. நெஸ்தோரிய பேதகம்

நான்காம் நூற்றாண்டில் பரம திரித்தவத்தைப் பற்றி திருச்சபையின் கொள்கையில் ஏற்பட்ட இறையியல் முரண்பாடுகள், ஐந்தாம் நூற்றாண்டில் திருச்சபையின் கிறிஸ்துவியல் பற்றிய கொள்கையிலும் ஏற்பட்டன. திருச்சபையின் பாரம்பரிய கிறிஸ்துவியில் கொள்கையின்படி கிறிஸ்து இயேசு மெய்யான கடவுளும் மெய்யான மனிதனுமாயிருக்கிறார். பரம திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதன் கடவுளே மனித அவதாரம் எடுத்து இயேசுவாக அவதரித்தார். ஆகவே இயேசுக் கிறிஸ்து என்ற தெய்வ ஆளில், தெய்வ சுபாவம், மனித சுபாவமென்ற இரு இயல்புகள் உள்ளன. ஒரே (தெய்வ) ஆளில், தெய்வ சுபாவம், மனித சுபாவம் என்ற இரு இயல்புகளும் மாறாமல் ஒருங்கே உள்ளன. மரியாள் பெற்றெடுத்த இயேசு தெய்வ ஆளாயிருக்கிறபடியால், அவள் உண்மையிலேயே இறைவனின் தாயென்பது திருச்சபையின் போதனையாகும். அலெக்சாந்திரிய இறையியல் கல்லூரி தம் கிறிஸ்துவியலில், இயேசுக் கிறிஸ்துவின் இறை இயல்பை வலியுறுத்தி, அவரை "மனித அவதாரம் எடுத்த கடவுள்" என அழைத்தது. ஆனால் அந்தியோக்கிய இறையியல் கல்லூரி இயேசுக் கிறிஸ்துவின் மனித இயல்பை வலியுறுத்தி, அவரை ஒரு "மனித கடவுள்" என அழைத்தது. கிறிஸ்துவின் இறை இயல்பை வலியுறுத்திய அலெக்சாந்திரிய கல்லூரி, அதைத் துலக்க அவரின் மனித இயல்பை குறைத்துப் போதித்தது. கிறிஸ்துவின் மனித இயல்பை வலியுறுத்திய அந்தியோக்கிய கல்லூரி, அதைத் துலக்க அவரின் தெய்வ இயல்பைக் குறைத்துப் பேசியது. கிறிஸ்துவின் ஆளுமையின் ஒருமைப்பாட்டை வலியுறுத்திய சிலர், படிப்படியாக அவரின் இயல்பிலும் ஒருமைப்பாட்டை வலியுறுத்தத் தொடங்கினர். இறைவார்த்தையே மனித உடலால் போர்த்தப்பட்டிருக்கிறது என்றனர். அதற்கு எதிராக, கிறிஸ்துவின் இரு இயல்புகளின் முழுமையை வலியுறுத்திய சிலர், படிப்படியாக கிறிஸ்துவில் கடவுளின் மகன், மரியாளின் மகன் என இரு ஆட்கள் உண்டென வலியுறுத்தினர். இவர்களுள் தார்சுவைச் சேர்ந்த

டியோடோறசும், அவருடைய சீடரான மொப்சுவெற்சியாவைச் சேர்ந்த தியோடோரும் முக்கியமானவர்கள். அக்காலத்தில் கொன்ஸ்-தாந்திநோபிளின் பிதாப்பிதாவாக இருந்து நெஸ்தோரியுஸ் தன் ஆசிரியரான தியோடோரின் போதனையால் கவரப்பட்டு, அதன் முக்கிய போதகரானார். எனவே இப் பேதகம் நெஸ்தோரிய பேதகமென அழைக்கப்படுகிறது.

நெஸ்தோரியஸ் மீட்பர் கிறிஸ்துவில் மனித ஆளையும், தெய்வ ஆளையும் தெளிவாக வேறுபடுத்தினார். அதற்கு அரிஸ்ரோட்டிலின் மெய்யியலிருந்து ஆதாரம் காட்டினார். முழு மனிதத் தன்மை உண்மையில் ஒரு ஆளே. ஏனெனில் ஒரு மனிதனை மற்றவர்களிடமிருந்து பிரிப்பது அவனது மனிதத் தன்மையே. அதனோடு பிறிதொரு தன்மை சேரமுடியாது. அது தனித்தே நிற்கும். முழுமையான ஒரு இயல்பு இருப்பதற்கு பிறிதொரு இயல்பு தேவையில்லை. கிறிஸ்துவின் மனித இயல்பு முழுமையாக உள்ளபடியால், அது மனிதனாக இருப்பதற்கு இறை இயல்போடு இணைந்திருக்க வேண்டிய தேவையில்லை. ஆகவே கிறிஸ்துவில் அவரின் மனித இயல்பு தானாகவே ஒரு ஆளாக இருக்கிறது. இக் கருத்தின்படி, தெய்வத்துக்குரிய பண்புகளைக் குறிப்பிடும்போது, அவை இறை ஆளை, இறை வார்த்தையையே சாரும். மனிதனுக்குரிய பண்புகளைக் குறிப்பிடும்போது, அவை இயேசு மனிதனையே சாரும். எனவே இறைவனாகிய கிறிஸ்து சிலுவையில் மரித்தாரெனக் கூறுவது தவறு. மனிதனாகிய கிறிஸ்து சிலுவையில் மரித்தாரென்பதே சரி. எனவே கிறிஸ்துவின் பாடுகள் அளவில்லா பெறுமதியுள்ள தெய்வ செயல்களல்ல. கிறிஸ்துவின் பாடுகள் மனிதனுக்கு மீட்பைப் பெற்றுக் கொடுக்கவில்லை. அதேபோல மரியாள் இறைவனைப் பெற்றெடுத்தாளெனக் கூறுவதிலும் பார்க்க, மரியாள் கிறிஸ்து மனிதனைப் பெற்றெடுத்தாளெனக் கூறுவதே பொருத்தம் என்றார். எனவே மரியாள் இறைவனின் தாயல்ல (Non-Theotokos), கிறிஸ்து மனிதனின் தாய் மட்டுமே (Christo-tokos). தேவநற்கருணையில் நாம் இயேசு என்னும் மனிதனை மட்டுமே பெறுகின்றோம். இவையே நெஸ்தோரிய பேதகத்தின் முக்கிய போதனையாகும். இத் தப்பறையான போதகம் கிறிஸ்தவர்கள் மத்தியில் குழப்பத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தின.

**எபேசு பொதுச் சங்கம்** (431)

நெஸ்தோரிய பேதகத்தைக் கேள்விப்பட்ட அலெக்சாந்திரிய ஆயர் சிறில் அதை முழு மூச்சாக எதிர்த்தார். மரியாள் இறைவனின் தாயென்பதை உறுதியாக வலியுறுத்தினார். நெஸ்தோரியுஸ் பேதகத்தைக் கைவிட மறுத்ததால், அவர் திருத்தந்தை செலஸ்தின் 1 இடம் விண்ணப்பித்தார். அவர் உரோமையில் ஒரு சங்கத்தைக் கூட்டி, நெஸ்தோரியுசைக் கண்டனம் செய்தார். ஆனால் பேதகர் நெஸ்-தோரியுஸ் மனந்திரும்பவில்லை. நெஸ்தோரியுஸ் தன் பேதகத்தைக் கைவிட மறுத்தால், அவரைத் திருச்சபையிலிருந்து விலக்கிவிட ஆயர் சிறிலுக்கு திருத்தந்தை ஆவணி 430இல் அதிகாரம் அளித்தார். ஆயர் நெஸ்தோரியுஸ் அதிலிருந்து தப்பிக்க, பிரச்சினையைத் தீர்க்க ஒரு பொதுச் சங்கத்தைக் கூட்டும்படி பேரரசர் இரண்டாவது தியோடோ-சியுசிடம் விண்ணப்பித்தார். ஆயர் சிறிலும் அதற்காக பேரரசரிடம் விண்ணப்பித்தார். ஆகவே பேரரசர் தியோடோசியுஸ் 11 திருத்தந்தையின் அங்கீகாரத்துடன், ஆயர் சிறிலின் தலைமையில் திருச்சபையின் மூன்றாவது பொதுச் சங்கத்தை எபேசில் 431ம் ஆண்டு, ஆனி மாதம், 7ம் திகதி கூட்டினார். இப் பொதுச் சங்கத்தில் 200 ஆயர்கள் பங்கெடுத்தனர். ஆயர்கள் புறொயெக்ரஸ், ஆர்கேடியஸ், உரோமைய குரு பிலிப் என்பவர்கள் திருத்தந்தை செலஸ்தினின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர். ஆயர் சிறில் பேதகத்தைக் கைவிட்டுவிடும்படி நெஸ்தோரியுசிடம் மீண்டும் கேட்டுக்கொண்டார். ஆனால் அவரோ "நான் ஒருபோதும் ஒரு இரண்டு மாத, மூன்று மாதக் குழந்தையைக் கடவுளாக ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என மறுத்துவிட்டார். அதுமட்டுமல்ல பொதுச்சங்கத்திற்கு சமூகமளிக்கவும் மறுத்துவிட்டார். நெஸ்தோரியுசுக்கு சாதகமான அந்தியோக்கிய ஆயர் யோவானும், அவருடைய குழுவினரும் வரத் தாமதமாகியது. எனவே ஆயர் சிறில் அவர்களுக்காக இன்னும் காத்திராமல், ஆனி மாதம் 22ம் திகதி பொதுச் சங்கத்தை ஆரம்பித்தார். பொதுச் சங்கத்தின் தலைவராக திருத்தந்தையின் முழு அதிகாரத்துடன் செயல்பட்ட ஆயர் சிறில், பெரும்பான்மையான ஆயர்க-ளின் ஆதரவுடன் நெஸ்தோரியுசைக் கண்டனம் செய்தார். மேலும் கிறிஸ்து இறை ஆளுமையைக் கொண்ட ஒருவராயிரக்கிறாரென்றும், அவரில் தெய்வீகம், மனுஷீகம் என்ற இரு இயல்புகள் உண்டு எனவும் எடுத்துரைக்கப்பட்டது. இயேசுக் கிறிஸ்து மரியாளின் உதரத்தில்

மனுவுரு எடுத்து உற்பவமான இறைமகன் என்பதால் மரியாள் உண்மையில் இறைவனின் தாயெனவும் வலியுறுத்தப்பட்டது. தொடர்ந்து பேதகர் நெஸ்தோரியுஸ் திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டு, அவருடைய தப்பறையான போதகங்கள் கண்டிக்கப்பட்டு, நிசேயா விசுவாச அறிக்கை நிலைநிறுத்தப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட பேரரசர் தியோடோசியுஸ நெஸ்தோரியுசை எகிப்துக்கு நாடுகடத்தினார்

43 கீழைய நாட்டு ஆயர்களுடன் தாமதமாக வந்தசேர்ந்த அந்தியோக்கிய ஆயர் யோவான், ஆயர் சிறிலின் அவசர முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அவர் ஒரு எதிர்ச் சங்கத்தைக் கூட்டி ஆயர் சிறிலைக் கண்டனம் செய்தார். ஆனால் ஆயர் சிறிலின் தலைமையில் நடந்துகொண்டிருந்த பொதுச் சங்கம் தன் வேலைகளைத் தொடர்ந்து செய்து, இறுதியாக பெலாஜிய பேதகத்தையும் கண்டனம் செய்தது. எனினும் ஆயர் சிறிலுக்கும் ஆயர் யோவானுக்கும் இடையிலேலான இழுபறி தொடர்ந்தது. கடைசியாக 433ம் ஆண்டில் வெளியிடப்பட்ட "ஐக்கியத்தின் சாசனம்" வழியாக அவர்களுக்கிடையில் சமரசம் ஏற்பட்டது. இச் சாசனம் கிறிஸ்துவில் ஒரே ஆண்டவரில் இரு இயல்புகள் ஒன்றித்திருக்கின்றனவென்றும். மரியாள் உண்மையில் இறைவனின் தாயென்றும் பிரகடனம் செய்தது. இவ்வாறாக எபேசு சங்கத்தினால் நெஸ்தோரிய பேதகம் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டது. எகிப்துக்கு நாடுகடத்தப்பட்ட நெஸதோரியுஸ் தன் சிந்தனைகளை பாரசீக நாட்டில் பரப்பினார். இறுதியில் 450 இல் இறந்தார்.

## 6.2.1.1.5. இயுக்திக்கேய பேதகம்

கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்த ஒரு சந்நியாச மடத்தின் மடாதிபராயிருந்த இயுக்திக்கெஸ் என்பவரால் இப் பேதகம் ஆரம்பிக்கப்பட்டது. எனவே இப்பேதகம் இயுக்திக்கேய பேதமென அழைக்கப்படுகிறது. இயுக்திக்கெஸ் அலெக்சாந்திரியா ஆயர் சிறிலின் கீழ் கல்வி பயின்றவர். அவரைப் பின் தொடர்ந்து நெஸ்தோரிய பேதகத்தை எதிர்த்து கடுமையாக உழைத்தவர். மத்திம அறிவும், பண்பு குறைந்தவரும், மிகப் பிடிவாதமுள்ளவருமான அவர், கிறிஸ்துவின் ஒரே ஆள்தன்மையை மிகவும் வலியுறுத்தினார். காலப்போக்கில் அவர் அதில் அதிக தூரம் சென்று, நெஸ்தோரிய பேதகத்துக்கு எதிர்மாறான

மற்றொரு பேதகத்துக்கு ஆளானார். இவருடைய போதகத்தின்படி கிறிஸ்துவில் ஒரு ஆள் மட்டுமல்ல, ஒரு சுபாவம், இயல்புதான் உள்ளது. அவருடைய மனித சுபாவம், அவருடைய தெய்வ சுபாவத்தில் மறைந்துவிட்டது. எனவே கிறிஸ்துவில் தெய்வ சுபாவம் மட்டும்தான் உள்ளதெனப் போதித்தார். எனவே இப் பேதகம் மொனோபிசைத்த பேதகமெனவும் அழைக்கப்படுகிறது. (மொனோ - ஒன்று, பிசீஸ் - இயல்பு). நெஸ்தோரிய பேதகத்துக்கு எதிராகப் போராடிய பலர் இப்பேதகத்துக்கு ஆளாகினர். இயுத்திக்கெஸ் தப்பறைகளைப் போதிப்பதாக அக்காலத்தில் கொன்ஸ்தாந்திநோபிளின் பிதாப்பிதாவாக இருந்த பிளேவியனிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. எனவே அவர் பிதாப்பிதா பிளேவியன் முன்னிலையிலும், கொன்ஸ்தாந்திநோபிளில் கூடவிருந்த பொதுச் சங்கத்தின் முன்னிலையிலும் சமூகம் அளிக்குமாறு பணிக்கப்பட்டார்.

**கொன்ஸ்தாந்திநோபிள் சங்கம்**

கொன்ஸ்தாந்திநோபிள் சங்கம் இயுக்திக்கேய பேதகத்திற்கு எதிராக பிதாப்பிதா பிளேவியனின் தலைமையில் கூடப்பட்டது. அங்கு சமூகமளித்த இயுக்திக்கேயுஸ், "மனுவுருவாக முன்பு இரண்டு இயல்புகள், மனுவுருவாகிய பின்பு ஒரு இயல்பு" என்ற தன் கோட்பாட்டை முன் வைத்தார். ஒரு துளி இரசம் மனித உடலில் மறைவது போல, கிறிஸ்துவின் மனித இயல்பு அவருடைய தெய்வ இயல்பினில் கலந்து, மறைந்து, ஒரு தெய்வ இயல்பே அவரிடம் எஞ்சியிருந்ததென்ற மொனோபிசைத்த கருத்துக்களை எடுத்துரைத்தார். தன் போதனைக்கு ஆதாரமாக ஆயர் சிறில், அற்புதர் கிரகோரி, உரோமைய யூலியஸ் என்பவர்களை மேற்கோள் காட்டினார். அத் தப்பறையான போதகத்தை கைவிடும்படி பிதாப்பிதா பிளேவியனினால் எச்சரிக்கப்பட்டும், அவர் கட்டுப்படாமல், அத் தப்பறையில் பிடிவாதமாகவிருந்தார். அவரைப் பதவி நீக்கம் செய்த பிதாப்பிதா பிளேவியன், திருத்தந்தை சிங்கராயரிடம் அதுபற்றி முறைப்பாடு செய்து, ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கிடையில் இயுக்திக்கெஸ் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, அக்காலத்தில் அலெக்சாந்திரியாவின் பிதாப்பிதாவாகவிருந்த டியோஸ்கோறசின் ஆதரவுடன் பேரரசரைக் கொண்டு தன் நிலையை மீளாய்வு செய்ய ஆயர் சங்கம் ஒன்றைக் கூட்டுவித்தார். திருத்தந்தை

சிங்கராயர் தம்முடைய பிரதிநிதிகள் வாயிலாக "பிளேவியனுக்கு கொள்கைத் திருமுகம்" என்ற கடிதத்தை எழுதி அனுப்பினார். அதில் "இயேசுக் கிறிஸ்து ஒரு ஆள், ஆனால் அவரில் கலப்போ, குழப்பமோ அடையாமல் இரு இயல்புகள் உள்ளன, இரு இயல்புகளும் தமக்குரிய செயல்களும், வல்லமைகளும் கொண்டுள்ளன" என்ற திருச்சபையின் மரபு கிறிஸ்துவியல் கொள்கைகளை தெளிவாக எழுதியிருந்தார். பேரரசரால் எபேசில் கூடப்பட்ட சங்கத்துக்கு ஏற்கனவே இயுக்திக்கெசை கண்டனம் செய்து, அவர் பதவியைப் பறிப்பதற்கு உடந்தையாகவிருந்த எவரும் அனுமதிக்கப்படவில்லை. பிதாப்பிதா டியோஸ்கோறசுக்கு தலைமை வகிக்கும் பதவி வழங்கப்பட்டது. சங்கத்தில் குழப்பமும், வலோத்காரமும், வன்செயலும் இடம்பெற்றன. திருத்தந்தையின் கடிதத்தை வாசிக்கவும் அவரின் பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. பிதாப்பிதா பிளேவியனும், திருத்தந்தையின் பிரதிநிதிகளும் அவசங்கைக்கு ஆளாகினர். "ஓர் இயல்பு கோட்பாடே" திருச்சபையின் உத்தியோகபூர்வ விசுவாசக் கொள்கையென கூறப்பட்டு, அனைவரும் அதை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டனர். வாள் முனையில் அதற்குக் கைச்சாத்திடும்படி பணிக்கப்பட்டனர். இயுக்திக்கெஸ் சுற்றவாளியாகக் காணப்பட்டு, மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார். கொடூரமாகத் துன்புறுத்தப்பட்ட பிதாப்பிதா பிளேவியன் சில நாட்களில் இறந்தார். எபேசு சங்கத்தில் நடந்த குழப்பங்களையும், அவசங்கைகளையும் அறியவந்த திருத்தந்தை சிங்கராயர், உரோமையில் இன்னொரு சங்கம் கூடி, எபேசு சங்கத் தீர்மானங்களை செல்லுபடியற்றவை ஆக்கினார். பெரும் குழப்பங்கள், வன்செயல்கள், வலோத்காரங்கள் மத்தியில் இடம்பெற்ற இந்த எபேசு சங்கம் திருச்சபையின் வரலாற்றிலே "திருடர் சங்கம்" என அழைக்கப்படுகிறது. இயுக்திக்கேய பேதகத்துக்கு தீர்க்கமான முடிவுகாண இன்னொரு பொதுச் சங்கத்தை கல்செடோனில் கூட்டுவதெனத் திருத்தந்தை கூட்டிய உரோமைச் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**கல்செடோன் பொதுச் சங்கம்** (451)

அதைத் தொடர்ந்து திருச்சபையின் நான்காவது பொதுச் சங்கம் சின்ன ஆசியாவிலுள்ள கல்செடோன் நகரில் 451ம் ஆண்டு ஐப்பசி 8ம் திகதி தொடக்கம் கார்த்திகை 1ம் திகதிவரை நடைபெற்றது.

திருத்தந்தையின் பிரதிநிதிகள் தலைமையில் கூடப்பட்ட அச் சங்கத்தில் 630 ஆயர்கள் பங்கெடுத்தனர். இச் சங்கம் இயுக்திக்கேய பேதகத்துக்கு எதிராகக் கூடப்பட்டது. இதுவே கிறிஸ்துவியலின் வரலாற்றில் முக்கிய சங்கமாகக் கருதப்படுகிறது. இச் சங்கத்தில் மடாதிபர் இயுக்திக்கெஸ் கண்டனம் செய்யப்பட்டார். பிதாப்பிதா டியோஸ்கோறஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டார். திருத்தந்தை சிங்கராயர் எபேசு சங்கத்துக்கு எழுதி அனுப்பிய "பிளேவியனுக்கு கொள்கைத் திருமுகம்" என்ற கடிதம் பகிரங்கமாக வாசிக்கப்பட்டது. அவையினர் அனைவரும் "இதுவே எங்கள் தந்தையரினதும், அப்போஸ்தலரினதும் விசுவாசம். இதை நாங்கள் விசுவசிக்கிறோம். இறைவன் பேதுரு சிங்கராயர் வழியாக எம்மோடு பேசியிருக்கிறார். இதற்கு மாறாக கற்பிப்பவர்கள் சபிக்கப்படுக" எனக் கூறி, அதை முழுமையாக அங்கீகரித்தனர். திருச்சபையின் விசுவாசமாகிய கிறிஸ்துபற்றிய மறைக் கோட்பாடு தெளிவாக எழுதி வெளியிடப்பட்டது. அலெக்சாந்திரிய இறையியல் கல்லூரியில் கிறிஸ்துவியலில் விளங்கிய சீரிய கருத்துக்கள் தொகுக்கப்பட்டு, நிரல்படுத்தி இவ் அறிக்கை வெளியிடப்பட்டது. ஆதிக் கிறிஸ்தவர்கள் தெளிவற்றமுறையில் பயன்படுத்திய கிரேக்க சொற்றொடர்களின் பொருள் வரையறை செய்யப்பட்டு, கிறிஸ்து மறைபொருள் விளக்கப்பட்டது. இறைவனின் ஒரே சுதனாகிய இயேசு இறைத்தன்மையும், மனிதத்-தன்மையும் கொண்டவர். இவ்விரு இயல்புகளும் இரண்டறக் கலக்காமல். மாறுபடாமல், முழுதும் அவரில் இணைந்திருந்தன. இவ்விரு இயல்பு-களையும் தன்னகத்தே கொண்ட இயேசுக் கிறிஸ்து ஆள்வகையில் ஒருவரே என்று கல்செடோன் சங்கம் தெளிவாக எடுத்துக் கூறியது.

எகிப்திலுள்ள இயுத்திக்கேயர் கல்செடோன் சங்கத்தின் தீர்மா-னத்திற்குக் கீழ்ப்படிய மறுத்தனர். எனவே 680 இல் கொன்ஸ்தாந்-திநோபிளில் ஒரு சங்கம் கூடி, மீண்டும் இப்பேதகத்தைக் கண்டனம் செய்தது. கிழக்குப் பேரரசில் கிரேக்க மொழி பேசப்படாத மாகாணங்-களில் உள்ள மக்கள் திருச்சபையை விட்டு விலகிச் சென்றனர். எகிப்திலுள்ள கோப்தியர்கள், சிரியாவின் யாக்கோபித்தர்கள், ஆர்மே-னியர்கள், அபிசீனியர்கள் என்போர் இவ்வாறு பிரிந்து சென்றனர்.

## 6.2.1.1.6. மோனோத் தேலா பேதகம்:

கொன்ஸ்தாந்திநோபிளின் ஆயரான ரெமீஜியுஸ் 638ம் ஆண்டில், இயுக்திக்கேய பேதகத்தையும், கல்செடோன் சங்கத்தின் படிப்பினைகளையும் இணைக்கும் ஒரு சமரச முயற்சியில் ஈடுபட்டார். இயுக்திக்கேயரின் தப்பறையைச் சற்று மாற்றி, இயேசுநாதரிடத்தில் இரு இயல்புகள் உள்ளன. ஆனால் அவரிடம் ஒரு மனது (சித்தம்), தேவ மனதுதான் உண்டு எனறார். அவருடைய தேவ மனதின் முன்னிலையில் அவருடைய மனித மனது மறைந்து போயிற்று எனப் போதித்தார். இதனை கொன்ஸ்தாந்திநோபிளில் 680 இல் கூடிய 6வது பொதுச் சங்கம், கண்டனம் செய்து, யேசுவிடம் தேவ மனது, மனித மனது என்ற இரு மனது உண்டு. அவரின் மனித மனது, தேவ மனதுக்கு எப்போதும் பணிந்து போகிறதெனக் கற்பித்தது.

**பேதகங்களின் விளைவுகள்**

பேதகங்கள் திருச்சபையை, அது போதிக்கும் மறை உண்மைகளைப் பெலவீனப் படுத்துவதற்குப் பதிலாக, இறுதியில் அதற்குச் சாதகமாகவே அமைந்தன. அவற்றின் விளைவாக திருச்சபை பெலப்படுத்தப்பட்டு, அதன் போதனைகள் உறுதிப்படுத்தப்பட்டன. குறிப்பாக அதன் உள்ளார்ந்த முதிர்ச்சிக்கும், அதன் இறையியல், மறைக் கல்வி வளர்ச்சிக்கும் மிகவும் உதவியாக அமைந்தன. திருச்சபையின் விசுவாசப் பிரமாணங்கள் ஒவ்வொன்றும், விரிவாக ஆராயப்பட்டு, தெளிவாக விளக்கி உரைப்பதற்குச் சந்தர்ப்பங்களைக் கொடுத்தன. பொதுச் சங்கங்களைக் கூட்டி, அனைத்து ஆயர்களின் அறிவையும், அனுபவங்களையும், கருத்துக்களையும் பகிர்ந்து, விசுவாசப் பிரமாணங்கள் ஒவ்வொன்றையும் படித்து, மிகத் தெளிவாக எடுத்துரைப்பதற்கு, திருச்சபையின் போதனைகளை தெட்டத் தெளிவாய் வெளியிடுவதற்கு வழிவகுத்தன. உண்மையை அறிய கிறிஸ்தவர்கள் வேத நூல்களை கவனமாகப் படித்தனர். பேதகங்களும், அதற்கு எதிராகக் கூடப்பட்ட திருச் சங்கங்களும் அவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தி, மறை அறிவை வளர்க்க உதவியாயிருந்தன.

சுருங்கக் கூறின், வேத கலாபனைகள் கிறிஸ்தவத்தின் தெய்வீகத்தை எண்பித்ததுபோல. பேதகங்கள் அதன் போதனைகளின்

மகத்துவத்தையும், மேன்மையையும் உலகிற்கு எடுத்துக்காட்டின. மக்கள் விசுவாச சத்தியங்களை தம் உயிருக்கும் மேலாக மதித்து. போற்றி, விசுவசிப்பதற்கு பேதகங்கள் வழி சமைத்துக் கொடுத்தன.

## 6.2.2. திருச்சபையின் தந்தையர்கள்

ஆதித் திருச் சபையில் பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, திருமறையைத் தெளிவுடன் போதித்து, திருமறைபற்றிய கிறிஸ்தவ விசுவாசத்தை இறையியல் நூல்களாக கிரேக்க, இலத்தீன் மொழிகளில் எழுதி எமக்கு அளித்த எம் ஆதித் தந்தையர்களையே நாம் பொதுவாக "திருச்சபையின் தந்தையர்" எனக் குறிப்பிடுகிறோம். 438 இல் "திருச்சபையின் தந்தையர்" என்ற பதத்துக்கு விளக்கம் கொடுத்த லெறின்ஸ் வின்சென்ற் என்பவரின் கருத்திற்கு அமைய, ஆதித் திருச்சபையில் (முதல் ஏழு நூற்றாண்டுகள்) கிறிஸ்தவ மறை உண்மைகளை தவறின்றிப் போதித்தல், பரிசுத்ததனம், அப்போஸ்தொலிக்க அங்கீகாரம் போன்ற பண்புகளைக் கொண்ட எழுத்தாளர்கள் என அழைக்கப்பட்டனர். இக் கருத்தில், அப்போஸ்தொலிக்க பிதாக்கள், சத்தியத்தின் பாதுகாவலர்கள் (தர்க்கவியலாளர்), வேதபாரகர்கள் (மறைபோதகர்கள்) அனைவரும் திருச்சபையின் தந்தையர்களுள் அடங்குவர். எனினும் இங்கு நாம் குறிப்பாக நான்காம், ஏழாம் நூண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தோன்றிய கிறிஸ்தவ எழுத்தாளர்களில், திருச்சபையின் தந்தையர்களில் நம் கவனத்தைச் செலுத்துகிறோம். வழமையாக கிறிஸ்தவ இறையியல் நூல்களை எழுதிய எழுத்தாளர்களை "திருச்சபையின் பிதாக்கள்" என அழைப்பர். அக்காலத்தில் "பிதா" அல்லது "தந்தை" என்னும் சொல் கல்வி புகட்டும் ஆசிரியர்களைக் குறித்தது. பண்டைக் காலத் திருச்சபையில் போதிக்கும், மறையறிவு புகட்டும் பணி ஆயர்களுக்கே உரியதாயிருந்தது. எனவே முதலில் அவர்களே திருச்சபையின் பிதாக்கள் அல்லது தந்தையர் என அழைக்கப்பட்டனர். உதாரணமாக, 251இல் வாழ்ந்த ஆயர் சிப்பிரியான் "சிப்பிரியன் பாப்பா" என்றழைக்கப்பட்டார்.

நான்காம் நூற்றாண்டில் தோன்றிய பேதக வாத எதிர் வாதங்களின் விளைவாக, "பிதா" அல்லது "தந்தை" என்ற சொல்லின் கருத்திலே வளர்ச்சி ஏற்பட்டது. திருச்சபையின் பாரம்பரியப் போதனை-

களை, மரபுகளை பிரமாணிக்கமாய் எழுதியவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆயரல்லாத திருச்சபையின் எழுத்தாளர்களும் திருச்சபையின் பிதாக்கள், தந்தையரென அழைக்கப்பட்டனர். அதன்பிரகாரம், புனித அகுஸ்தினார், சென்ம பாவம்பற்றிய திருச்சபையின் பாரம்பரிய போதனைகளை எழுதிவைத்த ஆயரல்லாத புனித எரோமை திருச்சபையின் பிதாவென அழைப்பதைக் காண்கிறோம். இன்று, பண்டைய மரபுமுறை கொள்கை கோட்பாடுகள், தூய வாழ்வு, திருச்சபையின் அங்கீகாரம், பழங்கால பழக்கவழக்கங்கள் போன்ற பண்புகளையுடைய, நான்காம் ஏழாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த இறையியல் எழுத்தாளர்களே திருச்சபையின் தந்தையர்களெனன அழைக்கப்படுகிறார்கள். இவர்களின் போதனைகளும், நூல்களும் திருச்சபையிலே மிகவும் அதிகாரமுடையவைகளாகக் கணிக்கப்படுகின்றன. தவறான, தப்பறையான போதனைகள் தலைதூக்கிய காலஙகளில், திருச்சபையின் உண்மையான பரம்பரைக் கொள்கைகள், கோட்பாடுகளை வரையறைசெய்து நிலைநிறுத்த திருச்சபையின் பிதாக்களும், அவர்கள் எழுதிய நூல்களும் மிக முக்கியமான இடத்தை வகித்தன. வேதாகமத்துக்கு அவர்கள் ஒருமித்த மனத்ததுடன் அளிக்கும் விளக்கங்கள் வழுவாவரம் உடையவனவாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. திருச்சபையின் திருத்தந்தையரின் காலம் நான்காம் ஏழாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தைக் குறிக்கிறதென நாம் கொள்ளலாம்.

திருச்சபையின் பிதாக்களை பிரதேச ரீதியாக கீழ்நாட்டுப் பிதாக்கள், மேல் நாட்டுப் பிதாக்கள் என வகைப்படுத்துவர். கீழ்நாட்டுப் (கிரேக்க) பிதாக்களிலே புனித அத்தனாசியுஸ், புனித கிறிசொஸ்தோம் அருளப்பர், புனித பசில், புனித கிரகோரி நாசியென்ஸ், புனித நிஸ்ஸா கிரகோரியார், அந்தியோக்கிய இக்னேசியஸ், கிறிதொஸ்தொம் அருளப்பர், அலெக்சாந்திரிய சிறில் என்பவர்கள் அடங்குவர். இவர்களில் புனித பசில், புனித கிரகோரி நாசியென்ஸ், நிஸ்ஸா கிரகோரியார் என்ற மூவரும் கப்பதோசியாவைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தமையால், அவர்களைக் "கப்பதோசிய பிதாக்கள்" என்றும் அழைப்பர். மேல் நாட்டுப் (இலத்தீன்) பிதாக்களுள், புனித இலாரியார், புனித அம்புறோசியார், புனித எரோம், புனித அகுஸ்தின், புனித பெரிய கிரகோரியார் என்பவர்கள் அடங்குவர். இவர்களுள் ஆம்புறோஸ், எரோம்,

அகுஸ்தின், கிலரி என்பவர்கள் "திருச்சபையின் பெரிய தந்தையர்கள்" என உத்தியோகபூர்வமாக திருத்தந்தை 8ம் பொனிபாசினால் பெயரிடப்பட்டிருக்கிறார்கள். திருத்தந்தையர்களின் எழுத்தாக்கங்கள் முன்வைக்கப்படும் படிப்பினைகளை "திருச்சபைத் திருத்தந்தையர்களின் கோட்பாடுகள்" அல்லது "திருச்சபைத் திருத்தந்தையர்களின் இலக்கியம்" (Patrology) என அழைக்கப்படுகிறது. அதில் அவர்களின் வாழ்வும் பின்னணியும், அவர்களின் எழுத்தாக்கங்களும், அவற்றின் ஏற்புடைமையும், அவர்களின் பணியின் முக்கியத்துவம், அவர்களின் முக்கிய இறையியற் படிப்பினைகள் என்பன அடங்குகின்றன.

இவர்களில் பிரதானமான ஒரு சிலரின் வாழ்கை வரலாறு, அவர்கள் ஆற்றிய அரும்பணி, குறிப்பாக அவர்கள் போதனைகள், அவர்கள் எழுதிய நூல்கள்பற்றி நாம் அறிந்திருப்பது பயனளிக்கும்.

## 6.2.2.1. புனித யுஸ்தின் (110-167)

கிரேக்க அஞ்ஞானப் பெற்றோருக்குப் பிறந்த யுஸ்தின், பாலஸ்தீனாவின் சிக்கேம் பிரதேசத்திலிருந்து வந்தவர். இறைவனில் விசுவாசமில்லாத சூழலில் வாழ்ந்தவர். கிரேக்க பின்னணியில் வளர்ந்து, ஸ்தொயிக்கர், அரிஸ்டோட்டில், பிளேற்றோ, பைதகரஸ் போன்ற தத்துவயியலாளரின் சிந்தனைகளுக்குப் பழ்க்கப்பட்டவர். பல்லாண்டுகளாக உண்மையைத் தேடி எங்கும் அலைந்து, இறுதியில (144) கிறிஸ்தவ மறையில் அமைதி கண்டார். மனிதரை மீட்பதற்கான முழுமையும், உண்மையும் மிக்க தத்துவம் உண்மையிலேயே கிறிஸ்தவ தத்துவம்தான் என்பதை உணர்ந்தார். கிறிஸ்தவ மறையை தத்துவ ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் கற்றார். சிறந்த அறிவாளியும், கிரேக்க தத்துவ சாஸ்திரியுமான யுஸ்தின் உரோமையில் ஒரு பிரபல்யமான கிறிஸ்தவ சித்தாந்த கல்லூரியை நிறுவி, கிறிஸ்தவத்தை ஆதரித்து பல நூல்களை வெளியிட்டார். இவர் ஒரு சத்தியத்தின் பாதுகாவலர், சிரேஷ்ட தர்க்கவியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவத்துக்கு விரோதமாகக் கூறப்பட்ட அவதூறுகளை மறுத்து, கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் காட்டப்பட்ட பாரபட்சங்களைக் கண்டித்து பல நூல்களை எழுதினார். பல அஞ்ஞானிகள் இவருடைய நூல்களை வாசித்து, ஒளியின் மக்களாகினர்.

புனித யுஸ்தின் எழுதிய முக்கிய நூல்கள், அன்ரோனினஸ் பியுஸ், மார்க்கஸ் அவுறேலியுஸ் என்ற பேரரசர்களுக்கு எழுதிய "அப்போலொஜியா", உரோமை செனற் சபைக்கு எழுதிய ஆவணம், யூத இனத்தவருக்கு எதிராக எழுதிய "திரைபோவுடன் உரையாடல்" என்பனவாகும்.

(1) "அப்போலொஜியா": அன்ரோனினஸ் பியுஸ், மார்க்கஸ் அவுறேலியுஸ் என்ற பேரரசர்களுக்கு கிறிஸ்தவர்களுக்கான காப்புரையாக எழுதப்பட்ட இந் நூலில், உரோமைய தத்துவ கருத்துக்களையும், சிந்தனைகளையும் பயன்படுத்தி, உரோமை யரின் பல தெய்வ வழிபாட்டை எதிர்த்து, கிறிஸ்தவர்களின் ஆதி அந்தமற்ற, உலகின் மூலகாரணரான ஒரே தெய்வத்தையும், அவரிடமிருந்து செனித்த "லோகோஸ்" எனப்படும் இயேசுக் கிறிஸ்துவையும் பற்றிய கருத்துக்களை நிலை நிறுத்தினார். இந் நூலில் இரு பகுதிகள் உண்டு. முதற் பகுதி கிறிஸதவ மறை, அதன் மதிப்பீடுகள் பற்றியதும், கிறிஸ்தவ மக்களின் நன்மைத்தனம், விசுவாசம் பற்றியதுமாகும். கிறிஸ்தவர்கள் கடவுள் நம்பிக்கையற்ற மக்களல்லர். கலகக்காரரும் அல்லர். சமூகத்-துக்கு பெறுமதிவாய்ந்த வளமாகவும், பேரரசின் நன்மை கருதியே எப்பொழுதும் செயற்படுபவர்களென்பது வலியுறுத்தப்படுகின்றது. இரண்டாம் பகுதி கிறிஸ்தவ மதத்தின் அடிப்படைப் படிப்பினைகள், வழிபாடுகள், அருளடையாளங்கள் பற்றிப் பேசுகின்றது. இறுதியில் கிறிஸ்தவர்களைத் துன்புறத்த முன், அவர்களின் தவறுகளை நன்றாக ஆராயவேண்டுமெனறும், தவறான, அநீதியான முறையில் அவர்களைத் துன்புறுத்துவதைத் தவிர்க்கவேண்டுமென்றும் அறிவுரை வழங்குகின்றது.

(2) உரோமைய செனற் சபையின் முதன்மையாளராகிய ஊர்பிகுஸ் (Urbicus) என்பவருக்கு எழுதப்பட்ட இந்த நூல், அக்காலத்தில் மூன்று கிறிஸ்தவர்கள் தாங்கள் கிறிஸ்தவர்களெனக் கூறியதற் காக சிரச்சேதம் செய்யப்பட்ட பின்னணியில் எழுதப்பட்டிருக் கிறது. இதில் முக்கியமாக அத்தகைய அநீதியான செயற் பாட்டை எதிர்த்து, அவ்வாறான கடும் தண்டனைகள் அளிப்ப தைத் தவிர்த்துக்கொள்ளும்படி ஆலோசனை வழங்குகின்றது.

மேலும் அக்காலத்தில் அஞ்ஞானிகளால் கிறிஸ்தவர்களின் உயிர் தியாக வாழ்வு தொடர்பாக எழுப்பப்பட்ட வினாக்களுக்குப் பதிலளிக்கின்றது. உயிர்த்தியாக வாழ்வு என்பது இறைவனை அடையும் மனிதருடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வ-தல்ல. மாறாக கலாபனைக் காலம் இறைவிருப்பத்தின் பெறுபேறு, அது கிறிஸ்துவின் மறைக்கு சான்று பகர வழங்கப்பட்ட சந்தர்ப்ப-மென விளங்கப்படுத்தி, கிறிஸ்தவ மதம் ஏனைய மதங்களை விட உயர்ந்ததென நிலைநாட்டுகிறார்.

(3) "திரைபோவுடன் உரையாடல்" என்ற நூல் புனித யுஸ்தின் ஒரு யூத ராபியுடன் நடத்திய ஒரு நீண்ட உரையாடலாகும். யூத இனத்தவருக்கு எதிராக எழுதப்பட்ட முதல் காப்புரை நூல் இதுவாகும். அதில் புனித யுஸ்தின் யூத மதம் தவறென எண்-பித்து, அதற்கு எதிராக இயேசுக் கிறிஸ்துவே எதிர்பார்க்கப்பட்ட மெசியாவென்றும், அவருடைய வருகையுடன் பழைய மோசேயின் சட்டங்கள் செல்லுபடியற்றவை ஆகிவிட்டன வென்றும் எண்பிக்கிறார். மோசேயின் சட்டம் நித்தியமானதல்ல. அது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு, ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு உரியது. ஆனால் கிறிஸ்துவால் அளிக்கப்பட்ட சட்டம் நித்தியமானது, அது அனைவருக்கும் பொதுவானது. கிறிஸ்துவில் நம்பிக்கை வைப்பவர்கள் இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட புதிய இஸ்ரயேலர் ஆவார். இவருடைய நூல்களில் அக்காலத்தில் இறையியலில் ஏற்பட்ட பெரும் வளர்ச்சியைக் காண்கிறோம்.

புனித யுஸ்தின் எழுதிய வேறு பல நூல்கள் (மசதோனியருக்கு எதிராக எழுதிய நூல், கிரேக்கருக்கு எதிராக எழுதிய நூல், தப்பறைகளுக்கு எதிராக எழுதிய நூல்) அழிந்து போயின. இறுதியில் புனித யுஸ்தின் மார்க்கஸ் அவுறேலியுசின் ஆட்சிக்காலத்தில் அஞ்ஞான தெய்வங்களுக்குப் பலிசெலுத்த மறுத்ததினால் வேறு சிலருடன் கைது செய்யப்பட்டு, சிரச்சேதம் செய்யப்பட்டார்.

### 6.2.2.2. தேர்த்தூலியன் (160-240)

வட ஆபிரிக்காவில் ஒரு நூற்றுவர் தலைவனுக்கு மகனாகக் கார்த்தேஜ் என்னுமிடத்தில் 160 இல் பிறந்த தேர்த்தூலியன், கிரேக்க,

இலத்தீன் மொழிகளில் பாண்டித்தியம் பெற்று, பல ஆண்டுகள் உரோமையில் ஒரு சட்டத்தரணியாகக் கடமையாற்றினார். 195இல் கிறிஸ்தவத்தைத் தழுவி, கார்த்தேஜ் நகரில் வாழ்ந்த அவர், ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அக்காலத்தில் வட ஆபிரிக்காவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக இட்மபெற்ற கலாபனையில், கிறிஸ்தவ விசுவாசிகள் பலவிதமான இடையூறுகளை அனுபவிக்க நேர்ந்தது. அக் கொடூர கலாபனையைத் தம் கண்களாலே கண்டார். சுறுசுறுப்பும், ஒழுங்கும், ஒழுக்கமும் கொண்ட அவர், அக் கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்களைப் பாதுகாக்க, அவர்களை உற்சாகப்படுத்த, கிறிஸ்தவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டு, கொலை செய்யப்படுவதைக் கண்டித்தும், கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தியும் பல நூல்களை எழுதினார். அவரே திருச்சபையில் முதலில் இலத்தின் மொழியில் எழுதியபடியால், அவர் "இறையியல் இலத்தீன் மொழியின் தந்தை"யென அழைக்கப்படுகிறார். அவருக்கு முன் கிரேக்கமே திருச்சபையின் மொழியாகவிருந்தது.

**தேர்த்தூலியன் எழுதிய நூல்கள்:**

1. அவர் எழுதிய முக்கிய நூல் "அப்பொலஜெற்றிக்" (மறைக் கோட்பாடு) என்பதாகும். அது கிறிஸ்தவர்களைப் பாதுகாக்க, கிறிஸ்தவர்களுக்கு ஒரு காப்புரையாக, ஆபிரிக்காவிலிருந்த ஆளுநர்களுக்கு 197 இல் எழுதப்பட்டது. அதில் கிறிஸ்தவர்கள் குற்றமற்றவர்கள் என்றும், பேரரசர் திராஜனுடைய சட்டங்கள் அநீதியானவையென்றும் எண்பித்தார். பிற மதங்களை மிக நுணுக்கமாக ஆராய்ந்து, அவற்றின் குறைபாடுகளை எடுத்துக் காட்டினார். கிறிஸ்தவம் ஏனைய மதங்களிலும் பார்க்க உயர்ந்த தன்மை கொண்டதென எண்பித்தார்.

2. அவர் 200இல் பேதகருக்கு எதிராக எழுதிய மற்றொரு புத்தகத்தில் புதுக் கொள்கைகளைத் தவிர்த்து, திருச்சபையின் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்க மக்களைத் தூண்டினார். பேதகர் வேதாகமத்தைத் திரித்துக் கூறுவதாகக் கூறி, திருச்சபை ஒன்றே அதற்கு விளக்கமளிக்க உரிமை உடையதென வலியுறுத்தினார். தேர்த்தூலியன் கிறிஸ்தவ மறையை விளக்கும்போது, தத்துவ-

யியலையும், தரக்கவியலையும், இறையியலையும் அடிப்படையாகக் கொண்டு எழுதியபடியால், அவருடைய எழுத்தாக்கங்கள் சிறப்புப் பெற்றன. திருச்சபையின் எழுத்தாளர்களிடையே அவர் சிறப்பு இடத்தைப் பெற்றார். "மறைசாட்சிகளின் இரத்தம் கிறிஸ்தவர்களை உருவாக்குகின்ற வித்தாகும்" என்ற சிறந்த கூற்றை முன்வைத்தவர் அவரே.

தேர்த்தூலியன் 203 இல் மொன்டானிச பேதகத்தால் கவரப்பட்டார். 213 இல் திருச்சபையிலிருந்து விலகி, முழுமையாக அப்பேதகத்தைத் தழுவிக் கொண்டார். அதன்பின் தன்னுடைய திறன்களையும், ஆற்றல்களையும் அப பேதகத்தைப் பரப்ப பயன்படுத்தினார். வேத மறுதலிப்பு, கொலை, விபசாரம் போன்ற கொடிய பாவங்களை மன்னிக்க திருச்சபை அதிகாரமற்றதென்றும், கலாபனையிலிருந்து தப்புவதற்காக நாட்டிலிருந்து ஓடப்படாதென்றும், அதற்காகப் பணம் கொடுக்கப்படாதென்றும், கணவனோ, மனைவியோ இறந்தபின் இரண்டாம் திருமணம் செய்வது விபசாரமென்றும், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் பாவமானவை என்றும் போதித்தார்.

### 6.2.2.3. ஒரிஜன் (185-254)

அலெக்சாந்திரியாவில் கிறிஸ்தவ பெற்றோரிடமிருந்து 185ம் ஆண்டளவில் பிறந்த ஒரிஜன், அலெக்சாந்திரிய மறைக் கல்விக் கூடத்தில் அலெக்சாந்திரிய சாந்தப்பரிடம் பாடங்கற்றார். பின்பு அக் கல்லூரிக்கே அதிபரானார். டேசியனின் கலாபனையின்போது அவருடைய தந்தை லெயோனிதாஸ் மறைசாட்சியாக இறந்ததையடுத்து, குடும்பப் பொறுப்பு அவர்மேல் வந்தது. எனவே பதினேழு வயதிலேயே பல பொது, தனியார் பாடசாலைகளில் கற்பிக்கத் தொடங்கினார். அவர் அறிவிலும், ஆற்றலிலலும், திறன்களிலும் சிறந்து விளங்கியதால், அவர் பின்பு தான் கல்வி பயின்ற அலெக்சாந்திரிய மறைக் கல்லூரிக்கே அதிபரானார். அவர் "இரும்பு மனிதர்" என அழைக்கப்பட்டார். வேதாகமம், இறையியல், ஞானவாழ்வு போன்ற பல விடயங்களைப்பற்றி 800 நூல்களை எழுதி, கிறிஸ்தவர்களின் அறிவுத் தலைவனாக விளங்கினார். 230 இல் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் செசாரியாவில் புதிதாக ஒரு கல்லூரியை ஆரம்பித்தார். வெகுவிரைவில்

அது உலகப் புகழ்பெற்ற கல்லூரியாக மாறியது. பேரரசர் செப்திமுஸ் செவருஸின் கலாபனையின்போது, கிறிஸ்தவர்களைச் சிறையில் சந்தித்து, அவர்களோடு நீதிமன்றங்களுக்குச் சென்று, அவர்களைத் தைரியப்படுத்தி ஊக்குவித்தார். புதிதாக கிறிஸதவ மறையைத் தழுவியவர்களை அதைரியப்படுத்துவதற்காக யூதர்களும், புற மதத்தினரும் கொண்டுவந்த பல்வேறு தர்க்கங்களையும், தப்பறைகளையும் எதிர்த்து, அறிவுள்ள தர்க்கங்களை முன்வைத்தார். எருசலேமின் ஆயருக்கு உதவச் சென்றவேளையில், அங்கு அவர் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். ஆனால் 231 இல் பல்வேறு காரணங்களின் நிமித்தம் ஆயர் டெமேற்றியசினால் திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டார்.

இவர் எழுதிய நுல்களில் முக்கியமானவை: "கிறிஸ்து வேத ஆதாரம்", "பிரமாணங்கள்", "ஆறு வரிசையில் வேதாகமம்" என்பன-வாகும்.

1. "கிறிஸ்து வேத ஆதாரம்" (Contra Celsum) என்ற நூல் செல்சஸ் என்ற பேதகர் கிறிஸ்தவர்களுக்கு எதிராக கிளப்பிய ஆட்சேபனைகளைத் தகர்த்து எறிகின்றது. இது செல்சஸ் எழுதிய True Discourse என்ற நூலுக்கு எதிராக எழுதப்பட்ட கிறிஸ்தவர்களுக்கான பரிந்துரை, காப்புரை நூலாகும்.

2. "பிரமாணங்கள்" (De Principiis) முக்கிய கிறிஸ்தவ விசுவாச உண்மைகளை விளக்கி, ஒரு இறையியல் கைநூலாகத் திகழ்ந்-தது. இறைவன், பிரபஞ்சம், மனித சுதந்திரம், இறைவெளிப்பாடு பற்றிய ஆழான கருத்துக்கள் தரப்படுகின்றன. இது சமயப் புனிதர்கள் பற்றிய நூலாகும்.

3. "ஆறு வரிசையில் வேதாகமம்" (Hexapola) என்ற நூலில் வேதாகமத்தின் ஆறு மொழி பெயர்ப்புக்கள் ஆறு சமாந்திரப் பந்திகளில் நிரல் படுத்தி எழுதப்பட்டிருக்கிறது. இது வேதாகம ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாகவிருந்தது. திருவிவிலியத்தை விளக்க சொற்கருத்து முறை (Literal), உளவியல் முறை (Psychological), ஆன்மீக முறை (Allegorical) என்ற மூன்று நுட்ப முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்றன.

தேசியனின் கலாபனையின்போது, ஒரிஜன் கைதுசெய்யப்பட்டு, வேதத்தை மறுதலிக்க மறுத்ததால் சிறையிலடைக்கப்பட்டார். கொடுமையாகத் துன்புறுத்தப்பட்டு, இறுதியாக 253 இல் தீரில் மரணமானார்.

## 6.2.2.4. புனித அத்தனாசியுஸ் (296-373)

இவர் எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாவில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் 296ல் பிறந்தார். ஆரம்பத்தில் அவருக்கு கிறிஸ்தவ கல்வி கிடைக்காத போதிலும், சிறு வயதிலிருந்தே துறவற வாழ்வில் பற்றுக் கொண்டிருந்தார். அலெக்சாந்திரிய ஆயரான அலெக்சாந்தரின் கீழ், முதலில் திருத்தொண்டராகவும், பின்பு செயலராகவும் கடமையாற்றினார். 325இல் இடம்பெற்ற நிசேயா பொதுச் சங்கத்தில் தம் ஆயருடன் சென்று பங்கெடுத்தார். அங்கு அவர், இன்னும் ஒரு திருத்தொண்டராகவே இருந்த போதிலும், ஆரிய பேதகத்துக்கு எதிராக முழுமூச்சாகப் போராடி, நிசேயா சங்கத்தில் மிகவும் பிரசித்திபெற்ற இறைவல்லுநராகத் திகழ்ந்தார். தமது 24வது வயதில் "இறைவார்த்-தையின் பிறப்பு" (The Incarnation of the Word of God) என்ற நூலை எழுதினார். அதைத் தொடர்ந்து 327இல் அலெக்சாந்திரியாவின் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு, 50 ஆண்டுகள் பணிபுரிந்தார். அவரில் காணப்பட்ட மனத்துணிவும், எதிர்ப்புகள், ஆபத்துகள் மத்தியில் காட்டிய அஞ்சா நெஞ்சமும் குறிப்பிடத்தக்கவை. நிசேயா சங்கத்தின் விசுவாச அறிக்கையை பாதுகாத்து, நிலைநிறுத்த அயராது உழைத்த வெற்றி வீரனாகக் கணிக்கப்பட்டார். ஆரிய பேதகம் நிசேயா சங்கத்தில் கண்டனம் செய்யப்பட்டாலும், அலெக்சாந்திரியாவில் அதற்கு பெரும் ஆதரவு இருந்தது. ஆரியர் அவரைத் தம் பிரதான எதிரியாகக் கருதி, அவரைத் தொலைக்க பல முறைகளில் முயற்சித்தனர். அவருடைய வாழ்கை வரலாறும், ஆரிய பேதகத்தின் வரலாறும் பெரும்பாலும் ஒன்றாகவே அமைந்திருந்தன. அவர் பலமுறைகளில் (336, 339, 356, 362) பல பொய்க் குற்றங்கள் சுமத்தப்பட்டு, ஆரியரின் தூண்டுதலால், பேரரசர் கொன்ஸ்தாந்தின், கொன்ஸ்தாந்தியுஸ், யூலியன் என்பவர்களால் நாடுகடத்தப்பட்டார். இதன் விளைவாக அவர் வெகுகாலம் (17 ஆண்டுகள்) தம் மறைமாவட்டத்துக்கு வெளியிலிருந்தே அதைப் பரிபாலிக்கவேண்டி ஏற்பட்டது. எனினும் அவர் மனந் தளராது எடுத்த

அயராத முயற்சிகளின் விளைவாக 381ம் ஆண்டில் கூடிய கொன்ஸ்-தாந்திநோபிள் பொதுச் சங்கத்தில் ஆரிய பேதகம் தோற்கடிக்கப்பட்டு, திருச்சபையின் கிறிஸ்தவ மரபுப் போதனை நிலைநாட்டப்பட்டது. புனித அத்தனாசியார் தப்பறைகளை கடுமையாக எதிர்த்தாலும், தவறிவர்களைச் சகித்து, அவர்கள் மட்டில் காருண்யமும், இரக்கமும் உடையவராகவிருந்தார்.

தமது நாடுகடத்தல்களின்போது வனாந்தரத்தில் புனித வனத்து அந்தோனியாருடன் சிலகாலம் தங்கியிருந்தார். அக்காலத்தில் ஆரியருக்கு எதிராகக் கிறிஸ்தவ மரபுப் கொள்கைகளை ஆதரித்துப் பல நூல்களை எழுதினார். இவற்றில் அவர் பேரரசர் கொன்ஸ்தாந்-தினுக்கு எழுதி அனுப்பிய "இறைவார்த்தை மனுவுருவாகுதல்", "மூவொரு இறைவன்", "கொன்ஸ்தாந்தியுசுக்கு அறிவுரைகள்", "ஆரிய பேதகத்திற்கு எதிரான உரையாடல்", "வேத விளக்கம்", "ஆரியரின் வரலாறு", "புனித வனத்து அந்தோனியார் வரலாறு" என்பன முக்கியமானவை.

1. "இறைவார்த்தை மனுவுருவாகுதல்" என்னும் நூல் அஞ்ஞான புராணங்கள், வழிபாடுகள், விசுவாச சத்தியங்கள் தவறான-வையென நிரூபித்து, பாவத்தினால் அழிந்தபோன மனுக்கு-லத்தின் மீட்புக்கு இறைவன் மனுவுருவாதலே ஒரே வழியெனக் காட்டுகிறது.

2. "மூவொரு இறைவன்" என்ற நூல் பரம திரித்துவத்தைப் பற்றியது. இது 12 பகுதிகளைக் கொண்டது. இப் புத்தகம் அத்தனா-சியாருக்கு "திருச்சபையின் தந்தை", "திருச்சபையின் மகா மறை மேதை" என்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்றுக் கொடுத்தது.

3. "ஆரிய பேதகத்திற்கு எதிரான உரையாடல்" ஆரிய பேதகத்தை விமர்சித்து, நிசேயா சங்கத்தின் தீர்மானங்களை நிலை-நிறுத்துகிறது.

அத்தனாசியார் ஓர் புகழ்பெற்ற இறையியலாளராகக் கருதப்படாவிடினும், அவர் இறையியலுக்குப் பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறார். நிசேயா விசுவாச அறிக்கையைத் தயாரிப்பதில் அவர் சிறப்புப் பங்காற்றியிருக்கிறார். இறைவனையும், மகனையும்,

மரியாவையும் பற்றிய உண்மைகளை முன்வைத்திருக்கிறார். நிசேயா சங்கத்தில் "மகன் தந்தையோடு ஒரே பொருளானவர்", தந்தைக்குச் சரிசமமானவர் என்பதை விளக்க "homo ousios" என்ற கிரேக்க பதத்தை அறிமுகம் செய்தவர் அவரே. "தந்தையினின்றும், மகனின்றும் புறப்பட்டு வரும் தூய ஆவியானவர்" எனற கருத்து முதன்முதலில் அவருடைய நூல்களிலேயே காணப்படுகின்றது. தந்தையும் மகனும் நித்தியமாக உள்ளனர் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது அவரது இறையியலின் சிறப்பு அம்சமாகும்.

அத்தனாசியார் தனது சொந்த ஊரின் ஆயராகி, 50 ஆண்டுகள் ஆரிய பேதகத்தின் சாட்டையாகவும், திருச்சபையின் விசுவாசத்தின் தூணாகவும், கீழ் நாடுகளின் சத்திய கலங்கரை விளக்காகவும் விளங்கினார். தன் ஆயர் பதவி காலத்தில் பல முறைகளில் நாடு கடததப்பட்டு, தன் மறைமாவட்டத்துக்கு வெளியே வாழ்ந்தாலும், வாழ்வின் கடைசி 6 ஆண்டுகளை அத்தனாசியார் தம் மறைமாவட்டத்தில் தம் மந்தையுடன் வாழ்ந்தார். இறுதியில் அவர் 373இல் அலெக்சாந்திரியாவில் இறந்தார்.

### 6.2.2.5. புனித எரோம் (331-420)

திருச்சபையின் மறைவல்லுநரும், சிறந்த வேதாகம வல்லுநருமான எயுசேபியுஸ் எரோம் இத்தாலியிலுள்ள ஸ்ரீடொன் என்னுமிடத்தில் ஒரு பணக்காரக் குடும்பத்தில் 331ம் ஆண்டு பிறந்தார். உரோமையில் கல்வி பயின்ற அவர், இலத்தீன், உரோமைய இலக்கியம், வாக்கலங்காரம் போன்ற பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றார். அவர் சிறுவயதிலிருந்து ஒரு கிறிஸ்தவராக வளர்க்கப்பட்டாலும், பதினெட்டு வயதில்தான் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவினார். 374இல் எரோம் துறவற வாழ்கையில் விருப்பம் கொண்டு, கீழ் நாடுகளை நோக்கிச் சென்றார். அவர் அந்தியோக்கியாவில் இருந்த பொழுது, கிறிஸ்து அவருக்கு கனவில் தோன்றி, "நீ சிசரோவைப் பின்பற்று-கிறவரேயன்றி, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவரல்ல" எனக் கூறினார். அதன் வழியாக தான் கிறிஸ்தவ இலக்கியங்களிலும் பார்க்க உரோமைய இலத்தின் இலக்கியங்களில் காட்டுகின்ற ஆர்வத்தை இயேசு கண்டிப்பதாக அவர் உணர்ந்தார். இதனை அடுத்து அவர்

சீரியா வனாந்தரத்திற்குச் சென்று, அங்கு ஐந்து ஆண்டுகள் மட்டில் ஏகாந்தியாக வாழ்ந்து, கடும் தவம் செய்தார். அக்காலத்தைப் பயன்படுத்தி எபிரேயம், கிரேக்கம் போன்ற கீழைத்தேய மொழிகளை நன்கு கற்றார். பின்பு அந்தியோக்கியா சென்ற அவர், அங்கு ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அந்தியோக்கிய ஆயர் பொலைனசுடன் கொன்ஸ்தாந்திநோபிள் சென்ற அவர். அங்கு இடம்பெற்ற கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச் சங்கத்திலும் பங்கெடுத்தார். அங்கு அவருக்கு திருத்தந்தை டமாசுஸைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. 382இல் உரோமைக்குத் திரும்பிய எரோம், திருத்தந்தை டமாசுஸின் செயலராகப் பணிபுரிந்தார். அவர் உரோமைப் பிரபுக்கள் மத்தியிலும் பிரபல்யமானவராகத் திகழ்ந்தார். திருத்தந்தை டமாசுஸ் அக்காலத்தில் இலத்தீனில் மொழிபெயர்க்கப் பட்டிருந்த புதிய ஏற்பாட்டு நூல்களை நன்கு ஆய்ந்து. திருத்தி, புதிய மெருகுடன் திருப்பி எழுதும்படி எரோமிடம் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க எரோம் திருத்தப்பட்ட புதிய ஏற்பாட்டையும், சங்கீத நூலையும் எழுதினார். திருத்தந்தை டமாசுஸ் 384இல் இறந்ததை அடுத்து, கீழைய நாடுகளுக்குச் சென்ற எரோம், அந்தியோக்கியா, பாலஸ்தீனா, எகிப்து போன்ற நாடுகளுக்குச் சென்று, இறுதியில் பெத்லேகேமில் தம் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார். தன் வாழ்வின் மிகுதிக் காலத்தை பாப்புவினால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட வேதாகம மொழிபெயர்ப்பிலும், விவிலிய ஆய்விலும், ஆராய்ச்சியிலும் செலவிட்டார். அவர் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்த திருவிவிலியம் “வல்கேட்” என் அழைக்கப்படுகிறது. இதன் நிமித்தம் அவர் திருச்சபையில் “வேதவிற்பன்னர்” என்ற பெயரைப் பெற்றுக் கொண்டார். இவற்றைவிட திருவிவிலியத்தை கற்பதற்கு உதவியாக சில நூல்களையும் எழுதினார். இணைத் திருமுறை நூல்களுக்கும், யூத நூல்களுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி முதன்முதலில் விளக்கம் கொடுத்தவர் இவரே. 397 இல் கூடிய கார்த்தேஜ் பொதுச்சங்கத்தில் திருவிவிலிய நூல் பட்டியலைத் (canon) தயாரிப்பதற்கு இவரது வழிகாட்டலும், பங்களிப்பும் மகத்தானவை. இறுதியில் 420இல் இறைபதம் அடைந்தார்.

அதிசிறந்த விவிலிய வல்லுநரும், எழுத்தாளரும், பேச்சாளரு-மாகிய எரோம் திருச்சபைக்கு ஆற்றிய முக்கிய பணி அவர் எபிரேயத்திலிருந்து இலத்தீனிற்கு மொழிபெயர்த்த இலத்தீன் விவிலிய

நூலாகும். அம் மொழிபெயர்ப்பு "இலத்தீன் வல்கேற்" என அழைக்கப்படுகிறது. 405இல் முற்றுப்பெற்ற இவ் இலத்தீன் விவிலிய மொழிபெயர்ப்பே திருச்சபையின் அதிகாரபூர்வமான வேதாகமமாக மேல் நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அம் மொழிபெயர்ப்பிலிருந்தே விவிலியம் ஏனைய மொழிகளுக்கு மொழிபெயர்க்கப் பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. அது தவிர, இலத்தீனுக்கு மொழிபெயர்க்கப்பட்டிருந்த புதிய ஏற்பாட்டு நூல்களையும், திருத்தி அமைத்து வெளியிட்டார். மேலும் எபிரேய, கிரேக்க மொழிகளில் தாம் பெற்றிருந்த பாண்டித்தியத்தைப் பயன்படுத்தி, பழைய, புதிய ஏற்பாட்டு நூல்களுக்கு விளக்கவுரைகளை எழுதினார். எயுசேபியசின் குறிப்பேடுகளையும், ஒரிஜனுடைய எழுத்தாக்கங்களை மொழிபெயர்த்தார். மேலும் ஆரிய, நெஸ்தோரிய, பெலாஜிய பேதக்ங்களுகு எதிராகவும் பல நூல்களை எழுதி வெளியிட்டார். அவருடைய வேதாகம அறிவின் நிமித்தம் "வேதாகமயியலின் தந்தை" எனப் பலராலும் போற்றப்படுகிறார். புனித பேதுருவின் காலம் தொடக்கம் 392 வரையிலான காலப் பகுதியில் வாழ்ந்த திருச்சபையின் தலைவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை தரும் "மிக உயரிய மனிதர்களின் வாழ்க்கைச் சரிதை" என்ற நூல் புனித எரோம் திருச்சபையின் வரலாற்றுக்கு அளித்த பெரும் கொடையாகக் கருதப்படுகின்றது.

## 6.2.2.6. புனித அகுஸ்தினார் (354-430)

மேல்நாட்டுப் பிதாக்களில் அதி சிறந்தவரான புனித அகுஸ்தினார் வட ஆபிரிக்காவிலுள்ள தகாஸ்த் என்னும் ஊரில் (தற்போதைய அல்ஜீரியா) நவம்பர் 13ம் நாள் 354இல் பிறந்தார். இவர் தந்தை பற்றிசியுஸ் ஒரு அஞ்ஞானி. அவர் ஒரு நிலப் பிரபும், அரசியல் வாதியுமாயிருந்தார். அகுஸ்தினாருடைய தாயாரான புனித மொனிக்கம்மாள் தேவபயமும், பண்பும், பக்தியுமுள்ள ஒரு கிறிஸ்தவள். தன்னுடைய செபம், பரித்தியாகத்தினால் தன் கணவர் இறக்குமுன் அவரைத் திருமறையில் சேர்த்தாள். தன் மகன் அகுஸ்தினிடத்திலும் விசுவாச வித்தை விதைக்க அரும்பாடுபட்டாள். தகாஸ்தில் கல்வி பயின்ற அகுஸ்தின், சிறுவயதிலேயே அந் நகரில் காணப்பட்ட கேளிக்கைகிலும், ஒழுக்கமற்ற வாழ்விலும் ஈடுபட்டார். 380இல் உயர்-

கல்வி பயில கார்த்தேஜ் பட்டணம் சென்ற அகுஸ்தின், சட்டப்படிப்பை மேற்கொண்டார். பின்னர் சட்டப் படிப்பைத் துறந்து, கலைப் படிப்பில் ஆர்வம் காட்டினார். சிற்றின்பக் கேளிக்கைகள் மலிந்திருந்த கார்த்தேஜ் பல்கலைக் கழகத்தில் ஒழுக்கமோ, அறநெறியோ சற்றேனும் கடைப்பிடிக்கப் படவில்லை. அதன் விளைவாக சிற்றின்ப வாழ்வில் மூழ்கிய அகுஸ்தின், ஒரு இளம்பெண்ணை தம் வைப்பாட்டியாகக் கொண்டு, அவளுடன் பல ஆண்டுகள் குடித்தனம் செய்தார். அவர்களுக்கு "ஆடேயோ டாற்றுஸ்" (கடவுள் கொடுத்த கொடை) என்ற ஒரு மகனும் இருந்தான். 373இல் சீசரோவின் "ஹொர்டென்சியஸ்" என்ற நூலைப் படித்ததை அடுத்து, அவருக்கு தத்துவ சாஸ்திரத்தில் பற்று வளர்ந்து, சிற்றின்ப கேளிக்கைகளைத் துறந்து, மனிக்கேயப் பேதகத்தின் மாணவரானார். 383இல் அதையும் கைவிட்டு, உரோமைக்குச் சென்று, வாக்கலங்கார பாடசலையொன்றை ஆரம்பித்தார். பின்னர் மாணவர்மட்டில் விரக்தி அடைந்து, அதை மூடிவிட்டு, இறுதியில் மிலானில் தங்கியிருந்து, ஒரு வாக்கலங்கார ஆசிரியராக கடமையாற்றினார். அவருடைய தத்துவ படிப்புகள் அவரை புதுப் ப்லற்றோனிக்க பேதகத்துக்கு இட்டுச் சென்றன.

அவர் மிலானில் வாழ்ந்த காலத்தில் மிலான் பேரராயரான அம்புறோசியாரின் கடுமையான செல்வாக்குகளுக்கு ஆளானார். அம்புறோசியாரின் மறை உரைகள் அவரின் உள்ளத்தை அழுத்தின. அகுஸ்தினுடைய சந்தேகங்களுக்கும், வினாக்களுக்கும் புனித அம்புறோசியார் அளித்த பதில்கள் அவருக்கு திருப்தி அளித்தன. கிறிஸ்தவத்தைப் படிக்க ஆசைகொண்டார். ஒரு நாள் "எடுத்துப் படி" என்ற ஒரு குழந்தையின் குரல் கேட்டு, வேதாகமத்தைத் திறந்து, புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் ஒரு பகுதியைப் படித்தார். மனந்திரும்பிய அவர், பல மாதகால தியானங்களுக்குப் பின், அம்புறோசியாரின் அறிவுரைகளாலும், புனித மொனிக்கம்மாளின் செபதபங்களின் பலனாலும், உறுதியான நல்ல தீர்மானம் எடுத்து, 387ம் ஆண்டு பெரிய சனிக்கிழமையன்று திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவத்தைத் தழுவினார். அவருடைய வைப்பாட்டியும், மகனும் இறந்ததை அடுத்து, உலக மகிமைகள், பெருமைகள் அனைத்தையும் துறந்து, தன் தாய் மொனிக்கம்மாளுடன் ஆபிரிக்காவுக்குச் செல்ல ஆயத்தம் செய்தார். அதற்கிடையில் அவர் தாய் புனித மொனிக்கம்மாள்

மரணமடைந்தாள். பின்பு அவர் ஆபிரிக்காவுக்குச் சென்று, தகாஸ்தாவில் ஒரு துறவற குழுவை ஆரம்பித்தார். 391இல் அவர் கிப்போ நகருக்குச் சென்றபொழுது, மக்கள் கூட்டத்தால் சூழப்பட்டு, அவர்கள் அவரைக் கிப்போ ஆயர் வலேரியுஸிடம் இட்டுச் சென்று, ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தினர். நான்கு ஆண்டுகளின் பின் கிப்போ இணை ஆயராக நியமனம்பெற்ற அவர், விரைவில் கிப்போ ஆயரானார். 395ம் ஆண்டு தொடக்கம் 430இல் மரிக்கும்வரை அவர் கிப்போ நகர ஆயராகப் பணிபுரிந்தார்.

அவர் ஆயராகப் பணிபுரிந்த காலத்தில் மறையுரைகள் ஆற்றுவதும், மறைமாவட்டத்தை நிர்வகிப்பதும், டொனற்றிசம், பெலாஜியனிசம், மனிக்கேயிசம் போன்ற பேதகர்களுடன் எதிர்த்து வாதாடுவதும், பலவகைப்பட்ட நூல்களை எழுதுவதும் அவருடைய முக்கிய பணிகளாய் அமைந்தன. பிரபல்ய எழுத்தாளரான் புனித அகுஸ்தினார், 113 நூல்களையும், 218 திருமுகங்களையும், ஐந்நூற்றுக்கு மேற்பட்ட மறை உரைகளையும் எழுதியிருக்கிறார். புனித அகுஸ்தி-னாருடன் இறையியலிலும், தேவ பக்தியிலும் ஒப்பிடப்படக் கூடியவர் புனித பவுல் ஒருவரேயென்பது மறைவல்லுநர் கருத்தாகும். அவர் எழுதிய நூல்களில் "வாழ்க்கை அறிக்கை" (தன்னிலை ஏற்பு), "இறைவனின் நகரம்", "மூவொரு இறைவன்" என்பன முக்கியமானவை.

1. "வாழ்க்கை அறிக்கை" அவரின் முன்னைய பாவ வாழ்க்கை-யையும், அத் தீய வாழ்விலிருந்து அவர் மனந்திரும்பி தூய வாழ்வை மேற்கொண்ட பல்வேறு நிலைகளையும் பாங்குடன் எடுத்துக்கூறி, அவரில் அரும்பெரும் செயல் பல புரிந்த இறைவ-னுக்கு நன்றி கூறுகின்றது.

2. புனித அகுஸ்தினார் எழுதிய அதிசிறந்த நூலான "இறைவனின் நகரம்" இன்றும் மாபெரும் கிறிஸ்தவ, உலக இலக்கியமாகக் கருதப்பட்டு, மேல்நிலை படிப்புக்கு பாடநூலாகத் திகழ்கின்றது. இங்கு அகுஸ்தினாருடைய தத்துவ, இறையியல், அரசியல் சிந்தனைகளின் சாரம்சம் காணப்படுகின்றது. இந் நூல் 410ம் ஆண்டில் உரோமைப் பேரரசு அழிவுற்றதற்கு அஞ்ஞானிகள் கிறிஸ்தவர்கள்மேல் பழிசுமத்திய சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டது. அதன் முதற் பகுதி அஞ்ஞானம் தவறென்பதை எண்பிக்க,

இரண்டாம் பகுதி கிறிஸ்தவ கோட்பாடுகளைத் தெளிவாகக் கூறி, அவற்றை ஆதரித்து நிலைநிறுத்துகிறது. இறைபராமரிப்பே வரலாற்றிற்கு ஒளியூட்டி, வழிநடத்திச் செல்கிறதென்பதே இந்நூலின் மையக் கருத்தாகும்.

3. "மூவொரு இறைவன்": பரம திரித்துவம் பற்றிய அழகிய ஆழமான உரையாடல்களைக் கொண்டுள்ளது. மேலும் மனிக்கேய, டொனாற்றிச, பெலாஜிய பேதகங்களுக்கு எதிராக பல நூல்களையும் எழுதியுள்ளார்.

**அகஸ்தினாரின் இறையியல்**

புனித அகஸ்தினார் தம் வாழ்நாளில் மனிக்கேய, டொனாற்றிச, பெலாஜிய பேதகங்கள் போன்ற பல தப்பறையான போதனைகளுக்கு எதிராக போராட வேண்டியிருந்தது. அதைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி தெளிவான இறையியலை கட்டியெழுப்பினார். மனிக்கேயருக்கு எதிராக விசுவாசமும் அறிவும், பாவம் பற்றிய கருத்துக்களைத் தெளிவு படுத்தினார். புலன்களால் உணரப்படுகின்ற இச்சைகள் எதையுமே விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளுதல் மடைமை எனக் கருதிய மனிக்கேயருக்கு எதிராக, விசுவாசமானது ஞானத்துக்கான மரியாதையென்றும், உண்மையை விளங்குவதற்கு விசுவாசம் அவசியமென்றும் கூறினார். மேலும் விசுவாசம் மதத்தோடு மட்டும் சம்பத்தப்பட்ட விடயமல்ல, மாறாக ஞானம் சமபந்தமான சகல விடயங்களிலும் கட்டாயம் இருக்கவேண்டிய ஒரு பண்பு என்பதை வலியுறுத்தினார்.

டோனத்தேய பேதகருக்கு எதிராக குருக்களால் வழங்கப்படுகின்ற அருளடையாளங்களில் முக்கியத்துவததை வெளிக்காட்டி, பணிக் குருத்துவத்தைப் பெறாதவர்கள் அவற்றை வழங்குவதினால் அருளடையாளங்களினால் அருளப்படுகின்ற அருள் கிடைக்க மாட்டாதெனச் சுட்டிக்காட்டினார். மேலும் திருச்சபையின் பரிசுத்ததனம் அதன் உறுப்பினர்கள் இறைவாழ்வுடன் வாழ்வதால் மட்டுமல்ல, அதன் நோக்கம் பரிசுத்தமாயிருத்தலே என எடுத்துக் காட்டினார். அருளடையாளங்களை வழங்குபவர் இயேசுக் கிறிஸ்துவே என வலியுறுத்தி, நாம் அருளடையாளங்களை வழங்கும் குருக்களின் குறைபாடுகளை நினைவிற் கொள்ளாமல், அவற்றை வழங்கும்

கிறிஸ்துவையும், அவற்றின் பரிசுத்த தன்மையையுமே நோக்க வேண்டுமெனக் கூறினார்.

மேலும் பிளேற்றோவின் தத்துவங்களைப் பயன்படுத்தி, பல்வேறு பேதகங்களுக்கும் தப்பறைகளுக்கும் எதிராக இறையியல் ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் உண்மைகளை விளக்கி முன்வைத்தார். நாம் வாழும் உலகம் முழுமை அற்றது. அதனைப் பற்றிய அனைத்து நிலைமைகளையும் அறிந்துகொள்ள முடியாது. நிலை வாழ்வில் யாவற்றையும் விளங்கிக்கொள்ள முடியுமென்பதும், நித்திய ஞானம் இறைவனுக்கு மட்டும் உரியதென்பதும் அவருடைய கருத்தாகும்.

## 6.2.2.7. புனித அலெக்சாந்திரியா சிறில் (376-444)

எகிப்தில் 376ம் ஆண்டில் பிறந்த புனித சிறில், அக்காலத்தில் அலெக்சாந்திரிய ஆயராகவிருந்த தியோபிலசின் மருமகனாவார். அலெக்சாந்திரிய இறையியல் கல்லூரியில் இறையியல் பயின்ற அவர், 412ம் ஆண்டில் ஆயர் தியோபிலசின் மறைவை அடுத்து, அவரிடமாக அலெக்சாந்திரிய ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். ஐந்தாம் நூற்றாண்டில். அவர் மிகவும் பிரசித்திபெற்ற ஒரு மறைவல்லுநராகவும், திருச்சபையில் செல்வாக்கு நிறைந்த இறையியலாளராவும் திகழ்ந்தார். தேவ பக்தி நிறைந்த, மரபு வழிக் கிறிஸ்தவனாகிய அவர், அஞ்ஞான முறைகளுக்கும், தப்பறைக் கொள்கைகளுக்கும் எதிராக போர்புரிந்தார். அவருடைய பிரதான எதிரி கொன்ஸ்தாந்திநோபிள் ஆயரான நெஸ்தோரியுசும், அவர் ஆரம்பித்த நெஸ்தோரிய பேதகமுமாகும். நெஸ்தோரியுஸ், ஆரியுசின் இயேசுக் கிறிஸ்து இறைவனல்ல என்ற பேதகத்துக்கு எதிராக வாதாடி, கிறிஸ்துவின் இறைத் தன்மையை மிகைப்படுத்திப் போதித்து, இறுதியில் இயேசுவில் தெய்வ ஆள், மனித ஆளென இரு ஆட்கள் உண்டென்றும், மரியாள் இயேசு மனிதனின் தாய் மட்டுமேயன்றி, இயேசு இறைவனின் தாயல்லவென்ற பேதகத்துக்கு ஆளானார். இந்த நெஸ்தோரிய வேதபேதகத்தை ஆராய எபேசில் 431இல் திருத்தந்தை 1ம் செலஸ்தினால் கூடப்பட்ட பொதுச்-சங்கத்திலே புனித சிறில் அதிசிறந்த இறையியல் வல்லுநராகச் செயல்பட்டார். இயேசு மனித இயல்பும், தெய்வ இயல்பும் ஒருங்கே கொண்ட ஓர் இறை ஆள். மரியாள் ஒரு இயல்பைப் பெற்றெடுக்க-

வில்லை, மாறாக ஒரு ஆளையே பெற்றெடுத்தாள். இந்த இறை ஆள் இயேசுவைப் பெற்றெடுத்த மரியாள், உண்மையாகவே இறைவனின் தாயென எபேசு சங்கம் பிரகடனம் செய்தது. புனித சிறில் "மரியாள் இறைவனின் தாய்" என்ற எபேசு சங்கத்தின் தீர்மானத்தை நிலைநிறுத்த அயராது உழைத்து, பல துன்பங்களைப் அனுபவிக்க வேண்டியிருந்தது. பரம திரித்துவம், கிறிஸ்துவின் இயல்புபற்றி கிறிஸ்தவ இறையியலுக்கு அதிகம் பங்களிப்புச் செய்த சிறில், சிறந்த மரியியலாளராகத் திகழ்ந்தார் இறுதியமட்டும் அலெக்சாந்திரிய ஆயராகப் பணிபுரிந்த சிறில், 444இல் மரித்தார்.

பண்டைய கிறிஸ்தவ இலக்கியத்தில் புனித சிறில் ஒரு முக்கிய எழுத்தாளராகத் திகழ்கிறார். அவருடைய இலக்கிய ஆக்கங்களை இரண்டாக வகைப்படுத்தலாம். 428ம் ஆண்டுமட்டும் அவரின் ஆக்கங்கள் வேதாகம விளக்கங்கள், ஆரிய பேதகத்துக்கு எதிரான வாதங்கள் பற்றியவையான உள்ளன. அதற்குப் பின் எழுதப்பட்டவை நெஸ்தோரிய பேதகத்துக்கு எதிரானவை.

1. "ஆவியிலும் உண்மையிலும் ஆராதனையும் வழிபாடும்" என்ற நூல் பஞ்சாகமம் பற்றிய உருவக விளக்க உரையாகும். இவை புனித சிறிலுக்கும் பல்லிடியுஸ் என்பவருக்குமிடையே நடைபெறும் ஒரு உரையாடலாகத் தரப்படுகின்றன.

2. "பரிசுத்த பரம திரித்துவம் பற்றிய தொகுப்பு" என்னும் நூல் ஆரிய பேதகத்தை விமர்சித்து, அது தவறென நிரூபிக்கிறது.

3. "நெஸ்தோரியுசுக்கு எதிரான ஐந்து பாகங்கள்" என்ற நூல் நெஸ்தொரியுஸ் வெளியிட்ட போதனைகளின் தொகுப்பை விமர்சித்து, அவற்றிலுள்ள தவறுகளை சுட்டிக்காட்டுகின்றது.

**தேர்ச்சி மட்டம் 6.3.** ஐரோப்பாவில் முதன் முதல் திருச்சபை பரவியமை பற்றிய வரலாற்றை விளங்கிக் கொள்வர்.

எருசலேமில் ஒரு சிறிய கடுகு மணிபோல் பன்னிரு சீடர்களுடன் ஆரம்பித்த திருச்சபை, முதல் மூன்று நூற்றாண்டுகளில் படிப்படியாக வளர்ந்து, படர்ந்து விரைவில் பல நாடுகளுக்கும் பரவி, பெரியதொரு விருட்சமாக மாறியது. திருச்சபை ஆரம்பித்த காலத்தில் பாலஸ்தீன நாடு உரோமையரின் ஆட்சியின் கீழ், உரோமைப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. எனவே எருசலேமில் ஆரம்பமாகிய திருச்சபை படிப்படியாக் உரோமைப் பேரரசெங்கும் இலகுவாகப் பரவக்கூடிய-தாகவிருந்தது. பாஸ்காத் திருவிழாக் காலத்தில் கடமைக்காக பேரரசின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து எருசலேம் சென்றிருந்த உரோமைப் படைவீரர்கள், தம் கடமைகளை முடித்துக்கொண்டு தம் சொந்த நாடுகளுக்குத் திரும்பிச் சென்றபொழுது, அவர்கள் தாம் எருசலேமில் கண்ட கிறிஸ்துவின் மரணம், உயிர்ப்பு போன்ற நிகழ்ச்சிகளை தம் ஊரவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். மேலும், உரோமைப் பேரரசின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பெந்தேகோஸ்து திருவிழாவிற்காக எருசலேமில் பெருந் திரளாகக் கூடியிருந்த கிரேக்க மொழிபேசும் (யவன பண்பாட்டு) யூதர்கள், திருவிழா முடிந்து தம் நாடுகளுக்குச் சென்றதும், எருசலேமில் தாம் கண்ட நிகழ்ச்சிகளையும், அங்கு தாம் கேட்ட அப்போஸ்தலர்களின் போதனைகளையும் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். புனித ஸ்தேவானுடைய வேதசாட்சி மரணமும், அதைத் தொடர்ந்து எருசலேமில் ஆரம்பித்த யூத கலாபனைகளும் திருச்சபையின் வளர்ச்சிக்கு வழிசமைத்துக் கொடுத்தன. கிறிஸ்தவர்கள் எருசலேமிலிருந்து வெளியேறி, திக்கெட்டும் சிதறுண்டு ஓடினர். இவ்வாறு ஓடினவர்கள் தாம் தஞ்சமடைந்த இடங்களிலெல்லாம் நற்செய்தியை அறிவித்து, கிறிஸ்தவ சபைகளை தாபித்தனர்.

திருத்தூதர்களின் தீவிர போதனையால் திருச்சபை திக்கெட்டும் பரவி வளர்ந்து படர்ந்தது. சிறப்பாக. புனித பவுல் பல மறைத் தூதுரைப் பயணங்களை மேற்கொண்டு, உரோமைப் பேரரசின் காலனித்துவ நாடுகளுக்குச் சென்று, அங்கு செய்த தீவிர போதனைகள் வழியாகவும் திருச்சபையை வளர்த்தார். குறிப்பாக அவர் எருசலேமில்

கைது செய்யப்பட்டு, உரோமைக்கு கைதியாக விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு தனி வீட்டில் சிறையிலிருந்து ஆற்றிய பணியினால் (58) திருச்சபை உரோமையிலும், இன்னும் பல நாடுகளிலும் பரவியது. புனித பவுல் 57 இல் உரோமையருக்கு எழுதிய திருமுகம் உரோமையில் ஏற்கனவே ஒரு கிறிஸ்தவ சமூகம் இருந்ததைக் காட்டுகிறது. ஐரோப்பாவில் முதன் முதலாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட இடம் பிலிப்பியாகும். புனித பவுல் தன் இரண்டாம் மறைபோதக பயணத்தின்போது (50-52), பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படி, மசதோனியா நாட்டுக்குச் சென்று, பிலிப்பியில் நற்செய்தியைப் போதித்து, அங்கு ஒரு சிறிய அழகான கிறிஸ்தவ சமூகத்தைத் தாபித்தார். பின்பு தெசலோனிக்காவிலும், கொரிந்திலும் நற்செய்தியைப் போதித்து, அங்கும் கிறிஸ்தவ சமூகங்களை ஏற்படுத்தினார்.

இவற்றைவிட உரோமைப் பேரரசின் அமைப்பு, நிர்வாகம், அதன் கீழ் எங்கும் நிலவிய அமைதி, அங்கிருந்த நல்ல வீதிகள், போக்குவரத்து வசதிகள், எல்லா நாடுகளும் ஒரே ஆட்சியின் கீழ் இருந்தமையால் எங்கும் தங்கு தடையின்றி பாதுகாப்பாக பயணம் செய்யக்கூடிய ஏற்பாடுகள், எங்கும் கிரேக்கம் பேசப்பட்டதால், கிரேக்க மொழியில் எங்கும், எவருடனும் தொடர்புகொள்ளக் கூடியதாக இருந்தமை என்பன திருச்சபை மிகத் துரிதமாகப் பருவுவதற்கு வழி சமைத்துக் கொடுத்தன. இவ்வாறு பல்வேறுபட்ட வழிகளில் கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி பேரரசெங்கும் போதிக்கப்பட்டு, அங்கெல்லாம் திருச்சபை தாபகம் பெற்றது. திருத்தூதர் காலத்திலேயே திருச்சபை எருசலேம், யூதேயா, சமாரியா, கலிலேயா, அந்தியோக்கியா, சிப்புருஸ் தீவு, பம்பிலியா, கலாத்தியா, பேர்கா, பிசியா நாட்டு அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, டேர்பே, பிலிப்பி, எபேசு, தியாத்திரா, சர்தை, இலவோதிக்கேயா, தெசலோனிக்கா, கொரிந்து, உரோமை, சிமிர்னா, போந்து, கப்பதோச்சியா, சின்ன ஆசியா, பித்தினியா போன்ற நாடுகளில் பரவியிருந்ததை நாம் திருத் தூதர் பணி நூலிலும், திருவெளிப்பாடு நூலிலும், புனித பேதுருவின் திருமுகங்களிலும் படிக்கிறோம்.

முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் திருச்சபையை முற்றாக அழிப்பதற்கென பேரரசெங்கும் நடைபெற்ற கொடூர உரோமைய கலாபனைகளும் திருச்சபையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. ஏனெனில் கலாபனைகளால் திருச்சபைக்கு ஏற்பட்ட நன்மைகள் பல.

அவற்றின் வழியாக கிறிஸ்தவர்களின் விசுவாசம் உறுதிப்படுத்தப்பட்டது. கிறிஸ்தவர்கள் மத்தியில் தாராள குணமும், தியாக வாழ்க்கையும் வளர்ந்தன. அவர்கள் தம் தியாகம், பொறுமை, மறைசாட்சி மரணம் வழியாக தம் விசுவாசத்துக்கு அளித்த சாட்சியம், மறை உண்மைகளின் உன்னதத்தையும், வலிமையையும் எடுத்துக்காட்டின. கலாபனைக்காரர் முன் அவர்கள் காட்டிய மனத் திடம், தைரியம், கலானைக்காரரையே சிந்திக்க வைத்தன. தேவபலத்தை உணர்ந்து, அவர்களும் திருச்சபையைத் தழுவினர். இவ்வாறு மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாக மாறியது. கலாபனைகளைத் தொடர்ந்து 312இல் வெளியிடப்பட்ட மிலான் அரச சாசனமும், திருச்சபைக்குக் கிடைத்த மத சுதந்திரமும், 337இல் பேரரசர் கொன்ஸ்தாந்தின் மனமாற்றமும், 380இல் கிறிஸ்தவம் பேரரசின் மதமாகப் பிரகடனம் செய்யப்பட்டதும் திருச்சபையின் வளர்சிக்குப் பெரும் பங்காற்றின. ஆரம்பத்தில் கீழைத்தேய நாடுகளிலேயே திருச்சபை அதிகம் பரவியிருந்தாலும், வெகு விரைவில் மேற்கத்தேய நாடுகளிலும், சிறப்பாக ஐரோப்பாவிலும் திருச்சபை பரவ ஆரம்பித்தது. இதன் விளைவாக மூன்றாம் நூற்றாண்டில் திருச்சபை ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களில், மசதோனியா, எகிப்து, கிறீஸ், இல்லிரியா, இத்தாலி, இஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, பேசியா, அரேபியா போன்ற நாடுகளிலெல்லாம் தாபிக்கப் பட்டிருந்தது.

ஆர்மேனியாதான் முதன் முதல் கிறிஸ்தவ நாடாக மாறிய ஐரோப்பிய நாடாகும். "ஒளிரச் செய்பவர்" என அழைக்கப்படும் புனித கிரகோரியார்தான் ஆர்மேனியா நாட்டின் அப்போஸ்தலர். இவர் அர்சாசிட் அரச குலத்தவர். இக் குலத்தவர்கள் கொன்று குவிக்கப்பட்ட வேளை-யில், சிறுவன் கிரகோரி ஒரு பணிப் பெண்ணால் காப்பாற்றப்பட்டான். கப்பதோசியாவிலுள்ள செசாரியாவில் கிறிஸ்தவ மறைக் கல்வி பயின்றான். 286 இல் தாய் நாடு திரும்பிய அவர், 3வது திரித்தாத்தஸ் அரசரையும், பெரும்பான்மையான பிரபுக்களையும் மனந்திருப்பி, கிறிஸ்தவ மறையில் சேர்த்தார். விரைவில் கிறிஸ்தவ மதம் ஆர்மேனியாவின் தேசிய மதம் எனப் பிரகடனம் செய்யப்பட்டது. தொடர்ந்து 340 இல் அபிசீனியாவிலும் திருமறை போதிக்கப்பட்டு, அதுவும் கிறிஸ்தவ நாடாகியது.

## 6.3.1. ஐரோப்பாவில் திருச்சபை வளரச்சி அடைதல்

(5-9 நூற்றாண்டு வரை)

மிலான் அரச சாசனப் பிரகடனத்துடன் (313), திருச்சபை சுதந்திரம் பெற்றிருந்தாலும், அக்காலத்தில் தோன்றிய பேதகங்கள், இடம்பெற்ற மிலேச்சரின் படையெடுப்புகள் திருச்சபையின் வளர்ச்சியைச் சற்று தாமதப்படுத்தின. எனினும் ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில், இறைவன் அனுப்பிய சிறந்த மறை பரப்பாளர்களின் அயராத உழைப்பினால், திருச்சபை ஐரோப்பிய நாடுகளில் பரவியது. ஐந்தாம், ஆறாம், ஏழாம, எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் திருச்சபை, ஐரோப்பாவில் பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து போன்ற பல நாடுகளில் பாரவியது. இவற்றை சற்று விரிவாகப் பார்ப்போம்.

உரோமைப் பேரரசும், அதன் தலைநகரமாகிய உரோமையும் என்றும் அழியா நித்திய அரசாக, நித்திய நகரமாகக் கருதப்பட்டு வந்தன. கிறிஸ்தவர்களும் அத்தகைய எண்ணத்துடனேயே இருந்தனர். ஆனால் வெகு விரைவில் அக் கனவுகள் தவிடுபொடியாகின. இரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் இடம்பெற்றுவந்த தொடர்ச்சியான மிலேச்சரின் முற்றுகையினாலும், ஜேர்மானிய குடிமக்களின் படையெடுப்புகளினாலும் இத்தாலியும், உரோமைப் பேரரசின் மேற்குப் பகுதியும் சிதைத்து நொறுக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்டன. உரோமைப் பேரரசின் எந்தவொரு மாகாணமென்றாலும் அதிலிருந்து தப்பவில்லை. 410ம் ஆண்டில் விசிகோத் எனும் கோத்திரத்தினர் மேற்குப் பேரரசைத் தாக்கி, முற்றுகையிட்டனர். அதனைத் தவிர வன்டல், ஹன்ஸ் கோத்திரத்தினரும் மற்றொரு பகுதியைக் கைப்பற்றினர். 476ம் ஆண்டளவில் முழு மேற்கத்தைய பேரரசும் மிலேச்சரின் ஆட்சியின் கீழ் வந்தது. ஐரோப்பாவின் அரசியல் அமைப்பின் தோற்றமே உருக்குலைந்து, முற்றுமுழுவதுமாக மாறிவிட்டது. உரோமைப் பேரரசின் பாழடைந்த இடங்களில் எல்லாம் தனி சுதந்திர ஜேர்மனிய நாடுகள் தோன்றின. எங்கும் பல இனங்களும், தாபனங்களும், மதங்களும் கலந்து காணப்பட்டன. இத்தாலியில் லம்பார்டிய அரசும், இஸ்பானி-யாவில் விசிக்கோதிக் மரபினரின் அரசும், காலில் பிராங்கரின் அரசும்,

பிரிட்டனில் ஏழு ஆங்கிளோ-சாக்ஸன் அரசுகளும் அமைக்கப்பட்டன. பேரரசர் ஜஸ்தீனியனின் தளபதிகள் ஆபிரிக்காவிலிருந்த வாந்தல்களின் அரசை அழித்தனர். அவர்களால் ஆஸ்திரோ கோதிக் அரசும் அழிக்கப்பட்டது. உரோமைப் பேரரசு அரசியல் செயற்பாடுகள் ரீதியாக கிழக்கு மேற்குவெனப் பிளவுபடத் தொடங்கியது. பேரரசின் கிழக்குப் பகுதி கிரேக்க மொழி, கலை, கலாச்சாரத்தக்கு முக்கியத்தவம் கொடுத்தவேளையில் மேற்கில் இலத்தின் மொழி, கலை, கலாச்சாரம் முக்கியத்துவம் பெற்றது. மேற்குப் பேரரசில் பிரச்சினைகள் நிறைந்திருந்து வேளை கிழக்குப் பிரதேசத்தில் சற்று அமைதி நிலவியது. திருச்சபைக்கும் அரசுக்குமிடையே அத்துணை இடைவெளி நிலவவில்லை. பல பேரரசர்கள், இறையியலாளர்கள் திருச்சபையின் ஆட்சியாளராக செயலாற்றினர். கிழக்குத் (பைசாந்நிய) திருச்சபையில் கிறிஸ்தவர்கள் மிகவும் உயர்நிலையில் இருந்தனர். வழிபாட்டு முறைகளில் விளக்கத்துடனான ஆராதனைகளுடன் முன்னேற்றம் ஏற்பட்டது. பொது வழிபாட்டு விழாக்கள் அழகான நாடக ரீதியான வடிவமொன்றைக் கொண்டிருந்தன. பாரம்பரியமாக வரும் வழிபாடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. ஜோண் கிறிசொஸ்தோமின் பொது வழிபாடுகள் முக்கிய இடம் எடுத்தன. தேவதாய்க்கும், புனிதர்களுக்கும் கூடிய வணக்கமும், பக்தியும் கொடுக்கப்பட்டன.

மேற்கு உரோமைப் பேரரசில் மிலேச்சரின் முற்றுகையின் அழிவிலிருந்து தப்பிய ஒரேயொரு தாபனம் திருச்சபை மட்டுமே. அதுமட்டுமல்ல, அக்காலத்தில் மிலேச்சர்களுக்கு திருச்சபையின் உதவி தேவைப்பட்டது. அவர்களுக்கு அவசரம் தேவைப்பட்ட மத ஆசீர், ஒழுங்கு, ஒழுக்கம், கல்வி, பண்பாடு, நாகரீகம் போன்றவற்றின் ஒரே ஊற்றாகத் திருச்சபையே எஞ்சியிருந்தது. திருச்சபையும் அவர்களின் அந்த எதிர்பார்ப்பிற்குப் பிரமாணிக்கமாயிருந்து, அந்த பண்பற்ற, அகங்காரம் கொண்ட கொடிய மிலேச்சர்களை சீர்திருத்தி, மனந்திருப்பி, கிறிஸ்துவிடம் கொணர்ந்து சேர்க்க அர்ப்பணிப்புடன் செயல்படத் தொடங்கியது. மிலேச்சர்கள் பொதுவாக அஞ்ஞானிகளும், விக்கிர ஆராதனைக்காரரும், ஆரிய பேதகம் போன்ற தப்பறைகளை அனுசரிப்பவர்களாயும் இருந்தார்கள். இந்த முரட்டுச் சாதிசனங்களுக்கெல்லாம் துறவிகள் வழியாக திருச்சபை திருமறையைப் போதித்து, அவர்களை மனந்திருப்பி, படிப்படியாகச் சீர்திருத்தம் அடையச் செய்தது.

நான்காம் நூற்றாண்டில் கோதிக்கரும், வாந்தல்களும், லம்பாடியர்களும், புர்காந்தியர்களும் சீர்திருத்தப்பட்டு, மனந்திரும்பி, திருமறையில் சேர்ந்தனர். இதில் கிறிமெயா ஆயர் தியோபிலஸ் பெரும் பங்காற்றினார். கப்பதோசியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட வுலபிலா என்பவரும் அவருக்கு உதவியாகவிருந்தார். அவரே திருவிவிலியத்தை கொதிக் மொழியில் மொழிபெயர்த்தவர். அக்காலத்தில் ஆரிய பேதகத்தினரே கீழைய நாடுகளில் மேலோங்கி இருந்தபடியால், ஆரிய ஆயர்களும், குருக்களுமே அதிகமாக அங்கு பணிபுரிந்தனர். அம் மதமே கொதிக் மக்களிடையே போதிக்கப்பட்டது. இதனால் கத்தோலிக்ருக்கும் அவர்களுக்குமிடையே மோதல்களும் ஏற்பட்டன. படிப்படியாக ஆரிய பேதகரை மனந்திருப்பி, தம் பேதகத்தைக் கைவிட்டு, திருச்சபையில் சேரச் செய்தனர். இக்கால கட்டத்தில் கீழைத் தேய திருச்சபையில் டோனாற்றிச பேதகம், பெலாஜிய பேதகம், நெஸ்தோரிய பேதகம், இயுக்திக்கேய பேதகம் என பல பேதகங்கள் தோன்றின. இப் பேதகங்களின் நிமித்தம் சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும், பல பொதுச் சங்கங்கள் கூடப்பட்டு, திருச்சபையின் படிப்பினைகள் விரிவாக ஆராயப்பட்டு, இறையியல் எண்ணக்கருக்களிலும், போதனையிலும் பாரியளவு வளர்ச்சி, முன்னேற்றம் ஏற்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக பல புதிய நாடுகளில் திருச்சபை வளர்ந்து பரவியது.

**பிரான்ஸில் திருச்சபை**

485 இல் காலியில் தம் அரசை ஏற்படுத்திய பிராங்கர்கள், அஞ்ஞானிகளாகவே இருந்தனர். பிராங்கர்களின் அரசர் குளோவிஸ் ஒரு பிற மதத்தவர். அவர் பர்கந்திய அரசரான கோன்த்போவின் மருமகள் குளோதில்டாவைத் திருமணம் செய்திருந்தார். அவள் ஒரு கிறிஸ்தவள். தன் கணவனை மனந்திருப்ப பல முயற்சிகளை மேற்கொண்டாள். அச் சமயம் அலமான் இனத்தவர்கள் ரைன் நதியைக் கடந்து, பிராங்கர்களின் நாட்டைப் பிடிக்க வந்தனர். குளோவிஸ் 496 இல் அவர்களுக்கு எதிராக ரைன் கணவாயில் போர்தொடுத்தார். அதில் அவர் தோல்வியடையும் நிலை ஏற்பட்டது. அவ்வேளையில் அவர், "குளோதில்டா ஆராதிக்கும் இயேசுநாதரே! இப் போரில் உம் உதவியை வேண்டுகிறேன். வெற்றி பெற்றால் நீரே என் தெய்வம் என ஏற்றுக் கொள்வேன்" என உரத்த குரலில் சொன்னார். போர்

தொடர்ந்து நடந்தது. இறுதியில் அல்மான் இனத்தவர்கள் தோல்வியடைந்து, அங்கிருந்து ஓடித் தப்பினர். குளோவிஸ் தான் வாக்களித்தபடி, மறைக் கல்வி கற்று, ரீம்ஸ் நகரப் பேராயர் ரெமிஜியுஸ் ஆண்டகையின் கையால் 24 மார்கழி 496 இல் ஆடம்பர திருமுழுக்குப் பெற்றார். அன்று அவருடன் கூட 3000 போர் வீரரும் திருமுழுக்குப் பெற்றனர். அனைத்துப் பிராங்கர்களும் விரைவில் திருமறையைத் தழுவினர். 5ம் நூற்றாண்டில் முழுக் கத்தோலிக்க தேசமாகவிருந்த ஒரே நாடு பிரான்ஸ்தான். எனவே திருத்தந்தை பாப்பு "திருச்சபையின் மூத்த மகள்" என்ற சிறப்புப் பட்டத்தை அதற்கு அளித்தார். 497 இல் பாரிஸ் குளோவிசின் தலைநகரமாகியது. பிராங்கர்கள் தங்கள் புதிய மதத்தையிட்டு பெருமைப்பட்டனர். அதைப் பாதுகாக்க எவ்வேளையிலும் தயாராகவிருந்தனர்.

**இங்கிலாந்தில் திருச்சபை**

இங்கிலாந்தின் அப்போஸ்தலரென அழைக்கப்படுபவர் பாப்பு மகா கிரகோரியார் ஆவார். 529 இல் இத்தாலியில் மொன்றே கசினோ என்னுமிடத்தில் புனித பெனடிக்றினால் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபையைச் சேர்ந்தவர். அச் சபை திருச்சபையின் மறைபரப்புப் பணியில் பெரும் பங்காற்றி உள்ளது. திருத்தந்தையாயிருந்த மகா கிரகோரியார் 596 இல் அதே சபையைச் சேர்ந்த சேலியன் மடத்து தலைமைத் துறவியாகவிருந்த அகுஸ்தீனை, 40 துறவிகளுடன் இங்கிலாத்துக்கு அனுப்பினார். அவர்கள் பிரான்ஸ் நாடு சென்றனர். அங்கு பாப்புவின் பணிப்புரையின்படி அகுஸ்தின் ஒரு ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின் அவர்கள் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து, தானெட் என்ற தீவில் இறங்கினர். அவர்களுடைய வருகைக்கு முன்னரே பேரரசுக்கு உட்படாத இங்கிலாந்தின் சில பகுதிகளில் திருச்சபை பரவியிருந்தது. அகுஸ்தின் இங்கிலாந்து சென்ற காலத்தில் கென்ற் பகுதியை எத்தல்பர்ட் என்ற அரசர் ஆட்சி செய்தார். அவருடைய மனைவி பிராங்குகளின் இளவரசி பெர்தா ஒரு ஆர்வமுள்ள கிறிஸ்தவ பெண். எனவே அரசர் எத்தல்பர்ட் அவர்களை வரவேற்று, தன் நாட்டில் கிறிஸ்தவத்தைப் போதிக்க அவர்களுக்கு அனுமதி அளித்தார். அதுமட்டுமன்றி அவர்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்து கொடுத்தார். கான்டர்பரி பட்டணத்துக்கு வெளியேயிருந்த

உரோமானியர் காலத்தில் கட்டப்பட்ட புனித மார்ட்டீன் தேவாலயத்தையும் அவர்களுக்கு அளித்தார். 597ம் ஆண்டு, தூய ஆவியின் திருநாளன்று, அரசர் எத்தல்பர்ட் திருமுழுக்குப் பெற்றார். அவரைப் பின்பற்றி மக்களில் பெரும்பாலானோர் திருமறையைத் தழுவினர். தொடர்ந்து எஸக்ஸ் மாகாணத்திலும் திருமறை பரவியது. 601 இல் பாப்பு கிரகோரியார் ஆயர் அகுஸ்தினை இங்கிலாந்து நாட்டின் ஆயராக நியமித்தார். அத்துடன் இன்னும் பல துறவிகளையும் இங்கிலாந்தில் பணிபுரிய அனுப்பி வைத்தார். அகுஸ்தினார் இலண்டனிலும், ராச்செஸ்டரிலும் மறை மாவட்டங்களை அமைத்து, கான்டர்பரியில் புனித பேதுரு பாவுலு குருமடத்தையும் கட்டினார்.

அகுஸ்தினுக்குப் பின்னர் புனித பாலினுஸ், புனித கொலம்பா, பனித அய்டன், புனித பினான் என்ற அயர்லாந்துப் போதகர்கள் இங்கிலாந்து வந்து மறைபரப்புப் பணி புரிந்தனர். பினான் ஆங்கிள்ஸ் அரசர் பெண்டாபின் மகன் பீயடாவையும், சாக்சானியரின் அரசர் சிக்பர்டையும் திருச்சபையில் சேர்த்தார். கொலம்பா 12 துறவிகளுடன் வந்து, வட பிரித்தானியாவில் வாழ்ந்த பிக்டு இனத்தவர்களை மனந்திருப்பினார். பிக்டுகளின் அரசர் ஸ்காட்லாந்திலிருந்து, அயோனா தீவில் மறைப் பணிபுரிய அவர்களை அனுமதித்தார். இன்வெர்னஸ் என்ற இடத்தில் பிக்டு அரசர் புருட்டும், அவரது குடி மக்கள் பலரும் திருச்சபையில் சேர்ந்தனர். புனித கொலம்பா 597 இல் இறக்கும்பொழுது வட ஸ்காட்லாந்து முழுவதும் கிறிஸ்தவ நாடாக மாறியிருந்தது. அதே காலத்தில் புனித லியாந்தரும், புனித இசிதோரும் ஸ்பெயின் நாடு சென்று, விசிலோத்தரை மனந்திருப்பினர்.

**அயர்லாந்தில் திருச்சபை**

அயர்லாந்தின் அப்போஸ்தலரென அழைக்கப்படுகிறவர் பனித பத்திரிசியார். அவரே அயர்லர்ந்தை மனந்திருப்பியவர். அவர் 389 இல் பிரித்தானியாவில் கார்வேனி என்ற இடத்தில் பிறந்தவர். அவருக்குப் 16 வயது நடக்கும்பொழுது, அயர்லாந்துக் கொள்ளையர் அவரைக் கடத்திச் சென்று, 6 வருடங்கள் போச்சலடு என்ற இடத்தில சிறை வைத்திருந்தனர். ஆனால் அங்கிருந்து தப்பி, தன் தாய் நாடு திரும்பி வந்தார். கடவுள் தன்னை அயர்லாந்து மக்ளிடையே வேதபோதகப் பணிபுரிய அழைக்கிறாரென உணர்ந்து, லேரின்சிலுள்ள புனித

ஒனோராத்துஸ் துறவியர் மடத்தில சேர்ந்தார். அங்கு சில காலம் தங்கிய பின், வட கால் நாட்டிலுள்ள அக்சோரா சென்று, பதினைந்து ஆண்டுகள் செபத்திலும், தபத்திலும் செலவழித்தார். அக்காலத்தில் அவர் அமாத்தர், ஜெர்மானுஸ் என்ற ஆயர்களின் கீழ் தியாக்கோனாகப் பணியாற்றினார். பின்னர், அவர் பாப்பு செலஸ்தினின் அனுமதியுடன், ஆயர் ஜெர்மானுசால் ஒரு ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு, மறைபோதகப் பணிபுரிய அயர்லாந்துக்கு அனுப்பப்பட்டார். அவர் அல்ஸ்தர் பட்டணம் சென்று, அங்கு மிகப் பலம் படைத்த தலைவனாயிருந்த திக்சுவை மனந்திருப்பினார். சாலால் ஆலயத்தை அமைத்தார். மியாத் என்ற இடத்தில் அயர்லாந்து அரசரின் உறவினரான கோனாலிற்குத் திருமுழுக்கு அளித்தார். அவர் தன் கோட்டைக்கு அருகில் அளித்த இடத்தில் பத்திரிசியார் ஒரு பெரிய ஆலயத்தைக் கட்டினார். அரசர் லியோகெயர் திருமுழுக்குப் பெறவில்லை. ஆனால் அவர் திருமறைப் போதனை செய்வதைத் தடைசெய்யவில்லை.

திருச்சபை விரைவில் அயர்லாந்தில் பரவுவதற்கு சுதேச குருக்களின் அவசியத்தை உணர்ந்து, பத்திரிசியார் தகுதியானவர்களைத் தெரிந்தெடுத்து, குருத்துவப் பயிற்சிபெற அக்சேராவிற்கு அனுப்பினார். அவருடைய போதனையாலும், அயராத முயற்சியினாலும் திருச்சபைக்கு அங்கிருந்து பல குருக்களும், துறவிகளும், துறவு நிலைக் கன்னியரும் கிடைத்தனர். புனித பத்திரிசியாரால் அயர்லாந்து முழுவதையும் திருமறையின ஆட்சியின் கீழ் கொணர முடியவில்லை. எனினும், பல்லாயிரக் கணக்கான மக்களை தன் தபம் செபத்தாலும், போதனையாலும் மனந்திருப்பினார். அவர் இறக்கும் பொழுது அயர்லாந்தை ஒரு சிறந்த கத்தோலிக்க நாடாக விட்டுச் சென்றாரென்பது குறிப்பிடத்தக்கது. அவருக்குப் பின் பல குருமடங்கள், துறவற மடங்கள், கல்விச் சாலைகள் திறக்கப்பட்டு, ஆயிரக் கணக்கான போதகர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு, இன்று அவர்கள் உலகெங்கும் மறைபரப்பாளராகச் சென்று, திருச்சபையைப் பரப்பி வளர்த்து வருகின்றனர்.

**ஜெர்மனியில் திருச்சபை**

ஜெர்மனியின் அப்போஸ்தலர் புனித பொனிபஸ் ஆவார். அவர் மேற்கு சாக்சானிய பெருங்குடியில் 675ம் ஆண்டு தேவன் மாநிலத்திலுள்ள கிரெடிட்டன் நகரில் பிறந்தவர். அவருடைய முன்னைய பெயர்

வின்பிரட். ஏழு வயதிலிருந்து எக்செட்டரிலிருந்த ஆசீர்வாதப்பர் துறவற மடத்தில் கற்றபின், ஹாம்புஷயரில் உள்ள நுட்செலே துறவியர் மடம் சென்று, தன்னுடைய முப்பதாவது வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அவரிடம் அம் மடத்தின் பாடசாலையின் பொறுப்பு வழங்கப்பட்டது. ஆனால் பிரிசியா நாட்டு மக்களை மனந்திருப் வேண்டுமென்பதே அவருடைய பேரவா. பதினொரு ஆண்டுகளுக்குப் பின், அவர் அம் மடத்திலிருந்து வெளியேறி, பிரிசிய நாட்டு மன்னர் ராட்போட்டின் அனுமதியுடன், அந்நாட்டில் வேத போதக பணியில் ஈடுபட்டார். அது முழுதாய்ப் பயனளிக்காததால், தன் மறைபோதக மையத்தை தெரிவு செய்யவும், பாப்புவின் ஒப்புதலையும், ஆசீரையும் பெறவும் 718ம் ஆண்டு உரோமை சென்றார். அவரை அன்புடன் வரவேற்ற பாப்பு 2வது கிரகோரியார், வின்பிரட் உரோமைத் திருச்சபையுடன் கொண்டிருந்த ஐக்கியத்தின் அடையாளமாக, அதற்கு முதல் நாள் திருநாள் கொண்டாடப்பட்ட மறைசாட்சி பொனிபாசின் பெயரை அவருக்கு இட்டு, அவரைத் துருங்கியர் மத்தியில் தொண்டுசெய்ய அனுப்பினார். அங்கிருக்கையில் பிரிசிய மன்னர் ராட்போட் இறந்ததைக் கேள்வியுற்று, பொனிபாஸ் அங்கு திரும்பிச் சென்று பணிபுரியவே விரும்பினார். எனவே அங்கு சென்று, ஆயராகவிருந்த வில்லி பிரார்டுடன் இணைந்து பணிபுரிந்தார். பல கிறிஸ்தவ ஆலயங்கள் எழுப்பப்பட்டன. பெருந் திரளான பிரிசியர் திருச்சபையில் சேர்ந்தனர். எனவே பொனிபாஸ் இங்கிலாந்துவிலுள்ள தன் நண்பர்களுக்கு தன் பணியின் வெற்றிபற்றி பல கடிதங்கள் எழுதினார். அவர்கள் அவரை வாழ்த்தி, அவரின் பணிக்காகச் செபித்ததுடன், பல மறை நூல்களையும், பீடத்திற்கான துணிமணிகளையும், பணத்தையும் அனுப்பி வைத்தனர். பின்னர் அவர் மத்திய ஜெர்மனிக்குச் சென்று, எஸீயர் என்ற இனத்தவரிடையே பணிசெய்து, பலரை மனந்திருப்பினார். மாவட்டத்தின் முக்கிய நகராகிய அமோனோபரோவில் ஒரு துறவியர் மடத்தைக் கட்டினார். அதன் பின் சாக்சோனியர் நாட்டு எல்லையைக் அடைந்து, அங்கும் நூற்றுக் கணக்கானோரை திருமறையில் சேர்த்தார்.

பொனிபாசின் கடின மறைபரப்புப் பணியையும், அதன் வெற்றிகளையும் அறியவந்த பாப்பு 2வது கிரகோரியார், அவரை உரோமைக்கு வரவழைத்து, 30 மாசி 522 இல் அவரை ஒரு ஆயராகத் திருநிலைப்படுத்தினார். பொனிபாஸ் திரும்பி அவரின் பணித்தளம்

சென்று, தம் மறை பரப்புப் பணியைத் தொடர்ந்தாற்றினார் அஞ்ஞானிகள் கூட்டம் கூட்டமாக திருச்சபையில் சேர்ந்தனர். பிரிட்ஸ்லாரில் வேற்றுக் கடவுளொருவருக்கு அர்சிக்கப்பட்டிருந்த ஓக்கு மரத்தை மக்கள் முன்னிலையில் துணிவுடன் வெட்டி விழுத்தி, கிறிஸ்தவ கடவுளே உண்மையான கடவுள் என்பதை மக்களுக்கு உணர்தினார். அதைக் கண்ட மக்கள் பெருமளவில் திருமறையில் இணைந்தனர். அங்கு அவர் ஒரு குருத்துவ பயிற்சித் துறவற மடத்தைக் கட்டினார். பின்பு அவர் துருங்கியா திரும்பினார். அங்கு அவருக்கு முன் பணிசெய்து கொண்டிருந்த குருக்கள், துறவியர்களிடமிருந்து பொனிபாசுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் அவர் மனச் சோர்வடையாது, தொடர்ந்து தம் பணியை மேற்கொண்டார். விரைவில் அவருடைய அப்பழுக்கற்ற வாழ்கையையும், அப்போஸ்தொலிக்க ஆர்வத்தையும் மக்கள் பாராட்டி, அவர் பக்கம் சேர்ந்தனர். எனவே அப் பணித்தளத்தின் மேலாண்மைப் பொறுப்பு அவருக்குக் கிடைத்தது. ஒடிரட் என்ற துருங்கிய நாட்டில் ஒரு துறவற மடத்தைக் கட்டி, அதை ஆயரின் பணித் தளமாக ஏற்படுத்தினார். அங்கிருந்து அயலிலுள்ள பல கிராமங்களுக்குச் சென்று, போதித்தார். புதிய பாப்பு 3வது கிரகோரியார் பொன்பாசை பேராயராக நியமித்து, தேவையான இடங்களுக்குப் புதிய ஆயர்களைத் தேர்ந்தெடுத்து, திருநிலைப்படுத்தும் அதிகாரத்தையும் வழங்கினார்.

மறை பரப்பு வேலை அதிகமாயிருந்தபடியால், தன் தாய் நாட்டிற்கு எழுதி, பல துறவிகளும் கன்னியரும் அவருக்கு உதவிபுரிய வந்தனர். அவர்களில் ஒருவர் பொனிபாசின் மருமகளாகிய லியோபா. அவர் போலாந்தியரிடையில் மிக ஆர்வத்துடன் அயராது பணிபுரிந்தமையால், "ஜெர்மனியின் பெண் அப்போஸ்தலர்" என அழைக்கப்பட்டார். அவருடைய உதவியுடன் பொனிபாஸ் மூன்று துறவியர் இல்லங்களையும், பாடசாலைகளையும் நிறுவினார். பொனிபாசின் அயராத முயற்சியினால் திருச்சபை எஸ்ஸே நாட்டிலும், துருங்கியாவிலும் நன்றாக வளர்ச்சியடைந்து, ஒரு இலட்சத்திற்கு அதிகமானோர் திருமறையில் இணைந்தனர். பின்னர் பேராயர் பொனிபாஸ் ஆஸ்திரேசியாவில் பாப்புவின் பிரதிநிதியாக நியமனம் பெற்று, நியூஸ்திரியாவும் அவருடைய பொறுப்பின் கீழ் கொணரப்பட்டது. பாப்புவின் பிரதிநிதியாகப் பத்தாண்டுகள் பணிபுரிந்து, நியூஸ்திரியாவில் நான்கு புதிய மறை மாவட்டங்களையும், பிரிசியாவில் மூன்று மறை

மாவட்டங்களையும் ஏற்படுத்தி, தகுதியுள்ளவர்களை ஆயர்களாக நியமித்தார். பிராங்கிய நாட்டுத் திருச்சபையிலும், நியூஸ்திரியாத் திருச்சபையிலும் பொதுச் சங்கங்களைக் கூட்டி, அங்கு காணப்பட்ட சீர்கேடுகளை அகற்றி, பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். பேராயர் பொனிபாஸ் கொலோனின் தலைமைப் பேரராயராக நியமிக்கப்பட்டார். புல்டா நகரிலே ஜெர்மனியின் பிரதம தலைமை மடத்தைக் கட்டினார். இது குருக்கள் பயிற்சி நிலையமாகவும், கலாச்சாரம். கல்வியின் தலைமை நிலையமாகவும், தவம் செய்ய உதவும் திருத்தலமாவும் விளங்கியது. இங்கு பயின்ற பலர் பிற்காலத்தில் சிறந்த இறையியலாளராகவும், அரசியல்வாதிகளாகவும் விளங்கினர்.

தன் இறுதிக் காலத்தில் தான் முதற் பணி புரிந்த பிரிசியாவிற்குத் திரும்பவும் சென்று, அங்கு சுயீடர்சீ என்ற கிழக்குக் கடற்கரைப் பகுதியில் தளம் அமைத்துப் பணி புரிந்தார். பல்லாயிரக்கணக்கான ஆண்கள். பெண்கள், குழந்தைகள் திருமுழுக்குப் பெற்று, திருச்சபையில் இணைந்தனர். இதைப் பொறுக்க முடியாத அஞ்ஞானிகள், கூட்டமாக வாள், ஈட்டிகளுடன் அவருடைய இல்லம் சென்று, அவரை வெட்டிக் கொன்றனர். பிரான்ஸ், ஜெர்மானிய திருச்சபை வெற்றி நடைபோட வழிவகுத்தவர் புனித பொனிபாசே ஆவார்.

## 6.3.2. மத்திய காலம் (10-12 நூற்றாண்டு வரை)

ஜேர்மனியைத் தொடர்ந்து 9ம், 10ம், 11ம் நூற்றாண்டுகளில் டென்மார்க், சுவீடன், நோர்வே, ஐஸ்லாந்து, கிறீன்லாந்து, ஸ்லாவ், போலந்து, ஹங்கேரி, சேர்பியா, பல்கேரியா, ரூசியா போன்ற நாடுகள் தங்கள் அஞ்ஞான மதங்களையும், குருட்டுப் பக்திகளையும், கொடுமைகளையும் கைவிட்டு, திருமறையத் தழுவின. ஜேர்மனியரே இதில் பெரும் பங்காற்றினர்.

**டென்மார்க்கில் திருச்சபை**

டென்மார்க்கின் அரசராயிருந்த எரால்ட் 826 இல் ஜெர்மன் மன்னர் ஒட்டோவால் விரட்டியடிக்கப்பட்டார். அவர் பேரரசர் லூயிசிடம் சரணடைந்து, அவருடைய உதவியை நாடினார். ஆனால் லூயிஸ் எரல்டும், அவரைச் சார்ந்தவர்களும் கிறிஸ்தவ மறையைத் தழுவினால்,

அவருக்கு உதவ ஆயத்தமாயிருந்தார். எனவே அரசர் எரல்டும், அவருடைய மனைவியும், மகன் காட்பிரட்டும், அவருடைய பரிவாரத்தினர் 400 பேரும் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவர்களாயினர். இதுவே திருச்சபை டென்மார்க்கில் பரவுவதற்கு படிக் கல்லாக அமைந்தது. கார்வே ஆசீர்வாதப்பர் மடத்திலிருந்த இளந் துறவி ஆன்ஸ்கார் டென்மார்கக், சுவீடன் நாட்டு மக்களிடையே மறைபரப்புப் பணிபுரிய மனமுவந்து சென்றார். அவர் 40 ஆண்டுகள் அவர்களிடையே தொண்டு செய்தார். அக்காலத்தில அவர் ஆம்பர்க் பேராயராக நியமிக்கப்பட்டார். பிரமென் மறைமாவட்டமும் ஆம்பர்க் மறைமாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. பின்னர் பேராயர் ஆன்ஸ்கார் டென்மார்க், சுவீடன் நாடுகளுக்குப் பாப்புவின் தூதுவராகவும், வடதேசங்களின் பாப்புவின் ஸ்தானிகராகவும் நியமிக்கப்பட்டார்.

ஆன்ஸ்கார் டென்மார்க்கில் பல ஆலயங்கள், பள்ளிகள், துறவற மடங்களை நிறுவினார் அவை பிற்காலத்தில் அஞ்ஞானிகளால் அழிக்கப்பட்டாலும், அவர் மனந்திருப்பிய மக்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருந்தனர். எனவே பேராயர் ஆன்ஸ்கார் "வட நாட்டு அப்போஸ்தலர்" என அழைக்கப்படுகிறார். அடிக்கடி இடம்பெற்ற வைக்கிங்குகளின் ஊடுருவல் மறைபரப்புப் பணிக்கு தடையாயிருந்தது. ஆனால் அது நிறுத்தப்பட்டபின், அப்போதிருந்த காம்பர்க் ஆயர் அடல்காக் டென்மார்க்கில் பல புதிய மறை போதகத் தளங்களைத் திறந்தார். செல்ஸ்விக், ரிப்பன், ஆர்குஸ் என்ற மறைமாவட்டங்கள் 948 இல் தோன்றின. எரால்டுவைத் தொடர்ந்து டென்மாரக்கின் அரசராக வந்த கான்யூட் (1014-1035) காலத்தில் அங்கு கிறிஸ்தவ மதம் நன்கு வேரூன்றியது. 1004 வரை டேனியத் திருச்சபை ஹாம்பர்க் பேராயரின் ஆட்சியின் கீழ் இருந்தது. பாப்பு 2ம் பாஸ்கல் (1099-1118) டென்மார்க்கிற்கென ஒரு தனியான லுண்டு பேராயர் மறைமாவட்டத்தை ஏற்படுத்தினார்.

**சுவீடனில் திருச்சபை**

புனித ஆன்ஸ்கார் சுவீடன் நாட்டில் கிறிஸ்தவத்தைப் போதிக்க 829 இல் சென்று, பிர்கர் என்ற இடத்தை அடைந்தார். அவர் போதகராக மட்டுமல்ல, பேரரசர் லூயிசின் தூதுவராகவும் வந்தபடியால், அங்கிருந்த அரசர் பிஜோர்ன் அவரை மரியாதையுடன் வரவேற்றார். அவர் அங்கு

ஆற்றிய மறைப் பணி பயனளித்தது. அவர் கட்டிய ஆலயங்கள் பின்னர் இடிக்கப்பட்டாலும், விசுவாசம் தழைத்தது. ஆங்கில ஆயர் சீஜ்பிரிட் அந்நாட்டின் அரசர் 3வது ஒலப்பிற்கு 1000 ஆண்டில் திருமுழுக்கு அளித்தார். அடி மட்டத்தில் திருச்சபை பலமாக தாபிக்கப்பட்டது. ஆனால் மேல் நிலை வாசிகள் அஞ்ஞானிகளாகவே வாழ்ந்தனர். அவர்களை மனந்திருப்ப முனைந்த அத்தனை ஆங்கில குருக்களும் மரணத்தைத் தழுவினர். அரசர் ஸ்டென்கில் மிகவும் ஆர்வமுள்ள கிறிஸ்தவர். அஞ்ஞானிகளை மனந்திருப்ப எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய செவண்டு என்ற அஞ்ஞான அரசன் கொல்லப்பட்டான். அஞ்ஞான மதமும் 1078 இல் சரிந்தது. அஞ்ஞானிகளின் மாபெரும் புனிதத் தலமான உப்சலா ஆலயம் மாற்றி அமைக்கப்பட்டு, கிறிஸ்தவ கோயிலாகக் கட்டப்பட்டது. இவ்வாறு அஞ்ஞானிகளின் தலை நகராயிருந்த உப்சலா 1163 இல் ஸ்வீடன் கிறிஸ்தவ தலைமை ந்கரானது.

**நோர்வேயில் திருச்சபை**

மறை பரப்பாளர்கள் நோர்வேக்கு ஸவீடனுக்குப் பின்னரே சென்றனர். எனினும் நோர்வே நாடுதான் முதன்முதலில் கிறிஸ்தவ மதத்தினை ஏற்றுக் கொண்டது. இங்கிலாந்தில கல்வி பயின்ற மன்னன் நல்ல கேக்கன் (938-961) தன் நாட்டிற்கு கிறிஸ்தவ போதகர்களை அழைத்தார். அவருக்குப் பின் வந்த அரசர் ஒலப் திரிக்வான் (995-1000) காலத்தில் நார்வே கிறிஸ்தவ நாடானது மட்டுமன்றி, ஒலப்பின் புகழ் மேல் நாடுகளில் பரவியது. தன் வாலிபப் பராயத்தில் கிரேக்க-அயர்லாந்து நாடுகளுக்கிடையிலான கடற்கரையில் ஒரு வழிபறிக் கொள்ளையனாக இருந்த அவர், சிசிலித் தீவிலுள்ள ஒரு முனிவரால் மனந்திருப்பப்பட்டார். அவர் தன் தீய வழிகளை விட்டு, டப்ளின் டானிய மன்னரின் மகளைத் திருமணம் செய்தார். இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் அவருக்கிருந்த நிலப் பண்ணைகளைக் கண்காணித்து வந்தார். அவ்வேளை நோர்வே நாட்டின் கொடுங்கோலாட்சியைப் பற்றிக் கேள்விப்பட்டார். நோர்வே திரும்பி, மக்களின் பேராதரவுடன் அரசராகி, நோர்வேயை ஒரு கிறிஸ்தவ நாடாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அஞ்ஞான ஆலயங்களை கிறிஸ்தவ கோயில்களாக மாற்றினார்.

முதலாவது ஒலப் அரசரின் மரணத்துக்குப் பின் வந்த 2வது ஒலப் அரசர் (1016-1029), அவரைப் பின்பற்றி, வேதபோதக அலுவலை மிகத் தீவிரமாகச் செய்தார். போதகர்களின் உதவியுடன் கிறிஸ்தவ மறையை நோர்வே முழுவதுமட்டுமன்றி, ஒர்க்கனே, ஷெட்லாந்து, பேரோ என்ற தீவுகளிலும் பரப்பினார். துரோந்தீம் என்ற இடத்தில் புனித சாந்தப்பர் தேவாலயத்தைக் கட்டினார். பல மறை மாவட்டங்களைத் தோற்றுவித்தார். பல பாடசாலைகளையும் நாடெங்கும் நிறுவினார். 1164 இல் திருச்சபை அவருக்குப் புனிதர் பட்டம் அளித்தது. ஸ்காந்திநேவியருக்கு அவரது கல்லறை பல நூற்றாண்டுகளாக ஒரு திருத் தலமாக விளங்கியது.

**ஐஸ்லாந்தில் திருச்சபை**

ஐஸ்லாந்து முதலில் அயர்லாநது நாட்டைச் சேர்ந்த குலதீக்கள் என்ற இனத்தவர்களின் குடியேற்ற நாடாகவிருந்தது. இறுதியாக 850 இல் ஸ்காந்தநேவியரால் கண்டுபிடிக்கப்பட்ட இத் தீவை நோர்வே நாட்டு வீரர்கள் ஒரு சுதந்திர நாடாக ஏற்படுத்தினர். முதலாவது நோர்வே அரசர் ஒலப் திரிக்வாசன் 997 இல் ஐஸ்லாந்து வந்தார். பின்னர் அரசரால் அனுப்பப்பட்ட மறை போதகர்கள் கிறிஸ்தவ மதத்தை அங்கு போதித்தனர். அதன் விளைவாக இந் நாட்டு மக்கள் அனைவரும் திருமறையில் சேர்ந்தனர். 1000 ஆண்டில் கிறிஸ்தவ மதம் இத் தீவின் தேசிய மதமாக அறிவிக்கப்பட்டது. இரண்டாவது ஒலப் காலத்தில் அகுஸ்தீனிய, ஆசிர்வாதப்பர் துறவற சபையின் மடங்கள் அங்கு அமைக்கப்பட்டன. இத் தீவின் முதல் ஆயர் இஸ்லீப் (1080) என்பவராவர். இரண்டாவது மறை மாவட்டம் பன்னிரெண்டாம் நூற்றாண்டில ஏற்படுத்தப்பட்டது. அக்காலத்தில் ஐஸ்லாந்தில் 2 கிறிஸ்தவ ஆலயங்களும், 9 துறவியர் மடமும், 200 குருக்களும் இருந்தனர்.

**கிறீன்லாந்தில் திருச்சபை**

கிறீன்லாந்து செவ் எறிக் என்ற அஞ்ஞானியால் 982 இல் கண்டுபிடிக்கப்பட்டது. அந் நாட்டில் நோர்வே நாட்டினரே குடியேறியிருந்தனர். செவ் எரிக்கின் மகன், லெயிப் எரிக்சன், 999 இல் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். அவர் அரசர் ஒலப் திரிக்வாசனின் விருப்பப்படி கிறீன்லாந்தில் கிறிஸ்தவ மறையினைப் பரப்பினார். பிரமன்

பேராயர் அடல்பார்ட் 1055 இல் கிறின்லாந்திற்கு அதன் முதல் ஆயரை அனுப்பினார். அவர் தனது மறை மாவட்டத்தை தற்போதைய எஸ்கிமோக்களின் ஊரான இகோலிகோ அருகிலுள்ள கற்டாரில் அமைத்தார். அவரது மறை மாவட்டத்தில் ஏறக்குறைய 1000 கிறிஸ்தவர்களும், 16 ஆலயங்களும், ஒரு துறவியர் இல்லமும், ஒரு கன்னியர் மடமும் இருந்தன. முதல் ஆயரைத் தொடர்ந்து கிறீன்லாந்துவுக்கு 17 ஆயர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் அத் தீவினை அடையவே இல்லை. 1448 க்குப் பின் அங்கு மக்கள் காணப்படவில்லை. அவர்கள் பெரும்பாலும், பிரான்ஸ் நாட்டு வட மேற்குக் கடற்கரையிலும், அயர்லாந்திலும், இங்கிலாந்திலும் சென்று குடியேறினர். பின்னர் அவர்கள் எல்லோரும் கிறிஸ்தவர்களாயினர்.

**ஸ்லாவ்விய நாடுகளில் திருச்சபை**

மத்திய காலத்தின் தொடக்கத்தில் ஸ்லாவ்கள் ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்தனர். இவர்களில் நான்கு பிரிவினர் இருந்தனர். மத்திய பகுதியினர்: தற்போதைய ஜெர்மனியில் வாழ்ந்தவர்கள். கிழக்குப் பகுதியினர்: ரஷ்ஷியர்கள். வட மேற்குப் பகுதியினர்: செக் நாட்டினர். இவர்கள் பொகீமியர்களெனவும் அழைக்கப்பட்டனர். இவர்களுள் சுலோவக்ஸ் என அழைக்கப்பட்ட மொரேவியரும், போலர்களும் அடங்குவர். தெற்குப் பகுதியினர்: இவர்களுள் ஸ்லாவ்கள், குரோஸியர், செர்பியர், பல்கேரியர் என்பவர்கள் அடங்குவர். அஞ்ஞானிகளான இவர்கள் "பெரூன்" என்ற இடியின் கடவுளை வழிபட்டனர். அக்கடவளுக்கு நரபலியிட்டனர். தாய் விரும்பாத பெண் பிள்ளைகளைக் கொன்றுவிடலாம் என்பது அவர்கள் கருத்து. பெண்கள் அடிமைகளாகக் கருதப்பட்டனர். அடிமைகளை இவர்கள் வைத்திருந்தனர். இவர்கள் இரு கிரேக்க சகோதர துறவிகளான சிறில், மெத்தோடியஸ் என்பவர்களால் மனந்திருப்பப்பட்டனர். பல்கேரியாவில் மறை பரப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அவர்கள் கோமகன் ரத்தீஸ்லசின் அழைப்பின் பேரில் 863 இல் மொரேவியா சென்றனர். அவர்கள் ஸ்லாவ் மொழியை நன்கு அறிந்திருந்தபடியாலும், திரு வழிபாடுகள், திரு பலிகளை அம் மொழியில் நிறைவேற்றியதாலும். அங்கு திருமறை மிகத் துரிதமாய்ப் பரவியது. சிறில் 868 இல் இறந்தார். மெத்தோடியஸ்

பின்னர் மொரேவியா-பனோனியா ஆயராக நியமனம் பெற்று, திருப்பணி புரிந்தார். இறுதியில் 885 இல் காலமானார்.

**போலந்தில் திருச்சபை**

மொரேவியா நாட்டிலிருந்த வந்து போலந்தில் குடியேறிய மக்களிடமிருந்து போலந்து மக்கள் கிறிஸ்தவத்தை அறியலாயினர். ஆனால் போலந்து ஜெர்மனிய ஆட்சியின் கீழ் வந்த பின்னர், அரசர் மகா ஒட்டோவின் காலத்திலேதான் கிறிஸ்தவம் அங்கு பரவலாயிற்று. கோமகன் மீசிஸ்லா (962-992) பொகிமியாவின் 1வது போலீஸ்லாசின் மகள் டோம்புரோகாவைத் திருமணம் செய்தார். அவள் கிறிஸ்தவள். அவளின் விருப்பப்படி மீசிஸ்லாவும் விரைவில் கிறிஸ்தவராகினார். அவர் தம் மக்கள் விக்கிரகங்களை ஆற்றில் எறிந்துவிட்டு, கிறிஸ்தவர்களாக வேண்டுமெனக் கட்டளையிட்டார். அவர் கட்டளைப்படி பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள் ஆகினர். போலந்து நாட்டை ஆட்சி செய்த 1வது போலீஸ்லாஸ் குரோப்ரி (992-1025) அஞ்ஞான பழக்க வழக்கங்களுக்கு எதிராகச் சட்டம் ஏற்படுத்தி, திருச்சபைக்கு பெரும் ஆதரவு அளித்தார். போலந்துத் திருச்சபை ஜெர்மனியிலிருந்து பிரிக்கப்பட்டு, கினேசன் மறை மாவட்டம் தோன்றியது. கினேசன் மறை மாவட்டத்துக்கு ஒரு பேராயர் நியமிக்கப்பட்டார். அதிலிருந்து போலந்து ஒரு கிறிஸ்தவ நாடாக விளங்கியது.

**ரூசியாவில் திருச்சபை**

9ம் நூற்றாண்டின் மத்தியில் சுவீடன், பின்னிஷ், ஸ்காந்திநேவிய வைக்கிங்குகள் ரஸ் என்ற இனத்தைச் சேர்ந்திருந்தனர். இவர்கள் தங்கள் தலைவரான ரூரிக்குடன் உக்ரெயின், தினிப்பர் என்ற இடங்களில் குடியேறி, தீவ் என்ற இடத்தில் தங்கள் அரச நிர்வாக ஆட்சியை அமைத்தனர். தங்கள் சொந்த நாட்டிலிருந்த ஒரு மாவட்டத்தின் பெயரான ரூசியாவை அந்த நாட்டிற்குச் சூட்டினர். கிழக்குப் பேரரசுடன் அவர்களுக்கு ஏற்பட்ட தொடர்பால் அவர்களில் அநேகர் திருச்சபையில் சேர்ந்திருந்தனர். ரூரிக்கின் மகளான இகோரின் விதவை 957 இல் திருமுழுக்குப் பெற்றார். தன் வாழ்வின் எஞ்சிய நாட்களை அவர் மறை பரப்புப் பணிக்கு அர்ப்பணித்தார். அவரது பேரன் விளாதிமிர் கிரேக்க பேரரசர் 2 வது பேசிலின் சகோதரியான அன்னாவை திருமணம்

செய்தார் திருமண தினத்தன்றே விளாதிமிர் திருமுழுக்குப் பெற்றார். அவருடன் ஏராளமான ரூசியர்களும் திருமுழுக்குப் பெற்றனர். வியாதிமிர் மாபெரும் அப்போஸ்தல இளவரசர் என அழைக்கப்பட்டார். தனது மாளிகையின் அருகில் புனித பசிலியார் ஆலயத்தைக் கட்டினார். சீவில் புனித சோபியா பேராலயம் 11வது நூற்றாண்டில் கட்டப்பட்டது. இது பேராயரின் ஆலயமாக கான்ஸ்தாந்திநோபிள் பிதாப்பிதாவின் கீழ் இருந்தது. 200 ஆண்டுகளுக்கு மேலாக ரூசிய பிதாப்பிதாக்கள் கிரேக்கர்களாயிருந்தனர். எனவே கீழ் நாட்டுப் பிரிவினையின்போது, கிரேக்க ரூசிய திருச்சபை உரோமையிலிருந்து பிரிந்து, கிரேக்க திருச்சபையுடன் சேர்ந்தது.

**ஹங்கேரியில் திருச்சபை**

ஜேர்மனிய அரசர் மகா ஒட்டோவால் முறியடிக்கப்பட்ட மாக்யார்கள், பிற நாடுகளுக்குள் புகுந்து கொள்ளையடிப்பதை நிறுத்தி, தம் நாட்டிலேயே தங்கியிருந்தனர். கோமகன் கீசாவின் (972-997) காலத்தில் பின்னால் ராட்டிஸ்பன் ஆயரான புனித ஊல்ப்காங்கும், மற்றும் பவேரியா நாட்டுப் போதகர்களும் ஹங்கேரியில் திருமறையைப் போதித்தனர். கீசாவும், அவரது வீட்டாரும் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவர்களாயினர். கீசாவின் மகன் முடியப்பர் (997-1038) பேரரசர் 2வது கென்றியின் சகோதரியான கிசெல்லாவை மணந்தார். இவர்தான் ஹங்கேரியின் அப்போஸ்தலரென அழைக்கப்படுகிறார். அவர் விக்கிரக ஆராதனையை முற்றாக அகற்றி, 10 மறை மாவட்டங்களை அமைத்தார் மேலும் பல துறவற மடாலயங்களைக் கட்டி, தனது நாட்டை புனித மரியன்னையின் விசேட பாதுகாவலில் ஒப்படைத்தார். கிறிஸ்தவ சமய தத்துவ அடிப்படையில் ஆட்சிச் சட்டங்களைத் தொகுத்தார். 998 இல் ஏற்பட்ட ஒரு பெரும் மதக் கலவரத்தை அடக்கினார். மன்னர் பட்டமும் பெற்றார். பாப்பு 2வது சில்வெஸ்தர் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட மகுடத்தை அவருக்கு அனுப்பியதுடன், "அப்போஸ்தலிக்கு அரசர்" என்ற பட்டத்தையும் அளித்தார். எனினும் புனித லடிஸ்லாசின் காலத்தில்-தான் (1077-1095) ஹங்கேரியில் கிறிஸ்தவம் நிலைநாட்டப்பட்டது.

## 6.3.3. மத்திய காலத்தில் (500-1200) திருச்சபையில் நிகழ்ந்த விசேட சம்பவங்களும், மாற்றங்களும்

**5ம் நூற்றாண்டில்**

மத்திய காலத்தில் திருச்சபை ஐரோப்பாவில் பல நாடுகளுக்கும் பரவிய அதேவேளையில், அதன் வாழ்விலே பல நிகழ்வுகளும், மாற்றங்களும் நடைபெற்றன. ஐந்தாம் நூற்றாண்டில் உரோமைப் பேரரசின் ஆட்சி செயற்பாடுகள் அரசியல் ரீதியாக கிழக்கு, மேற்கு எனும் வகையில் இரண்டாகப் பிளவுபடத் தொடங்கியது. பேரரசர் கொன்ஸ்தாந்தின் உரோமைப் பேரரசின் தலைநகரை உரோமையிலிருந்து அகற்றி, கீழைத்தேயத்திலிருந்த போஸ்பரஸ் கடற்கரையில் பைசாந்தியம் என்னுமிடத்தில் அமைத்தார். அங்கு கொன்ஸ்தாந்திநோபிள் என்ற புதிய பட்டணத்தைக் கட்டி, அதைப் பேரரசின் தலைநகரமாக்கினார். இப்படியாக உரோமைப் பேரரசு பைசாந்தியப் பேரரசாக மாறியது. பைசாந்தியம் கொன்ஸ்தாந்திநோபிளின் முந்திய பெயர். பேரரசின் நிர்வாக பீடங்களும் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு இடம் மாறின. பேரரசரும், பேரரசின் நிர்வாகமும் கொன்ஸ்தாந்திநோபிளில் இருந்தமையால், விரைவில் கொன்ஸ்தாந்திநோபிள் பேராயர்கள் அதிக அரசியல் செல்வாக்கு, பெலம் உடையவர்களாக மாறினர். உரோமையிலிருந்த திருத்தந்தையும் அவரகள் ஊடாகவே பேரரசருடனோ, நிர்வாகத்துடனோ தொடர்புகொள்ள வேண்டியிருந்தது. திருச்சபையின் ஆரம்பத்திலிருந்து புனித பேதுருவும், அவரைத் தொடர்ந்து உரோமைய ஆயராகவிருந்தவர்களும் திருச்சபை முழுவதற்கும் தலைவராக மேனாட்டுச் சபைகளால் மட்டுமல்ல, கீழ்நாட்டுச் சபைகளாலுமே ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தனர். ஆனால் இப்போது நிலமை மாறத் தொடங்கியது. கொன்ஸ்தாந்திநோபிள் பேராயர்கள் அதிக அரசியல் செல்வாக்குடையவர்களாக இருந்ததினால், தமக்குத் தாமே பிதாப்பிதா என்ற பட்டத்தை அளித்து, கீழைத்தேய நாடுகளிலுள்ள ஆயர்கள்மேல் அதிகாரம் செலுத்தத் தொடங்கினர். ஐரோப்பிய, ஆசிய நாட்டவருக்கிடையே இருந்த வேறுபாட்டால் ஏற்பட்ட மனவெறுப்பும் பிரிவினைக்கு ஏதுவாயிருந்தது. உரோமைப் பேரரசின் மேற்குப் பாகம் மிலேச்சரின் படையெடுப்புகளினால் அழிக்கப்பட்டி-

ருந்தமையால், திருத்தந்தையின் செல்வாக்கு குறைந்து, கொன்ஸ்தாந்திநோபிள பிதாப்பிதாவின் செல்வாக்கு இன்னும் அதிகரித்தது. எனவே அவர்கள் உரோமையிலுள்ள திருத்தந்தைக்கு தாங்கள் அதிகாரத்தில் எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர் என எண்ணத் தொடங்கினர். இப்போக்கு படிப்படியாக வளர்ந்து, கீழ்நாட்டுப் பிரிவினைக்கு இட்டுச்சென்றது. குழப்பத்தை ஏற்படுத்தியவர் கொன்தாந்திநோபிள பிதாப்பிதா போசியுஸ் (860). பிரிவினையைப் பூர்த்தி செய்தவர் பிதாப்பிதா மிக்கேல் செருலாரியுஸ் (1048). 1453 இல் கொன்ஸ்தாந்திநோபிள் நகரம் இஸ்லாமியரால் கைப்பற்றப்பட்டதுடன் கொன்ஸ்தாந்திநோபிள் பிதாப்பிதாவின் செல்வாக்கும், அதிகாரமும் பறிபோயின.

இவ் விதமான சுதந்திரப் போக்கு கீழ் நாடுகளில் நெஸ்தோரிய, இயுக்திக்கேய, மொனோதேலோ போன்ற பலவிதமான தப்பறைகளுக்கும், பேதகங்களுக்கும் வழிவகுத்தன. எனினும் அவற்றை எதிர்கொள்ள திருச்சபையினால் கூடப்பட்ட எபேசு, கொன்ஸ்தாந்திநோபிள், கல்செடோன் பொதுச்சங்கங்கள் இறையியல் எண்ணக்கருக்களிலும், போதனைகளிலும் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தின. இறையியல் கருத்துக்களை விளக்குவதில் கிரேக்க, குறிப்பாக அரிஸ்ரோட்டலின் தத்துவங்கள் பயன்படுத்தப்பட்டன. கிழக்குத் திருச்சபையில் வழிபாட்டு முறைகளும் முன்னேற்றம் கண்டன. அவர்கள் தமக்கெனப் பாரம்பரியமாய் வரும் பொது வழிபாடுகளையும் அறிமுகப்படுத்தினர். அதன் விளைவாக பொது வழிபாடுகளும், திருவிழாக்களும் அழகான முறையில், நாடக ரீதியான வடிவொன்றைப் பெற்றன. தேவதாய்க்கும், புனிதர்களுக்கும், தூய பண்டங்களுக்கும் அதிக மரியாதையும், பக்தியும் கொடுக்கப்பட்டன. அவை மேற்குத் திருச்சபைகளின் வழிபாடுகளிலிருந்து வேறுபட்டவையாக, மக்களைக் கவரும் தன்மையுள்ளவைகளாக அமைந்தன.

பேரரசரும், படைகளும் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு மாற்றப்பட்டபடியால் உரோமையையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் அந்நியரின் முற்றுகையிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பு திருத்தந்தையரிடமே இருந்தது. இதன் விளைவாக திருத்தந்தையர்கள் திருச்சபையின் ஆன்மீக தலைவர்களாக மட்டுமல்ல, உரோமையின் அரசியல் தலைவராகவும் செயல்படத் தொடங்கினர். அதில் திருத்தந்தை 1ம்

லீயோ (440-461) மிக முக்கிய இடத்தை வகித்தார். இதனால் சில நன்மைகள் ஏற்பட்டாலும், பிற்காலத்தில் பெரும் பிரச்சனைகளைத் தோற்றுவித்தது.

**6ம் நூற்றாண்டில்**

அக் காலகட்டத்த்தில் பேரரசின் மேற்குப் பகுதி மிலேச்சரின் படையெடுப்புகளுக்கும், கிழக்குப் பகுதி முகமதியரின் ஆக்கிரமிப்புகளுக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அக்காலத்தில் 529 இல் தோன்றிய புனித பெனடிக்றின் துறவறசபையினர் சிறந்த மறைத்தூதுவர்களாயும், கிறிஸ்தவ விசுவாசத்தின் போதகர்களாகவும், மேற்கு கலாச்சாரத்தின் பாதுகாப்பாளராகவும் செயல்பட்டு, நாகரீக வாழ்க்கை முறைகளை அறிமுகப்படுத்தினர். கல்விக்காக அவர்கள் ஆற்றிய சேவை அளப்பரியது. மிலேச்சர்களை மனந்திருப்பி, சீர்திருத்துவதில் அவர்கள் ஆற்றிய சேவை மகத்தானது. பல புதிய கிறிஸ்தவர்கள் திருச்சபையில் சேர்ந்தனர். பெனடிக்றின் சபையைச் சேர்ந்த திருத்தந்தை மகா கிரகோரியார் (590-604) அதே சபையைச் சேர்ந்த அகுஸ்தினாரையும், 40 துறவிகளையும் 596 இல் இங்கிலாத்தில் மறைத்தூதுப்பணி செய்ய அனுப்பினார். புனித பற்றிக் அயர்லாந்து சென்று கிறிஸ்தவ வாழ்க்கை முறையை வளர்த்தார். புனித கொலம்பா ஸ்கொட்லாந்து சென்று பலரைக் திருச்பைக்கு கொணர்ந்தார்.

**7ம் நூற்றாண்டில்**

இக்காலத்தில் திருச்சபைக்கும் பேரரசுக்கும் இடையே சில மோதல்கள் ஏற்பட்டாலும், பொதுவாக நல்ல நெருங்கிய உறவு நிலவியது. அதன் விளைவாக கிறிஸ்தவ இராச்சியமொன்று (Christendom) உருவாகியது. அதனால் பல நன்மைகளும், பின்னர் சில தீமைகளும் இடம்பெற்றன. உதா. திருச்சபையின் தலைவர்களின் நியமனத்தில் பேரரசர்கள் அனாவசியமாகத் தலையிடுதல். இக்காலத்தில் பிரசித்திபெற்ற பல புனிதர்களும், கற்றவர்களும் உருவாகினர். கிறிஸ்தவ கலையில், இலக்கியங்களில் கட்டிட நிர்மாணக் கலையில், இறையியலில் பல முன்னேற்றங்கள் இடம்பெற்றன. பல புதிய துறவற சபைகள் உருவாகினதோடு, பழைய துறவற சபைகள்

மறுசீரமைக்கப்பட்டன. புதிய கிறிஸ்தவர்கள் பெருமளவில் திருச்சபையில் சேர்ந்தனர். உரோமைப் பேரரசு வீழ்ச்சி கண்டது. 622 இல் தோன்றிய இஸ்லாம் மதமும், அதனுடைய போர்ப்பலமும் பேரரசுக்கும், திருச்சபைக்கும் பேரழிவை ஏற்படுத்தின. இஸ்லாமியர் வன்முறைகளைப் பயன்படுத்தி, பல நாடுகளைக் கைப்பற்றி, மக்களை வலோத்காரமாக தம் மதத்தில் சேர்த்தனர். பல கீழைத்தேய கிறிஸ்தவ நாடுகள் அவர்களால் கைப்பற்றப்பட்டன. ஐரோப்பாவையும் கைப்பற்ற முயற்சிகள் மேற்கொண்டனர். எனினும் முடியவில்லை

**8ம் நூற்றாண்டில்**

பெனடிக்றின் சபையைச் சேர்ந்த ஆங்கிலேயத் துறவியான புனித பொனிபாஸ் ஜெர்மனியில் மறைபோதகப் பணிபுரிய அனுப்பப்பட்டார். அவர் ஜெர்மனியிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் கிறிஸ்தவத்தைக் கட்டியெழுப்பினார். திருத்தந்தைக்கும் பிரான்சிய அரசருக்குமிடையில் கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு, பிரான்ஸ் நாட்டு அரசர் உரோமையில் திருத்தந்தையால் முடிசூட்டப்பட்டு. அபிஷேகம் செய்யப்படுவது வழக்கத்துக்கு வந்தது. பெரிய சாள்ஸ் அரசர் திருச்சபையையும், கிறிஸ்தவ விசுவாசத்தையும் பாதுகாப்பதற்கும், முன்னேற்றுவதற்கும் முயற்சிகள் எடுத்தார். அதேவேளையில் திருச்சபையின் ஆட்சியைக் தன் கைகளில் எடுத்தக் கொள்ளவும் செயற்பட்டார். திருத்தந்தைக்கு எழுதிய கடிதத்தில் "திருச்சபைக்காகச் செபிப்பது திருத்தந்தையின் பணியென்றும், அதை ஆட்சி செய்தல் பேரரசரின் பணி"யென்றும் வெளிப்படுத்தினார். கொள்கை ரீதியாக இவ்வுலக, ஆன்மீக அதிகாரங்கள் திருச்சபைக்கும் அரசுக்குமிடையே இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், நடைமுறையில் அப்படி-யிருக்கவில்லை. பேரரசர் பிரசித்தி பெற்றபோது அவர் தனக்குரிய இவ்வுலக அரசியல் அதிகாரத்துடன், திருச்சபையின் ஆன்மீக விடயங்கிலும் அதிகாரம் செலுத்தினார். திருத்தந்தை பிரசித்திபெற்றவ-ரானபோது, தனக்குரிய திருச்சபையின் ஆன்மீக அதிகாரத்தோடு, அரசியல் செயற்பாடுகளிலும் அதிகாரம் செலுத்தினார். அக்காலத்தில் அரசனின் மதமே, மக்களின் மதமாக இருப்பது வழக்கமாகவிருந்தது. எனவே பெரிய சாள்ஸ் அரசரின் காலத்தில் பலர் திருச்சபையில் சேர்ந்தனர். அரசர் மக்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக அயராது உழைத்தார். மறைமாவட்ட ஆயர்கள் தங்கள் ஆலயங்க-

ளுக்குப் பக்கத்தில் பாடசாலையொன்றினை ஆரம்பிக்குமாறு பணிக்கப்பட்டனர்.

கொன்ஸ்தாந்திநோபிள் பேரரசரான 3வது லீயோ, அவரது அரசை எல்லாப் பக்கத்திலுமிருந்து அச்சுறுத்திக் கொண்டிருந்த முஸ்லிம்களை அடக்க முயற்சி எடுக்காமல், இறையியலில் தலையிட்டு, ஆலயங்களில் கிறிஸ்துவின், புனிதர்களின் சிலைகள், உருவங்கள், அடையாளங்களை வழிபடுவது விக்கிரக ஆராதனை என்று கூறி, ஆலயங்களிலுள்ள படங்கள், சருபங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்துமாறு கட்டளையிட்டு (726), ஒரு புதிய பேதகத்தை (Iconoclism) உருவாக்கினார். பேரரசர் கொன்ஸ்தாந்தின் தாபித்து வைத்திருந்த பிரமாண்டமான பாடுபட்ட சுருபத்தையும் தகர்த்தார். மக்கள் கோபாவேசம் கொண்டு, அவரால் நியமிக்கப்பட்ட கவர்னரை விரட்டிவிட்டு, திருத்தந்தையிடம் தஞ்சம் புகுந்தனர். திருத்தந்தையே தங்களுக்கு அரசராயிருக்க வேண்டுமென்று கேட்டார்கள். 797 இல் நிசேயாவில் கூடிய 2வது சங்கம் இக்கொனோகிளாஸ்த பேதகத்தைக் கண்டனம் செய்தது.

திருத்தந்தையர் அரசியலில் ஈடுபட்டமையால் திருச்சபைக்கு சில நன்மைகள் கிடைத்தாலும், பிற்காலத்தில் பெரும் தின்மைகள் ஏற்பட்டன. அவர்கள் தங்கள் பேராசைக்கும், பண ஆசைக்கும் சுகபோகத்துக்கும் இடமளித்தார்கள். தகுதியற்றவர்கள், பயிற்சி அற்றவர்கள் ஆயர்களாகவும், திருத்தந்தையராகவும், மடாதிபர்களாகவும் நியமனம் பெற்றனர். பணமும், அதிகாரமும் முதலிடம் பெற்றன. மதப்பற்றும், ஒழுக்கமும் சீரழிந்தன.

**9ம் நூற்றாண்டில்**

ஒன்பதாம் நூற்றாண்டில் மிக வலிமையான திருத்தந்தையாக 1வது நிக்கிலாஸ் இருந்தார். "உரோமைப் பேரரசரின் முக்கிய கடமை கத்தோலிக்க திருச்சபையை பாதுகாப்பதே தவிர, அதனை ஆட்சி செய்வதல்ல" என அறிவித்தார். பேரரசர் சாளமேயின் கிழக்கு, மத்திய ஐரோப்பாவில் தான் கீழ்ப்படுத்திய பிரதேசங்களில் பிற சமய மக்களை கிறிஸ்தவ மதத்தைத் தழுவும்படி வலியுறுத்தினார். அதன் விளைவாக பலர் கிறிஸ்தவ மறையைத் தழுவினர். உரோமைப் பேரரசின் பேரரசர்கள் உரோமையில் முடிசூட்டப்படும் வழக்கம் தோன்றியது. கிழக்கிலிருந்து வந்த வைக்கின்ஸர், தெற்குச் திசையிலிருந்து வந்த இஸ்லாமியரின்

படையெடுப்பினால் மேற்குப் பேரரசு நலிவடைந்து, வீழ்ச்சி கண்டது. பேரரசிலிருந்த அமைதியும், ஒற்றுமையும் மறைந்தது. கொன்ஸ்தாந்தி-நோபிள் பிதாப்பிதாவான போசியுஸ, நிசேயா விசுவாச அறிக்கையில் "பீலியோக்குவே" (Filioque) சேர்க்கப்பட்டதை ஆட்சேபித்து, உத்தரிப்-புத் தலம் பற்றிய திருச்சபையின் போதனைகளையும் எதிர்த்து, பிரிவினையைக் கிளப்பினார். அதற்கு திருத்தந்தை நிக்கிலாசின் அதிகாரப் பேராசையும் காரணமாயிருந்தது. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இஸ்லாமியர் பேரரசின் கிழக்குப் பகுதியை முற்றுகையிடத் தொடங்கினர். அரசியலின் உறுதியற்ற நிலை, மற்றும் திருத்தந்தையர்களின் பெலவீனங்கள் மேற்குத் திருச்சபையின் வீழ்ச்சிக்கு வழிகோலின.

திருச்சபையில் குருக்கள் துறவிகள் மேல் இவ்வுலகத் தலைவர்-கள் ஆட்சி செலுத்தினர். அதன் விளைவாக அநேக குருமட பயிற்சி பெறாதவர்களும், கல்வியறிவு அற்றவர்களும், விசுவாசமற்றவர்களும், கற்பு நெறி தவறியவர்களும், குருக்கள். துறவிகளாக இருந்தனர். துறவற மடங்கள் பரம்பரை துறவற வாழ்க்கை முறையிலிருந்து விலகி, இலௌகீக சுகபோகத்தில் உழன்று, பண ஆசை கொண்டவர்களாய் அழிவுப் பாதையில் செல்லத் தொடங்கின.

**10ம் நூற்றாண்டில்**

இக்காலம் திருச்சபையில் இருள் சூழ்ந்த காலமாக இருந்தது. திருச்சபையின் ஆன்மீகம் நலிவடைந்திருந்தது. திருத்தந்தையரின் அதிகாரம் உரோமைப் பேரரசில் முக்கிய பதவி வகித்த தகுதியற்ற உரோமைப் பிரபுக்களினால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. உதாரணமாக திருத்தந்தை 22ம் அருளப்பர். அவர் தீய நடத்தையுள்ளவராகக் காணப்பட்டதால், திருச்சபின் அதிகாரம் 1ம் ஒட்டோவென்ற ஜெர்மானியப் பேரரசரின் கைக்கு மாறியது. பேரரசர்கள் தங்கள் திட்-டத்தை நிறைவேற்ற திருச்சபையை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். தங்கள் விருப்பம்போல பொதுநிலையினரை திருச்சபையின் தலைவர் பதவிகளுக்குத் தெரிந்தெடுத்தனர். தெய்வாதீனமாக இக்கால கட்டத்தில் துறவற வாழ்க்கையில் ஒரு மறுசீரமைப்பு ஏற்பட்டது. குறிப்பாக பிரான்சில் தோன்றிய குளுனி சபையினர் அதில் பெரும் பங்காற்றினர். புனித றொமோல்ட் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட கம்ல்டோலெஸ், புனித

புறூனோ அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட கார்த்தூசியன் போன்ற புதிய துறவற சபைகளும் தோன்றி, மறுசீரமைப்பு பணியில் ஈடுபட்டனர்.

**11ம் நூற்றாண்டில்**

திருச்சபையின் அதிகாரத்திலும், நிர்வாகத்திலும், நியமனங்களிலும் பேரரசர்களின் தலையீடு தொடர்ந்தது. அது தவறென்பதையும், அதன் விளைவாக திருச்சபையின் சுதந்திரம் அற்றுப்போகுமென்பதையும் திருத்தந்தையர்களும், ஆயர்களும் உணர்ந்திருந்தாலும், அதற்கு எதிராக குரல்கொடுக்க எவரும் துணியவில்லை. இந்நிலையில் 1073 இல் கர்தினால் கில்டபிராண்ட் ஏழாவது கிரகோரியார் என்ற பெயருடன் திருத்தந்தையாகப் பொறுப்பேற்றார். 1075 இல் திருத்தந்தையர்கள் தமது அதிகாரத்தை திருத்தூதர்கள் வழியாக கிறிஸ்துவிடமிருந்து பெற்றுள்ளதாகவும், அதனால் அவர்களிடமுள்ள அதிகாரம் மிக உயர்ந்ததெனவும் அறிவித்தார். அவர் கருத்தின்படி திருத்தந்தைக்கு திருச்சபைக்குள் உலகளாவிய அதிகாரம் உண்டென்பதோடு, அதன்படி பேரரசர்களையும் தமது அதிகாரத்தினால் நீக்கவும், இறைச் சட்டத்துக்கும், திருச்சபையின் சட்டத்திற்கும் ஒவ்வாத சட்டத்தை மாற்றுவதற்கும் அதிகாரம் உண்டு. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, திருத்தந்தை கிரகோரி திருச்சபையின் அனைத்துப் பிரிவுகளிலும் புதிய சீர்திருத்தங்களை ஏற்படுத்தினார். பிரமச்சாரிய வாக்குறுதிக்கு பிரமாணிக்கமாயிருக்க வேண்டுமென்றும், சீமோனியாக்கத்தை விலக்கவேண்டுமென்றும், அருளடையாளங்களை வழங்கும் போது பணம் அறவிடக்கூடாதென்றும் குருக்களுக்குக் கட்டளையிட்டார். மேலும் துறவற மடங்களின் உதவியோடு, திருச்சபைக்குள் பாரியளவிலான மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். இலௌகீக அரசியல் ஆதிக்கத்திலிருந்து திருச்சபையை விடுவிக்க ஆர்வமுடன் உழைத்தார். திருச்சபையின் சம்பிரதாயங்களுக்கு ஏற்ப திருத்தந்தையுடைய அதிகாரத்தையும், தலைமைத்துவத்தையும் மீண்டும் திருச்சபைக்குப் பெற்றுக் கொடுத்தார். அவருக்குப் பின்வந்த திருத்தந்தையர் 2வது ஊர்பன் (1088-1099), 2வது பாஸ்கல் (1099-1118) என்போரும் அச் சீர்திருத்தத்தை மேலெடுத்துச் சென்றனர்.

பதினோராம் நூற்றாண்டில் திருச்சபைக்கு ஏற்பட்ட துரதிஷ்டம் 1054 இல் கிழக்கு மேற்கு சபைகளுக்கிடையே பிளவு ஏற்பட்டு,

திருச்சபை கீழைத்தேய சபை, மேலைத்தேய சபை என இரண்டாகப் பிரிந்தது. உரோமைய திருத்தந்தையின் தலைமைத்துவம் முழுத் திருச்சபைக்கும் பொதுவானதென மேற்குச் சபையினரும், உரோமைய ஆயரும் கொன்ஸ்தாந்திநோபிள் பிதாப்பிதாவும் சமமான தலைமைத்துவம் உடையவர்களென கீழச் சபையினரும் கருதினர். மேலும் கொன்ஸ்தாந்திநோபிள் பிதாப்பிதா நிசேயா விசுவாச அறிக்கையில் Filioque என்ற சொற்றொடரைப் புகுத்தியது மற்றொரு காரணமாகும். பிரிவினையைத் தொடக்கி வைத்தவர் கொன்ஸ்தாந்திநோபிள் பிதாப்பிதா போசியுஸ். அதை முடித்து வைத்தவர் பிதாப்பிதா மிக்கேல் செருலாரியுஸ். 1453 இல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கரால் பிடிக்கப்பட்டபின், பிதாப்பிதாவின் அதிகாரமும், செல்வாக்கும் அற்றுப்போயிற்று. இந்த முரண்பாடு 1965இல் திருத்தந்தை 6வது பவுல் அக்காலத்திலிருந்த பிதாப்பிதா அத்தனகோறஸை சந்தித்து, நட்புடன் உரையாடல் நடாத்தும்வரை நீடித்தது. இப்பொழுது இச்சபைகளுக்கிடையில் ஒற்றுமை நிலவுகிறது.

இந்நூற்றாண்டில இடம்பெற்ற மற்றொரு முக்கிய சம்பவம் மேற்குச் சபையின் மறைத்தூதுவர்களை மற்றைய நாடுகளுக்கு அனுப்புதல் ஆரம்பமாகியது. அதன் பலனாக டென்மார்க், சுவீடன், நோர்வே, ரூசியா (1164) போன்ற நாடுகளில் அநேகர் திருச்சபையில் சேர்ந்தனர்.

**12ம் நூற்றாண்டில்**

ஆயர்களையும் உதவியாளர்களையும் நியமிப்பதில் நிலவிவந்த மோதல் 1122இல் வோம்சில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையோடு, சற்றுத் தணிந்தது. அதன்படி திருச்சபையின் தலைமைத்துவத்தை நியமிப்பது திருச்சபையின் சட்டப்படி நடைபெறவேண்டுமென்றும், சிவில் நிர்வாக அதிகாரம் சிவில் நிர்வாகத் தலைவரின் விருப்பப்படி நடைபெறுமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. திருச்சபையின் சட்டப்படி நியமிக்கப்பட்டவர்களுக்கு மோதிரம் அணிவித்து, ஆயருக்குரிய செங்கோலை வழங்குவதன் வழியாக திருச்சபையின் ஆன்மீகப் பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டனர். திருத்தந்தையர் விசுவாசிகளின் நலன்கருதி பலவேறு அரச தலைவர்களுடன், இனங்களுடனும் புரிந்துணர்வுடன் செயற்பட்டனர். எனினும் பிரச்சினைகளை முற்றாக

நிறுத்த முடியவில்லை. உதா. பேரரசர் பிரட்ரிக், இங்கிலாந்து 2ம் ஹென்றி அரசருடனான பிரச்சினைகளைக் குறிப்பிடலாம்.

இக்காலத்தில் (1076) துருக்கியர்கள் எருசலேமைக் கைப்பற்றி, புனித பூமி அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அவர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்துத் துன்புறுத்தினர். புனித தலங்களுக்கு யாத்திரைசென்ற விசுவாசிகள் பல துன்பங்களுக்கு ஆளாகினர். எனவே திருச்சபையின் சுதந்திரத்தை இலௌகீக இயக்கங்களிலிருந்து பாதுகாக்க, புனித பூமியை இஸ்லாமியரிடமிருந்து மீண்டும் பெற்றுக் கொள்ள, கிறிஸ்தவ விசுவாசத்தையும், யாத்திரிகர்களையும் அவர்களிடமிருந்து பாதுகாக்கவும் திருச்சபை சிலுவைப் போர்களில் (8) ஈடுபட்டது. புனித அகுஸ்தினாரின் "நீதியான யுத்தம்" என்ற எண்ணக்கரு அதற்கு ஆதாரமாக அமைந்தது. கிறிஸ்தவ நாடுகளிலிருந்து படைவீரர்களைத் திரட்டி, முதலாவது சிலுவைப் போர், திருத்தந்தை 2வது ஊர்பன் காலத்தில், 1096-1099 வரை இடம் பெற்றது. 12ம் நூற்றாண்டு முடிவுவரை (1270), அதாவது 176 வருடங்கள் எட்டுப் போர்கள் இடம்பெற்றன. சிலுவைப் போர்களின் நோக்கம் நல்லதெனினும், அவை மிகக் கொடூர விளைவுகளை ஏற்படுத்தின. நன்மைகளிலும் பார்க்க் கூடுதலான தீமைகளே விளைந்தன.

அக்காலத்தில் தோன்றிய சிஸ்டர்சியன், கார்த்தூசியன் போன்ற துறவற சீர்திருத்த சபைகள் துறவற சபைகளுக்குள்ளும், திருச்சபையிலும் சீர்திருத்தங்களைக் கொணர்ந்தனர். துறவற சபைகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சியினால் பேராலயங்களை அண்டிய பகுதிகளில் அமைக்கப்பட்ட பாடசாலைகள் திருச்சபைக்குப் புத்துயிரைக் கொடுத்தன. கட்டிடக் கலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆரம்ப காலங்களில் இருந்த திறந்ததும், சதுர வடிவுமான உரோமைய கட்டிடங்கள் படிமுறையாக மிக உயர்ந்த கூரான வடிவங்களைக கொண்ட கொதிக் பாணியிலான கட்டிடங்களாக மாறின. அக்காலத்தில் ஆலயங்களில் காணப்பட்ட கிறிஸ்து அரசரின் திருவுருவத்திற்குப் பதிலாக துன்புறும், சிலுவையில் மரித்த இயேசுவின் திருவுருவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தனிப்பட்ட பக்தி முயற்சிகளுக்குப் பதிலாக யாத்திரைகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டு, புனிதர் பக்தியும், தேவதாய் பக்தியும் வளர்ச்சியடைந்தன. அவ்வாறே நற்கருணையில் இயேசுவின்

உண்மையான பிரசன்னம், திருப்பலி என்பன வலியுறுத்தப்பட்டன.

12ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பரவிய முக்கிய பேதகம் கத்தார அல்லது ஆல்பிஜென்ஸ் பேதகம். அவர்கள் மனிக்கேய பேதகத்தைப் பின்பற்றியவர்கள். அவர்கள் திருச்சபையை "சாத்தானின் சிற்றாலயம்" என அழைத்தனர். தூலூஸ் பிரபு ரைமுந்தின் ஆதரவில் கோவில்களையும், மடங்களையும் கொள்ளையடித்து, கத்தோலிக்கரைத் துன்புறுத்தி, குருக்களையும், துறவிகளையும் கொலை செய்து, அதிகாரிகளுக்கு அடங்காமல் திரிந்தார்கள். ஒழுங்கீனமும் கட்டுப்பாடற்ற வாழ்வும் எங்கும் காணப்பட்டது. அவர்கள் ஆடம்பர வாழ்க்கை நடாத்திய துறவிகளை வெறுத்த இல்லறத்தவர்களைக் கவர்ந்தனர். அவர்களுடைய போதகமும், அருவருப்பான பழக்கவழக்கங்களும் மதத்தை மட்டுமல்ல, சமுதாயத்தையே அழித்தது. அவர்களுடன் வாதாடி. அவர்களை மனந்திருப்ப திருத்தந்தையால அனுப்பப்பட்டவர் புனித சாமிநாதர். 1215இல் கூடப்பட்ட 4வது லத்திரன் சங்கம் அப் பேதகத்தைக் கண்டனம் செய்தது.

பாண்டித்திய இறையியல் (Scholastic Theology) பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டது 12ம் நூற்றாண்டின் நிகழ்ந்த மற்றொரு முக்கிய சம்பவமாகும். திருவிவிலியம், திருச்சபைத் தந்தையர்களின் போதனைகள், தத்துவவியல் பற்றிய அறிவை உள்ளடக்கிய சுருக்கமான கற்பித்தலை முன்வைத்து, கிறிஸ்தவ நம்பிக்கையின் மறைபொருளையும், இறையியலையும் பற்றிய சரியான விளக்கத்தை அளிப்பது அதன் நோக்கமாகும். விசுவாசமும் மனித அறிவும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல, மாறாக அவை ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன என்பது அதன் கொள்கை. "இறையியல் என்பது விளக்கத்தினைத் தேடிச்செல்லும் விசுவாசமாகும்." இதில் புனித அன்செலம், பீற்றர் அபெலார்ட், பீற்றர் லொம்பேர்ட் என்பவர்கள் முக்கிய பங்களிப்புச் செய்தார்கள்.

**தேர்ச்சி 7.0.** ஐரோப்பாவில் திருச்சபை எதிர்கொண்ட சவால்களும், அவற்றை வெற்றி கொண்ட விதத்தையும் கற்பதோடு, விசுவாசத்தை உறுதி செய்வர்.

**தேர்ச்சி மட்டம் 7.1.** ஐரோப்பிய திருச்சபை பிளவுபட்டமை பற்றிய விடயங்களை அறிந்து கொள்வர்.

## 7.1.1. திருச்சபை பிளவுபட்டமைக்கான பின்னணி

மத்திய யுகம் என்பது கி.பி. 800-1500 வரையிலான காலப் பகுதியைக் குறிக்கின்றது. இக்காலம் திருச்சபையின் வரலாற்றிலே இருள் சூழ்ந்த காலமாகக் கணிக்கப்படுகிறது. இக்காலத்தில் திருச்சபையில் சமய பேதம், திருச்சபை பேதம், குருக்களின் பிரச்சினை எனப் பல குழறுபடிகள் தோன்றி, திருச்சபையின் தூய வாழ்வையே சீர்குலைத்தன.

### திருச்சபை பிளவுபட்டமைக்கான சமயப் பின்னணி

மத்திய யுகத்தில் திருச்சபையில் திருத்தூதர் காலத்திலிருந்த புனித வாழ்வு, பகிர்வு வாழ்வு, ஏழ்மை, எளிய வாழ்வு, விசுவாச வாழ்வு என்பனவையெல்லாம் மறக்கப்பட்டு, திருத்தந்தையர், கருதினால்மார்கள், ஆயர்கள், குருக்கள் துறவிகள் என்ற பல. தரப்பினரும் உலக போக்கில் நடந்து, ஆடம்பரம், சுயநலம் தேடும், சொத்து, பணப் பேராசை கொண்ட, ஒழுக்கக் கேடான சீர்குலைந்த வாழ்க்கை நடத்தினர். திருச்சபையில் ஆன்மீகமும், ஒழுங்கும், ஒழுக்கமும், கட்டுப்பாடும் படிப்படியாகக் குறைந்து, மிகக் கீழ்மட்டத்தில் இருந்தன. அவையெல்லாம் திருச்சபையின் தூய்மைக்கும், வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக, பெரும் இடைஞ்சலாக அமைந்தன. அதன் விளைவாக திருச்சபையின் தலைவர்கள் மக்களின் மரியாதையையும், நம்பிக்கையையும் இழந்து, அவர்களின் வெறுப்புக்கும், விமர்சனத்துக்கும் ஆளாகினர்.

அக்காலத்தில் கிறிஸ்தவ மக்கள் திருச்சபை, உரோமைப் பேரரசு என இரு சமூக தாபனங்களால் ஆட்சி செய்யப்பட்டனர். இவ்

இரண்டு தாபனங்களுக்குமிடையில் அதிகாரப் போட்டிகளும், பூசல்களும், இழுபறிகளும் எழுந்து, பல்வேறு முரண்பாடுகளுக்கும், யுத்தங்களுக்கும் வழிவகுத்தன. மக்கள் இதற்கிடையில் சிக்குண்டு, செய்வதறியாது அவலப்பட்டனர். திருச்சபையின் தலைமைத்துவம் அரசியலில், அரசியல் விவகாரங்களில் தலையிட்டு, தம் செல்வாக்கைச் செலுத்த முனைந்த வேளையில், அரசர்கள் திருச்சபையின் நிர்வாகத்தில், அதன் பணி, பொறுப்புகள், நியமனங்களில் குறுக்கிட்டு, தம் அதிகாரத்தை காட்ட முனைந்தனர். திருச்சபையின் தலைவர்கள் மதத் தலைவர்கள், ஆன்மீக வழிகாட்டிகள் போலன்றி, அரசர்கள், இளவரசர்கள்போல் அகங்கா-ரத்துடன், காட்டுமிராண்டித்தனமாய்ச் செயற்பட்டனர். மத்திய யுகத்தில் ஆட்சிப் பொறுப்பிற்கு ஆட்சியாளர்களை, அரசர்களை நியமித்தல், யுத்த நடவடிக்கைகளில் பங்கெடுத்தல், வரி வசூலித்தல், போர் வீரர்க-ளைப் பலப்படுத்தல், பணம் சொத்துக்களைத் திரட்டுதல், அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடல் போன்ற இலௌகீக விடயங்களுக்கு முக்கி-யத்துவம் கொடுத்து, கிறிஸ்தவ விசுவாசிகள் மட்டில் தங்கள் கடமைகளில், பொறுப்புகளில் அசமந்தமாகவிருந்தனர். கல்வி அறிவில்லாத பாமர மக்களுக்கு அவர்கள் கிறிஸ்துவைப் போதியாமல், வேண்டிய மறைகல்வி அளிக்காமல், கிறிஸ்தவ வாழ்க்கை முறையில் பயிற்சி அளிக்கத் தவறியமையால் அவர்களுடைய பக்தி, விசுவாசம் குறைந்து, ஆன்மீக வாழ்வில் தளர்ச்சி நிலையும், ஒழுக்க வாழ்வில் சீரழிவும் ஏற்பட்டது.

மேலும் திருச்சபையின் தலைவர்களின் நியமனத்தில் அரசர்களின் தலையீட்டினால் சில பிரச்சினைகள் எழுந்தன. மறை தொடர்பான அதிகாரம் அரசருக்கு உரியதா? பாப்புவுக்கு உரியதா? மதத் தலைவரகள் நாட்டின் அரசர்களா? என்ற பல கேள்விகளைத் தோற்றுவித்தது. அதன் விளைவாக திருத்தந்தையர்கள் 70 ஆண்டு காலம் (1309-1377) பாதுகாப்புக் காரணங்களுக்காக உரோமையிலிருந்து விலகி, பிரான்சில் அவிஞ்ஞோனில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த 70 ஆண்டு அஞ்ஞான வாசத்தை பாப்புவின் 70 ஆண்டு பபிலோனிய அடிமைத்தனமென அழைப்பர். பாப்புக்கள அவிஞ்ஞோனில் வாழ்ந்த காலத்தில், நடுநிலை தவறி, பிரான்சு நாட்டு அரசர்கள் சார்பாகச் செயற்பட்டனர். அதை ஏனைய நாடுகள் விரும்பவில்லை. அக்கால கட்டத்தில் திருத்தந்தையர் அனைத்துலக திருச்சபையின்

தலைவராக அல்ல, மாறாக பிரான்சிய திருச்சபையின் தலைவராகவே செயற்பட்டனர். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மேல்நாட்டுப் பெரிய பிரிவினையின்போது, ஏட்டிக்குப் போட்டியாக ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தாங்களே பாப்புவெனக் கூறி, திருச்சபையில் அதிகாரம் செலுத்த முனைந்தனர். 40 ஆண்டுகளாக (1378-1417) இரு பாப்புமார்கள், ஒருவர் உரோமையிலும், மற்றவர் பிரான்சிலுமாக திருச்சபையை ஆட்சி செய்தனர் ஒரு கட்டத்தில மூன்று பாப்புமார்கள் கூட இருந்தனர். அதன் விளைவாக ஒவ்வொருவருக்கும் சார்பாக கர்தினால்மார்களும், ஆயர்களும், குருக்கள், துறவிகள், விசுவாசிகளும் பல பிரிவுகளாகப் பிளவு பட்டிருந்தனர். சில வேளைகளில் ஒரு மறைமாவட்டத்துக்கு இரு ஆயர்களும், ஒரு துறவற மடத்துக்கு இரண்டு மடாதிபர்களும் நியமனம் பெற்றனர். ஒவ்வொரு பாப்புவும் தங்களுக்குச் சார்பாக சிலசில நாடுகளையும் தம்மோடு இணைத்துக் கொண்டனர். அதனால் இத்தாலிப் பாப்புவா அல்லது பிரான்சுப் பாப்புவா என்ற பிரச்சினையும் எழுந்தது. யார் உண்மையான பாப்பு, யார் போலிப் பாப்பு என்று சொல்லக்கூட முடியவில்லை. அவ்வாறாகப் பாப்புவின் தலைமைத்துவம் சீரழிந்திருந்தது.

மேலும் அக்காலத்தில் திருச்சபை ஒரு வாணிபத் தலமாக மாறியிருந்தது. திருச்சபையின் அதிகார, உயர் பதவிகள் பணத்துக்கு விற்கப்பட்டு, வாங்கப்பட்டன. சில வேளைகளில் ஒரு மறை மாவட்டத்துக்கு மூன்று ஆயர்களும், இன்னும் சில வேளைகளில் ஒரு ஆயருக்கு மூன்று மறை மாவட்டங்களும் இருந்தன. பணம் இருந்தால் எத்தனை ஆயர் பதவிகளையும், மாவட்டங்களையும் விலைக்கு வாங்கலாம். திருச்சபையின் தலைமைத்துவமும், பதவிகளும் நண்பர்களுக்கும், சொந்தங்களுக்கும் வழங்கப்பட்டன. சிலவேளைகளில் ஆயர்கள் தங்கள் மறை மாவட்டங்களுக்கு ஒரு முறையேனும் செல்லாது, வெளியேயிருந்து அதை நிர்வகித்தார்கள். அதன் விளைவாக மக்களின் மத வாழ்வு, மறை அறிவு, ஒழுக்கம் இல்லாமல் போயின. ஆயர் பதவி பெறச் செலவழித்த பணத்தைத் திரும்பப் பெற, ஆயர்களால் மக்கள் மேல் அதிக வரிகள் சுமத்தப்பட்டன, பரிபூரண பலன்கள் விலைக்கு விற்கப்பட்டன. அதன் விளைவாக பல தகுதியற்றவர்கள் திருச்சபையின் தலைவர்களாக நியமனம் பெற்று, செயற்பட்டனர். திருச்சபையின் உயர் பதவிகள் பணத்துக்கு விற்கப்பட்டபடியால்,

அதிகமான பதவிகள் பணம்படைத்த பிரபுக்கள் வசமே இருந்தன. சிலர் தங்கள் பிள்ளைகளுக்கென்றும் பதவிகளை வாங்கி விட்டனர். அதனால் திருச்சபையின் தலைவர்களுக்கிருந்த மதிப்பும், செல்வாக்கும் குன்றியது. மேல் மட்ட அதிகாரிகளின் வாழ்வு மட்டுமல்ல, அடிமட்டக் குருக்களின், துறவிகளின் வாழ்வும் சீரழிந்தது. அவர்களில் அநேகர் தகுந்த குருமடப் பயிற்சி பெறாதவர்களாக, போதிய இறையியல் அறிவு இல்லாதவர்களாகக் காணப்பட்டார்கள். ஞான அதிகாரிகள், குருக்கள் மத்தியில், விசேடமாக ஜேர்மனியில், பக்திப் பற்றுதல் குறைந்து, பணச் செருக்கு கூடியிருந்தது. சுருங்கக் கூறின், திருச்சபையின் உச்சந் தலை தொடக்கம் உள்ளங் கால் வரை, அதாவது பாப்பு தொடக்கம், பாப்புவின் நிர்வாகக் குழு (Curia), கருதினால்மார்கள், ஆயர்கள், குருக்கள்கள், துறவிகள், விசுவாசிகள் வரை, எல்லா நிலைகளிலும் சீர் குலைவு காணப்பட்டது. எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணமாக உலகப் போக்கும், அரசியல் ஈடுபாடும், அதிகாரச் செருக்கும், பணமும், சுகபோகமுமே இருந்தன.

பரிசுத்த திருச்சபில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு, திருத்தந்தையர். ஆயர்கள், குருக்கள், துறவிகளில் தூய ஆன்மீக வாழ்வு உருவாகுமென விசுவாசிகள் எதிர்பார்த்தனர். ஆனால் திருத்தந்தையிடமோ, ஏனைய தலைவர்களிடமோ ஆழமான ஆன்மீகம், புனிதத் தன்மை, அப்போஸ்-தொலிக்க ஆர்வம் இல்லாததால், அவர்களால் மற்றவர்களைக் கட்டுப்-படுத்தவோ, தவறுகளைக் கண்டிக்கவோ, குற்றங்களைத் தண்டிக்கவோ முடியாதிருந்தது. திருச்சபையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டுமென உருவாகிய துறவற சபைகள் கூட துறவறத்தையும், விசுவாசத்தையும் கைவிட்டு, பணம் சேகரிப்பதிலும், அரசியல் இலாபத்தைத் தேடுவதிலும் ஈடுபட்டிருந்தனர். புராதன நாகரீக மறுமலர்ச்சி பல புதிய கருத்துக்கள், சிந்தனைகளைத் தோற்றுவித்தன. அதன்படி பிறர் கூறும் கருத்தை மற்றவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. எதையும் தாங்களே சிந்தித்து முடிவுகட்டவேண்டும் என்ற கருத்து மேலோங்கியது. அதனால் மதக் கோட்பாடுகள், படிப்பினைகள் சர்ச்சைக்குரியவை ஆயின.

எனவே இக் காலகட்டத்தில் விசுவாசிகள் திருச்சபை மட்டில் பெரும் அதிருப்தி அடைந்திருந்தனர். தங்கள் ஆன்மீகத் தலைவர்களில்

அவநம்பிக்கை கொண்டிருந்தனர் அதைப் பயன்படுத்தி, சிலர் (விக்ளிப், ஹஸ் போன்றோர்) பாப்புவின் அதிகாரம், திருவருட்சாதனங்கள், பரிபூரண பலன் பற்றிய பல விதமான தப்பறைகளைப் போதித்துப் பரப்பினர். திருச்சபையில், திருச்சபையின் தலைவர்களில் காணப்பட்ட ஊழல்களையும், குழறுபடிகளையும் விமர்சிப்பதே அவர்களின் முக்கிய வேலையாக இருந்தது. அதேவேளை திருச்சபையில் நிலவிய பலவிதமான அலங்கோலங்களையும், சீர்கேடுகளையும் சீர்திருத்தி, ஆன்மீக மறுமலர்ச்சயை ஏற்படுத்தப் போகிறோம் எனச் சொல்லிக்-கொண்டு. சில குருக்களும், துறவிகளும் எழுந்தனர். அவர்களின் தனிப்பட்ட முயற்சிகள் அதிக பயனளிக்கவில்லை. அதற்கெனக் கூட்டப்பட்ட சங்கங்களும் வெற்றியளிக்கவில்லை. ஏனெனில் அதற்கு வேண்டிய திருத்தந்தையரின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. அவர்கள் பெரும்பாலும் தங்கள் நேரத்தை திருச்சபையிலுள்ள ஊழல்களை விமர்சிப்பதிலேயே செலவழித்தனர்.

**திருச்சபை பிளவுபட்டமைக்கான சமூக அரசியல் பின்னணி**

திருச்சபை பிளவுபடுவதற்கு மேற்கூறிய சமயப் பின்னணியைவிட சமூக அரசியல், பொருளாதாரப் பின்னணிகளும் உண்டு. 15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சமூக, அரசியல், பொருளாதார, மெய்யியல், இறையியல் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் திருச்சபையின் வாழ்விலே பல தாக்கங்களை, சீர்கேடுகளை விளைவித்தன. மத்திய யுகத்தில் 1490-1600 ஆண்டு காலப் பகுதியில் மக்களுடைய புவியியல் கருத்துக்களில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. முற்காலத்தில் உலகில் பண்பாடு, நாகரீகம் ஆற்றங்கரை சார்ந்ததாக இருந்தது. உதாரணமாக நாம் நைல் நதி நாகரீகம், யூப்பிரடீஸ்-தைகிறிஸ் நாகரீகத்தைக் குறிப்பிடலாம். ஆறுகள் வழியாகவே மக்கள் பயணித்தனர். வாணிபம் செய்தனர். அவ்வழியில் அமைந்துள்ள நாடுகளே முக்கியத்துவம் பெற்றன. ஆனால் மத்திய காலத்தில், கிறிஸ்தோப்பர் கொலம்பஸ், வாஸ்கோடலாமா போன்ற மாலுமிகளின் புதிய நாடுகளின், புதிய வழிகளின் கண்டுபிடிப்புகளினால் பண்பாடு கடற்கரையைச் சார்ந்ததொன்றாக மாறியது. இத்தாலிய கத்தோலிக்க மாலுமியான கொலம்பஸ் 1492ம் ஆண்டளவில் கடல் வழி பயணம் செய்து, அமெரிக்காவையும், இன்னும் பல புதிய நாடுகளையும் கண்டுபிடித்தார்.

போர்த்துக்கேய கத்தோலிக்க மாலுமியான வாஸ்கொடகாமா 1498 இல் இந்தியாவிற்கு ஒரு புதிய கடல் வழியினைக் கண்டுபிடித்தார். இப் புதிய நாடுகளின், பாதைகளின் கண்டுபிடிப்புகள் மதத் தொடர்பை-யும், வாணிப, பண்பாட்டுத் தொடர்புகளையும் அந்நிய நாடுகளுடன் ஏற்படுத்தின. நாடுகளிடையே வர்த்தக. வாணிபம் விருத்தி அடைந்து, பொருளாதாரம் செழிப்புற்று வளர்ந்தது. அவை மக்களின் மதச் சிந்தனைகளிலும், பழக்க வழக்கங்களிலும், பண்பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தின.

பதினைந்தாம் நூற்றாண்டில் அரசியல் கருத்துக்களிலும் மாற்றம் ஏற்பட்டது. உரோமைப் பேரரசுக் காலத்தில் அநேகமாக முழு ஐரோப்பா-வும் ஒரே ஆட்சியின் கீழ் இருந்தது. ஆனால் மிலேச்சரின் படையெடுப்-புகள், முற்றுகைகளினால் உரோமைப் பேரரசு சிதறுண்டு, பல நாடுகளாகப் பிரிந்தது. எனினும் திருச்சபையானது மறைபோதகர்க-ளையும் துறவிகளையும் அந்நாடுகளுக்கு அனுப்பி, மிலேச்சர்களை சீர்திருத்தி, மனந்திருப்பி, கிறிஸ்தவர்களாக்கியது, அந்நாடுகள் கிறிஸ்-தவ நாடுகளாக ஒன்று சேர்க்கப்பட்டு, திருத்தந்தையின் கட்டுப்பாட்டின் கீழ், ஒற்றுமையாக வாழ்ந்தன. ஆனால் மத்திய காலத்தில், மக்கள் மத்தியில் தேசிய உணர்ச்சி உருவாகி வலுவடைந்தது. உலக அரசியல் என்ற கருத்து மறைந்து, தேசிய அரசியல் என்ற கருத்து பரவத் தொடங்கியது. ஒவ்வொரு நாட்டு அரசர்களும் தாங்கள் சுதந்திரத் தனிநாடு எனக் கூறிக்கொண்டு, அனைத்து விடயங்களிலும் சுதந்திரமாகச் சிந்திக்கவும், செயல்படவும், தங்கள் எல்லைகளை விஸ்தரித்து, பொருளாதாரத்தை வளர்க்கவும் தொடங்கினர். அதன் விளைவாக கிறிஸ்தவ நாடுகளுக்கிடையில் போட்டியும், பொறாமையும், சண்டையும் வளர்ந்தன. திருத்தந்தையின் செல்வாக்கும், அதிகாரமும் நலிந்திருந்தபடியால், நாட்டுத் தலைவர்கள் தம் நாட்டு மத விடயங்களிலும், நிர்வாகத்திலும் தலையிட்டு. தங்கள் நாட்டுத் திருச்-சபையை தாங்களே நிர்வகித்து, தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனைந்தனர். அதனால் திருச்சபைக்கும் அரசுகளுக்குமிடையே பிரச்சினைகள் தோன்றின. அரச தலைவர்கள் தம் நாட்டில் திருச்சபை தம் அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்றனர். தாங்களே தங்கள் நாட்டிலுள்ள மறைமாவட்டங்களுக்கு ஆயர்களை நியமித்தனர். தங்கள் ஆதாயங்களுக்காக திருச்சபையின் சொத்துக்களைந்

சூறையாடினர். மக்கள்மேல் கடுமையான வரிகளைச் சுமத்தினர். திருத்தந்தையர் கிறிஸ்தவ திருச்சபையைக் காப்பாற்ற நாட்டு அரசர்களுடன் ஒப்பந்தங்கள் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவையெல்லாம் ஐரோப்பிய நாடுகளில் சுதந்திரமான புரட்டஸ்தாந்து சபைகள் தோன்ற வழி சமைத்தன.

ஐரோப்பாவின் பொருளாதாரம் நில உரிமையையும் விவசாயத்தையுமே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் மத்திய யுகத்தில் பொருளாதாரத் துறையிலும் மாற்றம் ஏற்பட்டது. 1500ம் ஆண்டுகளில் புதிய நாடுகள் கண்டுபிடிக்கப் பட்டபடியால் வியாபாரத்துக்குப் பொருத்தமான புதிய நகரங்கள் தோன்றின. அவை வழியாக புதிய மூல வளங்கள் ஐரோப்பாவிற்குக் கிடைத்தன. நாடுகளிடையே வியாபாரமும், வாணிபமும் துரித வளர்ச்சி கண்டன. இவ்வளவு காலமும் நடைமுறையில் இருந்த நில பிரபுக்களின் ஆதிக்கத்துக்குப் பதிலாக, வியாபாரிகள் பொருளாதாரத்தில் முன்னேறி, பணப் பலம் கொண்டு, ஒரு புதிய நடுத்தர வகுப்பினர் உருவாகினர். முன்னர் சமூகத்தில் ஒருவருக்கு மதிப்புகள், சலுகைகள் பிரபு குடும்ப பிறப்பு உரிமையினாலேயே சொந்தமாகியது. ஆனால் மத்திய காலப் பகுதியில் கீழ் மட்டத்தில் பிறந்த ஒருவருக்கு சமூகத்தில் உயர் நிலைக்கு தம் உழைப்பினால் முன்னேறக் கூடிய நிலை உருவாகியது. முன்னர் அடிமையின் மகனுக்குக் கிடைத்தது அடிமை நிலையே. ஆனால் இப்பொழுது தொழில்களில் ஈடுபட்டிருந்த மக்களுக்கு பழைய சமூக நிலையிலிருந்து விடுபட்டு, உழைப்பினால் முன்னேறி, உயர் நிலை எழுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் விளைவாக ஐரோப்பாவில் சில பிரதேசங்களில் அடிமை நிலை படிப்படியாக மறைந்து, அதற்குப் பதிலாக நாகரீக நடுத்தர வகுப்பினர், சுதந்திர விவசாய வகுப்பினர் எனச் சமூகத்தில் புதிய வகுப்பினர் தோன்றினர். அக்காலத்தில் ஏற்பட்ட நகரமயமாக்கல், வணிகவாதம், பணப் பயன்பாடு, அச்சுக்கலை, இயந்திரக்கலை போன்றவையும் மக்களின் சிந்தனையில், சிந்திக்கும் முறையில் தாக்கத்தை ஏற்படுத்தின. எனவே பிரிவினை காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இப் புதிய நடுத்தர வகுப்பினர் பூரண ஒத்துழைப்பு வழங்கினர்.

மத்திய காலத்தில் இத்தாலி, மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட

மெய்யியல் மாற்றங்களும் பிரிவினைக் கொள்கைகளுக்கு உதவின. புராதன இலக்கியம், சரித்திரம், சிற்பம், ஓவியம், இசை, நாடகம் போன்ற கலைகள் வளர்ச்சியடைந்தன. பாப்புக்கள் இந்த மறுமலர்ச்சிக்கு பேராதரவு அளித்தனர். அதில் முழு மூச்சாக ஈடுபட்டு, அதிக பணம் விரயம் செய்தனர். உரோமைப் பேராலயங்களிலும், ஆயர் மாளிகைகளிலும் இன்று காணப்படும் ஓவியங்களும், சித்திரங்களும் அதற்குச் சான்று பகருகின்றன. அதனால் தங்கள் ஆன்மீக வாழ்வை அலட்சியம் செய்து, மக்கள் மட்டில் தங்கள் கடமைகளை கை நெகிழ்ந்தனர். ஆனால் இப் புராதன நாகரீக, கலாச்சார மறுமலர்ச்சி பல புதிய கருத்துக்களையும், சிந்தனைகளையும் உருவாக்கின. அவை தேசிய உணர்ச்சிக்கும், பகுத்தறிவாத இயக்கத்திற்கும் அடிகோலின. மேலும் மக்கள் எபிரேயம், கிரேக்கம், லத்தீன் போன்ற பழைய மொழிகளைக் கற்பதில் ஆர்வம் காட்டினர். புராதன இலக்கிய, மற்றும் சித்தாந்த நூல்களை அதிக அளவில் வாசித்துப் படித்தனர். அவற்றில் காணப்பட்ட உலகியல் போக்கினால் கவரப்பட்டனர். முன்னர் சமுதாயத்தில் குருக்கள், துறவிகளே படித்தவர்களாக, அறிவுள்ளவர்களாக விளங்கினர். ஆனால் இப்போது சாதாரண மக்களும் படித்து அறிஞர்களாகினர். கிறிஸ்தவத்தின் மூல சத்தியங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்தினால் கிறிஸ்தவ மக்கள் வேதாகமத்தின் எபிரேய, கிரேக்க மூலப் பிரதிகளைத் தேடிப் படித்தனர். இதனால் வேதாகமத்தில் காணப்படும் புதிய உடன்படிக்கையின் கருத்துக்களுக்கும், அப்போதைய ஆலய வழிபாட்டு முறைகளுக்கும் இடையே வேறுபாடுகள் இருப்பதை அவர்களால் அறிந்துகொள்ள முடிந்தது. இக் காரணங்களால் மத்திய காலத்தில் திருத்தந்தை பதவியிலும், கத்தோலிக்க திருச்சபையிலும் காணப்பட்ட தேவையில்லாத அனைத்து முறைகளையும் அவர்களால் அறிந்துகொள்ள முடிந்தது. மறு சீரமைப்புக் காலத்தில் மனிதன் சுயமாக வெவ்வேறு சமூகத்தின் சேவையின் பெறுமதியை மதித்தான். இதனால் ஏற்பட்ட மனித சுதந்திரம் முக்கியமானது. இக் காரணங்களால் சீர்திருத்தக் கொள்கையில் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் நேரடித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. குருக்களின் மத்தியஸ்த நிலை தேவையில்லை என்ற கருத்துத் தோன்றியது. சீர்திருத்தத்தினால் வல்லுநர்களின் கொள்கையில் அருள் அடையாளங்களினதும்,, பாரம்பரியங்களினதும்

பெறுமதிபற்றிய ஆரம்ப அறிவைப் பெறுவதற்கு அறிஞர்கள் முயற்சித்தனர். இத்தாலியில் ஏற்பட்ட மெய்யியல் சீர்திருத்தத்தில் மத சார்பற்ற கொள்கைகள் காணப்பட்டன. ஐரோப்பாவின் வட பிரதேசத்தில் அக் கருத்துக்கள் பரவியதால், சமய உண்மைகளை தேட முயற்சித்த அறிவாளிகளுக்கு இத்தாலிய மத சார்பற்ற கொள்-கைகளைப் பயன்படுத்த முடிந்தது. வேதாகமத்தை மக்களின் சுய விசுவாசத்தின் அடித்தளமாக ஏற்றுக்கொள்ள அது சந்தர்ப்பமாக அமைந்தது.

இறையியலைத் பொறுத்த வரையில், மத்திய காலத்தில் திருச்சபையில் ஒற்றுமை காணப்பட்டது. கத்தோலிக்க திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களை மறுக்க மக்களால் முடியாமல் இருந்தது. ஆனால் பின்-மத்திய காலத்தில் நிலைமை மாறியது. மாற்றத்திற்குப் பொருத்தமான முறைகள் தோன்றின. 16ம் நூற்றாண்டில் புதிதாகத் தோன்றிய சமய (புரட்டஸ்தாந்து) சபைகள் அந் நாட்டு மக்களின் அரசுக்கு உட்படுத்தப்பட்டவை. உதாரணமாக, இங்கிலாந்து சபை இங்கிலாந்து அரசின் ஒரு பகுதியாகவும், லூதரின் சபை ஜேர்மனிய அரசின் ஒரு பகுதியாகவும் அமைந்தன. 1648 வரை அரசின் தேவைகளுக்கு ஏற்ப சமய துறவற சபைகள் அல்லது அவர்களின் கொள்கைகள் தீர்மானிக்கப்பட்டன. இக்காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரத்திற்குப் பதிலாக வேதாகமத்தின படிப்பினைகள் முக்கியமாயின. வேதாகமத்தைப் படிக்க மக்களுக்குப் பூரண சுதந்திரம் கிடைத்தது. அவர்கள் தங்கள் விருப்பம்போல வேதாகமத்துக்கு விளக்கம் கொடுத்தனர். விசுவாசிகளுக்கு தங்கள் விருப்பம்போல இறைவனோடு தொடர்பு கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.

**புரொட்டஸ்தாந்து பிரிவினைச் சபைகளின் பின்னணி**

மத்திய காலத்தில் திருச்சபையின் சீர்குலைந்த நிலையையும், இதற்கு அவசரமாகத் தேவைப்பட்ட சீர்திருத்தத்தையும் நாம் ஏற்கனவே விரிவாகப் பார்த்திருக்கிறோம். திருச்சபையானது தலை தொடக்கம் வால் வரையும் சீர்கெட்டு, முன்னொருபோதும் இல்லாதவாறு இழிவான, சீர்குலைந்த நிலையில் இருந்தது. அப்போஸ்தலர் காலத்தில் திருச்சபையிலிருந்த தூய எளிமையான வாழ்வும், பகிர்ந்தளிக்கும் பண்பும், ஆன்மீக தாகமும், அப்போஸ்தொலிக்க ஆர்வமும் மறைந்து,

திருத்தந்தையர், கருதினால்மார்கள், ஆயர்கள், மடாதிபர், குருக்கள் துறவியரெனப் பல தரப்பட்டவர்களினதும் ஆடம்பர வாழ்வும், சுயநலப் போக்கும், உலகப் பற்றும், பண, பதவி ஆசைகளும், சுகபோகங்களும் திருச்சபையின் புனிதத்தைக் களங்கப்படுத்தின. இந்தச் சீர்குலைந்த நிலைக்கு அடிப்படைக் காரணமாக அரசியல் ஈடுபாடும், உலக போக்கும், பணம், பதவி மோகமும், அதன் விளைவாக பலவிதமான ஊழல்கள், குழறுபடிகளும் அமைந்தன. ஏற்கனவே அவிஞ்ஞோன் அடிமைத்தனமும், மேல் நாட்டுப் பெரிய பிரிவினையும் திருத்தந்தையரின் மதிப்பு, செல்வாக்கு, அதிகாரம், கட்டுப்பாடு அனைத்திற்கும் உலை வைத்திருந்தன. மேலும் திருத்தந்தையர் தாங்கள் அனைத்துலக திருச்சபையின் ஆன்மீகத் தலைவரகள் என்பதை மறந்து, அனைத்துலக கிறிஸ்தவ சமூகத்தின் மட்டில் தங்கள் கடமைகள், பொறுப்புகளை உதாசீனம் செய்து, ஐரோப்பிய நாடுகளின் தேசீய அரசியலில் ஈடுபட்டு. நாடுகளுக்கிடையிலான யுத்தங்களில் பங்கெடுத்து, இருந்ததையும் இழந்தனர். அக்காலத்திலிருந்த தேசிய அரசுகளுடன் ஒப்பந்தம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. அதன் விளைவாக அரசர்களே தங்கள் நாட்டுத் திருச்சபையின் ஆயர்களாகவும், மடாதிபர்களாகவும் செயல்பட்டு, திருச்சபையின் சொத்துக்கசைச் சூறையாடி, வருமானங்களைத் தமதாக்கினர். இச் சூழ்நிலையில் திருத்தந்தையர் பணம் சேகரிக்க, தங்களைத் தாபரிக்க திருச்சபையின் ஆன்மீகச் சொத்துக்களையும், பதவி, அதிகாரங்களையும் பணத்துக்கு விற்கவேண்டி ஏற்பட்டது. (Simony).

திருத்தந்தையரின் நிர்வாக சபையும் (Curia) மக்களின் விமர்சனத்துக்கும், வெறுப்புக்கும் ஆளானது. பலரின் கருத்துப்படி அச் சபையே திருச்சபையின் எல்லா ஊழல்களுக்கும், சீர்குலைவிற்கும் மூல காரணமாக இருந்தது. சொத்து. பணம் சேகரிப்பதே அதன் முக்கிய இலக்காக இருந்தது. பாப்புக்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஆயிரக் கணக்கான திருச்சபையின் உயர் பதவிகளை விலை பேசி, விற்பது பெரும் பணம் கொணரும் வியாபாரமானது. கருதினால்மார்களின் தொப்பி, பேராயர், ஆயர்களின் பதவி, மடாதிபர்கள் பதவிகள், மறைமாவட்டங்கள், மடங்கள் எல்லாம் விற்கப்பட்டன. கூடிய விலை கொடுக்கின்றவர்கள் அப் பதவிகளைப் பெற்றனர். அதன் விளைவாக குருக்கள், துறவிகளின் வாழ்வும். ஒழுக்கமும் படிப்படியாகச்

சீரழிந்தன. குருக்கள் தங்கள் பொறுப்புகள், கடமைகளில் அக்கறை எடுக்கவில்லை. உலகப் பற்றுக் கொண்டவர்களாக, பண ஆசை கொண்டவர்களாக, தங்கள் சுகபோகத்தையே தேடுகின்றவர்களாக இருந்தனர். சிலர் மக்களின் விசுவாச வாழ்விலோ, அவர்களுக்கு நற்செய்தியைப் போதிப்பதிலோ, மறைக் கல்வி அளிப்பதிலோ கவனம் செலுத்தாமல், பணத்துக்கு திருப் பலி ஒப்புக்கொடுக்கின்ற குருக்களாக மட்டுமே காணப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் தகுந்த குருத்துவப் பயிற்சி பெறாதவர்களாக, இறையியல், கல்வி அறிவு அற்றவர்களாக இருந்தனர். துறவிகளின் துறவற வாழ்வும் சீர்குலைந்து காணப்பட்டது. பெரும்பாலும் துறவற மடங்கள் துறவிகள் அல்லாத மடாதிபர்களினால் வெளியிலிருந்து நிர்வகிப்பட்டன. துறவற வார்த்தைப்பாடுகள், சட்ட ஒழுங்குகள் எல்லாம் கைவிடப்பட்டன. சிலர் விரதத்துவத்தைக் கைவிட்டு, ஒழுக்கக் கேடான வாழ்க்கை வாழ்ந்தனர். அதிகமான துறவற மடங்களில் பொது வாழ்வோ, குழு வாழ்வோ, செப வாழ்வோ வாழப்படவில்லை. துறவற வாழ்வில் சீர்திருத்தத்தை கொணரத் தோன்றிய இரவலர் சபையினர் கூட பண மோகம் கொண்டு, சொத்துக்களை தங்கள் உரிமைகளாகச் சேகரித்து, தங்கள் சுகபோகங்களையே தேடி, அனுபவித்தனர்.

பொது நிலையினர், குருக்களும், துறவிகளும் அவர்களுக்கு மறையைப் போதிக்காமல், மறைக் கல்வி அளிக்காமல் விட்டுவிட்டபடியால், மறை அறிவின்றி, விசுவாசதில் நலிந்தவர்களாய், பக்திப் பற்றுதலின்றி, செருக்கு மிகுந்தவர்களாய்க் காணப்பட்டார்கள். அவர்களது விசுவாச வாழ்வு வெளிப் பக்தி முயற்சிகளிலும், புனிதர் வணக்கங்களிலும், திருயாத்திரைகளிலும், பரிபூரண பலன்களைப் பெறுவதிலும் அடங்கியிருந்தது. திருச்சபையின் தலைவர்களின் துன்மாதிரிகையான வாழ்க்கையினால் கோபமடைந்தவர்களாய், அவர்களை வெறுத்து, பேதகர்களின் தப்பறையான போதனைகளுக்குச் செவிமடுத்து, அவர்களை ஆதரித்தார்கள்.

திருச்சபையின் அத்தகைய சீர்குலைந்த நிலையில், திருச்சபையில் சீர்திருத்தம் கொண்டு வரப்படவேண்டும், திருச்சபையின் தலைவர்களில், குருக்களில், விசுவாசிகளில் ஒரு ஆன்மீக மறுமலர்ச்சி ஏற்படவேண்டுமென பக்தியுள்ள விசுவாசிகள் பலரும் விரும்பி

எதிர்பார்த்தனர். ஒரு சிலர் இம் மறுமலர்ச்சியை, சீர்திருத்தத்தை ஏற்படுத்த பல் வேறு வழிகளில் தனியாகவும், கூட்டாகவும் முயற்சிகள் எடுத்தனர். அதற்கென கொன்ஸ்டன்ஸ் சங்கம், பாசல் சங்கம் (1431), லத்தரன் சங்கம் (1512-1517) என சில சங்கங்களும் கூடப்பட்டன. அச் சங்கங்கள் திருத்தந்தையா? திருச்சங்கமா? எது கூடிய அதிகாரமுடையதென்ற புதிய பிரச்சினையைக் கிளப்பி விட்டன. எனவே அதற்கென எடுக்கப்பட்ட முயற்சிகளும், கூட்டப்பட்ட சங்கங்களும் முழுமையாக வெற்றியளிக்கவில்லை. அதற்கு திருத்தந்தையரின் ஒத்துழைப்பின்மையே முக்கிய காரணமாகவிருந்தது. அவர்கள் திருச்சபையின் ஆன்மீக காரியங்களில் அக்கறை எடுக்காமல், கலாச்சாரம், இலக்கியம், இசை, ஓவியம், நாடகம் சிற்பம், கலை போன்ற புராதன நாகரீகத் துறைகளில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தனர். எனவே திருத்தந்தை முதல் பாமர மக்கள் வரை சீர்திருத்தத்தைப் பொறுத்த மட்டில் பின்தங்கிய நிலையிலேயே இருந்தனர். அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சில ஒழுங்கீனமும், அடங்காமையும் படைத்த குருக்கள் எழுந்து. திருச்சபையைச் சீர்திருத்தப்போகிறோம் எனச் சொல்லிக் கொண்டு, திருச்சபைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, மக்களை பரிசுத்த திருச்சபைக்கு எதிராக, திருத்தந்தைக்கு எதிராகத் தூண்டி விட்டனர். திருத்தந்தையையும், திருச்சபையையும், அதன் ஊழல்களையும் விமர்சிப்பதே அவர்களின் முக்கிய பணியாக அமைந்தது. இவர்களுள் ஒருவர்தான் மாட்டின் லூதர். அவர் ஏற்கனவே சுயமாக திருச்சபையின் படிப்பினைகள் பலவற்றை ஏற்றுக்கொள்ள-வில்லை. திருச்சபையின் மட்டில் அதிருப்தி அடைந்து, திருத்தந்தையை வெறுத்து, சீர்திருத்தத்தை எதிர்பார்த்திருந்த மக்கள், மறுசீரமைப்பை ஏற்படுத்த வந்த மாட்டின் லூதருடன் ஒன்று சேர்ந்தனர். மறுசீரமைப்புத் தலைவர்கள் திருத்தந்தையின் அதிகாரத்தை நிராகரித்ததால் பெருந் தொகையான மக்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். அத் தலைவர்கள் தங்களை சீரமைப்புச் சபையினர் என அறிமுகப்படுத்தினர். அச்சபைகளுள் மூன்று பிரதானமானவை:

1. மாட்டின் லூதர் உருவாக்கிய லூத்தரன் சபை
2. பிரான்ஸ் நாட்டு யோன் கல்வின் உருவாக்கிய கல்வினிஸ்த சபை

3. இங்கிலாந்து மன்னன் எட்டாவது கென்றி உருவாக்கிய இங்கிலாந்து சபை

## 7.1.2. மார்ட்டின் லூதரின் புரட்சி (1483-1546)

நாம் ஏற்கனவே பார்த்த அலங்கோலைகள், சீர்குலைவுகள் மத்தியிலும். 1517ம் ஆண்டு காலப் பகுதியில் கத்தோலிக்க திருச்சபையே கிறிஸ்தவ உலகில் பொது, தனியார் வாழ்வில் அதிமிக செல்வாக்குச் செலுத்திய வலிமையான தாபனமாகவிருந்தது. உரோமைப் பாப்புவினால் கிறிஸ்தவ படிப்பினைகளுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கங்களே பொதுத் துறையிலும். தனியார் துறையிலும் வழக்க முறைகளுக்கு ஆதாரமாகவிருந்தன. மெய்யியல், விஞ்ஞானம், நீதி நிர்வாகம், பிற நலப் பணித் துறைகளில் குருக்களின் தலைமைத்துவம் பொதுவாக சகராலும் மதிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தது. அரசின் செயல்முறைகளும் கிறிஸ்தவ படிப்பினைகளுக்கு அமையவே எடுத்துச் செல்லப்பட்டு வந்தன. ஆனால் திடீரென சொற்ப காலத்துக்குள் அந்த பிரமாண்டமான தாபனம் சுக்கு நூறாகத் தகர்ந்து விழுந்தது. அந்தப் பேரழிவுக்குக் முதற் காரணமாயிருந்தவர் அகுஸ்தினார் சபைத் துறவியான மார்ட்டின் லூதர் என்பவராவார்.

**மார்ட்டின் லூதர்**

மார்ட்டின் லூதர் ஜேர்மனி, சக்சனியிலுள்ள எயிஸ்லெபென் என்ற ஊரில் 10 நவம்பர் 1483 இல் பிறந்தார். அவருடைய தந்தை ஹன்ஸ் லூதர், ஓர் சுரங்கத் தொழிலாளி. கடுமையானவர். அவருடைய தாயார் மார்கிறெட் தேவ பயமும், அடக்க ஒடுக்கமும் உள்ளவர். அவர்களுக்கு ஆறு பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் மார்ட்டின் மூத்த பிள்ளை. கூர்மையான புத்திசாலி. ஆனால் தந்தையின் கடுமையான கண்காணிப்பினாலும், கட்டுப்பாடுகளினாலும் அவரது சிறு பராய வாழ்க்கை அமைதியானதாக, சந்தோஷமானதாக அமையவில்லை. அவர் பயத்துடனும், பீதியுடனும் பரம்பரைக் கிறிஸ்தவ சூழலில் வளர்ந்தார். மான்ஸ் பீல்டு, மாக்டிபர்க், ஈசெனாக் என்ற இடங்களில் கல்வி பயின்றார். இலத்தின், இறை வழிபாடு, மறைக் கல்வி என்ற பாடங்களைக் கற்றார். ஏழைத் தொழிலாளியின் மகனான

அவர் இலவசக் கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்றார். இலத்தீன் மொழியை நன்றாகக் கற்று, பின்னர் எபிரேயம், கிரேக்கம் என்னும் மொழிகளைக் கற்பதற்கு வேண்டிய அடிதளத்தைப் பெற்றுக்கொண்டார். 18வது வயதில் எர்பர்ட் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, கலைமானி, முதுமானிப் பட்டங்களைப் பெற்றார். தந்தையின் விருப்பப்படி சட்டக் கல்வி பயில விரும்பிய அவர், சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். ஒருநாள் அவரது நண்பர் ஒருவர் அவரருகிலேயே இடி மின்னல் விழுந்து இறந்ததைக் கண்டு பயந்தார். அன்று முதல் தன்னுடைய மறுவுலக வாழ்வு எப்படி அமையுமோ என அவருடைய மனதில குழப்பமும், பயமும். ஏற்பட்டது. அமைதி குலைந்தவராக, சில நாட்களுக்குள், வீட்டிலுள்ள ஒருத்தருக்கும் சொல்லாமலேயே, 17 ஆடி 1505 இல் எர்பார்டிலுள்ள அகுஸ்தீனிய துறவற சபைக் குருமடத்தில் சேர்ந்தார். கடுமையான துறவற சட்ட ஒழுங்குகள், விதிகள் அங்கே கடைப்பிடிக்கப்பட்டன. அங்கு ஒரு நவ சந்நியாசியாக, செபம், தியானம், படிப்பு, உபவாசம், மௌனம் போன்ற தப முயற்சிகளை பிரமாணிக்கமாக மேற்கொண்டு, அதிபர்களின் பாராட்டுக்களைப் பெற்றார். பின்னர் அவர் 4 சித்திரை 1507இல் ஒரு அகுஸ்தீனிய குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இறையியல் படிப்பைத் தொடர அனுமதிக்கப்பட்ட அவர், புதிதாக அமைக்கப்பட்ட விற்றன்பேர்க் பல்கலைக் கழகத்தில் தம் இறையியல் படிப்பைத் தொடர்ந்து, கலாநிதிப் பட்டம் பெற்றார். அப் பல்கலைக் கழகத்திலேயே மெய்யியல், விவிலிய-இறையியல் பேராசிரியரானார். தம் வாழ்வின் முடிவுமட்டும் அவர் அப் பணியையே தொடர்ந்து செய்தார்.

தன் சந்நியாச வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் ஆன்மீக அமைதியில் வாழ்ந்தார், காலம் செல்லச்செல்ல அவர் அமைதி மீண்டும் குலைந்து, மனச்சோர்வு அடைந்து, வேதனைப்படத் தொடங்கினார். அவருடைய முக்கியமான ஆன்மீகப் பிரச்சினை தன்னுடைய மறுவுலக நிலை வாழ்வைப் பற்றிய சந்தேகமும். பயமுமாகும். எப்படியாவது தன்னுடைய மீட்பை, இரட்சணியத்தை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பினார். தன்னுடைய பாவங்களையும், பாவ நிலையையும் உணர்ந்தவராக, தான் எந்நேரமும் இறைவனால் எதிர்கொள்ளப்பட்டு, தண்டிக்கப்பட்டு, நரக நெருப்புக்குள் தள்ளப்படலாமெனப் பயந்தார். தன் நிலை வாழ்வை நிச்சயப்படுத்திக்கொள்ள,

அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து, செப தவ ஒறுத்தல் முயற்சிகளில ஈடுபட்டார். எனினும் பெரிய அமைதி கிடைக்கவில்லை. 1510 இல் அகுஸ்தீனிய சபை அலுவலாக உரோமைக்குச் சென்றார். அங்கு அவர் நல்ல பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்தார். ஆனாலும் அவருடைய மனதுக்கு நிம்மதி கிடைக்கவில்லை. அங்கு அவர் கண்ட திருச்சபையின் தலைவர்களின் ஒழுங்கீனமான, தேவ பக்தியற்ற, டாம்பீகமான, ஆடம்பர சுகபோக வாழ்வு அவரைத் திடுக்கிட வைத்தது. பல்கலைக் கழகத்திற்குத் திரும்பிய அவர், தன் ஓய்வு நேரத்தை திருவிவிலியத்தைப் படிப்பதிலும், திருச்சபையின் பிதாக்களின் நூல்களை வாசித்துத் தியானிப்பதிலும் செலவிட்டார். பவுல் உரோமையரக்கு எழுதிய திருமுகத்தில் கூறும் "இறைவனின் நீதி" பற்றியவை அவரது மனதைக் கவர்ந்தது. "ஒருவன் விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவன் ஆகிறான்" என்ற வார்த்தைகளைச் சிந்தித்தார். படிப்படியாக தான் செய்யும் நற்செயல்கள், ஒறுத்தல்கள் தனக்கு மீட்பளிக்கும் என்பதில் நம்பிக்கை இழந்தார். தன் சொந்த அனுபவத்தின் அடிப்படையில், பாவ நாட்டமுள்ள மனிதரால் ஏதாவது நல்ல செயல் செய்ய முடியுமென்பதை நிராகரித்தார். எனவே நம்பிக்கை மட்டுமே வாழ்வு அளிக்கிறது. எங்களை இறைவனுக்கு ஏற்புடைய-வராக்குகிறது. மீட்பிற்கு மனித செயல்கள் தேவையில்லை எனவும், சென்ம பாவத்தால் மனித இயல்பு முற்றாக அழிந்துவிட்டதென்றும், அதன் விளைவாக மனிதன் பாவம் செய்யவே தூண்டப்படுகிறான் எனவும் போதிக்கலானார்.

1513 இல் திருத்தந்தை 2ம் ஜுலியஸ் உரோமைப் புனித பேதுரு பேராலயம் கட்டுவதற்குப் பண உதவி, தர்மம் செய்கின்றவர்கள், தங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி, நல்ல பாசங்கீர்த்தனம் செய்து, நற்கருணை உட்கொண்டு, உதவி செய்தால் ஒரு பரிபூரணபலன் அடையலாம் எனப் பிரகடனம் செய்தார். பரிபூரணபலன் என்பது 1343 இல் திருத்தந்தை 4வது கிளமென்றினால் அறிமுகம் செய்யப்பட்டது. அதன்படி, இயேசுவும், புனிதர்களும் தங்கள் இவ்வுலக வாழ்க்கையின்போது தங்கள் நல்வாழ்வாலும், நற்செயல்களாலும் அதிகமான பேறுபலன்களை இறைவனிடமிருந்து பெற்றிருந்தனர். அவர்கள் இறந்தபொழுது அவர்கள் பெற்றிருந்த மேலதிகமான பலன்களை திருச்சபையில் விட்டுச் சென்றுள்ளனர். திருச்சபையின்

இருப்பிலிருக்கும் அப் பலன்களை திருச்சபையின் ஏனைய உறுப்பினர்கள் (விசுவாசிகள்) பெற்றுப் பயன்படுத்தலாம். அவர்கள் தாங்கள் கட்டிக்கொண்ட அற்ப பாவங்களுக்குரிய தண்டனையிலிருந்து விடுதலை பெற, அல்லது உத்தரிப்புத் தலத்தில் தாங்கள் செய்த அற்ப பாவங்களுக்குரிய தண்டனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆன்மாக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுக்கப் பயன்படுத்தலாம். ஒருவர் இப் பலன்களை திருச்சபை அளிக்கும் பரிபூரண பலன்கள் வழியாகப் பெற்றுக் கொள்ளலாம். வழமையாக இப் பலன்கள் திருத்தந்தையினால் தர்ம, பண உதவிபோன்ற நற்செயல்கள் செய்கின்ற ஒருவருக்கு, அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனம்வருந்த வேண்டுமென்ற, அதாவது அருள் நிலையில் இருக்கவேண்டுமன்ற நிபந்தனையின் கீழ் வழங்கப்பட்டது. 1513 இல் திருத்தந்தை 2வது யூலியஸ் பிரகடனம் செய்த பரிபூரண பலனை ஜேர்மனியில் பிரசித்தப்படுத்த திருத்தந்தை 10ம் சிங்கராயர் டொமினிக்கன் சபைக் குருவான டெட்சல் என்பவரை 1517ம் ஆண்டு தெரிவு செய்தார். "அருள் நிலையில் இருக்கும் எவரும் இத் தர்மத்தைச் (அதாவது புனித பேதுருவின் பேராலயத்தைக் கட்டி முடிக்க) செய்தால் பரிபூரண பலனை அடையலாம்" என்றே போதிக்கப்பட்டது. இப் பரிபூரண பலனை அறிவித்து, வழங்கிட தன்னைப் பாப்பு தெரிவு செய்யாமல், டெட்சலைத் தெரிவு செய்ததால், கோபமடைந்த லூதர், "திருத்தந்தை பணம் பெற்று, அருட் சீட்டு வழங்கி, ஒருவன் மனம்வருந்தாமலேயே அவன் பாவத்தை மன்னிக்கிறார். அது முடியுமா?" எனக் கூறி, பாப்புவுக்கு எதிரான, பரிபூரண பலனைப்பற்றிய தவறான கருத்துக்களைப் பரப்பினார். உத்தரிப்புத் தலத்தில் இருக்கும் ஆன்மாக்களுக்கு விடுதலை அளிக்க திருத்தந்தைக்கு அதிகாரம் இருப்பதை நம்புவதற்கு வேதநூலில் எச்சான்றும் இல்லையெனக் கூறினார். மேலும் உத்தரிப்புத் தலம் இல்லையெனவும், நற்செயல்கள் எதுவும் செய்யாமல், பலன்களின் உதவியின்றியே, விசுவாசத்தால் மட்டும் பரலோகம் செல்லலாம் என்றும் போதிக்கலானார். அதற்கு ஆதாரமாக புனித பவுலின் "விசுவாசதினால் மனிதன் கடவுளுக்கு ஏற்புடையனாகிறான்" என்ற வார்த்தைகளை முன் வைத்தார்.

மார்ட்டின் லூதர் 1517 ஆண்டு நவம்பர் மாதம் 1ம் நாள் தன் மதக் கொள்கைகளை 95 கோட்பாடுகளாக எழுதி, விட்டன்பேக் ஆலயக்

கதவிலே ஒட்டினார். அதன் முக்கிய அம்சங்களாக ஒறுத்தல் முயற்சிகளின் இயல்பு, திருத்தந்தையின் அதிகாரம், அதன் வலிமை, பரிபூரண பலன்களின் செயலூக்கம் என்பனவே முக்கிய கருத்துக்களாக இருந்தன. உரோமைக்கும், திருத்தந்தைக்கும், பரிபூரண பலனுக்கும் எதிரான கருத்துக்களே திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டிருந்தன. உரோமையிலுள்ள புனித பேதுருவின் பேராலயத்தைப் புனரமைப்பு நிதிக்காக பரிபூரண பலன்களை விற்பனை செய்வது தவறு. உத்தரிப்புத் தலத்தின் மேல் பாப்புவுக்கு எந்த அதிகாரமும் இல்லை. பரிபூரண பலன்களை வாங்குவது மக்கள் மத்தியில் ஒரு தவறான பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தி, அவர்களின் மீட்பை ஆபத்துக்கு உள்ளாக்குகிறது. லூத்தரின் இந்தக் கோட்பாடுகள் விரைவில் ஐரோப்பா முழுவதும் பரவின. 1517 இல் திருத்தந்தை 10ம் சிங்கராயர் "லூதர் ஒரு பேதகர்" என ஒரு கண்டனக் கடிதம் எழுதி, அவரை உரோமைக்கு வரும்படியாக அழைத்தார். ஆனால் அவர் செல்லவில்லை. பின்னர் 1518 இல் பாப்புவின பிரதிநிதி கஜத்தான் அவரை ஆக்ஸ்பரோவில் சந்தித்து, அவருடன் உரையாடினார் ஆனால் லூதர் தன் கொள்கைகளில் பிடிவாதமாகவிருந்தார். எனினும் பாப்புவின் அமைச்சர் சார்லஸ்வோனின் விருப்பத்திற்கு இணங்க, இனிமேல் பாப்புவுக்குப் பணிந்திருப்பதாக ஒரு கடிதம் எழுதினார். ஆனால் மூன்று நாட்களுக்குள் தன் நண்பருக்கு "பாப்பு ஒரு எதிர்க் கிறிஸ்து" என்று எழுதினார்.

லூதரைத் திருச்சபையுடன் ஒப்புரவாக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. லூத்தரின் போதனைகளுக்குப் பதிலளிக்கும் முறையில், திருச்சபை தமது மறைக் கோட்பாட்டுப் படிப்பினைகளை வெளியிட்டு, லூதர் தம் போதனைகளைக் கைவிட்டு, திருத்தந்தைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென ஆணையிட்டது. ஆனால் அவ் ஆணையை ஏற்றுக்கொள்ள மறுத்து, அதைப் பகிரங்கமாக எரித்துவிட்டு, தம் ஆதரவாளர்களுடன் கத்தோலிக்க திருச்சபிலிருந்து பிரிந்து சென்றார். திருச்சபையின் சமரச முயற்சிகள் ஒன்றும் பயனளிக்கவில்லை. லூதர் தம் கருத்துக்களில் பிடிவாதமாக நின்று, அவற்றை முன்னெடுத்துச் சென்றார். திருச்சபையால் ஏற்கனவே கண்டனம் செய்யப்பட்டிருந்த, "திருச்சபைக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. உலக சொத்துக்களை வைத்திருக்க உரிமை இல்லை. நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம் இல்லை. விவிலியமே மீட்பின் ஒரே வழி" என்ற விக்ளிப், ஹஸ்ஸின்

போதனைகளை இவரும் போதித்தார். "நம்பிக்கையால் மட்டும் ஒருவன் மீட்படைய முடியும்" என்ற புனித பவுலின் வார்த்தைகளை அடிப்படை-யாக வைத்துப் போதித்தார். பரிபூரண பலன் பற்றிய திருச்சபையின் போதனையை முற்றுமுழுதாக எதிர்த்தார். வான தூதரோ, உத்தரிப்புத் தலமோ இல்லையெனப் போதித்தார். திருமுழுக்கு, நற்கருணை, ஆகிய இரு அருட்சாதனங்களை மட்டும் ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டாலும், அவைபற்றி கத்தோலிக்க திருச்சபைக்கு முரணான கருத்துக்களைக் கொண்டிருந்தார். திருச்சபையின் தெய்வீக தாபகத்தை மறுதலித்து, அது ஒரு மனிதரால் ஏற்படுத்தப்பட்ட மனித தாபனமே என்றார். திருச்சபையின் தெய்வீகச் சட்டங்களை எதிர்த்தார். திருத்தநதையும் வழுவாவரத்தை நிராகரித்தார். திருவிவிலியத்த படித்து விளக்குவதற்கு திருச்சபையால் ஏற்படுதப்பட்ட வரையறைகளை ஏற்றுக் கொள்ள-வில்லை. திருத்தந்தைக்கோ, ஆயர்களுக்கோ, குருக்களுக்கோ எவ்வித அதிகாரமும் இல்லை. அவர்களின் பணிகளும் தேவை இல்லை. அக்காலத்திருந்த துறவற வாழ்க்கை முறையை விமர்சித்தார். கன்னி மரியாளின், புனிதர்களின் பரிந்துரைகளையும், பக்தியையும் ஏற்றுக் கொள்ள மறுத்தார். மதம் நாட்டு அரசர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அப்போஸ்தலர்கள் அல்ல, அரசர்களே இயேசுவின் வாரிசுகள். இல்லறத்தவர்களான நாட்டுத் தலைவர்களே அந் நாட்டுத் திருச்சபையின் தலைவர்கள் என்று போதித்தார். தான் திருச்சபையை அதன் ஆரம்ப இயல்பு நிலைக்குக் கொண்டு செல்வதாகக் கூறினார்.

மேலும், தன் துறவற உடையைக் களைந்து, சிஸ்டெர்சியன் சபைக் கன்னிகையான காதரின் போராவை மணந்து, அனைத்து துறவியரும், கன்னியரும், குருக்களும், ஆயர்களும், பேராயர்களும் தன் முன்மாதிரிகையைப் பின்பற்றி, திருமணம் செய்யவேண்டுமென வற்புறுத்தினார். திருவிவிலியத்தை கிரேக்க மொழியிலிருந்து ஜெர்மன் மொழியில் மொழிபெயரத்தார். ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்-பட்டிருந்த கத்தோலிக்க விவிலியத்தை அடிப்படையாக வைத்தே அதைச் செய்தார். ஆனால் தன்னுடைய கருத்துக்கு முரணான கருத்துக்களை கொண்டிருந்த பழைய ஏற்பாட்டுச் சில நூல்களையும் (தொபியாஸ், யூதித், ஞானாகமம், சீராக், பாரூக், மக்கபே) ஆகமங்-களையும், எஸ்த்தர், தானியேல் ஆகமங்களின் சில பகுதிகளையும்). புதிய ஏற்பாட்டில் யாகப்பரின் திருமுகத்தையும் விட்டுவிட்டார். யாகப்பரின்

திருமுகத்தில காணப்படும் "நம்பிக்கை செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்" (2:17) என்ற வார்த்தைகள் அவருக்குப் பிடிக்கவில்லை. எவரும் வேத நூலை வாசித்து, அதற்கு தான் விரும்பியபடி விளக்கம் அளிக்கலாம் என்பது அவருடைய கருத்து. அக்காலத்தில்தான் அச்சு இயநதிரம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. அதைப் பயன்படுத்தி தான் மொழிபெயர்த்த விவிலியத்தையும், தன்னுடைய இறையியல் கருத்துக்களையும் அச்சிட்டு எங்கும் பரப்பினார். தம்முடைய இறையியல் கருத்துக்களையும் ஜேர்மன் நாடு எங்கும் பரப்ப, கேள்வி-பதில் முறையில் தம் மறைக் கல்வி நூலை அச்சிட்டு வெளியிட்டார். மேலும் "ஜெர்மன் நாட்டுப் பிரபுகளுக்கு ஓர் அறிக்கை", "கிறிஸ்தவ மனிதனின் உரிமை", "பாபிலோனிய அடிமைத்தனத்தைப் பற்றி" என்ற பிரசுரங்களை வெளியிட்டு, திருச்சபையில் குருத்துவ, ஆயர் பணிகள் தேவையில்லையென வாதிட்டார். விரதத்துவம், இறந்தோர்க்கான திருப்பலி போன்ற திருச்சபையின் பாரம்பரிய வழக்கங்களை களைய-வேண்டும், பாப்புவின் அதிகாரத்தை ஒழிக்கவேண்டும், ஒவ்வொரு நாட்டுக் கிறிஸ்தவ சமூகமும் அதன் நிர்வாகத்தை தாங்களே பொறுப்பெடுத்து, தங்கள் ஆயர்களை, பணியாளர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். திருத்தந்தையர் அப்போஸ்தலர்களின் தொடர்ச்சியான வாரிசு என்பதை மறுக்க வேண்டும். அனைத்து விசுவாசிகளின் குருத்துவத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். அருட்சாதனங்கள் வெறும் அடையாளங்கள் மட்டுமே என வலியுறுத்தினார்.

லூதரின் இப் போதனைகள் பல குழப்பங்களைக் உண்டு பண்ணியது. அவர் திருச்சபைக்கு எதிராக திருத்தந்தையரை அவமதித்து, விவிலியத்தை நம்பினால்தான் மீட்பு. சுய சிந்தனை (free will) இல்லை. விவிலியமே அதிகாரமுள்ளது. ஆனால் அதை எவரும் தம் விருப்பப்படி விளக்கலாம். திருத்தந்தையருக்கு ஆயர்க-ளுக்கு, குருக்களுக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது என்றதால் குடிமக்கள் தங்கள் எசமானர்களின் பொருட்களையும், துறவியர், கன்னியர் மடங்களையும் கொள்ளையடித்தனர். ஆலயங்களையும், ஆயர் மாளிகைகளையும் சூறையாடினர். ஆண்டவர் திருமுன் பணக்காரன் ஏழை என்ற பாகுபாடு இல்லையெனக் கலகம் செய்தனர். ஆயர்களின், குருக்களின் சொத்துக்களை மட்டுமல்ல, அரசர்களின், பிரபுக்களின் சொத்துக்களையும், மாளிகைகளையும் சூறையாடினர்.

அத்தனையையும் கண்டும் காணாமலும் பார்த்துக் கொண்டிருந்த லூதர், தனக்கு ஆதரவு அளித்த இளவரசர்களின், பிரபுக்களின் அரண்மனைகள் சூறையாடப்பட்டபோது வெகுண்டெழுந்தார். குடியானவர்களையும், அவர்களது புரட்சியையும் ஒடுக்கவேண்டுமென அறிக்கையிட்டு, அரசர், பிரபுக்கள் பக்கம் சேர்ந்து கொண்டார். இப்படியாக குடியானவர் யுத்தம் ஏற்பட்டது. யுத்தத்தை அடக்குவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்தவேண்டி ஏற்பட்டது. அதனால் மக்களின் ஆதரவை இழந்தார். அதைத் தொடர்ந்து சிலர் பலரைத் திருமணம் செய்யும் உரிமை பழைய ஏற்பாட்டில் உள்ளதெனக் கூறி, பல பெண்களை திருமணம் செய்தனர். அவர்களில் ஒருவர் தன மனைவியரில் ஒருத்தியின் தலையை வாளால் கொய்தார். சிலர் மறு திருமணம் செய்து கொண்டனர். விரைவில் ஆயர்கள், குருக்களைக் கொண்ட திருச்சபைக்குப் பதிலாக அரசியல் தலைவர்கள், இளவரசர்கள்க் கொண்ட சபை ஸ்தாபிக்கப்பட்டு, இளவரசரே முக்கிய ஆயர் என்ற கொள்கை வகுக்கப்பட்டது. அச் சபையில் திருச்சபையிலிருந்த ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தொலிக்கம் என்ற இயல்புகள் இல்லை. அப்போஸ்தலர்களின் பாரம்பரியம் அகற்றப்பட்டு, இல்லறத்தவர்களின் பாரம்பரியம் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு நாட்டுத் திருச்சபைக்கும் அந்த நாட்டு அரசரே தலைவர் என்றதால், லூத்தரன் சபை கட்டுக்கோப்பை இழந்து, மன்னர்களின் கைப்பொம்மையானது. அவர் உண்டாகிய சபை 1529 இல் புரொட்டஸ்தாந்து (Protest – கலகக்காரர், ஆர்பாட்டக்காரர்) சபை என அழைக்கப்பட்டது.

திருச்சபையால் மேற்கொள்ளப்பட்ட சகல சமரச முயற்சிகளும் பயனளிக்காமல் போயின. இறுதியாக 3 தை 1521 இல் பாப்பு பத்தாவது சிங்கராயரினால் லூதர் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டார். அதைத் தொடர்நது ஜெர்மேனிய பேரரசர் ஐந்தாவது சார்ல்ஸ் அவரை ஜெர்மன் நாட்டிலிருந்து வெளியேற்றினார். எனவே அவர் தன் நண்பராகிய சாக்சோனிய இளவரசர் பிரட்ரிக்கிடம் அடைக்கலம் புகுந்தார. லூத்தரின் இறுதி நாட்கள் துயரம் மிகுந்தவையாய் இருந்தன. புரோட்டஸ்தாந்து சங்கம் அமைக்கப்பட்ட பின்பு அவர் சீர்திருத்த இயக்கத்திலிருந்து பின் வாங்கினார். திருச்சபையைச் சீர்திருத்தப் புறப்பட்ட அவர் திருச்சபையைச் சின்னாபின்னமாக்கி, சீர்குலைத்து விட்டார். புரொட்டஸ்தாந்து அரசர்கள் பல

மடாலயங்களையும, ஆயர் இல்லங்களையும், உடைமைகளையும் சூறையாடினர். லூத்தரின் புதிய மதம் போதிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் துன்மார்க்கம், மதப் பற்றின்மை, மற்றும் பாவ நெறிகள் வளர்ந்தன. குடும்ப வாழ்வு சீரழிந்தது. கல்வியின் தரம் வீழ்ச்சி அடைந்தது. கலாசாலைகள் சரிவர இயங்கவில்லை. பள்ளிகளை நடத்திவந்த மடாலயங்கள் சூறையாடப்பட்டதனால் கல்வி கற்பிக்க ஆசிரியர்கள், துறவிகளால் கல்விப் பணியைத் தொடர்ந்தாற்ற முடியவல்லை. அதைப் பார்த்து கவலையடைந்த லூதரே ஒரு உரையில், "பாப்புவின் ஆட்சியிலிருந்ததை விட மக்கள் ஏழு மடங்கு இன்று மோசமாக உள்ளனர். அவர்கள் அதிக துன்மார்க்கராயும், கற்பில்லாதவராயும், பொறாமையுள்ளவர்களாயும், நேர்மையற்றவர்க-ளாயும் காணப்படுகின்றனர்" என்று கூறினார். அவரது சொந்த விட்டனபேர்க்கிலிருந்த சீர்கேடான நிலை அவரை மிகவும் மனம் வருந்தச் செய்தது. அதுபற்றி அவர் தம் மனைவிக்கு 1545 இல் "நாம் இந்த சோதோமைவிட்டு வெளியேறுவோம். இந்த அவல நிலையை விட, வீடுவீடாகச் சென்று பிச்சை எடுத்து உண்பதையே விரும்புகிறேன்" என எழுதினார். இருந்தும் அவருடைய பிடிவாதம் தளரவில்லை. திருத்தந்தையின் அதிகாரம் வளர்ச்சி அடைவதைக்கண்டு கவலைப்-பட்டார். திருச்சபையின் திரிதேந்தின் சங்கம் கூடப்படவிருந்த வேளையில். தம் ஆதரவாளர்கள் அதில் பங்கெடுப்பதைத் தடைசெய்யும் நோக்குடன், 1545 இல் "பசாசால் ஸ்தாபிக்கப்பட்ட பாப்புவின் சபைக்கு எதிராக" என்ற மடலை எழுதினார். இறுதியாக அவநம்பிக்கை அடைந்த-வராக 1546ம் ஆண்டு, மாசி மாதம், 18ம் நாள், ஐசல்பேர்க்கில் தனது 63வது வயதில். அவர் இறந்தார்.

லூத்தரன் மதம் ஜெர்மனியில் தொடர்ந்து பரவியது. 3ம் கிறிஸ்தியன் (1534-1559) லூத்தரன் மதத்தை டென்மார்க்கில் பலவந்தமாகத் திணித்தான். அதைத் தொடர்ந்து கிறிஸ்தவ நாடுகளாகிய நோர்வே, ஸ்வீடன், ஐஸ்லாந்து நாடுகளிலும் லூத்தரன் மதம் பரவி, அந்நாடுகளின் அரச மதமாக்கப்பட்டன. 1555இல செய்யப்பட்ட ஆக்ஸபரோ ஒப்பந்தத்தினபடி, ஜெர்மனியில் அரச மதமாக கத்தோலிக்க மதமும், லூத்தரின் மதமும் சமநிலையில் பேணப்பட்டன. ஜெர்மனியின் கீழிருந்த நாடுகளில் (நமாபியா, தன்சேனியா) லூத்தரன் மதம் பரவியது. 1927 இல் லூத்தரின் மதம் இலங்கையில் உருவாகியது. திருத்தந்தை

3ம் பவுலால் ஆரம்பிக்கப்பட்ட திரிதேந்தின் பொதுச்சங்கத்தில் (1545-1563) பிரிவினைச் சபைகளின் படிப்பினைகளுக்கு எதிராகக் கத்தோலிக்க திருச்சபையின் மறைக் கோட்பாட்டுப் போதனைகள் அதிகார பூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டன.

**மாட்டின் லூதரின் முக்கியமான கருத்துக்கள்**

1. விசுவாசத்தின் ஒரேயொரு மூலம் திருவிவிலியமே. கிறிஸ்தவ வாழ்வின் மையம் அதுவேயாகும். அதுவே அதிகாரமுடையது. அதை எவரும் படிக்கலாம், தம் விருப்பம்போல் அதற்கு விளக்கம் கூறலாம்.

2. "நம்பிக்கையால் மட்டுமே ஒருவர் மீட்படைய முடியும்". விசுவாசத்தினால் மட்டுமே மீட்பு கிடைக்கிறது. அது இறைவனின் இலவசக் கொடை, எம் நற்செயல்கள் வழியாக நாம் அதற்கு உரிமை கோர முடியாது.

3. சென்ம பாவத்தால் எல்லோரும் பாவத்துக்கு அடிமைகளாக இருக்கின்றனர். எனவே அவரகளால் செய்யக்கூடியது தீமை மட்டுமே. ஒரு நற்செயலையும் தானாகச் செய்ய முடியாது. தன் மீட்பைத் தன்னால் பெற்றுக்கொள்ள முடியாது. திருச்சபைக்கு உள்ளும், உலகத்தினுள்ளும் பாவம் நிலவுகிறது.

4. உலகில் வாழும்வரை கிறிஸ்தவர்கள் பாவிகள் போன்றே புனிதரகளுமாவர். நமது சக்தியால் அல்ல, இறைவனின் உதவியை ஏற்றுக் கொளபவர்களே புனிதர்களாவர்.

5. புனிதர் நல்வாழ்வு வாழ்ந்த உன்னத முன்மாதிரிகைகள் அல்ல. அவர்கள் இறையுதவியைப் பெற்றுக் கொண்ட பாவிகளே.

6. அருளடையாளங்கள் திருமுழுக்கு. திருப்பலி என்ற இரண்டு மட்டுமே. அவை மட்டுமே திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. குழந்தைகள் சென்ம பாவத்தில் பிறக்கின்றபடியால், அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கவேண்டும். நற்கருணை அப்ப, இரச வடிவில் கொடுக்கப்பட வேண்டும்.

7. திருத்தந்தைக்கோ, ஆயர்களுக்கோ, குருக்களுக்கோ எவ்வித அதிகாரமும் இல்லை. அவர்களின் பணிகளும் தேவை இல்லை.

இறைவனுக்கும் மனிதருக்குமிடையே இடைநிலையாளர் தேவையில்லை. பொது நிலையினருக்கும் துறவறத்தவருக்கும் இடையே வேறுபாடு இல்லை. திருமுழுக்குப் பெற்றவர்கள் அனைவரும் குருக்களே. குருக்கள் திருமணம் செய்ய அனுமதிக்கவேண்டும்.

8. திருச்சபை ஒரு தெய்வீக தாபனம் அல்ல. மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டதே திருச்சபை. திருத்தந்தையர்கள் அப்போஸ்தலர்களின் தொடர்ச்சியான வாரிசுகள் அல்லர். ஒரு நாட்டு அரசர்களே அந் நாட்டுத் திருச்சபையின் தலைவர்கள்.

9. ஆராதனைகள், வழிபாடுகள் மக்களின் மொழியிலேயே நடத்தப்பட வேண்டும்.

10. அப்போஸ்தொலிக்க, நிசேயா விசுவாச அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

## 7.1.3. சுவிங்ளியின் புரட்சி (1484-1531)

ஷுல்ரிச் சுவிங்ளி சுவிற்சலாந்திலுள்ள வில்டோஸ் என்ற ஊரிலிருந்த ஒரு உழவர் குடும்பத்தில் 1484ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி பிறந்தார். அவர் குடும்பத்தின் ஒன்பது பிள்ளைகளுள் மூன்றாவது பிள்ளையாவார். அவருடைய தந்தை அவ் ஊர்ச் சமூக நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகித்தார். சுவிங்ளி தன் ஆரம்ப கல்வியை மாமனரான பார்தலோமேயு என்ற குருவின் கீழ் வெஸ்ஸன் என்ற இடத்தில் பயின்றார். பின்னர் தன் கல்வியை பாசேலில் தொடர்ந்து, நடுவர் கிரகோரியின் கீழ் இலத்தீன் மொழியைக் கற்றார். டொமினிக்கன் சபையினர் அவரைத் தங்கள் சபையில் சேர்க்க விரும்பினர். ஆனால் அவர் வியென்னா பல்கலைக் கழகத்தில் இணைந்து, உயர் கல்வியை மேற்கொண்டார். 1506 இல் பாசேல் பல்கலைக் கழகத்திலிருந்து முதுமானிப் பட்டம் பெற்றார். சிறிது இறையியல் கற்றபின், 29 புரட்டாசி 1506 இல் ஒரு குருவாகத திருநிலைப்படுத்தப்பட்டு, கிளாறுஸ் என்ற பங்கில் பத்து ஆண்டுகள் பணிபுரிந்தார். பின்னர் சுவிற்சலாந்து படை வீரர் மத்தியில் ஆன்மீகக் குருவாக பணியாற்றினார். சீர்திருத்த சிந்தனையுடைய அவர் லூத்தரின் எழுத்தாக்கங்களை பெரிதும் விரும்பிப் படித்தார். காலப் போக்கில் பிரிவினை மதத்தைப் பற்றிப்

போதிக்கத் தொடங்கினார். படிப்படியாக சுவிற்சலாந்தில் பிரிவினை மத இயக்கத்தின் தலைவராக மாறினார். முதலில் 1516 இல் தேவதாய்க்கும், திருப்பயணத்துக்கும் எதிராகப் போதிக்கலானார் ஆனால் மக்கள் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், அவரைப் பங்கிலிருந்து விரட்டிவிட்டார்கள்.

எனவே 1519 இல் சுவிங்ளி சூரிச் பட்டணம் சென்று, குறொஸ்மன்ஸ்ரர் பங்கில் பணிபுரிந்தார். மிகச் சாதுரியமான போதகராகிய அவர் அங்கு தம் தப்பறைப் போதகத்தை, மக்கள் விரும்பும் முறையில் எடுத்துரைக்கலானார். 1522 இல் தவக் காலத்தில் கிறிஸ்தவர்கள் நோன்பு இருக்கும் பழக்கத்தைச் சாடினார். விசுவாசத்தின் ஒரே சட்டம் விவிலியமென்றும், சென்ம பாவம் மனிதனின் சுய விருப்பத்தை அழித்து, அவனை தீமை செய்வதிலேயே நாட்டம் கொள்ளச் செய்கிறதென்றும் கூறினார். திருவிவலியத்தின் அதிகாரத்தை வலியுறுத்திய அவர், காலப்போக்கில் திருவிவிலியத்தால் உறுதிப்படுத்-தப்படாத சமயக் கோட்பாடுகளை நிராகரித்தார். துறவற வார்த்தைப்-பாடுகள், குருக்களின் பிரமச்சாரியம், புனிதர்களின் பரிந்துரை, உத்தரிப்புத் தலம் பற்றிய திருச்சபையின் படிப்பினைகளை எதிர்த்தார். தன்னைப் போலவே ஏனைய குருக்களும் உலக இச்சைகளால் வருந்துகிறார்களெனக் கூறிய அவர், ஆனா றெயின்காட் என்ற விதவையை திருமணம் செய்து, ஆயர்கள் தங்கள் குருக்கள் திருமணம் செய்வதை தடைசெய்யக் கூடாதென்றார். எந்தவொரு திருவருட்-சாதனமும் அருட்கொடைகளை வழங்குவதில்லை என்றும், அவை வெறும் அடையாளங்கள் மட்டுமே என்றும் போதித்தார். நற்கருணையில் இயேசு இல்லையென்றும், அது இயேசுவின் மரணத்தின் ஒரு நினைவு அடையாளமே என வாதிட்டார். திருச்சபையின் தலைவர்களின் சீர்குலைந்த, இலௌகீக. சுகபோக வாழ்க்கையை விமர்சித்தார்.

சூரிச் நகர சபை அவருக்கு ஆதரவு அளித்ததால், அங்கிருந்த பல ஆலயங்களுக்குச் சென்று, பீடங்களையும், சொரூபங்களையும் உடைத்தெறிந்து, திருப்படங்களைக் கிழித்தெறிந்து, நற்கருணை விருந்திற்கு ஒரு மேசையை மட்டும் வைத்தார். திருப்பலிக்குப் பதிலாக, திருவிவிலியத்தை மையமாகக் கொண்ட எளிய நற்கருணை வழிபாட்டு முறை அறிமுகம் செய்யப்பட்டது. ஆலயத்தில் இசைக் கருவிகள்

பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டது. சுவிங்ளி அதிகமான லூத்தரின் சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டாலும், நற்கருணை பற்றிய அவருடைய கொள்கையிலிருந்து வேறுபட்டார். லூதர். பாரம்பரியக் கொள்கையைப் பின்பற்றி, நற்கருணையில் இயேசு அப்ப இரச வடிவில் உண்மையாகவே பிரசன்னமாயிருக்கிறார் எனப் போதித்தார். சுவிங்ளி நற்கருணையில் இயேசுவின் உண்மைப் பிரசன்னத்தை மறுதலித்ததால், அவர் பொய்யர், பேய் பிடித்தவர, மீட்படைய மாட்டாரென்று லூதர் கூறினார். ஆனால் சுவிங்ளி நற்கருணையில், அப்ப இரச பகிர்தலின்-போது, இயேசுவின் நினைவுப் பிரசன்னமே இருப்பதாகப் போதித்தார். லூதரும் ஒரு காலத்தில் நற்கருணையில இயேசு இருக்கிறாரென்ற கொள்கையை உதாசீனம் செய்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இருவரும் 1520 மார்பர்க் என்னுமிடத்தில் கூடி, விவாதித்தனர். ஆனால் சமரசம் ஏற்படவில்லை. “இது என்னுடைய உடல்” என்ற விவிலிய வார்த்தைக்கு விளக்கம் கொடுப்பதில் அவர்களுக்குள் ஒற்றுமை இருக்கவில்லை. லூதர் போதித்தவைகளையே தான் பின்பற்றி, அவர் சொன்னதுபோல் தன் மனதிற்குத் தோன்றியவாறு விவிலிய வசனத்திற்கு விளக்கம் தருவதாக சுவிங்ளி வலியுறுத்தினார். அப்பொழுது லூதர் திருச்சபையின் திருத்தந்தையர்கள் எழுதியவற்றை மேற்கோள் காட்டி, வாதாடினார். முன்னர் அத் திருத்தந்தையரை “முட்டாள்கள்” என்றும், அவர்கள் எழுதியவற்றை படிக்கிறவர்கள் நலமற்ற பானத்தையே குடிக்கிறார்-களென்றும் சொல்லிவந்த லூதர், இப்பொழுது அவர்களை “அன்புத் தந்தையர்” என அழைத்து, அவர்களை தம் போதனைகளுக்கு ஆதார-மாக மேற்கோள் காட்டுவது குறிப்பிடத் தக்கது. அது “திருவிவிலியம் மட்டுமே” என்ற அவர்களின் கொள்கையை கேள்விக்கு உள்ளாக்கியது.

சுவிங்ளியின் போதனைகளை ஏற்றுக்கொண்ட சுவிற்சலாந்து மாகாணங்கள் ஏனைய மாகாணங்களில் இப் பேதகப் போதனைகளை வலுக்கட்டாயமாகப் புகுத்திடத் திட்டமிட்டனர். இதையறிந்த கத்தோலிக்க மாகாணங்களான ஸ்வீ, ஊரி, அன்டரவால்டன், லூசர்ன், ஸஷக், என்பன ஒன்றுகூடி, படை திரட்டி, காப்பல் என்ற இடத்தில் 1531இல் பிரிவினை மத வெறியர்களை முறியடித்தனர். அதில் 1531ம் ஆண்டு ஐப்பசி 11ம் நாள் சுவிங்ளி கொல்லப்பட்டார்.

**சுவிங்ளியின் முக்கிய கருத்துக்கள்**

1. விசுவாசத்தின் ஒரே சட்டம் விவிலியம். எவரும் தன் மனதிற்குத் தோன்றியவாறு விவிலிய வசனத்திற்கு விளக்கம் கொடுக்கலாம்.

2. திருவிவிலியத்தின் அதிகாரத்தை வலியுறுத்திய அவர், திருவிவிலியத்தால் உறுதிப்படுத்தப்படாத சமயக் கோட்பாடுகளை நிராகரித்தார். துறவற வார்த்தைப்பாடுகள், குருக்களின் பிரமச்சாரியம், புனிதர்களின் பரிந்துரை, உத்தரிப்புத் தலம் பற்றிய திருச்சபையின் படிப்பினைகளை எதிர்த்தார்.

3. சென்ம பாவம் மனிதனின் சுய விருப்பத்தை அழித்து, அவனை தீமை செய்வதிலேயே நாட்டம் கொள்ளச் செய்கிறது.

4. எந்தவொரு திருவருட்சாதனமும் அருட்கொடைகளை வழங்குவதில்லை. அவை வெறும் அடையாளங்கள் மட்டுமே. நற்கருணையில் இயேசு இல்லை. அது இயேசுவின் மரணத்தின் ஒரு நினைவு அடையாளம் மட்டுமே.

5. ஆலயத்தில் படங்கள், சொரூபங்கள், இசைக் கருவிகள் இருக்கக் கூடாது. திருப்பலி இல்லை. நற்கருணை வழிபாடு மட்டுமே நடத்தலாம்.

6. குருக்கள் திருமணம் செய்வதை தடைசெய்யக் கூடாது.

## 7.1.4. கல்வினின் புரட்சி (1509-1564)

லூத்தரின் பிரிவினை மதத்தை சர்வதேச மதமாகப் பரப்பி, அதற்கு மறைக் கல்வியையும், ஆட்சி முறையையும் வகுத்துக் கொடுத்தவர் கல்வின் ஆவார். யோண் கல்வின் பிரான்ஸ் நாட்டில், நோயன் பட்டணத்தில் 1509ம் ஆண்டு ஆடித் திங்கள் 10ம் நாள் பிறந்தார். அவருடைய தந்தை ஜெராட் கோவின் (லத்தீன் மொழியில் கல்வின்) ஒரு நொத்தாரிசு. அவருடைய தாய் ஜான் லெபிரேன் ஆவார். அவர்கள் நடுத் தரக் குடும்பத்தவர்கள். திருச்சபையின் ஆதரவுடன் பாரிசிலுள்ள குருமடத்தில் சேர்ந்து, ஒரு குருவாக வரும் நோக்குடன் இறையியல் கற்றார். ஆனால் பின்னர் தம் மனதை மாற்றிக் கொண்டு, போர்ஜே பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, மொழி, சட்டப் படிப்பை

மேற்கொண்டார். அங்கு கிரேக்கப் பேராசிரியராகவிருந்த ஜெர்மன் நாட்டு மெல்கியோர் ஊல்மார் இவரது நண்பரானார். அவர் லூத்தரின் ஆதரவாளர். எனவே எளிதில் கல்வினை லூத்தரன் மதத்தில் சேர்த்துக் கொண்டார். கல்வின் லூதரை ஒரு நாளும் காணவில்லை. அவருக்கும் லூதருக்கும் இடையே ஒரு தலைமுறை இடைவெளியிருந்தது. ஆனால் லூத்தரின் படிப்பினைகளால் மிகவும் கவரப்பட்ட கல்வின், அவற்றைப் பரப்புவதில முழ்முரமாக ஈடுபட்டார். விரைவில் பிரான்ஸ் நாட்டு லூத்தரன் சபையில் ஒரு முன்னணித் தலைவரானார். ஆனால் கத்தோலிக்க அரசனான 1 வது பிரான்சிஸ் லூத்தரன் சபையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தொடங்கியபோது, அவர் தப்பி, பாசல் பட்டணம் சென்று அடைக்கலம் புகுந்தார்.

கல்வின் பாசலில் இருந்தபொழுதே முதல் முறையாக "கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள்" (The Institutes of the Christian Religion) என்னும் நூலை இலத்தின் மொழியில் எழுதி வெளியிட்டார். அது புரட்டஸ்தாந்து படிப்பினைகளின் கைநூலாக அமைந்தது. பின்னர் அது பிரான்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. இந் நூல் பின்னர் பல புதிய புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டு, பலமுறைகளில் மீள்பதிப்புச் செய்யப்பட்டது. அதன் நிமித்தமே புரட்டஸ்தாந்து இயக்கத்தில் கல்வின் ஒரு முக்கிய பிரமுகரானார். இந் நூல் படைத்தவரான இறைவன், கிறிஸ்துவில் இறைவன் வழங்கும் மீட்பு, தூய ஆவி, திருச்சபை என்ற நான்கு பகுதிகளைக் கொண்டிருந்தது. மேலும் ஆதாமின் வீழ்ச்சியால் மனிதன் தன் சுய மன உரிமையை (free will) இழந்து விட்டான். அவன் இறைவனின் அடிமையாகிவிட்டான். அவனால் இனி நன்மையொன்றும் செய்ய முடியாது. இறைவன் முன்பே யார் யார் மோட்சம் போகவிருப்பவர்கள், யார் யாரெல்லாம் நரகம் போக இருப்பவர்கள் என்று தீர்மானித்துவிட்டார். இம் "முன்விதி"யின்படி (Predestination) மோட்சம் போக இருப்பவர்களே மோட்சம் போவார்கள். இரு சபைகள் உள்ளன. ஒன்று முன்விதி பெற்றவர்கள் (predestined) சபை. மற்றது ஏனைய விசுவாசிகள் சபை. திருமுழுக்கு. நற்கருணை என்ற இரு அருட்சாதனங்களே உள்ளன. சபையானது 6 குருக்களையும், 12 இல்லறத்தவர்களையும் கொண்ட ஒரு குழுவினால் நிர்வகிக்கப்படும், என்ற கருத்துக்கள் உள்ளன.

1536 இல் கல்வின் ஸ்டிராபரோ பட்டணம் சென்றார். அங்கு அனாபாப்தீஸ்ற் சபையைச் சேர்ந்த இடெலெற் என்ற விதவையைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. ஆனால் சில நாட்களுக்குள் அது இறந்துவிட்டது. மனைவியும் 1549 இல இறந்தார். அங்கு அமைதியாக வாழ்ந்து, புரொட்டஸ்தாந்து மதத்திற்காக நூல்கள் எழுதுவதையும் படிப்பதையுமே கல்வின் விரும்பினார். ஆனால் மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு, ஜெனீவா சென்றார். அங்கு சீர்திருத்தவாதி கியோம் பரலுடன் இணைந்து ஒரு நன்று ஒழுங்கமைக்கப்பட்ட வலிமையான சீர்திருத்த இயக்கத்தை ஏற்படுத்தி, ஜெனீவாவை புரோட்டஸ்தாந்த சீர்திருத்தத்தின் மையமாக அமைக்கவேண்டுமென்பதே அவரது இலட்சியமாகவிருந்தது. கத்தோலிக்க ஆயர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். திருப்பலி ஒப்புக்கொடுத்தல் நிறுத்தப்பட்டது. இறைவழிபாட்டில் பங்கெடுக்க அனைவரும் கட்டாயப்படுத்தப்பட்டனர். பங்கெடுக்காதவர்கள் தண்டிக்கப்பட்டனர். நடனம், சீட்டாட்டம், ஆடம்பர ஆடை அணிதல், இறை நிந்தனை, விபசாரம் என்ற குற்றங்களுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது. விசுவாச அறிக்கை ஒன்று எழுதப்பட்டு, அந் நகரத்து வாசிகள் ஒவ்வொருவரும் அதில கையெழுத்திட நிர்பந்திக்கப்பட்டனர். நகரமெங்கும் திரிந்து தவறிழைப்போரைக் கண்டுபிடிக்க உளவாளிகள் அனுப்பப்பட்டனர். சுருங்கக் கூறின் கல்வின் ஜெனீவா நகரின் சர்வாதிகாரி போல் செயற்பட்டார். அதைப் பொறுக்க முடியாத மக்கள் அவரை நகரத்திலிருந்து விரட்டிவிட்டனர்.

கல்வின் ஸ்ரஸ்பேர்க் சென்று, தன் பணியைத் தொடர்ந்தார். அங்கு அவர் மார்டின் பூசர் என்ற போதகருடன் இணைந்து, ஒரு பொது வழிபாட்டு முறையை வடிவமைத்தார். கத்தோலிக்க திருச்சபையின் திருப்பலி வழிபாட்டு முறையின் அமைப்பை அவர் பின்பற்றினாலும், தேவையற்ற சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் விலக்கி, மிகவும் எளிமையான வழிபாடாக அமைத்தார். அதில் இறைவார்த்தைக்கும், மறைபோதகத்துக்குமே முக்கியத்தவம் கொடுக்கப்பட்டன. படிக்கப்பட்ட சங்கீதங்களிலும், பாடல்களிலும் அனைவரும் பங்கெடுத்தனர். தன்னுடைய “கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள்” என்ற நூலை கூடிய விடயங்களுடன் புதுக்கப் பதிப்பித்தார். திருவிவிலிய நூல்களுக்கு, சொல்லுக்குச் சொல் முறையில், விளக்கவுரை எழுதினார்.

அதற்கிடையில் ஜெனீவாவில் நிலைமை மாறி, கல்வினின் ஆதரவாளரின் ஆதிக்கம் வலுவடைந்தது. எனவே அவர்கள் கல்வினை அங்கு திரும்பி வரும்படி அழைத்தனர். அதை ஏற்றுக்கொண்டு, 1541 இல் கல்வின் ஜெனீவா திரும்பினார். உடனே தான் இடைநிறுத்திச் சென்ற பணியை ஆரம்பித்து, 13,000 மக்களைக் கொண்ட ஜெனீவா நகரத்தை உண்மையான சீர்திருத்தமடைந்த சமூகமாக அமைக்க முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டார். குருக்களை நகர நிர்வாகத்தில் பங்கெடுக்கச் செய்தார். கடுமையான ஒழுக்க நெறிகளை அமுல் செய்தார். அந் நகரத்தை அப்போஸ்தலர் காலத்துக் கிறிஸ்தவ சமூகத்தை ஒத்ததாக அமைக்க விரும்பினார். மேய்ப்பர்கள், போதகர்கள், மூப்பர்கள், திருத்தொண்டர்கள் என்ற நான்கு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மத விடயங்களைக் கண்காணிக்க 5 மேய்ப்பர்களும், மறை உண்மைகளைப் படிப்பிக்க போதகர்களும், நகர அரசியல் நடவடிக்கைகளை கண்காணிக்க 12 மூப்பர்களும், நோயாளர், முதியோர், ஏழைகளைக் கவனிக்க 7 திருத்தொண்டர்களும் நியமிக்கப்பட்டனர். ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கண்காணிக்க திருத்தொண்டர்களையும், மூப்பர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றும் அமைக்கப்பட்டது. மறை உரை வேளையில் சிரிப்பது, தகாத பாடல்களைப் பாடுவது, நடனம் ஆடுவது, சாஸ்திரம் கேட்பது போன்ற சிறிய சிறிய குற்றங்களுக்கெல்லாம் தண்டனை அளிக்கப்பட்டன. ஜெனீவா மக்களின் பொது வாழ்வு விரைவில் மாற்றம் அடைந்தது.

ஜெனீவாவில் அவர் தாபித்த பல்கலைக் கழகமே அவருடைய முக்கிய சாதனையாக அமைந்தது. திருவிவிலிய உண்மைகளை போதிக்கக்கூடிய கல்வி அறிவு கொண்ட குருக்களையும், அவற்றை விளங்கக்கூடிய பொது நிலையினரையும் உருவாக்கும் நோக்குடனேயே அது அமைக்கப்பட்டது. தன் நண்பரான பிரான்ஸ் நாட்டு தியோடோர் பெசாவை அப் பல்கலைக் கழகத்தின் தலைவராக்கினார். சீர்திருத்த சபையின் போதகர்களை பயிற்றுவிப்பதற்கென்று தொடங்கப்பட்ட அப் பலகலைக் கழகத்தில் தத்துவக் கலை, இறையியல், கிரேக்க எபிரேய மொழிகள், போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டன. கல்வின் 20 ஆண்டுகள் அதன் ஆளுநராகவும், இறையியல் ஆசிரியராகவும். இருந்து, மறைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, போதிப்பதிலும், கற்பிப்பதிலும், எழுதுவதிலும், கடிதத் தொடர்பு கொள்வதிலும், சட்டம், நிர்வாகம்

சார்பாக அறிவுரை கொடுப்பதிலும் முழுமூச்சாக ஈடுபட்டார். கல்வின் மதத்தை உலகெங்கும் பரப்புவதற்கு ஒரு முக்கிய, வலிமையான மையமாக அப் பல்கலைக் கழகம் விளங்கியது. ஐரோப்பாவிலிருந்தும், வேறுபல நாடுகளிலிருந்தும் கல்வினை ஆதரித்தவர்கள் அங்கு இறையியல் பயில வந்தனர். ஜெனீவா கல்வின் மதத்தின் உரோமாபுரி ஆனது. அவருடைய மாணவர்கள் அவரின் செயல்முறைகளை ஐரோப்பாவிலும், சுவிச்சர்லாந்து போன்ற ஸ்கந்தநேவிய நாடுகளிலும் புகுத்தினர்.

கல்வின் தன்னை லூதரின் வாரிசாகக் கருதினார். அவருடைய இறையியல் பொதுவாக லூதரின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டது. திருவிவிலியமே மீட்பு பற்றிய உண்மைகளின் ஒரே மூலமாக இருக்கிறது. நம்பிக்கையினால் மட்டுமே மீட்பு கிடைக்கிறது. விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவின் குருத்துவத்தில பங்கெடுக்கிறார்கள். லூத்தரின் முக்கிய படிப்பினையான நம்பிக்கையினால் நீதிமான்களாக்கப்படுதல், விசுவாசதினால் மறுபிறப்படைதல் என்பவற்றை வெகு பிரமாணிக்கமாகப் பாதுகாத்து, தெளிவாக வலியுறுத்தினார். இருந்தும் அவருடைய இறையியல் சிந்தனை வளர்ச்சியடைந்தபோது, பல முக்கிய விடயங்களில் லூத்தரின் கருத்துக்களிலிருந்து வேறுபட்டார். குறிப்பாக ஆண்டவரின் இறுதி உணவு, திருவிவிலிய நூல்கள், முன்விதி, திருச்சபை, கிறிஸ்துவியல், அருட்சாதனங்கள் என்பவைபற்றிய கருத்துக்களில் வேறுபட்டார். கடவுள் சர்வ வல்லமை உள்ளவர். அனைத்தையும் ஆளுகின்றவர். அவருடைய திருவுளத்தின்படி சிலர் நிலைவாழ்வு பெறவும், வேறுசிலர் நரக நெருப்புக்கும் உரியவர்களென இறைவன் ஏற்கனவே தீர்மானித்திருக்கிறார். மீட்பு இறைவனின் இலவசக் கொடை. அருள் என்பதை வலியுறுத்தவே அவர், தன்னுடைய முன்விதி கொள்கையைப் போதித்தார். சென்ம பாவத்தைப் பொறுத்த மட்டில், மனிதன் சென்ம பாவத்தினால் மிகவும் சீர்குலைந்து இருக்கிறான். அவன் தன்னிலே, பாவத்தைத் தவிர. எந்த நன்மையும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறான். கடவுளே மனிதனுக்கு விசுவாசத்தை இலவசமாகக் கொடுக்கிறார் அதன் வழியாகவே மனிதன் கடவுளுக்கு ஏற்புடையவனாகிறான். கிறிஸ்துவியலில், அவர் திருச் சபையின் சங்கங்களின் மூவொரு கடவுள், கிறிஸ்து கடவுள்-மனிதன், பற்றிய படிப்பினைகளை ஏற்றுக் கொண்டார்.

திருச்சபையைப் பொறுத்த மட்டில் கல்வின், லூதருடைய "மனித தாபனம்" என்ற கருத்துக்கு மாறாக, நலிந்தவர்களை மிட்பின் பாதையில் இட்டுச் செல்ல இறைமகன் இயேசுவினால் தாபிக்கப்பட்ட-தென்பதை (divine institution) ஏற்றுக்கொண்டார். திருச்சபையில் இருவிதமான மக்கள் இருக்கின்றனர்: முன்விதி பெற்றவர்கள், முன்விதி பெறாதவர்கள். எங்கு இறைவார்த்தை போதிக்கப்படுகின்றதோ, எங்கு அருட்சாதனங்கள் வழங்கப்படுகின்றதோ அங்கு திருச்சபை இருக்கிறது. ஆயர் இல்லாமல் திருச்சபை இல்லையென்ற கத்தோலிக்கரின் கருத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. திருவிவிலியத்தின் அடிப்படையில் திருமுழுக்கு, நற்கருணை என்ற இரு அருட்சாதனங்கள் மட்டும் இருக்கின்றன. திருச்சபையில் அருட்சாதனங்கள் மந்திர ஜாலங்கள், இயந்திரங்களைப் போல பாவிக்கப்படுகின்றன என விமர்சிக்கும் கல்வின், அருட்சாதனங்களைப் பெறுவோரின் விசுவாசத்தை வலியுறுத்துகிறார். அங்கு மறைப் போதகமும், நற்செய்தி அறிவித்தலும் இடம்பெற வேண்டும். விசுவாசிகள் செயல்முறையில் பங்கெடுக்கவேண்டும். நற்கருணையைப்பற்றிய அவருடைய கருத்துக்கள் லூத்தரின் கருத்துக்களை ஒத்ததாக உள்ளன. ஆனால் லூத்தர் அப்ப இரசத்தில் இயேசுவின் உடல் உண்மையாக இருக்கிறதெனக் கூற, கல்வின் அப்ப, இரசத்தின் ஊடாக இயேசு தம் உடலையும், இரத்தத்தையும் நம்முடன் பகிர்ந்து கொள்கிறாரெனக் கூறுகிறார். அது ஒரு திருவிருந்து. இயேசு உண்மையாகவே நற்கருணையில் இருக்கிறார். வருடத்தில் நான்கு முறைகள் நற்கருணை பகிரப்படும்.

கல்வினின் மதம் பிரான்சிலும், நெதர்லாந்து, குறிப்பாக ஸ்கொட்-லாந்து போன்ற நாடுகளில் பரவியது. ஜேர்மனி, சுவிற்சலாந்துவில் அதற்கு அவ்வளவு ஆதரவு கிடைக்கவில்லை. அங்கு லூதரின் மதமே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. எங்கெல்லாம் கல்வின் மதத்தினர் தங்கள் சபையை அமைத்தனரோ, அங்கெல்லாம் நயத்தாலும், வன்முறையாலும் கத்தோலிக்க திருச்சபையை அழித்திட முனைந்தனர். பல கிறிஸ்தவ ஆலயங்களைக் கைப்பற்றி, பீடங்களையும், சொரூபங்க-ளையும் உடைத்து, ஆர்கன், வீணைகளை அகற்றி, இசையின்றி நீண்ட செபங்கள் சொல்லி, பாடல்களைப் பாடினர். துறவிகள் தங்களின் மடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். ஆயர் இல்லங்கள் சூறையாடப்-பட்டன. லயன்ஸ் பேராலயத்திலிருந்த 50 பெரிய கலைச் சிற்பங்கள்

நொறுக்கப்பட்டன. பல ஆயர்களின் பேராலயங்கள் அழிக்கப்பட்டன. இறுதியில் கல்வின் கொடூர வியாதியால் பீடிக்கப்பட்டு, 27 வைகாசி 1564 இல் இறந்தார்.

**கல்வினின் முக்கிய கருத்துக்கள்**

1. ஆதாமின் வீழ்ச்சியால் மனிதன் தன் சுய மன உரிமையை (free will) இழந்து விட்டான். அவன் இறைவனின் அடிமையாகி-விட்டான். அவனால் இனி நன்மையொன்றும் செய்ய முடியாது.

2. இறைவன் முன்பே யார் யார் மோட்சம் போகவிருப்பவர்கள், யார் யாரெல்லாம் நரகம் போக இருப்பவர்கள் என்று தீர்மானித்து-விட்டார். இம் "முன்விதி"யின்படி (Predestination) மோட்சம் போக இருப்பவர்களே மோட்சம் போவார்கள்.

3. இரு சபைகள் உள்ளன. ஒன்று முன்விதி பெற்றவர்கள் (pre-destined) சபை. மற்றது ஏனைய விசுவாசிகள் சபை.

4. திருவிவிலியமே மீட்பு பற்றிய உண்மைகளின் ஒரே மூலமாக இருக்கிறது. நம்பிக்கையினால் மட்டுமே மீட்பு கிடைக்கிறது. விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவின் குருத்துவத்தில பங்கெடுக்கிறார்கள்.

5. திருமுழுக்கு. நற்கருணை என்ற இரு அருட்சாதனங்களே உள்ளன. திருச்சபையின் திருப்பலி வழிபாட்டு முறையின் அமைப்பை அவர் பின்பற்றினாலும், தேவையற்ற சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் விலக்கி, மிகவும் எளிமையான வழிபாடாக அமைத்தார். அதில் இறைவார்த்தைக்கும், மறைபோதகத்துக்குமே முக்கியத்தவம் கொடுக்கப்பட்டன. படிக்கப்பட்ட சங்கீதங்களிலும், பாடல்களிலும் அனைவரும் பங்கெடுத்தனர். சுரூபங்களும், படங்களும், பீடமும், இசைக் கருவிகளும் அகற்றப்பட்டன.

6. அப்ப, இரசத்தின் ஊடாக இயேசு தம் உடலையும், இரத்தத்தையும் நம்முடன் பகிர்ந்து கொள்கிறாரெனக் கூறுகிறார். நற்கருணை ஒரு திருவிருந்து. இயேசு உண்மையாகவே நற்கருணையில் இருக்கிறார். வருடத்தில் நான்கு முறைகள் நற்கருணை பகிரப்படும்.

7. திருச்சபையில் மேய்ப்பர்கள், போதகர்கள், மூப்பர்கள், திருத்தொண்டர்கள் என்ற நான்கு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மத விடயங்களைக் கண்காணிக்க மேய்ப்பர்களும், மறை உண்மைகளைப் படிப்பிக்க போதகர்களும், நகர அரசியல் நடவடிக்கைகளை கண்காணிக்க மூப்பர்களும், நோயாளர், முதியோர், ஏழைகளைக் கவனிக்க திருத்தொண்டர்களும் நியமிக்கப்பட்டனர். அதற்கு மேலாக ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கண்காணிக்க திருத்தொண்டர்களையும், மூப்பர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

## 7.1.5. எட்டாவது ஹென்றி அரசரின் புரட்சி

(1509-1547)

16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் புரொட்டஸ்தாந்துப் புரட்சி நடைபெற்ற காலத்தில், இங்கிலாந்திலும் சீர்திருத்தம் நடைபெற்றது. லூத்தரின் போதனைகள் இங்கிலாந்திலும் பரவத் தொடங்கின. ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் லூத்தரின் ஆக்கங்கள் இடம் பிடித்துக்கொண்டன. லூத்தரின் போதனையால் கவரப்பட்ட தோமஸ் பில்னி, வில்லியம் ரின்டேல் போன்றோர் சீர்திருத்தப்பணியில் ஈடுபட்டனர். கல்வினின் சபையினரும் இங்கிலாந்தில் சீர்திருத்தத்தை கொணர முயன்றனர். ஆனால் அவர்களுக்கு ஸ்கொட்லாந்து, போலாந்து நாடுகளில் கிடைத்த வரவேற்பும் ஆதரவும் இங்கிலாந்தில் கிடைக்கவில்லை. ஏனெனில் இங்கிலாந்து அரசர் 8வது ஹென்றியும், மக்களும் உரோமைத் திருச்சபையின் போதனைகளுக்கும், அதிகாரத்துக்கும் மிகவும் விசுவாசமும், பிரமாணிக்கமும் உள்ளவர்களாக இருந்தார்கள். சீர்திருத்தவாதிகளின் மனதிலிருந்த சந்தேகங்களும், பிரச்சினைகளும் அவர்களுடைய மனதில் எழவில்லை. உரோமைத் திருச்சபையிலிருந்து பிரிய வேண்டும், அதன் அதிகாரத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணமோ, சிந்தனையோ அவர்கள் மத்தியில் எழவில்லை. மாறாக சீர்திருத்தவாதிகளின் கருத்துக்களையும், அவர்கள் பரப்பிய பேதகங்களையும் முழுமூச்சாக எதிர்த்தார்கள். ஹென்றி அரசர் கத்தோலிக்க மதத்தில் அதிக ஈடுபாடு கொண்டு, பேதகர்களின் சம்மட்டியாக இருந்தார். அவர் புனித தோமாஸ் அக்குவைனசின் ஆக்கங்களை ஏற்று, லூத்தர் எழுத்திய பிரசுரங்களை

பகீரங்கமாகத் தீயிலிட்டுக் கொழுத்தினார். மேலும், "தூய கிறிஸ்துவின் உடலிலிருந்து இந்த துன்மார்க்க லூத்தரை வெட்டி எறியுங்கள்" என்று ஜேர்மன் நாட்டுச் சிற்றரசர்களுக்குக் கடிதமும் எழுதினார். திருச்சபையின் ஏழு அருட்சாதனங்களை மறுத்த லூதருக்கு எதிராக, "ஏழு அருட்சாதனங்களின் இயல்புகள்" என்ற மடலை வரைந்தார். அதன் நிமித்தம் திருத்தந்தை 10ம் சிங்கராயரின் பாராட்டைப் பெற்ற அவருக்கு, 1521 இல் "விசுவாசத்தைப் பாதுகாப்போன்" என்ற பட்டமும் அளிக்கப்பட்டது.

திருத்தந்தைக்கும், உரோமைத் திருச்சபைக்கும் அவ்வளவு விசுவாசமும், பிரமாணிக்கமும், நெருங்கிய உறவும் கொண்டிருந்த இங்கிலாந்திய அரசரும், மக்கள் அனைவரும் ஒரு சொற்ப காலத்திற்குள், 1534 இல் திருத்தந்தையின் அதிகாரத்தைப் புறக்கணித்து, உரோமைத் திருச்சபையுடன் கொண்டிருந்த நல்லுறவை முறித்துக் கொண்டு, சுயமாக இயங்கும் ஒரு புரொட்டஸ்தாந்து புரட்சிச் சபையாக மாறினார்கள். இந்தச் சீரழிவானது காமப் பசாசின் செயற்பாடாக அமைந்தது. இவ் அனர்த்தத்தின் மூல காரணமாக இருந்தவர் ஆன் பொலீன் என்ற ஒரு பெண். ஏனைய நாடுகளில் சீர்திருத்தமானது ஒரு மத இயக்கமாகக் கொண்டுவரப்பட்டது. ஆனால் இங்கிலாந்தினுள் அது சீர்திருத்தத்தை விரும்பாத, அதை முற்றாக எதிர்த்த அரசரால் ஒரு அரசியல் விவகாரமாக நுழைந்தது. 8ம் ஹென்றியின் தந்தையான 7ம் ஹென்றி அரசர் தன்னைப் பெலப்படுத்திக்கொள்ள ஸ்பானிய அரசர் 2வது பேர்டினான்டின் உதவியை, நல் உறவை நாடினார். 14 வயதுடைய தன் மூத்த மகன் ஆர்த்தரை ஸ்பானிய அரசரின் மகள் இளவரசி கத்தரினாவுக்கு, பெரும் சீதனம் பெற்று, 1502 இல் திருமணம் செய்து வைத்தார். ஆனால் திருமணம் செய்து ஆறு மாத காலத்தில் ஆர்த்தர் தனது 15வது வயதில் இறந்தார். அரசர் ஹென்றி ஆர்த்தரின் திருமண ஒப்பந்தத்தின் வழியாக வந்து கொண்டிருந்த செல்வங்கள் நின்று விடுவதைத் தடுக்க, தனக்குப்பின் அரச பதவி ஏற்கவிருந்த இளைய மகனை (8ம் ஹென்றி) கத்தரீனுக்கு திருமணம் செய்து வைக்க விரும்பினார். ஆனால் சகோதரனின் விதவையை மற்றொரு சகோதரன் மறுமணம் செய்வது அன்றைய திருச்சபையின் சட்டத்திற்கு முரணானதாய் இருந்தது. எனவே அரசர் 7ம் ஹென்றி திருத்தந்தையிடம் அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்தார். 1504 இல் திருத்தந்தையின் அனுமதி

கிடைத்தது. அப்போது அவரது இளைய மகனுக்கு வயது 13. எனவே சற்று பொறுத்திருக்க வேண்டியிருந்தது. 1509 இல் அரசர் 7வது ஹென்றி இறந்தார். அதே வருடம், ஆனி 17ம் திகதி 8ம் ஹென்றி தன் மூத்த சகோதரரின் விதவை ஆரகான் கத்தரீனைத் திருமணம் செய்தார். தொடர்ந்து ஆனி மாதம் 24ம் திகதி இருவரும் இங்கிலாந்தின் அரசர், அரசியாக முடிசூட்டப்பட்டனர். ஹென்றி-கத்தரீனுடைய திருமண வாழ்வு 17 ஆண்டுகளுக்கு நீடித்தது. அவர்களுக்கு நான்கு குழந்தைகள் (3 ஆண்கள், 1 பெண்) பிறந்தன. ஆனால் மூன்று ஆண் குழந்தைகளும் பிறந்த சில நாட்களுள் இறந்து விட்டன. பெண் குழந்தை (மேரி) மட்டும் உயிர் தப்பியது. தனக்குப் பின் ஆட்சியில் அமருவதற்கு ஒரு ஆண் பிள்ளையின் தேவையை அரசர் 8ம் ஹென்றி உணர்ந்தார்.

அரசர் 8ம் ஹென்றியின் கத்தரீனுடனான குடும்ப வாழ்வு தூய்மையானதாக, விசுவாசமானதாக இருந்ததில்லை. அவர் தன் மனைவி கத்தரீனைத் தவிர வேறு பல பெண்களுடன் தகாத தொடர்பு வைத்திருந்தார். அவருக்கு குறைந்தது மூன்று மனைவிகளும் ஆறு வைப்பாட்டிகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது. அரசி கத்தரீனின் பணிப் பெண்ணான ஆன் பொலீன் எனபவருடன் அவர் கொண்டிருந்த உறவு வளர்ந்து, அவள்மேல் மோகங்கொண்டு, அவளைத் திருமணம் செய்ய விரும்பினார். அவள் வழியாக தனக்கு வாரிசாக ஒரு ஆண் குழந்தை கிடைக்குமெனவும் எண்ணினார். எனவே 1527 இல் கத்தரீனை விவாகரத்துச் செய்யத் தீர்மானித்தார். 17 ஆண்டுகள் கத்தரீனுடன் கூடிக் குடும்ப வாழ்வு வாழ்ந்து, நான்கு பிள்ளைகளைப் பெற்றபின் எவ்வாறு விவாக ரத்துக் கோருவது? அவருடைய அரண்மனை இறையியலாளர்களின் ஆலோசனையுடன், "உன் சகோதரனின் மனைவியை வெற்றுடம்பாக்காதே! ஏனெனில் அவள் உன் சகோதரனின் வெற்றுடம்பு" (லேவி.18:16) என்ற விவிலிய சட்டத்திற்கு எதிராக திருத்தந்தை 2ம் ஜூலியஸ் தன் அண்ணனின் மனைவியைத் திருமணம் செய்ய அளித்த உத்தரவு செல்லுபடியாகாது எனக் கூறி, விவாகரத்துக் கோரி, உரோமைக்குத் திருத்தந்தை 7வது கிளமென்றிடம் விண்ணப்பம் அனுப்பினார். திருத்தந்தை அந்த வழக்கை இங்கிலாந்தில் விசாரணை செய்ய கருதினால் காம்பேஜியோவையும், கருதினால் ஊல்சியையும் கேட்டுக்கொண்டார். ஆனால் 1529 இல் அந்த வழக்கை விசாரணை செய்யக் கூடின நீதிமன்றத்தின் முன் வருகை தர அரசி ஆரகான்

கத்தரின் மறுத்துவிட்டார். எனவே திருத்தந்தை வழக்கின் இரு தரப்பினரையும் உரோமைக்கு வரும்படி அழைத்தார். அரசர் ஹென்றி குருக்கள் மகாநாட்டைக் கூட்டி, "கிறிஸ்தவ சட்டங்கள் அனுமதிக்கும் அளவிலே இங்கிலாந்து அரசர் இங்கிலாந்து திருச்சபையின் தலைவர்" எனத் தீர்மானம் எடுத்து, திருத்தந்தையின் ஆட்சியிலிருந்து இங்கிலாந்தைப் பிரிக்கப் போவதாகக் கூறித் திருத்தந்தையைப் பயமுறுத்தினார். அதேவேளை அரசி கத்தரின் அரசர் ஹென்றியுடனான தனது திருமணம் செல்லுபடியானது என்று கூறி, அதற்கு பல உறுதியான சான்றுகளைச் சமர்ப்பித்தார். அத்துடன் ஹென்றி-கத்தரின் திருமண ஒப்பந்தத்தை இரத்து செய்யக் கூடாதென கத்தரீனின் மாமனாரும், வலிமையுள்ள உரோமைப் பேரரசருமான 5வது சாள்ஸ் வலியுறுத்தினார். இந்த நெருக்கடிகளுக்கிடையில் அகப்பட்டுக்கொண்ட திருத்தந்தை, காலம் எடுத்து, சிந்தித்து, நிதானமாகச் செயற்பட்டார். முடிவில் அரசர் ஹென்றி-கத்தரினின் திருமணத்தின் விவாகரத்திற்கு திருத்தந்தையோ, திருச்சபையின் அதிகாரிகளோ இணங்கவில்லை.

இதனால் கோபமடைந்த ஹென்றி அரசர் தன்னுடைய நண்பனும், அதிகாரமுள்ள அமைச்சராகவும் இருந்த கருதினால் தோமஸ் ஊல்சியை, அவர் திருத்தந்தையிடமிருந்து அந்த விவாகரத்தைப் பெற்றுத்தரத் தவறியபடியால், பதவி நீக்கம் செய்தார். அவருக்குப் பதிலாக தோமஸ் கிராம்வெல்லையும், தோமஸ் கிரேன்மரையும் நியமித்தார். கிராம்வெல் புட்னி நகர் மதுபானத் தயாரிப்பாளரின் மகன். கிரேன்மர் கேம்பிரிஜ் பல்கலைக்கழகப்பட்டதாரி. அப் பல்கலைக் கழகத்தில் ஒரு பேராசிரியராகப் பணிபுரிந்தார். ஞானமும், மதப்பற்றும் மிகுந்த அவர், 1523 இல் ஒரு குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டிருந்தார். ஆனால் அவர் ஒரு பெண்ணுடன் தகாத உறவுகொண்டு, திருமணம் செய்து கொண்டதால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். பின்பு மனைவி பிரசவத்தின்போது இறந்ததால், அப் பதவிக்கு மீண்டும் நியமனம் பெற்றார். இவர்கள் இருவரும்தான் உரோமையுடன் சண்டையிட்டு, பிரிந்து சென்றிட அரசர் ஹென்றிக்கு ஆலோசனை வழங்கியவர்கள். கிரேன்மரின் ஆலோசனையின்படி, அரசர் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், மற்றும் பிரான்ஸ், இத்தாலிய பல்கலைக் கழகங்களுக்குக் கையூட்டுக் கொடுத்து, "காதரீனை ஹென்றி திருமணம் செய்தது செல்லத்தக்கதல்ல. இத் திருவருட்சாதனத்தின் நிலை சந்தேகத்துக்கு

உரியது" என்ற அறிக்கையினை வெளியிடச் செய்தார். அதேவேளையில் அரசர் ஹென்றி 1531 இல் குருக்கள் மகாநாட்டைக் கூட்டி, அதில் "கிறிஸ்தவ சட்டங்கள் அனுமதிக்கும் அளவிலே இங்கிலாந்து அரசர் இங்கிலாந்து திருச்சபையின் தலைவர்" எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. மேலும் பாராளுமன்றம் 1532இல் கூடப்பட்டு, இங்கிலாந்து திருத்தந்தைக்கு ஆண்டுதோறும் செலுத்திவந்த பணம் நிறுத்தப்பட்டது. திருச்சபைச் சட்டங்கள் இங்கிலாந்து சபை மக்களைப் பாதிக்குமெனில் அரசரின் அங்கீகாரமின்றி அவற்றை இங்கிலாந்தில் அமுல்படுத்துவதில்லை என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. திருச்சபையின் பிரச்சினைகள் சார்பாக இங்கிலாந்து நாடு தீர்மானம் எடுக்கத் தகுதி வாய்ந்ததென்றும், அதற்கு திருத்தந்தையின் அங்கீகாரம் பெறத் தேவையில்லையென்றும், பேராயர் நியமனத்தில் திருத்தந்தையின் செல்வாக்கு அவசியமில்லையென்றும் முடிவெடுக்கப்பட்டன.

அரண்மனை ஆன்ம குரு அரசர் ஹென்றிக்கும் ஆன் பொலினிற்கும் இரகசியமாகத் திருமணம் செய்து வைத்தார். ஆன் பொலீன் கருத்தரித்து, எலிசபேத் என்ற பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். கான்டர்பரி பேராயர் வார்க்காம் 1532 இல் இறந்தபொழுது, அவரின் இடத்திற்கு தை 1533 இல் அரசர் ஹென்றி கிரேன்மரை பேராயராக நியமித்தார். அப் புதிய பேராயரின் விசாரணை மன்றத்திற்கு ஹென்றி-கத்தரின் திருமண விடயம் கொண்டுவரப்பட்டது. கத்தரினுடனான திருமணம் முறையற்றதாக்கப்பட்டு, அவர்களின் பிள்ளை மேரி சட்டப்படியானவள் என அறிவிக்கப்பட்டது. மேலும் ஹென்றி ஆன் பொலீனைத் திருமணம் செய்தது சட்டப்படியானதெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் கத்தரின் அத் தீர்ப்பை ஏற்க மறுத்தார். எனினும் கத்தரீனிடமிருந்து அரசி பட்டம் களையப்பட்டு, ஆன் பொலீனுக்கு அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, ஹென்றி-ஆன் பொலீனின் ஆடம்பரத் திருமணம் 25 தை 1533 இல் இடம்பெற்றது. 23 வைகாசி 1533 இல் பேராயர் கிரேன்மர் ஆன் பொலீனிற்கு இங்கிலாந்தின் அரசியாக முடிசூட்டி வைத்தார். திருத்தந்தை 7ம் சாந்தப்பர். இறுதியாக 1534. பங்குனி 23 ம் நாள், தன் தீர்க்கமான முடிவை அறிவித்து, "ஹென்றி ஆரகன் கத்தரீனை மணந்தது செல்லுபடியான உறுதியான திருமணமாகும். எக்காரணத்தைக் கொண்டும் விவாகரத்து வழங்க இயலாது" எனப் பிரகடனம் செய்தார்.

எனவே ஹென்றி இங்கிலாந்தின் உரோமையுடனான உறவை முடிவுக்குக் கொணரத் தீர்மானித்தார். நவம்பர் 1534 இல் பாராளு-மன்றத்தைக் கூட்டி, "அரசரும், அவரது வாரிசுகளும் இங்கிலாந்துத் திருச்சபையின் தலைவர்கள்" என்ற மேலாண்மைச் சட்டத்தை நிறைவேற்றினார். அதனை அனைத்து ஆயர்களும், குருக்களும், துறவிகளும் ஏற்றிடச் செய்ய, தோமஸ் கிராம்வெல்லை குருமுதல்வராக நியமித்தார். கோழைகளான பல ஆயர்களும், குருக்களும், துறவிகளும் "அரசரே மதத் தலைவர்" என வாக்குறுதி செய்தனர். அதுமட்டுமல்ல. திருச்சபைக்கும், திருத்தந்தைக்கும் எதிராகப் போதிக்கவும் தொடங்கினர். ஆனால் ரோச்செஸ்ரர் ஆயரான ஜான் பிசர் மட்டும் அதற்குப் பணிய-வில்லை. எனவே அவர் கைது செய்யப்பட்டு, சிரச்சேதம் செய்யப்பட்டார். அவர் இறப்பதற்கு முன் திருத்தந்தை 3ம் சிங்கராயர் அவரைக் கருதினால் பதவிக்கு உயர்த்தினார். ஹென்றியின் ஆன் பொலீனுடனான திருமணத்தை எதிர்த்த துறவிகளான பெடோ, எல்ஸ்டோ என்பவர்கள் சாக்கினுள் போட்டுக் கட்டப்பட்டு, தெம்ஸ் ஆற்றில் போடப்பட்டனர். ஹென்றியின் நெருங்கிய நண்பரும், சான்செலரும், சிறந்த இறையிய-லாளரும், எழுத்தாளருமாகிய தோமாஸ் மூர் என்ற இல்லறத்தவர் இங்கிலாந்து சபைக்கு திருத்தந்தை அல்ல, அரசனே தலைவன் என்ற மேலாண்மைச் சட்டத்தை ஏற்க மறுத்ததால், தேசத் துரோகி எனக் கைதுசெய்யப்பட்டு, 7 ஆடி 1535 இல் சிரச்சேதம செய்யப்பட்டார். இப்படியாகப் பல ஆயர்களும், குருக்களும், துறவிகளும். இல்லறத்த-வர்களும் திருத்தந்தை திருச்சபையின் தலைவர் என்ற கோட்பாட்-டிற்காகத் தம் உயிரைப் பலியாக்கினர்.

1535 இல் ஹென்றி VIII தன்னை ஆங்கிலத் திருச்சபையின் தலைவராகப் பிரகடனம் செய்தார். அதைத தொடர்ந்து, வழிபாட்டு நூல்கள் எல்லாவற்றிலுமிருந்து திருத்தந்தையின் பெயர் நீக்கப்பட்டது. அத்துடன் உரோமையுடனான தொடர்பு முழுமையாகத் துண்டிக்கப்-பட்டது. திருச்சபையின் மீதான அரசியல் தலைமைத்துவத்தை ஒரு சிலர் எதிர்த்தாலும், ஹென்றி அனைத்தையும் அடக்கி, ஒடுக்கி, மேற்கொண்டார். ஹென்றி செய்த மற்றொரு கொடிய செயல் துறவற மடங்களைக் கலைத்தது. 1536 இல் பாராளுமன்றத்தினால் "துறவியர் மட சிதைப்புச் சட்டம்" நிறைவேற்றபபட்டது. அதற்கமைய துறவற மடங்கள் அனைத்தும் (376) மூடப்பட்டு, ஆயிரக் கணக்கான துறவிகள்,

கன்னியர்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்களின் உடைமைகள், சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அவை அரசாங்கத்துக்கும், சமூக கல்வி அபிவிருத்திப் பணிக்கும், வயது முதிர்ந்த துறவிகளின் வாழ்க்கைச் செலவிற்கும், கரையோரப் பாதுகாப்பிற்கும் பயன்படுத்தப்பட்டன. அதனால் நன்மையடைந்தவர்கள் அரசரை எதிர்ப்பதைத் தவிர்த்தனர். மாறாக அரசரை எதிர்த்த துறவிகள் நாடுகடத்தப்பட்டனர் அல்லது கொலை செய்யப்பட்டனர்.

அரசர் ஹென்றி மனந்திருப்புவார் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்த திருத்தந்தை 3வது பவுல், ஏமாற்றமடைந்தவராக. 1538 இல் அவரை மத நீக்கம் செய்தார். அதன் வழியாக அரசருக்கு அமையவேண்டுமென்று கட்டுப்பட்டிருந்த மக்களுக்கு விடுதலை அளித்தார். அரசர் ஹென்றி தான் ஒரு பிரிவினைவாதி (Schismatic) என்பதை ஏற்றுக் கொண்டாலும், பேதகத்தை (Heresies) முற்றுமுழுதாக இறுதிவரையும் வெறுத்தார். இறுதி மட்டும் கிறிஸ்தவ மதப் பாரம்பரிய கோட்பாடுகளுக்குப் பிரமாணிக்கமாய் இருந்தார். அதற்குச் சான்றாக 1539 இல் "ஆறு கோட்பாடுகள்" என்ற சட்டத்தைப் பிரகடனம் செய்தார். அதன்படி நற்கருணையில் இயேசுவின் உண்மையான பிரசன்னம், அப்ப அல்லது இரச ஒரு வடிவில் திவ்விய நற்கருணை பெறுதல், குருக்கள், துறவியரின் பிரமச்சாரியம், துறவற வார்த்தைப்பாடுகள், உத்தரிப்புத் தலம், தனியார் திருப்பலி ஒப்புக்கொடுத்தல், பாவமன்னிப்பு, திருமுழுக்கு, நற்கருணையென்ற அருட்சாதனங்கள், அப்போஸ்தொலிக்க, நிசேயா, அத்தனாசியார் விசுவாச அறிக்கைகள், நம்பிக்கையாலும் பாவ அறிக்கையாலும் பாவ மன்னிப்பு, விசுவாசத்தாலும், நற்செயல்களாலும் நீதிமான்களாகுதல் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றை ஏற்க மறுப்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். திருவிவிலியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதிலும், பொது நிலையினர் திருமறையைப் படிக்க ஊக்குவிப்பதிலும் அங்கிளிக்கன் சீர்திருத்தம் ஏனைய சீர்திருத்தங்களை ஒத்திருந்தது.

அரசர் ஹென்றியின் ஆன் பொலீனுடனான குடும்ப வாழ்வு மகிழ்ச்சியானதாக அமையவில்லை. அவர்களுக்கு 07 புரட்டாசி 1533 இல் எலிசபேத் என்ற ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் ஹென்றி ஆவலுடன் எதிர்பார்த்த ஆண் வாரிசு கிடைக்கில்லை.

இறுதியாகக் கிடைத்த ஆண் குழந்தையும் குறைமாதத்தில பிறந்து இறந்துவிட்டது. மேலும் புத்தி கூர்மையும், திறமையும் நிறைந்த ஆன் பொலீன் அரசருக்கு சகலத்திலும் கீழ்ப்படிந்து, அரண்மனையில் அரசரின் அடிமையான மனைவியாக இருக்க விரும்பவில்லை. அவர் அரண்மனையில் வேலை செய்த சில ஆண்களுடன் தகாத தொடர்பும் கொண்டார். அவளுடைய அகந்தையான சுதந்திரப் போக்கை ஹென்றி விரும்பவில்லை. எனவே அவளையும் விலக்கிவிடத் திட்டமிட்டார். 08 தை 1536 இல் முன்னாள் அரசி கத்தரீன் காலமானாள். வேறு பல பெண்களுடன் உறவு வைத்திருந்த அரசர் ஹென்றி, ஆன் பொலீனின் பணிப் பெண்ணான ஜேன் சேய்மர் மேல் விருப்பம் கொண்டு, அவரை அரண்மனைக்குள் கொணர்ந்தார். ஆன் பொலீன்மீது, விபசாரக் குற்றம் சுமத்தப்பட்டு, 02 வைகாசி 1536 கைது செய்யப்பட்டார். போதுமான சாட்சிகள் இல்லாத பொழுதிலும், குற்றவாளியெனத் தீர்ப்பிடப்பட்டு. 19 வைகாசி 1536 இல் தூக்கிலிடப்பட்டாள். சில நாட்களுள் ஹென்றி ஜேன் சேய்மரைத் திருமணம் செய்து கொண்டார். இந்த மூன்றாவது மனைவி வழியாக. 24 ஐப்பசி 1537 இல் அவருக்கு 6வது எட்வேட் என்ற ஒரு ஆண் மகன் வாரிசாகக் கிடைத்தது. ஆனால் பிரசவத்தில் தாய் இறந்து விட்டார். ஹென்றி தொடர்ந்து கத்தரீன் கோவாட் என்ற பெண்ணை மணந்தார். அவளும் வேறு ஆண்களுடன் தொடர்புடையவள் எனக் குற்றம் சுமத்தப்பட்டு, தூக்கிலிடப்பட்டாள். இறுதியில் கத்தரீன் பார் என்ற பெண்ணை மணந்தார். எனவே அரசர் ஹென்றிக்கு ஆறு மனைவிகள் இருந்தனர். அவர்களுள் இருவர் விவாக இரத்துச் செய்யப்பட்டனர். இருவர் தூக்கிலிடப்பட்டனர். ஒருவர இறந்தார். ஒருவர் உயிரோடிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. இறுதியில் அரசர ஹென்றி நோய்வாய்ப்பட்டு. 28 தை 1547 இல் இறந்தார்.

**ஆறாம் எட்வேர்ட்**

எட்டாவது ஹென்றி அரசரின் வாரிசுகளாக முதலில் அவருடைய மூன்றாவது மனைவி ஜேன் செய்மர் வழியாகப் பிறந்த 6வது எட்வேர்ட்டும், அடுத்து அவரது முதலாவது மனைவியாகிய கத்தரின் வழியாகப் பிறந்த மேரியும், கடைசியாக இரண்டாவது மனைவி ஆன் பொலீன் வழியாகப் பிறந்த எலிசபேத்தும் உரிமை பெற்றிருந்தனர். 12 ஐப்பசி 1537 இல் பிறந்த இளவரசர் 6வது எட்வேட், அவருடைய

தாய் பிரசவத்தில் இறந்துவிட்டபடியால், தந்தையின் நம்பிக்கைக்குரிய சோமர்செற், பேராயர் கிரன்மேர் என்பவர்களுடைய பாதுகாப்பிலேயே குழந்தைப் பராயத்திலிருந்து வளரந்து வந்தார். ஹென்றியின் மரணத்தை அடுத்து 10 வயதுடையவராயிருந்த 6வது எட்வேட் 20 மாசி 1547 இல் இங்கிலாந்துத் திருச்சபையின் தலைவராகவும், இங்கிலாந்து நாட்டின் அரசராகவும் முடிசூட்டப்பட்டார். அவர் சிறுவனாக இருந்தப-டியால் அனைத்திலும் சோமர்செற், கிரன்மேர் என்பவர்களாலேயே வழிநடத்தப்பட்டார். தீவிர சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட அவர்கள், அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இங்கிலாந்தினுள் புரோட்டஸ்தாந்து சீர்திருத்தக் கொள்கைகளைப் புகுத்தி, இங்கிலாந்துச் சபையை ஒரு புரோட்டஸ்தாந்து சபையாக மாற்ற முயற்சிகளை மேற்கொண்டனர். 8வது ஹென்றி அறிமுகம் செய்துவைத்த "ஆறு கோட்பாடுகள்" இரத்து செய்யப்பட்டது. ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ் பல்கலைக் கழகங்களில் இறையியல் கற்பிக்க லூத்தரன், கல்வினிஸ்த ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். 1549 இல் ஒரு புதிய செபப் புத்தகம் தயார் செய்யப்பட்டு, திருப்பலி நூலுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டது. அதில் மத்திய காலத்து திருப்பலியின் அமைப்பு பின்பற்றப்பட்டு, இடையிடையே முக்கிய இடங்களில் கல்வினிஸ்த கொள்கைகள் புகுத்தப்பட்டன. திருப்பலியில் ஆங்கிலத்தில் நற்கருணை வழிபாடு புகுத்தப்பட்டது. 1552 இல் முன் அறிமுகம் செய்யப்பட்ட செபப் புத்தகத்திற்குப் பதிலாக, மீண்டும் லூத்தரன், கல்வினிஸ்த மதக்கொள்கைகளைத் தழுவிய புதிய பொதுச் செபப் புத்தகம் எழுதப்-பட்டு. பாவனைக்கு விடப்பட்டது. அதற்கமைய திருப்பலி நீக்கப்பட்டது. ஹென்றி அறிமுகம் செய்த 62 கோட்பாடுகளுக்குப் பதிலாக வேறு 42 கோட்பாடுகள் தொகுத்து வெளியிடப்பட்டன. அதன்படி வழிபாடுகள் கல்வினிஸ்த முறைகளைப் பின்பற்றி, அமைக்கப்பட்டன. பீடங்கள், சொரூபங்கள் உடைக்கப்பட்டன. ஆலயங்கள் சூறையாடப்பட்டன. திருப்பலி தடைசெய்யப்பட்டது. லூத்தரின் மதத்தினர், கல்வினினிஸ்த பேதகத்தினர், சுவீங்ளியின் ஆதரவாளர்கள், அனாபாப்ரிஸ்தர், ஆரிய பேதகத்தினர் பெருந் திராளாக நுழைந்து, இலண்டனில் குடியேறினர். அதன் விளைவாக பல குழறுபடிகள் ஏற்பட்டன. இறுதியில் 6வது எட்வேட் அரசர் 6 ஆடி 1553 இல், தனது 16வது வயதில் இறந்தார்.

## மேரி டியூடர்

அரசர் 6வது எட்வேட் இறந்ததை அடுத்து, அடுத்த வாரிசான 8வது ஹென்றி-ஆரகான் கத்தரினின் மகள் மேரி டியூடர் 30 ஐப்பசி 1553 இல் இங்கிலாந்தின் அரசியாக முடி சூட்டப்பட்டாள். அவர் தாயைப் போன்று. தேவபக்தியும், திருச்சபைக்குப் பிரமாணிக்கமும் விசுவாசமும் உள்ளவர். எனவே இங்கிலாந்தில் திருச்சபையை மீண்டும் நிலைநாட்ட முயற்சிகளை மேற்கொண்டார். அவர் திருச்சபைக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தையும் இரத்துச் செய்தார். பலர் திருச்சபையில் மீண்டும் சேர்ந்தனர். திருத்தந்தையும் இங்கிலாந்திற்கு பாவமன்னிப்பு அளித்து, மீண்டும் கத்தோலிக்க மதத்தை நிலைநாட்ட கருதினால் போலை அனுப்பினார். அரசி மேரி கன்டர்பரி ஆயர் கிரேன்மரையும், மேலும் 6வது எட்வேட் நியமித்த ஆயர்களையும், 210 பேதகர்களையும் பதவி நீக்கம் செய்து. கைது செய்து, திருத்தந்தையின் விருப்பத்துக்கு மாறாக நெருப்பிலிட்டுக் கொன்றார். இஸ்பானிய நாட்டு 2வது பிலிப்பைத் திருமணம் செய்தார். அவற்றினால் மக்களுடைய கோபத்துக்கு ஆளானார். கிரேன்மரால் துரத்தப்பட்ட ஆயர்கள் மீண்டும் வந்து, தம் பதவிகளை ஏற்றனர். நாடெங்கும் திருப்பலி மீண்டும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் ஒன்று கூட்டி, இலத்தின் மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுத்து, கூட்டத் தொடரை ஆரம்பித்தார். 8ம் ஹென்றி-கத்தரின் திருமணம் முறையானதென அறிவிக்கப்பட்டது. சபை தாங்கள் திருச்சபையிலிருந்து விலகியது தவறென்றும், திருச்சபைக்கு எதிராக நடந்ததற்கு வருந்துவதாகவும், திருத்தந்தையைத் திருச்சபையின் தலைவராக ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்து, திருத்தந்தையிடம் மன்னிப்புக் கேட்டு மனுவொன்றை எழுதி அளித்தனர். திருத்தந்தை 3வது யூலியனும் மன்னிப்பு வழங்கினார். துறவற மடங்கள் திரும்பவும் திறக்கப்பட்டன. மடங்கள், ஆலயங்களிலிருந்து சூறையாடப்பட்ட சொத்துக்கள், உடைமைகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன. இவ்வாறு இங்கிலாந்து மீண்டும் கத்தோலிக்க நாடானது.

சில பிரிவினைக்காரர் மக்களைத் தூண்டிவிட்டு, அரசி மேரிக்கு எதிராகக் கலகம் உண்டாக்கினர். ஆனால் அவர் கலகத்தை அடக்கி, கலகத் தலைவர்களைக் கைது செய்து, கொலை செய்தார். பேதகருக்கு

எதிராக முன்பு இருந்த சட்டங்களைப் பாராளுமன்றம் மீண்டும் கொணர்ந்தது. இலண்டன் ஆயர் போனா பேதக விசாரணை நீதிமன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். இறுதியா அரசி மேரி டியூடர் 17 நவம்பர் 1558 இல் இறந்தார்.

**அரசி எலிசபேத் I**

அரசி மேரி டியூடர் இறந்ததை அடுத்து, மூன்றாவது வாரிசுவான ஹென்றி-ஆன் பொலினின் மகள் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியானார். 15 தை 1559 இல் அவருடைய முடிசூட்டு விழாவின்போது, கத்தோலிக்க மதத்தை என்றும் கைவிடுவதில்லை என்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். எனினும் சில காலத்தினுள் “இவளது பெற்றோரின் திருமணம் செல்லுபடியற்றது. இவரது பிறப்பு முறையற்றது” எனச் சொல்லும் திருச்சபையை ஆதரிப்பதா? எனக் கேட்டு, பிரிவினைச் சபையினர் அவரைக் குழப்பிவிட்டனர். மேலும் தான் திருச்சபையைச் சார்ந்திருந்தால் திருத்தந்தைக்குப் பணியவேண்டும். அல்லது அவர் 6வது எட்வேட்டின் விருப்பத்திற்கு இணங்க இங்கிலாந்து அரசின் வாரிசு ஸ்காட்லாந்து மேரியை ஆதரித்து. அவரை அரசியாக்கினால், தன் ஆட்சி மறைந்துவிடும் என்ற அச்சம் அவரைப் பிடித்துக்கொண்டது. எனவே அவர் தன் கொள்கையை மாற்றிக் கொண்டார். 1559 இல் பாராளுமன்றத்தைக் கூட்டி, மேலாண்மைச் சட்டத்தை மீண்டும் நிறைவேற்றுவித்தார். அதன்படி இங்கிலாந்து நாட்டிற்கும், திருச்சபைக்கும் தலைவி அரசியே என்றானது. ஒருங்கிணைப்புச் சட்டம், 6ம் எட்வேட் அறிமுகம் செய்த 2வது செபப் புத்தகம் பின்பற்றப்பட வேண்டுமெனவும், இல்லறத்தவர்கள் புரொட்டஸ்தாந்து வழிபாட்டில்தான் கலந்து கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தியது. பீடங்கள் மீண்டும் இடிக்கப்பட்டு, மேசைகள் போடப்பட்டன. திருப்பலிக்குத் தடை விதிக்கப்பட்டு, நற்கருணை விருந்து கொண்டாடப்பட்டது. திருப்பலியின்போது குருக்கள் அணியும் உடைகள், திருச்சிலுவை, முழந்தாட்படியிடுதல் போன்றவை நிறுத்தப்பட்டன. எட்வேட்டின் 42 கோட்பாடுகள் திருத்தப்பட்டு, 39 கோட்பாடுகள் ஆக்கப்பட்டன. அதுவே உத்தியோக பூர்வமான விசுவாச அறிக்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் நிறைவேற்றிய மேலாண்மைச் சட்டத்தை ஒரு ஆயர் மட்டுமே ஏற்றுக் கொண்டார். மற்றவர்கள் சிறையில் அடைக்கப்-

பட்டார்கள், அல்லது நாடு கடத்தப்பட்டார்கள். அவர்களுக்குப் பதிலாக செல்லுபடியற்ற முறையில் திருநிலைப்படுத்தப்பட்ட கல்வினிஸ்த இல்லறத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். 1000க்கு மேற்பட்ட குருக்கள் பங்குகளிலிருந்து வெளியேறினார்கள். பல குருக்கள் பிரிவினைச் சபையினரின் வழிபாடுகளை நடத்திய பின்னர், இரகசியமாக மக்களுக்குத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள். திருத்தந்தை 5ம் பத்திநாதர் கத்தோலிக்கர்கள் பிரிவினை மத வழிபாட்டில் பங்கெடுப்பதைத் தடைசெய்தார். அரசி எலிசபேத் விரைவில் மனந்திரும்புவாரெனக் காத்திருந்தார். இறுதியில் ஏமாற்றமடைந்தவராய், 1570 இல் அரசி எலிசபெத்தை மத நீக்கமும், பதவி நீக்கமும் செய்தார். அதற்குப் பதிலாக இங்கிலாந்துப் பாராளுமன்றம் ஒன்று கூடி, அரசியைப் பேதகத்தினள் என்றழைப்பதும், பாப்புவின் ஆவணங்களைப் பெறுவதும் தேச துரோகம் என அறிக்கை வெளியிட்டது. மேலும் கத்தோலிக்க மதத்துக்குத் திரும்புவதும், திருப்பலி ஒப்புக்கொடுப்பதைக் காண்பதும், பாவசங்கீர்த்தனம் செய்வதும், கத்தோலிக்க குருக்களை நாடுவதும் பெரும் குற்றமென அறிவித்தது. அதைத் தொடர்ந்து 1581 இல் பெரிய கலாபனையொன்று உருவாகியது. நூற்றுக்கணக்கான குருக்களும், கத்தோலிக்கரும் தண்டனைக்கு உள்ளாயினர். சிலருக்கு அபராதமும், பலருக்கு மரண தண்டனையும், மற்றவர்களுக்கு சிறைவாசமும் அளிக்கப்பட்டது. இங்கிலாந்துக் கத்தோலிக்கர்கள் தமக்கு உதவிட இஸ்பானிய நாட்டு அரசர் பிலிப்புவை நாடினர். அவரும் இங்கிலாந்தை முற்றுகையிடத் தீர்மானித்துச் செயற்பட்டார். இதைக் கேள்வியுற்ற இங்கிலாந்து மக்கள் ஒன்றுபட்டு, அரசி எலிசபேத்தை ஆதரித்தனர். இவ்வாறாக அங்கிளிக்கன் சபை இங்கிலாந்தில உறுதியாக வேரூன்றியது. அவர்களின் மதம் உயர்ந்த சபை (High Church) என அழைக்கப்படுகின்றது.

## 7.1.6. மேற்கத்தேய சபை தொடர்ந்தும் பிரிவு படுதல்

கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்த புரொட்டஸ்தாந்து லூத்தரன் பிரிவினைச் சபை தொடர்ந்து கல்வினிஸ்த சபை, சுவிங்ளியின் சபை, அங்கிளிக்கன் சபை எனப் பிரிந்ததைப் பார்த்தோம். திருச்சபையில் திருத்தந்தையின் அதிகாரம் தேவையில்லை, திருவிவிலியமே எம்

மீட்பின் ஒரே வழி. அந்தத் திருவிவிலியத்தை எவரும் படிக்கலாம். எவரும் தங்கள் மனதில் தோன்றியவாறு, தம் விருப்பம்போல் விளக்கலாம், விளங்கிக் கொள்ளலாம் என்பதே அவர்களின் அடிப்படைக் கொள்கை. அதற்கமைய அச் சபைகள் இன்னும் பிரிவதை எவரும் தடைசெய்ய முடியாது. எத்தனை தலை உள்ளதோ அத்தனை கருத்துக்கள், விளக்கங்கள் எனக் கூறுவார்கள். அதற்கொப்ப திருத்தந்தைக்கு அமையத் தேவையில்லையென்றால் ஏன் நாம் லூத்தருக்கு அமைய வேண்டும்? ஏன் கல்வினுக்கு அமையவேண்டும்? அவர்கள் சொல்லுமாப்போல் ஏன் விவிலியத்தை விளங்க வேண்டும்? அவ்வழியில் இங்கு நாம் அங்கிளிக்கன் சபை பிளவுபட்டு, அதிலிருந்து மெதடிஸ்த சபை, பப்ரிஸ்ற் சபை தோன்றியதைக் காண்கிறோம்.

**ஜோண் வெஸ்லி (மெதடிஸ்த சபை)**

ஜோண் வெஸ்லி ஒரு அங்கிளிக்கன் சபைக் குருவானவர். அவர் இங்கிலாந்தில் லண்டன்சையர் என்ற இடத்தில் 28 ஆனி 1703 இல் பிறந்தார். அவருடைய பெற்றோர் சாமுவேல். சூசான் வெஸ்லி தம்பதியினர். தந்தை அங்கிளிக்கன் சபையில பங்குக் குருவாகப் பணியாற்றினார். ஜோண் வெஸ்லி சாட்டர - வுஸ் பள்ளி, ஒக்ஸபோர்ட் போன்ற இடங்களில் கல்வி பயின்று, 1728 இல் அங்கிளிக்கன் சபைக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இரு வருடங்கள் எப்வோர்ட் பங்குத் தந்தையாகவிருந்த தந்தைக்கு உதவி செய்தார. மேரி வெஸ்லி என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். பின்னர் 1729 இல் ஒக்ஸ்போரட் திரும்பிய பொழுது, அங்கு அவருடைய சகோதரர் சார்ள்ஸ் வெஸ்லி ஒரு இளைஞர் அமைப்பை உருவாக்கி வழிநடத்துவதைக் கண்டார். பல்கலைக் கழக மாணவர் சிலரைக் கொண்ட அக் குழு, கல்லூரிச் சட்டங்களை மதித்து, பக்தி வாழ்க்கை வாழத் தீர்மானம் எடுத்திருந்த குழுவாகும். அக் குழுவில் அவரும் இணைந்து, பின்னர் அக் குழுவுக்குத் தலைவரானார். படிப்படியாக அக் குழுவில் பல மாற்றங்களை ஏற்படுத்தினார். தினமும் தியானத்திற்கு நேரத்தை ஒதுக்க வேண்டும். ஒன்றாகக் கூடி, கிரேக்க மொழியில் உள்ள புதிய ஏற்பாட்டை வாசித்துத் தியானிக்க வேண்டும். வாரத்தில் மும்முறை அல்லது நான்கு முறை கிரேக்கம், லத்தீன், இலக்கியங்களைக் கற்க வேண்டும். ஞாயிற்றுக் கிழமைகளில் மதம் சம்பந்தமான நூல்களை ஆராய்ந்து

விவாதிக்க வேண்டும். தங்கள் ஓய்வு நேரங்களை சிறைக் கைதிகளைப் பார்வையிடுதல், அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துதல், அவர்களுக்குப பொருளுதவி வழங்குதல், சிறு பிள்ளைகளை ஒன்று சேர்த்து கல்வி கற்பித்தல் போன்ற பணிகளில் செலவிட்டார்கள். அவ்வாறு அவர்கள் பிறருக்கு ஒரு முன்மாதிரிகையாக வாழ்ந்தபடியால், அக் குழுவினர் "மெதடிஸ்தர்கள்" என அழைக்கப்பட்டனர். அங்கிளிக்கன் சபையைச் சேர்ந்த பலர் பரிசுத்தமான வாழ்வு வாழவேண்டுமென்ற ஆவலுடன் அக்குழுவில் இணைந்து கொண்டனர்.

சிறந்த போதகராகவும், இறையியலாளராகவும் விளங்கிய வெஸ்லி, தெருப் போதகங்களிலும், திறந்த வெளிப் போதனையிலும் ஈடுபட்டு, அக் குழுவை இங்கிலாந்தில் ஒரு மறைபோதக இயக்கமாக மாற்றினார். தன் போதனைகள் வழியாக மக்களை இயேசுவை வாழ்வில் அனுபவிக்கும்படியாக அழைத்தார். இங்கிலாந்து, ஸகாட்லாந்து, அயர்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று, பல இடங்களில் இத்தகைய குழுக்களை ஆரம்பித்து, உறுப்பினர்களுக்கு ஆழமான உள்ளார்ந்த வாழ்வையும், பொறுப்புணர்வையும், சீடத்துவத்தையும், மறை அறிவையும் அளித்தார். அவரே முதல்முதலில் அடிமைகளின் உரிமையைப்பற்றிப் போதித்தவரென்பது குறிப்பிடத்தக்கது. 1735 இல் தன் சகோதரர் சாள்ஸ் உடன் ஜோர்ஜியாவிலுள்ள அமெரிக்க இந்தியர்களுக்குப் போதிக்க ஐக்கிய அமெரிக்கா சென்றார். இரு வருடங்களில் அவர் விட்டுச்சென்ற மறை போதகக் குழு குலைந்தது. 1738 இல் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்து திரும்பிவந்த வெஸ்லி, மனம் மாறியவராக, இயேசு தன்னை இரட்சித்தார் என்ற உணர்வில், பல இடங்களில் அருளுரை ஆற்றி, பெருந்திரளான மக்களைத் தம்பால் கவர்ந்தார். தம்முடன் முன்னர் மறைபோதக குழுவிலிருந்தவர்களை மீண்டும் ஒன்று சேர்த்தார். அவர்கள் எலலோரும் ஒரே மனத்தினராய், ஒரே உறுதியான தீர்க்கமான முடிவுடன், என்றும் விவலியக் கிறிஸ்தவர்களாக இருக்கவும், செல்லுமிடமெல்லாம் தெளிவான பழைய விவிலிய கிறிஸ்துவத்தைப் போதிக்கவும் தீர்மானித்தனர். சிறிது காலத்தில் அவர்கள் பெருந் திரளான மக்கள் முன் போதிக்கக்கூடிய ஆற்றல் உள்ள சிறந்த போதகர்களாக வளர்ந்தார்கள். அவர்களும், அவர்களுடைய சகாக்களும் "மெதடிஸ்ற்" என்ற பெயரால் அழைக்கப்பட்டார்கள். அவர்கள் தொடர்ந்து அங்கிளிக்கன் சபையுடனான

உறவில் நிலைத்திருந்தனர். அதேவேளை அங்கிளிக்கன் சபையில் இன்னமும் பிரபல்யமடையாமலிருந்த விவிலிய உண்மைகளில் உறுதியாயிருந்தனர். நாம் இறையருளினால் நம்பிக்கையினூடாக மீட்படைகிறோம். நாம் நம்பிக்கை வழியாகவே இறைவனுக்கு ஏற்புடையராகிறோம் என்பதே திருச்சபையும், விவிலியமும் படிப்பிக்கும் உண்மையாகவிருக்கிறது. கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையாக, மக்கள் இயல்பாகவே பாவத்தில் இறந்திருக்கிறார்கள். அதன் விளைவாக இறைகோபத்தின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கையின் வழியாக இறைவனுக்கு ஏற்புடையவர்களாகிறார்கள். நம்பிக்கையானது உள்ளார்ந்த, புறம்சார்ந்த பரிசுத்ததனத்தை உண்டாக்குகின்றதெனப் போதித்தார்கள்.

ஜோண் வெஸ்லி தன்னுடைய சபை எப்போதும் அங்கிளிக்கன் சபைக்குள்ளேயே இருக்க வேண்டுமென்று விரும்பினார். ஆனால் அமெரிக்கன் புரட்சி அமெரிக்க குடியேற்றங்களிலிருந்த மெதடிஸ்-தர்களை இங்கிலாந்திலிருந்த அங்கிளிக்கன் சபையினரிடமிருந்து பிரித்துவிட்டது. 1784 இல் குடியேற்றங்களிலிருந்த சபைகளுக்கு உதவ தம்மோடு இருந்த அருள் உரையாளர்களை குருக்களாகத் திரு-நிலைப்படுத்த ஒரு ஆயரை அனுப்புமாறு பல முறை விண்ணப்பித்தார். அவர்களைத் திருநிலைப்படுத்துவதற்கு அங்கிளிக்கன் சபை மறுத்தது. அது நிறைவேறாதபோது, தன்னுடைய சகோதர குருவான தோமாஸ் கோக் என்பவரை ஆயராக நியமித்து, மெதடிஸ்த சபையை அங்கிளிக்கன் சபையிலிருந்த பிரித்து, ஒரு தனிச் சபையாக அமைக்கத் தீர்மானித்தார். அங்கிளிக்கன் செபப் புத்தகத்தையும், மதக் கோட்பாடுகளையும் திருத்தி எழுதி, அதை அறிமுகம் செய்தார். இவ்வாறாக மெதடிஸ்த சபை ஒரு தனிச் சபையாகச் செயல்படத் தொடங்கியது. காலப்போக்கில் இச்சபை மேலும் பல சபைகளாகப் பிரிந்ததைக் காண்கிறோம்.

**மெதடிஸ்த சபையினால் ஏற்பட்ட நன்மைகள்**

மெதடிஸ்த சபையினர் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் அளப்பரிய சேவை ஆற்றினர். "தூய்மைவாதிகள்" என அழைக்கப்பட்ட அவர்களின் புகழ் எங்கும் பரவியது. சபையின் நிர்வாகத்தில், ஆளுகையில் சபை மக்கள் பங்கேற்றதால், சபை துரிதமாக வளர்ந்தது.

அங்கிளிக்கன் சபையிலிருந்த நற்செய்தியைப் பரப்புவதில் நாட்டமிருந்தவர்களும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். அங்கிளிக்கன் சபையிலிருந்து மெதடிஸ்த சபையில் இணைந்தவர்கள் தாழ் சபையினரென்றும் (Low Church), உரோமன் கத்தோலிக்க சபையின் சம்பிரதாயங்களைப் பின்பற்றிய ஏனையோர் உயர் சபையினரென்றும் (High Chutch) அழைக்கப்பட்டனர். மெதடிஸ்த சபையினர் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், ஏனைய இடங்களிலும் சமூக சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். யோவான் ஹவார்ட் என்பவர் சிறைச் சாலைகளில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார் சிறுவரை கிறிஸ்துவின் வழியில் வளர்ப்பதிலும், நெறி வாழ்க்கையைப் போதிப்பதிலும், கவனம் செலுத்தினர். றொபர்ட் றேய்க்ஸ் என்பவர் பல எதிர்ப்புகள் மத்தியிலும் 1780 ஓய்வு நாள் பாடசாலையை உருவாக்கினார். அது அமெரிக்காவுக்கும், ஏனைய இடங்களுக்கும் மிக விரைவாகப் பரவியது.

அவர்களுடைய பங்களிப்பினால் கிறிஸ்தவ இலக்கியமும் உயிர் பெற்றுத் தழைத்தது. சமயக் கைப் பிரதிச் சங்கம் (Religious Tract Society) லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது. 1804 இல் பிரித்தானிய சர்வதேச வேதாகமச் சங்கம் (British and Foreign Bible Society) ஏற்படுத்தப்பட்டது. 1812 இல் அமெரிக்க கைப் பிரதிச் சங்கம் (American Tract Society) ஆரம்பிக்கப்ட்டது. அத்துடன் பல புதிய தூதுரைப்புப் பணிச் (Missionary) சங்கங்களும் தோன்றின. அவற்றுள் பின்வருவனவற்றை நாம் குறிப்பிடலாம்:

* பப்ரிஸ்ற் மிஷனறி சங்கம் (1792)
* லண்டன் மிஷனறி சங்கம் (1795)
* சபை மிஷனறி சங்கம் (1799)
* இங்கிலாந்து வெஸ்லியன் மிஷனறி சங்கம் (1813)
* அமெரிக்க மிஷனறி சங்கம் (1819)
* அமெரிக்க பப்ரிஸ்ற் சங்கம் (1824)
* ஸ்கொட்லாந்து சபையின் மிஷன் கழகம் (1825)

**வில்லியம் கேரி (பப்ரிஸ்ற் சபை)**

பப்ரிஸ்ற் சபையின் இணை தாபகரான வில்லியம் கேரி இங்கிலாந்தில் போலஸ்பரி என்ற கிராமத்தில் 17 ஆவணி 1761 இல் பிறந்தார். அவருடைய பெற்றோர்களான எட்மண்ட் கேரியும் எலிசபேத்தும் நெசவுத் தொழில் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வில்லியம் அவர்களுடைய ஐந்து பிள்ளைகளில் மூத்தவர். அவர்கள் அங்கிளிக்கன் சபையில் வளர்ந்தவர்கள். சிறுவனாகவிருந்த காலத்தில், வில்லியம் விஞ்ஞானத்தில், குறிப்பாக தாவரவியலிலும், இலத்தின், கிரேக்கம் போன்ற பிற மொழிகளிலும், சிறுவர்களுக்கு பாடம் கற்பிப்பதிலும் ஆர்வம் காட்டினார். அவருக்கு 12 வயது நடக்கும்பொழுது, சப்பாத்து தைக்கும் தொழிலைப் பழகுவதற்காக ஹக்கல்டன் என்ற கிராமத்துக்குச் சென்றார். அங்கு அவருடைய முதலாளி, கிளார்க் நிக்கொலாஸ், ஒரு அங்கிளிக்கன் சபையினர். அங்கு அவருடன் தொழில பழகிய ஜோண் வார் என்ற இளைஞருடன் நண்பனானார். அவர் அங்கிளிக்கன் சபையிலிருந்து பிரிந்து சென்ற ஒருவர். அவருடைய செல்வாக்கினால் வில்லியமும் விரைவில் அங்கிளிக்கன் சபையிலிருந்து விலகினார். அந்தக் கிராமத்தில் அங்கிளிக்கன் சபையிலிருந்து விலகிச் சென்றிருந்த வேறு சில இளைஞர்களுடன் இணைந்து, மக்களால் நிர்வகிக்கப்படும் ஒரு சிறிய சபையை நிறுவினார். அவருடைய முதலாளி நிக்கொலாஸ் இறந்த பொழுது, அவர் தோமாஸ் ஓல்ட் என்ற மற்றொரு முதலாளியின் கீழ் வேலை பழகச் சென்றார். அங்கு அவர் 1781 இல் டொறொத்தி பிளாக்கெற் என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு 6 பிள்ளைகள் பிறந்தன. தோமாஸ் ஓல்ட் இறந்தபொழுது, வில்லியம் அத் தொழிலைப் பெறுப்பெடுத்துச் செய்தார்.

அவர் அங்கிருந்த பொழுது, பார்டன் என்ற அயல் கிராமத்தில் அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பப்ரிஸ்ற் சங்கத்தாரின் அழைப்பை ஏற்று, அவர்களுடைய ஆலயத்தில் அருளுரை ஆற்றச் சென்றார். அங்கு அச் சங்கத்துடன் நெருங்கிய தொடர்ப்பை ஏற்படுத்திக்-கொண்டார். குறிப்பாக யோண் றைலண்ட், யோண் சுற்கிளிவ், அன்று புலர் என்பவரகளின் நெருங்கிய நண்பனானார். காலப்போக்கில், 5 ஐப்பசி 1783 இல் திருமுழுக்குப் பெற்று, பப்ரிஸ்ற் சபையில் தம்மை இணைத்துக் கொண்டார். 1785 இல் மூல்ரன் என்ற கிராமத்துப்

பாடசாலையின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 1789 இல் லெய்செஸ்ரர் பப்ரிஸ்ற் ஆலயத்தின் முழு நேரப் பேதகரானார். அங்கிருந்த காலத்தில், அனைத்துலகிலும் கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்புவதில் மிகவும் ஆர்வம் கொண்டார். அக்காலத்தில் எல்லோரும் நற்செய்தியை நம்ப வேண்டியதில்லை. முன்குறிக்கப்பட்டிருப்பவர்களை இறைவன் எவ்வாறாயினும் மனந்திரும்பச் செய்வாரென்ற கருத்து நிலவியது. அதற்கு எதிராக, 1792 இல் தமது தூதுரைப் பணி பற்றிய கருத்தை, "புறவினத்தவர்களை மனந்திருப்புவதன் மட்டில் கிறிஸ்தவர்களின் கடமைகள் பற்றிய ஆய்வு" என்ற நூல் வடிவில் வெளியிட்டார். அந்த நூலில் ஐந்து பகுதிகள் இருந்தன. (1) இறையியல் அடிப்படையில் மறை பரப்புப் பணியை நியாயப்படுத்தல் (மத்.8:18-20). (2) திருச்சபையின் மறை பரப்புப் பணியின் வரலாறு. (3) உலக நாடுகளின் சனத் தொகை, மதங்கள் பற்றி கணக்காய்வு. (4) மறைபரப்பாளர்களை அனுப்புவதற்கு எதிராக வைக்கப்படும் வாதங்களுக்குப் பதில் (5) பப்ரிஸ்ற் மறைபரப்புச் சபையை உருவாக்குதலும், அதன் தாபரிப்பும். பின்னர் அவற்றின் அடிப்படையில், எசா.54:2-3 வசனத்தைப் பயன்படுத்தி, மறைபரப்புப் பணியை ஆதரித்து, "சாவில்லாத மறையுரை" என்றழைக்கப்படும் மறையுரையை ஆற்றினார். அதில் அடிக்கடி இடம் பெற்ற "கடவுளிடமிருந்து பெருங் காரியங்களை எதிர்பாருங்கள். கடவுளுக்காக பெருங் காரியங்களை முயற்சியுங்கள்" என்ற கூற்று மிகவும் பிரபல்யமானது. தொடர்ந்து ஐப்பசி 1792 இல் கடவுளை அறியாதோர் மத்தியில் நற்செய்திப் பணி ஆற்றும் சங்கம் நிறுவப்பட்டது. அச் சங்கம் "பப்ரிஸ்ற் மிஷனறி (தூதுரைப்புச்) சங்கம்" என்று அழைக்கப்ட்டது. அச் சங்கத்தின் இணை தாபகர்களாக வில்லியம் கேரி, யோண் றைலண்ட், யோண் சுற்கிளிவ், அனறு புலர் இருந்தனர். முதலில் அவர்கள் தங்கள் பணிக்கு எவ்வாறு நிதி திரட்டுவது, எந்த நாட்டுக்குச் செல்வது என்று ஆராய்ந்தனர். அந் நாட்களில் இந்தியா. கொல்கொத்தாவில் வைத்திய மறைபரப்பாளராக பணியாற்றிய யோண் தோமாஸ் என்பவர் நிதி திரட்டுவதற்காக இங்கிலாந்து வந்திருந்தார். எனவே அவருடன வில்லியம் கேரி இந்தியா சென்று, அவருக்கு உதவிபுரிவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

எனவே வில்லியம் கேரியும், அவருடைய மனைவியும், அவருடைய மூத்த மகன் பீலிக்ஸ், இளைய மகன் தோமாஸ்,

அவருடைய மனைவி, மகளுடன் 1793 சித்திரையில் கப்பல் வழியாக இந்தியா புறப்பட்டனர். பல இடையூறுகள், தடைகளுக்குப் பின், நவம்பர் மாதத்தில் கொல்கொத்தா சென்றடைந்தனர். அங்கு அவர்களுக்கு தங்க அனுமதி கிடைக்காததால், சேரம்பூரில் குடியேறினர். அங்கு தங்கள் எல்லோரையும் கொள்ளக்கூடிய ஒரு பெரிய வீட்டை வாங்கினர். முதல் வருடத்தை அவர்கள் தங்கள் தாபரிப்புக்கு வழி தேடுவதிலும், பெங்காலி மொழியைக் கற்பதிலும் செலவழித்தனர். வில்லியம் தம்மைப் பரமரிப்தற்காக நீலச் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலையில் முகாமையாளராகப் பணியாற்றினார். முதல் ஆற வருடங்களில் அவர் பெங்காலி மொழியைச் சிறப்பாகக் கற்று, புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்தார். அதேவேளை அவரது தூதுரைப்புக் குழுவுக்கான கொள்கைகள், உழைப்புக்கான வழிகள், சுதேச மக்களைப் பணிக்காகப் பயிற்றுவித்தல் ஆகியவை பற்றிய திட்டங்களை வகுத்தார்.

அதற்கிடையில் இங்கிலாந்திலிருந்து வேறு மறைபரப்பாளர்களும் அனுப்பப்பட்டனர். 1800 வந்து சேர்ந்த அச்சகத் தொழிலாளி வில்லியம் வாட், பள்ளி ஆசிரியர் ஜோசுவா மார்ஷ்மன் ஆகியோருடன் இணைந்து ஒரு பாடசாலையை நிறுவி, தமக்கும், தம் பணிக்கும் தேவையான வருமானத்தைத் தேடிக் கொண்டனர். மேலும் ஒரு அச்சகத்தையும் அமைத்தனர். இந்திய மொழிகளைக் கற்று, திருவிவிலியத்தை அம் மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டனர். கேரியின காலத்தில் அவர்கள் 44 இந்திய மொழிகளில் திருவிவிலியத்தை மொழிபெயர்த்து, அச்சிட்டனர். விரைவில் அவர்கள் கிறிஷ்ணா பல் என்ற இந்துவை மனந்திருப்பி, திருமுழுக்குக் கொடுத்து, தம்முடன் சேர்த்துக்கொண்டனர். மேலும் சுதேச பணியாளர்களைப் பயிற்றுவிக்கவும், விஞ்ஞானம், கலை ஆகிய பிரிவுகளில் எல்லோருக்கும் கல்வி புகட்டவும், 1818 இல் செரம்பூர் கல்லூரியை ஆரம்பித்தனர். 1827 இல் அக் கல்லூரி பட்டங்களை வழங்குவதற்காக டென்மார்க் அரசினால் அங்கீகாரம் கொடுக்கப்பட்டது. ஆசியாவிலேயே பட்டப் படிப்புக்கான முதல் கல்லூரியாக அக் கல்லூரி புகழ் பெற்றது. வேறு பல கல்லூரிகளும் திறக்கப்பட்டன. 1820 இல் கேரி அலிப்போர் என்னுமிடத்தில் ஒரு விவசாய தோட்டப் பயிர் கழகத்தை தாபித்தார்.

பப்ரிஸ்ற் மறை பரப்பளார்களின் தொகை வளரவே,

பிரச்சினைகளும், பிரிவினைகளும் வளர்ந்தன். புதிதாக வந்த மறைபரப்பாளர்கள் குழுவாக வாழ விரும்பவில்லை. அவர்கள் தனித் தனியே வாழத் தொடங்கினர். மேலும் பழைய மறைபரப்பாளர்கள் தங்களைச் சர்வதிகாரப்போக்கில், கடுமையாக நடத்துவதாகவும் புகார்கள் எழுந்தன. புதிய தலைமைப் பீடம் சபையை வியாபாரத் தளமாக மாற்றி, இங்கிலாந்திலிருந்து கொண்டே இந்தியாவிலுள்ள கல்லூரிகளையும், தொழிற் சாலைகளையும், பணிகளையும் நிர்வகிக்க முனைந்தனர். அதன் விளைவாக கேரிக்கும் நிர்வாகத்துக்குமிடையே பிரச்சினை ஏற்பட்டது. இறுதியில் வில்லியம் கேரி, தான் தாபித்த சபையிலிருந்து பிரிந்து சென்று, தன் இறுதிக் காலத்தை தனிமையில் செலவழித்தார். இறுதியில் அவர் 9 ஆனி 1834 இல் மரணமானார். அவரைத் தொடர்ந்து பப்ரிஸ்ற் சபை இன்னும் பல சபைகளாகப் பிரிந்தன.



**தேர்ச்சி மட்டம் 7.2.** உலகியல் கொள்கையின் எழுச்சியையும், திருச்சபையின் செயற்பாடுகளையும் விபரிப்பர்

## 7.2.1. திருச்சபையின் புனரமைப்பும் மறுமலர்ச்சியும்

(1500-1750)

புரொட்டஸ்தாந்து புரட்சியினால் தாய்த் திருச்சபையிலிருந்து பெருந் தொகையான குருக்கள், துறவிகள், கன்னியர், இல்லறத்தவர்கள் பிரிந்து சென்றமையால் கத்தோலிக்க திருச்சபையில் ஒரு பெரிய தாக்கம், பாதிப்பு ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகளான சுவீடன் டென்மார்க், ஹாலந்து, நோர்வே, இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகள் சீர்திருத்த மறையைத் தழுவிக் கொண்டன. வட ஐரோப்பாவில் அயர்லாந்து நாடு மட்டுமே இறுதிமட்டும் கிறிஸ்தவ விசுவாசத்தில் நிலைத்திருந்தது. அதை எவரும் மறுக்க முடியாது. எனவே திருச்சபையின் தலைவர்கள் திருச்சபையில் ஒரு உள்ளார்ந்த மறுசீரமைப்பு, மாற்று சீர்திருத்தம் அவசியம் ஏற்படவேண்டுமென்று உணர்ந்தனர். எனினும் திருச்சபையின் சீர்திருத்தத்துக்கு, மறுமலர்ச்சிக்கு புரொட்டஸ்தாந்துப் புரட்சியே முழுக் காரணமென நாம் கொள்ள இயலாது. ஏனெனில் புரொட்டஸ்தாந்து புரட்சிக்கு பல்லாண்டுகளுக்கு முன்னரே திருச்சபையின் வரலாற்றிலே உரோமைய கலாபனைகள், பேதகங்கள், மிலேச்சரின் முற்றுகைகள், கீழைத்தேய பிரவினை, மேலைத்தேய பிரிவினை என பல சீரழிவுகள் ஏற்பட்டதையும், அதன் பின்னர் சீர்திருத்தங்கள் நடைபெற்றதையும் காண்கிறோம். திருச்சபையின் தலைவர்கள் மட்டுமல்ல, பல பக்தியுள்ள கத்தோலிக்க ஆண்களும், பெண்களும் திருச்சபையானது முழுமையாகச் சீரமைக்கப்பட வேண்டுமென்று காலத்துக்குக் காலம் வலியுறுத்தி வந்துள்ளனர். கிறிஸ்தவ மதம் அல்ல, கிறிஸ்தவ மக்கள், அதாவது திருச்சபையின் தலைவர்களும் விசுவாசிகளுமே சீர்திருத்தப்பட வேண்டுமென்பதில் அவர்கள் உறுதியாய் இருந்தனர்.

மக்களால் ஆனதே திருச்சபை. மக்கள் இயல்பிலேயே தவறக் கூடியவர்கள். எனவே தவறுகிறவர்கள் திருந்த வேண்டும். தவறுவது மனித இயல்பு. ஆனால் அதிலிருந்து திருந்துவது தெய்வ இயல்பு. 13ம் நூற்றாண்டிலே திருச்சபையில் பல துறவற சபைகள், குறிப்பாக

பிரான்சிஸ்கன், டொமினிக்கன், அகுஸ்தீனியன் சபைகள் போன்ற இரங்கல் சபையினர் தோன்றி, சீர்திருத்த வேலைகளில் ஈடுபட்டனர். இப்பொழுது திருச்சபையின் சீர்திருத்தத்துக்கு மிகப் பெரிய தடையாகவிருந்தது திருத்தந்தையர்களின், திருச்சபையின் தலைவர்களின் உலகப் போக்கும், புராதன நாகரீக மோகமும், ஆடம்பர வாழ்வும், சுகபோகமும், பணப்பற்றுமே. 1521 இல் திருத்தந்தையாகப் பதவியேற்ற 6ம் அதிரியான் முதலில் திருச்சபையின் ஆட்சி முறையை சீர்திருத்தம் செய்ய முனைந்தார். தாமே துறவியாய் வாழ்ந்து, பக்தி நெறியினைக் கடைப்பிடித்தார். அவர் அறிமுகம் செய்த எளிமையான வாழ்வுக்கு ஆடம்பர வாழ்வு வாழ்ந்த குருக்களும், ஆட்சியாளரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவருடைய ஆட்சி 20 மாதங்களே நீடித்தது. அவரைத் தொடர்ந்து திருத்தந்தையான 7வது கிளமென்றின் காலத்தில் (1523-1534), அவர் பிரான்சிய மன்னர் 1ம் பிரான்சீசுடன் செய்த உடன்படிக்கையை விரும்பாத இஸ்பானிய மன்னர் 5வது சாள்ஸ், உரோமையை முற்றுகையிட்டு, அங்கிருந்த புராதன சிற்பங்கள். ஓவியங்கள், இலக்கியங்கள், ஆடம்பரப் பொருட்கள் அனைத்தையும் அழித்து ஒழித்தார். இந்த அனர்த்தம் கடவுளின் தண்டனையாகக் கருதப்பட்டது. ஏனெனில் அதன் விளைவாக திருச்சபையின் சீர்திருத்தத்திற்குத் தடையாக இருந்தவை அனைத்தும் அகற்றப்பட்டு, அதற்கு வழி திறக்கப்பட்டது.

அதே வேளையில் 16ம் நூற்றாண்டில் தீயென் புனித கயித்தான் என்பவர் இத்தாலியில் இல்லறத்தவர்களையும் குருக்களையும் கொண்ட "தெய்வீக அன்பின் கழகம்" என்ற சபையை ஆரம்பித்து, தங்களின் ஆன்ம அர்ச்சிப்புக்காகவும், பிறரின் ஈடேற்றத்திற்காகவும் உழைத்தார். பொதுநிலையினரும் குருக்களும் தூய்மையான வாழ்வு வாழ்வதன் மூலம் ஏனையவர்களுக்கு முன்மாதிரிகையாக இருக்கவேண்டுமென்பதே அச் சபையின் நோக்கம். பின்னர் புனித கயித்தான் திருத்தந்தை 4ம் பவுலாகப் பதவி ஏற்றார். வெகு விரைவில் இக் கழகம் ஐரோப்பிய நாடுகளெங்கும் பரவியது. திருச்சபையின் சீர்திருத்தப் பணியில் இஸ்பெயின் நாட்டின் பங்களிப்பு பாரியது. அந்நாட்டு அரசர் 5வது சாள்ஸ் ஒருவர்தான் ஜெர்மனியின் புரொட்ஸ்தாந்துப் புரட்சியைத் தடுத்து நிறுத்தியவர். அந் நாடுதான் புரொட்டஸ்தாந்தரின் சம்மட்டி என் அழைக்கப்படும் இயேசு சபையை திருச்சபைக்கு அளித்ததென்பது

குறிப்பிடத் தக்கது. அக்காலத்தில் இஸ்பெயினில் கருதினால் சீமென்ஸ் துறவற வாழ்வைச் சீரமைத்தார். திருச்சபையின் உள்ளிருந்த சீர்கேடுகளை, எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாது, அதன் புனிதத் தன்மையை நிலைநாட்டினார். ஆல்கலாவில் பல்கலைக் கழகமொன்றை நிறுவி, வேதாகமத்தின் உண்மைகளை கற்பிக்க ஒழுங்கு செய்தார். அங்குதான் அவருடைய புகழ்பெற்ற போலிக்லாட் விவிலியத்தை எழுதினார்.

தொடர்ந்து திருத்தந்தை 3ம் பவுல் திருச்சபையின் சீர்திருத்தத்திற்கு ஆற்றிய பணி சிறப்பானதாகும். அவர் முதலில் பாப்புவின் செயலகத்தை சீர்திருத்தினார். விசுவாசத்தில உறுதியுள்ளவர்களையும், மேதைகளையும் தெரிவுசெய்து, அவர்களைக் கருதினால்களாக்கினார். உரோமை ஆட்சியகத்தையும் சீர்படுத்தினார். புனித இக்னேசியஸ் லொயலா என்ற இஸ்பானிய குரு கத்தோலிக்க திருச்சபையை உள்ளார்ந்த ரீதியாக சீர்திருத்தவும், சீர்திருத்த சபையி-னரின் போதனையினால் பிரிந்து சென்ற கத்தோலிக்கப் பிரதேசங்களை மீண்டும் திருச்சபையின் அதிகாரத்தின் கீழ் ஒன்றுபடுத்தவும் 1540 இல் இயேசு சபையைத் தாபித்து, முழுமூச்சாகச் செயல்பட்டார். "தூய பாப்புவிற்கு என்றும் பணிவோம். அவர் மேலாண்மைக்கு என்றும் தலை வணங்குவோம், திருச்சபையினைப் பரப்பிட உயிரையும் அளிப்போம்" என உறுதி அளித்த அவர்களின் சபையை, திருத்தந்தை 3ம் பவுல் அங்கீகரித்தார். உள் நாட்டில் திருச்சபையைக் காப்பது. அயல் நாட்டில் அதனைப் பரப்புவது என்பது அவர்களது குறிக்கோள். தங்களை முழுவதும் திருச்சபைக்காக அர்ப்பணித்து, பாப்புவின் கட்டளைகளுக்கு அமையச் செயற்பட்டு, திருத்தந்தையின் மேலாண்மைக்குச் சவால்விட்ட ஜெர்மனியின் பெரும் பகுதியை அவர்கள் திருச்சபைக்கு மீண்டும் கொணர்ந்தனர். திருத்தந்தையின் மேலாண்-மையை முற்றிலும் மறுத்த இங்கிலாந்தில்கூட அவர்கள் விசுவாசத்தைப் போதிக்கத் தயங்கவில்லை. அவர்கள் நிறுவிய பாடசாலைகள் ஐரோப்பாவில் மிகச் சிறந்த பாடசாலைகளெனப் போற்றப்பட்டன. இப்படியாக திருச்சபையில் காலத்துக்குக் காலம் சீரமைப்பு வேலைகள் இடம்பெற்று வந்திருக்கின்றன.

எனினும் புரொட்டஸ்தாந்து புரட்சியினால் ஏற்பட்ட பாதிப்பானது

மிகப் பாரதூரமானது. அது பரந்தளவில் இடம்பெற்று, ஐரோப்பாவின் அரைப் பகுதியை திருச்சபையிலிருந்து பிரித்தது. ஒரு சொற்ப காலத்தில் திருச்சபையானது ஆயிரக் கணக்கான குருக்கள், துறவிகள், கன்னியரை, விசுவாசிகளை இழந்தது. மேலும் புரொட்டஸ்தாந்துப் புரட்சியானது திருச்பையின் மறைக் கொள்கைகளில் குழப்பம், நிதித்துறையில் துர்ப்பிரயோகங்கள், மறை உண்மைகளைப் பற்றிய அறியாமை, திருச்பையின் தலைவர்களின் ஒழுக்க சீர்கேடுகள், ஆட்சி நிர்வாகத்தில் ஊழல் மோசடிகள் என பல பிரச்சினைகளைக் கிழப்பியிருந்தது. எனவே புரொட்டஸ்தாந்துப் புரட்சியானது திருச்சபையின் சீர்திருத்தத்தின் தேவையைத் தீவிரமாக்கியது. அத்தனை பாரதூரமான பிரச்சினைகளையும் தனிப்பட்ட ஒரு சிலரின் முயற்சியினால் தீர்த்து வைக்கவோ, சீர்செய்யவோ இயலாது. எனவேதான் திருச்சபையானது அதைச் செவ்வனே செய்வதற்காக பல ஆயர்கள், துறவறச் சபைகளின் தலைவர்களின் ஒத்துழைப்பை நாடி, திரிதேந்தின் பொதுச் சங்கத்தைக் கூட்டியது. அதனைக் கொண்டு நடத்தும் பொறுப்பு இயேசு சபையினரிடமே ஒப்படைக்கப்பட்டது.

### 7.2.2. திரிதேந்தின் சங்கம் (1545-1563)

புரொட்டஸ்தாந்துப் புரட்சியினால் ஏற்பட்ட சீரழிவுகளை மறுசீரமைக்க திருச்சபை எடுத்த முயற்சிகளை கத்தோலிக்க சீரமைப்பு (Catholic Reform) அல்லது மாற்றுச் சீர்திருத்தம் (Counter Reformation) என்று அழைப்பர். அவற்றுள் முக்கியமானது அதற்காகக் கூட்டப்பட்ட திரிதேந்தின் சங்கமாகும். மாரட்டின் லூதர் தன்னுடைய பேதகக் கொள்கைகளை பகிரங்கமாக அறிக்கையிட்ட 1545ம் ஆண்டு நவம்பர் 1ம் திகதி தொடக்கம், திருச்சபையின் ஆதரவாளர்களும், எதிரிகளும், ஆயர்களும், குருக்களும், விசுவாசிகளும் திருச்சபையின் பொதுச் சங்கம் ஒன்று கூட்டப்படவேண்டுமென குரல் கொடுத்து வந்தனர். ஆனால் அதற்கு எதிராகப் பல இடையூறுகள் குறுக்கிட்டு, தடையாயிருந்து வந்தன. திருத்தந்தையா? திருச்சங்கமா? அதிகாரமுடையதென்ற பிரச்சினை மீண்டும் எழுமோவென்ற பாப்புவின் பயம் ஒரு புறம். திருச்சபையின் நிர்வாகக் குழுவிலிருந்த (Curia) சீர்திருத்தத்தை விரும்பாத உறுப்பினர்களின் எதிர்ப்பு மறு புறம். ஜெர்மனி நாட்டு இளவரசர்களின் பகைமை இன்னொரு புறம். பிரான்சுக்கும்

இஸ்பெயினுக்கும் இடையிலான அரசியல் அதிகாரப் போட்டி மற்றொரு புறம். இப்படியாகப் பல பிரச்சினைகள் எழுந்து, பொதுச் சங்கம் கூடுவதற்குத் தடையாகவிருந்தன. கடைசியாகச் சங்கத்தைக் கூட்ட முடிவு எடுக்கப்பட்டபொழுது, அதை எங்கே கூட்டுவது? எப்பொழுது கூட்டுவது? யாரை அழைப்பது? எத்தனை பேர் வருவார்கள்? என்னத்தைப் விவாதிப்பது? என்ற கேள்விகள் எழும்பி, குழப்பத்தை ஏற்படுத்தின. இப்படியாக 28 ஆண்டுகள் இழுபட்டன.

இறுதியாக திருத்தந்தை 3வது பவுல் எல்லாத் தடைகளையும் மேற்கொண்டு, மார்கழி மாதம், 13ம் திகதி, 1545ம் ஆண்டு வட இத்தாலியிலிருந்த திரிதேந்து என்ற நகரில், 30 ஆயர்களுடன் திருச்சபையின் திரிதேந்தின் பொதுச் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார். அச் சங்கம் 18 ஆண்டுகள் (1545-1563) நீடித்தது. ஆனால் உண்மையில் கூட்டத் தொடர்கள் 3 வருடங்களே எடுத்தன. சங்கமானது இரு முறைகள் இடை நிறுத்தப்பட்டது. முதல் கூட்டத் தொடர் 1545-1547 வரையும், இரண்டாம் கூட்டத் தொடர் 1551-1552 வரையும், மூன்றாம் கூட்டத் தொடர் 1562-1563 வரையும் இடம்பெற்றன. முதலாம் கூட்டத் தொடர் 5வது சாள்ஸ் அரசர் கத்தோலிக்கருக்கும் புரொட்டஸ்-தாந்தருக்கும் இடையிலான கலந்துரையாடல் வழியாக. இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமரச முடிவை எட்டவேண்டு-மென்ற கொள்கையைக் கொணர்ந்ததால், சங்கம் 1547 இல் இடைநிறுத்தம் செய்யப்பட்டது. அதை மீண்டும் ஆரம்பிப்பது பெரிய பிரச்சினையாயிருந்தது. கடைசியாக பாப்பு 3 வது யூலியசின் அயராத முயற்சியினால் சங்கம் 1 வைகாசி 1551 இல் மீண்டும் தொடங்கப்பட்டு, நடைபெற்றது. ஆனால் 1552 இல் இரண்டாம் கூட்டத் தொடர் பல்வேறு அரசியல் காரணங்களினால் மீண்டும் இடைநிறுத்தப்பட்டது. திரும்ப அதைக் கூட்டுவதில் பல இடையூறுகள் ஏற்பட்டு, பத்து ஆண்டுகள் தாமதம் ஆகின. புதிய தலைமுறையிலான அரசியல் தலைவர்கள் மதப் பிரச்சினைகள் மட்டில் கர்சனையின்றி இருந்தனர். மேலும் திருத்தந்தை 3வது யூலியசுக்குப் பின் வந்த சீர்திருத்த ஆர்வமுடைய 4ம் பவுலும், மெல்ல மெல்லச் செயல்படும் பொதுச் சங்கத்திலும் பார்க்க, பாப்பு தானே நேரடியாகச் செய்படுவதையே விரும்பினார். ஆகவே கூட்டத் தொடரை மீள ஆரம்பப்பதில் அக்கறை எடுக்கவில்லை. எனினும் அவருக்குப் பின்வந்த பாப்பு 4வது பயஸ், சங்கத்தைத்

மீண்டும் தொடங்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, தன்னுடைய இராஜதந்திரத் திறன்களைப் பயன்படுத்தி, மூன்றாவதும், இறுதியுமான கூட்டத் தொடரை 1562ம் ஆண்டு மீண்டும் ஆரம்பித்து வைத்தார். அவரே அந்தக் கூட்டத் தொடருக்குத் தலைமை தாங்கி வழிநடத்தி, 1563 இல் சங்கத்தை ஒரு தகுந்த முடிவுக்குக் கொணர்ந்தார். ஆயர்களும் தத்தம் மறைமாவட்டங்களுக்குத் திரும்பினர்.

சங்கத்தில் கலந்துகொள்ள புரொட்டஸ்தாந்து மதத்தினருக்கும் அழைப்பு விடப்பட்டிருந்தது. ஆனால் அவர்களில் எவரும் கூட்டத்திற்கு வரவில்லை. சங்கத்தின் ஆரம்பத்தில் திருச்சபையின், அதாவது பாப்பு, கருதினால்கள், ஆயர்கள், குருக்கள், விசுவாசிகளின் வாழ்வின் சீர்திருத்தம்பற்றி முதலில் விவாதிப்பதா, அல்லது கிறிஸ்தவத்தின் மதக் கோட்பாடுகள்பற்றி விவாதிப்பதா என்ற கேள்வி எழுந்தது. பேரரசர் 5வது சாள்ஸ் பிரிவினை மதத்தினரைக் கவர்ந்திட திருச்சபையினரின் சீர்திருத்தத்தை விவாதிக்கவேண்டுமெனக் வலியுறுத்தினார் ஆனால் திருச்சங்கத்தின் தந்தையர்களோ பிரிவினை மதத்தினாரால் எழுப்பப்பட்ட பேதகக் கோட்பாடுகளைக் கண்டித்து, விசுவாச சத்தியங்களைப் பிரகடனம் செய்வதற்கு முதலிடம் அளிக்கப்படவேண்டுமென வாதாடினர். இறுதியில் இரண்டையும் சமாந்திரமாக எடுத்துக்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

**திரிதேந்தின் திருச்சங்கத்தின் தீர்மானங்கள்**

திரிதேந்தின் சங்கத்தின் இறுதித் தீர்மானத் தொகுப்பில் திருச்சபையின் அனைத்து மதக் கோட்பாடுகளும் இடம்பெறவில்லை. ஆனால் புரொட்டஸ்தாந்து பேதகத்தினரால் கேள்விக்கு உள்ளாக்கப்பட்ட கோட்பாடுகளுக்குரிய திருச்சபையின் தெளிவான உறுதியான, பதில்களே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. முதலில் திருச்சபையின் விசுவாசக் கொள்கை நேர்மறையாகத் தெளிவாகத் தரப்படுகிறது. அவை அத்தியாயங்கள் (Chapters) என அழைக்கப்படுகின்றன. அதைத் தொடர்ந்து அதற்கெதிரான புரொட்டஸ்தாந்தரின் தப்பறைகள் உரியமுறையில் சுருக்கமாகக் கண்டனம் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் சட்டங்கள் (Canons) என அழைக்கப்படுகின்றன.

1. விவிலியம், பாரம்பரியம் ஆகிய இரண்டுமே திருமறை உண்மைகளின் ஊற்று. இவை இரண்டினையும் விசுவாசிகள் ஏற்றிடல் வேண்டும். பழைய, புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களும் தேவ ஏவுதலால் எழுதப்பட்டவை ஏனெனில் கடவுளே அவற்றின் ஆசிரியர். திருமறை வசனங்கள் கடவுளிடமிருந்து வந்தவை. எனவே அவற்றிற்கு பொருள் கூறும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டும் உரியது. போதிக்கும் அதிகாரத்தையும், கற்பிக்கும் அதிகாரத்தையும் திருச்சபைக்கு கிறிஸ்து வழங்கியுள்ளார். வல்கேட் என அழைக்கப்படும் இலத்தீன் விவிலியமே திருச்சபையின் அங்கீகாரம் பெற்றது.

2. நம்பிக்கையினால் மட்டும் ஒருவர் நீதிமானாகின்றாரென்ற லூதரின் முக்கிய கோட்பாட்டுக்கு எதிராக, மனிதன் சென்ம பாவத்தினால் முற்றுமுழுதாக அழிந்திருக்கிறானென்பதை திருச்சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. மனிதரின் மீட்பு நம்பிக்கையினால் மட்டுமல்ல, எதிர்நோக்கினாலும், அன்பினாலும் இடம்பெறுகிறது. மேலும் அன்பானது பிறர்நலப் பணிகளால் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனவே மனிதரின் மீட்புக்கு நற்செயல்களின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது.

3. புனித பேதுருவும், அவருக்குப் பின் உரிய முறையில் திருத்தந்தையானவர்களுமே திருச்சபைக்குத் தலைவர். திருத்தந்தை தவறா வரம் பெற்றவர்.

4. ஏழு திருவருடசாதனங்களும் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டவை. திருமணம் ஒரு திருவருட்சாதனம். திருமணப் பிணைப்பு என்றுமே பிரிக்கப்படாத ஒன்று. இரகசிய திருமணங்கள் செல்லுபடியற்றவை. திருமணத்தின் தடைகள் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

5. திருச்சபையின் தரப்படுதலான இயல்பு (Hierarchic nature) வலியுறுத்தப்பட்டிருக்கிறது. குருத்துவம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டது. திருப்பலி, உத்தரிப்பு ஸ்தலம், புனிதர் வணக்கம், திருச் சொரூபங்களை வைத்தல், பரிபூரண பலன்கள் என்பன திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

6. நற்கருணையில் அப்பமும் இரசமும் இயேசுவின் உடலாகவும், இரத்தமாகவும் மாறுகின்றன. நற்கருணை ஒரு விருந்து மட்டுமல்ல, அது ஒரு உண்மையான பலி. திருப்பலியைச் சடங்குகளை மறுசீரமைக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது.

**குருக்குல சீர்திருத்தம்**

1. திருச்சபையின் கருதினால் குழுவில் அனைத்துலக உறுப்பினருக்கும் பதவி அளிக்க வேண்டும்.

2. ஆயர்கள் தங்கள் மறைமாவட்டங்களிலே தங்கி. மறைபோதனை நடத்த வேண்டும். ஆயர் தன் மறைமாவட்டத்துடன் திருமணம் செய்யப்படுகின்றார். எனவே ஒன்றிற்கு மேற்பட்ட மறைமாவட்டங்களுக்கு அவர் பொறுப்பு ஏற்கலாகாது. ஆயர்கள் தங்கள் மறைமாவட்டத்திலுள்ள பங்குகளை ஒழுங்காகத் தரிசிக்கவேண்டும். மறைமாவட்டப் பேரவைகள் ஒழுங்காகக் கூட்டப்படவேண்டும்.

3. குருக்கள் தம் பங்கு மக்களை கிறிஸ்தவ மதக் கொள்கைகளில் பயிற்றுவிக்கவேண்டும்.

4. குருத்துவப் பயிறிசிப் பள்ளிகள் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் நிறுவப்பட வேண்டும்.

5. துறவற சபைகள் புதிய அங்கத்தினரைச் சேர்க்கும்பொழுதும், புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுதும், வார்த்தைப்பாடுகளை அனுசரிப்பதிலும் கடுமையான சட்ட ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

6. திருச்சபையின் பரிபூரண பலனை வழங்க பிரச்சாரப் போதகம் செய்யும் முறை நீக்கப்பட்டது. மரியன்னை பக்தி, புனிதர் வணக்கம் தகுந்த முறையில் ஊக்குவிக்கப்படவேண்டும்.

7. வாரத்தில் ஒரு தடவையாவது நற்கருணை உள்வாங்குதல், அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனத்தின் வழியாகப் பாவமன்னிப்புப் பெறுதல், நற்கருணை ஆராதனை, நற்கருணை ஆசீர் என்பன ஊக்குவிக்கப்படவேண்டும்.

திரிதேந்தின் சங்கமும், அதன் தீர்மானங்கள் அனைத்தும் 1564 இல் திருத்தந்தை 4வது பயசினால் "பெனடிக்துஸ் டேயுஸ்" என்ற

ஆணை மடலினால் அங்கீகரிக்கப்பட்டது. மத போதகர்களுக்காக "திரிதேந்தின் சங்கத்தின் ஞானோபதேசம்" என்ற நூலும் திருத்தந்தை 5வது பயசினால் 1566 இல் வெளியிடப்பட்டது. மறைபோதனையில் அது ஒருமைப்பாட்டினைக் கொணர்ந்தது. கத்தோலிக்க மதக் கோட்பாடுகளுக்கும் புரொட்டஸ்தாந்த மதக் கோட்பாடுகளுக்கும் இடையிலான வித்தியாசங்கள், வேறுபாடுகள் தெளிவாகக் கோடிட்டுக் காட்டப்பட்டன. சில குறைபாடுகள் இருப்பினும் திரிதேந்தின் சங்கம் கத்தோலிக்க திருச்சபையின் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சமாக-விருக்கிறது. அது திருச்சபையில் இருக்கும் வலிமையான ஆன்ம சக்தியை தெளிவாகக் காட்டுகிறது. அது திருச்சபை முழுவதையும் சீர்திருத்தப் பாதையில் இட்டுச்சென்றது. கத்தோலிக்க நாடுகள் சங்கத்தின் தீர்மானங்களை ஏற்றன. பிற நாடுகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

## 7.2.3. திருச்சபையின் சீரமைப்பில் திருத்தந்தையரின் பங்களிப்பு

புரொட்டஸ்தாந்து புரட்சியின் விளைவாக ஏற்பட்ட பாரதூரமான சீரழிவுகளை மறுசீரமைக்க திருச்சபையினால் கூடப்பட்ட திரிதேந்தின் திருச்சங்கத்தையும், அதன் செயற்பாடுகளையும் பார்த்தோம். அச் சங்கமும், அதன் தீர்மானங்களும். ஏனைய சீர்திருத்த சங்கங்களைப்-போல் எழுத்துடன் இறந்துவிடுமோவெனப் பலர் பயந்தனர். ஆனால் இறைவன் திரிதேந்தின் சங்கத்தின் பலதரப்பட்ட தீர்மானங்களையும், அமுல் செய்து, செயற்படுத்த மதப்பற்றும், ஆர்வமுள்ள சிறந்த திருத்தந்தையர்களை அக்கால கட்டத்தில் திருச்சபைக்குத் தந்து உதவினார் அவர்களுள் நாம் சிறப்பாக 6வது அத்திரியன் (1521-1523), 3வது பவுல் (1534-1549), 3வது யூலியஸ் (1550-1555), 4வது பவுல் (1555-1559), 4வது பயஸ் (1559-1565), 5வது பயஸ் (1566-1572), 13வது கிரகோரி (1572-1585), 5வது சிக்ஸ்ரஸ் (1585-1590) எனபவர்களைக் குறிப்பிடலாம். மதப்பற்றும், அப்போஸ்தொலிக்க ஆர்வமும் கொண்டு விளங்கிய அவர்கள், மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குடையவர்களாய் இருந்தார்கள். அவர்களுக்கு உதவியாக பல சிறந்த புனிதர்களும், துறவிகளும் தோன்றினார்கள். அவர்கள்

தங்கள் பரிசுத்த வாழ்வின் செல்வாக்கினாலும், தாம் தாபித்த துறவற சபைகளின் பணியினாலும் திருச்சபையின் மாற்றுச் சீர்திருத்த பணிக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

**திருத்தந்தை 6வது அத்திரியன்** (1521-1523)

திருத்தந்தை 6வது அத்திரியன் ஹலந்து நாட்டில, உல்றெச்ற் என்னுமிடத்தில் 2 பங்குனி 1459 இல் பிறந்தவர். அவர் 9 தை 1522 இல், தனது 62வது வயதில் பாப்புவாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவரே பாப்புவாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒரே ஒல்லாந்தர் ஆவார். தன்னுடைய ஆட்சிகாலத்தின் ஆரம்பத்திலேயே புரொட்டஸ்தாந்து புரட்சிக்கும், திருச்சபையின் சீர்குலைவுக்கும் மூல காரணம் பாப்புவின் செயலகம், திருச்சபையின் ஆட்சி முறை (Curia) என்பதை நன்கு உணர்ந்திருந்தார். எனவே உடனடியாக அதைச் சீரமைப்பதில் கவனம் செலுத்தினார். எனினும் லூத்தரின் தப்பறைகளுக்கு எவ்வித இடமும் அளிக்காமல், அவற்றை முழுமையாகக் கண்டனம் செய்தார். கருதினால்மார்களை ஒன்றுகூட்டி, உரோமை நிர்வாகச் சபையில் இடம்பெறும் மோசடிகள்பற்றி உலகெங்கும் பேசப்படுகிறதெனத் தெரிவித்து, அங்கு நிலவிவரும் ஊழல்களை அவர்களுக்கு விளக்கினார். மேலும் புரொட்டஸ்தாந்துப் பேதகங்களுக்கும், பிரிவினைகளுக்கும் திருச்சபையின் தலைவர்களின், குருக்களின் பாவங்களே காரணமென அவர்களுக்கு உணர்த்தினார். பல்லாண்டுகளாக நிலவிவந்த ஊழல்களும், மோசடிகளும், அங்கு ஆழமாக வேரூன்றி விட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அவ் ஊத்தைகளை, அசுத்தங்களை அகற்றினால் அத் தாபனம் உடைந்து விழுந்திடுமோவென்ற பயமும் இருந்தது. இருந்தும் நிதானமாகச் செயல்பட்டு, பல் வேறுபட்ட ஊழல்களையும், திருச்சபையின் பதவிகள், நியமனங்கள் வியாபாரம் செய்யப்படுவதையும் நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டார். பொறுப்பானவர்களுடைய அங்கீகாரமின்றி எவருக்கும் நியமனங்கள் வழங்கக்கூடாதெனவும், எவருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட நியமனங்கள் அளிக்கக் கூடாதெனவும் கட்டளை பிறப்பித்தார். பரிபூரண பலன்கள் அளிப்பதை வெகுவாகக் குறைத்தார். அவருக்குக் கடும் எதிர்ப்புகள இருந்தன. அவருக்கு முந்திய பாப்பு 10ம் லீயோ புராதன் நாகரீக் மோகத்தில் ஈடுபட்டு, பெரும் கடன்களை விட்டுச் சென்றிருந்தார். அதை எப்படி அழிப்பதென்பது ஒரு பிரச்சினையாகவிருந்தது. எனினும் தாமே

துறவியாய் வாழ்ந்து, பக்தி நெறியினைக் கடைப்பிடித்தார். எனவே ஆடம்பர வாழ்வு வாழ்ந்த குருக்கள், ஆட்சியாளர் அவருக்குத் தம் எதிர்பைத் தெரிவித்தனர். அவருடைய ஆட்சிகாலம் 20 மாதங்களே நீடித்தன. அவர் 14 புரட்டாசி 1523 இல் காலாமானார்.

**திருத்தந்தை 3வது பவுல்** (1534-1549)

திருத்தந்தை 3வது பவுல் 24 மாசி 1468 இல் உரோமையில் பிறந்தார். அவரது முன்னைய பெயர் அலெக்சான்றோ பார்னெஸ். 1534 இல் அவர் பாப்புவாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். உடல் நலம் நலிந்திருந்த அவருக்கு அப்பொழுது வயது 66. அவர் நிறைவானவரெனச் சொல்வதற்கில்லை. காலத்தின் மகனாகிய அவரிலும் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்தன. எனினும் அவர் பாப்புவாக திருச்சபையின் மாற்றுச் சீர்திருத்தத்துக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். 6வது அத்திரியனைப்போன்று பாப்புவின் செயலகத்தைத் தொடர்ந்து சீரமைத்தார். ஜேர்மனியின் விவகாரத்தில் தேர்ச்சிபெற்ற அறிஞர்களை வரவழைத்து, செயலகத்தில் பணிபுரிந்த போதிய அறிவில்லாத பணியாளர்களுக்கு அனைத்துலக திருச்சபையின் நிலைமைபற்றி விளங்க வைத்தார். கருதினால்மார்களை ஒன்று கூட்டி, தான் கூட்டவிருக்கும் திருச்சங்கத்தைப்பற்றி அவர்களுக்கு முன்னறிவித்தார். விசுவாசத்தில் உறுதியும், அறிவில் சிறந்த மேதைகளுமாயிருந்த சில நல்லவர்களை கரதினால்மார்களாகத் தெரிந்து கொண்டார். அவர்களுள் ரோச்செஷ்டரைச் சேர்ந்த ஜாண் பிஷர், வெனிஸ் நாட்டு கொந்தாரினி, ஆங்கிலேயரான ரெஜினால்ட் போல், பெரும் கருணையுள்ள ஜாண் பீற்றர் கராபா என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சிறந்த சீர்திருத்தத்தைக் கொணர ஒரு பொதுச் சங்கத்தின் அவசியத்தை உணர்ந்த அவர். ஒரு திருச் சங்கத்தைக் கூட்ட பத்து ஆண்டுகளாக அயராது உழைத்தார் பல எதிர்ப்புகள், தடைகள், பிரச்சினைகளைத் தாண்டி, பல முறைகள் பிற்போடப்பட்டு. இடம் மாற்றப்பட்டு, இறுதியாக 13 மார்கழி 1945 இல் திரிதேந்தில் சங்கத்தைக் கூட்டினார். திருச்சபை-யின் வளர்சிக்காகப் பல சட்டங்களை வெளியிட்டார். உரோமன் ஆட்சியகத்தை சீரபடுத்தினார். தியேடைன்ஸ், கப்பூச்சின்ஸ், பர்ணாபித்தர், ஊர்சுலைன்ஸ், இயேசு சபை போன்ற பல புதிய துறவற சபைகளை அங்கீகரித்து, ஆதரித்து. வளர்த்தார். இறுதியில் அவர் 10 நவம்பர் 1549 இல், தனது 82வது வயதில் இறந்தார்.

**திருத்தந்தை 3வது யூலியஸ்** (1550-1555)

திருத்தந்தை 3வது யூலியஸ் பிரபல்யமான ஒரு சட்ட ஆலோசகரின் மகனாக 10 புரட்டாசி 1487 இல் உரோமையில் பிறந்தார். அவருடைய முன்னைய பெயர் யோவான்னி மரியா சியோச்சி டெல் மொன்ரே ஆகும். அவர் ஒரு நம்பிக்கைக்குரிய, செயற்திறன் மிக்க இராஜ தந்திரியாவார். அவர் 7 மாசி 1550 திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டார். பல்வேறு பிரச்சினைகளால் இடைநிறுத்தப்பட்டிருந்த திரிதேந்தின் திருச்சங்கத்தை மீளவும் ஆரம்பித்து, தொடர்ந்து நடைபெற அயராது உழைத்தார். அவரது அயராத உழைப்பினால் இடைநிறுத்தப்பட்டிருந்த திருச்சங்கம் 1 வைகாசி 1551 இல் மீண்டும் ஆரம்பமாகியது. திருச்சபையின் சீர்திருத்தத்தை ஒரு நிறைவான முடிவுக்கு எடுத்துச் செல்வதே அவரது முக்கிய நோக்கமும் பணியுமாக அமைந்தது. அவருடைய கண்காணிப்பில் நற்கருணை, பாவசங்கீர்தனம், அவஸ்தைப்பூசுதல் பற்றிய கொள்கைத் திரட்டுகள் நிறைவு பெற்றன. சில அரசியல் பிரச்சினைகளின் நிமித்தம் திருச்சங்கம் 1553 இல் மீண்டும் இடைநிறுத்தப்பட்டது. எனினும் பாப்பு மனந்தளரவில்லை. மீண்டும் சங்கம் தொடரும் என்ற நம்பிக்கையுடன் வேண்டிய ஆயத்தங்களில் ஈடுபட்டார்.

திருத்தந்தை 3வது யூலியசின் ஆட்சி காலத்தில் இங்கிலாந்தில் அரசி மேரி ஆட்சிசெய்தார். 8வது ஹென்றி, 6வது எட்வேட் காலத்தில் முறிவுபட்டிருந்த இங்கிலாந்துடனான உறவு மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. அந்த உறவை உறுதிசெய்ய, பாப்பு யூலியஸ் தன்னுடைய பிரதிநிதியாக கருதினால் றெஜினோர்ட் போலை சகல அதிகாரங்களுடனும் இங்கிலாந்துவுக்கு அனுப்பினார். இங்கிலாந்துப் பாராளுமன்றம் தங்கள் கடந்த கால தவறுகளுக்கு மன்னிப்பு கேட்டு, ஒரு குழுவை அனுப்பியது. பாப்புவும் அவர்களுக்கு மன்னிப்பு அளித்தார். இறுதியில் பாப்பு 3வது யூலியஸ் 23 பங்குனி 1555 இல் காலமானார்.

**திருத்தந்தை 4வது பவுல்** (1555-1559)

திருத்தந்தை 4வது பவுல் நேப்பிள்சிலுள்ள கப்பிறிலியா ஈர்ப்பினா என்ற ஊரில் வாழ்ந்த ஒரு பிரபுக்கள் குடும்பத்தில் 28 ஆனி 1476 இல் பிறந்தவர். அவருடைன முன்னைய பெயர் யோவான்னி பியெற்றோ

கறாவ்வா ஆகும். ஒரு கருதினாலாக பேதகரை விசாரிக்கும் அலுவலகத்துக்குப் (Inquisition) பொறுப்பாகவிருந்தவர். கடுமையும், பிடிவாதமும் உள்ளவர். விட்டுக் கொடுத்தலோ, சமரசமோ அவருக்குப் பிடியாதவை. திரிதேந்தின் சங்கத்தின் போக்குக்கு ஒவ்வாதவர். எனினும் அவருடைய 79 வது வயதில் திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அவருடைய நான்கு ஆண்டு ஆட்சி காலத்தில் உரோமையில் பல சீர்திருத்த வேலைகளை மேற்கொண்டார். எளிய வாழ்க்கை வாழ்ந்த அவர், பாப்புவின் ஆட்சிபீடத்திலிருந்து உலகப்பற்றை, உலகப் போக்கை முற்றாக அகற்றினார். இல்லறத்தவர்கள் திருச்சபையில் உயர்பதவிகள் வகிப்பதை முடிவுக்குக் கொணர்ந்தார். தாம் முன்பு பொறுப்பாயிருந்த பேதகரின் விசாரணையை கடுமையாக அமுல் செய்தார். விலக்கப்பட்ட நூல்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டது. இவை-யெல்லாவற்றிலும் அவருடைய நோக்கம் திருச்சபையைத் தூய்மைப்படுத்தி, அதை இறைபணியின் கருவியாக்க வேண்டும் என்பதேயாகும். பாப்புவின் இல்லத்திலிருந்து ஆடம்பர பொருட்கள், ஓவியங்கள், சிற்பங்கள் போன்றவற்றை அகற்றி, அதை ஒரு துறவற மடம்போல எளிமை ஆக்கினார். அங்கு அமைதி நிலவியது. செபமும், தியானங்களும் ஒழுங்காக இடம்பெற்றன. ஒழுங்குக் கட்டுபாடுகள் காணப்பட்டன.

அவர் திருச்சங்கத்தை மீண்டும் கூட்டுவது பற்றி அவ்வளவு கரிசனை எடுக்கவில்லை. அவருக்கு சங்கமானது அரசர்களுடனும், நாட்டுத் தலைவர்களுடனும் திருச்சபையின் கொள்ளைகளை ஏற்கவேண்டுமென கெஞ்சுவதையும், அவர்களோடு பேரம் பேசுவதையும், உரையாடலில் ஈடுபடுவதையும், விட்டுக்கொடுப்பதையும், தந்திரோபாயங்களை பயன்படுத்துவதையும் அவர் விரும்பவில்லை. அதனால் நேரம் விரயம் செய்யப்படுகின்றது. திருச்சபை படிப்பிப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவருடைய கருத்து. பாப்பு 4வது பவுல் திருச்சபையின் நிர்வாகத்திலும் பல மாற்றங்களைக் கொணர்ந்தார். வயது குறைந்தவர்கள் ஆயர்களாக நியமிக்கப்பட, உயர் பதவிகளை வகிக்க அனுமதி வழங்குவதை, சலுகைகள் அளிப்பதை முடிவுக்குக் கொணர்ந்தார். ஆயர்களை நியமிப்பதில கடுமையான முறைகளை ஏற்படுத்தினார். துறவற மடங்களையும்,

கன்னியர் மடங்களையும், தரிசித்து, மேற்பார்வை செய்து, வேண்டிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள பொறுப்பான அதிகாரிகளை அனுப்பினார். துறவிகள் அல்லாதவர்களை துறவற மடங்களுக்கு மடாதிபர்களாக நியமிப்பது நிறுத்தப்பட்டது. கூடிய வருமானம் கொணரும் வேறு பதவிகளை ஏற்பதற்காக தங்கள் துறவற சபைகளை விட்டுவிலகுவது தடைசெய்யப்பட்டது. தங்கள் துறவற சபையிலிருந்து விலகியவர்களுடைய வருமானங்கள், பதவிகள், பட்டங்கள் இரத்து செய்யப்பட்டன. சபைகள் மாறுவதும் நிறுத்தப்பட்டது. ஆயர்கள் தங்கள் ஏனைய பதவிகளை இராஜினாமாச் செய்யப் பணிக்கப்பட்டனர். ஒவ்வொரு ஆயரும் தங்கள் மறைமாவட்டத்திலேயே தங்கியிருக்க-வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டது. அப்பொழுது உரோமையில் 113 மறைமாவட்ட ஆயர்கள் தங்கியிருந்தார்கள். இப்படியான பல சீர்திருத்த நடவடிக்கைகளை 4வது பவுல் மேற்கொண்டார்.

அவருடைய இக் கடுமையான போக்குக்கு எதிராக பலர் எழுந்தனர். ஆனால் அவர் எதற்கும் அஞ்சவில்லை. அவற்றை ஏற்க முடியாவிட்டால் தங்கள் பதவிகளை அவர்கள் இராஜினாமா செய்யவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டனர். அவர்கள் எல்லோரும் தங்கள் மறைமாவட்டங்களுக்கு உடனடியாகத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டார்கள். கருதினால்மார்களும் சீர்திருத்தத்துக்கு ஆளானார்கள். குருவாக திருநிலைப்படுத்தப்படாத கருதினால்மார்கள் மூன்று மாதங்களுக்குள் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட வேண்டுமென பணிக்கப்பட்டார்கள். அவர்கள் ஒரு பதவியைத் தவிர, மற்ற அனைத்துப் பதவிகளையும் இராஜினாமாச் செய்யக் கட்டளையிடப் பட்டார்கள். திருச்சபையின் நிதி விவகாரத்திலும் மாற்றங்கள் கொணரப்பட்டன. ஆயர் அதிகாரம் பெறுவதற்காக் கொடுக்கப்படும் பணம் நிறுத்தப்பட்டது. ஏனைய பதவிகளின், பரிபூரண பலன்களின் வியாபாரங்கள் முடிவுக்குக் கொணரப்பட்டன. அதனால் திருச்சபைக்கு எவ்வளவோ நட்டம் ஏற்பட்டது. ஆனால் பாப்பு 4வது பவுல் அதைப் பொருட்படுத்தவில்லை. இறுதியாக அவர் 18 ஆவணி 1559 இல் காலமானார்.

**திருத்தந்தை 4வது பயஸ்** (1559-1565)

திருத்தந்தை 4வது பயஸ் 31 பங்குனி 1499 இல்

இத்தாலியிலுள்ள மிலானிலுள்ள ஒரு வறிய குடும்பத்தில் பிறந்தார். அவருடைய முந்திய பெயர் யோவான்னி ஆஞசலோ மெடிசி ஆகும். அவர் 25 மார்கழி 59 இல் பாப்புவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் முன்னைய பாப்பு 4வது பவுலிலிருந்த மாறுபட்ட குணங்களை உடையவர். நடுநிலைக் கொள்கை உடையவர். விட்டுக்கொடுக்கும் தன்மை உடையவர். இலேசாக மற்றவர்களுடன் பழகக் கூடியவர். திருச்சபையின் சீர்திருத்தத்தில் அவர் ஆற்றிய முக்கிய பங்கு: அவரே இடைநிறுத்தப்பட்டிருந்த திரிதேந்தின் சங்கத்தை மீண்டும் கூட்டி, அதன் இறுதிக் கூட்டத் தொடருக்குத் தலைமை தாங்கி, சுமுகமாக சங்கத்தை முடிவுக்குக் கொணர்ந்தவர். தன்னுடைய ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே அதுபற்றிக் கண்ணும் கருத்துமாய் இருந்தார். உரோமைக்கும் அரசர்களுக்கும் இடையே பதற்றம் இருந்தபோதிலும், அவரது அயராத சமரச முயற்சியால் இடைநிறுத்தப்பட்டிருந்த திருச்சங்கம் மீண்டும் 1562 இல் கூட்டப்பட்டது. இக் கூட்டத் தொடரில் பல முக்கியமான விடயங்கள் ஆராயப்பட்டு. கொள்கைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. திரிதேந்தின சங்கம் எடுத்த முடிவுகளைத் தொகுத்து, திரிதேந்தின் சங்கத்தின் விசுவாச அறிக்கையை தயாரிப்பது மிகவும் கடினமாகவிருந்தது. இக்கடின வேலையில் அவருக்கு உதவியாக அவருடைய மருமகன் சாள்ஸ் கருதினால் பொறோமேயோ இருந்தார். இவ் விசவாச அறிக்கை 4வது பயசின் விசுவாச அறிக்கை எனவும் அழைக்கப்படுகிறது. அதுவே கத்தோலிக்க விசுவாசத்தின் அதிகார வெளிப்பாடாக அமைந்தது.

திருச்சங்கத்தைத் தொடர்ந்து, அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளை அமுல் செய்வதில் கூடிய அக்கரை காட்டினார். திரிதேந்தின் சங்கத்தினால் வெளியிடப்பட்ட கொள்கைத் திரட்டுகளுக்கு பாப்புவின் ஆட்சிபீடம் அளிக்கும் விளக்கமே தீர்க்கமானதென வலியுறுத்தினார். திருச்சபையின் நிர்வாகத்தின் ஒவ்வொரு துறையிலும் ஊழல்களை அகற்றி, ஒழுங்குகளை ஏற்படுத்தினார். அவரே பாப்புவின் பதிப்பகத்தை ஆரம்பித்து, திருச்சபையின் கொள்கைகளை வெவ்வேறு மொழிகளில் அச்சிட்டு வெளியிட்டவர். திறனும், அறிவும், ஆற்றலும் நிறைந்த புதிய கருதினால்களை நியமித்து. பாப்புவின் ஆட்சிபீடத்தின் தரத்தை உயர்த்தினார். தம் மாவட்டங்களுக்கு வெளியே வாழ்ந்த ஆயர்களை அவரவர் மாவட்டங்களுக்குத் திரும்பிச்சென்று, அங்கேயே தங்கியிருக்-

கக் கட்டளையிட்டார். அனைத்து ஆயர்களும், குருக்களும், திருச்சபையின் அதிகாரிகளும் திரிதேந்தின் விசுவாச அறிக்கையை அறிக்கையிட்டு. திருத்தந்தைக்கு விசுவாசமாய் இருப்பதாக வாக்குறுதி கொடுக்கவும் பணிக்கப்பட்டார்கள். பிரிவினைச் சபையினர் அதிகமாக இருக்கும் நாடுகளில், நற்கருணைப் பலியின்போது இல்லறத்தவர்களுக்கு பாத்திரத்தை கையில் கொடுக்க அனுமதி அளித்தார். அவருக்கு முன்னைய பாப்பு 4வது பவுல் பாப்பின் மாளிகையிலிருந்து அகற்றிய பல அலங்காரப் பொருட்களை இவர் திரும்பவும் கொணர்ந்து அலங்கரித்தார். இப்படியான பல சீர்திருத்தங்களை பாப்பு 4வது பயஸ் திருச்சபையில் கொணர்ந்தார். இறுதியாக அவர் 9 மார்கழி 1565 இல் மரணமடைந்தார்.

**சீர்திருத்தத் திருத்தந்தையர்கள்**

அடுத்துவரும் திருத்தந்தையர்கள் 5வது பயஸ், 13வது கிரகோரி, 5வது சிக்ஸ்ரஸ் என்பவர்கள் சீர்திருத்தத் தந்தையர்கள என அழைக்கப்பட்டனர். அவர்கள் திரிதேந்தின் சங்கம் முடிவடைந்த (1563) காலப்பகுதியில் ஆட்சி செய்தவர்கள். திரிதேந்தின் சங்ககத்தில் எடுக்கப்பட்ட சீர்திருத்த முடிவுகளை திருச்சபையெங்கும் அமுல் செய்து, செயல்படுத்த அவர்கள் எடுத்த கடின முயற்சிகளின் நிமித்தமும், இவ்வளவு காலமும் ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்திவந்த தப்பறையான பேதகங்களை நேரடியாக எதிர்த்து, அவற்றை அடக்க எடுத்த முயற்சிகளின் நிமித்தமும் அவர்கள் அவ்வாறு அழைக்கப்ட்டனர்.

**திருத்தந்தை 5வது பயஸ்** (1566-1572)

திருத்தந்தை 5வது பயஸ் 17 தை 1504 இல் இத்தாலியின் அலெக்சாந்திரியா மாநிலத்திலுள்ள பொஸ்கா என்னுமிடத்தில் ஒரு ஏழைப் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தார். அவரது முன்னைய பெயர் அந்தோனியோ கிஸ்லியெரி. சிறு வயதிலேயே அவர் டொமினிக்கன் குருக்களால் எடுத்துப் படிப்பிக்கப்பட்டார். பின்னர் அச்சபையிலேயே இணைந்து, சபையின் சட்ட ஒழுங்குகளை பிரமாணிக்கமாகக் கடைப்பிடித்து வந்தார். நீண்ட செபங்களையும், கடின தபங்களையும் செய்து, தூய வாழ்வில் திளைத்தார். பின்னர் 1528 இல் ஒரு டொமினிக்கன் சபைக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 16 ஆண்டுகளாக இறையியலும், சித்தாந்தமும் கற்பித்த அவர், அவருடைய

சபையில் நவசந்நியாச மடத் தலைவராக, மடாதிபராகப் பல பதவிகளை வகித்திருக்கிறார். அவர் 7 தை 1566 இல் திருச்சபையின் திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவருடைய ஆட்சிகாலத்தில். திரிதேந்தின் திருச்சங்கத்தின் சீர்திருத்தங்களை திருச்சபையெங்கும் அமுல் செய்து, செயற்படுத்துவதே அவருடைய முக்கிய நோக்கமாக இருந்தது. முதலில் தன்னுடைய மறைமாவட்டமாகிய உரோமையிலேயே ஆரம்பித்தார். உரோமையில் ஒழுங்கும், ஒழுக்கமும் நிலைநாட்டப்படவேண்டிய அவசியத்தை நன்கு உணர்ந்திருந்த அவர், பாப்புவின அரண்மனையின் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, எழிய வாழ்க்கையைப் புகுத்தினார். தனது ஆட்சிலும், ஏனைய ஆயர்களின் ஆட்சியிலும் காணப்பட்ட ஊழல்களையும், ஏனைய சீர்கேடுகளையும் களைந்தார். குருக்கள் தங்கள் மறைமாவட்டங்களிலும், பங்குகளிலும் தங்கியிருக்க வசதியாகப் பங்குமனைகளை ஓழுங்கு செய்து, விபசாரிகளை அங்கிருந்து துரத்திவிட்டார். வழிபாட்டில் சடங்குகளை பக்தி விமரிசையாக நிறைவேற்ற வலியுறுத்தினார். திருப்பலியின் சடங்கு ஒழுங்குகளை தரப்படுத்தி, 1570 இல் உரோமைய திருப்பலிப் புத்தகத்தை அறிமுகம் செய்தார். அதை அனைத்துக் குருக்களும் பயன்படுத்தக் கட்டாயப்படுத்தினார். அந்தப் பூசைப் புத்தக நூலே கடந்த 400 ஆண்டுகளாக, பாப்பு 6வது பவுல் 1969 இல் அதை மறுபதிவு செய்யுமட்டும் பயன்படுத்தப்பட்டு வந்தது. திரிதேந்தின் சங்க மறைக்கல்வி நூல் எல்லாக் குருக்களுக்கும் கொடுக்கப்பட்டது. குருக்களின் கட்டளைச் செப நூல் திருத்தி அமைக்கப்பட்டது. குருக்கள் நாள்தோறும் தங்கள் கட்டளைச் செபங்களை சொல்லுவது 1571 இல் கட்டாயமாக்கப்பட்டது. உலக நாட்டமுள்ள பழைய குருக்களுக்குப் பதிலாக, அப்போஸ்தொலிக்க ஆர்வமுள்ள புதிய குருக்கள் பயிற்றப்பட்டு, திருப்பணியில் அமர்த்தப்பட்டனர். செபமாலைப் பக்தியுள்ள அவர், செபமாலைப் பக்தியை வளர்த்தார். ஆயர்கள் அவர்களின் மறைமாவட்டங்களுக்கு சென்று, அங்கேயே தங்கும்படியாக கேட்கப்பட்டார்கள். அவர்கள் துன்மாதிரிகைகளைத் தவிர்த்து, எளிமையான, பயபக்தியுள்ள வாழ்க்கை நடத்துமாறு பணிக்கப்பட்டார்கள். திரிதேந்தின் சங்கத்தின் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டார்கள். இம் முயற்சியில் கருதினால் பொறோமேயோ

அவருக்குப் பக்க பலமாய் இருந்தார். சொற்ப காலத்தினுள் உரோமாபுரி ஒரு துறவற மடம்போல் காட்சியளித்தது.

திருத்தந்தையர்கள் வழமையாக கருதினாலமார்களைப்போல சிவப்பு உடை அணிந்திருந்தார்கள். டொமினிக்கன் குருவாகிய பாப்பு 5வது பயஸ் தான் முன்பு அணிந்திருந்த வெள்ளை உடையையே அணிந்தார். அவர் தன் டொமினிக்கன் சபை வெள்ளை உடையை மாற்ற விரும்பவில்லை. அதிலிருந்துதான் பாப்புக்கள் வெள்ளை உடை அணியும் பழக்கம் அறிமுகம் செய்யப்பட்டது. இறுதியில் பாப்பு 5வது பயஸ் 1 வைகாசி 1572 இல் மரணமானார்.

**திருத்தந்தை 13வது கிரகோரி** (1572-1585)

திருத்தந்தை 13வது கிரகோரி 7 தை 1502 இல் இத்தாலியில் பொலிஞ்ஞா என்ற இடத்தில் பிறந்தார். பொலொஞ்ஞா பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றார். பினன்ர் அப் பல்கலைக் கழகத்திலேயே பல ஆண்டுகள் சட்டப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அவருக்கு 30 வயது நடக்கும்போது பாப்பு 3வது பவுலினால் உரோமைக்கு அழைக்கப்பட்டு, அங்கு பல பணிகளில் ஈடுபடுத்தப்பட்டார். பல நாடுகளில் பாப்புவின் தூதுவராகவும் பணிபுரிந்தார். பாப்பு 5வது பயசின் மரணத்தை அடுத்து, 13 வைகாசி 1572 இல் திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

திருச்சபையின் தலைவராக நியமனம் பெறுமுன் அவருடைய வாழ்வில் சில குழறுபடிகள் இருந்திருந்தாலும், அதற்குப் பின் அவர் எவ்வித குறையோ குற்றமோ அற்ற, சீரான வாழ்வு வாழ்ந்தார். அவர் சட்டத் துறையில் பிரசித்த பெற்றவராயும், நிர்வாகதில் ஆற்றல் மிக்கவராயும், எவ்வித பிரச்சினைகளையும் எதிர்கொண்டு சமாளிக்கக்-கூடிய திறமையுடைவராயும் இருந்தார். உரோமையிலும், மற்றும் பிற நாடுகளிலும் அவருக்கு மதிப்பும், செல்வாக்கும் இருந்தது. அவர் பதவி ஏற்றவுடன், தம் முன்னாலிருந்த திருச்சபையின் சீர்திருத்தப் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். பிரிவினை மதத்தினரைத் தீவிரமாக எதிர்த்து, மாற்று சீர்திருத்த இயக்கத்தை ஆதரித்தார். திரிதேந்தின் சங்கத்தின் தீர்மானங்களை அமுல் செய்து, செயற்படுத்துவதில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தார். ஆயர்கள் தங்கள் மறை மாவட்டங்களில் இருக்கவேண்டுமென்ற கட்டளையிலிருந்து கருதினால்மார்களுக்கு

விதிவிலக்கில்லையென அறிவித்தார். தனது ஆட்சி நிர்வாக அமைப்புகளின் எண்ணிக்கையை 15ஆக உயர்த்தினார். ஒவ்வொரு அமைப்புக்கும் அதற்குரிய பணிகள் வரையறைசெய்து கொடுக்கப்பட்டன. திருச்சபையின் ஜேர்மனியுடனான விவகாரங்கள் ஒரு அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டன. விலக்கப்பட்ட நூல்களை அட்டவணைப் படுத்த அமைப்பொன்று நியமிக்கப்ட்டது. திருச்சபையின் புதிய சட்ட நூல் எழுதப்பட்டு, வெளியிடப்பட்டது. குருக்கள், துறவிகளின் வாழ்வு, அவர்களின் உருவாக்கம் என்பன சீரமைப்புச் செய்யப்பட்டன. இறையியல், சித்தாந்தம் போன்ற பாடங்களைக் குருமாணவர்களுக்குக் கற்பிக்க பல பல்கலைக் கழகங்களும், 23 குருமடங்களும் உரோமையிலும், வேறு நாடுகளிலும் திறக்கப்பட்டன. 1576 இல் ஜேர்மானிய இளைஞர்களுக்கு குருத்துவப் பயிற்சி அளித்து, ஜேர்மனிக்கு அனுப்பப் புகழ்பெற்ற ஜேர்மானியக் கல்லூரியையும், இங்கிலாந்து இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து இங்கிலாந்துவுக்கு அனுப்ப ஆங்கிலக் கல்லூரியையும் உரோமையில் அமைத்து, இயேசு சபையின் நிர்வாகத்தின் கீழ் வைத்தார். அதுவே இன்று உரோமைய கிரகோரியன் பல்கலைக் கழகமாகத் திகழ்கின்றது.

திருச்சபையின் அரசியல் உறவுகளிலும் சீர்திருத்தம் கொணரப்பட்டது. அயல்நாட்டுப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. அவர்கள் வழியாக திரிதேந்தின் சங்கத்தின் தீர்மானங்களை பிற நாடுகளில் அமுல் படுத்துதல், குருக்கள், துறவிகளின் சீர்திருத்தம், கல்லூரிகள், குருமடங்கள் அமைத்தல், பிரிவினை மதத்தாரிடையில் போதகக் குழுவை அனுப்புதல் போன்ற பணிகள் இடம்பெற்றன. பிரிவினை மதத்தினரால் அச்சுறுத்தப்பட்ட ஜேர்மனி, போலந்து, ஹங்கேரி, சுவிற்சலாந்து, நெதர்லாந்து என்ற நாடுகளிலுள்ள திருத்தந்தையின் தூதுவர்களின் முயற்சியினால் கத்தோலிக்க மதம் காப்பாற்றப்பட்டது. திருச்சபையில் நடைமுறை-யிலிருந்த யூலியன் திருவழிபாட்டு நாள்காட்டி 1582 இல் திருத்தி, மாற்றி அமைக்கப்பட்டது. அது கிரகோரியன் நாள்காட்டி என் அழைக்கப்படுகிறது. அதுவே பாவனைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வாறு திருச்சபையின் மாற்று சீர்திருத்தத்தில் அனப்பரிய சேவையாற்றி பாப்பு 13வது கிரகோரியார் 10 சித்திரை 1585 இல் மரணமானார்.

**திருத்தந்தை 5வது சிக்ஸ்ரஸ்** (1585-1590)

திருத்தந்தை 5வது சிக்ஸ்ரஸ் இத்தாலியிலுள்ள மோன்டாலடோ என்னுமிடத்திலிருந்த ஒரு ஏழைக் குடும்பத்தில் 13 மார்கழி 1520 இல் பிறந்தார். அவருடைய முன்னைய பெயர் பெலிச்சே பெறெற்றி ஆகும். அவருடைய பெற்றோர்கள் பியேர்ஜென்றில் டி ஜியாக்கொமோ, மரியான்னா டா புறொன்ரில்லோ என்பவர்களாவர். பேலிச்சே ஒரு சேரியில் பிறந்து. வறுமையில் வளர்ந்தார். சிறு வயதில் அவர் கன்றுகாலிகளை மேய்த்து வந்தார். ஓய்வு நேரங்களில் அருகிலிருந்த பிரான்சிஸ்கன் துறவிகளிடம் கல்வி கற்றார். ஒன்பது வயதிலேயே பிரான்சிஸ்கன் துறவியாகச் சேர்ந்தார். கல்வி கேள்விகளிலும், போதிப்பதிலும் சிறந்து விளங்கினார். 1547 இல் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அவருடைய போதிக்கும் திறனும், ஏனைய குணாதிசயங்களும் பர்பபு 3வது பவுலைப் பெரிதும் கவர்ந்தது. எனவே அவரை உரோமைக்கு அழைப்பித்து, அங்கு வெவ்வேறு பணிகளில் ஈடுபடுத்தினார். காலப்போக்கில் அவர் பிரான்சிஸ்கன் சபையின் குருகுலத் தலைவராகவும், திருத்தந்தையின் ஆலோசகராகவும், ஆயராகவும், கருதினாலாகவும் பணிபுரிந்தார். பாப்பு 13வது கிரகோரியாரின் மரணத்தை அடுத்து, 24 சித்திரை 1585 இல் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருத்தந்தை 5வது சிக்ஸ்ரஸ் ஆட்சி செய்வதற்றென்றே பிறந்த ஒருவர். தீயவைகளைக் களைந்து, அனைத்தையும் சீர்செய்வதற்குத் தகுந்தவர். திருச்சபையின் சீர்திருத்தத்தில் ஆர்வம் உள்ள அவர் திரிதேந்தின் சங்கத்தின் சீர்திருத்தங்களை மேலெடுத்துச் சென்றார். உலகின் பல்வேறு பாகங்களிலும் திருச்சபை எவ்வாறு இயங்குகின்றதென அறிய, ஒவ்வொரு ஆயரும் குறிப்பிட்ட வருடங்களுக்கு ஒரு முறை உரோமைக்கு வருகைதந்து, திருத்தந்தையைச் சந்திக்கவேண்டுமென்று கட்டளையிட்டார். அக்காலத்தில் பாப்புவின் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளில் கொள்ளைக்காரர்கள் பெருந்தெகையாக நடமாடினார்கள். அவர்களை இல்லாதொழிப்பது மிகக் கடினமான வேலையாயிருந்தது. எனினும் திருத்தந்தை அதில் வெற்றி கண்டார். எவரும் ஆயுதங்களுடன் நடமாடுவது தடைசெய்யப்பட்டது. பிடிபட்ட கொள்ளையர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டார்கள். மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக அவர்களுடைய

தலைகள் தெருவில் கம்பங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டன. கொள்ளையருக்கு உதவிசெய்த பிரபுக்களுக்கும் அதே தண்டனை வழங்கப்பட்டது. வெகு விரைவில் கொள்ளையர்கள் முற்றாக அழிக்கப்-பட்டு, பாதுகாப்பாக நடமாடக்கூடிய நிலை ஏற்பட்டது. உரோமாபுரிக்குப் பல திட்டங்களைத் தீட்டி, பல கட்டங்களைக் கட்டினார். இலத்திரன் மாளிகையையும், வத்திக்கான் நூல் நிலையத்தையும் புதுப்பித்துக் கட்டினார். பேதுரு பேராலயத்தின் கோபுரத்தைக் கட்டி முடித்தார். பாப்பு 13வது கிரகோரியார் விட்டுச் சென்ற வத்திக்கானின் அவல நிலையைச் சீர்படுத்தி, அழகிய இடமாக்கினார்.

செப்டுவாஜின்ற் என்ற கிரேக்க விவிலியத்தையும், வல்கேற் என்ற இலத்தீன் விவிலியத்தையும் புதிப்பித்து. மறுபடியும் பதிப்பித்தார். கொள்ளையர் மட்டில் கடுமையாக இருந்த பாப்பு, விசவாசத்துக்கு எதிராகத் துரோகம் செய்பவர்கள் மட்டில் கூடிய இரக்கம் காட்டினார். அவருடைய ஆட்சி காலத்தில் ஐந்து பேர் மட்டுமே விசுவாசத்துக்கு எதிரான குற்றங்களுக்காகத் தீயிலிடப்பட்டார்கள். கர்தினால்களின் தொகையை 70 ஆகக் குறைத்தார். ஆனால் நிர்வாக அமைப்புகள் அதிகரிக்கப்பட்டு, பல புதிய பணிகள் கொடுக்கப்பட்டன. தகுதியும், திறனும், ஆற்றலும் உள்ளவர்களே கருதினால்மார்களாக நியமிக்கப்பட்டார்கள்.. இறுதியில் திருத்தந்தை 5வது சிக்ஸ்ரஸ் 27 ஆவணி 1590 இல் காலமானார்.

## 7.2.4. திருச்சபையின் சீர்திருத்தத்தில் பங்களிப்புச் செய்த முக்கிய குருக்கள், துறவிகள்.

இந்தத் திருச்சபையின் மாற்று மறுமலர்ச்சிக் காலத்தின்போது ஆழ்தியான வாழ்வில் முதிர்ச்சியும், ஆன்மீக தாகமும் கொண்ட பல புனிதர்கள், குருக்கள், துறவியர் தோன்றி, பங்களிப்புச் செய்தனர்.

**புனித இக்னேசியஸ் லொயோலா** (1491-1556)

கத்தோலிக்க திருச்சபையின் சீர்திருத்தத்தை மேலெடுத்துச் செல்வதற்கு ஆகக் கூடுதலான பங்களிப்புச் செய்த ஒரு தனி நபர் என்றால் அவர் புனித இக்னேசியஸ் லொயோலா. அவர் ஸ்பானிய இனத்தவர். மார்ட்டின் லூதரின் புரட்சியினால் ஏற்படுத்தப்பட்ட சீர்குலைவுகள் பரவுவதைத் தடுத்து நிறுத்தி, கத்தோலிக்க

திருச்சபையை உள்ளார்ந்த ரீதியாக சீர்திருத்தவும், புரொட்டஸ்தாந்து சபைகளின் தப்பறையான போதனைகளினால் பிரிந்து சென்ற கத்தோலிக்கப் பிரதேசங்களை திருச்சபையின் அதிகாரத்தின் கீழ் மீண்டும் ஒன்றுபடுத்தவும் அயராது முயற்சி செய்தார். அதற்காக, அத்தகைய நோக்குடைய சில இளைஞர்களை ஒன்று திரட்டி, 1540 இல் ஒரு துறவற சபையைத் (இயேசு சபை) தாபித்தார். அச்சபையைச் சேர்ந்த குருக்கள் திருச்சபையின் சீர்திருத்தத்திற்கு முழுமூச்சுடன் ஒத்துழைப்பு வழங்கினர். புரொட்டஸ்தாந்து சபையில் சேர்ந்த கத்தோலிக்கரை மனந்திருப்பி, மீண்டும் திருச்சபையில் கொணர்ந்து சேர்க்கவும், புரொட்டஸ்தாந்துப் புரட்சி ஏனைய நாடுகளுக்குப் பரவ விடாமல் தடுக்கவும் அவர்களால் முடிந்தது. புரொட்டஸ்தாந்துப் புரட்சிக்கு கத்தோலிக்க திருச்சபை கொடுத்த பதிலடியாக அவர்களின் முயற்சிகள் அமைந்தன.

**புனித சாள்ஸ் பொரோமியோ** (1538-1584)

சாள்ஸ் கருதினால் போரோமியோ 1538 இல் மகியோர் ஏரிக்கரைக்கு அருகாமையில் இருந்த அரோனா நகர் பொரோமியா மாளிகையில் பிறந்தவர். பர்ப்பு 4வது பயசின் மருமகன். பதுவைப் பல்கலைக் கழகத்தில் திருச்சபையின் சட்டத்திலும், சமூக சட்டத்திலும் கலாநிதிப் பட்டம் பெற்ற அறிவாளி. திரிதேந்தின் சங்கத்தின் மூன்றாவது கூட்டத் தொடர் 1562 இல் கூட்டப்பட்டபோது, பாப்பு 4ம் பயசுக்கு நல்ல துணைவராய் செயற்பட்டவர். திரிதேந்தின் சங்கத்தின் சீர்திருத்தக் கோட்பாடுகளை அமுல் செய்வதில் அதிக ஆர்வம் காட்டினார். சங்கத்தின் மறைக் கல்வி நூலைத் தயாரிப்பதற்கு பெரும் உதவி செய்தார். மிலான் மறைமாவட்டத்தின் பேராயராக 1565-1584 வரை இருந்த அவர், ஆன்மீக வாழ்வில் தாழ்நிலையிலிருந்த மறைமாவட்டத்தில், திரிதேந்தின் சீர்திருத்தக் கோட்பாடுகளை அமுல் செய்து, சீர்திருத்தி, ஏனைய மாவட்டங்களுக்கு ஒரு மாதிரிகையான மறைமாவட்டம் ஆக்கினார். அங்கு பல பாடசாலைகளையும், கல்லூரிகளையும், குருமடங்களையும் தொடங்கினார். 1576 இல் மிலான் நகரில் கொள்ளை நோய் பரவியபொழுது, நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக தமது இல்லத்தையே வைத்தியசாலையாகப் பயன்படுத்தி, நோயாளருக்கு தம் கைகளினாலேயே உதவி செய்து, நற்கருணை வழங்கினார். இவர் 1584 இல் இறைவனடி சேர்ந்தார்.

**புனித பிலிப்பு நேரி** (1515-1595)

புனித பிலிப்பு நேரியார் 22 ஆடி 1515 இல் இத்தாலியிலுள்ள வுளோறன்ஸ் என்ற இடத்தில செல்வந்தர் மரபில் பிறந்தவர். தன்னுடைய இளம் வயதில் (1535) தன் லௌகீக ஆசைகளைத் துறந்து, உரோமாபுரி சென்று ஆசிரியப் பணியில் ஈடுபட்ட அவர், தன் ஓய்வு நேரங்களை படிப்பிலும், தானதருமங்கள் செய்வதிலும் செலவழித்தார். வைத்தியசாலைகள், வேலைத் தளங்கள், பொது இடங்களுக்குச் சென்று, இரக்கச் செயல்களில் ஈடுபட்டார். 1551 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட அவர், 33 வருடங்களாக இளைஞர்களின் நண்பராகவும், ஆன்ம குருவாகவும், வழிகாட்டியாகவும், கிறிஸ்தவ சபைகளின் ஆதரவாளராகவும் பணிபுரிந்தார். இளைஞர்களுக்காக ஒரு செபக் கூடத்தை (Oratory) ஆரம்பித்து, ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை ஒத்ததாக வாழப் பயிற்றுவித்தார். அவருக்கு உதவ வந்த குருக்கள் ஒரு சமூகமாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் எந்தவொரு வார்த்தைப்பாடும் கொடுக்கவில்லை. இவ்வாறு "தூய பிலிப்பு நேரி ஓறற்றரி" என்ற சபை ஆரம்பமானது. திருத்தந்தை 13 வது கிரகோரி-யினால் 1575 இல் அங்கிகரிக்கப்பட்ட அச் சபையின் இலட்சியங்கள் தங்கள் குருத்துக் கடமைகளை சரிவர நிறைவேற்றி, பிறரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக, சிறப்பாக இளைஞரின் தூய வாழ்விற்காகத் தங்களால் ஆனவற்றை எல்லாம் செய்வதும், தங்களை அர்ச்சித்தலுமாகும். உரோமையில் அது மதச் சீர்திருத்தத்தின் தலைமை மையமெனப் புகழ்பெற்றது. பின்னர் பிற நாடுகளிலும் பரவியது.

**புனித பீற்றர் கனிசியஸ்** (1521-1597)

புனித பீற்றர் கனிசியஸ் ஹாலந்து நாட்டிலுள்ள நிம்வேகன் என்ற நகரில் 8 வைகாசி 1521 இல் பிறந்தார். 1536 இல் கொலோன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். பின்னர் யேசு சபையில் இணைந்த அவர், 1546 இல் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு, உரோமாபுரி சென்று, சில காலம் புனித இக்னேசியஸ் லொயோலாவுடன் தங்கினார். 1549 இல் நான்கு வார்த்தைப்பாடுகளைக் கொடுத்து, திருத்தொண்டு செய்ய ஜெர்மனி சென்றார். புனித இக்னேசியசுக்கு அடுத்த செல்வாக்குடைய இயேசு சபைக் குருவாகக் கணிக்கப்பட்ட அவர், ஜெர்மனியின் இரண்டாம் அப்போஸ்தலரென அழைக்கப்பட்டார். 30

அண்டு காலம் பகிவேரியா, தைரால், பொமியா, ஆஸ்திரியா என்ற நாடுகளில் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும், மத போதகராகவும், திரிதேந்தின் பொதுச் சங்கத்தில் பாப்புவின் பிரதிநிதியாகவும், அரசர்களின் ஆன்ம குருவாகவும், ஆலோசகராகவும் பணிபுரிந்தார். இவர் வியன்னா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தபொழுது, 1551, 1556, 1558 இல் மறைக் கல்வி நூல்களை எழுதி வெளியிட்டார். அம் மறைக் கல்வி நூல்களின் வழியாக அவர் பேதகத்தினரின் தப்பறைகளுக்குப் பதிலளித்து, அவர்களின் சம்மட்டியானார். அவை பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, ஐரோப்பாவின் எல்லா இடங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. அவரே ஒக்ஸ்பரி, முயூனிக், இன்ஸ்பிறக் கல்லூரிகளின் தாபகர். இக் கல்லூரிகள் வழியாகவே குருக்கள் கத்தோலிக்க சீர்திருத்தத்தை பலவிடங்களுக்கும் கொண்டு சென்றனர். தனது வாழ்வின் கடைசி ஏழு ஆண்டுகளையும் சுவிற்சார்-லாந்திலுள்ள பிரிபரோவில் கழித்து. போதிப்பதிலும், தியானங்கள் அளிப்பதிலும், புத்தகஙகள் எழுதுவதிலும் ஈடுபட்டார். இறுதியாக 21 மார்கழி 1597 இல் மரணமானார்.

**புனித ஆஞ்சலா (1474-1540)**

புனித ஆஞ்சலா கார்டா ஏரிக்கரையில் தெசன்சானோ என்ற ஊரில் 21 பங்குனி 1474 இல் பிறந்தவர். சிறுவயதிலிருந்து இரவில் நீண்ட நேரம் செபித்து, ஏழைகள்மீது பரிவிரக்கம் காட்டி, தன் வயதுள்ள பிள்ளைகளை ஒன்றாகக் கூட்டி வேத பாடம் கற்பித்து வந்தார். பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையில் இணைந்து, தெசன்சானோவில் பெண் குழந்தைகளுக்கு ஒரு பாடசலையை நிறுவினார். பிரேசியாவில் மற்றொரு பாடசாலையையும் நிறுவினார். அவர் கண் பார்வை குன்றியிருந்தார். ஒரு நாள், ஒரு கூட்டம் கன்னியரை வானதூதர் வழிநடத்த, கையில் லீலி மலரையும், தலையில் தங்கக் கிரீடத்தையும் அணிந்திருந்த அவர்கள் ஒரு ஏணி வழியாய் மோட்சம் செல்லும் காட்சியைக் கண்டார். சிறு குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் நோக்கினைக் கொண்ட ஒரு கன்னியர் துறவற சபையினை அமைக்க அக் காட்சி அவரை உணர்த்தியது. பிரேசியாவிலிருந்து 12 கன்னியர் இப் புதுச் சபையில் இணைய முன்வந்தனர். வேதசாட்சியான புனித ஊர்சுலாவைத் தங்கள் பாதுகாவலியாகத் தெரிந்து கொண்டனர்.

"கற்பினைக் காப்போம்" என்ற வார்த்தைப்பாட்டினை அளித்து, கறுப்பு உடை அணிந்து, கொண்டனர். தத்தம் வீடுகளிலேயே வாழ்ந்து, அவ்வப்போது செபம் செய்யவும், இதர நற்கிரிகைகளைச் செய்யவும் ஒன்று கூடினர். ஏழைப் பெண் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டினர். அனாதைகளுக்கு ஆதரவு அளித்தனர். மரணப் படுக்கையிலிருந்தவர்களை நல்மரணத்திற்கு ஆயத்தம் செய்தனர். 1537 இல் ஆஞ்சலா அச் சபையின் பொது மேலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர்கள் ஊர்சுலியன் சபையினரென அழைக்கப்பட்டனர். அவர்களுக்கென தனி மடம் இருக்கவில்லை. மடத்தில வாழாது, தத்தம் வீடுகளில் வாழ்வது எதிர்ப்புகளைக் கிளப்பின. அவர்கள் முதலில் இத்தாலியிலும், பின்னர் ஜெர்மனி, பிரான்ஸ், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் சென்று, பணிபுரிந்தனர். ஆஞ்சலா 1540 இல் மரணமானார்.

**புனித அவிலா தீரேசாள்** (1515-1582)

புனித அவிலா திரேசாள் ஸ்பெயின் நாட்டிலுள்ள அவிலா என்னுமிடத்தில் வாழ்ந்த ஒரு பிரபுக் குடும்பத்தில் 28 பங்குனி 1515 இல் பிறந்தார். அவர் தன சிறு வயதிலேயே தன் சகோதரனிடம் "நாம் இருவரும் வீட்டை விட்டு ஓடி, மொராக்கா சென்று, வேதசாட்சி முடி பெறுவோம்" என்றார். ஆனால் அவர் படித்த சில வீரர்களின் வரலாறு அவரின் மதப் பற்றைக் குறைத்தது. பதிலாகத் தான் ஒரு துறவியாக வரவேண்டுமென்ற எண்ணம் உதித்தது. எனவே தன் சொந்த கிராமத்திலிருந்த கார்மேல் மடம் புகுந்தார். ஆனால் அக்காலகட்டத்தில் மடங்களில் நிலவிய சட்ட ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படாத நிலைமையைக் கண்டு, உலக வாழ்வில் தன் கவனத்தைச் செலுத்தினார். அகுஸ்தினார், ஜெரோம், மகா கிரகோரியார் எழுதிய நூல்களைப் படித்தபொழுது, அவருடைய கண்கள் திறக்கப்பட்டன. முற்றும் துறந்த தவ வாழ்வே தனது இலட்சியமெனக் கொண்டார்.

தன் ஆன்ம குருவின் பணிபுரைக்கு அமைய. தன் வாழ்வின் சரிதையை "சீர்பெற்ற வாழ்விற்கு வழி" என்ற தலைப்பில் எழுதினார். தனது "ஆன்மாவின் கோட்டை" என்ற நூலில் இறைவனுடன் ஒன்றிப்பதின் இனிமையை இனிதாக எடுத்துரைத்தார். மிகவும் திடமான நிர்வாகியாகவும், தூயவராகவும் விளங்கிய அவர், பிரிவினை மதம் தோன்றுவதற்கு துறவற இல்லங்களில் காணப்பட்ட விசுவாசத் தளர்வே

காரணமென்பதை உணர்ந்து, கார்மேல் சபையினை சீர்திருத்தி, பழைய விதிமுறைகளைப் பின்பற்றச் செய்யவேண்டுமென திட்டமிட்டார். அதற்குப் பல எதிர்ப்புகள் கிளம்பினாலும், அவற்றைப் பொருட்படுத்தாது, புனித சிலுவை யோவானின் உதவியுடன், துறவிகளுக்கான கார்மேல் சபையினைச் சீர்திருத்தினார். சீர்திருத்தப்பட்ட விதிகளைப் பின்பற்றி 32 கார்மேல் துறவற மடங்களைத் தோற்றுவித்தார். கார்மேல் சபைக்கு அவர் ஆற்றிய பணி அளப்பரியது. அவர் எழுதிய நூல்களும், கடிதங்களும் இஸ்பானிய இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. அவர் 4 ஐப்பசி 1582 இல் மரணமானார்.

**புனித பிரான்சிஸ் சலேசியார்** (1567-1622)

பிரான்சிஸ் சலேசியாரென அழைக்கப்படும் புனித பிரான்சிஸ் தே சேல்ஸ் சாவாய் மலையடி வாரத்து அன்னேசி நகரத்திற்கு அருகிலுள்ள சேல்ஸ் மாளிகையில் 1567 இல் பிறந்தவர். அன்னேசியில் இலக்கியங்களையும், இயேசு சபையினர் பாரிசில் நடத்திய கல்லூரியில் இறையியலையும், மெய்யிலையும் கற்றார். சட்ட மேதைப் பட்டத்தை 1592 இல் பதுவைப் பல்கலைக் கழகத்தில் பெற்றார். தன் தந்தையின் விருப்பத்திற்கு மாறாக குருமடம் சென்று, 1593 இல் குருவானார். ஒரு வருடம் போதகராகப் பணியாற்றிய பின், ஜெனீவா ஆயர் அவரைக் கல்வின் பேதகத்தைத் தழுவிய சாப்ளைஸ் மாகாணத்திற்கு அனுப்பி, பேதகத்தினரை மனந்திருப்பும் கடின பணியை அவரிடம் ஒப்படைத்தார். 1594 முதல் 1598 வரை எல்லா கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் சென்று, பல இன்னல்களுக்கு இலக்காகி, பேதகத்தினருக்கு எதிராகப் போதித்தார். முதலில் மக்கள் அவரை உதாசீனம் செய்தாலும், பின்னர் அவருடைய நேரிய தூய வாழ்வும், பரிவும் அவர்மீது மதிப்பு வைத்திடச் செய்தன. 70,000 ற்கு மேற்பட்ட கல்வின் மதத்தினர் மனந்திருந்தி, திருச்சபையில் சேர்ந்தனர். அவர் ஜெனிவாவின் துணை ஆயராகி, பின்னர் 1602 இல் அதன் ஆயரானார்.

புனித சாள்ஸ் பொரொமியோ மீது பற்றுக் கொண்ட அவர், ஆயரானதும் அவருடைய அடிச்சுவட்டையே பின்பற்றி, தன் மறைமாவட்டத்தைச் சீர்திருத்தினார். அவர் தவக்கால மறையுரை ஆற்றிவந்த பொழுது, சந்தாள் பிரபுவின் விதவையான ஜேன் பிரான்சிசைச் சந்தித்தார். அத் தூயவளின் பக்தியை வியந்த சலேசியார்,

அவளுடன் சேர்ந்து, "மினவுதல் சபை" என்ற துறவற சபையை ஏற்படுத்தினார். அவர் பல துறவிகளின் ஆன்ம குருவாக இருந்து, பல பயன்மிகு மறை நூல்களையும், பல்லாயிரக் கணக்கான கடிதங்கள், பிரசுரங்களையும் எழுதி, திருச்சபையின் கோட்பாடுகளை பிறர் மதித்துப் பேண வழிசெய்தார். எனவே அவர் "கத்தோலிக்க பிரசுரங்களின் பாதுகாவலர்" எனப் போற்றப்படுகின்றார். போசுவே என்ற பேராசிரியர் கூறுகிறார், "புனித சாள்ஸ் பொரோமியோ விசுவாசத்தைக் குருக்களிடையே ஏற்படுத்தினார். ஆனால் மாபெரும் சலேசியார் விசுவாசிகளிடையே பக்தியை வளர்த்தார்".

**புனித வின்சென்ற் தே போல் (1580-1660)**

புனித வின்சென்ற் தே பவுல் பிரான்சிலுள்ள காஸ்கன் என்னும் ஊரிலிருந்த ஒரு ஏழைக் குடியானவரின் குடும்பத்திலே 24 சித்திரை 1580 இல் பிறந்தார். அவர் புனித சலேசியாரின் நண்பர். சிறு வயதில் தன் சொந்த ஊரான காஸ்கனில் ஆடு மேய்த்துவந்த வின்சென்ற், கிராமப் பள்ளியில் படித்து வந்தார். அவர் படிப்பில் கெட்டிக்காரனாய் இருந்தபடியால், அவருடைய பெற்றோர்கள் அவரைக் குருத்துவக் கல்லூரிக்கு அனுப்ப விரும்பினர். சுார் கோசா, ரூலூஸ் என்ற நகரங்களில் அவர் படித்தபொழுது, தன் படிப்புச் செலவிற்கு, தனி ஆசிரியத் தொழில் செய்து, பொருள் ஈட்டினார். 1600 இல் அவர் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1605 இல் அவர் மார்செயில்சிலிருந்து நாற்போன் நகருக்கு கடற் பயணம் மேற்கொண்டிருந்தபொழுது, முகமதிய கடற்கொள்ளையினரால் கடத்திச் செல்லப்பட்டு, டிபனியில் அடிமையாக விற்கப்பட்டார். மூன்று ஆண்டுகள் கைதியாகவிருந்த அவர், 1607 இல் தப்பியோடி, பாரிசுக்கு வந்தார். அங்குள்ள மருத்தவமனைகளைச் சந்தித்து, பிணியாளர்களுக்கு தம்மாலான உதவி செய்து வந்தார். அவருக்குத் தன் விசுவாசத்தில் சந்தேகம் எழும்போது, விசுவாசப்பிரமாணத்தை ஒரு தாளில் எழுதி, தனது மார்பில் அணிந்துகொள்வார். லயண்ஸ் பட்டணத்திலிருந்த ஒரு பங்கில் சில காலம் பணிபுரிநதார். மக்களிடம் வேத அறிவும், பக்தியும் இல்லையென அறிந்த அவர், பிரான்சிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சென்று, வீடுகளைத் தரிசித்து, மறைக் கல்வியைப் போதிக்கத் தொடங்கினார். பல குருக்கள் அவருக்கு உதவ முன்வந்தனர். அவர்களை ஒன்று சேர்த்து, "வேதபோதக சபை" என்ற சபையை அமைத்தார்.

அச்சபையினர் வின்செந்தியரென அழைக்கப்பட்டனர். அங்கிருந்த புனித இலாசறஸ் தொழு நோயாளிகளின் இல்லத்தில் அவர்கள் தங்கியிருந்த படியால், சிலர் அவர்களை இலாசரித்தர் எனவும் அழைத்தனர்.

ஒரு பங்கின் மக்கள் ஒருங்கிணைந்து தருமப் பணிகள் செய்வது அதிக பலன் உள்ளது என்பதை உணர்ந்த அவர், அதை மக்களுக்கு எடுத்துவிளக்கி, ஒவ்வொரு பங்கிலும் "அன்பின் கழகம்" என்ற அமைப்பை ஏற்படுத்தினார். தற்கால வின்சென்ற் தே போல் சபைகளுக்கு அக் கழகம்தான் முன்னோடியாய் அமைந்தது. செல்வந்தர்களைத் தம் போதனையால் மனம்மாற்றி, சேவை செய்யத் தூண்டினார். பணக்காரர்களை தன் பேச்சால் கவரும் சக்தி அவரிடமிருந்தது. அவர்களிடமிருந்து உதவிபெற்று, பல அரிய காரியங்களைச் செய்தார். பல தர்ம நிலையங்களைக் கட்டினார். ஆபிரிக்காவிலிருந்து பல அடிமைகளை மீட்டார். கொள்ளை நோய், பஞ்ச காலத்தில, வறியவர்களுக்கு உதவி செய்தார். 1632 இலிருந்து அவர் இறக்கும் வரை, அவர் இலாசறஸ் மருத்துவ மனையில் ஒரு அறையில் தங்கியிருந்து, தியானங்களும், ஞான போதனைகளும் நடத்த ஏற்பாடு செய்து, குருமடங்களையும் கட்டினார். புனித தெமாரில்லா லூயிசம்மாளுடைய ஒத்துழைப்புடன் "பிறர் சிநேக குமாரத்திகள்" என்ற சபையைப் பெண்களுக்கென்று ஏற்படுத்தினார். பிணியாளரையும், முதியோரையும், அனாதைகளையும் பராமரிப்பது அச்சபையின் பொறுப்பாகும். இறுதியில் 27 புரட்டாசி 1660 இல் மரணமானார்.

## 7.2.5. திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு உதவிய துறவற சபைகள்

பதினாறாம் நூற்றாண்டுகளில் திருச்சபையில் சீர்திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், அதை மேலெடுத்துச் செல்ல பல துறவற சபைகள் நிறுவப்பட்டன. அதே சமயம் ஏற்கனவே இருந்த துறவற சபைகளிலும் மறுசீரமைப்பின் தேவை உணரப்பட்டது. திருச்சபையின் சீர்திருத்தத்தை நோக்காகக் கொண்டு நிறுவப்பட்ட துறவற சபைகளில் இயேசு சபை, வின்சென்சியன் சபை, கார்மேல் சபை, கப்புச்சின் சபை என்பன குறிப்பிடத் தக்கவை.

**இயேசு சபை**

புனித லொயோலா இக்னேசியஸ் ஸ்பெயின் நாட்டிலுள்ள ஒரு உயர்குடி குடும்பத்தில் 1491 இல் பிறந்தார். அவர் இராணுவத்தில் இணைந்து, பெரும் புகழுடன் வாழ் விரும்பினார். பிரான்ஸ் நாட்டினருடன் பம்பலூனா என்னும் இடத்தில் நடந்த போரில் காயமுற்று, படுக்கையில் கிடந்தபொழுது, இறையருள் தம்மைத் தழுவுவதை உணர்ந்தார். ஞான வாழ்க்கை பற்றிய நூல்களைப் படித்தார். யாக்கோபுஸ் தே ஒராஜினே இயற்றிய "புனிதர்களின் வாழ்க்கை" எனும் நூலும், சாக்சனி நாட்டு லுடால்பு இயற்றிய "கிறிஸ்துவின் வாழ்க்கை" எனும் நூலும் இஞ்ஞாசி-யாருடைய ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஊற்றுக்களாக அமைந்தன. இவையே அவர் பின்னர் எழுதிய "ஆன்மீகப் பயிற்சிகள்" என்ற நூலுக்கு உறுதுணையாக இருந்தன. புனித பிரான்சீஸ்கு அசீசியார், புனித சுவாமிநாதருடைய வாழ்கைச் சரிதைகள் அவரைக் கவர்ந்தன. இவர்களைப்போல நானும் ஏன் கிறிஸ்துவின் வீரனாகக் கூடாது எனச் சிந்திக்கலானார். பார்சலோனாவுக்கு மேற்கேயுள்ள மோன்சேரா என்னும் நகரிலுள்ள ஆசீர்வாதப்பர் துறவற மடத்திற்குச் சென்று, பாவ அறிக்கை செய்து, தனது உடைகளைக் கழற்றி ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, ஏழ்மை, கற்பு வாக்குறுதிகளை எடுத்தார். தனது ஆயுதங்களைக் களைந்து மரியன்னையின் காலடியில் வைத்து. தன்னைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார்.

பின்னர் இக்னேசியஸ் அங்கிருந்து மன்ரேசா என்னும் இடத்திற்குச் சென்று, நோன்பிருந்து, உணவுக்காகப் பிச்சையெடுத்து, செபத்தில் ஈடுபட்டு, நோயாளிகளைப் பராமரித்தார். மன்ரேசாவில் தனது ஆன்மீக அனுபவங்களை ஆன்மீகப் பயிற்சிகளாகத் தொகுத்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, இஸ்லாமியரை மனந்திருப்புவதற்காகப் புனித பூமிக்குச் சென்றார். அங்கு நீண்ட நாட்கள் தங்கியிருக்கத் தடை விதிக்கப்பட்டிருந்ததால், மீண்டும் ஐரோப்பாவிற்குத் திரும்பினார். இராணுவப் பயிற்சிக்காகத் தான் இடைநிறுத்திய கல்லூரிப் படிப்பை தொடர்ந்து அல்கலா பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது 30. உரோமன் கத்தோலிக்க சீர்திருத்தத்திற்கான நிலையமாக இயங்கிய அங்கு, உத்தியோகபூர்வமற்ற முறையில் சிறுவருக்கும், வளர்ந்தோருக்கும் போதிக்கத் தொடங்கினார். பின்னர்

சலமன்கா பல்கலைக் கழகத்தில் கற்பிக்கும்போது, போதிக்கும் பணியில் ஈடுபட்டார். கத்தோலிக்க திருச்சபை இவரது போதனைகளைப் பற்றி அவதானமாகவிருந்து, தப்பறைகளை அவர் போதிக்கக்கூடும் என அஞ்சி, அவரது போதிக்கும் பணியைத் தடைசெய்தது. எனவே பாரிஸ் பல்கலைக் கழகத்தில் இறையியல் கல்வியை மேற்கொண்டார். அக்காலத்தில் தன் சக மாணவர்கள் சிலரை தன்னுடன் இணைத்து, மன்ரேசாவில் தான் தயாரித்த "ஆன்மீகப் பயிற்சிகள்" முறையை வாழத்தொடங்கினர். இவருடன் இணைந்தவர்களுள் புனித பிரான்சீஸ்கு சவேரியாரும் ஒருவர.

பாரிஸ் பல்கலைக் கழகத்தில் தனது முதுமானிப் பட்டத்தைப் பெற்ற இக்னேசியஸ். தனது சகாக்களுடன் புனித பூமிக்குச் சென்று, ஆண்டவருடன் நெருக்கமாக இருக்கவும், அந்நாட்டு மக்களுக்கு இறைவார்த்தையைப் போதிக்கவும் விரும்பினார். ஆனால் புனித பூமியில் நிலவிய சமய-அரசியல் சூழ்நிலைகளால் அவர்களது விருப்பம் நிறைவேறவில்லை. எனவே நீண்ட கால கரைந்துரையாடலுக்குப் பின், திருத்தந்தையின் வழிநடத்துதலுக்கும், கட்டளைக்கும் தாம் கீழ்ப்பணியவேண்டுமென்றும், அவர் எங்கு அனுப்புகிறாரோ அங்கே செல்லவும், எதைச் செய்யப் பணிக்கிறாரோ அதைச் செய்யவும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என உய்த்துணர்ந்து, இக்னேசியசும், அவரது நண்பர்களும் 1534 இல் தம்மை அர்ப்பணித்தனர். லா ஸ்ரோரா எனும் இடத்தில இக்னேசியஸ் கண்ட காட்சியில் உரோமையில் இறைவன் தமக்குத் துணையாக இருப்பாரென உறுதி பெற்று, உரோமைக்குச் சென்று, திருத்தந்தையைச் சந்தித்தனர். அங்கு 1539 இல் திருத்தந்தையின் வாய்மொழி அனுமதி அவர்களுக்குக் கிடைத்தது. அடுத்த வருடம், 1540 இல் எழுத்து மூல அங்கீகாரத்தையும் பெற்றனர். அதைத் தொடர்ந்து 1540ம் ஆண்டிலேயே இயேசு சபை நிறுவப்பட்டது.

ஏழ்மை, கற்பு, பணிவு எனும் துறவற வார்த்தைப்பாடுகளை ஏற்றுத் தம்மை அர்ப்பணித்த அவர்கள், தம் ஆன்ம நலனுக்காகவும், திருமறையைப் பரப்புவதற்கு வழிகாட்டியாகவுள்ள திருத்தந்தையின் கட்டளைகளுக்குக் கீழ்படிவதாகவும் மேலதிக வாக்குறுதியையும் எடுத்தனர். தாம் நடத்தும் கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் தவிர, தாம் சபையாக எவ்வித சொத்துக்களையும் உரிமையாக்கிக்

கொளவதில்லை என்றும் தீர்மானித்தனர். சிலுவையில் அறையுண்ட இயேசுவை நெருங்கிப் பின்பற்றுவதும், இறைவனின் உன்னத மகிமைக்காக பணியாற்றுவதுமே இயேசு சபை உறுப்பினரது அர்ப்பணத்தின் நோக்கமாகும். திருத்தந்தைக்கு முழுமையாகக் கீழ்படிவதால் இந்நோக்கம் நிறைவேறும். ஏனெனில் திருத்தந்தை இயேசுக் கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருக்கிறார் என்பதும், அவர் திருச்சபையின் நலனில் முழுமையான அக்கறை கொண்டுள்ளார் என்பதும் இக்னேசியசின் நம்பிக்கையாக இருந்தது.

இச்சபையில் இணைந்தவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சி, இறையியல், மெய்யியல் என்பன முக்கியமாக்கப்பட்டன. பல்கலைக்-கழகப் பட்டதாரிகளான தொடக்க உறுப்பினர்களின் அடிப்படைக் கல்வித் தகைமை வலியுறுத்தப்பட்டன. அவர்கள் சிறுவருக்கும், கல்வி கல்லாதோருக்கும் திருமறை அறிவைப்போதித்தனர். சீர்திருத்த சபைகள் வளர்ச்சியடைந்த காலத்தில் கத்தோலிக்க திருச்சபையில் மறுமலர்ச்-சியை இயேசு சபை இளம் குருக்கள் முன்னெடுத்தனர். பீற்றர் கனிசியஸ் (1521-1597) எனும் ஒல்லாந்தைச் சேர்ந்த இயேசு சபைக் குரு கல்லூரிகளை நிறுவி, கத்தோலிக்க திருமறையை வளர்த்தார். இவரது மறைக் கல்வி நூல் திரிதேந்தீன் பொதுச் சங்கத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றது. றொபேர்ட் பெலார்மின் (1542-1621) இயேசு சபைக் கல்லூரியில் கற்று, இயேசு சபைக் குருவாகி, கத்தோலிக்க திருச்சபையின் மறைக் கோட்பாடுகள் பற்றி பல நூல்களை எழுதியுள்ளார். இயேசு சபைக் குருக்கள் மறைத் தூதுப் பயணங்களை மேற்கொண்டு, பல நாடுகளில் கத்தோலிக்க திருச்சபையைப் பரப்பினர். சீர்திருத்த மறைக் கோட்பாடுகளிலிருந்து பெகேமியா, மொராவியா, போலந்து ஆகிய நாடுகளை விடுவித்தவர்கள் இயேசு சபைக் குருக்களாவர். புனித பிரான்சீஸ்கு சவேரியார் இந்தியா, தூர கிழக்கு நாடுகளுக்குச் சென்று, நற்செய்தியை அறிவித்தார்.

**வின்செனசியன் சபை**

வின்செனசியன் சபையானது மறைமாவட்டக் குருக்களுக்காக புனித வின்சென்ற் தே பவுலினால் 1626ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் ஏழ்மை, கற்பு, கீழ்படிதல் என்ற துறவற வார்த்தைப்பாடுகளை அளித்தார்கள். ஆனால் அவர்கள் துறவிகள் அல்லர். மறைமாவட்டக்

குருக்களே. 17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மறைமாவட்டக் குருக்-களின் வாழ்வில் சீர்குலைவுகளும், பின்னடைவுகளும் காணப்பட்டன. இஸ்பெயின், இத்தாலி நாடுகளை விட பிரான்ஸ் நாட்டில் கத்தோலிக்க மறுமலர்ச்சி மந்த கதியில் நடைபெற்றது. திரிதேந்தின் பொதுச் சங்கத்தின் பரிந்துரைகள் கூட 17ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை எவ்வித மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை. மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கு இரு வழிகள் உணரப்பட்டன. ஒன்று துறவற சபைகளின் அமைப்பைப் பின்பற்றி, மாதிரிக் குருக்களை உருவாக்குதல். மற்றது திரிதேந்தின் சங்கத்தின் பரிந்துரைகளைப் பின்பற்றி, குருக்களை உருவாக்கும் பொறுப்பை ஒரு துறவற சபையிடம் ஒப்படைத்தல் என்பனவாகும்.

அதற்கமைய பியேர் டி பெருளே என்ற குரு 1611 இல் ஒரு மாதிரிக் குருக்களின் அமைப்பை (Oratories) ஆரம்பித்தார். ஒரு சிரேஷ்ட அதிபரின் தலைமையில் ஒரு மடத்திலிருந்து இன்னொரு மடத்துக்கு மாற்றப்படக்கூடிய முறையில் இவ் அமைப்பு அமைந்தது. மேய்ப்புப் பணியில் ஈடுபட்ட இம் மறைமாவட்டக் குருக்கள் மற்றக் குருக்களுக்கு முன்மாதிரிகையாக வாழ்ந்தார்கள். கிறிஸ்துவின் மறை நிகழ்ச்சிகளைத் தியானிக்கும் முறையைக் கற்றுக்கொடுத்து, கிறிஸ்துவின் மனிதத்துவத்தின் தன்மையை ஆன்மீக வாழ்வில் இணைத்துக்கொள்ள உதவினர். கிறிஸ்துவின் மனித அவதாரத்தையும், நற்கருணையையும் மையப்படுத்திய வாழ்விற்கு சுயமறுப்பினதும். செபத்தினதும் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். ஆனால் நகரங்களில் பணியாற்றிய குருக்கள் பின்தங்கிய கிராமங்களில் பணிசெய்ய விரும்பவில்லை. ஏனெனில் கிராமங்களில் வசதிகளும், வருமானமும் குறைவாக இருந்தன.

1626 இல் புனித வின்சென்ற் தே பவுல் ஒரு மறைமாவட்ட குருக்களின் குழுவை (Congregation of the Priests of the Missions) ஆரம்பித்தார். தென் பிரான்ஸ் பகுதியில் உள்ள ஏழைக் கிராமங்களில் பணியாற்றுவதே இக் குழுவின் நோக்கமாக இருந்தது. புனித வின்சென்ற் பாரிசில் இருந்தபொழுது, குடியானவர்களின் கிறிஸ்தவ மதக் கொள்கைகள் பற்றிய அறியாமையையும், தேவ பக்தியற்ற நிலையையும் அவதானித்தார். எனவே இரு இயேசு சபைக் குருக்களுடன் இணைந்து,

அருகாமையிலிருந்த கிராமங்களுக்கு வீடுவீடாகச் சென்று, குடும்பங்களைத் தரிசித்து. மறைக்கல்வியைப் போதிக்கத் தொடங்கினார். விரைவில வேறு பல குருக்களும் அவர்களுக்கு உதவ முன் வந்தனர். எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர், 1625 இல் அவர்களை ஒன்று சேர்த்து, ஒரு குழுவாக அமைத்தார். மேலும் மறைபோதக ஆர்வமுள்ள வேறு குருக்களையும் சேர்த்து, தொடர்ந்து ஏனைய கிராமங்களிலும் மறைபோதகம் செய்து வந்தார். அக் குழுவின் சிறந்த பணியைக் கண்ட பாரிஸ் நகரப் பேராயர் அவர்களின் பணியைப் பாராட்டினார். அதமட்டுமல்ல. அவர்கள் தங்கியிருந்து தங்கள் பணியை மேற்கொள்வதற்கு ஒரு பழைய பள்ளிக்கூடக் கட்டிடத்தையும் அவர்களுக்குக் கொடுத்து உதவினார். வின்சென்ற அந்தக் கட்டிடத்தை 6 பங்குனி 1625 இல் பொறுப்பேற்றார். அடுத்த ஆண்டு, 4 புரட்டதசி 1626 இல் அந்தக் குழு "மறைபோதக குருக்களின் சபை" என்ற பெயருடன் தாபிக்கப்பட்டது. அச்சபையினர் வின்செந்தியரெனவும் அழைக்கப்பட்டனர். பாரிஸ் நகரப் பேராயர் அந்தச் சபைக்கு அங்கீகாரம் வழங்கினார். பிரான்ஸ் நாட்டு 13வது லூயிஸ் அரசரும் பிரான்ஸ் நாட்டில் அவர்கள் பணிபுரிய அங்கீகாரம் வழங்கினார். அவர்கள் தாங்கள் ஒரு குழுவாக வாழ்ந்து, தங்களை ஏழைக் கிராமவாசிகளின் ஈடேற்றத்திற்காக அர்ப்பணித்து வாழப் போவதாக அறிக்கையிட்டனர். அவர்கள் ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிவு, நிலைத்து நிற்றல் என்ற வார்த்தைப்பாடுகளை அளித்தனர். அவர்கள் துறவற வார்த்தைப்-பாடுகளை அளித்தாலும், அவர்கள் ஒரு துறவற சபை அல்ல. மறைமாவட்டக் குருக்களின் குழுவாகவே இருந்தனர். அவர்களுக்கு நவசந்நியாசம் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக இரண்டு ஆண்டுகள் ஆயத்த காலம் இருந்தது. இன்னும் பல குருக்களும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். பிறநாடுகளுக்கும் சென்ற, தம் மறைபோதக பணியில் ஈடுபட்டனர்.

19ம் நூற்றாண்டில் "மறைபோதக குருக்களின் சபை" முக்கியமான ஒரு சபையாக வளர்ந்தது. கத்தோலிக்க திருமறையைப் போதித்து மக்களைச் சீர்திருத்துவதும், மறைக் கோட்பாடுகளுக்குப் பதில் அளிப்பதும் அவர்களது பணியாகும்.

**கார்மேல் சபை**

கார்மேல் சபையின் வரலாறு 12ம் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் தொடங்குகிறது. பாலஸ்தீனதிலுள்ள கார்மேல் மலையில் பல தனி வாசம் வாழ்ந்த துறவிகள் (Hermits) இருந்தனர். எருசலேம் பிதாப்பிதா அவர்களுக்கு ஒரு நெறி முறையை வழங்கினார். அதில் 16 ஒழுங்குகள் இருந்தன. அவர்கள் ஆழ்தியானம் செய்பவர்கள். அவர்கள் கடும் தவம் புரிபவர்கள். மட அதிபருக்கு அனைத்திலும் கீழ்படிவர். தனிக் அறையில் வாழ்வர். எனினும் திருப் புகழ்மாலை செபிப்பதற்கு ஒன்று கூடுவர். மௌனம், செபச் சூழலில் வாழ்வர். ஏழ்மையில் வாழ்ந்து, தம் உணவுக்காக வேலை செய்வர். தங்கள் அன்றாட உணவில் மாமிசத்தைத் தவிர்ப்பர். சாரசேனர் பாலஸ்தீனாவைத் தாக்கிய பொழுது, கார்மேல் மலையில் வாழ்ந்த தறவிகள் தெற்கு. மேற்கு ஐரோப்பாவிற்குச் சிதறுண்டு ஓடினர். அவர்களில் ஒருவர் இங்கிலாந்தில் கென்ற் நகரில் பிறந்த சைமன் ஸ்டொக் என்பவர். ஐரோப்பாவில் பல ஆச்சிரமங்களை அமைத்து, வாழ்ந்த துறவிகள் 1247 இல் கென்றுக்கு வந்து, சைமன் ஸ்டொக்கை தமது தலைமை அிதிபராகத் தெரிவு செய்தனர். பாலஸ்தினாவில் வாழ்ந்த தொடக்க கால கடும் தவ வாழ்க்கையை ஐரோப்பாவில் வாழ்வது கடினமானதாக இருந்தது. எனவே சைமன் ஸ்டொக் துறவியரின் கடும் தவ முயற்சிகளைக் குறைத்தார். காலில் எளிமையான மிதியடி அணிதல், மாமிசம் உண்ணுதல் போன்ற மாற்றங்கள் செய்யப்பட்டன. எனினும் நோன்பு இருத்தல், ஒன்றுகூடித் திருப் புகழ்மாலை ஓதுதல் போன்றவை தொடர்ந்து இருந்தன.

ஆரம்பத்தில் ஆண்களுக்கென்றே தாபிக்கப்பட்ட கார்மேல் சபை, பெண்களின் வேண்டுகோளுக்கு அமைய, 1452 இல் பெண்களுக்கென்று கார்மேல் இரண்டாம் சபை அமைக்கப்பட்டது. தொடர்ந்து இல்லறத்த-வர்களும் அச் சபையின் செபம். பணிகளில் பஙகெடுக்க விரும்பியதால், 1476 இல இல்லறத்தவருக்கென்று கார்மேல் மூன்றாம் சபையும் அமைக்கப்பட்டது. சைமன் கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்டு, பாரிஸ் முதலிய பல்கலைக் கழக நகரங்களில் தமது சபையின் மடங்களை நிறுவினார். அவ்வாறே அயர்லாந்திலும், ஸ்கொட்லாந்திலும் மடங்கள் நிறுவப்பட்டன. இவர்களும் படிப்படியாக பிரான்சிஸ்கன், டொமினிக்கன் துறவற சபைகளைப்போல இரவலர் துறவற சபையாக மாறினர். கார்மேல்

சபைத் துறவிகள் இப் பல்கலைக் கழகங்களில் விரிவுரையாற்றினர். மறைப் பணிகளில் ஈடுபட்டனர். அந்நாட்களில் திருச்சபையில் உருவாகிய ஆன்மீகச் சீரகுலைவு, கார்மேல் சபையினரையும் பாதித்தது. எனவே அவர்களது ஆன்மீக வாழ்விலும் தளர்ச்சி ஏற்பட்டது. அவர்களது தொடக்க கால தவ வாழ்க்கையையும், அப்போஸ்தொலிக்க பணியையும் ஒருங்கிணைப்பதில் சிரமங்கள் ஏற்பட்டன. கார்மேல் துறவற சபையிலும் சீர்திருத்தம் தேவைப்பட்டது.

கார்மேல் சபையில் ஆங்காங்கே சிற்சில சிறிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், அதன் முழுமையான சீர்திருத்தம் புனித அவிலா திரேசாவினால் கொண்டுவரப்பட்டது. கார்மேல் சபைத் துறவியான அவிலா திரேசாள், தன்னுடைய 25 ஆண்டுகள் துறவற வாழ்க்கை அனுபவத்துடன், பெண்கள் கார்மேல் சபையில் இச் சீர்திருத்தத்தை ஆரம்பித்தார். அவருக்கு உறுதுணையாக ஆண்கள் கார்மேல் சபையைச் சார்ந்த புனித சிலுவை யோவான் இருந்தார். அவர்கள் இருவரும், பல எதிர்ப்புகள் மத்தியில், கார்மேல் பெண்கள் சபையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தினர். இயல்பாகவே ஆழ்தியான நிலையில் ஆர்வம் உள்ள அவர், தமது உள்ளத்தில் இறைவனின் குரலைக் கேட்கத் தொடங்கினார். இறைவன் அவருக்குக் பல காட்சிகளையும் வழங்கினார். "நிறை வாழ்வின் வழி" (The Way of Perfection), "உள்ளக மாளிகை" (Interior Castle) என்னும் ஆன்மீக நூல்களை எழுதினார். கார்மேல் சபையின் தொடக்ககால தப வாழ்வும், ஆழ்தியான நிலை வாழ்வையும் மீண்டும் கொண்டுவருவதற்கு அவர் எடுத்த முயற்சிகள் பலனளித்தன.

நன்கொடையாளர்களின் உதவியுடன் 1561 இல ஒரு புது மடம் கட்டி, அங்கு தன் சீர்திருத்தப் பணியைத் தொடங்கினார். புனித சூசையப்பர் மடம் என அதற்குப் பெயரிட்டார். திருத்தந்தையின் அங்கீகாரமும் கிடைத்தது. அம் மடத்தில் முழு நேர மௌனம் காக்கப்பட்டது. கடுமையான ஏழ்மை இருந்தது. வருமானத்திற்கென்று நிலையான வழி இருக்கவில்லை. கன்னியரின் ஆடை ஒருவகை முரட்டு கம்பளியாலானது. காலில் சப்பாத்து அணிவதில்லை. ஆனால் மிதியடி அணிந்தார்கள். சப்பாத்து அணியாதபடியால், அவர்கள் காலணி துறந்த கார்மேல் சபையினர் (Discalced Carmelites) என அழைக்கப்-

பட்டார்கள். தினமும் மரக்கறிச் சாப்பாடு சாப்பிட்டார்கள். இத்தகைய கடுமையான வாழ்க்கையால் துறவிகள் ஆன்மீக வளர்ச்சியைக் கண்டார்கள். 1569 இல் புனித சூசையப்பர் துறவற மடத்தைப பார்வையிட வந்த கார்மேல் சபை முதல்வர், அங்கு நிகழ்ந்த சீர்திருத்தங்களைக் கண்டு, மகிழ்ச்சி அடைந்தார். மேலும் பல அத்தகைய மடங்களைத் தொடங்க அவிலா திரேசாளுக்கு அனுமதி வழங்கினார்.

புனித அவிலா திரேசாளுக்கு உதவியாகவிருந்த புனித சிலுவை யோவானும் அவரைப் பின்பற்றி, அவரது உதவியுடன், கார்மேல் ஆண்கள் சபைத் துறவிகளுக்கான சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார். அவரும் பல ஆன்மீக நூல்களை எழுதினார். அவை, "கார்மேல் சபை ஏற்றம்" (The Ascent of Mount Carmel), "இருண்ட இரவு" (The Dark Night), "ஆன்மீகப் பாடல்" (The Spiritual Canticle), "அன்பின் அணையாச் சுவாலை" (The Living Flame of Love) என்பனவாம். இவர்கள் இருவரதும் ஆன்மீக வாழ்வின் நூல்கள் பலரது வாழ்வில் மிகவும் உதவியாக இருந்தன. செப வாழ்வு, ஆழ்தியான நிலைச் செபம் (Conyemplative Prayer) போன்றவற்றை அனுபவ-மாக்கும் முறைகள் பற்றிய ஆக்கங்கள் மிகவும் பயனுள்ளவை. ஆன்மீக வாழ்வில் இறையொன்றிப்பை அனுபவிப்பதற்கு தாழ்ச்சி இன்றிய-மையாதது என்னும் அறிவுரையும் பலரால் ஏற்கப்படும் உண்மையாகும். இவற்றிற்கு உதாரணமாக குழந்தை இயேசுவின் புனித திரேசாள், புனித ஈடித் ஸ்ரெயன் ஆகிய கார்மேல் சபைத் துறவிகள் திகழ்கின்றனர்.

**கப்புச்சின் சபை**

16ம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய துறவறக் குழுக்களில் முக்கியமானது கப்புச்சின் துறவற சபையாகும். இது பிரான்சிஸ்கன் துறவற சபையிலிருந்து தோன்றியது. 13ம் நூற்றாண்டில் புனித பிரான்சிஸ் அசீசி ஆரம்பித்த பிரான்சிஸ்கன் துறவற வாழ்க்கை முறையும், சட்ட ஒழுங்குகளும் காலப்போக்கில தளர்ந்து செல்ல ஆரம்பித்தன. அன்றைய பிரான்சிஸ்கன் சபையினருடைய வாழ்க்கை முறையானது பிரான்சிசுடைய காலத்தில இருந்த வாழ்க்கை முறையிலிருந்து மாறுபட்டதாகக் காணப்பட்டது. எனவே 1520 இல்

புனித பிரான்சீஸ்கு அசீசியின் சட்ட ஒழுங்குகளை மிக நுணுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், தொடக்க கால நற்செய்தி அறிவுரை வாழ்க்கை முறையைக் மீண்டும் வலியுறுத்தவும், தனிமை நிலை, தபம் போன்றவற்றை மீண்டும் நிலைநாட்டவும் பிரான்சிஸ்கன் சபை உறுப்பினர்கள் சிலர் தீர்மானித்தனர். இவர்களுக்குத் தலைமை தாங்கியவர் மத்தேயோ செரபீனி டீ பாஷ்ஸி என்பராவர். இவரது சீர்திருத்தப் பணிகளை ஆரம்பிப்பதற்குரிய வாய்மொழி அனுமதியை திருத்தந்தை 7வது கிளமென்ற் வழங்கினார். திருத்தந்தை 3வது பவுல் 1536 இல் கப்புச்சின் சபையை அதிகாரபூர்வமாக அங்கீகரித்தார்.

பிரான்சிஸ்கன் துறவற சபையின் சீர்திருத்தத்தின் ஆரம்பம், ஏனைய சபைகளைப் போல, சுமூகமானதொன்றாக இருக்கவில்லை. பிரான்சிஸ்கன் சபைக்கு உள்ளேயிருந்தே பிரச்சினைகள் கிளம்பின. அப்போதைய தலைவர்கள் இந்த முயற்சியைத் தடைசெய்ய முயற்சித்தனர். அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்தனர். எனவே மத்தேயோவும், அவரது சகாக்களும் ஒடி, ஒழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்களுக்கு கமல்டோலீஸ் துறவிகள் தஞ்சம் அளித்தனர். பின்னர் அதற்கு நன்றியாக மத்தேயோவும், அவருடைய சகாக்களும் அவர்களைப்போல் கப்புச்சியோ என அழைக்கப்படும் தலை மூடியை அணிந்து, தாடியையும் வளர்த்துக் கொண்டனர். அந்தத் தலை மூடியிலிருந்துதான் "கப்புச்சின்" என்ற பெயர் இச்சபைக்குக் கொடுக்கப்பட்டது. பின்னர் கப்புச்சின் சபையின் ஆரம்ப முதல்வர்கள் சபையை விட்டு விலகினர். அவர்களுள் ஒருவரான பெர்னார்டினோ டி ஒச்சினோ கல்வின் மதத்தைத் தழுவினார். எனினும் அந்த இழப்புகளைப் பொருட்படுத்தாது, இப் புதிய சபை தமது வளர்ச்சியை மெதுவாக முன்னெடுத்தது. 1528 இல் திருத்தந்தை 7வது கிளெமென்ற் அவர்கள் எங்கும் சென்று, ஏழைகளுக்கு மறைபோதகம் செய்ய அனுமதி அளித்தார். எனவே அவர்கள் தங்கள் போதிக்கும் பணியையும், மடவாச வாழ்க்கையையும் இணைத்து வாழ்ந்தனர். நோயாளரைப் பராமரிப்பதினாலும், கடின உழைப்பினாலும் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தனர். புரொட்டஸ்தாந்து சீர்திருத்தவாதிகளுககு எதிராகப் போதித்தனர். எளிமையான வாழ்வு வாழ்ந்தனர். சாதாரண மக்கள் மட்டத்தில் நின்று, அவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் மறையுரை ஆற்றினர். விரைவில் வேறு

பலரும் அவர்களுடன் இணைந்தனர். அவர்கள் நான்கு மடங்களில் வாழ்ந்தனர்.

1529 இல் கப்புச்சின் சபையின் முதல் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் சபையின் சட்ட ஒழுங்குகள பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. ஏகாந்த வாழ்வு கைவிடப்பட்டது. ஆனால் வாழ்க்கையானது மிகவும் கடுமையானதாகவும், எளிமையானதாகவும், வறுமையானதாகவும் இருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. மடங்களோ, சபையோ எதையும் உரிமையாகக் கொள்ளலாகாது. அனைத்துத் தேவைகளும் பிச்சையெடுப்பதின் வழியாகவே பெறப்படும். ஒவ்வொரு மடமும் எட்டுப் பேரைக் கொண்ட சிறிய குழுக்களாக அமையும். திருப் புகழ்மாலை ஓதுவதும், இரண்டு மணித்தியால தனிச் செபமும் இடம்பெறும். வெளிப்புலப் பணியாக ஏழைகள் மத்தியில் மறைபோதகம் செய்வதும், ஆன்மீக பணிகளில் ஈடுபடுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அத்துடன் அவர்கள் பல மறைத் தூதுப் பயணங்களையும் மேற்கொண்டனர். அவர்கள் சென்ற இடமெல்லாம் ஏழைகளுக்கு உதவி செய்து, நோயுற்றோரைப் பராமரித்து, சாதாரண மக்கள் மத்தியில் எளிமையாக வாழ்ந்ததால் மக்கள் அவர்களைப் பெரிதும் விரும்பினர். 1538 இல் பெண்களுக்கென்று ஒரு கப்புச்சின் மடமும் ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தாபித்தவர் சகோதரி மரியா லொறென்சோ லோங்கோ என்பவராவர். 16ம் நூற்றாண்டின் முடிவில் கப்புச்சின் துறவிகள் ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் பரவி, அளப்பரிய பணிபுரிந்தனர்.

## 7.2.6. நவீன காலத்தில் திருச்சபையில் நிகழ்ந்த விசேட சம்பவங்களும், மாற்றங்களும்

(1750-1960) 1648-1780

வெஸ்ற்பாலியா ஒப்பந்தம் (1648) ஐரோப்பாவில் இடம்பெற்ற 50 ஆண்டு மத யுத்தத்தை முடிவுக்குக் கொணர்ந்தது. அதன் வழியாக கத்தோலிக்கருக்கும், லூத்தரன்களுக்கும், கல்வினிஸ்றகளுக்கும் ஜெர்மனியில் சமநிலையில் வாழும் சூழல் ஏற்படுத்தப்பட்டது. அவர்களுக்குரிய நாடுகள், இடங்கள் குறிக்கப்பட்டன. அவர்கள் தங்கள்

விருப்பம்போல தங்கள் வழிபாடுகளை நடத்தலாம். புரொட்டஸ்தாந்-தருக்கு திருச்சபையிடமிருந்து அபகரித்த சொத்துக்களையும், உடைமைகளையும் வைத்திருக்க அனுமதி அளித்தது. அரசர் எம் மதமோ, குடிகளும் அம் மதமே என ஏற்றுக் கொள்ளப்பட்டது. அக்காலத்தில் தோன்றிய ஜான்செனிசம், அரசுரிமைக் கொள்கை, கல்லிக்க கொள்கை, பகுத்தறிவுவாதச் சிந்தனைகள் போன்ற உலகி-யல், மெய்யியல் கொள்கைகள், நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஐரோப்பிய மக்களின் சிந்தனைகளிலும், வாழ்க்கையிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி, க்த்தோலிக்க மறையையும் பாதிக்கத் தொடங்கின.

**பகுத்தறிவு வாதமும் சிந்தனை எழுச்சியும்.**

**ஜான்செனிச பேதகம்** லூவேயின் பல்கலைக் கழகத் தலைவராயிருந்த மிக்கேல் பேயுஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் எப்ரஸ் ஆயரான கொர்ணேலியுஸ் ஜான்சென் எனபவரால் தொடரப்பட்டது. இப் பேதகம் கல்வினின் முன்-விதிக் கொள்கையை முன்னெடுத்துச் சென்றது. சென்ம பாவத்தால் மனிதன் தன் சுயாதீனத்தை இழந்து விட்டான். நன்மை செய்யும் இயல்பை இழந்து, தீமை செய்யும் இயல்பை பெற்றிருக்கிறான். எனவே அவனால் நன்மையானது எதுவும் செய்ய முடியாது. மீட்பு இறைவனின் அருட்கொடை. அதை அவர் எல்லாருக்கும் கொடுப்பதில்லை. தான் முன் தீர்மானித்திருப்பவர்களுக்கு மட்டுமே கொடுக்கிறார். இயேசு எல்லா மனிதருக்காகவும் இறக்கவில்லை. மோட்சம் சேர அவரால் ஏற்கனவே தெரிந்து கொண்டவர்களுக்காகவே மரித்தாரெனப் படிப்பித்தது. அடிக்கடி நன்மை வாங்குவதையும் தடை செய்தது. சில சிஸ்டெர்சியன் சபைக் கன்னியரும் இதை ஆதரித்தனர். ஆனால் இயேசு சபையினர் அதை வன்மையாகக் கண்டித்தனர். இப்பேதகம் திருத்தந்தை 8ம் ஊர்பனாலும், 10ம் இன்னொசென்றினாலும் (1644-1655) கண்டனம் செய்யப்பட்டது.

**அரசுரிமைக் கொள்கையின்படி** ஒவ்வொரு அரசரும் தன் நாட்டுத் திருச்சபைக்கு தானே திருத்தந்தை என்ற கருத்து உருவாகி, ஐரோப்பிய நாடுகளெங்கும் வளர்ந்தது. பிரான்சின் 14வது லூயிஸ் மன்னர் பிரான்ஸ் நாட்டுத் திருச்சபையை திருத்தந்தையிடமிருந்து, தன் அதிகாரத்தின் கீழ் கொணர முயற்சித்தார். அது கல்லிக்கன் உரிமை

என்றழைக்கப்பட்டது. ஆயரில்லாத மாவட்டங்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து, அம் மாவட்டங்களுக்கு தான் நியமிப்பவர்களையே திருத்தந்தை அங்கீகரிக்க வேண்டுமென்று வாதாடினார். அதை எதிர்த்த திருத்தந்தைக்கு எதிராக 1681 பிரான்சிய குருக்களைக் கூட்டி, கல்லிக்கன் தீர்மானங்களை நிறைவேற்றினார். அதன்படி திருத்தந்தை அரசர்களின் உலக அதிகாரத்தில் தலையிடக் கூடாது. ஆன்மீக காரியங்களில் பொதுச்சங்கம் திருத்தந்தையை விடக் கூடிய அதிகாரமுள்ளது. விசுவாச சத்தியங்களில் திருத்தந்தை தவறாவரம் உடையவரல்லர். அவரின் தீர்மானங்களுக்குத் திருச்சபை, அதாவது திருச்சங்கம் ஒப்புதல அளிக்கவேண்டும். இத் தீர்மானங்கள் பாப்பு 11ம் இன்னொசென்றினால் செல்லுபடியற்றவையெனக் கண்டனம் செய்யப்பட்டன.

**பகுத்தறிவுவாதக் கொள்கையினர்** மனித அறிவை மிகைப்படுத்தி, மனித பகுத்தறிவால் கண்டறியக் கூடியவையை மட்டுமே உண்மையாக ஏற்றுக் கொண்டனர். ஜோண் லொக்ஸ் என்பவர் பரம் இரகசியங்களை, வெளிப்படுத்தப்பட்ட திருமறையை, அதன் கோட்பாடுகளை ஏற்க மறுத்தார். **தேயிஸ்த பேதகர்** எல்லா மதங்களுக்கும் பொதுவான உண்மைகளையே ஏற்றனர். அதை "இயற்கை மதம்" என்றழைத்தனர். செர்பதி பிரபு எர்பர்ட்டின் கருத்துப்படி, வன்மையுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார். அவருக்கு மதிப்பளிப்பது மனிதனின் கடமை. நல்வாழ்வின் மூலம் அவரை மகிமைப்படுத்த வேண்டும். கடவுள் நீதியுள்ளவர். எனவே நல்லவர் பலன் பெறுவர். தீயவர் தண்டிக்கப்படுவர். அவர்கள் சிந்தனையின் அடிப்படையிலான ஒரு தனிக் கடவுளை ஏற்றனரேயன்றி, வெளிப்படுத்தப்பட்ட சர்வ வல்லப கடவுளை ஏற்கவில்லை. இயேசு உலக மீட்பர் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. **உலோகாயுதக் கொள்கையாளரான** தோமஸ் ஹொப்ஸ் அனைத்தும் இறைவனின் திட்டப்படி நடப்பதை மறுத்து, அவை இயற்கையின்படி நடைபெறுகின்றதெனவும், மனிதன் ஒரு இயந்திரம், அரசும் ஒரு பெரிய இயந்திரம் மட்டுமே என்றார். 1704 இல் ஜாண் லொக், டேவிட் கியூம் என்பவர்கள் தனிப்பட்ட மனிதன் எல்லாவித வெளி அதிகாரத்திலிருந்தும், திருச்சபையின் அதிகாரத்திலிருந்தும் விடுபட்டு, சிந்தனை செய்து, ஆய்வு செய்தே எதையும் நம்பவேண்டுமென்றனர். 1717 இல் லண்டனில் **பிரிமேசன்** என்ற குழுவினர்

மதச் சுதந்திரம் அனைவருக்கும் உள்ளதெனக் கூறி, தெய்வ பக்தி, ஆன்மா, மனச்சான்று என்பனவற்றிற்கு திருச்சபையின் படிப்பினைகளுக்கு எதிரான கருத்துக்களை முன் வைத்தனர். இப் பேதகம் 1738 இல் பாப்பு 12ம் சாந்தப்பரினால் கண்டனம் செய்யப்பட்டது.

பிரான்சில் வால்டையர், ஜீன் ரூசோ போன்ற **அறிவியல் சிந்தனையாளர்கள்** திருச்சபைக்கும், கத்தோலிக்க மறை உண்மைகளுக்கும் எதிராகச் செயல்பட்டனர். வால்டையர் கிறிஸ்தவ மதத்தை அழித்து, அதற்குப் பதிலாக் சகல ஆசாபாசங்களையும், சிற்றின்பங்களையும் ஆதரிக்கும் ஒரு "சுபாவ மதத்தை" ஏற்படுத்த முயற்சி எடுத்தார். ரூசோ "இயற்கை மத" பாட விளக்கத்தை எழுதினார். அதன்படி ஆட்சி செலுத்தும் அதிகாரம் கடவுளிடமிருந்து வரவில்லை. அது மனிதரிடமிருந்தே வந்தது. எனவே தாங்கள் அளித்ததை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். மனிதன் இயல்பிலேயே நல்லவன். சென்ப பாவம், மீட்பு எல்லாம் கட்டுக்கதைகள் என்றார். இக் கருத்துக்களெல்லாம் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை மீண்டும் குழப்பி, தளர்ச்சியடையச் செய்தன. அவர்களின் வாழ்க்கையையும், சிந்தனைகளையும் பெரிதும் பாதித்தன. இவைகளுக்கு எதிராக வாதிட்டு, உண்மைய நிலை நாட்டிய இயேசு சபை 1773 இல் கலைக்கப்பட்டது.

விஞ்ஞானத் துறையில், நிக்கலஸ் கொப்பர்நிக்கஸ் என்பவரின் சூரியன் பூமியை அல்ல, மாறாக பூமியே சூரியனைச் சுற்றுகிறதென்ற கண்டுபிடிப்பு உலகை மட்டுமல்ல, திருச்சபையின் மறைபோதனைகளையும் பாதித்தது. பௌதீகவியல், இரசாயனவியல் பற்றிய சேர் ஐசக் நியூட்டனின் கண்டுபிடிப்புகள் விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியை ஏற்படுத்தின. இவையெல்லாம் பிரான்சுப் புரட்சி ஏற்படுவதற்கு காரணமாயிருந்தன.

**1780-1815**

மேற்கூறப்பட்ட உலகியல் கொள்கைகளும், பகுத்தறிவாதச் சிந்தனைகளும் விரைவில் பிரான்சிய புரட்சிக்கு இட்டு சென்றன.

**பிரான்சிய புரட்சி**

பிரான்சில் 1788 இல் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

வேளாண்மை தவறியதால் கடும் பஞ்சம் ஏற்பட்டு, மக்கள் ஆயிரக்கணக்கில் உணவின்றி மடிந்தனர். சுகபோகத்தை அனுபவித்துவ்த மன்னரும், மேல் மட்ட பிரபுக்களும், ஆயர்களும், குருக்களும் மக்களின் துயர்போக்க முன்வரவில்லை. எனவே வாழ்க்கைப் பழுவைத் தாங்கமுடியாத ஏழைக் குடியானவர்களும், தொழிலாளர்களும் நாட்டின் நீதி முறை மாற்றப்படவேண்டுமென புரட்சி செய்தனர். முடியரசு ஆட்சி முறை குடியரசு ஆட்சி முறையாக மாற்றப்பட வேண்டுமென குரலெழுப்பினர். அதை எதிர்த்த உல்லாச வாழ்வு வாழ்ந்து வந்த மன்னர், பிரபுக்கள், ஆயர்கள், குருக்களுக்கு எதிராக எழுந்தனர். 1792 இல் அது பயங்கர பிரான்சிய புரட்சியாக வெடித்தது. சில அடிமட்டக் குருக்களும், பிரபுக்களும் குடியானவர்கள், தொழிலாளர்களுடன் இணைந்து கொண்டனர்.

நாடு மக்களின் விருப்பத்திற்கு அமையவே ஆளப்பட வேண்டுமென்ற ரூஸ்ஸோவின் கொள்கை அதற்கு உரமூட்டியது. குடியரசு மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆயிரக் கணக்கான பிரபுக்கள், குருக்கள், துறவியர் கொலை செய்யப்பட்டனர். நூற்றுக் கணக்கான பிரபுக்கள், ஆயர்கள், குருக்களைக் கொலை செய்ய கில்லெட்டின் என்ற இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. பெரும் பிரபுக்களும், நில உரிமையாளர்களும் நாட்டை விட்டு ஓடினர். ஏனையவர்கள் தங்கள் உரிமைகளைக் கைவிட்டனர். நிலைமையைச் சீர்படுத்த, பல ஆண்டுகளாகக் கூடப்படாமலிருந்த குருக்கள், பிரபுக்கள், குடிமக்கள் அடங்கிய பிரான்ஸ் நாட்டுப் பாராளுமன்றம், (States General) 1789 இல் வெர்செயில்சில் கூடப்பட்டது. அதில் புதிய அரசியல் சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. தேசிய சட்டசபையின் மேலாண்மையின் கீழ் திருச்சபை கொணரப்பட்டது. பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க பங்குனி 1789 இல் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி திருச்சபையின் சொத்துக்கள் அனைத்தும் அரசுடைமை ஆக்கப்பட்டன. கன்னியர் மடங்கள் அனைத்தும் மூடப்பட்டு, சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன. ஆயர்கள், குருக்கள் அரச ஊழியர்களாக மாற்றப்பட்டு, அவர்களுக்குத் தாபரிப்புப் பணம் வழங்கப்பட்டது. திருச்சபை அரசின் கீழ் கொண்டுவரப்படுவதை எதிர்த்த 16வது லூயிஸ் மன்னர் 1792 இல் கொல்லலப்பட்டார். அவருக்குப் பதிலாக தேயிஸ்த பேதகரான ரூபிஸ்பியர் என்பவரே சர்வதிகாரியாய் விளங்கினார்.

பிரான்சிய புரட்சியின் பயனாக கல்லிக்கன் கோட்பாட்டினருக்கு பெரும் வெற்றி கிட்டியது. 156 மறை மாவட்டங்கள் கலைக்கப்பட்டு, மக்களுக்கு தங்கள் குருக்களை, ஆயர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. அதை ஏற்றுக் கொள்ளாத ஆயர்களும், குருக்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டனர். அல்லது கொலை செய்யப்பட்டனர் அல்லது நாடு கடத்தப்பட்டனர். திருத்தந்தை 6ம் பத்திநாதர் அச் சட்டத்தை எதிர்த்தார். இவ்வாறாக பிரான்சில் தொடங்கிய புரட்சி முழு ஐரோப்பாவிலும் திருச்சபையில் பேரழிவை ஏற்படுத்தியது. திருச்சபையே அதனால் மிகவும் பாதிக்கப்பட்டது. அதனுடைய சொத்துக்கள், உடைமைகள், கல்வி, சமூகப்பணித் தாபனங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன. திருச்சபையை அழிப்பதற்கென பல முறைகள் கையாளப்பட்டன. வார நாட்கள் ஏழிலிருந்து பத்தாக மாற்றப்பட்டன. தொழில் விழா, அறிவு விழா, நற்செயல் விழாவெனப் புதிய விழாக்கள் புகுத்தப்பட்டு, கிறிஸ்தவ திருநாட்களும், ஞாயிறு திருப்பலிகளும் தடைசெய்யப்பட்டன. நோட்டர் டாம் தேவாலயம் அவசங்கைப்படுத்தப்பட்டது. அதன் பலிப் பீடத்தின் மேல் துர்நடத்தையுள்ள ஒரு பெண்ணை நிறுத்தி, அவளே "பகுத்தறிவின் கடவுள்" என வழிபட்டனர். 1794 இல் சர்வதிகாரி ரூபிஸ்பியர் சிரச்சேதம் செய்யப்பட்டு, நெப்போலியன் போனப்பார்ட் அரசனானார். "வேதம் இல்லா நாடு திசை காட்டும் கருவியில்லாத மரக்கலம்" என்பதை அவர் உணர்ந்து, 1797 இல் திருச்சபையை அரசிலிருந்து பிரித்து, அதற்கு மதச் சுதந்திரம் வழங்கினார். திருத்தந்தை 6ம் பத்திநாதருடன் ஒப்பந்தம் செய்து, திருச்சபையிடமிருந்து ஏராளமான நிலப் பரப்பையும், நாடுகளையும், பல விலையுயர்ந்த கைப்பிரதி நூல்களையும் பெற்றுக் கொண்டார்.

ஆனால் 1798 இல் உரோமையில் பிரான்சு நாட்டவர் ஒருவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நெப்போலியன் உரோமையை முற்றுகையிட்டு, திருத்தந்தையின் உடைமைகளைச் சூறையாடி, அவரை வாலன்சிற்கு நாடு கடத்தினார். அங்கு திருத்தந்தை 6வது பத்திநாதர் இறந்தார். 1802 இல் நெப்போலியன் புதிய பாப்பு 7வது பத்திநாதருடன் ஒரு ஒப்பந்தம் செய்து, திருச்சபையின் உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொடுத்தார். ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டன. துறவற சபைகள் தத்தம் பணிகளை மீண்டும் ஆரம்பித்தன. கத்தோலிக்க மதம் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டது. ஆயர்களை தேர்வு

செய்வதற்கு தேசாதிபதிகளுக்கு உரிமையிருந்தாலும், அதை ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ திருத்தந்தைக்கு அதிகாரம் இருந்தது. எனினும் விரைவில் நெப்போலியன் ஒரு சர்வதிகாரியாக மாறினார். அவருடைய சகோதரரின் திருமணத்தை விவாகரத்துச் செய்ய திருத்தந்தை மறுத்தமையினால் கோபமடைந்து, உரோமை முற்றுகையிட்டு, அதைப் பிரான்சின் ஆளுகைக்கு உட்படுத்தினார். திருத்தந்தையைக் கைதுசெய்து, ஆறு ஆண்டுகளுக்குச் (1809-1814) சிறைப்படுத்தினார். எனினும் திருத்தந்தை 7வது பத்திநாதர் தம் முடிவில் உறுதியாகவிருந்தார். ஆனால் நெப்போலியன் ரூசியாவுடன் தொடங்கிய போரில் தோல்வியுற்றார். நெப்போலியனின் வீழ்ச்சியை அடுத்து திருத்தந்தை உரோமை திரும்பினார். பின்னர் 1815 இல் நெப்போலியன் வாட்டர்லூ போரிலும் தோல்வியுற்று, அடைக்கலம் தேடி பாப்புவிடம் உரோமைக்கு வரவேண்டி ஏற்பட்டது. திருத்தந்தை அவரை வரவேற்று, மன்னித்து, வேண்டிய உதவிகளைச் செய்தார். பின்னர் பிரான்சில் திருச்சபை சுதந்திரமாக வளரத் தொடங்கியது.

**1815-1870**

உரோமைக்குத் திரும்பிய திருத்தந்தை 7ம் பத்திநாதர் 1814 இல் கலைக்கப்பட்ட இயேசு சபையை மீண்டும் இயங்கச் செய்தார். இயேசு சபை ஆன்மீக வாஞ்சையுடன் செயல்படத் தொடங்கியது. 1829 இல் இங்கிலாந்தில் விடுதலைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. கத்தோலிக்கர் இழந்த உரிமைகளைப் பெற்றனர். மீண்டும் கத்தோலிக்க மாவட்டங்கள் தோன்றின. ஆக்ஸ்போர்டு இயக்கம் ஆரம்பமாகியது. அதன் தலைவர் ஹென்றி நியூமன் 1845 இல் கத்தோலிக்கத்தைத் தழுவினார். வறுமையிலிருந்த திருச்சபை மக்களின் ஆன்மாக்களை வென்றெடுத்தது. .பிரான்ஸ், ஜெர்மனி, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் திருச்சபையின் ஆன்மீக வாழ்வில் பாரிய அளவில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. புதிய நாடுகளில் திருச்சபை பரவி, பெரிய விருட்சமாக வளர்ந்தது. அமெரிக்காவில் திருச்சபை மிகத் துரிதமாகப் பரவியது. திருத்தந்தை 7ம் பத்திநாதரின் காலத்தில் பல புதிய துறவற சபைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவைகளுள் மாரியனிஸ்ற், மாறிஸ்ற், டி லா சால் சகோதரர், அன்புக் கன்னியர், பவுலினிஸ்ற், சலேசியன், இறைவார்த்தைச் சபை, வெள்ளைத் தந்தையர் சபை என்பன குறிப்பிடத்

தக்கவை. அவை மறைபரப்புப் பணி, சமூகப் பணி, கல்விப் பணி, மேய்புப் பணி போன்றவற்றில் ஈடுபட்டு, திருச்சபைக்கு புத்துணர்ச்சியையும், புதுப்பித்தலையும் வழங்கின. லயன்ஸ் நகரத்தில் ஆரம்பிக்கப்பட்ட மறைபரப்புதல் சபை திருத்தந்தை 7ம் பத்திநாதரினால் 1822இல் அங்கீகரிக்கப்பட்டது. 1823 இல் அவர் இறந்தார். அத்துடன் பாப்புவின் இலௌகீக அதிகாரம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

**1870-1929**

இலௌகீக ஆதிக்கத்தையும், அரசியல் செல்வாக்கையும், பழைய உலக சொத்துக்கள், உடைமைகளையும் இழந்த திருச்சபை, உலகில் ஒரு ஆன்மீக, அறநெறித் தலைமையாக மாறியது. 1929 இல் பெனிற்றோ முசலோனி திருத்தந்தை 12ம் பத்திநாதருடன் செய்துகொண்ட இலத்தரன் ஒப்பந்தம், 160 ஏக்கர் நிலத்தை உள்ளடக்கிய வத்திக்கான் நகரை ஒரு தனி சுதந்திர நாடாக்கியது. திருத்தந்தையே அதன் அரசியல் தலைவர். அது உலகிலேயே மிகச் சிறிய அரசாக இருந்தாலும், உலகிலேயே மிக வலிமையான ஆட்சிபீடமாக மாறியது. திருத்தந்தை ஒரு சில நூற்றுக்கணக்கான மக்களுக்கு அரசியல் தலைவராக இருந்தாலும், உலகெங்கும் வாழும் கோடிக் கணக்கான மக்களின் ஆன்மீக தலைவராகத் திகழ்கிறார்.

## 7.2.7 நவீன காலத்தில் சில முக்கிய திருத்தந்தையர்கள் (1846-1963)

**திருத்தந்தை 9ம் பத்திநாதர் (1846-1878)**

திருத்தந்தை 16வது கிரகோரியாரின் மரணத்தை அடுத்து, திருத்தந்தை 9ம் பத்திநாதர் 1846 இல் திருச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய காலத்தில் (1846-1878) பல முக்கிய நிகழ்வுகள் இடம் பெற்றன. 1850 இல் இங்கிலாந்தில் கத்தோலிக்க திருச்சபையின் ஆட்சி மீண்டும் நிறுவப்பட்டது. நிக்கோலாஸ் வைஸ்மான் வெஸ்ற்மினிஸ்ரரின் பேராயராக நியமனம் பெற்றார். அவர் கருதினால் ஆக்கப்பட்டு. இங்கிலாந்தில் மீண்டும் பல மறைமாவட்டங்கள் அமைக்கப்பட்டன. மார்கழி 8, 1854 இல் திருத்தந்தை 9வது பத்திநாதரினால் மரியாளின் அமல உற்பவம் விசுவாச உண்மையாகப் பிரகடனம்

செய்யப்பட்டது. மரியா சென்ப பாவமின்றிப் பிறந்தாரென்பது விசுவாச சத்தியம் என அறிக்கையிடப்பட்டது. 1858 இல் மரியன்னை லூர்து நகரை அண்டிய மசபியேல் குகையில் பெர்னதேத் என்னும் பெண்ணுக்கு பல முறைகள் காட்சி கொடுத்து, "நாமே அமல உற்பவம்" என அறிவித்தார். இது திருத்தந்தையின் விசுவாச சத்திய பிரமாணத்திற்கு உறுதி அளித்தது. 1864 இல் திருத்தந்தை அக்காலத்தில் நிலவிய 80 முக்கிய தப்பறைகளுக்கு விளக்கம் அளித்து, அவை ஏற்றுக் கொள்ளத் தக்கவை அல்ல என தமது "சில்லபஸ்" (Syllabus) என்ற நூலில் வெளியிட்டார். மேலும் அந்த நூலில் மனித புத்தி இறை அதிகாரத்திற்கு பணிந்து போகவேண்டுமென்றும், கத்தோலிக்க மதமே சத்திய மதமென்றும், திருச்சபை அரச அதிகாரத்திற்கு மேற்பட்ட-தென்றும், திருச்சபைக்கும் அரசுகளுக்குமிடையே உறவு எவ்வாறு அமையவேண்டுமென்றும், தப்பறைகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற அரசுகளுக்கு உரிமை உள்ளதென்றும் விளக்கினார்.

திரிதேந்தின் பொதுச் சங்கத்திற்குப் பின் இடம்பெற்ற திருச்சபை-யின் முக்கிய பொதுச்சங்கமான 1வது வத்திக்கான் பொதுச்சங்கம் திருத்தந்தை 9ம் பத்திநாதரால் மார்கழி 8, 1869 இல் கூடப்பட்டது. திருச்சபையின் அடிப்படை உண்மைகள், இறைவன் உள்ளார் என்ற கோட்பாடு, இயற்கையும் இறைவனும், இறைவனின் வெளிப்படுத்து-தல்கள், பகுத்தறிவுக்கும் இறைவெளிப்படுத்துதலிற்கும் இடையிலான ஐக்கியம் என்பனபற்றிய படிப்பினைகள் ஆராயப்பட்டு, அறிக்கை வெளியிடப்பட்டது. நாத்திகம், உலோகாயிதம், பகுத்தறிவுவாதம் போன்ற தப்பறைகள் எடுத்துக் காட்டப்பட்டன. திருத்தந்தையின் வழுவாவரக் கோட்பாடுகள் (Infallibility) ஆய்வு செய்யப்பட்டு, விசுவாச உண்மை-யாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அதாவது திருத்தந்தை திருச்சபையின் தலைவராக பேதுருவின் அரியணையிலிருந்து வேத கோட்பாடுகளை அறிவிக்கும்போது, தூய ஆவியின் அருளால் உண்மையையே பேசுகிறார் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. திருத்தந்தையின் முதன்மைத் தலைமைத்துவமும் (Primacy) அங்கீகரிக்கப்பட்டது. 1870ம் ஆண்டில் தொடங்கிய பிரான்ஸ்-புருசிய போரின் நிமித்தம் திருச்சங்கம் இடைநிறுத்தப்பட்டது.

திருத்தந்தை 9ம் பத்திநாதரின் இறுதிக்காலத்தில் உரோமை

பியத்மோந்த அரசன் விக்டர் இம்மானுவேலினால் கைப்பற்றப்பட்டது. அவர் தன்னை இத்தாலியின் மன்னர் என அழைத்து, திருத்தந்தையின் மாளிகையில் தங்கினார். திருத்தந்தைக்கு வத்திக்கான், இலத்தரன் அரண்மனைகளும், காஸ்டல் கொன்டெல்போவுமே எஞ்சியது. அத்துடன் திருத்தந்தையின் அரசியல் அதிகாரம் அனைத்தும் பறிபோயின.

**திருத்தந்தை 13ம் சிங்கராயர் (1878-1903)**

திருத்தந்தை 13ம் சிங்கராயர் ஒரு சிறந்த ஆட்சியாளர். திருத்தந்தையின் தலைமைத்துவத்தையும், திருச்சபையின் செல்வாக்கையும் மீளப் பெற முயற்சிகளை மேற்கொண்டார். சமுதாயத்தில் காணப்படும் சீர்கேடுகள் மட்டில் தம் கவனத்தைச் செலுத்தி, விசுவாசமும் அறிவியலும், திருச்சபையும் அரசும், சோஷியலிசத்தின் ஆபத்துகள், திருமணத்தின் புனிதத் தன்மை, உரிமையும் அதிகாரமும், தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய பல பயனுள்ள சுற்று மடல்களை எழுதினார். “தொழிலாளர் சாசனம்” என்றழைக்கப்படும் “நேரும் நோவாறும்” என்ற சுற்றுமடல வழியாக, திருச்சபையின் சமூகக் கோட்பாடுகளை தெளிவாக எடுத்துக் கூறி, தொழிலாளருக்கு நியாயமான கூலியும், உரிமைகளும் கொடுக்கப்படுவதே கிறிஸ்தவ நியதி என விளக்கினார். அவரே திருச்சபையின் சமூகக் கொள்கைகள் பற்றிய படிப்பினைகளை முதல்முதலாகத் தெளிவாக எடுத்துக் கூறிய திருத்தந்தையாவார். அவர் ஜனநாயக ஆதரவாளராய் இருந்ததால், பல நாடுகளுடன் நட்புறவு கொண்டார். கத்தோலிக்கரை நல்ல முறையில் நடத்தும்படியாக ரூசியா அரசைக் கேட்டுக்கொண்டார்.

சிறந்த இறையியலாளரான அவர் இறையியல் கல்வியைச் சீர்படுத்தினார். புனித அக்குவைனசின் இறையியலைக் கற்பதை ஊக்குவித்தார். விஞ்ஞான ரீதியில் திருவிவிலியத்தைக் கற்க வழிவகுத்தார். வத்திக்கான் ஆவண மன்றத்தை அவைரும் பயன்படுத்த அனுமதித்து, கல்வி ஆய்வினை ஆதரித்தார். 1902 இல் உரோமையில் திருவிவிலிய ஆணைக் குழுவை நிறுவினார். அவரே இந்தியாவில் முதல்முறையாகத் திருமறை ஆட்சி முறையை அமைத்து, மறைபரப்புப் பணியை ஊக்குவித்தார். 13 ஆடி 1903 இல் காலமானார்.

**திருத்தந்தை 10ம் பத்திநாதர் (1903-1914)**

திருத்தந்தை 13ம் சிங்கராயரின் மரணத்தையடுத்து, 1903இல் வெனிஸ் நகரின் பிதாப்பிதாவான கருதினால் சார்த்தோ 10ம் பத்திநாதர் என்ற பெயருடன் திருத்தந்தையானார். அவர் பல ஆண்டுகள் பங்குத் தந்தையாய் பணிபுரிந்திருந்தமையால், ஆன்ம ஈடேற்றத்தில் மிக அக்கறை கொண்டார். "அனைத்தையும் கிறிஸ்துவில் புதுப்பித்தல்" என்பது அவரது இலட்சிய வாக்கு. திருச்சபையின் திருவழிபாட்டை சீர் செய்து உறுதிப்படுத்துவதும், திருச்சபையை நவீன காலத்தைய தப்பறைகளிலிருந்து பாதுகாப்பதும் அவருடைய முக்கிய பணியாகவிருந்தன.

திருவழிபாட்டு இயக்கத்தை ஆரம்பித்தார். இறைபுகழ் மாலை, திருப்பலி நூல் என்பன சீர்த்திருத்தப்பட்டன. கத்தோலிக்கர் அனைவரும் அனுதினமும் திருப்பந்தியில் அமரலாமென அறிவித்து, அதை ஊக்கு-வித்தார். அதனிமித்தம் அவர் "நற்கருணைப் பாப்பு"வென அழைக்கப்பட்டார். முதல் நன்மை பெறுவதற்கு, சிறுவர்கள் புத்தி விபரம் அறிந்திருந்தால் போதுமென்ற கட்டளையை 1910ம் ஆண்டில் பிறப்பித்தார். புத்தி விபரம் அறிந்த சிறுவர் பாவம் செய்யக்கூடும் என்பதால் அவர்களும் ஒப்புரவு அருட்சாதனம் பெற்று, நற்கருணை பெறவேண்டுமென்றார். திரு இசை எப்படி அமையவேண்டுமென விளக்கி, அவை மக்களின் பக்தியைச் சிதைப்பவையாக அல்ல, மாறாக பக்தி ஊட்டுபவையாக இருக்கவேண்டுமென அறிவுறுத்தினார். மறைக்-கல்வியைப் புதுப்பித்து, அனைத்துலக திருச்சபைக்கும் அளித்தார். இளைஞருக்கு மறைக் கல்வி அளிக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினார். 1909 இல் உரோமையில் விவிலியப் பாடசாலையைத் தோற்றுவித்து, அங்கு இறையியலில் மேதைப் பட்டம் பெற வழிசெய்தார். இலத்தீன் விவிலியத்தை சிறந்த நல்ல இலத்தின் மொழியில் எழுதும் பொறுப்பை புனித ஆசீர்வாதப்பர் சபையினரிடம் ஒப்படைத்தார். அனைத்-துலக ஆயர்களினதும், இறையியலரினதும் உதவியுடன், திருச்சபையின் திருச் சட்ட நூலை திருத்தி எழுதினார் அது 1918 இல் வெளியிடப்பட்டு, அமுல் செய்யப்பட்டது.

பிரான்சில் அரசும் திருச்சபையும் பிளவுபடும் நிலையில் இருந்தன. எனவே அங்கிருந்த தனது சொத்துக்கள், வருமானங்கள்

அனைத்தையும் அரசிடம் ஒப்படைக்குமாறும், அரசின் கட்டுப்பாட்டுக்கு அடிபணிய வேண்டாமென்றும் பிரான்ஸ் கத்தோலிக்கரைக் கேட்டுக்கொண்டார். ஆயரில்லாமலிருந்த மாவட்டங்களுக்கு ஆயர்களை நியமித்து, தானே அவர்களைத் திருநிலைப் படுத்தினார். அதன் விளைவாக பிரன்சில் திருச்சபை ஆன்மீக மறுமலர்ச்சி பெற்று, வலுவடைந்தது. திருத்தந்தையின் தேர்வில் புரட்சிகரமான ஒழுங்கு முறையைக் கொணர்ந்து, அதில் அரசர்கள் எவரும் தலையிடுவதை முடிவுக்குக் கொணர்ந்தார். 20 ஆவணி 1914 இல காலமானார்.

**திருத்தந்தை 15ம் ஆசீர்வாதப்பர் (1914-1922)**

முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாகிய காலத்திலேயே அவர் திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் பரந்த கண்ணோட்டமும், பேரார்வமும் கொண்டவர். போர்க் காலத்தில் பக்கசார்பற்ற முறையில் நடுநிலை வகித்து, அதை முடிவுக்குக் கொணரப் பாடுபட்டார். பல முறைகளில் உலக அரசுகள் படு நாசம் செய்கின்ற போரை நிறுத்தி, சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். எவ்வித தேச பேதமுமின்றி, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தாராளமாக உதவினார். சிறப்பாக போரினால் ஊனமுற்றோருக்கும், விதவைகளாக்கப் பட்டவர்களுக்கும் உதவி செய்தார். போர்க் கைதிகள் தங்கள் மனைவி, மக்கள், உற்றார், உறவினருடன் தொடர்புகொள்ள தொடர்பாடல் அலுவலகத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். திருச்சபையின் எதிரிகளும் அவருடைய மகத்தான இரக்கச் செயல்களைப் பாராட்டினர்.

போர் முடிந்த பின்னர், ஐரோப்பாவில் பஞ்சம், வறுமை, துயரம், சோகம் எங்கும் காணப்பட்ட வேளையில், சமாதானத்தை வளர்க்க வழிகளைக் காட்டி, 1920இல் "பெந்தேகோஸ்த்" என்ற சுற்று மடலை வெளியிட்டார். திருச்சபையிலிருந்து பிரிந்திருந்த இங்கிலாந்து, ஹாலந்து, போர்த்துக்கால், ஜெர்மனி, துருக்கி போன்ற நாடுகளும் திருத்தந்தையின் ஆன்மீக தலைமைத்துவத்தைப் பாராட்டி, தங்கள் பிரதிநிதிகளை வத்திக்கானுக்கு அனுப்பி வைத்தனர். பல நாட்டுத் தலைவர்கள் வத்திக்கான் சென்று, திருத்தந்தையைத் தரிசித்து, வத்திக்கானுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டனர்.

முதலாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்த காலக்கட்டத்தில்-

தான், 1917 இல் போர்த்துக்காலில், பத்திமா என்னும் இடத்தில, மரியன்னை மூன்று சிறுவர்களுக்க் காட்சி அளித்தார். உலகப் போர் வெகு விரைவில் முடீவுக்கு வருமென்றும், ரூசியாவால் திருச்சபைக்கு பெரும் கேடு விளையுமென்றும் எச்சரித்து, செபமாலையை செபித்து, தவ ஒறுத்தல் முயற்சிகளை மேற்கோண்டு, பாவ விமோசனம் பெற்றால் இறைகோபம் வராதென்று கூறி, ஒவ்வொருவரும் தங்களையும், தங்கள் குடும்பங்களையும், நாடுகளையும், ரூசியாவையும் மரியன்னையின் அமல இதயத்துக்கு அர்ப்பணம் செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தினார். இச் செய்தியின் சிறப்பு அம்சம் என்னவெனில் அது நற்செய்திக்கேற்ப மனம்மாறவும், இயேசுக் கிறிஸ்துவில் நம்பிக்கையை வளர்க்கவும், உண்மையான கிறிஸ்தவ வாழ்வை தினமும் வாழ இறைமக்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பாகும். திருத்தந்தை 15ம் ஆசீர்வாதப்பர் 22 தை 1922 இல் காலமானார்.

**திருத்தந்தை 11ம் பத்திநாதர் (1922-1939)**

முதலாம் உலகப் போருக்குப் பின்னர் திருச்சபைக்குத் தலைமைதாங்கிய திருத்தந்தை 11ம் பத்திநாதர் தம் ஆட்சி காலத்தில் பல குழப்பங்களையும், கலாபனைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. உலகப் போர் திருச்சபையின் மறைபோதகப் பணியை மிகவும் பாதித்திருந்தது. போரின்போது பிற நாடுகளில் பணிபுரிந்த ஆயிரக் கணக்கான குருக்களும், துறவிகளும் இராணுவத்தில் பணிபுரிய தத்தம் நாடுகளுக்கு அழைக்கப்பட்டனர். வேறு பலர் ஜெர்மன் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். போர் முடிந்த பின்னர் திருத்தந்தை அவர்களை வேறு நாடுகளுக்கு அனுப்பி, சுதேச குருக்கள் தத்தம் நாடுகளில் திருமறை வளர்ச்சிக்காக உழைக்க வேண்டுமெனப் பணித்தார். சீன ஆயர்களை தம் கைகளால் திருநிலைப்படுத்தி, சுதேச மறை மாவட்டங்களில் குருத்துவ பயிற்சிக் கல்லூரிகளை நிறுவப்பட வேண்டுமென வற்புறுத்தினார். விசுவாசப் பரம்புதல் சபையின் தலைமைப் பீடத்தை பிரான்சிலிருந்து உரோமைக்கு மாற்றி, அங்கு 1925 இல் வேதப் பரம்புதல் பற்றிய ஒரு பொருட் காட்சியை ஒழுங்கு செய்து, அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மேலும் உரோமையில் ஒரு நற்கருணை மாநாட்டைக் கூட்டி, நற்கருணையின் தனிச் சிறப்பை புலப்படுத்தினார். அவருடைய காலத்தில் மிஷன் நாடுகளில் வேத போதகம் மிகவும் வளர்ச்சி கண்டது.

இத்தாலியில் திருத்தந்தை பெனிட்டோ முசலோனியின் பாசிசக் கொள்கைக்கு முகங் கொடுத்து, திருச்சபையைப் பாதுகாக்க வேண்டி-யிருந்தது. திருச்சபையின் பாரம்பரிய உரிமைகளை அரசிடம் கையளிக்க திருத்தந்தை விரும்பவில்லை. பாப்புவின் நடுநிலையான ஆட்சிக்கு அவர் எந்தவொரு நாட்டின் அரசிற்கும், ஆட்சிக்கும் கட்டுப்படாமலிருப்பது இன்றியமையாதது எனக் கருதினார். ஒரு சுதந்திர எல்லைக்குள்ளிருந்து, சுதந்திரமாக ஆட்சி செய்வதே திருச்சபையின் உண்மையான சுதந்திரமென வாதிட்டார். முசலோனி திருத்தந்தையின் இக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டதன் விளைவாக இத்தாலிய அரசுக்-கும் திருத்தந்தைக்கும் இடையே 11 மாசி 1929 இல் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. அதை இலத்தரன் ஒப்பந்தம் என அழைப்பர். அதன்படி 160 ஏக்கர் பரப்புள்ள வத்திக்கான் ஒரு தனி நாடாக, நடுநிலை நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் மன்னர் திருத்தந்தையெனவும் அறிவிக்கப்பட்டது. மேலும் இத்தாலி நாட்டின் மதம் கத்தோலிக்க மதம் என்றும், புனித நிலையையுடைய திருத்-தந்தையைத் தாக்குபவரோ, தாக்க முயற்சிப்பவரோ, பழித்துரைப்பவரோ, திருச்சபையின் அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்பவரோ கடின தண்டனைக்கு உள்ளாவரென்றும் உரைக்கப்-பட்டது. இத்தாலிய பாடசாலைகளில் மறைக் கல்வி நிரந்தரமாயப் போதிக்கப்பட வேண்டுமென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் திருச்சபையின் நெறிப்படி நிறைவேற்றப்பட்ட திருமணங்களை அரசு அங்கீகரித்தது.

பின்னர் முசலோனி கல்வி போதிப்பது அரசின் உரிமையென பிரகடனம் செய்த போது, திருத்தந்தை அதை வன்மையாகக் கண்டித்-தார். திருச்சபையின் கல்வி கற்பிக்கும் உரிமையை விளக்கி, "இளைஞ-ரின் கிறிஸ்தவக் கல்வி" என்ற சுற்றுமடலை 31.12.1929 இல் வெளி-யிட்டார். அதில், அனைத்து கத்தோலிக்க இளைஞர்களுக்கும் கத்தோலிக்க கல்வி அளிப்பது திருச்சபையின் உரிமை. தங்களுக்கென தனிப் பாடசாலைகள் வேண்டுமெனக் கத்தோலிக்கர் போராடுவது அரசியல் தலையீடு ஆகாது. ஒரு நல்ல கத்தோலிக்கன் நல்ல குடிமக-னாக இருப்பான். அரசிற்குப் பணிந்திருப்பான். இத்தகைய மேலான இளைஞர்களை உருவாக்குவது கத்தோலிக்க பாடசாலைகளே எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருத்தந்தை 11ம் பத்திநாதர் ஜெர்மனியில் ஹிட்லரின் நாசிசக் கொள்கையையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. திருத்தந்தை 1933 இல் ஹிட்லருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். கத்தோலிக்கர் ஜெர்மனியில் உரிமையுடன் வாழவேண்டுமென்பதே அதன் நோக்கம். ஆனால் அவ் ஒப்பந்தம் நீண்ட காலம் நீடிக்கவில்லை. ஹிட்லர் ஒப்பந்தத்தை மீறி, ஆயிரக் கணககான யூதர்களைக் கொன்று புதைத்தார்.

ரூசியாவில் தொழிலாளர் புரட்சி வெடித்து, 21 தை 1918 இல் பொதுவுடைமை (Communism) ஆட்சி தோன்றியது. மதம் மனிதனை மயக்கும் மதுவெனப் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆயர்கள், குருக்கள், பொது நிலையினர் மிகவும் துன்புறுத்தப்பட்டனர். சிலர் நாடு கடத்தப்பட்டனர். திருச்சபையின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஆலயங்கள் கலைக் கூடங்களாக்கப்பட்டன. கத்தோலிக்க பாடசாலைகள் அரசுடைமைகளாக்கப்பட்டன. திருத்தந்தை இறைவன் இந்த நாட்டை மனந்திருப்பி, தமது மறையை வளரச் செய்வாரென நம்பிக்கை அளித்து, இறைவனின் இரக்கம் ரூசியாவுக்குக் கிடைக்கும்படி செபம், தபம் செய்யுமாறு கத்தோலிக்கருக்கு அழைப்பு விடுத்தார். புனித பேதுரு சதுக்கத்தில் 19 பங்குனி 1930 இல் தபச் சங்கீதங்களையும், அனைத்துப் புனிதரின் மன்றாட்டு மாலையையும் பாடி, தாமே முன்னின்று பாவப்பரிகார வழிபாடு நடத்தினார். மெக்சிக்கோவிலும் குழபபம் ஏற்பட்டது. இஸ்பானியரின் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற மெக்சிக்கோ நாட்டின் ஆட்சி 1857 இல் கத்தோலிக்கரின் எதிரிகளின் வசம் சென்றது. திருச்சபைமேல் பல தடங்கல்கள் சுமத்தப்பட்டன. 1927ல் ஜனாதிபதியான காலஸ் என்பவர் அயல் நாட்டுப் போதகர்கள் வருவதைத் தடைசெய்து, திருச்சபையின் சொத்துக்களை பறிமுதல் செய்தார். அது வேத கலாபனையை ஏற்படுத்தியது. கத்தோலிக்கர்கள் கொடுமைப் படுத்தப்பட்டனர். அச் சர்வதிகார ஆட்சியை எதிர்த்து அனைத்து உலகமும் குரலெழுப்பியது. திருத்தந்தை 11ம் பத்திநாதர் அவ் எதேச்சாரத்தை வன்மையாகக் கண்டித்தார். காலசுக்குப் பின்வந்த ஜனாதிபதி எமிலோ போர்டசில் பாப்புவின் ஸ்தானிகருடன் ஒரு ஒப்பந்தம் செய்தார். கலாபனை நின்றது. மெக்சிக்கோ மக்கள் மனத் துணிவுடன் கலாபனையை எதிர்கொண்டு, தம் விசுவாசத்தில் வெற்றி கண்டனர்.

வானொலியைக் கண்டுபிடித்த இத்தாலிய அறிவியல் மேதை மார்க்கோனி என்ற கத்தோலிக்கர், வத்திக்கான் வானொலி நிலையத்தை அமைத்தார். திருத்தந்தை அதை 21 மாசி 1931 இல் இயக்கி வைத்து, 15 நிமிடங்கள் இலத்தீன் மொழியில் பேசினார். உலகின் பல்வேறு வானொலி நிலையங்கள் அதை ஒலிபரப்புச் செய்தன. மறைபோதகத்தில் ஈடுபட்டிருக்கும் அனைத்து மறைத்தூதுவர்களுக்கும் வாழ்த்துக் கூறி, திருச்சபைக்கு வெளியில் இருப்போருக்காகவும், ஆள்வோருக்காகவும், முதலாளிகள், தொழிலாளருக்காகவும், அனைத்துலக மக்களுக்காகவும் செபித்து, அவர்களது கடமைகளை அவர்களுக்கு நினைவூட்டினார். இறுதியில் அனைத்துலகிற்கும் தமது அப்போஸதலிக்க ஆசீரை வழங்கினார்.

திருத்தந்தை 13வது சிங்கராயர் எழுதிய தொழிலாளர் சாசனம் என்ற சுற்றுமடலின் 40வது ஆண்டு நிறைவு விழா உரோமையில் ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. பல நாடுகளிலுமிருந்து தொழிலாளர் உரோமைக்கு வந்திருந்தனர். அதையொட்டி திருத்தந்தை வெளியிட்ட "நாற்பது ஆண்டுகள்" (Quardagessimo Anno) என்ற சுற்று மடலில், செபம், சேவை. பரித்தியாகம் வழி சமூக நல்வாழ்விற்காக தொழிலாளர் உழைக்கவேண்டுமெனக் கூறி, பொருளாதாரக் கோட்பாடுகள் காலத்திற்கேற்ற, நீதியின் அடிப்படையில், தொழிலாளிக்கும் முதலாளிக்கும் பயனளிக்கும் வகையில் மாற்றம் பெறவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். மேலும் சோசியலிசக் கொள்கை கிறிஸ்தவ நெறிக்கு முரணாயிருக்கிறபடியால், ஒருவர் ஒரே நேரத்தில் கத்தோலிக்கராகவும், சோசியலிசவாதியாகவும் இருக்க முடியாதெனக் குறிப்பிட்டார். அவர் எழுதிய சுற்றுமடல்களில் கிறிஸ்தவ திருமணம் பற்றி அவர் 1930 இல் எழுதியது மிக முக்கியமானதாக அனைவராலும் கருதப்பட்டது. அதில் மூன்று பகுதிகள் உள்ளன. முதலாம் பகுதி திருமணமென்னும் அருட்சாதனத்தின் புனிதத் தன்மை, அதன் நோக்கம் பற்றிப் பேசுகிறது. இரண்டாம் பகுதி நவீன உலகில் திருமண வாழ்விற்கும், குடும்பத்திற்கும் எதிராகச் செயல்படுகின்ற தீய சக்திகள், தவறான கருத்துக்களைச் (விவாகரத்து, கருத்தடை) சுட்டிக்காட்டி, அவற்றைக் கண்டனம் செய்கிறது. மூன்றாம் பகுதி திருமணத்தின் கட்டவிழாத் தன்மையால் தனிமனிதரும், சமூகமும் பெறக்கூடிய ஆசீர்கள், நன்மைகள்பற்றி ஆராய்கின்றது. அதைத் தொடர்ந்து 1932 இல் வெளியிடப்பட்ட கலப்புத் திருமணம்பற்றிய

அறிக்கையில் அதன் நிபந்தனைகள், தம்பதிகளின் கடமைகள், பொறுப்புகள் பற்றித் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றது.

திருத்தந்தை கிறிஸ்தவ ஒன்றிப்பின் மட்டில் கூடிய அக்கறை காட்டினார் திருச்சபையின் ஒன்றிப்புக்காக அனைவரும் செபிக்க, செயற்பட வேண்டுமென்று அழைப்பு விடுத்தார். தை மாதம் 18-25 வரை ஒன்றிப்பு வாரம் அனைத்துலகிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிட்டார். அவருடைய காலத்தில் இந்தியாவில் எப்பிஸ்கோப்ப சபையைச் சேர்ந்த பிரான்சிஸ்ன் துறவற சபையினர், யாக்கோபித்த பெத்தானிய சபையினர், தோமாஸ் கிறிஸ்தவ சபையினரெனப் பல சபைகளும், அமைப்புகளும் கத்தோலிக்க திருச்சபையில் இணைந்தனர். கிறிஸ்துவின் ஆட்சி வழியாகத்தான் உண்மையான அமைதியும், மகிழ்ச்சியும் உருவாகுமென வலியுறுத்தி, கிறிஸ்து அரசர் பெருவிழா கத்தோலிக்க திருச்சபையில் எங்கும் கொண்டாடப்பட வேண்டுமெனப் பாப்பு பிரகடனம் செய்தார்.

திருத்தந்தை 11ம் பத்திநாதர் "கத்தோலிக்க சேவா சங்கத்தின் தந்தை" என அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அப்போஸ்தலனே. அவன் அப்போஸ்தலிக்க பணியைச் செய்ய வேண்டும் என்பதே அதன் நோக்கம். 1922 இல் அவர் எழுதிய "ஊபி ஆர்க்கானோ" என்ற மடல் கத்தோலிக்க சேவா சங்கம்பற்றிய விளக்கத்தைத் தருகிறது. இச் சங்கம் இன்று பல நாடுகளில் சிறந்த மறைபரப்புப் பணி ஆற்றிவருகிறது. சுதேச குருக்கள் தத்தம் நாடுகளில் மறைபரப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடவேண்டுமென வலியுறுத்தினார். பெருமளவிலான சுதேச குருக்களை ஆயர்களாக நியமித்த முதல் திருத்தந்தை அவரே. தம்முடைய ஆட்சி காலத்தில் (1923-1935) புனித குழந்தை திரேசாள், புனித மரிய வியான்னி போன்ற 39 பேருக்கு முத்திப் பேறுப் பட்டமும், வேறு 15 பேருக்கு புனிதர் பட்டமும் அளித்தார். திருத்தந்தை 11ம் பத்திநாதர் 1939 இல் காலமானார்.

**திருத்தந்தை 12ம் பத்திநாதர் (1939-1958)**

11ம் பத்திநாதரின் மரணத்தை அடுத்து, கர்தினால் யூஜினால் பச்செல்லி 12ம் பத்திநாதர் என்ற பெயருடன் 2 பங்குனி 1939 இல் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தமது ஆட்சிகாலத்தில்

உலகில் சமாதானத்தை ஏற்படுத்தி வளர்க்க எடுத்த முயற்சிகளின் நிமித்தம் "சமாதானத்தின் பாப்பு" என அழைக்கப்பட்டார். ஹிட்லரின் நாசிசக் கொள்கை மட்டில் திருத்தந்தை நடுநிலைமை வகித்தார். அதன் மட்டில் கடும்போக்கைக் கடைப்பிடித்தால், கிறிஸ்தவர்களுக்கும், யூதர்களுக்கும் அதிக துன்பங்கள் ஏற்படுமெனப் பயந்தார். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாராளமாக நிவாரண உதவிகளும், பாதுகாப்பும் வழங்கினார்.

அக்காலத்தில் திருப்பலி, இறைவழிபாடுகள் இலத்தீன் மொழியி-லேயே இடம்பெற்றன. விசுவாசிகள் அனைவரும் திருவழிபாட்டில் அர்த்த-முள்ள முறையில் பங்கெடுக்கவேண்டுமென விரும்பிய திருத்தந்தை, திருவழிபாடு அவரவர் தாய்மொழியில் இடம்பெறுவது அவசியமென்பதை உணர்ந்து, அவரவர் தாய்மொழியில் வழிபாடுகள் நடத்த அனுமதி அளித்தார். அதற்கு வேண்டிய நடைமுறைகளையும் வகுத்துக் கொடுத்தார். காலையில் மட்டும் இடம்பெற்றுவந்த திருப்பலியை மாலையிலும் ஒப்புக்கொடுக்க அனுமதி அளித்தவர் அவரே.

திருத்தந்தை 12ம் பத்திநாதர் மரியன்னைமீது மிகுந்த பக்தி உடையவர். 1939இல் உலக சமாதானத்திற்காக தேவதாயை வேண்ட, வைகாசி மாதத்தை மரியாளின் வணக்கமாதமாக ஒதுக்கினார். 1942 இல் உலகை மரியாளின் மாசற்ற இருதயத்துக்கு அர்ப்பணித்தார். தேவதாய் ஆன்ம சரீரத்துடன் பரலோகத்திற்கு ஆரோகணமானார் என்ற திருச்சபையின் பரம்பரை நம்பிக்கையை, 1950 இல் விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்தார். மரியாயின் மாசற்ற இருதய திருநாளையும் ஏற்படுத்தினார். 1952 இல் ருசியாவை மரியாளின் மாசற்ற இருதயத்துக்கு அர்ப்பணித்தார். நாசிசம், பாசிசம், கம்யூனிசம் என்ற மூன்று அரசியல் கோட்பாடுகளும் திருச்சபைக்கு ஒவ்வாதவை எனக் கருதினார். கம்யூனிச கட்சியில் சேரும் கத்தோலிக்கர் மத நீக்கம் செய்யப்படுவார்களென எச்சரித்தார்.

திருத்தந்தை 12ம் பத்திநாதர் தமது ஆட்சிக்காலத்தில் திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும் அயராது உழைத்தார். 1939 இல் வேதபோதக நாடுகளிலிருந்து பன்னிருவரை ஆயராகத் தம் கையால் அபிஷேகம் செய்து, அவரவர் நாட்டில மறைபரப்புப் பணியாற்ற அனுப்பி வைத்தார். வேதபோதக நாடுகளின்

குருக்களின் உயர்படிப்பிற்காக உரோமையில் ஒரு குருமடத்தை ஆரம்பித்து வைத்தார். ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக ஜெர்மனியில், கிறிஸ்தவர்கள் கொடுமையாக நடத்தப்படுவதையிட்டு மிகவும் கவலைப்பட்டார். ஜெர்மனியில் நாசிச அரசு கன்னியர் மடங்களை மூடி, மறைக்கல்வி போதிப்பதைத் தடைசெய்து, பாடசாலைகளை மூடி, அச்சகங்களை பறிமுதல்செய்து, பல குருக்களை சிறையிலடைத்தது. அப்படி கிறிஸ்தவர்களை நடத்துவது தவறு எனத் திருத்தந்தை சுட்டிக்காட்டிய பொழுது, அவர்களை இன்னும் அதிகமாகத் துன்புறுத்தியது. பல இலட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டனர். திருத்தந்தை பலருக்குத் தஞ்சம் அளித்துக் காப்பாற்றினார். ஜெர்மனி போலந்தின் மீது போர் தொடுத்தது. பாப்பு வானொலி மூலமாக சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். அதற்கு எதிராக ஜெர்மனி போலந்தைக் தாக்கியது. ரூசியாவும் போலந்தின் மறு பகுதியைத் தாக்கியது. போலாந்து இவ்வாறு துண்டாடப்பட்டதால், கிறிஸ்தவர்கள் வழிபாட்டு உரிமையை இழந்தனர். குருக்கள் நூற்றுக்கணக்காகக் கொல்லப்பட்டனர். அதே வேளையில் போர்த்துக்காலுக்கும் உரோமைக்கும், இஸ்பானியாவுக்கும் உரோமைக்குமிடையே நல்லிணக்கம் ஏற்பட்டது. கத்தோலிக்க மதம் மீண்டும் பழைய உரிமைகளுடன் செயல்பட்டது.

திருத்தந்தை 12ம் பத்திநாதர் பல சிறந்த சுற்று மடல்களை எழுதி, திருச்சபையைச் சிறந்த முறையில் வழிநடத்தினார். அவர் எழுதிய "சும்மி பொந்திபிக்காத்துஸ்" என்ற முதல் சுற்றுமடலில், இன்றை சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டி, விசுவாசத் தளர்ச்சியால் இத் தீமைகள் மலிகின்றன என எடுத்துரைத்து, அதிக அதிகாரம் ஒரு சில தலைவர்கள் கையில் வந்து குவிகின்றபோது அவர்கள் சர்வதிகாரிகளாக மாறி, சமுதாயத்தையே சீர்குலைக்கின்றனரென எச்சரித்தார். போரின் கோர விளைவுகளை விளக்கி, உலகில் சமாதானம் மலர அனைவரும் செபிக்கவேண்டுமென வற்புறுத்தினார். அவரது மற்றொரு சுற்றுமடலாகிய "கியுமானி ஜெனறிஸ்" விவிலிய ஆராய்சியின் வரம்புகளைச் சுட்டிக்காட்டுகின்றது. "டிவினோ அவிலான்றே ஸ்பிரிற்று" என்ற இன்னொரு சுற்று மடலில் விவிலிய ஆராய்ச்சிக்கான புது முறைகளை ஊக்குவித்தார். திருச்சபை பற்றிய "கிறிஸ்துவின் மறை உடல்" என்ற சுற்றுமடலில் திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்

என்ற பவுலின் படிப்பினையை விளக்கி, திருச்சபையின் அமைப்பு பிரமிட் போன்ற அமைப்பிலான மனித நிறுவனம் அல்ல, மாறாக ஒரு மறைபொருளாக, கிறிஸ்துவின் ஞான உடலாக அமைந்துள்ளதென விளக்கினார்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது, சமாதானத்தை ஏற்படுத்த திருத்தந்தை பல முயற்சிகளை மேற்கொண்டார். அமெரிக்க ஜனாதிபதி ரூஸவெல்ட்டுடன் கடித மூலம் தொடர்பு கொண்டார். சுதந்திர நாடான பெல்ஜியத்தை தைரியப்படுத்தினார். யுத்தம் முடிவடைந்த பின் பல நாடுகள் வத்திக்கானுக்கு தமது இராஜ தந்திரிகளை அனுப்பி, திருத்தந்தையின் ஆட்சியுடன் நல்லுறவை ஏற்படுத்தின. இவருடைய ஆட்சியின்போது கத்தோலிக்க திருச்சபைக்கு உலக அரங்கில் நற்பெயர் வளர்ந்தது. பிற நாடுகள் அவரைச் "சமாதானத்தின் தந்தை" எனப் போற்றின. திருத்தந்தையும் அனைத்துலக அடிப்படையில் கருதினால்-மார்களின் எண்ணிக்கை இருக்கவேண்டுமென்பதற்காக, இத்தாலியரல்-லாத பலரைக் கருதினால் பதவிக்கு உயர்த்தினார். 51 கருதினால்-மார்களில் 34 பேர் இத்தாலியரல்லாதவர்கள். உலக நாடுகளில் பல புதிய மறைமாவட்டங்களை எற்படுத்தி, ஆயர்களை நியமித்து, மறைபரப்புப் பணியை ஊக்குவித்தார். இந்தியாவின் பெங்களூரில் முதல் தடவையாக 1950 இல் ஒரு ஆயர்கள் சங்கக் கூட்டம் (Synod) இடம்பெற்றது. அதற்கு மூன்று ரீதி கத்தோலிக்க வழிபாட்டுப் பிரதிநிதிகள் வருகை தந்திருந்தனர். திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1958 இல் காலமானார்.

**திருத்தந்தை 23ம் அருளப்பர் (1958-1963)**

திருத்தந்தை 12ம் பத்திநாதர் காலமானதை அடுத்து, 1958 இல் திருத்தந்தையாகத் தேர்நதெடுக்கப்பட்ட கர்தினால் றொன்கல்லி, 23ம் அருளப்பர் என்ற பெயருடன் ஆட்சி பீடம் ஏறினார். அவரைப் பலரும் ஒரு புனிதராய் கருதினர். அவர் மனிதபிமானம் மிகுந்தவராய், மறை ஆர்வம் நிறைந்தவராய், மக்களைச் சந்தித்து. அவர்களுடன் உரையாடி, அறிவுரை வழங்கி, தொண்டு செய்பவராய், அவர்களின் இன்னல்களை நீக்கி, நல்வழிப்படுத்தும் ஆசானாய் செயற்பட்டார். அவரின் ஆலோசனைகளைக் கேட்டு, ஆசீர் பெற பல்லாயிரக் கணக்கானோர் பேதுரு சதுக்கத்தில் கூடுவர். மக்களுடன் அளவளாவி,

கருத்து வேறுபாடுகளை ஒருமைப்பாடுகளால் தீர்த்துவைக்க முடியு-மென்ற கொள்கையுடையவர். அவரே திருச்சபையின் மேலாண்மையை உலகிற்கு உணர்த்தியவர்.

அவர் கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்தின் முன்னோடியாய்த் திகழ்ந்தார். கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் பிரிவினைகள் கிறிஸ்தவ மறைபரப்புப் பணிக்கு பெரும் தடையாய் இருப்பதை நன்கு உணர்ந்தார். அவரின் கலந்துரையாடல் கொள்கை திருச்சபைக்கும் பிரிவினைச் சபைகளுக்கும் இடையிலான பிணக்குகளை தீர்த்து வைக்க உதவின. அவர் உரோமையில் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஒரு தனிச் செயலகத்தை ஏற்படுத்தினார். அவர் எழுதிய "அன்னையும் ஆசிரியையும்" என்ற சுற்றுமடலில், மனித மாண்பு மதிக்கப்பட வேண்டுமென்றும், ஏழை பணக்காரருக்கிடையில் காணப்படும் ஏற்ற தாழ்வு மறையவேண்டுமென்றும் வலியுறுத்தினார். அவர் எழுதிய "அவனியில் அமைதி" என்ற மற்றொரு சுற்றுமடலில், தனிமனிதனின் மாண்பையும், சுதந்திரத்தையும் வலியுறுத்தி, நல்ல மனிதர்கள் ஒருங்கிணைந்தால் சமாதான சமூகம் உருவாகுமெனக் குறிப்பிட்டார். பிரிவினை மதத்தினரை "பதிதர்" என்றழையாமல், "சகோதரர்" என்றழைத்தார். அவரது உழைப்பால் கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் பெரும் வளர்ச்சி கண்டது.

தூய ஆவியால் தூண்டப்பட்டு, திருச்சபையை இக்காலத்திற்கு ஏற்ப மறுமலர்ச்சி அடையச் செய்யும் நோக்குடன், 1962 இல் 2ம் வத்திக்கான் பொதுச் சங்கத்தைக் கூட்டினார். அதில் ஏறக்குறைய 2500 ஆயர்கள் ஒன்றுகூடினர். முதலாம் வத்திக்கான் சங்கம் திருத்தந்தையின் மேலாண்மை, கடமை, அதிகாரம் என்பவற்றை நிர்ணயித்தது. ஆனால் 2ம் வத்திக்கான் சங்கம் ஆயர்கள், குருக்கள், துறவியர், இல்லறத்தவர்கள் திருச்சபையின் வளர்ச்சியில் எந்தெந்த வழியில் பங்கு கொள்ளலாமென நிர்ணயித்தது. திருத்தந்தை 23வது அருளப்பர் 1963 இல் காலமாகவே. புதிய திருத்தந்தை 6வது சின்னப்பர் அதைத் தொடர்ந்து நடத்தி, 1965 இல் முடிவுக்குக் கொணர்ந்தார். அதில் திருச்சபை பற்றியும், திருச்சபைக்கும் உலகுக்கும் இடையே உள்ள உறவுகள்பற்றியும் 16 தீர்மானத் தொகுப்புகள் வெளியிடப்பட்டன.

**தேர்ச்சி மட்டம் 7.3.** உலகில் திருச்சபையின் பங்களிப்பை விளங்கி, மக்களின் முன்னேற்றத்திற்காக தம்மை அர்ப்பணிப்பர்.

இவ்வுலகில் கிறிஸ்துவின் இடமாக இருந்து, அவரின் பணியைத் தொடர்ந்தாற்றி, மக்களை நல்வழிப்படுத்தி, முழு மனிதராக வளர்த்து, அவர்களை ஒரு நாள் மறுவுலகிற்கு, நிலை வாழ்விற்கு இட்டுச் செல்வதே இன்று திருச்சபையின் பணியாகும். மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டுள்ள திருச்சபை, அவர்களின் நலம், அவர்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகள், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவர்களின் கவலைகள், ஏக்கங்கள் பற்றிய அக்கறையோ, கரிசனையோ இன்றி இருக்க முடியாது. அவற்றில் பங்கெடுப்பதும், அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு இயன்ற முறைகளில் உதவுவதும் அவளது கடமையும், உரிமையும் ஆகும்.

தனது ஆரம்ப காலம் தொட்டே திருச்சபை மக்களின் கல்வி, சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வில், பிரச்சினைகளில் கரிசனையுடன் பங்கெடுத்து, ஆலோசனைகள் வழங்கி, மக்களை வழிநடத்தி, உதவிகள் புரிந்து வந்திருக்கிறாள். ஆண்டாண்டு காலமாக அவள் நடாத்தி வந்திருக்கும் பாடசாலைகள், வைத்தியசாலைகள், அனாதை மடங்கள், வயோதிபசாலைகள், நலன்புரி நிலையங்கள், கைத்தொழிற் பேட்டைகள் போன்றவை அதற்குச் சான்று பகருகின்றன. கிறிஸ்து ஆன்மாவும் உடலும் ஒருங்கே கொண்ட முழு மனிதனையே மீட்க இவ்வுலகிற்கு வந்தார். எனவே இன்று, அவரிடமாக நின்று, அவரது பணியைத் தொடர்ந்து ஆற்றும் பொறுப்பைக் கொண்டுள்ள திருச்சபையும், ஆன்மாவும் உடலும் ஒருங்கே கொண்ட முழு மனித மீட்புக்காக, விடுதலைக்காக, வளர்சிக்காக உழைப்பது அவளது இயல்பான கடமையே. திருச்சபை வளரவேண்டுமாயின், மக்கள் வளரவேண்டும். மக்கள் முழு மனிதர்களாக வளரவேண்டும். அவர்களது ஆன்மீகம் மட்டுமல்ல, அறிவு, திறன், ஆற்றல், ஒழுக்கம் அனைத்தும் வளரவேண்டும். ஏனெனில் மக்களால் ஆனதே திருச்சபை.

எனவேதான் திருச்சபை அதனுடைய ஆரம்ப காலம் முதல் மனித வாழ்வின் பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டு, அவனுடைய வளர்ச்சிக்கு உதவி வந்திருக்கின்றாள். இங்கு நாம் சிறப்பாக கல்வி,

விஞ்ஞான, தொழில் நுட்ப, கலை கலாச்சார துறைகளில் திருச்சபை மனிதனுக்கு. உலகிற்கு ஆற்றியுள்ள பங்களிப்பை சற்றி விரிவாக ஆராய்வோம்.

## 7.3.1 கல்வித் துறையில் திருச்சபையின் பங்களிப்பு

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி **கற்பியுங்கள்**" என்ற இயேசுவின் பணிப்புரைக்கு அமைய திருச்சபை ஒரு கற்பிக்கும் தாபனமாகவே உருவாகியது. அதன் ஆன்மாக்களை மீட்கும் பணியிலே கற்பித்தலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. திருச்சபை கற்பிக்கும் திறன் வாய்ந்தது மட்டுமல்ல, அது அனைத்து மக்களுக்கும் நிறைவாழ்வின் வழியை அறிக்கையிடும் பொறுப்பையும், நம்பிக்கை கொண்டோருக்கு கிறிஸ்துவின் வாழ்வை வழங்கிடும் பொறுப்பையும், அவ்வாழ்வின் முழுமையை அடைய இடையறாத அக்கறையோடு அவர்களுக்கு உதவிடும் பொறுப்பையும் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ஒரு தாயாகவிருந்து, அவர்களுடைய முழு வாழ்வையும் கிறிஸ்துவின் ஆவியால் நிரப்பிடக் கூடிய கல்வியை அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. மனித மீட்புக்கு அவசியமான ஆன்மீக, அறநெறி உண்மைகளைக் கற்பிப்பதே அதன் பிரதான நோக்கமாகவிருந்தாலும், சந்தர்ப்ப சூழ்நிலையின் நிமித்தம் விஞ்ஞானம், தொழில் நுட்பம், வரலாறு, கலை போன்ற இலௌகீக பாடங்களையும் கற்பிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஏனெனில் சிறார்கள் அஞ்ஞான பாடசாலைகளில் அவ் இலௌகீக பாடங்களை கற்கும்பொழுது, அவர்களின் ஆன்மீக அறநெறி வாழ்வுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழல் இருந்தது. மேலும் அத்தகைய இலௌகீக பாடங்களையும் மதத்தோடு தொடர்பு படுத்தியே கற்பிக்கவேண்டிய தேவை இருந்தது. எனவே ஆன்மீக அறநெறி உண்மைகளைக் கற்பிக்கும் நோக்குடன ஆரம்பிக்கப்பட்ட மறைக் கல்விப் பாடசாலைகளில் காலப்போக்கில் விஞ்ஞானம், வரலாறு, கலை, கணிதம், வாக்கலங்காரம் போன்ற ஏனைய பாடங்களும் கற்பிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் திருச்சபை சிறார்கள் தத்தம் குடும்ப சூழலிலேயே, பெற்றோர்கள், சிறப்பாக தாய்மார்களின் பொறுப்பில் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது. ஏனெனில் பெற்றோரே தம்

பிள்ளைகளுக்கு உயிர் அளித்திருக்கிறார்கள். எனவே பிள்ளைகளைக் கற்பித்து ஆளாக்கவேண்டியது அவர்களுடைய தலையாய கடமை. தாய் தந்தையர் தங்களுடைய குழந்தைகள் முழுமையானதொரு கல்வியை, அதாவது தனி மனித, மற்றும் சமூகக் கல்வியை அடைந்திடச் சாதகமான குடும்ப சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அச் சூழ்நிலையானது கடவுள் மட்டிலும், மனிதர் மட்டிலும் காட்டப்படவேண்டிய அன்பு, மதிப்பு ஆகியவற்றால் உயிரூட்டம் பெற்றதாக அமையவேண்டும். எனவே குடும்பமே ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தேவையான சமூக நற்பண்புகளின் முதற்பள்ளியாகும். கிறிஸ்தவ குடும்பத்திலேதான் பிள்ளைகள் திருமுழுக்கில் பெற்ற நம்பிக்கைக்கேற்ப கடவுளைக் கண்டுணரவும், அவரை வழிபடவும், தம்மை அடுத்திருப்போருக்கு அன்பு காட்டவும் குழந்தைப் பருவத்திலிருந்தே மிகச் சிறப்பான விதத்தில் கற்பிக்கப்படவேண்டும். அங்குதான் பிள்ளைகள் நல்லதொரு மனித சமுதாயத்தைப்பற்றியும், திருச்சபைபற்றியும் முதன்முதலாக அனுபவ முறையில் அறிய வருகின்றனர். குடும்பத்தின் வழியாகத்தான் பிள்ளைகள் மனிதரின் சமூக கூட்டு வாழ்விற்கும், மக்கள் குழுவிற்கும் படிப்படியாக இட்டுச் செல்லப்படுகின்றனர். அவ்வாறு பல தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை புனிதர்களாக, அறிஞர்களாக, பண்புள்ள மனிதர்களாக வளர்தெடுத்திருக்கிறார்கள்.

கல்வி கற்பிக்கும் பொறுப்பு முதல்முதலில் குடும்பத்தையே சார்ந்ததெனினும், மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகளில் தோன்றிய கலாபனைகளும், தப்பறையான போதனைகளும், அஞ்ஞான சித்தாந்தங்களும் கிறிஸ்தவ குடும்பங்களில் நிலவிய நல்ல சூழல், சுற்றாடலை மாசுபடுத்தி, குழப்பங்களை உண்டாக்கின. சிறார்கள் தங்கள் விசுவாசத்தை இழந்து, தவறான பாதையில் இட்டுச் செல்லப்படகூடிய ஆபத்துகளை ஏற்படுத்தின. நகரங்களில் கிறிஸ்தவ குடும்பங்களில் தபோதனராக புனித வாழ்வு வாழ்ந்துவந்த பலர், நகரங்களில் தங்கள் கிறிஸ்தவ வாழ்வை தொடர்ந்து வாழ முடியாததால் நகரங்களைவிட்டு ஓடி, வனாந்திரங்களுக்குச், சென்று, அங்கு துறவற குழுமங்களை ஆரம்பித்து வாழ்ந்தனர். பெற்றோரும் தம் பிள்ளைகளை அழிவிலிருந்து பாதுகாக்க. வனாந்திரங்களுக்கு எடுத்துச் சென்று, துறவற மடங்களில் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளிலே படிக்க

வைத்தனர். இப்படியாக கிறிஸ்தவத்துக்கும் அஞ்ஞான சிந்தாந்தத்துக்கும் இடையிலான மோதல்களின் நிமித்தம் மறைக் கல்விப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கு உயர் தர வகுப்புகளும், கீழ் தர வகுப்புகளும் இடம்பெற்றன. காலப்போக்கில் அவை அதிகரிக்கப்பட்டன. ஆயர்கள் தங்கள் மாளிகைகளுக்கு அருகில் எதிர்கால குருமாணவர்களைக் கற்பிக்கவென ஆயர் பாடசாலைகளை ஆரம்பித்தனர். பங்குத் தந்தையரும் தங்கள் வதிவிடங்களுக்கு அருகில் பங்குப் பாடசாலைகளை ஆரம்பித்து. சிறார்களுக்கு கல்வி புகட்டினர். ஆயர் பாடசலைகளும், பங்குப் பாடசாலைகளும் குருமாணவர்களுக்கென இயங்கினாலும், வெளி மாணவர்களையும் அனுமதித்தனர். வெளிமாணவர்களுக்கு கல்வி அளிக்கும் பணி துறவறத்தவர்களிடமே பெரும்பாலும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் உரோமைப் பேரரசை மிலேச்சர்கள் முற்றுகையிட்டனர். பேரரசு பல சுதந்திர நாடுகளாகப் பிளவுபட்டது. அனைத்து தாபனங்களும் சீர்குலைந்தன. அறிவு வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டது. திருச்சபை ஒன்றே தப்பியது. திருச்சபையே அப் பண்பில்லாத காட்டுமிராண்டிகளான மிலேச்சரைச் சீர்திருத்தி, அவர்களுக்கு கல்வியறிவு ஊட்ட, மறை அறிவு அளித்து, மனந்திருப்பி, திருச்சபையில் சேர்க்கவேண்டியிருந்தது. மிலேச்சரைச் சீர்திருத்தி, அவர்களுக்குக் கல்வியறிவு ஊட்டி, அவர்களை மனந்திருப்புவதில் துறவறத்தினர் முழுமூச்சாக ஈடுபட்டனர். அக்காலத்தில தோன்றிய ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகள் இதில் பெரும் பங்களிப்புச் செய்தனர்.

ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகள் கல்வியறிவு ஊட்டுவதையும், இலக்கியத்தை வளர்ப்பதையும் எப்பொழுதும் தங்கள் உரிமையாகக் கருதி வந்துள்ளனர். ஆரம்பத்திலிருந்தே அவர்களால் கல்வி அளிக்கப்பட சிறுவர்களை தங்கள் மடங்களில் சேர்த்து வந்தனர். அவர்களிலிருந்தே தங்கள் சபைக்கும் அங்கத்தவர்களை தெரிவு செய்தனர். இதிலிருந்தே மடத்துப் பாடசாலைகள் ஆரம்பித்தன. புனித ஆசீர்வாதப்பர் சிறுவர்களுக்குக் கல்வி அறிவூட்டுவதை துறவிகளின் கடமையாக கொடுத்திருந்தாலும், 538 இல் மடாதிபராயிருந்த கசியோடோறஸ் என்பவரே அதை முறையாக அமுல் செய்தவர். அவர் விவியர்ஸிலிருந்த தம் மடத்தை ஒரு கிறிஸ்தவ கல்லூரியாக மாற்றி, ஒழுங்கான கற்பிக்கும் முறையை ஆரம்பித்தார். கலைகளையும்,

வேத நூலையும் கற்பிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பல இடங்களிலும் இத்தகைய மடப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இங்கிலாந்தில் ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த புனித அகுஸ்தினாரும், அவருடைய துறவிகளும் தாங்கள் மடங்கள் அமைத்த இடங்களிலெல்லாம் பாடசாலைகளையும் அமைத்து, சிறார்களுக்குக் கல்வி புகட்டி, பணிபுரிந்தனர். பிரான்சிலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஜேர்மனியில் புனித பொனிபாஸ் ஒவ்வொரு மடத்திலும் ஒரு பாடசாலையை நிறுவினார். இப் பாடசாலைகளில் சில பிற்காலத்தின் சிறந்த படிப்பகங்களாக, கலாசாலைகளாக மாறின. மொழி, இலக்கணம், வாக்கலங்காரம், அளவையியல் எண் கணிதம், சங்கீதம் போன்ற பல துறைக் கலைகளும் படிப்பிக்கப்பட்டன. ஓவியக் கலை, சிற்பக் கலை, கைத் தொழில், அரசியல், நிர்வாகம், சங்கீதம், பதிப்பகம் போன்ற பல துறைகளிலும் பயிற்சியளிக்கப்பட்டது. பல பண்டைக் காலத்தைய கைநூல்களும், பத்திரங்களும் சேகரிக்கப்பட்டு, நூலகங்களும் தொடக்கப்பட்டன. இவ்வாறாக கல்வித் துறையில் ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகள் பெரும் பணியாற்றியுள்ளனர்.

எட்டாம் நூற்றாண்டில் பேரரசராகவிருந்த சார்லமேயின் (பெரிய சாள்ஸ்) அறிவியல், இலக்கியத்தில் ஆர்வம் உடையவர். அவர் கல்வி, கலாச்சாரத்தின் காப்பாளராகவிருந்தார். பிற ஐரோப்பிய நாடுகளிலிருந்து பேரறிஞர்களையும், கல்விமான்களையும் தன் அரண்மனைக்கு வரவழைத்து, ஒரு கலை-அறிவியல் மன்றத்தை ஏற்படுத்தினார். அவர்களுள் அலகுயின், எயின்கார்டு என்ற துறவிகள் முக்கியமானவர்கள். அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, பல பாடசாலைகளை ஆரம்பித்தார். எல்லா ஆயர்களும் தங்கள் பேரால-யத்துக்கு அருகில் ஒரு பாடசாலையை ஆரம்பிக்கும்படி பணித்தார். சார்லமேயின் ஏற்படுத்திய கிராமியப் பள்ளிகள் தொடக்க கல்வி நிலையங்களாக, பங்குத் தந்தையர்களின் பொறுப்பில் இருந்தன. அவற்றைவிட இசைப் பள்ளிகளையும், திருமறைப் பாக்கள் பள்ளிகளையும் ஏற்படுத்தினார் துறவியர் இல்லங்கள் அல்லது பேராலயக் கல்வி நிலையங்கள் உயர் கல்வி நிலையங்களாக விளங்கின. இப் பள்ளிகளில் எவ்வித வேறுபாடுமின்றி, பிரபுக்களின் குழந்தைகளும், பாமரப் பாட்டாளிகளின் பிள்ளைகளும் கல்வி கற்றனர்.

பேராலயப் பள்ளிகள் பின்னர் கீழ்தரம், உயர்தரம் எனப் பிரிக்கப்பட்டன. பொலோஞ்ஞா, பரிஸ் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட உயர்தர பாடசாலைகள் பின்னர் பல்கலைக்கழகங்களாக உயர்வடைந்தன. 11ம் நூற்றாண்டு கால வரையிலும் அனைத்துப் பாடசாலைகளும் துறவற சபைகள், மடங்கள், பேராலயங்களினாலேயே நடத்தப்பட்டன என்பதும், துறவறத்தினரே அதில் பெரும் பங்கெடுத்தனர் எனபதும் குறிப்பிடத்தக்கது.

சார்லமேயினின் ஆட்சிக்குப்பின் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட குழப்பங்களின் காரணமாக கல்விப் பணி, அறிவு விருத்தி தளர்ச்சியடைந்தது. 9ம், 10ம் நூற்றாண்டுகளில் அனைத்துப் பாடசாலைகளும் துறவற சபைகள், மடங்கள், பேராலயங்களினாலேயே நடத்தப்பட்டன. துறவறத்தினரே அதில் பெரும் பங்கெடுத்தனர். ஆனால் 11வது நூற்றாண்டில் தொடங்கிய நகரமயமாக்கலின் விளைவாக, அறிவு வளர்ச்சியில் விழிப்பு ஏற்பட்டு, ஐரோப்பாவின் பண்பாட்டில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. துறவறப் பாடசாலைகளில் ஏற்பட்ட இந்த மறுமலர்ச்சி வட ஐரோப்பாலிருந்த பேராலயப் பாடசாலைகளிலும், இத்தாலியிலிருந்த நகரப் பாடசலைகளிலும் காணப்பட்டன. 1170ம் ஆண்டளவில் அப் பாடசாலைகளில் சில பல்கலைக் கழகங்களாக வளர்ச்சி கண்டன. அவற்றில் பரிஸ், பொலொஞ்ஞா பல்கலைக் கழகங்கள் ஏனையவற்றிற்கு ஒரு மேல்வரிச் சட்டமாக இயங்கி, ஐரோப்பாவிலிருந்து பெருந் தொகையான மாணவர்களைக் கவர்ந்தன. தொடக்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும்பாலும் குருக்கள், துறவிகளாக இருந்தாலும், பொது நிலையினரும் அதில் சேர்ந்தனர். 1231 இல் திருத்தந்தை 9வது கிரகோரி பல்கலைக் கழகங்களுக்குரிய உரிமைகள் பற்றிய அறிக்கையை வெளியிட்டார். தொடர்ந்து இன்னும் பல பல்கலைக் கழகங்கள் தோன்றின: சலேர்ணோ (1200), ஒக்ஸ்போர்ட் (1200), கேம்பிரிட்ஜ் (1209), நேப்பிள்ஸ் (1224), பதுவை (1222), சலமாங்கா (1220), லூவெயின் (1425). இப் பல்கலைக் கழகங்களில் மருத்துவம், சட்டம் (திருச்சபை, அரச), இறையியல் (சித்தாந்தம்), சுதந்திரக் கலை (இலத்தின், வாக்கலங்காரம், அளவையியல், எண்கணிதம், கேத்திர கணிதம், வானவியல், சங்கீதம்) போன்ற நான்கு துறைகளே கற்பிக்கப்பட்டன. அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் அனைத்துப் பாடங்களும் படிப்பிக்கப்படவில்லை. சலேர்ணோ

மருத்துவத்துக்கும், பொலொஞ்ஞோ சட்டத்துக்கும், பரிஸ் இறையியலுக்கும் சிறந்து விளங்கின. 1230ம் ஆண்டுக்குப் பின்னரே ஒரு பல்கலைக் கழகத்தில் எல்லாத் துறைகளையும் படிக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. 12ம்-16ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பிரான்சில்-13, இத்தாலியில்- 17, இங்கிலாந்தில் - 5, ஜெர்மனியில்- 17, இஸ்பெயினில் - 10 பல்கலைக் கழகங்கள் இருந்தன. 14ம் நூற்றாண்டில் இப் பல்கலைக் கழகங்களுக்குச் சொந்தமான பல தனியார் கல்லூரிகளும் உருவாகின. அங்கு இலௌகீக, ஆன்மீக பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

மேற்கத்தேய நாகரீகத்துக்கு, சிறப்பாகக் கல்வித் துறைக்கு திருச்சபை ஆற்றிய மிகப் பெரிய பங்களிப்பு பல்கலைக் கழகங்களைத் தோற்றுவித்தமை எனக் கணிக்கப்படுகின்றது. ஐரோப்பிய வரலாற்றிலே பல்கலைக் கழகம் ஒரு புதிப் படைப்பாகக் கருதப்படுகின்றது. அது போன்ற ஒரு கல்வித் தாபனம் பண்டைய உரோமையிலோ, கிறீஸ் நாட்டிலோ காணப்பட்டதில்லை. நாம் இன்று காணுமாப்போல, ஒரு கல்விக் கூடத்தினில் பல தரப்பட்ட கலைப் பீடங்களும், துறைகளும், பல் வேறுபட்ட பாடங்களும், பரீட்சைகள், பட்டங்களும் கிடைக்கக் கூடியதான அமைப்பு எங்கும் இருந்ததில்லை. அவை மத்திய யுகத்திலே திருச்சபையால் தோற்றுவிக்கப்பட்ட கல்வித் தாபனங்களாக இருக்கின்றன. லோறி டேலி என்ற வரலாற்று ஆசிரியர் கருத்துப்படி இத்தகைய தாபனம் ஒன்றைத் தோற்றுவித்து வளர்க்க தன்னாலான அனைத்தையும் செய்யக்கூடிய அமைப்பு திருச்சபை ஒன்றே. ஏனெனில் ஐரோப்பாவில் கல்வி அறிவைப் பாதுகாக்கவும், அதை வளர்க்கவும் உறுதியாகவிருந்து, தொடர்ச்சியாக உழைத்த அமைப்பு அதுவேயாகும். திருத்தந்தையர்களும், திருச்சபையின் தலைவர்களும் பல்கலைக் கழகங்களை கிறிஸ்தவ நாகரீகத்தின் முத்துக்களாகக் கருதி, அதன் வளர்ச்சிக்காக கடுமையாக உழைத்து வந்திருக்கின்றனர். இவ்வாறாக கல்வித் துறையில் திருச்சபையின் பங்களிப்பானது மிக நீண்ட வரலாறு உடையது

## 7.3.2. விஞ்ஞான, தொழில் நுட்பத் துறையில் திருச்சபையின், கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் பங்களிப்பு

அண்மைக் காலங்களில் திருச்சபையானது விஞ்ஞானத்துக்கும், விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கும், தொழில் நுட்ப அபிவிருத்திகளுக்கும் எதிரானதென்ற தவறான கருத்து பல இடங்களிலும் பரவலாகப் பரப்பப்பட்டு வருகின்றது. ஆனால் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக உலகில் விஞ்ஞான வரலாற்றை ஆராய்ந்து படித்த ஜே. எல். கேயில்பிறொன், எ. சி. கிறொம்பி, டேவிட் லின்ட்பேர்க், எட்வேட் கிறான்ற் போன்ற பல பிரபல விஞ்ஞான வரலாற்றாளர்கள், மேற்கத்தேய விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சிக்கு திருச்சபை போன்று வேறெந்த ஒரு தாபனமும் ஆக்கபூர்வமான முறையில் பங்களிப்புச் செய்ய-வில்லையெனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். அதற்கு ஆதாரமாக உலக வரலாற்றிலே விஞ்ஞான ஆராய்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சிக்காக பெரும் பங்களிப்புச் செய்துள்ள நூற்றுக் கணக்கான குருக்களின், துறவிகளின் பெயர்களைக் கூறி, அவர்களின் பங்களிப்புகளைக் குறிப்பிடுகின்றனர். துறவறசபைகளின் ஆரம்ப காலத்திலிருந்தே திருச்சபை விஞ்ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, அவற்றின் அபிவிருத்திக்காகப் பங்களிப்புச்செய்து வந்திருக்கிறது. உலக ஆரம்பத்திலேயே இறைவன் மனிதனைப் படைத்த பொழுது, "மண்ணுலகை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்" எனக் கூறியதாக தொடக்க நூல் கூறுகின்றது. மேலும் "ஏதேன் தோட்டத்தை பண்படுத்தவும், பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்" எனக் கூறுகின்றது. அதற்கமைய திருச்சபையானது ஆரம்ப காலந் தொட்டு விஞ்ஞான ஆராய்ச்சிகளையும், தொழில் நுட்ப அபிவிருத்திகளையும் ஊக்குவித்து, வளர்த்து வந்திருக்கிறது. காலாகாலமாக புனித அகுஸ்தின், புனித தோமாஸ் அகுவைனஸ் போன்ற திருச்சபையின் சிந்தனையாளர்கள் இறைவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கும் கொடைகளாகிய சிந்திக்கும், ஆற்றல், ஆராய்ச்சி செய்யும் திறன்களை வலியுறுத்தி, விஞ்ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சியில், வளர்ச்சியில் அவற்றைப் பயன்படுத்த கிறிஸ்தவர்களை ஊக்குவித்து வந்திருக்கின்றனர். அண்மையில்

திருத்தந்தை 2வது ஜோண் பவுல் வெளியிட்ட "விசுவாசமும் பகுத்தறிவும்" (Fides et Ratio) என்ற சுற்று மடலிலும், விஞ்ஞானிகளுக்கு அளித்த பல உரைகளிலும் கிறிஸ்தவர்களை விஞ்ஞான ஆராய்ச்சியில், தொழில் நுட்ப வளர்ச்சியில் ஈடுபட்டு உழைக்க அழைத்து, ஊக்குவித்திருக்கிறார்.

திருச்சபையின் ஆரம்ப காலத்தில் துறவற மடங்களும், ஆச்சிரமங்களும் கல்விக் கூடங்களாக மட்டுமல்ல, விஞ்ஞான ஆராய்ச்சி, ஆய்வுக் கூடங்களாகவும், தொழில் நுட்ப அபிவிருத்தி நிலையங்களாகவும் செயல்பட்டன. துறவற மடங்களும், ஆச்சிரமங்களும் பொதுவாக ஏராளமான நிலம் கிடைக்கக்கூடிய வனாந்திரங்களிலும், பாலைநிலங்களிலும், கிராமப்புறங்களிலுமே அமைக்கப்பட்டன. அக்காலத்தில் மனித உழைப்பு, தொழிலானது அடிமைத்தனத்தின் அடையாளமாகக் கருதப்பட்டு, இழிவாக நோக்கப்பட்டது. ஆனால் துறவிகள் தங்களின் கடின உழைப்பினால் மனித உழைப்பின், தொழிலின் மாண்பை, மேன்மையை மக்களுக்கு உணர்த்தினர். பொதுவாக ஆசீர்வாதப்பர் துறவிகளின் மடங்கள் பாலைவனங்கள், கிராமப் புறங்களிலேயே அமைக்கப்பட்டன. அவர்கள் சென்றவிடமெல்லாம், மறைபோதகப் பணியில் ஈடுபடாத துறவிகள், நிலத்தை உழுது, பண்படுத்தி, விவசாயத்தில் ஈடுபட்டனர். காடுகளை அழித்து, வரண்ட கரடுமுரடான தறையைப் பண்படுத்தி, செழிப்பான விளைநிலமாக மாற்றினர். கைத் தொழில் பேட்டைகளை அமைத்து, புதிய தொழில்களையும், புதிய தொழில் முறைகளைகளையும் கண்டுபிடித்து, கற்றுக் கொடுத்தனர். சாதாரண மக்கள் துறவற மடங்களிலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட கைத்தொழில், விவசாயம், ஓவியம், விஞ்ஞானம், சரியான நிர்வாகம்பற்றி அறிய வந்தனர். உற்பத்தியைப் பெருக்க புதிய புதிய தொழில் நுட்ப முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. துறவிகள் தங்கள் தோட்டம், வயல், தொழிலிலிருந்து பெற்ற வருவாயை, வறியவர்களின், பசியாயிருப்பவர்களின் தேவைகளை நிறைவுசெய்யத் தாராளமாகப் பயன்படுத்தினர். துறவிகள் தூரநோக்குடன் செயற்பட்டமையால், வெகுவிரைவில் துறவற மடங்களைச் சுற்றிவர பல பெரிய நகரங்கள் தோன்றின. தாராள குணமுள்ள பல மடாதிபர்கள் ஏழை மக்களின் நன்மை கருதி, தெருக்களை அமைப்பதிலும், பாலங்கள் கட்டுவதிலும், நீர்ப்பாசன வசதிகளை அதிகரிப்பதிலும் ஏராளமான

பணத்தைச் செலவுசெய்து, மக்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்த முயற்சிகள் எடுத்தனர்.

மத்திய யுகத்தில் குருக்கள், துறவிகளால் தோற்றுவிக்கப்பட்ட பலகலைக் கழகங்கள் விஞ்ஞான ஆய்வுக் கூடங்களாகவும், தொழில் நுட்ப ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையங்காகவும் செயற்பட்டன. அதன் விளைவாக பல கிறிஸ்தவர்கள், குறிப்பாக குருக்களும், துறவிகளும் சிறந்த விஞ்ஞானிகளாகவும், தொழில் நுட்ப நிபுணர்களாகவும் உருவாகினர். உதாரணமாக, முதன்முதலாக வானிலிருந்து பூமியை நோக்கி விழும் சடப் பொருளின் வேகத்தை அளந்தவர் கியாம்பப்ரிஸ்றா றிச்சியோலி என்னும் குருவாவார். புராதன எகிப்து நாட்டு மதம், மொழி, இலக்கியம், சிற்பம், சித்திரம் போன்றவற்றின் ஆராய்ச்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர் அத்தனேசியஸ் கேர்ச்சர் என்ற குருவாவார். அவர் "நூறு கலைகளின் ஆசான்" என்றும் அழைக்கப்படுகின்றார். "யூகோஸ்லாவியாவின் அதி சிறந்த விஞ்ஞானி" என்றழைக்கப்படும் றோஜர் பொஸ்கோவிச் என்ற குருவானவரே நவீன அணுக் கோட்பாட்டின் தந்தையாவார். மத்திய யுகத்தில் பெரும்பாலும் இயேசு சபைக் குருக்களே விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளனர். எனவே சந்திரனில் காணப்படும் 32 கிடங்குகளுக்கு இயேசு சபை விஞ்ஞானிகளின், கணித ஆசிரியர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 18ம் நூற்றாண்டில் இயேசு சபைக் குருக்கள் தொங்கு கடிகாரங்கள் (Pendulum Clocks), கட்டிட வரை படங்கள் வரைதல் (Pantographs), வாயு பாரமானி (Barometer), தூரதரிசினி (Telescope), நுண் நோக்கி (Microscope) போன்றவற்றின் விருத்திக்கு பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். மேலும் காந்த ஈர்ப்புச் சக்தி (Magnetism), மின்சாரம் (Electricity), கண் பார்வையின் செயற்பாடு (Optics) போன்ற துறைகளின் வளர்ச்சியிலும் அவர்கள் பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். இரத்த ஓட்டம், வானூர்தி பறப்பதன் சாத்தியம், சந்திர கிரணம், ஒளியின் அலை போன்றவற்றின் இயல்புகளைக் கற்றறிந்து. அறிமுகம் செய்தார்கள். விண்மீன்களின் படங்கள், அளவையியல், வெள்ளத் தடுப்பு முறைகள் போன்றவற்றையும் அறிமுகம் செய்து வைத்தனர். இயேசு சபை விஞ்ஞானிகள் பூமி அதிர்ச்சி பற்றிய அறிவுத்துறையில் (Seismology) எவ்வளவு முக்கிய இடத்தை வகிக்கின்றனர் என்றால் அது

"இயேசு சபையினரின் விஞ்ஞானம்" என அழைக்கப்படுகின்றது. ஜே. பி. மேசல்வேன் (J.B.Macelwane) என்ற இயேசு சபைக் குருவே அமெரிக்காவில் பயன்படுத்தப்படும் பூமி அதிர்வு பற்றிய பாடப் புத்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கிறார். மனிதனின் பரிணாம வளரச்சி வரலாற்றைப் பற்றிய முழுமையான சித்தாந்தத்தை முன் வைத்திருக்கும் சிந்தனையாளர்கள் மத்தியில் ரேயாட் டி சாட்டைன் (Teilhard de Chardin) என்ற இயேசு சபைக் குரு முன்னணி வகிக்கிறார். உயிரற்ற பொருள்களிலிருந்து (Inanimate) ஆரம்பித்து, உயிர் பெறுவதைக் கடந்து, இன்றைய மனிதனின் வளர்ச்சியை மட்டுமல்லாமல், எதிரகாலத்தில இடம்பெறப்போகின்ற வளர்ச்சியைப் பற்றிய எறிகையுடன் (Projection) கூடிய விரிவான தத்துவங்களையும் முன்வைத்திருக்கிறார். அவர் ஒரு கிறிஸ்தவனும், மிக உயர்ந்த நிலையிலிருந்த விஞ்ஞானியுமாவார். மதமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று முரணா-னவை எனக் அவர் கருதவில்லை. பழமைவாய்ந்த உயிரினங்களின் எலும்புகள் பற்றி ஆராய்ச்சியானது உயிருள்ள இயேசுக் கிறிஸ்துவை அவற்றினூடாக அனுபவிக்கும் பொழுதே முழுமைபெறுகிறதென்பது அவருடைய கருத்தாகும்.

இயேசு சபைக் குருக்களே மேற்கத்தேய விஞ்ஞான அறிவுகளை, கண்டுபிடிப்புகளை மத்திய, தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, தூர கிழக்கு நாடுகளாகிய இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற இடங்களுக்கு எடுத்துச் சென்று, அறிமுகம் செய்து வைத்தவர்கள். அவர்களே 19ம் நூற்றாண்டில் இக் கண்டங்களில் விண்மீன் ஆராய்ச்சி நிலையங்கள், காலநிலை அவதானிப்பு நிலையங்கள், பூமியதிர்வை அளக்கும் நிலையங்கள், இயற்கை அனர்த்தங்களை முன்னறிவிக்கும் நிலையங்கள் போன்றவற்றை அமைத்து, மக்கள் மத்தியில் அவ் விஞ்ஞான அறிவை வளர்த்தவர்கள். ஐரோப்பாவிலும், பொலொஞ்ஞோ, புளோறன்ஸ், பரிஸ், உரோமைப் பேராலயங்களின் கோபுரங்களுக்கு மேலேயே இன்றும் சூரிய அவதானிப்பு நிலையங்கள் செயல்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கது. அவற்றைவிடத் திறமையான அவதானிப்பு நிலையங்களை நாம் எங்கும் காணமுடியாது.

குருக்கள், துறவியர்களை விட, வேறு பல சாதாரண கிறிஸ்தவர்களும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு. தொழில் நுட்ப

அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். அவர்களில் பின்வருபவர்களை நாம் குறிப்பிடலாம்:

**நிக்கொலாஸ் கொபர்நிகஸ்** (1473-1543) போலாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ விண் ஆராய்ச்சியாளர். அவரே அந் நாள்வரை இருந்துவந்த சூரியன் பூமியைச் சுற்றி வருகிறதென்ற கருத்துக்கு மாறாக, சூரியன் நிலையாயிருக்க, பூமியே சூரியனைச் சுற்றிவருகிறதென்ற புரட்சிகரமான சிந்தனையை அறிமுகம் செய்தவர்.

**சேர் ஐசக் நியூற்றன்** (1643-1727) இங்கிலாந்திலுள்ள வுல்ஸ்தோப் என்னும் கிராமத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ விஞ்ஞானி. பௌதீகவியல், கணிதம், வானவியல் போன்றவற்றில் பாண்டித்தியம் பெற்று, நவீன கால தத்துவ ஞானியாகவும், இறையியலாளராகவும் இருந்தார். விஞ்ஞானத்துக்கு முரணற்ற இறைவனில் நம்பிக்கை வைத்ததோடு, அவரே புவி ஈர்ப்புக் கொள்கையைக் கண்டு பிடித்து, அசைவு (motion) பற்றிய 3 விதிகளை முன்வைத்தார். மேலும் நிலங்களை அறிதல், சூரிய மண்டலத்தைப்பற்றிய தகவல்களை வெளிப்படுத்தல், பிரதி விம்பம் காட்டும் தொலை நோக்குக் கருவியை நிறுவுதல், கடலில் ஏற்படும் ஏற்றம், இறக்கம் ஆகிய பல தகவல்களை வெளியிட்டு, உலகிற்கு அளித்தார்.

**எட்வேட் ஜென்னர்** (1749-1823) ஒரு ஆங்கிலேய கிறிஸ்தவ விஞ்ஞானி. அவர் தான் வாழ்ந்த சூழல், சுற்றாடலைப் நன்றாகப் படித்து, சின்ன அம்மை நோயுக்குரிய தடுப்பு ஊசி மருந்தைக் கண்டுபிடித்தவர். அவர் பொதுவாக "தடுப்பூசிகளின் தந்தை" என அழைக்கப்படுகிறார். அவருடைய கண்டு பிடிப்பு இலட்சக் கணக்கான மக்களின் உயிரைக் காப்பாற்றி உள்ளது.

**லூயிஸ் பாஸ்ரர்** (1822-1895) பிரான்ஸ் நாட்டிலுள்ள டோல் என்னுமிடத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ பௌதீக விஞ்ஞானியும், நுணுக் கிருமி ஆராய்ச்சியாளருமாவர். அவரே தொற்று நோய்களின் காரணங்களையும், அவற்றிற்குரிய தடுப்பு வழிகளையும் கண்டுபிடித்தவர். விசர் நாய்க் கடிப்புக்குரிய தடுப்பு ஊசி மருந்தைக் கண்டுபிடிததவர் அவரே. தொற்று நோய்க் கிருமிகளைக் கண்டுபிடித்தவரும் அவரே.

**அலெக்சான்டர் கிறஹம்பெல்** (1847-1922) ஸ்கொட்லாந்தில் எடின்பரோ

நகரத்தில் பிறந்தவர். இலண்டன் பல்கலைக் கழகத்தில் படித்தவர். 1876ம் ஆண்டில் தொலை பேசிக் கருவியைக் கண்டுபிடித்தார். மேலும் கேள்வி, பார்வை குறைந்த பிள்ளைகளுக்கு உதவுவதற்காக கருவிகள் சிலவற்றை உற்பத்தி செய்தார். அவர்களைக் கற்பிப்பதற்கென்று ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சியளிக்க விசேட பாடசாலைகளை ஒழுங்கு செய்வதில் முன்னோடியாகவிருந்தார். பொஸ்மன்னில் செவிப்புலனற்ற பிள்ளைகளுக்காக பல்கலைக் கழகமொன்றையும் உருவாக்கினார்.

**தோமாஸ் அல்வா எடிசன்** (1847-1931) ஒரு அமெரிக்க கிறிஸ்தவ விஞ்ஞானி, கணடுபிடிப்பாளர். அவரே பல வகையான தொலைபேசிகள், தொடர்பு சாதனங்கள், ஓடும் படங்களை எடுக்கும் கமராக்கள், நீண்ட காலம் எரியும் மின் குமிழ்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்தவர். அவரே முதலில் அக் கருவிகளை பெருந் தொகையாக உற்பத்தி-செய்து, மக்கள் பாவனைக்கு அளித்தவர். ஆகவே அவர் முதல் கைத் தொழில் ஆய்வுக் கூடத்தை அமைத்தவராகக் கருதப்படுகிறார். அவரே முதல் மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்கா நியூயோர்க்கில் அமைத்து, வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும், வியாபாரத் தலங்களுக்கும் மின் சக்தியைப் பகிர்ந்து அளித்து, ஒரு கைத் தொழில் புரட்சியையே ஏற்படுத்தியவர்.

**அல்பேர்ட் ஐன்ஸ்டயின்** (1879-1955) ஜெர்மனியில் பிறந்த ஒரு யூத கத்தோலிக்கர். அவரே உலகில் செல்வாக்குள்ள மிகச் சிறந்த விஞ்ஞானியென்றும், அறிவாளியென்றும் கருதப்படுகிறார். அவர் நவீன பௌதீகத்தின் தந்தை என்றழைக்கப்படுகிறார். 1847 இல் அவருக்கு பௌதீகத்திற்குரிய நோபல் பரிசு கிடைத்தது. அவர் பல முக்கிய விஞ்ஞான கொள்கைகளைக் கண்டுபிடித்திருக்கிறார். ஒப்பீட்டு வாதத்தை முன்வைத்து, மின் சக்தி, காந்த சக்தி, புவியீர்ப்புச் சக்தி ஆகியன ஒரே மூலத்தினின்று உருவாகின்றன என்பதை எடுத்துரைத்தார். 300க்கு அதிகமான விஞ்ஞான நூல்களை எழுதி, வெளியிட்டிருக்கிறார்.

**அலெக்சாந்தர் பிளேமிங்** (1881-1955) ஸ்கொட்லாந்தில், அயேஸர் லோஸீபிள்ட் எனும் ஊரில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்த கிறிஸ்தவராவார். இளம் வயதில் பொருளாதாரப் பிரச்சினைகளால் பல துன்பங்களுக்கு ஆளாகி, லண்டன் சென்று, ஒரு எழுத்து

வினைஞராக உழைத்தார். அங்கு சேமித்த பணத்தைக் கொண்டு இலண்டன் புனித மேரி மருத்துவ மனையோடு இணைந்த மருத்துவக் கல்லூரியில் பயின்று, ஒரு வைத்திய நிபுணரானார். கிருமி தடுப்பு. நோய் தடுப்பு இயல்பு கொண்ட பதார்த்தங்களை ஆய்வு செய்து, 1929 இல் பென்சிலின் என்ற தடுப்பு ஊசி மருந்தைக் கண்டுபிடித்தார். பென்சிலின் மாற்று மருந்தினைக் கண்டுபிடித்த அவருக்கு 1945 இல் மருத்துவத்துக்குரிய நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

இவ்வாறாக விஞ்ஞான ஆய்வுகளுக்கும், தொழில் நுட்ப அபிவிருத்திக்கும் திருச்சபையும் கிறிஸ்தவர்களும் ஆற்றியுள்ள பங்கு அளப்பரியது. அரேபியா, சீனா, பபிலோனியா, இந்தியா போன்ற நாடுகளைவிட, கிறிஸ்தவ நாகரீகத்தைக் கொண்ட நாடாகிய ஐரோப்பாவிலேயே விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் செழித்து வளர்ந்தன. ஏனெனில் கிறிஸ்தவ உலக கண்ணோட்டமும், திருச்சபையின் ஆதரவும், ஊக்கமும் அதற்கு உதவியாக அமைந்தன. அதற்குத் தேவையான சூழலும், வசதிகளும், சந்தர்ப்பங்களும், ஒத்துழைப்பும் அங்கு கிடைத்தன.

## 7.3.3. கலைத் துறையின் வளர்ச்சிக்கு திருச்சபையின் பங்களிப்பு

கலை என்பது மனிதன் தன் உள்ளார்ந்த சிந்தனைகளை, எண்ணங்களை, உள்ளக் குமுறல்களை, உள்ளுணர்வுகளை புலன்களால் காணக்கூடிய, கேட்கக்கூடிய, அறியக்கூடிய முறையில் வெளிப்படுத்த எடுக்கும் முயற்சிகளைக் குறித்து நிற்கிறது. அக் கருத்தில் அது இலக்கியம், இசை, சங்கீதம், நடனம், சித்திரம், ஓவியம், சிற்பம், கட்டிட அமைப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது. இங்கு நாம் திருச்சபை, அதாவது கிறிஸ்தவர்கள் இலக்கியம், இசை, சங்கீதம், நடனம், சித்திரம், ஓவியம், சிற்பம், உலோக வேலை, கட்டிடக் கலை போன்றவற்றின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை ஆராய்கிறோம். கிறிஸ்தவ கலையானது இயேசுக் கிறிஸ்துவினதும், அவரது சீடர்கள், புனிதர்களினதும் வாழ்வு, காலம், பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் போன்றவற்றை வெளிப்படுத்த முயற்சிக்கின்றது. உரோமைய கலாபனைகள் முடிவடைந்த பின், நான்காம் நூற்றாண்டிலிருந்து

கிறிஸ்தவ கலை மேற்கத்தேய கலையின் வரலாற்றில், வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வந்திருக்கின்றது.

1. **கிறிஸ்தவ இலக்கியக் கலை** கிறிஸ்தவ ஆய்வுப் பொருள்கள் பற்றிய எழுத்தாக்கங்களைக் கிறிஸ்தவ உலக கண்ணோட்டத்தில் எமக்கு அளிக்கின்றது. அவை கிறிஸ்தவ உண்மைகள், ஒப்புவமைகள், கட்டுக் கதைகள், கவிதைகள், நாடகங்கள் என்ற வேறுபட்ட வடிவில் காணப்படுகின்றன. மத்திய காலம் வரை கிறிஸ்தவ இலக்கியங்கள் இலத்தின் மொழியிலேயே எழுதப்பட்டன. திருவிவிலியம் ஒரு இலக்கிய நூலாக இருந்தாலும், பொதுவாக அது ஒரு இலக்கிய நூலாகக் கருதப்படுவதில்லை. எனினும் அதன் இலக்கியத் தன்மை ஆராயப்பட்டு, பாராட்டுக்கு உள்ளாகியிருக்கின்றது. கிங் ஜேம்சுடைய விவிலிய மொழி பெயர்ப்பானது ஒரு சிறந்த ஆங்கில கவிதையாகக் கருதப்படுகின்றது. திருவிவிலியத்தின் அல்லது அதன் சில பகுதிகளின் வேறு பல மொழிபெயர்ப்புகளும், அதன் இலக்கியச் சிறப்பை வலியுறுத்தும் நோக்குடன் செய்யப்பட்டிருக்கின்றன. புனித அவிலா திரேசா எழுதிய "நிறைவாழ்வின் வழி" (The Way of Perfection), "உள்ளக மாளிகை (Interior Castle), புனித சிலுவை அருளப்பர் எழுதிய "கார்மேல்மலை ஏற்றம்" (The Ascent of Mount Carmel), "இருண்ட இரவு" (The Dark Night), "ஆன்மீகப் பாடல்" (The Spiritual Canticle), "அன்பின் அணையாச் சுவாலை" (The Living Flame of Love), புனித பத்திரிசியார் பாதுகாப்புப்பற்றி எழுதிய "மார்புக் கவசம்" (St. Patrick's Breast-plate), டான்ரே நரகத்தின் ஊடாக பரலோகம் நோக்கிய பயணம் பற்றி எழுதிய "தெய்வீக இன்பியல் நாடகம்" (The Divine Comedy), செலானோ தோமாஸ் கடைசித் தீர்ப்பைப்பற்றி எழுதிய "கோபத்தின் நாள்" (Dies Irae), ஜோண் மில்ரன் மனிதனின் வீழ்ச்சி, மீட்புப் பற்றி எழுதிய "இழந்த இன்பவனம்" (Paradise Lost), "மீளப்பெற்ற இன்பவனம்" (Paradise Regained) என்பன சிறந்த கிறிஸ்தவ இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. இப்பொழுது கிறிஸ்தவ இலக்கியங்களின் வேறுபட்ட வடிவங்களைப் பார்ப்போம்.

**கிறிஸ்தவ உண்மைகள்** (Non-Fiction) : கிறிஸ்துவின் காலத்திலிருந்து அவருடைய போதனைகளின் எண்ணக் கருக்கள் பற்றிய கடிதங்கள், இறையியல் ஆய்வு நூல்கள், அறிவை, பக்தியை வளர்க்கும் ஆய்வுக்

கட்டுரைகள் என்பன எழுத்தாக்கம் பெற்றிருகின்றன. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அவை கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பவும், அது பற்றிய வெவ்வேறு கருத்துக்களை வளர்க்கவும் பயன்படுத்தப்பட்டன. புரொட்டஸ்தாந்து சீர்திருத்த காலத்தில் சில கருத்துக்களை விளக்கவும், அதை மற்றவர்கள் அறியச் செய்யவும் சில சிறிய, சிறிய துண்டுப் பிரசுரங்களும் எழுத்தாக்கம் பெற்றன.

**கிறிஸ்தவ ஒப்புவமைகள்** (Allegory) : அவை கிறிஸ்தவ உண்மைகளை வெளிப்படுத்த அடையாள நபர்களையும், செயல்களையும், பிரதிநிதிப்படுத்தல்களையும் பயன்படுத்தி, கதை வடிவில் எழுத்தாக்கம் பெற்ற இலக்கியங்கள். கிறிஸ்து பயன்படுத்திய உவமைகளைத் தொடர்ந்து, ஒப்புவமைகளைப் பயன்படுத்தும் நீண்ட கிறிஸ்தவ பாரம்பரியம் இருந்து வருகின்றது. டான்ரே அல்கியேர் இத்தாலிய மொழியில் எழுதிய “தெய்வீக இன்பியல் நாடகம்” (Divine Comedy), ஜோண் பனியன் எழுதிய “யாத்திரிகனின் பயணம்” (The Pilgrim’s Progress) என்பன கிறிஸ்தவ ஒப்புவமைகளுக்கு உதாரணங்களாக உள்ளன.

**கிறிஸ்தவ கட்டுக் கதைகள்** (Fiction): இவற்றை நாம் கிறிஸ்தவ நாவல்கள் என அழைக்கலாம். இவற்றில் கிறிஸ்தவ ஆய்வுப் பொருள்கள் தெளிவாக வெளிவருவதில்லை. சில முன்னைய காலத்திய ஒப்புவமைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. உதா. சி. எஸ் லூயிஸ் எழுதிய நூல். சிலவற்றில் கிறிஸ்தவ ஆய்வுப் பொருள்கள் மறைமுகமாகக் காணப்படுகின்றன. ஜே. ஆர். ஆர் ரொல்கி-யென், ஜி. கே. சேஸ்ரேர்ட்டன எழுதிய நூல்கள் கட்டுக் கதைகளுக்கு உதாரணங்களாக இருக்கின்றன. அண்மைக் காலங்களில் வட அமெரிக்காவில் கிறிஸ்தவர்களால் கிறிஸ்தவர்களுக்கென்று எழுதப்பட்ட கிறிஸ்தவ ஆய்வுப் பொருள்களுடைய நாவல்கள் அதிகம் காணப்படுகின்றன.

**கிறிஸ்தவ கவிதைகள்** (Poetry) : கிறிஸ்தவ படிப்பினைகள், ஆய்வுப் பொருள்கள், எண்ணக் கருக்களைக் கொண்ட கவிதைகள் கிறிஸ்தவ கவிதைகள் என அழைக்கப்படுகின்றன. கிறிஸ்தவத்தின் ஆரம்பம் தொடக்கம் கவிதைகள் கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. தொடக்கத்தில் அவை கிரேக்க, இலத்தின் மொழிக-

ளில் எழுதப்பட்டன. முதல் கிறிஸ்தவ கவிதைகளை நாம் நற்செய்திகளில் காண்கிறோம். உதா. மரியாளின் பாடல், சிமியோனின் பாடல். புனித பவுலின் திருமுகங்களிலும் சில கவிதைகள் காணப்படுகின்றன. உதா. இயேசுவின் தாழ்மை பற்றிய கவிதை (பிலி. 2:5-11). வெனான்சியஸ் போர்ருனாற்றுஸ் என்பவர் எழுதிய பல கவிதைகள் (Vexilla Regis, Pange Lingua) இன்றும் வழிபாட்டில் பயன்படுத்தப்படுகின்றன. பல எழுத்தாளர்கள் கிறிஸ்தவ ஆய்வுப் பொருள்கள்பற்றி கவிதை வடிவில் எழுதியிருக்கிறார்கள். பிரான்சீஸ்கு அசீசியார, டான்ரே, சீயென்னா கதரீன், அவிலா திரேசா, ஜோண் அருளப்பர், தோமாஸ் மேர்ட்டன், வில்லியம் பிளேக் போன்ற பலர் கிறிஸ்தவ கவிதைகளை எழுதியிருக்கிறார்கள.

**கிறிஸ்தவ நாடகம்** (Theatre): ஆரம்பத்தில் திருப்பலி வழிபாடு நாடக பாணியிலேயே ஒப்புக் கொடுக்கப்பட்டது. பின்னர் திருப்பலியின் ஒரு அம்சமாக நற்செய்தியின் நிகழ்வுகள் மக்களுக்கு விளங்கக்கூடிய, மக்களைக் கவரக்கூடிய முறையில் பாடல்களுடன் நடித்துக் காட்டப்பட்டன. சில வேளைகளில் திருப்பலியின் ஆரம்பத்தில் நடிகர் குழு தோன்றீ, சில நற்செய்தி நிகழ்வுகளை சம்பாஷனை முறையில் நடித்துக்காட்டினர். ஆரம்பத்தில் சந்நிதானத்தில் இடம்பெற்ற இந் நாடகங்கள், பின்னர் ஆலயத்தின் நடுப்பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு, பின்னர் ஆலய மைதானத்தில் இடம்பெற்றன. மத்திய யுகத்திலே விவிலிய கதைகளை நினைவுபடுத்தும் நோக்குடன் பல "மறைபொருள் நாடகங்கள்" (Mystery plays) இடம் பெற்றன. 13ம் நூறறாண்டு வரை இலத்தின் மொழியில் இடம் பெற்ற இந்நாடகங்கள் பின்னர் சுதேச மொழிகளில் இடம் பெற்றன. 15ம் ஆண்டுக் காலத்தில் அவை எங்கும் பரவி, மறைபரப்புப் பணியில் முக்கிய இடத்தை எடுத்தன. அவை வழியாக கிறிஸ்தவ படிப்பினைகள் மக்களுக்கு அளிக்கப்பட்டன. 15ம், 16ம் நூற்றாண்டுகளில் அவை ஒழுக்க வாழ்வில் மக்களை அறிவுறுத்தும் ஒழுக்க நெறி நாடகங்களாக (Morality plays) வளர்ச்சியடைந்தன. 18ம், 19ம் நூற்றாண்டுகளில் அதை தீமையான-தெனத் தடை செய்யப்பட்டாலும், 20ம் நூற்றாண்டில் அவை மறைபரப்புதலுக்கு சிறந்த முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**2. கிறிஸ்தவ இசை, சங்கீதம்**: கிறிஸ்தவ இசை, சங்கீதம் என்பது கிறிஸ்தவ ஆலயங்களில், பேராலயங்களில் அல்லது மக்கள் இறைவனை வழிபடக் கூடும் இடங்களில் நடைபெறும் வழிபாடுகள், சடங்குகளின்போது பாடப்பட இயற்றப்பட்ட பாடல்களாகும். அவை கிறிஸ்தவ வாழ்வு, விசுவாசம் பற்றிய தனிப்பட்ட ஒருவரின் அல்லது ஒரு கிறிஸ்தவ சமூகத்தின் நம்பிக்கையை வெளிப்படுத்த எழுதப்பட்டவை. கிறிஸ்தவ சங்கீதம் இறைவனைப் புகழ்வது, வழிபடுவது, மனம்வருந்துவது, கண்ணீர் சிந்துவது போன்ற கிறிஸ்தவ உணர்வுகளை உள்ளடக்குகின்றது. ஆனால் அதன் உருவாக்கம், பாடப்படும் வடிவம், அதன் முக்கியத்தவம் என்பன கலாச்சாரம், சமூக சூழலுக்கு ஏற்ப இடத்துக்கு இடம் வேறுபடுகின்றது. கிறிஸ்தவ சங்கீதமானது இரசனை, மத வழிபாடு, சடங்கு, மகிழ்வித்தல், கலை நிகழ்ச்சி போன்ற பலவித நோக்கங்களுக்காக இயற்றப்பட்டு, பாடப்படலாம். ஆனால் பொதுவாக அவை மத வழிபாடுகள், சடங்குகளிலேயே பாடப்படுகின்றன. சில பாடல்கள மத விடயங்களைப்பற்றியதாக இருக்கலாம், ஆனால் அவை வழிபாடுகளில் பயன்படுத்தவென இயற்றப்படவில்லை. மாறாக மக்களை மகிழ்வின்கும் நோக்குடன், கலை இரசனைக்காக எழுதப்பட்டவை. அவற்றை நாம் திருச்சபையின் இசையெனச் சொல்வதில்லை. திருச்சபையின் பாடல்கள் விசுவாசகளின் சமூகத்தினாலேயோ, அல்லது ஒரு பாடகர் குழுவினாலேயோ, அல்லது சில குறிப்பிட்ட நபர்களினாலேயோ பாடப்படும். அவை வழமையாக ஆர்மோனியம், பியானோ, வீணை, வயலின், கிற்றார் போன்ற இசைக் கருவிகளின் உதவியுடன் பாடப்படும். சில வேளைகளில் பல இசை வாத்தியங்களும் பயன்படுத்தப்படலாம். ஆனால் அவை பொதுவாக ஆர்மோனியத்துடனேயே பாடப்படும். சில புரொட்டஸ்தாந்து சபைகள் எவ்வித இசைக் கருவிகளும் பயன்படுத்தப்படாமல் பாடுவதையே விரும்புவர்.

கிறிஸ்துவின் காலத்திலிருந்தே அவருடைய சீடர்கள் சங்கீதங்களை, பாடல்களைப் பாடி வந்திருக்கிறார்கள். இயேசுவும் சீடர்களும் பங்குபற்றிய எருசலேம் ஆலய யூத வழிபாட்டிலே பாடல்களும், சங்கீதங்களும் பாடப்பட்டு, இசைக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. இயேசு தம் பாடுகளுக்காக எருசலேம் நோக்கி பவனியாக வந்தபொழுது, மக்கள் கூட்டம் கடவுளைப் பகழ்ந்து

“கோசான்னா” பாடினர் என வாசிக்கிறோம். இறுதி இராவுணவின் பின்னர் இயேசுவும், சீடர்களும் புகழ்ப் பாடல் (ஹலேல்) பாடிவிட்டு ஒலிவ மலைக்குச் சென்றனரெனக் கூறப்படுகிறது. புனித பவுல் எபேசியரையும், கொலோசியரையும் திருப்பாடல்கள், புகழ்ச்சிப் பாக்கள், ஆவிக்குரிய பாடல்களைப் பாடி, ஆண்டவரைப் போற்றும்படியாகக் கூறுகிறார் (எபே. 5:19, கொலோ. 3:16). ஆதிக் கிறிஸ்தவர்களின் வழிபாட்டிலும், சடங்குகளிலும் திருப் பாடல்கள், புகழ்ப்பாக்கள் பாடப்பட்டனவென புனித அம்புறோஸ் போன்ற திருத்தந்தையரின் நூல்களில் படிக்கிறோம். பிளினி என்ற வரலாற்று ஆசிரியர் கிறிஸ்தவர்கள் காலையில் ஒன்று கூடி, கிறிஸ்துவைக் கடவுளாக அறிக்கையிட்டுப் பாடினர் எனக் கூறுகிறார். எனவே திருச்சபையின் ஆரம்பத்திலிருந்தே திருச்சபையின் வழிபாட்டில், சடங்குகளில் சங்கீதம், இசை இருந்து வந்திருக்கிறது. வெவ்வேறு இடங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் அந்தந்த இடங்களில் காணப்பட்ட பாடல்களை, பரம்பரை இசைகளைப் பயன்படுத்தி வந்தார்கள். எனவே அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பயன்படுத்திய இசை பல்வேறுபட்டவையாகக் காணப்பட்டன. பின்னர் அம்புறோசியார், கிலாரியார் போன்ற திருச்சபையின் தந்தையர்கள் அழகான பாடல்களை இயற்றி அளித்திருக்கிறார்கள்.

ஆனால் கிறிஸ்தவ இசை, சங்கீதம் என்ற ஒன்று திருச்சபையின் வரலாற்றில் இருண்ட காலம் (500-1000) என்றழைக்கப்படும் மத்திய காலத்திலேயே முதன்முதலாகத் தோன்றியது. சிறப்பாக புனித பெனடிக்ற்றின் சபைத் துறவிகளின் மடங்களிலேயே முதன் முதலாக கிறிஸ்தவ இசை ஆரம்பித்ததைக் காண்கிறோம். அக்காலத்தில் அங்குதான் திருவழிபாட்டு முறை முறைமை சார்ந்ததாக தயாரிக்கப்-பட்டது. புனித பெனடிக்ற் எழுதிய துறவற சபைக்குரிய ஒழுங்குகளின்படி, துறவிகளின் அன்றாட வாழ்வில் திருப்புகழ் பாடுவது முக்கிய இடத்தை எடுத்தது. அவர்கள் ஒரு நாளில் ஒன்பது முறைகள் கூடி, திருப்பாக்கள் பாடினர். அதற்கென அவர்கள் அமைத்துக்கொண்ட இசை முறையே கிறிஸ்தவ வழிபாட்டுக்குப் பொருத்தமான சிறந்த மாதிரியென திருத்தந்தை 1வது கிரகோரியார் (540-604) ஏற்றுக் கொண்டார். அதன்படி பலரும் ஒன்று சேர்ந்து ஒரே தொனியில் (Mono-phonic) எளிய முறையில் பாடினர். அது பாடுவதற்கும், விளங்குவற்கும்,

மனித மனதை இறைவன்பால் இட்டுச் செல்வதற்கும் ஏற்றதாக, இலகுவாக, எளிய முறையில் அமைந்திருந்தது. அந்த இசை முறையில் (Plain Chant) சில மாற்றங்களையும், திருத்தங்களையும் செய்து, கிறிஸ்தவ வழிபாடுகளிலும், சடங்குகளிலும் பயன்படுத்தும்படி திருத்தந்தை கிரகோரியார் பணித்தார். அதுவே பின்னர் கிரகோரியாரின் இசை (Gregorian Chant) என அழைக்கப்பட்டு, மிகப் பிரபல்யமானது.

11ம், 12ம் நூற்றாண்டுகளில் கிரகோரி இசை முறையை விட, வேறு பல இசை முறைகள் தோன்றின. திருப்பலியில் அல்லேலூயாவுக்குப் பின் தொடர்பாடல் புகுத்தப்பட்டது. சேர்ந்திசை என்ற இசைமுறை பிரான்சில் பரீஸ் நோத்திர டேம் பேராலயத்தில் 1160-1240 இல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு பலர் பல தொனிகளில் ஒன்று சேர்ந்து பாடினர். அது "பொலிபொனி" (Polyphony) பாடல் முறையென அழைக்கப்பட்டது. அதில் அதிகமாக திருவழிபாட்டில் வரும் வார்த்தைகளே பாடப்பட்டன. திருப்பலியில் வரும் ஆறு முக்கிய பகுதிகள் (கிறியே (ஆண்டவரே இரக்கமாயிரும்), குளோரியா (வானவர் கீதம்), கிறேடோ (விசுவாச அறிக்கை), சாந்துஸ் - பெனடிக்ருஸ் (பரிசுத்தர், ஆண்டவர் பெயரால் வருபவர்), ஆஞ்ஞுஸ் டேயி (உலக பாவம் போக்கும்) என்பன பொலிபொனி முறையில் பாடுவதற்கு ஆயத்தப்படுத்தப் பட்டன. பின்னர் திரிதேந்தின் சங்கத்தின் விசேடமான சேர்ந்திசை தோன்றியது. அதில இசைக் கருவிகளையும், குரலொலிகளையும் ஒன்றாகக் கலந்து, ஒறத்தாறியோ சங்கீத முறை உருவாகிற்று. 12ம் நூற்றாண்டில் ஜெர்மனியில் றெயிக்னன், சான் கோல், பேர்கண்டியில் குளுனி, பரீசில் சான் விக்டர என்பன இலத்தின் பாடல்களின் மையங்களாகத் திகழ்ந்தன.

பிற்காலத்தில் பறோக் போன்ற புதிய இசைமுறைகள் ஆலயங்களில் பயன்படுத்தப்பட்டன. சில இசைகள் ஆலய வழிபாடுகளுக்குப் தகுந்தவையான அமையவில்லை. ஒரு முறை இசைப்பது இருமுறை செபிப்பதுக்கு ஒத்தது. மக்கள் மனதைக் குழப்பாமல், திசை திருப்பாமல், தியானிப்பதற்கு உதவியாக, கடவுளிடம் இட்டுச் செல்லக்கூடியவையாக இசை அமைய வேண்டும். எனவே திருத்தந்தையர்கள், குறிப்பாக திருத்தந்தை 10ம் பத்திநாதர், தலையிட்டு, ஆலய வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் இசைகளுக்குரிய

முறைகளை, கட்டுப்பாடுகளை, விதிகளை கொணர்ந்தனர். கிரகோரியன் இசை வழிபாடுகளுக்குச் சிறந்ததாக காணப்பட்டது. ஆர்காஞ்சலோ கொசெல்லி, பெத்தோவன், அமாடேயுஸ் மொசாட், ஜியோவன்னி கப்பிறியெலி, குளொடியோ மொனடரெவேர்டி, மகஸ் றீகர் என்பவர்கள முக்கியமான சிறந்த கிறிஸ்தவ இசை அமைப்பாளர்களாக இருந்தார்கள். திருத்தந்தை 12ம் பத்திநாதர் காலத்தில் சுதேச மொழிகளிலான இசைகள் ஆலயங்களில் பாடப்பட்டன. 2ம் வத்திக்கான் பொதுச் சங்கம் கொண்டுவந்த வழிபாட்டு மாற்றங்களை அடுத்து, சகல வழிபாடுகளும், இசைகளும் சுதேச மொழிகளிலேயே நடத்தப்படுகின்றன. அந்தந்த நாட்டின் பாரம்பரிய இசைகள் கிறிஸ்தவ வழிபாடுகளுக்கு உகந்த முறையில் தழுவி அமைக்கப்படுகின்றன.

**3. கிறிஸ்தவ கட்டிடக் கலை**: கிறிஸ்தவ கட்டிடக் கலை என்னும்போது நாம் கிறிஸ்தவ ஆலயங்கள், பேராலயங்களின் கட்டிட அமைப்பை, அவை கட்டப்பட்ட முறையை, அவற்றில் காணப்படும் கட்டிடக் கலையைக் குறிப்பிடுகிறோம். கிறிஸ்தவ ஆலயங்களின், பேராலயங்களின் கட்டிடக் கலையானது கிறிஸ்தவ மதத்தின் 2000 ஆண்டு வரலாற்றினூடாக, புதுப்பித்தல், பிற கட்டிடக் கலைகளை தழுவி அமைத்தல், மாறுபடும் தேவைகள், நம்பிக்கைகள், மாறுபடும் வழிபாட்டு முறைகள், பரம்பரை வழக்கங்களுக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்தல் போன்றவைகளின் தாக்கங்களினால் மாற்றமடைந்து, வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. அதன் விளைவாக கிறிஸ்தவ கட்டிடக் கலையானது கிறிஸ்தவத்தின் ஆரம்பம் முதல் இன்றுவரையிலான பல வேறுபட்ட மத. மத சார்பற்ற, பிற மத, அஞ்ஞான கட்டிட அமைப்பு முறைகளை உள்ளடக்குகின்றது.

திருச்சபையின் ஆரம்பத்தில், கிறிஸ்தவம் ஒரு தடைசெய்யப்பட்ட மதமாக இருந்த கட்டத்தில், கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாடுகளை யூதர்களுடன் இணைந்து அவர்களின் செபக்கூடங்களிலும், மற்றும் தங்கள் தனியார் வீடுகளிலும் நடத்திவந்தார்கள். கி.பி. 70 இல், ஜம்னியா சங்கத்தில் கிறிஸ்தவர்கள் யூத செகப்கூடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாடுகளைத் தொடர்ந்து தனியார் வீடுகளில் நடத்தி வந்தனர்.

அவை பல மாடிகளைக் கொண்ட வீடுகளின் மேலிருந்த மொட்டை மாடியில் அல்லது கூரை போடப்பட்டிருந்த முன் முற்றத்தில் இடம் பெற்றன. கலாபனையின்போது அவை சுரங்கங்களுக்கு அல்லது கல்லறைகளுக்கு மாற்றப்பட்டு, இரவில் இரகசியமாக நடைபெற்றன.

உரோமைப் பேரரசர் கொன்ஸ்தாந்தின் 313 இல் மிலான் இராஜ சாசனத்தைப் பிரகடனம் செய்ததை அடுத்து, கிறிஸ்தவம் ஒரு சட்டபூர்வமான, சுதந்திரமான, செல்வாக்குள்ள மதமாக மாறியது. எனவே ஏற்கனவே மத்திய தரை நாடுகளெங்கும் பரவியிருந்த கிறிஸ்தவ சமூகங்கள் கட்டிடங்களில் தம்மை வெளிப்படுத்தத் தொடங்கின. இங்கேதான் உண்மையான கிறிஸ்தவ கட்டிடக் கலை ஆரம்பமாகின்றது. அதிகமான கிறிஸ்தவர்கள் ஒரு குடும்பமாக, ஒருங்கே வழிபாடுகளில் பங்கெடுப்பதற்கு வசதியாக பெரிய, பிரமாண்டமான மண்டபங்கள் எழுந்தன. அவை அரச கட்டிடங்கள், அரசியல் காரியாலயங்களின் அமைப்பையும், நினைவு ஆலயங்களின் அமைப்பையும் ஒத்தவையாகக் கட்டப்பட்ட படியால், அவை “பசிலிக்கா” (Basilica) என அழைக்கப்பட்டன. அவை மையப் பகுதியையும் (Nave), இரு பக்கங்களையும் (Aisles) கொண்ட நீள் சதுரமான மண்டப வடிவில் அமைந்தன. அஞ்ஞான பசிலிக்காக்கள் அதன் மையமாக பேரரசரின் சிலையைக் கொண்டிருக்க, கிறிஸ்தவ பசிலாக்காக்களின் மையமாக விண்ணக அரசரான கடவுள் இருந்தார். அதன் கிழக்கு முனையில் பலிப்பீடம் அமைக்கப்பட்டு, அதன் பின் ஆயரின், குருக்களின் இருக்கைகள் அரை வட்ட வடிவில் இருந்தன. மேற்கு முனையில் போட்டிக்கோ வழியாக முன் மைதானத்துக்கு இட்டுச் செல்லும் கதவு ஒன்று இருந்தது. இந்த அமைப்பு முறை பொதுவாக உரோமை போன்ற மேற்கத்தேய நாடுகளில் காணப்பட்டாலும், கொன்ஸ்தாந்திநோபிள், பலஸ்தீன் போன்ற சில கீழைத்தேய நாடுகளிலும் காணப்பட்டன.

இதற்குள் கிறிஸ்தவர்கள் கிடைத்த சுதந்திரத்தை பயன்படுத்தி, பரிசுத்த பூமிக்கு, குறிப்பாக எருசலேமுக்கு, யாத்திரை போகத் தொடங்கினர். எருசலேமில் கிறிஸ்து மரணத்துக்கு தீர்வையிடப்பட்ட இடத்திலிருந்து, அவர் சிலுவையிலறையப்பட்ட கல்வாரியை நோக்கி சிலுவைப் பாதையாக பவனி சென்றனர். அங்கு கல்வாரியில் கல்லறைக்

கோயில் ஒன்று கட்டப்பட்டது. அதன் கிழக்கு முனையில் கிறிஸ்துவின் கல்லறையும், மேற்கு முனையில் கிறிஸ்து இறந்த கல்வாரி மலையும் இருந்தன. சிலுவைப் பாதைப் பவனி கோவிலின் மேற்கு முனையின் ஒரு பகுதிவழியாக படிகளை ஏறி கல்வாரி மலைக்குச் சென்று, பின்னர் மேற்கு முனையின் மற்றப் பகுதியிலிருந்த படிகள் வழியாக இறங்கி வந்தனர். இந்த இரு படிக்கட்டுகளையும் தாங்கிக் கொள்ள, மேற்கு முனையின் இரு பக்கத்திலும் இரு கோபுரங்கள் எழுந்தன. பின்னர் இந்த இரு கோபுரங்களும் கொப்பி பண்ணப்பட்டு, அதை நாம் ஐரோப்பாவிலுள்ள அநேக ஆலயங்களிலும், பேராலயங்களிலும் காண்கிறோம். உதா. இலண்டனிலுள்ள வெஸ்ற்மினிஸ்ரர் அபே. இதை உரோமைக் கட்டிடக் கலை என்பர்.

நான்காம் நூற்றாண்டில் உரோமைப் பேரரசு மேற்கு (உரோமை) அரசு, கிழக்கு (பைசாந்தியன்) அரசென பிளவுபட்டது. இப்பிரிவினை வளர்ந்து, 1054இல் கீழைத் தேய பெரிய பிரிவினையில் முடிவடைந்தது. இதன் விளைவாக கிறிஸ்தவ கட்டிடக் கலையிலும் வேறுபாடுகள் வளர்ந்தன. கிழக்கில் பசிலிக்காவுக்குப் பதிலாக, வட்ட வடிவிலான அல்லது மைய அமைப்பிலான ஆலயங்கள் தோன்றின. அவை பைசாந்தின் கட்டிடக் கலையென அழைக்கப்பட்டது. அதன் அமைப்பு கிரேக்க சிலுவை (நான்கு பக்கமும் சமன்) வடிவில் இருந்தது. முக்கியமான இடங்களை அலங்கரிப்பதற்கு கற்களுடன், அரிந்த கற்களும், சிறிய சதுர வடிவத் தூண்களும், மோசேயிக் சித்திரங்களும் பாவிக்கப்பட்டன. ஆலயத்தின் உட்புறத்தில், பலிப்பீடம் ஆலயத்தின் மையப்புறத்திலிருந்து ஒரு திரைச் சீலையினால் பிரிக்கப்பட்டிருந்தது. அத் திரையில் புனித படங்க்ள் தொங்க விடப்பட்டிருந்தன. பைசாந்தின் கட்டிடக் கலைக்கு ஒரு சிறந்த உதாரணமாக பேரரசர் யுஸ்தினியன் கொன்ஸ்தாந்திநோபிளில் கட்டி, இறை ஞர்னத்துக்கு அர்ப்பணித்த ஆலயம் உள்ளது.

மேற்கத்தேய அரசின் வீழ்ச்சிக்குப் பின் (476) தொடக்கம் 11ம் நூற்றாண்டுவரை, கட்டிடக் கலையில் பெரிய வளரச்சி ஏற்படவில்லை. பேரரசர் சார்லமேயின் காலத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டாலும் பின்னர் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களினால் அது தடைபட்டது. ஆனால் 1000ம் ஆண்டிலிருந்து கட்டிடக் கலையில்

துரித வளரச்சி ஏற்பட்டது. பழைய கட்டிட முறைகள் கைவிடப்பட்டு, ஏட்டிக்குப் போட்டியாக வெவ்வேறு நாடுகளிலே புதிய கட்டிட முறைகள் தோன்றின. பழைய பேராலயங்கள், ஆலயங்கள், கோவில்கள் எல்லாம் புனருத்தானம் செய்யப்பட்டு, புதிய வடிவங்கள் எடுத்தன. வட இத்தாலி, பிரான்ஸ், பூர்கண்டி, ஜெர்மனியில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கட்டிடக் கலை உரோமனெஸ்க் (Romanesque) என அழைக்கப்பட்டது. இம்முறையில் உருளை வடிவிலான வில்லுக்களும், மிகவும் அகலமான பெரிய சுவர்களும், அவற்றைப் பெலப்படுத்த அரண்களும் இடம் பெற்றன. அதன் முகடு கற்களால் கட்டப்பட்ட அரைவட்ட வடிவிலான கூரையைக் கொண்டது. அப் பாரமான முகட்டைத் தாங்குவதற்கு பெலமான சுவர்கள் தேவைப்பட்டன. இரண்டு நூற்றாண்டுகளாக இந்த உரோமைய கட்டிட முறை பிரபல்யமாயிருந்தது. இந்த கட்டிட முறையிலான ஆலயங்களை நாம் லொம்பார்டி, மத்திய பிரான்ஸ், மேற்கு ஜெர்மனியில் இன்று காண்கிறோம்.

12ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வட பிரான்சில் இன்னொரு புதிய முறையிலான கட்டிடக் கலை தோன்றியது. அது கொதிக் (Gothic) முறையிலான கட்டிடக் கலை என்று அழைக்கப்பட்டது. அதனுடைய முக்கிய அம்சமாக மெல்லிய உயர்ந்த சுவர்களும், மேற்பக்கம் அரைவட்ட வடிவான யன்னல்களுக்குப் பதிலாக, கூரான வளைவுடைய பெரிய யன்னல்களும், முக்கிய இடங்களில் உயர்ந்த அரண்களும் இருந்தன. யன்னல்கள் அழகிய நிறங்களாலான வர்ணக் கண்ணாடிகள் (stained glasses) போடப்பட்டிருந்தன. ஆலயங்கள் மிகவும் உயர்ந்து, அதன் கோபுரங்கள் கடவுள் வாழும் வானத்தைத் தொடுவதுபோல காட்சியளித்தன. படிப்பறிவில்லாத மக்களுக்கு மறைகல்வி அளிக்க சுவர்களில் செதுக்கிய ஓவியங்களும், சுருபங்களும் இருந்தன. கொதிக் கட்டிட முறையில் கட்டப்பட்ட ஆலயங்கள், பேராலயங்கள் அழகிய சிறந்த விஞ்ஞான, தொழில் நுட்பத் திறனுடன் கட்டப்பட்டவையாகக் கருதப்பட்டன. இந்தக் கட்டிடக் கலையானது 16ம் நூற்றாண்டில் மறுமலர்ச்சிக் கால கட்டிடக் கலை தோன்றும் வரை பிரபல்யமாயிருந்தது. அதற்கமைய கட்டப்பட்ட ஆலயங்கள், பேராலயங்களை நாம் இன்று றெயிம்ஸ், பரிஸ், ஏமியென்ஸ், சார்ட், வெஸ்ற்மினிஸ்றர், கொலோஞ் போன்ற இடங்களில் காண்கிறோம்.

14ம்-16ம் நூற்றாண்டுகளில் மக்களின் சிந்தனைகளில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. அம் மறுமலர்ச்சிக் காலத்தின்போது (Renaissance), 15ம் நூற்றாண்டில், புளோறன்ஸ் இத்தாலியிலும், வட ஐரோப்பாவிலும் மக்கள் பழைய சிந்தனைகள், கருத்துக்கள், முறைகளுக்குத் திரும்பிச் சென்றனர். அதன் விளைவாகத் தோன்றியதுதான் மறுமலர்ச்சிக்கால கட்டிடக் கலை. அது பழைய கிரேக்க, உரோமைய கட்டிடக் கலைகளை ஒத்ததாக இருந்தது. ஒழுங்குக்கு, சரியான அளவு விகிதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. யன்னல்கள், கதவுகள் ஒத்த முறையில் ஒழுங்காக இருந்தன. அதிக தூண்களும், அதற்குப் பாதுகாப்பாக சிறிய சதுரத் தூண்களும், முக்கோண வடிவமான முன் தோற்றமும், சதுர வடிவான லின்ரல்களும், மேல் வளைவுகளும், குவிந்த கூரைகளும், சுவர் மாடங்களும், சிலைகளும் அதன் முக்கிய அம்சங்களாக இருந்தன. பிலிப்போ புறநெலெச்சி என்பவரே முதல் மறுமலர்ச்சிக்கால கட்டிடக் கலைஞர் எனக் கருதப்படுகிறார். இக்கட்டிடக் கலை 16ம் நூற்றாணடுகளில் கொதிக் கட்டிடக்கலைக்கு மாற்றான கட்டிடக் கலையாகக் கருதப்பட்டது.

மறுமலர்ச்சிக்கால கட்டிடக் கலையின் தொடர்ச்சியாக, 17ம் நூற்றாண்டில் உரோமை, இத்தாலியில் பறோக் கட்டிடக் கலை உருவாகியது. "பறோக்" என்ற சொல் "அலங்காரம்" எனப் பொருள்படும். பறோக் கட்டிடக் கலையில் கட்டப்பட்ட ஆலயம் ஒரு கலையரங்கம்போல் காட்சி அளிக்கும். அதில் திருச்சபையினதும், அரசினதும் வீரவெற்றி, புதிய வாக்கலங்காரம், நாடகம், சிற்பங்கள், சித்திரங்களைக் கொண்டு வெளிப்படுத்தப்படுகிறது. ஆலயத்தின் உட்புறம் சுரூபங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கும். உள் கூரை சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இச் சித்திரங்களின் தன்மையை அனுபவிப்பதற்கு முழுச் சித்திரங்களையும் ஒருங்கிணைத்துப் பார்க்கவேண்டும். அதில் நிறம், ஒளி, நிழல் போன்றவற்றிற்கு முக்கியத்தவம் கொடுக்கப்பட்டிருகிறது. பிரகாசமான நிறங்களைப் பயன்படுத்தி, ஒளியுள்ள தன்மை சித்திரங்களில் பொதித்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு பக்கத்தில் உணர்வுகளுக்கு ஏற்றதாகவும், மறு பக்கத்தில் திருச்சபையின் சொத்து, வலிமையை அறிக்கையிடுவதாகவும் இருக்கிறது. இது புரொட்டஸ்தாந்து சீர்திருத்-

தத்திற்கு பதிலாக திருச்சபையில் ஏற்பட்ட மாற்று சீர்திருத்தத்துடன் தொடர்புடையது. மக்கள் மத்தியில் பக்திப் பற்றுதலை வளர்க்கும் நோக்குடன் தேயாற்றின், யேசுசபை போன்ற துறவற சபைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னணியிலேயே இக் கலையும் ஆரம்பமாகியது குறிப்பிடத்தக்கது. இயேசு சபைக் குருக்களின் முதலாவது ஆலயம் பறோக் பாணிக்கு மிகச் சிறந்த உதாரணமாகும். லோறன்சோ, பர்னினி, அனிபல் குறசி, எலி கிரேகோ போன்ற கலைஞர்கள் பறோக் கலையின் முன்னோடிகளாவர். பின்னர் இந்தக் கலை ஏனைய நாடுகளுக்கும் பரவி, மத சார்பற்ற கட்டிடங்களிலும் பயன்படுத்தப்பட்டது.

4. **கிறிஸ்தவ சிற்பக் கலை:** மனித வரலாற்றில் கற்காலம் தொட்டு சிற்பக் கலை இருந்து வந்திருக்கிறது. ஆனால் திருச்சபையின் ஆரம்ப காலத்தில், முதல் மூன்று நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ சிற்பக் கலையென்று ஒன்று இருக்கவில்லை. உரோமைய கலாபனைக் காலத்தின்போது கிறிஸ்தவம் ஒரு தடை செய்யப்பட்ட மதமாக இருந்தபடியால் அது ஒரு இயலாத காரியமாகவிருந்தது. எனினும் கல்லறைகளில், சுரங்கங்களில் காணப்பட்ட சிலைகள் அநேகமாக அஞ்ஞான சிற்பிகளிடமிருந்து பெறப்பட்டவை. நான்காம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டபொழுது, கிறிஸ்தவ சிற்பக் கலை ஆரம்பமாகியது. ஆனால் ஆரம்பத்தில் அது ஒரு சுதந்திரமான தனிப்பட்ட கலையாகவல்ல, மாறாக பெரிய ஆலயங்கள் கட்டப்பட்ட பொழுது, கட்டிடங்களை அலங்கரிக்கும் முறையிலேயே சிற்பக் கலை பயன்படுத்தப்பட்டது. அதாவது கட்டிடக் கலையின் ஒரு அம்சமாக, ஒரு இரண்டாம் தரமான கலையாகவே அது இருந்தது. கொதிக் ஆலயங்கள் சிற்பக் கலையின் மலர்ச்சிக்கு வழி சமைத்துக் கொடுத்தன. சித்திரங்கள், ஓவியங்கள் போல் மறைக் கல்வி கற்பிக்கும் கருவிகளாக சிற்பங்கள் பயன்படுத்தப்படவில்லை. ஆலயங்களை அலங்கரிக்வே அவை பயன்படுத்தப்பட்டன. கோபுர உச்சிகளை அலங்கரிக்க வானதூதர்களின் சிலைகள் செய்யப்பட்டன. மழை நீரை வெளியேற்றும் பீலிகளை மனித, மிருகங்களின் வாய்களைச் செய்து பயன்படுத்தினர். மண்டபங்களில் பழைய, புதிய ஏற்பாட்டு நிகழ்வுகளைக் காட்டும் உருவங்கள் அமைக்கப்பட்டன. அச் சிலைகள் முழு உருவங்களாக இருக்கவில்லை. மாறாக ஒரு பகுதியே சுவர்களில்

பொருத்தப்பட்டன. கல்லறைகளில் அவற்றின் வழியாக கிறிஸ்தவ கருத்துக்களும், மரணம், மறுவுலக வாழ்வு போன்ற எண்ணக் கருக்களும் வெளிப்படுத்தப்பட்டன. மதம் சாராத சிற்பங்களும் இடம் பெற்றன. வெற்றி வளைவுகளும், தூண்களும், பேரரசர், அரசிகளின் சிலைகளும் செதுக்கப்பட்டு. அலங்கரிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் களிமண், மாபிள், கற்களில் செதுக்கப்பட்ட சிலைகள், பின்னர் பொன், வெள்ளி, வெண்கலத்தில் செதுக்கப்பட்டன. 4ம் நூற்றாண்டுக் காலத்தில் உரோமையே கிறிஸ்தவ சிற்பக் கலையின் மையமாக இருந்தது. ஏனெனில் அதிகமான சிலைகள் பேரரசர்களாலேயே செய்விக்கப்பட்டன. பின்னர் பிரான்சில் ஆர்ள்ஸ், அரசரின் தலைநகரம் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு மாற்றப்பட்ட பொழுது, கீழைத்தேய நாடுகளில் றவண்ணா என்பனவும் மையமாகின. அதன் விளைவாக கீழைத்தேய அம்சங்கள் புகுத்தப்பட்டு, சிற்பக் கலையில் சிறிய மாற்றங்களும் ஏற்பட்டன. பேரரசர் சார்ளமேயின் காலத்தில் கலைகள் ஊக்குவிக்கப்பட்டன. ஆனால் பின்னர் இக்கொனாகிளாஸ்த பேதகத்தினரால் சிற்பங்கள் அடித்து நொறுக்கப்பட்டு, சிற்பக் கலைக்கு இடையூறுகள் ஏற்பட்டன.

12ம் நூற்றாண்டிலேயே கிரேக்க, உரோமைய மறுசீரமைப்பின் பயனாக கிறிஸ்தவ சிற்பக் கலை ஒரு சுதந்திரமான தனிக் கலையாக வளர்ச்சி கண்டது. ஆயர்களும், மடாதிபர்களும் தங்கள் கட்டிடங்களை அலங்கரிக்க சிற்பிகளின் உதவியை பெரிதும் நாடினார்கள். வரலாற்றிலே கிறிஸ்தவ சிற்பக் கலையை சுதந்திரமான ஒரு கலையாக ஏற்படுத்தியவர் மைக்கல் ஆஞ்சலோவாகும். பியேற்றா என்ற சிற்பமே அவரது முதன்மையான ஆக்கமாகும். மத்திய காலத்தில் கட்டப்பட்ட பேராலயங்களை, குறிப்பாக கொதிக முறையில் கட்டப்பட்ட ஆலயங்களை அலங்கரிப்பதற்காக சிற்பக் கலையைப் பயன்படுத்தினார். ஒவ்வொரு ஆலயத்திலும் ஆயிரக் கணக்கான சிலைகள் காணப்பட்டன. கோபுரங்களில் வானதூதரின், மனிதரின், மிருகங்களின் உருவங்களைச் செதுக்கி வைத்தார். மறுலர்சிக்குப் பிற்பட்ட காலத்தில் பறொக் கட்டிடக் கலைக் காலத்தின்போது, லோறன்சோ பரனி என்பவர் புனித பேதுரு பேராலயத்தின் மக்கள் அமரும் ஆசனங்களுக்குமேல் அமைத்த வெண்கல மேல்பந்தல் அவரது முதன்மையான ஆக்கமாக இருந்தது.

டொனாரெல்லோ, வெறோச்சியோ லெயானார்டோ டா வின்சி போன்ற இத்தாலிய சிற்பக் கலைஞர்கள் கிறிஸ்தவ சிற்பக் கலையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியிருக்கிறார்கள். கட்டிடக் கலைகள் மாற்றமடைந்த போது அதற்கேற்றவாறு சிற்பக் கலையும் மாற்றம் கண்டது. எனவே உரோமைய சிற்பக் கலை கி.மு.200-கி.பி.200), பைசாந்திய சிற்பக் கலை (330-1450), உரோமனெஸ்க் சிற்பக் கலை (100-1200), கொதிக் சிற்பக் கலை (1150-1300), மறுமலர்ச்சி கால சிற்பக் கலை (1400-1600), பறோக் சிற்பக் கலை (1600-1700). றோக்கோ சிற்பக் கலை (1700-1789), புதிய சிற்பக் கலை என மாற்றமும், வளர்ச்சியும் கண்டன.

4. **கிறிஸ்தவ சித்திரக் கலை**: திருச்சபையின் வரலாற்றில் 100ம் ஆண்டிலிருந்துதான் கிறிஸ்தவ சித்திரத்தைப்பற்றி நாம் பேசக்கூடியதாக-விருக்கிறது. அதற்கு முந்திய காலத்தைய கிறிஸ்தவ சித்திரம் என நிச்சயமாகக் கூறக்கூடிய சித்திரம் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. கிறிஸ்தவ சித்திரம் கல்லறைகள், சுரங்கங்களிலேயெ ஆரம்பமாகின. 200-300 ஆண்டுகளில் கிறிஸ்தவம் ஒரு தடைசெய்யப்பட்ட மதமாக இருந்ததினால் கிறிஸ்தவ சித்திரம் வரைவதும் கட்டுப்படுத்தப்பட்ட-தாகவே இருந்தது. மேலும் முதல் கிறிஸ்தவர்கள் அநேகமாக ஏழை, வறியவர்களாக இருந்ததினால், நிலைத்திருக்கக்கூடிய சித்திரங்களைச் வரைவிப்பதற்கு அவர்களிடம் போதிய பண வசதிகள் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆரம்பத்தில் கிறிஸ்தவர்கள் அஞ்ஞான சித்திரங்களைப் பயன்படுத்தி, அவற்றிற்கு கிறிஸ்தவ அர்த்தங்களைக் கொடுத்தார்கள். உதா. மயில் (நித்தியம்), திராட்சை (நற்கருணை), இடையன் (நல்லாயன்). பின்னர் தங்களுக்குரிய அடையாளங்களை அறிமுகம் செய்தார்கள். உதா. மீன் (ikthus). தங்கள் சித்திரங்களில் முதலில் உரோமைய அடையாளங்களையும், முறைகளையும் பின்பற்றிய கிறிஸ்தவர்கள், பின்னர் படிப்படியாக விகிதாசார உடல், கவர்ச்சிகரமான பின்புறம் போன்றவற்றை அத்துடன் சேர்த்தனர். இதை நாங்கள் உரோமையிலுள்ள கல்லறைகள், சுரங்கங்களில் காண்கிறோம். அங்குதான் முதல் கிறிஸ்தவர்களின் சித்திரங்கள் காணப்படுகின்றன. உரோமைய கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்கள், கலாபனைக்-காரருக்குப் பயந்து, தங்கள் வழிபாடுகளை, குறிப்பாக நற்கருணை

வழிபாட்டை, இரவு வேளைகளில், மறைவான சுரங்கங்களில், கல்லறைகளில் நடத்தினார்கள். அவை புனிதமான இடங்களாக இருந்தபடியால் அந்த இடங்களை சித்திரங்களினால் அலங்கரித்தார்கள். கிறிஸ்தவர்களுக்கு மட்டும் விளங்கக்கூடிய இரகசியமான கிறிஸ்தவ அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டன. உதாரணமாக மீன் (கிறிஸ்து). புறா (ஆன்மா), கழுத்தில் செம்மறி ஆட்டை வைத்திருக்கும் இளைஞன் (நல்லாயன் கிறிஸ்து), இரு கைகளையும் உயர்த்தி நிற்கும் மனிதன் (செபமும், இறைவனோடு கொண்டுள்ள உறவும்). கிறிஸ்து மறைமுகமாக வரையப்பட்டிருந்தார். இவைகளுக்கு இருவித அர்த்தங்கள் (அஞ்ஞான, கிறிஸ்தவ) இருந்தன. 1931 இல் உரோமையில் கண்டுபிடிக்கப்பட்ட டொமி நில்லாவின் கல்லறையில் சுவர்ச் சித்திரங்கள் சிலவும் காணப்பட்டன. அதில் விவிலிய நிகழ்வுகள், கதைகள் வரையப்பட்டிருந்தன. உதா. ஆதாமும் ஏவாளும், மோசே கற்பாறையிலிருந்து தண்ணீர் வரச் செய்தல், யோனா மீனின் வயிற்றிலிருந்து காப்பாற்றப்படுதல் (கிறிஸ்துவின் இறப்புக்கும் உயிர்ப்புக்கும் இடைப்பட்ட காலம்), சிங்கத்திடமிருந்து தானியேல் பாதுகாக்கப்படல், இயேசுவும் திருத்தூதர்களும். அழகியல் நோக்கோடு அவற்றைப் பார்க்கும்போது அவை மிகவும் ஆரம்ப பண்புகளைக் கொண்டு ஆக்கப்பட்டனவாயும், அக்காலத்தில் விசுவாசிகள் வாழ்ந்த மிகக் கஷ்டமான வாழ்வைப் பிரதிபலிப்பனவாயும் அமைந்திருந்தன. கிறிஸ்தவர்களின் முக்கிய அடையானமான சிலுவை தவிர்க்கப்பட்டிருந்தது. அதற்கு மாற்று அடையாளமாக அதை ஒத்த நங்கூரம் காணப்பட்டது. மீனுடைய கிரேக்க சொல் IXTHUS, இயேசுக் கிறிஸ்து. கடவுளின் மகன், இரட்சகர் என்ற பட்டங்களின் முதற் சொற்களால் ஆனது. எனவே மீன் கிறிஸ்துவிற்கு மறைமுகமான அடையாளமாகப் பயன்பத்தப்பட்டது.

நான்காம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் சுதந்திரம் பெற்றபோது, உரோமைப் பேரரசில் பசிலிக்கா கட்டிட முறையிலான பிரமாண்டமான கிறிஸ்தவ பேராலயங்கள் எழுந்தன. அவற்றை அலங்கரிப்பதற்காக கிறிஸ்தவ சித்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. கிறிஸ்தவ கட்டிடக் கலைகள் மாற்றமடைந்து வளர்ச்சி பெற்றதற்கு அமைய. பசிலிக்கா முறையிலான கட்டிடக் கலைக்குப் பதிலாக பைசாந்தீன் கட்டிடக் கலை கொண்டுவரப்பட்ட பொழுது, அதன் ஒரு அம்சமாக நவீன

மோசயிக் என்ற சித்திரக் கலை அறிமுகம் செய்யப்பட்டது. அதை கண்ணாடி சித்திரக் கலையென்றும் அழைப்பர். அவை சிறிய சிறிய கண்ணாடித் துண்டுகளால் ஆக்கப்பட்டவை. வீடுகளிலும், ஆலயங்களிலும் கூரை, சுவர்கள், நிலம் என்பனவற்றை அலங்கரிப்பதற்கு இம் முறை பயன்படுத்தப்பட்டது. சித்திரங்கள் அழகானவையாகவும், ஒளியுள்ளவையாகவும் இருந்தன. ஆனால் அவை சிறிய சிறிய கண்ணாடித் துண்டுகளால் ஆக்கப்பட்ட படியால் சித்திர உருவங்கள் கரடுமுரடானவையாகக் காணப்பட்டன. அணிந்துள்ள ஆடைகளில் சுருக்குகள் இருக்கவில்லை. அவற்றில் பக்தியும், ஆன்மீகத் தன்மையும் வெளிப்படுத்தப்பட்டன. ஆளின் முழுமையான தன்மையைக் காணமுடியாது. ஆகவே கலைஞர்கள் இச் சித்திரத்தில் இயற்கைத் தன்மையைவிட கம்பீரத் தன்மைக்கு முதலிடம் அளித்தனர். கிறிஸ்துவை அனைத்துக்கும் அதிபதியாக (Pantocrator) ஆக்கினர்.

மோசயிக் சித்திரக் கலையைத் தொடர்ந்து அதை ஒத்ததாக பூச்சு சித்திரக்கலை முறையொன்று உருவாகியது. இதை அயிக்கோன் சித்திர முறையென்று அழைப்பர். இதுவும் பைசாந்திய கட்டிடக் கலையின் ஒரு அம்சமாகவே கருதப்பட்டது. இதில் படங்கள் மை பூசப்பட்ட சிறிய சிறிய பலகைத் துண்டுகளினால் வரையப்பட்டன. ஆலயங்களில் காணப்பட்ட மோசயிக் சித்திரத்தின் வடிவத்தில் இயேசு. மரியாள், புனிதர்களின் உருவங்கள் சிறிய பலகைத் துண்டுகளினால் பிரதி செய்யப்பட்டன. எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லக்கூடிய இச் சித்திர உருவங்கள் கிரேக்க மொழியில் அயிக்கோன் என அழைக்கப்பட்டன. சிறிய பலகைகளில் பூச்சினால் வரையப்பட்ட இச் சித்திரங்களின் பின்னணி எப்போதும் பொன் நிறமாகவிருக்கும். முகம் பயம் நிறைந்ததாக இருந்தது. ஆனால் ஆன்மீக கம்பீரம் காணப்பட்டது. அயிக்கோன் சித்திரத்துக்கு நல்லதொரு உதாரணமாக இலங்கையில் அதிகம் பிரபல்யமாக இருக்கிற சதாசகாய மாதாவின் படத்தை எடுத்துக் கொள்ளலாம்.

பைசாந்திய கட்டிடக் கலையை அடுத்து, 12ம் நூற்றாண்டில், வட பிரான்சில் கொதிக் முறையிலான கட்டிடக் கலை தோன்றிய பொழுது, அதன் ஒரு சிறப்பு அம்சமாக வர்ணக் கண்ணாடி சித்திரக்கலை (Stained Glass) தோன்றியது. கொதிக் ஆலயங்களில்

பல பெரிய உயர்ந்த கூர்மையான யன்னல்கள் இருந்தன. அதிலிருந்த கண்ணாடிகளில் இச் சித்திரங்கள் வரையப்பட்டன. இவை பெரும்பாலும் வளைந்த வரைபுகளாகிய பல்வேறு வடிவங்களில் அமைக்கப் பட்டிருந்தன. இச் சித்திரங்களின் சிறப்புத் தன்மை யாதெனில், கண்ணாடிக்குள் சாயம் விட்டு, இச் சித்திரங்கள் ஆக்கப்பட்டுள்ளன. இந்த நுட்ப முறையானது மொசயீக் சித்திர முறையிலும் பார்க்க மிகக் கடினமானதாகும். கண்ணாடிக்குள் நிறம் இடும் இம் முறையானது கொதிக் கலைஞர்களினால் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தமையால், அவர்கள் பயன்படுத்திய பழைய முறை இன்று மறைந்து போயிற்று. இன்று நவீன கண்ணாடிச் சித்திரக் கலை இருப்பினும், பழைய முறைக்கு இவை சமமெனக் கொள்ள முடியாது.

மத்திய காலத்தில் சித்திரக் கலையின் வளர்ச்சிக்குப பங்களிப்புச் செத்தவர்களுள் பின்வருவோரை நாம் சிறப்பாகக் குறிபிடலாம். சுவரின் பூச்சுகள் காய்வதற்கு முன் சித்திரங்கள் வரையும் முறையை, அதாவது பிரெஸ்கோ (Fresco) முறையைக் கண்டிபிடித்தவர் கியோட்டோ டி போர்டோனே என்ற கலைஞராவார். மேலும் பிரா அஞ்சலிக்கோ (1387-1455), லெயோனார்டோ டா வின்சி (1452-1519), மைக்கல் ஆஞ்சலோ (1475-1564), இறபாயேல் சான்ஸியோ (1483-1520) போன்றவர்கள் தங்கள் சிறந்த படைப்புகளினால் கிறிஸ்தவ சித்திரக் கலைக்கு பாரிய பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்.



**தேர்ச்சி** 8.0. இலங்கைத் திருச்சபியின் வரலாற்றைக் கற்ப தோடு, இலங்கைக் கிறிஸ்தவ திருச்சபையை இனங்கண்டு, சாட்சியம் பகர்வர்.

**தேர்ச்சி மட்டம்** 8.1. ஐரோப்பிய காலத்தில் இலங்கைத் திருச்சபையின் ஆரம்பத்தையும், அதன் வளர்ச்சியையும் விளக்குவர்.

இலங்கைத் திருச்சபையின் வரலாறு என்னும் போது கிறிஸ்தவ மதம் இலங்கையிலே ஆரம்பமாகி, வளர்ச்சி பெற்று, இன்றுவரை பயணித்து வந்திருக்கும் பயணம்பற்றிய வரலாற்று விளக்கமாகும். அதாவது இலங்கைத் தீவில் கிறிஸ்தவ மதம் தோன்றி உருவாகியது எப்போது, எவ்வாறு, அது பல இடங்களுக்கும் பரவி வளர்ந்த விதம், அத்தோடு தொடர்புடையவர்கள், அவர்கள் ஆற்றிய நற்பணிகள், அவர்கள் சாதித்த சாதனைகள், அவர்கள் பயன்படுத்திய வழிமுறைகள், தம் பணியின்போது அவர்கள் முகங் கொடுக்க நேர்ந்த தோல்விகள், இடைஞ்சல்கள், இடையூறுகள், எதிர்ப்புக்கள், சவால்கள், அவற்றை அவர்கள் எதிர் கொண்ட முறைகள் பற்றிய தொகுப்பையே நாம் இங்கு குறிப்பிடுகிறோம்.

இலங்கைத் திருச்சபையின் வரலாற்றைப்பற்றி நாம் அறிந்து கொள்வதனால் இலங்கைத் திருச்சபையின் இன்றைய, எதிர்காலப் பயணத்தைப் பற்றிய தெளிவான அறிவை பெற்றுக் கொள்ளலாம். நம் நாட்டின் கிறிஸ்துவ சரித்திரத்தை, திருச்சபையின் வரலாற்றைக் கற்பதன் வழியாக நாம் பல நன்மைகளை அடைகிறோம். நம் முன்னோர்கள் எவ்வாறு கிறிஸ்தவத்தை வாழ்ந்தனர், தம் விசுவாசத்தைக் காப்பாற்றுவதற்காக எத்துணை தியாகங்கள் செய்தனர்? அவ் விசுவாசத்தை மற்றவர்களுடன் எவ்வாறு பகிர்ந்து கொண்டனர்? அதனை எவ்வாறு எங்கும் பரப்பி வளர்த்தனரென நாம் அறிய வரும் பொழுது, அவ் விசுவாசத்தின் உயர்ந்த பெறுமதியை நாம் உணர்ந்து, எம் விசுவாசத்தை மதித்து உறுதிப்படுத்தவும், அதைப் பாதுகாக்கவும், எம் மதத்தின் மேலுள்ள பற்றை வளர்த்து அதிகரிக்கவும் தூண்டப்படுகிறோம். தொடர்ந்து எம்மைச் சுற்றி வாழும் இன்னும் அதை அறியாதவர்களுக்கு அதை அறிவிக்கவேண்டிய நம் கடமையை உணர்ந்து, நாமும் அப் பணியில் ஈடுபட உந்தப் படுகிறோம். அது

மட்டுமன்றி, நம் மறை வாழ்விலும் பணியிலும் குறுக்கிடும் எதிர்ப்புகளையும், இடையூறுகளையும், சவால்களையும் நாம் எதிர்கொள்வதற்கு வேண்டிய மன உறுதியையும், துணிவையும் பெற்று, அதற்குரிய வழிமுறைகளையும் அறிய வருகிறோம்.

பழைய ஏற்பாட்டில் இறைவன் இஸ்ராயேலரின் வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்கள், நிகழ்ச்சிகள் வழியாக இஸ்ரயேலருடன் தொடர்புகொண்டு, அவர்களுடன் பேசி, அவர்களை எச்சரித்து, வழிநடத்தியதைப் படிக்கின்றோம். அதே இறைவன் இன்று நம் நாட்டுத் திருச்சபையின் வரலாறு, வரலாற்று நிகழ்ச்சிகள் வழியாக எம்முடனும் தொடர்பு கொண்டு, எம்முடன் பேசி, எம்மை எச்சரித்து, வழிநடத்தி வருகிறார். எனவே இலங்கைத் திருச்சபையின் வரலாற்றைப் படிப்பதன் வழியாக நாம் இறைவன் அவற்றினூடாக நமக்கு அளிக்கும் செய்தியை, எம்மைப் பற்றிய இறைவனின் திட்டத்தை, அவர் எமக்குக் காட்டும் வழிகளையும் அறிய வருகிறோம்.

வரலாற்று நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் நடைபெறுகின்றன. எம் முன்னோர்கள் தம் மத வாழ்வில், தம் மதத்தின் வரலாற்றில் பல கலாபனைகளையும், எதிர்ப்புகளையும், மத விரோதிகளையும் சந்தித்தனர். அதேபோல் நாமும் இன்று நம் மதவாழ்வில் பலதரப்பட்ட கலாபனைகள், எதிர்ப்புகள், மத விரோதிகளைச் சந்திக்கிறோம். இன்னும் சந்திக்க வேண்டி ஏற்படும். எனவே அத்தகைய சந்தர்ப்பங்களில், நாம் மனம் தளராது, துணிவுடன் அவற்றிற்கு முகங் கொடுக்க, விடாமுயற்சியுடன் விசுவாசத்தில் இறுதிமட்டும் உறுதியாய் நிலைத்திருக்க திருச்சபை வரலாறுபற்றிய அறிவு நமக்குப் பெரிதும் உதவியாயிருக்கும். மேலும் இன்று திருச்சபைக்கு எதிராக பல பொய்ப் பிரச்சாரங்களும், அதன் செயல்பாடுகள்பற்றிய தப்பான கதைகளும் பரப்பப்படுகின்ற வேளையில், அதன் உண்மையை நாம் அறியவும், மற்றவர்களுக்கு அதை அறியக் கொடுக்கவும் திருச்சபையின் வரலாற்றைப் படிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். சுருங்கக் கூறின், இலங்கைத் திருச்சபையின் கடந்த கால வரலாற்றை அறியவருவது, நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் திருச்சபையை நம் நாட்டில் கட்டியெழுப்புவதற்குப் பெரும் உதவியாக அமைகிறது.

இலங்கைத் திருச்சபை வரலாற்றை நாம் ஐந்து முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம்:

1. போர்த்துக்கேயரின் வருகைக்கு முற்பட்ட காலம்.
2. போர்த்துக்கேயர் காலம் (கி.பி. 1505-1657).
3. ஒல்லாந்தர் காலம் (கி.பி. 1657-1796).
4. ஆங்கிலேயர் காலம் (கி.பி. 1796-1948).
5. சுயாதீன காலம் (தற்காலம்) (கி.பி.1948 - ?).

## 8.1.1. போர்த்துக்கேயரின் வருகைக்கு முற்பட்ட காலம்.

போர்த்துக்கேயரின் வருகையுடன், அதாவது 16ம் நூற்றாண்டுடன்தான் எழுதப்பட்ட இலங்கைத் திருச்சபையின் வரலாறு ஆரம்பமாகின்றது. அதாவது 1505 இல் போர்த்துக்பேயரின் வருகையோடு ஆரம்பமாகின்றது. அதனால் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருமுன்னர் இலங்கையில் கிறிஸ்தவமோ, கிறிஸ்தவர்களோ இருக்கவில்லையென நாம் முடிவு செய்திட முடியாது. ஏனெனில் அவர்களின் வருகைக்கு பல் நூற்றாண்டு காலங்களுக்கு முன்னரே இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்களெனக் கூறும் பல கட்டுக் கதைகளும், பழங் கதைகளும் மட்டுமல்ல, ஆதாரத்துடனான பல சான்றுகளும் உள்ளன. இவைகளின் நிமித்தம் இன்று பல வரலாற்று வல்லுநர்கள் போர்த்துக்கேயரின் வருகைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் கிறிஸ்தவமும், கிறிஸ்தவர்களும் காணப்பட்டனரெனக் கூறுவர்.

**சிகிரியா, அனுராதபுர காலத்தில் கிறிஸ்தவர்கள்**

இலங்கை நாட்டின் வரலாற்றில் கி.மு. 4ம்-கி.பி. 11ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தை "அனுராதபுர காலம்" என்றழைப்பர். இக்காலத்தில் அனுராதபுரம் இலங்கையின் தலைநகரமாக விளங்கியது. இக்காலம் இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான காலம். பல குழப்பங்களும், படை எடுப்புகளும், உள்நாட்டுப் போர்களும் நடைபெற்ற காலம். இக்காலத்தில்தான் புத்த மதம் இலங்கைக்குக் கொண்டுவரப்-

பட்டது. இந்தக் காலத்தில் அனுராதபுரத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகள் பல உள்ளன.

**பழங் கதைகள்:**

பல புராதன நூல்களில் காணப்படும் சில பழங் கதைகளின்படி, கிறிஸ்தவத்தின் ஆரம்ப காலத்திலேயே நற்செய்தி இலங்கையில் போதிக்கப்பட்டதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன. அதாவது அப்போஸ்தலர்கள் காலத்திலேயே, அதுவும் புதிய ஏற்பாட்டு நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்களினால் நற்செய்தி இலங்கையில் போதிக்கப் பட்டிருக்கிறது. இவற்றுள் மிகப் பழமையான கட்டுக் கதையின்படி, பெத்லேகமில் குழந்தை இயேசுவை வணங்க கீழைய தேசங்களிலிருந்து சென்ற மூன்று அரசர்களில் ஒருவர் "கறுப்பு மேகஸ்" என அழைக்கப்-படும் யாழ்ப்பாண அரசரான கஸ்பார் பெரிய பெருமாள் ஆவார். இவர் பிற்காலத்தில் (கி.பி.52) அப்போஸ்தலரான புனித தோமாஸ் இந்தியாவுக்கு வந்தபொழுது அவரிடமிருந்து திருமுழுக்குப் பெற்று, அவருடன் இணைந்து பணிசெய்தார். இறுதியில் இருவரும் மறைச்சாட்சி மரணம் அடைந்து, ஒரே இடத்தில் ஒரே கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டனர். இப் பழங் கதையானது முதன்முதலாக போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியரான யுவான் டி பாறோஸ் (1496-1570) எழுதிய "ஆசியா" என்ற நூலில் காணப்பட்டது.

மப்பேயி என்ற இன்னொரு ஆசிரியர் எழுதிய "இந்திய வரலாறு" என்னும் நூலில் காணப்படும் இன்னொரு பழங் கதையின்படி, அப்போஸ்தலர் பணி நூலில் வரும் திருத்தொண்டர் பிலிப்புவிடமிருந்து திருமுழுக்குப் பெற்ற எத்தியோப்பிய அண்ணகன் (அமைச்சர்) அக்காலத்தில் "தப்றோபேன்" என அழைக்கப்பட்ட இலங்கையில் நற்செய்தியைப் போதித்தார். அது மட்டுமல்ல அவருடைய பாதச் சுவட்டையே அவரின் பக்தர்கள் சிவனொளிபாத மலையில் வணங்கி, அவரை நினைவுகூர்ந்து வருகிறார்கள்.

யோவான் றிபெய்றோ என்ற ஆசிரியர் தரும் மற்றொரு பழங் கதையின்படி, அப்போஸ்தலரான புனித தோமாஸ் இலங்கைத் தீவுக்கு வந்து தங்கியிருந்து, அங்கு நற்செய்தியைப் போதித்தார். இது ஒரு பழங்கதையாக இருக்கின்றபோதிலும், அப்போஸ்தலரான தோமாஸ் இந்தியாவில் பணி புரிந்ததற்கு பல கிரேக்க, இலத்தீன், சீரிய

திருச்சபைகளின் அறிக்கைகள் சான்று பகருகின்றன. அது மட்டுமல்ல. கி.பி. மூன்றாம் ஆண்டு தொடக்கம் இந்தியாவில் இருந்து வரும் மலபாரைச் சேர்ந்த புனித தோமாஸ் கிறிஸ்தவர்கள், தம் முன்னோர்கள் அப்போஸ்தலரான புனித தோமாஸாலேயே மனந்திருப்பப்பட்டவர்க-ளெனக் கூறுகின்றனர். ஆகவே அது ஆதாரமுள்ள வரலாற்று உண்மை-யாயின், அப்போஸ்தலரான தோமாஸ் அங்கிருந்து அருகிலிருக்கும் இலங்கைக்கும் வந்து, நற்செய்தியைப் போதித்திருக்கலாம். அப்படி அவர் இலங்கைக்கு வராதிருந்தாலும், இந்தியாவில் அவர் செய்த நற்செய்திப் போதனையின் எதிரொலி இலங்கையிலும் கேட்கப்பட்டி-ருக்கும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த கிறிஸ்தவர்கள் மூலம், அல்லது இலங்கையிலிருந்து இந்தியா சென்று மனந்திரும்பிய கிறிஸ்தவர்கள் மூலம், இலங்கைக்கு நற்செய்தி கொண்டுவரப் பட்டிருக்-கலாம். அது உண்மையாகவிருந்தாலும், அத்தகைய சிறிய கிறிஸ்தவர்-கள் சமூகம் நிலைத்திருக்கவில்லை. ஏனெனில் 2ம், 3ம், 4ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தார்களென்பதற்கு எவ்வித சான்றுகளும் இல்லை.

ஆனால் பழங் கதைகளின்படி இலங்கையைத் தரிசித்தாகக் கூறப்படும் இவர்கள் இலங்கையரில் எவரையாவது கிறிஸ்தவத்துக்கு மனந்திருப்பியதாகவோ, அல்லது இலங்கையில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்ட ஒரு கிறிஸ்தவ சமூகம் இருந்ததாகவோ இப் பழங் கதைகளில் ஒன்றிலும் குறிப்பிடப்படவில்லை. இன்று, வெவ்வேறு காரணங்களின் நிமித்தம், பொதுவாக இவையெல்லாம் சற்றேனும் ஆதாரமற்ற, ஏற்றுக்கொள்ள முடியாத கற்பனைக் கதைகள் என்று வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர்.

**ஆதாரமுள்ள வரலாற்று உண்மைகள்**

இருப்பினும் கி.பி. 4ம் நூற்றாண்டில், இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாண வணிக நகரமான கந்தரோடையில், கிறிஸ்தவர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளும், ஆதாரங்களும் உள்ளன. 1994ம் ஆண்டில், யாழ் பல்கலைக் கழகத்தின் தென்னாசிய, புராதன வரலாறு, தொல்லியல் துறை விரிவுரையாளரான எஸ். கிறிஷ்ணராசா என்பவரால் கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ் ஆய்வின்போது, ஒரு தொகுதி அச்சுக் குத்தப்பட்ட வெள்ளி நாணயங்கள் கண்டுபிடிக்கப்-

பட்டன. அவற்றில் ஒன்று நீள் சதுர வடிவமானது. அதன் முற்பக்கத்தில் நெஸ்தோரிய சிலுவை வடிவமும், அதன் கீழ் பிராமி வடிவிலமைந்த வாசகமும் காணப்பட்டன. அதை மாலை தீவைச் சேர்ந்த கலாநிதி பி. இரகுபதி அவர்கள் "மா கிரேக்க காசு" என வாசித்தார். அவரது கருத்துப்படி அது கி.பி. 4ம் நூற்றாண்டு காலப் பகுதி நாணயமாகும். அது பெரிய கிரேக்க நாணயமென்று அர்த்தம் பெறும். காலத்தினூடாக வளர்ச்சி பெற்று வந்த வரிவடிவ இயல்பின் அடிப்படையில் 4ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாக அவர் அதனைக் காண்கிறார். கலாநிதி இரகுபதி அவர்களின் கருத்துப்படி தென்னிந்தியாவில் கிறிஸ்தவ வணிகக் கலங்கள் வியாபாரத்தில் ஈடுபட்டமைக்கு தொல் பொருட் சான்று இதுவாகும். இது போன்ற நாணயங்கள் கேரளத்திலும் கண்டு-பிடிக்கப் பட்டிருக்கின்றன. இச் சான்றின்படி, இலங்கைத் தீவில் கிறிஸ்த-வர்கள் முதலில் வாழ்ந்த பகுதி யாழ்ப்பாணத்து முக்கிய வணிக நகரமான கந்தரோடையாகும். எனவே இஸ்லாம் மதமானது தென்னிந்-தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த வர்த்தகர்கள் மூலம் இலங்கையில் பரவியதுபோல, கிறிஸ்தவமும் தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வந்த வர்த்தகர்கள் மூலம் இலங்கையில் பரவியதெனக் கொள்ளலாம்.

கி. பி. 5ம் நூற்றாண்டில், சிகிரியாக் காலத்தில், இந்தியாவிலிருந்து வருகைதந்த முதலாவது காசியப்பன் அரசனுக்கும், அவனைத் தொடர்ந்து அரசனான முதலாவது முகலன் அரசனுக்கும் கீழ் கடமையாற்றிய கிறிஸ்தவ விசுவாசியாகிய மிகாரா என்னும் சேனாதிபதி பற்றி மூலவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பேராசிரியர் செனரத் பரணவிதாரணவின் கருத்துப்படி, தாதுசேன அரசனின் மக்களான காசியப்பன், முகலன் என்போரின் இராணுவத்தில் (473-508) கேரளக் கிறிஸ்தவர்கள் உயர் அதிகாரிகளாக பதவி வகித்தனர். மிகார என்பவர் சேனாதிபதியாக இருந்தார். அவர் "அபிஷேக மக்களுக்காக" ஆலயமொன்றைக் கட்டி, அதனை அர்ப்பணிப்பதற்காகக் கொண்டாட்டம் ஒன்றையும் நடாத்தினார் "அபிஷேக மக்கள்" என்பது இயேசுக் கிறிஸ்துவாகும். அச்சந்தர்ப்பத்தில் அரசன் முகலன் கிறிஸ்தவன் ஆனான். அவனது ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ சின்னங்கள் பொறித்த தங்கக் காசுகள் வழக்கத்திலிருந்தன எனவும் பேராசிரியர் பரணவிதாரண கூறினார். அதன்படி சிகிரியாக் காலத்தில் இந்நாட்டில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

அதைவிட கி. பி. 6ம் நூற்றாண்டில் இலங்கையில் ஒரு கிறிஸ்தவ சமுதாயம் இருந்ததற்கான சான்றுகளும், ஆதாரங்களும் உள்ளன. இவ்வஹாப், அபுசாயிப், பெஞ்சமின் ரபாய் போன்ற வெளி-நாட்டு எழுத்தாளர்கள் அனுராதபுரக் காலத்தில் இலங்கையில் யூதேயாக் கிறிஸ்தவர்கள் இருந்தார்களென்பதற்குச் சான்று பகர்கின்றனர். மேலும், "இந்திய கப்பலோட்டி" என அழைக்கப்படும் கொஸ்மஸ் இன்டிகோ-பிளாஸ்தர் என்ற கிரேக்க வர்த்தகப் பயணி (கி.பி. 535) எழுதிய "கிறிஸ்தவ சபைகளின் விவரணம்" என்ற நூலில், அக்காலத்தில் இலங்கையிலிருந்த கிறிஸ்தவ சபையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

> இந்திய கடலில் இந்தியாவுக்கு அப்பாலுள்ள தீவாகிய தாப்றோபேனிலும் (கிரேக்கர் இலங்கையை அழைத்த பெயர்) குருக்கள், விசுவாசிகளுடன் கூடிய ஒரு திருச்சபையும் இருக்கின்றது.....அத் தீவில் அங்கு குடியேறியிருந்த பாரசீய கிறிஸ்தவர்களின் ஆலயமொன்றும், பாரசீயத்தினால் நியமனம்பெற்ற ஒரு குருவும், ஒரு திருத்தொண்டரும் இருக்கின்றனர். அங்கு திருவழி பாடுகளும் சிறப்பாக நிறைவேற்றப் படுகின்றன. ஆனால் சுதேச மக்களும், அவர்களின் அரசர்களும் அந்நிய மதத்தை வழிபடுகின்றனர்.

கொஸ்மஸ் என்பவரே இலங்கையில் கிறிஸ்தவ சமூகம் ஒன்று இருந்ததைப்பற்றி முதல்முதல் கூறும் ஓரே எழுத்தாளராவார். அவரின் அக் கூற்று உண்மையானதென சகல வரலாற்று ஆசியர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. வஜுபோடி, எதிசி போன்றவர்கள் கொஸ்மசின் கூற்றுகளில் இலங்கை நாட்டு அரச சபையில் கிறிஸ்தவ மந்திரிகள் இருந்தனரென்பதை உறுதிப்படுத்துகின்றனர்.

கொஸ்மசுடைய கூற்றின்படி அனுராதபுர காலத்தில் இலங்கை-யில் வாழ்ந்த கிறிஸ்தவ சமுதாயம் அந்நியர்களால் ஆனது. அதாவது பாரசீய குருக்களின் ஆன்மீகப் பணியுடன் வாழ்ந்த பாரசீய வாணிபர்க-ளாலான ஒரு குடியேற்றம். அவர்கள் இங்கு வியாபாரம் சம்பந்தமாக வந்தவர்களேயன்றி, மறை பரப்புதலுக்காக வரவில்லை. பாரசீயர்கள் பெரும்பாலும் நெஸ்தோரிய பேதகத்தைத் தழுவியவர்கள். ஏனெனில் ஐந்தாம் நூற்றாண்டின் முடிவில் பாரசீய திருச்சபை நெஸ்தோரிய

பேதகத்தைச் சார்ந்திருந்தது. பாரசீயர் வர்த்தக வியாபாரம் சம்பந்தமாக தாம் சென்ற இடங்களுக்கெல்லாம் தம் மதத்தையும் தம்முடன் எடுத்துச் சென்றனரென்பது குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தில் பாரசீய கிறிஸ்தவர்கள் இந்தியாவின் தென் இந்திய கடலோரப் பகுதிகளில் வாழ்ந்தது இக் கருத்துக்கு வலுவூட்டுகிறது. மேலும் 5ம் நூற்றாண்டில் சிங்கள் அரசர்களின் படையில் "மைகாரா" என்ற ஒரு இந்திய கிறிஸ்தவர் படைத் தளபதியாக கடமையாற்றியதும் போர்த்துக்கேய காலத்துக்கு முன்பு கிறிஸ்தவர்கள் இலங்கையில் இருந்தார்களென்பதற்கு சான்று பகருகிறது. சிங்கள வரலாற்று நூலாகிய "மகாவன்ச"வில் கிறிஸ்தவர்கள் இருந்ததற்கான சில சுட்டிக் காட்டல்கள் தென்பட்டாலும், அங்கு அது பற்றித் தெளிவாக ஒன்றும் கூறப்படவில்லை.

பாரசீயர் வாணிபம் சம்பந்தமாகவே இலங்கையில் தங்கியிருந்தபடியால், அவர்கள் அக்காலத்தில் இலங்கையின் தலைநகராக விளங்கிய அநுராதபுரத்திலேயே தங்கி இருந்திருக்க வேண்டுமென நாம் நம்புவதற்கு இடமுண்டு. பாரசீய கிறிஸ்தவர்களின் சமுதாயமும், அவர்களின் ஆலயமும் அநுராதபுரத்திலேயே இருந்ததென்பதை, அங்கு 1912ம் ஆண்டு நடைபெற்ற தொல்பொருள் அகழ் ஆராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்ட அநுராதபுர காலத்தைச் சேர்ந்த கட்டிடச் சிதைவுகளும், கருங்கல்லில் செதுக்கப்பட்ட பாரசீய நெஸ்தோரிய சிலுவையும் ஆதாரத்துடன் உறுதிசெய்கின்றன. இருந்தும் காலப் போக்கில் இலங்கையில் பாரசீயரின் வியாபார ஆதிக்கம் நலிவுற்று, முஸ்லிம்களால் கைப்பற்றப் பட, அவர்களின் வரவும், தொடர்ந்து அவர்களின் கிறிஸ்தவ சமூகமும் படிப்படியாயச் சிதைந்து அழிந்து போயின. ஏனெனில் கி. பி. 8ம் நூற்றாண்டிலிருந்து 16ம் நூற்றாண்டு வரையும் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்ததற்கான சான்றுகள், ஆதாரங்கள் எதுவும் எங்கும் இல்லை. அவ் இடைப்பட்ட காலத்தைய இலங்கை பற்றிப் பலரால் எழுதப்பட்ட பல நூல்களில் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்ததற்கான குறிப்புகள் ஒன்றும் காணப்படவில்லை. எனவேதான் இலங்கைத் திருச்சபை சரித்திரத்தை வரலாற்று வல்லுநர் போர்த்துக்கேயரின் இலங்கை வருகையுடனேயே ஆரம்பிக்க விரும்புகின்றனர். எனினும் 16ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகைதந்த போர்த்துக்கேயர் அனுராதபுர காலத்தில் கிறிஸ்தவர்கள் இலங்கையில் வாழ்ந்தது பற்றி அறிந்திருந்தனரென்பது குறிப்பிடத் தக்கது.

**புதிய அகழ்வாய்வுகளின் கண்டுபிடிப்புகள்**

1. பெரிய பெருமாள் என்ற யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த அரசர் ஒருவர் இயேசு பிறந்த பின் அவரை வணங்கச் சென்ற மூன்று ஞானிகளுள் ஒருவரென்றும், அவர் திருத்தூதரான தோமாவின் சீடராகவிருந்து, பின்னர் ஆயராகி, இறுதியில் மறைசாட்சியாக மரித்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

   A History of the Catholic Church of Ceylon – S. Gnanapragasar, pg. 1-3

   Historical Sketches by S.G. Perera, pg. 2-3

   இலங்கையில் கிறிஸ்தவ மதம் - G.T.P. சோமரத்ன பக். 17

2. சிவனொளிபாத மலையின் ஆதாமின் அடிச் சுவடுகள் திருத்தொண்டர் பிலிப்புவிடமிருந்து திருமுழுக்குப் பெற்ற கந்தகி என்னும் எத்தியோப்பிய நிதி அமைச்சருடையது என்பதுபற்றி தீர் தொரோதியஸ், குடோ, மாபி, சொவ்ரோனியஸ் போன்ற எழுத்தாளர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது

   A History of the Catholic Church of Ceylon – S. Gnanapragasar, pg. 1-3

   Historical Sketches by S.G. Perera, pg. 3-5

   இலங்கையில் கிறிஸ்தவ மதம் - G.T.P. சோமரத்ன பக். 17

3. கொஸ்மஸ் இன்டோப்லேடஸ் என்ற எழுத்தாளர்

- பாரசீக வியாபாரிகள் தப்றொபேன் என்றழைக்கப்பட்ட இலங்கைக்கு வருகை தந்து தங்கியிருந்தனர் என்றும்,
- அவர்கள் பாரசிக கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர என்றும்,
- அவர்களின் பாரசீக வழிபாட்டை நடாத்துவதற்காக பாரசீக ஆயர் ஒருவரினதும், திருத்தொண்டர் ஒருவரினதும் பணியைப் பெற்றுக் கொண்டனரென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

A History of the Catholic Church of Ceylon – S. Gnanapragasar, pg. 8-9

Historical Sketches by S.G. Perera, pg. 2-3

இலங்கையில் கிறிஸ்தவ மதம் - G.T.P. சோமரத்ன பக். 17

இலங்கையில் கத்தோலிக்க வரலாறு - ரீட்டா வெலகம்பல பக. 9

4. பாரசீகக் கிறிஸ்தவர்கள் பின்பற்றிய மதம் நெஸ்டோரியன் மதமாகும். இலங்கை மக்கள் கிறிஸ்தவரகள் அல்ல என்றும், 6ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ ஆலயம் பற்றிய விடயங்கள் கிடைத்துள்ளன என்றும், அப்போது நடைபெற்ற திருவழிபாடும், பயன்படுத்தப்பட்ட திருவிவிலியமும் வெளிநாட்டு மொழிகளில் காணப்பட்டன என்றும் கூறப்படுகிறது. 6ம் நூற்றாண்டின் பின் இலங்கையில் கிறிஸ்தவர்களைப் பற்றிய எவ்வித தகவலும் கூறப்பட்டிருக்கவில்லை என்றும் காட்டப்பட்டுள்ளது.

A History of the Catholic Church of Ceylon – S. Gnanapragasar, pg. 9-10

Historical Sketches by S.G. Perera pg. 9-10

இலங்கையில் கிறிஸ்தவ மதம் - G.T.P. சோமரத்ன பக். 20-21

5. புனித தோமா, புனித பர்த்தலோமியுஸ், புனித யூதா ததேயு ஆகிய திருத்தூதர்கள் இலங்கையில் (தப்றொபேனில்) மறையைப் போதித்துள்ளனர் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

Historical Sketches by S.G. Perera pg. 8

இலங்கையில் கிறிஸ்தவ மதம் - G.T.P. சோமரத்ன பக. 18

இலங்கையில் கத்தோலிக்க வரலாறு - ரீட்டா வெலகம்பல பக். 7

6. 1972 இல் பேராசிரியர் செனரத் பரணவித்தாரண என்பவரது கண்டுபிடிப்பின்படி காசியப்பர், மொல்கல்லான என்ற அரசர்களின் காலத்தில் கிறிஸ்தவ படைவீரர்கள் இலங்கையில் இருந்திருக்கின்றனர்.

கி..பி. 9ம் நூற்றண்டில் சிகிரியா கால அரசவையில் நான்கு கிறிஸ்தவ அமைச்சர்கள் இருந்திருக்கின்றனர்.

A History of the Catholic Church of Ceylon – S. Gnanapragasar, pg. 11

Historical Sketches by S.G. Perera pg. 10-11

Some Christian Contributions in Sri Lanka by Oswald Gomis pg. 14,20.

இலங்கையில் கிறிஸ்தவ மதம் - G.T.P. சோமரத்ன பக். 22-25

இலங்கையில் கத்தோலிக்க வரலாறு - ரீட்டா வெலகம்பல பக. 14

மேல் கூறப்பட்டவற்றை நாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது, போர்த்துக்கேயரின் வருகைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே இலங்கையில் கிறிஸ்தவம் இருந்தமைக்கான சான்றுகள், சாதியக்கூறுகள் அதிகம் காணப்படுகின்றன. இந்நாட்டில் கிறிஸ்தவத்துக்கு நீண்ட வரலாறு உண்டென்பது உறுதியாகின்றது. சிறப்பாக இலங்கை இந்தியாவுக்கு மிக அருகாமையில் அமைந்துள்ளமையும், இலங்கையில் வெளிநாடுகளுடனான வர்த்தகத் தொடர்புகள் இருந்துள்ளமையும் இதற்குச் சாதகமாக அமைகின்றன. இந்தியாவின் அரசியல், சமய, பொருளாதார, கலாச்சாரம் ஆகியவற்றின் தாக்கங்கள் இலகுவாக இலங்கையை வந்தடைந்தன. எனவே தென் இந்தியாவின் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் கி.பி. 50 ஆண்டு தொடக்கம் வளர்ச்சியடைந்து வந்த கிறிஸ்தவ மறையும் இலங்கையை மிக இலகுவாக வந்தடைந்திருக்கலாம். மேலும் தென் இந்தியாவிலிருந்து இஸ்லாம் மதம் இஸ்லாமிய வர்த்தகர்கள் வழியாக இலங்கையை வந்தடைந்ததுபோல, கிறிஸ்தவ வர்த்தகர்கள் வழியாக கிறிஸ்தவமும்

இலங்கையை வந்தடைந்திருக்கலாம். மேலும் அக்காலத்திய அரச பிள்ளைகள் பின்பற்றிய திறந்த சமயக் கொள்கைகளும் அதற்குச் சாதகமாக அமைந்திருக்கலாம்.

## 8.1.2. போர்த்துக்கேயர் காலம் (1505-1657)

### 8.1.2.1. போர்த்துக்பேயர் இலங்கைக்கு வந்ததற்கான காரணங்கள்

புராதன காலம் தொட்டு கீழைத் தேச வர்த்தகத்தின் ஏகபோக உரிமை அராபியரின், அதாவது முஸ்லிம்களின் கைகளிலேயே இருந்து வந்தது. அவர்கள் கீழைத் தேச நாடுகளுடன் வர்த்தகம் செய்து, தம் நாடுகளின் வருவாயை வளர்த்து, செல்வம் கொழிக்கும் நாடுகளாக்கி வந்தனர். எட்டாம் நூற்றாண்டில் அராபியரால் கைப்பற்றப்பட்டு, அடிமையாக்கப் பட்ட இஸ்பானிய குடாநாட்டின் ஒரு சிறிய பகுதியாகிய போர்த்துக்கால், கி.பி. 1095இல் முஸ்லிம்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, ஒரு தனி வல்லரசாக உருவாகி, வலிமை பெற்று வளர்ந்தது. இரு நூற்றாண்டுகள் தொடர்ச்சியாக இடம்பெற்ற போரினால் போர்த்துக்கேயர் முஸ்லிம்களை முற்றாக தம் நாட்டிலிருந்து விரட்டி, கீழைய நாடுகளுக்கான கடல் வழிப் பாதையொன்றைக் கண்டுபிடிக்க அயராது உழைத்தனர். இறுதியாக 1497ம் ஆண்டில் போர்த்துக்கேய அரசனால் வாஸ்கோ ட காமா தலைமையில் அனுப்பப்பட்ட கப்பற் படைகள் ஆபிரிக்க கேப் முனையைக் கடந்து, கிழக்கு ஆபிரிக்காவின் கடற்கரைத் துறைமுகங்களில் வந்திறங்கினர். பின்னர் வாஸ்கோ ட காமா அங்கிருந்து இந்தியாவுக்கான புதிய கடல வழியைக் கண்டு பிடித்தார். அதைத் தொடர்ந்து போர்த்துக்கேயப் படைகள் இந்திய மண்ணில். கல்கத்தா என்னும் இடத்தில் 1498ம் ஆண்டு வைகாசி மாதம் 22ம் திகதி முதல்முறையாகக் காலடி எடுத்து வைத்தன.

இந்தியாவில் தன் நிலையை படிப்படியாக உறுதிப்படுத்திய போர்த்துக்கால், வெகு விரைவில் இந்திய கடலின் தனிப் பெரும் உரிமைகொண்ட அதிகாரியாக மாறியது. கீழைத் தேச நாடுகளுக்கு கடல் வழிப் பாதையைக் கண்டுபிடித்ததன் வழியாக போர்த்துக்கால் இவ்வளவு காலமும் முஸ்லிம்களும் இத்தாலியரும் அனுபவித்து வந்த

வர்த்தக ஆதாயத்தையும், வரத்தக ஏகபோக உரிமையையும் தனதாக்கிக் கொண்டது. இவ்வளவு காலமும் தங்களைக் கொடுமைப் படுத்திய அராபியரை தாங்களும் கொடுமைப் படுத்தி, முஸ்லிம்களின் கைகளிலிருந்து இந்திய நகரங்களையும், வர்த்தகத்தையும் கைப்பற்றினர். பொன், வெள்ளி, வாசனைத் திரவியங்கள் மேலிருந்த பற்றும், முஸ்லிம்களின் மேலிருந்த வெறுப்பும் ஆத்திரமுமே போர்த்துக்கேயரின் கீழைத் தேசப் படையெடுப்பில் அவர்களுக்குத் தென்பூட்டி உற்சாகம் அளித்தன. அத்துடன் 15ம், 16ம் நூற்றாண்டுகளில், ஐரோப்பாவில் ஏற்பட்ட மத மறுமலர்ச்சியும் அதற்கு ஒரு காரணமாக அமைந்தது. ஆரம்பம் முதல் முஸ்லிம்களின் கொடிய ஆட்சியின் கீழ் உருவாகிய போர்த்துக்கேயருக்கு தங்கள் சொந்த விடுதலைக்காகப் போராடுவது இறைவனுக்காகவும், அவரது திருச்சபைக்காகவும் போராடுவதற்கு ஒத்ததாகத் தென்பட்டது. தங்கள் பேரரசுக்காகப் போராடுவது இவ்வுலகில் இறையரசின் வளர்ச்சிக்காகப் போராடுவதேயெனக் கருதினர். கடவுளின் மகிமைக்காக, தம் அரசரின் நலனுக்காக, ஆன்ம இரட்சணியத்திற்காக, முஸ்லிம் மதத்திற்கு எதிராக, வர்த்தக வருவாயை அதிகரிப்பதற்காக, பேரரசின் நிலப்பரப்பை விஸ்திரிப்பதற்காக, திருச்சபையின் வளர்ச்சிக்காகப் போராடி உழைப்பதெல்லாம் ஒன்று என்பதே அவர்களின் கொள்கை. ஒரு போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியரின் கூற்றுப்படி, ஆன்மீக அதிகாரத்தையும் இலௌகீக அதிகாரத்தையும் ஒன்றில்லாமல் ஒன்றைச் செயல்படுத்த முடியாத அளவிற்கு ஒருங்கிணைப்பதே அவர்களின் கீழைத் தேச படையெடுப்புகளின் நோக்கமாகும்.

**'பத்ரோ ஆதோ' முறை**

இக் கொள்கைக்கு அமைய, அவர்களின் படையெடுப்புகளுக்குத் தலைமை தாங்கியவர்கள் தாம் கைப்பற்றிய கீழைய நாடுகளில் திருச் சிலுவையைத் தாபிக்கும்படி பேரரசரால் பணிக்கப்பட்டார்கள். பாப்புமார்களும் புறவின மக்கள் மத்தியில் நற்செய்தியைப் பரப்பும் அவர்களின் ஆன்மீக வாஞ்சையைப் பாராட்டி ஊக்குவிக்கத் தவறவில்லை. பாப்பு ஆறாம் அலெக்சாந்தர் 1493ம் ஆண்டில் போர்த்துக்கேயருக்கும் இஸ்பானியருக்கும் முறையே கீழைத் தேசங்கள், மேலைத் தேசங்களில் அவர்கள் கைப்பற்றும் நாடுகளுக்கு மேல்

சகல அதிகாரமும் வழங்கி, மக்களை கத்தோலிக்க விசுவாசத்திலும், நல்லொழுக்கத்திலும் பயிற்றுவிக்கக் கூடிய நல்ல, சிறந்த அனுபவமும், அறிவும் ஆற்றலுமுள்ள, கடவுள் பக்தியான ஆட்களை அங்கு அனுப்பி-வைக்கும்படி கேட்டுக் கொண்டார். அக்காலத்தில் போர்த்துக்கேயர் கீழைத் தேசங்களிலும், இஸ்பானியர் மேலைத் தேசங்களிலும் மேற்கொண்ட படையெடுப்புகளும், மறை பரப்புப் பணிகளும் அவர்கள் உரோமைத் திருச்சபையுடன் செய்துகொண்ட ஒரு சிறப்பு உடன்படிக்கையின் அடிப்படையிலேயே நிகழ்ந்தன. இவ் உடன்படிக்-கையை "**பத்ரோ ஆதோ**" அதாவது "அரச ஆதரவு" என்றழைப்பர். இந்த உடன்படிக்கை போர்த்துக்கேயர் இலங்கை, இந்தியா போன்ற கிழக்கு-ஆசிய நாடுகளில் திருச்சபையின் தாபித்ததிலும், அதன் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியது. அதன் விளைவாக கீழைத் தேசங்களில் நாடுகளைக் கைப்பற்றவும், அங்கு வர்த்தகம் செய்யவும் ஏகபோக உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக அப் புதிய நாடுகளில் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்ப அவர்கள் தம்மாலான அனைத்தையும் செய்யவேண்டும். மறை பரப்புப் பணி, திருச்சபையை தாபித்தல், மறைமாவட்டங்கள், பங்குகள், மடங்கள், பாடசாலைகள் போன்ற ஏனைய தாபனங்களை அமைத்து நிர்வகித்தல், அவற்றிற்குத் தேவையான குருக்கள் துறவிகள், மறை பரப்பாளர்களைச் சேர்த்து அனுப்புதல், அவர்களைப் பராமரித்தல், அதற்குரிய நிதியுதவி வழங்குதல் போன்ற பொறுப்புகள் அனைத்தும் அந்நாட்டு கத்தோலிக்க அரசர்களிடமே பாரம் கொடுக்கப்பட்டன. அதற்குக் கைமாறாக, ஆயர், திருச்சபையின் அதிகாரிகள் போன்ற நியமனங்களுக்குத் தாம் விரும்புவர்களின் பெயர்களைச் உரோமைக்குச் சிபார்சுசெய்யும் உரிமை அவர்களுக்கு இருந்தது.

சுருங்கக் கூறின் "பத்ரோ ஆதோ" உடன்படிக்கையானது போர்த்துக்கேய அரசருக்கு, திருநிலைப்படுத்தப்பட்ட குருக்களுக்கேயுரிய திருவருட் சாதனங்கள் வழங்கும் விடயம் தவிர்ந்த அனைத்து திருச்சபையின் அதிகாரங்களையும் அளித்தது. மறைபரப்பு நாடுகளில் அரசர் பாப்புவின் பிரதிநிதி போன்று செயல்பட்டார். மறைப் பங்குகள், பணிகள் சிறந்த முறையில செயற்பட வேண்டிய ஒழுங்கு முறைகள், கட்டளைகள் அவராலேயே வழங்கப்பட்டன. உரோமையிலிருந்து வரும் கட்டளைகள், வழிகாட்டல்கள் அனைத்தும் அவரின் ஊடாக, அவரின்

அனுமதியுடனேயே வழங்கப்பட்டன. அரசர்கள் மறைபரப்புப் பணியை இறைவனால் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியாகக் கருதி பொறுப்புடனும், நிதானத்துடனும் ஏற்று நிறைவேற்றினர். எனவே "பத்ரோ ஆதோ" உடன்படிக்கையினால் தாங்கள் கைப்பற்றும் நாடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ளவும், சூறையாடவும் தமக்கு உரிமை உண்டெனக் கருதினர். இவ்வாறு அரச அதிகாரத்தையும், ஆன்மீக அதிகாரத்தையும் ஒன்றுபடுத்தியதன் விளைவாக பல முறைகளில் கிறிஸ்தவர்கள் பிற்காலத்தில் சுதேச அரசர்கள், அதிகாரிகள், மக்களின் கோபத்துக்கும், வெறுப்புக்கும், துன்புறுத்தலுக்கும் ஆளாக வேண்டியிருந்தது.

## 8.1.2.2. டொம் லோறென்ஸோ டி அல்மெய்டா இலங்கைத் தீவில் வந்திறங்குதல்

இந்தியாவில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்ட நிலைகளை நிர்வகிக்க பேரரசர் டொம் மனுவேல் 1505 ஆண்டில் டொம் பிரான்ஸ்-சிஸ்கோ என்பவரை தமது முதற் பிரதிநிதியாக அனுப்பிவைத்தார். அவர் பேரரசரின் அதிகாரத்தைச் செயல்படுத்த, கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப, கீழைய நாடுகளில் பேரரசை விஸ்திரிக்கவுமென, இலங்கை, பர்மா, மலாக்கா போன்ற நாடுகளுக்கு தம் படைகளைச் செல்லுமாறு பணித்தார். போர்த்துக்கேய படைகள் இலங்கை செல்லுவதற்கு விரைவில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. மலாக்கா, செங்கடல், பாரசீய வளைகுடாவிற்கு இடைப்பட்ட தம் கடல்வழி வர்த்தகப் பயணங்கள் போர்த்துக்கேயரால் தடைசெய்யப் பட்டமையால், முஸ்லிம்கள் மாலைதீவு வழியாக தங்கள் வர்த்தகப் பயணங்களை மேற்கொண்டு-வரும் செய்தி, பேரரசரின் பிரதிநிதி டொம் பிரான்ஸ்சிஸ்கோவுக்கு எட்டியது. அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த, தம் மகன் டொம் லோறென்ஸோ டி அல்மெய்டா தலைமையில் ஒன்பது கப்பல்கள் கொண்ட ஒரு படையை அனுப்பிவைத்தார். அப்படைக்கு ஆன்மீக குருவாக பிரான்ஸ்சிஸ்கன் சபையைச் சார்ந்த பரிசுத்த குருவான பிறே விசென்ற் சென்றார். படைக் கப்பல்கள் ஒரு பெரிய புயற்காற்றில் அகப்பட்டுக்கொண்டன. ஆகவே டொம் லோறென்ஸோ மாலைதீவுப் பயணத்தைக் கைவிட்டுவிட்டுத் திரும்பிப்போக நினைத்தார். இருந்தும், ஆன்மீக குருவிடம் ஆலோசனை கேட்டபோது, அவர் உடனடியாகத்

தீர்மானம் எதுவும் எடுக்க வேண்டாமென்றும், கடவுளின் வழிநடத்துதலுக்காகக் காத்திருக்கும்படியும் கூறினார். அடுத்த நாள் காலைப் பூசைப் பலி செலுத்துமுன், ஆன்ம குரு பயணத்தை "மேற்கொள்வதா?", "விடுவதா?" என இரு துண்டுப் பேப்பர்களில் எழுதிப் பூசைக் கல்லின் கீழ் வைத்தார். பூசையின் பின் பார்த்தபொழுது இரு துண்டுகளையும் அங்கு காணவில்லை. ஆகவே அவர் அதுவே கடவுள் சித்தமென எண்ணி, எத் தீர்மானமும் எடுக்காமல், கப்பல்களைக் காற்றோடு போகவிடும்படி கேட்டுக்கொண்டார். எனவே கப்பல்கள் தென்-கிழக்குத் திசையாக காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டு, இலங்கையின் தென்-மேற்குத் துறையை அடைந்தன. பின்பே அது கொழும்புத் துறைமுகமென அறிந்துகொண்டனர். இவ்வாறு போர்த்துக்கேயர் எதிர்பாராத விதமாக, திடீரென 1505ம் ஆண்டு, கார்த்திகைத் திங்கள் பதினைந்தாம் திகதி இலங்கையில் முதல்முறையாகக் காலடி வைத்தனர்.

போர்த்துக்கேயர் கொழும்புத் துறைமுகத்தில் இறங்கியதை கோட்டேயிலிருந்த சிங்கள அரசன் ஒன்பதாம் தர்ம பராக்கிரம பாகு கேள்விப்பட்டான். "வெள்ளை நிறத் தோல் கொண்ட ஒரு அழகான இன மக்கள், இரும்புக் கவசங்களும், தலைப்பாகையும் அணிந்தவர்களாய், ஒரு விநாடி தானும் ஒரு இடத்தில் சற்று ஓய்ந்திருக்கப் பொறுமை அற்றவர்களாய், அங்கும் இங்கும் நடந்து கொண்டு, துண்டுக் கற்களை (பாண்) உண்டு, இரத்தத்தைப் (இரசம்) பருகிக்கொண்டு...." போர்த்துக்கேயரைப் பற்றிய இவ் விவரணத்தைக் கேள்விப்பட்ட அரசன் அச்சம் கொண்டு, போர்த்துக்கேயருடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ள விருப்பம் தெரிவித்து உடனே தம் தூதுவரை அனுப்பினான். அதன் விளைவாக போர்த்துக்கேயருக்கும் சிங்கள அரசனுக்குமிடையே பரஸ்பர நட்பும், வர்த்தகமும் பற்றிய உடன்படிக்கை ஒன்று பொற் தட்டுகளிலே சிங்களத்திலும் போர்த்துக்கேயத்திலும் கைச்சாத்திடப்பட்டது. அதன்படி சிங்கள அரசன் போர்த்துக்கேய அரசருக்கு ஆண்டுதோறும் கப்பமாக ஒரு தொகை கறுவா கொடுப்பதாயும், அதற்குப் பதிலாக போர்த்துக்கேயர் சிங்கள கோட்டே அரசரையும், அவருடைய துறைமுகங்களையும் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதாயும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்ட அத் தினத்தில்தான் இலங்கைத் திருச்சபைக்கும் அத்திவாரம் இடப்பட்டது. அரசனின் அனுமதியுடன் லோறென்ஸோ திருச் சிலுவையையும்,

போர்த்துக்கேய பேரரசின் சின்னங்களையும் கடலுக்கு எதிரேயிருந்த பாறையில் பொறித்து வைத்தார். அதுமட்டுமல்ல தன் பெயர் கொண்ட புனித லவுறெஞ்சியாரின் பெயரால் ஒரு சிற்றாலயமும், அதை அடுத்து ஒரு சிறிய வர்த்தகக் களஞ்சியமும் கட்டினார்.

போர்த்துக்கேயப் படைகள் இலங்கையைக் கண்டுபிடித்துக் கைப்பற்றிய செய்தி பேரரசர் 1வது மனுவேலுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அதை அக்காலத்தில் திருத்தந்தையாக இருந்த பாப்பு இரண்டாம் யூலியசுக்கும், கர்தினால்மாருக்கும் அறிவித்தார். "மேன்மை மிக்க தந்தையே, உங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய நற்செய்தி ஒன்றினை அறியத் தருகிறோம். புதிய இனத்துக்கு இறைவனின் நற்செய்தியைக் கொண்டு செல்லும் நற்செய்தியை உங்களுக்கு மிக்க மகிழ்ச்சியோடு அறிவிக்கிறோம். எமது கீழைத்தேயத் தலைவனின் மகனுடன் எமது எதிரிகளைத் தோற்கடித்து, மிகவும் முக்கிய தீவொன்றில் நுழைந்துள்ளோம். அதன் பெர் 'தப்றபோன்' என்பதாகும்". அந் நல்ல செய்தி உரோமாபுரியில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

## 8.1.2.3. போர்த்துக்கேயரின் வருகையின்போது இலங்கையில் நிலவிய அரசியல் பின்னணி

டொம் லோறென்ஸோ டி அல்மெய்டா தலைமையில் போர்த்துக்கேயர் முதல்முறையாக இலங்கையில் வந்திறங்கியபொழுது, இலங்கை மூன்று தனி அரசுகளாகப் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அவையாவன: இலங்கையின் தென் மேற்குப் புறத்தில் சிங்கள கோட்டே அரசும், மத்திய மலைப் பிரதேசத்தில் சிங்கள கண்டி அரசும், வடக்கில் தமிழ் யாழ்ப்பாண அரசுமாகும். கோட்டே அரசை ஒன்பதாம் தர்ம பராக்கிரம பாகு (1489-1513), அதன் தலை நகராகிய ஜயவர்தனபுர கோட்டேயிலிருந்து ஆண்டு வந்தான். அவன்தான் போர்த்துக்கேயருடன் சமாதான உடன்படிக்கை செய்து, அவர்களுக்குக் கப்பமாக கறுவா அனுப்பி, தனக்கும், தன் துறைமுகங்களுக்கும் பாதுகாப்பைத் தேடிக்கொண்டவன். மத்திய மலைப் பிரதேசத்தை சேனாசம்மத்த விக்கிரமபாகு (1469-1511) கண்டியிலிருந்து ஆட்சி செய்தான். வடக்கில் யாழ்ப்பாண அரசை பரராஜசேகரன் (1478-1519) நல்லூரிலிருந்து ஆட்சிசெய்தான்.

ஆனால் கொழும்பை தமது வர்த்தக நடுநிலையங்களில் ஒன்றாகக் கொண்டிருந்த முஸ்லிம்கள் போர்த்துக்கேயரின் வருகையை சற்றேனும் விரும்பவில்லை. எனவே அவர்கள் போர்த்துக்கேயருக்குத் தொடர்ந்து பிரச்சினை கொடுத்துக் கொண்டிருந்தனர். அதன் விளைவாக பலமுறைகளில் போர்த்துக்கேயர் முஸ்லிம்களின் துன்புறுத்தலுக்கு ஆளாகினர். முஸ்லிம்களால் பல வகையிலும் துன்புறுத்தப்பட்ட போர்த்துக்கேயர், 1507ம் ஆண்டில், தம் வியாபாரக் களஞ்சியத்தையும் சிற்றாலயத்தையும் மூடிவிட்டு, தம் ஆட்களை திருப்பி அழைத்துக் கொண்டனர். ஆனால் கோட்டே அரசரின் வேண்டுகோளுக்கு இணங்க, அவர்கள் மீண்டும் 1517இல் பெரிய படையுடன் திரும்பி வந்து, அரசரின் அனுமதியுடன், கொழும்பில் ஒரு பெரிய கோட்டையைக் கட்டினர். கண்டி இளவரசன் விக்கிரம பாகு, சுதேச முஸ்லிம்களுடன் இணைந்து, கோட்டே சிம்மாசனத்தைக் கைப்பற்ற முயற்சிசெய்தான். அப்போது அரசன் தர்ம பராக்கிரம பாகு போர்த்துக்கேயரின் உதவியை நாடி, அவர்களுடன் தான் முன் செய்துகொண்ட உடன்படிக்கையைப் புதுப்பித்து, அவர்களின் உதவியையும் பாதுகாப்பையும் தேடிக்கொண்டான்.

தர்ம பராக்கிரம பாகுவின் மரணத்தை அடுத்து 1520இல் அவன் மகன் 6வது விஜய பாகு கோட்டே அரசனானான். அவன் தன் தந்தைக்கு நஞ்சு ஊட்டிக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது. போர்த்துக்கேயர் களிமண்ணினால் கட்டப்பட்ட தம் கோட்டைக்குப் பதிலாக, கற்களாலும் சுண்ணாம்பாலும் பெலமான ஒரு கோட்டையைக் கட்டினர். இது சிங்களவருக்குச் சந்தேகத்தையும் அச்சத்தையும் கொடுத்தன. எனவே அரசன் விஜய பாகு, முஸ்லிம்களுடன் சேர்ந்து, தன் தந்தை போர்த்துக்கேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு மாறாக. போர்த்துக்கேயர்மேல் போர் தொடுத்தான். அதில் தோற்கடிக்கப்பட்ட அவன், அதற்காக மனம்வருந்தி, போர்த்துக்கேய-ருடனான உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டான். எனினும் அவனுடைய ஆட்சி பல காலம் நீடிக்கவில்லை. அவனுக்கும், அவனு-டைய மூத்த சகோதரனுக்குமாக நான்கு ஆண் மக்கள் இருந்தனர். இவர்களில் மூத்தவன் இறந்தபடியால், எஞ்சிய மூவருமே அவனுக்குப் பின் அரச சிம்மாசத்துக்கு வாரிசுகள். ஆனால் விஜய பாகு அவர்களை விடுத்து. தன் சுவிகார மகனை, அதாவது தன் இரண்டாம் மனைவியின்

மகனையே தனது வாரிசாகக் கொள்ள முயற்சித்தான். இதை அறிந்த மூன்று இளவரசர்களும் தப்பியோடி, கண்டிய அரசரின் உதவியுடன் ஒரு படையைத் திரட்டி, விஜய பாகுவுக்கு எதிராகப் போர் தொடுத்தனர். அவனுடைய படையின் ஒரு பகுதியினரும் இளவரசர்களின் படையோடு சேர்ந்து கொண்டனர். இறுதியில் விஜய பாகு கொல்லப்பட்டான். அரச மாளிகையில் இருந்த பொருட்கள் யாவும் கொள்ளையடிக்கப்பட்டன. 1521 இல் நடந்த இச்சம்பவம் "விஜயபாகு கொள்ளை" என அழைக்கப்பட்டது. தொடர்ந்து கோட்டே அரசு கோட்டே, சீதவாக்கை, றைகம என மூன்றாகப் பிரிக்கப்பட்டு, மூன்று இளவரசர்களுக்கும் இடையில் பகிரப் பட்டது. அவர்களுள் மூத்தவன் ஏழாம் புவனேக பாகு என்ற பெயருடன் கோட்டை மன்னனானான். இரண்டாவது மகன் பரராஜசிங்க மத்தும் பண்டார றைகமவுக்கும், மூன்றாவது மகன் மாயதுன்ன சீதவாக்கைக்கும் அரசனானார்கள். இவ்வாறு கோட்டே அரசு பிரிவுபட்டது போர்த்துக்கேயர் மென்மேலும் நாட்டு அரசியலில் பங்கெடுப்பதற்கு வழிகோலியது.

**கோட்டை அரசில் போர்த்துக்கேயரின் பலம் வளர்ச்சியடைதல்**

மூன்று சகோதரர்களின் நல்லுறவு பல காலம் நீடிக்கவில்லை. கோட்டே அரசன் புவனேக பாகு தான் வயதில் முதிர்ச்சியடைவதையும், தன் சகோதரனும் சீதவாக்கை அரசனுமாகிய மாயதுன்ன, முஸ்லிம்களுடன் சேர்ந்து, கோட்டே அரசைக் கைப்பற்ற இடைவிடாமல் பல முறைகளில் முயலுவதையும் கண்டு கலங்கி, போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். தனது பாதுகாப்புக்கு கொழும்பில் போர்த்துக்கேயரின் வர்த்தக களஞ்சியம் மட்டுமல்ல, ஒரு மிகப் பெலமான கோட்டையும், கோபுரமும் இருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, அதைக் கட்டும்படியாக போர்த்துக்கேய மன்னனைக் கேட்டு, அதற்குரிய செலவையும் கொடுத்தான். தனக்கு வாரிசாக ஒரு ஆண் மகவு இல்லாத அவன், தன் மகள் சமுத்திராதேவியை தன் சகோதரியின் மகனாகிய விதிய பண்டாராவுக்குத் திருமணம் செய்து வைத்தான். தன் மகளின் மகனும், தன் பேரனுமாகிய தர்மபாலாவையே தனது வாரிசாக்க விரும்பினான். அது சகோதரங்களுக்குள் இருந்த பிளவையும் பகையையும் இன்னும் அதிகரித்தது. அது மட்டுமல்ல சிம்மாசனத்துக்கு அடுத்த வாரிசுகளாயிருந்த தனது இரண்டாம் மனைவியின் இரு ஆண்

மக்களினதும், ஒரு மருமகனினதும் வெறுப்பையும் தேடிக்கொண்டான். றைகம அரசன் பரராஜசிங்க இறந்ததை அடுத்து, றைகமவையும் தனதாக்கிக் கொண்ட மாயதுன்ன, இன்னும் வலிமைபெற்று, போர்த்துக்கேயரின் எதிரியான இந்தியாவைச் சேர்ந்த பச்சி மார்க்கர் என்பவனின் உதவியுடன் மீண்டும் கோட்டே அரசன்மேல் போர் தொடுத்தான். ஆனால் புவனேக பாகு கோட்டே அரசனின் பாதுகாப்பை உடன்படிக்கை வழியாக பொறுப்பேற்றிருந்த போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். எனவே மாயதுன்ன போர்த்துக்கேய படையினரால தோற்கடிக்கப்பட்டு, அதிக இழப்புகளுக்கு ஆளானான். தன் இனத்தவர்களால் எதிர்க்கப்பட்ட புவனேக பாகு, தன்னைக் காப்பாற்றிய போர்த்துக்கேயர் மேல் நம்பிக்கை கொண்டு, தனக்குப் பின் தன் பேரன் தர்மபாலா சிம்மாசனம் ஏறுவதை நிச்சயப்படுத்திக் கொள்ள அவர்களின் உதவியை நாடினான். பொன்னினால் செய்யப்பட்ட தம் பேரன் தர்மபாலாவின் முழு அளவிலான சிலையை, மாணிக்கக் கற்கள் பொறிக்கப்பட்ட பொன் முடியுடன், தன் தூதுவர் சேலப்பு ஆராய்ச்சி வழியாக போர்த்துக்கால் மன்னனிடம் அனுப்பி, அதற்கு முடி சூட்டும்படி கேட்டான். ஆரம்பந்தொட்டு போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டுவந்த மாயதுன்ன கோட்டே அரசனாகுவதை சற்றேனும் விரும்பாத போர்த்துக்கேய அரசன் மூன்றாவது யுவான், புவனேக பாகுவினுடைய விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு, 1543ம் ஆண்டில் வெகு ஆடம்பரத்துடன் அவனுடைய பேரன் தர்மபாலாவின் சிலைக்கு முடிசூட்டி, அவனைக் கோட்டே மன்னனாக ஏற்றுக் கொள்வதாக வாக்களித்தான். அது மட்டுமல்ல, அவனுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கும்படி கோவாவிலிருந்த தன் அதிகாரிகளுக்குக் கட்டளை கொடுத்தான்.

புவனேக பாகுவின் தூதுவர்கள் கிறிஸ்தவத்தில் தம் அரசர் கொண்டுள்ள ஆர்வத்தை எடுத்துக்கூறி, இலங்கையில் கிறிஸ்தவத்தைப் போதிக்க சில கத்தோலிக்க குருமார்களை அனுப்பிவைக்கும்படியான அவரின் வேண்டுகோளையும் அவ்வேளையில் போர்த்துக்கேய மன்னருக்குத் தெரியப்படுத்தினர். ஆனால் உண்மையில் போர்த்துக்கேய மன்னரின் உதவியையும், பாதுகாப்பையும், நட்புறவையும் பெறுவதற்காகவே அரசர் இவ்வாறு கூறியனுப்பியிருந்தார். எனினும் அரசன் புவனேக பாகுவின் இவ் விண்ணப்பம் போர்த்துக்கேயர்

இலங்கையில் மறைபரப்புப் பணியை மேற்கொள்ளுவதற்கு வழிகோலியது. கோட்டே அரசரின் இவ் விண்ணப்பத்தை மிக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட மன்னன், யுவான் டா விலா டோ கொண்டே என்ற குருவின் தலைமையில், பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த வேறு ஆறு குருக்களை அவர்களுடனேயே அனுப்பி வைத்தார். அம் மறை போதகர்களை மிக மகிழ்வுடன் வரவேற்ற அரசன் புவனேக பாகு, தன் அரசு முழுவதிலும் நற்செய்தியைப் போதிக்க அவர்களுக்கு அனுமதியளித்தான். ஆனால் அரசனும் அவனுடைய குடும்பத்தினரும் தாங்கள் கிறிஸ்தவத்தைத் தழுவுவதற்கு எவ்வித விருப்பமும் காட்டவில்லை. ஏனெனில், அவர்கள் மதமாற்றம் செய்தால், பிரசைகள் மாய துன்னையின் பக்கம் சென்று விடுவார்களென அரசன் அஞ்சினான். அரசர் கிறிஸ்துவத்தைத் தழுவுவாரென்றும், அவரைத் தொடரந்து பிரசைகளும் பெருந்தொகையில் மனம்மாறுவார்கள் என்றும் எதிர்பார்த்து வந்த குருக்களுக்கு இது பெரிய ஏமாற்றமாயிருந்தது. எனினும் பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் தம் மறை பரப்புப் பணியை ஆரம்பித்து நடத்தினர். போர்த்துக்கேய அதிகாரிகளின் அடாவடித்தனங்களும், கெடுபிடிகளும், பேராசைகளும், நாட்டுச் சட்ட ஒழுங்குகளை மதியாத போக்கும் அரசர் புவனேக பாகுவுக்கு அவர்கள் மேல் சினத்தையும் வெறுப்பையும் ஊட்டின. மனந்திரும்பிய புதுக் கிறிஸ்தவர்களும் அவர்களின் அப்போக்கையே பின்பற்றி, வரிகள், அரச பணி போன்ற நாட்டுச் சட்டங்களை மதியாமல், தம் மனம்போல் வாழ்ந்தனர். எனவே அரசன் புதுக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தித் தண்டித்ததுமல்லாமல், தம் பிரசைகள் கிறிஸ்தவத்தைத் தழுவுவதையும் மறைமுகமாகத் தடைசெய்தான். எனினும் பட்டத்து இளவரசனான தர்மபாலாவின் பாதுகாப்பை முன்னிட்டு, அவனுக்குக் கல்வியறிவு ஊட்டும் பொறுப்பை பிதா விலா டோ கொண்டேயிடம் ஒப்படைத்தான்.

அரசியல் நோக்கங்களுக்காக வெளியுலகிற்கு போர்த்துக்கே-யருடனும், கிறிஸ்தவர்களுடனும் நட்புறவு கொண்டவன்போல நடித்த புவனேக பாகு, உண்மையில் அவர்களை மனமார வெறுத்தான். இவ்வேளையில் சிம்மாசனத்துக்கு அடுத்த வாரிசுகளான அவனுடைய இரு மக்களும், மருமகனும் போர்த்துக்கேயருடன் நெருங்கிப் பழகி, நட்புடன் உறவாடுவதைக் கண்டு அரசன் குழம்பினான். அவர்களும் அரசியல் நோக்கத்திற்காகவே அவ்வாறு செய்தனர். எனவே புவனேக

பாகு அச்சம் கொண்டு, அவர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவுவதற்கு முன்னரே தன் மூத்த மகனைக் கொன்றான். இதைக் கண்ட மற்ற இருவரும் இந்தியாவுக்குத் தப்பியோடி, அங்கு திருமுழுக்குப் பெற்றனர். சிறிது காலத்துக்குள் இருவரும் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டு இறந்தனர். போர்த்துக்கேயர் அவர்களில் ஒருவரைத் தனக்குப் பின் கோட்டே அரசனாக்கி விடுவார்களோவெனப் பயந்த புவனேக பாகு, தன் சகோதரனும், தன் பலகால எதிரியுமாகிய மாயதுன்னவுடன் கூட்டுச்சேர்ந்தான். அவர்கள் இருவரும் இணைந்ததைக் கண்ட கண்டி அரசன் ஜெயவீர, மாயதுன்ன கண்டி அரசைக் கைப்பற்றப்போகிறா-னெனப் பயந்து, போர்த்துக்கேயரின் நட்பையும் உதவியையும் நாடினான். அரசியல் நோக்கத்திற்காகவும், தனது பாதுகாப்புக்காகவும், 1546ம் ஆண்டு, பங்குனி மாதம், 9ம் திகதி இரகசியமாகத் திருமுழுக்கும் பெற்றுக்கொண்டான். ஆனால் கோட்டே அரசன் புவனேக பாகு 1551ம் ஆண்டு வைகாசிமாதம் எதிர்பாராதவிதமாக இனந் தெரியாதவர்களால் சுட்டுப் கொல்லப்பட்டான்.

புவனேக பாகுவின் திடீர் மரணத்தை அடுத்து, அவன் முன்னர் செய்திருந்த ஒழுங்கின்படி, அவனுடைய பேரன் தர்மபாலா கோட்டே அரசனாகப் பிரகடனம் செய்யப்பட்டான். அவன் வயதில் இன்னும் இளைஞனாக இருந்ததனால் அவனுடைய தந்தையாகிய விதிய பண்டார அவனுக்குப் பதிலாக ஆளுபவனாக நியமிக்கப்பட்டார். இதைக் கேள்வியுற்ற கோவையிலிருக்கும் போர்துக்கேய மன்னனின் பிரதிநிதியாகிய நொறோனா புவனேக பாகுவின் மரணத்தைப்பற்றி விசாரிக்கவும், தர்மபாலாவின் திருமுழுக்கைத் துரிதப் படுத்தவும், கோட்டே அரசிலிருக்கும் பொக்கிஷங்களைக் கைப்பற்றும் நோக்குடனும், கொழும்புக்கு வந்தார். தர்மபாலா திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவத்-தைத் தழுவிய பின்னரே அரசனாக அங்கீகரிக்கப்படுவாரென அறிவித்தார். விதிய பண்டார அவரைச் சந்தித்து, மாயதுன்ன உயிரோடிருக்கையில் தர்மபாலா மதம் மாறினால், கோட்டே அரசின் மக்கள் மாயதுன்னவை ஆதரிப்பார்களென விளக்கமாக எடுத்துக் கூறி, அவருடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி போர்த்துக்கேயர் மாயதுன்னையால் கைப்பற்றப்பட்ட கோட்டே அரசுக்குரிய நிலப் பகுதியை மீட்டுக் கொடுத்தால், புவனேக பாகு கிறிஸ்தவர்களிடமிருந்து பறிமுதல் செய்த நிலங்கள் அவர்களுக்குத்

திருப்பிக் கொடுக்கப்படும். நொறோனா தம் படையை அனுப்பி அந் நிலப் பகுதியை இலகுவாக மீட்டபின், விதிய பண்டாராவைப் துன்புறுத்தி, ஏராளமான பொக்கிஷங்களைக் கைப்பற்றிக் கொண்டு, கோவைக்குத் திரும்பினார். இதனால் கோபமடைந்த விதிய பண்டார போர்த்துக்கே-யரைப் பழிவாங்கும் நோக்குடன், கிறிஸ்தவ ஆலயங்களை அழித்து, கிறிஸ்தவர்களின் நிலபுலங்களைப் பறிமுதல் செய்து, அவர்களைத் துன்புறுத்தினான். போர்த்துக்கேயரால் சிறையிலடைக்கப்பட்ட அவன், தன் மனைவியின் உதவியுடன் அங்கிருந்து தப்பித்து, கிறிஸ்தவர்களை இன்னும் துன்புறுத்திவிட்டு, யாழ்ப்பாணத்தக்குத் தப்பியோடிச் சென்று, அங்கு இறந்தான்.

## 8.1.2.4. அரசர் தர்மபாலா திருமுழுக்குப் பெறல்

இக் கால கட்டத்தில் ஒரு எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. நீண்ட காலமாக போர்த்துக்கேய அதிகாரிகளும், குருக்களும் அரசர் தர்மபாலாவை அவர் பயிற்றுவிக்கப்பட்ட கிறிஸ்தவத்தைத் தழுவும்படி வற்புறுத்தி வந்தனர். ஆனால் அவருடைய அரண்மனை ஆலோசகர்கள் அரசரின் அதிகாரம் இன்னமும் உறுதியாக நிலைநிறுத்தப் படவில்லையென்றும், அப்படி அரசர் மதம் மாறினால் பிரசைகளுள் பலர் மாயதுன்னவின் பக்கம் திரும்பிவிடுவரெனவும் கூறி, அரசரின் திருமுழுக்கைப் பின்போட்டு வந்தனர். அக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த மீனவர்கள் கொழும்புக்கு வடக்கேயும், தெற்கேயுமுள்ள கடற்கரைப் பிரதேசத்தில் குடியேறியிருந்தார்கள். அவர்கள் மன்னாரில் குடியேறியிருந்த தங்கள் வம்சத்தவர்கள் மனந்திரும்பி மறைசாட்சிகளாக மரித்ததைக் கேள்வியுற்று, தாங்களும் கத்தோலிக்க மதத்தைத் தழுவ விரும்பினார்கள். இதன் விளைவாக 1556ம் ஆண்டு முற்பகுதியில் ஏறக்குறைய 70,000 பேர் தங்கள் தலைவர்களுடன் மனந்திரும்பி, திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவத்தைத் தழுவினார்கள். அது அரசர் தர்மபாலாவுக்குத் மனத் துணிவைக் கொடுத்தது. எனவே அவரும் 1556இல் திருமுழுக்குப் பெற்று, டொன் யுவான் என்ற பெயருடன் கிறிஸ்தவத்தைத் தழுவினார். அவருடன் அவருடைய இராணியும், அநேக அரச அதிகாரிகளும், மக்களும் திருச்சபையில் சேர்ந்தனர். அரசரின் மதமாற்றத்தைப் பொதுவாக மக்கள் ஏற்றுக் கொண்டாலும், பலர் அரசரிடமிருந்து பிரிந்து சென்று, மாயதுன்னவுக்கு தம் ஆதரவை

அளித்தனர். மேலும் அரசர் டொன் யுவான் தர்மபாலா, முன்பிருந்த பௌத்த அரசர்கள் பௌத்த பிக்குகளுக்கு அரச நிலங்களையும், நிதிகளையும், கட்டிடங்களையும் அளித்ததுபோல, தான் கிறிஸ்தவ அரசரென்ற ரீதியில் கிறிஸ்தவ குருக்களுக்கு அரச நிலங்களையும், நிதிகளையும், கட்டிடங்களையும் வழங்கினார். இதைப் பௌத்த பிக்குகளும், மக்களும் விரும்பவில்லை. எனவே அவர்கள் மாயதுன்னா பக்கம் சாய்ந்தனர். தர்மபாலா மதமாற்றம் செய்துகொண்டபடியால், தானே இனி கோட்டே அரசுக்கு உரிமையாளன் எனக் கூறி, மாயதுன்ன தர்மபாலாவுக்கு எதிராகப் போர் தொடுத்தான். அவ்வேளை போர்த்துக்கேயர் வேறு இடங்களில் பல போர்களில் ஈடுபட்டிருந்தமையால், கோட்டேயையும் கொழும்பையும் ஒரே நேரத்தில் காப்பாற்ற முடியாமல போகவே, அரசதானியைக் கொழும்புக்கு மாற்றி, தர்மபாலாவையும் கொழும்பில் தங்கியிருக்கச் செய்தனர். மாயாதுன்னவும், அவனுடைய மகன் திக்கிரி பண்டாவும் கோட்டே அரசின் கடற்கரைப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளைத் தாக்கி, கிறிஸ்தவ ஆலயங்களை அழித்து, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர். அரசர் தர்மபாலா பெயரளவில் மட்டும் கோட்டே மன்னனாக கொழும்பில் வாழ்ந்து வந்தார். அவருக்குப் புத்திர பாக்கியம் கிடைக்கவில்லை. ஒன்றன்பின் ஒன்றாக மூன்று பெண்களை திருமணம் செய்தும், பிள்ளைகள் கிடையாமையால், தனக்குப் பின் மாயதுன்னவும், அவனுடைய மகன் இராச சிங்கவும் கோட்டை அரசுக்கு உரிமை பெற்று, கிறிஸ்தவத்தை முற்றாக அழித்து விடுவார்களெனப் பயந்து, தனக்குப் பின் அரசு போர்த்துக்கேய மன்னருக்கே சேரவேண்டுமென தம் மரண சாசனத்தில் எழுதி வைத்தார். இது அரசர் கத்தோலிக்க மதத்தில் கொண்டிருந்த உறுதியான பற்றைக் காட்டுகிறது. எனினும் அது போர்த்துக்கேயர் கோட்டே அரசைக் கைப்பற்றுவதை இலகுவாக்கிற்று. இறுதியாக கோட்டே அரசன் டொன் யுவான் தர்மபாலா 1597ம் ஆண்டு, வைகாசி மாதம், 27ம் திகதி மரணமானார். அரசர் டொன் யுவான் தர்மபாலாவின் மரணத்தை அடுத்து அவனின் மரண சாசனத்தின்படி கோட்டே அரசு போர்த்துக்கேய அரசன் முதலாவது பிலிப்பின் ஆட்சியின் கீழ் வந்தது, போர்த்துக்கேயர் கோட்டேயை ஒரு புதிய போர்த்துக்கால் ஆக்கி, போர்த்துக்கேய சட்டத்தின் கீழ் ஆட்சி செய்ய விரும்பினர். இது விடயமாக மக்களும் ஆட்சியாளரும் மல்வானவில் ஒன்று கூடிப் பேசினர். இறுதியில், மக்களின்

விருப்பப்படி நாட்டின் பழமையான சட்டம், பழக்க வழக்கத்தின்படியே ஆளுவதாக ஒப்புக் கொள்ளப்பட்டது, எனவே மக்கள் போர்த்துக்கேய அரசன் பிலிப்பை தங்கள் அரசனாக ஏற்றுக்கொண்டனர். மதத்தைப் பொறுத்த மட்டில் ஒருவர் கிறிஸ்தவத்தைத் தழுவுவதை எவரும் தடுக்க முடியாதென்றும், அதேவேளை, எவரையும் கிறிஸ்தவத்தைத் தழுவும்படி எவரும் வலோத்காரப் படுத்தக் கூடாதென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மக்களுக்கும் ஆட்சியாளருக்குமிடையே ஏற்பட்ட இவ் இணக்கத்தை **மல்வான ஒப்பந்தம்** என அழைப்பர்.

## 8.1.2.5. போர்த்துக்கேய மறைபரப்பாளர்களின் பணி

போர்த்துக்கேயர் முதல்முதலாக 1505ம் ஆண்டு, கார்த்திகை மாதம் 15ம் திகதி டொம் லோறென்ஸோ டி அல்மெய்டா தலைமையில் இலங்கைக் கொழும்புத் துறை முகத்தில் காலடி எடுத்து வைத்தனர். அவரால் கொழும்புத் துறைமுகத்தருகே கட்டப்பட்ட புனித லவுறேஞ்-சியார் சிற்றாலயமே இலங்கையில் கட்டப்பட்ட முதல் கத்தோலிக்க வழிபாட்டு தலமாகும். அவருடன் இலங்கைக்கு வந்த அருட்திரு பிறே விசென்ரே அடிகளாரே இலங்கையில் முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். மிகவும் ஆன்மீக வாஞ்சையுள்ள அக் குரு இலங்கையில் தங்கி, நற்செய்திப் பணியில் ஈடுபட விரும்பினாலும், டொம் லோறென்ஸோ இலங்கை அரசருடன் உறுதியான நட்புறவை ஏற்படுத்த முன் அத்தகைய பணியில் ஈடுபடுவதை விரும்பவில்லை. அவர்களுடைய கீழைத் தேசப் படையெடுப்பின் முதல் முக்கிய நோக்கம் வர்த்தக ஏகபோக உரிமையைக் கைப்பற்றுவதே. எனவே கோவையிலிருந்து இந்தோனேஷியா வரையிலான கடற் பரப்பில் உள்ள வர்த்தக துறைமுகங்களைக் கைப்பற்றி, அங்கு தங்கள் நிலைகளை உறுதிப்படுத்துவதிலேயே அவர்கள் கருத்தாய் இருந்தனர். இலங்கையைப் பொறுத்த மட்டில் முதல் நாற்பது ஆண்டுகளும் எந்தவித திட்டமிடப்பட்ட ஒழுங்கான மறைபரப்புப் பணியோ, நற்செய்திப் போதகமோ இடம் பெறவில்லை. ஆனால் கொழும்பில் தங்கியிருந்த போர்த்துக்கேய படை வீரர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் ஆன்மீகப் பணிபுரிய சில குருமார் எப்போதும் அவர்களுடன் தங்கியிருந்தனர். அவர்கள் படைவீரர்களின் மத நலனைக் கவனிப்பதோடு மட்டும் நின்று விடாமல், தம் அயலில் இருந்த கிராமங்களில் நற்செய்தியைப்

பரப்ப தம்மாலானவற்றைச் செய்தனர். இதன் விளைவாக 1518-1543ம் இடைப்பட்ட காலத்தில் கோட்டே அரசில் மட்டுமல்ல, கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும் கூட நற்செய்தி ஓரளவு பரவியிருந்ததாகக் கூறப்படுகிறது. அவர்களுக்கென சில ஆலயங்களும் கட்டப்பட்டன. இவ்வாறு பணிபுரிந்தவர்களுள் அருட் திரு மொன்ரெய்றோ அடிகளாரும் ஒருவராவர். இவர் 1536இல் காலமானார்.

**கோட்டே அரசில் மறைபரப்புப் பணி**

கோட்டே அரசனான புவனேக பாகு தம் அரசில் கிறிஸ்தவத்தைப் போதிக்க சில குருமார்களை அனுப்பும்படி தம் தூதுவர்கள் வழியாக 1543இல் போர்த்துக்கேய மன்னர் டொம் யுவானிடம் விண்ணப்பித்ததை அடுத்தே இலங்கையில் போர்த்துக்கேயரின் முறையான திட்டமிட்ட மறைபோதகப் பணி ஆரம்பமாகியது. போர்த்துக்கேய மன்னர் டொம் யுவாம் அருட்திரு யுவான் டா விலா டோ கொண்டே தலைமையில் 1943இல் அனுப்பிய பிரான்ஸ்சிஸ்கன் சபையைச் சேர்ந்த ஆறு குருக்கள் அடங்கிய குழுவே இலங்கைக்கு வந்த முதல் மறைபரப்புப் பணியாளர் குழுவாகும். கோட்டே அரசன் புவனேக பாகு முதல் மறைபரப்பாளர்களை மகிழ்வுடன் வரவேற்று, அவர்கள் தம் அரசு முழுவதிலும் நற்செய்தியைப் போதிக்க அனுமதி அளித்தான். ஆனால் அரசனோ, அவனது குடும்பத்தினரோ தாங்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுவதற்கு எவ்வித விருப்பத்தையோ, அறிகுறியையோ காட்டவில்லை. அவர்கள் மதம் மாறினால், பிரசைகள் அரசரின் எதிரியான மாதுன்னவின் பக்கம் சென்றுவிடுவார்கள் என்ற பயமே அதற்குக் காரணம். அரசன் மதம் மாறினால், விரைவில் குடிகளும் மதம் மாறுவரென எதிர்பார்த்து வந்த மறைபரப்பாளர்களுக்கு இது பெரும் ஏமாற்றமாக அமைந்தாலும், மனந்தளராமல் தம் பணியைத் தொடங்கினர். அவர்கள் பணிக்கு சில போர்த்துக்கேய அதிகாரிகளின் நடத்தையும், கெடுபிடிகளும். அடாவடித்தனங்களும், நாட்டு சட்ட ஒழுங்குகளை மதியாத போக்கும் பெரும் முட்டுக்கட்டைகளாக இருந்தன. அவர்களைப் பின்பற்றி, புதுக் கிறிஸ்தவர்களும் வரிகள், அரச பணி போன்ற நாட்டுச் சட்டங்களை மதியாமல், தம் விருப்பம்போல் வாழ்ந்த படியால், அரசரும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி, மறைமுகமாக தம் பிரசைகள் கிறிஸ்தவத்தைத் தழுவுவதைத் தடைசெய்தார்.

அவ் இடையூறுகளைப் பொருட்படுத்தாது பணியாளர்கள் தொடர்ந்து செய்த பணிகளின் பயனாக 1550ம் ஆண்டுக்கு முன் கோட்டையிலும் கொழும்பிலும் மட்டுமல்ல, பாணந்துறை, மகோனா, பேருவலை, களுத்துறை, காலி, வெலிகாமம் முதலிய கரையோர நகரங்களிலும் கிறிஸ்தவ சபைகள் ஆரம்பிக்கப்பட்டு, தேவாலயங்கள் நிறுவப்பட்டன. கோட்டே அரசன் போர்த்துக்கேய மன்னருக்குச் செலுத்திய கப்பத்தின் ஓர் பங்கு இதற்காகச் செலவழிக்கப்பட்டது. காலித் துறைமுகத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களை புனித பிரான்சிஸ்கு சவேரியார் 1548இல் தரிசித்ததாகச் சொல்லப்படுகிறது.

புவனேக பாகுவின் மரணத்தையடுத்து, அவனுடைய பேரன் தர்மபாலா மகா பண்டார கோட்டே அரசனானான். அவன் 1556இல் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவியதைத் தொடர்ந்து நற்செய்திப் போதகம் அவனுடைய ஆதரவுடன் அரசு முழுவதும் மிகத் துரிதமாக நடைபெற்றது. மடங்கள், கல்லூரிகள், ஆலயங்கள் கட்டுவதற்கு அரசன் நிலபுலங்களையும், நிதியையும் தாராளமாய் கொடுத்துதவினான். நீர்கொழும்புக்கும் காலிக்கும் இடைப்பட்ட கடலோரப் பகுதிகளில் இருந்த கிறிஸ்தவ சபைகள் போர்த்துக்கேயரின் பாதுகாப்பைப் பெற்றிருந்தமையால் வெகு முன்னேற்றமடைந்தன. கொழும்பு படிப்படியாக ஒரு கிறிஸ்தவ பட்டணமாக மாறியது. பல பங்குகளும், துறவற மடங்களும், பக்திச் சபைகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1597ம் ஆண்டில், அரசர் டொன் யுவான் தர்மபாலா இறந்தபொழுது, கோட்டே அரசில் 100,000க்கு அதிகமான கத்தோலிக்கரும், ஏறக்குறைய 50 ஆலயங்களும், அநேக சிற்றாலயங்களும், 100 பங்குச் சபைகளும் இருந்தனவென்று கூறப்படுகிறது. இவையெல்லாம் போர்த்துக்கேய ஆட்சியின் கீழ் பிரான்சிஸ்கன் சபை மறைபரப்பாளர்கள் ஆற்றிய பெரும் பணியைக் காட்டுகின்றன. அரசர் டொன் யுவான் தர்மபாலாவின் மரணத்தை அடுத்து அவனின் மரண சாசனத்தின்படி கோட்டே அரசு போர்த்துக்கேய அரசன் முதலாவது பிலிப்பின் ஆட்சியின் கீழ் வந்தது,

அறுவடை அதிகமாகவும், வேலையாட்கள் குறைவாகவும் இருந்தபடியால், பிரான்சிஸ்கன் சபையினர் வேறு சபைகளிலிருந்தும் மறைபரப்பாளர்களை உதவிக்கு வரவழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அக்காலத்தில் இலங்கைத் திருச்சபை முழுவதும் இந்திய

கொச்சின் மறைமாவட்ட ஆயரின் நிர்வாகத்தின் கீழ் அமைந்திருந்தது. கொச்சின் ஆயரான ஆந்திரே டி சாந்த மரியாவின் அயராத முயற்சியினால் 1602ம் ஆண்டு, சித்திரை மாதம், திருச்சபை, அரச அதிகாரிகளின் அங்கீகாரத்துடன், அருட் திரு தயோகோ டா குன்கவின் தலைமையில் முதல் இயேசு சபைக் குருக் குழுவினர் இலங்கையில் மறைபரப்புப் பணியிலே பங்கெடுக்க வந்தனர். ஆரம்பத்தில் பிரான்சீஸ்கன் சபையினர் இயேசு சபையினரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தாலும், அப்பிரச்சினை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது. அவ் ஆண்டின் இறுதியில், கொச்சின் ஆயர் கொழும்புக்கு வந்து, கோட்டே அரசுக்கு உட்பட்ட பகுதிகளில் இரு சபையினரினதும் பணித் தள எல்லைகளை நிர்ணயித்துக் கொடுத்தார். மகா ஓயா ஆற்றை எல்லையாக வைத்து, திருமலை- மட்டுநகர், யாழ்ப்பாணம் வரையிலான அதன் வட பகுதி இயேசு சபையினருக்கும், ஆற்றிற்கு தெற்கே மாத்தறை மாவட்டம் வரையிலான பகுதிகள் பிரான்சிஸ்கன் சபையினருக்கும் வழங்கப்பட்டன. இயேசு சபையினர் கொழும்பில் ஒரு கல்லூரி கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. இவ் ஏற்பாட்டின்படி இரு சபையினரும் போர்துக்கேயரின் ஆட்சிக்கு உட்பட்ட கரையோரப் பகுதிகளில் ஆர்வத்துடன் பணிசெய்து, பல்லாயிரக் கணக்கான மக்களைத் திருச்சபையில் சேர்த்தனர். இவர்களுள் அழகிய வண்ண முகத்தல என அழைக்கப்பட்ட சிங்களக் கவிஞர் ஒருவரும் அடங்குவர்.

சில ஆண்டுகளின் பின்னர், 1605 இல், பிரான்சிஸ்கன் சபையினருக்கும், இயேசு சபையினருக்கும் உதவி செய்ய புனித சாமிநாதர் சபையையும், புனித அகுஸ்தினார் சபையையும் சேர்ந்த குருக்களும் வரவழைக்கப்பட்டனர். அவர்களின் பணித்தளமாக 1606இல் அவர்களிடம் கண்டி அரச எல்லைகளை அண்டிய மாவட்டங்கள் ஒப்படைக்கப்பட்டன. குறிப்பாக சாமிநாதர் சபையிடம் சப்பிரகமுவ மாகாணமும் (இரத்தினபுரி மாவட்டம்), இரண்டு கோறளைகளும், அகுஸ்தினார் சபையிடம் சப்த கோறளை, றம்புக்கணை மாவட்டமும் நான்கு கோறளைகளும் ஒப்படைக்கப்பட்டன. இவ்வாறு பிரான்சிஸ்கன், இயேசு, சாமிநாதர், அகுஸ்தீனார் சபைகளைச் சேர்ந்த மறைபரப்பாளர்களின் அயராத உழைப்பினால் நற்செய்தி எங்கும் போதிக்கப்பட்டு. திருச்சபை வளர்ந்தது. பல கஷ்டங்கள், இடையூறுகள்

மத்தியில் அவர்கள் நற்செய்தியைப் போதித்து, மக்களின் பின்பற்றும் தப்பறைகளை அவர்களுக்கு விளக்கி உணர்த்தினர். கலவிக்கு விசேட இடம் அளிக்கப்பட்டது. தேவாலயங்களுக்கு அருகில் சிறிய பாடசாலைகளை அமைத்து, பிள்ளைகளுக்கு அடிப்படைக் கல்வியோடு சமயத்தையும் கற்பித்தனர். அத்துடன் இயேசு சபைக் குருக்கள் சில கல்லூரிகளைக் (Colleges) கட்டி, திறமையான மாணவர்கள் உயர்தர கல்வி பெறச் சந்தர்ப்பம் அளித்தனர். அவர்களின் பிறரன்புப் பணிகளும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வில் அவர்கள் காட்டிய அக்கரையும், ஆர்வமும், மக்கள் வரட்சி, பஞ்சம், கொள்ளை நோய் போன்ற துன்பங்களால் வருந்திய வேளைகளில் அவர்கள் காட்டிய கருணையும், இரக்கமும், ஆதரவும், அர்ப்பணமும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அவர்கள் பல நோயாளர்களைக் குணமாக்கி, அவர்களுக்காகச் செபித்து, அசுத்த ஆவிகளை விரட்டி, மக்களின் நன்மதிப்பைப் பெற்றனர். பிரசிபெற்ற புனித யாத்திரைத் தலங்களில் அவர்கள் செய்த மன்றாட்டங்கள் கேட்கப்பட்டதும், அவர்கள் அடைந்த நன்மைகளும் மக்களை கிறிஸ்தவத்தின்பால் ஈர்த்தன. இவையெல்லாம் திருச்சபையின் வளர்ச்சிக்கு மிகவும் உதவின.

**கண்டி அரசில் மறைபரப்புப் பணி**

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலக்கட்டத்தில், கண்டி அரசை ஜெயவீர ஆண்டு வந்தான். கோட்டே, சீதவாக்கை அரசர்களின் மைத்துனனான அவன், சம்மத்த விக்கிரமபாகு என்றும் அழைக்கப்-பட்டான். சீதவாக்கை அரசனான மாயதுன்ன கண்டி அரசின் மேல் கண் வைத்திருப்பதை அறிந்த ஜெயவீர பயங்கொண்டு, போர்த்துக்-கேயரின் உதவியை நாடினான். தனது அரசைப் பாதுகாக்க படைவீரர்களைத் தந்து உதவும்படி கேட்டு, 1545இல் கோவைக்கு தன் தூதுவர்களை அனுப்பினான். போர்த்துக்கேயரின் உதவியைப் பெறுவதற்கு சிறந்த வழி தான் கிறிஸ்தவனாக வர விரும்புவதாக அறிவிப்பதே என அறிந்து, சில மறைபரப்பாளர்களை கண்டிக்கு அனுப்பும்படி கோட்டே அரசில் பணிபுரிந்த பிரான்சிஸ்கன் சபையினருக்கு விண்ணப்பித்தான். கொழும்பிலிருந்த பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த குருக்கள் சிலர் கண்டிக்கு உடனடியாக அனுப்பப்பட்டனர். அரசன் ஜெயவீர அவர்களை வரவேற்று, கண்டி அரசில் கிறிஸ்தவ மதத்தைப் போதிக்க அனுமதி அளித்ததுமல்லாமல், ஒரு தேவாலயத்தையும்,

அவர்கள் தங்குவதற்கு ஒரு மடத்தையும் கட்டப் போதிய நிலமும் கொடுத்தான். கோவைக்குச் சென்ற தூதுவர்கள் படைவீரருடன் திரும்பி வருவதற்கு முன்னரே அவன் இரகசியமாகத் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவத்தைத் தழுவிக்கொண்டான். அவனது தூதுவர்கள் முப்பத்தெட்டு போர்த்துக்கேய படை வீரருடன் வந்தபின், கண்டியில் பாஸ்கா விழா கொண்டாடப்பட்ட பொழுது, திருப்பலியின் போது தான் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொண்ட இரகசியத்தைப் பகிரங்கப்படுத்தினான். அப்போது சில அரச முக்கி-யஸ்தர்களும், பிரசைகளும் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவினார்கள்.

அரசன் ஜெயவீர அரசியல் நோக்கத்திற்காகத் திருமுழுக்குப் பெற்றானேயன்றி, கிறிஸ்தவத்திற்கு தன்னை அர்ப்பணிக்க விரும்ப-வில்லை. அவன் கேட்ட அளவு படை உதவியை கொடுக்கப் போர்த்துக்கேயர் காலம் தாழ்த்தியமையினாலும், போர்த்துக்கேய படையினரின் பேராசைபிடித்த நடத்தையினாலும், அவன் திருமுழுக்குப் பெற்றதைப் பகிரங்கப்படுத்திய பொழுது, பிரசைகளில் பலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாலும், அவன் தன் சொல்லிலிருந்து விலகி, தான் கிறிஸ்தவனாக வர விரும்பவில்லையெனக் கூறி, அவன் போர்த்துக்கேயருக்கு எதிராகவும், மறைபரப்பாளர்களுக்கு எதிராகவும் நடைவடிக்கைகள் எடுத்தான். ஆனால் பட்டத்து இளவரசனான கரலியட் பண்டார தன் தந்தையின் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல், சிறையிலிடப்பட்ட மறைபரப்பாளர்களை விடுதலை செய்து, அவர்க-ளுடன் ஊவாவுக்குச் சென்றான். அங்கு ஒரு படையைத் திரட்டி, தன் தந்தையாகிய கண்டி அரசனோடு போர் தொடுத்து, தந்தையை அங்கிருந்து விரட்டிவிட்டு, தான் 2வது ஜெயவீர என்ற பெயருடன், 1550இல் கண்டி அரசனானான். அவனுடைய ஆட்சி காலத்தில் மறை-பரப்பாளர்கள் திரும்பவும் கண்டிக்கு வந்து, எவ்வித தங்குதடையின்றி நற்செய்தியைப் போதித்து பல அரச அதிகாரிகளையும். பொது மக்களையும் மனந்திருப்பினர். அரசனும் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவினான். அப்போது அவன் டொம் பிலிப் என்ற பெயரை எடுத்துக்கொண்டான். அவனுடைய மனமாற்றம் நேர்மையா-னதாகவிருந்தது. ஏனெனில் அவன் இறுதி மட்டும் திருச்சபைக்குப் பிரமாணிக்கமாக இருந்தான்.

கண்டியிலிருந்து விரட்டப்பட்ட அவனுடைய தந்தை முதலாவது ஜெயவீர சீதவாக்கை அரசன் மாயதுன்னவிடம் தஞ்சம் புகுந்தான். மாயதுன்ன 1581இல் இறந்ததை அடுத்து, ராஜசிங்க சீதாவக்கையின் அரசனானான். அவன் 1582இல் கண்டி அரசனுக்கு எதிராகப் போர்தொடுத்து, கண்டி அரசைக் கைப்பற்றினான். கண்டி அரசன் இரண்டாவது ஜெயவீர தன் குடுமபத்துடனும், சகல அதிகாரிகளுடனும் திருகோணமலைக்குத் தப்பி ஓடினான். அங்கு அவனும், அவனது குடும்பத்தினரும், அதிகாரிகள் சிலரும் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டு இறந்தனர். அரசன் இறக்குமுன் தன மருமகனான ஜெமசிங்க பண்டாரவை கண்டி அரசனாக நியமித்து, தன் ஒரு வயதுக் குழந்தையான மகளை அவனிடம் ஒப்படைத்து, அவளுக்கு வயது வந்ததும் அவளை மனைவியாக எடுத்துக்கொள்ளுமாறு கூறி உயிர் துறந்தான். போர்த்துக்கேயர் ஜெமசிங்க பண்டாரவை கோவைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவன் திருமுழுக்குப் பெற்று, டொன் பிலிப்பு என்ற பெயரைப் பெற்றுக் கொண்டான். அரச குழந்தை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அரசன் பரராஜசேகரத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவள் மன்னாரில் திருமுழுக்குப பெற்று, டோனா கத்தரினா என்ற பெயரைச் சூடி, கல்வி பயின்றாள். கண்டி அரசைக் கைப்பற்றிய ராஜசிங்க கிறிஸ்தவர்களை மிகவும் துன்புறுத்தினான். வேதனை பொறுக்க முடியாத கண்டி மக்கள் கலகம் செய்து, பழைய அரச பரம்பரையைச் சேர்ந்த டொன் பிலிப்புவை தங்கள் அரசனாக்க விரும்பினர். குருக்களும் தாங்கள் இவ்வளவு காலமும் ஆற்றிய பணிகள் அனைத்தும் போர்ததுக்கேயரினதும் கிறிஸ்தவர்களினதும் கொடிய எதிரியால் அழிக்கப் படுவதைக் கண்டு வேதனைப்பட்டனர். ஆகவே எல்லோரும் டொன் பிலிப்புவையே கண்டி அரசனாக்க விரும்பினர். ஆகவே டொன் பிலிப்பு 1584ம் ஆண்டில போர்த்துக்கேய படையோடு கண்டி அரசைத் தாக்கி, அரசைக் கைப்பற்றினான். அதைத் தொடர்ந்து டொன் பிலிப்பு கண்டி அரசனாகவும், அவனுடைய மகன் டொன் யுவான் பட்டத்து இளவரசனாகவும் பிரகடனம் செய்யப்பட்டார்கள். கோணப்பு பண்டார என்ற டொன் யுவான் படைத் தளபதியாக நியமனம் பெற்றான். இதனால் மகிழ்ச்சியடைந்த மறைப்போதகர்கள் தம் போதகப் பணியை ஆர்வத்துடன் தொடர்ந்து செய்து, அரச குடும்பத்தினரையும், பல பிரபுக்கயையும், பொது

மக்களையும் மனந்திருப்பினார்கள். இவ்வாறு கண்டி அரசில் திருச்சபை விரைவாக வளர்ந்தது.

ஆனால் அரசன் டொன் பிலிப்பு திடீரென மரிக்கவே, போர்த்துக்கேயர் அவருடய இளம் மகன் டொன் யுவானை அரசனாகப் பிரகடனம் செய்தார்கள். ஆனால் படைத் தளபதியாயிருந்த கோணப்பு பண்டார, பௌத்த மக்களின் ஆதரவுடன் அதற்கெதிராகக் கலகம் செய்து, விமல தர்மசூரிய என்ற பெயருடன் தன்னையே கண்டி அரசனாக்கிக் கொண்டான். சிங்கள மக்களால் ஏமாற்றப்பட்ட போர்த்துக்கேயர் இளவரசன் டொன் யுவானையும் அழைத்துக்கொண்டு, கண்டியைவிட்டு வெளியேறினர். டொன் பிலிப்பு பின்பு ஒரு குருவாக வந்து, இஸ்பானியாவில பணிசெய்து, 1642இல் இறந்தான். விமல தர்ம சூரியாவோ புத்த மதத்திற்கு ஆதரவளித்து கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான் எனவே மறைபரப்பாளர்களும் தம் பணியை நிறுத்திக் கொண்டு, கண்டியிலிருந்து வெளியேறினர். எனினும் போர்த்துக்கேயர் விமல தர்மசூரியாவைப் பழிவாங்கி, கரலியெட பண்டாரவின் பட்டத்து மகள் டோனா கத்தரினாவை கண்டி அரசியாக்கத் தருணம் பார்த்து நின்றனர். 1594ம் ஆண்டு போர்த்துக்கேயர் தளபதி பேரோ லோபேஸ் டெ சூசா தலைமையில் ஒரு பெரிய படையைக் கண்டிக்கு அனுப்பினர். அவர்களுடன் டோனா கத்தரினாவும் சென்றார். அப் படையைத் தாக்குப் பிடிக்க முடியாமல் விமல தர்ம சூரியா பின் வாங்கவே, அவர்கள் டோனா கத்தரினாவை ஆடி 1594, 6ம் நாள் கண்டி அரசியாகப் பிரகடனம் செய்தனர். கிறிஸ்தவ மறைபரப்பாளர்களும் கண்டிக்குத் திரும்பிச் சென்று, தம் பணியை மீண்டும் ஆரம்பித்து, தொடர்ந்து செய்தனர். ஆனால் விமல தர்ம சூரியா சிங்களவர்களின் ஆதரவுடன் மீண்டும் பெரும் கலகம் செய்து, போர்த்துக்கேயரைத் தோற்கடித்தான். அது மட்டுமல்ல, டோனா கத்தரினாவை தனது மனைவியாக்கி, தனது அரச உரிமையை உறுதிப்படுத்தினான். கைது செய்யப்பட்ட போர்த்துக்கேயரையும் குருக்களையும் கொடுமைப் படுத்திக் கொன்றான். கிறிஸ்தவர்களை மிகவும் துன்புறுத்தினான். இந் நிலை போர்த்துக்கேயரின் ஆட்சி இலங்கையில் முடியும் வரை நீடித்தது. பொதுவாக கிறிஸ்தவம் கண்டி அரசில் ஒருபோதும் உறுதியாக நிலைபெறவில்லையென்பது குறிப்பிடத் தக்கது.

**யாழ்ப்பாண அரசில் மறைபரப்புப் பணி**

கோட்டே அரசன் புவ்னேக பாகுவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந்த பிரான்சிஸ்கன் குருக்கள் கோட்டே அரசில் மட்டும் பணியாற்றவில்லை. அவர்கள் வட இலங்கையில் இருந்த யாழ்ப்பாண அரசிலும் மறை முகமாக பணியாற்றினர். அக்காலத்தில் யாழ்ப்பாண அரசை சங்கிலி அரசன், ஜெகராசசேகரன் என்ற பெயரில், நல்லூரிலிருந்து ஆண்டு வந்தான். பிரான்சிஸ்கன் குருக்களான பிறேய் பெத்ரோவும் மற்றொருவரும் 1543ம் ஆண்டு முடிவில் போர்த்துக்யே வியாபாரிகளோடு வியாபாரிகளாய் மாறு வேடத்தில் இரகசியமாக யாழ்ப்பாண அரசிற்குள் நுழைந்து, மறைமுகமாக நற்செய்தியைப் போதித்து, பலரை மனந்திருப்பினர். இவ்வாறு அவர்கள் ஆரம்பத்தில் குறிப்பாக மாதோட்டத்திலும், யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் பணிபுரிந்தனர். சங்கிலி அரசன் தனது அரசில் கிறிஸ்தவம் போதிக்கப்படுவதை சற்றேனும் விரும்பவில்லை. அதை முழுமையாக எதிர்த்தான். ஏனெனில், அவனுடைய கருத்தின்படி தன் பிரசைகள் கிறிஸ்தவத்தைத் தழுவுவது அந்நிய போர்த்துக்கேய அரசை ஆதரிப்பதற்கு ஒத்ததாகும். எனினும் அந்திரோ டி சூசா என்ற போர்த்துக்கேய வியாபாரி சங்கிலியனின் அரச மாளிகையைத் தரிசித்து வணிகம் செய்ததுமல்லாமல், சங்கிலி அரசனின் மூத்த மகனுக்கு இரகசியமாக நற்செய்தியைப் போதித்து, அவனை மனந்திருப்பினார். அதைக் அறியவந்த சங்கிலியன் கோபவெறி கொண்டு, தன் மூத்த மகனென்றும் பாராமல், அவனைக் கொடூரமாய் கொலைசெய்து, அவன் சடலத்தை நாட்டு வழக்கப்படி பிரசித்தமாகச் சுட்டெரித்தான். ஆனால் இறைவன் அவ்விடத்தில் பல அற்புதங்கள் செய்து இளவரசனை மகிமைப்படுத்தினார். பூமி நடுக்கம் ஏற்பட்டு, வானத்தில் ஒரு பிரகாசமான பெரிய சிலுவை அடையாளம் தோன்றியது. சடலம் எரிக்கப்பட்ட இடத்தில் ஒரு பெரிய சிலுவை அடையாள வடிவில் பூமி பிளந்தது. அரசன் அதை மூடிவிடப் பல மறை முயன்றும் முடியாமற் போயிற்று. இதைக்கண்டு இருநூற்றுக்கு மேற்பட்டோர் மனந்திரும்பி கிறிஸ்தவத்தைத் தழுவினர். அவர்களுள் சங்கிலி அரசனின் இரு மகன்களும், அவனுடைய சகோதரியின் மகனொருவனும், சில அரச அதிகாரிகளும் அடங்குவர். சங்கிலியனுடைய கோபத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்க, அந்திரே டி சூசா அவர்களைக் கோவைக்குக்

கூட்டிச்சென்றார். யாழ்ப்பாண அரசில் முதல் மறை சாட்சி ஒரு அரச குமாரனென்பது குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயர் இந்தியாவிற்கு வந்தபின் கோவையிலும், தென்னிந்திய கடலோரப் பகுதிகளிலும் வாழ்ந்த பலர் மனந்திரும்பிக் கிறிஸ்தவத்தைத் தழுவினார்கள். இவர்களில் அநேகமானோர் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த பரவரும், கடையருமாவர். 1542இல் இயேசு சபையைச் சேர்ந்த புனித பிரான்சீஸ்கு சவேரியார் பாப்புவின் பிரதிநிதியாக அங்கு சென்று, கிறிஸ்தவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, தமது போதனையாலும். அற்புதங்களாலும் இன்னும் பல்லாயிரக் கணக்கானோரை மனந்திருப்பினார். இந்தியாவிலிருந்து மன்னாருக்குச் சென்று குடியேறியிருந்த அவர்களின் இனத்தவர்களான பரவரும், கடையரும் இதைக் கேள்விப்பட்டு, தாங்களும் கிறிஸ்தவத்தைத் தழுவ விரும்பினர். எனவே தங்களுக்கும் வந்து நற்செய்தியைப் போதிக்குமாறு புனித சவேரியாருக்குத் தூது அனுப்பினார்கள். அவ் அழைப்பை ஏற்ற புனித சவேரியார், தாமாக அங்கு போக முடியாமையால், ஒரு மேற்றிராசனக் குருவான யுவான் டி லிஸானோ அடிகளாரை மன்னாருக்கு அனுப்பிவைத்தார். (புனித பிரான்சீஸ்கு சவேரியார் அனுப்பியது தம் பெயர்கொண்ட இந்திய குருவான அருட்திரு பிரான்சிஸ்கு சவேரியார் அடிகளாளெனக் கூறுவோரும் உண்டு) மன்னாருக்குச் சென்ற யுவான் டி லிஸானோ அடிகளார் அங்குள்ள பரவருக்கும், கடையருக்கும் நற்செய்தியைப் போதித்து, ஏறக்குறைய எழுநூறு பேரை மனந்திருப்பினார். அவர்களின் தலைவராகிய இளஞ்சிங்கன் என்பவரும் அதில் அடங்குவார்.

அக்காலத்தில் மன்னார் யாழ்ப்பாண அரசின் ஒரு பகுதியாகவே இருந்தது. மன்னார் மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவிய செய்தியைக் கேள்வியுற்ற யாழ்ப்பாண மன்னனாகிய சங்கிலியன் கோபமும் பயமும் அடைந்தான். சங்கிலியன் ஒரு மனிதப் பண்பற்ற கொடியவன். சர்வ அதிகாரப் போக்குடையவன். முடிக்குரிய தன் மூத்த சகோதரனைச் சிறையிலடைத்துவிட்டு, நாட்டுப் பிரசைகளை அடிமைப்படுத்தி, தன் படைப் பலத்தினால் கொடுங்கோலாட்சி செய்து வந்தான். தனக்கெதிராக கிளர்ச்சி செய்பவர்களை கொலை செய்து அழித்து, தனது ஆட்சியைப் பாதுகாத்து வந்தான். மன்னார் மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியதைக் கேள்விப்பட்ட இந்துக் குருக்கள், கோட்டே அரசுபோன்று யாழ்ப்பாண

அரசும் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்படுமென்றும், இந்து ஆலயங்கள் அழிபடுமென்றும் பிரச்சாரம் செய்தனர். அது மட்டுமல்ல, மன்னார்க் கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாண அரசை விடுத்து, போர்த்துக்கேய அரசை ஆதரிப்பார்களென்ற தவறான கருத்துக்களும் பரப்பப்பட்டன. எனவே சங்கிலியன் 5000 படைவீரர்களை திரட்டி, அவர்களுக்குத் தானே தலைமை தாங்கி, மன்னாருக்குச் சென்றான். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தை கைவிட்டு, மீண்டும் இந்துக்களாக வரும்படியாகக் கட்டளை இட்டான். அப்படி வரத் தவறுவோர் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்களெனவும் எச்சரித்தான். ஆனால் மன்னார்க் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் இருந்தனர். எனவே சங்கிலியன் கட்டளைப்படி, யுவான டி லிஸானோ அடிகளாருடன் ஏறக்குறைய 700 பேர் 1544ம் ஆண்டு, மார்கழி மாதம் சங்கிலியனின் படைவீரரால் தோட்டவெளி என்னுமிடத்தில் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இவர்களையே நாம் "மன்னார் மறைசாட்சிகள்" என அழைக்கிறோம். அவர்கள் சிறு பிள்ளைகளைத்தானும் விட்டு வைக்கவில்லை. எஞ்சியவர்கள் ஓடி ஒழித்துக் கொண்டனர். கிறிஸ்தவர்களின் இரத்தம் ஆறாக ஓடியது. மறை சாட்சிகளின் பூமியாக மாறிய மன்னார்த் தீவு, "புனித குருசுத் தீவு" என அழைக்கப்பட்டது. சங்கிலியன் இத்துடன் தன் அரசில் கிறிஸ்தவம் முற்றாக அழிந்துவிடுமென எண்ணினான். ஆனால் மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாக மாறியது. இதை அடுத்து கொழும்பில் ஏறக்குறைய 70,000 பேரும், தொடர்ந்து அரசன் தர்மபாலாவும் கிறிஸ்தவத்தைத் தழுவியதை நாம் ஏற்கனவே பார்த்தோம்.

மன்னார் கிறிஸ்தவர்களின் மறைசாட்சி மரணத்தை கேள்வியுற்ற புனித பிரான்சீஸ்கு சவேரியார் மிகவும் கவலைப்பட்டு வருந்தினார். யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனைத் தண்டிக்கவும், அங்குள்ள கிறிஸ்தவர்களைக் பாதுகாக்கவும், மக்களின் மதச் சுதந்திரத்தை மறுக்க முடியாதென்பதை சகல அரசர்களுக்கும் உணர்த்தவும் யாழ்ப்பாணத்தின்மீது படையெடுக்கும்படி போர்த்துக்கேய அதிகாரிகளைத் தூண்டினார். அதற்கிடையில் அவர் 1545ம் ஆண்டில் மன்னாருக்குச் சென்று, மறைசாட்சிகளின் இரத்தத்தால் பரிசுத்த மாக்கப்பட்ட பூமியை முத்திசெய்தார். அக்காலத்தில் மன்னாரில் ஒரு பெரிய கொள்ளை நோய் நடந்து கொண்டிருந்தது. அதனால்

பீடிக்கப்பட்ட பலர் நாள்தோறும் நூற்றுக் கணக்கில் இறந்து கொண்டிருந்தார்கள். புனித சவேரியார் அக் கொள்ளை நோயைத் தம் செபத்தினால் நிறுத்தினார். இதைக்கண்ட பல நூற்றுக் கணக்கான மக்கள் மனந்திரும்பிக் கிறிஸ்தவத்தைத் தழுவினர். புதுக் கிறிஸ்தவர்களைச் சில பிரான்சிஸ்கன் சபைக் குருக்களின் பராமரிப்பில் விட்டுவிட்டு, புனித சவேரியர் இந்தியாவுக்குத் திரும்பினார். வழியில் அவர் நெடுந்தீவில் தரித்து, இறந்த ஒரு இளைஞனை உயிர்ப்பித்ததாகக் கூறப்படுகிறது.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசனைப் பழிவாங்க கப்பற் படையை ஆயத்தப் படுத்தினர். இதைக் கேள்வியுற்ற அரசன் சங்கிலியன் போர்த்துக்கேயரோடு ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள விரும்பினான். இதற்கிடையில் பர்மாவிலிருந்து திரவியங்களை ஏற்றி வந்த போர்த்துக்கேய கப்பலொன்று புயலில் அகப்பட்டு, சேதமடைந்து நெடுந்தீவுக் கடற்கரையில் ஒதுங்கியது. சங்கிலி அரசன் அதிலிருந்த திரவியங்களை எல்லாம் அபகரித்துக்கொண்டான். அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள விரும்பிய போர்த்துக்கேயர், சங்கிலியனுக்கெதிரான படையெடுப்பைப் பின்போட்டு, அவனுடைய சமாதான உடன்படிக்கைக் கோரிக்கைக்கு உடன்பட்டனர். அவ் உடனபடிக்கையின்படி சங்கிலியன் போர்த்துக்கேய மன்னனின் ஆதிக்கத்தை ஏற்று, கிறிஸ்தவர்களை இனித் துன்புறுத்துவதில்லையென வாக்களித்தான். இதன் வழியாக கிறிஸ்தவர்கள் சற்று சுதந்திரம் அடைந்தார்கள். அதைப் பிரான்சிஸ்கன் குருக்கள் நன்றாகப் பயன்படுத்தி, யாழ்ப்பாண அரசில் மறைபரப்புப் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர். யாழ்ப்பாண அரசில் கிறிஸ்தவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தது. மூன்று வருடங்களுக்குப் பின்னர் 1548இல் புனித சவேரியார் யாழ்ப்பாணத்துக்குச் சென்று சங்கிலி அரசனைச் சந்தித்து, அவன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதை எதிர்த்துப் பேசி, யாழ்ப்பாணத்தில் நற்செய்தியைப் போதித்ததாகவும், அரசன் சங்கிலியன் போர்த்துக்கேயர் தன்னுடன் கூட்டுறவு கொண்டால், தான் கிறிஸ்தவத்தைத் தழுவ வாக்களித்ததாகவும் சொல்லப்படுகின்றது. மேலும் புனித சவேரியார் நற்செய்தியை ஏற்க மறுத்த மக்கள் வாழ்ந்த காரை தீவைச் சபித்ததாகவும், அவர் பருத்தித்துறையில் ஒரு புளிய மரத்தின் கீழ் போதித்தாகவும் படிக்கிறோம்.

யாழ்ப்பாண அரசன் சங்கிலியன் மன்னார் மறைசாட்சிகளைக் கொன்ற குற்றத்திற்கு அவனைத் தண்டிக்கப் போர்த்துக்கேயரால் திட்டமிடப்பட்ட படையெடுப்பு, இறுதியாக பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர், 1560ம் ஆண்டில மேற்கொள்ளப்பட்டது. அவன் தன்னுடைய நாட்டுக் கரையோரமாகச் சென்ற போர்த்துக்கேய கப்பல்களை மறித்துச் சூறையாடினான். அவனுடைய யாழ்ப்பாண அரசுக்கு முறைப்படி வாரிசான சங்கிலியனின் மூத்த சகோதரன் இளவரசன் அப்பொன்ஸோ (வாகுறு ரிக்கிரி பண்டார) தனக்குரிய அரசை மீட்டுத் தரும்படி போர்த்துகேய மன்னனைக் கேட்டுக் கொண்டிருந்தான். அதுமட்டுமல்ல தென்னிந்தியாவில் அயலவர்களால் துன்புறுத்தப்பட்ட கரையோரப் பகுதிக் கிறிஸ்தவர்களை அவர்கள் பாதுகாப்பாக வாழவைக்க யாழ்ப்பாண அரசில் குடியமர்த்த வேண்டியும் இருந்தது. எனவே 1560ம் ஆண்டில் கோவையிலிருந்த போர்த்துக்கேய மன்னனின் பிரதிநிதியாகிய டொம் கொன்ஸ்தாந்தினோ டி பிறகான்காவின் தலைமையில் பெரிய படையொன்று புறப்பட்டது. கொச்சின் ஆயர் ஜோர்ஜ் தெமடோவும், பிரான்சிஸ்கன், இயேசு சபைகளின் சிரேஷ்டர்களும், சில மறைபரப்பாளர்களும் அவர்களுடன் கூடச் சென்றனர். போர்த்துக்கேய படை சங்கிலியனைத் தோற்கடித்து, யாழ்ப்பாணத் துறைமுகத்தையும், அரசையும் கைப்பற்றியது. சங்கிலி அரசன் தான் போர்த்துக்கேயரின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்வதாயும், வருடாந்தம் கப்பம் கட்டுவதாயும், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தவதில்லை என்றும் ஏற்றுக் கொண்டான். போர்த்துக்கேயர் சங்கிலியனின் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாண அரசின் முக்கிய பகுதியை விட்டுவைத்தாலும் வட, வட கிழக்கு கரையோரங்களையும், அங்கிருந்த தீவுகளையும் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

ஆயரும், மற்றும் பிரான்சிஸ்கன் சபைக் குருக்களும் தம் மறைபரப்புப் பணியைத் தொடர்ந்து செய்து, கிட்டத்தட்ட 4000 பேரை மனந்திருப்பினர். அப்போது மாரி காலமாயும், பல படை வீரர்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டும் இருந்தனர். எஞ்சினோர் எல்லாவிடமும் பரவலாக இருந்தனர். அவர்களுடைய கெடுபிடிகளையும், கொடுமையான போக்கையும் மக்கள் விரும்பவில்லை. அத் தருணத்தைப் பயன்படுத்தி, சங்கிலி அரசன் எதிர்பாராத விதத்தில் திடீரென போர்த்துக்கேயருக்கு எதிராக நாடெங்கும் ஒரே நேரத்தில்

கலகத்தை உண்டுபண்ணவே, படைவீரரும், மறைபரப்பாளரும் விரைவாக நாட்டைவிட்டு வெளியேற வேண்டியிருந்தது. அகப்பட்டுக்கொண்ட சில குருக்களும், சில படை வீரர்களும், பல புதுக் கிறிஸ்தவர்களும் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட போர்த்துக்கேய படைகள் மன்னாரைக் கைப்பற்றி, அங்கு கோட்டையொன்றைக் கட்டி, அதைக் கிறிஸ்தவர்களுக்குப் பாதுகாப்பான இடமாக அமைத்தனர். தென்னிந்தியாவில் கரையோரப் பகுதிகளில் மதுரை நாயக மன்னர்களால் துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களைப் பெருமளவில் கூட்டிவந்து அங்கு குடியேற்றினர். அவர்களுக்குப் பணிபுரிய அருட் திரு அன்றிக்கஸ் அடிகளாரின் தலைமையில் சில இயேசு சபைக் குருக்களும் வந்தனர். எனவே அங்கு இவ்வளவு காலமும் பணிபுரிந்த பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் இயேசு சபைக் குருக்களிடம் பணியை ஒப்படைத்துவிட்டு, மாதோட்டப் பக்கமாய் சென்று, அங்கு நற்செய்தினைப் போதித்தனர். 1560ம் ஆண்டு தொடக்கம் போர்த்துக்கேயர் இலங்கையை விட்டுச் செல்லுமட்டும், மன்னாரே அவர்களின் கடலோரத் தலைமையகமாக இருந்தது. அங்கு இயேசு சபைக் குருக்களே பணிபுரிந்தனர்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் அரசன் சங்கிலியனின் கொடுங்கோலாட்சியைப் பொறுக்கமுடியாமல் கலகம் செய்து, 1561இல் அவனை நீக்கிவிட்டு, அவனின் மகனான புவிராச சிங்கனை தம் அரசனாக்கினர். 1570இல் ஜெகராசசேகரம் என்பவன் போர்த்துக்கேயரின் உதவியுடன் அரசனானான். 1582இல் புவிராச பண்டாரவென்ற பெயருடைய பரராசசேகரன் ஆளுவதைக் காண்கிறோம். அவன் போர்த்துக்கேயரை தம் அரசிலிருந்து விரட்டிவிடும் நோக்குடன் மன்னார்க் கோட்டையைத் தாக்கினான். ஆனால் போர்த்துக்கேயர் அவனின் தாக்குதலை முறியடித்து, 1591இல் யாழ்ப்பாணத்தின்மீது படையெடுத்து, அவனைக் கொன்றனர். அவனுடைய இடத்திற்கு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, எதிர்மனசிங்கன் என்ற இளவரசனை, பரராசசேகரன் என்ற பெயருடன், அரசனாக்கினர். அவன் போர்த்தக்கேயருக்குப் பிரமாணிக்கமாய் இருந்தான். அவனுடைய ஆட்சிக் காலத்தில் மறைபரப்பாளர்கள் எவ்வித தடையுமின்றி நற்செய்தியைப் போதித்து, நூற்றுக் கணக்கானோரை மனந்திருப்பினர். பல இடங்களில் தேவாலயங்கள் கட்டப்பட்டன. நல்லூரில் வெற்றி மாதா ஆலயம் கட்டப்பட்டது. 1615இல்

அரசன் பரராசசேகரன் இறந்ததை அடுத்து, அவனுடைய மகன் சிறுவனாக இருந்தமையால், அவன் சகோதரன் அரசகேசரி அரச பிரதிநிதியாக நியமனம் பெற்றார். ஆனால் பரராசசேகரத்தின் மருமகனான சங்கிலியின் குமாரன் அரசகேரியைக் கொன்று, தன்னை அரச பிரதிநிதி ஆக்கிக் கொண்டான். அவன் கிறிஸ்தவத்தை ஆதரிப்பதாகக் கூறியபடியால் போர்த்துக்கேயர் அவனை அங்கீகரித்தனர். ஆனால் அவன் பின்பு போர்த்துக்கேயருக்கு எதிராக கண்டி அரசரோடும், தஞ்சாவூர் நாயக்கரோடும், ஒல்லாந்தரோடும் சேர்ந்ததால், போர்த்துக்கேய தளபதி ஒலிவேயிரா அவனை 1621இல் தோற்கடித்து, யாழ்ப்பாணத்தை போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் கொணர்ந்தான்.

1621இல்தான் யாழ்ப்பாண அரசு முழுமையாக போர்த்துக்-கேயரின் கட்டுப்பாட்டுக்குள் கொணரப்பட்டது. அதைத் தொடர்ந்து தளபதி ஒலிவேயிராவின் ஆதரவுடன் மறைபோதகப் பணி தீவிரமாக நடைபெற்று, கிறிஸ்தவம் வளர்ந்தது. யாழ்ப்பாண அரசில் மறைப் பணிக்குப் பொறுப்பாயிருந்த பிரான்சிஸ்கன் குருக்களுக்கு உதவியாக இயேசு சபைக் குருக்களும் வந்தனர். பருத்தித்துறையிலிருந்து மட்டக்களப்பு வரையிலான கடலோரப் பகுதிகளில் பிரான்சிஸ்கன் சபையினரும், உள் பகுதிகளில் இயேசு சபையினரும் பணிபுரிந்தனர். என்றுமில்லாதவாறு பல்லாயிரக்கணக்கான மக்கள் நற்செய்தியை ஏற்று, கிறிஸ்தவத்தைத் தழுவினர். 1626இல் 41,260 கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்ததாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. போர்த்துக்-கேய ஆட்சியின் முடிவில் யாழ்ப்பாண மக்களின் பெரும்பாலானோர் கிறிஸ்தவத்தைத் தழுவியிருந்தனர். இறந்த அரசன் பரராசசேகரனின் அரச குமாரனும், மற்றும் இரு அரச குமாரிகளும் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு வெகு ஆடம்பரமாகத் திருமுழுக்குப் பெற்றனர். இளவரசனுக்கு டொம் கொன்ஸ்தாந்தினோவென்றும், இளவரசிகளுக்கு டோனா மரியா, டோனா இசபெல் என்றும் பெயரிடப்-பட்டது. பின்பு அவர்கள் கோவைக்குச் சென்று, இளவரசன் ஒரு பிரான்சிஸ்கன் குருவாகவும், இளவரசிகள் அகுஸ்தீனார் சபைக் கன்னியர்களாகவும் வந்தனர். இவர்களே இலங்கையின் முதல் அருட் கன்னியர்களென்பது குறிப்பிடத் தக்கது.

**சிறந்த மறைப்பணியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்ட காலத்தில் அவர்கள் தங்கள் மறைபரப்புப் பணியில் கையாண்ட போதனா முறைகளையும், அதன் பொருட்டு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் நாம் அறிந்திருப்பது நமக்கு நன்மை பயக்கும். நாம் ஆரம்பத்தில் பார்த்ததுபோல், போர்த்துக்கேயரின் மறைபரப்புப் பணி "பத்ரோ ஆடோ" என்று அழைக்கப்படும் (அரச பராமரிப்பு) ஒரு உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இடம் பெற்றது, 1493இல் பாப்பு ஆறாம் அலெக்சாந்தர் கீழைத் தேச நாடுகளில் மறைபரப்பும் பொறுப்பை போர்த்துக்கேய அரசரிடம் ஒப்படைத்திருந்தார். அதன்படி திருவருட் சாதனங்கள் தவிர்ந்த அப்போஸ்தொலிக்க திருச்சபையின் அனைத்து விடயங்களிலும் போர்த்துக்கேய அரசனுக்குப் பரவலான அதிகாரம் பாப்புவினால் வழங்கப்பட்டிருந்தது. கீழைத் தேசத்தில் அவர் கண்டுபிடித்து, கைப்பற்றும் நாடுகளில் கிறிஸ்தவத்தைப் பரப்புவதும், அங்கு திருச்சபையை தாபிப்பதும்,, மாவட்டங்கள், பங்குகள், மடங்கள், பாடசாலைகளைத் தாபித்து நிர்வகிப்பதும். அவற்றிற்குத் தேவையான மறைபரப்பாளர்களை சேர்த்தெடுப்பதும், அவர்களைப் பராமரிப்பதுமான சகலதும் அவரது ஏக பொறுப்பிலேயே விடப்பட்டன. போர்த்துக்கேயரின் மறைபரப்புப் பணி அவர்கள் ஒரு நாட்டின்மேல் வெற்றி கொண்டதை அடுத்தே ஆரம்பமாகியது. முதலில் பிரான்சிஸ்கன் சபையினரே இலங்கையில் மறைபரப்புப் பணியை ஆரம்பித்தாலும், பின்பு அவர்களிடம் தனியே அப்பணியைச் செய்வதற்கு வேண்டிய ஆள்ப் பலம் இல்லாததால், இயேசு சபை, சாமிநாதர் சபை, அகுஸ்தினார் சபைக் குருக்களையும் வரவழைத்து, அவர்களுக்கிடையில மறைப் பணித் தளங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. பணித் தளங்கள் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு சபையினரிடம் ஒப்படைக்கப் பட்டது. இவ்வாறு கோட்டே அரசு நான்காகப் பிரித்தளிக்கப்பட்டதைக் காண்கிறோம். யாழ்ப்பாண அரசிலும் பிரான்சிஸ்கன் சபையினருக்கு கடலோரப் பகுதிகளும், இயேசு சபைக் குருக்களுக்கு உட்பகுதிகளும் ஒப்படைக்கப் பட்டதையும் காண்கிறோம். மன்னாரில் இயேசு சபைக் குருக்கள் மன்னார்த் தீவில் பணிபுரிய, பிரான்சிஸ்கள் சபையினர் மாதோட்டத்திலும், தீவுப் பகுதிகளிலும் பணி புரிந்தனர்.

மேலும் இப் பகுதிகள் பல மறைப் பங்குகளாகப் பிரிக்கப்பட்டன.

ஒரு மறையானது இவ்வுலக வாழ்வு, மறுவுலக வாழ்வு பற்றிய ஒரு குறிப்பான கண்ணோட்டத்துக்கு அடிப்படையான சில விசுவாச சத்தியங்களை, கோட்பாடுகளை அதன் அத்திவாரமாகக் கொண்டுள்ளது. அது வாழ்வில் கடைப்படிக்கப்படவேண்டிய ஒழுக்க வாழ்வுக்கான மதிப்பீடுகளையும், வழிகாட்டுதல்களையும் அளித்து, அதன் மதக் கொள்கைகளை வெளிப்படுத்தி, உறுதிசெய்யும் பொது சமூக பக்திச் சடங்குகள், வழிபாடுகளையும் அளிக்கின்றது. விசுவாச சத்தியங்களும், மதக் கோட்பாடுகளுமே ஒரு மதத்தின் அடிப்படை அத்திவாரமாய் அமைவதினால், மறைபரப்புப் பணியிலே மறை போதனையும், மறை அறிவு ஊட்டுதலும் முக்கிய இடத்தை எடுக்கின்றன. அவர்கள் கிறிஸ்துவினதும், அப்போஸ்தலர்களினதும் போதனா முறையையே பின்பற்றினர். முதலில் எல்லாவிடமும் சென்று, பிறரன்போடும், ஆன்மீக வாஞ்சையோடும் நற்செய்தியைப் போதித்தனர். ஆண்டவரின் வார்த்தையைக் கேட்டவர்கள் அதன்பால் ஈர்க்கப்பட்டு, படிப்படியாக மனந்திரும்பி, விசுவாசம் கொண்டு, கிறிஸ்தவத்தைத் தழுவினர். போர்த்துக்கேய மறைபரப்பாளர்களின் முதல் கவனம் மக்கள் மத்தியில் அதிகாரமும் செல்வாக்கும் கொண்டிருந்த அரசர்களையும், தலைவர்களையும், மற்றும் முக்கியமானவர்களையும் கிறிஸ்தவத்துக்கு மனந்திருப்புவதிலேயே இருந்தது. ஏனெனில் மனித சமூகங்களின் இயல்பான தலைவர்களை மனந்திருப்பினால், அவர்களுக்குப் கீழ்ப்பட்டவர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து, கிறிஸ்தவத்தைத் தழுவுவார்களென்பது அவர்களின் நம்பிக்கை. அதற்கமைய அவர்கள் கோட்டே அரசனான புவனேக பாகு, கண்டி அரசர்களான ஜெயவீர, கறலியெட, டொம் பிலிப்பு, யாழ்ப்பாண அரசனான எதிர்மனசிங்கம் போன்றோரை மனந்திருப்ப முயன்றதைக் காண்கிறோம். எனினும், அவர்கள் மறையைப் பரப்ப அடிமட்டத்தில் எடுத்த முயற்சிகள் பெரும் வெற்றியை அளித்தன. இவ்வாறு மேற்கு, வடக்கு கரையோரப் பகுதிகளில் பரவர்களும், கரையார்களும், கடையர்களும் பெருந் திரளாக கிறிஸ்தவத்தைத் தழுவியதைப் பார்க்கிறோம். மேலும் போர்த்துக்கேயர் பொதுவாக தனிப்பட்ட ஒருவரை மனந்திருப்புவதிலும் பார்க்க, ஒரு குழுவினரை, ஒரு கூட்டத்தினரை மனந்திருப்பவே முயன்றனர். ஏனெனில் அன்றைய சூழ்நிலையில் ஒருவரைத் தனிய

மனந்திருப்பினால், அவர் தன் இனசனராலும். அயலவர்களாலும் வெறுத்து ஒதுக்கப்பட்டு, ஆதரவளித்து ஊக்குவிக்க எவருமின்றி, தம் விசுவாசத்தை விரைவில் கைவிடக்கூடிய ஆபத்து அதிகமாக-விருந்தது. எனவே வழமையாக குழுக்களாகவும். கூட்டமாகவுமே திருமுழுக்கு அளிக்கப்பட்டது. திருமுழுக்கு அளிக்கும் சடங்குகள் மிகச் சிறப்பாக, சோடினை அலங்காரங்களுடன், பாடல்கள், இசைகள், புத்தாடைகளுடனான பெருவிழாக்களாக, பல குருக்களும், அரச அதிகாரிகளும் பிரசன்னமாயிருக்க, வெகு ஆடம்பரமாக இடம்பெற்றன. இத்தகைய அழகான சடங்குகள் புதுக் கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலளித்து, அவர்களின் மதப் பற்றை, ஆர்வத்தை வளர்த்தது மட்டுமல்ல, அதேவேளையில் பிற மதத்தவர்களைக் கவரவும் செய்தன.

திருமுழுக்கிற்கு முன்னரும், பின்னரும் மறைக் கல்வி ஊட்டுவதில் மிகவும் கவனம் செலுத்தப்பட்டது. திருமுழுக்குப் பெறுமுன் இரண்டு மூன்று மாதங்களுக்கு வெவ்வேறு நிலையங்களில் திருமுழுக்குப் பெறவிருப்போரை ஒன்று கூட்டி, அங்கு தங்க வைத்து, மறைக்கல்வி அளிக்கப்பட்டது. திருமுழுக்குப் பெற்ற பின்னரும், அக் குழுவிற்குப் பொறுப்பாகவுள்ளவர்கள் தொடர்ந்து அவர்களுக்கு மறைக்-கல்வி அளித்து, அவர்களை கிறிஸ்தவ வாழ்வில் பயிற்றுவித்தனர். போர்த்துக்கேயர் இலங்கையர்களை அவர்கள் விருப்பத்துக்கு மாறாக வலோத்காரமாக கிறிஸ்தவர்களாக்கினர் என்று சிலர் கூறுவது ஆதாரமற்ற பொய் வதந்தியென்பது அவர்களின் போதனா முறையி-லிருந்து தெளிவாகத் தெரியவருகிறது. சில மக்கள் அன்றைய சூழ்நிலையில் தங்களை ஆளும் அந்நிய ஆட்சியாளர்களின் மதத்தைத் தழுவுவது தமக்கு நல்லதென்பதை விளங்கி, அல்லது தமது பாதுகாப்புக்காக அல்லது வேறு அரசியல் நோக்கத்துடன் மதம் மாறியிருக்கலாம். ஆனால் பொதுவாக கிறிஸ்தவம் போதித்த தயவும் இரக்கமும் நிறைந்த ஆட்தன்மையுடைய கடவுள், சகோதர அன்பு, சகோதரத்துவம். சமத்துவம், பரஸ்பர மன்னிப்பு, பாவத்திலிருந்து விடுதலை, மரணமும், மறுவுலக வாழ்வும், நிலையான வாழ்வுபோன்ற உண்மைகள் மக்களைப் பெரிதும் கவர்ந்து, அவர்களை மதமாற்றத்துக்கு இட்டுச் சென்றன. போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள், டி நோபிலி அடிகளாரைப் பின்பற்றி, சில பௌத்த, இந்து பழக்க வழக்கங்களை ஏற்று, அல்லது தம் வழிபாடுகளை அவர்களின்

சடங்குகளைத் தழுவி அமைத்து, புனிதர் வழிபாடு, திருச் சுரூப வணக்கம், ஆசீநீர், தூபம், தீபங்கள், சுற்றுப்பிரகாரங்கள், மேள வாத்தியங்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் வழியாக கிறிஸ்தவத்தை மக்களைக் கவரக்கூடிய முறையில் போதித்தனர். கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களுக்கு சில சலுகைகள், விதிவிலக்குகள் கிடைத்ததென்பதை நாம் மறுக்க முடியாது.

போர்த்துக்கேயரின் மறைபரப்புப் பணி ஆலயம், ஆலய வழிபாடுகளுடன் நின்று விடவில்லை. அவர்களின் மறைபரப்புப் பணியில் அவர்களுடைய கல்விச் சேவை, சுகாதார, சமூக, பிறர் நல சேவைகள் பெரும் பங்காற்றின. மறைப் பங்குகளில் பணிபுரிந்த குருக்கள் புதுக் கிறிஸ்தவர்களுக்கு, குறிப்பாக சிறுவர்களுக்கு, மறைக்கல்வி அளிப்பதை தம் முக்கிய கடமைகளுள் ஒன்றாகக் கருதினர். எனவேதான் கிறிஸ்தவத்தைத் தழுவிய கோட்டே அரசன் புவனேக பாகுவிடம் தம் மத தாபனங்களை, சிறப்பாக பாடசாலைகளையும், அனாதை இல்லங்களையும் பராமரித்து நடாத்த ஆலயக் காணிகளின் வருவாயைக் கேட்டனர். ஒவ்வொரு பங்கிலும் ஆரம்ப பாடசாலைகள் அமைக்கப்பட்டு, காலையிலும் மாலையிலும் ஆண், பெண் பிள்ளைகளுக்கு சிங்களத்தில் அல்லது தமிழில் மறைக் கல்வி அளிக்கப்பட்டது. பாடப் புத்தகங்கள் இல்லாததால், அதிகமாக மனப் பாடம் செய்தும், வினா-விடை முறையிலும் போதிக்கப்பட்டது. பொதுவாக வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் செபங்களும், பாடல்களும் படிப்பிக்கப்பட்டன. ஆரம்ப பாடசாலைகள் தொடக்கப்பட்டு, வாசினை, எழுதுதல், எண்ணுதல், மறைக்கல்வி போன்ற பாடங்கள் சுதேச மொழியில் கற்பிக்கப்பட்டன. ஆரம்ப பாடசாலைகளைவிட, இரண்டு கொழும்பிலும், இரண்டு யாழ்ப்பாணத்திலுமாக, நான்கு கல்லூரிகளும் நிறுவப்பட்டன. இங்கு உயர்தர மறைக் கல்வி, நற்பண்புகள், வாசினை, எழுதுதல், போர்த்துக்கேயம், இலத்தீன், கணிதம், பாட்டு, சங்கீதம் போன்றவை கற்பிக்கப்பட்டன. பிரான்சிஸ்கன், இயேசு சபைகளைச் சேர்ந்த குருக்கள் கல்வித் துறையில் மிக ஆர்வத்துடன் உழைத்தனர். சில கல்லூரிகளில் மாணவர் தங்கியிருந்து கற்பதற்கு விடுதி வசதிகளும் இருந்தன. இப் பாடசாலைகளிலும். கல்லூரிகளிலும் பாடங்கள் இலவசமாகவே கற்பிக்கப்பட்டன. பொதுவாக கிறிஸ்தவ மாணவர்களும், சில இடங்களில் பிற சமயத்தவர்களும் பயின்றனர். பாடசாலைகள் எல்லாம்

அரச ஆதரவுடனேயே நடத்தப்பட்டன. சிங்கள, தமிழ் இலக்கணப் புத்தகங்கள், மற்றும் நாவல்கள், நாடகங்கள், மத நூல்கள் சுதேச மொழியில் எழுதப்பட்டன. இப் பாடசாலைகளில் மாணவருக்கு படிப்பிப்பதற்கு வேண்டிய ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க பிரான்சிஸ்கன் சபையினர் ஓர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையையும் ஆரம்பித்தனர். பிறப்பு. திருமுழுக்கு, திருமணம் போன்றவற்றைப் பற்றிய விவரங்களை பதிவுசெய்து பிற்கால தேவைக்கு வைக்கும் பொருட்டு, தோம்புப் பதிவுமுறையை ஆரம்பித்துச் செயற்படுத்தினர். இவர்கள் காலத்திலேயே திருமணத்தின் புனிதத் தன்மை, ஒருமை, கட்டவிழாமை போன்ற பண்புகள் மக்களிடையில் புகுத்தப்பட்டன.

போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் கிராமப் புறப் பங்குகளில் மக்களோடு வாழ்ந்து, அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்தனர். மேலும் சுகாதாரம், சமூக, பிறர் நல சேவை போன்ற துறைகளிலும் ஈடுபட்டனர். போர்த்துக்கேயர் அதிகமாவிருந்த இடங்களில் வைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வைத்தியசாலை அமைக்கப்பட்டதைக் காண்கிறோம். போர்த்துக்கேய படைவீரர்களுக்காக அவை ஆரம்பிக்கப்பட்டாலும், பொது மக்களும் அதனால் நன்மையடைந்தனர். துறவற சபையினரின் நிர்வாகத்தின், மேற்பார்வையின் கீழிலேயே அவை நடத்தப்பட்டன. போர்த்துக்கேய காலத்திலேயே மேற்கத்தைய வைத்தியம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. பிறர் நல சேவைகளில், போர்த்துக்யேரின் உருவாக்கமான "மிசெறிக்கோடியா" என்ற பிறர் நல சேவைத் தாபனம் பலராலும் பாராட்டப்பட்டது, மக்களின் நன்கொடையினாலும், பரம்பரைச் சொத்துக்களினாலும் தாபரிக்கப்பட்டு, பொது நிலையினரால் நடத்தப்பட்ட இத் தாபனம், ஆன்ம- சரீர இரக்கச் செயல்களில், அதாவது கைதிகளை விடுவித்தல், அவர்களைச் சந்தித்தல், நோயாளர்களைப் பராமரித்தல், உடுபுடவை அற்றவர்களை உடுத்துதல், பசியாயிருப்பவர்களுக்கு உணவளித்தல், இல்லிடமற்றோ-ருக்கு தங்க இடமளித்தல், இறந்தவர்களை அடக்கம் செய்தல் போன்ற பணிகளால் மக்களுக்கு உதவி செய்தனர். அத்துடன் அனாதைகளைப் பராமரிக்கவென அனாதை இல்லங்களும், மடங்களும் ஆரம்பிக்கப்-பட்டன. இதன் கிளைகள் காலி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன.

**போர்த்துக்கேய மறைபரப்பாளர்களின் குறைபாடுகள்**

எப்போதும் மறைபரப்பாளர்களின் பற்றாக் குறையை அவதானிக்கிறோம். ஆரம்பத்தில் பிரான்சிஸ்கன் சபையினரே இலங்கையில் பணி புரிந்தாலும், ஆள் பற்றாக் குறையினால் இயேசு சபையினரும், சாமிநாதர சபையினரும், அகுஸ்தீனியன் சபையினரும் உதவிக்கு அழைக்கப்பட்டனர். இச் சபைகளின் பிராந்திய தலைமையகங்களும், குருமடங்களும் போர்த்துக்கேய இந்தியாவிலேயே இருந்தன. இலங்கையில் பணிபுரிந்த மறைபரப்பாளர்களின் அதிகமானோர் போர்த்துக்காலிலேயே பிறந்து, பயிற்றப்பட்டவர்கள். பின்னர் இந்தியாவிலிருந்து குருமட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் போர்த்துக்கேய இனத்தோடு தொடர்புடையவர்களாகவே இருந்தனர். அவர்கள் வழிவந்தவர்கள் மட்டுமே தெரிவாகினர். அவசர தேவையின் நிமித்தம், அநேகமாக பலர் தங்கள் இறையியல் படிப்புகளை முடிக்காமல் மறைப் பணிக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு சுதேச மொழிகளான சிங்களமும், தமிழும் கற்றுக்கொடுக்க மொழிப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அத் துறவற சபைகள் எதுவும் சுதேச மாணவர்களை, (இந்தியர்களையோ, இலங்கையர்களையோ) தங்கள் குருமடங்களில் சேர்க்கவில்லை. இங்கு நாம் இனப் பாகுபாட்டைக் காண்கிறோம். போர்த்துக்கேய குருக்களின் இடத்தை ஒருகாலத்தில் சுதேச குருக்கள் எடுக்கவேண்டுமென்ற சிந்தனை அவர்களிடத்தில் சற்றேனும் காணப்படவில்லை. விதிவிலக்காக ஒரு சில இலங்கையர் குருக்களாகப் பட்டம் பெற்றாலும், அவர்கள் இலங்கையில் பணிபுரிய அனுமதிக்கப் படவில்லை. இதன் விளைவாக போர்த்துகேயர் ஒல்லாந்தரினால் தோற்கடிக்கப்பட்டு, வெளியேற்றப்பட்ட பொழுது, இலங்கையில் கிறிஸ்தவர்களுக்குப் பணிபுரிய ஒரு சுதேச குருதானும் இருக்கவில்லை. அது மிகவும் கவலைக்குரியது.

அது மட்டுமல்ல, போர்த்துக்கேயரின் மறைபரப்புப் பணியானது மறைபரப்பாளர்களுக்கும், பராமரிப்புக்கும், நிர்வாகத்துக்கும் அளவுக்கு மிஞ்சி தாய் நாடாகிய போர்த்துக்காலில் தங்கியிருந்தது. உரிய சுதந்திரத்துடன் அது மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தால், ஒல்லாந்தரின் கீழ், அரசியல் சூழ்நிலை மாறிய வேளையிலும், அதற்கேற்ற விதமாக

அது தழுவி அமைக்கப்பட்டிருக்கலாம். அரசு இலங்கைக்கு அங்கேயே வதியும் ஒரு ஆயரைக் கொடுக்கத் தவறிவிட்டது, அதேவேளை துறவற சபைகளும் சுதேச சபையினரைப் பயிற்றத் தவறிவிட்டனர். மேலும் அரச-மத அதிகாரங்கள் நெருக்கமாக இணைந்திருந்ததினால் சில நன்மைகள் கிடைத்திருந்தாலும். அது பல முறையும் கிறிஸ்தவர்களுக்கு பல துன்பங்களையும், கஷ்டங்களையும் கொணர்ந்தன. போர்த்துக்கேய இனமும் கத்தோலிக்க மதமும் ஒன்றாகவே கணிக்கப்பட்டன. எனவே போர்த்துக்கேயரை வெறுத்தவர்கள் கிறிஸ்தவர்களையும் வெறுத்தார்கள். மேலும், இலங்கையின் மத, இன மரபுகள், பாரம்பரிய பழக்க வழக்கங்கள் போன்றவை மதிக்கப்படாமல், பெருதும் பாதிப்படைந்தன. இவைபோன்ற சில குறைபாடுகளையும் நாம் போர்த்துக்கேயரின் மறைபரப்புப் பணியில் காண்கிறோம்.

## 8.1.2.6. போர்த்துக்கேயர் கால கலகங்களும், துன்புறுத்தல்களும்

போர்த்துக்கேய மறை பரப்புப் பணி பல இக்கட்டு இடைஞ்சல்கள், இடையூறுகள் மத்தியிலேயே நடைபெற்றது. அடிக்கடி ஏற்பட்ட படைகளின் பின்னேற்றங்களும், உண்டாகிய கலகங்களும், குழப்பங்களும் அப் பணியில் தாக்கங்களை ஏற்படுத்தி, அதன் வளர்ச்சிக்குத் தடையாகவிருந்தன. இவற்றில் நாம் குறிப்பாக கோட்டே அரசில் அரச பிரதிநிதி விதிய பண்டார ஏற்படுத்திய கலகத்தையும், யாழ்ப்பாண அரசில் சங்கிலி அரசன் மன்னாரில் ஏற்படுத்திய இரத்தக் களரியையும் எடுத்துக் கொள்ளலாம்.

கோட்டே அரசன் புவனேக பாகுவின் திடீர் மரணத்தை அடுத்து, எல்லோராலும் எதிர்பார்க்கப் பட்டதுபோல், அவனுடைய பேரன் தர்மபாலா போர்த்துக்கேயரால் கோட்டே அரசனாகப் பிரகடனப் படுத்தப்பட்டான். அவன் இன்னும் இளம் சிறுவனாகவிருந்தபடியால் அவனுடைய தகப்பன் விதிய பண்டார அரச பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். கோட்டே அரசு மக்களின் அன்பான அரசனின் அகால மரணத்துக்கு போர்த்துக்கேயரின் சதியே காரணமென்ற கருத்து மக்கள் மத்தியில் பரவியது. எனவே அவர்கள் போர்த்துக்கேயரைப் பழிவாங்கும் நோக்குடன், அவர்களின் குடியிருப்புகளைத் தாக்கி,

அழித்தனர். இச் செய்தி கோவையிலிருந்த அரச பிரதிநி அப்பொன்ஸோ டி நொறோனாவுக்கு எட்டவே, அவன் நாட்டில் ஒழுங்கை ஏற்படுத்த 3,000 படை வீரருடன் கொழும்புக்கு வந்தான். 1551, ஐப்பசியில் வந்த இந்தப் படையே இலங்கைக்கு வந்த மிகப் பெரிய போர்த்துக்கேய படையாகும். அவன் புவனேக பாகுவின் மரணத்தை விசாரிக்கவும், புதிய அரசனான தர்மபாலாவை திருமுழுக்குப் பெறும்படி வற்புறுத்தவும், முக்கியமாக கோட்டே அரசின் பொக்கிஷங்களை அபகரிக்கவுமே வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவன் நடந்துகொண்ட கொடூரமான முறை, அவனுடைய அந்தஸ்துக்கு சற்றேனும் தகாததாகப் பலராலும் கருதப்பட்டது. கோட்டேயைக் கைப்பற்ற 500 படை வீரர்களை அனுப்பிவிட்டு, தானே நேரடியாகப் படை வீரர்களுடன் அரச மாளிகைக்குச் சென்று, அரச அதிகாரிகளையும். அரண்மனை ஊழியர்களையும் கைது செய்தான். அரச பொக்கிஷங்கள் பற்றிய இரகசியங்களை அறியும் பொருட்டு, அவர்களில் சிலரை சித்திரவதை செய்தான். அரசரின் படுக்கை அறை உட்பட, அரச மாளிகை முழுவதையும் தேடி, அங்கிருந்த பொன், பணம், நகை, இரத்தினக் கற்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டான். சீதவாக்கை அரசன் மாயதுன்னவை எதிர்த்துப் போராடவென்று பெரும் தொகைப் பணத்தையும் அரசன் தர்மபாலாவிடமிருந்து பெற்றுக் கொண்டான். பின்பு சீதவாக்கைமேல் போர் தொடுத்து, மாயதுன்னவின் அரண்மனையிலிருந்த பொக்கி'ங்களான வெள்ளி, பொன்னாலான விக்கிரகங்கள், மணிகள், நகைகள போன்ற சகலத்தையும் சூறையாடினான். அவனுடைய படை வீரர்களும் மக்களுடன் மிகக் கொடூரமாக நடந்தார்கள். இதனால் மக்கள், அரச பிரதிநிதி விதிய பண்டாரவுடன், காட்டுக்குள் ஓடி, ஒழித்துக் கொண்டார்கள். அரசபிரதி நொறோனா கோவைக்கு திரும்பிப் போகும் வழியில், கப்பல் புயலில் அகப்பட்டு, அவன், தான் சூறையாடிச் சென்ற பொருட்களுடன், கடலில் மூழ்கி மாண்டதாகக் கூறப்படுகிறது.

காட்டில் ஒழித்திருந்த விதிய பண்டார கோபாவேசத்துடன் கோட்டேக்குத் திரும்பி வந்து, போர்த்துக்கேயரைப் பழிவாங்கத் தொடங்கினான். அரண்மனையிலிருந்த போர்த்க்கேய குமாஸ்தா, அவனுடைய உதவியாளர்கள், மற்றும் சிலர் கொல்லப்பட்டனர். அவர்களின் குடியிருப்புகளும், ஆலயமும் தீக்கிரையாக்கப்பட்டன.

அயலிலிருந்த பிரான்சிஸ்கன் மடங்கள், மற்றும் கட்டங்கள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்டன. கிறிஸ்தவ ஆலயங்கள் அழிக்கப்பட்டன. கிறிஸ்தவர்களின் நிலபுலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கோட்டே பிரசைகள் கிறிஸ்தவத்தைக் கடைப்பிடிப்பது தடைசெய்யப்பட்டது. போர்த்துக்கேயருக்கு கப்பம் கட்ட மறுத்தான். புதிய போர்த்துக்கேய அரச பிரதிநிதி டொம் பெட்றோ டி மாஸ்கெறன்கா 1554இல் பதவி ஏற்று, கோட்டே அரசில் தம் பலத்தைப் பெலப்படுத்த, கொழும்புக் கோட்டையைப் பெரிதாகக் கட்ட முயற்சி எடுத்தார். இதைப் பொறுக்க முடியாத விதியன் பண்டார கிறிஸ்தவர்களை மேலும் துன்புறுத்தி, தானே அரசனாக முயற்சித்தான். இறுதியில் அவன் கைது செய்யப்படடு, சிறையில் இடப்பட்டான். அவனுடைய மனைவியின் தந்திரத்தால் அவன் சிறையிலிருந்து தப்பித்து, காலிக்குச் செல்லும் வழியில் சந்தித்த போர்த்துக்கேயரைக் கொலை செய்து, கிறிஸ்தவ கட்டிடங்களையெல்லாம் அழித்து, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான். இதில் போர்த்துக்கேயரின் முழு எதிரியான மாயதுன்ன அவனுக்கு உதவியளித்தான். அவர்களின் உதவியுடன் அவன் கொழும்பிலிருந்து காலிவரையிலான பாணந்துறை, களுத்துறை போன்ற கிராமங்களை எல்லாம் அழித்ததாகக் கூறப்படுகிறது. பின்பு அவன் யாழ்ப்பாணம் சென்று, அங்கே அவன் கொலை செய்யப்பட்டான்.

கோட்டே அரசில் விதிய பண்டாரவின் கலகம்போல் யாழ்ப்பாண அரசில் சங்கிலி அரசனுடைய கலகமும் அமைந்தது. பல நூற்றாண்டுகள் காலமாக மேற்கத்தைய நாடுகளுக்கும் கிழைத்தேச நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள கால்வாய் வழியாகவே இடம் பெற்றன. தங்கள் தொழிலின் நிமித்தம் தென் இந்திய கடலோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்களில் சிலர் மன்னாரில் வந்து குடியேறியிருந்தனர். போர்த்துக்கேயர் இந்தியாவிற்கு வந்தபின், தென் இந்திய கடலோரப் பகுதியில் வாழ்நத மக்களில் பலர் மனம்திரும்பி, கிறிஸ்தவத்தைத் தழுவினர். 1542இல் பாப்புவின் பிரதிநிதியாக இந்தியாவிற்கு வந்த புனித பிரான்சீஸ்கு சவேரியார் தென் இந்திய கடலோரப் பகுதிகளுக்கும் வந்து தம் போதனைகள், அற்புதங்கள் வழியாக, முன் மனம்திரும்பிய கிறிஸ்தவர்களை அவர்கள் விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, இன்னும் பல நூற்றுக் கணக்கானோரை மனந்திருப்பினார். அவர்களில்

பெரும்பாலானோர் பரவரும் கடையருமாவார். மன்னாரில் குடியேறியிருந்த பரவரும் கடையரும் இதைக் கேள்வியுற்று, தங்களுக்கும் நற்செய்தியைப் போதிக்க புனித சவேரியாரை அழைத்தனர். அவர் தனக்கு வசதி கிடையாதபடியால் தம் பெயர் கொண்ட பிரான்சீஸ்கு சவேரியார் என்ற ஒரு இந்தியக் குருவானவரை அவர்களிடம் அனுப்பி வைத்தார். (அவர் அனுப்பியது ஒரு மேற்றிராசனக் குருவான யுவான் டி லிஸானோ அடிகளாரெனச் சிலர் கூறுவர்). அவருடைய போதனை வழியாக மிகக் குறுகிய காலத்தில் பரவரும் கடையருமாய் 700 பேரளவில் தம் தலைவர் இளஞ்சிங்கத்தடன் மனந்திரும்பி, கிறிஸ்தவத்தைத் தழுவினர்.

அக்காலத்தில் மன்னார் யாழ்ப்பாண அரசின் ஒரு பகுதியாகவிருந்தது. மன்னார் மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவிய செய்தியைக் கேள்விப்பட்ட யாழ்ப்பாண அரசன் சங்கிலியன் மிகக் கோபாவேசமும் பயமும் கொண்டான். அவனுக்கு போர்த்துக்கேயரின் மதமாகிய கிறிஸ்தவத்தைத் தழுவுவது, தன்னை விடுத்து, போர்த்துக்கேயரின் அரசை ஆதரிப்பதாகத் தென்பட்டது. இந்து குருக்களும் போர்த்துக்கேயர் கோட்டேயில் செய்ததுபோல் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றி, இந்து ஆலயங்களை அழித்து விடுவார்களெனக் கூறி, அரசருக்கு இன்னும் அச்சத்தையும், கோபத்தையும் மூட்டினர். எனவே சங்கிலி அரசன் 5000 போர் வீரர்களைத் திரட்டிக்கொண்டு, அவர்களுக்குத் தானே தலைமை தாங்கி, மன்னாருக்குச் சென்றான். அங்கு புதிதாகக் கிறிஸ்தவத்தைத் தழுவியவர்கள் அதைக் கைவிட்டுவிட்டு, மீண்டும் இந்து மதத்திற்குத் திரும்ப வேண்டுமென்று கூறி, அன்றேல் அவர்கள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்களென்றும் எச்சரித்தான். ஆனால் கிறிஸ்தவர்களோ தம் விசுவாசத்தில் மிக உறுதியாள் நின்றனர். இதைக் கண்ட சங்கிலி அரசன் கோபம் கொண்டு, அவர்களெல்லாரையும் கொன்று நிர்மூலமாக்க கட்டளை பிறப்பித்தான். எனவே படை விரர்கள் கிறிஸ்தவர்கள் மேல் பாய்ந்து முரட்டுத்தனமான முறையில் அகப்பட்டவர்கள் எல்லோரையும் கொலை செய்தனர். ஆணோ பெண்ணோ, குழந்தையோ வளர்ந்தவரோ, எவரென்றும் பாராமல், எல்லோரையும் சிரச் சேதம் செய்து, தம் வாளுக்கு இரையாக்கினர். அவர்களுக்குப் பணிபுரிந்த அருட் திரு பிரான்சீஸ்கு சவேரியாரும் தம் மக்களுடன் கொலை செய்யப்பட்டார்.

கிறிஸ்தவர்களின் இரத்தம் வெள்ளமாக ஓடியது. ஓர் சிறிது நேரத்தினுள் 600க்கு அதிகமானோர் பிணமாக்கப் பட்டனர். சங்கிலி அரசன் அத்தோடு கிறிஸ்தவர்கள் அழிந்து விட்டார்களென்றும், இனி எவரும் கிறிஸ்தவத்தைத் தழுவத் துணியார்களென்றும் நினைத்து ஆறுதலடைந்தார். ஆனால் மறைசாட்சிகளின் இரத்தத்தால் தோய்க்கப்பட்ட மன்னார், புனித புண்ணிய பூமியாக மாறியது.

கோட்டையிலும், மன்னாரிலும் மறை சாட்சிகள் சிந்திய இரத்தம் புதுக் கிறிஸ்தவர்களின் வித்தாக மாறியது. கொழும்புக்கும் நீர்கொழும்புக்குமிடையே வாழ்ந்த மீனவர்கள் இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள். இந்தியாவிலிருந்து வந்து, மன்னாரில் குடியேறி வாழ்ந்த தம் இனத்தவர்கள் மறைசாட்சிகளாக இறந்ததைக் கேள்விபட்டார்கள் தாங்களும் அவர்களைப்போல் கிறிஸ்தவத்தைத் தழுவ விரும்பினர். இவ்வாறு 70,000 கரையார் கிறிஸ்தவத்தைத் தழுவினர். இந் நிகழ்வு கிறிஸ்தவத்தில் வளர்ந்தும் மக்களுக்குப் பயந்து திருமுழுக்குப் பெறுவதைப் பின் போட்டு வந்த அரசன் தர்ம பாலாவுக்குத் மனத்துணிவை அளித்தது. எனவே அவனும் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவத்தைத் தழுவினான்.

**கிறிஸ்தவ மறையைத் தழுவிய இளவரசர்கள்**

1. **டொன் யுவான் தர்மபால**: ஏழாவது புவனேகபாகு அரசனின் (பேரன்) மகள் சமுத்திராதேவியின் மகனான தர்மபால டொன் யுவான் என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்றார். போர்த்துக்கேயரின் உதவி தேவையானதாலும், மறைபரப்பாளர்களின் முயற்சியாலும், நாட்டு மக்களில் பலர் கத்தோலிக்க மதத்தைத் தழுவியதாலும் அவர் கத்தோலிக்கரானார். அவர் கத்தோலிக்க மதத்தை நன்றாக அறிந்திருந்தமையும், அந்த மறையில் இறக்கும்வரை நிலையாய் இருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

2. **ஜெயவீர பண்டார**: கண்டியை ஆட்சிசெய்த அரசர் விக்கிரம-பாகுவின் புதல்வரான ஜெயவீர பண்டார, போர்த்துக்கேயரின் உதவியை நாடி, கிறிஸ்தவத்தைத் தழுவினார். ஆனால் பின்னர், சீதவாக்கையின் அரசனான இராஜசிங்கத்தின் ஆக்கிரமிப்பு முடிவடைந்தபின், சமயத்தை மறுதலித்தார்.

3. **கரலியட்ட பண்டார**: இவர் ஜெயவீர பண்டாரவின் புதல்வராவார். இவரே கண்டி அரசில் மறைபரப்புதலுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தவர். முதலாவது இராஜசிங்க அரசன் கண்டியை முற்றுகையிட்டபோது, போர்த்துக்கேயரின் பாதுகாப்பை வேண்டி, திருகோணமலைக்குத் தப்பியோடியதோடு, அரச குடும்பத்தில் அனைவரும் கிறிஸ்தவத்தைத் தழுவினர்.

4. **வீரசுந்தர பண்டார**: மலைநாட்டு இளவரசரான இவரை பாதுகாப்புக் காரணங்களுக்காக கோவாவுக்கு அனுப்பினர். அங்கு அவர் "விக்டர் லேபானோ" என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்றார்.

5. **டோனா கத்தரினா**: கரலியட்ட பண்டாரவின் மகளான இவர், அரச பதவியைப் பெறுவதற்காகப் போர்த்துக்கேய படையினரால் கண்டிக்கு அழைத்து வரப்பட்டார். எனினும் போர்த்துக்கேய படை தோல்வியடைந்தமையால், இளவரசி கத்தரினா அரசர் விமலதர்மசூரியாவுக்கும், பின்னர் அரசர் செனரத்துக்கும் மனைவியாக இருந்தமையால் கிறிஸ்தவத்தை வழிபடத் தடையேற்பட்டது.

6. **யாழ்ப்பாண அரச குடும்பத்தின் இளவரசர், இளவரசிகள்**: அரசர் பரராஜசிங்கனின் பிள்ளைகள் போர்த்துக்கேயரினால் கொழும்புக்குக் கொண்டவரப்பட்டனர். இளவரசர் "கொன்ஸ்தாந்தினு" என்ற பெயரிலும், இளவரசிகள் இருவரும், முறையே "இசபெல்", "மறியா" என்னும் பெயரிலும் திருமுழுக்குப் பெற்றனர். இளவரசர் கோவாவுக்கு அனுப்பப்பட்டு, பிரான்சிஸ்கன் சபையில் குருவானார். இளவரசிகள் இருவரும் கோவாவில் அகுஸ்தினார் சபையில் கன்னியர்களாயினர்.

7. **டொன் யுவான் யமசிங்க**: இவர் கண்டி அரசர் பிலிப் யமசிங்கவின் புதல்வராவார். இவர் இந்தியாவில் கோவாவில் கல்வி கற்று, போர்த்துக்கலில் "கொயிம்பிரா" பல்கலைக்கழகத்தில் இறையியல் கற்று, குருவானார். இவர் லிஸ்பனில் "டெல்கிறாஸ்" என்னும் இடத்தில் தேவாலயம் ஒன்றையும் கட்டினார்.

**போர்த்துக்கேயரின் ஆட்சியின் மதிப்பீடு**

இலங்கையில் போர்த்துக்கேய வரலாறு மூன்று நிலைகளைக் கொண்டதாக அமைந்தது. முதலில் சிங்கள-போர்த்துக்கேய சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது (1505-1550). பின்பு, புவனேக பாகுவின் மரணத்தை அடுத்து, அரசன் தர்மபாலாவின் காலத்தில் அவர்கள் கோட்டே அரசின் பாதுகாவலராகவிருந்தனர் (1551-1597). இறுதியாக அரசர் தர்மபாலாவின் மரணத்தையடுத்து, அவர்கள் கோட்டே அரசை அவனிடமிருந்து நன்கொடையாகப் பெற்று முழுமையாக ஆட்சி செலுத்திய காலம் (1597-1658). பொதுவாக போர்த்துக்கேயர் மிகக் கெடுமையானவர்களாகவே கருதப்படுகின்றனர். தமது ஆட்சியின்போது சிற்சில சந்தர்ப்பங்களில், குறிப்பாக அவர்களுக்கு எதிராக எழுந்த புரட்சிகளை அடக்கும்போது அல்லது புரட்சிக்காரரைப் பழிவாங்கும்போது, அவர்கள் கொடிய அடக்கு முறைகளைக் கையாண்டனர். ஆனால் எப்போதும் அவர்கள் மக்களைக் கொடுமையாக நடத்தவில்லை. அவர்கள் ஆசிய மக்களை இழியவர்களாகவோ, கீழ்த்தர மானவர்களாகவோ கருதி, அவர்களை வெறுத்து ஒதுக்கி வைக்கவில்லை. மாறாக, அவர்களுடன் தாராளமாகப் பழகி, தங்கள் வாழ்விலும், உணவிலும் சில சிங்கள தமிழ் பழக்கங்களைக் கடைப்பிடித்து, அவர்களுடன் கலப்புத் திருமணங்கள் செய்து, அவர்களுக்கு அரசிலும், படையிலும் உயர்ந்த உத்தியோகங்களும் பதவிகளும் அளித்து, அவர்களைக் கௌரவமாக நடத்தினர். போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கை மக்களுக்கு கிடைத்த மிக முக்கிய கொடை "கத்தோலிக்க விசுவாசமே". அவர்கள் இலங்கையில் தம் நிலையை உறுதிப்படுத்திய பின், அரசரின் அனுமதியுடன, கிறிஸ்தவ குருக்களை வரவழைத்து, கிறிஸ்தவ மதத்தை இலங்கையெங்கும், பரப்பி, மக்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தைக் கொடையாக அளித்தனர். இக் குருக்களில் பலர் இலங்கையிலேயே குடியேறி, "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என, அங்கு மக்களுக்கு நற்பணிபுரிய தம்மை முற்றும் அர்ப்பணிக்கவே வந்தனர். போர்த்துக்கேயரின் ஆட்சியின் முடிவின்போது இலங்கையின் கரையோரப் பகுதிகளில் உள்ள மக்களில் அதிகமானோர் கிறிஸ்தவத்தைத் தழுவியிருந்தனர்.

போர்த்துக்கேயர் மக்களின் அறிவு வளர்ச்சிக்காக அநேக பாடசாலைகளையும், கல்லூரிகளையும், ஆலயங்களையும், மடங்களையும் கட்டி, மக்களுக்கு கல்வியறிவும், மறையறிவும் ஊட்டினர். அவர்கள் காலத்திலேயே இலத்தின், கிரேக்கம், போர்த்திக்கேயம் போன்ற மேற்கத்தேய மொழிகளும், கல்வி முறைகளும் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டு, வளர்ச்சியடைந்தது. அதேபோன்று முறைசார் பாடசாலைகளின் வழியாகக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் முறையும் எமக்குக் கிட்டியது. கிறிஸ்தவ மறையின் கொள்கைகள், கோட்பாடுகள், கருத்துக்கள் இலங்கையெங்கும் பரவின. கிறிஸ்தவர்களும், பிறமதத்தவர்களும் அவற்றிற்குப் பழக்கப்பட்டு, அக் கிறிஸ்தவ கொள்கைகள் படிப்படியாக அவர்களின் பழக்கவழக்கங்களைச் சீர்திருத்தின. போர்த்துக்கேயரின் அநேக பழக்க வழக்கங்கள், நடை உடை பாவனைகள், பாடல்கள், சங்கீதங்கள், நடனங்கள் நாகரீகமானவையாக இலங்கை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. போர்த்துக்கேயர் அன்று இலங்கையில் நிலவிய கொடிய சாதி வேற்றுமைகள், பாகுபாடுகளில், பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினர். சாதி வேற்றுமை, தீட்டுகளுக்கு எதிரான தங்கள் சமய. பழக்கங்களின் வழியாக, சாதிப் பாகுபாட்டில காணப்பட்ட எத்தனையோ மனிதத் தன்மையற்ற அம்சங்களை படிப்படியாக இல்லாமல் செய்தனர். அவர்களே இலங்கையில் ஒருவனுக்கு ஒருத்தியென்ற ஒரு தாரப் பழக்கம்,, திருமணத்தின் நிலையான, புனிதத் தன்மை, கட்டவிழாமை போன்ற சமூகக் கருத்துக்களைப் புகுத்தி, பல கணவர்களை அல்லது மனைவியரைக் கொண்டிருக்கும் பலதாரப் பழக்கத்தை அழித்தனர். அவர்களே முதல்முதல் இலங்கைக்கு மேற்கத்தைய வைத்திய முறையைக் கொணர்ந்தனர். "போர்த்துக்கேய இரக்கச் சங்கம்" வழியாக ஏழைகளுக்கும், நோயாளருக்கும், முதியோருக்கும், அனாதைகளுக்கும் உதவுவதற்காக சமூகப் பணிகளை மேற்கொண்டனர். மக்கள் பேசிய சிங்கள, தமிழ் மொழிகளிலும் போர்த்துக்யேரின் செல்வாக்கைக் காண்கிறோம். போர்த்துக்கேயரிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட எத்தனையோ மதம், தளபாடங்கள், உணவு, உடை, பெயர் சம்பந்தமான தமிழ், சிங்கள சொற்களை இன்றும் நாம் பயன்படுத்தி வருகிறோம். இவையெல்லாம் போர்த்துக்கேயர் இலங்கை மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கத்தை, செல்வாக்கை நமக்கு உணர்த்துகின்றன.

முதலாவது சிங்கள யுத்த காவியமென கருதப்படும் "கொன்ஸ்தாந்தினு யுத்தம்" அவர்களுடைய காலத்திலேயே தயாரிக்கப்பட்டது. போர்த்துக்கேயர் காலத்தில் தோம்பு தயாரிப்பவரான, கிறிஸ்தவ மறையைத் தழுவிய அழகிய வண்ண முகவேட் என்பவரால் தயாரிக்கப்பட்டது.

## 8.1.3. ஒல்லாந்தர் காலம் (1658-1796)

### 8.1.3.1. போர்த்துக்கேய ஆட்சியின் முடிவும், ஒல்லாந்தரின் ஆட்சியின் உதயமும்

போர்த்துக்கேயரின் ஆட்சி இலங்கையில் 15.11.1505 தொடக்கம் 23.6.1658 வரையும் நீடித்தது. பின்னர் ஒல்லாந்தர் இலங்கைத் தீவைக் கைப்பற்றினர். அதன் பின்னணியை சற்று வரிவாகப் பார்ப்போம்.

**போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடு**

பதினாறாம் நூற்றாண்டில் திருச்சபையில் ஏற்பட்ட மாட்டீன் லூதரின் புரட்சியின் விளைவாக பல சீர்திருத்த கொள்கைகளும், சீர்திருத்த சபைகளும் தோன்றின. அவற்றில் ஒன்று கல்வினின் சீர்திருத்தக் கொள்கைகளைப் பின்பற்றிய கல்வினிஸ்ற் சபையாகும். ஐரோப்பாவில் வெவ்வேறு நாடுகள் வெவ்வேறு சீர்திருத்தக் கொள்கைகளைப் பின்பற்றி, வெவ்வேறு சபைகளைச் சார்ந்தவைகளாகப் பிளவு பட்டன. அதன் விளைவாக அந் நாடுகளுக்குள் போட்டிகளும், பூசல்களும் மலிந்து காணப்பட்டன. ஒல்லாந்தர்கள் அதிகமாகக் கல்வினின் சீர்திருத்தக் கொள்கைகளைப் பின்பற்றியதால், ஒல்லாந்து கல்வினிஸ்ற் சபையைச் சார்ந்த நாடாகவிருந்தது. இஸ்பானியா கத்தோலிக்க திருச்சபைக்குப் பிரமாணிக்கமான நாடாகவிருந்தது. ஒல்லாந்து நீண்ட காலமாக இஸ்பானியாவின் ஆட்சிக்கு கீழப்பட்ட நாடாகவிருந்து, பல்லாண்டு நீடித்த விடுதலைப் போரின் விளைவாக சுதந்திரம் அடைந்தது. பின்னர் கல்வினிஸ்ற் சபையைச் சார்ந்த நாடாக மாறியது. இஸ்பானியாவின் ஒரு சிறிய பகுதியாகவிருந்த போர்த்துக்காலும் ஒரு தனி நாடாக உருவாகி, கத்தோலிக்க திருச்சபைக்கு பிரமாணிக்கமான நாடாக இருந்து வந்தது. ஒல்லாந்தர்

கல்வின் சபையைச் சார்ந்தவர்களாயும், போர்த்துக்கேயர் கத்தோலிக்க திருச்சபையைச் சார்ந்தவர்களாயும் இருந்தபடியால், இரு நாடுகளுக்கும் இடையில் ஆரம்பத்திலிருந்து போட்டியும் பூசலும் இருந்து வந்தன. வேற்று மதங்களைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பு, ஒரு நாட்டில் கிறிஸ்தவத்தின் பல பிரிவுகளையும் அனுமதிக்கும் கொள்கை அன்று ஐரோப்பாவில் இருக்கவில்லை. முன்பு முஸ்லிம்கள் தங்களின் ஏகபோக உரிமையாக கொண்டிருந்த கீழைத் தேச வர்த்தகத்தைப் போர்த்துக்கேயர், கீழைத்தேய நாடுகளைக் கைப்பற்றி, தமதாக்கிக் கொண்டனர். இதைக் கண்ட ஒல்லாந்தர் ஏட்டிக்குப் போட்டியாக கீழைத் தேச வர்த்தகத்தின் ஏகபோக உரிமையைப் போர்த்துக்கேயரிடமிருந்து பறித்து, தமதாக்கிக் கொள்ள முயன்றனர். இவ்வாறாக ஐரோப்பாவில் மதம் சம்பந்தமான விடயங்களில் காணப்பட்ட போட்டி, கீழைத் தேய நாடுகளில் வர்த்தகத் துறையில் பிரதிபலித்தது.

**போர்த்துக்கேய ஆட்சியின் முடிவும், ஒல்லாந்தரின் ஆட்சியின் உதயமும்**

பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஒல்லாந்தருக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் கீழைத் தேச வர்த்தக ஏகபோக உரிமையைக் கைப்பற்றுவதற்காக போட்டி நடைபெற்றது. ஒல்லாந்தர் கிழக்கிந்திய தீவுகளைக் கைப்பற்றியதுமல்லாமல், போர்த்துக்கேயர் கைப்பற்றி ஆண்டுவந்த கீழைத் தேச நாடுகளையும் கைப்பற்ற முயன்றார்கள். ஒல்லாந்தர் 1639ம் ஆண்டு வைகாசி மாதம், 18ம் திகதி, கிழக்கிலங்கை நகரமாகிய மட்டக்கிளப்பைக் கைப்பற்றினார்கள். இலங்கையில் கோட்டே அரசும், யாழ்ப்பாண அரசும் போர்த்துக்கேயரின் ஆட்சியிலிருக்க, கண்டி அரசு சுயாதீன் சிங்கள அரசர் 2ம் இராஜசிங்கவின் ஆட்சியின் கீழ் இருந்தது. கண்டி சிங்கள் அரசரும், சிங்கள மக்களும் போர்த்துக்கேயரை வெறுத்து, நாட்டிலிருந்து விரட்டச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் போர்த்துக்கேயரை வெறுப்பதற்குப் பல காரணங்கள் இருந்தன. அவர்கள் தம் நாடு வெளி நாட்டவர்களின் கீழ் இருப்பதை விரும்பவில்லை. சில போர்த்துக்கேய ஆட்சியாளரது, அதிகாரிகளது கொடும் தன்மையையும், முறையற்ற செயல்களையும் அவர்கள் வெறுத்தனர். போர்த்துக்கேயர் மேற்கொண்ட யுத்தங்களினால் ஏராளமான இரத்தம் சிந்துதலும்,

உயிர்ச்சேதமும் ஏற்பட்டன. போர்த்துக்கேயர் தமது மதத்தை முதன்மைப்படுத்தி, இந்நாட்டு மதமான பௌத்தர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தினர். எனவே போர்த்துக்கேயரை நாட்டிலிருந்து விரட்டத் திட்டமிட்டுக் கொண்டிருந்த கண்டி அரசன் இரண்டாவது ராஜசிங்க போர்த்துக்கேயரின் எதிரிகளான ஒல்லாந்தர் மட்டக்களப்பக்கு வந்ததைக் கேள்விப்பட்டு, அவர்களைச் சந்திக்கச் சென்றார். போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து விரட்ட ஒல்லாந்தரின் உதவியை நாடினார். அந்தச் சந்திப்பின் விளைவாக, அவர்கள் வைகாசி மாதம் 23ம் திகதி, ஒரு ஒத்துழைப்பு உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன் பிரகாரம் கண்டி அரசன் தம் அரச எல்லைக்குள் எந்தவொரு போர்த்துக்கேய குருவையோ, துறவியையோ, மறைபரப்பாளரையோ நுழையவோ, தங்கவோ அனுமதிக்கக் கூடாது. அதே வேளை நாட்டின் ஏகபோக வர்த்தக உரிமை ஒல்லாந்தருக்கே உரியது.

கண்டி அரசனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய, 1639ம் ஆண்டு வைகாசியில் ஒல்லாந்தர் திருகோணமலையைத் தாக்கிக் கைப்பற்றினர். அங்கு ஒரு கோட்டையைக் கட்டி, 1500 படை வீரர்களை கொணர்ந்து இருத்தினர். 1640ம் ஆண்டு மாசி மாதத்தில் கொழும்பை கைப்பற்ற முயற்சித்து, அது முடியாமல் போகவே, அவர்கள் நீர்கொழும்பைத் தாக்கிக் கைப்பற்றினர். பங்குனி 15இல் காலியும் அவர்களிடம் சரணடைந்தது. அங்கு தஞ்சம் அடைந்திருந்த குருக்களும், துறவிகளும், மறைபரப்பாளர்களும் நாடு கடத்தப்பட்டனர். சிறிது கால போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து, 1652இல் போர் மீண்டும் ஆரம்பமாகி, நீண்ட போருக்குப் பின் 1656ம் ஆண்டு வைகாசி, 12ம் திகதி கொழும்பு ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் வந்தது. தமது படையெடுப்பை இலங்கையின் வடக்கை நோக்கித் தொடர்ந்து, 1658 மாசி மாதத்தில் மன்னாரையும், ஆனி 23ம் திகதி யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினர். இவ்வாறு 1658இல் இலங்கையில் போர்த்துக்யேரின் ஆட்சி முடிவடைந்து, ஒல்லாந்தரின் ஆட்சி ஆரம்பமாகியது.

ஒல்லாந்தர் மகா ஓயா முதல் வளவ கங்கை வரையிலான நிலப் பரப்பையும், யாழ்ப்பாணக் குடா நாடு, மன்னார்த் தீவு, கல்பிட்டி, திருகோணமலை, மட்டக்கிளப்புக் கோட்டைகள், வன்னிப் பகுதி ஆகிய

பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்தி, தம் நிர்வாகத்தை அமைத்தனர். இலங்கையின் எஞ்சிய, மகா ஓயாவுக்கு வடப் பக்கமாகவுள்ள நிலப்பரப்புகள் கண்டி அரசரின் ஆட்சியின் கீழ் வந்தன. நாட்டின் வர்த்தக ஏகபோக உரிமையைக் கேட்டு வந்த ஒல்லாந்தர், நாட்டின் கரையோரப் பகுதிகளையும், வன்னிப் பிரதேசத்தையும் தமதாக்கிக் கொள்வது அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு முரணானது. முன்னர் போர்த்துக்கேயர் ஆண்ட பகுதிகளையெல்லாம் தொடர்ந்து ஒல்லாந்தர் ஆளுவதைக் கண்ட கண்டி அரசன் இரண்டாம் ராஜசிங்க அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்தான். அதுமட்டுமல்ல அவன் பிற நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் உரிமையையும் இழந்தான். போர்த்துக்கேயரின் ஆட்சியின் முடிவில் இலங்கையில் ஏறக்குறைய 200,000 கத்தோலிக்கரும், 125 ஆலயங்களும், 100 பங்குகளும், 120 குருக்களும் இருந்தனர். இவர்கள் பிரான்சிஸ்கன் சபை, இயேசு சபை, அகுஸ்தினார் சபை, சாமிநாதர் சபையைச் சேர்ந்தவர்கள். ஒரு சில மேற்றிராசனக் குருக்களும் இருந்தனர். இவர்களுள் ஒன்றிரண்டு சுதேச குருக்களும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒல்லாந்தரின் வருகையை அடுத்து அவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

## 8.1.3.2. ஒல்லாந்தர் முன்னிலையில் கத்தோலிக்கரது அனுபவங்கள்

ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி, அவர்களை இலங்கையிலிருந்து முற்றாக விரட்டிவிட்டாலும், அவர்கள் மீண்டும் இலங்கையைத் தாக்கினால் கத்தோலிக்கர்கள் தங்களுக்கு விசுவாசமாயிருக்காமல், போர்த்துக்கேயருக்கே ஆதரவளிப்பார்களென்ற பயம் அவர்களுக்கு இருந்தது. மதம் கத்தோலிக்கருக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையே ஒரு நெருங்கிய உறவை, தொடர்பை ஏற்படுத்தியிருந்தது, இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சியும் றோமன் கத்தோலிக்க திருச்சபையும் எவ்வளவு நெருங்கிப் பின்னிப் பிணைக்கப் பட்டிருந்தனவென்றால், அவற்றில் ஒன்றை அழிக்காமல், மற்றதை வெளியேற்ற முடியாத நிலையில் இருந்தன. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதையடுத்து, சில போர்த்துக்கேயரும், அவர்கள் வழித் தோன்றல்களும் ஒல்லாந்தருக்கு தம் விசுவாசத்தை அறிக்கையிட்டதனால், அவர்களின் பட்டாளத்திலே சேர்த்துக்

கொள்ளப்பட்டார்கள். சில காலத்துக்குப் பின் ஒல்லாந்த படைகள் தென் இந்தியாவிலுள்ள நாகபட்டனத்தைத் தாக்கச் சென்ற பொழுது, ஒரு சில ஒல்லாந்த அதிகாரிகளும், ஒல்லாந்த படையில் சேர்ந்த இப் போர்த்துக்கேய படை வீரர்களுமே யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்தார்கள். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவர்கள் ஒல்லாந்த அதிகாரிகளைக் கொலைசெய்து, கோட்டையைக் கைப்பற்றிப் போர்த்துக்கேயரிடம் திரும்பவும் ஒப்படைக்கத் திட்டமிட்டனர். இச் சதித்திட்டம் ஒல்லாந்த அதிகாரிகளுக்குத் தெரிய வரவே, அவர்கள் அச் சதித்திட்டம் தீட்டிய போர்த்துக்கேய படைவீரரைக் கைதுசெய்து, துன்புறுத்திக் கொலைசெய்தனர். இது ஒல்லாந்தருக்குக் கத்தோலிக்கரின் மேலிருந்த சந்தேகத்தையும் வெறுப்பையும் இன்னும் அதிகரிக்கச் செய்தது. கத்தோலிக்கருக்கு மதப் பணி புரிந்த அனைத்துக் குருக்களையும், துறவிகளையும், மறைபரப்பாளர்களையும் நாடுகடத்தி விட்டால், கத்தோலிக்க மதத்தை அழித்து விடலாம் என்று அவர்கள் கருதியது நிறைவேறவில்லை. எனவே அவர்கள் இலங்கையிலிருந்து கத்தோலிக்க மதத்தை முற்றாக அழிப்பதற்கு வேண்டிய திட்டங்களை நடைமுறைப் படுத்தினார்கள்.

ஒல்லாந்தர்கள் கத்தோலிக்கரைத் துன்புறுத்துவதற்கு வேறு காரணங்களும் இருந்தன. கத்தோலிக்க மதம் புரோட்டஸ்தாந்து ஒல்லாந்தருக்கு விருப்பமற்ற மதமாக இருந்தது. கத்தோலிக்க மறையில் சுரூபங்களை பயன்படுத்துவது, புனிதர்களை வணங்குவது, திருப்பலி ஒப்புக்கொடுக்கும் முறை என்பவற்றை சிலை வழிபாடாகக் கருதினர். மேலும் தேசிய மக்கள் தமது புரொட்டஸ்தாந்து மதத்தைத் தழுவினால் அவர்களுக்கும் தமக்கும் இடையே நல்ல உறவு, தொடர்பு ஏற்படுமென எதிர்பார்த்தனர்.

சிறிய நாடாகிய ஒல்லாந்து இலங்கையிலிருந்து போர்த்துக்கே-யரை விரட்டி, முற்றாக ஒழிக்கக்கூடிய வலிமையுள்ள நாடாக மாறுவதற்கு முக்கிய காரணம் வர்த்தக சங்கங்கள் பல் ஒன்றிணைந்து அமைத்துக்கொண்ட "கீழைத்தேய இந்திய கொம்பனி" ஆகும். இக் கொம்பனியின் நோக்கம் வர்த்தகத்தை முன்னேற்றுவதாகும். மதத்தைப் பரப்புவதல்ல. 1602 இல் கீழைத்தேய இந்திய கொம்பனி நிறுவப்பட்ட அதிகாரப பத்திரத்தில் மதத்தைப் பரப்புதல் கொம்பனியின்

வேலையாகக் குறிப்பிடப்படவில்லை. எனினும் கொம்பனியின் பொது நடவடிக்கைகளில் க்த்தோலிக்கருக்கு எதிரான கட்டளைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 1642 இல் கொம்பனி வெளியிட்ட "பெத்தாவியானு" சஞ்சிகையில், "புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தைத் தவிரவேறு எந்தவொரு மதத்தையும் பகிரங்கமாகவோ, இரகசியமாகவோ வழிபடுவதற்கு எந்தவொரு தருணத்தையும் கொடுக்கக் கூடாது. இச்சட்டத்திற்கு எதிராகச் செயற்படுபவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதோடு, அவர்கள் நாடுகடத்தப்படல் வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைவிட, கண்டி அரசருடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் ஒரு நிபந்தனையாக "எந்தவொரு கத்தோலிக்க மதகுருவுக்கும், துறவிக்கும் தனது இராச்சியத்தில் தங்கியிருப்பதற்கு இடமளிக்கக் கூடாதெனவும், அவர்களை நாட்டிலிருந்து துரத்த வேண்டுமெனவும்" சொல்லப்பட்டிருக்கிறது.

அதற்கு அமைய இலங்கையில் கத்தோலிக்க மதம் நாட்டில் முற்றாகத் தடை செய்யப்பட்டது. கல்வினிஸ்ற் மதம் தவிர்ந்த வேறு எந்தவொரு மதத்தைக் கடைப்பிடிப்பதோ, போதிப்பதோ, பரப்புவதோ தடைசெய்யப்பட்டது. அனைத்துக் கத்தோலிக்க ஆலயங்களும், பாடசாலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. சில ஆலயங்கள் அழிக்கப்பட்டன. அங்கிருந்த திருச் சுரூபங்கள் உடைக்கப்பட்டன அல்லது தீக்கிரையாக்கப்பட்டன. கத்தோலிக்க பாடசாலைகள் அனைத்தும் கல்வினிஸ்ற் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. அப் பாடசாலைகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பும்படி கத்தோலிக்க பெற்றோர்கள் வற்புறுத்தப்பட்டார்கள். எல்லாக் கத்தோலிக்க குருக்களும், மறை பரப்பாளர்களும் நாட்டிலிருந்து விரட்டப் பட்டனர். இரகசியமாகத் தங்கியிருந்த ஒரு சில குருக்கள் தேடிப் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். கத்தோலிக்க குருக்களை இரகசியமாக ஆதரித்துப் பாதுகாப்பது, வீடுகளில் தங்க இடமளிப்பது, அவர்களுக்கு எவ்வகையிலும் உதவுவது மரண தண்டனைக்குரிய குற்றமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. கத்தோலிக்க மக்கள் இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ ஒன்றுகூடி, கத்தோலிக்க ஆராதனைகளை நடத்துவது, அல்லது அவற்றில் பங்கெடுப்பது தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கப்பட்டது. கிறிஸ்தவ படங்களை, சிலைகளை வைத்திருப்பது தடைசெய்யப்பட்டது. இச் சட்டங்களை முதல் முறையாகவும், இரண்டாம் முறையாகவும் மீறுவோருக்குத்

தெண்டங்கள் விதிக்கப்படுமென்றும், மூன்றாம் முறையும் மீறுவோருக்கு மரண தண்டனை விதிக்கப்படுமென்றும் எச்சரிக்கை விடப்பட்டது. சகல கத்தோலிக்க பாடசாலைகளும், ஆலயங்களும், புண்ணியநிலையங்களும் அழிக்கப்பட்டதோடு, புரொட்டஸ்தாந்து மத குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. சகல பாடசாலைகளிலும் புரொட்டஸ்தாந்து மதம் கற்பிக்கப்பட்டதோடு, இப் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்ப விரும்பாதவர்களுக்குத் தெண்டம் விதிக்கப்பட்டது. கல்வினிஸ்ற் மத ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகளில் பங்கெடுக்கும்படி கத்தோலிக்கர் பலவந்தம் செய்யப்பட்டார்கள். கல்வினிஸ்ற் மத முறைப்படி நிறைவேற்றப்படும் திருமுழுக்குகளும். திருமணங்களுமே அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன. பிரேத அடக்கம் கூட கல்வினிஸ்ற் மத முறைப்படியே செய்யப்பட வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டது. இலங்கைப் பிரசைகள் அரச நிர்வாகச் சேவையிலும், பட்டாளத்திலும் வேலைக்கு எடுக்கப்பட்டாலும், கல்வினிஸ்ற் மதத்தைத் தழுவியவர்களுக்கே விசேட சலுகையும், பாரபட்சமும் காட்டப்பட்டன. கல்வினிஸ்ற் மதத்தைத் தழுவ விரும்பாத கத்தோலிக்கருக்கு அரச பதவிகள் மறுக்கப்பட்டன. அவர்கள் தெண்டங்களுக்கும், வேறு நெருக்கிடைகளுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். இலங்கையில் குடியேறியிருந்த போர்த்துக்கேயரும் துன்புறுத்தலுக்கு ஆளானார்கள். அவர்களது போர்த்துக்கேய மொழி தடை செய்யப்பட்டது. அவர்களுடைய நடவடிக்கைகள் உளவாளிகளால் அவதானிக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டனர். அவர்கள் மேல் பொய்க் குற்றங்கள் சுமத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள். ஒல்லாந்தர்கள் இலங்கையிலிருந்த பௌத்தர்கள், இந்துக்கள, முஸ்லிம்கள் மத்தியில் எவ்வித மறைபரப்புப் பணியும் ஆற்றாமல், கத்தோலிக்க சமூகங்களை கல்வினிஸ்ற் சமூகங்களாக மாற்றுவதிலேயே தம் முழுக் கவனத்தையும் செலுத்தி, அவர்களையே துன்புறுத்தினர். அவர்கள் கத்தோலிக்கருக்கு எதிராக இத்தகைய நடவடிக்கைகளை எடுத்தது போர்த்துக்கேய கால முடிவில் கத்தோலிக்க மதம் எவ்வளவு ஆழமாகவும், பரவலாகவும் வளர்ந்திருந்தது என்பதைக் காட்டுகிறது.

ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர் அனுபவித்த மிகப் பெரிய இழப்பு தங்கள் குருக்களையும். மறைப்பரப்பாளர்களையும், துறவிகளையும் இழந்ததே. போர்த்துக்கேய கால முடிவில் 120 குருக்கள் அவர்களுக்கு ஆன்ம பணிகளைச் செய்துவந்தனர். ஆனால் இப்பொழுது

அங்கு ஒருத்தரும் இல்லை. போர்த்துக்கேயர் சுதேச குருக்களைத் திருநிலைப்படுத்திவிட்டுச் சென்றிருந்தால், மறைமுகவாக என்றாலும் அவர்கள் இவ்வேளையில் மக்களுக்குப் பணிபுரிந்திருப்பர். இந் நிலை 30 ஆண்டு காலத்துக்கு நீடித்தது. விசுவாசத்தில் உறுதியாயிருந்த கத்தோலிக்கருக்கு குருமார்களின் உதவியும், உற்சாகமும் கிட்டாததால் அவர்களால் நல்ல உத்தம கிறிஸ்தவ சீவியம் சீவிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். சிலர் பதவி மோகத்தால் மேற்கொள்ளப்பட்டு, முதலியார், அதிகார் போன்ற அரச உயர் பதவிகள் பெறும் நோக்குடன், தங்கள் கத்தோலிக்க விசுவாசத்தைக் கைவிட்டு, கல்வினிஸ்ற் மதத்தைத் தழுவினர்.

## 8.1.3.3. ஒல்லாந்தரின் துன்புறுத்தல்கள் முன் கத்தோலிக்க விசுவாசிகள்

சில புதிதாகக் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்கள், அவர்களில் விசுவாசம் இன்னும் ஆழமாக வேரூன்றாமையால், அத்தகைய கொடிய துன்பங்களுக்கு முகங்கொடுக்க அஞ்சி, தங்கள் பழைய பௌத்த அல்லது இந்து மதங்களுக்கு மீண்டும் திரும்பிச் சென்றனர். ஆனால் பொதுவாக சுதேச கத்தோலிக்கர்கள், குறிப்பாக நீர்கொழும்பு. சிலாபம் போன்ற கடலோரப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நின்று, அதைக் காப்பாற்றினர். ஒல்லாந்தரால் விதிக்கப்பட்ட தெண்டங்களையும், துன்புறுத்தல்களையும் ஒரு சவாலாகவே ஏற்றுக் கொண்டனர். தங்கள் மத சுதந்திரத்துக்காகவும். தங்கள் பிள்ளைகளுக்கு தாம் விரும்பிய தகுந்த கல்வியறிவையும், மதவறிவையும் அளிக்கும் உரிமைகளுக்காகவும் துணிவுடன் அதிகாரிகளுடன் வாதாடினர். கத்தோலிக்க அனுஷ்டானங்களை ஒழுங்காகக் கடைப்பிடித்து வந்தனர். இரவில் தனியார் வீடுகளில் இரகசியமாக ஒன்று கூடிச் செபித்தனர். ஒல்லாந்தரிடமிருந்து தாம் காப்பாற்றிக்கொண்ட திருச் சுரூபங்களை வீடுகளில் மறைவாக வைத்து வணங்கினர். கத்தோலிக்க சமூகமாக ஒன்று கூடி, குறிப்பிட்ட காலத்துக்கு தங்களில் ஒருவரைத் தலைவராக, மூப்பராகத் தெரிந்தெடுத்து, அவருடைய வழிகாட்டலின் கீழ் வாழ்ந்து வந்தனர். ஞாயிறு தினங்களில் அவர்களுக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்க குருக்கள்

இல்லாமையால், தங்கள் தலைவரின் தலைமையில் விசுவாசிகள் ஒரு இடத்தில் ஒன்று கூடி, பூசைத் தியானங்கள், பிரார்த்தனைகளை வாசித்துச் செபித்தனர். தலைவர்கள் பிள்ளைகளுக்கு கத்தோலிக்க முறைப்படி திருமுழுக்குக் கொடுத்தனர். கத்தோலிக்கரின் திருமணம், பிரேத அடக்கம் போன்றவற்றையும் நிறைவேற்றி வைத்தனர். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு மறைக் கல்வி ஊட்டி, கத்தோலிக்க நெறியில் பயிற்றுவித்து வளர்த்தனர். இவ்வாறு தங்கள் கத்தோலிக்க விசுவாசத்தை அத்தனை இன்னல்கள் மத்தியிலும் உறுதியுடன் பிரமாணிக்கமாய்க் காப்பாற்றி வந்தனர். சில வேளைகளில் தங்கள் கத்தோலிக்க விசுவாசத்துக்காக தங்களுக்குச் சொந்தமான அனைத்தையும் தியாகம் செய்யவேண்டி எற்பட்டது.

இவ்வாறு ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ், பல இன்னல்கள், இடையூறுகள், துன்புறுத்தல்கள், தண்டனைகள் மத்தியில் வாழ்ந்துவந்த கத்தோலிக்கரின் விசுவாச வாழ்கை காலம் செல்லச் செல்ல தளர்ச்சியடையத் தொடங்கியது. அக் காலகட்டத்தில் பிறந்த பிள்ளைகள் தகுந்த மறைக் கல்வி அறிவின்றி, திருவருட்சாதனங்களின் அருளுதவியின்றி. பெயரளவில் மாத்திரம் கத்தோலிக்கராய் வாழ்ந்து வந்தார்கள். இத் துன்பங்களைப் தொடர்ந்து பொறுக்க முடியாத சில கத்தோலிக்கர்கள், மக்கள் வாழ்ந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து, அமைதியும், பாதுகாப்புமுள்ள வேற்றிடங்களைத் தேடிச் சென்றனர். இவ்வாறு மாந்தையில் வாழ்ந்த சில கத்தோலிக்கர், தாங்கள் இரகசியமாக வணங்கி வந்த, பல அற்புதங்களைச் செய்த மாதா சுரூபத்தையும் எடுத்துக்கொண்டு, அடர்ந்த காடுகள் சூழ்ந்த மடு என்னுமிடத்திற்குச் சென்றனர். அங்கு அவர்கள் தம் கத்தோலிக்க விசுவாசத்தை எவ்வித பிரச்சினையுமின்றிக் கடைப்பிடித்து. அமைதியுடன் வாழ்ந்தனர். இதுவே “மருத மடுத் திருப்பதி”யின் ஆரம்ப வரலாறாகும். வேறு சிலர், சிங்கள் மன்னரால் ஆட்சிசெய்யப்பட்ட கண்டி அரசில் ஒல்லாந்தருக்கு எவ்வித அதிகாரமும் இல்லாததால், குடிபெயர்ந்து அங்கு சென்றனர். இலங்கையில் குடியேறியிருந்த போர்த்துக்கேயரும், மற்றும் பல சுதேச கத்தோலிக்கரும் இதில் அடங்குவர். அவர்களுடன் மறைந்து இரகசியமாக வாழ்ந்துவந்த சில போர்த்துக்கேய குருக்களும் சென்றனர். வர்த்தக உரிமை மட்டுமே கேட்டு வந்து, பின்பு நாட்டின் கடலோரக் பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி செய்யும் ஒல்லாந்தரின்மேல்

கோபம் கொண்டிருந்த கண்டி அரசன் ஒல்லாந்தரினால் துன்புறுத்தப்பட்ட கத்தோலிக்கரை துன்புறுத்தாமல், இரக்கத்துடன் வரவேற்று, அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தான். அவர்களை சீதவாக்கை, ரூவான்வெல, கெண்டங்கமுவ, இரத்தினபுரி, வாகக்கோட்டை, கல்கமுவ முதலிய இடங்களில் குடியமர்த்தினான். கண்டி அரசில் வாழ்ந்த கத்தோலிக்கர்கள் எவ்வித தங்குதடையுமின்றித் தங்கள் விசுவாச வாழ்க்கையை நடத்தினர். ஆனால் அவர்களுக்கு ஆலயங்களும், குருக்களும்தான் இருக்கவில்லை. எனவே எல்லோரும் ஒன்று கூடி வழிபாடு செய்ய ஆலயமில்லாதபடியால், தங்கள் வீடுகளில் ஒன்றுகூடி வழிபட்டனர். பொது நிலையினரே பிள்ளைகளுக்குக் மறைக் கல்வி கற்றுக் கொடுத்து, திருமுழுக்குக் கொடுத்தனர். சிலர் தங்களை கிறிஸ்தவர்களென வெளிப்படுத்தும் சிலுவையையும், வேறு அருளடையாளங்களையும் பகிரங்கமாக அணிந்தனர்.

இதற்கிடையில் கொழும்புத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களில் பயணம் செய்த சில குருக்கள் இடையிடையே மாறுவேடத்தில் நகரத்திற்குள் வந்து, அயலில் வாழ்ந்த கத்தோலிக்கரை இரகசியமாகச் சந்தித்து, அவர்களுக்குப் போதித்து, பாவசங்கீர்த்தனம் கொடுத்து, திருப்பலி நிறைவேற்றிச் சென்றனர். வேறு சில கத்தோலிக்கர்கள் ஆபத்துகள் மத்தியில் தாங்களே துறைமுகம் சென்று, கப்பல்களிலிருந்த குருக்களைச் சந்தித்து தங்களுக்கு வேண்டிய ஆன்மீக உதவிகளைப் பெற்றனர். இவர்கள் இலங்கைக் கத்தோலிக்கரின் அவல நிலைபற்றி கத்தோலிக்க திருச்சபையின் மேலிடங்களுக்கும், குறிப்பாக மறைபரப்புப் பணிச் சபைக்கும் வெளிப்படுத்தி எழுதி, அங்கு விரைவில் சில குருக்ளை ஒல்லாந்தரின் அனுமதியுடன் அனுப்பிவைக்குமாறும், அல்லது ஒரு ஆயரை மறைமுகமாக அனுப்பி ஒரு சில சுதேச குருக்களை திருநிலைப்படுத்திச் செல்லுமாறும் கேட்டனர். ஆனால் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடமும், போர்த்துக்கேய அரசரும் எவ்வளவோ முயன்றும், ஒல்லாந்த அரசோ எந்தவொரு குருவும் இலங்கைக்கு வர நுழைவுச் சீட்டு வழங்க மறுத்தனர்

ஒல்லாந்தர் கத்தோலிக்க மதம் இன்னும் சொற்ப காலத்தினுள் இலங்கையிலிருந்து முற்றாக அழிந்து விடுமெனக் கனவு கண்டு

கொண்டிருந்தனர். ஆனால் இறைவனின் திட்டம் வேறுவிதமாக அமைந்திருந்தது. இயேசுக் கிறிஸ்து தம் திருச்சபையைக் கைவிட்டு விடவில்லை. நெருப்பினால் பொன் புடமிடப் படுவதுபோல், ஒல்லாந்தரின் கலாபனையினால் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை சுத்திகரிக்கப்பட்டு, புதிதாய்த் தாபிக்கப்பட்டு, புத்துயிருடன் பிரகாசமாய் வளரவேண்டுமென்று விரும்பினார்.

## 8.1.3.4. ஓல்லாந்தர் காலத்தில் மறை பரப்புப் பணி

ஒல்லாந்தரின் கொடிய சட்டங்கள், துன்புறுத்தல்கள் மத்தியிலும் பொதுவாகக் கத்தோலிக்க சமூகங்கள், குறிப்பாகக் கிராமப் புறங்களில் வாழ்ந்தவர்கள், குழப்பம் எதுவுமின்றி, தாங்களே காலத்துக்குக் காலம் தெரிவு செய்யும் தலைவர்கள், மூப்பர்களின் கீழ், தம் விசுவாசத்தைக் கடைப் பிடித்து, அமைதியுடன் வாழ்ந்து வந்தனர். அவர்களில் சிலர் தங்கள்மேல் திணிக்கப்பட்ட மிதமிஞ்சிய தெண்டங்களிலிருந்து தப்புவதற்காக தம் பெயர்களை கல்வினிஸ்ற் கோவில்களில் பதிவு செய்தனர். வேறு சிலர் தங்கள் பிள்ளைகளை முறை தவறிப் பிறந்தவர்களென்ற அவப் பெயரிலிருந்து பாதுகாக்க, அவர்களின் சொத்துரிமையை இழக்காமலிருக்க, அவர்களுக்கு கல்வினிஸ்ற் போதகர்களினால் திருமுழுக்குக் கொடுப்பித்துக் கொண்டனர். இருந்தும் அவர்கள் தங்கள் உள்ளத்திலும். இல்லத்திலும் கத்தோலிக்க மதத்தையே விருப்புடன் பின்பற்றி, தம் மக்களையும் அவ் விசுவாசத்திலேயே பயிற்றி வளர்த்தனர். ஒல்லாந்தர் உடனடியாக தம் கல்வினிஸ்ற் மதத்தை மக்களுக்குப் போதிக்க விரும்பவில்லை. ஒல்லாந்த அரசு அல்ல, ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பெனியே இலங்கையைக் கைப்பற்றியது. அது பலர் பங்கெடுத்த ஒரு வியாபாரத் தாபனம். அவர்களின் நோக்கம் வர்த்தக ஆதிக்கமேயன்றி, தம் மதத்தைப் பரப்புவதல்ல. எனவேதான் தங்கள் வரத்தக ஏகபோக உரிமையைப் பாதுகாக்க, முதலில் அவர்கள் போர்த்துக்கேயர் இலங்கை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டுச் சென்ற தாக்கத்தை, செல்வாக்கை அழித்து, அவர்களின் நினைவையே மக்களிடமிருந்து முற்றாக நீக்கிவிட முயற்சித்தனர். அதன் பின்பே தம் மறைபோதக பணியை ஆரம்பித்தனர்.

ஒல்லாந்தர் தம் கல்வினிஸ்ற் பதித மதத்தை இலங்கையில் பரப்புவதற்கு எடுத்த முயற்சியில் முக்கிய பங்காற்றியவர் வண.

பிலிப்பிஸ் பல்தேயுஸ் பாதிரியார் ஆவார். யாழ்ப்பாணத்துக்கு வந்த முதல் ஒல்லாந்த போதகராகிய அவர், 1658ம் ஆண்டு தொடக்கம் 1665 வரை மறைபரப்புப் பணியாற்றினார். அவர் ஒல்லாந்திலுள்ள டெல்ப்ற் என்ற ஊரில், 1632ம் ஆண்டு, ஐப்பசி மாதம் பிறந்தார். நான்கு வயதில் தம் பெற்றோரை இழந்த அவர், முதலில் அவருடைய பேரனாலும், பின்பு அவருடைய நெருங்கிய உறவினரான றொபர்ட் யூனியஸ் என்பவராலும் வளர்க்கப்பட்டார். தத்துவ சாஸ்திரப் பட்டதாரியான பல்தேயுஸ். தன் வளர்ப்புத் தந்தை யூனியசைப் போல் தானும் ஒரு கல்வினிஸ்ற் மத போதகராக வர விரும்பி, 1654ம் ஆண்டு. தனது 21வது வயதில், ஒல்லாந்த சீர்திருத்த சபையில் ஒரு மறைப்பணியாளராக நியமனம் பெற்றார். ஒல்லாந்தரின் கீழைத் தேச நடுநிலையமாக விளங்கிய இந்தோனேஷியாவிலுள்ள பட்டாவியாவிற்கு படையினர் மத்தியில் பணிபுரிய 1654ம் ஆண்டு அனுப்பப்பட்ட பல்தேயுஸ், 1656ம் ஆண்டு ஒல்லாந்தர் கொழும்பைக் கைப்பற்றியதுடன், படையினருக்கு பணிபுரிய காலிக்கு அனுப்பப்பட்டார். பின்பு 1658ம் ஆண்டு ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது, அவர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு யாழ்ப்பாணத்திற்கும், அதைச் சுற்றிவர இருந்த தீவுகளுக்கும் மறைப் போதகராக நியமிக்கப்பட்டு, அப்பகுதியில் வாழ்ந்த இந்து, கத்தோலிக்க மக்களை ஒல்லாந்தரின் பதித மதத்துக்கு மனந்திருப்பும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கல்வினிஸ்ற் மதம் மக்களை மனந்திருப்பி, தம் மதத்தில் சேர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கவில்லை. இலங்கைக்கு வந்த ஒல்லாந்தரின் கிழக்கிந்திய கம்பெனியும் மறைபரப்புப் பணிக்கென இலங்கைக்கு வரவில்லை. அவர்களுடைய முதல் முக்கிய நோக்கம் வர்த்தகமே. கத்தோலிக்க போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கையின் வர்த்தக ஏகபோக உரிமையைக் கைப்பற்றியவர்கள, அதை இழந்துவிடாமல், பாதுகாத்துக் கொள்ள விரும்பினர். போர்த்துக்கேயரால் கொண்டுவரப்பட்ட கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றும் கத்தோலிக்க சமூகங்கள் பெருந் தொகையில் இலங்கையில் இருக்குமட்டும், போர்த்துக்கேயருக்கு இலங்கையில் ஆதரவும், தங்களுக்கும், தங்கள் வர்த்தகத்துக்கும் அச்சுறுத்தலும் இருப்பதை ஒல்லாந்தர் நன்கு உணர்ந்தனர். எனவேதான் அவர்கள் கத்தோலிக்கத்தை

இலங்கையிலிருந்து முற்றாக அழிக்கவும், தங்கள் கல்வினிஸ்ற் பதித மதத்தை இலங்கையில் பரப்பவும் முயற்சிகள் எடுக்கத் தீர்மானித்தனர். மதப் பற்றல்ல, மாறாக பணப்பற்றே அவர்களின் மறைபோதகத்தின் உந்து சக்தியாகவிருந்தது. 1642ம் ஆண்டில், கல்வினிஸ்ற் பதித மதத்தைத் தவிர வேறு எந்தவொரு மதமும் இரகசியமாகவோ அல்லது பகிரங்கமாகவோ கற்பிக்க, பரப்பக் கூடாதென சட்டம் இயற்றப்பட்டது. அச் சட்டத்தை மீறுபவர்களின் உடமைகள் பறிமுதல் செய்யப்பட்டு, அவர்கள் சிறையிலிடப்படுவர் அல்லது நாடுகடத்தப்படுவரெனவும் எச்சரிக்கைவிடப்பட்டது. அரசியல் நோக்கம் கொண்ட இச்சட்டம், மற்ற எல்லா மதத்தினருக்கும் எதிரானதாகத் தோன்றினாலும், குறிப்பாக கத்தோலிக்க மதத்தினருக்கு எதிராகவே கொண்டுவரப்பட்டது.

வண. பல்தேயுஸ் பாதிரியார் கத்தோலிக்கரை மனந்திருப்பி, கல்வினிஸ்ற் பதித மதத்தில் சேர்க்கும் பணியை மிகுந்த ஆர்வத்துடன் ஆரம்பித்தார். அவரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலப் பரப்பு முன்னர் நாற்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்டு, உறுதியான விசுவாசமும், மதப்பற்றும் உள்ள பெருந்தொகையான கத்தோலிக்கரைக் கொண்டிருந்தது, ஆனால் போர்த்துக்கேயரால் முன்பு கட்டப்பட்டிருந்த தேவாலயங்களும், அவற்றிற்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த பாடசாலைகளும், அவற்றோடு தொடர்புள்ள அனைத்துத் தாபனங்களும், சொத்துக்களும், வருவாய்களும் இப்பொழுது ஒல்லாந்த சபைக்குச் சொந்தமாக்கப் பட்டிருந்தன. எனவே பல்தேயுஸ் பாதிரியார் தம் மறைபரப்புப் பணியை ஆரம்பிப்பதற்குத் தேவையான சகல தாபன வசதிகளும், உள்கட்டமைப்புகளும் ஆயத்த நிலையிலிருந்தன. அதுமட்டுமல்ல, கிழக்கிந்திய கம்பெனியின் முழு ஆதரவும் அவருக்கிருந்தது. எனவே மிகுந்த ஆர்வத்துடன் தன் மறைபரப்புப்பணியை ஆரம்பித்த அவர், தம் மறைபோதக பணியில் பொதுவாக போர்த்துக்கேயரின் பணிமுறைகளையே பின்பற்றினார். அவருடைய பொறுப்பிலே 24 கிறிஸதவ சமூகங்கள் இருந்தன. அங்கிருந்த பாடசாலைகளும், அவற்றிற்கு அருகிலிருந்த தேவாலயங்களுமே அவர் மறைப்பணியின் மையமாக அமைந்தன. ஆண், பெண் மாணவர்கள் அனைவரும், பாடசாலைகளுக்கு சமூகமளிக்கக் கட்டளையிடப்பட்டார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கிரமமாகப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கும்படி

கேட்கப்பட்டார்கள். பெற்றோர்களும், வளர்ந்தவர்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயத்துக்கு வரவழைக்கப்பட்டார்கள். ஆரம்ப பாடசாலைகளில் ஆசிரியர்களால் முக்கியமாக மறைக் கல்வியே அளிக்கப்பட்டது. ஆசிரியர்கள் என்ன படிப்பிக்க வேண்டுமென்று பாதிரியார் சொல்லிக் கொடுத்தார். ஆலயங்களில் பல்தேயுஸ் போதகரினால் வழிபாடுகளும், மறைப் போதகமும் நடத்தப்பட்டன, அவர் எழுதிக் கொடுத்த பிரசங்கங்களை ஆலயங்களில் பாடசாலை ஆசிரியரகள் தமிழில் வாசித்தனர்.

முதலில் பல்தேயுஸ் பாதிரியார் மக்களுக்குத் தெரிந்த மொழியில் போதிப்பதற்கு, தமிழ் மொழியையும், மக்கள் பரவலாகப் பேசிய போர்த்துக்கேய மொழியையும் கற்றுக்கொண்டார். "நற்செய்தியைப் போதிப்பதற்குச் சிறந்த பயனுள்ள வழி மக்களுக்கு எம் மொழியைக் கற்பிப்பதைவிட, நாம் அவர்களின் மொழியைக் கற்று அறிவதே" என்பதுதான் அவரது கொள்கை. எல்லா மக்களும் பேசும் மொழியை ஒருவர் கற்பது இலகுவென்பது அவரது கருத்து. ஆனால் அவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளாத அரச அதிகாரிகள், மக்கள் ஒல்லாந்த மொழியைக் கற்கவேண்டுமென வலியுறுத்தினர். அவரது பணியின் ஆரம்ப காலத்தில் அவரது பணித்தளம் மிகவும் பரந்திருந்ததாலும், போதகர்களின் தொகை மிகக் குறைவாயிருந்ததாலும். அவர் தமிழிலும், போர்த்துக்கேயத்திலும் மறைபரப்புதலுக்கு உதவியான பல நூல்களை எழுதி, அச்சிட்டு, வெளியிட்டு, அவற்றைப் பாடசாலை ஆசிரியர்களுக்குக் கொடுத்து உதவிசெய்தார். இவற்றில் முக்கியமானது "எம் மதத்தின் முக்கிய கட்டளைகள்" என்ற மறைக் கல்வி நூலாகும். இன்னும் பல நூல்களையும் போர்த்துக்கேயத்தில் எழுதி, தமிழில் மொழி பெயர்ப்பித்தார். அக்காலத்தில் அவருக்கு உதவியாக ஐரோப்பிய பணியாளர்கள் எவரும் இருக்கவில்லை. 1658ம் ஆண்டு தொடக்கம் 1661ம் ஆண்டு வரை, முன்னர் நாற்பது கத்தோலிக்க குருக்கள் பணியாற்றிய நிலப்பரப்பில், அவர் தட்டந்தனிய பணியாற்ற வேண்டியிருந்தது. பின்னர் அவருக்கு யுவான் அ பிறில், யுவான் டொங்கர் என்ற இருவரின் உதவி கிடைத்தது. அவர்கள் தேவாலயங்களை அடிக்கடி தரிசித்து, சில நாட்களில் அவர்கள் மூன்று மறைப் போதகங்கள் ஆற்றவேண்டியிருந்தது. ஞாயிறுதோறும் ஆலயங்களில் நடைபெற்ற வழிபாட்டின்போது அதிகமாக பாடசாலை ஆசிரியர்களே

பாதிரியாரால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிரசங்கங்களை வாசித்தனர். அதற்கென ஒவ்வொரு ஆலயத்திற்கும் சில பிரசங்கங்கள் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மறைக் கல்வி அளிப்பதற்கு கேள்வி-பதில் முறையையே கையாண்டனர். மறைக்கல்வி கற்பிப்பதற்கு பாடசாலை ஆசிரியர்களின் உதவி மிக அவசியமாகவிருந்தது. எனவே மறைக் கல்வி கற்பிக்கக் கூடிய சுதேச ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களை மறையாசிரியர்களாகப் (Catechists) பயிற்றுவித்தார். அவர்களைப் பயிற்றுவிக்கவென ஒரு குருமடமும் யாழ்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. காலப்போக்கில் அவர்களிடமே மறைக்கல்வி அளிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மறைப் போதகர்கள் ஆண்டுக்கொருமுறை அப் பாடசாலைகளைத் தரிசித்து, மாணவர்கள் மறையறிவில் அடைந்துள்ள முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தனர். அவ்வேளையில்தான் பிள்ளைகளுக்குத் திருமுழுக்கு அளிக்கப்பட்டு, அவர்கள் சபையில் சேர்க்கப்பட்டனர். மக்களுடைய பிறப்பு, திருமுழுக்கு, திருமணம் என்பனவும் தோம்புகளில் பதிவுசெய்யப்பட்டன.

பல்தேயுஸ் பாதிரியாரின் மறை பரப்புப் பணி பெரும்பாலும் வெற்றியாய் அமைந்தது. இதற்கு அவருடைய தோம்புப் பதிவுகள் சான்று பகருகின்றன. அவருடைய பணியின் முடிவில் யாழ்ப்பாணத்திலிருந்த 120,000 பேர்களில் 100,000 பேர் கல்வினிஸ்ற் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். பாடசாலைகளில் 18,000 க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி பயின்றார்கள். அவருடைய காலத்தில் அவர் ஒரு சிறந்த சித்திபெற்ற போதகராக யாவராலும் கருதப்பட்டார். அவருடைய சித்திகரமான பணியைப் பற்றிக் கேள்விப்பட்ட ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் கவனரும், தலைவர்களும் அவரைப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். அவருக்கு அவருடைய பணியில் வேண்டிய சகல ஒத்துழைப்புக்களையும் கொடுத்துதவுமாறு, இலங்கையிலுள்ள தங்கள் அதிகாரிகளைப் பணித்திருக்கிறார்கள்.

இத்தனை கஷ்டங்கள் மத்தியில் பல்தேயுஸ் பாதிரியார் மிக ஆர்வத்துடன் சிறந்த மறை பரப்புப் பணி ஆற்றினாலும், மனந்திரும்பியவர்கள் நீண்ட காலத்துக்கு அவ் விசுவாசத்தில் நிலைத்திருக்கவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. கல்வினிஸ்ற் மதம்

இயல்பிலேயே கீழைத் தேச மக்களுக்கு ஒவ்வாததாகவிருந்தது. அது கத்தோலிக்க மதத்தைப்போன்று மக்களை மதம் மாற்றத் தேடும் ஒரு மதமல்ல. வேதாகமத்தையே மையமாகக் கொண்டு, அதிலேயே முற்றுமுழுவதும் தங்கியிருக்கும் அம் மதம், மக்களிடத்தில் ஓரளவு கல்வி அறிவை, விளக்கத்தை எதிர்பார்த்து நிற்கிறது. அதற்குரிய கல்வி அறிவும், விளங்கும் ஆற்றலும் அம் மக்களில் காணப்படவில்லை. மேலும் வெளித் தோற்றத்தில் மிகக் கடுமையானதாகத் தோன்றும் கல்வினிஸ்ற் மதத்தில், கீழைத் தேச மக்களைக் கவரும் சடங்குகளோ, அழகான ஆடம்பரமான வழிபாடுகளோ, திருவிழாக்களோ, திருச் சுரூவப் பவனிகளோ, சங்கீதங்களோ இருக்கவில்லை. ஆனால் கத்தோலிக்க மத வழிபாடுகள் இந்து, பௌத்த மத வழிபாடுகளையும் பழக்க-வழக்கங்களையும் தழுவி அமைக்கப் பட்டிருந்ததினால், மக்கள் ஏராளமாக அதற்குக் கவரப்பட்டனர்.

மேலும், அரசுக்கும், அதாவது ஒல்லாந்த கிழக்கிந்திய கொம்பெனிக்கும், கல்வினிஸ்ற் சபைக்கும் இடையே அடிக்கடி ஏற்பட்ட முரண்பாடுகளும் பல்தேயுஸ் பாதிரியாரின் மறை பரப்புப் பணிக்குத் தடையாக அமைந்தன. தனது அமைப்பில் சர்வதிகார, ஏகாதிபத்திய போக்குடைய ஒல்லாந்த கொம்பெனி, தனது அரச அதிகாரத்திலிருந்து விடுபட்டு, சுதந்திரமாகச் செயல்பட்டு வளர, கல்வினிஸ்ற் சபையை அனுமதிக்கவில்லை. எப்பொழுது சபை சில ஒழுங்குமுறைகளை ஏற்படுத்தி, சற்று சுதந்திரமாகச் செயல்பட முனைந்ததோ, அவ்வேளைகளில் கம்பெனி அதற்கு அனுமதி மறுத்துத் தடைசெய்தது. உதாரணத்திற்கு, மன்னார், மாதோட்டம், யாழ்ப்பாணச் சபைகளை ஒன்றிணைத்து, ஓர் அமைப்பின் கீழ் கொணர சபையினர் முயற்சியெடுத்தபோது, அதற்குத் தடை விதித்தனர். மறைப்போதகர்கள் தமக்குக் கீழ் பணிபுரியும், தாமே கூலி கொடுத்து வைத்திருக்கும் வேலையாட்கள் என்பதே அவர்களுடைய கருத்தாகவிருந்தது. அது ஒரு வர்த்தகக் கம்பெனியாகவிருந்ததால், மறைப்பணியல்ல, ஆதாயமே அவர்கள் நோக்கம். குறைந்த செலவில் கூடிய வருமானம் என்ற கொள்கையுடன் செயல் பட்டனர். மறைபரப்புப் பணியில் முக்கிய இடம் வகித்த பாடசாலைகளின் நிர்வாகத்தில் கூட சபைக்கு, மறைப் போதகருக்கு சுதந்திரமளிக்க விரும்பவில்லை. பாடசாலை ஆசிரியர்-களை நியமிப்பதில், விலக்குவதில், பாடசாலைகளைத் தரிசித்து.

பரிசோதிப்பது, மேற்பார்வை செய்வதில் கூட மறைப் போதகர்களுக்கு உரிமையிருக்கவில்லை. கொம்பனியினால் நியமிக்கப்பட்ட தகுதியற்ற அரச அதிகாரிகளினாலேயே அவை செய்யப்பட்டன.

பள்ளிக் கூடங்கள் அரச சொத்துக்கள். அவை அரசின் பொறுப்பிலேயே இருக்கவேண்டும் என்றனர். ஆனால் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க மறுத்தனர். அவர்கள் தம் மாணவரிடமிருந்து அறவிடும் தெண்டங்களிலிருந்தும், தோம்பு பதிவு செய்வதால் கிடைக்கும் வருவாயிலிருந்தும், தம் சம்பளத்தை பெற்றுக் கொள்ள வேண்டும், மறைபோதகர்களின் பற்றாக்குறையிருந்தும், ஐரோப்பாவிலிருந்து தேர்ச்சிபெற்ற மறை போதகர்களை வரவழைத்தால், அவர்களுக்கு தாம் கூடிய சம்பளம் கொடுக்க வேண்டுமென்பதால், மறைப் போதகர்களை வரவழைக்கத் தயங்கினர். இலங்கையெங்கும் மூன்று அல்லது நான்கு ஐரோப்பிய மறைபோதகரே பணிபுரிந்தனர். ஆகவே தரம் குறைந்த சுதேச உதவியாளர், மறையாசிரியர்களைக் கொண்டே பாடசாலைகளை, மறைப் போதகத்தை நடத்த வேண்டியிருந்தது. பல்தேயுஸ் பாதிரியாரால் செய்யப்பட்ட சிபாரிசுகள், உதாரணமாக, எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வி, எல்லோருக்கும் கட்டாய ஞாயிறு வழிபாடு, பாழடைந்திருந்த பாடசாலைகள், ஆலயங்களைத் திருத்துதல், ஒவ்வொரு பங்கிலுமுள்ள ஒரு பாடசாலைக்கு அரச செலவில் ஒரு மறையாசிரியர் நியமிக்கப்படல், மாணவர்களை ஊக்குவிக்க பரிசில் வழங்குதல் போன்ற சிபாரிசுகளெல்லாம், அரசுக்கு அதிக செலவைக் கொணரும் என்ற காரணத்திற்காக கொம்பெனியினால் நிராகரிக்கப்பட்டன. இவ்வாறு அரசுக்கும் கல்வினிஸ்ற் சபைக்குமிடையே நிலவிய முரண்பாடுகள், முறுகல் நிலை மறைப்பணிக்கு உகந்தாகவிருக்கவில்லை. மாறாக அவை மறைபரப்பாளர்களின் மதப் பற்றையும், மறைபரப்பும் ஆர்வத்தையும் மழுங்கடிக்கச் செய்து, மனந்தளர்ந்தவர்களாய் அவர்களை நாட்டைவிட்டு வெளியேறச் செய்தன.

வண. பல்தேயுஸ் பாதிரியார் 1658ம் ஆண்டில் இலங்கையில் தம் மறைப்பணியை ஆரம்பித்த காலம் தொட்டு மறைப்போதகர்களுக்கு தம் பணியை தாமே ஒழுங்கு செய்து நடத்துவதற்கு உரிய சுதந்திரம் இருக்கவேண்டுமென்று வாதாடி வந்தார். இறுதியில் பாடசாலைப் பரிசோதனைபற்றி அவருக்கும் அரசுக்கும் இடையே ஏற்பட்ட தகராறே,

அவர் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்குக் காரணமாக அமைந்தது. 1665ம் ஆண்டு, அரசு பாடசாலைகளைத் தரிசித்து பரிசோதிபபதற்கு மறை போதகருக்கல்ல, அரச அதிகாரிகளுக்கே அதிகாரம் அளித்து அறிக்கையொன்றை வெளியிட்டது. பல்தேயுஸ் பாதிரியார் அதை எதிர்த்து நின்று, அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார். அத்தகைய அவமானத்துக்கு உட்படுவதிலும் பார்க்க, தம் பணியையும், நாட்டையும் விட்டு வெளியேறுவதே உத்தமமெனத் தீர்மானித்தார். அவருடைய அரசுடனான ஒப்பந்த காலமும் முடைவடைந்தது. ஆகவே 1665ம் ஆண்டு முடிவில், தான் பணியாற்றிய பங்கு கோவில்களுக்குச் சென்று, மக்களுக்குப் பிரியாவிடை கூறிய பின், தனது உதவியாளரான வண. யுவான் அ பிறேயில் பாதிரியாருடன் ஐரோப்பாவிற்குப் பயணமானார்.

## 8.1.3.5. ஒல்லாந்தரின் காலத்தில் கல்வி அபிவிருத்தி

போர்த்துக்கேயரைப் போன்று ஒல்லாந்தரின் மறைபோதகப் பணியும் பொதுவாக பாடசாலைகளை நடுநிலையமாகக் கொண்டே இடம்பெற்றன. "மறையைப் பிரசாரப்படுத்தும் அடித்தளம் பள்ளிக்கூடமாகும்" என்பதே அவர்களின் கொள்கை. எனினும் போர்தக்கேயரைவிட ஒல்லாந்தரின் கல்விச் செயற்பாடுகள் முறையானவையாக, ஒழுங்கமைக்கப்பட்டவையாக இருந்தன. அனைத்து பங்குத் தேவாலயங்களுக்கு அருகே பாடசாலைகள் கட்டப்பட்டன. சிறுவர்களும், சிறுமிகளும் அப் பாடசாலைகளுக்கு ஒழுங்காக வரும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர். பெற்றோர்களும் தம் பிள்ளைகளை கிரமமாகப் பாடசாலைக்கு அனுப்பிவைக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். வராத பிள்ளைகளின் பெயர்கள் குறிக்கப்பட்டு, தண்டனைகள் வழங்கப்பட்டன. 15 வயது வரை கல்வி கட்டாயமாக்கப்பட்டது. கல்வி முடிவடைந்ததும், பாடசாலையிலேயே பரீட்சை நடாத்தப்பட்டு, "லாகிரிடன்" எனும் சான்றிதழ் வழங்கப்பட்டது. அத்தோடு நிறுத்திவிடாமல், 19 வயது வரையும் தொடர் ஒழுங்கு முறை தயாரிக்கப்பட்டது. மிகத் திறமையான மாணவர்களுக்கு உயர் கல்விக்கும், ஆசிரியர் பயிற்சிக்கும், சில வேளைகளில் உயர் கல்விக்காக வெளிநாடு செல்வதற்கும் வசதிகள் அளிக்கப்பட்டன. எனினும் பொதுவாகப் பெற்றோர் தம் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கும், பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காகப் போவதற்கும் ஊக்கம் எடுக்கவில்லை.

ஒல்லாந்தர் காலத்தில கல்வித்துறை முற்றுமுழுவதும் ஒல்லாந்த அரசின் பொறுப்பிலேயே இருந்தது. எல்லாப் செலவுகளையும் ஏற்று, ஆசிரியர்களை நியமிப்பது, பயிற்சியளிப்பது, நிர்வாகம், பரீட்சகர்கள் வழியாக பாடசாலைப் பரீட்சைகளை நடத்துதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. இச் செயற்பாடுகள் அனைத்தும் "ஸ்கொலாகல் கொமிஷம்" என்ற நிறுவனத்தின் வழியாக நிர்வகிக்கப்பட்டது.

போர்த்துக்கேயர் மரபு வழியிலான கத்தோலிக்க மறையைப் போதித்தனர். ஆனால் ஒல்லாந்தரோ, யோண் கல்வின் என்பவரின் புரட்டஸ்தாந்து மதக் கொள்கைகளின் அடிப்படையில், அம் மதத்தைப் போதித்தனர். பாடசாலைகளில் மதத்தைப் படிப்பிக்கப் போதிய போதகர்கள் இல்லாமையாலும், அவர்களில் அநேகர் மக்கள் பேசும் மொழியை அறியாமல் இருந்ததாலும், அப் பணி பாடசாலை ஆசிரியர்களின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டன. மறை ஆசிரியர்கள் (Catechists) நியமிக்கப்பட்டு, எல்லாப் பாடசாலைகளிலும் சமயம் கற்பிப்பது அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தேசிய குருக்களைப் பயிற்றுவிப்பதற்காக குருமடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மறைப் போதகர்கள் அரசாங்க அலுவலர்கள் போலச் செயற்பட்டனர். ஆண்டுக்கு ஒருமுறை பாடசாலைகளைத் தரிசித்து, மாணவர்களுடைய மறை அறிவின் வளர்ச்சியைப் பரிசோதித்தனர். அச் சந்தர்ப்பத்தில்தான் அவர்கள் மக்களுக்குத் திருமுழுக்கு அளித்தனர். அவர்கள் பெரும்பாலும் மாணவர்களுக்கு மறை அறிவு ஊட்ட பாடசாலை ஆசியர்களிலேயே தங்கியிருந்தனர். மறை ஆசிரியர்களின் பற்றாக் குறையைப் போக்க, முதலில் யாழ்ப்பணத்திலும், பின்பு கொழும்பிலும் ஒன்றாக இரு குருமடங்கள் ஆரம்பிக்கப்பட்டு, தகுதிபெற்ற இலங்கையர்கள் பயிற்றப்பட்டனர். அவர்களில் திறமையானோரில் சிலர் இறையியலில் மேற்படிப்புக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறு பாடசாலைகளுக்கு வேண்டிய ஆசிரியர்களும், மறைப் போதகர்களும், அனாதை மடங்களுக்குத் தேவையான மத்துறோனாக்களும் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## 8.1.3.6. ஒல்லாந்தரின் ஆட்சியினால் கிட்டிய நன்மைகள்

ஒல்லாந்தரின் ஆட்சி இலங்கையில் ஏறக்குறைய நூறு ஆண்டுகள் (1657-1796) நீடித்தன. ஒல்லாந்த அரசு அல்ல, ஒல்லாந்த மக்களும் அல்ல, ஒல்லாந்த கிழக்கிந்திய கொம்பனி (பலர் பங்கெடுத்த ஒரு வர்த்தகத் தாபனம்) ஒன்றே இலங்கையில் ஆட்சி செலுத்தியதென்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். இது ஒரு வர்த்தகக் கொம்பனி. அது கீழைத் தேசங்களின் வர்த்தக ஏகபோக உரிமையைத் தேடிக் கைப்பற்றவே இலங்கைக்கு வந்தது. ஆகவே அவர்களின் முதல் நோக்கம் இலங்கை மக்களினதோ, ஒல்லாந்த மக்களினதோ, மதத்தினதோ நன்மையல்ல, மாறாக அவர்களின் சொந்த வியாபாரம், ஆதாயமே. அதன் அடிப்படையிலேயே, ஒரு பெருந் தோட்டச் சொந்தக்காரன் தன் தோட்டத்தை நிர்வகிப்பது போல், ஒல்லாந்தரின் கொம்பனியும் இலங்கையை நிர்வகித்து, நாட்டின் மூலதனத்தை, இயற்கை வளத்தை வளம்பெறச்செய்யவே, மக்களின் நலன்களில் கர்சனை எடுத்தனர். சட்டங்கள், அரசியல், மதம், கல்வி போன்ற அனைத்தும் கொம்பனியின் வியாபார ஆதாயத்துக்குக் கீழ்பட்டன-வாகவே, அவற்றிற்கு உகந்தனவாகவே அமைந்தன. மக்களோடு ஒல்லாந்தர் நடந்துகொண்ட, தொடர்பு கொண்ட விதமும் அதன் அடிப்-படையிலேயே இடம்பெற்றது. மக்கள் மத்தியில் சாதி அடிப்படையில். நில முதலாளி, தொழிலாளி என்ற முறையில் இருந்து வந்த பிரிவுகளைத் தமக்குச் சாதமாகப் பயன்படுத்தி, மக்களிடமிருந்து ஆகக் கூடிய வேலையையும், கொடுப்பனவுகளையும் பெற்றனர். மக்கள் குழப்பம் செய்தால், கொம்பனிக்கு இழப்பு ஏற்படாமலிருப்பதற்காக பொதுவாக விட்டுக் கொடுத்தனர். அவர்கள் இலங்கையர்களை சம்பளம் பெறும் நிர்வாக வேலைகளில் ஒருபொழுதும் ஈடுபடுத்தவில்லை. மாறாக பணம் வசூலித்தல் போன்ற அதற்கு கீழ்பட்ட வேலைகளிலேயே ஈடுபடுத்தினர்.

இருந்தும் அக் கொம்பனியின் சட்டதிட்டங்களினால் அரசரும், மக்களும், நாடும் பெரிதும் நன்மை பெற்றனர். அக்காலத்திலிருந்த ஓரே அரசான கண்டி அரசு எவ்விதமான அந்நிய படையெடுப்போ, குழப்பமோ இன்றி, அமைதியாகவிருந்தது, மக்கள் ஒல்லாந்தர்

ஏற்படுத்திய பல கைத்தொழிற் சாலைகள், விவசாயப் பண்ணைகளில் உழைத்து, தம் வருவாயைப் பெருப்பிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒல்லாந்தரே முதல் முதல் அச்சுப் பதிவு நுட்பத்தை, அச்சடிக்கும் இயந்திரத்தை இலங்கையில் அறிமுகம் செய்து வைத்தவர்களாவர். தமிழ் சிங்கள் எழுத்துக்களை வார்த்து, தமிழிலும், சிங்களத்திலும், போர்த்துக்கேயத்திலும் பல பிரயோசனமுள்ள சமய நூல்களை அச்சடித்து வெளியிட்டனர். வேதாகமத்திலிருந்து நற்செய்திகள் போன்ற சிற்சில பகுதிகளையும், வேறு வேத நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு, இலவசமாக மக்களுக்கு அளித்தனர். அவர்கள் வழியாக புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதக் கொள்கைகளும், கருத்துக்களும் மக்களிடையே பரப்பப்பட்டன. சிங்கள இலக்கண நூல், அகராதி போன்றவற்றையும் வெளியிட்டனர். கல்வித்துறையும் முன்னேற்றம் கண்டது. ஒவ்வொரு ஆலயத்துக்கும் அருகில் ஒரு பாடசாலை கட்டப்பட்டு, பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காக வரும்படி வலியுறுத்தப்பட்டனர். பெற்றோர்களும் தம் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்குக் கிரமமாக அனுப்பிவைக்கும்படி பணிக்கப்பட்டனர். பாடசாலையிலையே மாணவர்களுக்கு மறைக் கல்வி அளிக்கப்பட்டது. ஆண்டு தோறும் மறைப் போதகர்கள் பாடசாலைகளைத் தரிசித்து, மாணவர்களின் மறை அறிவின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தனர். அங்கு தான் திருமுழுக்குக்கொடுத்து, ஒல்லாந்த மதத்தில் சேர்க்கப்பட்டனர். வளர்ந்தவர்கள் ஞாயிறு தோறும் ஆலயங்களுக்கு அழைக்கப்பட்டு, மறைகல்வி ஊட்டப்பட்டனர். அங்குதான் அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது.

போர்த்துக்கேயர் திருமணம் தொடர்பாக ஏற்படுத்திய சட்ட திட்டங்களையும், கருத்துக்களையும், தோம்புப் பதிவு முறைகளையும் ஒல்லாந்தர் தொடர்ந்து அமுல் செய்து, மேலெடுத்துச் சென்றனர். நிர்வாகச் செயற்பாடுகள் நல்ல முறையில் ஒழுங்கு செய்யப்பட்டு, கச்சேரிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் வழியாக பிரசைகளின் பிறப்பு, திருமணம், இறப்பு, எனபவை பதியப்படுவது ஆரம்பிக்கப்பட்டது. மறைப் போதகர்களையும், மறை ஆசிரியர்களையும், பாடசாலை ஆசிரியர்க-ளையும் பயிற்சியளித்து உருவாக்க யாழ்ப்பாணத்தில் ஒன்றும், கொழும்பில் ஒன்றுமாக இரு குருமடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தொழு நோயாளர்களை வைத்துப் பராமரிக்க விடுதிகளும், வைத்தியசாலைக-

ளும் ஆரம்பிக்கப்பட்டன. அங்கு பணிபுரியத் தேவையான தாதிகளும், மத்துறோனாக்களும் பயிற்றப்பட்டனர். ஒல்லாந்தரே முதல்முதல் இலங்கையில உரோமைய-ஒல்லாந்த சட்டங்களை அறிமுகம் செய்து வைத்தனரென்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் வழியாகத்தான் நீதிமன்றத்தினால் வழக்குகளை விசாரித்தல், சட்டப்படி தண்டனை வழங்குதல் என்பன ஆரம்பிக்கப்பட்டன. அதனால் மக்களுக்கு நல்ல நீதி கிட்டியது.

விவசாய மூலதனங்களையும், கைத் தொழில்களையும் அபிவிருத்தி செய்ததே ஒல்லாந்தர் நம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஆற்றிய பெரும் பணிகளாகும். நாட்டின் முக்கிய நகரங்கள் வாகனங்கள் செலுத்தக்கூடிய பல தெருக்களினாலும், வீதிகளினாலும் இணைக்கப்பட்டன. சிறிய ஆறுகள் பாலங்களாலும், பெரியவை மக்கள் போக்குவரத்துச் செய்யக்கூடிய வள்ளச் சேவைகளினாலும் பிணைக்கப்பட்டன. கால்வாய்கள் குறைந்த செலவில் இலகுவாகப் பயணம் செய்ய வழிவகுத்தன. வரண்ட பிரதேசங்கள், நீர் பாச்சப்பட்டு, வளமாக்கப்பட்டன. கொம்பனி புதிய விவசாய உற்பத்திப் பொருட்களை மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது. பழைய உற்பத்திப் பொருட்களை பயிர்செய்ய நல்ல புதிய வசதிகளைச் செய்து கொடுத்தது. இவ்வாறு கோப்பி, கராம்பு, கறுவா, ஏலம், தென்னை போன்றவற்றின் உற்பத்தியை ஊக்குவித்தது மட்டுமல்ல, புடவை நெய்தல், அவற்றிற்கு சாயம் போடல் போன்றவற்றை ஆரம்பித்து வளர்த்தது. உற்பத்தியான பொருட்களை கொம்பனியே கொள்வனவு செய்து, அவற்றைச் சந்தைப் படுத்தி, தனது வருவாயைக் பெருக்கியதுமல்லாமல், மக்களையும் தம் கைத் தொழிலிலும், வர்த்தகத்திலும் ஆர்வத்துடன் பங்கெடுக்கச் செய்தது. நாட்டின் பொருளாதாரமும் வளர்ந்தது.

மேலும் ஒல்லாந்தரின் செல்வாக்கை நாம் இன்று பேசும் சிங்கள தமிழ் மொழிகளிலும் காண்கிறோம். இன்று நாம் பேசும்போது எத்தனையோ ஒல்லாந்த சொற்களைப் பயன்படுத்துகிறோம். நாம் காணும் ஒல்லாந்தரின் கட்டிடங்களும், கோட்டைகளும், ஆலயங்களும், ஒல்லாந்த சட்ட முறைகளும், அவர்களின் சந்ததியினர் வகிக்கும் பெரிய பதவிகளும் அவர்களின் செல்வாக்கை நமக்கு

உணர்த்துகின்றன. இதற்கு நாம் ஆங்கிலேயரையே பாராட்ட வேண்டும். ஏனெனில் ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்தபொழுது, அவர்களுக்கு முன் இங்கிருந்த போர்த்துக்கேயரை நினைவுபடுத்துக் கூடிய அவர்களின் அனைத்துக் கட்டிடங்கள், ஆலயங்கள், கோட்டைகள், மத குருக்கள், அவர்களின் மொழியைத் தானும் அழித்தொழித்து, நிர்மூலமாக்கினர். ஆனால் அவர்களுக்குப் பின்வந்த ஆங்கிலேயர் ஒல்லாந்தர் விட்டுச் சென்ற ஒன்றையும் அழிக்காமல், அனைத்தையும் பாதுகாத்து வைத்தனரென்பது குறிப்பிடத் தக்கது.

## 8.1.3.7. புனித யோசப் வாஸ் அடிகளாரது இலங்கை வருகை

ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றிய பின், போர்த்துக்கேயரையும், அவர்களின் படைகளையும், மறைபரப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 120க்கு மேற்பட்ட போர்த்துக்கேய குருக்களையும் நாட்டிலிருந்து விரட்டிவிட்டனர். ஒரு சில குருக்கள் கண்டி அரசில் தஞ்சம் புகுந்தனர். ஓரிரண்டு சுதேச குருக்கள் ஒழிந்து இருந்ததாகக் கூறப்படினும், அவர்களுக்கு என்ன நேர்ந்ததென எவரும் அறியார். ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைக் கத்தோலிக்கர்கள் தங்களுக்குத் திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்கோ, திருவருட்சாதனங்களை நிறைவேற்றி வைப்பதற்கோ, அவர்களை விசுவாசத்தில் ஊக்குவித்து வழிநடத்தவோ குருக்கள் எவருமின்றி, ஆயனில்லா ஆடுகள்போல் மிகவும் கஷ்டப்பட்டனர். பாப்புவும், மறைபரப்புப் பணிச் சபையும் ஒரு சில குருக்களையாவது இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்குத் தேவையான நுழைவுச் சீட்டை பெற ஒல்லாந்த அரசுடன் பல முறை, பல வழிகளில் முயற்சிகளெடுத்தும், அவை வெற்றியளிக்கவில்லை. போர்த்துக்கேய அரசரே இலங்கைத் திருச்சபையின் பாதுகாவலராக இருந்தாலும், அவ் அந்தஸ்துக்குரிய சிறப்புச் சலுகைகளை அனுபவித்தாரேயன்றி, இலங்கைக் கத்தோலிக்கருக்கு எவ்விதத்திலும் உதவ முன்வரவில்லை. இந்தியாவிலிருந்த அவர்களின் அரச, மதப் பிரதிநிதிகளும் அதில் அக்கரை எடுக்கவில்லை. இலங்கைத் திருச்சபைக்குப் பொறுப்பாயிருந்த கொச்சின் நகர ஆயர்தானும் விசவாசத்தை இழக்கும் ஆபத்திலிருந்த தனது மந்தைக்கு

உதவ முன்வரவில்லை. ஒல்லாந்தரின் வருகைக்கு முன் இலங்கையில் மறைப்பணிக்குப் பொறுப்பாயிருந்த துறவற சபைகளும் உதவிக்கு வர முடியாமலிருந்தனர். அவர்களின் சபைகள் இன்னமும் இந்தியர்களுக்கு மூடப்பட்டிருந்தன. இந்தியாவில் ஏராளமாகவிருந்த சுதேச மேற்றிராசனக் குருக்கள், தங்கள் நாட்டுக்கு வெளியே சென்று, மறைபரப்புப் பணியில் ஈடுபடக் கூடிய மனநிலையில் இருக்கவில்லை. அவர்களின் ஆயர்களும் இலங்கைக்குச் சென்று, அந்த ஆபத்தான சூழ்நிலையில் பணிபுரிய அவர்களை நிர்ப்பந்திக்க விரும்பவில்லை. ஒல்லாந்தர் கத்தோலிக்கருக்கு எதிராக ஏற்படுத்திய சட்டங்கள், இழைத்த துன்புறுத்தல்கள், விதித்த தெண்டங்கள் அனைத்தினதும் மத்தியில் தம் விசுவாசத்தில் உறுதியாயிருந்த கத்தோலிக்க மக்கள், காலம் செல்லச்செல்ல சற்றுத் தளரத் தொடங்கினர். இந் நிலையில் போர்த்துக்கேயரின் கத்தோலிக்க மதத்தை விரைவில் அழித்தொழித்து விடலாமென்று ஒல்லாந்தர் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தனர். ஆனால் இறைவனின் திட்டமோ வேறுவிதமாக அமைந்திருந்தது.

இறைவன் யாவராலும் கைவிடப்பட்டு அநாதைகளாயிருந்த இலங்கைக் கத்தோலிக்கருக்குப் பணிபுரிய தம் வாழ்கையை முற்றாக அர்ப்பணிக்கும் படியாக எளிமையான ஓர் இளம் இந்திய மேற்றிராசனக் குருவை ஏவினார். அவர்தான் நாம் "இலங்கையின் அப்போஸ்தலர்" என இன்று அன்போடு அழைக்கும் அருட்திரு யோசப் வாஸ் அடிகளார். இலங்கைக் கத்தோலிக்கருக்காக தனது வாழ்வையே அர்பணித்த, உன்னத மறைப்பணிக்காக தியாகம் செய்த கிறிஸ்தவ வீரர். இவர் 1651ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதி இந்தியாவின் கோவையிலிருந்த ஒரு உயர்ந்த கொன்கானி பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். அவர் தனது சிறுபராயத்திலிருந்தே கூர்மையான அறிவும், மிகுந்த தேவ பக்தியும் நிறைந்தவராக விளங்கினார். சிறுவனாகத் தம் ஆரம்ப கல்வியைப் பாடசாலையில் கற்றபின், தம் வாழ்வை இறைபணிக்கென முற்றாக அர்ப்பணிக்க விரும்பி, ஒரு குருவாகும் நோக்குடன், இளம் வயதில் கோவையிலிருந்த புனித தோமாஸ் அக்குவைனஸின் சாமிநாத குருமடத்தில் சேர்ந்து, தத்துவ, இறையியல் கல்விகளை மேற்கொண்டார். 1676இல் கோவை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த ஒரு மேற்றிராசனக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். முதல் ஐந்து ஆண்டுகளும் கோவையில் ஆன்மீகப் பணியாற்றியபின், 1681ம் ஆண்டில்

கோவைக்கு தெற்கேயிருந்த பகுதியான கன்னடத்துக்கு குருமுதல்வராக அனுப்பப்பட்டு, அங்கே மூன்று ஆண்டுகள் பணிபுரிந்தார். கன்னடம் அப்பொழுது இலங்கையிலிருந்த ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழிருந்தது. அங்கிருக்கும்பொழுது இலங்கையைத் தரிசித்த சில குருக்கள் மூலமாக அங்கு வாழும் பெருந் தொகையான கத்தோலிக்க மக்களின் குருக்களின் உதவியற்ற, பரிதாப நிலையைப்பற்றி அறிய வந்தார். கோவாவில் ஏராளமான ஐரோப்பிய, சுதேச குருக்களும் துறவிகளும் இருக்க, இலங்கை மக்களுக்கு ஆன்மீக பணிபுரிய ஒரு குருவும் இல்லாததையிட்டு மிகவும் மனக் குழப்பமடைந்து கவலைப்பட்டார். அங்கு சென்று குருக்களின்றித் தவிக்கும் அம் மக்கள் மத்தியில் பணிபுரியவேண்டும் என்ற ஆசை அவர் மனதில் உதித்தது. ஆனால் வேத கலாபனை நடந்து கொண்டிருக்கும் இலங்கைக்குள் எப்படி நுழைவது? இரகசியமாக இலங்கைக்குள் நுழையும் வழிமுறைகளை மற்றவர்களிடமிருந்து கேட்டறிந்து கொண்டார்.

கொழும்பு அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து கன்னடத்துக்கு வரும் ஒல்லாந்த வர்த்தகர்களுக்கு தான் ஒரு அடிமையாக விற்கப்பட்டால், தான் அவர்களுடன் இலங்கைக்குச் சென்று, இரகசியமாக அம் மக்களுக்குப் பணிபுரியலாம் என்ற எண்ணம் அவருக்கு வந்தது. அவரோடு கன்னடத்தில் பணிபுரிந்த மற்றொரு குருவாகிய அருட்திரு நிக்கொலா டி கம்போவாவிடம் தன்னை ஒரு அடிமையாக ஒல்லாந்த வியாபாரிகளுக்கு விற்கும்படியாகக் கேட்டார். ஆனால் அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. எனவே கவலைகொண்ட யோசப் வாஸ் அடிகளார், தம் குருமுதலவர் பொறுப்பை அக் குருவிடம் ஒப்படைத்துவிட்டு, கோவைக்குத் திரும்பினார். அங்கு தம்முடன் இலங்கைக்குச் சென்று பணிபுரிய சில குருக்களைத் தேடியும், அவர் அதில் வெற்றி பெறவில்லை. கோவையிலிருந்த ஐரோப்பிய துறவற சபைகள் தங்கள் சபைகளில் சுதேச மக்களை அங்கத்தவர்களாக ஏற்க மறுத்தனர். எனவே சில சுதேச குருக்கள் தாம் ஒன்று கூடி, துறவற வார்த்தைப்பாடுகளில்லாத குழுவாக வாழ்ந்து, தமக்குள் ஒரு சபையை ஆரம்பிக்க முயன்று கொண்டிருந்தனர். இப்படி வேறு இரு குருக்களுடன் ஒரு குழுவை அமைக்க முயன்ற ஒரு வயது முதிர்ந்த குருவான அருட்திரு பாஸ்கால் டா கொஸ்ரா ஜெரெமியாஸ் அடிகளாருடன் யோசப் வாஸ் அடிகளாரும் 1685ம் ஆண்டு புரட்டாதி மாதம்

25ம் திகதி இணைந்து கொண்டார். இவ்வாறு ஒரு குழுவாழ்வுச் சபையில் சேர்வது இலங்கைக்குச் சென்று பணிபுரிய வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்த யோசப் வாஸ் அடிகளாரின் இலட்சியம் நிறைவேறுவதற்கு ஒரு தடைபோல் தோன்றினாலும், இறைவனின் திட்டப்படி அக் குழு யோசப் வாஸ் அடிகளார் இலங்கையில் ஆரம்பிக்கவிருந்த ஆன்மீகப் பணியை அவருக்குப் பின்னர் தொடர்ந்தாற்றப் பெரும் உதவியாக அமையும். ஏனெனில் இலங்கையில் தம்மைத் தொடர்ந்து பணிபுரிய அந்நாட்டுப் பழக்க வழக்கங்கள், மொழிகள், அரசியல் நிலைக்குப் பழக்கப்பட்ட குருக்கள் தொடர்ச்சியாக அங்கு அனுப்பப்பட வேண்டியதின் அவசியத்தை அவர் நன்கு உணர்ந்திருந்தார்.

வெகு விரைவில் அச் சபையின் சிரேஷ்டராகத் தேர்ந்தெடுக்கப்-பட்ட யோசப் வாஸ் அடிகளார், குழுவினரின் அனுமதியுடன், அக் குழுவிற்கு "புனித பிலிப்பு நேரியாரின் தியான சம்பிரதாயச் சபை" எனப் பெயரிட்டார். அவரே அச்சபையின் உண்மையான தாபகராகக் கருதப்பட்டார். இக் குழுவே ஆசியாவில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஒரே தியான சம்பிரதாயச் சபையென்பதும், அச் சபையே அடுத்த 150 ஆண்டுகளுக்கு இலங்கையில் பணிபுரிய குருக்களைத் தொடர்ச்சியாக அனுப்புமென்பதும் குறிப்பிடத் தக்கது. யோசப் வாஸ் அடிகளார் அக் குழு வாழ்ந்து வந்த கட்டிடத்தைப் திருத்திக் கட்டி, குழு வாழ்வைச் சீரமைத்து, குழுவில் ஒழுங்கையும், அப்போஸ்தொலிக்க ஆர்வத்தையும், ஆன்மீக வாஞ்சையையும் உருவாக்கி வளர்த்தார். யோசப் வாஸ் அடிகளாரின் முன்மாதிரிகையான வாழ்க்கையும், அக்குழுவின் ஒழுங்கான அமைப்பும், இன்னும் பல குருக்களைக் கவர்ந்து, அவர்களும் அக் குழுவுடன் இணைய விரும்பினர். கிட்டத்தட்ட ஆறு மாதங்களாகத் தியான சம்பிரதாயச் சபையை ஒழுங்காக அமைத்தபின், அதன் சிரேஷ்டர் பொறுப்பை மீண்டும் அருட்திரு பாஸ்கால் அடிகளாரிடம் ஒப்படைத்து விட்டு, 1686ம் ஆண்டின் முடிவில், யோசப் வாஸ் அடிகளார், கோவை பேராயரின் அதிகாரப் பத்திரத்துடன், சபையைச் சேர்ந்த அருட்திரு போல் டி சூசாவையும், சகோதரர் ஸ்டீவன் சீகுவைராவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு, இரகசியமாக இலங்கைக்குப் பயணமானார். அவர்கள் கன்னடத்துக்கு கால் நடையாகச் சென்று, கேரள நாட்டைக் கடந்து, தூத்துக்குடியை

அடைந்து, அங்கு சில காலம் தங்கினர். அக்காலத்தைப் பயன்படுத்தி, அடிகளார் தமிழ் மொழியைக் கற்றார். அப்போதுதான் தாங்கள் இலங்கைக்குப் போவதாக தன் பயணத் தோழர்களுக்கு தெரியப் படுத்தினார். அவர்களோ இலங்கையில் நிலவிய கலாபனைச் சூழ்நிலைக்குப் பயந்து, பயணத்தைத் தொடராமல், கோவைக்குத் திரும்பிச் சென்றனர். எனவே யோசப் வாஸ் அடிகளார், தன்னுடைய விசுவாசமுள்ள வேலைக்காரனான யோணைத் தம்முடன் அழைத்துக் கொண்டு, தம் இலங்கைப் பயணத்தைத் தொடர்ந்தார். இருவரும் கூலிக்காரராக, வெறும் மேலுடன், இடுப்பில் முழுங்கால் வரை ஒரு சிறிய வேட்டித் துண்டைக் கட்டி, மாறுவேடம் தரித்துக் கொண்டு, ஒரு சிறிய வள்ளத்தில் இலங்கைக்குப் பயணமாயினர். ஏனெனில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கத்தோலிக்க குருக்கள் கள்ளமாக வர எத்தனிப்பார்களென்று ஒல்லாந்த படைவீரர் கடலோரங்களில் இரவு பகலாகக் காவல் செய்து வந்தனர்.

வழமையாக மூன்று அல்லது நான்கு நாட்கள் எடுக்கின்ற கடல் பயணம், இருபது நாட்கள் எடுத்தன. கடலில் ஒரு புயலில் அகப்பட்டுக் கொண்ட அச் சிறிய வள்ளம், அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு, இறுதியாக மறை சாட்சிகளின் பூமியான மன்னாரில் கரை ஒதுங்கியது. இவ்வாறு அவர்கள் யாழ்ப்பாண கடற்கரையில் ரோந்து செய்யும் ஒல்லாந்த காவல் படையினரின் கண்களிலிருந்து இறைபராமரிப்பினால் தப்பித்துக் கொண்டனர். இனி அவர்கள் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்பவர்கள் போலல்லாமல், மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் செல்பவர்கள்போல் தம் பயணத்தை தரை மார்க்கமாக மேற்கொள்ள முடியும். மன்னாரில் சில நாட்கள் நோய்வாய்ப் பட்டிருந்த யோசப் வாஸ் அடிகளார், குணமடைந்தபின். தன் வேலைக்காரன் யோணுடன், யாழ்ப்பாணத்துக்கு தரை மார்க்கமாக, கால் நடையில் சென்றடைந்தார். கையில் ஒரு சதமுமின்றி, பசியாலும், தாகத்தாலும் களைத்து, இளைத்துப் போயிருந்த அவர்கள், யாழ்ப்பாணத்தில் ஒரு மண்டபத்தில் தங்கி இளைப்பாறினர். அங்கு அவர்கள் சில நாட்கள் வயிற்றுளைவினால் பீடிக்கப்பட்டு வருந்தியபோது, ஒரு ஏழைப் பெண் அவர்களுக்கு உண்ண கஞ்சி கொடுத்து உதவினாள். குணமடைந்த பின், யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்-கர்களைக் கண்டு பிடிப்பதே அடிகளாரின் முதல் வேலையாகவிருந்தது.

## 8.1.3.8. புனித யோவப் வாஸ் அடிகளாரின் மறைப்பணி

முப்பது ஆண்டுகளாக குருக்களின் உதவியின்றி வாழ்ந்துவந்த கத்தோலிக்கர்கள், ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களுக்குப் பயந்து, தங்களைக் கத்தோலிக்கரெனக் காட்டிக் கொடுக்கக்கூடிய சகல வெளியடையாளங்களையும் களைந்து, பெரும்பாலும் புற மதத்தினரைப் போலவே வாழ்ந்து வந்தனர். எனவே உண்மையான விசுவாசமுள்ள கத்தோலிக்கர்களை இனம் கண்டுகொள்வது மிகவும் கடினமாக-விருந்தது. யோசப் வாஸ் அடிகளார், கழுத்தில் ஒரு பெரிய செபமாலையை எல்லாரும் காணத்தக்கதாக அணிந்து கொண்டு, பிச்சைக்காரனைப்போல் வீடுவீடாகச் சென்று, இடையிடையே சிலுவை அடையாளம் வரைந்து, செபமும் சொல்லிக் கொண்டு, பிச்சை கேட்டு வந்தார். சில வீடுகளில் அவர் மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரிக்கப்-பட்டார். இவ்வாறு அவர் சில உண்மையான விசுவாசமுள்ள கத்தோலிக்-கர்களை இனம் கண்டுகொண்ட பின்னர் தான் ஒரு இந்திய கத்தோலிக்க குருவென்ற இரகசியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

இதை அறிய வந்த யாழ்ப்பாண கத்தோலிக்க சமுதாயத்தின் மூப்பர் மாறு வேடங்களில் பிச்சை எடுத்துத் திரிந்த அடிகளாரிடம் சென்று அவர் உண்மையாகவே ஒரு கத்தோலிக்க குருதானோவென்று விசாரித்தார். அப்போது யோசப் வாஸ் அடிகளார் தான் கோவைப் பேராயரிடமிருந்து பெற்று வந்த அதிகாரப் பத்திரத்தை அவருக்குக் காண்பித்து, தான் உண்மையாகவே ஒரு கத்தோலிக்க குருவென்பதை அவருக்கு எடுத்துக் கூறினார். அச் செய்தி முப்பது ஆண்டுகளாக ஒரு குருவைக் காணாமல், திருப் பலியில் பங்கெடுக்காமல், திருவருட்-சாதனங்களைப் பெற வசதியில்லாமல் ஏங்கித் தவித்த கத்தோலிக்க மக்களுக்கு மிகுந்த சந்தோஷத்தையும், மன ஆறுதலையும் கொடுத்தது. மூப்பர் தங்களைத் தேடிவந்த யோசப் வாஸ் அடிகளாரை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, அவர் அங்கு பாதுகாப்பாக தங்கி இருப்பதற்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுத்தார். அடுத்த நாள் காலையில் மூப்பருடைய வீட்டில் முப்பது ஆண்டு இடைவெளிக்குப் பின் முதல் தடவையாக திருப்பலி யாழ்ப்பாணத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அந்த மூப்பரின் வீடே அருட்திரு யோசப் வாஸ்

அடிகளார் இலங்கையில் ஆரம்பித்த அரும்பெரும் ஆன்மீகப் பணியின் நடுநிலையமாக அமைந்தது. விசுவாசமும் நம்பிக்கையுமுள்ள கத்தோலிக்கர்கள் ஒவ்வொரு நாளும் இரவில் பெரும் திரளாக வந்து, திருப் பலியில் பங்குபற்றி, திருவருட்சாதனங்களைப் பெற்று, அடிகளார் தமிழ் மொழியில் ஆற்றிய மறை உரைகளைக் கேட்டனர். கத்தோலிக்க குருவொருவர் மறைமுகமாக யாழ்ப்பாணத்துக்கு வரக்கூடுமென ஒல்லாந்தர் எதிர்பார்த்துக் காத்திருந்தமையால், அடிகளார் சில காலத்துக்கு யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்து, ஒவ்வொரு நாளும் வெவ்வேறு கத்தோலிக்கர்களின் வீடுகளில் ஒன்று கூடி, இரகசியமாகத் திருப்பலி நிறைவேற்றி, மறை போதகம் செய்தார். ஆனால் இந்த இரகசியத்தை யாழ்ப்பாணத்தில் பல நாட்களுக்கு மறைவாக வைத்திருக்க முடியாமலிருந்தது, ஏனெனில் அவர்களைச் சுற்றிவர எங்கும் ஒல்லாந்தரும், அவர்களுக்கு உளவு பார்ப்பவர்களும் இருந்தனர். ஆகவே அடிகளாரின் பாதுகாப்பை முன்னிட்டு, அவரின் நடுநிலையத்தை யாழ்ப்பாணத்திலிருந்து பத்து மைல் தூரத்திலிருந்த சில்லாலை என்ற கிராமத்துக்கு மாற்றினர்.

நூற்றுக்கு நூறுவீதம் கத்தோலிக்க மக்களைக் கொண்டிருந்த சில்லாலைக் கிராமம், இலங்கையில் உறுதியான கத்தோலிக்க விசுவாசத்தின் இருப்பிடமாகவிருந்தது. அக்கிராம மக்கள் கத்தோலிக்க விசுவாசத்திலும், ஒழுக்க வாழ்விலும் சிறந்து விளங்கினர். எனவே சில்லாலைக் கிராமம் "சின்ன உரோமை" என அழைக்கப்பட்டு வந்தது. யோசப் வாஸ் அடிகளார் சில்லாலை மூப்பரின் வீட்டிலே தங்க வைக்கப்பட்டார். அங்கிருந்து இரவு வேளைகளில் அவர் யாழ்ப்பாணத்திலிருந்த பல இடங்களுக்கும் சென்று கத்தோலிக்கர்களுக்குப் திருப் பணிபுரிந்து, திருப் பலி நிறைவேற்றி வந்தார். அவர்களை விசுவாசத்தில் உறுதிப் படுத்தி, திருவருட்சாதனங்களை வழங்கி, கத்தோலிக்க மதத்தைவிட்டு ஒல்லாந்த மதத்தைத் தழுவிய பலரையும், சில இந்துக்களையும் மனந்திருப்பினார். யோசப் வாஸ் அடிகளாரின் போதனைகளிலும் பார்க்க, அவருடைய முன்மாதிரிகையான வாழ்க்கையும், அவரில் மிளிர்ந்த கிறிஸ்தவ பண்புகளும், புண்ணியங்களும் மக்களை வெகுவாகக் கவர்ந்து, அவர்களை மனந்திருப்பின. அவற்றுள் மூன்றை நாம் சிறப்பாகக் குறிப்பிடலாம்: முதலாவது அவருடைய ஏழ்மை, உலகப் பற்றற்ற வாழ்க்கை. அடுத்து அவருடைய அடக்க-

வொடுக்கமான, மேரை மரியாதையான நடத்தை. இறுதியாக அவர் கடைப்பிடித்த உபவாசம், உணவு, குடி மட்டில் இச்சை அடக்கம். வாஸ் அடிகளாரின் உதவியுடன் கத்தோலிக்கர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியும் புத்துணர்வும் பெற்றவர்களாய், தங்கள் வீடுகளில் தம் மதக் கடமைகளை மனத் துணிவுடன் வெளிப்படையாகக் கடைப்பிடித்தனர். படிப்படியாக இரவு வேளைகளில் அவர்களின் வீடுகளில் இல்ல வழிபாடுகளும், செபங்களும், செபமாலை பிரார்த்தனையும், பக்திப் பாடல்களும் போர்த்துக்கேய காலத்தில் கேட்கப்பட்டதுபோல் மீண்டும் கேட்கத் தொடங்கின. கத்தோலிக்கர்கள் துணிவுடன் தங்கள் கழுத்தில திருச்செபமாலை அணிந்து, வீடுகளில் மறைத்து வைத்திருந்த திருச் சுரூபங்களை பகிரங்கமாகத் தாபித்தனர். 1689ம் ஆண்டில் அடிகளார் எட்டு இடங்களில் வெளிப்படையாகத் திருப்பலி ஒப்புக்கொடுத்தது அவர்கள் எவ்வளவு தைரியம் அடைந்-திருந்தார்களென்பதைக் காட்டுகிறது. ஒல்லாந்த கோவில்களுக்கு போகின்றவர்களின் தொகை படிப்படியாகக் குறைந்தது. அவர்களின் தப்பறையான போதனைகளை கத்தோலிக்கர் பகிரங்கமாக எதிர்த்தனர். தாம் கத்தோலிக்கரென்பதை வெளிப்படையாக அறிக்கையிட்டு, அதற்-காக எவ்வித துன்புறுத்தலையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தனர்.

கத்தோலிக்கரின் விசுவாச வாழ்வில் ஏற்பட்ட மறுமலர்ச்சியையும், அவர்கள் நடத்தையில் ஏற்பட்ட மாற்றங்களையும் அவதானித்த ஒல்லாந்தர்கள், அவர்கள் மத்தியில் ஒரு கத்தோலிக்க குரு பணிபுரிந்து அவர்களை விசுவாசத்தில் ஊக்குவிப்பதைச் சந்தேகித்தனர். கத்தோலிக்கர்கள் மத்தியில் ஒரு குரு வந்திருப்பதையும், அவரின் தலைமையில் இரவுவேளைகளில் வீடுகளில் கத்தோலிக்கர்கள் ஒன்றுகூடி திருவழிபாடு நடத்துவதையும் அறிந்த அன்றிக் அதிரியான் வான் றீட் என்ற ஒல்லாந்த அதிகாரி, அக் குருவையும், அவ் வழிபாடுகளில் பங்கெடுக்கும் முக்கிய கத்தோலிக்கர்களையும் கைது செய்யத் திட்டமிட்டான். 1690ம் ஆண்டு கிறிஸ்துவின் பிறப்புத் திருவிழாவான மார்கழி 25ம் திகதி இரவில், யாழ்ப்பாணத்தில் மூன்று வெவ்வேறு இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்க யோசப் வாஸ் அடிகளார் ஆயத்தம் செய்திருந்தார். அதை அறிய வந்த ஒல்லாந்த அதிகாரி வான் றீட், அன்றிரவு அவர் திருப்பலி ஒப்புக் கொடுக்கவிருந்த இடங்களுக்குத் தன் படை வீரர்களை அனுப்பி, குருவையும்,

கத்தோலிக்கர்களையும் கைதுசெய்யக் காத்திருந்தான். நத்தார்த் திருப்பலிக்காக அவ்விடங்களில் கூடியிருந்த கத்தோலிக்கர்கள் திருச் செபமாலை சொல்லிக்கொண்டு, குருவின் வருகைக்காகக் காத்திருந்தனர். வாஸ் அடிகளார் முதலாவது இடத்தில் திருப்பலியை முடித்துக்கொண்டு, மற்ற இடத்துக்குப் போக அவசரமாக வெளியேறியதும், படை வீரர்கள் அந்த இடங்களை முற்றுகையிட்டனர். விசுவாசிகளை ஆண், பெண்ணெனப் பாராது, ஆவேசத்துடன் அடித்து, வதைத்து, நிர்வாணமாக்கி, அட்டகாசம் செய்தனர். அங்கிருந்த பலிப் பீடங்களையும், திருச் சுரூபங்களையும் உடைத்து, கால்களால் மிதித்து, அவற்றை அவசங்கை செய்து, தீட்டுப் படுத்தினர். அங்கு கூடியிருந்த கத்தோலிக்கர்களில் 300 பேரைக் கைது செய்து சிறையிலடைத்தனர். ஆனால் அருட்திரு யோசப் வாஸ் அடிகளார் தெய்வாதீனமாகத் தப்பித்துக் கொண்டார்.

மறு நாள் காலையில் கைது செய்யப்பட்ட அனைவரும் ஒல்லாந்த அதிகாரி வான் றீட் முன் கொண்டுவரப் பட்டனர். எட்டு தலைவர்களைத் தவிர மற்றனைவரும் தெண்டம் செலுத்தியபின் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் அந்த எட்டுத் தலைவர்களும் தங்கள் கத்தோலிக்க விசுவாசத்தை மறுதலிக்கும்படி கடுமையாகத் துன்புறுத்தப்பட்டனர். எனினும் அவர்கள் இறுதிவரை தம் விசுவாசத்தில் நிலையாயிருந்தனர். சவுக்கு அடிகளின் வேதனை தாங்க முடியாமல் டொன் பேதுருவென்ற தலைவர் மரணமானார். மற்றைய ஏழு பேரும் சிறையில் தொடர்ந்து அடைக்கப்பட்டு, யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்ட கல் சுமக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர். இறுதியில் அவர்களும் வேதனை தாங்க முடியாமல் மறை சாட்சிகளாக மரித்தனர். படை வீரர்கள் வீடு வீடாகச் சென்று, யோசப் வாஸ் அடிகளாரைத் தேடினர். இறை பராமரிப்பினால் ஒல்லாந்தரின் கைகளினின்று தப்பிய அடிகளார், தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பது ஆபத்தென்பதை உணர்ந்தார். எனவே மூன்று ஆண்டுகள் தான் யாழ்ப்பாணத்தில் செய்த இறை பணியை இடைநிறுத்திக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு, தன் பயணத் தோழன் யோணுடன், மாறு வேடத்தில், கிழிந்த ஊத்தை உடுப்பு அணிந்தவராய், கால் நடையில் பூநகரி வழியாக வன்னிப் பிரதேசத்துக்குச் சென்றார். இங்கிருந்து கண்டி அரசனுடைய ஆட்சியின் கீழிருந்த புத்தளம் நகருக்குச் சென்றார். இது கண்டிய அரசனின்

ஆட்சிக்கு உட்பட்ட ஒரேயொரு துறைமுகப் பட்டினம்.. ஒல்லாந்தரின் துன்புறுத்தலுக்குப் பயந்தோடிய ஆயிரக் கணக்கான கத்தோலிக்கர்கள் அந் நகரத்தில் தஞ்சம் அடைந்திருந்தனர். அங்கு போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட ஒரு சிற்றாலயமும் இருந்தது. கத்தோலிக்கர்களைத் தேடிக் கண்டுபிடித்த அடிகளார், அவர்கள் மத்தியில் ஒன்றரை ஆண்டுகள் தங்கியிருந்து அவர்களுக்கு மறைப்பணி ஆற்றினார். அவர்களுக்கு நற்செய்தியைப் போதித்து, அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, திருப்பலி ஒப்புக்கொடுத்து, திருவருட்சாதனங்களை வழங்கினார். பல ஆண்டுகளாக ஒரு குருவினது உதவியுமின்றி, அஞ்ஞானிகள் போல் வாழ்ந்துவந்த விசுவாசிகளுக்கு இது மகிழ்ச்சியையும், தைரியத்தையும் அளித்தது. புத்தளத்தில் யோசப் வாஸ் அடிகளார் கன்னடத்தில் அவருடன் பணிபுரிந்த நண்பனான அருட்திரு யுவான் டி பிறகான்சா என்ற குருவைச் சந்தித்தார். அவரும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து சிறிது காலம் கொழும்பிலும், பின் புத்தளப் பகுதியிலும் பணிபுரிந்தவர். அவருடைய பொறுப்பில் புத்தளம், மன்னார், மாதோட்டம், யாழ்ப்பாணப் பகுதிகளில் மறைப்பணியை ஒப்படைத்தவிட்டு யோசப் வாஸ் அடிகளார் கண்டிக்குச் செல்ல விரும்பினார். ஆனால் பிறகான்சா அடிகளார் சில நாட்களுள் நோய்வாய்ப்பட்டு, இந்தியாவுக்குத் திரும்பிவிட்டார்.

தன் திட்டப்படி, யோசப் வாஸ் அடிகளார் ஒல்லாந்தருக்குப் பயந்து, கண்டி நகரத்திலும், அதனை அடுத்திருந்த கிராமங்களிலும் தஞ்சமடைந்திருந்த கத்தோலிக்கரைத் தரிசித்து, அவர்களுக்குப் பணிபுரியவென 1692ம் ஆண்டு சித்திரை மாதம் கண்டிக்குப் பயணமானார். அக்காலத்தில் கண்டியை ஆண்டு வந்த இரண்டாவது விமல தர்ம சூரிய, தன் தந்தை இரண்டாம் ராஜசிங்கவைப்போல், ஒல்லாந்தரால் துன்புறுத்தப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு ஆதரவு அளித்து வந்தான். ஆனால் வெளிநாட்டவரைச் சந்தேகக் கண்ணுடன் நோக்கி வந்தான். அத்தகைய அரசனிடமிருந்து தனக்கு நல்ல ஆதரவும், உபசரணையும் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் அடிகளார் எதிர்பார்த்திருந்தார். எட்டு நாட்கள் பயணம் செய்து, கண்டி நகரின் நுழை வாயிலை அடைந்து, நகருக்குள் நுழைய அரசரிடமிருந்து அனுமதிப் பத்திரத்துக்காகக் காத்திருந்தார். யோசப் வாஸ் அடிகளார் கோவையிலிருந்து வந்திருந்தபடியால், அவர் போர்த்துக்கேயருக்கு

வேவுபார்க்க வந்திருக்கும் உளவாளி என்ற தப்பான வதந்தி அரசருக்குக் கொடுக்கப்பட்டது. இதனால் கோபமடைந்த அரசன், யோசப் வாஸ் அடிகளாரைக் கைது செய்து, விலங்கிலிட்டு, கடும்காவலில் வைக்கும்படி கட்டளையிட்டான். இச் சிறைவாசம் வழியாக கண்டி அரசரின் ஆதரவும், பாதுகாப்பும், அடிகளாருக்கும், அவரது சக குருக்களுக்கும் கிடைக்கச் செய்வதே இறைவனின் திட்டமாகவிருந்தது. அரச கட்டளையின்படி போர்த்துக்கேய உளவாளியெனக் கருதப்பட்ட அடிகளாரின் சிறைக்காலச் செயற்பாடுகள் எல்லாம் வெகு நுணுக்கமாக அவதானிக்கப்பட்டு, அரசருக்கு அறிவிக்கப்பட்டன. அவர் சாந்தமும் தாழ்ச்சியும் நிறைந்தவராய், தன் நேரத்தை அதிகமாகச் செபத்திலேயே செலவழித்தார். சில நாட்களுக்குப் பின் அடிகளாரை நேரடியாக விசாரணைசெய்த அரசன், அவர்மேல் சுமத்தப்பட்ட குற்றங்களெல்லாம் ஆதாரமற்றவையெனக் கண்டு, அவரையும் அவரது பயணத் தோழரான யோனையும் கைதிகள் கூடத்திலிருந்து விடுதலை செய்து, அவ் வளவிற்குள் சுதந்திரமாக நடமாட அனுமதித்தான். அடிகளார் அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சிங்கள மொழியைக் கற்று, தம் வருங்காலப் பணிக்கு ஆயத்தம் செய்தார். எவ்வித தடையுமின்றி, செபிக்கவும், திருப்பலி ஒப்புக் கொடுக்கவும், அவரைக் கத்தோலிக்க மக்கள் வந்து சந்திக்கவும் அனுமதி வழங்கப்பட்டது. சிறைச் சாலைத் தோட்டத்திலே ஒரு சிறு கொட்டில் போட்டு, அதைச் சிற்றாலயமாகப் பாவித்தார். தன்னிடம் வந்த விசுவாசிகளுக்கு நற்செய்தியைப் போதித்து, திருவருட்சாதனங்களை அளித்து, மறைப்பணி ஆற்றினார். இதற்கிடையில் கோவையிலிருந்த அவருடைய சிரேஷ்டர் அடிகளாரை இந்தியாவுக்குத் திரும்பி வரும்படி கடிதம் எழுதியிருந்தார். ஆனால் அவர் சிறையிலிருந்ததனால் அவரால் உடனடியாகப் போக முடியவில்லை. இங்கு இலங்கையில் தொடர்ந்தும் பணியாற்ற இறைபராமரிப்பினால் அவர் தடுத்து வைக்கப்பட்டதைக் காண்கிறோம். இரண்டு ஆண்டுகளின் முடிவில் அவர் சிறையிலிருந்து விடுதலை பெற்று, கண்டி நகரெங்கும் மறைபணியாற்ற அரசனால் அனுமதிக்கப்பட்டார்.

சிறைச்சாலையிலிருந்து விடுதலைபெற்று வெளியேறியபின், கண்டி நகரத்தில் ஒரு சிற்றாலயத்தைக் கட்டி, அதை “அஞ்ஞானிகள் மனமாற்றத்தின் மாதா”வுக்கென அர்ப்பணம் செய்தார். பல ஆண்டுகளாக திருவருட்சாதனங்களின்றி வாழ்ந்த கத்தோலிக்கர்கள் அவரிடம் திரளாக

வந்தனர். அவர்களுக்கு அருட்சாதனங்களை வழங்கி, திருப்பலி ஒப்புக்கொடுத்து, நற்செய்தியைப் போதித்து, அவர்களை நல்வழிப்படுத்தி, விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். சிலவேளைகளில் நாள் முழுவதையும் கோவிலிலேயே செலவழித்து, மக்களுக்குப் போதித்து, பாவ மன்னிப்பு அளித்தார். வீடுவீடாகச் சென்று நோயாளர்களையும், வயோதிபர்களையும் சந்தித்து, அவர்களுக்குத் திருவருட்சாதனங்களைக் கொடுத்தார். சில அடிமைகளையும், வெளிநாட்டவர்களையும் மனந்திருப்பி, திருச்சபையில் சேர்த்தார். சுதேசிகளில் ஒரு சிலர்தான் திருமறையில் சேர முன் வந்தனர். பொதுவாக கத்தோலிக்கருடன் கலப்புத் திருமணம் செய்துகொண்ட சுதேசிகளைத்தான் மனந்திருப்ப முடிந்தது. இதுவரை இலங்கையில் தான் ஆற்றிய பணிபற்றிய அறிக்கையொன்றை தன் சிரேஷ்டருக்கு அனுப்பி, கண்டி அரசிலும், ஓல்லாந்தருக்கு கீழ்ப்பட்ட பகுதிகளிலும் பரவி வாழும் பெரும் தொகையான கத்தோலிக்கருக்கு தான் தனிய பணிபுரிய இயலாததை எடுத்துக்கூறி, வேறு சில குருக்களையும் உதவிக்கு அனுப்பும்படியாகக் கேட்டுக்கொண்டார். கடிதம் கிடைக்கப்பெற்ற தியான சம்பிரதாய சபைச் சிரேஷ்டர் மகிழ்சியடைந்து, அருட்திரு யோசவ் டே மெனசெஸ் அடிகளாரையும், யோசப் வாஸ் அடிகளாரின் மருமகனான அருட்திரு யோசவ் கர்வாலோ அடிகளாரையும் உதவிக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தார்.

இதற்கிடையில் 1696ம் ஆண்டின் இறுதியில் கண்டி அரசில் மழையில்லாது கடும் வரட்சியுண்டாகி, நாடெங்கும் பெரும் பஞ்சம் ஏற்படும் ஆபத்தில் இருந்தது. மழைக்காக நாட்டு வழக்கப்படி செய்யப்படும் சடங்குகளெல்லாம் செய்தும் பலன் கிட்டவில்லை. அருட்திரு யோசப் வாஸ் அடிகளாரின் புனிதத்துவத்தை அறிந்திருந்த அரசன், சில கத்தோலிக்கரின் வேண்டுகோளுக்கு இணங்க, அவரை அழைத்து, அவர் வழிபடும் இறைவனிடம் மழைக்காகச் செபிக்கும்படி கேட்டார். அடிகளாரும் அதற்கு இணங்கி, நகரின் சதுக்கத்தில் ஒரு பீடத்தை அமைத்து, அதன் மேல் ஒரு சிலுவையை வைத்து, முழந்தாட்படியிட்டுச் செபித்தார். பலர் அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சிறிவு நேரத்துக்குள் வானத்தில் மழை முகில்கள் உருவாகி, இருட்டியது. திடீரென பேரிசைச்சலுடன் பெரும் மழை பெய்யத் தொடங்கியது, ஆனால் அடிகளார் முழந்தாட்படியிட்டிருந்த

இடத்தில் ஒரு துளி மழைதானும் விழவில்லை. இதனால் அடிகளாரின் ஆற்றலும், புகழும் எங்கும் பரவியது. அரசனும் அவரை மிக மரியாதையுடன் நடத்தி, தங்குதடையின்றி, ஒல்லாந்தரின் ஆட்சிக்கு உட்பட்ட எல்லா இடங்களுக்கும் சென்று மறைப் பணிபுரிய அனுமதியளித்தான். யோசப் வாஸ் அடிகளார் அவ் அனுமதியைப் பயன்படுத்தி மறுபடியும் பிச்சைக்கார வேடத்தில் முதலில் கொழும்புக்கும், பின்பு நீர்கொழும்பு, இரத்தினபுரி, வன்னி, மாதோட்டம், மன்னார், பூநகரி, யாழ்ப்பாணம். திருமலை, மட்டக்கிளப்பு போன்ற இடமெல்லாம் சென்று, கத்தோலிக்கர்களை இரகசியமாகச் சந்தித்து, அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். தவறிப்போனவர்களை மனந்திருப்பி மீண்டும் திருச்சபையில் சேர்த்து, திருவருட்சாதனங்களை அளித்து, அவர்களை நல்வழிப்படுத்தினார். ஒல்லாந்தர் அவரைக் கைதுசெய்யப் பல முறைகளில் முயன்றும், அவர் இறைபராமரிப்பினால் பாதுகாக்கப்பட்டார். பத்து ஆண்டுகளாக யோசப் வாஸ் அடிகளாரே இலங்கையில் தட்டந்தனிய மறைப்பணி புரிந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

1696ம் ஆண்டின் முடிவில் தியான சம்பிரதாயச் சபைச் சிரேஷ்டர் உதவிக்கு அனுப்பிய இரு குருக்களும், மேற்றிராசனக் குருவான பேதுரு பெர்றாவோவுடன், யாழ்ப்பாணம் வந்து, பின் புத்தளம் வந்தடைந்தனர். அவர்களை யோசப் வாஸ் அடிகளார் மகிழ்வுடன் வரவேற்றார். அவர்கள் கொச்சின் ஆயரிடமிருந்தும், சபைச் சிரேஷ்டரிடமிருந்தும் யோசப் வாஸ் அடிகளாருக்கு இரு அதிகாரப் பத்திரங்கள் கொண்டு வந்திருந்தனர். அதன் பிரகாரம் யோசப் வாஸ் அடிகளார் சகல அதிகாரங்களுடன் ஆயரின் பிரதிநிதியாகவும், இலங்கையிலுள்ள தியான சம்பிரதாயச் சபைக் குருக்களுக்கு சிரேஷ்டராகவும் நியமனம் பெற்றார். இலங்கையில் சிறப்பான முறையில் மறைபரப்புப் பணியை மேற்கொள்ளும் பொருட்டு தமக்கு அளிக்கப்பட்ட அவ் அதிகாரங்களைப் பயன்படுத்தி, யோசப் வாஸ் அடிகளார் ஆர்வத்துடன் மறைபரப்புப் பணியை ஒழுங்கு செய்து, அதற்குரிய சில ஒழுங்குவிதிகளையும் ஏற்படுத்தினார். பணித் தளங்கள் வரையறை செய்யப்பட்டு, வெவ்வேறு குருக்களிடம் வெவ்வேறு பகுதிகளின் மறைபரப்புப் பணிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. யாழ்ப்பாணம், பூநகரி, மாதோட்டம், மன்னார், வன்னிப் பகுதிகள் பேதுரு பெர்றாவோ அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டன. புத்தளம், சிலாபம், நீர்கொழும்புப்

பகுதிகள் யோசவ் டெ மெனெசெஸ் அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டன. யோசவ் கார்வாலோ அடிகளாரை யோசப் வாஸ் அடிகளார் தம்முடன் கண்டிக்கு அழைத்துச் சென்றார். மேலும் மறைபரப்பாளர்கள் சகலரும் மக்கள் பேசும் சிங்கள, தமிழ் மொழிகளை நன்றாகக் கற்க வேண்டும், விசுவாசத்துக்கும், ஒழுகத்திற்கும் முரணில்லாத மக்களின் பாரம்பரியப் பழக்க வழக்கங்களை ஆதரிக்க வேண்டும், வறிய மக்களுக்கு தாரளமாய் தர்மம் செய்ய வேண்டும் என்பவை போன்ற பல ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டன. இவையெல்லாம் கத்தோலிக்க மதம் இலங்கையில் எங்கும் புத்துயிருடன் பரவுவதற்கு ஏதுவாக அமைந்தன. யோசப் வாஸ் அடிகளார் தம் மறைப்பணியின் நடுநிலையத்தை கண்டியில் அமைத்து, இடையிடையே மற்ற நகரங்களையெல்லாம் தரிசித்து, குருக்களுக்கு ஆலோசனை வழங்கி, ஊக்குவித்து, மக்களை விசாவாசத்தில் உறுதிப்படுத்தி நல்வழிப்படுத்தி வந்தார்.

1697ம் ஆண்டு நடுப்பகுதியில் கண்டி நகரிலும், அதன் அயலிலும் கொடிய தொற்று நோயான சிறிய அம்மை (வைசூரி) பரவியது. அதனால் பீடிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான மக்கள் இறந்தார்கள். நோயினால பீடிக்கப்பட்ட தங்கள் குழந்தைகளையும், இனசனரையும் ஆதரிப்பாரின்றி விட்டுவிட்டு, பெற்றோரும், குடும்பத்தி-னரும் வீடுகளையும், நகரத்தையும் விட்டு ஓடினார்கள். அரசரும், அரச அதிகாரிகளும் அப்படியே நகரத்தை விட்டோடினர். இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கும், நோயாளிகளைப் பராமரிப்பதற்கும் எவரும் இருக்கவில்லை. இந்நிலையில் யோசப் வாஸ் அடிகளாரும், கார்வாலோ அடிகளாரும், கிறிஸ்தவ அன்பினால் தூண்டப் பெற்றவர்களாய், தங்கள் சுகத்தைப் பொருட்படுத்தாமல், சாதி மத பேதமின்றி, நோயாளிகளை தரிசித்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர். நோயாளிகளின் புண்களைக் கழுவி, மருந்து கட்டி, உணவு, குடிநீர், உடுபுடவைகளைக் கொடுத்து, இறந்தவர்களை அடக்கம் செய்து உதவினர். தம்முடைய ஆலயத்துக்கு அருகாமையில் ஓர் வைத்தியசாலையை அமைத்து, நோயாளிகளை வைத்துப் பராமரித்தனர். இக் கத்தோலிக்க குருக்களின் தன்னலம் கருதாப் பிறர்நலப் பணிகளைக் கண்ட பிறசமயத்தினர், வியப்படைந்து, கத்தோலிக்க மதத்தின்பால் மிக வெகுவாகப் கவரப்பட்டனர். பலர் மனந்திரும்பி, கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். கண்டி அரசனாகிய விமல தர்ம

சூரியாவும் அவர்களின் அன்புப் பணிகளை மெச்சிப் பாராட்டினான். யோசப் வாஸ் அடிகளாரைப்போல் நான்கு குருக்களாவது கண்டி நகரில் இருக்கவேண்டுமென்றும், அக் குருவின் பிறரன்புப் பணிகள் கிட்டாதிருந்தால் கண்டி நகரம் பாலைவனமாய் மாறியிருக்குமெனவும் கூறினான். அந் நோய் ஒரு வருடத்துக்கு மேல் நீடித்து ஓய்ந்தது. இரவு பகலாக அயராது நோயாளிகளைப் பராமரிக்க உழைத்த யோசப் வாஸ் அடிகளார் வலுக் குறைந்து, நோயுற்றார். சில நாட்கள் இளைப்பாறித் தேறிய பின், அப் பணியை கார்வாலோ அடிகளாரிடம் ஒப்படைத்து விட்டு, யோசப் வாஸ் அடிகளார் பயணம் செய்து, சீதவாக்கை, இரத்தினபுரி, அல்வானோ, குறுவோவெல. மற்றும் கடலோரப் பட்டணங்களைத் தரிசித்து, கத்தோலிக்கர்களுக்கு திருவருட்சாதனங்களை வழங்கி, நலவழிப்படுத்தினார். அவர் கண்டியில் இல்லாத சமயத்தைப் பயன்படுத்தி, கத்தோலிக்க விரோதிகள் சிலர் அவருக்கு எதிராக இல்லாத பொல்லாத குற்றங்களைச் சுமத்தி, கண்டி நகரத்திலிருந்து கார்வாலோ அடிகளாரை விரட்டி, அவர் இருந்த ஆலயத்தை தரை மட்டமாக்கினர். இதைக் கேள்விப்பட்ட யோசப் வாஸ் அடிகளார் மிகவும் கவலைப்பட்டார். எனினும் அவர் எவ்வித தடையுமின்றி கண்டிக்கு வந்துபோக முடிந்தது.

யோசப் வாஸ் அடிகளாரும், அவருடைய சக குருக்களும் வயதில் முதிர்ந்து, நோயுற்று, பெலவீனமடைந்தனர் அவர்களுக்கு உதவியாக தியான சம்பிரதாய சபையைச் சேர்ந்த அருட்திரு பேதுரு டா சுல்தானோ, யாக்கோமே கொன்சால்வெஸ், மிகுவெல் டி மெல்லோ, யோசே டே சமாரியா, மனுவேல் டே மிராண்டா அடிகளார்கள் வந்து சேர்ந்தார்கள். யோசப் வாஸ் அடிகளார் இலங்கை முழுவதையும் பல்வேறு பகுதிகளாகப் பிரித்து, வெவ்வேறு குருக்களிடம் ஒப்படைத்தார். மக்கள் பேசும் தமிழையும், சிங்களத்தையும் நன்கு கற்று, கத்தோலிக்கருக்குத் தேவையான சகல வேத நூல்களையும் எழுதும் பொறுப்பு யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டது, எல்லாவிடங்களையும் தரிசித்து, குருக்களையும், மக்களையும் ஊக்குவிக்கும் பொறுப்பு அடிகளாரிடம் இருந்தது. அடிகளார் தாழ்மை, ஏழ்மை, கற்பு, கீழ்படிதல், இறையன்பு, பிறரன்பு போன்ற புண்ணியங்களை சிறப்பான முறையில் வாழ்ந்து, தமது சக குருக்களுக்கும், ஏனைய கத்தோலிக்க, பிறமத மக்களுக்கும் முன்மாதிரிகையாக, ஒரு

நல்ல வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அவர் அனைத்து பிற மதங்களையும், ஒரு நாட்டின் கலாச்சாரம், பரம்பரைப் பழக்க வழக்கங்களையும் மதித்து, சகிப்புத் தன்மை, கூட்டு வாழ்வு, நட்புறவு போன்ற கொள்கைகளைக் கடைப்பிடித்தார். மக்களை வலோத்காரப்படுத்தியோ, சலுகைகள் அளித்தோ மனந்திருப்பாமல், தன்னுடைய தியாகம் நிறைந்த, முன்மாதிரிகையான அன்புப் பணியினால் மக்களைக் கிறிஸ்துபால் கவர்ந்தார். சுதேச குருக்கள் தம் சொந்த மண்ணில், இக்கட்டான வேத கலாபனைக் காலத்திலும், சிறந்த மறைபணியாற்றும் துணிவும், ஆற்றலும், ஆக்கமும் உடையவர்களளென்பதை உலகறியச் செய்த பெருமை அவரையே சாரும், ஐரோப்பிய மறைப்பாளர்களுக்குச் சரிநிகராக அவர்களும் அந்நிய நாடுகளில் மறைபரப்புப் பணி ஆற்றக் கூடியவர்களென்பதை எண்பித்தார். அவர் இலங்கையில் மறைபணி-யாற்றிய 25ஆண்டு காலத்தில், அங்கு ஏறக்குறைய பன்னிரண்டு குருக்கள் பணிபுரிந்தனர். கண்டி அரசர்களான இரண்டாவது விமல தர்மசூரியவினதும், சிறீ வீர நரேந்திர சிங்கவுடையதும், ஏனைய சக குருக்களினதும் ஆதரவையும், நட்பையும், மரியாதையையும் பெற்றி-ருந்தார். இறுதியாக அவர் நோய்வாய்ப்பட்டு, 1711ம் ஆண்டு, தை மாதம், 16ம் திகதி இறைவனடி சேர்ந்தார். அவரது பூதவுடல் கண்டி அரசரின் அனுமதியோடு, கண்டியில் அவரால் கட்டப்பட்ட தேவ ஆலயத்திலேயே, அரசரும், பல இன மத மக்களும் பெருந்தொகையில் கூடியிருக்க, மிக மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அருட்திரு யோசப் வாஸ் அடிகளார் உயிருடன் இருக்கும்போதே அவருடைய புனிதத்தின் புகழ் இலங்கை, இந்தியாவெங்கும் மட்டுமல்ல, போர்த்துக்கால், உரோமை மட்டும் பரவியிருந்தது, அவருக்குப் புனிதர் பட்டம் அளிக்கும் முயற்சிகள், ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்பினால் இழுத்தடிக்கப்பட்டு, அவர் இறந்து 25 ஆண்டுகளின் பின்னரே ஆரம்பமாயின. இதிலே அப்போஸ்தொலிக்க தூதுவர் லடிஸ்லவுஸ் சலெஸ்கி, இயேசு சபையைச் சேர்ந்த எஸ். ஜி. பெரேரா அடிகளார், அமல மரி தியாகிகள் சபையைச் சேரந்த சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளார், குளோட் லோறென்ஸ் அடிகளார் போன்றோர் எடுத்த பெரும் முயற்சிகள் குறிப்பிடத் தக்கவை. அண்மைக் காலங்களில் இலங்கை ஆயர்கள், குறிப்பாக கண்டி ஆயர் கலாநிதி யோசவ் வியான்னி ஆண்டகையும், கத்தோலிக்க மக்களும் எடுத்த அயராத முயற்சியினால்,

பாப்பு இரண்டாவது அருள் சின்னப்பர் 1995ம் ஆண்டு தை மாதம் இலங்கைக்கு வருகை தந்தபோது, அருட்திரு யோசப் வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் அளித்து, அவரைக் கௌரவித்தார்.

**யோசப் வாஸ் அடிகளாரின் மறைத்தூதுக் கொள்கை**

1. யோசப் வாஸ் அடிகளார் இலங்கைக்கு வருகை தந்ததும், பணியாற்றியதும் தனியே கிறிஸ்துவின் பிரதிநிதியாக மட்டுமே ஆகும். எந்தவொரு அரசியல் தொடர்போ, அரச உதவியோ இல்லாமலும் சமய பிரச்சாரத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமென்ற துணிவும், நம்பிக்கையும் அவருக்கு இருந்தது.

2. இலங்கை ஐரோப்பியர்களுக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில், கிறிஸ்தவ மதத்தைச் சாராத மக்கள் தவறான கொள்கைகள் உள்ளவர்களென்றும், சிலை வழிபாட்டுக்காரர்களென்றும் ஐரோப்பிய மறைத்தூதுவர்களால் கருதப்பட்டனர். ஆனால் வாஸ் அடிகளார் ஏனைய மதத்தைப் பின்பற்றுகிறவர்கள்பற்றி வேறுபட்ட மனப்பாங்கு உடையவராகச் செயற்பட்டார். அவர்களின் மதங்களையும், பழக்க வழக்கங்களையும் மதித்தார். பிற நலப் பணிகளின்போது கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவரகள் அல்லாதோரையும் ஒரே விதமாகக் கவனித்தார். கத்தோலிக்க மறைக்கு தம் வாழ்வின் மூலம் சான்று பகர்ந்தார்.

3. தேசிய மொழிகளை நன்றாகக் கற்று, மறைத்தூதுப் பணியில் ஈடுபடல் கஷ்டமானதென்பதை ஏற்றுக்கொண்டாலும், சிங்கள, தமிழ் மொழிகளை நன்றாகக் கற்று, தம் மறைப்பணியில் பயன்படுத்தினார். இந்நாட்டுக்கு வருகைதந்த ஏனைய மறைத்தூதர்களுக்கும் நாட்டு சுதேச மொழிகளைக் கற்குமாறு வலியுறுத்தினார்.

4. இலங்கையில் கத்தோலிக்க மதத்திற்கும் தேசிய கலாச்சார பண்புகள், மரபுகளுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார். அக்காலத்து வழக்கத்துக்கேற்ப பொது வழிபாடுகள் இலத்தீன் மொழியில் நடைபெற்றபோதும், தேசிய மொழியில் செபிப்பதற்கு வழிசமைத்துக் கொடுத்தார்.

தேசிய பாடல்களையும், இசைக் கருவிகளையும் உபயோகித்தார். படிப்படியாக கத்தோலிக்க வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்கலைப் புகுத்தினார். இவ்வாறு தேசிய மயமாக்குதலில் கலாச்சாரத்தின் திறந்த தன்மைக்கு வழிகாட்டினார்.

5. மறைப் பிரசாரத்துக்காகவும், தனது மறைமாவட்டத்தின் நிர்வாகத்திற்காகவும் ஐரேப்பிய மறைத்தூதுவர்களைத் திருப்பிய அனுப்பிய காலக்கட்டத்தில், தேசிய மறைத்தூதுவர்களும் வெற்றிகரமாக அவ்வேலைகளைச் செய்யக்கூடிய ஆற்றல் உள்ள-வர்கள் என்பதை தனது வாழ்க்கையாலும், முன்மாதிரிகையாலும், ஒறற்றோரியன் குருக்களின் பணியினாலும் காட்டியுள்ளார்.

**யோசப் வாஸ் அடிகளாரின் வாழ்க்கைச் சுருக்கம்**

1651 பெத்தவுலின் இல் சென்தோ ஆல் கிராமத்தில் பிறப்பு (21.04.1651).

1676 குருவாகத் திருநிலைப்படுத்தப்படல்.

1676 - 1680 கோவா பிரதேசத்தில் மறைபரப்புப் பணி.

1681 - 1684 கனறா பிரதேசத்தில் பணி.

1685 ஒறற்றோறியன் குருத்துவ சபையில் அங்கத்துவம் பெறல்.

1686 இலங்கையில் பணியாற்றுவற்காக தென்னிந்தியாவுக்குச் செல்லல்.

1687 இலங்கைக்கு வருகை தரல் - மன்னார்க் கரையில் இறங்குதல்.

1687 - 1689 யாழ்ப்பாணத்தில் சில்லாலை என்னும் கிராமத்தில் பணி.

1690 - 1692 வன்னி, புத்தளம் பிரதேசங்களில் பணி

1692 அந்தோனியா சோட்டுமயோர் உடன் கண்டிக்குச் செல்லல்.

1692 - 1693 இரண்டாம் இராஜசிங்க அரசனால் ஒற்றர் எனச் சந்தேகிக்கப்பட்டு. சிறையில் அடைக்கப்படல்.

1693 சிறையிலிருந்து விடுதலை பெற்று, கண்டிப் பிரதேசத்தில் கத்தோலிக்கருக்குப் பணியாற்றல்.

1696 இலங்கையின் கத்தோலிக்க சமய அலுவல்களின் அதிகாரியாக நியமிக்கப்பட்டல்.

1696 மேலும் ஒறற்றோறியன் சபையின் மூன்று குருக்கள் இந்நாட்டுப் பணிக்காக வருகை தரல். (யோசப் த மென்சோஸ், யோசப் கர்வாலியோ, பேதுரு பெரான்).

1697 கண்டிப் பிரதேசத்தில் வைசூரி நோய் பரவுதல். அநேகர் இறத்தல். வாஸ் அடிகளார் நோயாளிகளைப் பராமரித்தல். அனேகர் அவரை விளங்கிக் கொள்ளல்.

1697 - 1702 நாடு முழுவதும் மறைத்தூதுப்பணியில் ஈடுபடல்.

1705 மேலும் நான்கு ஒற்றறோறியன் சபைக் குருக்கள் பணியில் சேரல் (யோசப் த யேசுஸ் மரியா, மனுவேல் த மிராண்டா, யாக்கோமே கொன்ஸ்சால்வேஸ், மிக்கேல் த மெல்லோ).

1707 இறுதியாக திருகோணமலைப் பிரதேசத்தில் மறைபணிக்குச் செல்லல்.

1711 இறைபதமடைதல் (16.01.1711)

1995 இலங்கையின் அப்போஸ்தலராக, திருத்தந்தை 2ம் யோவான் பவுல் அவர்களால் முத்திப்பேறுபெற்ற பட்டம் வழங்கபபடுதல்.

## 8.1.3.9. உள்நாட்டுக் கலைக்கு அருட்திரு ஜாகோமே கொன்சால்வெஸ் அடிகாரின் பங்களிப்பு

இலங்கையில் மறைப்பணி ஆற்றிய ஒறொற்ரோறியன் குருக்களிலே அவர்களின் முன்னோடியும், சிரேஷ்டருமான அருட்திரு யோசப் வாஸ் அடிகளார் முதலிடம் வகிக்கின்றார். அவரை அடுத்து சிறப்புப் பணியாற்றிவர் அருட்திரு ஜாகோமே கொன்சால்வெஸ் அடிகளாராவார். அவர் இலங்கைத் திருச்சபையின் மறை பரப்புப் பணியில் மட்டுமல்ல, நாட்டுக் கலைத்துறையிலும் ஈடுபட்டு, தம் அறிவு, திறன், ஆற்றல்களைப் பயன்படுத்தி, உள்நாட்டுக் கிறிஸ்தவ இலக்கியம், சங்கீதம், நாடகம் போன்ற கலைகளைத் தோற்றுவித்து வளர்ப்பதில் பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறார். அருட்திரு ஜாகோமே கொன்சால்வெஸ் அடிகளார் இந்தியாவில் கோவை பட்டணத்தில் 1676ம் ஆண்டு, ஆனி மாதம் 8ம் திகதி, கொங்கனிப் பிராமணர் குடும்பத்தில் பிறந்தார். சிறு வயதிலேயே அசாதாரண அறிவும், சங்கீதத்

திறன்களும், பன்மொழி பயிலும் ஆற்றல்களும் கொண்டு விளங்கிய அவர், தன் கல்லூரிப் படிப்பை வெற்றியுடன் முடித்து, கோவை சர்வகலாசாலையில சேர்ந்து ஒரு சிறந்த கலைப் பட்டதாரியானார். ஒழுக்கத்திலும், தெய்வ பக்தியிலும் சிறந்து விளங்கிய அவர், இளம் வயதில் ஒரு குருவாக வர விரும்பி, புனித தோமையார் உயர் கல்லூரியில் சேர்ந்து, இறையியல் கற்றார். பெற்றோரின் எதிர்ப்புக்கள், அவர்களால் போடப்பட்ட எத்தனையோ தடைகள் மத்தியிலும், ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு, 1700 ஆண்டு, நவம்பர் மாதம், 2ம் திகதி, ஒறொற்ரோறியன் சபையில் இணைந்து கொண்டார். சர்வகலாசாலையில் தத்துவசாஸ்திரம் கற்பிக்கும் பேராசிரியராக நியமனம் பெற்ற முதல் ஒறொற்ரோறியன் சபைக் குரு அவரேயென்பது குறிப்பிடத்தக்கது. சர்வ கலாசாலையில பட்டதாரிகளுக்குக் கற்றுக்கொடுப்பதைவிட, கிறிஸ்தவத்தை அறியாத பாமர மக்களுக்கு மறைக்கல்வி கற்றுக்கொடுப்பதையே அவர் மிகவும் விரும்பினார். யோசப் வாஸ் அடிகளார் கோவையிலிருந்த தம் சிரேஷ்டரிடம் சில குருக்களை உதவிக்கு அனுப்பிவைக்கும்படி விண்ணப்பித்து எழுதியபொழுது, தன் பேராசிரிய பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தன் சிரேஷ்டரிடம் இலங்கைக்கு மறைப்பணியாற்றச் செல்ல தம் விருப்பத்தைத் தெரிவித்தார். எனவே அவர் 1705ம் ஆண்டு, அருட்திரு மிகுவேல் டி மெல்லோ, யோசே டெ சமேரியா, மனுவேல் டே மிராண்டா என்னும் குருக்களுடன் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

1705ம் ஆண்டு. வைகாசி மாதம், 9ம் திகதி கோவையிலிருந்து புறப்பட்டவர்கள், ஆவணி 30ம் திகதி இலங்கை வந்தடைந்தனர். அந் நீண்ட நாள்கள் கஷ்டமும், ஆபத்தும் நிறைந்த பயணத்தின்போது, அவர்கள் கொச்சியில் தங்கவேண்டி ஏற்பட்டது. அவ் வேளையில், கொன்சால்வெஸ் அடிகளார் இலங்கையில் பேசப்படும் தமிழ் மொழியைப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்டார். அவர்களை இலங்கையில் அன்புடன் வரவேற்ற யோசப் வாஸ் அடிகளார், இலங்கை முழுவதையும் எட்டுப் பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு குருவுக்கும், ஒவ்வொரு பகுதியைப் பொறுப்புக் கொடுத்தார். கொன்சால்வெஸ் அடிகளாரிடம் மன்னார், அரிப்பு, முசலி, மாதோட்டம் பகுதிகள் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் அதைப் பொறுப்பேற்குமுன் அவர் நற்செய்திப் பணியில் பயிற்சிபெறும் பொருட்டும், ஒல்லாந்தரின்

கைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் சூழ்ச்சிகளை அறிந்துகொள்ளும் பொருட்டும், சில காலம் மெனெசெஸ் அடிகளாருடன் யாழ்ப்பாணம் சென்று பணிபுரிந்தார். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொன்சால்வெஸ் அடிகளார் தமிழில் சிறந்த தேர்ச்சி பெற்றுக்கொண்டார். மக்களுக்கு சிறந்த முறையில் மறைக் கல்வி அளிப்பதற்குத் தேவையான கிறிஸ்தவ நூல்கள் தமிழிலும், சிங்களத்திலும் இல்லாமலிருந்தது குருக்களின் மறைப்பணிக்கு ஒரு பெரிய தடையாகவிருந்தது. யோசப் வாஸ் அடிகளார் தமிழையும், சிங்களத்தையும் கற்று, சில நூல்களை எழுதியிருந்தார். ஆனால் அழகிய நடையில் மக்களைக் கவரக்கூடிய விதத்தில் நூல்களை எழுதுவதற்கு, அம் மொழிகளில் சிறந்த அறிவும், விசேட திறனும் தேவை. யார் வழியாக அத்தகைய நூல்களை எழுதுவிக்கலாமெனக் கவலைப் பட்ட வாஸ் அடிகளார், பிற மொழி பயிலுவதில் கொன்சால்வெஸ் அடிகளாருக்கிருந்த திறனையும், ஆற்றலையும், ஆர்வத்தையும் அறிந்து, அவரைக் கண்டிக்கு அழைப்பித்து, தம்முடன் வைத்துக்கொண்டார். அங்கு அவர் நன்றாகச் சிங்களம் கற்பதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். சிங்கள மொழியிலும், கலை, கவிதைகளிலும் சிறந்து விளங்கிய பெத்ரோ கஸ்கன் என்ற ஆசிரியரின் கீழும், சில பௌத்த பிக்குகளின் கீழும் சிங்களம் கற்று, மிக விரைவில் அதில் தேர்ச்சி பெற்றார்.

தம் வாழ்நாளில் சிங்களம், தமிழ், இலத்தீன், போர்த்துக்கேய மொழி, ஸ்பானிய மொழி, ஒல்லாந்த மொழிபோன்ற பன்மொழிகளில் பேச, வாசிக்க, எழுதத் தேர்ச்சிபெற்றிருந்த கொன்சால்வெஸ் அடிகளார், தம் அறிவையும், ஆற்றலையும் மறை பரப்புப் பணிக்குத் திறம்படப் பயன்படுத்தினார். முதலில் யோசப் வாஸ் அடிகளாரால் தமிழில் எழுதப்பட்டிருந்த செபங்களையும், சின்ன உத்தரம், பெரிய உத்தரம் என்னும் மறைக் கல்வி நூல்களையும், பிரார்த்தனைகளையும், சிலுவைப் பாதை, செபமாலைக் காரணிக்கங்களையும் நல்ல தமிழில் எழுதி, அவற்றைச் சிங்களத்தில் மொழி பெயர்த்தார். அதைத் தொடர்ந்து தேவ அருள், தேவ வேத புராணம், நற்செய்தி விரித்துரை, சத்திய வேதாகம சங்சேபம் போன்ற விசுவாசிகளுக்குப் பயனுள்ள நூல்களை சிறந்த சிங்களத்திலும், தமிழிலும் எழுதினார். கல்வினிஸ்ற் மதப் பதிதர்களுக்கு எதிராகத் தர்க்கங்களை நடத்தி வெற்றி பெற்றபின்,

அவர்களுக்கு எதிராக "பேதகாரயங்கே தர்க்கய" என்னும் நூலைச் சிங்களத்தில் எழுதி, அதன் ஒரு பிரதியை அரசனுக்கும் கொடுத்தார். மேலும் அஞ்ஞான மதத்தை எதிர்த்தும், பௌத்த மதத்திலுள்ள தவறுகளை சுட்டிக்காட்டியும், நல்ல சிங்களத்தில், அழகிய நடையில், ஒரு சிறந்த நூலை எழுதினார். அதனால் அவர் உயிருக்கே பெரும் ஆபத்து ஏற்பட்டது. எனினும் இறைவன் அவரைக் காப்பாற்றினார். இவ்வாறு கொன்சால்வெஸ் அடிகளார் சிங்களத்திலும், தமிழிலும், உரை நடையிலும், கவிநடையிலும், எழுதும் உயர்ந்த இலக்கிய மொழியிலும், சாதாரண மக்கள் பேசும் மொழியிலும் எழுதிய நூல்களை கத்தோலிக்கரும், பிற மதத்தினரும் ஆவலுடன் வாசித்தார்கள். அவரது பேரும், புகழும், செல்வாக்கும் நாளுக்கு நாள் அதிகரித்தன. அதைப் பயன்படுத்தி, தர்ம உத்தியானம், அற்புத வரலாறு போன்ற சீவிய வரலாற்று நூல்களையும், அஞ்ஞான அவுஷதய போன்ற தர்க்க நூல்களையும், வேத கவ்விய போன்ற காவியங்களையும், பக்தி நூல்களையும், எழுதினார். அது மட்டுமல்ல, அவர் பல வேத நாடகங்களை, குறிப்பாக இயேசுவின் பாடுகள் பற்றிய நாடகங்களையும் எழுதினார். கொன்சால்வெஸ் அடிகளாரைத் தொடர்ந்து வேறு குருக்களும் சுதேச மொழிகளைக் கற்று, பல நூல்களை எழுதினர். அவற்றுள் கபிரியேல் பச்சேக்கு அடிகளார் எழுதிய "தேவ பிரசையின் திருக்கதை" என்ற இறைமக்கள், திருச்சபையின் வரலாறு குறிப்பிடத்-தக்கது. அவைகளை வாசித்த அறிவாளிகளும், உயர் குலத்தைச் சேர்ந்த பல சிங்களவரும் மனந்திரும்பினார்கள். தேவாலயங்களில் பாடல்கள், சங்கீதங்களுடன் நடைபெற்ற சுற்றுப் பிரகாரங்கள், அழகான நாடகங்கள், திருப்பாடுகளின் காட்சிகளால் கத்தோலிக்கரின் விசுவாசம் எங்கும் பரவி, வளர்ச்சியடைந்தது. பிற மதத்தினரும் கத்தோலிக்க மதத்தைப் போற்றி மதித்தனர்.

1711ம் ஆண்டில் அருட்திரு யோசப் வாஸ் அடிகளார் இறந்த பின், மெனெசெஸ் அடிகளார் இலங்கைத் திருச்சபையின் தலைவராக கடமையாற்றினார். அவர் கண்டி அரசருக்கு அறிமுகமற்றவராக இருந்தபடியால், அரசனுக்குப் பிரியமான கொன்சால்வெஸ் அடிகளாரை கண்டியில் இருத்தி, இலங்கைத் திருச்சபையின் வேலைகளை கவனிக்கும் பொருட்டு, அவரை ஆயரின் உப பிரதிநிதியாக நியமித்தார். கண்டி அரசர் நரேந்திர சிங்க, "சாங்கோபாங்க சுவாமி" என

அழைக்கப்பட்ட கொன்சால்வெஸ் அடிகளாருக்கு விசேட மதிப்பும், அன்பும் காட்டிவந்தான். இதற்கிடையில், இலங்கையின் பல பகுதிகளிலும் பணிபுரியும் குருக்கள் இலகுவில் தம்மைச் சந்திக்கக் கூடிய புத்தளத்திற்கு மென்செஸ் அடிகளார் தமது நடுநிலையத்தை மாற்றிக் கொண்டார். 1724இல் மெனெசெஸ் அடிகளார் இறந்தபொழுது, கொன்சால்வெஸ் அடிகளார் இலங்கைத் தியான சம்பிரதாயச் சபைக் குருக்களின் சிரேஷ்டராகவும், கொச்சின் ஆயரின் பிரதிநிதியாகவும் நியமனம் பெற்றார். சுகவீனம் காரணமாக கோவை சென்றிருந்த மூத்த குருவாகிய சுல்தானா அடிகளார் இலங்கை திரும்பியதும், தம் சிரேஷ்டர் பதவியை அவரிடம் ஒப்படைத்துவிட்டு, கண்டி சென்று அங்கு மறைப்பணி ஆற்றினார். 1730ம் ஆண்டில் தபசு காலத்தில் பயன்படுத்த சிங்களத்திலும், தமிழிலும் வியாகுல பிரசங்கம் என்னும் பசாம் புத்தகத்தை எழுதி வெளியிட்டார். 1730ம் ஆண்டில் சுல்தானா அடிகளாரின் மறைவுக்குப் பின், திரும்பவும் சிரேஷ்டர் பதவியை ஏற்று, தான் இறக்கும் வரையிலும் அப் பதவியை வகித்தார். சிங்கள மொழியில் சிறந்தவர்களாக விளங்கிய மாத்தறையில் வாழும் சிங்களவருக்கென "ப்ரத்யட்ஷிய" என்ற தர்க்க நூலை எழுதினார். அதேபோல் கண்டி பட்டத்து இளவரசனுக்கென "புத்து மூல" என்ற நூலை எழுதி, பௌத்த மதக் கொள்கைகள் பிழையானவையெனத் தெளிவாகக் காட்டினார். பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாட்டினால் கண்டியிலிருந்து, வெளியேறி, தம் தலைமையகத்தை போளவத்தைக்கு மாற்றினார். அங்கு ஒரு தேவாலயத்தை கட்டினார். புதிய கண்டி அரசன் அவருக்கு அன்பளிப்பாக தந்தத்தினால் செய்யப்பட்ட ஒரு மாதா சுரூபத்தை அனுப்பி வைத்தான். இங்கேயே தமது இறுதி நாள் வரை அவர் தங்கியிருந்து, மறைப்பணியாற்றினார். கொன்சால்வேஸ் அடிகளாரின் இலங்கைப் பணி 37 ஆண்டுகளுக்கு நீடித்தது. 1742ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி இறைவனடி சேர்ந்த அடிகளாரின் உடல், போளவத்தையில் அவரால் கட்டப்பட்ட தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது,

1705ம் ஆண்டு தொடக்கம் 1742ம் ஆண்ட வரையிலும் அருட்திரு கொன்சால்வெஸ் அடிகளார் இலங்கையில ஆற்றிய மறைப்பணி அளறப்பரியது, யோசப் வாஸ் அடிகளாருக்குப் பின், கொன்சால்வெஸ் அடிகளாரைப்போல் எவரும் இலங்கைத் திருச்சபைக்கு பணிபுரிய-

வில்லை. அவர் தம் நிர்வாகப் பொறுப்புகள் மத்தியில், கணக்கற்ற பல கஷ்டமான பயணங்களை மேற்கொண்டு, பல பகுதிகளையும், பங்குகளையும் தரிசித்து, நற்செய்தியைப் போதித்து, நூற்றுக்கணக்கான அற்புதங்களைச் செய்து, ஆயிரக் கணக்கான அஞ்ஞானிகளை மனந்திருப்பி, கத்தோலிக்கரை அவர்களது விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, அரும்பணியாற்றியுள்ளார். சிறப்பாக அவர் இலக்கிய, கலை, நாடகத் துறைகளில் ஆற்றிய பணி மிக மகத்தானது. சிங்கள தமிழ் மொழிகளில் சிறந்த தேர்ச்சி பெற்று, இரு மொழிகளிலும் கத்தோலிக்கருடையவும், பிற மதத்தினருடையவும் தேவைகளுக்கேற்ப 42க்கும் அதிகமான நூல்களை, வெவ்வேறு இலக்கிய நடைகளில் எழுதித் தந்திருக்கிறார். அது மட்டுமல்ல பல அகராதிகளையும் இயற்றியிருக்கிறார். அவருடைய எழுத்தாக்கங்கள் எல்லாம் மத, ஆன்மீக இலக்கியங்கள் என்ற ரீதியில் மட்டுமல்ல, அவைகளின் இலக்கிய நடை, மொழி சார்பான பெறுமதிகளின் நிமித்தமும் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. அவர் தன் கருத்துக்களை விளக்குவதற்கு உவமானங்களை, ஒப்புவமைகளைப் பயன்படுத்துவதில் அதி சிறந்த வல்லுநர். சிங்கள இலக்கிய வரலாற்றில் அவரே இத் துறையில் முதலிடம் வகிக்கிறார். அவர் தமிழ் சிங்கள கத்தோலிக்க இலக்கியத் துறைக்குச் செய்த பெரிய பங்களிப்பின் நிமித்தம் "கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை" எனப் பலராலும் போற்றப்படு-கிறார். அவர் எழுதிய பல நூல்கள் இன்றும் உபயோகத்தில் உள்ளனவென்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய ஆக்கங்கள் அவரைப் பின் தொடர்ந்து வந்த குருக்களும், மறை பரப்பாளர்களும், சிங்கள, தமிழ் மொழிகளைக் கசடறக் கற்கவும், இலக்கிய துறையில் ஈடுபடவும், சுதேச மொழிகளில் நூல்களை எழுதவும் தூண்டுகோலாய் அமைந்தன.

## 8.1.3.10. ஒறற்ரோறியன் மறைப் போதகர்களது பணி

போர்த்துக்கேயர் கீழைத் தேச நாடுகளைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில், இந்தியாவிலிருந்த கோவை நகரமே அவர்கள் ஆட்சியின் நடுநிலையமாக இருந்தது. அங்கு குருக்களைப் பயிற்றுவிக்கும் உயர்தரக் கல்லூரிகள் பலவிருந்தன. பல இந்திய இளைஞர்கள் அங்கு கல்வி பயன்று மேற்றிராசனக் குருக்களாகத் திருநிலைப் படுத்தப்பட்டனர். ஆனால் அக்காலத்தில் கீழைத்

தேசங்களில் மறைப்பணிபுரிந்த ஐரோப்பிய துறவற சபைகள் துறவற குருக்களாக வரவிரும்பிய இந்தியர்களை தங்கள் சபைகளில் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே துறவற பொது வாழ்கை வாழ விரும்பிய சில இந்திய மேற்றிராசனக் குருக்கள் ஒன்றுகூடி சிறிய குழுக்களாக வாழ முயன்றனர். ஆனால் அவை பெரும்பாலும் நீண்ட காலத்துக்கு நீடிக்கவில்லை. இவ்வாறு பொது வாழ்வு வாழ விரும்பியர்களுள் அருட்திரு பாஸ்கால் டா கொஸ்ரா ஜெரெமியாஸ் என்பவரும் ஒருவர். இவர் இன்னும் மூன்று சக இந்திய மேற்றிராசனக் குருக்களோடு இணைந்து, துறவற வார்த்தைப்பாடுகளின்றி, பொது வாழ்வு வாழ முயன்றார். ஆனால், அது நீண்ட காலம் நீடிக்கவில்லை. சிறிது காலத்துக்குப் பின் வேறு இரு குருக்களோடு இணைந்து முயற்சித்தார். நீண்ட காலமாக இலங்கைக்குச் சென்று அங்கு குருக்-களின்றித் தவிக்கும் கத்தோலிக்க மக்களுக்குப் மறைப்பணி புரியவேண்டுமென்று ஆவலாய் இருந்த ஒரு மேற்றிராசனக் குருவான அருட்திரு யோசப் வாஸ் அடிகளாரும் அவர்களுடன் இணைந்து கொள்ளவிரும்பி அனுமதி கேட்டார். எனவே அவர் 1685ம் ஆண்டு, புரட்டாசி மாதம், 25ம் திகதி ஒரு உறுப்பினராக அக் குழுவினுள் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இலங்கைக்குச் செல்லவேண்டுமென உறுதியா-யிருந்த யோசப் வாஸ் அடிகளார் அக் குழுவில் இணைந்தது பெரிய ஆச்சரியமாகவிருந்தது. எனினும் காலப்போக்கில் இது அவர் இலங்கையில் ஆரம்பிக்கவிருக்கும் மறைப்பணி தொடரப்பட இறைவன் வகுத்த திட்டமென்பது தெரிய வந்தது. விரைவில் இலங்கையில் கத்தோலிக்க விசுவாசத்தைக் காப்பாற்ற இறைபராமரிப்பில் உருவாகிய துறவற சபையே ஒறற்ரேறியன் சபையென்ற கருத்து கத்தோலிக்கரிடையே பரவியது.

வெகு விரைவில் அக் குழுவின் சிரேஷ்டராகத் தெரிவு செய்யப்பட்ட யோசப் வாஸ் அடிகளார், தன் எடுத்துக்காட்டான துறவற வாழ்வினால் குழுவிலே ஒழுங்கும், அப்போஸ்தொலிக்க ஆர்வமும் ஏற்படுத்தி, வளர்த்தார். அக் குழுவின் வளர்ச்சியைக் கண்ட இன்னும் பல இந்திய மேற்றிராசனக் குருக்கள் அதிலே இணைய முன்வந்தனர். குழு உறுப்பினர்களின் சம்மதத்துடன் அக் குழுவிற்கு "புனித பிலிப்பு நேரியாரின் ஒறற்றரி" (தியான சம்பிரதாயச் சபை) எனப் பெயரிட்டார். யோசப் வாஸ் அடிகளாரால் கோவையில் தாபிக்கப்பட்ட இந்த

ஒறற்றரியே ஆசியாவிலுள்ள ஒரேயொரு ஒறற்றரியாகத் திகழ்ந்தது. அதுவே அடுத்த 150 ஆண்டுகளுக்கு இலங்கையில் மறைப்பணியைப் பொறுப்பெடுத்து நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது. யோசப் வாஸ் அடிகளார் இலங்கை சென்று பணிபுரியும் தன் திட்டத்தைக் கைவிட்டுவிடவில்லை. 1686ம் ஆண்டில் சபையின் சிரேஷ்டர் பதவியை மீண்டும் பாஸ்கால் அடிகளாரிடம் ஒப்படைத்து விட்டு, இலங்கைக்குச் சென்றார். ஒல்லாந்தர் இலங்கையைப் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய பொழுது, அங்கிருந்த ஏறக்குறைய 120 போர்த்துக்கேய குருக்களையும் போர்த்துக்கேய படைவீரர்களோடு நாட்டிலிருந்து வெளியேற்றிவிட்டு, வெளிநாடுகளிலிருந்து அங்கு கத்தோலிக்க குருக்கள் வருவதைத் தடைசெய்திருந்தனர். எனவே யோசப் வாஸ் அடிகளார் 1687ம் ஆண்டு வைகாசி மாத முடிவில் தன் வேலையாள் யோணுடன் மாறுவேடம் பூண்டு, ஒரு கூலிக்காரனைப்போல் பயணம் செய்து, மன்னாருக்குச் சென்று, அங்கிருந்து கத்தோலிக்கர் பெருந் தொகையாக வாழ்ந்த யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தார். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அங்கு பணியாற்றிய பின், அவர் யாழ்ப்பாணம் வந்த செய்தி ஒல்லாந்தருக்குத் தெரிய வரவே, அங்கிருந்து மாறு வேடத்தில் புறப்பட்டு, ஒல்லாந்தரினால் துன்புறுத்தப்பட்ட கத்தோலிக்-கருக்கு தஞ்சம் அளித்த கண்டி அரசனின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமான புத்தளம் சென்றார். சில காலம் அங்குள்ள கத்தோ-லிக்கருக்குப் பணியாற்றிய பின், அரசின் தலைநகராகிய கண்டிக்குச் சென்றார். அங்கு ஆட்சிசெய்த அரசன் இரண்டாவது விமல தர்ம சூரியாவின் தயவு அவருக்குக் கிடைக்கவே, தன்னுடைய மறைப்-பணியின் நடுநிலையத்தைக் கண்டியிலேயே அமைத்துக் கொண்டார்.

ஒல்லாந்தருடைய வருகை தொடக்கம் அருட்திரு வாஸ் அடிகளாரின் வருகைவரை (1658-1687) இலங்கைக் கத்தோலிக்கருக்கு மறைப்பணியாற்ற ஒரு குருவென்றாலும் இருக்க வில்லை. யோசப் வாஸ் அடிகளார் வந்தபின் ஏறக்குறைய முதல் பத்து ஆண்டுகளுக்கு அவரே தட்டந்தனியப் பணியாற்றினார். 1696ம் ஆண்டு முடிவில் தியான சம்பிரதாயச் சபையைச் சேர்ந்த அருட்திரு யோசவ் டி மெனெசெஸ் அடிகளாரும், யோசவ் கார்வாலோ அடிகளாரும் வந்தனர். தொடர்ந்து 1703இல் அதே சபையைச் சேர்ந்த பெத்ரோ டி சல்டனா அடிகளாரும். 1705அல் யோசவ் டி மரியா, மனுவேல் டி மிராண்டா, யாக்கொமே

கொன்சால்வெஸ், மிக்கேல் டி மெல்லோ அடிகளார்களும் வந்தனர். 1708இல் இக்னாசியோ டி அல்மெய்டா, பிறாசீலியோ பறெற்றோ அடிகளார்கள் வந்தனர். இப்படியாக 1842ம் ஆண்டு விசுவாசப் பரப்புதல் சபையினால் அனுப்பப்பட்ட ஆங்கில மறைபரப்பாளர்கள் வரு மட்டும், தியான சம்பிரதாயச் சபைக் குருக்களே முக்கியமாக இலங்கையில் மறைப்பணியாற்றினார்கள் என்பது குறிப்பிடத் தக்கது, இடையிடையே சில மேற்றிராசனக் குருக்களும் அவர்களுக்கு உதவியாக இந்தியா-விலிருந்து அனுப்பப்பட்டனர். யோசப் வாஸ் அடிகளார் இறந்தபொழுது பத்துக் குருக்களும், பின்பு ஏறக்குறைய 16 குருக்களும் ஒரே நேரத்தில் இலங்கையில் பணிபுரிந்தனர். கோவையில் யோசப் வாஸ் அடிகளார் தாபித்த ஒறற்ரோறியன் சபைக் குருக்களே இலங்கையில் அவர் ஆரம்பித்த மறைப்பணியைத் தொடர்ந்தாற்ற அனுப்பப்பட்டனரென்பது குறிப்பிடத்தக்கது.

கொச்சின் ஆயரின் பிரதிநிதியும், இலங்கை ஒறற்ரோறியன் சபைச் சிரேஷ்டருமாகிய யோசப் வாஸ் அடிகளாரே அவர்களின் மறைப்பணியை வழிநடத்தி, அதற்குரிய ஒழுங்குகளையும், போதனா முறைகளையும் வகுத்து மேற்பார்வை செய்தார். இலங்கை வெவ்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியினதும் மறைப்பணிப் பொறுப்பு வெவ்றேு குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் அரசியல் ஆதிக்கம் செலுத்தவோ, வர்த்தகம் செய்யவோ இலங்கைக்கு வரவில்லை. அவர்கள் மறைப்பணிக்காகவே தங்களை முழுவதும் அர்ப்பணித்து வந்தமையால், அதிலேயே தங்கள் கவனத்தையும், நேரத்தையும் செலவிட்டனர். தம் பணிகளில் பொதுநிலையினரின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெருமளவில் பெற்றுப் பயன்படுத்தினர். ஒவ்வொரு கிராமத்துக்கும், ஆலயத்தைப் பராமரிப்பதுபோன்ற லௌகீக விடயங்களைக் கவனிக்க, மூப்பர்களையும், செபம் வாசித்தல், வழிபாடுகளைத் தலைமைதாங்கி நடத்துதல் போன்ற ஆன்மீக விடயங்களைக் கவனிக்க அண்ணாவிமார்களையும் நியமித்தனர். இலங்கை மக்கள் பெரும்பாலும் போர்த்துக்கேய மொழியைப் பேசினதால், கோவையில் போர்த்துக்கேய மொழியில் கற்ற குருக்களுக்கு மக்களோடு தொடர்பு கொள்வது, வழியாடுகளை நடத்துவது, நற்செய்தியைப் போதிப்பது இலகுவாகவிருந்தது. இருந்தும் யோசப் வாஸ் அடிகளார் குருக்களெல்லாரும் இலங்கைத் தேசிய மொழிகளான

தமிழையும், சிங்களத்தையும் படிக்கவேண்டுமென வற்புறுத்தினார். கொன்சால்வெஸ் அடிகளார் சிங்களத்தையும், தமிழையும் நன்கு கற்று, அம் மொழிகளில் மக்களுக்குப் பிரயோசனமான நல்ல நூல்களை எழுதும்படி பணிக்கப்பட்டார். வாஸ் அடிகளாரே மறைபரப்பாளர்களுக்கும், கத்தோலிக்கருக்கும் பயனுள்ள சில நூல்களை எழுதியுள்ளார். பௌத்த சமயம், இந்து சமயம், இஸ்லாம் போன்ற பிற மதங்களை அவர்கள் அறிந்து, மதித்தனர். நாட்டில் காணப்படும் பரம்பரை பழக்கவழக்கங்களை, நடைமுறைகளை, அவை ஒழுக்கத்துக்கும் விசுவாசத்துக்கும் முரணானவையாக இருந்தாலன்றி, அவற்றைத் தடை செய்யக்கூடாதெனவும் அவர்களுக்குக் கண்டிப்பாகக் கூறப்பட்டது.

கண்டி அரசிலும், குறிப்பாக ஒல்லாந்தரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலும், அவர்கள் தங்கள் மறைபரப்புப் பணியின் பொருட்டு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. கண்டி அரசில் அவர்கள் மலைகளில் ஏறி இறங்கி, காடுகளையும், ஆறுகளையும் கடந்து, மழையிலும் குளிரிலும் பயணம் செய்யவேண்டியிருந்தது. அந்த நாட்களில் பாதைகளோ தெருக்களோ இருக்கவில்லை. மக்கள் பல இடங்களிலும் சிதறுண்டு வாழ்ந்தனர். கத்தோலிக்க மதத்தைத் தழுவுவதினால் மக்களுக்கு எவ்வித சலுகைகளோ, உலக நன்மைகளோ கிடைக்கவில்லை. மாறாக பௌத்த மதத்தினரினதும், ஒல்லாந்தரினதும் எதிர்ப்புகளும், துன்புறுத்தல்களுமே இருந்தன. ஒல்லாந்தர்கள் தம் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கத்தோலிக்க குருக்களுக்கும், வழிபாடுகளுக்கும் தடை போட்டிருந்தனர். அங்கு இரவுவேளைகளில் குருக்கள் கூலி, பிச்சைக்காரன், மீன் வியாபாரி போன்ற மாறுவேடங்களில் பயணம்செய்து, மக்களைச் சந்தித்து, இரகசியமாக வழிபாடுகளை நடத்தவேண்டியிருந்தது. தாங்கள் தங்குமிடங்களை ஒவ்வொரு இரவும் மாற்ற வேண்டியிருந்தது. எனினும் அத்தனைக்கும் மத்தியில் ஒறற்ரோறியன் குருக்கள் தம் மறைபரப்புப் பணியை மிக ஆர்வத்துடன் நிறைவேற்றி, அதில் வெற்றியும் கண்டனர். கத்தோலிக்கருக்கு எதிராக ஒல்லாந்தர் திரும்பத் திரும்ப ஏற்படுத்திய சட்டங்களும், கண்டி அரசனான விமல தர்ம சூரியனிடம் பௌத்த குருக்களாலும், தலைவர்களாலும் செய்யப்பட்ட முறைப்பாடுகளும், அதற்குச் சான்று பகர்கின்றன. கத்தோலிக்கர்கள் தங்கள் விசுவாசத்தையும், குருக்களையும் மிகவும் நேசித்தனர். குருக்கள் அடிக்கடி வீடுகளையும், குடும்பங்களையும்

தரிசித்து, அவர்களின் இன்பதுன்பங்களில் பங்குபற்றி, ஆறுதல், ஆலோசனைகள் கூறி, மக்களை வழிநடத்தினர். அலங்காரத்துடனான திருப்பவனிகள், பாடல்கள் சங்கீதங்களுடனான, ஆழ்ந்த கருத்துள்ள, அழகான வழிபாடுகளும், திருவிழாக்களும் பிற மதத்தினரைப் பெரிதும் கவர்ந்தன. குருக்களினதும், மறைபரப்பாளரினதும் கடின தியாகங்கள் நிறைந்த, எளிய, விரதத்துவ, எடுத்துக்காட்டான வாழ்க்கையும், பஞ்சம், கொள்ளை நோய் போன்ற கஷ்டமாக காலங்களின் அவர்கள் ஆற்றிய பிறரன்புப் பணிகளும், சமூக நல சேவைகளும் மக்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

கண்டியை ஆண்ட சிங்கள அரசர்களாகிய இரண்டாவது இராஜ சிங்கவும். விமல தர்ம சூரியவும், நரேந்திர சிங்கவும் கத்தோலிக்க மக்களுக்கும், ஒறற்ரோறியன் குருக்களுக்கும் பேராதரவு காட்டினர். நரேந்திர சிங்கவுக்குப் பிறகு அவனுடைய அரசியின் சகோதரனான ஒரு மதுரை நாயக்கர், சிறீ விஜய இராஜசிங்க என்ற பெயருடன் அரசனானான். அவன் இளவரசனாகவிருக்கும் பொழுது கத்தோலிக்கர் மட்டில், சிறப்பாக அருட்திரு கொன்சால்வெஸ் அடிகளார் மட்டில், பெரும் மதிப்பும், பற்றும் கொண்டு, பல வழிகளில் அவற்றை வெளிப்படுத்தி வந்தான். அவன் பிறப்பு வளர்ப்பில் ஒரு இந்து. எனினும் அவன் அரசேறிய பொழுது, மக்களின் மதமாகிய பௌத்த சமயத்தைத் தழுவவேண்டியிருந்தது. அவன் கத்தோலிக்கருக்குக் காட்டிய அன்பும், ஆதரவும் பௌத்தர்களுக்கும், ஒல்லாந்தருக்கும் பிடிக்கவில்லை. நரேந்திர சிங்கவால் அரச மாளிகையிலிருந்து துரத்தப்பட்ட வெலிவிற்ற சரணங்கர என்ற பௌத்த குரு, மாளிகைக்குத் திரும்பி வந்து, பௌத்த மத மறுமலர்ச்சியை ஊக்குவித்தார். ஒல்லாந்த அதிகாரிகள் அவரை கத்தோலிக்கருக்கு எதிராகத் தூண்டிவிட்டனர். 1746ம் ஆண்டு ஒல்லாந்த அதிகாரிகள் கத்தோலிக்க குருக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி கண்டி அரசனை வற்புறுத்த, பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தினர், பிக்கு சரணங்கரா தலைமையில், கத்தோலிக்க குருக்களை கண்டியிலிருந்து முற்றாக அகற்றும்படி அரச மாளிகையில் கலகம் செய்தனர். அரசன் பிற நாட்டவனாக இருந்ததினால் பயந்தான். அரச அதிகாரிகள் அதைப் பயன்படுத்தி, கண்டி, சீதவாக்கை, புத்தளம், போளவத்தை போன்ற இடங்களிலிருந்த ஆலயங்களை அழித்து, அங்கிருந்த திருச் சுரூபங்களையும், புத்தகங்களையும் அரச

மாளிகைக்கு கொணர்ந்தனர். அனைத்துக் குருக்களும் கைது செய்யப்பட்டனர். அவர்களை கோவைக்கு திருப்பி அனுப்பிவிட அரசன் முற்பட்டபோது, வன்னிச் சிற்றரசன் அவர்களை ஏற்றுக்கொண்டான். அதைத் தொடர்ந்து கண்டி அரசில் சில கேடுகள் ஏற்பட்டபடியால் அச் சுரூபங்களும், புத்தகங்களும் கத்தோலிக்கரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டன. 1762 முதல் 1765 வரை ஒல்லாந்தருக்கும் கண்டி அரசுக்குமிடையே போர் மூண்டது, கத்தோலிக்கரின் உதவியைப் பெற விரும்பிய ஒல்லாந்தர், அவர்களுக்குச் சிறிது மதச் சுதந்திரம் அளித்தனர். ஒல்லாந்தரின் பகுதிகளில் வாழவும், கோவில்கள் கட்டவும் அனுமதி வழங்கினர். கத்தோலிக்கரும் ஒல்லாந்தருடன் சேர்ந்து கொண்டனர். அழிந்த கோவில்கள், குறிப்பாக போளவத்தையிலிருந்த கோவில், திரும்பக் கட்டப்பட்டன. ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களும் படிப்படியாக ஓய்ந்தன.

ஒல்லாந்தரின் ஆட்சியின் ஆரம்பத்தில் பயந்து, ஒழிந்து, மறைவாக தம் விசுவாசத்தை வாழ்ந்த கத்தோலிக்கர், பின்னர் ஒறற்ரோறியன் குருக்களின் மறைப்பணியாலும், நற்போதனையினாலும் திடம், உறுதி பெற்றவர்களாய், எம் மிரட்டலுக்கும், தண்டனைக்கும் அஞ்சாமல், தம் விசுவாசத்தை பகிரங்கமாகக் கடைப்பிடித்து வாழ முற்பட்டனர். சிற்றாலயங்களைக் கட்டி, அங்கு கூடி தம் வழிபாடுகளை நடத்தினர். தம் மத சுதந்திரத்துக்காக ஒல்லாந்த அதிகாரிகளிடம் வாதாடி, மேல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்தனர். அவர்களின் தப்பறையான போதனைகளை பகிரங்கமாக எதிர்த்து வாதாடினர். இவையெல்லாம் ஒறற்ரோறியன் குருக்கள் அவர்கள் மத்தியில் ஆற்றிய மறைப்பணியின் விளைவுகளென்பதை ஒல்லாந்த அதிகாரிகளே ஏற்றுக்கொண்டனர். மறை பரப்புப் பணியிலே ஆசிய குருக்கள் ஐரோப்பிய குருக்களுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்களல்லர் என்பதை எண்பித்தனர். அவர்களும் திருச்சபையில் எந்த உயர்ந்த பதவியையும் ஏற்று, பொறுப்புடன் திறம்படச் செய்யக்கூடியவர்கள் என்பதைக் காட்டினர். இவ்வாறு யோசப் வாஸ் அடிகளாரும், அவருடைய தியான சம்பிரதாயக் குருக்களும், இலங்கையில், எத்தனையோ கஷ்டதுன்பங்கள் மத்தியில், தொடர்ச்சியாக 150 ஆண்டுகள் ஆற்றிய அரும் பணியினால் கத்தோலிக்க விசுவாசம் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டு, உறுதியுடன் வளர்ந்தது.

## 8.1.4. ஆங்கிலேயர் காலம் (1796-1948)

16ம் நூற்றாண்டில் கீழைத் தேச நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் நோக்குடன் இந்தியாவிற்கு வந்த போர்த்துக்கேயர், பின் இலங்கையைக் கைப்பற்றி, கீழைத் தேச வர்த்தக ஏகபோக உரிமை-யைத் தமக்குச் சொந்தமாக்கிப் பெரும் வருவாயைச் சம்பாதித்தனர். அதைக் கண்ட ஒல்லாந்தரும் 17ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரின் கீழைத் தேச வர்த்தக உரிமைக்குச் சவாலிட்டு, ஒல்லாந்த கிழக்கிந்திய கொம்பனி மூலமாக 1660ம் ஆண்டளவில் போர்த்துக்கேயரின் கீழைத்தேச உடைமைகளை எல்லாவற்றையும் கைப்பற்றி, வர்த்தக உரிமையைத் தமதாக்கினர். இதைக் கண்ணுற்ற ஆங்கிலேயரும். பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேய கிழக்கிந்திய கொம்பனி, பிரான்சிய கிழக்கிந்திய கொம்பனிகளை அமைத்து, கீழைத் தேச வர்த்தக ஆதாயத்திலே தாங்களும் பங்குபெற முயன்றனர். 1600 ஆண்டு தாபிக்கப்பட்ட ஆங்கிலேய கிழக்கிந்திய கொம்பனிக்கு இங்கிலாந்து அரசி முதலாவது எலிசபெத் அம்மையார் கீழைத் தேசங்களுடன் வர்த்தகம் செய்யும் ஏக உரிமையை அளித்தார். 1608ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேய கிழக்கிந்திய கொம்பனி, இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய இந்திய அரசரின் அனுமதி பெற்று, சுராத்திலும் (1608), மாசுலிபட்டத்திலும் (1925), மதராசிலும் (1639), பம்பாயிலும் (1661), கல்கத்தாவிலும் (1690) தம வர்த்தக நிலையங்களையும், குடியிருப்புகளையும் அமைத்தனர். அவர்களை அடுத்து, 1664ம் ஆண்டில் ஆரம்பமாகிய பிரான்சிய கிழக்கிந்திய கொம்பனியும் இந்தியாவிற்கு வந்து, பொண்டிச்சேரியிலும், காரைக்காலிலும், சாந்திநகரிலும் தம் குடியிருப்புகளை அமைத்தனர். ஆரம்பத்தில் ஆங்கிலேயருக்கோ, பிரான்சுக்காரருக்கோ வர்த்தகம் தவிர, நாடுகளைக் கைப்பற்றும் நோக்கம் எதுவும் இருக்கவில்லை. ஆனால் 1707ம் ஆண்டு, முகால் பேரரசரின் மரணத்தை அடுத்து, நிலைமை மாறியது. பேரரசில் அரச உரிமைக்காக ஏற்பட்ட போட்டி பூசலினால் பேரரசு சிதைவுண்டு, பல சிறிய அரசுகள் தோன்றின. அவைகளுக்குள் சண்டைகள் ஏற்பட்ட-பொழுது, அவர்கள் ஆங்கிலேயரின், பிரான்சுக்காரரின் உதவியை நாடினர். எனவே வெவ்வேறு பகுதிகளில் ஆங்கிலேயரும், பிரான்சுக்காரரும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். அதுமட்டுமல்ல,

ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும் பிரான்ஸ்சுக்கும் போர் ஏற்பட்ட வேளைகளில், அதன் பிரதிபலிப்பு இந்தியாவிலும் இடம்பெற்றது, ஆங்கிலேயரும், பிரான்ஸ்சுக்காரரும், ஒருவர் ஒருவருடைய பகுதிகளைத் தாக்கிக் கைப்பற்றினர்.

1773ம் ஆண்டில் ஆங்கிலேய கிழக்கிந்திய கொம்பனியின் கீழிருந்த பகுதிகளின் நிர்வாகம் ஆங்கிலேய அரசாங்கத்தின் கீழ் வந்தது. ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் ஒரு கவனர் நியமிக்கப்பட்டு, பெங்காலின் கவனர் கவன ஜெனராலாக நியமனம் பெற்றார். ஆங்கிலேயர் இந்தியாவில் பிரான்சின் வலிமையை முடிவுக்குக் கொணர்ந்து, தங்களின் வலிமையை அதிகரித்து உறுதிப்படுத்த விரும்பினர், அதற்கு தாங்கள் இந்து மாசமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்தி, இந்தியாவின் கிழக்கு மேற்குக் கரையோரங்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்து, வங்காள விரிகுடாவில் ஒரு தகுந்த துறைமுகத்தை வைத்திருக்க வேண்டுமென உணர்ந்தனர். இலங்கையில் ஒரு துறைமுகத்தை வைத்திருப்பதே எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையுமென்று தீர்மானித்தனர். அவர்களுடைய கவனமெல்லாம் திருகோணமலைத் துறைமுகத்தையே நோக்கி நின்றது.

## 8.1.4.1. ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றுதல்

ஆங்கிலேயர்களுடைய கவனமெல்லாம் திருகோணமலைத் துறைமுகத்தையே நோக்கி நின்றது. எனவே அவர்கள் 1762ம் ஆண்டில், பைபஸ் என்ற தம் தூதுவரை கண்டி அரசனிடம் அனுப்பினர். ஒல்லாந்தருடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்த கண்டி அரசர், ஒல்லாந்தரை இலங்கையிலிருந்து விரட்ட ஆங்கிலேயர் உதவிசெய்தால், அவர்கள் கேட்கும் திருகோணமலைத் துறைமுகத்தை அவர்களுக்குக் கொடுப்பதாகக் கூறினார். இத் தருணத்தில் ஆங்கிலேயருக்கும், ஒல்லாந்தருக்கும் நல்லுறவு இருந்ததினால், ஒல்லாந்தரைத் தாக்க ஆங்கிலேயர் நல்ல தருணத்தைக் காத்திருந்தனர். 1792ம் ஆண்டு, ஐரோப்பாவில், பிரான்சுக்கும், ஒல்லாந்துவுக்கும், பின்பு ஒல்லாந்துக்கும், இங்கிலாந்துக்கும் இடையில் போர் மூண்டது. அத் தருணத்தைப் பயன்படுத்தி, இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர் இலங்கையிலிருந்த ஒல்லாந்தரைத் தாக்கினர். திருகோணமலையிலிருந்த பிறெட்றிக் கோட்டையே முதல் தாக்கப்பட்டு, 1795ம் ஆண்டு, ஆவணி மாதம்,

26ம் திகதி, திருகோணமலை ஆங்கிலேயர் வசம் வந்தது. அடுத்து யாழ்ப்பாணம் புரட்டாசி 27ம் திகதியும், மன்னார் ஐப்பசி 5ம் திகதியும், கல்பிட்டியா கார்த்திகையிலும், கடைசியாக கொழும்பு 1796ம் ஆண்டு மாசி மாதம் 14ம் திகதியும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. இவ்வாறு 1796ம் ஆண்டு மாசி மாதம் 16ம் திகதி இலங்கையிலிருந்த ஒல்லாந்தரின் உடமைகளெல்லாம் ஆங்கிலேய கிழக்கிந்திய கொம்பனியின் கைக்கு மாறின. தொடர்ந்து 1802 இல் அனைத்து கரையோரப் பகுதிகளும் கைப்பற்றப்பட்டன.

மேலும் போர்துக்கேயர், ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலத்தில், கண்டி அரசு ஒரு சுதந்திர தனி அரசாகவே இருந்து வந்தது. ஆங்கிலேயரின் ஆட்சியின் ஆரம்பத்திலும் அது அவ்வாறே இருந்து வந்தது. ஏறக்குறைய 300 ஆண்டு காலமாக இலங்கையில் ஒரே தனிச் சுதந்திர அரசாக இருந்து வந்த கண்டி அரசு, 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆட்டம் கண்டது. 1739ம் ஆண்டு தொடக்கம் கண்டி அரசை ஆண்ட கடைசி மூன்று அரசர்களும் இந்தியாவைச் சேர்ந்த நாயக்கர் குடும்பத்தைச் சேர்ந்த தமிழர்கள். சிங்கள அதிகாரிகள் பலர் அரச பதவிக்கு உரிமை கோரிச் சண்டை பிடித்தார்கள். அவர்கள் அரசருக்கு எதிராகத் திட்டம் தீட்டினார்கள். அதை அறியவந்த அரசர் அந்த அதிகாரிகளைக் கைதுசெய்து, கொலை செய்தார். அதில் தொடர்புடைய சில பௌத்த குருக்களுக்கும் அதே கதியே நடந்தது. இது அரசருக்கும் மக்களுக்குமிடையே பிளவை ஏற்படுத்தியது. மக்கள் அரசரை வெறுத்துப் பகைத்தார்கள். தம்மை அரசரின் கொடுமையி-லிருந்து விடுவித்து, அப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க, ஆங்கிலேயரின் உதவியை நாடினார்கள். இது ஆங்கிலேயருக்கு கண்டிக்குள் நுழைவதற்குச் சந்தர்ப்பம் அளித்தது. அரசர் கைது செய்யப்பட்டு, கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டார். மக்கள் தங்கள் பிரச்சினை-யைத் தீர்த்துவிட்டு, ஆங்கிலேயர் கண்டியிலிருந்து வெளியேறிவிடு-வார்களென எதிர்பார்த்தார்கள். ஆனால் ஆங்கிலேயர், அதற்கு மாறாக, தம் ஆட்சியை அங்கு நிலைநாட்டி உறுதிசெய்தார்கள். இவ்வாறு 1815ம் ஆண்டு, 300 ஆண்டுகளாக சுதந்திரத் தனி அரசாகவிருந்த கண்டி அரசும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டது. இவ்வாறாக 1815 இல் முழு இலங்கையும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது.

ஆங்கிலேயர் நாட்டைக் கைப்பற்றும் நோக்குடன் இலங்கைக்கு வரவில்லை. யுத்த தந்திரப்படி முக்கியமான இடத்தில் இலங்கை இருந்ததினாலேயே அவர்கள் இங்கு வந்தனர். குறிப்பாக இந்தியாவிலுள்ள அவர்களின் வர்த்தக நிலையங்களை பிரான்சுக்காரரிடமிருந்து பாதுகாக்க அவர்களுக்கு அவசியமாயிருந்த துறைமுகம் திருகோணமலையில் அமைந்திருந்ததே அவர்களை இங்கு வரச் செய்ததுதென்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பாவில் ஆங்கிலேய-ஒல்லாந்த போர் முடிவுற்றதும், திருகோணமலை தவிர்ந்த ஏனைய பகுதிகளை ஒல்லாந்தரிடம் திருப்பிக் கையளிப்பதே அவர்கள் திட்டமாகவிருந்தது.

**மதச் சுதந்திரம்**

ஆங்கிலேய கிழக்கிந்திய கொம்பனியால் கைப்பற்றப்பட்ட இலங்கையின் சிவில் நிர்வாகம் இலங்கையிலுள்ள ஆங்கிலேயப் படையின் தளபதியான கேர்ணல் ஜேம்ஸ் ஸ்டுவார்ட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆங்கிலேயர் பொதுவாக அங்கிளிக்கன் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாகவிருந்தாலும், கத்தோலிக்கர் மட்டில் மிகவும் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொண்டார்கள். தளபதி ஸ்டுவார்ட்டைத் தரிசித்த இலங்கை ஒறொற்ரோறியன் சபைச் சிரேஷ்டரான வண. டொமிங்கோஸ் மொன்ரெய்றோ அடிகளார் தம் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து, ஒல்லாந்தரின் கீழ் தாங்கள் அனுபவித்த துன்பங்களை எடுத்துக்கூறி, தம் மறைப்பணியை நிறைவேற்றவும், கத்தோலிக்க வழிபாடுகளை ஒழுங்குசெய்து நடத்தவும், குறிப்பாக கத்தோலிக்கரின் திருமணங்களை கத்தோலிக்க ஆலயங்களில் கத்தோலிக்க முறைப்படி, கத்தோலிக்க குருக்கள் செய்து வைக்கவும் அனுமதி கேட்டார். அவருடைய விண்ணப்பத்துக்கு அவதானமாய் செவிமடுத்த தளபதி, அவர் கேட்ட அனுமதியை வாய்மொழியாகக் கொடுத்தார். பின்பு, ஆங்கிலம், ஒல்லாந்தம், போர்த்துக்கேயம் ஆகிய மும்மொழிகளில் அதுபற்றிய அறிக்கையொன்று 1796ம் ஆண்டு, ஆவணி மாதம், 3ம் திகதி வெளியிட்டார். அதன்படி இலங்கையிலிருக்கும் றோமன் கத்தோலிக்க குருக்களுக்கு, தம் மத முறைப்படி வழிபாடுகளை தங்குதடையின்றி நடத்த அனுமதியளித்து, அதை எவரும் தடை செய்யக்கூடாதெனக் கட்டளையிட்டார். 1798ம் ஆண்டில் பிறெடறிக்

நோத் என்பவர் இலங்கையின் சிவில் நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்தார். அவர் தம் பதவியைப் பொறுப்பேற்க வருமுன், அவரது பொறுப்பில் வாழும் மக்களுக்கு மனச்சாட்சிச் சுதந்திரம் அளித்து, தம் விருப்பப்படி தம் மத வழிபாடுகளை அனுசரிக்க அனுமதிக்கும்படியும், கத்தோலிக்கர் மட்டில் விசேட இரக்கம் காட்டுமாறும் ஆங்கிலேய அரசரால் கேட்கப்பட்டிருந்தார். அவர் 1799ம் ஆண்டு, மாசி மாதம், 26ம் திகதி இலங்கைக் கத்தோலிக்க மக்களுக்கு எழுதிய கடிதத்தில் கிறிஸ்தவம், கத்தோலிக்கம், இஸ்லாம், பௌத்தம், மற்றும் அஞ்ஞான மதங்கள் இலங்கையில் இருப்பதை ஏற்றுக் கொண்டார். கத்தோலிக்கரின் கவனிப்பற்ற பரிதாப நிலையை ஒப்புக்கொண்ட அவர், தளபதி ஸ்டுவார்ட்டைத் தொடர்ந்து, திருமணத்தின்போது அவர்கள்மேல் சுமத்தப்பட்ட வரிகளையும், அவர்கள் தம் இறந்தவர்களை புரட்டஸ்தாந்து சேமக்காலைகளில், புரட்டஸ்தாந்து முறைப்படி அடக்கம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுவதையும் தடைசெய்து, அவர்கள் தம் மத முறைப்படி, தம் சேமக்காலையில், தம் குருக்களால் அடக்கம் செய்யப்படவும், திருமணம் செய்யப்படவும் அனுமதி அளித்தார். ஆனால் குருக்கள் ஆண்டுக்கு நான்கு முறை திருமுழுக்கு, திருமணம், மரண அடக்கம் பற்றிய கணக்கு விபரங்களை ஒழுங்காக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டார்கள். மேலும் கத்தோலிக்கர்கள் தம் மதத்தைப் பின்பற்ற முழுச் சுதந்திரமும், கத்தோலிக்க குருக்கள் தம் மறைப்பணியை ஆற்றி, மத வழிபாடுகளை நடத்த அனுமதியும் வழங்கப்பட்டன.

1801ம் ஆண்டில் இலங்கையின் நிர்வாகத்தை கிழக்கிந்திய கொம்பனியிடமிருந்து ஆங்கிலேய அரசு பொறுப்பெடுத்தது. அடுத்து, 1802ம் ஆண்டில் இலங்கை ஒரு அரச குடியேற்ற நாடாகப் (கொலனி) பிரகடனம் செய்யப்பட்டது. பிறெட்றிக் நோத் (1798-1805) அதன் முதல் கவனராக நியமிக்கப்பட்டார். பல ஐரோப்பிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த அவர், கத்தோலிக்கர் விடயமாக முன்னைய கவனர் வெளியிட்ட அறிக்கையை அங்கீகரித்தது மட்டுமன்று, கத்தோலிக்க மறைபரப்பாளர்கள் மட்டில் மிக இரக்கம் காட்டி, அவர்களை கூடிய அன்புடன் நடத்தினார். 1801ம் ஆண்டு கத்தோலிக்க மாணவ மாணவிகளுக்கென சில பாடசாலைகளை ஆரம்பிக்க அனுமதியளித்தார். எனினும் ஒல்லாந்தரால் கத்தோலிக்கருக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டங்கள் இன்னும் சட்டப் புத்தகத்திலிருந்து அகற்றப்படாமலிருந்தன.

1805ம் ஆண்டு தோமஸ் மெயிற்லன்ட் (1805-1811) என்பவர் புதிய கவனராகப் பதவி ஏற்றார். அவர் எம் மதமும் சம்மதம் என்ற கருத்தைக் கொண்டவர். எவரும் தம் மதத்தை மற்றவர்கள்மேல் திணிப்பதைப் பொறுக்காதவர். அவரைத் தரிசித்து நல்வாழ்த்துக் கூறச் சென்ற ஒறொற்றோறிய சபைச் சிரேஷ்டர் கவனரைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. எனவே புதிய கவனர் கத்தோலிக்கருக்கு எதிராக இருப்பாரோ என்ற சந்தேகம் எழுந்தது. எனவே மறைபரப்பாளர்கள் ஒன்றுகூடி, இறைவனிடம் செபித்தார்கள். மக்காவோ ஆயரும், கோவைத் துணை ஆயரும் இலங்கைக்கு வந்து, கவனரைச் சந்தித்து, கத்தோலிக்கருக்கு தயவு காட்டும்படி கேட்டுக்கொண்டனர். கவனர் கத்தோலிக்கருக்கு சாதகமான சட்டம் இயற்றுவதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில், கோவை அதிமேற்றிராணியார் கத்தோலிக்கர் சார்பாக கவனருக்கு எழுதிய கடிதமும் அவருக்குக் கிடைத்தது. இவ்வாறு தூண்டப்பட்ட கவனர், கத்தோலிக்கர்மேல் ஒல்லாந்தரால் விதிக்கப்பட்ட பலவிதமான தடைச் சட்டங்களை அகற்றும் கட்டளையை 1806ம் ஆண்டு, வைகாசி மாதம், 27ம் திகதி பிரகடனம் செய்தார். அதன்படி ஆங்கிலேயரின் குடியிருப்பாகிய இலங்கையில் வாழும் சகலருக்கும், தம் மனச்சாட்சியின்படி நடக்கவும், தாம் விரும்பும் மதத்தைப் பின்பற்றவும். தம் மத வழிபாடுகளை எவ்வித தடையுமின்றி நடத்தவும் முழுமையான மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. அச் சட்டத்தின் பிரகாரம்:

1. றோமன் கத்தோலிக்கர்கள் இலங்கையின் ஆங்கிலேய குடியிருப்பிலுள்ள எந்தவொரு பகுதியிலும், எவ்வித துன்புறுத்தல்களும் இன்றி, தம் மதத்தை அறிக்கையிட்டு, அனுசரிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

2. அவர்கள் சகல சலுகைகளுக்கும், பதவிகளுக்கும் அனுமதிக்கப்படுவார்கள்.

3. 1795ம் ஆண்டிலிருந்து றோமன் கத்தோலிக்கருக்கிடையில் றோமன் கத்தோலிக்க திருச்சபையின் சடங்கு முறைப்படி இடம் பெற்ற சகல திருமணங்களும், அவை ஒல்லாந்த அரசு நிர்ணயித்த முறைப்படி நடைபெற்றிருக்காவிட்டாலும், சட்டபூர்வமானவையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

4. இந்தச் சட்டம் அரசரின் பிறந்த தினமாகிய ஆனிமாதம் நான்காம் திகதி அமுலுக்கு வரும்.

5. இச் சட்டத்துக்கு முரணான வேறு சட்டம். கட்டளை, பிரகட-ணங்களின் எந்தவொரு பகுதியும் இத்தால் ரத்து செய்யப்படுகிறது.

இந்த ஆங்கிலேயரின் பிரகடனத்துடன் திருச்சபையின் நீண்ட கால கலாபனைகளும், துன்புறுத்தல்களும்ம் ஒரு முடிவுக்குக் கொணரப்பட்டன. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு நன்றி கூறி, 83,000 கத்தோலிக்கர்கள் கையொப்பமிட்டு கவனருக்கு கடிதமொன்று அனுப்பினார்கள். அதில் அரசுக்கு தங்கள் உறுதியான ஆதரவையும் வெளிப்படுத்தினார்கள். சிலர் கத்தோலிக்கருக்கு மதச் சுதந்திரம் கிடைத்த ஆனி 4ம் திகதியை இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை மறுபிறப்படைந்த நாள் எனக் கூறுவர். எனினும் கவனர் தோமாஸ் மெயிற்லென்டினால் பிரகடனம் செய்யப்பட்ட சட்டமூலம் கத்தோலிக்கரின் சமூக அழுத்தத்தின் விளைவேயன்றி, நீதியை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கில் ஏற்படுத்தப்பட்டதல்ல. இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் 1829ம் ஆண்டு, சித்திரை மாதம், 13ம் திகதி அங்கீகரிக்கப்பட்ட "அரசருக்குக் கீழ்பட்ட றோமன் கத்தோலிக்க குடிமக்களுக்கு நிவாரணம்" என்ற சட்டமூலமே முதலில் இங்கிலாந்து, அயர்லாந்தில் வாழும் கத்தோலிக்கருக்கும், பின்பு இலங்கைபோன்ற ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளில் வாழும் கத்தோலிக்கருக்கும் உண்மையான முழு மத சுதந்திரத்தை அளித்து, அவர்களை பூரண பிரசைகளாக்கியது. அடுத்து வந்த கவனர் பாண்ஸ் அவர்களுக்கு, அரசுக்கு விசுவாச பிரமாணம் செய்தபின், கத்தோலிக்கருக்கு அரசில் பொறுப்புள்ள நம்பிக்கைக்குரிய பதவிகள் வழங்கப்படலாமென இங்கிலாந்திலிருந்து பணிப்புரை வழங்கப்பட்டது.

முழு மதச் சுதந்திரம் பெற்ற கத்தோலிக்க குருக்களும், மறைபரப்பாளர்களும் தம் பணியை மிக ஆர்வத்துடன் தொடர்ந்து செய்தனர். தம் பங்கிலுள்ள கோவில்களைத் தரிசித்து, மறைப் போதகம் செய்து, திருப்பலி ஒப்புக்கொடுத்து, திருவருட்சாதனங்களை நிறைவேற்றினர். திருமணங்களை நிறைவேற்றி, குடும்பத் தகராறுகளை தீர்த்துவைத்து, நோயாளிகளைத் தரிசித்து, இறந்தவர்களை அடக்கம்

செய்து, தம் பணிகளை பிரமாணிக்கத்துடன் செய்தனர். இன்னும் அதிகமானோரைத் திருமறையில் சேர்த்தனர். 1829ம் ஆண்டில் இலங்கையெங்கும் 323 ஆலயங்களும், சிற்றாலயங்களும் இருந்தன. கொழும்பு, யாழ்ப்பாணம். நீர்கொழும்பு, களுத்துறை, காலி, திருகோணமலை போன்ற இடங்களில பெரிய, உறுதியான ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தன. 16 ஒறொற்றோறியன் சபைக் குருக்கள் கத்தோலிக்க விசுவாசிகளுக்குப் பணிபுரிந்தனர்.

### 8.1.4.2. ஆங்கிலேயர் காலத்தில் முழுமையான மதச் சுதந்திரம்

ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட முழு இலங்கையும், எவ்வித படையெடுப்புக்களோ, உள்நாட்டுப் போர்களோ, குழப்பங்களோ இன்றி, அமைதியுடன் அரசியல் நிர்வாகம், பொருளாதாரம், தொழிற் துறை, வர்த்தகம், தொலை தொடர்புகள், போக்குவரத்து, கல்விபோன்ற சகல துறைகளிலும் துரிதமாக முன்னேறியது. ஆங்கிலம் முழு இலங்கையினதும் அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டது. ஒல்லாந்தரின் ஆட்சியின்போது பல்வேறு காரணங்களுக்காக கத்தோலிக்க திருச்சபையிலிருந்து விலகி, கல்வினிஸ்ற் சபையைச் சேர்ந்த பலரும், வேறு மதத்தினரும் கத்தோலிக்க திருச்சபையில் மீண்டும் சேரந்தனர். அவர்களுக்குப் பணிபுரிந்த ஒறொற்றோறியன் குருக்களும் எவ்வித் இடையூறுகளுமின்றி, எங்கும் பயணம் செய்து, விசுவாசிகளைச் சந்தித்து, தம் மத வழிபாடுகளை நிறைவேற்றினர். மதச் சுதந்திரம் கத்தோலிக்கருக்கு மட்டுமல்ல, பௌத்த, இந்து, இஸ்லாம் மதத்தினருக்கும், பல் வேறுபட்ட புரட்டஸ்தாந்து பிரிவினைச் சபைகளுக்கும் கிடைத்ததினால், அவர்களும் மும்முரமாக தம் மறை போதகத்தில் ஈடுபட்டனர். இம் மத சுதந்திரத்தினால் தம் விசுவாசிகளுக்கு வரக் கூடிய ஆபத்தை கத்தோலிக்க குருக்கள் உணர்ந்தனர். எனவே கத்தோலிக்கரல்லாத மறைகளின் தப்பறையான போதனைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்ற, கத்தோலிக்கரின் மறை அறிவை வளர்த்து, விசுவாசத்தை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது, மனச் சாட்சிச் சுதந்திரத்தினால் கத்தோலிக்கரும் அரச பதவிகளையும், உத்தியோகங்களையும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அதற்கு அவர்கள் ஆங்கிலத்தில்

தேர்ச்சி பெறவேண்டியிருந்ததால், பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்க வேண்டியிருந்தது.

மேலும் மதச் சுதந்திரம் கத்தோலிக்கர் மத்தியில், அவர்களின் மதக் கொள்கை, மத வாழ்க்கையில் ஒருவித தளர்ச்சியை, பின்னடைவை ஏற்படுத்தியது. பலர் ஞாயிறு திருநாட்களை அனுசரிப்பதைக் கைவிட்டு, ஞாயிற்றுக் கிழமைகளிலும் தம் வியாபாரம், மற்றும் தொழில்களில் ஈடுபட்டனர். எம்மதமும் சம்மதம் என்ற கருத்துப் பரவியது. அவர்களின் மதப் பற்றும், மறைக் கல்வி கற்கும் ஆர்வமும், திருவருட்சாதனங்களைப் பெறவிருந்த ஆசையும் குறைந்து போயின. சுதந்திர யுகம் ஒறோற்ரோறியன் குருக்களையும் பாதித்தது. அவர்களுடைய ஆன்மீக, அப்போஸ்தொலிக்க வாழ்க்கைக்கு தடையான பல துர்ப் பிரயோகங்களும், துர்ப் பழக்கங்களும் அவர்கள் மத்தியில் புகுந்தன. அவர்கள் யோசப் வாஸ் அடிகளாரிடமிருந்து பெற்றுக்கொண்ட அப்போஸ்தொலிக்க ஆர்வம், ஆன்மீக வாஞ்சை, பணி வாழ்வு, தியாகம், உலகப் பற்றற்ற வாழ்வு, செப வாழ்வு போன்ற சகலதும் படிப்படியாகக் கைவிடப்பட்டன. அவர்கள் தமிழ், சிங்கள மொழிகளையோ, ஆங்கிலத்தையோ கற்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. சிறுவர்களுக்கு மறைக்கல்வி அளிக்கும் பொறுப்பை தகுதியில்லாத மறையாசிரியரிடம் ஒப்படைத்துவிட்டு, தாங்கள் உல்லாசமாய் வாழ்ந்தனர். பாடசாலைகளில் ஆங்கிலம் கற்க விரும்பிய மாணவர்களுக்கு அதைக் கற்றுக் கொடுக்க அவர்களால் முடியவில்லை. பொதுவாக அவர்கள் தம் மறைப்பணியில் எவ்வித ஆர்வமுமின்றி, தமது சுக போகத்தையே தேடியவர்களாய், சொகுசான வாழ்கை வாழ்ந்தனர். மக்களுக்கு மறைப்பணி செய்யத் தக்கதாக தம் வாழ்கையை அமைப்பதை விடுத்து, மக்கள் குருக்களின் சுகமான வாழ்க்கைக்கு ஏற்றவிதத்தில் தங்கள் வாழ்வை மாற்றி அமைக்க வேண்டுமென எதிர்பாரத்தனர். அவர்களில் பலர் வயோதிபர்களாகவும், நோயாளராகவும் இருந்தனர். அவர்களின் எவ்விதமான தலைமைத்துவமும் இல்லாத, வேலைகளைச் செய்ய ஆற்றலற்ற, ஆகக் குறைந்த பணியுடன் திருப்பியடையும் போக்குகளினால் மிகவும் அதிருப்தியடைந்த கத்தோலிக்கர்கள், ஒறொற்ரோறியன் குருக்களுக்கு எதிராக மேலிடங்களுக்கு பல முறைப்பாடுகள் செய்தனர். தங்களுக்குப் பணிபுரிய ஐரோப்பிய

மறைபரப்பாளர்களை அனுப்பிவைக்கும்படி விசுவாச பரப்புதல் சபைக்கு விண்ணப்பம் செய்தனர்.

## 8.1.4.3. ஆங்கிலேயர் காலத்தில இலங்கை வந்த மறைத்தூதுப் பணியினர்

கத்தோலிக்க திருச்சபையின் முன்னேற்றம் இவ்வாறு ஓர் மந்த நிலையில் இருந்தவேளை, இலங்கையில் பிரகடனம் செய்யப்பட்ட மதச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி, இங்கிலாந்திலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் பல மறைபரப்புச் (மிஷனறி) சபைகள் இலங்கைக்குப் படையெடுத்தன. அவர்கள் தமது கிளைகளை இந்நாட்டில் நிறுவி, தங்கள் மறைப்பணியைத் தீவிரமாக முன்னெடுத்தனர். பெரும்பாலும் அவ் அமைப்புகளிலிருந்த பொதுநிலையினராலேயே மறைத்தூதுப்பணி நிறைவேற்றப்பட்டது. அவர்களில் பின்வருவோர் குறிப்பிடத் தக்கவர்கள்:

**1. அங்கிலிக்கன் சபை:**

அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த கிறிஸ்ரியன் டேவிட் தலைமையில், 1801ம் ஆண்டு வந்த "கிறிஸ்தவ அறிவை வளர்க்கும் சபை"யே முதலில் இலங்கை வந்த மறைத் தூதுக் குழுவினராகும். தொடர்ந்து லண்டன் மிஷனறிச் சபையைச் சேர்ந்த நான்கு முன்னோடி மறைபரப்பாளர்கள் 1805ம் ஆண்டில் வந்து, அவர்களுடன் இணைந்து கொண்டனர். அவர்கள் தம் மறைபரப்புப் பணியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தனர். அவர்கள் அங்கிலிக்கன் சபையை "இலங்கைத் திருச்சபை" என ஒரே திருச்சபையாக அறிமுகப்படுத்தினர். அவர்கள் பல ஆலயங்களையும், பாடசாலைகளையும் கட்டியெழுப்பினர். அத் திருச்சபையின் முதல் ஆலயமாக "பந்தேகம கிறிஸ்து" ஆலயம் கட்டப்பட்டது. 1840 இல் இலங்கையில் குருக்களைப் பயிற்றுவிப்பதற்காக பயிற்சி நிலையமொன்றை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் இலங்கைத் திருச்சபையீன் நிர்வாகமானது பிரித்தானிய ஆயர்களுக்குக் கீழ் இருந்தது. 1845 இல் இலங்கை ஒரு தனிமாவட்டமாக உருவாக்கப்பட்டது. இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் முதல் ஆயராக அதி வந்தனைகுரிய ஜேம்ஸ் சாப்மன் அடிகளார் நியமிக்கப்பட்டார். 1945 ஒரு இலங்கையரை ஆயராக நியமிக்க அனுமதி

கிடைத்தது. முதல் சுதேச அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயராக அதி வந்தனைக்குரிய லக்தாஸ் டி மெல் நியமிக்கப்பட்டார். அவர் இலங்கை அங்கிலிக்கன் திருச்சபைக்கு தேசிய முகத்தைப் பெற்றுக்-கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். 1950 இல் குருநாகல் மறைமாவட்டம் உருவாகியது. இன்று 30,000 உறுப்பினர்கள் இலங்கைத் திருச்சபையில் இருக்கின்றனர்.

**2. பப்ரிஸ்ற் சபை:**

1812ம் ஆண்டில் வண. ஜேம்ஸ் சாட்டரின் தலைமையில் பர்மாவிலிருந்து வந்த பப்ரிஸ்ற் மிஷனறி சபையினர் (அவருடைய மனைவியும் நான்கு பிள்ளைகளும்) கொழும்பில் தம் நடுநிலையத்தை அமைத்தனர். ஜேம்ஸ் சாட்டர் கொழும்பில், பெற்றாவில் தம் பணியை ஆரம்பித்து, 1829 வரை துரித மறைதூதுப் பணியில் ஈடுபட்டார். பெற்றா அந்நாட்களில் ஒரு சிறிய கிராமமாகவே இருந்தது. ஆங்கிலத்தில் நடைபெற்ற வழிபாட்டிற்கு சில ஆங்கில படை வீரரும், பறங்கியருமே வந்தனர். 1851 இல் ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டது. அந்தச் சிறிய குழுவினர் ஞாயிறு தோறும் வழிபாட்டுக்கு ஒன்று கூடினர். அவர்களில் ஒருவரான கென்றிக் சியேர்ஸ் என்பவர் சிலேவ் ஐலன்டில் போதிக்கத் தொடங்கினார். சிங்கள மொழியைக் கற்ற சாட்டர், கிராண்ட் பாசில் ஒரு சிறிய சிங்கள குழுவை ஆரம்பித்தார். அவர்களுடைய ஆரம்பம் சிறிதாகவிருந்தாலும் பின்னர் அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும், குறிப்பாக இரத்தினபுரி, தங்காலை, கடவத்தை, கண்டி, மாத்தளை போன்ற இடங்களில் ஆலயங்களையும், பாடசாலைகளையும் அமைத்தனர். கொழும்பில் அவர்கள் அமைத்த கேரி பப்ரிஸ்ற் கல்லூரி குறிப்பிடத் தக்கது. பப்ரிஸ்ற் சபையின் குருவான சாள்ஸ் காடர்கேவின் முயற்சியின் நிமித்தம் சிங்கள-ஆங்கிலம், ஆங்கில-சிங்களம் அகராதிகள் எழுதப்பட்டு, வெளியிடப்பட்டன. பின்னர் வந்த மறைத் தூதுப் பணியினர் அப்பணிகளைத் தொடர்ந்து செய்தனர்.

**3. மெதடிஸ்ற் சபை:**

1814ம் ஆண்டில் வந்த ஆறு பேர் அடங்கிய வெஸ்லியன் மறைபரப்பாளர்கள் மேற்குக் கடலோரமாக காலித் துறைமுகத்தை வந்தடைந்து, வலிகம என்ற கிராமத்திற்குச் சென்றனர். அவர்களுக்குத் தலைமைதாங்கி வந்த கோக் அடிகளார் கடற் பயணத்தின்போது

மரணமடைந்தார். எஞ்சியவர்கள் தம் நிலையத்தை வலிகமவில் அமைத்து, மேற்குக் கரையோரப் பகுதிகளில் தம் பணியை ஆரம்பித்தனர். மறை பரப்புதல், பாடசாலைக் கல்வி, சுகாதாரப் பணி போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தினர். 1828ம் ஆண்டளவில், 54 பாடசாலைகளையும், ஒரு அச்சுக்கூடத்தையும், சில சுகாதார நிலையங்களையும், அனாதை இல்லங்களையும் அமைத்து நிர்வகித்தனர். அவற்றுள் கொழும்பில் வெஸ்லி, மெதடிஸ்ற் கல்லூரிகள், கண்டியில் கிங்ஸ்வூட், காலியில் றிச்மொன்ட் போன்ற பாடசாலைகள் குறிப்பிடத் தக்கவை. அவர்கள் கொழும்பு டாம் வீதியில் அமைத்த ஆலயமே இன்று ஆசியாவில் பழமை வாய்ந்த மெதடிஸ்ற் ஆலயமாகும். பலவேறு கஷ்டங்களின் மத்தியிலும் பின்தனை போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த மக்களை தம் திருச்சபையில் சேர்த்துக்கொள்ள முயறசிகள் எடுத்தனர்.

**4. அமெரிக்க மிஷன் சபை:**

அமெரிக்க மிஷன் சபையைச் சேர்ந்த சாமுவேல் நியுவெல் என்பவர் தன் குடும்பத்துடன் 1813ம் ஆண்டில் இலங்கைக்கு வந்தார். காலியில் வந்திறங்கிய அவர்கள் யாழ்ப்பாணம் சென்றனர். ஏனெனில் சில அரசியல் காரணங்களின் நிமித்தம் முதல் 40 வருடங்களுக்கு அவர்கள் சிறிய யாழ்க் குடாநாட்டிலேயே பணிபுரிய அனுமதிக்கப்-பட்டனர். எனவே ஆரம்பத்தில் 1813-1850 வரை தம் பணியை குடா நாட்டிலேயே செய்தனர். 1816 இல் எட்வேட் உவாறன் என்பவரும் அவர்களுடன் இணைந்து கொண்டார். அவர்கள் தம் மறையைப் பரப்புவதற்றகாக மிகவும் பாடுபட்டனர. கல்விக்குப் பிராதான இடமளித்து, கல்வியின் மூலம் தம் மறையை ஒளிபெறச் செய்தனர். பல இடங்களில், சிறப்பாகக் கிராமப் புறங்களில், வதிவிட, ஆரம்ப, உயர்தர, கிராம, மத்திய, மத்திய நேர, பெண்களுக்கென்று வெவ்வேறான பாடசாலைகளை ஆரம்பித்தனர். அவர்கள் சுதேச சிறுவர்களின் கல்வியி-லேயே கூடிய கவனம் செலுத்தினர். மாணவ மாணவிகள் பாடசாலைகளில் இலவசமாக தங்கியிருந்து கற்கக்கூடிய விடுதி வசதிகளைச் செய்து கொடுத்தனர். நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து, அச்சிட்டு, வெளியிட்டனர். அவர்களே 1820 யாழ்ப்பாணத்தில் முதல் அச்சகத்தை ஆரம்பித்தவர்கள்.

தெல்லிப்பளை அமெரிக்க மிஷன் பாடசாலை 1816 இல் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் பெண்களின் கல்வியிலும் அக்கரை எடுத்தனர். உடுவில் பெண்கள் கல்லூரி 1824 இல் கரியற் வின்ஸ்லோ எனபவரால் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1848 க்கு முன் யாழ்ப்பாணத்தில் 105 தமிழ் பாடசாலைகளும், 16 ஆங்கிலப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1823ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் திறனுள்ள மாணவர்களுக்கென ஒரு மத்திய உயர்தர பாடசாலையையும், ஒரு குருமடத்தையும் அமைத்தனர். திறனும் அறிவாற்றலும் உள்ள சுதேச ஆண்களையும், பெண்களையும் தெரிந்தெடுத்து, தம் பாடசாலைகளில் கற்பிக்க ஆசிரியர்களாகப் பயிற்றுவித்தனர். வெவ்வேறு இடங்களில் ஒன்பது மறைப்பணி மையங்களும் திறக்கப்பட்டன. சுகாதாரத் துறையிலும் அவர்கள் தங்கள் பங்களிப்பைச் செய்தனர். பண்டத்தரிப்பிலும், மானிப்பாயிலும் வைத்தியசாலைகளை அமைத்தனர். அவர்களின் கல்வித் தாபனங்களும், சுகாதார நிலையங்களும் இன்றும் நினைவு கூரப்படுகின்றன. யாழ்ப்பாணத் தமிழர்களின் அறிவுத் திறனுக்கு அவர்கள் ஒரு முக்கிய காரணமாய் விளங்குகின்றனர். அவர்கள் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பல சமூக சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தனர்.

**5. திருச்சபை மறைத்தூதுப் பணி சங்கம் (CMS):**

"சேர்ச் மிஷனறி சபை" (CMS) யைச் சேர்ந்த நான்கு மறைபரப்பாளர்கள் திரு. லம்பிறிக், திரு. நைற், திரு. திருமதி வாட், திரு. திருமதி மேயர், நைற் என்பவர்கள் 29 ஆனி 1818ம் ஆண்டில் இலங்கைக்கு வந்து காலியில் இறங்கினர். முன் ஒழுங்கு செய்திருந்தபடி லம்பிறிக் கண்டிக்கும், நைற் யாழ்ப்பாணத்துக்கும், மேயர் தம்பதியினர் படேகமவுக்கும், வாட் தம்பதியினர் கல்பிட்டிக்கும் சென்று, தம் பணிகளை ஆரம்பித்தனர். அவர்கள் தம் மறையைப் பரப்புவதற்றகாக மிகவும் பாடுபட்டனர். கல்விக்குப் பிராதான இடமளித்து, கல்வியின் மூலம் தம் மறையைப் பரப்ப முயற்சிகள் செய்தனர். இதற்கிடையில் வேறு மறைபரப்பாளர்களும் வந்து, அவர்களுடன் இணைந்து கொண்டனர். 1822 இல் கோட்டேயில் ஒரு மறைப்பணி மையமும், 1853 இல் கண்டியில் ஒரு மறைப்பணி மையமும், 1855இல் தேயிலைத் தோட்டங்களில் ஒரு மையமுமாக மூன்று மறைப்பணி மையங்கள் அமைக்கப்பட்டன. யாழ்பர்ணத்தில் ஒரு உயர் தரக் கல்லூரி (St.

John's) 1851 இல் ஆரம்பித்தனர். 1853 இல் கோப்பாயில் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைத் தாபித்தனர். 1857 இல் கண்டியில் திரித்துவக் கல்லூரியைத் தொடக்கினர். மேலும் பெண்களுக்கென விடுதி வசதிகளுடன் நல்லூர் (1842), போரளை (1869), கோட்டை (1870), படேகம (1888), கேகாலை (1895) போன்ற இடங்களில் பல பாடசாலைகளை ஆரம்பித்தனர். யுவதிக்களுக்கென 1896 இல் சுண்டிக்குளியில் ஒரு உயர் தர பாடசலையும் (St. John's Girl's College), கொழும்பில் 1900 இல் மற்றொரு உயர் தர பாடசாலையை-யும் (Ladies' College) ஆரம்பித்தனர். பேராதேனியாவில் சிங்களப் பெண்களுக்கென ஒரு ஆசிரிய பயிற்ச்சிக் கல்லூரியும் திறக்கப்பட்டது. ஒரு கைத் தொழில் பேட்டையையும் ஆரம்பித்தனர். இவ்வாறாக கல்வித் துறை வழியாக தங்கள் மறைப்பணியை மேற்கொண்டனர்.

**6. இரட்சணிய சேனை:**

இங்கிலாந்தில் வில்லியம் பூத், அவருடைய மனைவி கத்தரின் பூத் என்பவர்களினால் 1865 இல் ஆரம்பிக்கப்பட்ட இரட்சணிய சேனையின் மறைத் தூதுப் பணியினர் கப்ரன் வில்லியம் கிளாட்வின் தலைமையில் 26 தை 1883 இல் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் ஏனைய சபையினரிலிருந்து வேறுபட்டவர்கள். ஒரு வகையான இராணுவ அமைப்பைக் கொண்டவர்கள். அவர்களது பணியின் நோக்கம் எங்கெல்லாம் எவரும் சமூகப் பணியில் ஈடுபடவில்லையோ அங்கெல்லாம் தம் மதத்தை எடுத்துச் சென்று, சமூகப் பணியில் ஈடுபடுவதாகும். அதற்கேற்ப, இலங்கையில் மக்களின் துயர் துடைக்கும் பணியில் கவனம் செலுத்தினர். தெருப் போதனையின் வழியாகப் பாடல்கள், வாத்தியங்களுடன் இறைவார்த்தையை அறிவித்து, அதன் மூலம் மனிதனை நிறைவுடையவனாக வளர்ச்சியடையச் செய்தனர். ஏழை எளியவர்களின், பசியைப் போக்குதல், தூய்மைப்படுத்துதல், மீட்பு போன்ற கருப் பொருளுடன் இயங்கினர். கைவிடப்பட்டோர், புத்தி சுயாதீனமற்றோர், அனாதைகள், வழி தவறிச் சென்றோரின் வாழ்வை ஒளிமயமாக்குவதற்கும், துன்புறுவோரின் வாழ்வைச் சீர்படுத்துவதற்கும், நல்வழிப்படுத்துவதற்கும் பணியாற்றினர். எனவே பல விடுதிகளையும், சிறுவர் பராமரிப்பு நிலையங்களையும், சமூக நிலையங்களையும், வைத்திய நிலையங்களையும், புனரமைப்பு நிலை-

யங்களையும் உருவாக்கினர். கிராமங்களில் மட்டுமல்ல, நகரங்களிலும் இவ்வாறான பணிகளைச் செய்தனர். இன்று அவர்கள் இலங்கையில் 4,500 உறுப்பினர்களையும், 45 ஆலயங்களையும் கொண்டுள்ளனர்.

இவ்வாறு இலங்கையில் பணிபுரிய வந்த ஐரோப்பிய, அமெரிக்க மிஷனறி சபையினர் தேசிய மொழியைக் கற்று, மிகவும் அக்கறையோடு தம் மறைத்தூதுப்பணியில் ஈடுபட்டனர். அவர்கள் கல்வியை அடிப்படை-யாகக் கொண்டே தங்கள் மறைத் தூதுப் பணியில் ஈடுபட்டனர். இலங்கையின் பல பாகங்களிலும் பாடசாலைகளைக் கட்டி, ஆங்கிலக் கல்விக்காக முன்னணியில் செயற்பட்டனர். அதன் வழியாக மதப் பிரச்சாரமும் நடந்தது. தங்களின் மதத் தலைமைப் பீடங்களினதும், இலங்கை ஆங்கில அரசாங்கத்தினதும் நிதி உதவிகளைக் கொண்டு, மாணவர்களைச் சிறந்த முறையில் பயிற்றுவித்தனர். எனவே மாணவர்கள் பெருந் திரளாக அவர்களின் பாடசாலைகளையே முற்றுகையிட்டனர். பல கத்தோலிக்க பெற்றோரும் தம் பிள்ளைகளைப் புரட்டஸ்தாந்து பாடசாலைகளில் சேர்த்தனர். சிறந்த கல்விமான்களான புரட்டஸ்தாந்து மிஷனறி ஆசிரியர்கள், தங்கள் பணிக்கு தங்களை முழுவதும் அர்ப்பணம் செய்து, அருமையான சேவை செய்தனர். இருபது வருடங்களுக்குள் அவர்கள் இலங்கை எங்கும் 235 பாடசாலைகளுக்கு மேல் அமைத்து, 10,000 மாணவர்களுக்குக் கல்வி ஊட்டினர். அத்துடன் சுகாதாரப் பணி, ஏழை எளியவர்களுக்கு உதவுவதற்காக இரக்கப் பணிகளும் அவர்களால் நிறைவேற்றப்பட்டன.

## 8.1.4.4. ஆங்கிலேயர் காலத்தில் கத்தோலிக்க திருச்சபை

ஆங்கிலேயர் காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாக அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. கீழைத் தேச நாடுகளில் போர்த்துக்கேயரின் அதிகாரம் நலிந்து போனதால், அவர்களோடு செய்துகொள்ளப்பட்ட "பத்றோ ஆடோ" ஒப்பந்தம் பாப்பு பதினாறாவது கிரகோரியார் 1838ம் ஆண்டில் வெளியிட்ட "முல்ரா பிறேகிளாறே" என்ற அதிகார அறிக்கையினால் செல்லுபடியற்ற தாக்கப்பட்டு, இந்திய நாடுகளின் மறை பரப்புப் பணி விசுவாசப் பரப்புதல் சபையினிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கு இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரு

சில பகுதியினரால் பல எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டு, ஒரு பிரிவினையே வரக் கூடிய ஆபத்துக் கூடத் தென்பட்டது. மேலும் 275 ஆண்டுகளாக கொச்சின் மறைமாவட்டத்தின் கீழிருந்த இலங்கை பிரித்தெடுக்கப்பட்டு, 1850 இல் ஒரு தனி மறை மாநிலமாக (Vicariate Apostolic of Ceylon) நிறுவப்பட்டது. இலங்கையில் ஒறொற்ரோறியன் சபையினர் ஆற்றிய பணியைப் பாராட்டும் வண்ணமாக, அக்காலத்தில் குரு முதல்வரும், இலங்கை ஒறொற்ரோறியன் சபைச் சிரேஷ்டருமாயிருந்த அதி வண. பிரான்சிஸ்கோ சேவியர் அடிகளார் இலங்கையின் முதல் அப்போஸ்தொலிக்க விக்காராக நியமிக்கப்பட்டார். அவர் தம் பதவியை ஏற்குமுன் இறந்துபோகவே, அவரைத் தொடர்ந்து ஒறொற்ரோறியன் சபைச் சிரேஷ்டராகவிருந்த அதி வண. விசென்ரே டோ றோசைறோ அடிகளார் இலங்கையின் இரண்டாம் அப்போஸ்தொலிக்க விக்காராக நியமனம் பெற்றார். இலங்கையில் இந்திய ஒறொற்ரோறியன் சபையினரின் பணி, அச் சபையின் கடைசிக் குருவாகிய வண. மத்தேஸ் கயித்தானோ 1887ம் ஆண்டு இறக்குமட்டும் நீடித்தது.

இலங்கை ஒரு தனி மறை மாநிலமாக்கப்பட்டு (அப்போஸ்தொலிக்க விக்காறியேற்), அதன் முதல் அப்போஸ்தொலிக்க விக்கார் பொறுப்பேற்றதுடன் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றிலே ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகியது. அதி வண. விசென்ரே டோ றொசைறோ அப்போஸ்தொலிக்க விக்காராக பணியாற்றிய காலத்தில்தான், ஆங்கில ஆட்சியில் முதல் ஐரோப்பிய கத்தோலிக்க மறைபரப்பாளர் (மிஷனறி) வண. அலெக்சாந்தர் டூமாஸ் என்பவர், 1842ம் ஆண்டு பங்குனி 11ம் திகதி இலங்கைக்கு வந்தார். அவர் விசுவாசப் பரப்புதல் சபையினால் அனுப்பப்படவில்லை. ஆனால் சீனாவில் பணிபுரிந்த அவர், இலங்கையில் பணிபுரிய விரும்பி, தானாகவே இங்கு வந்தார். ஐரோப்பிய மிஷனறிமார்கள் இலங்கைக்கு வந்தால் தங்கள் ஆதிக்கம் பறிபோய்விடுமெனப் பயந்து, அவர்கள் வருவதை விரும்பாத ஒறொற்ரோறியன் குருக்கள், வண. டூமாசுக்கு தம் எதிர்ப்பையும் வெறுப்பையும் புலப்படுத்தினர். பல கஷ்டங்கள் மத்தியில் பணிபுரிந்த வண. டூமாஸ் அடிகளார் 1844 இல் இலங்கையை விட்டு வெளியேறினார். இலங்கையின் மூன்றாவது அப்போஸ்தொலிக்க விக்காரும் ஒரு இந்திய ஒறொற்ரோறியனேயாவார். அவர் அதி. வண.

கயித்தானோ அன்ரோனியோ ஆண்டகை. அவருடைய காலத்தில் இன்னும் பல ஐரோப்பிய கத்தோலிக்க மறைபரப்பாளர்கள் இலங்கைக்கு வந்தனர். இலங்கைக்கு வருகை தந்த இரண்டாவது ஐரோப்பிய கத்தோலிக்க மறைபரப்பாளர் வண. ஓறாஷியோ பெற்றக்கினி அடிகளார் ஆவார். அவர் 1842ம் ஆண்டு இலங்கையை வந்தடைந்தார். இவரே விசுவாசப் பரப்புதல் சபையினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட முதல் ஐரோப்பிய மிஷனறியென்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய மிஷனறிமார்கள் இலங்கைக்கு வருவதை விரும்பாத இலங்கையிலுள்ள (இந்திய) ஓறொற்ரோறியன் குருக்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டே ஐரோப்பிய ஒறொற்ரோறியனான இத்தாலியைச் சேர்ந்த பெற்றக்கினி அடிகளார் அனுப்பப்பட்டார். இலங்கைக்கு வந்தவுடன், அவர் கண்டியில் பணிபுரிய அனுப்பப்பட்டார். அவர் 1845ம் ஆண்டு அதி வண. கயித்தானோ அன்ரோனியோவுக்கு இணை உதவி ஆயராக நியமனம் பெற்று, 1846ம் ஆண்டு மாசி மாதம் 8ம் திகிதி கொட்டாஞ்சேனை புனித லூசியாள் ஆலயத்தில் திருநிலைப் படுத்தப்பட்டார். அவரே இலங்கையில் திருநிலைப்படுத்தப்பட்ட முதல் ஆயரென்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் வட பகுதியை நிர்வகிக்கும் பொறுப்பு குறிப்பாக அவரிடத்தில் விடப்பட்டது.

மூன்றாவதாக இலங்கைக்கு வந்த ஐரோப்பிய கத்தோலிக்க மறைபரப்பாளர் பிரெஞ்சுக் குருவான வண. அந்திரே றெய்னோ அடிகளாவார். முன்பு அமல மரித் தியாகிகள் சபையிலிருந்த அவர், 1838இல் அதிலிருந்து விலகி, பாக்டாட்டுக்கு மறைபோதகராகச் சென்றார். பின்பு தானாகவே விரும்பி இலங்கையில் பணிபுரிய வந்தார். வண. பெற்றக்கினியின் சிபாரிசின் பொருட்டு, விசுவாச பரப்புதல் சபையினால் அப்போஸ்தொலிக்க மிஷனறியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அவர், 1854ம் ஆண்டு இலங்கையை விட்டுச் சென்றார். 1845ம் ஆண்டு ஆவணி மாதம் 14ம் திகதி விசுவாசப் பரப்புதல் சபையினால் அனுப்பப்பட்ட இன்னும் மூன்று மிஷனறிக் குருக்கள் இலங்கையை வந்தடைந்தனர். அவர்கள் சில்வெஸ்திரின் ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த இத்தாலியரான யோசவ் மரிய பிராவி அடிகளார், ஸ்பெயின் நாட்டினரான சிஸ்ரேர்ஷியன் சபையைச் சேர்ந்த புறொயிலானோ ஒறுனா, பியோறென்ஸோ காசியா என்பவர்களாவர். இலங்கையில் சுதேச குருக்களைப் பயிற்றும் நோக்குடனேயே இவர்கள் அனுப்பப்பட்டார்கள்.

ஆனால் அவர்கள் வந்தவுடனேயே பணிபுரிய ஒருவர் நீர்கொழும்புக்கும், மற்றவர் காலிக்கும், மற்றவர் திருகோணமலைக்கும் அனுப்பப்பட்டார்கள். 1845ம் ஆண்டு புரட்டாசி மாதம் விசுவாசப் பரப்புதல் சபையினால் அனுப்பப்பட்ட மீட்பர் சபையைச் சேர்ந்த இந்தியரான வண. பிரான்சிஸ் சேவியர் டி மெனெசெஸ் அடிகளார் கொழும்பை வந்தடைந்தார். 1846ம் ஆண்டு மார்கழி 7ம் திகதி இத்தாலிய மறைபரப்பாளர்களான மேற்றிராசனக் குருக்கள் வண. ஜோண் விஸ்தரினி, டொமெனிக்கோ பிறியோரி, வின்சென்சோ கசினெல்லி அடிகளார்கள் இலங்கையை வந்தடைந்தனர். இவர்கள் எல்லோரும் ஐரோப்பிய துறவற சபைகளிலிருந்தும், மேற்றிராசனக் குருக்களிலிருந்தும் தனித் தனியே சேர்க்கப்பட்ட மறைபரப்பாளர்கள் ஆவர்.

**சில்வெஸ்திரீன் ஆசீர்வாதப்பர் சபை மறைத்தூதர்களின் வருகை**

ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த இத்தாலியரான யோசப் மரிய பிராவி அடிகளார் 1845 இல் வருகை தந்ததோடு, இந்நாட்டில் ஆசீர்வாதப்பர் சபை மறைத்தூதர்களின் பணிஆரம்பமாகியது. அவர் 1857 இல் தென் தூதராக மறைவட்டப் (கொழும்பு விக்காறியேற்) பிரதேசத்திற்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதோடு, அப்பிரதேசத்தின் மறைப்பணிக்காக மேலும் சில ஆசீர்வதப்பர் சபைக் குருக்கள் வந்தனர். ஹிலேரியன் சிலானி என்பவர் 1863-1878 காலத்தில் கொழும்பு விக்காறியேற்றின் பொறுப்பை ஏற்றார். அவருடைய பணிக் காலத்தில் புனித லூசியா பேராலயம் கட்டத் தொடங்கப்பட்டது. புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி உட்பட, பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பிரான்சிலிருந்து நல்லாயன் சபைச் சகோதரிகள் இந்நாட்டில் பணியாற்ற வரவழைக்கப்பட்டனர். கொழும்பை அண்டிய முகத்துவாரம், கிராண்ட் பாஸ் போன்ற பங்குகளில் பெரிய ஆலயங்கள் கட்டப்பட்டன. கத்தோலிக்க பத்திரிகைகள் Catholic Messenger (1869), ஞானார்த்த பிரதீப்பய (1873) ஆரம்பிக்கப்பட்டன. கண்டிப் பிரதேசத்தில் பணிபுரிய சில குருக்கள் அனுப்பப்பட்டனர். ஆயர் ஹிலேரியன் சிலானி 1878 இல் இறந்த பின்னர், ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த கிளமன்ட் பஞ்ஞானி அடிகளார் ஆயராக நியமனம்பெற்றார்.

**அமல மரி தியாகிகள் சபை மறைத்தூதுவர்களின் வருகை**

1847ம் ஆண்டு அதி வண. பெற்றக்கீனி அடிகளார், இன்னும்

அதிக ஐரோப்பிய மறைபரப்பாளர்களைத் தேடி, ஐரோப்பாவுக்குச் சென்றார். அங்கு அவர் அமல மரி தியாகிகள் சபையின் தாபகரும், மார்சேல்ஸ் நகர ஆயருமாகிய இயூஜீன் டி மசனெட் ஆண்டகையைச் சந்தித்து, அமல மரித் தியாகிகளின் உதவியைக் கேட்டார். அவருடைய விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட டி மசனெட் ஆண்டகை, தம் சபைக் குருக்களில் நான்கு பேரைக் கொடுத்து, காலப் போக்கில் தாம் இன்னும் உதவி செய்வதாக வாக்களித்தார். பெற்றக்கீனி ஆண்டகை அந்த நான்கு அமல மரித் தியாகிகளோடு, சில்வெஸ்திரின் சபையைச் சேர்ந்த எமிலியானோ மிலியானி, இத்தாலிய மேற்றிராசனக் குருவான சேசார் மோலாவையும் அழைத்துக் கொண்டு, 1847ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி இலங்கை திரும்பினார். வண. ஸ்டிவன் செமேரியாவின் தலைமையில் வந்த அமல மரி தியாகிகள் குழுவிலே, அருட்திரு யோசவ் அலெக்சாந்தர் சியாமின், லூயிஸ் மேரி கீற்றிங் அடிகளார்களும், சகோ. கஸ்பார் டி ஸ்ரெபானிசும் அடங்குவர். அடுத்த ஆண்டில் (1849) அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு. மூச்செல், லைடியர், லெபெஸ்கோ அடிகளார்கள் அக்குழுவுடன் இணைந்து கொண்டனர். ஆங்கிலேயரின் காலத்தில் முதலில் இலங்கைக்கு வந்த ஒரே சபையைச் சேர்ந்த மறைபரப்பாளர் குழு இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. அதிகமான ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் பெற்றக்கீனி ஆண்டகையுடன் இலங்கையின் வட பகுதிக்குச் சென்று, அங்கு பல்வேறு பணிகளில் ஈடுபட்டனர். வண. பிராவி, பிறியோறி, மிலியானி அடிகளார்கள் போன்ற ஒரு சிலரே தென்னிலங்கையில் தங்கி, ஒறொற்ரோறியன் குருக்களுடன் பணியாற்றினர்.

**வேறு துறவறத்தவர்களின் வருகை**

இந்தச் சுதந்திர யுகத்திலே இன்னும் பல துறவற கன்னியர் சபைகளும் இலங்கைக்கு வந்து தம் பணிகளை ஆரம்பித்தனர். திருக் குடும்பக் கன்னியர் 1862ம் ஆண்டில் இலங்கைக்கு வந்தனர். இவர்களே இலங்கைக்கு வந்த முதல் ஐரோப்பிய கன்னியரென்பது குறிப்பிடத்தக்கது. டி லா சால் கிறிஸ்தவ சகோதரர் 1867ம் ஆண்டு தை மாதம் 28ம் திகதி இலங்கைக்கு வந்து, கொழும்பில் புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியைப் பொறுப்பெடுத்தனர். அடுத்து நல்லாயன் சபையைச் சேர்ந்த ஐந்து கன்னியர் 1869ம் ஆண்டு சித்திரையில் இலங்கை

வந்து, கொழும்பில் பெண்கள் பாடசாலையொன்றை ஆரம்பித்தனர். 1886ம் ஆண்டில் பிரான்சிஸ்கன் சபைக் கன்னியர்கள் இலங்கைக்கு வந்து வைத்தியசாலைகளிலும், அநாதை மடங்களிலும் தம் பணியை ஆரம்பித்தனர். மொறட்டுவவில் மகளிர் வித்தியாலயத்தையும், அனாதை இல்லத்தையும் ஆரம்பித்தனர். 1893ம் ஆண்டில் இயேசு சபையினர் இலங்கைக்கு வந்து, பாடசாலைகளில் பணிபுரிந்தனர். இன்னமும் பிறர் சிநேக சகோதரிகள், அப்போஸ்தொலிக்க கார்மேல் சகோதரிகள், மாரிஸ்ட் சகோதரர்கள், பிரான்சிஸ்கன் மரியாள் சபைக் குருக்களென பலர் இக்கால கட்டத்தில் இலங்கைக்கு வந்து, பல் வேறுபட்ட மறைப் பணிகள், பிறர் நல, சமூக சேவைகளில் ஈடுபட்டனர்.

**கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சி**

1847ம் ஆண்டு புரட்டாசி 9ம் திகதி இலங்கை வட, தென் மாநிலங்களென இரு மறை மாநிலங்களாகப் (Vicariates) பிரிக்கப் பட்டு, வட மாநிலத்தின் தற்காலிக விக்காராக அதி வண. பெற்றக்கீனி ஆண்டகை நியமிக்கப்பட்டார். 1849ம் ஆண்டு வட மாநிலம் ஓர் தனி மாநிலம் ஆக்கப்பட்டு, பெற்றக்கீனி ஆண்டகை அதன் முதல் அப்போஸ்தொலிக்க விக்காராக நியமனம் பெற்றார். அவருடைய இடமாக கொழும்பு மறை மாநில இணை உதவி விக்காராக சில்வெஸ்திரின் ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த இத்தாலியரான யோசவ் பிராவி அவர்கள் நியமிக்கப்பட்டார். எனவே 1849ம் ஆண்டில் இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம் என்னும் இரு மறை மாநிலங்கள் இருந்தன. இரு மறை மாநிலங்களிலும் இரு ஒறொற்றோறிய ஆயர்களான இந்தியாவைச் சேர்ந்த கயித்தானோ அந்தோனியோவும், இத்தாலியரான பெற்றக்கீனியும் அப்போஸ்தொலிக்க விக்கார்களாக-விருந்தனர். 1856ம் ஆண்டில் அமல மரி தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு ஸ்ரீவன் செமேரியா அடிகளார் யாழ்ப்பாண அப்போஸ்தொலிக்க விக்கார் அதி வண. பெற்றக்கீனி ஆண்டகைக்கு இணை உதவி ஆயராக நியமனம் பெற்றார். 1857ம் ஆண்டு இரு ஒறொற்றோறிய அப்போஸ்தொலிக்க விக்கார்களும் இறக்கவே, இரு இணை உதவி அப்போஸ்தொலிக்க விக்கார்களான அதி வண. யோசவ் பிராவி ஆண்டகையும், ஸ்ரீவன் செமேரியா ஆண்டகையும் முறையே கொழும்பு, யாழ்ப்பாணம் மறை மாநிலங்களின் விக்கார்களாக

நியமிக்கப்பட்டனர். 1868ம் ஆண்டு செமேரியா ஆண்டகை இறந்தபொழுது, அவரிடமாக அமல மரி தியாகிகள் சபையைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகளார் யாழ்ப்பாண அப்போஸ்தொலிக்க விக்காராக நியமனம் பெற்றார். பரிஸ் அந்நிய நாடுகளுக்கான மறைபரப்புச் சபையைச் சேர்ந்த இவர், 1847ம் ஆண்டு இந்தியாவிலுள்ள கோயம்புத்தூருக்குச் சென்று மறைபணியாற்றிய பின், 1856ம் ஆண்டில் இலங்கைக்கு வந்து, அமல மரி தியாகிகள் சபையில் இணைந்து கொண்டார். அவர் இலங்கைக் திருச்சபைக்கு ஆற்றிய சிறந்த சேவையின் நிமித்தம் அவர் "இலங்கையின் இரண்டாம் அப்போஸ்தலர்" என அழைக்கப்படுகிறார்.

1883ம் ஆண்டு இலங்கை கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டியென்று மூன்று மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, கொழும்பு ஆயரான சில்வெஸ்திரின் சபையைச் சேர்ந்த கிளமன்ட் பஞ்ஞானி கண்டிக்கு அப்போஸ்தொலிக்க விக்காராக மாற்றலாகிச் செல்ல, பொன்ஜீன் ஆண்டகை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அப்போஸ்தொலிக்க விக்காராக மாற்றப்பட்டார். அவருடைய இடமாக அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அதி வண. அன்று மெலிசன் அடிகளார் யாழ்ப்பாண அப்போஸ்தொலிக்க விக்காராக நியமனம் பெற்றார். 1886ம் ஆண்டு இலங்கை ஓர் தனித் திருச்சபை அமைப்பாக (hierarchy) தாபிக்கப்பட்டு, கொழும்பு ஒரு அதிமேற்றிராசனமாகவும், யாழ்ப்பாணமும், கண்டியும் அதற்குக் கீழ்ப்பட்ட மேற்றிராசனங்களாகவும் நிறுவப்பட்டன. பொன்ஜீன் ஆண்டகை கொழும்பு அதிமேற்றிராசனத்தின் முதல் அதிமேற்றிராணியாராக நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அதி வண. அன்று மெலிசன் (1893-1905), அன்ரனி கூடெற் (1905-1929), பீற்றர் மார்க் (1929-1937), யோண் மேரி மஸொான் (1938-1947) என்பவர்கள் கொழும்பு அதிமேற்றிராணிமார்களாகப் பணிபுரிந்தனர். யாழ்ப்பாணத்தில் அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அன்று மெலிசன் (1883-1893), கென்றி யூலைன் (1893-1919), யூல்ஸ் பிறோல்ற் (1919-1923), அல்பிறெட் கைமோர் (1924-1950) ஆயர்களாகப் பணிசெய்தனர். கண்டியில் சில்வெஸ்திரின் சபையைச் சேர்ந்த கிளமன்ட் பஞ்ஞானி (1883-1911), டொம் பீட் பீக்மேயர் (1912-1935), பேர்ணாட் றெஞ்ஞோ (1936-) என்பவர்கள் ஆயர்களாகப் பணிபுரிந்தனர். 1893ம் ஆண்டில் இலங்கைத்

திருச்சபையில் காலி, திருமலை - மட்டக்களப்புவென மேலும் இரண்டு மறைமாவட்டங்கள் அமைக்கப்பட்டு, இயேசு சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. காலி மறைமாவட்டத்தின் முதல் ஆயராக யேசு சபையைச் சேர்ந்த வான் றீத் அடிகளார் (1895-1934) நியமனம் பெற, திருமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதல் ஆயராக சார்ள்ஸ் லாவிஞ்ஞ அடிகளார் (1899-1913) நியமனம் பெற்றார். அவர்களைத் தொடர்ந்து காலியில் என். எம். லவுடாடியோவும் (1934-), திருமலையில் கஸ்ரன் றொபிசேயும் (1917-1947) ஆயர்களாகப் பணிபுரிந்தனர். இவ்வாறு ஆங்கிலேயர் காலத்தில் கிடைத்த மதச் சுதந்திர காலத்தின்போது, கத்தோலிக்க திருச்சபை பல துறைகளிலும் அபிவிருத்தியடைந்து முன்னேறியது.

## 8.1.3.5. முழுமையான மதச் சுதந்திரத்திர காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியின் இருந்த காலத்தில் பிரகடனம் செய்யப்பட்ட மதச் சுதந்திரத்தை அடுத்து, பல ஐரோப்பிய புரட்டஸ்தாந்து மிஷனறிக் குழுக்களும், கத்தோலிக்க குருக்களும், துறவற கன்னியர் சபையினரும் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் தங்கள் மறைப் பணியிலும், மறை பரப்புப் பணியிலும் முழுமையான ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அவர்கள் தங்கள் மறைப் பணிகளோடு நின்றுவிடவில்லை. கல்வி, கைத் தொழில், பிறர் நல சேவைகள், சமூக நல சேவைகள், உடல் நல சுகாதார சேவைகளென பல துறைகளிலும் தம்மை அர்ப்பணித்து, மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தனர். அதிகமான குருக்களும், துறவற கன்னியர்களும் மிகப் பின்தங்கிய நிலையிலிருந்த கல்வித் துறையில் ஈடுபட்டு, பல பாடசாலைகளை அமைத்து, மாணவ மாணவிகளுக்கு சிறந்த கல்வியறிவு ஊட்டி. அவர்களை நல்வழிப் படுத்துவதில் தம் கவனத்தைச் செலுத்தினர். கல்வித் துறையை விட, அவர்களுடைய அன்புப் பணி இன்னும் பல துறைகளில் செயற்பட்டன. முக்கியமாக துறவற கன்னியர்கள் அநாதை மடங்கள், சிறுவர் இல்லங்கள், நன்நடத்தை விடுதிகள், வைத்திய பராமரிப்பு இல்லங்கள், வயோதிப சாலைகள், புலனற்றோர் நிலையங்கள் போன்ற சமூக நலன் பேணும் தாபனங்களை ஆரம்பித்து, மக்களின் பலவித இன்னல்களைப் போக்கி, நற்பணி

புரிந்தனர். 1862ம் ஆண்டு இலங்கைக்கு வந்த முதல் ஐரோப்பிய துறவற கன்னியரான திருகுடும்பக் கன்னியர், யாழ்ப்பாணத்தில் சுதேச பெண்களுக்கென தம் சகோதர சபையான புனித இராயப்பர் சபையை 1865 இல் தாபித்து, மகளிர் கல்வித் துறையில் ஈடுபட்டனர். 1886ம் ஆண்டில் இலங்கைக்கு வந்த பிரான்சிஸ்கன் மிஷனறி சபையைச் சேர்ந்த கன்னியர்கள், அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, கொழும்பு பெரியாஸ்பத்திரியில் நோயாளிகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டனர். பின்னர் இப்பணி மன்னார் அரசினர் வைத்தியசாலைக்கும், கெந்தளை, மாந்தீவு தொழு நோயாளர் வைத்தியசாலைகளுக்கும் விஸ்திரிக்கப்பட்டது. 1887ம் ஆண்டு அமல மரி தியாகிகள் மக்கோனாவில் ஆண் அநாதைச் சிறுவர்களுக்கு ஒரு மடமும், ஒரு தொழில் துறைகள் கற்கும் பாடசாலையும் அமைத்தனர். அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, இளம் குற்றவாளிகளை சீர்திருத்தும் மடத்தையும் ஆரம்பித்தனர். 1888ம் ஆண்டில் இலங்கைக்கு வந்த ஏழைகளின் சிறிய சகோதரிகள் மருதானையில் ஒரு வயோதிப சாலையை ஆரம்பித்தனர்.

1815ம் ஆண்டில் இலங்கைக்கு வந்த வெஸ்லியன் மறைபரப்பாளர்கள் கொழும்பில் ஒரு அச்சகத்தை அமைத்து, சிங்கள மொழியில் தங்கள் வேதாகமத்தின் சில பகுதிகளையும், வேறு மத நூல்களையும், கைநூல்களையும், பத்திரிகைகளையும் அச்சிட்டு, விநியோகித்தனர். அதைத் தொடர்ந்து மற்றச் சபைகளும் தம் நூல்களையும். துண்டுப் பிரசுரங்களையும், சிறு நூல்களையும் சிங்களம், தமிழ் மொழிகளில் வெளியிட்டனர். 1869ம் ஆண்டில், சில்லானி ஆண்டகையின் முயற்சியினால், கொழும்பில் கத்தோலிக்க அச்சகம் உருவாகியது, அதன் உதவியுடன் அதே ஆண்டில் "இலங்கைத் கத்தோலிக்க தூதன்" என்ற ஆங்கிலப் பத்திரிகையும், 1873ம் ஆண்டில் "ஞானார்த்த பிரதீபய" என்ற சிங்களப் பத்திரிகையும் வெளியிடப்பட்டன. பொன்ஜீன் ஆண்டகையால் 1871இல் யாழ்பாணத்திலும் ஒரு கத்தோலிக்க அச்சகம் அமைக்கப்பட்டு, 1876ம் ஆண்டு "யாழ்ப்பாண கத்தோலிக்க பாதுகாவலன்" என்ற பத்திரிகையும் வெளிவரத் தொடங்கியது. சிறந்த எழுத்தாளரான பொன்ஜீன் ஆண்டகை அச்சுக் கூடத்தையும், பாதுகாவலனையும் நன்கு பயன்படுத்தி, கத்தோலிக்க கொள்கைகளையும், கத்தோலிக்கரின் பல் வேறு பிரச்சினைகளுக்கு

தம் தீர்வுகளையும், கத்தோலிக்கரின், இலங்கை மக்களின் உரிமைகள் பற்றியும், அவர்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாரபட்சங்களையும் எழுதினார். குறிப்பாக கத்தோலிக்க பாடசாலைகளைப் பாதுகாக்கவும், கோவையின் பிரிவினைப் போக்குக்கு எதிராகவும், கத்தோலிக்க மறையைப் பரப்பவும் அச்சகத்தைப் பயன்படுத்தினார்.

அப்போஸ்தொலிக்க பணிகள் வளர வளர, அப்போஸ்தொலிக்க பணியாட்களின் தேவையும் அதிகரித்தது, சில சுதேச துறவற கன்னியர் சபைகள் ஆரம்பிக்கப்பட்டு, அவைகளின் நிர்வாகமும், உருவாக்கமும் ஐரோப்பிய கன்னியர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. 1871ம் ஆண்டு கொழும்பு சில்லானி ஆண்டகை இரு சுதேச துறவற சபைகளை ஆரம்பித்தார். "புனித பிரான்சீஸ்கு சவேரியாரின் சகோதரிகள் சபை" ஆரம்பிக்கப்பட்டு, நல்லாயன் கன்னியரின் மேற்பார்வையின் கீழ் செயல்-படத் தொடங்கியது. மேலும் நீர்கொழும்பில் பாடசாலைகளில் பணிபுரியவும், பெண்களுக்கு விடுதிகள் நடத்தவும் "மரியாளின் புதல்விகள்" என்னும் சபை ஆரம்பிக்கப்பட்டது. மேலும் 1862இல் யாழ்ப்பாணம் வந்த திருக் குடும்பக் கன்னியர் சுதேச பெண்களுக்கென "புனித இராயப்பர் சபை" என்ற ஒரு சகோதர சபையைத் தாபித்தனர். மாத்தளையில் பள்ளிக்கூடத்திலும், அநாதை மடத்திலும் பணிபுரிய "சிறிய சகோதரிகள்" என்ற சபை ஆரம்பமாகியது. பமுனுகமவில் "பக்தியுள்ள ஆசிரியைகள்" என்ற சபையும் தொடங்கப்பட்டது. வண. பிச்சினெல்லி அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட "மக்கோனா பிரான்சிஸ்கன் சகோதரர் சபை" பாடசாலைகளிலும், அநாதை மடங்களிலும் பணியாற்றி-யது. யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் ஒரு அநாதை மடமும், அத்தோடு மாணவருக்குத் தொழில் முறைப் பயிற்சிப் பாடசாலையும் அமைத்து, அதை நடத்த 1861ம் ஆண்டில் "கொழும்புத்துறை புனித சூசையப்பர் சகோதரர் சபை" ஆரம்பிக்கப்பட்டது இளைஞர்களை மறை ஆசிரியர்களாகவும், தமிழ் பாடசாலைகளுக்கு வேண்டிய ஆசிரியர்களையும் பயிற்றுவிப்பதை நோக்காகக் கொண்ட இந்தத் தாபனம், காலப்போக்கில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாக மாறியது.

குருக்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய, குருமடங்களை தாபித்து சுதேச குருக்களைப் பயிற்றுவிக்க பலமுறைகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், பல காரணங்களின் நிமித்தம் அது பின் போடப்பட்டது.

ஆரம்பத்தில். சில இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு, இந்தியா, உரோமை, பிரான்ஸ் போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பபட்டு, குருக்களாக பயிற்றுவிக்கப்பட்டனர். அருட்திரு. கொர்ணெலியஸ் யே. பி. பர்னாந்து அடிகளாரே உரோமையில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட முதல் இலங்கையர் ஆவார். அது 1854ம் ஆண்டில் இடம்பெற்றது. இலங்கையின் முதல் சுதேச அமல மரித் தியாகி வண. சகோ. ஸ்ரீவன் பூரியாவார். ஒரு சிங்கள ஆசிரியரான அவர், 1859ம் ஆண்டில் தமது நவ சந்நியாசத்தை முடித்து, வார்த்தைபாடுகளைக் கொடுத்து, அமல மரி தியாகிகளுடன் இணைந்துகொண்டார். குருத்துவத்தை நோக்கிப் படித்துக்கொண்டிருந்த அவர், வைகாசி 1861இல் தம் நித்திய வார்த்தைப்பாட்டைக் கொடுத்து, அதன்பின் சில நாட்களில் இறந்தார். சுதேச குருக்களைப் பயிற்றுவதற்கென இலங்கையில் முதல் குருமடம் 1871ம் ஆண்டில் பொன்ஜீன் ஆண்டகையினால் ஆரம்பிக்கப்பட்டது, அவர் யாழ்ப்பாண அப்போஸ்தொலிக்க விக்காராகவிருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட புனித மடுத்தீனார் குருமடம், பெரிய குருமடத்துக்கு மாணவரை ஆயத்தப்படுத்தும் சிறிய குருமடமாகவும், அதேவேளையில் பெரிய குருமடமாகவும் செயல்பட்டது. 1873ம் ஆண்டில் அதில் 17 குருமாணவர்கள், வண. புளிக்கானி அடிகளாரின் கீழ், பயிற்சி பெற்றனர். அக் குருமடத்தினில் பயின்று வெளியேறிய முதல் மேற்றிராசனக் குரு, தமிழரான வண. சவரிமுத்து சந்திரசேகரா, 1876ம் ஆண்டு மார்கழி மாதம் 29ம் திகிதி திருநிலைப்படுத்தப்பட்டார். 1883ம் ஆண்டில் கொழும்பு அதிமேற்றிராசனத்தின் பேராயராகப் போறுப்பேற்ற பொன்ஜீன் ஆண்டகை, கொழும்பிலும் ஒரு குருமடத்தை, புனித பேர்ணாட்டின் பாதுகாவலில் ஆரம்பித்தார். அதன் முதற் குருவாக 1889ம் ஆண்டில் சிங்களவரான யோண் பகமுனே அ. ம. தி. என்பவர் திருநிலைப்படுத்தப்பட்டார். இவ்விரு குருமடங்களும் இலங்கையில் பணியாற்ற பல சுதேச அமல மரி தியாகிகள் சபைக் குருக்களையும், மேற்றிராசனக் குருக்களையும் அளித்து உதவின. இலங்கை, இந்தியா, பர்மா போன்ற கீழைத் தேச நாடுகளில், குருத்துவ மேற்படிப்புக்கு உதவியாக, சர்வகலாசாலை நிலையிலான "பாப்புவின் குருமடம்" ஒன்றும் அப்போஸ்தொலிக்க பிரதிநிதி லடிஸ்லவுஸ் சலெஸ்கியின் முயற்சியால் அம்பிற்றியா கண்டியில் 1893ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு சுதேச குருக்களை இலங்கையில் பயிற்றுவிப்பதின் வழியாக நாட்டுப் பாரம்பரியத்தை, மரபுகளை நோக்கித் திருச்சபையை வழிநடத்த வழி திறக்கப்பட்டது. இலங்கையில பணிபுரிய வந்த ஐரோப்பிய மறைபரப்பாளர்கள், அவர்கள் அறிந்திராத ஒரு புதிய மக்களினத்தை, புதிய மொழிகளை, புதிய கலாச்சாரத்தை, பண்பாடு-களை, மதங்களை சந்திக்க வேண்டியிருந்தது. எனவே அவர்களால் அவற்றை, அவற்றின் மதிப்பை, மேன்மையை உணர்ந்து கொள்ள-முடியவில்லை. ஆனால் சுதேச குருக்கள் தம் நாட்டு மக்களின் மொழி, கலை, கலாச்சாரம், மனப்பான்மை, மதங்கள் போன்றவற்றை நன்கு அறிந்தவர்கள். அதற்கு நன்கு பழக்கப்பட்டவர்கள். அதற்கேற்ற முறையில் மத வழிபாடுகளையும், மதப் பழக்கவழக்கங்களையும் அமைத்து, மக்களைக் கவரக் கூடிய முறையில் மறைப்பணி புரிந்தனர். மக்கள் அறிவு குறைந்தவர்களாக இருந்ததால், மக்களைக் கவரும் மதச் சடங்குகளும், வழிபாடுகள், திருவிழாக்கள், திருச் சுரூபப் பவனிகள், சங்கீதங்கள், இசைக் கருவிகள் அவர்களின் மத வாழ்வில் முக்கிய இடத்தை எடுத்தன. எண்ணை விளக்குகள். தூப வர்த்திகள், குருத்தோலைச் சோடினைகள், மேள வாத்தியங்கள், கீழ் நாட்டுச் சங்கீதங்கள் போன்றவை வழிபாடுகளில் இடம் பெற்றன. ஒறொற்-ரோறியன் மறைபரப்பாளர்கள் அவற்றைப் பயன்படுத்தி, இவற்றின் ஊடாக மக்களுக்கு மறை அறிவு ஊட்டி, விசுவாசத்தை வளர்த்தனர். சுதேச குருக்களும் அவ்வழியில் தம் மறைப் பணியைக் கொண்டு நடத்தினர். அவர்களது வாழ்வும் மக்களின் வாழ்கையை ஒத்ததாக அமைந்தது.

மேலும் மறைபரப்பாளர்கள் மக்களுக்குத் தலைமை தாங்கி, அவர்களின் உரிமைகளுக்காக, நல்வாழ்வுக்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். நீதிக்கு முரணாகச் சட்டங்கள் ஆக்கப்பட்ட வேளைகளில் மக்கள் சார்பாகக் குரல் கொடுத்து, அதை எதிர்த்து நின்று நீதிக்காகப் போராடினர். உதாரணமாக, மது ஒழிப்பு, சுகாதார வசதிகள், குடி நீர், கழிவு நீர் திட்டங்கள், போக்கு வரத்து வசதிகள், கல்வி, மதப் பாடசாலைகள், அவற்றிற்கு அரச நிதியுதவி, நாட்டுத் திருமணச் சட்டங்கள், மக்களின் அடிப்படைத் தேவைகள் போன்ற பல விடயங்களில் அரசாங்கத்துடன் வாதாடி, மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

## 8.1.4.6. ஆங்கிலேயர் காலத்தில் கிறிஸ்தவ கல்வியின் வளர்ச்சி

ஒல்லாந்தரின் ஆட்சியின்போது அனைத்துப் பாடசாலைகளும், கல்வித் துறையும், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட "பாடசாலை ஆசிரியர்களின் ஆணைக்குழு"வின் கட்டுப்பாட்டில் இருந்தன. இலங்கை ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபோது, ஆரம்பத்தில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கொம்பனி கல்வியைப்பற்றி எவ்வித அக்கரையும் எடுக்கவில்லை. பணம் தேடி வந்தவர்கள் தம் பணத்தை அப்படிச் செலவுசெய்ய விரும்பவில்லை. எனவே ஒல்லாந்தரின் கல்வித் துறை கவனிப்பாரற்று இருந்தது. பாடசாலைகள் இவ்வாறு மூடப்பட்டதை இங்கிலாந்திலிருந்த சகல புரொட்டஸ்தாந்து அமைப்புகளும் கண்டித்தன. ஏனெனில் பாடசாலைகள் பிள்ளைகளின் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாக்க, மற்றவர்களை தம் மதத்திற்கு மனந்திருப்ப இன்றியமை-யாதவையாக இருந்தன. எனவே அரசாங்கம் கிறிஸ்தவர்களை பௌத்த, இந்து. இஸ்லாம் அல்லது கத்தோலிக்க மதத்துக்குச் திரும்பிச் செல்ல உதவுகிறதெனக் குற்றம் சாட்டினர். எனவே 1798ம் ஆண்டில் ஆங்கிலேய அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்தியது. அவை அரசாங்க பாடசாலைகளென்று அழைக்கப்பட்டாலும், உண்மையில் அவை அங்கிளிக்கன் பாதிரிமாரால், அங்கிளிக்கன் மதத்தைப் படிப்பிக்க அமைக்கப்பட்ட அங்கிளிக்கன் பாடசாலைகளாகவே இருந்தன. அங்கிளிக்கன் பாதிரிமார்களிடமே அவை ஒப்படைக்கப்பட்டன. இங்கிலாந்தில் ஏற்பட்ட மத மறுமலர்ச்சியின் விளைவாக, பப்ரிஸ்ற், வெஸ்லியன், அமெரிக்கன் மிஷன், சேர்ச் மிஷன் என்ற பல புரொட்-டஸ்தாந்து பிரிவினைக் குழுக்கள் இலங்கைக்கு வந்து, பல இடங்களிலும் பல பாடசாலைகளைத் திறந்து, தம் மறை பரப்புப் பணியில் ஈடுபட்டன. சகல அரசாங்க பாடசாலைகளையும் நடத்த நிதிபோதாததால், கவனர் பிறவுண்றிக் சில பாடசாலைகளை அம் மிஷனறிக் குழுக்களிடம் ஒப்படைத்து, அவர்களுக்கு வேண்டிய உதவியும், ஊக்கமும் அளித்தார். அரசாங்க பாடசாலைகளில் தமிழ், சிங்கள மொழிகளிலேயே பாடங்கள் படிப்பிக்கப்பட்டன.

ஆங்கிலம் அரச கரும மொழியாக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆங்கிலம் கற்கும் அவசியம் ஏற்பட்டது. எனவே புரொட்டஸ்தாந்து

குழுக்கள் இலங்கையின் பல பாகங்களிலும் ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்தனர். தங்களுடைய சபைகளிடமிருந்தும், இலங்கை ஆங்கிலேய அரசாங்கத்தினிடமிருந்தும் நிதியுதவி பெற்று, தங்கள் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு நல்ல பயிற்சியளித்தனர். எனவே மாணவர்கள் அப் பாடசாலைளையே தேடிச் சென்றனர். சிறந்த கல்விமான்களாகிய புரொட்டஸ்தாந்து மிஷனறிமார்கள், தம் பணிக்கு தம்மை முற்று முழுவதும் அர்ப்பணித்து, மாணவருக்கு சிறந்த சேவையாற்றினர். இலங்கைக்கு வந்த அமெரிக்கன் மிஷனறிச் சபையைச் சேர்ந்த மறைபரப்பாளர்கள் இலங்கையின் வட பகுதிக்குச் சென்று, அங்கு மாணவருக்கு கல்வி அறிவூட்டுவதில் அதிக கவனம் செலுத்தினர். மாணவர் தங்கியிருந்து பயிலுவதற்கு வசதியாக, இலவச விடுதி வசதிகளுடன், பல பாடசாலைகளை, வட்டுக்கோட்டை, உடுவில், உடுப்பிட்டி, கரவட்டி. பருத்தித்துறை, சாவகச்சசேரி, யாழ்ப்பாணம் போன்ற வெவ்வேறு இடங்களில் அமைத்தனர். தொடர்ந்து வட்டுக்கோட்டையில் ஒரு மத்திய உயர் கல்விக் கல்லூரியொன்றையும், குரு மடத்தையும், வேறு மூன்று இடங்களில் உயர் கல்விப் பாடசாலைகளையும் அமைத்தனர். இவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதில் பெரும் பணியாற்றினர்.

அக்காலத்தில் இலங்கையில் மூன்று தரமான பாடசாலைகள் இருந்தன. முதலில் அரசாங்க பாடசாலைகள். இவைகள் அரசாங்கத்-தால், ஆனால் உண்மையில் அங்கிளிக்கன் சபையினரால், நடத்தப்பட்ட சிங்கள, தமிழ், ஆங்கில பாடசாலைகள். அவை மிகத் தரம் குறைந்தவையாக இருந்தன. அடுத்து மிஷன் பாடசாலைகள். இவை புரட்டஸ்தாந்து மிஷனறிச் சபைகளால் நடத்தப்பட்டன. மூன்றாவது தனியார் பாடசாலைகள். அவை சில தனிப்பட்டவர்களால் அல்லது ஒரு மதச் சபையினால் நடத்தப்பட்டவை. இதைவிட பௌத்த விகாரை-களினால் நடத்தப்பட்ட பன்சில்கள் அல்லது கோவிற் பாடசாலைகளும் இருந்தன. அரசாங்க பாடசாலைகளின் தரத்துக்கும், புரட்டஸ்தாந்து மிஷன் பாடசாலைகளின் தரத்துக்கும் இடையே பெரிய இடைவெளி-யிருந்தது. எனவே அரசாங்க பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்குவ-தெனத் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்க நிர்வாக அமைப்பை சீர்திருத்தும் நோக்குடன்

அமைக்கப்பட்ட கோல்புறூக் ஆணைக்குழு, நாட்டை நன்றாக நிர்வகிப்பதற்கு, ஆட்சியாளருக்கும் மக்களுக்குமிடையே உள்ள பெரிய இடைவெளி குறைக்கப்பட வேண்டுமெனக் கருதியது. மறைபரப்பு நோக்கங்கள் எதுவுமின்றி, பிற்காலத்தில் அரச நிர்வாக இயந்திரத்தைப் பொறுப்பேற்று நடத்த மாணவர்களை ஆயத்தப்படுத்தக்கூடிய முறையில், கல்வித்துறை மாற்றி அமைக்கப்படவேண்டுமெனத் தீர்மானித்தது. ஆங்கிலக் கல்வியை ஊக்குவித்து, கல்வித் துறையில் வேண்டிய சீர்திருத்தங்களைக் கொணர, அரச பாடசாலைகளை பொறுப்பெடுத்து நடத்துவதற்கும், ஆங்கிலம் நன்கு தெரிந்த தகுதியான ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கும், அதிகாரம்கொண்ட ஒரு "பாடசாலை ஆணைக் குழு" அமைக்கும்படி சிபார்சு செய்தது. அதற்கமைய 1834ம் ஆண்டில் கொழும்பில் ஒரு பாடசாலை ஆணைக் குழுவும், மாகாணங்களில் பாடசாலைச் சபைகளும் ஆரம்பிக்கப்பட்டன. அந்த ஆணைக் குழுவில் அங்கிளிக்கன் பாதிரிமாரும், அரசாங்க அதிகாரிகளும் மாத்திரமே அங்கத்துவம் வகித்தனர். பௌத்த, இந்து, கத்தோலிக்க, முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இடமிருக்கவில்லை. அவ் ஆணைக் குழுவினால் பல ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் ஒன்றே தற்போதைய றோயல் கல்லூரியென்பது குறிப்பிடத்தக்கது. அதன் விளைவாக ஆங்கிலம் கற்பிக்கும் தனியார் மிஷன் பாடசாலைகள் உள்ள கிராமங்களிலிருந்த அரசாங்க பாடசாலைகள் மூடப்பட்டன. ஐரோப்பிய அமெரிக்க மறைபரப்புக் குழுக்கள் இன்னும் பல ஆங்கில பாடசாலைகளை ஆரம்பித்தனர். பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கத்தோலிக்கர்களுக்கு தேவையான தகுந்த ஆங்கில ஆசிரியர்களும், நிதியுதவியும் இல்லாததால், அவர்களால் ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியவில்லை. ஆகவே அவர்களின் பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதற்காக புரட்டஸ்தாந்து மிஷன் பாடசாலைகளுக்கே போகவேண்டியிருந்தது. அங்கு மாணவருக்கு சிறந்த கல்வியளிக்கப்பட்ட அதே வேளையில், மறை பரப்பு, மதமாற்று வேலைகளும் பகிரங்கமாக நடைபெற்றன. அந்த பொதுக் கலப்பு மதப் பாடசாலைகளில், பல கிறிஸ்தவ மதப் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்கள் அனைவருக்கும் பொதுவாகக் கிறிஸ்தவம் போதிக்கப்பட்டது. அக்காலத்தில், ஆங்கில பாடசாலைகள், ஆங்கில - சுதேச மொழிப் பாடசாலைகள், சுதேச மொழிப் பாடசாலைகளென மூன்று வகையான பாடசாலைகள் இருந்தன.

ஆங்கில பாடசாலைகளில் சகல பாடங்களும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்பட்டது. சுதேச மொழிப் பாடசாலைகளில் சகல பாடங்களும் சுதேச மொழிகளான சிங்களம் அல்லது தமிழில் கற்பிக்கப்பட்டது. ஆங்கில - சுதேச பாடசாலைகளில் ஆங்கிலம் ஒரு தனிப்பாடமாகக் கற்பிக்கப்பட, ஏனைய பாடங்கள் சுதேச மொழிகளில் கற்பிக்கப்பட்டன.

பாடசாலை ஆணைக் குழுவின் அமைப்பும், அதன் செயற்பாடுகளும், அங்கிளிக்கன் தவிர்ந்த, ஏனைய புரட்டஸ்தாந்து மிஷனறிக் குழுக்களுக்கும், ஏனைய மதத்தினருக்கும் திருப்தி அளிக்கவில்லை. எனவே அக் குழு 1841ம் ஆண்டு கவனர் ஸ்டுவார்ட் மக்கென்சியால் அகற்றப்பட்டு, அனைத்துக் கிறிஸ்தவ பிரிவினர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், பெரும்பாலும் இல்லறத்தவர்களைக் கொண்ட "மத்திய பாடசாலை ஆணைக் குழு" ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதில் ஒரு கத்தோலிக்க குருவுக்கு அல்லது பொதுநிலையினருக்கு இடம் அளிக்கப்பட்டாலும், பௌத்த, இந்து, முஸ்லிம்களின் பிரதிநிதிகளுக்கு இடமிருக்கவில்லை. அதி. வண. யோசவ் பிராவி ஆண்டகை கத்தோலிக்கர் சார்பில் இக்குழுவில் அங்கத்துவம் வகித்தார். அனைத்து மதத்தையும் சார்ந்த இலங்கைப் பிரசைகள் எல்லோருக்கும் ஏற்ற கல்வி அளிப்பதே இவ் ஆணைக் குழுவின் நோக்கமாகும். பிற மதத்தைச் சார்ந்த மாணவர்களைப் புறக்கணிக்கும் அல்லது அவமதிக்கும் புத்தகங்களையோ, போதனைகளையோ, கொள்கைகளையோ தடைசெய்வதில் கவனம் செலுத்தினர். மறைக் கல்வி வகுப்புகளுக்குச் செல்லாமலிருக்க பிற மத மாணவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. காலப்போக்கில், அரசாங்க பாடசாலைகளின் நிலை வீழ்ச்சியடைந்தது. ஆனால் மிஷன் பாடசாலைகள் திறமையுடன் செயற்பட்டு, சிறந்த கல்வி நிலையங்களாக மாறின. எனவே அரசாங்க பாடசாலைகள் மத்திய பாடசாலை ஆணைக் குழுவினால் மூடப்பட்டு, சில பாடசாலைகளை அரசாங்கத்தின் பெயரால் நடத்தும்படி மிஷனறிக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. கத்தோலிக்க திருச்சபைக்கும் ஒரு சில பாடசாலைகளை நடத்த உதவி வழங்கப்பட்டது. எனினும் கிறிஸ்தவர்களல்லாத மதங்கள் அவ் ஆணைக் குழுவில் அங்கத்துவம் வகிக்காததினால், கல்வித் துறையில் கிறிஸ்தவ மிஷன்களே ஆதிக்கம் செலுத்தின.

கல்வித் துறையில் மிஷன் பாடசாலைகளுக்கு பாரபட்சம்

காட்டப்பட்டாலும், மிஷன் பாடசாலைகளால் இலங்கைக் கல்வித்துறைக்குக் கிட்டிய நன்மைகளை நாம் மறுக்க முடியாது. எம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் அவைகள் பெரும் பங்களிப்புச் செய்திருக்கின்றன. தம் மாணவர்களுக்கு கல்வி வழங்க அரசாங்கம் இயலாதிருந்த நிலையில், அவர்கள் முன் வந்து ஆற்றிய சேவை பாராட்டுக்குரியது. இலங்கையின் பல பாகங்களிலும் பல பாடசாலைகளை அமைத்து, ஐரோப்பாவிலிருந்து பல சிறந்த ஆசிரியர்களை வரவழைத்து, மாணவ மாணவிகளுக்கு கல்வியறிவு ஊட்டினர். இவற்றுள் அமெரிக்க மிஷன் சபை யாழ்ப்பாணத்தில் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. ஏனைய மாகாணங்களில் பார்க்க அதிகமான பாடசாலைகளை அங்கு அமைத்து, ஐரோப்பாவிலிருந்து சிறந்த கல்விமான்களை வரவழைத்து, அவர்கள் யாழ்ப்பாண மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவியிருக்கின்றனர். அவர்கள் வழியாக யாழ்ப்பாணத்தில் சிறந்த கல்வியறிவுடைய பரம்பரை ஒன்று உருவாகியிருக்கிறதை நாம் காண்கிறோம். அதன் விளைவாக, இன்றும் யாழ்ப்பாண மக்கள் தாம் பெற்ற கல்விச் செல்வத்தை பாதுகாத்து, தம் பிள்ளைகளுக்கும் அளித்து வருகிறார்கள்.

**நன்கொடை பெறும் பாடசாலைகள்**

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில், 1798ம் ஆண்டு, கல்வி விவகாரங்கள் அங்கிளிக்கன் சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. கோல்புறூக் ஆணைக் குழுவின் சீர்திருத்த நடவடிக்கையின் கீழ், 1834ம் ஆண்டு, பாடசாலை ஆணைக் குழு ஏற்படுத்தப்பட்டு, அதன் பொறுப்பில் கல்வித் துறை கையளிக்கப்பட்டது. முற்றுமுழுவதும் புரட்டஸ்தாந்தினரை அங்கத்தினராகக் கொண்டு இயங்கிய அக் குழு, புரட்டஸ்தாந்து கல்வி அமைப்புகளுக்கும், மதமாற்றும் நடவடிக்கைகளுக்கும் சாதகமாகவே செயற்பட்டது. 1841ம் ஆண்டு மத்திய பாடசாலை ஆணைக் குழு நிறுவப்பட்டு, அதனிடம் பாடசாலைகளின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. இந்த ஆணைக் குழுவிலும், ஒரு கத்தோலிக்க பிரதிநிதியைத் தவிர, புரட்டஸ்தாந்தினரே பெரும்பாலும் அங்கத்தவம் வகித்தனர். இந்த அமைப்புகளுக்கு அரசிடமிருந்து நிதியுதவிகள் கிடைத்தன. சிங்கள, தமிழ் மொழிகளில் கல்வி புகட்டிய ஏனைய மத பாடசாலைகளுக்கு எவ்வித அரச உதவியும் கிடைக்க-

வில்லை. கோல்புறூக் ஆணைக் குழுவின் சிபார்சுக்கு அமைய ஆங்கிலம் உத்தியோக மொழியாக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசோடு தொடர்பு கொள்ள, அரச உத்தியோகங்கள் பெற இலங்கை மக்கள் ஆங்கிலம் கற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் அங்கிளிக்கன் சபையினரும், அவர்களைத் தொடர்ந்து, பிரித்தானிய பிரசைகளாகிய ஏனைய புரட்டஸ்தாந்து சபையினர்களுமே ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பித்து நடத்தினர். அவர்கள் ஆங்கிலத்தை நன்கு அறிந்திருந்தமையால், ஆங்கில பாடசாலைகளை ஆரம்பித்து நடத்துவது அவர்களுக்கு இலகுவாயிருந்தது. மேலும் அவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து நிதியுதவிகளும் கிடைத்தன. பௌத்த மதத்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கத்தோலிக்கர் தாங்களாக ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பிக்க நிதி வசதிகளும், ஆங்கில ஆசிரிய வசதிகளும் இல்லாததால், தம் பிள்ளைகளை புரட்டஸ்-தாந்தினரின் ஆங்கிலப் பாடசாலைகளுக்கே அனுப்ப வேண்டியிருந்தது. எந்தவொரு மதத்தினருக்கும் முரணான நூல்களைப் பாடசாலைகளில் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்பது மத்திய பாடசாலை ஆணைக் குழுவின் சட்ட ஒழுங்காக இருந்தாலும், நடைமுறையில் அது கடைப்பிடிக்கப் படவில்லை. ஒவ்வொரு நாளும் காலையில் புரட்டஸ்தாந்து வேதாகமத்திலிருந்து பகுதிகள் வாசிக்கப்பட்டு, மறை உரைகள் வழங்கப்பட்ட பின்னரே, பாடசாலைகள் ஆரம்பமாகின. மாணவர்கள் ஆங்கிலம் படிப்பதில் அக்கறையெடுத்ததினால், சுதேச மொழிப் பாடசாலைகள் கவனிப்பாரற்று, அரசாங்கத்தால் கைவிடப்பட்டன. ஆலயங்களிலும், கிராமப் புறங்களிலிருந்த கத்தோலிக்க, புரட்டஸ்தாந்த மிஷன் பாடசாலைகளிலுமே, தமிழ், சிங்கள மொழிகளில் கல்வி அளிக்கப்பட்டது. பல சுதேச மொழிப் பாடசாலைகள் மூடப்பட்டன. எனவே சுதேச மொழிகளான தமிழும், சிங்களமும் அந்நிய மொழிக-ளாக்கப்பட்டு, படிப்படியாகக் கைவிடப்பட்டன.

இத்தகைய சூழ்நிலையில்தான் 1856ம் ஆண்டு வண. கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகளார் இலங்கைக்கு வந்து, யாழ்ப்பாணத்-தில் பணிபுரிய அனுப்பப்பட்டார். அவர் ஒரு பிறெஞ்சுக்காரராக இருந்தா-லும், இலங்கைக்கு வருமுன் பத்து ஆண்டுகளாக இந்தியாவில், கோயம்புத்தூரில் குருவாகப் பணிபுரிந்தார். அக்காலத்தில் தமிழையும், ஆங்கிலத்தையும் நன்கு கற்றிருந்தார். இலங்கையில் கத்தோலிக்க

மதத்தின் எதிர்காலம் கல்வியில் தங்கியிருப்பதை உணர்ந்த பொன்ஜீன் அடிகளார், கத்தோலிக்க கல்வியின் பரிதாப நிலைமையைக் கண்டு மிகவும் கவலைப்பட்டார். இலங்கையிலிருந்த கல்வி முறை அவருக்குச் சற்றேனும் திருப்தியளிக்கவில்லை. நான்கு ஆண்டுகளாக இலங்கைக் கல்வி முறையை நன்றாக ஆராய்ந்த பின், அவர் குரு நிலையில் இருந்த பொழுதே, 1860ம் ஆண்டில் "இலங்கைக் கத்தோலிக்க கல்வியைப்பற்றிய ஒரு சில வார்த்தைகள்" என்ற சிறு நூலை வெளியிட்டார். அதில் மத்திய பாடசாலை ஆணைக் குழுவின் பாரபட்சமான போக்கை வெளிப்படுத்தி, கல்விபற்றிய கத்தோலிக்கரின் நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக் கூறி, தங்கள் பிள்ளைகளின் கல்வி மட்டில் கத்தோலிக்க பெற்றோரின் பொறுப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டார். ஒவ்வொருவருக்கும் உள்ள மதச் சுதந்திரத்தை எடுத்துணர்த்தி, பெற்றோரே தம் விருப்பத்தின்படி தம் பிள்ளைகளுக்கு ஏற்ற பாடசாலைகளைத் தெரிவுசெய்யும் உரிமையுள்ளவர்களென வாதாடினார். பல மத மக்களைக் கொண்டுள்ள இலங்கைக்கு அரச உதவியுடன் (நன்கொடை) இயங்கும் மதப் பாடசாலைகளே சிறந்ததென்பதை மிகவும் வலியுறுத்தினார். அதுதான் இலங்கையில் ஒரு கத்தோலிக்க குருவால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட முதல் நூலென்பது குறிப்பிடத் தக்கது. தொடர்ந்து, பொதுக் கலவன் பாடசாலைகளில், அனைத்து கிறிஸ்தவ பிரிவினருக்கும் பொதுவான ஒரே கிறிஸ்தவத்தைக் கற்பிக்கும் அரச கல்வி முறையை எதிர்த்து பல கட்டுரைகளை எழுதி, அக்காலத்தில் பிரபல்யமாயிருந்த 'Examiner'' என்ற பத்திரிகையில் வெளியிட்டார். அவர் அரசாங்கத்தின் கல்வி முறையை கடுமையாக விமர்சனம் செய்தாலும், அவ் விமர்சனங்கள் ஆக்க பூர்வமானவையாகவே இருந்தன. எனவே அரசும் அவருக்கு மதிப்பளித்து, அவ் விமர்சனங்களுக்குக் கவனம் செலுத்தியது. அரசு தன் கல்வி முறையில் ஒரு மாற்றம் கொணருமட்டும், அவர் தொடர்ந்து அரசாங்கத்தின் பாரபட்சமான போக்கை விமர்சித்து பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தார். 1865ம் ஆண்டு, சட்ட சபை இலங்கைக் கல்வி முறையைப்பற்றி விசாரணை செய்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவென ஒரு குழுவை நியமித்தது. பொன்ஜீன் அடிகளாரிடமிருந்தும் ஆலோசனைகள் கேட்கப்பட்டன. அவ்வேளை அவரிடம் கேட்கப்பட்ட வினாக்களுக்கு அவர் முழுமையான பதில் அளித்து, ஒவ்வொரு

மதக் குழுவினாலும் அரசாங்க உதவியுடன் (நன்கொடை) நடத்தப்படும் மதப் பாடசாலைகளைக் கொண்ட கல்வி முறையை வலியுறுத்தினார். கத்தோலிக்கர் மட்டுமல்ல, பௌத்த மதத்தினர், இந்துக்கள், முஸ்லிம்-களும் நீதியுடன், சமமாக நடத்தப்பட வேண்டுமென்று வாதாடினார். இவையெல்லாம் பின்பு, "கத்தோலிக்க திருச்சபையும் சீர்திருத்தமும்" என்ற பெயரில், புத்தகமாக வெளியிடப்பட்டன.

விசாரணைக் குழு, பொன்ஜீன் அடிகளாரின் ஆலோசனைகளை ஏற்று, தனது அறிக்கையில் இரு முக்கிய கோட்பாடுகளை சிபார்சு செய்தது. முதலாவது, இலங்கையிலுள்ள ஒவ்வொரு மதக் குழுவும், தனது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக, தனது பாடசாலைகளை வைத்திருக்க விரும்பினால், அதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டும். இரண்டாவது, அரசாங்கத்துக்கு திருப்தி அளிக்கக்கூடிய முறையில் கல்வி வழங்கும் ஒவ்வொரு தனியார் பாடசாலைகளுக்கும், அரச நீதியுதவி (நன்கொடை) வழங்கப்படல் வேண்டும். இச் சிபார்சுகளை ஏற்றுக்கொண்ட அரசாங்கம், 1869ம் ஆண்டில் மத்திய பாடசாலை ஆணைக் குழுவை ரத்து செய்து, அதற்குப் பதிலாக "பொதுக் கல்வித் திணைக்களம்" ஒன்றை ஏற்படுத்தி, அதன் கீழ் தன் புதுக் கல்வித் திட்டத்தை அமுல் செய்தது. அத் திணைக்களம் அரச நன்கொடைக-ளுடன் சுதேச மதப் பாடசாலைகளை ஆரம்பித்தல், வர்த்தக, விஞ்ஞான பாடங்களை பாடசாலைப் பாடத் திட்டத்தில் சேர்த்தல், சிறந்த மாணவர்களை, புலமை பரிசுகள் வழங்கி, கல்கத்தா, இங்கிலாந்து சர்வகலாசாலைகளுக்கு அனுப்புதல், சுதேச பாட நூல்களை அச்சடித்தல், ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை அமைத்தல் போன்றவற்-றைச் சிபார்சுசெய்தது. இதன் விளைவாக, அரச உதவியுடனான மதப் பாடசாலைகளை அமைக்கும் உரிமை கத்தோலிக்கருக்கு மட்டுமல்ல, இலங்கையிலுள்ள ஏனைய கிறிஸ்தவரல்லாத, பௌத்த, இந்து., முஸ்லிம் மதத்தினருக்கும் அளிக்கப்பட்டது. இந்த மதப் பாடசாலை கல்வி முறைப்படி, அரசாங்கம் கல்வித் துறையை தன் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொள்வதில்லை. மாறாக, அது மதத் தலைவர்களுக்கு, தம் மதப் பாடசாலைகளை அமைத்து, தம் மதக் கோட்பாடுகளுக்கமைய அவற்றைக் கொண்டு நடத்த, நிதியுதவி (நன்கொடை) வழங்கி, துணை செய்கிறது. இம் முறையின்படி காணியையும், கட்டிடத்தையும் மதத் தாபனங்கள் வழங்க, அரசு

ஆசிரியர்களின் சம்பளம் போன்ற நிதியுதவியை அளிக்கின்றது. மதத் தாபனங்கள் உலக சம்பந்தமான கல்வி மட்டுமல்ல, தம் மத அறிவையும் அளிக்க ஒழுங்குகளைச் செய்யலாம். அரச அதிகாரிகள் மதப் பாடசாலைகளை பரிசோதனை இட்டு, மேற்பார்வை செய்வர். இம் முறையிலே அரசும், மதத் தாபனமும், கல்வித் துறையில் பங்காளர்களாகச் செயலாற்றுகிறார்கள். இதுவே பல மதங்களைக் கொண்ட நம் நாட்டுக்கு உகந்த கல்வி முறையாகும். இவ்வாறு வண. பொன்ஜீன் அடிகளாரின் அயராத கடின உழைப்பினால் இலங்கையில் அரச உதவி (நன்கொடை) பெறும் மதப் பாடசாலை முறை (Denominational School System) உருவாகியது. எனவேதான் பொன்ஜீன் அடிகளார் அனைவராலும் "அரச உதவிபெறும் மதப் பாடசாலைகளின் தந்தை"யென அழைக்கப்படுகிறார்.

கோல்புறூக் ஆணைக் குழுவின் சிபார்சின் பேரில், ஆங்கிலம் அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், ஆங்கிலப் பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் படையெடுத்தனர். இதனால் சுதேச மொழிப் பாடசாலைகள் கவனிப்பாரற்று, தரம் குறைந்தன. பல சுதேச மொழிப் பாடசாலைகள் மூடப்பட்டன. பொன்ஜீன் அடிகளார், மாணவர் சுதேச மொழி கற்பதன் அவசியத்தை உணர்ந்து, சுதேச பாடசாலைகளின் தரத்தை உயர்த்த பெரும் பாடுபட்டார். இலங்கையரை தம் சொந்த நாட்டிலேயே அந்நியராக்கும் ஆங்கிலக் கல்வி முறையைச் சாடினார். அதை அந்நிய நாட்டுக் கலாச்சாரத்தை இலங்கை மக்கள்மேல் திணிக்கும் முயற்சியாகக் கருதினார். இலங்கையில் நாட்டுப் பற்றுள்ள குடிமக்களை உருவாக்க, தம் தாய் மொழியில் அவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார். அதுமட்டுமல்ல, மாணவர்களின் அதிபுத்தி சாதுரியத்தை, நுண்ணறிவை வெளிக் கொணர்ந்து பலன் பெற, அவர்கள் தம் சொந்த மொழியில் சிந்திக்கவும், பேசவும் வேண்டுமென வலியுறுத்தினார். மேலும் தன் சொந்த மொழியை விடுத்து, அந்நிய மொழியை அரைகுறையாகக் கற்பது, ஒருவரின் சிந்திக்கும் ஆற்றலுக்குத் தடையாக அமைகிறது. ஆங்கிலக் கல்வி குடிமக்களை அறிவு ரீதியில் வலுவற்றவர்கள் ஆக்குகின்றதென விளக்கிக் கூறினார். சுதேச கல்விக்குப் பதிலாக ஆங்கிலக் கல்வியை வளர்ப்பதன் வழியாக பலர் அடிப்படைக் கல்வியுமின்றி, அறியாமையில் இருப்பதை எடுத்துக்காட்டினார். இதை உணர்ந்த பொதுக் கல்வித்

திணைக்களம், அரசு சுதேச மொழியில் கல்வி அளிப்பதை பெருமளவில் மேற்கொள்ள வேண்டுமென முடிவு செய்தது. மேலும் ஆரம்ப கல்வியை சிங்கள, தமிழ் மொழிகளில் அளிக்கும் சுதேச பாடசாலைகள் பரவலாக எல்லாக் கிராமங்களிலும் அமைக்கப்படுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. எனவே அரசு சுதேச பாடசாலைகளில் அதிக கவனம் செலுத்தி, ஆங்கிலப் பாடசாலைகளை தனியாரிடம் அல்லது மதத் தாபனங்களிடம் ஒப்படைத்தது. இப் புதிய திட்டம் சுதேச மொழிகளான சிங்கள, தமிழ் மொழிகளின் வளர்ச்சிக்கு வழி வகுத்தன.

கத்தோலிக்க திருச்சபை இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நாடெங்கும் நகரங்களிலும், கிராமப் புறங்களிலும் பரவலாக அரச உதவி பெறும் சுதேச பாடசாலைகளை அமைத்தது. முக்கியமாகக் கத்தோலிக்கருக்கென அப் பாடசாலைகள் அமைக்கப் பட்டாலும், பிற மதப் பிள்ளைகளும் அனுமதிக்கப்பட்டார்கள். பொதுவாக ஒவ்வொரு பங்கிலும் உள்ள ஒவ்வொரு கோவிலுக்கும் அருகாமையில் ஒரு கத்தோலிக்க கலவன் ஆரம்ப பாடசாலை, அல்லது ஆண் பாடசாலை, பெண் பாடசாலையென இரு பாடசாலைகள் அமைக்கப்பட்டன. நகரங்களில் மேல் வகுப்புகளுக்கான பெரிய பாடசாலைகளும் அமைக்கப்பட்டன. 1892ம் ஆண்டில் கத்தோலிக்க திருச்சபை ஆகக் கூடுதலான தொகையான 209 அரச நிதியுதவி (நன்கொடை) பெறும் சுதேச மொழிப் பாடசாலைகளையும், அரச நிதியுதவி பெறும் 14 ஆங்கில உயர்தர பாடசாலைகளையும் கொண்டிருந்தது. பௌத்த, இந்து மத தாபனங்களும், தம் மத மாணவர்களுக்கென, அரச நிதியுதவியுடன் பாடசாலைகளை ஆரம்பித்தன. இவ்வாறு கல்வித் துறையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது.

**ஆங்கிலேயர் காலக் கிறிஸ்தவ மகளிர் கல்வி**

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில், மத சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டதை அடுத்து, ஐரோப்பாவிலிருந்து பல புரட்டஸ்தாந்து மிஷனறி சபையினர் இலங்கைக்கு வந்து, தம் மறைப்பரப்புப் பணியில் ஈடுபட்டனர். இவர்களில் அங்கிளிக்கன், லண்டன் மிஷனறி, பப்ரிஸ்ற், மெதடிஸ்ற், வெஸ்லியன், அமெரிக்கன் மிஷன் போன்ற சபைகள் குறிப்பிடத்தக்கன. அச் சபையினரில் பெரும்பாலனவை இலங்கையின் பல பாகங்களிலும் பாடசாலைகளை அமைத்து, கல்வித் துறையிலேயே

ஈடுபட்டனர். அவர்களைத் தொடர்ந்து ஐரோப்பாவிலிருந்து கத்தோலிக்க மறை பரப்பாளர் சபைகளும், துறவறக் குழுக்களும், இலங்கைக்கு வந்தன. இவர்களில் பிரான்சின் மரியாள் சபைக் குருக்கள், இத்தாலியின் சில்வெஸ்த்ரோ ஆசீர்வாதப்பர் சபைக் குருக்கள், பெல்ஜியத்தைத் சேர்ந்த இயேசு சபையினர், பிரான்ஸைச் சேர்ந்த அமல மரித் தியாகிகள், மாரிஸ்ட் சகோதரர், டி லா சால் சகோதரர், திருக் குடும்பக் கன்னியர், பிரான்சிஸ்கன், நல்லாயன். பிறர் சிநேக சகோதரிகளின் துறவற சபையினரும் அடங்குவர். இவர்களிலும் அதிகமானோர் பாடசாலைகளி-லேயே தம் மறைப்பணியைச் செய்தனர்.

இவர்களுள் சில புரட்டஸ்தாந்து மறைத் தூதுக் குழுக்களும், கத்தோலிக்க துறவற சபையினரும் கிறிஸ்தவ மகளிர் கல்விக்கென தம்மை அர்ப்பணம் செய்து, அதற்காக முன்னணி வகித்துச் செயலாற்-றினர். இவர்களுள், பப்ரிஸ்ற் மறைத் தூதுவர், மெதடிஸ்ற் மறைத் தூதுவர், அமெரிக்க மிஷன் மறைத்தூதுவர், திரு குடும்பக் கன்னியர், நல்லாயன் சபைக் கன்னியர் போன்றவர்களை நாம் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவர்கள் இலங்கைக் கிறிஸ்தவ மகளினரின் கல்வி மேம்பாட்டிற்காக பெரும் பணியாற்றினர். இலங்கைக்கு பப்ரிஸ்ற் சபையினர் 1812ம் ஆண்டிலும், வெஸ்லியன் மெதடிஸ்ற் சபையினர் 1814லும், அமெரிக்கன் மிஷன் சபையினர் (Congregationalists and Presbyterians) 1818லும் வந்தனர். இவ் மிஷனறிச் சபையினர் இலங்கையெங்கும் பரவலாக பாடசாலைகளை அமைத்தனர். தமது சபைகளின் நிதியுதவிகளுடனும், அரசாங்கத்தின் உதவியுடனும், பாடசாலைகளில் தமது பணியைச் சிறப்புடன் ஆற்றிய அவர்களிடம் மாணவ மாணவிகள் பெருந் தொகையாகச் சென்றனர். இலங்கைக்கு வந்த அமெரிக்கன் மிஷன் சபையினர் யாழ்ப்பாணம் சென்று, பல இடங்களில், மாணவ மாணவிகள் தங்கியிருந்து கற்பதற்கு ஏற்ற விடுதி வசதிகளுடன், பெரிய பாடசாலைகளை ஆரம்பித்தனர். வட்டுக்கோட்டை, உடுவில், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாண நகரம், தெல்லிப்பளை போன்ற இடங்களில் பல பாடசாலை அமைத்து, யாழ்ப்பாண மாணவர்களுக்கு, சிறப்பாக மகளிருக்கு, சிறந்த சேவை செய்தனர். இருபது ஆண்டுகளுக்குள் அவர்கள் 235 பாடசாலைகளை ஆரம்பித்து, 10,000 மாணவ மாணவிகளுக்கு கல்வி அறிவு ஊட்டினர்.

திருக் குடும்பக் கன்னியர் யாழ்ப்பாணத்துக்கு கார்த்திகை 1862ம் ஆண்டில் வருகை தந்ததை அடுத்து, இலங்கையில் மகளிர்க்கு கொன்வென்ற் பாடசாலைக் கல்வி (Convent School Education) ஆரம்பமாகியது. பெற்றக்கீனி ஆண்டகையால் 1849இல் ஆரம்பிக்கப்பட்ட "யாழ்ப்பாண கத்தோலிக்க ஆங்கில பெண்கள் பாடசாலை" அயர்லாந்து நாட்டு விதவையான, திருமதி மேரி ஆன் பிளநகன் என்பவரின் தலைமையில் இயங்கி வந்தது. 1862ம் ஆண்டில் திருக் குடும்பக் கன்னியர் யாழ்ப்பாணம் வந்து, அப் பாடசாலையைப் பொறுப்பேற்றனர். 1864இல் ஒரு புதிய கொன்வென்ற் பாடசாலை ஆரம்பமாகியது. கன்னியரின் தலைமையில் அங்கு அளிக்கப்பட்ட கல்வியூட்டுதலும், ஆங்கில அறிவும், ஒழுங்கும், நல்லொழுக்கமும், பண்பும், பெற்றோ-ரையும், மாணவிகளையும் மிகவும் கவர்ந்தன. பல கிறிஸ்தவரல்லாத, புரட்டஸ்தாந்துப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை, தமது மதப் பாடசாலைகளிலிருந்து எடுத்து, கன்னியர் மடத்தில் சேர்த்தனர். அதைத் தொடர்ந்து திருக் குடும்பக் கன்னியர், தமது சகோதர சபையான சுதேச பெண்களின் புனித இராயப்பர் சபைக் கன்னியரின் ஒத்து-ழைப்புடன், தமது இப் பணியை வட இலங்கையின் பல பாகங்களுக்கும் விஸ்தரித்தனர். 1893இல் ஆங்கில,-சுதேச மொழி மடப் பாடசாலைகளை இளவாலையிலும், 1894இல் மாதகலிலும் மன்னாரிலும், 1896இல் சில்லாலையிலும், 1897இல் பருத்தித்துறையிலும், 1898இல் ஊர்காவத்துறையிலும், 1908இல் நாரந்தனையிலும், 1916இல் கரம்பொனிலும் ஆரம்பித்தனர். மேலும் வென்னப்புவவிலும், கட்டுனேரியாவிலும், மாறவில்லவிலும் மடப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. 1869இல் இலங்கைக்கு வந்த நல்லாயன் சபைக் கன்னியர்கள், கொழும்பில் முதல் உயர்தர மடப் (கொன்வென்ற்) பாடசாலையை ஆரம்பித்தனர். தொடர்ந்து அவர்கள் தென் இலங்கையின் பல இடங்களில், பல மடப் பாடசாலைகளை அமைத்து, மகளிரின் கல்விக்கு பெரும் பணி புரிந்தனர். இம் மடப் பாடசாலைகளுக்கு பெற்றோரினதும், மாணவிகளினதும் அமோக வரவேற்பும், ஆதரவும், பாராட்டும் கிடைத்தன.

## 8.1.4.7. சுதந்திர இலங்கையை உருவாக்குவதில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே, ஆங்கிலேயர் 1796ம் ஆண்டில் ஒல்லாந்தரிடமிருந்து நாட்டைக் கைப்பற்றினர். இவ்வளவு காலமும் ஒரு தனி சுதந்திர அரசாகவிருந்து கண்டி அரசும் 1815ம் ஆண்டில் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் கொணரப்பட்டு, இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் இருந்தது. ஒறொற்ரோறியன் குருக்களின் அயராத முயற்சியினால், அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, 1806ம் ஆண்டில் சகல மதத்தினருக்கும் சட்டபூர்வமாக மதச் சுதந்திரம் வழங்கப்பட்டது. தொடர்ந்து கத்தோலிக்க குருக்களின், குறிப்பாக வண. பொன்ஜீன் அடிகளாரின் அயராத முயற்சியினால் எல்லா மதத்தினருக்கும் கல்விச் சுதந்திரம் கிடைத்தது. முதலில் 1834இல் ஒரு பாடசாலை ஆணைக் குழுவும், தொடர்ந்து 1841இல் மத்திய பாடசாலை ஆணைக் குழுவும், இறுதியாக 1869ம் ஆண்டில் பொதுக் கல்வித் திணைக்களமும் தாபிக்கப்பட்டு, எல்லா மதத்தினருக்கும், அரச நன்கொடையுடன், சுதேச மொழிகளில் தம் மதப் பாடசாலைகளை இலங்கையில் எங்கும் ஆரம்பித்து நடத்த அனுமதி வழங்கப்பட்டது. ஆங்கிலேயரின் 150 வருட ஆட்சியின் கீழ் இலங்கை பல துறைகளிலும் வளர்ச்சி கண்டு விரைவாக முன்னேறியது. "ராஜகாரிய" எனப்படும் அடிமை அல்லது கட்டாய வேலை செய்தல் நிறுத்தப்பட்டது. அரச நிர்வாகம், போக்கு வரத்து. சமூக தொடர்பு, விவசாய உற்பத்தி, சுகாதாரம், நீர்ப்பாசனம், கல்வி போன்ற துறைகளில் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு, நாடு முன்னேறியது.

19ம் நூற்றாண்டில இறுதியில் பௌத்த சீர்திருத்தவாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட "மது விலக்கு இயக்கம்," இலங்கையின் கிராமப் புறங்களில், பாமர மக்களுக்கு கிறிஸ்தவ பாடசாலைகளால் அளிக்கப்-பட்ட கல்வியின் விளைவேயாகும். இந்த மதுவிலக்கு இயக்கமே பின்னர் இலங்கையின் விடுதலை இயக்கத்துக்கு அடிகோலியது. 1915ம் ஆண்டு ஏற்பட்ட பௌத்த-முஸ்லிம் கலவரத்தின்போது, அரசாங்கம் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து, ஏராளமான சிங்கள பௌத்தர்களைக் கைது செய்து, எவ்வித விசாரணையுமின்றிச் சிறையிலடைத்தது. பலர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள். சிறையிலடைக்கப்பட்ட-

வர்களில் டி. எஸ். சேனநாயக்கா, எவ் ஆர், சேனநாயக்கா என்பவர்களும் அடங்குவர். அதற்கு ஆட்சேபம் தெரிவிக்க இலங்கைப் பெரியோர்கள் ஒன்று கூடினார்கள். 1915ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ம் திகதி, கொழும்பில், 'பொது மண்டபத்'தில் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு, சேர் ஜேம்ஸ் பீரீஸ் என்ற கிறிஸ்தவரே தலைமை தாங்கினார். பலர் பௌத்த-முஸ்லிம் பிரச்சினையில் ஏன் ஒரு கிறிஸ்தவர் தலையிடவேண்டுமெனக் கூறி, அவரைத் தடுக்க முனைந்தனர். அவரோ ஒரு கிறிஸ்தவனாக-விருந்தாலும், தான் ஒரு சிங்களவன், என் பௌத்த சகோதரர்கள் அநீதியாகக் கொடுமைப் படுத்தப்படும்பொழுது, நான் சும்மா பார்த்துக் கொண்டிருப்பதாவெனக் கேட்டார். ஆங்கிலேய அரசாங்கத்தின் அநீதிகள், அட்டூழியங்களை, பிரித்தானிய அரசுக்கு வெளிப்படுத்தி, சிறையி-லிடப்பட்ட சேனநாயக்காக்களையும், ஏனைய சிங்கள பௌத்தர்களையும் விடுவிக்கக் கோரி எழுதப்பட்ட முறையீட்டு விண்ணப்பத்தில் கையெழுத்-திட்டவர்களில் அதிகமானோர் கிறிஸ்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இறுதியில் இ. டபிள்யு. பெரேரா என்ற கத்தோலிக்கரே தன் உயிருக்கே ஆபத்தாயிருந்தபோதும், அக் கடிதத்தை தன் சப்பாத்துக்குள் மறைத்து வைத்து, இரகசியமாக லண்டனுக்குக் கொண்டுபோய், பிரித்தானிய அரசிடம் ஒப்படைத்தவர். பௌத்த-முஸ்லிம் கலவரத்தின்போது அமைதியை நிலைநாட்ட கிறிஸ்தவர்கள் அயராது உழைத்தனர். அக்காலத்தில் பேருவளை பங்குத் தந்தையாகவிருந்த அருட்திரு பீற்றர் மார்க் அடிகளார் (பின்பு கொழும்பு ஆயர்) ஆற்றிய பணி இன்றும் பேருவலை மக்களால் நினைவுகூரப் படுகிறது. தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருந்த பௌத்த-முஸ்லிம் கலவரத்தை மக்களா-லும், அரசாங்கத்தாலும் அடக்க முடியவில்லை. ஆனால் கத்தோலிக்-கரான அல்பேட் இ. விக்கிரமசிங்கவினால் கேகாலையில் கூடப்பட்ட ஆணைக் குழு அதில் வெற்றி கண்டது. அவர் கேகாலையில் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பளித்து, அமைதியைக் கொணர்ந்தார். அரசாங்கமே அவர் சேவைக்காக அவரைப் பாராட்டியது. ஆனால் அரசாங்கம் பௌத்த-முஸ்லிம் மக்களின் காணி நிலங்களை பறிமுதல் செய்தபோது, அவர் அதற்கெதிராகக் குரல் கொடுத்தார். இவையெல்லாம் பின்னர் விடுதலை இயக்கத்துக்கு பெரும் உதவியாய் அமைந்தன.

ஒரு நூற்றாண்டு கால ஆங்கிலேய ஆட்சியின் பின்னர்தான், இலங்கைத் தேசப் பற்றுள்ளவர்கள் நாட்டின் முழுச் சுதந்திரத்துக்காக


முழு மூச்சுடன் உழைக்கத் தொடங்கினர். சிங்கள, தமிழ் இனத்தைச் சார்ந்த, ஆங்கிலக் கல்வி கற்று, மேற்கத்தைய போக்குடைய தேசபிமானிகளும், கல்விமான்களும் ஒன்று சேர்ந்து, 1919இல் இலங்கைத் தேசிய காங்கிரசை அமைத்தனர். அதன் முதல் கூட்டத்தில், அதன் தலைவராக திரு. பொன்னம்பலம் அருணாசலமும், அவரைத் தொடர்ந்து, கிறிஸ்தவரான சேர் ஜேம்ஸ் பீரீஸ் அவர்களும் நியமனம் பெற்றனர். அதன் செயலர்களில் ஒருவராகவும், பொருளாளராகவும் கத்தோலிக்கரான திரு. இ. ரி. டி சில்வா தெரிவு செய்யப்பட்டார். 1921ம் ஆண்டு இடம்பெற்ற அதன் இரண்டாவது ஆண்டுக் கூட்டத்தில், அதன் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒருவரைத் தவிர, மற்ற அனைவரும் கிறிஸ்தவர்களென்பது குறிப்பிடத்தக்கது. 1942ம் ஆண்டு, மார்கழி 18-20ம் திகதிகளில், திரு. பி. டி குலரத்னவின் தலைமையில் நடந்த இலங்கைத் தேசிய காங்கிரசின் 22ம் ஆண்டுக் கூட்டமே இலங்கை விடுதலை இயக்கதின் முக்கிய திருப்பமுனையாக அமைந்தது. அவர்கள் ஆங்கிலேயரில் ஒரு பொது எதிரியைக் கண்டு, அந்நிய ஆட்சியாளரால் சீர்குலைக்கப்பட்ட தங்கள் சுதேச கலாச்சாரத்தை, பண்பாட்டை திரும்பவும் நிறுத்தி வளர்க்கும் நோக்குடன், சுயாட்சி கேட்டு, கிளர்ச்சி செய்வதாகத் தீர்மானித்தனர். இத் தீர்மானத்தை திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனா முன்மொழிய, ஒரு கத்தோலிக்க சட்டவாதியான ஜே. எ. சீ. கூரே வழிமொழிந்தார். அதன் 23ம் வருடாந்த கூட்டம் ஒரு நூறு வீதம் கத்தோலிக்க கிராமமான டும்மலதேனியா என்ற இடத்தில், டி. பீற்றர் பெரேராவின் தலைமையில் கூடியது. அதில் சிலாப ஆயரான அதி வண. எட்மன்ட் பீரீஸ் ஆண்டகையும் பங்கு பற்றினார். அக் கூட்டத்தின்போது, திரு. ஜே. எ. சீ. கூரே நாட்டுக் குடிகளின், தொழிலாளரின் பொருளாதார அமைப்பைச் சீர்செய்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஒரு கொள்கையை முன் மொழிந்தார். அக் கூட்டத்தில் இன்னொரு கத்தோலிக்க சட்டவாதியான திரு. ஸரான்லி சொய்சா விடுதலை இயக்கத்தின் மிதவாதப் போக்கைப் கண்டித்துப் பேசினார்.

இவ்வாறு இலங்கைக்கு சுதந்திம் பெற்றுக் கொடுக்க தேச பக்தர்கள் எடுத்த முயற்சிகளிலே பல கிறிஸ்தவ, கத்தோலிக்கப் பெரியார்களும் இணைந்து கொண்டதைக் காண்கிறோம். அவர்கள் ஏனைய மதத்தைச் சார்ந்த சகோதர மக்களோடு, முன்னணியில்

நின்று, முழுமையாக ஒத்துழைத்தனர். தேசிய பிரச்சினைகள், போராட்டங்களின்போது, தாம் ஏனைய மக்களுடன் கூட்டாக இணைந்து செயல்பட வேண்டுமென்பதை அவர்கள் நன்கு உணர்ந்து செயல்பட்டனர். இவர்களில் நாம் சிறப்பாக, சேர் ஜேம்ஸ் பீரிஸ், திரு. இ. டப்ளியு. பெரேரா, ஷல்பட் ஏ. விக்கிரமசிங்க, சட்டத்தரணி ஜே. ஏ. எல். கூறே, ஸ்ரான்லி சொய்ஸா, இ. ரி. டி சில்வா, மார்க்கஸ் பர்னாந்து, ஜி. சி. எஸ். கொறெயா என்பவர்களை குறிப்பிடலாம். சுதந்திரப் போராட்டமெனச் சொல்லுமளவிற்கு அப்படி ஒன்றும் நடைபெறா விட்டாலும், இலங்கையிலிருந்த ஆங்கில அரசாங்கத்துக்கும், பிரித்தானிய ஆட்சியாளருக்கும் பல வகைகளிலும் அழுத்தம் கொடுத்து, கிளர்ச்சி செய்தனர். தம்மைத் தாமே ஆளுவதற்கு இலங்கை மக்களின் உரிமையை எடுத்துக் கூறி, அவர்களின் தகைமையை எடுத்துக்காட்டி, முழுச் சுதந்திரம் அளிக்க வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தி, நெருக்கடி கொடுத்தனர். மக்களின் சுதந்திர உணர்வுகளையும் அரசுக்கு எதிராகத் தூண்டிவிட்டனர்.

இதன் விளைவாக 1931ம் ஆண்டளவில் அநேகமாக அனைத்து உள்நாட்டு விவகாரங்களிலும் ஓரளவு சுதந்திரம் கிடைத்தது. எனினும் தொடர்ந்து நிலைமையை ஆராய்ந்து, ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவென டொனமூர் ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. டொனமூர் ஆணைக் குழுவினால் அறிமுகம் செய்யப்பட்ட டொனமூர் சட்ட யாப்பின் பிரகாரம், ஒரு புதிய ஜனநாயக அமைப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டது, அதன்படி சட்டம் ஆக்கும், அமுல் செய்யும் அதிகாரங்களைக் கொண்ட ஒரு அரசியல் சட்ட மன்றம் ஏற்படுத்தப்பட்டது. அம் மன்றம் கல்வி, விவசாயம் போன்ற வெவ்வேறு துறைகளைப் பொறுப்பெடுத்து நடத்த, ஏழு குழுக்களைத் தெரிவு செய்தது. சிறுபான்மை இனத்தவர்களை இன அடிப்படையில் பிரதிநிதிப்படுத்தவது விலக்கப்பட்டு, அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க, அவர்களுக்குப் பாதகமான சட்டங்களை நிராகரிக்க, இலங்கையின் ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அது மட்டுமல்ல, 21 வயதுக்கு மேற்பட்ட சகல ஆண், பெண்களுக்கும் வாக்கு உரிமை வழங்கப்பட்டது. இவ்வாறு டொனமூர் சட்ட யாப்பின் வழியாக இன்னும் கூடுதலான அதிகாரங்கள் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டன. எனினும் இந்தச் சட்ட யாப்பில் காணப்பட்ட குறைகள், தவறுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, 1946ம் ஆண்டு சோல்பரி

ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. இவ் ஆணைக் குழு அறிமுகம் செய்த சோல்பரி சட்ட யாப்பின் பிரகாரம், மக்கள் பிரதிநிதிகள் சபை (கீழ்ச் சபை), செனற் சபை (மேல் சபை) என்ற இரு அமைப்புகளைக் கொண்ட மக்களாட்சி மன்றம் உருவாக்கப்பட்டது. சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க, ஆளுநருக்கு சில வகையான சட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்க மறுக்க அதிகாரம் கொடுக்கப்பட்டது. இறுதியாக 1948ம் ஆண்டு. மாசி மாதம். 4ம் திகதி, இலங்கைக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டு, இலங்கை முழுச் சுதந்திர நாடாகியது. இவ்வாறாக இலங்கை ஒரு சுதந்திர நாடாக உருவாகுவதற்கு கிறிஸ்தவர்கள் பெரும் பங்காற்றி உள்ளனர்.



**தேர்ச்சி மட்டம் 8.2.:** சுதந்திர இலங்கையில் திருச்சபை தொடர்பான விடயங்களை அறிந்து, அதற்கேற்ப செயற்படுவர்.

நம் தாய் நாட்டுக்கு பூரண அரசியல் சுதந்திரம் கிடைத்தது இலங்கைப் பிரசைகள் அனைவருக்கும் மிக மகிழ்ச்சியான ஒரு சம்பவம். சுதந்திர இலங்கையின் முதல் பிரதமராக மாண்பு மிகு டி. எஸ் சேனநாயக்கா தெரிவு செய்யப்பட்டார். அவர் அமைத்த ஐக்கிய தேசியக் கட்சியில் இலங்கையிலிருந்த அனைத்து இனத்தினரும், மதத்தினரும் அங்கத்துவம் வகித்தனர். பிரதமர் ஜனநாயக அரசியல் முறையை வாக்களித்து, நாட்டின் ஒருமைப்பாட்டைக் பாதுகாப்பதாக உறுதியளித்தார். இலங்கை மாதாவின் பிள்ளைகளாகிய அனைத்துப் பிரசைகளும் சம உரிமையுடன் வாழ்வதென ஏற்றுக்கொள்ளப்பட்டது. சுதந்திரப் போராட்டத்தில் பௌத்த சமயத்தவர்களல்லாத, சிங்களவரல்லாத தேசாபிமானிகளும் முன்னணியில் இருந்தனர். பௌத்த மதத்தைச் சார்ந்த பல தேச பக்தர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளில் பயின்றவர்கள். எனவே அனைத்து மக்களும் எவ்வித பாரபட்சமுமின்றி, சகல உரிமைகளுடனும், சமமாக வாழ வழிவகுப்பதெனத் திட்டமிடப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி அரசின் தலைமைத்துவம் மேற்கத்தைய நாட்டம் கொண்டிருந்ததால், திருச்சபையின் அதிகார பீடமும் அத்துடன் ஒத்துப் போகக் கூடியதாகவிருந்தது. இதன் விளைவாக திருச்சபை பல துறைகளிலும் துரிதமாக முன்னேறி, ஒரு வலிமையான சக்தியாகத் திகழ்ந்தது.

அதி வண. பொன்ஜீன் ஆண்டகை 1883இல் கொழும்புப் ஆயராக நியமனம் பெற்றதை அடுத்து, 1887இல் இலங்கையில் திருச்சபையின் ஆட்சி பீடம் நிறுவப்பட்டு, கொழும்பு மறைமாவட்டம் ஒரு அதிமேற்றிராசனமாக பிரகடனம் செய்யப்பட்டது. அதன் முதல் பேராயராக அதி வண. பொன்ஜீன் நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாண, கண்டி மறைமாவட்டங்கள் அதன் உப மறைமாவட்டங்களாக இருந்தன. 1893ம் ஆண்டில், காலி, திருமலை-மட்டக்களப்பு மறைமாவட்டங்கள் அமைக்கப்பட்டு, இயேசு சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. 1939ம் ஆண்டில் சிலாப மறைமாவட்டம் நிறுவப்பட்டு, அதன் ஆயராக அமல மரி தியாகிகள் சபையைச் சேர்ந்த அதி. வண. எட்மன்ட் பீரிஸ்

அடிகளார் நியமிக்கப்பட்டார். அவரே இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்திய முதல் சுதேசிய சிங்கள ஆயரென்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசியல் சுதந்திரம் பெற்ற 1948ம் ஆண்டில், அமல மரி தியாகிகள் சபையைச் சார்ந்த சுதேச குருவான அதி. வண. தோமாஸ் பென்ஜமின் கூறே அடிகளார் கொழும்பு பேராயராக நியமனம் பெற்றார். அவரே இலங்கையின் முதல் சுதேசிய பேராயராவார். அதைத் தொடரந்து, 1950ம் ஆண்டில் யாழ் மறைமாவட்ட ஆயராக அதி. வண. ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை நியமனம் பெற்றார். அவரே இலங்கையின் முதல் சுதேசிய தமிழ் ஆயராவார். தொடர்ந்து வேறு பல மறைமாவட்டங்களும் நிறுவப்பட்டு, இன்று இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் ஆட்சி பீடத்தில், கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, திருமலை-மட்டக்களப்பு, காலி, சிலாபம், அநுராதபுரம், பதுளை, குருணாகலை, இரத்தினபுரி, மன்னார் என பதினொரு மறைமாவட்டங்கள் இருக்கின்றன. அவற்றினுடைய நிர்வாகப் பொறுப்பு முற்றுமுழுவதும் சுதேசிய ஆயர்களிடமே ஒப்படைக்கப்-பட்டுள்ளதென்பது குறிப்பிடத் தக்கது.

இக் கால கட்டத்தில், குருமடங்களை நிறுவி, சுதேச மாணவர்களை குருவாக உருவாக்குதலே இலங்கைத் திருச்சபையின் ஒரு முக்கிய அம்சமாகவிருந்தது. அதி வண. பொன்ஜீன் ஆண்டகை 1869இல் யாழ்ப்பாணத்தில் புனித மடுத்தினார் பெரிய குருமடத்தையும், 1883ம் ஆண்டில் கொழும்பில் புனித பேர்ணாட் பெரிய குருமடத்தையும் நிறுவி, சுதேசிய குருக்களைப் பயிற்றுவிப்பதில் முன்னோடியாக-விருந்தார். 1955ம் ஆண்டில் இவ்விரு குருமடங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு, கண்டியில் இலங்கைத் தேசிய பெரிய குருமடம் அமைக்கப்பட்டது, அங்கேயே இலங்கையில் இன்று பணிபுரியும் பெரும்பாலான சுதேசிய மேற்றிராசன, துறவற சபைக் குருக்கள் உருவாக்கம் பெற்றனர். இலங்கையின் பல்வேறு மறைமாவட்டங்களும், துறவற சபைகளும் பெரிய குருமடத்திற்கு தம் மறைமாவட்ட, மாகாண மாணவர்களை ஆயத்தம் செய்ய சிறிய குருமடங்களை நிறுவின. பெரிய, சிறிய குருமடங்களை நிறுவி, அங்கு சுதேசிய குருக்களை உருவாக்கியது இலங்கைத் தளத் திருச்சபையின் வளர்ச்சிக்கும், அதன் சுதேசிய மயமாக்கலுக்கும் பெரும் உதவியாக அமைந்தன.

சுதந்திர இலங்கைத் தளத் திருச்சபையின் தரம் உயர்வதற்கு அக்காலத்தில் அமுலிலிருந்த சகலருக்கும் கல்வி கற்கும் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய கல்வி முறை மற்றொரு முக்கிய காரணியாக இருந்தது. அதி வண பொன்ஜீன் ஆண்டகையின் அயராத முயற்ச்சியினால் 1869ம் ஆண்டில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட அரச உதவிபெறும் மதப் பாடசாலை முறை அனைத்து மதப் பிரிவினருக்கும் தத்தம் மாணவர்களுக்கென பாடசாலைகளை அமைத்து, அவற்றை அரசசெலவில் நடாத்த சந்தர்ப்பம் அளித்தது. கத்தோலிக்க திருச்சபை இக் கல்வி முறைமையைப் பயன்படுத்தி, இலங்கையின் நகரப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் பரவலாக பாடசாலைகளை அமைத்து, ஒரு சிறந்த பாடசாலைகளின் இணைப்புத் திட்டத்தைக் கொண்டிருந்தது. இப் பாடசாலைகள் கத்தோலிக்க மாணவர்களுக்கென்றே அமைக்கப்பட்டாலும், பிற மத மாணவர்களும் விரும்பினால், அங்கு கல்வி பயிலக் கூடியதாகவிருந்தது. பொதுவாக ஒவ்வொரு பங்கிலுமுள்ள ஒவ்வொரு ஆலயத்துக்கும் அருகில், ஒரு கலவன் பாடசாலையோ அல்லது ஆண், பெண்களுக்கென்று தனித்தனியாக இரு பாடசாலைகளோ அமைந்திருந்தன. நகரங்களில் உயர்தர வகுப்புகளுக்கென்று கூடிய வசதிகளுடனான பெரிய பாடசாலைகள் இருந்தன. இப் பாடசாலைகள் அனைத்தும் அரச மேற்பார்வையின் கீழ், ஆனால் திருச்சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கின. ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் அங்குள்ள கத்தோலிக்க பாடசாலைகளுக்குப் பொறுப்பாக ஒரு குரு பாடசாலைப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் ஒவ்வொரு பங்குத் தந்தையும், தம் பங்கிலுள்ள பாடசாலைகளுக்கு, அப் பொது முகாமையாளரின் பிரதிநிதியாகச் செயல்பட்டார். இவ்வாறாகக் கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாகத்தின் கீழ் 750க்கு மேற்பட்ட பாடசாலைகள் இயங்கின. கத்தோலிக்க பாடசாலைகளில் மறைசாரா ஏனைய பாடங்களுடன், மதமும் கற்பிக்கப்பட்டது. கத்தோலிக்க பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவென ஆசியர் பயிற்சிக் கலாசாலைகளும் நிறுவப்பட்டன. இதன் விளைவாக பாடசாலைக்கும், பங்குத் தளத் திருச்சபைக்கும், அதன் பங்குத் தந்தைக்குமிடையே நெருங்கிய தொடர்பும், உறவும் இருந்தது. கத்தோலிக்க மாணவர்களுக்கு கத்தோலிக்க சூழலில் கல்வி கற்பதற்கும் இது வசதியாகவிருந்தது.

கத்தோலிக்க பாடசாலைகள் உயர்ந்த பரீட்சைப் பேறுகளைப் பெறுவதற்கும், அவையுடைய திறனாற்றலுக்கும், அவையளித்த சிறந்த உருவாக்கத்திற்கும் கல்வித் துறைக்கென தம்மை முழுவதும் அர்ப்பணித்துச் செயற்பட்ட துறவற குருக்கள், சகோதரர, கன்னியருடைய பங்களிப்பே முக்கிய காரணமாகும். அமல மரித் தியாகிகள், ஆசீர்வாதப்பர் சபையினர், இயேசு சபையினர், டி லா சால் சகோதரர், மாறிஸ்ற் சகோதரர் போன்ற துறவிகள் ஆண்களுக்கென ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்துக் கல்வியறிவு ஊட்டினர். இலங்கைய பிரான்சீஸ்கன் சகோதரர், யாழ்ப்பாண புனித சூசையப்பர் சபைச் சகோதரர் சுதேசிய மொழிகளில் கல்வி அளித்தனர். திருக் குடும்பக் கன்னியர், நல்லாயன் சபைக் கன்னியர், பிரான்சிஸ்கன் மிஷனறிச் சபைச் சகோதரிகள், அப்போஸ்தலிக்க கார்மேல் சபைச் சகோதரிகள், பிறர் சிநேகச் சகோதரிகளெனப் பல துறவற சகோதரிகள் பெண்களுக்கென ஆங்கில, சுதேசிய மொழிப் பாடசாலைகளை அமைத்து, மாணவிகளுக்குச் சிறந்த கல்வியறிவு அளித்தனர். இவ்வாறு கத்தோலிக்க மாணவ மாணவிகளுக்கு அளிக்கப்பட்ட சிறந்த கல்வி கத்தோலிக்க திருச்சபையின் தரத்தை உயர்த்தி, அதை ஒரு மிக வலிமையுள்ள தாபனமாக்கியது. மேலும் கத்தோலிக்கரை மறை அறிவிலும், உருவாக்கத்திலும், அறிவிலும், சமூக பொருளாதார நலன்களிலும் உயர்ந்தவர்களாக்கி, அரச, தனியார் துறைகளில் உயர் பதவிகளை பெற வழிவகுத்தது. இதன் விளைவாக கத்தோலிக்க திருச்சபை இலங்கையில் செல்வாக்குடன் திகழ்ந்து, தன் தாக்கத்தை எத்துறையிலும் ஏற்படுத்தக் கூடியதாகவிருந்தது.

**புரொட்டஸ்தாந்து சபைகளின் வளரச்சி**

சுதந்திர இலங்கையில் புரொட்டஸ்தாந்து சபைகளும் வளர்ச்சி கண்டன. பல்வேறு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சபைகளுக்கிடையே பரஸ்பர ஒற்றுமையையும், நல்லுறவையும் வளர்க்கவும், சமுதாயத்-துக்குத் தேவையான பணிகளை ஒருங்கிணைந்து பொறுப்புடன் ஆற்றச் சபைகளுக்கு உதவும் நோக்குடனும் இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை உருவாகியது. கிறிஸ்தவ திருச்சபைகளின் அனைத்துலக மன்றத்தின் பிரதிபலிப்பாகவே இந்த அமைப்பு உருவாகியது. இந்த அமைப்பிலே இலங்கைச் சபை, மெதடிஸ்த சபை, தென் இந்திய

சபை, பப்ரிஸ்ற் சபை, இரட்சணிய சேனை, ஒல்லாந்த சீர்திருத்த புரட்டஸ்தாந்து சபை, பிரெஸ்பிற்ரேறியன் சபை போன்றவை அங்கத்துவம் வகிக்கின்றன. இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபையின் நிர்வாகத்தின் கீழ், இலங்கை வேதாகமச் சங்கம், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், கிறிஸ்தவ இளைஞர் சங்கம், கிறிஸ்தவ இளம் மகளிர் சங்கம், கிறிஸ்தவ மாணவர் இயக்கம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுகின்றன. இந்த நிறுவனங்களின் ஊடாக, இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை மக்களுக்கு இன, மத, பாகுபாடின்றி சிறந்த பணியாற்றிவருகிறது. கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் நற்பணியாற்றுவதே அதன் நோக்கம். எனவே பல குழுக்களாக அமைந்து செயல்படுகின்றது. மறைக் கல்விக் குழு, அபிவிருத்திக் குழு, மகளிர் குழு, உளவளப் பணிக் குழு, இளைஞர் குழு, சமூக தொடர்பு சாதனக் குழு, வீடு உறைவிட வசதிக் குழு, மறைபரப்புப் குழு, நீதி சமாதானத்துக்கான குழு, சபைகளுக்கிடையிலான நிதியுதவிக் குழுவென பல குழுக்கள் இயங்குகின்றன.

ஆரம்பத்தில் கிழக்காசிய கிறிஸ்தவ சபையகளின் மன்றத்தின் கிளையாக இயங்கிய இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை, 1974ம் ஆண்டிலிருந்து ஆசிய கிறிஸ்தவ சபைகளின் மன்றத்தின் கிளையாக இயங்கி வருகின்றது. ஆண்டுதோறும் பெந்தெகோஸ்து விழாவிற்கு முந்திய ஞாயிறை ஆசிய ஞாயிறாகக் கொண்டாடி, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆசிய கிறிஸ்தவ மாநாடு இடம் பெறுகிறது. இன்று இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை ஆசிய கிறிஸ்தவ சபையின் நிரந்தர உறுப்பினராக இருந்து இயங்கி வருகிறது. அதுமட்டுமல்ல, அனைத்துலக கிறிஸ்தவ சபைகளின் மன்றத்தின் அங்கத்தினராகவும் செயல்படுகின்றது.

## 8.2.1. சுதந்திர இலங்கையில் திருச்சபை எதிர்கொண்ட பிரச்சினைகள்

கத்தோலிக்க திருச்சபையின் இத்தகைய மேன்மையான முன்னேற்றமும், அதன் வலிமையும், செல்வாக்கும், ஏனைய மதத்தினருக்கு, குறிப்பாக பெரும்பான்மையோராகவிருந்த பௌத்த மதச் சிங்களவர்களுக்கு எரிச்சலையும், ஆத்திரத்தையும் மூட்டியது.

அக்காலத்தில் ஏற்பட்ட பௌத்த, இந்து மத மறுமலர்ச்சியும் அதற்குக் காரணமாக அமைந்தது. அனைத்து இலங்கை பௌத்த சம்மேளனம் 1954ம் ஆண்டு, சித்திரை 2இல் கூடப்பட்ட தனது 33வது வருடாந்தக் மகாநாட்டில், பௌத்த மதத்தை வளர்த்து, வலிமைப் படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, அறிந்து, செயற்படுத்தவென ஒரு பௌத்த ஆணைக் குழுவை நியமித்தது. அக் குழு பௌத்த சமயத்தையும், அதன் செயற்பாடுகளையும் ஆராய்வதற்குப் பதிலாக, கிறிஸ்தவ, குறிப்பாக கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகளையே ஆராய்ந்தது. கிறிஸ்தவ, குறிப்பாகக் கத்தோலிக்க பாடசாலைகளுக்கு எதிராகப் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. கத்தோலிக்க பாடசாலைகளுக்கும், சமூகப்பணிகளுக்கும் அரசு ஆதரவு அளிப்பது பௌத்த மக்களுக்குச் செய்யப்படும் பெரிய அநீதியென்றும், அதனால் பாடசாலைகள், சமூக சேவைகளுக்கென்று ஒதுக்கப்படும் நிதியில், 80 விழுக்காடுகள் நாட்டின் சனத் தொகையில் 9 விழுக்காடுகளைக் கொண்ட கிறிஸ்தவர்களுக்கு அளிக்கப்படுகிறதென்றும் குற்றம் சுமத்தியது. கத்தோலிக்க பாடசாலைகளின் உயர்ந்த தராதரம், ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றின் நிமித்தம் பல பௌத்த மாணவர்கள் அப் பாடசாலைகளையே நாடுகின்றனரென்றும், அதனால் நாட்டின் அரச உயர்பதவிகள் அனைத்தும் அநேகமாக பௌத்தர்களல்லாதவர்கள், அல்லது கத்தோலிக்க பாடசாலைகளில் பயின்ற பௌத்தவர்களுக்கே கிடைக்கின்றனவென்றும் குறை கூறப்பட்டது. எனவே அரச உயர் பதவிகள் விகிதாசார முறைப்படியே அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்து முன்வைக்கப்பட்டது. மேலும் மேற்கத்தைய வல்லரசுகள் கத்தோலிக்க திருச்சபையின் ஊடாக இலங்கையில் கொண்டிருக்கும் செல்வாக்கே பௌத்த மதத்தின் வளர்ச்சி குன்றுதலுக்கும், நம் நாட்டுப் பண்பாடு, கலாச்சாரம் சீரழிவதற்கும் காரணமெனக் கூறி, கத்தோலிக்க பாடசாலைகள் பௌத்த மத மாணவர்களை மதம் மாற்றம் செய்யும் தளங்களாக அமைந்துள்ளனவென்றும் பழி போடப்பட்டது. பௌத்த ஆணைக் குழு வெளியிட்ட "பௌத்த மதத்துக்கு நம்பிக்கைத் துரோகம்" என்ற தனது அறிக்கையில், கத்தோலிக்க திருச்சபையை, அதாவது அதன் பாடசாலைகளை, அனாதை இல்லங்கள், ஏனைய அன்புப் பணி இல்லங்களை, தாபனங்களை அழிப்பதன் வழியாகத்தான் பௌத்த

மதத்தை மலரச் செய்யலாம் என்றவாறாக பரிந்த்துரைத்தது. 1956ம் ஆண்டில் வெளியிடப்பட்ட இவ் அறிக்கை பௌத்த மதத்தைச் சார்ந்த தீவிரவாதிகள் பலரால் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் பெரும்பான்மையான வாக்குகளைக் கொண்டிருந்த பௌத்த மதத்தினர், அரசியல் வாதிகளுக்கும், அரசாங்கத்துக்கும், பௌத்த ஆணைக் குழுவின் சிபார்சுகளை அமுல் செய்யும் படி அழுத்தம் கொடுத்தனர்.

கத்தோலிக்க திருச்சபைக்கெதிரான பௌத்த ஆணைக் குழுவின் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவையென எண்பித்துப் இலங்கைக் கத்தோலிக்கர் ஐக்கியம் பதிலளித்தது. ஆனால் அவை ஏற்றக்கொள்ளப்படவில்லை. பௌத்த ஆணைக் குழுவின் அறிக்கை நாட்டில் நிலவிய இன, மத அமைதிக்கு அச்சுறுதலாக அமைந்தது. மதத் தீவிரவாதிகளையும், இன வெறியர்களையும் தூண்டிவிட்டு, ஒரு பதட்ட நிலையை உருவாக்கி, கத்தோலிக்கர்களைப் பழிவாங்கச் சந்தர்ப்பத்தை அளித்தது. இதன் விளைவாக சுதந்திர காலத்தில் அரசாங்கம் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராகச் சில நடவடிக்கை-களை எடுத்தது. அத்தகைய நடவடிக்கைகளுள் ஒன்றாக, கிறிஸ்தவ, குறிப்பாக கத்தோலிக்க, பிறநாட்டு மறைபரப்பாளர்கள் இலங்கைக்குள் பணிபுரிய வருவது கட்டுப்படுத்தப்பட்டு, அதைத் தடை செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் இலங்கையில் 1869ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இயங்கி வரும் குருமடங்களில் பயிற்றப்பட்டு உருவாக்கம் பெற்ற பல சுதேசிய குருக்கள் இருந்தமையால் இக் கட்டுப்பாடு கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகளை அதிகம் பாதிக்கவில்லை. சுதேசிய குருக்கள் ஐரோப்பிய மறைபரப்பாளர்களின் பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டு நடத்த வேண்டிய ஆற்றலும், திறனும் உடையவர்களாய் இருந்தார்கள்.

அடுத்து அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, 1886ம் ஆண்டு தொடக்கம் 78 ஆண்டுகளாகக் கொழும்புப் பெரிய வைத்திய-சாலையிலும், இன்னும் பல தொழுநோய், கயரோக வைத்தியசாலை-களிலும், நோயாளிகளை அன்புடனும், பொறுப்புடனும் பராமரித்துப் பணியாற்றி வந்த கத்தோலிக்க துறவறக் கன்னியர்கள் 1964ம் ஆண்டு அனைத்து அரச வைத்தியசாலைகளிலிருந்தும் அகற்றப்பட்டார்கள்.

இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் கன்னியர்கள் அல்ல, மாறாக நோயாளிகளும், மக்கள் சமுதாயமுமே. வைத்தியசாலைப் பணியிலிருந்து நீக்கப்பட்ட கன்னியர்களில் ஒரு சிலர் கத்தோலிக்க திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்ட வேறு வைத்தியசாலைகளிலும், சிலர் வேறு பிறர் சிநேகப் பணிகளிலும் தம்மை அர்ப்பணித்து, தங்கள் நல்ல சேவையைத் தொடர்ந்தாற்றினர். 1965ம் ஆண்டு, காலாகாலமாக விடுமுறை நாளாகவிருந்த ஞாயிறு தினம் வேலை நாள் ஆக்கப்பட்டு, அதற்குப் பதிலாக, போயா தினங்கள் விடுமுறை நாட்கள் ஆக்கப்பட்டன. அதனால் கத்தோலிக்கர் தங்கள் ஞாயிறு கடமைகளை நிறைவேற்றவும், கடன் திருப்பலியில் பங்கெடுக்கவும் மிகவும் கஷ்டப்பட்டாலும், அத்தகைய எதிர்ச் சூழலில், தங்கள் விசுவாசத்தைக் வெளிக்காட்டும் பொருட்டு, முன்னரிலும் பார்க்க இன்னும் பெருந் தொகையாக ஞாயிறு வழிபாடுகளில் பங்கெடுத்து, தம் கடமைகளை நிறைவேற்றினர். மேலும் உள்நாட்டு அமைச்சரின் முன் அனுமதியின்றி, தேவாலயங்கள் கட்டுவது தடை செய்யப்பட்டது. இவ்வாறாக சுதந்திர காலத்தில் பல வழிகளில் கத்தோலிக்க திருச்சபை அரசினால் துன்புறுத்தப்பட்டது. ஆனால் கத்தோலிக்கர்கள் மிகத் துணிவுடனும், உறுதியான விசுவாசத்துடனும் இச் சவால்களை எதிர்கொண்டு, திருச்சபையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தனர்.

### 8.2.1.1. கிறிஸ்தவ பாடசாலைகளை அரசு சுவீகரித்தல்

சுதந்திர இலங்கையில் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட மிகப் பெரிய தீங்கு, அநீதி, அநியாயம், அரச உதவிபெறும் அனைத்துப் பாடசாலைகளையும் பறித்தெடுத்து, அவற்றை அரச உடமையாக்கியதாகும். 1953ம் ஆண்டு தொடக்கம் பௌத்த தீவிரவாதிகள் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிரான கருத்துக்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தி வந்தாலும், 1960இல்தான் இவ் உணர்வுகள் அக் காலத்தில் அதிகாரத்திலிருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினால் அதனுடைய அரசியல் கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அமுல் செய்யப்பட்டன. அகில இலங்கைப் பௌத்த சம்மேளனத்தின் உதவியுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தன்னுடைய கவனத்தை கத்தோலிக்க

திருச்சபையின் மறைபரப்புப் பணிபால், குறிப்பாக அதன் பாடசாலைகள் மேல் செலுத்தியது. கல்வித் துறையில் கிறிஸ்தவ சபைகள், குறிப்பாக கத்தோலிக்க திருச்சபை, அடைந்திருந்த முன்னேற்றத்தை சில பௌத்த தீவிரவாதிகளால் சீரணிக்க முடியவில்லை. தங்கள் பிள்ளைகளை கத்தோலிக்க பாடசாலைகளுக்கு அனுப்பிக் கல்வி கற்பித்தாலும், அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கத்தோலிக்க பாடசாலைகள் மாணவர்களின் நலனில் அல்ல, மாறாக தங்கள் அதிகா-ரத்தை வலுப்படுத்துவதிலேயே அக்கறை கொண்டுள்ளனவென்றும், அவை பாடசாலைகளுக்கிடையில் போட்டியை உருவாக்கி, அதன் விளைவாக சில பாடசாலைகள் முன்னேற, மற்றவை தரம் குறையவும் வாய்ப்பளிக்கின்றனவென்றும் சுட்டிக்காட்டப்பட்டது. கற்பதற்கு எல்லோருக்கும் சம வாய்ப்புக் கிட்டாததால், ஒரு சமநிலையற்ற தன்மை உருவாகி, நாட்டின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் ஆபத்து ஏற்படலாமென்றும், அத்தகைய கல்வி அமைப்புமுறை ஒரு ஜனநாயக நாட்டிற்கு உகந்தது அல்லவென்றும் கூறப்பட்டது. மதத் துவேஷம் கொண்ட பௌத்த ஆணைக் குழுவின் அறிக்கையால் தூண்டப்பட்டு, பௌத்த மதத்தை கத்தோலிக்க திருச்சபையிடமிருந்து அல்ல, மாறாக அதன் பாடசாலைகளிடமிருந்தே பாதுகாக்கவேண்டுமென்ற கருத்து பௌத்த மத மக்கள் மத்தியில் பரப்பப்பட்டது. அதற்கு ஒரே வழி எல்லா மத பாடசாலைகளையும் அரசு தேசிய மயமாக்கவேண்டுமென பௌத்த தீவிரவாதிகள் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தனர். அனைத்துப் பாடசாலைகளும் பௌத்த மதப் பாடசாலைகள் ஆக்கப்பட வேண்டுமென்பதே அதன் கருத்து. திருச்சபைக்கு எதிரான இடதுசாரிப் பொதுவுடமைவாதக் கட்சிகளும் இதற்குச் சார்பாக அரசாங்கத்தை வற்புறுத்தின.

அனைத்து மதப் பாடசாலைகளையும் தேசிய மயமாக்குதலை தங்கள் தேர்தல் விஞ்ஞாபனமாகக்கொண்டு பிரச்சாரம் செய்த ஸ்ரீமதி பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1960இல் ஆட்சியைக் கைப்பற்றியது. தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு அமைய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் 1960ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ம் திகதி அனைத்து மதப் பாடசாலைகளையும் தேசிய மயமாக்கும் மசோதாவை மக்களாட்சி மன்றத்தில் சமர்ப்பித்து. அந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றியது. கத்தோலிக்க திருச்சபை நாடெங்கும்

பரவலாக அமைத்து சிறப்பாக நடாத்திவரும் 750 பாடசாலைகளையும் அரசுடமையாக்கி, அதன் செல்வாக்கை கட்டுப்படுத்துவதே அச் சட்ட மூலத்தின் நோக்கமென்பதை அனைவரும் நன்கு அறிவர். எனவே, உடனுக்குடனே கத்தோலிக்க ஆயர்கள் ஒன்று கூடி, அச் சட்ட-மூலத்துக்கு தங்கள் கடும் ஆட்சேபனையைத் தெரிவித்து, அது கத்தோலிக்க மாணவ மாணவிகள் கத்தோலிக்க சூழலில் தம் கல்வியை மேற்கொள்ளும் அவர்களது அடிப்படை மனித உரிமைக்கு முரணானதென விளக்கி அறிக்கை வெளியிட்டனர். மக்களாட்சி மன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த சுதந்திரக் கட்சி, அந்த ஆட்சேபனையையோ, எதிர்ப்பையோ பொருட்படுத்தாமல், அறிக்கையை அலட்சியம் செய்து, பாடசாலைகளைச் சுவீகரிக்கும் சட்ட மூலத்தை நிறைவேற்றி, அதை அமுல் செய்ய 1960ம் ஆண்டு மார்கழி மாதம் 1ம் திகதியை நிர்ணயித்தது. இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான அதி. வண. தோமாஸ் கூறே ஆண்டகை, கத்தோலிக்க மக்கள் அச் சட்டம் அமுல் செய்யப்படுவதை தங்கள் கடைசித் துளி இரத்தத்தையும் சிந்தி தடுப்பார்களென அரசாங்கத்தை எச்சரிக்கை செய்து, கத்தோலிக்க விசுவாசிகளையும், குடும்பங்களையும் கத்தோலிக்க பாடசாலைகளை ஆக்கிரமித்து, தம் எதிர்ப்பைக் காட்டும்-படியாக ஆலோசனை வழங்கினார். அதன் பிரகாரம் கத்தோலிக்கர்கள் தங்கள் பாடசாலைகளை ஆக்கிரமித்து, அரசாங்கம் பாடசாலைகளைக் கைப்பற்றுவதைத் தடைசெய்தனர். மார்கழி 21ம் திகதி கொழும்பில் கத்தோலிக்கரினால் ஒழுங்குசெய்யப்பட்ட மாபெரும் எதிர்ப்புக் கூட்டத்தை பௌத்த காடையர்கள் குழப்பிக் கலகம் உண்டாக்கினர். நாடெங்கும் பதட்டமும், பெரிய இரத்தக் களரி இடம்பெறும் ஆபத்தும் காணப்பட்டன. அவ்வேளை வத்திக்கானின் பணிப்புரையின் பேரில் இலங்கைக்கு வருகை தந்த இந்திய ஆயரான வலேரியன் கர்தினால் கிறாசியாஸ் ஆண்டகையின் தலையீட்டினால் அவ் ஆபத்து நீக்கப்பட்டது. கத்தோலிக்க பாடசாலைக் கட்டிடங்களை ஆக்கிரமித்திருந்த விசுவாசி-களை அங்கிருந்து வெளியேறி, அமைதியாகத் தத்தம் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லுமாறு ஆயர்கள் வேண்டுகோள் விடுத்தனர். கத்தோலி-க்கர்களின் மத வாழ்விற்கு எவ்வித குந்தகமும் விளைவிக்கப்படமாட்டாது என்ற நிபந்தனையின் கீழ் அரசாங்கத்தின் தேசிய கல்வித் திட்டத்தை தாம் ஏற்றுக்கொள்வதாக அறிக்கை வெளியிட்டனர்.

அனைத்து மதப் பாடசாலைகளையும் அரச உடமையாக்கும் சட்டத்தின் பிரகாரம், கத்தோலிக்க திருச்சபைக்குச் சொந்தமான 600க்கு மேற்பட்ட பங்குப் பாடசாலைகள், அதன் காணிகள், கட்டிடங்கள், தளபாடங்கள் அனைத்தும், எவ்வித நஷ்ட ஈடுமின்றி, பறிமுதல் செய்யப்பட்டு, அரசுடமையாக்கப்பட்டன. அப் பாடசாலைகளில் கல்வி பயின்ற பெருந் தொகையிலான கத்தோலிக்க மாணவர்களுக்கு கத்தோலிக்க சூழலில் கல்வி பயிலும் உரிமை மறுக்கப்பட்டது. கத்தோலிக்க ஆசிரியர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. மதத் தாபனங்கள் விரும்பினால், சிறிய தொகையிலான உயர்தரப் பாடசாலைகளை, எவ்வித அரச உதவியுமின்றி, மாணவர்களிடமிருந்து எவ்வித கட்டணமும் அறவிடாமல், தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. அதற்கமைய கத்தோலிக்க திருச்சபை அப்படிப்பட்ட 40 உயர்தரப் பாடசாலைகளை எவ்வித நிதியுதவியுமின்றித் தன் சொந்தச் செலவில் நடாத்த முயன்றும், நிதிபற்றாக் குறைவினால் பலவற்றைப் படிப்படியாக அரசாங்கத்திடம் ஒப்படைத்தது. கத்தோலிக்க பாடசாலைகளென இன்று ஒரு சில தனியார் பாடசாலைகளே உள்ளன. இருபது ஆண்டுகளுக்குப் பின், 1980ம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றிய ஜே. ஆர். ஜயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், அத் தனியார் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களின் ஊதியத்தை அளிக்க முன்வந்தது குறிப்பிடத்தக்கது.

மதப் பாடசாலைகள் அனைத்தும் அரசினால சுவீகரிக்கப்பட்டதை அடுத்து, இன்று அநேகமான பாடசாலைகள் எவ்வித மதமுமற்ற, மதச் சூழலற்ற பாடசாலைகளாகக் காணப்படுகின்றன. முன்னைய கத்தோலிக்க பங்குப் பாடசாலைகள், அங்கு அதிகமான கத்தோலிக்க மாணவர்கள் கல்வி பயின்றாலும், இன்று அவை அநேகமாக கத்தோலிக்க அதிபர்களற்ற, கத்தோலிக்க ஆசிரியர்களற்ற, கத்தோலிக்க மதம் போதிக்கப்படாத, கத்தோலிக்க சூழலற்ற பாடசாலைகளாகவே இருக்கின்றன. கத்தோலிக்க திருச்சபைக்கு தம் மக்களுக்கு தம் மதத்தைப் கற்பித்து, தம் மதமுறைப்படி வளர்த்து உருவாக்கும் உரிமை மறுக்கப்பட்டது. தம் மத ஆசிரியர்களைப் பயிற்றுவித்து, நியமிக்கும் உரிமையும் பறிக்கப்பட்டது. பாடசாலைகளில், ஏனைய பாடங்களைப்போல் மறைக் கல்வியும் வாரத்தில் ஓர் இரு பாடநேரத்-

திலேயே படிப்பிக்கப்படுகின்றது. பல பாடசாலைகளில் மறைக் கல்வி முற்றாக அளிக்கப்படுவதேயில்லை. பங்குகளில் மறைக் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டாலும், அனைத்து கத்தோலிக்க மாணவர்களும் தம் பங்கு மறைக் கல்வி வகுப்புகளில் பங்குபற்றி பயன் பெறுவதில்லை. மத அறிவு பங்கு மறைக் கல்வி வகுப்புகளில் அளிக்கப்பட்டாலும், ஏனைய பாடங்களை மாணவர்கள் பாடசாலையில் எவ்வளவுக்குக் கற்கிறார்களென்பது கேள்விக் குறியே. தலைமை ஆசிரிய, உதவி ஆசிரிய பதவிகளெல்லாம் அரச செல்வாக்குடையவர்களுக்கே கிடைக்கின்றன. அதனால் பெரும்பாலும் தகுதியற்றவர்களே நியமனம் பெறுகிறார்கள். மதம் போதிக்கப்படாத, மத மதிப்பீடுகள் கடைப்பிடிக்கப்படாத, மதச் சூழலற்ற பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி பயில்வதின் விளைவுகளை நாம் இன்று எம் சமுதாயத்தில் கண்டுவருகிறோம். 1971ம், 1988ம் ஆண்டுகளில் இடம் இளைஞர்களின் கிளர்ச்சிகள் அவற்றை நமக்குத் தெளிவுபடுத்தி உள்ளன. கட்டுப்பாடற்ற, பெரியோரை, பெற்றோரை, ஆசிரியரை மதியாத, ஒழுக்கம், ஒழுங்கில்லாத, கடவுள் பயமறியாத, மனித மதிப்பீடுகளற்ற ஒரு இளம் சமுதாயத்தையே நாம் இன்று காண்கிறோம்.

மனிதர் செய்யும் தீமைகளைக் கொண்டு நன்மை செய்யக்கூடியவர் கடவுள். பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததின் விளைவாக திருச்சபைக்கு சில நன்மைகளும் கிட்டின. பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் வளர்ப்பில், மறைகல்வியில் முன்னரிலும் பார்க்கக் கூடிய கரிசனை எடுக்கத் தொடங்கினர். பாடசாலைகளில் மறைக் கல்வி கற்கக் கிடையாத மாணவர்களின் குறையை நிவர்த்தி செய்ய, கத்தோலிக்க திருச்சபை வேறு வழிமுறைகளைக் கையாண்டது. தேசிய மறைக் கல்வி நிலையம் ஒன்று நிறுவப்பட்டு, அனைத்து இலங்கை ரீதியில் மாணவர்களுக்கு மறைக் கல்வி அளிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு, அமுல் செய்யப்பட்டது. ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மறைக் கல்வி நடுநிலையங்களை அமைத்து, தகுதியான மறையாசிரியர்களைத் தெரிந்தெடுத்து. பயிற்றுவித்து, அவர்களின் துணையுடன் பெரும் பணி ஆற்றப் படுகின்றது. பங்கு ரீதியில் மறை வகுப்புகளையும், ஞாயிறு பாடசாலைகளையும் ஒழுங்கு செய்து, நன்கு பயிற்றப்பெற்ற மறை ஆசிரியர்களின் துணையுடன் நடாத்தி வருகின்றது. விவிலிய வகுப்புகள், பாசறைகள், கருத்தரங்குகளென பல விதமான போதனா முறைகளைக்

கையாண்டு; திருச்சபை விசுவாசிகளுக்கு மறைக் கல்வி அளித்து வருகிறது. நிலைப் படக்காட்சிகள், திரைப்படங்கள், பொருட்காட்சிகள் போன்றவை பெரிதளவில் பயன்படுத்தப்படுகின்றன. புதிய மறைக் கல்விப் போதனா முறைகளுக்கமைய, புதிய பாட நூல்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. பங்குத் தந்தைக்கும், பெற்றோருக்கும், மாணவர்களுக்கும், மறை ஆசிரியர்களுக்குமிடையே நெருங்கிய உறவு, தொடர்பு ஏற்பட்டுள்ளது. பொது நிலையினர் திருச்சபையில் தம் பணிகளையும், கடமைகளையும் உணர்ந்து, பங்குப் பணிகளில், திருவழிபாடுகளில் கூடிய பொறுப்புடன் உயிருள்ள முறையில் பங்கெடுத்து வருகின்றனர்.

## 8.2.1.2. கிறிஸ்தவர்கள் மீதான இரக்கமற்ற விமர்சனங்கள்

திருச்சபையின் அனைத்து கல்வித் தாபனங்களையும், பாடசாலைகளையும் பறித்தெடுத்து. அரசுடமைாக்குவதில் வெற்றிகண்ட அகில இலங்கைப் பௌத்த சம்மேளனம் அத்துடன் நின்றுவிடவில்லை. தொடர்ந்து திருச்சபையின் நற்பெயரைக் களங்கப்படுத்தவும், அதன் வளர்ச்சியையும், செயற்பாடுகளையும் தடைசெய்து நிறுத்தவும் சந்தர்ப்பங்களையும், நியாயங்களையும் தேடியது. இதற்கு சில பௌத்த தீவிரவாதக் கும்பல்களும், மத துவே'ம் கொண்ட பிக்குகளும் உறுதுணையாகவிருந்து ஒத்துழைப்பு அளித்தனர். கிறிஸ்தவம் ஒரு அனைத்துலக மதம் என்பதை மறைத்து, அது அந்நிய போர்த்துக்-கேயரின் மதம், அந்நிய மதம் என்ற கருத்து பரப்பப்பட்டது. போர்த்துக்கேயர் கிறிஸ்தவத்தை இலங்கைக்குக் கொணர்ந்தபடியால், கிறிஸ்தவர்கள் போர்த்துக்கேயரோடு ஒன்றுபடுத்தப்பட்டார்கள். போர்த்துகேயரின் ஆட்சி காலத்தில் சில போர்த்துக்கேய தளபதிகளும், படைவீர்ர்களும் செய்த கொடூர செயல்களையும், அநீதிகளையும் எடுத்துக்காட்டி, அக் குற்றங்களை கிறிஸ்தவர்கள்மேல் சுமத்தினர். இதன் விளைவாக கிறிஸ்தவர்கள் பல இரக்கமற்ற விமர்சனங்களுக்கு ஆளானார்கள். தேசிய கலை. கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்-கங்களின் காப்பாளர்களாகத் தங்களைக் கருதிய சில உயர்மட்ட பௌத்த சமூகத்தினரும், அரசியல்வாதிகளும் கிறிஸ்தவர்கள் தேசிய கலாச்சாரத்தை, பழக்கவழக்கங்களை மதியாதவர்களென்றும், வேறுபட்ட

கலாச்சாரத்தைப் பின்பற்றுகின்றவர்கள் என்றும் குறைகூறப்பட்டனர். அதன் விளைவாக அவர்கள் தேசிய கலாச்சாரத்தை அழிக்கின்றன-ரென்று குற்றம் சாட்டப்பட்டனர.

கிறிஸ்தவர்கள் வறிய ஏழை மக்கள் மத்தியில் ஆற்றிவந்த சமூச சேவைகள், பிறர்நலப்பணிகள் அனைத்தும் சந்தேகக் கண்களுடன் பார்க்கப்பட்டு, அவையெல்லாம் அவர்கள் மக்களை மதமாற்றம் செய்யப் பயன்படுத்தும் யுக்திகளென விமர்சிக்கப்பட்டன. நம் நாட்டில் ஏற்பட்ட சுனாமி, பெருவெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும், இனக் கலவரங்களினாலும், பாதிக்கப்பட்டு, இடம் பெயர்ந்து. சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டு அல்லலுற்ற மக்களை, அன்புடன் அரவணைத்து, அகதி முகாம்களை அமைத்து, பாதுகாத்துப் பராமரித்து, உதவிசெய்த கிறிஸ்தவ துறவிகளின், துறவற சபைகளின், அமைப்புக்-களின் தன்னலம் தேடா, பிறர் நலம் தேடி ஆற்றிய தியாகப் பணிகள் அனைத்தும் வீண் விமர்சனத்துக்கும், ஏளனத்துக்கும் உள்ளாக்கப்-பட்டன.

பல்வேறு கஷ்டங்கள், துன்பங்கள், கவலைகள், மனவேதனை-களால் வருந்தும் மக்கள் ஆறுதல், அமைதி தேடி கிறிஸ்தவ ஆலயங்கள், வழிபாட்டுத் தலங்கள், யாத்திரைத் தலங்களுக்குச் சென்று, அங்கு இடம்பெறும் ஆராதனைகளிலும், செப வழிபாடுகளிலும், குணமாக்கல் வழிபாடுகளிலும் பங்குபற்றி, மன ஆறுதலும், அமைதியும், குணமும் பெற்று வருகிறார்கள். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, பிறமதத்தினரும் பெருந்தொகையாகச் சென்று, நன்மையடைந்து வருகிறார்கள். அவர்களை எவரும் கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் அங்கு நடப்பதைக் கண்டு, மற்றவர்களும் கவரப்பட்டு, நன்மைபெறும் நோக்குடன் செல்கிறார்கள் ஆனால் அதைக் கண்டு சகிக்க முடியாத பல மத துவேஷங்கொண்ட காடையர்கள், வழிபாடுகளைக் குழப்பியும், ஆலயங்களைத் தாக்கியும், சுரூபங்களை உடைத்தெறிந்தும் இடையூறு செய்து வருகிறர்கள். அவர்கள் மக்களை ஏமாற்றி, வலோத்காரப்படுத்தி, ஒழுங்கற்ற முறையில் மதமாற்றம் செய்துவருகிறார்களெனப் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். எவரும் தாங்கள் விரும்பிய மதத்தைப் பின்பற்றலாமென்ற மதச் சுதந்திரம் சட்டப்படி நாட்டு மக்களுக்கு இருந்த போதிலும், மக்கள் தாங்கள் விரும்பும் மதத்தைப் பின்பற்ற,

வழிபட தடைகள் போடப்படுகின்றன. அண்மையில் சில அரசியல்-வாதிகள் ஊடாக பாராளுமன்றத்தில் "மதமாற்றத் தடைச் சட்டம்" ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு, வாதங்கள், பிரதி வாதங்கள் இடம்பெற்று வருகின்றன. நீதி மன்றங்களில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. இது ஒரு பாரிய பிரச்சினையாக உருவாகி வருகிறது.

கிறிஸ்தவர்கள் இறைவனின் தாயாகப் போற்றி வணங்கும் மரியன்னையைப்பற்றி அவதூறுகளும், இழிவான கருத்துக்களும் பிரசுரிக்கப்பட்டு பரப்பப்பட்டன. கிறிஸ்தவர்களின் நற்செய்தியைப் பரப்பும் கடமை, கத்தோலிக்க சேவை பற்றி தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டு, "கத்தோலிக்க முற்றுகை" எனப் பெயர் சூட்டப்பட்டு. தேவையற்ற விமர்சனங்கள் செய்யப்பட்டன. இப்படியாகச் சுதந்திர இலங்கையிலே கிறிஸ்தவர்களும், திருச்சபையும் பெரும்பான்மையான சிங்கள பௌத்த மதத்தினரால் இம்சிக்கப்பட்டு, பலவிதமான வேதனைகளுக்கும், பொய்ப் பிரசாரங்களுக்கும் ஆளாக வேண்டி ஏற்பட்டது.

### 8.2.1.3. இனக் கலவரங்களும், அமைதிச் செயற்பாடுகளும்

திருச்சபை இன்று இலங்கையில் எதிர்நோக்கும் ஒரு முக்கிய பிரச்சினை இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும், சமாதானத்தை-யும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவதாகும். இலங்கை 1948 இல் ஒரு சுதந்திர ஜனநாயக நாடாகப் பிரகடனப்படுத்தப் பட்டது. அதைத் தொடர்ந்து, பெரும்பான்மை இனத்தவராகிய சிங்கள் பௌத்த மக்கள் இலங்கையை ஒரு சிங்கள் பௌத்த நாடாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். தமிழர், முஸ்லிம்கள் போன்ற சிறுபான்மை இனத்தவர்களை அடக்கி ஒடுக்கி, அவர்களின் உரிமைகளைப் பறித்து, குரலை மழுங்கடிக்க முயன்று வருகின்றனர். அரசியல் கட்சிகளும், பிரமுகர்களும் பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களின் ஆதரவையும், வாக்குகளையும் பெறுவதற்கு அத்தகைய முயற்சிகளுக்கு ஆதரவளித்து வந்தனர். பௌத்த சிங்கள மக்களின் ஆசைகளை நிறைவுசெய்யும் நோக்குடன், 1951ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உருவாகியது. 1956 இல் நடைபெற்ற அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் பௌத்த சிங்கள வெறியைப் பரப்பி, S.W.R.D.

பண்டாரநாயக்கா தலைமையில தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சி வெற்றிபெற்று, அரசாங்கத்தை அமைத்தது. அடுத்த நாளே "சிங்களம் மட்டும்" மசோதாவை பாராளுமன்றத்திற்குக் கொண்டு சென்று, சிறுபான்மையினரின், குறிப்பாக தமிழரின் எதிர்ப்புக்கு மத்தியில் அதை நிறைவேற்றியது. அதன்படி சிங்களம் மட்டுமே அரச கரும் மொழியாக்கப்பட்டது. சிங்களம் தெரியாதவர்கள் அரச பதவிகளிலிருந்து அகற்றப்பட்டார்கள். தமிழர்களுக்கு அரச உத்தியோகங்கள், பதவி உயர்வுகள் கிடைப்பது தடைசெய்யப்பட்டது. தென்பகுதியிலுள்ள பல தமிழ்ப் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாக மாறின. தமிழ் இளைஞர்கள் பல்கலைக் கழகங்களில் அனுமதிபெறுவது மட்டுப்படுத்தப்பட்டது. அதனால் தமிழ் மக்களும், குறிப்பாகத தமிழ் இளைஞர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். அதுவே இலங்கையில் இனப் பிரச்சினையின், இனமோதல், கலவரங்களின் ஆரம்பமாக அமைந்தது.

தமிழர்களின் உள்ளக் குமுறல்களையும், எதிர்ப்புகளையும், தமது உரிமைகளுக்காக அவர்கள் மேற்கொண்ட அகிம்சைப் போராட்டங்களையும் அரசு பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களின் பெலத்துடன் சிங்களக் காடையர்களைக் கொண்டு, அடக்கி ஒடுக்கியது. அவை நாளடைவில் இன மோதல்களாக, இனக் கலவரங்களாக வெடித்தன. 1957, 1970, 1977, 1983 களில் பல இனக் கலவரங்கள், மோதல்களும் எழுந்தன. அதன் விளைவாக பெருமளவிலான உடைமை, பொருள் சேதங்களும், தொழில் துறைகளின் பாதிப்புகளும், உயிர் அழிவுகளும் ஏற்பட்டன. அரசிடமிருந்து ஆதரவு, நீதி, நியாயம் கிடையாதெனக் கண்ட தமிழ் இளைஞர்கள், தங்கள் இனத்தையும், மொழியையும், தொழில் துறைகளையும், உயிரையும் காப்பாற்ற ஆயுதம் ஏந்திப் போராட நிர்பந்திக்கப்பட்டார்கள்.

இலங்கையில் ஏற்பட்ட இந்த சிங்கள-தமிழ் மக்களுக்கிடையிலான போராட்டம் திருச்சபையை மிகவும் பாதித்தது. ஏனெனில் பெருந் தொகையிலான சிங்களவர்களும், தமிழர்களும் கிறிஸ்தவர்களாக, திருச்சபையின் பிள்ளைகளாக, ஒரே தாயின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். எனவே இந்த இன மோதல்கள் திருச்சபையிலும் சிங்களக் கிறிஸ்தவர்கள், தமிழ்க் கிறிஸ்தவர்கள் என்ற ஒரு பிரிவினையை, மோதலை ஏற்படுத்தக் கூடிய ஆபத்து இருக்கிறது.

திருவிவிலிய சிந்தனைகளும், கிறிஸ்தவ விழுமியங்களும், கண்ணோட்டமும் வன்செயல்களையும், இம்சையயும், போர் மோதல்களையும் என்றும் எதிர்த்து நிற்கின்றது. மனித மாண்பை மாசுபடுத்தும், மனித உரிமைகளை மீறும் இம்சைக் கொள்கைகளை கிறிஸ்துவையும், அவருடைய படிப்பினைகளையும் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் ஒரு போதும் ஆதரிக்க மாட்டார்கள். மாறாக போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பாரபட்சமின்றி உதவி செய்வது திருச்சபையின் உரிமையும், கடமையும் ஆகும். போர்க் காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருச்சபை ஆற்றிவரும் அன்புப் பணிகள் பல முறையும் கிறிஸ்தவர்கள் நாட்டுப் பற்றில்லாதவர்கள், பயங்கரவாதத்திற்குத் துணைபோகின்றவர்களென தப்பாக விளங்கப்பட்டு, ஊடகங்களில் நீதியற்ற விமர்சனங்களுக்கு ஆளாகின்றனர்.

மேலும் திருச்சபையானது சிங்களக் கிறிஸ்தவர்களுக்கும், தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் தாயாக இருப்பதாலும், சிங்களவர்களும், தமிழர்களும் ஒரே இறைவனின் பிள்ளைகளாய் இருப்பதாலும், இனவாதத்தையும், இன மோதலையும் களைந்து, அவர்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும், உரையாடலையும் ஏற்படுத்தி, அதன் வழியாக அமைதியை உருவாக்குவது நம் நாட்டில் திருச்சபையின் இன்றைய முக்கிய பணி. "அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்" என்ற கிறிஸ்துவின் படிப்பினைக்கு ஏற்ப, இரு பகுதியினருக்குமிடையே இடைநிலையாளராகச் செயற்பட்டு, நீதியும், நியாயமுமான நிரந்தர தீர்வுக்காக அயராது உழைப்பது திருச்சபையின் பொறுப்பாகும். அரசாங்கத்திற்கும், அரசியல்வாதிகளுக்கும் அழுத்தத்தைக் கொடுத்து, எல்லா மக்களினதும் நீதியாமான உரிமைகளை ஏற்று, மதித்து, அதற்கமைய அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய அரசியல் தீர்வொன்றுக்காக உழைப்பது திருச்சபையின் இன்றைய சவாலாக இருக்கிறது.

### 8.2.1.4. அடிப்படை வாத கிறிஸ்தவ இயக்கங்கள்

அண்மைக் கால வரலாற்றிலே இலங்கைத் திருச்சபை எதிர்நோக்கவேண்டியிருக்கின்ற பாரிய பிரச்சினை இலங்கையில் மூலைமுடுக்கெல்லாம் இன்று தோன்றியிருக்கின்ற அடிப்படைவாத கிறிஸ்தவ குழுக்களாகும். அவற்றின் விளைவாக திருச்சபையின் நற்செய்திப் பணி, அதன் நம்பகத் தன்மை பாதிப்பு அடைந்து வருகிறது.

இன்று இலங்கையில் ஆயிரக்கணக்கான இது போன்ற சபைகள் காணப்படுகிறன. அவை ஒவ்வொன்றும் தாங்கள்தான் நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவினால் தாபிக்கப்பட்ட உண்மையான திருச்சபை-யென்றும், மற்றச் சபைகளெல்லாம் போலிச் சபைகளென்றும் வாதாடு-கின்றனர். ஒன்றையொன்று ஓரங்கட்டி, அழித்தொழித்திட திட்டம் தீட்டி, சதிசெய்து, போட்டாபோட்டி போடுகின்றனர். அவர்களுக்குள் எத்தனை பிரிவுகள், பிளவுகள், வேறுபாடுகள், முரண்பாடுகள் இவையெல்லாம் திருச்சபையின் நற்செய்திப் போதனைக்குத் தடையாக அமைகின்றன. திருச்சபையின் நம்பகத்தன்மையை அழிக்கின்றன. "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தையே நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவரகளும் ஒன்றாயிருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்". (யோவா. 17:21). எங்கள் நற்செய்திப் பணிக்கு, திருச்சபையின் நம்பகத் தன்மைக்கு ஒற்றுமையே சிறந்த கருவியென ஆண்டவர் கூறியிருக்கிறார்.

இவ் அடிப்படைவாதக் குழுக்களிடையில் பல வேறுபாடுகள், முரண்பாடுகள் இருந்தாலும், ஒரு பொதுத் தன்மை உண்டு. அதாவது அவர்களுக்கு ஒரு பொது எதிரி உண்டு. ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவால் ஒரு சிறிய கடுகு விதைபோல் பன்னிருவரைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து, எங்கும் கிளைவிட்டுப் பரவி, பல கோடிக்கணக்கான மக்களை உறுப்பினராகக் கொண்ட ஒரு மாபெரும் விருட்சம்போல் இன்று காட்சியளிக்கும் உண்-மையான ஏக, பரிசுத்த, அப்போஸ்தொலிக்க, கத்தோலிக்க திருச்-சபையே அவர்கள் எல்லோருடையவும் பொது சென்ம எதிரி. அதை நாம் அவர்களின் பேச்சுக்களிலும், போதனைகளிலும், செயற்பாடுகளிலும் காண்கிறோம். அவர்கள் அநேகமாக கத்தோலிக்க சமூகங்கள் மத்தியிலேயே செயல்படுகின்றார்கள். கத்தோலிக்க விசுவாசிகளையே ஏமாற்றி, திருச்சபையிலிருந்து களவாடிச் செல்கிறார்கள். இக் குழுக்களின் தவைர்களும், உறுப்பினர்களும் அநேகமாக முன்னைய கத்தேலிக்கர்களாகவே காணப்படுகிறார்கள். கத்தோலிகரை அவர்களது திருச்சபையிலிருந்து பிரித்து, அதன் அங்கத்தவர்களின் தொகையைக் குறைத்து, படிப்படியாக அதன் வலிமையை நலிவடையச் செய்து அழிப்பதே அவர்களது குறிக்கோளாகும். தங்கள் சபைகளில் சேர்ந்த முன்னைய கத்தோலிக்கர்கள் கத்தோலிக்க ஆலயஙகளுக்குச்

செல்வதை, கத்தோலிக்க வழிபாடுகளில் பங்கெடுப்பதை, அவர்கள் உற்றார் உறவினர், இனசனரின் திருமண, பிரேத அடக்கச் சடங்குகளில்தானும் பங்கெடுப்பதைத் தடைசெய்து, கத்தோலிக்க திருச்சபை மட்டில் வெறுப்பை மூட்டி வருகிறார்கள். எனவே இவர்களின் தீய திட்டத்திலிருந்து கத்தோலிக்கரைப் பாதுகாத்து, வழிநடத்துவது திருச்சபையின் இன்றைய பாரிய பொறுப்பாக இருக்கிறது.

அண்மைக் காலங்களில் இவ் அடிப்படை வாத கிறிஸ்தவ குழுமங்களின் செயற்பபாடுகள், அவர்களின் மதப் பிரச்சாரங்கள், அவர்கள் தங்கள் சபைகளில் அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கு கையாளும் வழிமுறைகள, அணுகு முறைகள் பற்றி பலவிதமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. அவர்கள்2 பணம் கொடுத்து, பொருளுதவிகள் செய்து, மக்களை ஏமாற்றி, வலோத்காரமாக, நல்லொழுக்கத்திற்கு எதிரான முறையில் மதமாற்றம் செய்கிறார்களென அவர்கள் மேல் குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. அதற்கு “கட்டாய மதமாற்றம்” எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. நல்லொழுக்கத்திற்கு எதிரான அவர்களின் செயற்பாடுகள், கட்டாய மதமாற்றங்களால் பௌத்தர்களும், இந்துக்களும் மிகவும் குழப்பம் அடைந்திருக்கிறார்கள். கத்தோலிக்க திருச்சபைக்கும், ஏனைய புரொட்டஸ்தாந்து சபைகளுக்கும், இந்த அடிப்படைவாதக் குழுமங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை அறியாத பல பிற சமயத் தலைவர்களும், அமைப்புகளும் அவற்றையெல்லாம் ஒன்றுபடுத்தி, இக் குற்றங்கள், விமர்சனங்கள் அனைத்தையும் கத்தோலிக்க திருச்சபையின் மேலும், புரொட்டஸ்தாந்து சபைகளின் மேலும் போடுகிறார்கள். அதன் விளைவாக மதங்களுக்கு இடையிலான ஒற்றுமை, புரிந்துணர்வு, சமாதானம் என்பன அழிந்து வருகின்றன. இந்த கிறிஸ்தவ எதிர்ப்புச் சிந்தனைகள் எவ்வளவுக்கு உக்கிரமம் அடைந்திருக்கிறதெனில், மத மாற்றத் தடைச் சட்ட மசோதா-வென்று 2004 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அதனையிட்டு பல உரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. அடிப்படைவாதக் கிறிஸ்தவ குழுமங்களின் ஒழுக்கமற்ற செயற்பாடுகளால், இலங்கைத் திருச்சபை இன்று எதிர்பாராத விளைவுகளுக்கு, விமர்சனங்களுக்கு, எதிர்ப்புகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இது இன்றைய திருச்சபை எதிர்கொள்ளும் பாரதூரமான மற்றொரு பிரச்சினையாக உள்ளது.

## 8.2.2. இலங்கைத் திருச்சபையில் 2ம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் தாக்கங்கள்

திருச்சபையின் 21வது பொதுச் சங்கமெனக் கருதப்படும் இரண்டாம் வத்திக்கான் திருச் சங்கம் நடைபெறுமென 25 தை 1959 இல் திருத்தந்தை 23வது அருளப்பரினால் அறிவிக்கப்பட்டது. மூன்று வருட ஆயத்தங்களின் பின்னர், அது 11 ஐப்பசி 1962 தொடக்கம் 8 மார்கழி 1965 வரையிலான காலப்பகுதியில் உரோமையில், வத்திக்கான் நகரில் இடம்பெற்றது. இருபதாம் நூற்றாண்டுத் திருச்சபையின் மிக மையமான பெரு நிகழ்ச்சியாக நடைபெற்ற இத் திருச்சங்கம், எந்த ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை உண்மையை வரையறுக்கவோ, தப்பறைகளைக் கண்டனம் செய்யவோ கூடப்படவில்லை. மாறாக திருச்சபையை காலத்திற்கேற்ப மறுசீரமைத்து, அதற்குப் புத்துயிர் வழங்கி, புதியதொரு சிந்தனையை அளித்து, ஆழமான பொருள் நிறைந்த விதத்தில் அது இவ்வுலகில் பணியாற்றிட வழிவகுக்கும் நோக்குடனேயே கூடப்பட்டது. திருச்சபை காலத்தின் அறிகுறிகளை அறிந்து செயல்பட வேண்டும், நம்பிக்கை கொண்டோரிடையே கிறிஸ்த வாழ்வை நாளுக்கு நாள் வளர்க்க வேண்டும், மாற்றங்களுக்கு உட்பட்ட நிறுவனங்களை இக்காலத் தேவைகளுக்கு எற்ப நன்முறையில் தழுவி அமைக்கவேண்டும், கிறிஸ்தவர்கள் ஒன்றுபட வேண்டும், திருச்சபையின் அரவணைப்பில் அனைவரையும் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கங்களுடனேயே கூடப்பட்டது. சுருக்கமாகக் கூறின், ஆயர்கள், குருக்கள், துறவியர், இல்லறத்தவர்கள் இன்றைய நவீன உலகில் திருச்சபையின் வளர்ச்சியில் எந்தெந்த வழியில் பங்கு கொள்ளலாமென ஆராய்வதே சங்கத்தின் நோக்கமாகும். திருச்சபையின் உள் வாழ்வு பற்றியும், உலகோடு திருச்சபைக்கு உள்ள உறவு பற்றியும் சிந்திக்க, அதாவது பிற கிறிஸ்தவ சபைகளோடு உறவை ஏற்படுத்தல், அனைத்-துலக சமயங்களோடும், எல்லா மக்களோடும், இன்றைய உலகோடும் உரையாடலை ஏற்படுத்துதலைக் கருத்தில் கொண்டிருந்தது. இச்சங்கத்தில் உலகமனைத்திலுமிருந்து வந்திருந்த 2900க்கும் அதிகமான ஆயர்கள் பங்கெடுத்தனர்.

திருச்சங்கத்தின் முன்னரும், அதன் ஆரம்ப கட்டத்திலும் நிலவிய கடும் போக்கு, இறுக்கமான கொள்கைகள் எளிமையடைந்து,

புதிய உதயத்துக்கு அவசியமான நெகிழ்சியுடனும், திறந்த மனத்துடனும் கலந்துரையாடி, தகுந்த தீர்மானங்களை எடுப்பதற்கு ஏற்ற சூழல் காணப்பட்டது. பல்வேறு நாடுகளையும், கலாச்சாரங்களையும் சேர்ந்த ஆயர்கள் ஒன்றிணைந்து, கலந்துரையாடல் மூலம், புதிய கண்ணோட்டத்தில் திருச்சபையை வழிநடத்திச் செல்ல வழிவகைகளை ஆராய்ந்தனர். இப் பொதுச்சங்கத்தில்தான் உலகனைத்திலுமுள்ள மக்களின் குரல் ஒலித்தது. திருச்சபையின் எல்லா மரபுச் செல்வங்களின் தாக்கமும் உணரப்பட்டது. இறுதியில் இத் திருச்சங்கத்தின் கொள்கைகள், படிப்பினைகளையும், அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் உள்ளடக்கிய 16 ஏடுகள் வெளியிடப்பட்டன.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் இன்றைய அனைத்துலக திருச்சபையில் உண்மையிலேயே ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி, புதியதொரு உயிரோட்டமான மறுமலர்ச்சியை கொணர்ந்துள்ளதென்பதை எவரும் மறுக்க இயலாது. திருச்சபையின் சிந்திக்கும் முறையிலும், நிகழ்வுகளை நோக்கும் கண்ணோட்டத்திலும், பிறமதத்தவர்களை அணுகும் முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்றைய உலகோடு உரையாடலில் ஈடுபட்டு, திறந்த மனத்தோடு பிற மதங்களையும், பண்பாடுகளையும் அணுகி, நீதிக்காக உழைக்கும் மனநிலையை உருவாக்கியுள்ளது. ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிடும்போது, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளும், முற்போக்குச் சிந்தனையும் இலங்கைத் திருச்சபையில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், மாற்றங்கள் மிகக் குறைவானதாகக் காணப்படினும், திருச்சபையின் பல்வேறு துறைகளில் சில தாக்கங்கள், மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை மறைக்க இயலாது. அத் தாக்கங்கள, மாற்றங்களைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

## 8.2.2.1. திருவழிபாடு

இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட 16 ஏடுகளில் முதலாவதாக வெளிவந்தது திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கமாகும். அதில சங்கத்தின் திருவழிபாடு பற்றிய படிப்பினைகள் மிகத் தெளிவாகவும், ஒழுங்காகவும் தரப்பட்டிருக்கிறது. திருவழிபாட்டின் மையமாக இயேசு, குறிப்பாக அவருடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு

என்பன உள்ளன. திருவழிபாடு இந்தப் பாஸ்கா மறைபொருளை மீண்டும் செயலாக்கி, அதில் நம்மைப் பங்கெடுக்க வைத்து, அதை நம் வாழ்வில் கடைப்பிடிக்கச் செய்கிறது. இந்த பாஸ்கா மறைபொருளே திருச்சபையின் தொடக்கமும், அடிப்படையும், குறிக்கோளும் ஆகும். ஆகையால் கிறிஸ்து என்றுமே திருச்சபையில் உடன் இருக்கிறார். எனவேதான் திருவழிபாடு திருச்சபையின் ஊற்றும், சிகரமுமாக இருக்கிறது. மக்களை இறைவன் பாலும், இறைவனை மக்கள் பாலும் கொண்டு செல்வதே திருச்சபையின் பணி. திருவழிபாடு இந்த இறை-மனித உறவை வெளிப்படுத்துகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருவழிபாடு பற்றிய ஏட்டில் திருச்சபை பற்றிய ஒரு புதிய புரிதலை காண்கிறோம். திருச்சபையை ஒரு படிநிலை அமைப்பாகப் பார்க்காமல், அதை ஒரு இறைமக்கள் சமூகம் என்ற அடிப்படையில் அணுகுகின்றது. திருமுழுக்கு வழியாக அனைத்துக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் குருத்துவத்திலே பங்கெடுக்கிறார்கள். எனவே கிறிஸ்தவர்கள் அனைரும் குருக்களென்ற முறையில் திருவழிபாட்டிலே அனைவரும் அர்த்தமுள்ள முறையில், செயலூக்கம் உள்ள முறையில் பங்கெடுக்க வேண்டும்.

திருவழிபாடுபற்றிய கொள்கை விளக்கத்தை செயல்படுத்த உலக அளவில் திருவழிபாட்டு ஆணைக் குழு ஒன்று 1 தை 1964 இல் நியமிக்கப்பட்டது. மண்டல அளவில் ஒவ்வொரு ஆயர் மன்றத்திலும், தொடர்ந்து ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் திருவழிபாட்டு ஆணைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. பல கருத்தரங்குகள், செயலரங்குகள் நடத்தப்பட்டன. திருவழிபாட்டின் இயல்பு, தன்மை, அர்த்தம். நோக்கம், இறையியல், எப்படி அதில் செயலூக்கமுள்ள முறையில் பங்கெடுப்பது, எப்படி அதில் விசுவாசிகள் அனைவரையும் அர்த்தமுள்ள முறையில் பங்கெடுக்க வைப்பது, வழிபாடுகளை, திருச்சடங்குகளை, இசையை எப்படி நம் பண்பாடு. கலாச்சாரத்துக்கு ஏற்ப தழுவி அமைப்பது போன்ற விடயங்கள் அனைத்தும் ஆராயப்பட்டு, திருவழிபாடு பற்றிய ஒரு விழிப்புணர்ச்சி மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டது. அதன் விளைவாக எங்கள் மறைமாவட்டங்களில், எம் பங்குகளில் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளின் தாக்கங்களை, விளைவுகளை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இன்று எம் பங்கு ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகளில்

நாம் காணும் பெரிய மாற்றம் விசுவாசிகளின் முழுமையான பங்கேற்பு ஆகும். முன்னர் இருந்ததுபோல விசுவாசிகள் வெறும் பார்வையாளர்களாக இராமல், பங்காளிகளாக, செயலூக்கமுள்ள, அர்த்தமுள்ள முறையில் பங்கெடுத்து வருகிறார்கள். வாராவாரம் பங்கு வழிபாட்டுக் குழு ஒன்று கூடி, வார வழிபாடுகளை, குறிப்பாக ஞாயிறு வழிபாடுகளை ஆயத்தம் செய்கிறது. திருப்பலியின் மையக் கருத்து என்ன, என்ன வாசகங்கள், யார் முன்னுரை வாசிப்பது. யார் வாசகங்கள் வாசிப்பது, யார் விசுவாசிகள் மன்றாட்டுக்களை வாசிப்பது, காணிக்கைப் பவனியில் யார் பங்கெடுப்பது, என்ன பாடல்கள் பாடுவது என்றெல்லாம் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு, வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. எல்லோரும் செயலூக்கமுள்ள முறையில் பங்கெடுப்பதால், எம் பங்கு வழிபாடுகள் இன்று உயிருள்ள அழகான வழிபாடுகளாகக் காணப்படுகின்றன.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னர். நற்கருணை ஒரு பலியென்பதை ஏற்றுக் கொள்ள மறுத்த புரொட்டஸ்தாந்தருக்கு எதிராக, நற்கருணை ஒரு பலியென்பதை வலியுறுத்தும் நோக்குடன் குரு பீடத்தைப் பார்த்து நற்கருணைப் பலியை ஒப்புக்கொடுத்தார். மக்களும் அவருக்குப் பின்னாலே பீடத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தனர். ஆனால் இப்போது குரு மக்கள் பக்கம் திரும்பி, இறைமக்களோடு இணைந்து பலி ஒப்புக் கொடுக்கிறார். குருவுக்கும் மக்களுக்கும் இடையே பலிப் பீடம் அமைந்திருக்கிறது. குருவும் இறைமக்களும் பலிப்பீடத்தைச் சுற்றி நின்று, ஒன்றாக இணைந்து பலி ஒப்புக்கொடுக்கிறார்கள். மேலும் நற்கருணை ஒரு பலி மட்டுமல்ல, அது ஒரு விருந்து என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. இன்று திருப்பலியில் இறை வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இவ்வளவு காலமும் கத்தோலிக்க திருச்சபையின் திருவழிபாட்டு உத்தியோக மொழியாக இலத்தீன் மொழியே இருந்து வந்தது. ஆனால் வத்திக்கான் சங்கம் மக்கள் தம் சுதேச மொழிகளில் வழிபாடுகளை நடத்த அனுமதித்ததால், இப்பொழுது திருப்பலியும், ஏனைய திருவருட்சாதன சடங்குகளும் சிங்களம், தமிழ் போன்ற சுதேச மொழிகளில் இடம் பெறுகின்றன. தேசிய மொழிகளில் பாடல்கள் பாடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வேண்டிய பாடல்களும், இசைகளும் தயாரிக்கப்பட்டு, இன்று நம் சுதேச மொழிகளில், சுதேச இசைகளில், சுதேச இசை

வாத்தியங்களுடன் பாடல்கள் பாடப்படுகின்றன. திருவழிபாடுகளில் பயன்படுத்தப்படும் திருப்பலிப் பொருட்களும், உடைகளும் உள்நாட்டுப் பழக்கங்களுக்கும், பண்பாட்டுக்கும் ஏற்ற முறையில் ஆக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இரண்டாம் வத்திக்கான் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், மாற்றங்கள் என்பதை நாம் உணரவேண்டும்.

இவ்வளவு காலமும் நாம் ஆலயங்கள் கட்டும்பொழுது, உரோமைய, அல்லது கொதிக், அல்லது ஐரோப்பிய கட்டிடக் கலையைப் பின்பற்றியே கட்டி வந்தோம். ஆனால் இப்பொழுது உள் நாட்டுக் கட்டிடக் கலைக்கு அமைய நம் ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. திருமணம், திருவிழாக்களின்போது ஆலயங்களை அலங்கரிக்கும்போது, சோடினைகள் உள்நாட்டு சம்பிரதாயங்களின்படி இடம்பெறுகின்றன. திருமண, பிரேத அடக்கச் சடங்குகளிலும் நாம் நம் நாட்டு சம்பிரதாய முறைகளுக்கு மதிப்பளிக்கின்றோம். இவையெல்லாம் 2ம் வத்திக்கான் சங்கத்தின் திருவழிபாட்டை பண்பாட்டு மயமாக்குதல் பற்றிய படிப்பினைகளின் தாக்கங்களேயாகும்.

## 8.2.2.2. 'இறைமக்கள்' எனும் எண்ணக் கரு

இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட 16 ஏடுகளில், "திருச்சபை பற்றிய கோட்பாட்டு விளக்கம்" (Lumen Gentium: இனங்களின் ஒளி) என்ற திருச்சபை பற்றிய ஏடு முக்கியமாதொன்றாகக் கருதப்படுகிறது. இது ஏனைய ஏடுகளுக்கு மூலமும், அடிப்படையுமாக அமைந்திருக்கின்றது. காலத்திற்கு ஏற்றவாறு தன்னைப் புதுப்பிக்கும் திருச்சபையின் முயற்சியில் ஒரு தீர்வான கட்டத்தைக் குறிக்கின்றது. வரலாற்றைப் பொறுத்தவரையில், இந்த ஏடு புரொட்டஸ்தாந்து சீர்திருத்தப் புரட்சிக்கு எதிராக திருச்சபை எதிர்ப்புப் புரட்சி செய்த காலம் மாறி, கிறிஸ்தவ ஒன்றிப்பின் காலம் தொடங்குவதைக் காண்கிறோம். திருச்சபையின் தன்மை, இயல்பு தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. திருச்சபை ஒரு "மறைபொருள்". அதாவது கிறிஸ்துவின் தூய ஆவியின் மூலம் மக்களோடு கடவுள் கொண்டுள்ள உறவை வெளிக்காட்டி, "இறைவனோடு உள்ள நெருங்கிய ஒன்றிப்பிற்கும், மனித குலம் முழுவதன் ஒற்றுமைக்குமான அடையாளமும், கருவியுமாக", அருளடையாளமாக விளங்குகின்றது. இக் கொள்கைத்

திரட்டில் திருச்சபையைப் பற்றி தரப்பட்டிருக்கும் மிகச் சுருக்கமான வரைவிலக்கணம் “இறைமக்கள்” சமூகம். எனவே திருச்சபையானது கடவுளின் புதிய தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள் கூட்டம். ஆகவே ஆயர்கள், திருப்பணியாளர்கள், துறவிகள் மட்டுமன்றி, கடவுளின் மக்களாகிய நம்பிக்கை கொண்டோர் அனைவரும் தூய நிலைக்கு அழைக்கப்படுகின்றனர். இந்தப் புனிதத் தன்மையை அடைவதற்கு இறைவனோடு உள்ள உறவும், ஏனைய மக்களோடு உள்ள சகோரத் தன்மையின் பிணைப்பும் காரணமாகின்றது. இறைமக்கள் என்ற எண்ணக்கருவினால் உருவாகும் ஒற்றுமையின் பிணைப்பு அதை உணர்த்துகின்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபை பற்றிய இப் படிப்பினைகளின் தாக்கத்தை நாம் இன்றைய இலங்கைத் திருச்சபையின் அன்றாட வாழ்வில் தெளிவாகக் காண்கிறோம். சிறப்பாக கத்தோலிக்க திருச்சபைக்கும் புரொட்டஸ்தாந்து சபைகளுக்கும் இடையில் நிலவுகின்ற உறவு நிலை இதற்குச் சான்றாகும். திருச்சபையின் தலைவர்கள் மத்தியில் இன்று நிலவுகின்ற் பரஸ்பர உறவு, ஒத்துழைப்பு, செயற்பாடுகளில் இதைக் காண்கிறோம். பழைய எதிர்ப்பு மன நிலைகள் அழிந்து, வீண் சந்தேகங்கள் ஒழிந்து, புரிந்துணர்வும், கூட்டு ஆலோசனைகளும், கூட்டு அறிக்கைகளும், கூட்டு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீதிக்காக, மனித உரமைகளுக்காக, ஒடுக்கப்படுகின்ற மக்களுக்காக ஒருமித்த குரலில் தங்கள் கருத்துக்களை முன்வைத்து, போராடுகின்றனர்.

திருச்சபையின் உயர்மட்டத்தில் மட்டுமல்ல, கீழ்மட்டத்திலும், பொதுநிலையினர் மத்தியிலும் திருச்சபை பற்றிய கொள்கைத் திரட்டின் தாக்கங்களைக் காண்கிறோம். அவர்கள் புரொட்டஸ்தாந்து சபைனர்பால் கொண்டுள்ள உறவு, மனப்பான்மை, கலந்துரையாடல், ஒத்துழைப்பு போன்றவற்றில் மாற்றங்களைக் காண்கிறோம். தாங்கள் இறைமக்கள் என்ற உண்மையை உணர்ந்தவர்களாக, திருச்சபை மட்டில், அதன் வளர்ச்சி மட்டில் தங்கள் பொறுப்பை, கடமையை உணர்ந்து செயல்படுகின்றனர். திருச்சபையில் பொது நிலையினரின் பங்களிப்பும், மறைத் தூதுப்பணியும் முன்னரைவிட வளர்ந்திருக்கிறது. தாம் எல்லோரும் ஒரே புனித வாழ்விற்கு அழைக்கப்பட்டிருக்கிறதை அறிந்து, புனித

வாழ்வென்பது இறையன்பையும், சகோதர அன்பையும் அடிப்படையாகக் கொண்டதென்பதையும் உணர்ந்து, தங்களுக்குள் சகோதர அன்பை, ஒற்றுமையை வளர்க்க அயராது முயற்சிகளை மேற்கொள்ளுகின்றனர். தங்கள் பங்குகளில் சாதி பேதங்களைத் துறந்து, அன்பியங்களை அமைத்து, ஒற்றுமைக்காக உழைக்கின்றனர். கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் சாதி துவேஷங்கள் முற்றாக அழிக்கப்படாவிட்டாலும், எவ்வளவோ குறைந்துள்ளதென்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

## 8.2.2.3. பொது நிலையினரின் மறைத் தூதுப்பணி

இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்டுள்ள "பொது நிலையினரின் திருத் தூதுப்பணி பற்றிய விதித் தொகுப்பு" என்ற ஏட்டில் திருச்சபையில் திருமுழுக்கு வழியாக இறைமக்களென்னும் அங்கத்துவதைப் பெற்றுள்ள பொது நிலையினரின் இடத்தை அவர்களுக்கு அளித்து, அவர்கள் இன்றைய உலகில், சமூகத்தில் ஆற்றவேண்டிய பணி, பொறுப்புகளைப்பற்றித் தெளிவாக எடுத்து விளக்குகிறது. துறவறத்தையும், குருத்துவத்தையும் பெறாத அனைவரும் பொதுநிலையினர் என்ற பாரம்பரிய வரைவிலக்கணத்திலிருந்து கடந்து சென்று, திருமுழுக்கின் வழியாக இறைமக்கள் எனும் அங்கத்துவதைப் பெறுகின்ற பொதுநிலையினர் கிறிஸ்துவின் அரச, குருத்துவ, இறைவாக்கு எனும் முப்பணியில் பங்குபற்றி, திருச்சபையிலும், உலகிலும் பணியாற்றுபவர்கள் என்ற வரைவிலக்கணத்தை சங்கம் முன்வைத்திருக்கிறது. எனவே திருத் தூதுப் பணிக்கு பொது நிலையினர் அழைப்புப் பெற்றுள்ளனர். இவ் அழைப்பினால் திருச்சபையின் அருள்பணியிலே அவர்கள் தமக்கே உரித்தான அருள்நெறியோடு பங்கு கொள்கின்றனர். இறைமக்கள் சமூகத்தில் பொது நிலையினரும், அருள் பணியாளர்களும் உள்ளடக்கப்படுகின்றனர். அவர்கள் இணைந்து கிறிஸ்துவின் மறையுடலை உருவாக்குகின்றனர். கிறிஸ்துவின் உடலில் உயிருள்ள உறுப்பினர்கள் என்ற முறையில் அனைவரும் தம் திறன்கள், ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்தி, திருச்சபையை வளர்ச்சியுறச் செய்யவும், தூயத் தன்மையுடன் பொலிவுற்றுத் திகழச் செய்யவும் அழைக்கப்படுகின்றனர். அருள்பணியாளர்களின் பணித்தளம் ஆலயம். ஆனால் பொது நிலையினரின் பணித் தளம் பரந்த உலகம்: அவர்கள் கற்பிக்கும்

பாடசாலைகள், அவர்கள் தொழில் புரியும் தொழிற்சாலைகள், அவர்கள் மருத்துவம் செய்யும் மருத்துவ மனைகள், "பொது நிலையினர் உலகியல் அமைப்பைப் புதுப்பிப்பதை தமக்கே உரித்தான கடமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்"

வத்திக்கான் சங்கத்தின் படிப்பினையின் பின்னர். இலங்கைத் திருச்சபையில் பொது நிலையினரின் பங்களிப்பும், மறைத் தூதுப் பணியும் முன்னரைவிட மிகவும் வளர்ச்சி கண்டிருக்கிறது. திருச்சபையின் வாழ்விலும், உலகிலும் பொதுநிலையினரின் செயற்பாடு பல்வேறு பணிகளிலும், சந்தர்ப்பங்களிலும் காணக்கூடியதாக இருக்கிறது. அரசியல் துறை, நிர்வாகத் துறை, வைத்தியத் துறை, சட்டத் துறை, தொழில் நுட்பத் துறை, விஞ்ஞானத் துறை, கட்டிடத் துறை, கல்வித் துறை, விவசாயத் துறை என பல தரப்பட்ட துறைகளிலும் கிறிஸ்தவ பொது நிலையினர் பிரசன்னமாகவிருந்து வருகின்றனர். பல்வேறு துறைகளிலும் அவர்கள் ஈடுபட்டு. அங்கு புளிப்பு மாவுபோல் செயற்பட்டு. கிறிஸ்தவ விழுமியங்கள், படிப்பினைகளை பரப்பி வருகின்றார்கள். பங்குகளில் காணப்படும் பல்வேறு பக்திச் சபைகளில் பெருமளவில் இணைந்து, திருச்சபையின் வளர்ச்சிக்காகச் செயற்படுகின்றார்கள். திருச்சபையின் அங்கத்தவர்களிடையே அதிகமானோர் பொதுநிலையினராக இருப்பதால், திருச்சபையின் புதிய உதயத்துக்காக செயலாற்றுவதில் அவர்களுக்கு பெரும் பங்கு இருக்கின்றது.

## 8.2.2.4. கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமையும், உரையாடலும்

ஒற்றுமை திருச்சபையின் இன்றியமையாத ஓர் இயல்புக் கூறு. கடவுள் ஒருவரே. அவர் அனுப்பிய மகன் இயேசுக் கிறிஸ்துவும் ஒருவரே. அவர் நிறுவிய திருச்சபையும் ஒன்றே. அதன் நம்பிக்கையும் ஒன்றே. ஆனால் இன்று கிறிஸ்தவம் பல கூறுகளாகப் பிளவுபட்டு நிற்கின்றது. அதிலுள்ள பல்வேறு சபைகள், கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள், ஆட்சி அமைப்புகள், செயற்பாடுகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு நிற்பதுமல்லாமல், பலவேளைகளில் அவை ஒன்றிற்கு ஒன்று முரணாகவும், எதிராகவும் கூட செயல்படுகின்றன. கிறிஸ்தவத்தின் இந்த பிளவுபட்ட நிலை அதன் உண்மை இயல்பிற்கும், உயரிய

நோக்கத்திற்கும், அனைத்திற்கும் மேலாக அதை நிறுவியவரின் விருப்பத்திற்குமே முரணானது. உலக மககள் அனைவரும் ஒரே இறைத்தந்தையின் பிள்ளைகள் என்ற உண்மைக்குத் திருச்சபை அடையாளம். அவர்களை ஒரே குடும்பமாக, சகோதர உறவுடன் வாழவைக்கும் கடவுளின் கருவி அது. ஆனால் அத் திருச்சபை இன்று தன்னுள் பிளவுபட்டு. ஒற்றுமையின்றி இருக்கிறது. கிறிஸ்து இவ்வுலகில் இருந்த பொழுது சீடர்கள் மத்தியில் ஒற்றுமையை வலியுறுத்தனார். அதைக் கட்டிக் காத்தார். வரக்கூடிய பிளவுகள், பிரிவினை பற்றி எச்சரித்தார். ஒற்றுமைதான் திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு சிறந்த கருவி என்றார். ஒற்றுமைக்காகத் தந்தையிடம் செபித்தார். அதைக் கட்டிக் காக்கும்படியாக மன்றாடினார். ஆனால் இன்று திருச்சபை பிளவுபட்டுக் கிடக்கிறது. அதுவே இன்று நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு பெருந் தடையாக இருக்கிறது. நற்செய்தியின் நம்பகத் தன்மையை மழுங்கடிக்கின்றது.

திருச்சபையின் ஆரம்பத்திலிருந்து, புதிய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே திருச்சபையில் பிளவுகள் தோன்றியிருந்தன. உதா. புனித பவுல் கொரிந்திய சபையிலிருந்த பிரிவினைபற்றிப் பேசுகிறார் (1 கொரி. 1:10-13). காலப்போக்கில் ஆரியஸ், நெஸ்தோரியஸ் போன்றோரின் திரிபுக் கொள்கைகள் காரணமாக பிளவுகள் ஏற்பட்டன. 11ம் நூற்றாண்டில் கிரேக்க சபை, உரோமைய சபை என்ற பெரிய பிளவு ஏற்பட்டது. 16ம் நூற்றாண்டில் புரொட்டஸ்தாந்து புரட்சியின் காரணமாக புரொட்டஸ்தாந்து சபைகள் உரோமைய சபையிலிருந்து பிரிந்து சென்றன. அவை மீண்டும் மிண்டும் பிளவுபட்டு, இன்று ஆயிரக் கணக்கான சபைகள் இருக்கின்றன. இதுவே இன்று திருச்சபையின் பெரிய தலையிடியாகவும், அதன் நற்செய்தி அறிவிப்புப் பணிக்குப் பெரும் தடையாகவும், முட்டுக் கட்டையாகவும் இருந்து வருகின்றது. அதை அனைத்துச் சபையினரும் அறிந்து, உணர்ந்து இருக்கினறனர்.

சீர்திருத்த சபையினரை மனம்மாற்றி, மீண்டும் கத்தோலிக்க திருச்சபைக்குக் கொணர முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன. ஆனால் நானூறு ஆண்டுகளாக சபையினரிடையே நிலவி வந்த தங்கள் பாதுகாப்பு உணர்வும், பிற சபைகள்பால் பகை உணர்வும் அதற்குத் தடையாக இருந்தன. ஆனால் இந்த எதிர்வாதப் போக்கு 20ம்

நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து சிறிது சிறிதாகக் குறைந்து மறையத் தொடங்கியது. அதற்கு முக்கிய காரணமாக அமைந்தது 1910ம் ஆண்டில் அங்கிலிக்கன் சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம். கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான புதிய ஆர்வத்தையும், ஆழமான ஈடுபாட்டையும் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்படுத்தியவர் "கிறிஸ்தவ ஒன்றிப்பின் தந்தை" என அழைக்கப்படும் திருத்தந்தை 23ம் அருளப்பர் ஆவார். தமது ஆட்சியின் ஆரம்பத்திலிருந்தே அவர் கிறிஸ்தவ ஒன்றிப்பில் தனிப்பெரும் அக்கறை காட்டினார். ஒன்றிப்புப் பணிகளை ஊக்குவித்து, நெறிப்படுத்த உரோமையில் "கிறிஸ்தவ ஒன்றிப்புச் செயலகத்தை" நிறுவினார். தமது எளிமை, இனிமை, மனத்தாழ்மை எனும் பண்புகளால் "எதிர்ப்பாளர்கள்" எனக் கருதப்பட்ட ஏனைய சபைக் கிறிஸ்தவர்களையும் "சகோதரர்களாக" அணைத்துக் கொண்டார். அவர் 2ம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டிய பொழுது, அதன் முக்கிய நோக்காகக் கொண்டிருந்தது கிறிஸ்தவ ஒன்றிப்பே. அவரைத் தொடர்ந்து திருத்தந்தை 6வது பவுல் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். தமது ஆட்சியின் தொடக்கத்திலேயே கீழைச்சபை மறைத்தந்தை அத்தனாகோரசைச் சந்தித்தார். சங்கத்தின் 2ம் அமர்வின் தொடக்க உரையில் "எவ்வகையிலேனும் நாங்கள் (கத்தோலிக்கர்) இப் பிரிவினைகளுக்குக் காரணமாயிருந்திருந்தால் தாழ்மையுடன் கடவுளிடம் மன்னிப்பைக் கேட்பதுடன், எங்களால் புண்பட்டவர்களாகத் தங்களைக் கருதும் சகோதரரின் பொறுத்தலையும் வேண்டுகின்றோம்" என்றார். இந்தப் பின்னணியில், கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்புக்கான முக்கிய முயற்சியாக 2ம் வத்திக்கான் சங்கத்தின் "கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித் தொகுப்பு" வெளிவந்தது. இதன் முக்கிய அம்சமாக ஏனைய சபைகளுக்கும், அவற்றைச் சார்ந்த கிறிஸ்தவர்களுக்கும் காட்டப்படும் அன்பு, கத்தோலிக்க திருச்சபை அல்ல, மாறாக கிறிஸ்துவே அனைத்துக் கிறிஸ்தவ சபைகளின் மையம் என்ற கருத்தும், கிறிஸ்தவத்தில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு பிரிவினைச் சபைகள் மட்டுமல்ல இரு சாராருமே (கத்தோலிக்க திருச்சபை உட்பட) பொறுப்பு என ஏற்றுக் கொள்ளப்படுவதும் அமைகின்றன.

வத்திக்கான் சங்கத்தின் இந்த ஏடு உலகம் முழுவதிலும் கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்படுத்த புதிய பல முயற்சிகளுக்குத்

தேவையான தெளிவும், தெம்பும் தந்துள்ளது. நம் இலங்கையைப் பொறுத்த வரையில் அதன் தாக்கத்தை நாம் காணக்கூடியதாக உள்ளது. பல்வேறு கிறிஸ்தவ சபைகளுக்கிடையே நிலவிய பகை, வெறுப்பு. சந்தேகம், போட்டி மனப்பான்மை, ஒன்றையொனறு பற்றிய இழிவான விமர்சனம் இன்று பெரிதும் மறைந்துள்ளது. பதிலாக நல்லெண்ணமும், நல்லுறவும் சிறிது சிறிதாக அவற்றிற்கிடையே அரும்பத் தொடங்கியுள்ளன. இந்த நல்லுறவின் வெளிப்பாடாக பல துறைகளில் பல்வேறு சபைகளின் ஒத்துழைப்பும், கூட்டு முயற்சிகளும் மலர்ந்துள்ளன. கிறிஸ்தவர்களைப் பாதிக்கும் விடயங்கள் பற்றி கூட்டு ஆலோசனைகள் செய்யப்பட்டு, கூட்டு அறிக்கைகள் விடப்பட்டு, கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல கிறிஸ்தவ சபைகள் அரசிடமிருந்து தங்கள் பொது உரிமைகளைப் பெற ஒருங்கிணைந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். வேறு சபைப் போதகர்கள் இன்னொரு சபைக் கூட்டங்களுக்கு. வழிபாடுகளுக்கு அழைக்கப்படு-கின்றனர். குருமடங்களிலும் விரிவுரை ஆற்றுகின்றனர். அண்மையில் அனைத்து சபைகளும் இணைந்து திருவிவிலியத்தின் ஒரு புதிய பொது தமிழ் மொழி பெயர்ப்பை வெளியிட்டிருக்கிறார்கள். ஆயர் மன்ற மட்டத்திலும், மறை மாவட்டங்கள் மட்டத்திலும் கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, ஒன்றிப்பை வளர்க்கும் பல முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. பங்குகளில் கிறிஸ்தவ ஒன்றிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, உரையாடல்களும், வேண்டுதல்களும், கூட்டு முயற்சிகளும் நடத்தப்படுகின்றன. இவை அனைத்தும் வத்திக்கான் சங்கத்தின் தாக்கங்களே ஆகும்.

## 8.2.2.5. கிறிஸ்தவமல்லாச் சமயங்களுடன் உரையாடல்

கிறிஸ்தவ சபைகளுடன் உறவை, உரையாடலை ஏற்படுத்தி, ஊக்குவித்த சங்கம், கிறிஸ்தவமல்லாத மதங்களுடனும் உறவை, உரையாடலை ஏற்படுத்த விரும்புகிறது. இன்றைய உலகில் சமய சந்திப்புகள், சமய உரையாடல்கள், சமய புரிந்துணர்வு, சமய நல்லிணக்கத்தின் தேவையை அனைவரும் உணருகின்றனர். இன்று உலகெங்கும் காணப்படும் நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள், பதற்றம், சண்டை என்பவற்றிற்கு மதங்களே காரணமாக இருககின்றன.

எனவே சமூக ஒருமைப்பாட்டிற்கு மட்டுமல்ல, சிறப்பாக உலக அமைதிக்கு மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வு. உரையாடல் மிக அவசியமான நிபந்தனையாக இருக்கிறது. வத்திக்கான் சங்கம் திருச்சபை, இறைவெளிபாடு, இன்றைய உலகில் திருச்சபை என்ற முக்கிய ஏடுகள் வழியாக வலியுறுத்தும் புதிய கருத்துகளுக்கு அமைய, திருச்சபை கிறிஸ்தவ சபைகளுடன் மட்டுமல்ல, கிறிஸ்வமல்லாத பிற சமயத்தவரோடும், ஏன் கடவுள் நம்பிக்கை இல்லாதவரோடும் கூட திறந்த மனத்தோடு உரையாட வேண்டிய அவசர தேவை ஏற்படுகிறது. அதன் விளைவாகவே சங்கம் "கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றிய விதித் தொகுப்பு" எனற புரட்சிகரமான அறிக்கையை வெளியிட்டது. இத்தகைய சமய உறவு அணுகுமுறை திருச்சபையின் வரலாற்றில் ஒரு திருப்பு முனை எனலாம். உறவு உரையாடலுக்கும், உரையாடல் புரிதலுக்கும், பகிர்வுக்கும் இட்டுச் சென்று, மீட்புப் பணியின் நிறைவை நோக்கிப் பயணம் செய்யும் ஒரு மக்கள் இயக்கமாக திருச்சபை செயல்பட வழி திறக்கின்றது.

"பலமுறை, பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள்..." மனிதன் உலகில் தோன்றிய காலம் தொடக்கம் அவன் கடவுளைத் தேடி வந்திருக்கிறான். கடவுளும் பற்பல முறைகளில், பற்பல விதமாக அவனோடு பேசி வந்திருக்கிறார். அதன் விளைவாகவே உலகில் பல்வேறு மதங்கள் தோன்றின. பண்டைக் காலத்திலிருந்து இன்றைய காலம் வரை இயற்கையின் போக்கிலும், மனித வாழ்வின் நிகழ்ச்சிகளிலும் மறைந்திருக்கும் ஓர் ஆற்றலைப் பல்வேறு மக்கள் உணர்ந்து வந்துள்ளனர். சில நேரங்களில் ஒப்புயர்வற்றதொரு கடவுளைத் தந்தையாகவும் மக்கள் கண்டு வந்துள்ளனர். மேற்கூறிய உணர்வும், ஏற்பும் அவர்களது வாழ்வை ஆழ்ந்த சமய உணர்வில் தோய்ந்திருக்கச் செய்திருக்கின்றன. இம் சமயங்களில் காணக்கிடக்கின்ற உண்மையானதும், தூயதானதும் எதையும் கத்தோலிக்க திருச்சபை ஒரு பொழுதும் வெறுத்து ஒதுக்குவதில்லை. தன்னுடைய கொள்கைகளிலிருந்தும், போதனைகளிலிருந்தும் பலவற்றில் மாறுபடினும், எல்லா மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையின் ஒளிச்சுடரை மீண்டும், மீண்டும் பிரதிபலிக்கின்ற செயல்முறைப் பாணிகள்,

வாழ்க்கை முறைகள், நெறிகள், கோட்பாடுகள் ஆகியவற்றைக் கத்தோலிக்க திருச்சபை உண்மையாகவே மதித்தப் போற்றுகின்றது. கிறிஸ்தவர்கள் தம் நம்பிக்கைக்கும், வாழ்விற்கும் சான்று பகருங்கால், கிறிஸ்தவமல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களோடு முன்மதியுடனும், அன்புடனும் உரையாடல் நிகழ்த்தவேண்டும். அவ்வாறே அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். மேலும் கிறிஸ்தவமல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களிடத்தில் காணப்படுகின்ற அருள்நெறி சார்ந்த நலன்களையும், சமூக பண்பாட்டு விழுமியங்களையும் ஏற்றுக் கொண்டு, அவற்றைப் பேணி, வளர்ச்சியுறச் செய்ய வேண்டும் எனச் சங்கம் வலியுறுத்துகிறது. மனிதர் யாவரும் கடவுள் சாயலில் படைக்கப்பட்ட-வர்கள். அவர்களில் சிலரை நாம் நம் உடன்பிறப்புகளாக நடத்த மறுத்தோமென்றால், கடவுளை அனைத்து மக்களின் தந்தையென அழைத்து, நாம் செபிக்க இயலாது. இனம், நிறம், வாழ்க்கை நிலை, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் எம் மனிதரையும் பிரித்து வேறுபடுத்துவதும், அவர்களைத் துன்புறுத்துவதும் கிறிஸ்துவின் உளத்திற்கு முரணானவை எனத் திருச்சபை கண்டிக்கிறது.

வத்திக்கான் சங்கம் வித்திட்ட கிறிஸ்தவர்களல்லாத பிற மதங்களுடனான உரையாடல், உறவு செடியாய் வளர்ந்து வருவதை யாரும் மறுக்க முடியாது. உரையாடல் எதிர்பார்த்த விதத்தில் வேகமாக வளர்ச்சியடையவில்லை. எனினும் பலன்கள் பல விளைந்துள்ளன. கிறிஸ்தவர்கள் பிறமதத்தினரும் நெருங்கி வாழும் நாடுகளில், குறிப்பாக இந்தியா, இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் அதன் தாக்கத்தைக் காண்கிறோம். இலங்கை உலகின் முக்கிய சமயங்களான பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றும் மக்களைக் கொண்ட நாடு. பல இன, மத பிரச்சினைகளையும், மோதல்களையும் அனுபவித்த நாடு. எனவே பல்வேறு மதங்களுக்கிடையே புரிந்துணர்வு, உரையாடல் மிக முக்கியம் தேவைப்படுகிறது. ஆனால் அந்த உரையாடலை, உறவை ஏற்படுத்துவது இலகுவான காரியமல்ல. இவ்வளவு காலமும் கிறிஸ்தவர்கள் பிறமதத்தை, பிறமதத்தவர்க-ளைப்பற்றி எதிர்மறையான கருத்துக்களைக் கொண்டிருந்தவர்கள். அவர்கள் அஞ்ஞானிகள், சிலை வழிபாட்டுக்காரர், விக்கிரக ஆராதனைக்-காரர், பேய்க் காரியம் செய்கின்றவர்கள், சூனியக்காரர், பேய்களை வணங்குகின்றவர்கள் எனக் கூறி, அவர்கள் கோவில்களை பேய்க்

கோவில்கள் எனச் சொல்வி, அவர்கள் வழிபாடுகளை திருவிழாக்களை ஏளனமாக நோக்கி, விநோத வேடிக்கைகளாக கருதி வந்தார்கள். ஆனால் இன்று உரையாடல்களின் வழியாக பிற சமயஙகளை அதிகம் அறிந்து கொள்ளவும், மதிக்கவும், அச் சமயங்களைப் பின்பற்றுபவர்களோடு ஒத்துழைக்கவும் கற்றுக் கொள்ள வழி திறக்கப்பட்டிருக்கின்றது. பிற சமயங்கள் பற்றிக் கிறிஸ்தவர்களிடையே நிலவிவந்த தவறான கருத்துக்கள் மறைந்து, நல்லெண்ணமும், நல்லுறவும் உருவாகி-வருகின்றன. இரு தரப்பிலும் ஒருவரையொருவர் அறியவும், ஏற்றுக் கொள்ளவும் வேண்டிய திறந்த மனப்பான்மை வளர்ந்து வருகின்றது. ஒரு சில இடங்களில் சமயப் பூசல்கள், சந்தேகங்கள் இருப்பினும், பொதுவாக கிறிஸ்தவர்கள் மத்தியில் வத்திக்கான் சங்கம் அளித்த புதிய நோக்கு பரவி வருகின்றது.

நற்செய்தி அறிவிப்புப் பணிக்கும் சமய உரையாடல் பணிக்கும் உள்ள தொடர்பும், உறவும் தெளிவாகி வருகிறது. இதனால் நற்செய்தி அறிவிப்புப் பணிபற்றிய இறையியல் கண்ணோட்டத்தில் ஆழம் கண்டுள்ளோம். சமய உரையாடல்கள் முயற்சிகளும், ஈடுபாடும் திருச்சபையில் பண்பாட்டு மயமாக்கல் இயக்கத்திற்கு வேகம் அளித்துள்ளன. மேலும் சமய உரையாடல் அனுபவங்கள் நமது கிறிஸ்தவ நம்பிக்கையை ஆழப்படுத்தியுள்ளது. கிறிஸ்தவ சமூகத்தினர் மட்டும் தனித்து புதிய சமுதாயம் அமைக்க இயலாது. நல்மனத்தோர் அனைவரோடும் இணைந்துதான் இன்றைய சமுதாய மாற்றத்திற்கு கூட்டுச் செயல்பாட்டின் மூலமாக வழிவகுக்க முடியும். சிறப்பாக சமூக நீதிக்காகப் பாடுபடுவோர் அடிமட்டக் குழுக்களில் இதை எண்பித்து வருகின்றனர். இன்று நம் நாட்டில் பல சர்வ மதக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுகின்றன. சர்வ மத கூட்டங்களும், செப வழிபாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டு. நடைபெறுகின்றன. பல முக்கிய கூட்டங்களிலே, வழிபாடுகளிலே சர்வ மதத் தலைவர்களும் சமூகமளித்து. பங்கெடுக்கின்றனர். கூட்டு அறிக்கைகள் விடுகின்றனர். இவையெல்லாம் வத்திக்கான் சங்கத்தின் தாக்கங்களே அன்றி, வேறொன்றும் இல்லை.

## 8.2.2.6. குருத்துவ, துறவற வாழ்வு

திருச்சபையின் வாழ்விலே காலத்திற்கேற்ப ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த விரும்பிய வத்திக்கான் பொதுச் சங்கம், திருப்பணியாளர்களின் (குருக்களின்), துறவிகளின் வாழ்விலும் காலத்துக்கேற்ற மாற்றங்களும் மறுமலர்ச்சியும் ஏற்படுவதை விரும்பியது அதற்கு உதவியாக "திருப்பணியாளர்களின் பணியும் வாழ்வும் பற்றிய விதித் தொகுப்பு", "திருப்பணிப் பயிற்சி பற்றிய விதித் தொகுப்பு" என்ற இரு ஏடுகளையும், "துறவற வாழ்வைப் புதுப்பித்தல் பற்றிய விதித் தொகுப்பு" என்று மற்றொரு ஏடையும் வெளியிட்டுள்ளது. முதல் இரு ஏடுகளும் "எல்லாத் திருப்பணியாளர்களுக்கும், சிறப்பாக மக்களிடையே அருட்பணி ஆற்றுவோருக்கும் (மறைமாவட்டக் குருக்கள்) பொருந்தும். தகுந்த மாற்றங்களுடன் துறவறத் திருப்பணியாளர்களுக்கும் பொருந்தும்" எனக் கூறப்பட்டுள்ளது.

முதல் ஏடு திருப்பணி நிலையைப்பற்றிய இறையியல் கொள்கையை அளிக்கின்றது. திருப்பணியாளர்க்ள கிறிஸ்துவிடமாய் நின்று, கிறிஸ்துவின் பணியைத் தொடர்ந்து செய்கின்றவர்கள். அவர்களின் வாழ்வு பணி கிறிஸ்துவின் மறையுடலாகிய கிறிஸ்தவ சமூகத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவை. உலகின் நடுவில் வாழ்கின்றார்கள். மனிதர்களின் வாழ்க்கையோடும், வாழ்க்கை நிலைகளோடும் தொடர்புள்ளவர்கள். எனவே ஒருவித உலகுசார்த்தன்மை அவர்களின் பணியிலும், வாழ்விலும் உள்ளது. அதே நேரத்தில் உலகின் மதிப்பீடுகளிலும், உலக வாழவிலும் மூழ்கிவிடாமல், அவற்றினின்று அகன்று நிற்கவும் அவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். அவர்கள் பணியைப் பற்றிப் பேசும்போது, முதல் போதிக்கும் பணி, அடுத்து தூய்மைப்படுத்தும் பணி, இறுதியாக தலைமைப் பணி எனக் குறிப்பிட்டு, போதிக்கும் பொழுது நற்செய்தி உண்மைகளை வாழ்க்கைச் சூழ்நிலைகளோடு இணைத்து விளக்க வேண்டுமென அறிவுறுத்துகின்றது. ஆயர்களுக்கும் திருப்பணியாளர்களுக்கும் இடையே சகோதர உறவையும், திருப்பணியாளர்கள் மத்தியில் பரஸ்பர உறவையும், திருப்பணியாளர்கள் பொதுநிலையினர்களுக்கிடையே உடன்பிறப்பு உறவையும் வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

திருப்பணிப் பயிற்சி பற்றிய ஏட்டில் அருள்பணி நோக்கு, கடவுள் மையக் கல்வி, காலத்திற்கும், நாட்டிற்கும் ஏற்ற பயிற்சி என மூன்று பகுதிகள் உள்ளன. திருப்பணி மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி முற்றுமுழுவதிலும் அருள்பணி பற்றிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அதற்கேற்ப பாடத்திட்டங்கள், பயிற்சி முறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். திருப்பணி பயிற்சியகங்கள் மாணவரை வல்லுநராக உருவாக்குவதை விட அருள்பணியாளர்களாக உருவாக்குவதையே முதன்மையான முக்கிய நோக்காகக் கொள்ள வேண்டும். திருப்பணி பயிற்சியகங்களில் கற்றுத்தரப்படும் பாடங்களும் பயிற்சிகளும் இறைத் திட்டத்தையும், கிறிஸ்துவின் திரு நிகழ்வையும் மையமாகக் கொண்டு சுழல வேண்டும். விவிலியம் இறையியலின் உயிர்நாடியாக அமைய வேண்டும். விவிலியத்தின் ஒளியில் ஒழுக்க இறையியல், திருச்சபை வரலாறு, திருச்சபைச் சட்டம் ஆகிய பாடங்கள் மறுபார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும். பயிற்சியைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு நாடும் தனது சூழல், அனுபவம், தேவைக்கு ஏற்பத் திருப்பணிப் பயிற்சித் திட்டத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். காலத்தின தேவைகளுக்கு ஏற்ப மனிதப் பண்பாட்டிலும், அறிவிலும், அருள் வாழ்விலும் மாணவர்கள் வளர்ந்து முதிர்ச்சியடைய திருப்பணிப் பயிற்சி ஏதுவாக இருக்க வேண்டும். மேலும் கற்பிக்கும் முறைகளும் இடத்திற்கும் தேவைக்கும் ஏற்ப மாற்றி அமைக்கப்படவேண்டுமென அறிவுறுத்துகிறது.

துறவற வாழ்வைப் புதுப்பித்தல் பற்றிய ஏட்டில் துறவற வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தும்போது மேல்வரிச் சட்டமாக ஏற்கப்பட வேண்டிய மூன்று அடிப்படை உண்மைகள் தரப்பட்டுள்ளது. முதலாவது, நற்செய்தி எடுத்துரைக்கும் முறையில் கிறிஸ்துவைப் பின்பற்றுவதே துறவற வாழ்வின் அடிப்படை அளவுகோல் என்பதை எல்லாச் சபை-களும் தம் மேல்வரிச் சட்டமாகக் கொண்டிருக்க வேண்டும். இரண்டாவது, சபையை நிறுவியவரின் நோக்கத்தையும், அவர் வகுத்தளித்த தனிப்பட்ட திட்டங்களையும், நல்மரபுகளையும் ஒவ்வொரு சபையும் தம் குடும்பச் சொத்தாகப் பற்றுறுதியோடு ஏற்று, அவற்றைப் போற்றிப் பேணவேண்டும். மூன்றாவது, இன்றைய உலகச் சூழ்நிலைகளை துறவிகள் நம்பிக்கை ஒளியில் பகுத்தறிந்து, திருத்தூது ஆர்வக் கனனால் பற்றியெரிந்து, அதிகப் பயனுறு முறையில் மக்களுக்குப் பணிபுரிய வேண்டும்.

வத்திக்கான் சங்கத்தின் இந்த ஏடுகளின் தாக்கத்தை நம் நாட்டிலுள்ள திருப்பணியாளர்களின் பயிற்சியகங்களிலும், துறவற மடங்களிலும் தெளிவாகக் காணக் கூடியதாக இருக்கிறது. நம் ஆயர் மன்றம் ஆண்டுதோறும் குருமடங்களில் பணிபுரியும் பேராசிரியர்கள், உருவாக்கினர்களுடன் கூட்டாலோசனை செய்து, கலந்தரையாடி, காலத்திற்கு ஏற்ற மாற்றங்களை செய்து வருகிறார்கள். வத்திக்கான் சங்கத்திற்கு முன் குருமடங்களில் அளிக்கப்பட்ட பயிற்சிகள், கற்பிக்கப்பட்ட பாடங்கள், கற்பித்த முறைகளுக்கும் இன்று நடைபெறுபவைகளுக்கும் இடையே பாரதூரமான வித்தியாசங்கள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. திருவிவிலியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதன் ஒளியில் ஏனைய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. நம் நாட்டு மக்களின் வாழ்க்கை அனுபவத்தின் அடிப்படையில் இறையியல் கற்பிக்கப்படுகின்றது. அதன் அடிப்படையிலேயே உருவாக்கமும் இடம்பெறுகின்றது. பயிற்சிக்காலத்திலே மக்களுடனான தொடர்புகள் அதிகம் காணப்படுகின்றன. விடுதலைக் காலங்களில் பெரும்பாலும் பணித்தளங்களிலேயே செயல் முறைப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. பிற மதங்களைக் கற்கவும், பிற மதத்தினரோடு உரையாடவும், உறவாடவும் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. சிங்களமும், தமிழும் படிப்பிக்கப்படுகின்றன. வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்கல் புகுத்தப்பட்டு. அதை வளர்க்க பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பலவிதமான சமூக சேவைகளில் ஈடுபட்டு. மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை அறிந்து, அனுபவித்து, அவற்றை எதிர்கொள்ளப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. துறவற மடங்களில் அவர்களுடைய வாழ்க்கை முறைகளும், பணிகளும் காலத்திற்கு ஏற்ப மாற்றமடைந்துள்ளன. இந்த மாற்றங்கள் அனைத்தும் வத்திக்கான் சங்கத்தின் தாக்கங்களேயாகும்.

## 8.2.2.7. மக்கள் தொடர்பாடல் ஊடகம்

மனிதன் கடவுள் அவனுக்கு அளித்த அறிவு, ஆற்றல்களைப் பயன்படுத்தி, படைப்புகளிலிருந்து பல தொழில் நுணுக்கங்களை கண்டுபிடித்திருக்கிறான். தனிமனிதரை மட்டுமன்றி, மக்கள சமூகங்களையும், மனித குலம் முழுவதையும் இயல்பாகச் சென்றடைந்து இயக்கவல்ல கருவிகள் இக்கண்டுபிடிப்புகளுள் முக்கிய இடம்

பெறுகின்றன. அவற்றில் அச்சு வெளியீடு, திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி போன்ற சமூகத் தொடர்புக் கருவிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இக் கருவிகளைப் தகுந்த முறையில் பயன்படுத்தி, மனித இனம் மிகுந்த நன்மைகளை அடைய முடியும். உதாரணமாக அவை மனிதர்க்கு ஓய்வு அளிக்கவும், உள்ளத்தைப் பண்படுத்தவும், அறிவை வளர்க்கவும், கிறிஸ்தவ விழுமியங்களை வளர்க்கவும், இறையாட்சியைப் பரப்பவும் உதவியாயிருக்கின்றன. ஆனால் இன்று துரதிஷ்டவசமாக அவைகள் பெரும்பாலும் பொழுதுபோக்குத் துறையாகவே வளர்ந்து வருகின்றது. அவை மிகுதியாகத் துர்ப்பிரயோகம் செய்யப்பட்டு, பெரும்பாலும் மனித ஒழுக்க வாழ்வைச் சீர்குலைக்க, கிறிஸ்தவ விழுமியங்களை அழிக்க, மனித சமுதாயத்தை தவறான பாதையில் இட்டுச் செல்ல, மனுக்குலத்தை அழிக்கப் பாவிக்கப்படுகின்றன. சமூக தொடர்புக் கருவிகள் வழியாக மனித வாழ்க்கையின் போக்கு மாறிக்கொண்டு போகின்றது. இம் மாற்றங்கள் பலர் உணராத வகையில், மிக நுணுக்கமான முறையில் நிகழ்ந்து, பண்பாட்டிலும், நாகரீகத்திலும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. கத்தோலிக்க நாடுகளில் அச்சு வெளியீடுகளும், வானொலி, மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் திருச்சபையின் அதிகாரத்துக்கு அடங்கியே இடம்பெறுகின்றன. ஆனால் பல நாடுகளில் அச்சு வெளியீ-டுகளும், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், திரைப்படங்களும், எவ்வித கட்டுப்பாடுமின்றி, மக்களுக்குத் துன்மாதிரிகையாக அமைந்து, தீமை விளைவிக்கும் கருவிகளாகக் காணப்படுகின்றன. இந்நிலையில் திருச்சபையானது சமூகத் தொடர்புத் துறையை அச்சத்துடன் அணுகி, கவலையடைந்து, அதன்மட்டில் எதிர்மறையான கண்ணோட்டத்துடன் விழிப்பாக இருந்தது.

எவ்வளவுதான் ஆபத்துகள் இருந்தாலும், இன்றைய உலகில் சமூக தொடர்புக் கருவிகள் வளர்வதையும், பரவுவதையும் யாராலும் நிறுத்த முடியாது. இன்றைய நிலையில் சமூகத் தொடர்புத் துறையைவிட்டு எவரும் விலகிநிற்கவும் முடியாது. அதை எதிர்கொண்டே ஆகவேண்டும். எனவேதான் வத்திக்கான் சங்கம் இத்துறையை அணுகி நுணுக்கமாக ஆராயவும், அதனால் வரக்கூடிய ஆபத்துக்கதைத் தவிர்க்கவும், ஆக்கத்துக்கு உதவியாக இத் துறையை மாற்றவும் முயற்சிகளை மேற்கொண்டது. அதன் விளைவே அது வெளியிட்ட

"சமூகத் தொடர்புக் கருவிகள் பற்றிய விதித் தொகுப்பு" என்ற ஏடாகும். அதில் சமூகத் தொடர்புக் கருவிகளை நன்முறையில் பயன்படுத்துவதற்கான விதிமுறைகள் தரப்பட்டு, அவற்றின் துர்ப்பிரயோகத்தை, வரக்கூடிய ஆபத்தை தவிர்ப்பதின் மட்டில் திருச்சபையின், இளைஞர் பெற்றோரின், நிகழ்ச்சிகளை உருவாக்குவோரின், நாட்டு அதிகாரிகளின் கடமைகள், பொறுப்புகள் எடுத்துக் கூறப்படுகின்றன. இறுதியாக சமூகத் தொடர்புக் கருவிகளை எவ்வாறு கத்தோலிக்க திருத்தூதுப் பணியில் பயன்படுத்தி நன்மை பெறலாமென ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

வத்திக்கான் சங்கம் வழங்கிய ஆலோசனைகளின் தாக்கத்தை நாம் இன்று அனைத்துலக திருச்சபையில், குறிப்பாக நம் நாட்டுத் திருச்சபையில் காண்கிறோம். ஆயர் மன்றத்தினால் சமூகத் தொடர்புச் சாதனங்களுக்கான ஆணைக் குழு ஒன்று, ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றது. மறைமாவட்டங்களிலும் அத்தகைய ஆணைக் குழுக்கள் செயல்படுகின்றன. சமூகத் தொடர்புச் சாதனங்கள் பெருமளவில் மறைபோதகப் பணியில் பயன்படுத்தப்படுகின்றன. வானொலி, தொலைக்காட்சி வழியாக பல மறை நிகழ்ச்சிகள், திருநாள், பெருநாள் திருப்பலிகள் ஒலி, ஒளி பரப்பப்படுகின்றன. வாராந்த, மாதாந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் அச்சிடப்பட்டு, வெளியிடப்படுகின்றன. மறை சம்பந்தமான கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன. மறைக்கல்வி வகுப்புகளுக்குத் தேவையான படங்கள், பாடப் புத்தகங்கள், இறுவெட்டுகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. சமூகத் தொடர்புசக் கருவிகள் துஷ்பிரயோகம் செய்யப்படும்போது, மதக் கோட்பாடுகளுக்கு விரோதமான திரைப் படங்கள், நூல்கள், கட்டுரைகள் வெளிவரும்பொழுது. அதற்கு எதிராக குரல் எழுப்பப்படுகின்றன. இவை அனைத்தும் வத்திக்கான் சங்கத்தின் தாக்கங்களே. ஏனைய கிறிஸ்தவ நாடுகளைப்போன்று நம் நாடு மக்கள் தொடர்பாடல், ஊடகத் துறையில் போதியளவு முன்னேற்றம் அடைந்திராவிட்டாலும், திருச்சபையானது தம் பணியில் தொடர்பாடல், ஊடகக் கருவிகளை கூடியளவு பயன்படுத்தி வருவது பாராட்டுதலுக்குரியது.

## 8.2.2.8. மனிதத்துவம், மனித உரிமைகள், மற்றும் கடமைகள்

மக்களால் ஆனதே திருச்சபை. எனவே மக்களைப் பாதிக்கும் அனைத்தும் திருச்சபையையும் பாதிக்கின்றது. திருச்சபையுடைய தன்மையை, இயல்பை, வாழ்வை, பணியை அலசி ஆராய்ந்து, அவற்றில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வத்திக்கான் சங்கம், இன்றைய உலகில் திருச்சபை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான தகுந்த ஆலோசனைகளை வழங்காமலிருக்க முடியாது. அதன் வெளிப்பாடுதான் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் வெளியிட்ட "இன்றைய உலகில் திருச்சபை" என்ற சமூகக் கொள்கை விளக்கம். இதுவே சங்கம் வெளியிட்ட 16 ஏடுகளிலும் அளவில் மிகப் பெரியது. இந்த ஏடு புதியதொரு சமூகப் போதனையை வரையறுத்திட எழுதப்படவில்லை. மாறாக, சமூக வாழ்க்கை பற்றி திருச்சபை வழங்கும் போதனையை ஒரு புதிய பார்வையில் விளக்குகின்றது. முதலில் காலத்தின் குறிகளை அறிந்து, அதன் வழியாக வெளிவரும் உலகத்தின் இன்றைய நிலை-மையை அலசி ஆராய்கின்றது. உலகில் ஏற்பட்டிருக்கும் பலவகையான மாற்றங்களின் விளைவாகத் தோன்றியிருக்கும் சில முக்கிய பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றின் தீர்வுக்கான வழிமுறைகளையும் முன்வைக்கின்றது.

அதற்கு முன்னர், எவ்வித சமூகப் பிரச்சினைகளின் தீர்வுக்கும் அடிப்படையாக இருக்கின்ற நான்கு முக்கிய கிறிஸ்தவ கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன: மனித மாண்பு, மனித சமூகம், மனித செயல், இன்றைய உலகில் திருச்சபையின் பணி. மனிதன் மாண்புள்ளவன். கடவுளின் உருவிலும், சாயலிலும் படைக்கப்பட்டவன். கடவுளோடு இணைந்து வாழப் படைக்கப்பட்டவன். அவனிடம் இருக்கும் அழியா ஆன்மா, அறிவு, மனச்சான்று, சுதந்திரம் அனைத்தும் அவனுடைய மாண்புக்கு காரணமாகின்றன. அவன் அனைத்தையும் ஆண்டு நடத்தப் படைக்கப்பட்டவன். கடவுள் அவனுக்கு அளித்திருக்கும் சுதந்திரம், அவனுடைய பிறப்புரிமை. மனிதன் ஒரு சமூகப் பிறவி. அவனால் தனித்து வாழ, வளர, தன் திறன்களை, ஆற்றல்களை வளர்க்க இயலாது. அவனுக்கு குடும்பம், அரசியல் சமூகம், சமுதாயம் போன்ற

சமூகங்கள் தேவை. அவனுடைய சமூகப் பண்பிலிருந்து பிறப்பது சமத்துவம். மனிதர்கள் அனைவரும் சமம். மனிதரின் அடிப்படை உரிமைகளைப் பொறுத்தவரையில், பால், இனம். நிறம், சமூக நிலை, மொழி, மதம் ஆகியவை காரணமாகப் பாகுபாடு காட்டுவது கண்டிக்கப்படுகின்றது. சமூகமயமாக்கல் ஊக்குவிக்கப்படுகின்றது. சமூகங்களின் நோக்கம் பொதுநலனைப் பேணுவதே. மனிதனுடைய உணவு உரிமை, உடை உரிமை, உறைவிடம், வாழ்க்கை நிலையைத் தெரிந்துகொள்ளும் சுதந்திரம், குடும்பம் அமைக்கும் உரிமை, கல்வி உரிமை, தொழில் உரிமை, நன்மதிப்பு உரிமை, சரியான தகவல் பெற உரிமை, தனி வாழ்வுப் பாதுகாப்பு உரிமை, மதச் சுதந்திரம், மருத்துவ வசதி போன்ற அடிப்படை உரிமைகள் வலியுறுத்தப் பட்டிருக்கின்றன. மனித செயல் தனித்தன்மை உள்ளது. மனிதன் அனைத்துலகையும் ஆண்டு நடத்தப் படைக்கப்பட்டவன். தன் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு அவன் எடுக்கும் முயற்சிகள் கடவுள் திட்டத்துககு ஒத்தவை.

அதைத் தொடர்ந்து இன்றைய உலகில் அவசியம் தீர்க்கப்படவேண்டிய சில முக்கிய பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன. திருமண, குடும்ப வாழ்வு, பண்பாடு, சமூக பொருளாதார வாழ்வு, அரசியல் வாழ்வு, சூழல் பாதுகாப்பு, உலக அமைதியும் போர்த் திகிலும் போன்றவை தனித் தனியே எடுத்து ஆராயப்பட்டு, உரிய ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இன்றைய உலகில் நிலவும் அநீதிகள், ஏற்ற தாழ்வுகள் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மனித குலத்தை வாட்டுகின்ற இப் பிரச்சினைகளுக்குத தீர்வு காண வேண்டுமென்றால் மனித உள்ளங்கள் மாறவேண்டும். கிறிஸ்தவ மதிப்பீடுகள் அங்கே வேரூன்றித் தழைக்க வேண்டும். விடுதலைப் பார்வையும் வேண்டும். அதாவது மனித சமுதாயத்தை ஒடுக்கி வருகின்ற அநீதியான அமைப்புகளும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

வத்திக்கான் சங்கத்தின் சமூகப் படிப்பினைகளின் தாக்கத்தை நாம் இலங்கைச் சமுதாயத்தில் பல்வேறு துறைகளில் காணக்கூடிதாக இருக்கிறது. மனிதனுடைய மாண்பு, அவனுடைய சமத்துவம் என்பன சமுதாயத்தில் பொதுவாக எல்லோராலும் மதிக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் மிகத் தீவிரமாகவிருந்த சாதி வேற்றுமைகள், பாரபட்சங்கள்

எவ்வளவோ குறைந்துள்ளன. இன, மத, மொழி அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படும்பொழுது, அதற்கு எதிராகக் குரலெழுப்பட்டு வருகின்றது. திருமண, குடும்ப வாழ்விலே அன்புறவு, ஒருமை, கட்டவிழாமை போன்ற பண்புகள் வலியுறுத்தப்படுகின்றன. பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் வளர்ப்பிலே, கல்வியிலே பொறுப்புடனும், கூட்டு ஆலோசனையுடனும் செயல்படுகின்றார்கள். பொருளாதாரத் துறையில் தொழிலாளரின் உரிமைகள், கடமைகள் பேணப்படுகின்றன. பொருளா-தார ஏற்ற தாழ்வுகளைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படு-கின்றன. அரசியல் துறையில் மக்கள் அரச அதிகாரத்தின் வரம்புகள், எலலைகள் பற்றி, மனித உரிமைகள் மீறப்படுவதைப்பற்றி விழிப்பாக இருக்கிறார்கள். அடிப்படை உரிமைகள் மீறியதுக்கு எதிராக நீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடுக்கப்பட்டு இருக்கின்றன. மக்கள் தங்கள் வாக்குரிமைபற்றி கவனமாக உள்ளார்கள். பல்லாண்டுகளாக இடம்பெற்றுவந்த உள்நாட்டுப் போரின்போது, அமைதியை ஏற்படுத்த பல குழுக்களாலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சூழல், சுற்றாடலைப் பாதுகாப்பதில் மக்கள் தங்கள் கடமையை உணர்ந்து, அதற்கேற்ப செயல்பட்டு வருகின்றார்களா. இவ்வாறாக வத்திக்கான் சங்கத்தின் சமூகப் படிப்பினைகளின் தாக்கத்தை இலங்கைச் சமுதாயத்திலே நாம் தெளிவாகக் காண்கிறோம்.

## 8.2.3. தற்கால சமூகத்தில் இலங்கைத் திருச்சபை

இலங்கைத் திருச்சபையின் 500 ஆண்டு கால வரலாற்றை, குறிப்பாகச் சுதந்திர இலங்கையில் அதன் 60 வருட கால வரலாற்றை நாம் ஆராய்ந்து படித்தபொழுது, அது பயணித்து வந்த பாதை இலகுவானதாக, மகிழ்சியானதாக இருக்கவில்லையென்பதை நாம் தெளிவாகக் கண்டோம். இலங்கை 1948 இல் ஒரு சுதந்திர ஜனநாயக நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பௌத்த சிங்கள மக்கள், தங்கள் பெரும்பான்மையைப் பயன்படுத்தி, இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடாக்கவேண்டுமென்று கங்கணம்கட்டி, செயல்பட்டு வந்தார்கள், இன்றும் செயல்பட்டு வருகின்றார்கள். அந்நியர் ஆட்சிக் காலத்தில் சிறிய சலுகைகளைப்பெற்று, செல்வாக்குடன் வாழ்ந்த சிறுபான்மை இனத்தவரும், மதத்தவரும் படிப்படியாக ஓரம்கட்டப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, அவர்களின் வளர்ச்சியை,

முன்னேற்றத்தைத் தடைசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சுதந்திர இலங்கையில் பாராளுமன்றத்தில் 5 ஆனி 1956 இல் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட "தனிச் சிங்களம் மட்டும்" மசோதாவும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற இனக் கலவரங்களும், மதக் கலவரங்களும் அதற்கு சான்று பகருகின்றன. கிறிஸ்தவம் அந்நியரின் மதம், அந்நிய நாட்டிலிருந்து அந்நியரால் கொண்டுவரப்பட்ட அந்நிய மதம் என்ற கருத்து பௌத்த தீவிரவாதிகளால் பரப்பப்பட்டு, மக்கள் மத்தியில் கிறிஸ்தவர்கள் மட்டில் ஒரு வெறுப்பு மனநிலை உருவாக்கப்பட்டது. அகில இலங்கை பௌத்த ஆணைக் குழு கிறிஸ்தவர்கள் மக்கள் மத்தியில் செய்யும் சமூக நற்பணிகளெல்லாம் "கத்தோலிக்க இயக்கம்" எனப் பெயர் சூட்டி, பௌத்த மக்கள் மத்தியில் சந்தேகத்தை உருவாக்கின. தொடர்ந்து திருச்சபை நாடெங்கிலும், அதன் மூலைமுடுக்குகளெல்லாம் ஆரம்பித்து நடாத்திவந்த நூற்றுக் கணக்கான பாடசாலைகள், கல்வித் தாபனங்கள் அனைத்தும் அதனிடமிருந்து வலோத்காரமாகப் பறித்தெடுக்கப்பட்டு. அரச உடைமைகள் ஆக்கப்பட்டன. சில கிறிஸ்தவ பாடசாலைகள் பௌத்த சிங்கள பாடசாலைகள் ஆக்கப்பட்டன. சுதந்திர இலங்கையில் பணிபுரிந்த பிறநாட்டு மறைபரப்பாளர்கள், குருக்கள், துறவிகள், கன்னியர் நாட்டிலிருந்து விரட்டப்பட்டு, புதிய மறைபரப்பாளர்கள் வருவது தடைசெய்யப்பட்டது. வைத்தியசாலைகள் தாதியர்களாகப் பணிபுரிந்த கிறிஸ்தவ கன்னியர்கள் அங்கிருந்து விலக்கப்பட்டார்கள். இவ்வளவு காலமும் ஓய்வு நாளாகவிருந்துவந்த கிறிஸ்தவர்களின் முக்கிய நாளாகிய ஞாயிற்றுக் கிழமை வேலை நாளாக்கப்பட்டு, பௌத்தர்களுக்கு முக்கிய நாளாகயிருக்கிற போயா தினம் விடுதலை நாளாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அவ்வாறு கிறிஸ்தவர்கள் தங்கள் ஞாயிறு கடமைகளை நிறைவேற்றுவதும், கிறிஸ்தவ மாணவர்கள் மறைக்கலவி வகுப்புகளுக்கு செல்வதும் கடினமாக்கப்பட்டது. கிறிஸ்தவ பொதுநிலையினரும், பக்திச் சபைகளும், துறவிகளும் செய்து வந்த சமூக பிறர்நலப் பணிகள் இல்லாத பொல்லாத இரக்கமற்ற விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டன. மக்கள் இன ரீதியாக, மத ரீதியாக அல்லது மொழி ரீதியாக பாரபட்சமாக நடத்தப்பட்டு, அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்ட வேளையில் உண்மைக்காக. நீதிக்காக வாதாடி, அவர்களுக்காக குரல் கொடுத்த குருக்கள், துறவிகள் சமூகத் துரோகி-

கள், நாட்டு விரோதிகள், பயங்கரவாதிகள் எனப் பெயர் சூட்டப்பட்டு, பல துன்புறுத்தல்கள், இம்சைகளுக்கு ஆளானார்கள். திருச்சபையின் தலைவர்கள், அவர்களின் செயற்பாடுகள், கொள்கைகள், மரியன்னை, புனிதர்கள் பற்றிய நிந்தைகள், அவதூறுகள் பிரசுரிக்கப்பட்டு, பரப்பப்பட்டன. இப்படியாக சுதந்திர இலங்கையிலே திருச்சபை முகங்கொடுத்த இன்னல்கள், துன்பங்கள், இழப்புகள் பல பல.

அத்தனை அவதூறுகள், அவமானங்கள், எதிர்ப்புகள், துன்புறுத்தல்கள், இடையூறுகள், இழப்புகள், சவால்கள், பயமுறுத்தல்களுக்கு ஊடாகத் திருச்சபை மனந் தளர்ந்திடாமல், பயமின்றி, பொறுமையுடனும், மன உறுதியுடனும், விடாமுயற்சியுடனும் வீர நடைபோட்டு பயணித்து, நற்செய்திக்குச் சான்றுபகர்ந்து வந்திருக்கிறது. "உலகம் என்னைப் பகைத்தது. உலகம் உங்களையும் பகைக்கும். எனினும் அஞ்சாதீர்கள், எனெனில் நான் உலகை வென்றுவிட்டேன்" என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டவர்களாய் தம் கடமைகளைச் செவ்வனே செய்து வந்தார்கள்.. "என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப்பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகள் அவர்களுக்கு வலிமையும், நம்பிக்கையும் ஊட்டின.

அத்தனைக்கும் ஊடாகப் பயணித்த திருச்சபை குன்றி விடாமல், இன்று ஒரு வலிமையுள்ள, மதிப்புள்ள, செலவாக்குள்ள தாபனமாக, வளர்ந்து பரவி, ஒரு பெரிய விருட்சமாகக் காட்சியளிக்கிறது. இன்று இலங்கையில் 1.4 மில்லியன் கத்தோலிக்கர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 2926 துறவியரும், 955 குருக்களும், பணியாற்றுகிறார்கள். அவர்கள் 391 பங்குகளாக அமைக்கப்பட்டு இருக்கிறார்கள். அவை பதினொரு மறைமாவட்டங்களாக பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அவையாவன: கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, திருமலை-மட்டுநகர், காலி, சிலாபம், குருணாகலை, இரத்தினபுரி, பதுளை, அநுராதபுரம், மன்னார் என்பன. அம் மறைவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் பொறுப்பாக ஒவ்வொரு ஆயர்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். இம் மறைவட்டங்களின் அனைத்து ஆயர்களும் (11) ஒன்றிணைந்து இலங்கை ஆயர் மன்றத்தை நிறுவி, அதில் அங்கத்துவம் வகிக்கின்றனர். ஆயர்கள் ஒவ்வொருவரிடமும் மறைப்பணியின் வெவ்வேறு துறைகள்

ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் பல்வேறு பணிக்கென அமைக்கப்பட்டிருக்கும் ஒன்பது கத்தோலிக்க தேசிய ஆணைக் குழுக்கள் வழியாகவும், வேறு தேசிய அமைப்புகள், இயக்கங்கள் வழியாகவும் செயல்பட்டு வருகின்றார்கள். அவை பின்வருவன:

**தேசிய ஆணைக் குழுக்கள்:**

1. குருக்கள், துறவிகள், குருமாணவர்கள், உலகுசார் துறவற அமைப்புகள்.
2. திருவழிபாடு, கலாச்சார விவகாரங்கள்.
3. நீதி, அமைதி, மனித முன்னேற்றம்.
4. பொது நிலையினர்.
5. மறை அறிவிப்புப் பணி.
6. கல்வி, மறைக் கல்வி, விவிலிய மறைப்பணி.
7. கிறிஸ்தவ ஒன்றிப்பு, உரையாடல்.
8. சமூகத் தொடர்புகள்.
8. இணைப்பு (துறவிகளுடன்) ஆணைக் குழு.

**தேசிய அமைப்புகள்:**

1. பாப்புவின் மறைபரப்புச் சபைகள்.
2. இலங்கைக் கத்தோலிக்க சங்கம்.
3. மரியாயின் சேனை.
4. புனித வின்சென்ற் டி போல் சபை.
5. சவேரியன்ஸ்.
6. சீனிமா அப்போஸ்தலத்துவத்திற்கான அனைத்துலக அமைப்பு (ஓ.சி.ஐ.சி).
7. சமூக பொருளாதார முன்னேற்ற நிலையம்.
8. தேசிய மறைக் கல்வி, விவிலிய மறைப்பணி நடுநிலையம்.

**மறைவட்டங்களுக்கிடையிலான மறைப்பணி இயக்கங்கள்**

1. வானொலி, தொலைக்காட்சி மறைப்பணி.
2. இலங்கைக் கூர்சிலியோ இயக்கம்.
3. மறுமலர்ச்சி மறைப்பணி.
4. இலங்கைக் கிறிஸ்தவ குடும்ப இயக்கம்.
5. கிறிஸ்தவ வாழ்வுச் சமூகங்கள்.
6. இலங்கைத் தொழிலாளர் இயக்கம்.
7. இலங்கை லகிறிவி இயக்கம்.
8. அமல மரியின் மறை பரப்புச் சபை.

இலங்கை ஆயர் பேரவை இந்த ஆணைக் குழுக்கள், தேசிய அமைப்புக்கள், இயக்கங்கள் வழியாக மக்களுக்கு அரும் பெரும் பணி ஆற்றி வருகிறது. உதாரணமாக மறைக் கல்வி நடுநிலையத்தை எடுத்துக் கொள்வோமானால், அதன் வழியாக மறை ஆசிரியர்கள் பயிற்றப்படுகின்றனர். மறைக் கல்வி பாட நூல்கள் தயாரிக்கப்படுகின்றன. மேலும் பல மறைக் கல்வி, வேதாகம நூல்கள் தயாரித்து வெளியிடப்படுகின்றன. வளர்ந்தோர்க்கான மறைக் கல்வித் திட்டங்களை, நூல்களைத் தயாரித்து, அமுல் செய்தல், வேதாகமப் போட்டிகள், கருத்தரங்குகள், பாசறைகள் நடத்துதல் போன்ற பணிகள் செய்யப்படு-கின்றன. அதேபோன்று சமூக பொருளாதார முன்னேற்ற நிலையம் அனாதைகளுக்கு அகதிகளுக்கு, இல்லிடம் அற்றோருக்கு பெரும் நிவாரண உதவிகள் புரிகின்றது, வெள்ளப்பெருக்கு, சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களின்போது அவசர நிவாரண வேலைகளை முன்னெடுத்துச் செய்கின்றது. இனக் கலவரம், மதக் கலவரம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு, இருப்பிடங்களை இழந்து, அகதிகளாக, ஆதரவற்றவர்களாக வாடுவோருக்கு முடியுமான உதவிகள் செய்கின்றது. வசதியற்ற மாணவர்களுக்கு தங்கள் கல்வியைத் தொடர நிதியுதவி அளிக்கின்றது. மக்கள் மத்தியில் கிறிஸ்தவ விழுமியங்களை உருவாக்கி வளர்க்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அதேபோல் திருவழிபாட்டு ஆணைக் குழு எம் ஆலயத் திருவழிபாடுகளை எம் பண்பாட்டைத் தழுவி அமைக்க, அர்த்தமுள்ள முறையில் அவற்றை

நிறைவேற்ற பலவகையிலும் உதவி புரிகின்றது. மக்கள் திருவழிபாடுகளில் வெறும் பார்வையாளர்களாக இராமல், அர்த்தமுள்ள முறையில் முழுமையாகப் பங்கெடுக்க வேண்டிய சகல உதவிகளையும் அளிக்கிறது. குருக்கள் தங்கள் ஞாயிறு திருப்பலி, திருவுரைகளை விசுவாசிகளின் வாழ்க்கைக்கு ஏற்ற பயனுள்ள விதத்தில் ஆயத்தம் செய்து அளிக்க வேண்டிய நூல்களை தயாரித்தளித்து உதவுகின்றது. எமது வழிபாடுகளையும், சடங்குகளையும் நமது நாட்டுப் பண்பாடு, கலை, கலாச்சாரத்துக்கு ஏற்ப தழுவி அமைத்து. பண்பாட்டு மயமாக்கலை முன்னெடுத்துச் செல்ல ஆலோசனைகளை வழங்கி, வழிமுறைகளையும் காட்டி வருகின்றது.

இன்று நம் நாட்டுச் திருச்சபையின் தலைவர்கள், ஆயர்கள், துறவறசபைத் தலைவர்கள், பொதுநிலைத் தலைவர்கள் அனைவரும் சுதேசிகள். நம் நாட்டுப் பிரசைகள். நம் நாட்டுப் பண்பாட்டு விழுமியங்கள், கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள், நம் நாட்டு மக்களின் இதயத் துடிப்புகள், ஆசை அபிலாசைகளை நன்கு அறிந்தவர்கள், அவற்றிற்குப் பழக்கப்பட்டவர்கள், அவற்றுடன் பிறந்து, வாழ்ந்து. வளர்ந்தவர்கள். எனவே அவர்கள் மக்களை நாட்டுப் பற்றுள்ளவர்களாக, நாட்டின் வளர்ச்சியிலே, அபிவிருத்தியிலே, முன்னேற்றத்திலே அக்கறை, ஆர்வம் உடையவர்களாக இருப்பதுமன்றி, தங்கள் அறிவு, திறன்கள், திறமைகள், ஆற்றல்கள் அனைத்தையும் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவும், சமூக வளர்ச்சிக்காகவும், அபிவிருத்திகாகவும் அர்ப்பணித்து, உழைத்து வருகின்றார்கள். அத்துடன் மற்றவர்களையும் அவ் வழியில் உருவாக்கி, பயிற்றுவித்து வருகிறார்கள். கிறிஸ்தவர்களின் நாட்டுப்பற்றும், அதன் வளர்ச்சியில் அவர்களுக்கிருக்கும் அக்கறையும், கர்சனையும் சுதந்திர போராட்ட காலத்திலே தெளிவாகத் தென்பட்டது. அப் போராட்டத்திலே பல கிறிஸ்தவர்கள் முழுமையாகப் பங்கெடுத்ததை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். நாட்டில் ஏற்பட்ட சுனாமி, சூறாவளி, வெள்ளப் பெருக்குப் போன்ற இயற்கை அனரத்தங்களின்போது, மத, இனக் கலவரங்களின்போது, ஏனைய தேவைகளின்போதும் மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய, நாட்டிலே அமைதியை, சமாதானத்தை, ஒற்றுமையை ஏற்படுத்த அவர்கள் முன்னின்று அயராது உழைத்து வந்திருக்கிறார்கள். கடந்த 30 ஆண்டுகளாக நாட்டில் நடந்த உள்நாட்டுப் போரின்போது, நாட்டைப்

பாதுகாக்க, நாட்டின் ஒருமையை, ஒற்றுமையைப் பாதுகாக்க, பெரும் எண்ணிக்கையிலான கிறிஸ்தவ இளைஞர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள்.

அத்துடன் திருச்சபையானது நம் நாட்டுக் கல்வி, பண்பாடு, கலை, கலாச்சாரம், நாடகம், எழுத்துக் கலை, கூத்துக கலை, சமூக நலன்புரி, இரக்கப்பணி போன்ற பல்வேறு துறைகளில் பங்களிப்புச் செய்து, மக்கள் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகின்றது. சில துறைகளில் கிறிஸ்தவர்களே முன்னோடிகளாகத் திகழ்கிறார்கள். அவர்களுடைய பாடசாலைகளும், கல்வித் தாபனங்களும் பறித்தெடுக்கப்பட்டாலும், கிறிஸ்தவ துறவிகள், கன்னியர், பொதுநிலயினர அரச பாடசாலைகளிலும், தனியார் பாடசாலைகளிலும் பணிபுரிந்து, கல்வித் துறையிலும் தங்கள் பங்களிப்பைச் செய்து வருகிறார்கள். கிறிஸ்தவ மாணவர்களை கிறிஸ்தவ சூழலில் கற்பிப்பதற்கும், கிறிஸ்தவ விழுமியங்களுக்கு அமைய வளர்ப்பதற்கும், ஒழுக்க நடத்தை விருத்திக்கும், ஆளுமையைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடனும் திருச்சபை தன் சொந்த செலவில் நடாத்தும் தனியார் பாடசாலைகளையும், கல்வி நிறுவனங்களையும் பிறமதத்தினரும் அதிகம் விரும்பித் தேடுவது குறிப்பிடத்தக்கது. மேலும் ஆங்கில வகுப்புகள், கணனி, தொடர்பாடல் வகுப்புகள், தையல், அலங்கார வகுப்புகள், கைத் தொழில் பேட்டைகள் என்று காலத்துக்கும், தேவைக்கும் ஏற்ப பல்வேறுபட்ட நிறுவனங்களை அமைத்து, மாணவ சமுதாயத்துக்கு உதவிவருகின்றது. இவ்வாறாக திருச்சபையானது நம் நாட்டு மக்களுக்குப் அளப்பரிய பணிபுரிந்து, அவர்கள் மத்தியில் நற்செய்திக்குச் சான்று பகர்ந்து வருகின்றது.

இன்று, வத்திக்கான் சங்கத்திற்குப் பிற்பாடு, கத்தோலிக்க திருச்சபைக்கும் இலங்கையிலுள்ள பல்வேறு புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவ சபைகளுக்கும் இடையே பரஸ்பர ஒற்றுமையையும், நல்லுறவையும் உரையாடலையும் காணக்கூடியதாக இருக்கிறது. நாட்டுப் பிரச்சினைகளைப்பற்றிய கலந்துரையாடல்களும், கூட்டு ஆலோசனைகளும், கூட்டு அறிக்கைகளும், கூட்டு முயற்சிகளும் இடம்பெறுகின்றன. புரொட்டஸ்தாந்து சபைகளுக்கு இடையேயும் ஒற்றுமையை, நல்லுறவை வளர்க்கவும், சமுதாயத்துக்குத் தேவையான பணிகளை ஒருங்கிணைந்து பொறுப்புடன் ஆற்றச் சபைகளுக்கு உதவும்

நோக்குடனும் அவர்கள் ஒன்றிணைந்து, இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபையை அமைத்துள்ளனர். கிறிஸ்தவ திருச்சபைகளின் அனைத்துலக மன்றத்தின் பிரதிபலிப்பாகவே இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை செயல்படுகின்றது. இந்த அமைப்பிலே இலங்கைச் சபை, மெதடிஸ்த சபை, தென் இந்திய சபை, பப்ரிஸ்ற் சபை, இரட்சணிய சேனை, ஒல்லாந்த சீர்திருத்த புரட்டஸ்தாந்து சபை, பிறெஸ்பிற்ரேறியன் சபை போன்றவை அங்கத்துவம் வகிக்கின்றன. இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபையின் நிர்வாகத்தின் கீழ், இலங்கை வேதாகமச் சங்கம், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், கிறிஸ்தவ இளைஞர் சங்கம், கிறிஸ்தவ இளம் மகளிர் சங்கம், கிறிஸ்தவ மாணவர் இயக்கம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்த நிறுவனங்களின் ஊடாக, இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை மக்களுக்கு இன, மத, பாகுபாடின்றி சிறந்த பணியாற்றிவருகிறது. கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் நற்பணியாற்றுவதே அதன் நோக்கம். எனவே பல குழுக்களாக அமைந்து செயல்படுகின்றது. மறைக் கல்விக் குழு, அபிவிருத்திக் குழு, மகளிர் குழு, உளவளப் பணிக் குழு, இளைஞர் குழு, சமூக தொடர்பு சாதனக் குழு, வீடு உறைவிட வசதிக் குழு, மறைபரப்புப் குழு, நீதி சமாதானத்துக்கான குழு, சபைகளுக்கிடை-யிலான நிதியுதவிக் குழுவென பல குழுக்கள் இயங்குகின்றன.

இன்று இலங்கையில் திருச்சபை எதிர்நோக்கும் மிக முக்கிய சவால் இலங்கை மக்கள் அனைவரையும் இணைத்து ஒரு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். நம் நாட்டில் பல்லாண்டு காலமாக நிலவிவரும் இனப் பிரச்சினையும், அதன் விளைவாக நடந்து முடிந்த உள்நாட்டுப் போருமாகும். இப் போரின் விளைவாக பல்லாயிரக் கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன இலட்சக் கணக்கானோர் அகதிகள், அனாதைகள், கைம்பெண்கள் ஆக்கப் பட்டு, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி அந்தரித்துக் கொண்டிருக்கின்றார்கள். எத்தனையோ இளைஞர்களும், யுவதிகளும் தினமும் பயத்துடனும், அச்சத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இக்காலத்தின் குறி வழியாக இறைவன் நம் நாட்டிலே இனவெறியை, இன வேற்றுமையைக் களைந்து, ஒற்றுமையை வளர்த்து, ஒரு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப முயற்சி எடுக்கும்படியாக எமக்கு அவசர அழைப்புவிடுகிறார். நாம் ஒரு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப

வேண்டுமென்றால், அனைத்து மக்களின் ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பும் அவசியம். இனப் பாகுபாட்டை முற்றாக அழித்தொழிக்க வேண்டும். இலங்கை சிங்களவர்களின் நாடு, பௌத்தர்களின் நாடு, சிங்களப் பௌத்தர்களின் நாடு, தமிழர்களின் நாடு, இந்துக்களின் நாடு என்று சிந்திக்கும் முறையை ஒழித்து, அது இங்கு பிறந்து, வாழ்ந்து, வளரும் அனைவரின் நாடு என்ற கருத்தை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் ஏற்கச் செய்ய வேண்டும். இலங்கை பல இன, பல மத, பல மொழி பேசும் மக்களைக் கொண்ட ஒரு நாடு. அனைத்து இன, மத. மொழி பேசும் மக்களும் இலங்கையின் சுதந்திரத்துக்காக தோழோடு தோழ் நின்று போராடியவர்கள். எனவே இந் நாடு அனைவர்க்கும் உரியதென்பதை மக்கள் உணரச் செய்யவேண்டும். இதற்கு மக்களின் உள்ளங்கள் மாற வேண்டும். ஒருவர் மட்டில் ஒருவர் கொண்டிருக்கவேண்டிய மதிப்பு, மரியாதை, ஒற்றுமைப் பண்பு ஆகியவை வளர்க்கப்பட வேண்டும். கிராமங்கள் தோறும் சிறு சிறு குழுக்களை அமைத்து. கலந்துரையாடல் மூலம் வீண் சந்தேகங்களையும், வெறுப்புகளையும் களைந்து, பரஸ்பர அன்பையும், நல்லுறவையும், நம்பிக்கையும், ஒருவரையொருவர் ஏற்று, மதித்து வாழும் பெருங் குணத்தையும் வளர்ப்பதன் வழியாக ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப நாம் உதவலாம்.

மேலும் நம் நாட்டிலே உலகின் நான்கு முக்கிய மதங்கள் இருக்கின்றன. பௌத்த மதம், இந்து மதம், முஸ்லிம் மதம், கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றும் மக்கள் இருக்கிறார்கள். மக்கள் மத்தியில் அன்பை, ஒற்றுமையை, சமாதானத்தை, நல்லுறவை வளர்க்க வேண்டிய மதங்கள் இன்று வெறுப்பையும், பிரிவினை வாதத்தையும், வன்செயல்களையும் வளர்க்கின்றவையாக மாறியுள்ளன. எனவே இம் மதங்களுக்கிடையே, மதத் தலைவர்களுக்கிடையே, இம் மதங்களைப் பின்பற்றும் மக்களிடையே புரிந்துணர்வை, தொடர்பை, சமாதானத்தை, நல்லுறவை, ஒற்றுமையை ஏற்படுத்தி வளர்ப்பது நம் ஒவ்வொருவரின் பொறுப்பும் கடமையுமாகும். அனைத்து மதங்களுக்கிடையில் சமாதானத்தை, ஒற்றுமையை, ஐக்கியத்தை வளர்ப்பதற்கு சிறந்த வழி அனைத்து மதத்தினரும் ஒன்றிணைந்து பொது வேலைகளில், பொது முயற்சிகளில் ஈடுபடுவதே. கிறிஸ்தவர்களாகிய நாம் பிறமதத்தினரோடு இணைந்து செயல்படக் கூடியவை பல உண்டு.

நம் நாட்டைப் பாதிக்கும் தேசியப் பிரிச்சினைகள், நம் நாட்டு மக்களுக்கு ஏற்படக்கூடிய தீமைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள், அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும் வேளையில் பாதிக்கப்படும் மக்களுக்காகக் குரல் கொடுத்தல், இனப் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை, சமூக அநீதி போன்ற விடயங்களில், அதற்காக உழைக்கும், செயல்படும் பிற மதத்தினரோடும், இயக்கங்க-ளோடும் இணைந்து, உரையாடி, கலந்தாலோசித்து, ஒத்துழைப்பதன் வழியாக மதங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தலாம். பொதுநலனுக்காக, பொதுக் காரியங்களில் பல மதத்தினரும் இணைந்து, கூட்டு முயற்சிகளில ஈடுபடுவதும் இதற்கு உதவியாக அமையும். தம் மத விடயங்கள், கோட்பாடுகள், செயற்பாடுகள் பற்றிக் கலந்து உரையாடுவதும், ஏனைய மதங்களைப்பற்றிய அறிவை வளர்ப்பதும், மதங்களுக்கிடையிலான வீண் சந்தேகங்களையும், தவறான கருத்துக்க-ளையும் அகற்றி, புரிந்துணர்வையும். பரஸ்பர மதிப்பையும், நல்லுறவையும் ஏற்படுத்தும்.

இன்று நம் நாட்டில் அனைத்து மதங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தி, நல்லுறவை வளர்க்க பல இயக்கங்கள் உழைக்கின்றன. அவற்றில், சமயச் சமாதான நடுநிலையம், சமமான நிறுவனம், தேசிய கிறிஸ்தவ சபை, சமூக பொருளாதார முன்னேற்ற நடுநிலையம், சமூக சமய நிலையம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். உதாரணமாக, சமூக பொருளாதார முன்னேற்ற நிலையம் பல சமூகப் பிரச்சனைகளில் இன, மத வேறுபாடின்றி உழைக்கின்றது. இன்று நம் நாட்டிலிருக்கும் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண இவ் இயக்கங்-கள் கூட்டு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. அனைத்து மதத்தினரையும் ஒன்று கூட்டி, மனித உரிமை, வறுமை, சூழல் மாசுபடுதல், கல்வி-யின்மை, வீடின்மை, சமூக ஏற்ற தாழ்வு போன்ற பொதுக் காரியங்களை, பொதுப் பிரச்சனைகளைப் பற்றி கலந்துரையாடல்கள் நடாத்தி, அவைகளைக் களைவதற்கு கூட்டு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் பாராட்டுக்குரியவை.

தேர்ச்சி மட்டம் 8.3. **இலங்கைச் சமூகத்தில் திருச்சபையின் பங்களிப்பை விளக்குவர்**

போர்த்துக்கயரின் வருகையுடன் 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து செயல்படத் தொடங்கிய திருச்சபையானது தன் ஆலய வழிபாடுகளோடும், மறைப்பணிகளோடும் நின்றுவிடவில்லை. நம் நாட்டுக் கல்வி, பண்பாடு, கலை, கலாச்சாரம், நாடகம், எழுத்துக் கலை, கூத்துக் கலை, கைத் தொழில், சமூக நலச் சேவைகள், உடல் நல சுகாரச் சேவைகள், இரக்கப்பணி போன்ற பல்வேறு துறைகளிலும் இலங்கைச் சமூகத்திற்குப் பங்களிப்புச் செய்து, மக்கள் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் அயராது உழைத்து வந்திருக்கிறது. இவற்றை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத் திருச்சபையின் பணிகளை ஆராய்ந்த பொழுது பார்த்திருக்கிறோம். சில துறைகளில் கிறிஸ்தவர்களே முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள். அதிகமான குருக்களும், துறவற கன்னியர்களும் மிகப் பின்தங்கிய நிலையிலிருந்த கல்வித் துறையில் ஈடுபட்டு, பல பாடசாலைகளை அமைத்து, மாணவ மாணவிகளுக்கு சிறந்த கல்வியறிவு ஊட்டி. அவர்களை நல்வழிப் படுத்துவதில் தம் கவனத்தைச் செலுத்தினர். கல்வித் துறையை விட, அவர்களுடைய அன்புப் பணி இன்னும் பல துறைகளில் செயற்பட்டன. முக்கியமாக துறவற கன்னியர்கள் அநாதை மடங்கள், சிறுவர் இல்லங்கள், நன்நடத்தை விடுதிகள், வைத்திய பராமரிப்பு இல்லங்கள், வயோதிப சாலைகள், புலனற்றோர் நிலையங்கள் போன்ற சமூக நலன் பேணும் தாபனங்களை ஆரம்பித்து, மக்களின் பலவித இன்னல்களைப் போக்கி, நற்பணி புரிந்தனர். இவற்றுள் கல்வி, கலை பண்பாடு, சமூகப் பணிகள் போன்ற சில முக்கிய துறைகளை நான் சற்று விரிவாக ஆராயலாம்.

## 8.3.1. கல்வித் துறையில் இலங்கைத் திருச்சபையின் பங்களிப்பு

இலங்கைத் திருச்சபை தன் அதிகூடிய பங்களிப்பை நம் நாட்டின் கல்வித் துறைக்கே அளித்திருக்கின்றது எல்லோரும் அறிந்த ஒரு உண்மை. மூன்றாவது உலக நாடுகளில் இலங்கை ஒரு மிகக் குறைந்த சனத் தொகையைக் கொண்ட ஒரு சிறிய நாடாக இருந்தாலும்,

விகிதாசாரா முறைப்படி அது 92% கல்வி அறிவுடைய மக்களைக் கொண்டு, ஆசியாவிலேயே முதலிடத்தில் இருக்கிறது. கல்வி அறிவில் இலங்கை அத்தகைய அதியுயர்ந்த நிலையில் இருப்பதற்கு, கிறிஸ்தவ மறை பரப்பாளர்களே முக்கிய காரணமென்றால் அது மிகையாகாது. போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் (1505) இலங்கைக்கு வந்த பொழுது நாட்டின் கல்வித்துறை மிகவும் கீழான நிலையில் இருந்தது. ஒரு சில புத்த விகாரைகள் மட்டுமே பாடசாலைகளாக இயங்கின. அங்கு பௌத்த பிக்குகளே கல்வி கற்று வந்தார்கள். பின்னர் செல்வாக்குள்ள ஒரு சில மாணவர்களும் அனுமதிக்கப்பட்டார்கள். அங்கு சிங்கள் எழுத்துக்களும், கௌதம புத்தரின் வாழ்கையிலிருந்து சில கதைகளும் சொல்லிக் கொடுக்கப்பட்டன. ஆனால் பெரும்பாலான மக்கள் கல்வி அறிவு இல்லாமலும், கிடையாமலும் இருந்தார்கள். பெண்கள் அறவே கல்வி அறிவற்றவர்களாக இருந்தார்கள்.

போர்த்துக்கேய மறைபரப்பாளரின் வருகையுடன் அந் நிலைமை மாறியது. போர்த்துக்கேய மறைபரப்பாளரின் பணி ஆலயம், ஆலய வழிபாடுகளுடன் நின்று விடவில்லை. அவர்களின் மறைபரப்புப் பணியில் அவர்களுடைய கல்விச் சேவை, சுகாதார, சமூக, பிறர் நல சேவைகள் பெரும் பங்காற்றின. அதிகமான குருக்களும், துறவற கன்னியர்களும் மிகப் பின்தங்கிய நிலையிலிருந்த கல்வித் துறையில் ஈடுபட்டு, பல பாடசாலைகளை அமைத்து, மாணவ மாணவிகளுக்கு சிறந்த கல்வியறிவு ஊட்டி. அவர்களை நல்வழிப் படுத்துவதில் தம் கவனத்தைச் செலுத்தினர். மறைப் பங்குகளில் பணிபுரிந்த குருக்கள் புதுக் கிறிஸ்தவர்களுக்கு, குறிப்பாக சிறுவர்களுக்கு, மறைக்கல்வி அளிப்பதை தம் முக்கிய கடமைகளுள் ஒன்றாகக் கருதினர். கல்விப் பணியின் ஊடாகவே மறைப்பணி மேற்கொள்ளப்பட்டது. எனவேதான் கிறிஸ்தவத்தைத் தழுவிய கோட்டே அரசன் புவனேக பாகுவிடம் தம் மத தாபனங்களை, சிறப்பாக பாடசாலைகளையும், அனாதை இல்லங்களையும் பராமரித்து நடாத்த ஆலயக் காணிகளின் வருவாயைக் கேட்டனர். ஒவ்வொரு பங்கிலும் ஆரம்ப பாடசாலைகள் அமைக்கப்பட்டு, காலையிலும் மாலையிலும் ஆண், பெண் பிள்ளைகளுக்கு சிங்களத்தில் அல்லது தமிழில் மறைக் கல்வி அளிக்கப்பட்டது. பாடப் புத்தகங்கள் இல்லாததால், அதிகமாக மனப் பாடம் செய்தும், வினா-விடை முறையி-

லும் போதிக்கப்பட்டது. பொதுவாக வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் செபங்களும், பாடல்களும் படிப்பிக்கப்பட்டன. பின்னர் ஆரம்ப பாடசாலைகள் தொடக்கப்பட்டு, வாசினை, எழுதுதல், எண்ணுதல், மறைக்கல்வி போன்ற பாடங்கள் சுதேச மொழியில் கற்பிக்கப்பட்டன. ஆரம்ப பாடசாலைகளைவிட, இரண்டு கொழும்பிலும், இரண்டு யாழ்ப்பாணத்திலுமாக, நான்கு கல்லூரிகளும் நிறுவப்பட்டன. இங்கு உயர்தர மறைக் கல்வி, நற்பண்புகள், வாசினை, எழுதுதல், போர்த்துக்கேயம், இலத்தீன், கணிதம், பாட்டு, சங்கீதம் போன்றவை கற்பிக்கப்பட்டன. பிரான்சிஸ்கன், இயேசு சபைகளைச் சேர்ந்த குருக்கள் கல்வித் துறையில் மிக ஆர்வத்துடன் உழைத்தனர். சில கல்லூரிகளில் மாணவர் தங்கியிருந்து கற்பதற்கு விடுதி வசதிகளும் இருந்தன. இப் பாடசாலைகளிலும். கல்லூரிகளிலும் பாடங்கள் இலவசமாகவே கற்பிக்கப்பட்டன. பொதுவாக கிறிஸ்தவ மாணவர்களும், சில இடங்களில் பிற சமயத்தவர்களும் பயின்றனர். பாடசாலைகள் எல்லாம் அரச ஆதரவுடனேயே நடத்தப்பட்டன. சிங்கள, தமிழ் இலக்கணப் புத்தகங்கள், மற்றும் நாவல்கள், நாடகங்கள், மத நூல்கள் சுதேச மொழியில் எழுதப்பட்டன. இப் பாடசாலைகளில் மாணவருக்கு படிப்பிப்பதற்கு வேண்டிய ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க பிரான்சிஸ்கன் சபையினர் ஓர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையையும் ஆரம்பித்தனர். போர்த்துக்கேயரின் காலத்தின் முடிவில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் நாட்டின் கடலோரப் பகுதிகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஒல்லாந்தர் இலங்கையை 1657 இல் கைப்பற்றியதை அடுத்து, போர்த்துக்கேயர் ஆரம்பித்து இவ்வளவு காலமும் நடத்தி வந்த ஆலயங்களும், பாடசாலைகளும், ஏனைய உடைமைகளும் ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனிக்குக் கைமாறியது. ஒல்லாந்தரின் ஆட்சி ஏறக்குறைய 100 ஆண்டுகள் நீடித்தன. அக்காலத்தில் கல்வின் மதத்தைப் பரப்பும் பணி வண பல்தேயுஸ் பாதிரியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் கத்தோலிக்கரை மனந்திருப்பி, கல்வினிஸ்ற் பதித மதத்தில் சேர்க்கும் பணியை மிகுந்த ஆர்வத்துடன் ஆரம்பித்தார். போர்த்துக்கேயரால் முன்பு கட்டப்பட்டிருந்த தேவாலயங்களும், அவற்றிற்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த பாடசாலைகளும், அவற்றோடு தொடர்புள்ள அனைத்துத் தாபனங்களும், சொத்துக்களும், வருவாய்களும் இப்பொழுது ஒல்லாந்த சபைக்குச் சொந்தமாக்கப்

பட்டிருந்தன. எனவே பல்தேயுஸ் பாதிரியார் தம் மறைபரப்புப் பணியை ஆரம்பிப்பதற்குத் தேவையான சகல தாபன வசதிகளும், உள்கட்டமைப்புகளும் ஆயத்த நிலையிலிருந்தன. அதுமட்டுமல்ல, கிழக்கிந்திய கம்பெனியின் முழு ஆதரவும் அவருக்கிருந்தது. எனவே மிகுந்த ஆர்வத்துடன் தன் மறைபரப்புப்பணியை ஆரம்பித்த அவர், தம் மறைபோதக பணியில் பொதுவாக போர்த்துக்கேயரின் பணிமுறைகளையே பின்பற்றினார். கல்வியறிவை அளிப்பதன் வழியாக மறையைப் பரப்புவதே அவருடைய நோக்கம். அவருடைய பொறுப்பிலே 24 கிறிஸதவ சமூகங்கள் இருந்தன. அங்கிருந்த பாடசாலைகளும், அவற்றிற்கு அருகிலிருந்த தேவாலயங்களுமே அவர் மறைப்பணியின் மையமாக இருந்தன. ஆண், பெண் மாணவர்கள் அனைவரும், பாடசாலைகளுக்கு சமூகமளிக்கக் கட்டளையிடப்பட்டார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கிரமமாகப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டார்கள். வரும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டார்கள். பெற்றோர்களும், வளர்ந்தவர்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயத்துக்கு வரவழைக்கப்பட்டார்கள். ஆரம்ப பாடசாலைகளில் ஆசிரியர்களால் முக்கியமாக மறைக் கல்வியே அளிக்கப்பட்டது. ஆசிரியர்கள் என்ன படிப்பிக்க வேண்டுமென்று பாதிரியார் சொல்லிக் கொடுத்தார். ஆலயங்களில் பல்தேயுஸ் போதகரினால் வழிபாடுகளும், மறைப் போதகமும் நடத்தப்பட்டன, அவர் எழுதிக் கொடுத்த பிரசங்கங்களை ஆலயங்களில் பாடசாலை ஆசிரியர்கள் தமிழில் வாசித்தனர்.

முதலில் பல்தேயுஸ் பாதிரியார் மக்களுக்குத் தெரிந்த மொழியில் போதிப்பதற்கு, தமிழ் மொழியையும், மக்கள் பரவலாகப் பேசிய போர்த்துக்கேய மொழியையும் கற்றுக்கொண்டார். "நற்செய்தியைப் போதிப்பதற்குச் சிறந்த பயனுள்ள வழி மக்களுக்கு எம் மொழியைக் கற்பிப்பதைவிட, நாம் அவர்களின் மொழியைக் கற்று அறிவதே" என்பதுதான் அவரது கொள்கை. எல்லா மக்களும் பேசும் மொழியை ஒருவர் கற்பது இலகுவென்பது அவரது கருத்து. ஒல்லாந்தரே முதல் முதல் அச்சுப் பதிவு நுட்பத்தை, அச்சடிக்கும் இயந்திரத்தை இலங்கையில் அறிமுகம் செய்துவைத்தவர்கள். தமிழ், சிங்கள எழுத்துக்களை வார்த்து, தமிழிலும், சிங்களத்திலும், போர்த்துக்கேயத்திலும் பல பிரயோசனமுள்ள நூல்களை எழுதி வெளியிட்டனர்.

பல்தேயுஸ் பாதிரியாரும் மறைபரப்புதலுக்கு உதவியான பல நூல்களை எழுதி, வெளியிட்டு, அவற்றைப் பாடசாலை ஆசிரியர்களுக்குக் கொடுத்து உதவிசெய்தார். இவற்றில் முக்கியமானது "எம் மதத்தின் முக்கிய கட்டளைகள்" என்ற மறைக் கல்வி நூலாகும். இன்னும் பல நூல்களையும் போர்த்துக்கேயத்தில் எழுதி, தமிழில் மொழி பெயர்ப்பித்தார். ஆனால் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மறைக் கல்வி அளிப்பதற்கு கேள்வி-பதில் முறையையே கையாண்டனர்.

மறைக்கல்வி கற்பிப்பதற்கு பாடசாலை ஆசிரியர்களின் உதவி மிக அவசியமாகவிருந்தது. எனவே மறைக் கல்வி கற்பிக்கக் கூடிய சுதேச ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களை மறையாசிரி-யர்களாகப் (Catechists) பயிற்றுவித்தார். அவர்களைப் பயிற்றுவிக்க-வென ஒரு குருமடமும் யாழ்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. காலப்போக்கில் அவர்களிடமே மறைக்கல்வி அளிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பல்தேயுஸ் பாதிரியார் பாடசாலைகளின் முன்னேற்றத்திற்காக ஒல்லாந்த கிழக்கிந்திய கொம்பனியிடம் பல சிபாரிசுகளைச் செய்தார். உதாரணமாக, எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வி, எல்லோருக்கும் கட்டாய ஞாயிறு வழிபாடு, பாழடைந்திருந்த பாடசாலைகள், ஆலயங்களைத் திருத்துதல், ஒவ்வொரு பங்கிலுமுள்ள ஒரு பாடசாலைக்கு அரச செலவில் ஒரு மறையாசிரியர் நியமிக்கப்படல், மாணவர்களை ஊக்குவிக்க பரிசில் வழங்குதல் போன்றவற்றை நாம் குறிப்பிடலாம். ஒல்லாந்தரின் ஆட்சியின் போது அனைத்துப் பாடசாலைகளும், கல்வித் துறையும், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட "பாடசாலை ஆசிரியர்களின் ஆணைக்குழு"வின் கட்டுப்பாட்டில் இருந்தன. எனவே போர்த்துக்கேய காலத்தில் இருந்ததை விட ஒல்லாந்தர் காலத்தில் பாடசாலைகளின் நிர்வாகம், ஒழுங்கமைப்பு கல்வி அளித்தல் போன்றவை கூடிய முன்னேற்றம் அடைந்தன. 1760ம் ஆண்டளவில் இலங்கையில் 130 பாடசாலைகளும், 65,000 மாணவர்களும் இருந்தனர்.

1796 இல் இலங்கை ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பனியின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. ஆரம்பத்தில் அவர்கள் கல்வியைப்பற்றி எவ்வித அக்கரையும் எடுக்கவில்லை. பணம் தேடி வந்தவர்கள் தம் பணத்தை அப்படிச் செலவுசெய்ய விரும்பவில்லை. எனவே

ஒல்லாந்தரின் கல்வித் துறை கவனிப்பாரற்று இருந்தது. பாடசாலைகள் இவ்வாறு மூடப்பட்டதை இங்கிலாந்திலிருந்த சகல புரொட்டஸ்தாந்து அமைப்புகளும் கண்டித்தன. ஏனெனில் பாடசாலைகள் பிள்ளைகளின் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாக்க, மற்றவர்களை தம் மதத்திற்கு மனந்திருப்ப இன்றியமையாதவையாக இருந்தன. எனவே அரசாங்கம் கிறிஸ்தவர்களை பௌத்த, இந்து. இஸ்லாம் அல்லது கத்தோலிக்க மதத்துக்குச் திரும்பிச் செல்ல உதவுகிறதெனக் குற்றம் சாட்டினர். எனவே 1798ம் ஆண்டில் ஆங்கிலேய அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்தியது. அவை அரசாங்க பாடசாலைகளென்று அழைக்கப்பட்டாலும், உண்மையில் அவை அங்கிளிக்கன் பாதிரிமாரால், அங்கிளிக்கன் மதத்தைப் படிப்பிக்க அமைக்கப்பட்ட அங்கிளிக்கன் பாடசாலைகளாகவே இருந்தன. அங்கிளிக்கன் பாதிரிமார்களிடமே அவை ஒப்படைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, இங்கிலாந்தில் ஏற்பட்ட மத மறுமலர்ச்சியின் விளைவாக, பப்ரிஸ்ற், வெஸ்லியன், அமெரிக்கன் மிஷன், சேர்ச் மிஷன் என்ற பல புரொட்டஸ்தாந்து பிரிவினைக் குழுக்கள் இலங்கைக்கு வந்து, பல இடங்களிலும் பல பாடசாலைகளைத் திறந்து, தம் மறை பரப்புப் பணியில் ஈடுபட்டன. சகல அரசாங்க பாடசாலைகளையும் நடத்த நிதிபோதாததால், கவனர் பிறவுண்றிக் சில பாடசாலைகளை அம் மிஷனறிக் குழுக்களிடம் ஒப்படைத்து, அவர்களுக்கு வேண்டிய உதவியும், ஊக்கமும் அளித்தார். அரசாங்க பாடசாலைகளில் தமிழ், சிங்கள மொழிகளிலேயே பாடங்கள் படிப்பிக்கப்பட்டன.

ஆங்கிலம் அரச கரும மொழியாக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆங்கிலம் கற்கும் அவசியம் ஏற்பட்டது. எனவே புரொட்டஸ்தாந்து குழுக்கள் இலங்கையின் பல பாகங்களிலும் ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்தனர். தங்களுடைய சபைகளிடமிருந்தும், இலங்கை ஆங்கிலேய அரசாங்கத்தினிடமிருந்தும் நிதியுதவி பெற்று, தங்கள் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு நல்ல பயிற்சியளித்தனர். எனவே மாணவர்கள் அப் பாடசாலைளையே தேடிச் சென்றனர். சிறந்த கல்விமான்களாகிய புரொட்டஸ்தாந்து மிஷனறிமார்கள், தம் பணிக்கு தம்மை முற்று முழுவதும் அர்ப்பணித்து, மாணவருக்கு சிறந்த சேவையாற்றினர். இலங்கைக்கு வந்த அமெரிக்கன் மிஷனறிச் சபையைச் சேர்ந்த மறைபரப்பாளர்கள் இலங்கையின் வட பகுதிக்குச் சென்று, அங்கு

மாணவருக்கு கல்வி அறிவூட்டுவதில் அதிக கவனம் செலுத்தினர். மாணவர் தங்கியிருந்து பயிலுவதற்கு வசதியாக, இலவச விடுதி வசதிகளுடன், பல பாடசாலைகளை, வட்டுக்கோட்டை, உடுவில், உடுப்பிட்டி, கரவட்டி. பருத்தித்துறை, சாவகச்சசேரி, யாழ்ப்பாணம் போன்ற வெவ்வேறு இடங்களில் அமைத்தனர். தொடர்ந்து வட்டுக்கோட்டையில் ஒரு மத்திய உயர் கல்விக் கல்லூரியொன்றையும், குரு மடத்தையும், வேறு மூன்று இடங்களில் உயர் கல்விப் பாடசாலைகளையும் அமைத்தனர். இவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதில் பெரும் பணியாற்றினர்.

அக்காலத்தில் இலங்கையில் மூன்று தரமான பாடசாலைகள் இருந்தன. முதலில் அரசாங்க பாடசாலைகள். இவைகள் அரசாங்கத்-தால், ஆனால் உண்மையில் அங்கிளிக்கன் சபையினரால், நடத்தப்பட்ட சிங்கள, தமிழ், ஆங்கில பாடசாலைகள். அவை மிகத் தரம் குறைந்தவையாக இருந்தன. அடுத்து மிஷன் பாடசாலைகள். இவை புரட்டஸ்தாந்து மிஷனறிச் சபைகளால் நடத்தப்பட்டன. மூன்றாவது தனியார் பாடசாலைகள். அவை சில தனிப்பட்டவர்களால் அல்லது ஒரு மதச் சபையினால் நடத்தப்பட்டவை. இதைவிட பௌத்த விகாரைக-ளினால் நடத்தப்பட்ட பன்சில்கள் அல்லது கோவிற் பாடசாலைகளும் இருந்தன. அரசாங்க பாடசாலைகளின் தரத்துக்கும், புரட்டஸ்தாந்து மிஷன் பாடசாலைகளின் தரத்துக்கும் இடையே பெரிய இடைவெளி-யிருந்தது. எனவே அரசாங்க பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்குவ-தெனத் தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்க நிர்வாக அமைப்பை சீர்திருத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட கோல்புறூக் ஆணைக்குழு, நாட்டை நன்றாக நிர்வகிப்பதற்கு, ஆட்சியாளருக்கும் மக்களுக்குமிடையே உள்ள பெரிய இடைவெளி குறைக்கப்பட வேண்டுமெனக் கருதியது. மறைபரப்பு நோக்கங்கள் எதுவுமின்றி, பிற்காலத்தில் அரச நிர்வாக இயந்திரத்தைப் பொறுப்பேற்று நடத்த மாணவர்களை ஆயத்தப்படுத்தக்கூடிய முறையில், கல்வித்துறை மாற்றி அமைக்கப்படவேண்டுமெனத் தீர்மானித்தது. ஆங்கிலக் கல்வியை ஊக்குவித்து, கல்வித் துறையில் வேண்டிய சீர்திருத்தங்களைக் கொணர, அரச பாடசாலைகளை பொறுப்பெடுத்து நடத்துவதற்கும், ஆங்கிலம் நன்கு தெரிந்த தகுதியான ஆசிரியர்களை

பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கும், அதிகாரம்கொண்ட ஒரு "பாடசாலை ஆணைக் குழு" அமைக்கும்படி சிபார்சு செய்தது. அதற்கமைய 1834ம் ஆண்டில் கொழும்பில் ஒரு பாடசாலை ஆணைக் குழுவும், மாகாணங்களில் பாடசாலைச் சபைகளும் ஆரம்பிக்கப்பட்டன. அந்த ஆணைக் குழுவில் அங்கிளிக்கன் பாதிரிமாரும், அரசாங்க அதிகாரிகளும் மாத்திரமே அங்கத்துவம் வகித்தனர். பௌத்த, இந்து, கத்தோலிக்க, முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இடமிருக்கவில்லை. அவ் ஆணைக் குழுவினால் பல ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் ஒன்றே தற்போதைய றோயல் கல்லூரியென்பது குறிப்பிடத்தக்கது. அதன் விளைவாக ஆங்கிலம் கற்பிக்கும் தனியார் மிஷன் பாடசாலைகள் உள்ள கிராமங்களிலிருந்த அரசாங்க பாடசாலைகள் மூடப்பட்டன. ஐரோப்பிய அமெரிக்க மறைபரப்புக் குழுக்கள் இன்னும் பல ஆங்கில பாடசாலைகளை ஆரம்பித்தனர். பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கத்தோலிக்கர்களுக்கு தேவையான தகுந்த ஆங்கில ஆசிரியர்களும், நிதியுதவியும் இல்லாததால், அவர்களால் ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியவில்லை. ஆகவே அவர்களின் பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதற்காக புரொட்டஸ்தாந்து மிஷன் பாடசாலைகளுக்கே போகவேண்டியிருந்தது. அங்கு மாணவருக்கு சிறந்த கல்வியளிக்கப்பட்ட அதே வேளையில், மறை பரப்பு, மதமாற்று வேலைகளும் பகிரங்கமாக நடைபெற்றன. அந்த பொதுக் கலப்பு மதப் பாடசாலைகளில், பல கிறிஸ்தவ மதப் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்கள் அனைவருக்கும் பொதுவாகக் கிறிஸ்தவம் போதிக்கப்பட்டது. அக்காலத்தில், ஆங்கில பாடசாலைகள், ஆங்கில - சுதேச மொழிப் பாடசாலைகள், சுதேச மொழிப் பாடசாலைகளென மூன்று வகையான பாடசாலைகள் இருந்தன. ஆங்கில பாடசாலைகளில் சகல பாடங்களும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்பட்டது. சுதேச மொழிப் பாடசாலைகளில் சகல பாடங்களும் சுதேச மொழிகளான சிங்களம் அல்லது தமிழில் கற்பிக்கப்பட்டது. ஆங்கில-சுதேச பாடசாலைகளில் ஆங்கிலம் ஒரு தனிப்பாடமாகக் கற்பிக்கப்பட, ஏனைய பாடங்கள் சுதேச மொழிகளில் கற்பிக்கப்பட்டன.

பாடசாலை ஆணைக் குழுவின் அமைப்பும், அதன் செயற்பாடுகளும், அங்கிளிக்கன் தவிர்ந்த, ஏனைய புரட்டஸ்தாந்து மிஷனறிக் குழுக்களுக்கும், ஏனைய மதத்தினருக்கும் திருப்தி

அளிக்கவில்லை. எனவே அக் குழு 1841ம் ஆண்டு கவனர் ஸ்டுவார்ட் மக்கென்சியால் அகற்றப்பட்டு, அனைத்துக் கிறிஸ்தவ பிரிவினர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், பெரும்பாலும் இல்லறத்தவர்களைக் கொண்ட "மத்திய பாடசாலை ஆணைக் குழு" ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதில் ஒரு கத்தோலிக்க குருவுக்கு அல்லது பொதுநிலையினருக்கு இடம் அளிக்கப்பட்டாலும், பௌத்த, இந்து, முஸ்லிம்களின் பிரதிநிதிகளுக்கு இடமிருக்கவில்லை. அனைத்து மதத்தையும் சார்ந்த இலங்கைப் பிரசைகள் எல்லோருக்கும் ஏற்ற கல்வி அளிப்பதே இவ் ஆணைக் குழுவின் நோக்கமாகும். பிற மதத்தைச் சார்ந்த மாணவர்களைப் புறக்கணிக்கும் அல்லது அவமதிக்கும் புத்தகங்களையோ, போதனைகளையோ, கொள்கைகளையோ தடைசெய்வதில் கவனம் செலுத்தினர். மறைக் கல்வி வகுப்புகளுக்குச் செல்லாமலிருக்க பிற மத மாணவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. காலப்போக்கில், அரசாங்க பாடசாலைகளின் நிலை வீழ்ச்சியடைந்தது. ஆனால் மிஷன் பாடசாலைகள் திறமையுடன் செயற்பட்டு, சிறந்த கல்வி நிலையங்களாக மாறின. எனவே அரசாங்க பாடசாலைகள் மத்திய பாடசாலை ஆணைக் குழுவினால் மூடப்பட்டு, சில பாடசாலைகளை அரசாங்கத்தின் பெயரால் நடத்தும்படி மிஷனறிக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. கத்தோலிக்க திருச்சபைக்கும் ஒரு சில பாடசாலைகளை நடத்த உதவி வழங்கப்பட்டது. எனினும் கிறிஸ்தவர்களல்லாத மதங்கள் அவ் ஆணைக் குழுவில் அங்கத்துவம் வகிக்காததினால், கல்வித் துறையில் கிறிஸ்தவ மிஷன்களே ஆதிக்கம் செலுத்தின.

கல்வித் துறையில் மிஷன் பாடசாலைகளுக்கு பாரபட்சம் காட்டப்பட்டாலும், மிஷன் பாடசாலைகளால் இலங்கைக் கல்வித்துறைக்குக் கிட்டிய நன்மைகளை நாம் மறுக்க முடியாது. எம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் அவைகள் பெரும் பங்களிப்புச் செய்திருக்கின்றன. தம் மாணவர்களுக்கு கல்வி வழங்க அரசாங்கம் இயலாதிருந்த நிலையில், அவர்கள் முன் வந்து ஆற்றிய சேவை பாராட்டுக்குரியது. இலங்கையின் பல பாகங்களிலும் பல பாடசாலைகளை அமைத்து, ஐரோப்பாவிலிருந்து பல சிறந்த ஆசிரியர்களை வரவழைத்து, மாணவ மாணவிகளுக்கு கல்வியறிவு ஊட்டினர். இவற்றுள் அமெரிக்க மிஷன் சபை யாழ்ப்பாணத்தில் ஆற்றிய

பணி குறிப்பிடத்தக்கது. ஏனைய மாகாணங்களில் பார்க்க அதிகமான பாடசாலைகளை அங்கு அமைத்து, ஐரோப்பாவிலிருந்து சிறந்த கல்விமான்களை வரவழைத்து, அவர்கள் யாழ்ப்பாண மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவியிருக்கின்றனர். அவர்கள் வழியாக யாழ்ப்பாணத்தில் சிறந்த கல்வியறிவுடைய பரம்பரை ஒன்று உருவாகியிருக்கிறதை நாம் காண்கிறோம். அதன் விளைவாக, இன்றும் யாழ்ப்பாண மக்கள் தாம் பெற்ற கல்விச் செல்வத்தை பாதுகாத்து, தம் பிள்ளைகளுக்கும் அளித்து வருகிறார்கள்.

ஆங்கிலம் உத்தியோக மொழியாக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசோடு தொடர்பு கொள்ள, அரச உத்தியோகங்கள் பெற இலங்கை மக்கள் ஆங்கிலம் கற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் அங்கிளிக்கன் சபையினரும், அவர்களைத் தொடர்ந்து, பிரித்தானிய பிரசைகளாகிய ஏனைய புரொட்டஸ்தாந்து சபையினர்களுமே ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பித்து நடத்தினர். அவர்கள் ஆங்கிலத்தை நன்கு அறிந்திருந்தமையால், ஆங்கில பாடசாலைகளை ஆரம்பித்து நடத்துவது அவர்களுக்கு இலகுவாயிருந்தது. மேலும் அவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து நிதியுதவிகளும் கிடைத்தன. பௌத்த மதத்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கத்தோலிக்கர் தாங்களாக ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பிக்க நிதி வசதிகளும், ஆங்கில ஆசிரியர் வசதிகளும் இல்லாததால், தம் பிள்ளைகளை புரொட்டஸ்-தாந்தினரின் ஆங்கிலப் பாடசாலைகளுக்கே அனுப்ப வேண்டியிருந்தது. எந்தவொரு மதத்தினருக்கும் முரணான நூல்களைப் பாடசாலைகளில் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்பது மத்திய பாடசாலை ஆணைக் குழுவின் சட்ட ஒழுங்காக இருந்தாலும், நடைமுறையில் அது கடைப்பிடிக்கப் படவில்லை. ஒவ்வொரு நாளும் காலையில் புரட்டஸ்தாந்து வேதாகமத்திலிருந்து பகுதிகள் வாசிக்கப்பட்டு, மறை உரைகள் வழங்கப்பட்ட பின்னரே, பாடசாலைகள் ஆரம்பமாகின. மாணவர்கள் ஆங்கிலம் படிப்பதில் அக்கரையெடுத்ததினால், சுதேச மொழிப் பாடசாலைகள் கவனிப்பாரற்று, அரசாங்கத்தால் கைவிடப்பட்டன. ஆலயங்களிலும், கிராமப் புறங்களிலிருந்த கத்தோலிக்க, புரொட்டஸ்தாந்த மிஷன் பாடசாலைகளிலுமே, தமிழ், சிங்கள மொழிகளில் கல்வி அளிக்கப்பட்டது. பல சுதேச மொழிப் பாடசாலைகள்

மூடப்பட்டன. எனவே சுதேச மொழிகளான தமிழும், சிங்களமும் அந்நிய மொழிகளாக்கப்பட்டு, படிப்படியாகக் கைவிடப்பட்டன.

இத்தகைய சூழ்நிலையில்தான் 1856ம் ஆண்டு வண. கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகளார் இலங்கைக்கு வந்து, யாழ்ப்பா-ணத்தில் பணிபுரிய அனுப்பப்பட்டார். அவர் ஒரு பிறெஞ்சுக்காரராக இருந்தாலும், இலங்கைக்கு வருமுன் பத்து ஆண்டுகளாக இந்தியாவில், கோயம்புத்தூரில் குருவாகப் பணிபுரிந்தார். அக்காலத்தில் தமிழையும், ஆங்கிலத்தையும் நன்கு கற்றிருந்தார். இலங்கையில் கத்தோலிக்க மதத்தின் எதிர்காலம் கல்வியில் தங்கியிருப்பதை உணர்ந்த பொன்ஜீன் அடிகளார், கத்தோலிக்க கல்வியின் பரிதாப நிலைமையைக் கண்டு மிகவும் கவலைப்பட்டார். இலங்கையிலிருந்த கல்வி முறை அவருக்குச் சற்றேனும் திருப்பியளிக்கவில்லை. நான்கு ஆண்டுகளாக இலங்கைக் கல்வி முறையை நன்றாக ஆராய்ந்த பின், 1860ம் ஆண்டில் "இலங்கைக் கத்தோலிக்க கல்வியைப்பற்றிய ஒரு சில வார்த்தைகள்" என்ற சிறு நூலை வெளியிட்டார். அதில் மத்திய பாடசாலை ஆணைக் குழுவின் பாரபட்சமான போக்கை வெளிப்படுத்தி, கல்விபற்றிய கத்தோலிக்கரின் நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக் கூறி, தங்கள் பிள்ளைகளின் கல்வி மட்டில் கத்தோலிக்க பெற்றோரின் பொறுப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டார். ஒவ்வொருவருக்கும் உள்ள மதச் சுதந்திரத்தை எடுத்துணர்த்தி, பெற்றோரே தம் விருப்பத்தின்படி தம் பிள்ளைகளுக்கு ஏற்ற பாடசாலைகளைத் தெரிவுசெய்யும் உரிமையுள்ளவர்களென வாதாடினார். பல மத மக்களைக் கொண்டுள்ள இலங்கைக்கு அரச உதவியுடன் (நன்கொடை) இயங்கும் மதப் பாடசாலைகளே சிறந்ததென்பதை மிகவும் வலியுறுத்தினார். அதுதான் இலங்கையில் ஒரு கத்தோலிக்க குருவால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட முதல் நூலென்பது குறிப்பிடத் தக்கது. தொடர்ந்து, பொதுக் கலவன் பாடசாலைகளில், அனைத்து கிறிஸ்தவ பிரிவினருக்கும் பொதுவான ஒரே கிறிஸ்தவத்தைக் கற்பிக்கும் அரச கல்வி முறையை எதிர்த்து பல கட்டுரைகளை எழுதி, அக்காலத்தில் பிரபல்யமாயிருந்த 'Ex-aminer" என்ற பத்திரிகையில் வெளியிட்டார். அவர் அரசாங்கத்தின் கல்வி முறையை கடுமையாக விமர்சனம் செய்தாலும், அவ் விமர்சனங்கள் ஆக்க பூர்வமானவையாகவே இருந்தன. எனவே அரசும் அவருக்கு மதிப்பளித்து, அவ் விமர்சனங்களுக்குக் கவனம்

செலுத்தியது. அரசு தன் கல்வி முறையில் ஒரு மாற்றம் கொணருமட்டும், அவர் தொடர்ந்து அரசாங்கத்தின் பாரபட்சமான போக்கை விமர்சித்து பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தார். 1865ம் ஆண்டு, சட்ட சபை இலங்கைக் கல்வி முறையைப்பற்றி விசாரணை செய்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவென ஒரு குழுவை நியமித்தது. பொன்ஜீன் அடிகளாரிடமிருந்தும் ஆலோசனைகள் கேட்கப்பட்டன. அவ்வேளை அவரிடம் கேட்கப்பட்ட வினாக்களுக்கு அவர் முழுமையான பதில் அளித்து, ஒவ்வொரு மதக் குழுவினாலும் அரசாங்க உதவியுடன் (நன்கொடை) நடத்தப்படும் மதப் பாடசாலைகளைக் கொண்ட கல்வி முறையை வலியுறுத்தினார். கத்தோலிக்கர் மட்டுமல்ல, பௌத்த மதத்தினர், இந்துக்கள், முஸ்லிம்களும் நீதியுடன், சமமாக நடத்தப்பட வேண்டுமென்று வாதாடினார். இவையெல்லாம் பின்பு, “கத்தோலிக்க திருச்சபையும் சீர்திருத்தமும்” என்ற பெயரில், புத்தகமாக வெளியிடப்பட்டன.

விசாரணைக் குழு, பொன்ஜீன் அடிகளாரின் ஆலோசனைகளை ஏற்று, தனது அறிக்கையில் இரு முக்கிய கோட்பாடுகளை சிபார்சு செய்தது. முதலாவது, இலங்கையிலுள்ள ஒவ்வொரு மதக் குழுவும், தனது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக, தனது பாடசாலைகளை வைத்திருக்க விரும்பினால், அதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டும். இரண்டாவது, அரசாங்கத்துக்கு திருப்தி அளிக்கக்கூடிய முறையில் கல்வி வழங்கும் ஒவ்வொரு தனியார் பாடசாலைகளுக்கும், அரச நிதியுதவி (நன்கொடை) வழங்கப்படல் வேண்டும். இச் சிபார்சுகளை ஏற்றுக்கொண்ட அரசாங்கம், 1869ம் ஆண்டில் மத்திய பாடசாலை ஆணைக் குழுவை ரத்து செய்து, அதற்குப் பதிலாக “பொதுக் கல்வித் திணைக்களம்” ஒன்றை ஏற்படுத்தி, அதன் கீழ் தன் புதுக் கல்வித் திட்டத்தை அமுல் செய்தது. அத் திணைக்களம் அரச நன்கொடைகளுடன் சுதேச மதப் பாடசாலைகளை ஆரம்பித்தல், வர்த்தக, விஞ்ஞான பாடங்களை பாடசாலைப் பாடத் திட்டத்தில் சேர்த்தல், சிறந்த மாணவர்களை, புலமை பரிசுகள் வழங்கி, கல்கத்தா, இங்கிலாந்து சர்வகலாசாலைகளுக்கு அனுப்புதல், சுதேச பாட நூல்களை அச்சடித்தல், ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை அமைத்தல் போன்றவற்றைச் சிபார்சுசெய்தது. இதன் விளைவாக, அரச உதவியுடனான மதப் பாடசாலைகளை அமைக்கும் உரிமை கத்தோ-

லிக்கருக்கு மட்டுமல்ல, இலங்கையிலுள்ள ஏனைய கிறிஸ்தவரல்லாத, பௌத்த, இந்து., முஸ்லிம் மதத்தினருக்கும் அளிக்கப்பட்டது. இந்த மதப் பாடசாலை கல்வி முறைப்படி, அரசாங்கம் கல்வித் துறையை தன் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொள்வதில்லை. மாறாக, அது மதத் தலைவர்களுக்கு, தம் மதப் பாடசாலைகளை அமைத்து, தம் மதக் கோட்பாடுகளுக்கமைய அவற்றைக் கொண்டு நடத்த, நிதியுதவி (நன்கொடை) வழங்கி, துணை செய்கிறது. இம் முறையின்படி காணியையும், கட்டிடத்தையும் மதத் தாபனங்கள் வழங்க, அரசு ஆசிரியர்களின் சம்பளம் போன்ற நிதியுதவியை அளிக்கின்றது. மதத் தாபனங்கள் உலக சம்பந்தமான கல்வி மட்டுமல்ல, தம் மத அறிவையும் அளிக்க ஒழுங்குகளைச் செய்யலாம். அரச அதிகாரிகள் மதப் பாடசாலைகளை பரிசோதனை இட்டு, மேற்பார்வை செய்வர். இம் முறையிலே அரசும், மதத் தாபனமும், கல்வித் துறையில் பங்காளர்களாகச் செயலாற்றுகிறார்கள். இதுவே பல மதங்களைக் கொண்ட நம் நாட்டுக்கு உகந்த கல்வி முறையாகும். இவ்வாறு வண. பொன்ஜீன் அடிகளாரின் அயராத கடின உழைப்பினால் இலங்கையில் அரச உதவி (நன்கொடை) பெறும் மதப் பாடசாலை முறை (Denominational School System) உருவாகியது. எனவேதான் பொன்ஜீன் அடிகளார் அனைவராலும் "அரச உதவிபெறும் மதப் பாடசாலைகளின் தந்தை"யென அழைக்கப்படுகிறார்.

கோல்புறூக் ஆணைக் குழுவின் சிபார்சின் பேரில், ஆங்கிலம் அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், ஆங்கிலப் பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் படையெடுத்தனர். இதனால் சுதேச மொழிப் பாடசாலைகள் கவனிப்பாரற்று, தரம் குறைந்தன. பல சுதேச மொழிப் பாடசாலைகள் மூடப்பட்டன. பொன்ஜீன் அடிகளார், மாணவர் சுதேச மொழி கற்பதன் அவசியத்தை உணர்ந்து, சுதேச பாடசாலைகளின் தரத்தை உயர்த்த பெரும் பாடுபட்டார். இலங்கையரை தம் சொந்த நாட்டிலேயே அந்நியராக்கும் ஆங்கிலக் கல்வி முறையைச் சாடினார். அதை அந்நிய நாட்டுக் கலாச்சாரத்தை இலங்கை மக்கள்மேல் திணிக்கும் முயற்சியாகக் கருதினார். இலங்கையில் நாட்டுப் பற்றுள்ள குடிமக்களை உருவாக்க, தம் தாய் மொழியில் அவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார். அதுமட்டுமல்ல, மாணவர்களின் அதிபுத்தி சாதுரியத்தை, நுண்ணறிவை வெளிக்

கொணர்ந்து பலன் பெற, அவர்கள் தம் சொந்த மொழியில் சிந்திக்கவும், பேசவும் வேண்டுமென வலியுறுத்தினார். மேலும் தன் சொந்த மொழியை விடுத்து, அந்நிய மொழியை அரைகுறையாகக் கற்பது, ஒருவரின் சிந்திக்கும் ஆற்றலுக்குத் தடையாக அமைகிறது. ஆங்கிலக் கல்வி குடிமக்களை அறிவு ரீதியில் வலுவற்றவர்கள் ஆக்குகின்றதென விளக்கிக் கூறினார். சுதேச கல்விக்குப் பதிலாக ஆங்கிலக் கல்வியை வளர்ப்பதன் வழியாக பலர் அடிப்படைக் கல்வியுமின்றி, அறியாமையில் இருப்பதை எடுத்துக்காட்டினார். இதை உணர்ந்த பொதுக் கல்வித் திணைக்களம், அரசு சுதேச மொழியில் கல்வி அளிப்பதை பெருமளவில் மேற்கொள்ள வேண்டுமென முடிவு செய்தது. மேலும் ஆரம்ப கல்வியை சிங்கள, தமிழ் மொழிகளில் அளிக்கும் சுதேச பாடசாலைகள் பரவலாக எல்லாக் கிராமங்களிலும் அமைக்கப்படுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. எனவே அரசு சுதேச பாடசாலைகளில் அதிக கவனம் செலுத்தி, ஆங்கிலப் பாடசாலைகளை தனியாரிடம் அல்லது மதத் தாபனங்களிடம் ஒப்படைத்தது. இப் புதிய திட்டம் சுதேச மொழிகளான சிங்கள, தமிழ் மொழிகளின் வளர்ச்சிக்கு வழி வகுத்தன.

கத்தோலிக்க திருச்சபை இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நாடெங்கும் நகரங்களிலும், கிராமப் புறங்களிலும் பரவலாக அரச உதவி பெறும் சுதேச பாடசாலைகளை அமைத்தது. முக்கியமாகக் கத்தோலிக்கருக்கென அப் பாடசாலைகள் அமைக்கப் பட்டாலும், பிற மதப் பிள்ளைகளும் அனுமதிக்கப்பட்டார்கள். பொதுவாக ஒவ்வொரு பங்கிலும் உள்ள ஒவ்வொரு கோவிலுக்கும் அருகாமையில் ஒரு கத்தோலிக்க கலவன் ஆரம்ப பாடசாலை, அல்லது ஆண் பாடசாலை, பெண் பாடசாலையென இரு பாடசாலைகள் அமைக்கப்பட்டன. நகரங்களில் மேல் வகுப்புகளுக்கான பெரிய பாடசாலைகளும் அமைக்கப்பட்டன. 1892ம் ஆண்டில் கத்தோலிக்க திருச்சபை ஆகக் கூடுதலான தொகையான 209 அரச நிதியுதவி (நன்கொடை) பெறும் சுதேச மொழிப் பாடசாலைகளையும், அரச நிதியுதவி பெறும் 14 ஆங்கில உயர்தர பாடசாலைகளையும் கொண்டிருந்தது. பௌத்த, இந்து மத தாபனங்களும், தம் மத மாணவர்களுக்கென, அரச நிதியுதவியுடன் பாடசாலைகளை ஆரம்பித்தன. இவ்வாறு கல்வித் துறையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில், மத சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டதை அடுத்து, ஐரோப்பாவிலிருந்து பல புரட்டஸ்தாந்து மிஷனறி சபையினர் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பாடசாலைகளை அமைத்து, கல்வித் துறையிலேயே ஈடுபட்டனர். அவர்களைத் தொடர்ந்து ஐரோப்பாவிலிருந்து கத்தோலிக்க மறை பரப்பாளர் சபைகளும், துறவறக் குழுக்களும், இலங்கைக்கு வந்தன. இவர்களில் பிரான்சின் மரியாள் சபைக் குருக்கள், இத்தாலியின் சில்வெஸ்த்ரோ ஆசீர்வாதப்பர் சபைக் குருக்கள், பெல்ஜியத்தைத் சேர்ந்த இயேசு சபையினர், பிரான்ஸைச் சேர்ந்த அமல மரித் தியாகிகள், மாரிஸ்ட் சகோதரர், டி லா சால் சகோதரர், திருக் குடும்பக் கன்னியர், பிரான்சிஸ்கன், நல்லாயன். பிறர் சிநேக சகோதரிகளின் துறவற சபையினரும் அடங்குவர். இவர்களிலும் அதிகமானோர் பாடசாலைகளிலேயே தம் மறைப்பணியைச் செய்தனர்.

இவர்களுள் சில புரட்டஸ்தாந்து மறைத் தூதுக் குழுக்களும், கத்தோலிக்க துறவற சபையினரும் கிறிஸ்தவ மகளிர் கல்விக்கென தம்மை அர்ப்பணம் செய்து, அதற்காக முன்னணி வகித்துச் செயலாற்றினர். இவர்களுள், பப்ரிஸ்ற் மறைத் தூதுவர், மெதடிஸ்ற் மறைத் தூதுவர், அமெரிக்க மிஷன் மறைத்தூதுவர், திரு குடும்பக் கன்னியர், நல்லாயன் சபைக் கன்னியர் போன்றவர்களை நாம் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவர்கள் இலங்கைக் கிறிஸ்தவ மகளினரின் கல்வி மேம்பாட்டிற்காக பெரும் பணியாற்றினர். இலங்கைக்கு பப்ரிஸ்ற் சபையினர் 1812ம் ஆண்டிலும், வெஸ்லியன் மெதடிஸ்ற் சபையினர் 1814லும், அமெரிக்கன் மிஷன் சபையினர் (Congregationalists and Presbyterians) 1818லும் வந்தனர். இவ் மிஷனறிச் சபையினர் இலங்கையெங்கும் பரவலாக பாடசாலைகளை அமைத்தனர். தமது சபைகளின் நிதியுதவிகளுடனும், அரசாங்கத்தின் உதவியுடனும், பாடசாலைகளில் தமது பணியைச் சிறப்புடன் ஆற்றிய அவர்களிடம் மாணவ மாணவிகள் பெருந் தொகையாகச் சென்றனர். இலங்கைக்கு வந்த அமெரிக்கன் மிஷன் சபையினர் யாழ்ப்பாணம் சென்று, பல இடங்களில், மாணவ மாணவிகள் தங்கியிருந்து கற்பதற்கு ஏற்ற விடுதி வசதிகளுடன், பெரிய பாடசாலைகளை ஆரம்பித்தனர். வட்டுக்-கோட்டை, உடுவில், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாண நகரம், தெல்லிப்பளை போன்ற இடங்களில் பல பாடசாலை

அமைத்து, யாழ்ப்பாண மாணவர்களுக்கு, சிறப்பாக மகளிருக்கு, சிறந்த சேவை செய்தனர். இருபது ஆண்டுகளுக்குள் அவர்கள் 235 பாடசாலைகளை ஆரம்பித்து, 10,000 மாணவ மாணவிகளுக்கு கல்வி அறிவு ஊட்டினர்.

திருக் குடும்பக் கன்னியர் யாழ்ப்பாணத்துக்கு கார்த்திகை 1862ம் ஆண்டில் வருகை தந்ததை அடுத்து, இலங்கையில் மகளிர்க்கு கொன்வென்ற் பாடசாலைக் கல்வி (Convent School Education) ஆரம்பமாகியது. பெற்றக்கீனி ஆண்டகையால் 1849இல் ஆரம்பிக்கப்பட்ட "யாழ்ப்பாண கத்தோலிக்க ஆங்கில பெண்கள் பாடசாலை" அயர்லாந்து நாட்டு விதவையான, திருமதி மேரி ஆன் பிளநகன் என்பவரின் தலைமையில் இயங்கி வந்தது. 1862ம் ஆண்டில் திருக் குடும்பக் கன்னியர் யாழ்ப்பாணம் வந்து, அப் பாடசாலையைப் பொறுப்பேற்றனர். 1864இல் ஒரு புதிய கொன்வென்ற் பாடசாலை ஆரம்பமாகியது. கன்னியரின் தலைமையில் அங்கு அளிக்கப்பட்ட கல்வியூட்டுதலும், ஆங்கில அறிவும், ஒழுங்கும், நல்லொழுக்கமும், பண்பும், பெற்றோ-ரையும், மாணவிகளையும் மிகவும் கவர்ந்தன. பல கிறிஸ்தவரல்லாத, புரொட்டஸ்தாந்துப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை, தமது மதப் பாடசாலைகளிலிருந்து எடுத்து, கன்னியர் மடத்தில் சேர்த்தனர். அதைத் தொடர்ந்து திருக் குடும்பக் கன்னியர், தமது சகோதர சபையான சுதேச பெண்களின் புனித இராயப்பர் சபைக் கன்னியரின் ஒத்துழைப்பு-டன், தமது இப் பணியை வட இலங்கையின் பல பாகங்களுக்கும் விஸ்தரித்தனர். 1893இல் ஆங்கில-சுதேச மொழி மடப் பாடசாலைகளை இளவாலையிலும், 1894இல் மாதகலிலும் மன்னாரிலும், 1896இல் சில்லாலையிலும், 1897இல் பருத்தித்துறையிலும், 1898இல் ஊர்காவத்துறையிலும், 1908இல் நாரந்தனையிலும், 1916இல் கரம்பொனிலும் ஆரம்பித்தனர். மேலும் வென்னப்புவவிலும், கட்டுனேரியாவிலும், மாறவில்லவிலும் மடப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. 1869இல் இலங்கைக்கு வந்த நல்லாயன் சபைக் கன்னியர்கள், கொழும்பில் முதல் உயர்தர மடப் (கொன்வென்ற்) பாடசாலையை ஆரம்பித்தனர். தொடர்ந்து அவர்கள் தென் இலங்கையின் பல இடங்களில், பல மடப் பாடசாலைகளை அமைத்து, மகளிரின் கல்விக்கு பெரும் பணி புரிந்தனர். இம் மடப் பாடசாலைகளுக்கு பெற்றோரினதும், மாணவிகளினதும் அமோக வரவேற்பும், ஆதரவும்,

பாராட்டும் கிடைத்தன. 1921 இல் ஏறக்குறைய 50% கிறிஸ்தவ பெண்களும், 17% பௌத்த பெண்களும், 10% இந்துப் பெண்களும், 6%0 முஸ்லிம் பெண்களும் கல்வி அறிவுள்ளவர்களாக உயர்ந்தனர். 1948 இல் இலங்கை சுதந்திம் அடைந்தபொழுது, இலங்கையில் பாடசாலைகள் 50 வீதத்தாலும், மாணவர்கள் 300 வீதத்தாலும் அதிகரித்திருந்தன.

சுதந்திர இலங்கையில் வண பொன்ஜீன் ஆண்டகையின் அயராத முயற்சியினால் 1869 இல் அறிமுகம் செய்யப்பட்ட அரச உதவி பெறும் மதப் பாடசாலை முறையே அமுலில் இருந்தது. அதன்படி அனைத்து மதப் பிரிவினரும் தத்தம் மாணவர்களுக்கென பாடசாலைகளை அமைத்து, அவற்றை அரச செலவில் நடாத்த வசதி இருந்தது. கத்தோலிக்க திருச்சபை அவ் வசதியைப் பயன்படுத்தி, இலங்கையின் நகரப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் பரவலாக பாடசாலைகளை அமைத்து, ஒரு சிறந்த பாடசாலைகளின் இணைப்புத் திட்டத்தை கொண்டிருந்தது. இப் பாடசாலைகள் கத்தோலிக்க மாணவர்களுக்கென்றே அமைக்கப்பட்டாலும், பிற மத மாணவர்களும் விரும்பினால், அங்கு கல்வி பயிலக் கூடியதாகவிருந்தது. பொதுவாக ஒவ்வொரு பங்கிலுமுள்ள ஒவ்வொரு ஆலயத்துக்கும் அருகில், ஒரு கலவன் பாடசாலையோ அல்லது ஆண், பெண்களுக்கென்று தனித்தனியாக இரு பாடசாலைகளோ அமைந்திருந்தன. நகரங்களில் உயர்தர வகுப்புகளுக்கென்று கூடிய வசதிகளுடனான பெரிய பாடசாலைகள் இருந்தன. இப் பாடசாலைகள் அனைத்தும் அரச மேற்பார்வையின் கீழ், ஆனால் திருச்சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கின. ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் அங்குள்ள கத்தோலிக்க பாடசாலைகளுக்குப் பொறுப்பாக ஒரு குரு பாடசாலைப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் ஒவ்வொரு பங்குத் தந்தையும், தம் பங்கிலுள்ள பாடசாலைகளுக்கு, அப் பொது முகாமையாளரின் பிரதிநிதியாகச் செயல்பட்டார். இவ்வாறாகக் கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாகத்தின் கீழ் 750க்கு மேற்பட்ட பாடசாலைகள் இயங்கின. கத்தோலிக்க பாடசாலைகளில் மறைசாரா ஏனைய பாடங்களுடன், மதமும் கற்பிக்கப்பட்டது. கத்தோலிக்க பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவென ஆசியர் பயிற்சிக் கலாசாலைகளும் நிறுவப்பட்டன. இதன் விளைவாக

பாடசாலைக்கும், பங்குத் தளத் திருச்சபைக்கும், அதன் பங்குத் தந்தைக்குமிடையே நெருங்கிய தொடர்பும், உறவும் இருந்தது. கத்தோலிக்க மாணவர்களுக்கு கத்தோலிக்க சூழலில் கல்வி கற்பதற்கும் இது வசதியாகவிருந்தது.

கத்தோலிக்க பாடசாலைகள் உயர்ந்த பரீட்சைப் பேறுகளைப் பெறுவதற்கும், அவையுடைய திறனாற்றலுக்கும், அவையளித்த சிறந்த உருவாக்கத்திற்கும் கல்வித் துறைக்கென தம்மை முழுவதும் அர்ப்பணித்துச் செயற்பட்ட துறவற குருக்கள், சகோதரர, கன்னியரு-டைய பங்களிப்பே முக்கிய காரணமாகும். அமல மரித் தியாகிகள், ஆசீர்வாதப்பர் சபையினர், இயேசு சபையினர், டி லா சால் சகோதரர், மாறிஸ்ற் சகோதரர் போன்ற துறவிகள் ஆண்களுக்கென ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்துக் கல்வியறிவு ஊட்டினர். இலங்கைய பிரான்சீஸ்கன் சகோதரர், யாழ்ப்பாண புனித சூசையப்பர் சபைச் சகோதரர் சுதேசிய மொழிகளில் கல்வி அளித்தனர். திருக் குடும்பக் கன்னியர், நல்லாயன் சபைக் கன்னியர், பிரான்சிஸ்கன் மி'னறிச் சபைச் சகோதரிகள், அப்போஸ்தலிக்க கார்மேல் சபைச் சகோதரிகள், பிறர் சிநேகச் சகோதரிகளெனப் பல துறவற சகோதரிகள் பெண்களுக்கென ஆங்கில, சுதேசிய மொழிப் பாடசாலைகளை அமைத்து, மாணவிகளுக்குச் சிறந்த கல்வியறிவு அளித்தனர். இவ்வாறு கத்தோலிக்க மாணவ மாணவிகளுக்கு அளிக்கப்பட்ட சிறந்த கல்வி கத்தோலிக்க திருச்சபையின் தரத்தை உயர்த்தி, அதை ஒரு மிக வலிமையுள்ள தாபனமாக்கியது. மேலும் கத்தோலிக்கரை மறை அறிவிலும், உருவாக்கத்திலும், அறிவிலும், சமூக பொருளாதார நலன்களிலும் உயர்ந்தவர்களாக்கி, அரச, தனியார் துறைகளில் உயர் பதவிகளை பெற வழிவகுத்தது. இதன் விளைவாக கத்தோலிக்க திருச்சபை இலங்கையில் செல்வாக்குடன் திகழ்ந்து, தன் தாக்கத்தை எத்துறையிலும் ஏற்படுத்தக் கூடியதாகவிருந்தது.

கத்தோலிக்க திருச்சபையின் இத்தகைய மேன்மையான முன்னேற்றமும், அதன் வலிமையும், செல்வாக்கும், ஏனைய மதத்தினருக்கு, குறிப்பாக பெரும்பான்மையோராகவிருந்த பௌத்த மதச் சிங்களவர்களுக்கு எரிச்சலையும், ஆத்திரத்தையும் மூட்டியது. அக்காலத்தில் ஏற்பட்ட பௌத்த, இந்து மத மறுமலர்ச்சியும் அதற்குக்

காரணமாக அமைந்தது. அனைத்து இலங்கை பௌத்த சம்மேளனம் 1954ம் ஆண்டு, சித்திரை 2இல் கூடப்பட்ட தனது 33வது வருடாந்தக் மகாநாட்டில், பௌத்த மதத்தை வளர்த்து, வலிமைப் படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, அறிந்து, செயற்படுத்தவென ஒரு பௌத்த ஆணைக் குழுவை நியமித்தது. அக் குழு பௌத்த சமயத்தையும், அதன் செயற்பாடுகளையும் ஆராய்வதற்குப் பதிலாக, கிறிஸ்தவ, குறிப்பாக கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகளையே ஆராய்ந்தது. கிறிஸ்தவ, குறிப்பாகக் கத்தோலிக்க பாடசாலைகளுக்கு எதிராகப் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. கத்தோலிக்க பாடசாலைகளுக்கும், சமூகப்பணிகளுக்கும் அரசு ஆதரவு அளிப்பது பௌத்த மக்களுக்குச் செய்யப்படும் பெரிய அநீதியென்றும், அதனால் பாடசாலைகள், சமூக சேவைகளுக்கென்று ஒதுக்கப்படும் நிதியில், 80 விழுக்காடுகள் நாட்டின் சனத் தொகையில் 9 விழுக்காடுகளைக் கொண்ட கிறிஸ்தவர்களுக்கு அளிக்கப்படுகிறதென்றும் குற்றம் சுமத்தியது. கத்தோலிக்க பாடசாலைகளின் உயர்ந்த தராதரம், ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றின் நிமித்தம் பல பௌத்த மாணவர்கள் அப் பாடசாலைகளையே நாடுகின்றனரென்றும், அதனால் நாட்டின் அரச உயர்பதவிகள் அனைத்தும் அநேகமாக பௌத்தர்களல்லாதவர்கள், அல்லது கத்தோலிக்க பாடசாலைகளில் பயின்ற பௌத்தவர்களுக்கே கிடைக்கின்றனவென்றும் குறை கூறப்பட்டது. எனவே அரச உயர் பதவிகள் விகிதாசார முறைப்படியே அளிக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. மேலும் மேற்கத்தைய வல்லரசுகள் கத்தோலிக்க திருச்சபையின் ஊடாக இலங்கையில் கொண்டிருக்கும் செல்வாக்கே பௌத்த மதத்தின் வளர்ச்சி குன்றுத-லுக்கும், நம் நாட்டுப் பண்பாடு, கலாச்சாரம் சீரழிவதற்கும் காரணமெனக் கூறி, கத்தோலிக்க பாடசாலைகள் பௌத்த மத மாணவர்களை மதம் மாற்றம் செய்யும் தளங்களாக அமைந்துள்ளனவென்றும் பழி போடப்பட்டது. பௌத்த ஆணைக் குழு வெளியிட்ட "பௌத்த மதத்துக்கு நம்பிக்கைத் துரோகம்" என்ற தனது அறிக்கையில், கத்தோலிக்க திருச்சபையை, அதாவது அதன் பாடசாலைகளை, அனாதை இல்லங்கள், ஏனைய அன்புப் பணி இல்லங்களை, தாபனங்களை அழிப்பதன் வழியாகத்தான் பௌத்த மதத்தை மலரச் செய்யலாம் என்றவாறாக பரிந்துரைத்தது. 1956ம் ஆண்டில் வெளியிடப்-

பட்ட இவ் அறிக்கை பௌத்த மதத்தைச் சார்ந்த தீவிரவாதிகள் பலரால் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் பெரும்பான்மையான வாக்குகளைக் கொண்டிருந்த பௌத்த மதத்தினர், அரசியல் வாதிகளுக்கும், அரசாங்கத்துக்கும், பௌத்த ஆணைக் குழுவின் சிபார்சுகளை அமுல் செய்யும் படி அழுத்தம் கொடுத்தனர்.

அனைத்து மதப் பாடசாலைகளையும் தேசிய மயமாக்குதலை தங்கள் தேர்தல் விஞ்ஞாபனமாகக்கொண்டு பிரச்சாரம் செய்து 1960 இல் ஆட்சியைக் கைப்பற்றிய ஸ்ரீமதி பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, 1960ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ம் திகதி அனைத்து மதப் பாடசாலைகளையும் தேசிய மயமாக்கும் மசோதாவை மக்களாட்சி மன்றத்தில் சமர்ப்பித்து, அந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றியது. கத்தோலிக்க திருச்சபை நாடெங்கும் பரவலாக அமைத்து சிறப்பாக நடாத்திவரும் 750 பாடசாலைகளையும் அரசுடமை-யாக்கி, அதன் செல்வாக்கை, வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதே அச் சட்ட மூலத்தின் நோக்கமென்பதை அனைவரும் நன்கு அறிவர். அச் சட்ட மூலம் நாடெங்கும் பதற்றத்தையும், இரத்தக் களரி ஏற்படும் ஆபத்தையும் தோற்றுவித்தது. கத்தோலிக்க பாடசாலைக் கட்டிடங்களை கத்தோலிக்க விசுவாசிகள் ஆக்கிரமித்து. தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஆனால் வத்திக்கானின் பிரதிநிதியாக வருகைதந்த இந்தியாவின் வலேரியன் கர்தினால் கிறாசியஸ் ஆண்டகையின் பணிப்புரைக்கு அமைய, குழப்பம் ஏற்படுத்தாமல் கத்தோலிக்கர்கள் அமைதியாக பாடசாலைகளிலிருந்து வெளியேறி. தத்தம் வீடுகளுக்குச் சென்றனர்.

அனைத்து மதப் பாடசாலைகளையும் அரச உடமையாக்கும் சட்டத்தின் பிரகாரம், கத்தோலிக்க திருச்சபைக்குச் சொந்தமான 600க்கு மேற்பட்ட பங்குப் பாடசாலைகள், அதன் காணிகள், கட்டிடங்கள், தளபாடங்கள் அனைத்தும், எவ்வித நஷ்ட ஈடுமின்றி, பறிமுதல் செய்யப்பட்டு, அரசுடமையாக்கப்பட்டன. அப் பாடசாலைகளில் கல்வி பயின்ற பெருந் தொகையிலான கத்தோலிக்க மாணவர்களுக்கு கத்தோலிக்க சூழலில் கல்வி பயிலும் உரிமை மறுக்கப்பட்டது. கத்தோலிக்க ஆசிரியர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. மதத் தாபனங்கள் விரும்பினால், சிறிய தொகையிலான உயர்தரப் பாடசாலைகளை,

எவ்வித அரச உதவியுமின்றி, மாணவர்களிடமிருந்து எவ்வித கட்டணமும் அறவிடாமல், தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. அதற்கமைய கத்தோலிக்க திருச்சபை அப்படிப்பட்ட 40 உயர்தரப் பாடசாலைகளை எவ்வித நிதியுதவியுமின்றிச் தன் சொந்தச் செலவில் நடாத்த முயன்றும், நிதிபற்றாக் குறைவினால் பலவற்றைப் படிப்படியாக அரசாங்கத்திடம் ஒப்படைத்தது. கத்தோலிக்க பாடசாலைகளென இன்று ஒரு சில தனியார் பாடசாலைகளே உள்ளன. இருபது ஆண்டுகளுக்குப் பின், 1980ம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றிய ஜே. ஆர். ஜயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், அத் தனியார் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களின் ஊதியத்தை அளிக்க முன்வந்தது குறிப்பிடத்தக்கது. சுதந்திர இலங்கையில் கல்வித் துறையின் அபிவிருத்திக்காக உழைத்த கிறிஸ்தவர்களுள் நாம் அருட் திரு. தோமாஸ் கருதினால் கூறே, டீ. ஜே. அந்தோனி, நிக்கொலாஸ் பெரேறா, பீற்றர் பிள்ளை, டொன் பீற்றர், எஸ். ஜி. பெரேறா, சிறில் அபேநாயக்க, சுவாமி ஞானப்பிரகாசர், எஸ் எச். தாவீது, சேவியர் தனிநாயகம், ஆர். எஸ். டி சேரம், வில்லி விக்கிரமசிங்க என்பவர்களை நாம் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

மதப் பாடசலைகளை அரசு பறித்தெடுத்து, அரசுடைமை ஆக்கியதின் பாரதூரமான விளைவுகளை இன்று பலரும் உணருகின்றனர். இன்று அநேகமான பாடசாலைகள் எவ்வித மதமுமற்ற, மதச் சூழலற்ற பாடசாலைகளாகக் காணப்படுகின்றன. முன்னைய கத்தோலிக்க பங்குப் பாடசாலைகள், அங்கு அதிகமான கத்தோலிக்க மாணவர்கள் கல்வி பயின்றாலும், இன்று அவை அநேகமாக கத்தோலிக்க அதிபர்களற்ற, கத்தோலிக்க ஆசிரியர்களற்ற, கத்தோலிக்க மதம் போதிக்கப்படாத, கத்தோலிக்க சூழலற்ற பாடசாலைகளாகவே இருக்கின்றன. கத்தோலிக்க திருச்சபைக்கு தம் மக்களுக்கு தம் மதத்தைப் கற்பித்து, தம் மதமுறைப்படி வளர்த்து உருவாக்கும் உரிமை மறுக்கப்பட்டது. தம் மத ஆசிரியர்களைப் பயிற்றுவித்து, நியமிக்கும் உரிமையும் பறிக்கப்பட்டது. பாடசாலைகளில், ஏனைய பாடங்களைப்போல் மறைக் கல்வியும் வாரத்தில் ஓர் இரு பாடநேரத்திலேயே படிப்பிக்கப்படுகின்றது. பல பாடசாலைகளில் மறைக் கல்வி முற்றாக அளிக்கப்படுவதேயில்லை. பங்குகளில் மறைக் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டாலும், அனைத்து கத்தோலிக்க மாணவர்களும்

தம் பங்கு மறைக் கல்வி வகுப்புகளில் பங்குபற்றி பயன் பெறுவதில்லை. மத அறிவு பங்கு மறைக் கல்வி வகுப்புகளில் அளிக்கப்பட்டாலும், ஏனைய பாடங்களை மாணவர்கள் பாடசாலையில் எவ்வளவுக்குக் கற்கிறார்களென்பது கேள்விக் குறியே. தலைமை ஆசிரிய, உதவி ஆசிரிய பதவிகளெல்லாம் அரச செல்வாக்குடையவர்களுக்கே கிடைக்கின்றன. அதனால் பெரும்பாலும் தகுதியற்றவர்களே நியமனம் பெறுகிறார்கள். மதம் போதிக்கப்படாத, மத மதிப்பீடுகள் கடைப்பிடிக்கப்படாத, மதச் சூழலற்ற பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி பயில்வதின் விளைவுகளை 1971ம், 1988ம் ஆண்டுகளில் இடம் இளைஞர்களின் கிளர்ச்சிகள் நமக்குத் தெளிவுபடுத்தி உள்ளன. கட்டுப்பாடற்ற, பெரியோரை, பெற்றோரை, ஆசிரியரை மதியாத, ஒழுக்கம், ஒழுங்கில்லாத, கடவுள் பயமறியாத, மனித மதிப்பீடுகளற்ற, காட்டுமிராண்டித்தனமுள்ள ஒரு இளம் சமுதாயத்தையே நாம் இன்று காண்கிறோம். இதனால் பெற்றோர்களும், பெரியோர்களும், தேசாபிமானிகளும் மிகவும் வேதனைப்படுகின்றனர்.

## 8.3.2. பண்பாடு, கலைத் துறையில் இலங்கைத் திருச்சபையின் பங்களிப்பு

"பண்பாடு" என்பது மனிதன் தன் உடல், உள இயல்புகளை, திறமைகளைப் பண்படுத்தி, வளப்படுத்தி, வளர்ச்சியுறச் செய்ய எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் குறிக்கிறது. அத்துடன் மனிதன் தன் அறிவாலும், உழைப்பாலும் படைப்புகள் அனைத்தையும் அடக்கி, தன் அதிகாரத்தின், கட்டுப்பாட்டின் கீழ் கொணர எடுக்கும் முயற்சிகளையும் உள்ளடக்குகிறது. மேலும் தன் சமூக வாழ்வையும், அத்துடன் சம்பந்தப்பட்ட பழக்கவழக்கங்களையும்., நிறுவனங்களையும் இன்னும் மனிதத் தன்மைக்கு ஏற்றவையாக அமைக்க எடுக்கும் முயற்சிகளையும் குறிக்கும். இறுதியாக, மனிதன் தன் ஆன்மீக அனுபவங்களையும், நாட்டங்களையும், சிந்தனைகளையும் தான் உருவாக்கும் பொருட்களில் வெளிப்படுத்தி, அவற்றைப் பிறரோடு பகிர்ந்து, பலரின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் அவற்றை நிலைநிறுத்திக் காப்பதற்கு எடுக்கும் முயற்சிகளையும் குறித்து நிற்கின்றது. அத்துடன் உணவு, உடை, பழக்கவழக்கங்கள், விளையாட்டு போன்றவற்றையும் குறிக்கலாம். சுருங்கக் கூறின், மனிதன்

தன் வாழ்க்கை நிலையை, தரத்தை மேன்படுத்துவதற்கு, உயர்த்துவதற்கு எடுக்கும் சகல முயற்சிகளையும் குறித்து நிற்கின்றது. அதேபோன்று "கலைத் துறை" என்பது மனிதன் தன் உள்ளார்ந்த சிந்தனைகளை, எண்ணங்களை, உள்ளக் குமுறல்களை, உள்ளுணர்வுகளை புலன்களால் காணக்கூடிய, கேட்கக்கூடிய, அறியக்கூடிய முறையில் வெளிப்படுத்த எடுக்கும் முயற்சிகளைக் குறித்து நிற்கிறது. அக் கருத்தில் அது இலக்கியம், இசை, சங்கீதம், நடனம், சித்திரம், ஓவியம், சிற்பம், கட்டிட அமைப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

இங்கு நாம் இலங்கைத் திருச்சபை, அதாவது இலங்கைக் கிறிஸ்தவர்கள் மனிதனுடைய வாழ்கையை, வாழ்க்கை முறையை தரம் உயர்த்துவதற்கும், கூடிய மனிதத் தன்மை உடையதாக்குவதற்கும் எடுத்த முயற்சிகளையும், இலங்கையில் இலக்கியம், இசை, சங்கீதம், நடனம், நாடகம், சித்திரம், ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை போன்றவற்றின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பையும் ஆராய்கிறோம். ஏற்கனவே நாம் போர்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத் திருச்சபையின் வரலாற்றைப் படித்தபொழுது, திருச்சபை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், கலைத் துறையை வளர்ப்பதற்கும் எடுத்த பல முயற்சிகளைப் பார்த்திருக்கிறோம். போர்த்துக்கேயர் காலத்தில் மறைபரப்பாளர்கள் கிராமப் புறங்களில் தங்கி, மக்களோடு மக்களாக வாழ்ந்து, அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்தனர். அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த சுகாதாரம், சமூகம், பிறர் நலம் போன்ற சேவைகளை ஆரம்பித்து, அவர்களுக்கு உதவி செய்தனர். போர்த்துக்கேயர் அதிகமாக இருந்த இடங்களில் வைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதைக் காண்கிறோம். போர்த்துக்கய படைவீரர்களுக்காக அவை ஆரம்பிக்கப்பட்டாலும், பொதுமக்களும் அவற்றால் நன்மை அடைந்தனர். துறவற சபையினரின் நிர்வாகத்தில், அவர்களின் மேற்பார்வையில் அவைகள் நடத்தப்பட்டன. போர்த்துக்கேய காலத்திலேயே மேற்கத்தைய வைத்தியம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

பிறர் நல சேவையில் போர்த்துக்கேயரின் உருவாக்கமான "மிசறிக்கோடியா" என்ற என்ற பிறர் நல சேவைத் தாபனம் பலராலும்

பாராட்டப்பட்டது. மக்களின் நன்கொடையினாலும், பரம்பரைச் சொத்துக்களினாலும் தாபரிக்கப்பட்டு, பொதுநிலையினரால் நடத்தப்பட்ட இத் தாபனம், ஆனம சரீர செயல்களில், அதாவது கைதிகளை விடுவித்தல், நோயாளிகளைப் பராமரித்தல், உடுபுடவை அற்றவர்களை உடுத்துதல், பசியாயிருப்பவர்களுக்கு உணவளித்தல், இல்லிடம் அற்றோருக்கு இல்லிடம் அளித்தல், இறந்தவர்களை அடக்கம் செய்தல் போன்ற பணிகளால் மக்களுக்கு உதவி செய்தனர். அத்துடன் அனாதைகளைப் பராமரிப்பதற்கென அனாதை இல்லங்களும், மடங்களும் ஆரம்பிக்கப்பட்டன. அதன் கிளைகள் காலி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. திருமணம், குடும்ப வாழ்வு தொடர்பான சட்ட திட்டங்களை ஏற்படுத்தி, தோம்பு பதிவு முறைகளை ஆரம்பித்தனர். இவையெல்லாம் இலங்கைவாழ் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தின என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஒல்லாந்தர் காலத்தில் மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்த மேலும் கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வருமானத்தைத் தேடி நாட்டுக்கு வந்த ஒல்லாந்தர்கள், நாட்டின் மூலதனத்தை, இயற்கை வளத்தை வளம்பெறச் செய்ய முயற்சிகளை மேற்கொண்டனர். அவர்கள் ஏற்படுத்திய பல கைத் தொழிற்சாலைகள், விவசாயப் பண்ணைகளில் நாட்டு மக்கள் உழைத்து, தம் வருவாயை அதிகரிக்கச் சந்தர்ப்பம் அளித்தது. நாட்டின் முக்கிய நகரங்கள் வாகனங்கள் செலுத்தக்கூடிய பல தெருக்களினாலும், வீதிகளினாலும் இணைக்கப்பட்டன. சிறிய ஆறுகள் பாலங்களாலும், பெரியவை மக்கள் போக்குவரத்துச் செய்யக்கூடிய வள்ளச் சேவைகளினாலும் பிணைக்கப்பட்டன. கால்வாய்கள் குறைந்த செலவில் இலகுவாகப் பயணம் செய்ய வழிவகுத்தன. வரண்ட பிரதேசங்கள் நீர் பாச்சப்பட்டு, வளமாக்கப்பட்டன. கொம்பனி புதிய விவசாய உற்பத்திப் பொருட்களை, பயிர்செய்ய நல்ல புதிய வசதிகளைச் செய்து கொடுத்தது. இவ்வாறு கோப்பி, கராம்பு, கறுவா, ஏலம், தென்னை போன்றவற்றின் உற்பத்தியை ஊக்குவித்து மட்டுமல்ல, புடவை நெய்தல், அவற்றிற்கு சாயம் போடல் போன்றவற்றை ஆரம்பித்து வளர்த்தது. உற்பத்தியான பொருட்களை கொம்பனியே கொள்வனவு செய்து, அவற்றைச் சந்தைப் படுத்தி, தனது வருவாயைப் பெருக்கியதுமல்லாமல், மக்களையும் தம் கைத்

தொழிலிலும், வர்த்தகத்திலும் ஆர்வமுடன் பங்கெடுக்கச் செய்தது. மேலும் போர்த்துக்கேயரால் திருமணம் தொடர்பாக ஏற்படுத்திய சட்ட ஒழுங்குகளையும், தோம்பு பதிவு முறைகளையும் ஒல்லாந்தரும் தொடர்ந்து மேற்கொண்டனர். அதைவிட தொழு நோயாளர்களை வைத்துப் பராமரிக்க விடுதிகளையும், வைத்திய சாலைகளையும் ஆரம்பித்தனர். இலங்கையில் முதல் முறையாக உரோமைய-ஒல்லாந்த சட்டங்களை அறிமுகம் செய்து வைத்து, நீதிமன்றத்தில் வழக்குகள் விசாரிக்கப்படுவதை ஆரம்பித்தவர்கள் ஒல்லாந்தர்களே என்பது குறிப்பிடத் தக்கது. அதன் வழியாக மக்களுக்கு நல்ல நீதி கிட்டியது.

ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பெருமளவிலான மாற்றங்களும், முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் கொண்டுவந்த மாற்றங்களையும், முறைகளையும் முன்னெடுத்துச் சென்றனர். அத்துடன் வேறு பல பெரிய சமூக, பொருளாதார மாற்றங்களும் கொண்டுவரப்பட்டன. முழு நாடும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொணரப்பட்டு, ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரே நிர்வாக முறை அமுல் செய்யப்பட்டது. அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆங்கிலம் உத்தியோக மொழியாக்கப்பட்டு, கரையோரப் பகுதிகளில் மாணவர்கள் ஆங்கிலம் கற்பதற்காக பல ஆங்கில பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பெண்களுக்குக் கல்வி அளிப்பதற்கென பெண்கள் பாடசாலைகளும் தொடக்கப்பட்டன. பலர் ஆங்கிலத்தைக் கற்று, அரச துறைகளிலும், நிர்வாகத் துறைகளிலும் தொழில் வாய்ப்புப் பெற்றனர். இவ்வாறாக ஒரு புதிய நகரப்புற நடுத்தர வகுப்பினர் தோன்றினர். மத்திய மலைப் பகுதிகளில் வருமானம் தரும் கோப்பி, தேயிலை, றப்பர், கராம்பு போன்ற பயிர்கள் செய்யப்பட்டன. தென் இந்தியாவிலிருந்து குறைந்த சம்பளத்தில தோட்டங்களில் வேலை செய்ய கூலியாட்கள் கொண்டு வரப்பட்டனர். அதன் விளைவாக நாட்டினதும், மக்களினதும் பொருளாதார நிலை வலுவாய் முன்னேறியது. மக்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டு, அவர்கள் அரசியலில் பங்கெடுத்தனர். அவரகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபை அமைக்கப்பட்டு. நாட்டின் நிர்வாகத்திலும் பங்கெடுத்தனர்.

கலைத்துறையை எடுப்போமானால், கல்வித் துறைக்கு

மேலைத்தேய மறைபரப்பாளர்கள் செய்த பாரிய பங்களிப்பை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். ஒல்லாந்தர் காலத்தில் பணிபுரிந்த ஜாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் சிங்கள, தமிழ் இலக்கியத்துறை, நாடகம், பாடல், இசைத்துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்திருக்கிறார். அவர் எழுதிய சில சிங்கள் நூல்கள் இன்றும் சிங்கள இலக்கியமாகத் திகழ்கின்றன. போர்த்துக்கேயர் அறிமுகம் செய்து வைத்த இசைக்கருவிகளும், பைலா போன்ற பாடல்-நடனங்களும் இலங்கையில் இன்றும் மக்களைக் கவருகின்றன. ஆங்கிலேய மறைபரப்பாளர்கள் மேற்கத்தேய இசையை இலங்கையில் அறிமுகம் செய்தனர். ஒல்லாந்தரே அச்சு இயந்திரத்தையும், அச்சடிக்கும் முறையையும் இலங்கையில் அறிமுகம் செய்து வைத்தவர்கள். அவர்களே சிங்கள, தமிழ் எழுத்துக்களை அச்சு வார்த்துக் கொடுத்தவர்கள். அதன் உதலியுடன் பல சிங்கள், தமிழ் நூல்களை வெளியிட்டனர். மேற்கத்தேய மறைபரப்பாளர்கள் இலங்கைக்கு வந்த பொழுது, குகை, டகோபா வடிவிலான பௌத்த கட்டிடக் கலையே இருந்தது. அவர்கள் மேற்கத்தேய கட்டிடக் கலைகளையும், கட்டுவதற்கான புதிய முறைகளையும் இலங்கையில் அறிமுகம் செய்து வைத்தனர். அவர்கள் கட்டிய சில ஆலயங்களும் (ஆட்டுப்பட்டித் தெரு), கட்டிடங்களும் (தற்போதைய ஜனாதிபதி காரியாலயம்), கோட்டைகளும் (காலி, யாழ்ப்பாணம்) இன்னமும் காணப்படுகின்றன.

ஆரம்பத்தில் இலங்கையில் பணிபுரிந்த மறைபரப்பாளர்கள் அனைவரும் வெளிநாட்டவர்களே. அவர்கள் இலங்கைத் தேசிய பண்பாடு, கலை, கலாச்சாரத்தை அறியாதிருந்தமையால், அதைத் தரம் குறைந்ததாகக் கருதி, மேற்கத்தேய பண்பாடு, கலை, கலாச்சாரத்தை இலங்கை மக்கள் மீது திணித்தனர். ஆனால் காலப் போக்கில் நிலைமை மாறியதை நாம் காண்கிறோம். மறை பரபரப்பா-ளர்கள் மக்களின் மொழிகள், பண்பாடு, கலை, கலாச்சாரத்தை கற்று அறிந்தனர். ஒல்லாந்தர் காலத்திலேயே கிறிஸ்தவ திருச்சபை தம் வாழ்விலும், வழிபாட்டிலும், போதனைகளிலும் தேசீய மொழிகளை, பண்பாடுகளை. கலாச்சாரத்தை, மரபுகளைப் பயன்படுத்தத் தொடங்கியது. குறிப்பாக வண. யோசப் வாஸ் அடிகளார் தம் குருக்கள் தமிழையும், சிங்களத்தையும் நன்கு கற்க வேண்டுமென்று கட்டளை-யிட்டார். மேலும் மக்களிடத்தில் காணப்படும் பரம்பரைப் பழக்க

வழக்கங்களை, மரபு முறைகளை, அவை கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கு முரணாக இருந்தாலன்றி, அவற்றைத் தடை செய்ய வேண்டாமென உத்தரவிட்டார். ஒறொற்ரோறியன் குருக்கள் மக்களின் பண்பாட்டு, கலாச்சார முறைகளைத் தழுவி, நற்செய்தியை அறிவித்து, மறை அறிவு ஊட்டி, வழிபாடுகள், திருவிழாக்களை நடாத்தியதை நாம் காண்கிறோம். இவ்வாறு தேசிய பண்பாடு, கலாச்சாரத்தின் பெறுமதியைத் தமதாக்கி, நற்செய்தியையும், கிறிஸ்தவச் சடங்குகளையும், பொது வழிபாடுகளையும் அவற்றைத் தழுவி அமைத்து, அர்த்தமுள்ளதாக ஒழுங்கு படுத்துவதை நாம் "பண்பாட்டு மயமாக்கல்" அல்லது "தேசீய மரபுகளைப் பேணல்" என அழைக்கிறோம்.

ஆங்கிலேயரின் காலத்தில் திருச்சபை தேசீய பண்பாடு. கலாச்சாரம். மரபுகளை பின்பற்றி, தேசிய மயமாகுவதில் மிகவும் வளர்ச்சி கண்டது. சிங்கள, தமிழ் மொழிகளையும், பண்பாடு கலாச்சாரத்தையும் வளர்க்க அதி வண. பொன்ஜீன் ஆண்டகை முன்னின்று உழைத்தார். அவர் தேசிய மொழிகளான சிங்களத்திலும், தமிழிலும் கற்பிக்கும் சுதேச மத பாடசாலைகளுக்காக வாதாடினார். இலங்கைப் பண்பாட்டிலும் கலாச்சாரத்திலும் பிறந்து, வளர்ந்து, பயின்ற சுதேச குருக்களை உருவாக்க மிகவும் முயற்சி எடுத்தார். அதற்கென முதல் யாழ்ப்பாணத்திலும், பின்பு கொழும்பிலும், இரு குரு மடங்களை ஆரம்பித்தார். ஐரோப்பிய துறவற சபைக் கன்னியரும், சுதேச பெண்களுக்கென துறவற சபைகளைத் தாபித்து, சுதேச துறவற கன்னியர்களை உருவாக்கினர். தேசிய பண்பாட்டில், கலாச்சாரத்தில், மரபில் பிறந்து, வளர்ந்து, உருவாகிய குருக்களும், துறவறக் கன்னியரும், துறவறச் சகோதரர்களும், இலங்கைத் திருச்சபையை தேசிய மயமாக்க, தேசிய மரபைப் பேணி வளர்க்க அயராது உழைத்தனர்.

இன்று சுதந்திர இலங்கையில் திருச்சபையின் ஆயர்கள், அதிகாரிகள், தலைவர்கள் அனைவருமே சுதேசிகளாக உள்ளனர். இக்காலத்தில் திருச்சபையை தேசிய மயமாக்கும் முயற்சியில் வண. சுவாமி ஞானப்பிரகாசம் அடிகளார், அதி வண. தோமஸ் கார்டினல் கூறே ஆண்டகை, அதி வண. எட்மன்ட் பீரிஸ் ஆண்டகை, வண. எஸ். ஜி. பெரேரா அடிகளார், ஆயர் லக்தாஸ் டி மெல், வண.

மோசேஸ் பெரேரா ஆகியோர் முன்னணியில் நின்றனர். இலங்கையின் முதல் சுதேச சிங்களப் பேராயரும், கர்தினாலுமாகிய அமல மரித் தியாகி, தோமாஸ் கர்தினால் கூறே ஆண்டகை, ஒரு சிறந்த இறையியலாளர். இவரே வத்திக்கான் சங்கத்தின் தீர்மானங்களுக்கமைய, இலங்கைத் திருச்சபையின் பண்பாட்டு மயமாக்கலை முன்னெடுத்துச் சென்றவர். இவரே தேவத்தையில் அமைந்துள்ள இலங்கை மாதா பேராலயத்தை கட்டியவர். இலங்கையின் முதல் சுதேச சிங்கள ஆயரான எட்மண்ட் பீரீஸ் ஆண்டகை, பல ஆய்வுகளை மேற்கொண்டு, இலங்கைத் திருச்பை வரலாறுபற்றியும், இலங்கை வரலாறுபற்றியும் பல நூல்களை எழுதியிருக்கிறார். இன்னும் பல சிங்களப் பாடல்களையும், செபங்-களையும் இயற்றியிருக்கிறார். பல மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த அவரை, அரசாங்கம் அவர் நாட்டுக்கும், குறிப்பாக சிங்கள மொழிக்கும், ஆற்றிய சேவைக்காகப் பாராட்டி, அவருக்குச் சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. இலங்கைச் சரித்திரத்துக்கு இயேசு சபையைச் சேர்ந்த வண. எஸ். ஜி. பெரேராவைப் போல் எவரும் பங்களிக்கவில்லை. அவர் இலங்கை வரலாறுபற்றிய எழுதிய பல நூல்கள் இன்றும் பலரால் படிக்கப்படுகின்றன. இலங்கைத் தமிழர் வரலாற்றுக்கும், தமிழ் மொழிக்கும் வண. சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரைப்போல் எவரும் பங்களிக்கவில்லை. இந்து மதத்திலிருந்து கத்தோலிக்க மதத்துக்கு மனம்திரும்பிய அவர், பின்னர் அமல மரித்தியாகிகள் சபையில் சேர்ந்து, ஒரு குருவாகப் பணிபுரிந்தார். பன்மொழிப் புலவர் என அழைககப்படும் அவர், பல தமிழ் இலக்கண நூல்களையும், அகராதிகளையும் எழுதியுள்ளார். வண. மோசேஸ. பெரேறா, வண. மார்சலின் ஜெயக்கொடி, வண. அதிரியான் யோசவ் என்பவர்கள் சுதேச இசையில் பல பாடல்களை சிங்களித்திலும், தமிழிலும் இயற்றி, தேசிய இசைத் துறையின் வளர்ச்சிக்கு பங்களித்துள்ளனர். அங்கிளிக்கன் சபையின் குருநாகல ஆயரான, வண. லக்ஸ்மன் விக்கிரமசிங்க, திருச்சபையைப் பண்பாட்டு மயமாக்க அயராது உழைத்தவர். நீதிக்காக, குறிப்பாக அரசியல், இனப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கடுமையாக முயற்சி எடுத்தவர். ஒரு உண்மைக் கிறிஸ்தவன் சமூக வளர்ச்சிக்காக உழைக்கவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியவர். இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த குருநாகல ஆயரான வண. லக்தாசா டி மெல் நாட்டின் திருச்சபையை பண்பாட்டு மயமாக்கி வளர்ப்பதில்

பெரும் பங்காற்றியவர். குருநாகலிலும், பத்தேகமவிலும், இலங்கைக் கட்டிடக் கலை அமைப்பில் இரு ஆலயங்களைக் கட்டியவர். சுதேச இசை, சங்கீதங்களையும், பாடல்களையும் திருவழிபாட்டில் அறிமுகம் செய்து வைத்தவர். இலங்கையிலுள்ள பல வேறு மதத் தலைவர்களையும் ஒன்று கூட்டி, மதங்களுக்கிடையில் நல்லுறவை வளர்த்தவர். இறுதியாக, இலங்கையின் பழைய மரபுகளை, கலை கலாச்சாரத்தை நாம் கற்று அறிய, ஐரோப்பிய மிஷனரிமார்களே புதிய ஆராய்ச்சி முறைகளை எமக்கு அறிமுகம் செய்து வைத்தார்களென்பதும் குறிப்பிடத் தக்கது.

### 8.3.3. சமூக சேவையில் திருச்சபையின் பங்களிப்பு

16ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த வெளிநாட்டு கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் தங்கள் பணியை ஆலய வழிபாடுகளோடும், மறைப்பணிகளோடும் நிறுத்திவிடவில்லை. சமூக நலச் சேவைகள், உடல் நல சுகாரச் சேவைகள், இரக்கப்பணி போன்ற பல்வேறு துறைகளிலும் இலங்கைச் சமூகத்திற்குப் பங்களிப்புச் செய்து, மக்கள் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் அயராது உழைத்து வந்திருக்கிறார்கள். இவற்றை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத் திருச்சபையின் பணிகளை ஆராய்ந்த பொழுது பார்த்திருக்கிறோம். சில துறைகளில் கிறிஸ்தவர்களே முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள். அதிகமான குருக்களும், துறவற கன்னியர்களும் மிகப் பின்தங்கிய நிலையிலிருந்த கல்வித் துறையில் ஈடுபட்டு, பல பாடசாலைகளை அமைத்து, மாணவ மாணவிகளுக்கு சிறந்த கல்வியறிவு ஊட்டி. அவர்களை நல்வழிப் படுத்துவதில் தம் கவனத்தைச் செலுத்தினர். ஆனால் கல்வித் துறையை விட, அவர்களுடைய அன்புப் பணி இன்னும் பல துறைகளில் செயற்பட்டன. முக்கியமாக துறவற கன்னியர்கள் அநாதை மடங்கள், சிறுவர் இல்லங்கள், நன்நடத்தை விடுதிகள், வைத்திய பராமரிப்பு இல்லங்கள், வயோதிப சாலைகள், புலனற்றோர் நிலையங்கள் போன்ற சமூக நலன் பேணும் தாபனங்களை ஆரம்பித்து, மக்களின் பலவித இன்னல்களைப் போக்கி, நற்பணி புரிந்தனர்.

பிறர் நல சமூக சேவையில் போர்த்துக்கேயரின் உருவாக்கமான "மிசறிக்கோடியா" என்ற என்ற பிறர் நல சேவைத் தாபனம் பலராலும் பாராட்டப்பட்டது. மக்களின் நன்கொடையினாலும், பரம்பரைச்

சொத்துக்களினாலும் தாபரிக்கப்பட்டு, பொதுநிலையினரால் நடத்தப்பட்ட இத் தாபனம், ஆன்ம சரீர செயல்களில், அதாவது கைதிகளை விடுவித்தல், நோயாளிகளைப் பராமரித்தல், உடுபுடவை அற்றவர்களை உடுத்துதல், பசியாயிருப்பவர்களுக்கு உணவளித்தல், இல்லிடம் அற்றோருக்கு இல்லிடம் அளித்தல், இறந்தவர்களை அடக்கம் செய்தல் போன்ற பணிகளால் மக்களுக்கு உதவி செய்தனர். அத்துடன் அனாதைகளைப் பராமரிப்பதற்கென அனாதை இல்லங்களும், மடங்களும் ஆரம்பிக்கப்பட்டன. அதன் கிளைகள் காலி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. வர்த்க, வருமான நோக்கத்திற்காக இலங்கைவந்த ஒல்லாந்த கிழக்கிந்திய கொம்பனி பிறர் நல சேவைகளில் அவ்வளவு அக்கரை எடுக்கவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் வருவாயைப் பெருக்க விவசாயத்துறை, கைத்தொழிற்துறை, போக்குவரத்துத்துறை போன்றவற்றில் கொண்டுவந்த முன்னேற்றத்தில் மக்கள் பெரிதும் நன்மை பெற்றனர்.

ஆங்கிலேயர் காலத்தில் பெருந் தொகையாகப் படையெடுத்து வந்த வெளிநாட்டு (இங்கிலாந்து, அமெரிக்க) கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள், மிஷனறிமார்கள் அநேகமாக கல்வித் துறையில் பணிபுரிந்தாலும், பலர் பல்வேறுபட்ட பிறர்நல சமூக சேவைகளில் ஈடுபட்டு, மக்களுக்குப் பெரும் சேவை செய்தனர். முக்கியமாக அநாதை மடங்கள், சிறுவர் இல்லங்கள், நன்நடத்தை விடுதிகள், வைத்திய பராமரிப்பு இல்லங்கள், வயோதிப சாலைகள், புலனற்றோர் நிலையங்கள், இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் மடங்கள் போன்ற சமூக நலன் பேணும் தாபனங்களை அமைத்து, மக்களின் பலவித இன்னல்களைப் போக்கி, நற்பணி புரிந்தனர்.

சுதந்திர இலங்கையில் திருச்சபையானது தம் முன்னோரால் ஆரம்பிக்கப்பட்ட சமூக நல சேவைகளைத் தொடர்ந்தாற்றி வருகின்றது. இன்று திருச்சபையின் பணியாளர்கள் அனைவரும் உள்நாட்டு. சுதேச வாசிகளாயிருப்பதால், தம் மக்களின் நல்வாழ்வில் கூடிய அக்கறை கொண்டு, அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர். நம் நாட்டில் ஏற்பட்ட சூறாவளி, பெருவெள்ளம், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும், மதக் கலவரம், இனக் கலவரம், வன்செயல்கள், உள்நாட்டுப் போர் போன்ற மனிதரால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளினாலும்

பாதிப்படைந்த மக்களின் தேவைகள் கணிப்பிட முடியாதவை. அத் தேவைகளை திருச்சபை அறிந்து, மக்களுக்கு உதவிசெய்ய பல்வேறுபட்ட சமூக சேவைகளை ஆரம்பித்து முன்னெடுத்து வருகிறது. திருச்சபையின் பாடசாலைகள் அனைத்தும் அரச பாடசாலைகள் ஆக்கப்பட்டபடியால் பாடசாலைகளில் பணிபுரிந்த பெருமளவிலான குருக்கள், கன்னியர், துறவிகள் தங்களை பிறர் நல சமூக சேவைகளில் ஈடுபடுத்திப் பணியாற்றி வருகின்றனர். கத்தோலிக்க திருச்சபை தன் சமூக சேவைகளை தனது நீதி, அமைதி, மனித முன்னேற்றத்திற்கான ஆணைக் குழுவின் வழியாக ஒழுங்கு செய்து, செயற்படுத்தி வருகின்றது. அந்த ஆணைக்குழவின் கீழ் இயங்கும் தேசிய அமைப்பான சமூக பொருளாதார முன்னேற்ற நிலையத்தின் (SEDEC - Caritas) ஊடாக முன்னெடுத்து வருகின்றது. சமூக பொருளாதார முன்னேற்ற நிலையமானது தனது கிளைகளை ஏனைய மறைமாவட்டங்களில் (உதா. கொழும்பில்: SETH SARANA, யாழ்ப்பாணத்தில்: HUDEC, மன்னாரில்: VALVAUTHAYAM, மட்டு-திருமலையில்: EHED, கண்டியில்: SETIK, பதுளையில்: USCOT) ஏற்படுத்தி, அவற்றின் வழியாக தன் திட்டங்களை அமுல் செய்து வருகின்றது. நிவாரணம் வழங்குதல், மீள்குடியேற்றம் செய்தல், வீடுகள் கட்டிக் கொடுத்தல், சுய தொழில் திட்டங்கள், உளவள ஆற்றல் பணிகள், இன மத ஐக்கியத்தை, உறவைக் கட்டியெழுப்புதல், மனித உரிமைகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மனித உரிமைகள் மீறலால் பறிக்கப்பட்டவர்களுக்காக வாதாடுதல், பெண்கள் உரிமைகளுக்காக, விடுதலைக்காக உழைத்தல், சிறுவர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தல் போன்ற பல தரப்பட்ட சமூக சேவைகளை மக்களுக்கு ஆற்றிவருகின்றது. பல துறவற சபைகளும் தங்கள் சமூக சேவை மையங்களை (CRS, JRS, OSS) அமைத்து, சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்றன. இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பொழுது, 300,000 க்கு அதிகமான மக்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்து, அகதிகளாக்கப்பட்டு, முகாம்களில் முடக்கி வைக்கப்பட்ட வேளையில் பல துறவிகள், கன்னியர்கள் அங்கு சென்று, தங்கியிருந்து, மக்களோடு மக்களாக வாழ்ந்து, அவர்களின் கஷ்ட துன்பங்களில் பங்கெடுத்து, அவர்களுக்கு எவ்வித இன, மத பேதமின்றி, தங்களால் இயன்றளவு உதவிகள் செய்து ஆறுதலளித்தனர்.

பயத்தினாலும், இழப்புகளினாலும் மனமுடைந்து, மனச் சோர்வுற்று, வாழ்வில் வெறுப்புற்று வாழ்ந்த மக்களுக்கு அவர்கள் உளவளத் துணை அளித்து, மனத்திடம் அளித்து அவர்களை வாழ்வைத்தனர்.

பல்வேறு புரொட்டஸ்தாந்து சபைகளும், ஒன்றிணைந்து, இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபையை அமைத்து, அதனூடாக தங்கள் சமூக சேவைகளை ஒருங்கிணைந்து முன்னெடுத்துச் செல்கின்றனர். அவர்கள் எவ்வித இன மத பாகுபாடின்றி மக்களுக்குச் சிறந்த பணியாற்றி வருகின்றனர். அவர்கள் அபிவிருத்திக் குழு, மகளிர் குழு, உளவளப்பணிக் குழு, இளைஞர் குழு, வீடு உறைவிட வசதிக் குழு, நீதி சமாதானத்திற்கான குழு, நிதியுதவிக் குழு என்ற பல குழுக்களை அமைத்து, தம் சமூகப் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றனர். முற்பள்ளிகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் இல்லங்கள், சத்துணவு ஊட்டும் நிலையங்கள், முதியோர் இல்லங்கள், செவிப் புலனற்றோர் இல்லங்கள், கைத் தொழில் பயிற்சி நிலையங்கள், வைத்திய சாலைகள், அகதி முகாம்கள் போன்ற நிலையங்களை அமைத்து, மக்ளுக்கு உதவி செய்து வருகின்றனர்.



**தேர்ச்சி 9.0 :** கிறிஸ்தவ திருவழிபாட்டில் பங்குபற்றுவதன் வழியாக கிறிஸ்தவ வாழ்வு வளர்ச்சியடைகிறது என்பதை விளங்கி, வாழ்வில் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 9.1 :** விசுவாசத்தை வளர்க்க திருவழிபாட்டின் பங்களிப்பை ஆராய்வர்.

வழிபாடு என்பது வாழ்க்கையின் வெளிப்பாடு என்று சொல்வர். எமது கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் கடவுள்பால் கொண்டிருக்கும் அன்பை, நம்பிக்கையை, எதிர்நோக்கை, எம் நன்றியை, ஆராதனையை, கீழ்ப்படிதலை குறிகள், அடையாளங்கள், அபிநயங்கள், சடங்குகள் வழியாக வெளிப்படுத்துவதை நாம் வழிபாடு என்றழைக்கின்றோம். கிறிஸ்தவர்கள் தங்கள் இத்தகைய உள்ளக் கிடக்கைகளை, சிந்தனைகளை அடையாளங்கள், சடங்குகள் வழியாக வெளிப்படுத்துவதை கிறிஸ்தவ வழிபாடு என்றழைக்கின்றோம். இவ் அடையாளங்கள் வழியாக நாம் இறைவனுக்கு வெளிப்படுத்தும் உள்ளுணர்வுகளை இறைவன் ஏற்றுக் கொண்டு, அதே அடையாளங்கள் வழியாக தம் அருளை, அன்பை, ஆசீரை நமக்கு வழங்குகிறார். இவ்வாறாக கிறிஸ்தவ வழிபாடு வழியாக எங்களில் இறையருளும், இறையன்பும் பெருகி, எம் கிறிஸ்தவ வாழ்வு வளரச்சியடைகிறது.

## 9.1.1. தொடக்க கால கிறிஸ்தவ சமூகமும் திருவழிபாடும்

திருச்சபை, கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையாகவே அரம்பமாகியது. அதன் தாபகராகிய இயேசுக் கிறிஸ்து ஒரு யூதரே. அவர் முதல்முதலில் தமது சீடர்களாகத் தெரிந்தெடுத்த பன்னிரு அப்பேஸ்தலர்களும் யூதர்களே. பெந்தகோஸ்தே தினத்தன்று அப்போஸ்தலர்களின் போதனையைக் கேட்டு, மனந்திரும்பி, இயேசுவில் விசுவாசம் கொண்டு, திருமுழுக்கு வழியாக திருச்சபையில் இணைந்துகொண்ட முதல் கிறிஸ்தவர்களும் யூதர்களே. இயேசு ஒரு யூத குடும்பத்திலே பிறந்து, யூத மத ஒழுங்குகளுக்கு அமைய

வளர்க்கப்பட்டவர். அவர் யூதரின் எருசலேம் ஆலயத்திற்கும், செபக்கூடங்களுக்கும் சென்று, அங்கு நடைபெற்ற வழிபாடுகளிலும், சடங்குகளிலும், திருவிழாக்களிலும் பங்கெடுத்தாரென நற்செய்திகளில் படிக்கிறோம். அவரைத் தொடர்ந்து, அவருடைய முதற் சீடர்களும், பின்னர் முதல் கிறிஸ்தவர்களும் எருசலேம் ஆலயத்திலும், செபக்கூடங்களிலும் நடைபெற்ற வழிபாடுகள், சடங்குகள், செபங்கள், திருவிழாக்களிலே பங்கெடுத்தனர். பவுலும் எருசலேம் ஆலயத்துக்கும், செபக்கூடங்களுக்கும் செல்வதைக் காண்கிறோம். ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்களுக்கே உரித்தான அப்பம் பிட்குதல், திருமுழுக்கு போன்ற சடங்குகளை, கொண்டாட்டங்களை தனியார் வீடுகளில் நடத்தினாலும், பொது வழிபாடுகள், பொதுக் கொண்டாட்டங்களுக்கு எருசலேம் ஆலயத்துக்கே சென்றனர். இது எருசலேம் நகரமும், ஆலயமும் உரோமையரால் 70ம் ஆண்டில் தகர்த்து, தரைமட்டமாக்கப்படும் வரை நடைபெற்றது.

> ஆண்டுதோறும் இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேமுக்குப் போனார்கள் - (லூக். 2:41).
>
> யூதர்களுடைய பாஸ்கா விழா விரைவில் வரவிருந்ததால் இயேசுவும் எருசலேமுக்குச் சென்றார் - (யோவா. 2:13).
>
> யூதர்களின் திருவிழா ஒன்று வந்தது. இயேசுவும் எருசலேமுக்குச் சென்றார். - (யோவா. 5:1).
>
> ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடி வந்தார்கள். பேருவகையோடும், எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தை பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள் - (தி.தூ.ப. 2:46).
>
> ஒரு நாள் இறைவேண்டல் செய்யும் நேரமாகிய பிற்பகல் மூன்று மணிக்குப் பேதுருவும் யோவானும் கோவிலுக்குச் சென்றனர். - (தி.தூ.ப. 3:1)

எருசலேம் நகரமும், ஆலயமும் 70ம் ஆண்டில் உரோமையரால் தரைமட்டமாக்கப்பட்ட பின், நாலா பக்கமும் சிதறுண்டு ஓடிய யூதர்கள் 80ம் ஆண்டில் பரிசேயர்களின் தலைமையில் யூத மதத்தைப் புனரமைக்கும் நோக்குடன் ஜம்னியா என்னுமிடத்தில் ஒன்றுகூடினர்.

அச் சங்கத்தில், மரத்தில் தொங்கி இறந்த, அதாவது கடவுளால் சபிக்கப்பட்ட இயேசுவை மெசியாவாகவும், கடவுளின் மகனாகவும் ஏற்றுக் கொள்ளும் கிறிஸ்தவர்களை தங்கள் ஆலயங்களுக்கும், செபக்கூடங்களுக்கும் வர இடமளித்து, எருசலேம் ஆலயத்தை தீட்டுப்படுத்திய தங்கள் பாவத்திற்காகவே கடவுள் எருசலேம் நகரத்தையும், ஆலயத்தையும் அழிக்க அனுமதித்தாரென முடிவுசெய்தனர். எனவே கிறிஸ்தவர்கள் இனிமேல் எருசலேம் ஆலயத்திற்கு, செபக் கூடங்களுக்கு வருவதையும், அவர்கள் தங்கள் வழிபாடுகளில். திருவிழாக்களில் பங்கெடுப்பதையும் தடைசெய்வதெனத் தீர்மானித்தனர். அதன் பின்னரே முதல் கிறிஸ்தவர்கள் தாங்கள் ஒன்று கூடுவதற்கும், தங்கள் வழிபாடுகளை நடத்துவதற்கும் வேறு பொது இடங்களைத் தேடி, தங்கள் வழிபாடுகளை தாங்களே ஒழுங்கு செய்யவும் வேண்டிய தேவை ஏற்பட்டது. அக்காலகட்டத்தில் புதிதாகத் திருச்சபையில் சேர்ந்த, யூத மதத்தை, வழிபாட்டை, யூத பண்பாடு. கலாச்சாரத்தை அறியாத புறவினக் கிறிஸ்தவர்களும் அவர்களுடன் இணைந்து கொண்டார்கள். அதுவே கிறிஸ்தவர்கள் தங்களுக்கென்ற ஒரு தனிக் கிறிஸ்தவ வழிபாட்டு முறையை அமைப்பதின் தொடக்கமாகவிருந்தது.

முதல் கிறிஸ்தவர்கள் தங்கள் தனிக் கிறிஸ்தவ வழிபாட்டு முறையை ஆரம்பித்தபொழுது, தங்களுக்குப் பழக்கப்பட்ட, தாங்கள் இவ்வளவு காலமும் பின்பற்றிவந்த யூத வழிபாட்டு முறையிலிருந்து பல அம்சங்களை உள்வாங்கி, அவற்றிற்கு கிறிஸ்தவ கொள்கை, கோட்பாடுகளின்படி புதிய அர்த்தத்தைக் கொடுத்து, சில மாற்றங்களுடன் தம் வழிபாட்டில் சேர்த்துக்கொண்டார்கள். உதாரணமாக, யூதர்கள் அனுசரித்த சபாத் ஓய்வு நாள் ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டது. யூதர்களின் பாஸ்கா விழா கிறிஸ்துவின் பாஸ்கா விழாவாக மாறியது. யூதர்களின் பெந்தேகோஸ்து விழா. கிறிஸ்தவர்களின் பரிசுத்த ஆவியின் வருகையின் விழாவாக, திருச்சபையின் பிறப்பு விழாவாக மாறியது. யூதர்களின் மன்றாட்டு நேரங்கள் கிறிஸ்தவர்களின் இறைபுகழ்மாலை நேரங்களாகின. இப்படியாக பல யூத வழிபாட்டு அம்சங்களை தொடக்க காலக் கிறிஸ்தவர்களின் வழிபாட்டில் காண்கிறோம்.

யூதர்கள் தங்கள் வரலாற்றிலே பல அந்நிய நாடுகளின்

(அசீரியர், பபிலோனியர், பேசியர்) ஆட்சியின் கீழ் பல்லாண்டு காலம் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். கிறிஸ்தவம் தொடங்கிய காலத்துக்கு அண்மித்த காலங்களில் அவர்கள் கிரேக்க ஆட்சியின் (கி.மு.333-கி.மு.63) கீழும், உரோமையரின் ஆட்சியின் (கி.மு.63-கி.பி.305) கீழும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அந்நிய ஆட்சியாளர்கள், குறிப்பாக கிரேக்கர், தங்கள் பண்பாடு, கலாச்சாரத்தை, பழக்கவழக்கங்களை யூதர்களின் மேல் திணிக்க முயற்சித்திருகிறார்கள். எனவே யூத பண்பாடு. கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், மரபுகளிலே கிரேக்க, உரோமைய பண்பாடுகளின், கலாச்சாரத்தின், மரபுகளின், பழக்க வழக்கங்களின் தாக்கத்தை நாம் எதிர்பார்க்கலாம். யூத வழிபாடுகளிலும், வழிபாட்டு முறைகளிலும், அதேபோல் யூத கிறிஸ்தவர்களால் அமைக்கப்பட்ட கிறிஸ்தவ வழிபாடுகளிலும், வழிபாட்டு முறைகளிலும் நாம் கிரேக்க, உரோமைய பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், மரபுகளைக் காண்கிறோம். சுருங்கக் கூறின், ஆரம்ப கால திருச்சபையின் வழிபாட்டில் அக்காலத்தில் நிலவிய யூத, கிரேக்க, உரோமைய பண்பாடு, கலாச்சாரம், மரபுகள், பழக்கவழக்கங்களின் சில தாக்கங்களைக் காண்கிறோம். அவைகள் ஆரம்ப காலக் கிறிஸ்தவ வழிபாட்டில் உள்வாங்கப்பட்டு, சில மாற்றங்களுடன் தழுவி அமைக்கப்பட்டு, கிறிஸ்தவ மயமாக்கப்பட்டன.

**தொடக்க கால கிறிஸ்தவ வழிபாட்டில் யூத கலாச்சாரத்தின் தாக்கங்கள்**

- ஏழு நாட்களைக் கொண்ட வாரம்
- ஞாயிறு தினத்துக்கு மாற்றப்பட்ட சபாத் தினம்
- விசுவாசிகள் மன்றாட்டு
- இறைவார்த்தை வழிபாடு
- அப்பம் பிட்கும் வழிபாடு
- பாஸ்கா விழா
- பெந்தெகோஸ்து விழா
- மன்றாட்டு நேரம்

- இறை புகழ் மாலை
- துப்பரவுச் சடங்கு

**தொடக்க கால கிறிஸ்தவ வழிபாட்டில் கிரேக்க கலாச்சாரத்தின் தாக்கங்கள்**

- திருவழிபாடுகளில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான சொற்கள் (Liturgy, Eucharist)
- வளர்ந்தோர்க்கான திருமுழுக்கு வழிபாட்டில் தைலம் பூசுதல்
- தீய ஆவிகளை விரட்டுதல்
- திருவிழிப்பு
- மன்றாட்டு மாலை (Kyrie Eleison)

**தொடக்க கால கிறிஸ்தவ வழிபாட்டில் உரோமைய கலாச்சாரத்தின் தாக்கங்கள்**

- திருப்பலியின்போது அணியப்படும் ஆடைகள்
- விளக்குகள், தூபம் பயன்படுத்துதல்
- திருவழிபாட்டு மன்றாட்டுகள்
- இலத்தீன் மொழி
- கிரகோரியாரின் இசை
- சில திருமண, மரணச் சடங்கு முறைகள்

**திருத்தூதர் காலத்தில் நற்கருணை வழிபாடு**

திருத்தூதர் காலத்தில் நற்கருணை வழிபாடு கொண்டாடப்பட்ட முறையைப்பற்றிய முதல் விவரணத்தையும், அதன் அர்த்தத்தையும் நாம் புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் வாசிக்கிறோம்.

> ஆண்டவராகிய இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில், அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, "இது உங்களுக்கான என் உடல். என் நினைவாக

இவ்வாறு செய்யுங்கள்" என்றார். அப்படியே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து, "இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும்போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" என்றார். ஆதலால் நீங்கள் இநத அப்பத்தை உண்டு, கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள். ஆகவே எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார். எனவே ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருக வேண்டும் (1 கொரி. 11: 23-26).

இங்கு ஆதிக் கிறிஸ்தவர்கள் நற்கருணை விருந்தைப்பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களையும், அவர்கள் அதைக் கொண்டாடிய முறையையும் நாம் காண்கிறோம். நற்கருணை ஒரு நினைவு வழிபாடு. அதன் வழியாக நாம் கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு. உயிர்ப்பைக் கொண்டாடுகின்றோம். அவற்றை மீளவும் செயலபடச் செய்கிறோம், நாங்களும் பங்கு கொள்கிறோம். நற்கருணை விருந்தில் நாம் பங்கு பற்றுவதன் வழியாக நாம் கிறிஸ்துவோடும், எமக்குள்ளும் ஒன்றிக்கிறோம். அது ஒற்றுமையின் சின்னமாக இருக்கிறது. எனவே தகுந்த ஆயத்தத்துடன் அதில் பங்குகொள்ள வேண்டும். எங்களுக்குள் ஒற்றுமையின்றி, ஒற்றுமையின் அருட்சாதனமாகிய நற்கருணை விருந்தில் நாம் பங்கு கொண்டால், அது எங்களுக்கு நிலையான வாழ்வுக்குப் பதிலாக அழிவையே கொணரும்.

இயேசு தம் முதல் நற்கருணை வழிபாட்டை, அப்பம் பிட்கும் வழிபாட்டை ஒரு விருந்தின் பின்னணியில், பாஸ்கா விருந்தின் பின்னணியிலேயே நடத்தினார். அவரைத் தொடர்ந்து அவருடைய திருத்தூதர்களும் நற்கருணை வழிபாட்டை ஒரு விருந்தின் பின்னணியில், அதாவது யூதர்களின் "அகப்பே" எனும் அன்பு விருந்தின் பின்னணியிலேயே நடத்தினர். நற்கருணை வழிபாட்டில் பங்கெடுக்க வருகின்றவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து உணவு வகைகளையும் பானங்களையும்

எடுத்துக்கொண்டு வந்து, ஒரு வீட்டில் ஒன்று கூடுவர். எல்லோரும் வந்தவுடன் முதலில் இறைவார்த்தை வழிபாடு இடம்பெற்றது. அப்போஸ்தலர்களின் படிப்பினைகளிலிருந்து அல்லது இறைவாக்கினரின் நூலிலிருந்து வாசகங்கள் வாசிக்கப்பட்டன. தொடர்ந்து தாங்கள் கொண்டுவந்த உணவுகளையும், பானத்தையும் எவ்வித வேறுபாடுமின்றி தமக்குள்ளே பகிர்ந்து உண்டனர். அது அவர்களுக்கிடையில் இருந்த ஒற்றுமையை, அன்பை, அன்னியோன்னியத்தை வெளிப்படுத்தி வளர்த்தது. பின்னர் குடும்பத் தலைவன் அல்லது மூத்தவர் அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் எடுத்து, அதன்மீது நன்றி கூறி, அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் கிறிஸ்துவின் திருச் உடலாகவும், திரு இரத்தமாகவும் மாற்றினார். பின்பு அப்பத்தைப் பிட்டு, ஒன்று கூடியிருந்தவர்களுக்கு உண்பதற்காகப் பகிர்ந்தளித்தார். கூடியிருந்தவர்கள் கிண்ணத்தை எடுத்துப் பருகிய பின, குழுத் தலைவர் திரு உரை நிகழ்த்தினார். திரு உரையின் முடிவில், பாடல் ஒன்றைப் பாடி, வழிபாட்டை முடித்தனர். வழிபாட்டில் பங்குபற்றியவர்கள் தத்தமது வீடுகளிலிருந்து வருகை தர முடியாதவர்களுக்கு உணவு விருந்தின் ஒரு பகுதியை எடுத்துச் சென்றனர். நற்கருணை விருந்து வாரத்திற்கு ஒரு முறை, அதாவது வாரத்தின் முதல் நாள் (ஞாயிறு) மாலை வேளையில் கிறிஸ்தவ தனியார் வீடுகளில் இடம் பெற்றதையும் அறிய வருகிறோம் (தி.தூ.ப. 20:7).

முதலாம் நூற்றாண்டின் முடிவிலும் இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் கிறிஸ்தவர்கள் தங்கள் முக்கிய பொது வழிபாடான நற்கருணை விருந்தைக் கொண்டாடிய முறைபற்றி, அப்போஸ்தொலிக்க பிதாக்களின் நூல்களில், குறிப்பாக "டிடாக்கே" என்னும் பன்னிரு அப்போஸ்தலரின் படிப்பினைகள் நூலில் காண்கிறோம். நற்கருணை வழிபாடு ஞாயிற்றுக் கிழமைகளிலேயே நடைபெற்றது. அது ஒரு பலியாகக் கருதப்பட்டது. எனவே அதன் புனிதத் தன்மை பாவத்தினால் மாசடையாமல் காக்க, வழிபாட்டுக்கு முன் கிறிஸ்தவர்கள் பாவசங்கீர்த்தனம் செய்து, பாவ மன்னிப்புப் பெற்றுக் கொள்வர். பாவத்தோடு இருப்பவர்கள், தன் சகோதரர்களோடு ஒப்புரவாகாமல் இருப்பவர்கள், இன்னமும் திருமுழுக்குப் பெறாத ஆயத்தக்காரர், வழிபாட்டின் முதற் பகுதியில் (மறை உரை) மட்டுமே சமூகங்கொடுக்கலாம், அவர்கள் நற்கருணை விருந்தில் பங்கெடுக்க அனுமதிக்கப்படவில்லை.

நற்கருணை விருந்தில் பங்கெடுப்பதன் வழியாக கிறிஸ்தவன் நிலையான வாழ்வை அடைகிறான். அப்போஸ்தொலிக்க பிதாக்களில் ஒருவரான அந்தியோக்கிய இஞ்ஞாசியாரின் கருத்துப்படி நற்கருணை நம் பாவங்களுக்காகப் பாடுபட்டு, மரணித்து, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் உடல். அது கிறிஸ்தவனை கிறிஸ்துவுடனும், ஏனைய கிறிஸ்தவர்களுடனும் ஒன்றிக்கச் செய்கிறது. நற்கருணை விருந்து ஆயரின் அல்லது அவரின் பிரதிநிதியின் முன்னிலையிலேயே இடம் பெறவேண்டும். நற்கருணை ஒற்றுமையைக் குறிப்பது மட்டுமல்ல, ஒன்றிப்பை உருவாக்கின்றது. நற்கருணை நிலையான வாழ்வுக்கு உயிர்ப்பதை உறுதிசெய்கிறது.

மேலும், பித்தினியாவின் உரோமைய ஆளுநரான பிளினி என்பவர் உரோமைய சக்கரவர்த்தி திராஜனுக்கு எழுதிய கடிதத்தில் ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையைப் பற்றி எழுதியபோது அவர்கள் நற்கருணை விருந்து கொண்டாடியதைப் பற்றியும் எழுதியிருக்கிறார். அதன்படி, கிறிஸ்தவர்கள் குறிப்பிட்ட நாள் அதிகாலையில் ஒரு மறைவான இடத்தில், நிலவறைகளில், ஒன்று கூடி, தாங்கள் இறைவனென நம்பிக் காத்திருந்த கிறிஸ்துவுக்குச் சங்கீதங்கள் பாடினர். களவு கொள்ளை, விபசாரம், நம்பிக்கைத் துரோகம் போன்ற தீய செயல்கள் செய்வதில்லையென வாக்குறுதி செய்தனர். தொடர்ந்து ஒன்று கூடி, எவ்வித தீங்குமற்ற திருவிருந்தில பங்கெடுத்தனர். பிளினி இப்படி எழுதுவதற்குக் காரணம் என்னவெனில் கிறிஸ்தவர்கள் இரவில் இரகசியமாக ஒன்றுகூடி, குழந்தைகளைப் பலிகொடுத்து, அவற்றின் உடலை உண்டு, இரத்தத்தைக் குடிக்கிறார்களென உரோமையர் கிறிஸ்தவர்கள்மேல் பொய்க் குற்றம் சுமத்தியிருந்தனர். தனியார் வீடுகளில் மாலையில் இடம்பெற்ற நற்கருணை வழிபாடு, கலாபனைக் காலத்தில் இரவில் மறைவாக நிலவறைகளில் இடம்பெற்றது குறிப்பிடத் தக்கது.

சத்தியத்தின் பாதுகாவலாரான புனித யுஸ்தினாருடைய (150) கருத்துப்படி நற்கருணை மனித அவதாரமெடுத்த கிறிஸ்துவின் உடலும் இரத்தமும் ஆகும். முன்னர் மனுவுரு எடுத்த அதே கிறிஸ்து நற்கருணையில் அப்ப இரச வடிவெடுக்கிறார். தொடர்ந்து யுஸ்தினார் தம் காலத்தில் (150) நற்கருணை வழிபாடு நிறைவேற்றப்பட்ட முறையை

விபரிக்கிறார். வழிபாட்டின் முதற் பகுதியில், திருப்பலிக்கு ஆயத்தமாக அப்போஸ்தலரின் போதனைகளிலிருந்து அல்லது இறைவாக்கினர் நூலிலிருந்து வாசகம் இடம் பெற்றது. தொடர்ந்து வழிபாட்டுக்குத் தலைமை வகிப்பவரால் மறை உரை வழங்கப்பட்டது. பின்பு விசுவாசிகள் மன்றாட்டு இடம்பெற்றது. விசுவாசிகளுக்காக, புதுக் கிறிஸ்தவர்களுக்காக, மற்றும் தலைவர் செபிக்க விரும்பும் ஏனைய தேவைகளுக்காக செபிக்கப்பட்டது. ஒருவருக்கொருவர் சமாதான முத்தம் அளிப்பதுடன் முதற்பகுதி நிறைவு பெற்றது. அடுத்து வழிபாட்டின் இரண்டாம் பகுதி அப்பமும், இரசமும், தண்ணீரும் காணிக்கைகளுடன் கொண்டுவரப்பட்டு, ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் ஆரம்பமாகியது. அவை தலைவரிடம் கொண்டுவரப்பட்டு, அவர் இயேசு நற்கருணையை தாபித்த வரலாற்றை வாசித்து அப்பத்தையும் இரசத்தையும் வசீகரம் செய்தார். பின்பு வழிபாட்டின் முக்கிய பாகமாக, அவர் இறைத் தந்தைக்கு மகன் கிறிஸ்து வழியாகப் புகழ்பாடி நன்றி கூற (இயூக்கறிஸ்தியா), விசுவாசிகள் அனைவரும் ஒரே குரலாக உரத்த குரலில் "ஆமென்" எனப் பதிலளித்து, அதை ஆமோதித்து உறுதிப்படுத்தினர். தொடர்ந்து வசீகரம் செய்யப்பட்ட அப்பமும் இரசமும் திருத்தொண்டரினால் விசுவாசிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு, அனைவரும் அதில் உண்டு பருகினர். சிலர் அதில் ஒரு பகுதியை நற்கருணை வழிபாட்டுக்குச் சமூகமளிக்க முடியாமலிருந்தவர்களுக்கென வீடுகளுக்கு எடுத்துச் சென்றனர். இவ்வாறு இரண்டாம் நூற்றாண்டில் மிளிர்ந்த நற்கருணைத் திருவழிபாட்டில் இரண்டு முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன: முதலில் விசுவாசிகள் அனைவரைம் வழிபாட்டில் பங்கெடுக்க வைக்கும் சமூகத் தன்மை. அவர்கள் எல்லோரும் ஒருமித்து தலைவர் செய்த நன்றிச் செபத்தை ஆமோதித்து உறுதிப் படுத்தியது-மல்லாமல், எல்லோரும் நற்கருணை விருந்திலும் முழுமையாகப் பங்கெடுத்தனர். இரண்டாவது தலைவர் செய்த பெரிய செபம் ஒரு நன்றிச்செபமாக உருவெடுத்தது. எனவே திருப்பலி "யூக்கறிஸ்ரியா" (Eucharistia), அதாவது "நன்றி கூறும் வழிபாடு" என அழைக்கப்பட்டது. இறைத் தந்தைக்கு முழுமையான ஆராதனையும் நன்றியும் செலுத்துவதே நற்கருணை வழிபாட்டின் முக்கிய நோக்கமாக அமைந்தது. புனித யுஸ்தின் நற்கருணையின் பலித் தன்மையைக் குறிப்பிடாவிட்டாலும், புனித இரனேயுஸ் நற்கருணையின் தியாகப்

பலியின் கருத்தை வலியுறுத்துகிறார். "கிறிஸ்துவின் உடலும் இரத்தமுமாக மாறும் காணிக்கைப் பொருட்களான அப்பமும் இரசமும் புதிய உடன்படிக்கையின் தூய பலியைப் பிரதிபலிக்கின்றன". இரண்டாம் நூற்றாண்டில் நற்கருணை வழிபாடு காலையில் இடம்பெற்றதால், அதற்கும் "அகப்பே" என்னும் அன்பு விருந்துக்கும் இடையேயிருந்த தொடர்பு இல்லாமல்போக, நற்கருணை வழிபாடு ஒரு தனி வழிபாடாக நடைபெற்றது.

மூன்றாம் நூற்றாண்டிலும் நற்கருணை வழிபாட்டில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. கிப்போலிற்றஸ் எழுதிய "திருச்சபை ஒழுங்கு" என்ற நூலின்படி, திருத்தொண்டர்கள் திருபலிக்குரிய காணிக்கைப் பொருட்களைக் கொண்டுவருவதுடன் வழிபாடு ஆரம்பமாகியது. நற்கருணை வழிபாட்டிற்குத் தலைமைதாங்கும் ஆயர், அவருடன் கூட்டுப்பலி ஒப்புக்கொடுக்கும் ஏனைய குருக்களுடன், காணிக்கைப் பொருட்கள்மீது தம் கரங்களை விரித்து பெரிய நன்றிச் செபத்தைச் சொன்னார். நன்றிச் செபம் ஆயரும் அனைத்து விசுவாசிகளும் மாறிமாறிச் சொல்லும் குறுகிய சொற்றொடர்களைக் கொண்ட சிறிய செபத்துடன் ஆரம்பமாகியது. நன்றிச் செபம் இறைவன் எம் மீட்பரும் இரட்சகருமாக அனுப்பிய அவரின் அன்பு மகனாகிய இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் தந்தையை நோக்கிக் கூறப்பட்டது. ஆயர் திருச்சபை ஒப்புக்கொடுக்கும் காணிக்கைப் பொருட்கள்மீது பரிசுத்த ஆவியைப் அனுப்பும்படியும் செபித்தார். விசுவாசிகள் ஒரே குரலாகக் கூறிய "ஆமென்" அதை ஆமோதித்தது. ஆயர் செபித்த நன்றிச் செபம் மாறுபடக்கூடியது. சந்தர்ப்பத்துக்கு, தேவைக்கு ஏற்ற முறையில் ஆயர் அதை மாற்றி அமைத்தார். தேர்த்தூலியன் நற்கருணை வழிபாட்டின் முடிவில் விசுவாசிகளை வழியனுப்பும் வார்த்தைகள் இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறாக ஆதித் திருச்சபையில் கிறிஸ்தவர்களுக்கே உரிய நற்கருணை வழிபாடு படிப்படியாக அமைப்புப் பெற்றதை நாம் காண்கிறோம். தொடக்கத்தில் வாரத்தில ஒருநாள் அதாவது ஞாயிற்றுக் கிழமையே நற்கருணை வழிபாடு இடம்பெற்றது. ஆனால் மூன்றாம் நூற்றாண்டின் முடிவில் தினப் பூசைப் பலி இடம்பெற்றதை நாம் அறிகிறோம்.

**திருச்சபையின் தொடக்க காலத்தில் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) வழிபாடு**

நம் ஆண்டவர் இயேசு இவ்வுலகை விட்டு விண்ணகம் செல்லுமுன் தம் சீடர்களை நோக்கி: "நீங்கள் போய் எல்லா மக்களினத்-தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" (மத். 28:19) எனப் பணித்துச் சென்றார். எனவே ஒருவன் கிறிஸ்துவின் சீடனாவதற்கு, திருச்சபையில் உறுப்பினன் ஆவதற்கு, அவன் திருமுழுக்குப் பெறவேண்டும். அப் பணிப்புரைக்கு அமைய, பெந்தேகோஸ்து தினத்தன்று பேதுரு ஆற்றிய முதற் திருவுரையை அடுத்து, நற்செய்தியை ஏற்றுக்கொண்ட மூவாயிரம் பேருக்கு அப்போஸ்தலர்கள் திருமுழுக்கு அளித்து திருச்சபையில் சேர்த்துக் கொண்டதை நாம் திருத்துஸதர் பணி நூலில் படிக்கிறோம் (தி.தூ.ப. 2:41). திருமுழுக்கு வழியாகவே புதிய அங்கத்தவர்கள் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இவ்வாறு திருமுழுக்கு திருச்சபையின் நுழைவாயிலாக அமைந்தது.

எனினும் திருச்சபையின் திருமுழுக்கு யூதரின் திருமுழுக்குப் போன்று வெறும் நுழைவுச் சடங்காகவோ அல்லது ஸ்நாபகரின் திருமுழுக்குப் போன்று ஒருவர் மனம்திரும்பியதைக் காட்டும் ஒரு வெறும் வெளி அடையாளமாகவோ, அல்லது ஒரு சுத்திகரிப்புச் சடங்காகவோ அமையவில்லை. திருச்சபையின் திருமுழுக்கு பரிசுத்த ஆவியால் அளிக்கப்பட்டது. அது ஒரு திருவருட்சாதனம். ஒரு சுத்திகரிப்பு, நுழைவுச் சடங்கு மட்டுமல்ல, உண்மையாகவே மனிதரின் பாவங்களுக்கு மன்னிப்பு அளித்து, அவர்களைத் தூய்மைப் படுத்தி, இறைவனுக்குச் சொந்தமாக்கி, இறைவல்லமையால் அவர்களை நிரப்புகிறது. திருமுழுக்குப் பெறுகிறவன் புத்துயிர் பெற்று, நிலைவாழ்வு கொண்ட புதுப்படைப்பாகிறான். கிறிஸ்தவர்கள் பெற்ற திருமுழுக்கு "பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் பெயரால்" (தி.தூ.ப. 2:38) வழங்கப்பட்டது. தெய்வ ஆளாகிய இயேசுவே திருமுழுக்கு வழிபாட்டின் மையமாகவிருந்து, அதற்கு பாவத்தை மன்னித்து திருச்சபையில் சேர்க்கும் உன்னத ஆற்றலை அளிக்கிறார். அவர்கள் பரிசுத்த ஆவியையும் பெற்று, இறைவனின் ஆலயமுமாகிறார்கள். புனித பவுலின் கருத்துப்படி

திருமுழுக்கின் வழியாக ஒருவன் கிறிஸ்துவின் சிலுவை மரணத்திலும் உத்தானத்திலும் பங்கு கொள்கிறான். அவன் தண்ணீரில் அமிழ்த்தப்படும்போது பாவத்துக்கு மரித்து, தண்ணீரிலிருந்து வெளியேறும்போது அவன் புத்துயிருடன் உயிர்தெழுகின்றான் (உரோ. 6: 2-8). திருமுழுக்கு வழியாக கிறிஸ்து வென்றெடுத்த மீட்பில் அவன் பங்கெடுக்கின்றான். திருச்சபையின் திருமுழுக்கு வழிபாடு படிப்படியாக அமைப்புப் பெறுவதைக் காண்கிறோம்.

ஆரம்பத்தில் நற்செய்தியை ஏற்று கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்களுக்கு உடனடியாக, அவர்களை ஓடும் நீரில் மூழ்கச் செய்து, திருமுழுக்கு அளிக்கப்பட்டது. திருத்தூதர் பணி நூலில் சில சந்தர்ப்பங்களில் முழுக் குடும்பமும் (உதா. கொர்ணேலியு) திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில சேர்வதைக் காண்கிறோம். எனவே சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் சில சந்தர்ப்பங்களில் திருமுழுக்கு அளிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் தேவை ஏற்படும் பட்சத்தில் பொதுநிலையினரும் திருமுழுக்கு அளித்தனர். "டிடாக்கே" என்னும் பன்னிரு அப்போஸ்தலர்களின் படிப்பினை நூல் முதலாம் நூற்றாண்டின் முடிவில் திருச்சபையில் திருமுழுக்கு அளிக்கப்பட்ட முறையைப்பற்றி கூறுகிறது: அக்காலத்தில் மனந்திரும்பியவர்கள் திருமுழுக்குப் பெறுமுன் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஆயத்தம் செய்யப்பட்டார்கள். இவ்வாறு திருமுழுக்குக்கு ஆயத்தம் செய்யப்படுபவர்கள் "ஆயத்தக்காரர்" (catechumens) என்று அழைக்கப்பட்டனர். இவ் ஆயத்த காலத்தில் அப்போஸ்தலரின் விசுவாச உச்சாரணத்திலிருந்து மறையுண்மைகளைப் பற்றியும், "டிடாக்கே" நூலிலிருந்து ஒழுக்கம் பற்றியும் அறிவுரைகள் வழங்கப்பட்டன. கடைசி வாரங்களில் அவர்கள் அடிக்கடி ஆலயத்தில் சமூகமளித்து, அவர்கள் தலைமேல் ஆயர் அல்லது குருக்கள் கரங்களை விரித்து, பசாசை ஓட்டும் செபங்களைச் செபித்தனர். இறுதியில் திருமுழுக்குக்கு உடனடி ஆயத்தமாக திருமுழுக்குப் பெறுவோரும், திருமுழுக்கு அளிக்கும் ஆயரும், சில தருணங்களில் விசுவாசிகளும், ஓரிரு நாட்கள் உபவாசம் செய்தனர். திருமுழுக்கிற்குமுன் திருமுழுக்குப் பெறவிருப்பவர்கள் பசாசையும், அதன் ஆடம்பரங்களையும் விட்டுவிடுவதாக பகிரங்கமாக அறிக்கையிட்டு, விசுவாச மந்திரம், பரலோக மந்திரம் சொல்லினர். பின்னர் ஓடும் நீரில் மும்முறை தாழ்த்தப்பட்டு, "பிதா, சுதன், பரிசுத்து

ஆவியின் பெயரால்" திருமுழுக்கு வழங்கப்பட்டது. காலப்போக்கில் தேவையானால் மும்முறை தலைமேல் தண்ணீர் ஊற்றி திருமுழுக்கு அளிக்கும் பழக்கம் நடைமுறைக்கு வந்தது. ஆகவே ஆதித் திருச்சபையில் திருமுழுக்கு இரு முறைகளில், அதாவது நீரில் மூழ்கச் செய்து அல்லது தலையில் தண்ணீர் ஊற்றி அளிக்கப்படுவதைக் காண்கிறோம். திருமுழுக்கு அளிக்கும் அதிகாரம் திருத்தூதர்களுக்கு மட்டுமல்ல, ஏனைய விசுவாசிகளுக்கும் இருந்தது. திருத்தொண்டர் பிலிப்பு எத்தியோப்பிய அண்ணகனுக்குத் திருமுழுக்கு அளித்தார். அனனியா எனும் சீடர் பவுலுக்குத் திருமுழுக்கு அளித்தார். சொரியாவில் பேதுருவின் முன்னிலையில் சீடர்கள் கொர்ணேலியுவுக்கும், அவரது குடும்பத்தினரக்கும் திருமுழுக்கு அளித்தனர் (தி.தூ.ப. 10:48).

கி..பி. 30-70ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு வழங்கப்பட்டது (தி.தூ.ப. 2:38 10:48). பின்னர் பிதா, மகன், தூய ஆவியின் பெயரால் வழங்கப்பட்டது. திருமுழுக்கைத் தொடர்ந்து உடனடியாக உறுதிப் பூசுதலும் வழங்கப்பட்டது. இரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் ஞானப் பெற்றோரை நியமிக்கும் பழக்கமும் நடைமுறைக்கு வந்தது. அந்தியோக்கிய இஞ்ஞாசியார், பர்ணபாஸ், ஹேர்மஸ் ஆயன் போன்ற அப்போஸ்தொலிக்க பிதாக்கள் திருமுழுக்கு அளிக்கும் முத்திரைபற்றியும், மீட்புப் பெறுவதற்கு அதன் அவசியம் பற்றியும் எழுதியுள்ளனர்.

இரண்டாம் நூற்றாண்டின் முடிவிலும், மூன்றாம் நூற்றாண்டிலும் திருமுழுக்கு அளிக்கும் முறையில் மேலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதை நாம் கிப்போலிற்றஸ் எழுதிய "திருச்சபையின் ஒழுங்கு" என்ற நூலில் படிக்கிறோம். இம் மாற்றங்கள் பெரும்பாலும் திருமுழுக்கு ஆயத்த காலத்தில் (catechumenate) இடம்பெற்றன. அநேக புறவினத்தவர்கள் திருச்சபையில் சேர்ந்ததாலும், அக் காலகட்டத்தில் பல தப்பறையான போதக, பதித குழுக்கள் தோன்றியிருந்தமையினாலும், புதுக் கிறிஸ்தவர்களை திருமுழுக்குக்கு தகுந்த முறையில் ஆயத்தம் செய்யவேண்டிய அவசர தேவை ஏற்பட்டது. புதிதாக மனம்திரும்பியவர்களுக்கு விசுவாச உண்மைகள்பற்றிய ஆரம்பக் கல்வி அளித்தல் தனிப்பட்ட விசுவாசிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்பு ஆயத்தக்காரர்கள் திருச்சபையின் மேற்பார்வையின்கீழ் கொணரப்பட்-

டனர். அவர்களின் ஒழுக்க வாழ்வு நுணுக்கமாகப் பரிசோதிக்கப்பட்டது. ஆயத்தக்காரரின் ஒழுக்க வாழ்வை உறுதிசெய்ய அப்போஸ்தொலிக்க ஆர்வமுள்ள கிறிஸ்தவ பொறுப்பாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் ஆயத்தக்காரரை கிறிஸ்தவ சபையின் தலைவருக்கு அறிமுகம் செய்துவைக்க, அவர் அவர்களைப் பரிசோதித்து, அவர்கள் திருமுழுக்குப் பெறுவதின் நோக்கம், அவர்கள் வாழ்கை நிலை, தொழில் பற்றி விசாரித்து அறிந்துகொண்டார். ஒருவன் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவனாவற்கு தடையாகக் கருதப்பட்ட சில தொழில்களை (படைவீரர், சாஸ்திரக்காரர், மந்திரவாதிகள், விபசாரிகள்) அவர்கள் விட்டுவிட வேண்டும். விசாரணையின் பின் சிலுவை அடையாளம் வரையப்பட்டு, அவர்கள் அதிகாரபூர்வமாக ஆயத்தக்காரராக (catechumens) ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள். அவர்கள் மூன்று ஆண்டுகள் ஆயத்தப் பயிற்சிக்காக விசேட வல்லுநரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஆயத்தக்காரர்களுக்கு விசுவாச உண்மைகள், கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வுபற்றி அறிவு புகட்டப்பட்டது.

அதன் முடிவில் மீண்டும் அவர்களின் விசுவாச, ஒழுக்க வாழ்வு-பற்றி ஆயரினால் பரிசோதித்து ஆராயப்பட்டது. ஆயத்த காலத்தின் இறுதிக் கட்டமாக "தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்" பல சுத்திகரிப்புச் சடங்குகள், அசுத்த ஆவியை ஓட்டும் செபங்களுக்கு உட்படுத்தப்-பட்டார்கள். கிறிஸ்தவ சமூகத்தின் ஆயரே அவற்றை முன்னின்று நடத்தினார். அவர் அவர்களை மீண்டும் இறுதியாகப் பரிசோதித்து, திருமுழுக்குப் பெறுமுன் வரும் சனிக்கிழமையன்று, அவர்கள் தலைமேல் கரங்களை வைத்துச் செபித்து, அவர்களின் புலன்கள்மேல் சிலுவை அடையாளம் வரைந்து மந்திரித்தார். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு உபவாசம் இருந்தார்கள். பொதுவாக பாஸ்காத் திருவிழிப்பின்போதே திருமுழுக்கு அருளப்பட்டது. திருவிழிப்பின்போது வேதாகம வாசகங்களும், வழிபாட்டு அறிவுரைகளும் இடம்பெற்றன. அதிகாலையில் ஒரு சேவலுக்கு முடி சூட்டுவதுடன் முக்கிய திருமுழுக்கு அளிக்கும் வழிபாடு ஆரம்பமாகியது. திருமுழுக்குப் பெறவிருக்கின்றவர்கள் தம் ஆடை, ஆபரணங்களைக் களைந்து விட்டு, ஓடும் நீருள்ள தொட்டியண்டை செல்வார்கள். ஆயர் முதலில் திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் எண்ணைகளை மந்திரிப்பார். திருத்தொண்டர் அவருக்கு உதவிசெய்வார். முதலில் குழந்தைகள்,

குரு கேட்கும் வினாக்களுக்கு பெற்றோர் அவர்களுக்காகப் பதில் கூற, திருமுழுக்குப் பெற்றனர். தொடர்ந்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமுழுக்கு அளிக்கப்பட்டது. அதற்குமுன் ஒவ்வாருவரும், மேற்குப் பக்கமாகத் திரும்பிநின்று, தனித்தனியே சாத்தானை விட்டுவிடும் வாக்குறுதி அளிக்கவேண்டும். பின்பு அவர்களை திருத்தொண்டர் தண்ணீர்த் தொட்டிக்கு இட்டுச் செல்வார். அப்பொழுது தலைமைதாங்கும் ஆயர் அல்லது குரு அவர்கள் மேல் கரங்களை வைத்து விசுவாச வாக்குறுதி கொடுக்கச் செய்வார். அப்பொழுது அவர்களுக்குத் தலைமேல் தண்ணீர் ஊற்றித் திருமுழுக்கு அளிக்கப்படும். தொடர்ந்து குரு அவர்களை நன்றித் தைலத்தினால் அபிஷேகம் செய்தபின், அவர்கள் தங்கள் ஆடைகளை அணிந்து கொள்வர். பின்பு அவர்கள் ஆலயம் செல்ல, ஆயர் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவர் மேலும் தம் கரங்களை வைத்துச் செபித்து, தலையில் தைலம் பூசி, கண் இமையில் சிலுவை அடையாளம் வரைந்து, அவர்களை முத்தம் செய்து வாழ்த்துவார். இது திருமுழுக்கைத் தொடர்ந்து உறுதிப் பூசுதல் அளிக்கப்படுவதைக் குறிக்கிறது. இறுதியாக புதுக் கிறிஸ்தவர்கள் ஏனைய விசுவாசிகளுடன் இணைந்து, தொடரும் நற்கருணை வழிபாட்டில் முதல்முறையாகப் பங்கெடுப்பர். மூன்றாம் நூற்றாண்டில் அமைப்புப் பெற்ற இத் திருமுழுக்கு அளிக்கும் முறை தொடர்ந்து சில ஆண்டுகளுக்கு அமுலில் இருந்தது.

### தொடக்க காலத் திருச்சபையில் உறுதிப்பூசுதல் அளித்தல்

இயேசு தாம் இவ்வுலகில் இருந்தபொழுதே தமக்குப் பின் தம் சீடர்களுடன் இருந்து தம் பணியைத் தொடந்தாற்ற, அவர்களை நிறை உண்மையை நோக்கி நடத்திச் செல்ல, தாம் கற்பித்த உண்மைகளை மீண்டும் நினைவூட்டி அறிவுறுத்த, தாம் தந்தையிடம் கேட்டு தம்மைப் போன்று மற்றொரு துணையாளரை அனுப்பப்போவதாக வாக்களித்து, அவரின் இயல்பு, தன்மை, பணிபற்றித் தெளிவாகக் கூறியிருந்தார். மேலும் தாம் இவ்வுலகை விட்டுச் செல்லுமுன் தான் வாக்களித்த அத் துணையாளரின், பரிசுத்த ஆவியின் வருகைக்காக தம் சீடர்களைக் காத்திருக்கச் சொல்லிச் சென்றார். பெந்தெகோஸ்தே தினத்தன்று ஆண்டவர் வாக்களித்த ஆவியானவர் இயேசுவின் சீடர்கள் ஒவ்வோருவர்மேலும் வந்திறங்கியதை நாம் திருத்தூதர் பணி நூலில்

படிக்கிறோம் (தி.தூ.ப. 2:3-4). ஆசிரியர் இச் சம்பவத்தைப் பல முறை திருப்பிச் திருப்பிச் சொல்லி, சீடர்கள் ஒவ்வொருவர் மேலும் பரிசுத்த ஆவி வந்திறங்கியதை வலியுறுத்துகிறார். அவ் ஆவியானவர் ஒவ்வொரு சீடர்கள் மேலும் வந்திறங்கியதை அடுத்தே சீடர்கள் செயலூக்கம் பெற, திருச்சபை பிறந்தது. அன்று தொடக்கம் அந்த ஆவியானவர் திருச்சபையினதும், ஒவ்வொரு சீடரினதும் ஆன்மா போலிருந்து செயற்பட்டு வருகின்றார்.

பரிசுத்த ஆவி இயேசுவின் முதற் சீடர்களுக்கு மட்டுமல்ல, உலகமெங்கும் இறுதிக் காலம்வரை வாழப்போகும் அவரின் சீடர்கள் அனைவர்க்கும் உரியவர். எனவேதான் திருத்தூதர்கள் திருமுழுக்கு வழியாக திருச்சபையில் சேர்த்துக்கொண்ட புதுச் சீடர்களுக்கு, அவர்கள் தலைமேல் கரங்களை விரித்துச் செபித்து, பரிசுத்த ஆவியை அளிப்பதை நாம் காண்கிறோம். இவ்வாறு புதுக் கிறிஸ்தவர்கள் இயேசுவில் தம் விசுவாசத்தை அறிக்கையிட்டபொழுதும், சமாரியாவில் (தி.தூ.ப 8:1), கொர்ணேலியுவின் வீட்டில் (தி.தூ.ப. 10:44), கிறிஸ்தவ சமூகம் ஒன்றுகூடிச் செபித்தபோதும் பரிசுத்த ஆவி அவர்கள் மேல் இறங்கி வருவதைக் காண்கிறோம். திருச்சபையின் ஆரம்பத்தில் அப்போஸ்தலர்களே சீடர்களின் தலைமேல் கரங்களை விரித்துச் செபித்து, அவர்களுக்கு பரிசுத்த ஆவியை அளித்து வந்தனர். கிறிஸ்தவர்களின் தொகை பெருகவே, ஏனைய ஆயர்களுக்கும் இவ் அதிகாரம் கொடுக்கப்பட்டது. திருத்தூதர்கள் காலத்தில் ஒருவன் திருச்சபையில் நிறைவுபெற்ற உறுப்பினன் ஆவதற்கு, அவன் திருத்தூதர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் கை அமர்த்துதலால் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க வேண்டுமென்றிருந்தது. சில சமயங்களில் திருமுழுக்குப் பெறுவதற்கு முன்பும் (தி.தூ.ப. 10:44), சில சமயங்களில் திருமுழுக்குப் பெறும்போதும் (தி.தூ.ப. 2:38), சில சமயங்களில் திருமுழுக்குப் பெற்ற பின்பும் (தி.தூ.ப. 9:17) பரிசுத்த ஆவி அளிக்கப்படுவதைக் காண்கிறோம். எனினும் அது காலப்போக்கில் திருமுழுக்குலிருந்து வேறுபடுத்தப்பட்டு, ஒரு தனியான வழிபாடாக அமைப்புப் பெற்றது.

**தொடக்க காலத் திருச்சபையில் பாவ மன்னிப்புச் சடங்கு**

மானிடத்தை பசாசின் ஆதிக்கத்திலிருந்தும், பாவத்தின்

அடிமைத்தனத்திலிருந்தும் மீட்டு, இறைவனுடன் ஒப்புரவாக்கவே இறைமகன் கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். நான் நீதிமான்களையல்ல, பாவிகளையே அழைக்க வந்தேனெனக் கூறிய கிறிஸ்து, பாலஸ்தீனா நாடெங்கும் சென்று "எல்லோரும் மனந்திரும்புங்கள்" என மக்களுக்கு அழைப்பு விடுத்தார். உங்களில் பாவமில்லாதவன் விபசாரப் பெண்மீது முதல் கல்லை எறியட்டுமெனச் சவால் விட்டு, பல வழிகளில் மனிதர் எல்லோரும் பாவிகள், எல்லோரும் மனந்திரும்ப வேண்டியவர்களெனச் சகலருக்கும் உணர்த்தினார். தம்முடன் நெருங்கி வாழ்ந்த சீடர்களுள் தமக்கு விசுவாசமில்லாமல் வாழ்பவர்கள் யாரென்று அறிந்திருந்தும், இயேசு அவர்களை ஒப்புரவிலிருந்து ஒதுக்கியோ, அவர்களுக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளிலிருந்து அவர்களை விலக்கியோ வைக்கவில்லை. அதேவேளையில் இறைவனின் அளவிலா அன்பையும், அவரின் இரக்கத்தையும், காணாமற்போன காசு, காணாமல்போன ஆடு, ஊதாரி மகன் போன்ற பல உவமைகள் வழியாக நமக்கு வெளிப்படுத்தினார். நாம் நமக்குத் தீங்கு செய்பவர்களை எழுபதுமுறை ஏழுமுறை மன்னித்தால் இறைவனும் அவ்வாறு எம்மை மன்னிப்பாரெனக் கூறி, நாம் எத்தனைமுறை பாவம் செய்தாலும் அத்தனை முறையும் இறைத்தந்தை நம்மை மன்னிப்பாரென அறிவித்து, இறைவனின் அளவிலா கருணையையும் பொறுமையையும் நமக்கு உணர்த்தினார். தம் இவ்வுலக வாழ்க்கையின்போது பலருக்கு பாவ மன்னிப்பு அளித்த இயேசு, "எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப் படா" எனக் கூறி, தமக்குப் பின்னும் தொடர்ந்து பாவிகளுக்கு பாவ மன்னிப்பு அளிக்க அந்த அதிகாரத்தை தம் அப்போஸ்தலர்களுக்கும் அளித்துச் சென்றார் (யோவா. 20:23).

ஆதித் திருச்சபையில், திருமுழுக்கு வழியாக அனைத்துப் பாவங்களுக்கும் மன்னிப்புப் பெற்று இறைவனோடு ஒப்புரவாகியவர்கள் மீண்டும் பாவத்தில் விழுந்தனர். புனித யோவான் எவனாவது தன்னிலே பாவமில்லையென்று சொன்னால் அவன் தன்னை ஏமாற்றிக் கொள்கிறான், கடவுளைப் பொய்யராக்குகிறானெனக் கூறுகிறார் (1 யோவா. 1:8). "நேர்மையானவரே இல்லை, ஒருவர் கூட இல்லை" என புனித பவுல் கூறுகிறார் (உரோ. 3:10). அப்படித் தவறுபவர்கள் மனம்வருந்திப் பரிகாரம் செய்து, மீண்டும் இறைவனோடு ஒப்புரவாகலாம்

என்ற கருத்து ஆதிக் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்தது. அவர்கள் மீண்டும் மனந்திரும்பி, இறைவனுடன் ஒப்புரவாகுவார்களென புனித பவுல் எதிர்பார்த்திருந்தார் (2 கொரி. 12:21). ஏனைய புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் அப்படி மீண்டும் பாவம் செய்தவர்கள் தங்கள் பாவப்பரிகார முயற்சிகளால் மீண்டும் பாவமன்னிப்புப் பெறலாமெனக் கருதினர் (யாக. 1:21, 5:19). எனவே பாவமன்னிப்பு ஆரம்பந்தொட்டு திருச்சபையின் ஒரு முக்கிய கொள்கையாக, நம்பிக்கையாக இருந்து வந்திருக்கிறது.

ஆரம்ப காலம் முதல் திருச்சபை இப் பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை செயற்படுத்தி வந்ததைக் காண்கிறோம். இதை திருத்தூதர் பணியில் அனானியா சபிராள் சம்பவத்திலும் (தி.தூ.ப. 5), தூய ஆவியின் வல்லமையை பணங்கொடுத்து வாங்க நினைத்த மந்திராவாதி சீமோனின் கதையிலும் (தி.தூ.ப. 8:9-24), புனித யாகப்பர் தன் திருமுகத்தில் பாவிகளுக்கு தங்கள் கைகளைத் தூய்மையாக்கவும், உள்ளங்களைத் தூய்மையாக்கவும் விடுக்கும் எச்சரிக்கையிலும் நாம் காண்கிறோம். திருத்தூதர் காலத்தில் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவதற்காக இதயபூர்வமான மனஸ்தாபம் மட்டுமல்ல, தாம் செய்த பாவங்களை அறிக்கையிடுவதும் முக்கிமாகக் கருதப்பட்டது (1 யோவா. 8:10 யாக். 5:6). ஆரம்ப காலத்தில் சிலை வழிபாடு, கொலை, தகாத உறவு போன்ற சாவான பாவங்களை மன்னிப்பதற்கு மறுத்திருந்தாலும், இரண்டாம் நூற்றாண்டில் அந்தக் கடுமையான போக்கு எளிதாக்கப்பட்டது.

ஆதிக் கிறிஸ்தவர்கள் கலாபனையின் நிமித்தம் எந்த நேரத்திலும் மரண ஆபத்திலும், ஆண்டவரின் இரண்டாம் வருகை உடனடியாக நிறைவேறுமென எதிர்பார்த்தும் வாழ்ந்ததால், புண்ணிய-மான வாழ்க்கை வாழ்ந்தனர். அது மிகக் கடினமான ஒறுத்தல் நிறைந்த வாழ்க்கைக்கு வழிவகுத்தது. எனவே சிலர் திருமுழுக்குப் பெற்றவர்கள் மீண்டும் பாவம்செய்தால், அவர்களுக்கு இனி பாவமன்னிப்பு இல்லை, மீட்பு இல்லையெனக் கூறினர். எனினும் அப்போஸ்தொலிக்க பிதா ஹேர்மஸ், தமது "ஹேர்மஸ் ஆயன்" என்னும் நூலில், எவனும் பாவங்களைக் கைவிட்டு, மனம்வருந்திப் பாவப்பரிகாரம் செய்தால், சகல பாவங்களுக்கும் மீண்டும் மன்னிப்பு உண்டெனக் வலியுறுத்திக்

கூறுகிறார். ஏற்ற பரிகாரம் செய்து, பாவமன்னிப்புப் பெறுமட்டும் அவர்கள் நற்கருணை விருந்திற்கு சமூகமளிக்கவோ, அதில் பங்கெடுக்கவோ முடியாது. அவர்கள் கிறிஸ்தவ சமூகத்திலிருந்து விலக்கிவைக்கப் படுவார்கள். பாவங்களுக்கு மன்னிப்புப் பெற பாவ அறிக்கை செய்தல், உபவாசமிருத்தல், தருமதானம் செய்தல் போன்ற பரிகாரங்கள் நீண்ட காலத்துக்குச் செய்யவேண்டும். சாவான பாவங்களுக்கு குருக்களிடம் தனித்துப் பாவ அறிக்கை செய்வதும், பகிரங்க பாவங்களுக்கு பொதுப் பாவ அறிக்கை செய்வதும் வழக்கமாகவிருந்தது. தகுந்த பரிகாரங்கள் செய்து முடிந்தவுடன், அது திருச்சபையின் அதிகாரிகளுக்குத் திருப்தியளித்தால், அவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கப்படும். வழமையாக பெரிய வியாழக்கிழமை தினத்தன்று ஆயர் அவர்களுக்குப் பாவமன்னிப்பு அளித்து, அவர்களை மீண்டும் கிறிஸ்தவ சமுதாயத்தினுள் ஏற்றுக்கொள்வார்.

**திருச்சபையின் தொடக்க காலத்தில் நோயில் பூசுதல் வழிபாடு**

ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் பகிரங்க வாழ்க்கையிலே அசுத்த அரூபிகளை விரட்டுவதும், நோயாளிகளைக் குணமாக்குவதும் முக்கிய இடத்தை எடுப்பதை நற்செய்திகளில் காண்கிறோம். தம் வாழ்நாளிலேயே தம் அப்போஸ்தலர்களுக்கும் அவ் அதிகாரத்தை அளித்து, அதைச் செயல்படுத்த அனுப்பியதையும் படிக்கிறோம். இயேசு அனுப்பிய அப்போஸ்தலர்கள் சென்று நோயாளிகள் பலரை எண்ணெய் பூசிக் குணமாக்கினார்கள் (மாற். 6:13). அப்போஸ்தலர் மத்தியில் காணப்பட்ட இப் பழக்கம் ஆதித் திருச்சபையிலும் காணப்பட்டது. அப்போஸ்தலர்கள் தங்களுக்கு ஆண்டவரால் அளிக்கப்பட்ட அவ் அதிகாரத்தை தம்முடைய சீடர்களாகிய மூப்பர்களுக்கும் அளித்தார்கள்.

அப்போஸ்தலரான புனித யாக்கோபு தம்முடைய திருமுகத்திலே ஆதித் திருச்சபையிலிருந்த இக் கிறிஸ்தவ வழக்கத்தைக் குறிப்பிடுகிறார். அதாவது மூப்பர்கள் நோயாளர்கள்மேல் எண்ணெய் பூசி, செபித்து, அவர்களைக் குணப்படுத்தி, பாவமன்னிப்பு அளிக்கும் வழிபாடு பற்றி எழுதுகிறார். "உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால், திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர்மீது எண்ணெய் பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். நம்பிக்கையோடு வேண்டும்போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர்

அவரை எழுப்பி விடுவார். அவர் பாவம் செய்திருந்தால் மன்னிப்புப் பெறுவார்" (யாக. 5:14-15). இவ் வழக்கம் ஆதிச் திருச்பையில் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்பட்ட சிறப்பு வழிபாடுகளில் ஒன்றாகும். இவ் வழிபாடு இன்றும் "நோயில் பூசுதல்" என்னும் பெயருடன், ஒரு திருவருட்சாதனமாக திருச்சபையில் காணப்படுகிறது.

**திருச்சபையின் தொடக்க காலத்தில் திருநிலைப்படுத்துதல் (குருத்துவம்) வழிபாடு**

இயேசு தம்மை பின்சென்றவர்களுள் பன்னிருவரைத் தெரிந்தெடுத்து. அவர்களுக்கு "அப்போஸ்தலர்" எனப் பெயரிட்டார். அவர்களைத் தம்முடனேயே வைத்திருந்து, தமக்குப் பின் தம் பணியைத் தொடர்ந்தாற்ற, தம்மைப் பின்செல்பவர்களுக்குத் தலைமைதாங்கி, வழிநடத்த, அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தார். இறுதியில், "தந்தை என்னை அனுப்பியது போல் நானும் உங்களை அனுப்புகிறேன்" எனக் கூறி, அவர்கள் மேல் ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என அவர்களை பரிசுத்த ஆவியால் திருநிலைப்படுத்தினார் (யோவா. 20:21-22). இறுதி இராவுணவின்போது அப்பத்தையும் இரசத்தையும் தன் உடலாகவும், இரத்தமாகவும் மாற்றி, புதிய உடன்படிக்கையின் திருப்பலி முறையை ஏற்படுத்தி, தான் மீண்டும் வருமளவும் தம் நினைவாக அதைச் செய்யும்படி பணித்து, திருப்பலி ஒப்புக்கொடுக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கினார். தான் இவ்வுலகைவிட்டுப் பிரியமுன் புனித பேதுருவிடம், "என் ஆட்டுக் குட்டிகளைப் பேணி வளர்... என் ஆடுகளை மேய்" எனக் கூறி, அவரை தாம் ஏற்கனவே தெரிந்தெடுத்த அப்போஸ்தலர் குழுவுக்குத் தலைவராக நியமித்துச் சென்றார் (யோவா. 21:15-17). எனவே கிறிஸ்து இவ்வுலகில் இருக்கும் போதே அவரைப் பின்செல்பவர்களின் சமூகம் ஆளுகின்றவர்கள், ஆளப்படுகின்றவர்கள் என இரு தரப் பட்டிருப்பதைக் காண்கிறோம். பெந்தேகோஸ்து நிகழ்ச்சியை அடுத்து, அப்போஸ்தலர்களின் தீவிர போதனையால் கிறிஸ்தவர்களின் தொகை பெருகவே, அவர்களுடைய பணியும் பொறுப்பும் அதிகரித்தது. எனவே தங்களுக்கு, சிறப்பாக அறப்பணியில், உதவிசெய்யவென சீடர்களில் எழுவரைத் தெரிந்தெடுத்து. அவர்களின் தலைமேல் தங்கள் கைகளை வைத்துச் செபித்து, அவர்களைத் திருதொண்டர்களாக திருநிலைப்படுத்தினர் (தி.தூ.ப. 6:6).

எருசலேமில் ஆரம்பித்த யூத கலாபனையை அடுத்து, சீடர்கள் சிதறுண்டு பல நாடுகளுக்கும் ஓடிக் குடியேறிய வேளையில் கிறிஸ்தவ சமூகங்கள் அங்கெல்லாம் பரவலாக உருவாகிற்று. புனித பவுலின் மூன்று மறை போதக பயணங்கள் வழியாகவும், அவருடைய தீவிர போதனையை அடுத்தும், மத்திய தரைக் கடலைச் சுற்றியிருந்த நாடுகளெங்கும் கிறிஸ்தவ சமூகங்கள், சபைகள் தோன்றின. ஆகவே அப்போஸ்தலர்கள் தங்கள் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்தந்த கிறிஸ்தவ சபைகளுகளோடு இருந்து, அங்கு நடைபெறும் வழிபாடுகளுக்குத் தலைமைதாங்கவும், அவர்களை வழி நடத்தவும், ஏழைகளைப் பராமரிக்கவும், அவர்களின் ஆன்மீக இலௌகீக பொருட்களை நிர்வகிக்கவும் ஒவ்வொரு கிறிஸ்தவ சபைக்கும் தலைவராக ஒரு மூப்பர் நியமிக்கப்பட்டார். இவ்வாறு புனித பவுல் தாம் தாபித்த லிஸ்திரா, இக்கோனியா, அந்தியோக்கியா போன்ற கிறிஸ்தவ சபைகளுக்கு மூப்பர்களைத் தெரிந்தெடுத்து, நோன்பிருந்து, அவர்கள்மேல் கைகளை விரித்துச் செபித்து, அவர்களைத் திருநிலைப்படுத்துவதைக் காண்கிறோம் (தி.தூ.ப. 14:23). இவ்வாறாக ஆதித் திருச்சபையிலே அப்போஸ்தலர்கள், மூப்பர்கள், திருத்தொண்டர்கள் என மூன்று தரமான அதிகாரம் கொண்ட ஆட்சியாளர்கள் திருநிலைப்படுத்தப் பட்டிருந்ததைக் காண்கிறோம். அப்போஸ்தலர்கள் தாம் நியமித்த மூப்பர்களில், தீத்து, திமொத்தேயு போன்ற சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்கள்மேல் தம் கைகளை விரித்துச் செபித்து, அவர்களுக்கு தமக்குள்ள அதிகாரங்களை முழுமையாக அளித்து. தங்களுக்குப் பின் தங்கள் பணியைத் தொடர அவர்களை ஆயர்களாக நியமித்தனர். காலப்போக்கில் திருச்சபையின் வெவ்வேறு தரப்பட்ட ஆட்சியாளர்களைத் தேரந்தெடுக்கும் முறைகள். அவர்கள் தகுதிகள், பணிகள், அதிகார எல்லைகள் என்பன வரையறை செய்யப்பட்டு, அவர்களைத் திருநிலைப் படுத்தும் வழிபாட்டு முறைகளும் அமைப்புப் பெற்றன. திருத்தூதர் காலத்தில் திருநிலைப்படுத்தும் வழிபாடு மிக எளிமையானதாக இருந்தது.

இரண்டாம் நூற்றாண்டில், திருச்சபையில் கண்காணிப்பாளர்கள் (ஆயர்கள்), மூப்பர்கள் (குருக்கள்), திருத்தொண்டர்களென தெளிவான மூன்று தர ஆட்சியாளர்களிருப்பதை அப்போஸ்தொலிக்க பிதாக்களின் நூல்களில் படிக்கிறோம். இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு

மாகாணத்திலுள்ள மூப்பர்கள் ஒன்று கூடித், தங்களுக்குள் ஒருவரை தங்கள் தலைவராக, ஆயராக தேர்நதெடுக்கும் வழக்கம் தோன்றிற்று. அந்தியோக்கிய இஞ்ஞாசியாரின் கூற்றுப்படி ஒவ்வொரு கிறிஸ்தவ சமுதாயத்துக்கும் பொறுப்பாக முழு அதிகாரங்களுடனான ஒரு ஆயர் இருந்தார். அவருக்குக் கீழ் குருக்களும், திருத்தொண்டர்களும் உதவிக்கு இருந்தனர். புனித உரோமைய சாந்தப்பர் திருச்சபையின் ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் இறைவனிடமிருந்து வருவதாகவும், அவை இறைத்தந்தையினால் அனைத்து அதிகாரங்களுடன் அனுப்பப்பட்ட கிறிஸ்து தம் அப்போஸ்தலருக்குக் கொடுத்த ஆணையிலிருந்து பிறக்கின்றனவெனவும் கூறுகிறார். ஒரு ஆயருக்கும் அவருடைய பொறுப்பிலுள்ள கிறிஸ்தவ சமுதாயத்துக்குமிடையே உள்ள உறவு, தொடர்பு, ஒன்றிப்புபற்றி அந்தியோக்கிய இஞ்ஞாசியார் தெளிவாக எழுதியிருக்கிறார். ஆயரில்லாமல் திருச்சபை இல்லை. இயேசு தந்தைக்குக் கீழ்ப்படிந்ததுபோல், கிறிஸ்தவர்கள் தம் ஆயருக்குக் கீழ்படியவேண்டும். திருமுழுக்கு அளிக்கும், திருமணம் நிறைவேற்றிவைக்கும் உரிமைகள் ஆயருக்கே உள்ளன. நற்கருணை வழிபாட்டுக்குத் தலைமை தாங்குவதும், மறை உண்மைகளைப் சரியாகப் போதிப்பதும், நற்செய்தியின் தூய்மையை உறுதிசெய்வதும், அப்போஸ்தொலிக்க மரபைப் பேணிக்காப்பதும் ஆயரின் பொறுப்பாகும். குருக்களும், திருத்தொண்டரும் ஆயரின் அதிகாரத்திலே பங்கெடுக்கின்றனர். எனவே விசுவாசிகள் குருக்களுக்கு கீழ்படிவும், திருத்தொண்டருக்கு மரியாதையும் கொடுக்கவேண்டும் என்கிறார்.

மூன்றாம் நூற்றாண்டில் ஆயர்கள், குருக்கள், திருத் தொண்டர்கள் என்னும் பணியாளர்களுடன், சில புதிய பணியாளர்களும் தோன்றினர். அவர்கள் உபதியாக்கோன்மார், வாசகர், பீடப் பரிசாரகர், பேயோட்டுனர், வாயில் காப்போர் ஆவர். அவர்கள் எல்லோரும் திருத்-தொண்டர்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள். இவர்கள் அனைவரும், மூப்பர்கள், திருத்தொண்டர்கள்போல் ஆயரினால் தெரிவுசெய்யப்பட்டனர். ஆனால் இவர்கள் திருநிலைப்படுத்தப் (கைவிரித்துச் செபித்தல்) படவில்லை. மாறாக நியமிக்கப்பட்டார்கள். ஆயரை விசுவாசிகள், அருகிலுள்ள ஆயர்களின் சம்மதத்துடன் தெரிவுசெய்யும் வழக்கமும் நடைமுறைக்கு வந்தது. ஒரு கிறிஸ்தவ சமுதாயத்தின் ஆயரின் தெரிவில் அருகிலுள்ள கிறிஸ்தவ சமுதாயங்களின் ஆயர்களின் பங்கு மிகப் பெரியது. ஒருவரை

ஆயராக திருநிலைப்படுத்தும் உரிமையும் அவர்களுக்கே உரியது. ஆயரின் பதவி திருச்சபையில் மிகப் பொறுப்புள்ளதாகவிருந்ததால், ஆயராகத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தேவையான தகைமைகளும் அதிகரித்தன. அறிவுத் திறன், வேதாகம அறிவு, ஒழுக்கம், பரிசுத்த தனம், எடுத்துக்காட்டான வாழ்கை போன்ற தகைமைகள் எதிர்பார்க்கப்பட்டன. பின்பு குருக்கள், திருத்தொண்டர்கள், ஏனைய பணியாளர்களைப் பயிற்றுவிக்கவென குருமடங்கள் அமைக்கப்பட்டன.

அப்போஸ்தலர் காலத்தில் திருமணமானவர்கள் திருநிலைப்படுத்தப் பட்டார்கள். புனித பவுல் "மூப்பர்கள் ஒரு மனைவியைக் கொண்டவராய் இருக்கவேண்டும்" என்கிறார் (தீத். 1: 6). அவர்கள் திருநிலைப் படுத்தப்படுமுன் ஏற்கனவே திருமணமாகியிருக்கவேண்டும். திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் திருமணம் செய்ய முடியாது. எனினும். பல மூப்பர்கள் தாமாகவே முன்வந்து பிரம்மசாரியத்தைக் கடைப்பிடித்தனர். 4ம் நூற்றாண்டில் திருமணமான ஆயர்கள், குருக்கள், திருநிலைப்படுத்தப்பட்டபின் தம் மனைவியருடன் உடலுறவை விலக்கிக் கொள்ளவேண்டுமென சட்டம் ஏற்படுத்தப்பட்டது. 386ம் ஆண்டு குருக்கள், திருதொண்டர்களாகத் திருநிலைப்படுத்தப்படுவதற்கு பிரம்மசரியம் ஒரு கட்டாய நிபந்தனையாகச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. உரோமைய சாந்தப்பர், இரனேயுஸ், தேர்த்தூலியன், சிப்பிரியன் போன்றோர் திருநிலைப்படுத்தலை பட்டமளித்தல் என அழைத்தனர். இது பட்டம் பெறுபவர்கள் பொதுநிலையினரிடமிருந்து பிரிக்கப்பட்டு, அவர்களுக்கு திருச்சபையில் சிறப்பு அதிகாரம், பொறுப்புகள் அளிக்கப்படுவதை வலியுறுத்தியது. இது திருச்சபையின் அதிகாரிகளின் ஒரு சட்ட பூர்வமான செயல் என்பதைக் குறித்து நிற்கிறது. புனித கிப்போலிற்றஸ் 215ம் ஆண்டில் எழுதிய "அப்போஸ்தொலிக்க மரபு" என்னும் நூலில், ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்களுக்கு பட்டமளிக்கும் திருவழிபாட்டில் கைகளை விரித்துச் செபிக்கும் சடங்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருவழிபாட்டுக்குத் தலைமைதாங்கும் ஆயரும், ஏனைய ஆயர்களும், குருக்களும் பட்டம்பெறுபவர்களின் தலைமேல் கைவைத்துச் செபிப்பது, அவர்களுக்குப் பரிசுத்த ஆவி அளிக்கப்படுவதையும், திருச்சபை இவர்களுக்கு ஆணை அளிப்பதையும் குறிக்கிறது. இச் சடங்கு திருச்சபையின் தலைமைத்துவம் பழைய ஏற்பாட்டில் அடையாளங்களால் முன்னறிவிப்பட்டதென்பதையும், அது

இறைவன் பரிசுத்த ஆவியின் வழியாய் திருச்சபைக்கு அளிக்கும் கொடை என்பதையும் குறித்து நிற்கிறது.

**திருச்சபையின் தொடக்க காலத்தில் திருமண வழிபாடு**

நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து திருமணத்தை ஏற்படுத்தவுமில்லை, அதை நிறைவேற்றுவதற்குரிய வழிபாட்டு முறைகளை அமைத்துக் கொடுக்கவுமில்லை. இறைவன் ஆதியில் மனிதனைப் படைத்த பொழுது, அவரே "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று: அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்" (ஆதி. 2:18) எனக் கூறி, திருமணத்தை ஏற்படுத்தி வைத்திருந்தார். மேலும், "கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்: இருவரும் ஒரே உடலாய் இருப்பர்" (ஆதி. 2:24) எனக் கூறி, திருமணத்தின் ஒருமை, கட்டவிழாமை போன்ற இயல்புகளை உணர்த்தி, அதற்குரிய சட்டதிட்டங்களையும் அமைத்து கொடுத்திருந்தார். கணவனையும் மனைவியையும் தம் உருவிலேயே படைத்த கடவுள், "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்" எனக் கூறி, அவர்கள் திருமணத்தை ஆசீர்வதித்து வைத்திருந்தார். ஆனால் நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தபோது, திருமணவாழ்வில் இறைவனின் திருவுளத்திற்கு ஒவ்வாத, பலதாரப்பழக்கம், விவாகரத்து போன்ற திருமண இயல்பிற்கு முரணான சில தவறுகள் புகுந்திருந்தன. திருமண ஒப்பந்தம் ஒரு நிலையற்ற, சுயநலம் நாடும், சுதந்திர இணைப்பாகக் கருதப்பட்டது. திருமணத்தில் கர்சனைகொண்டிருந்த இயேசு, இத் தவறுகளைக் கண்டித்து, திருமணத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். திருமணத்தின் புனிதத் தன்மை, ஒருமை, கட்டவிழாமை போன்ற அதன் இயல்புப் பண்புகளை வலியுறுத்தி (மத். 19: 5), அதனுடைய ஆரம்ப புனித நிலைக்கு திரும்பிச் செல்ல அழைப்பு விடுத்தார். மேலும் கானா ஊர் திருமண வைபவத்தில் தான் நேரடியாகப் பங்குகொண்டு. திருமணத்தையும், திருமண தம்பதிகளையும் ஆசீர்வதித்து, அவர்கள் குறைகளைப் போக்கி, திருமணத்தை ஒரு திருவருட்சாதன நிலைக்கு உயர்த்தி வைத்தார்.

இவ்வாறு இயேசு திருமண நிறுவனத்தை அது தொடக்கத்தில் கொண்டிருந்த முழு நிறைவினுக்கு திரும்பக்கொணர்ந்தார். அதுமட்டுமல்ல அவர் திருமணத்திற்கு ஒரு புதிய அடித்தளத்தை அமைத்தார். தமது சொந்த இரத்தத்தினால் நிறுவிய புதிய உடன்படிக்-

கையால் அவரே திருச்சபையின் மணமகனாகி, திருமணத்திற்கு சமயத் தொடர்புள்ள புதிய தனிச் சிறப்பை அளித்தார். புனித பவுல் திருமணத்தில் கணவன் மனைவிக்கிடையில் உருவாகும் உறவு கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையே உள்ள உறவுக்கு ஒத்ததெனக் கூறுகிறார் (எபே. 5:32). திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பதும், கிறிஸ்து திருச்சபைக்கு அன்புசெய்து, அதற்காகத் தம்மையே கையளித்து, அதை விடுவித்ததும் கணவன் மனைவியர் பின்பற்ற-வேண்டிய உயிருள்ள விதியாகின்றது. கணவனுக்கும் மனைவிக்கு-மிடையில் ஒரே உடலும், ஒரே உயிரும், ஒரே மனமும், ஒரே உள்ளமும் கொண்ட புனித உறவு இருக்கவேண்டும். உண்மையான புனித தூய அன்பே அவ் உறவின் அடித்தளமாக அமையவேண்டும். அது சுயநலம் தேடா பிறநலம் தேடும் தியாக அன்பு, ஒருவரை ஒருவர் புனிதமாக்கும் அன்பு. ஒருவரை ஒருவர் மீட்கும் அன்பு, ஒருவரை ஒருவர் பராமரிக்கும் அன்பு, ஒருவர் ஒருவரைப் பிரியுமட்டும் நிலைக்கும் அன்பு. அப்போஸ்தொலிக்க காலத்தில், கிறிஸ்தவ திருமணத்துக்கென எவ்வித சிறப்பு வழிபாடோ, சடங்கோ இருக்கவில்லை. அரச அதிகாரிகளே திருமணத்தை நிறைவேற்றி வைத்தனர். ஆனால் அரசாங்கத்தில் திருமணம் செய்தபின்னர், தம்பதிகள் திருச்சபையிடம் சமூகமளித்து, ஆயரால் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

இரண்டாம் நூற்றாண்டில், அந்தியோக்கிய இஞ்ஞாசியார் திருமண ஒப்பந்தம் ஆயரால் அங்கீகாரம் செய்யப்படவேண்டுமென சிபார்சு செய்தார். தேர்த்தூலியனுடைய காலத்தில் கிறிஸ்தவர்கள் திருமணத்தை திருச்சபையின் முன்னிலையில் கொண்டாடி, அது ஆயரின் ஆசீர்வாதத்தால் உறுதிசெய்யப்பட்டது. கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகளோடு திருமணம் செய்வது விலக்கப்பட்டிருந்தது. தம் பிள்ளைகளை அஞ்ஞானிகளுக்குக் திருமணம் செய்துகொடுக்கும் பெற்றோர் கடுமையான தண்டனைக்கு ஆளானார்கள். திருமண வாக்குறுதிக்கு பிரமாணிக்கமாயிருக்க மணமக்கள் வலியுறுத்தப் பட்டார்கள். தவறுகின்றவர்கள் திருச்சபையின் கடுமையான பாவப் பரிகார தண்டனைக்கு ஆளானாரகள். கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் தமக்குச் சரியொத்தவர்களாக ஏற்று, மதித்து, அன்பு செய்யவேண்டும். ஆணும் பெண்ணும் சம உரிமை உடையவர்கள். இரண்டாம் திருமணம் வரவேற்கப்படவில்லை. அத்தகைய

கொண்டாட்டங்களில் குருக்கள் கலந்து கொள்ளுவது விலக்கப்பட்டிருந்தது. மூன்றாம் நூற்றாண்டிலும் திருமணத்திற்கென சிறப்பு வழிபாடொன்று இருக்கவில்லை. திருச்சபை திருமணத்தை ஏழு திருவருட்சாதனங்களில் ஒன்றாக ஏற்று, அதற்குரிய சிறப்பு வழிபாடொன்றை அளிக்க பல நூற்றாண்டுகள் எடுத்தன. பின்பு கிறிஸ்தவர்கள் தங்கள் திருமணத்தை ஆலயத்தில், குருவுக்கும், இரண்டு சாட்சிகளுக்கும் முன்னிலையில் திருமண வாக்குறுதியளித்து, குருக்களால் ஆசீர்வதிக்கும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது.

## 9.1.2. கீழைத் தேய கத்தோலிக்க திருச்சபையின் வழிபாட்டு முறைகள்

கிறிஸ்தவம் யூதமதத்தின் ஒரு கிளையாகவே ஆரம்பித்தது. ஆரம்பத்தில் கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதர்களாகவே இருந்தனர். ஆனால் கொர்ணேலியுவின் மனமாற்றத்தைத் தொடர்ந்து, புனித பவுலின் மறைபோதக பயணங்களால் பல புறவினத்தவர்கள் திருச்சபையில் இணைந்தனர். அப்பொழுது பலஸ்தீன யூத பழமைவாதிகள் புறவினத்தவர்கள் மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடிக்கவேண்டும், யூத பழக்கவழக்கங்களை அனுசரிக்க வேண்டும், விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டும். அதாவது கிறிஸ்தவர்களாக வருவதற்கு முன் அவர்கள் யூதர்களாக மாறவேண்டுமென வலியுறுத்தினர். அப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடப்பட்ட எருசலேம் சங்கத்தில் இன்றியமையாதவை தவிர வேறு எச் சுமையும் திருச்சபையில் இணைய விரும்புகின்ற புறவினத்தவர்கள் மேல் சுமத்தப்படாது எனத் தீர்மானிக்கப்பட்டது. திருச்சபையின் தலைவராகிய பேதுரு திருச்சபையின் கொள்கையை அறிவித்து, அந்த இன்றியமையாதவை எவையென்றும் விளக்கினார்:

> "உள்ளங்களை அறியும் கடவுள் நமக்குத் தூய ஆவியைக் கொடுத்ததுபோல அவர்களுக்கும் கொடுத்து, அவர்களை ஏற்றுக்கொண்டார். நம்பிக்கையால் அவர்கள் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தினார். நமக்கும் அவர்களுக்கும் இடையே அவர் எந்த வேறுபாடும் காட்டவில்லை. ஆகவே நம் மூதாதையரோ, நாமோ சுமக்க இயலாத நுகத்தை, இப்பொழுது இந்தச் சீடர்கள்மேல் வைத்து, கடவுளை ஏன்

சோதிக்கிறிர்கள்? ஆண்டவர் இயேசுவின அருளால் நாம் மீட்புப் பெறுவது போலவே, அவர்களும் மீட்புப் பெற்றார்களௌன நம்புகிறோம்". (தி.தூ.ப. 15:8-11).

எருசலேம் சஙகத்தின் இத் தீர்மானம் திருச்சபையின் வாழ்விலே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. விருத்தசேதனம் அல்ல, நம்பிக்கைதான் எம்மைத் தூய்மையாக்குகின்றது. யூத சட்டங்களல்ல, இயேசுவின் அருள்தான் எமக்கு மீட்பளிக்கிறது. அதாவது இயேசுவின் மேல் நம்பிக்கையும், இயேசுவின் அருளுமே இன்றியமையாதவை. மற்றவை எதுவும் அவசியமற்றவை. ஆகவே யூத மதத்திற்கும், கிறிஸ்தவத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கிறிஸ்தவம் ஒரு தனி மதம். அது ஒரு அனைத்துலக மதம். ஒருவன் விருத்தசேதனம் செய்யாது, யூத சட்டங்களை கடைப்பிடியாது, யூதனாகாது கிறிஸ்தவனாகலாம். எவனும் தன் கலை, கலாச்சாரத்ததை, பண்பாட்டை, மொழியை, இனத்தை, தனித்துவத்தை கைவிடாது திருச்சபையில் அங்கத்தவனாகலாம். ஏந்தவொரு பண்பாடும், கலாச்சாரமும், மொழியும் திருச்சபைக்கு புறம்பானதல்ல. இவையெல்லாம் திருச்சபையின் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தின. இதையே இரண்டாம் வத்திக்கான் சங்கமும் ஒவ்வொரு கிறிஸ்தவ சமுதாயமும் தன் வழிபாட்டை தன் பண்பாடு கலாச்சாரம், மொழியைத் தழுவி அமைக்க வேண்டுமென்று கேட்டு நிற்கின்றது.

திருச்சபையின் தலைவராகிய பனித பேதுரு, உரோமைப் பேரரசின் தலைநகராகிய உரோமைக்குச் சென்று, உரோமையிலேயே தம் ஆட்சி பீடத்தை அமைத்து, பின்னர் மறைசாட்சியாக இறந்தார். அவரைத் தொடர்ந்து உரோமை ஆயராக நியமனம் பெறுகின்றவரே திருச்சபையின் தலைவராகவும் அனைத்துச் சபைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தார். எனவே திருச்சபையின் வழிபாடுகள் உரோமைய பண்பாடு, கலாச்சாரம், மொழி, பழக்கவழக்கங்களுக்கு அமைய தழுவி அமைக்கப்பட்டன. உரோமைய வழிபாட்டு முறையே உரோமைப பேரரசெங்கும் பின்பற்றப்பட்டு வந்தன. 330 இல் பேரரசர் கொன்ஸ்-தாந்தின் உரோமைப் பேரரசின் தலைநகரை உரோமையிலிருந்து அகற்றி, கீழைத்தேயத்திலிருந்த போஸ்பரஸ் கடற்கரையில் பைசாந்தியம் என்னுமிடத்தில் அமைத்தார். அங்கு கொன்ஸ்தாந்தி-நோபிள் என்ற புதிய பட்டணத்தைக் கட்டி, அதைப் பேரரசின்

தலைநகரமாக்கினார். இப்படியாக உரோமைப் பேரரசு பைசாந்தியப் பேரரசாக மாறியது. பைசாந்தியம் கொன்ஸ்தாந்திநோபிளின் முந்திய பெயர். பேரரசின் நிர்வாக பீடங்களும் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு இடம் மாற்றப்பட்டன. திருத்தந்தையே மேற்குப் பேரரசின் அரசர்போல் செயலாற்ற வேண்டியிருந்தது. இது உரோமைப் பேரரசு காலப்போக்கில் மேலைத் தேயப் பேரரசு, கீழைத் தேயப் பேரரசென்று பிளவுபடுவதற்கு வழிகோலியது.

பேரரசரும், பேரரசின் நிர்வாகமும் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு மாற்றப்பட்டமையால், விரைவில் கொன்ஸ்தாந்திநோபிள் பேராயர்கள் அதிக அரசியல் செல்வாக்கு, வலிமை உடையவர்களாக மாறினர். உரோமைப் பேரரசின் மேற்குப்பாகம் 476 இல் மிலேச்சரின் படையெடுப்பு-களினால் அழிக்கப்பட்ட பொழுது, திருத்தந்தையின் செல்வாக்கு அங்கு மேலும் குறையத் தொடங்கியது. ஆனால் கொன்ஸ்தாந்திநோபிள் பிதாப்பிதாவின் செல்வாக்கு இன்னும் அதிகரித்தது. எனவே அவர்கள் உரோமையிலுள்ள திருத்தந்தைக்கு தாங்கள் அதிகாரத்தில் எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர் என எண்ணத் தொடங்கினர். ஐரோப்பிய, ஆசிய நாட்டவருக்கிடையே இருந்த மொழி, பண்பாடு. கலாச்சார வேறுபாட்டால் ஏற்பட்ட மனவெறுப்பும் பிரிவினைக்கு ஏதுவாயிருந்தது. கொன்ஸ்தாந்திநோபிள் பேராயர்கள் அதிக அரசியல் செல்வாக்குடையவர்களாக இருந்ததினால், தமக்குத் தாமே பிதாப்பிதா என்ற பட்டத்தை அளித்து, கீழைத்தேய நாடுகளிலுள்ள ஆயர்கள்மேல் அதிகாரம் செலுத்தத் தொடங்கினர். பேரரசின் ஒற்றுமையைக் காத்துவந்த பேரரசர் முதலாவது தியடோசியசின் மரணத்தின் பின்னர், உரோமைப் பேரரசில் மாற்றமொன்று ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 395 இல், திருச்சபையும் மேற்கத்தேய (இலத்தின்) கத்தோலிக்க திருச்-சபையென்றும், கீழைத்தேய (கிரேக்க) கத்தோலிக்க திருச்சபையென்றும் பிளவுபடத் தொடங்கியது. கீழைத்தேய கத்தோலிக்க திருச்சபையினர் திருத்தந்தையின் ஆன்மீக அதிகாரத்தையும், உரோமைத் திருச்சபையின் இறையியல் படிப்பினைகள், விசுவாச பிரமாணங்களையும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் நிர்வாக முறையிலும், ஒழுங்கு கட்டுப்பாடு-களிலும், வழிபாட்டு முறையிலும் வேறுபடுகின்றனர். அவர்களின் நேரடித் தலைவராக மறைமாவட்ட ஆயர் இருந்தார். திருத்தந்தை அவர்களுக்கு மறைமுகத் தலைவராக இருந்தார். ஒவ்வொரு மறைமாவட்டமும்

சுதந்திரமான, தனித்தியங்கும் அமைப்பாக இருக்கின்றது. அவர்களின் குருக்கள் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். திருத்தந்தையின் அதிகாரத்தை, படிப்பினைகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கீழைத்தேய வைதீக (Orthodox) திருச்சபையினரென அழைக்கப்பட்டனர்.

கீழைத்தேய கத்தோலிக்க ஆயர்கள் கொன்ஸ்தாந்திநோபிள் (துருக்கி, ஸ்ரன்புல்) பிதாப்பிதாவின் தலைமையில் ஒன்றுகூடி, 5ம் நூற்றாண்டில் கீழைத்தேய நாடுகளின் மொழி, பண்பாடு. கலாச்சாரம், பழக்கவழக்கங்களை தழுவிய ஒரு புதிய வழிபாட்டு முறையை ஏற்படுத்தினர். பின்னர் கீழைத்தேயத்தில் அலெக்சாந்திரியா, அந்தியோக்கியா (சீரியா), ஆர்மேனியா, கல்தேயா போன்ற வேறு வழிபாட்டு மைய நிலைகளும் தோன்றின. இவ் வழிபாட்டு முறைகளை கீழைத்தேய வழிபாட்டு முறைகள் என அழைப்பர்.

## கீழைத்தேய கத்தோலிக்க

## திருச்சபையின் வழிபாடுகள்

| கொன்ஸ்தாந்திநோபிள் | அலெக்சாந்திரியா | அந்தியோக்கியா | ஆர்மேனியா | கல்தேயா |
|---|---|---|---|---|
| (துருக்கி) | (எகிப்து+வட ஆபிரிக்கா) | (சீரியா) | | (பேசியா) |

கீழைத்தேய கத்தோலிக்க திருச்சபைகள் திருச்சபையின் தொடக்க கால வழிபாட்டு முறையை கூடியளவு பாதுகாத்து வந்திருக்கின்றன. உரோமைய கத்தோலிக்க திருச்சபை பண்பாட்டின், பழக்கவழக்கங்களின் வளர்ச்சிக்கு. மாற்றத்திற்கு, தேவைகளுக்கேற்ப தன் வழிபாட்டு முறையை மாற்றி, தழுவி அமைத்து வந்திருக்கின்றது. ஆனால் கீழைத்தேய திருச்சபைகள் அதன் பழமையைப் பாதுகாத்து வருகின்றன. இலத்தீன் திருச்சபையைப் போன்று, அவர்களுடைய வழிபாடுகளின் மையமாக நற்கருணை வழிபாடே இருக்கின்றது. ஆனால் கீழைத்தேய திருச்சபைகள் பொதுவாக மூன்று வேறுபட்ட திருவழிபாடுகளைப் பயன்படுத்துகின்றன:

(1) ஆண்டின் அதிகமான நாட்களில் 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித கிறிசொஸ்தோம் அருளப்பருடைய திருவழிபாட்டைப் பயன்படுத்துவர்.

(2) தவக் கால ஞாயிறுகளிலும், வேறு சில திருநாட்களிலும் 4ம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித பெரிய பசிலின் திருவழிபாட்டைப் பயன்படுத்துவர்.

(3) ஆண்டில் ஒரு முறை, புனித யாகப்பரின் திருவிழாவன்று, 1ம் நூற்றாண்டைச் சேர்ந்த எருசலேம் ஆயரான புனித யாகப்பரின் திருவழிபாட்டைப் பயன்படுத்தினர்.

இலத்தின் திருவழிபாட்டில் காணப்படும் இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு என்ற இரு முக்கிய பகுதிகளும் கீழைத்தேய திருவழிபாட்டிலும் காணப்படுகின்றன. ஆனால் அவர்கள் கூடிய செபங்கள், மன்றாட்டு மாலைகள், சங்கீதங்கள், வாசகங்கள், மறை உரைகளைச் சேர்த்து விரிவுபடுத்தியுள்ளனர். அவர்களுடைய திருவழிபாட்டிலே மூன்று பகுதிகள் உள்ளன.: (1) ஆயத்த வழிபாடு: இப் பகுதி திருப்பணியாளரின் வருகை, வழிபாட்டுக்குரிய உடைகளை அணிதல், திருப்பலிக்குரிய அப்ப இரசத்தை ஆயத்தம் செய்தல், தனிப்பட்ட செபம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. (2) திருமுழுக்குக்கு ஆயத்தம் செய்வோரின் (திருமுழுக்குப் பெறாதவர்களின்) வழிபாடு: இப் பகுதி செபங்கள், மன்றாட்டு மாலைகள், சங்கீதங்கள், நற்செய்திப் பவனி, திருமுகத்திலிருந்தும், நற்செய்தியிலிருந்தும் வாசகங்கள், மறை உரை என்பவற்றைக் கொண்டுள்ளது. இப் பகுதி பெரும்பாலும் பழைய ஏற்பாட்டிலுள்ள யூத மத வழிபாட்டிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது. (3) விசுவாசிகளின் வழிபாடு: திருமுழுக்குப் பெறாதவர்கள் இதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. (இப்பொழுது நற்கருணை விருந்தைத் தவிர, மற்றப் பகுதிகளில் எல்லோரும் பங்கெடுக்க அனுமதிக்கப் படுகின்றார்கள்). இப் பகுதி அதிகமாக ஆதித் திருசபையில் இடம்பெற்ற அப்பம் பிட்கும் வழிபாட்டிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது. இப் பகுதி விசுவாசிகளின் மன்றாட்டுகள், காணிக்கைப் பவனி, மன்றாட்டு மாலை, சமாதான முத்தம், நிசேயா விசுவாச மந்திரம், பரிசுத்த ஆவியின் வருகைக்காக வேண்டுதல், நற்கருணை மன்றாட்டு, பரலோக மந்திரம், நற்கருணை விருந்து, நன்றி மன்றாட்டு மாலை, வழியனுப்புதல் என்பவற்றைக் கொண்டுள்ளது. நிரந்தர வழிபாட்டு அமைப்பு ஒன்று இருந்தாலும், வாசகங்கள், பாடல்கள் போன்ற மாறக் கூடிய பகுதிகளும் இருந்தன.

இவ் வழிபாடுகளில் கீழைத்தேய பண்பாட்டு மயமாக்கல் முக்கிய பண்பாக இருக்கின்றது. மறை உரையைத் தவிர, மற்றவை அனைத்தும் பாடலாகப் பாடப்படும். எல்லோரும் ஒரே குரலாய் உரத்துப் பாடுவார்கள். இவ் வழிபாட்டில் தூபம், ஒளி போன்ற விசேட அடையாளங்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. விளக்குப் பவனி, அலங்காரப் பவனி, வருகைப் பவனி, நறசெய்திப் பவனி, காணிக்கைப் பவனி எனப பல பவனிகளும் இடம்பெறுகின்றன. பல விடயங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்பட்டு, நினைவு படுத்தப்படுகின்றன. சம்பிரதாய முறைப்படி மணிகள் அடிக்கடி ஒலிக்கப்படும். வழிபாட்டின்போது அணியப்படும் ஆடை அலங்காரங்கள் மிகவும் பழமை வாய்ந்தவையாகும். வாசகங்கள் கிரேக்க மொழியில் இடம்பெறும். ஆகவே நீண்ட ஆயத்தம் தேவைப்படுகிறது. விசுவாசிகள் திருவழிபாடு ஆரம்பிப்பதற்கு முன்னரே நேரத்துடன் சமூகமாயிருக்க வேண்டும். எனவே கீழைத்தேய திருவழி-பாடுகள் நீண்ட நேரம் (ஏறக்குறைய மூன்றரை மணித்தியாலங்கள்) எடுக்கின்றன.

கீழைத்தேய திருச்சபையின் ஆலயங்களின் கட்டிட நிர்மாணக் கலை மிகவும் பழமை வாய்ந்ததாகும். ஆலயத்துக்குள் தேவதாயாரின் சுரூபங்கள், சமயப் படங்கள், சித்திரங்கள் அதிகம் காணப்படும். தேவதாயாருக்கு சிறப்பான இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. கேத்திர கணித வடிவங்களாக சித்திரங்களும், மிதக்கும் வடிவத்திலானவையும் பெரும்பாலும் பயன்படுத்தப் பட்டுள்ளன. சித்திரங்களுக்குள் சமனிலைத் தன்மை, புரியாத் தன்மை என்பனவும், ஒழுங்கு முறையான வர்ண சேர்க்கையும் உள்ளன. உருவங்கள் வரையும்போது கண்கள் மிகப் பெரிதாய் வரையப்பட்டிருப்பதோடு, வாயும், மூக்கும் மிகச் சிறிதாய் வரையப்பட்டிருக்கும். உடலும், விரல்களும் மெல்லியதாக இருக்கும். கண்களில் விசேட குவிவுத் தன்மை இலலை. இவை சில கருத்துக்-களை உணர்த்துகின்றன. மீட்பின் மறைபொருளில் மறைத்து வைக்கப்-பட்டிருந்த இரகசியங்கள் இவற்றில் முக்கியமானவையாகும். சமதள சித்திர ஆக்கங்கள் இவற்றை ஊடுருவிச் செல்ல வேண்டுமெனக் கருதப்பட்டன. வர்ணம் பற்றிய கருத்துக்களில் பெரும்பாலும் செப்பு, தங்க நிறம் பயன்படுத்தப்பட்டுள்ளதால் இறைத்தன்மை காட்டப்பட்-டுள்ளது. கண்களைக் கொண்டு தியான நிலைத் தன்மையையும்,

பல விடயங்களைச் சொந்தமாக்கிக் கொள்ளும் ஆற்றலையும் கொண்டதாக வெளிக்காட்டப் பட்டிருக்கின்றன.

## 9.1.3. மேலைத்தேய கத்தோலிக்க திருச்பைகளின் திருவழிபாட்டு முறைகள்

நான்காம் நூற்றாண்டின் முடிவில் உரோமைப் பேரரசு மேற்குப் பேரரசென்றும். கிழக்குப் பேரரசென்றும் பிளவு பட்டதையும், அதைத் தொடர்ந்து திருச்சபையும் கீழைத்தேய கத்தோலிக்க திருச்சபை-யென்றும், மேலைத்தேய கத்தோலிக்க திருச்சபையென்றும் பிளவுபட்டதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். கீழைத்தேய கத்தோலிக்க திருச்சபையினர் திருத்தந்தையின் அதிகாரத்தையும், உரோமைத் திருச்சபையின் இறையியல் படிப்பினைகள், விசுவாச பிரமாணங்களை ஏற்றுக் கொண்டனர். ஆனால் நிர்வாக அமைப்பிலும், வழிபாட்டு முறைகளிலும் வேறுப்பட்டனர். அவர்களின் வழிபாட்டு முறைகளை ஆராய்ந்த நாம், இப்பொழுது மேலைத்தேய கத்தோலிக்க திருச்சபையின் வழிபாட்டு முறைகளை சற்று ஆராய்வோம்.

மேலைத்தேய கத்தோலிக்க வழிபாட்டு முறைகளின் முக்கிய நிலையமாக உரோமை விளங்கியது. ஆனால் காலம் செல்லச்செல்ல வேறு வழிபாட்டு நிலையங்களும் தோன்றின. அவை மிலான், ஸ்பானியா, பிரான்ஸ், அயர்லாந்து என்பனவாகும்.

### மேலைத்தேய கத்தோலிக்க திருச்சபைகளின் வழிபாட்டு முறைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| உரோமை | மிலான் | ஸ்பானியா | பிரான்ஸ் | அயர்லாந்து |
| ↓ | ↓ | ↓ | ↓ | ↓ |
| உரோமன் | அம்புறோஸ் | ஸ்பானிய | கல்லிக்கன் | செல்திக் |

உரோமைய வழிபாட்டு முறைதான் பொதுவாகப் பரவலாக மேற்கத்தேய நாடுகளெங்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஏனைய வழிபாட்டு முறைகளைப்போல உரோமைய வழிபாட்டு முறையும் பல நூற்றாண்டுகளுக்கு ஊடாக பயணித்து. காலத்துக்கு, பண்பாட்டின் வளர்சிக்கு ஏற்றவாறு தழுவி அமைக்கப்பட்டு, பல மாற்றங்களைக்

கண்டு, வளர்ந்து வந்திருக்கின்றது. நற்கருணை வழிபாடே அதன் மையமாக இருக்கிறது. மேற்கத்தேய நற்கருணை வழிபாட்டீன் வளர்ச்சியில் மூன்று நிலைகள் உள்ளன: திரிதேந்தின் சங்கத்துக்கு முந்திய காலத்து வழிபாடு, திரிதேந்தின் காலத்தைய வழிபாடு, திரிதேந்தின் சங்கத்துக்குப் பிந்திய காலத்தைய வழிபாடு.

பொதுவாக ஏனைய வழிபாடுகள் கவிதை மொழியில் எழுதப்பட்டிருக்க, உரோமைய வழிபாடானது அமைதியான, தெளிவான விளக்கமுள்ள முறையில் எழுதப்பட்டிருக்கின்றது. திரிதேந்தின் காலத்தைய வழிபாடானது சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஒவ்வொரு சிறிய அசைவிலும் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை வெகு நுணுக்கமாகத் தருகின்றது. அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறுகின்ற சரியான நேரத்தைக் குறிப்பிடுவதற்காக அப்பத்தையும், பாத்திரத்தையும் மக்களுக்கு உயர்த்திக் காட்ட வேண்டுமெனக் கூறுகின்றது. அப்படிக் காட்டப்படும்பொழுது. மணிகள் அடிக்கப்பட், தூபமும் காட்டப்பட வேண்டும். அநேக முறைகளில் முழங்காலை மடித்து வணங்குவது, அதிக நேரம் முழங்காலில் இருப்பது, கைகளைக் குவித்து வைத்திருப்பது போன்றவற்றிலும் மேற்கத்தேய வழிபாடு கீழைத்தேய வழிபாட்டு முறையிலிருந்து வேறுபடுகின்றது. கீழைத்தேய திருச்சபை தனது வழிபாட்டு முறையே மிகக் பழமையானதெனக் கூற முனைந்தாலும். உரோமைய வழிபாட்டின் நற்கருணை மன்றாட்டு 4ம் நூற்றாண்டு மன்றாட்டை ஒத்ததாகக் காணப்படுகின்றது. 4ம் நூற்றாண்டிலிருந்து எவ்வித மாற்றமும் இன்றிப் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றது. எனவே உரோமைய வழிபாட்டு முறை கீழைத்தேய வழிபாட்டு முறையிலும் பார்க்கப் பழமையானதென உரோமைய திருச்பையினர் கூறுவர். ஆனால் 4-6ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் உரோமைய வழிபாட்டு முறையில் பல பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை எவரும் மறுக்க முடியாது. உரோமைய ஆலயங்களிலிருந்துவந்த போதகரின் மேடையும், நீண்ட திரையும் இப்பொழுது அகற்றப்பட்டுவிட்டன.

உரோமைய திருவழிபாட்டில் இரு முக்கிய பகுதிகள் இருக்கின்றன். அவை இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு எனப்படும். வழிபாடுகளின்போது செபங்கள், மன்றாட்டுகள் என்பன அநேகமாக வாசக முறையிலேயே வாசிக்கப்படுகின்றன. தலைமை

தாங்கும் குரு பேசும் முறையிலேயே செபங்களை வாசிக்கிறார். இசையும் சாதாரண, தெளிவான, அழகிய கிரகோரியன் இசையில் பாடப் படுகின்றன. இசைக் கருவிகள் குறைக்கப்பட்டு, மக்களுடைய சிந்தனைகளை அதிகம் குழப்பாமல் பயன்படுத்தப் படுகின்றன. உரோமைய வழிபாடுகள் சடங்குகளை இழுத்தடித்துக்கொண்டு போகாமல், அவசியமற்றவற்றை விலக்கியும், சுருக்கியும், குறுகிய நேரத்தில முடிவடைகிறது. இவற்றிலும் மேலைத்தேய வழிபாடுகள் கீழைத்தேய வழிபாடுகளிலிருந்து வேறுபடுகின்றன.

உரோமைய வழிபாடுகளில் பின்வரும் விசேட பண்புகளை நாம் அவதானிக்கிறோம்:

1. கம்பீரத் தன்மை: அவை சிறந்த முன் ஆயத்தங்களுடன் இடம்பெறும். உயர்ந்த பண்புகளைக் கொண்டிருக்கும். உதாரணமாக, திருபலியின்போது குருவுக்கும், திருத்தொண்டர்களுக்கும் வெவ்வேறான திரு ஆடைகள் இருக்கின்றன. அவ் உடைகளை அணிவதால் கம்பீரமான தோற்றம் காணப்படும். பயன்படுத்தப்படும் பொருட்களிலும், கடைப்பிடிக்கப்படும் பழக்க வழக்கங்களிலும் பண்புள்ள தன்மை உள்ளது

2. அடக்க ஒடுக்கம்: மொழி, ஆடை, அணிகலன்கள், அசைவுகள், நகர்வுகள், பேசுதல் என்பன அனைத்தும் அடக்வொடுக்கமாக இருக்கின்றன. இது மிகவும் அமைதியான வழிபாடாகும்.

3. தெளிவு. அறிவு சார்ந்த தன்மை: சொல்லப்படும் செபங்களும், இடம்பெறும் சடங்குகளும், திருப்பலி முறையும் தெளிவான, அறிவு சார்ந்த விதத்தில் அமைந்திருக்கின்றன. அவை கற்றிந்த அறிஞர்களால் எழுதப்பட்டவை. எனவே உணர்ச்சிகளைத் தூண்டும் விடயங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

4. குறுகிய தன்மை: மேற்கத்தேய வழிபாடுகள் நேரத்தைப்பற்றிக் கவனமாக உள்ளன. இன்றியமையாதவை தவிர்ந்த, ஏனைய அவசியமற்ற சடங்குகளும், இரட்டிப்புகளும், பாடல்களும் தவிர்க்கப்பட்டு, குறிப்பிட்ட நேரத்துக்குள் வழிபாடுகள் முடிக்கப் படுகின்றன. குறிப்பிட்ட நேரத்தில் திருப்பலிக்குச் சமுகமளித்தல் இங்கு காணக்கூடிய சிறப்பியல்பாகும்.

**தேர்ச்சி மட்டம் 9.2.:** அருளடையாளங்களைப் பெறுவதன் முக்கியத்துவத்தை விளக்குவர்

**அறிமுகம்: அருள் அடையாளங்கள் - திருவருட் சாதனங்கள்**

இயேசு இவ்வுலகில் தந்தை அவருக்குக் கொடுத்த பணியை முடித்துக் கொண்டு தம் தந்தையிடம் விண்ணகம் திரும்பிச் செல்லுமுன் தம் சீடர்களிடம் தம் பணியைத் தொடர்ந்து செய்யும்படியாக பணித்து, "உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருப்பேன்" (மத்.28:20) எனக் கூறிச் சென்றார். அதுவே அவர் தம் சீடர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி. அதை எப்படி நிறைவேற்றத் திட்டமிட்டிருக்கிறாரென்பது பெந்தெகோஸ்தே தினத்தன்று தெரிய வந்தது. அவர் தம் சீடர்கள்மேல் தூய ஆவி வடிவில் இறங்கிவந்து தங்கினார். இன்று இயேசு தம் சீடர்கள் ஒவ்வொருவருள்ளும் தம் ஆவி வடிவில் தங்கியிருந்து உதவி செய்கிறார். எனவே இப்பொழுது இயேசுவின் சீடர்கள் இயேசுவைப் போல கடவுளை "அப்பா தந்தையே" (கலா.4:6) என்று அழைக்க உரிமை உள்ளவர்கள். இயேசுவின் ஆவியை பெற்றிருக்கும் சீடர்கள் ஆர்வம் நிறைந்தவர்களாய் உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவித்தார்கள். பலர் நற்செய்தியை ஏற்று, மனந்திரும்பி, இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்து, திருமுழுக்குப் பெற்றனர். எங்கெல்லாம் நற்செய்தி போதிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் நம்பிக்கைகொள்வோரின் சமூகம் உருவாகி வளருகிறது. தல திருச்சபைகள் நிறுவப்படுகின்றன. இயேசுவின் திருச்சபை என்ற புதிய இறைமக்கள் சமூகம் உருவாகின்றது. திராட்சைச் செடியுடன் கிளைகள இணைந்துள்ளது போல, உறுப்புகள் உடலுடன் இணைந்துள்ளது போல, இந்த இறைமக்கள் சமூகம் இயேசுவுடன் இணைந்துள்ளது. இயேசு இந்தத் திருச்சபையில் இருந்துகொண்டு, இந்தத் திருச்சபை வழியாகச் செயலபடுகின்றார். அதன் நிமித்தம் திருச்சபையின் செயல்பாடுகள் கிறிஸ்துவின் மீட்புச் செயல்பாடுகளாகின்றன. இவையே அருள் அடையாளங்கள், திருவருட் சாதனங்கள் என அழைக்கப்படுகின்றன. அதற்கு, "கடவுள் தனித்துவமாகச் செயல்படும் ஒரு சடங்கு". "கண்களால் காணமுடியாத மெய்மையின், யதார்த்தத்தின் கண்ணால் காணக்கூடிய அடையாளம்". "கண்ணால் காணமுடியாத உள்ளார்ந்த இறையருளின் கண்ணால் காணக்கூடிய வெளியடையாளம்" என வரைவிலக்கணங்கள் கொடுக்கப்படுகின்றன. எனவே அருள் அடையாள-

மென்பது அதில் பங்கெடுக்கும் நம்பிக்கையுள்ளவர்கள்மேல் இறை அருளை, ஆசீரை, புனிதத்தை பொழியும் ஒரு மத அடையாளம் அல்லது சடங்கு ஆகும்.

இயேசு விசுவாசிகளின் மீட்புக்காக தமது திருச்சபையிடம் கொடுத்துள்ள வெளியடையாளங்கள் அவர் திருச்சபையில் இருக்கிறார், திருச்சபை வழியாகச் செயல்படுகிறார் என்பதற்கு அச்சாரமும், சான்றுமாக உள்ளன. திருச்சபை மக்கள் மத்தியில் அருள் அடையாளங்களை மக்களுடன் மக்களுக்காகக் கொண்டாடி, இயேசுவை மக்கள் மத்தியில் பிரசன்னப்படுத்தி, கடவுள் எல்லாரையும் அன்பு செய்து, எல்லாருக்கும் தம் மீட்புக் கொடையைத் தர விரும்புவதைக் காட்டுகிறது. இந்த அருள் அடையாளங்கள் நம் கிறிஸ்தவ வாழ்வின் எல்லா முக்கிய கட்டங்களையும், பருவங்களையும் தொடுவதாக அமைந்துள்ளன. மனிதனுடைய உலக வாழ்வின் வளர்ச்சிப் படிகளுக்கும், ஆனமீக வாழ்வின் படிகளுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது.

**திருமுழுக்கு:** நமது கிறிஸ்தவ வாழ்வைத் தொடங்கிவைத்து, இயேசுக் கிறிஸ்துவினுடைய திருச்சபையில் உறுப்பினராக்குகின்றது.

**உறுதிப்பூசுதல்:** திருமுழுக்குப் பெற்றவர்களை தூய ஆவியால் புனித வளப்படுத்தி, உறுதிப்படுத்துகின்றது.

**நற்கருணை:** நமது ஆண்டவருடைய உயிரில் பங்கெடுக்கச் செய்து, நம்மை ஒரு சமூகமாக ஒன்றிணைக்கின்றது.

**ஒப்புரவு:** நாம் பாவம் செய்துவிட்டால் அதற்கு மன்னிப்பை அளித்து, கடவுளோடும், திருச்சபையோடும் ஒப்புரவாக்குகின்றது.

**நோயில் பூசுதல்:** கடின வியாதிக்காரருக்கு உடல் நலமும், ஆறுதலும் அளிக்கின்றது.

**குருத்துவம்:** திருச்சபையில் திருத்தொண்டர்களும், குருக்களும், ஆயர்களும் சிறப்பான பணியாற்ற வரம் அருளுகின்றது.

**திருமணம்:** மணமக்கள் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய, ஒருவருக்கொருவர் பற்றுறுதியுடனிருக்க வாக்களிக்கின்றனர். இவர்களது ஒருமைப்பாடு கிறிஸ்துவுடன் கொள்ளும் ஒருமைப்பாடாகின்றது.

இந்த அருள் அடையாளங்கள் கண்ணுக்குத் தெரியாமல் மீட்புச் செயல் நம் உள்ளே நிகழ்வதை வெளிப்படையான அடையாளங்கள் வழியாக நமக்குக் காட்டி நிற்கின்றன. கடவுள் இவற்றின் வழி செயல்படுவதால், இவ் அடையாளங்கள் சுட்டிக் காட்டுபவை உண்மையிலேயே நிகழ்கின்றன. இவற்றின் வழியாக கடவுளின் அருட்கொடையை, அதாவது கடவுள் உயிரையே பெற்றுக் கொள்கிறோம். அவை உண்மையில் நம்மைக் கடவுளுக்குச் சொந்தமாக்கி, நமக்கு மீட்பையும் கொடுக்கின்றன.

## 9.2.1. இயேசுக் கிறிஸ்துவே அருள் அடையாளங்களின் மையம்

திருச்சபையானது கிறிஸ்துவின் பெயராலேயே அருள் அடையாளங்களை வழங்குகின்றது. கிறிஸ்துவே ஆவி வடிவில் திருச்சபையில் தங்கியிருந்து, அருள் அடையாளங்கள் வழங்கப்படும்போது, திருச்சபை வழியாக முக்கியமாகச் செயல்படுகின்றார் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவோடு இணைந்து கொண்ட விசுவாசிகள், அவரிலே வாழ்ந்து, அவரிலே வளர்ந்து கிறிஸ்துவின் வாழ்வின் நிறைவை அடைய வேண்டும். "வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்" என்பதே கிறிஸ்தவ விசுவாசிகளின் வாழ்வின் இலட்சியம். நாம் கிறிஸ்துவாக மாறவேண்டும். எம்மில் வளரும் கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சியின் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் தேவையான இறையருள், உதவி நமக்கு அருள் அடையாளங்கள் வழியாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு அருள் அடையாளமும் வழங்கப்படுவதற்கான நோக்கத்தை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம்.

திருமுழுக்குவழியாக திருச்சபையின் அங்கத்துவம் பெற்று, இயேசுக் கிறிஸ்துவோடு இணைந்து கொள்வதால் எமது ஆன்மா

வளர்ச்சியடைவதோடு, அதன் வழியாக நிறைவை நோக்கிச் செல்வதற்கும் எமக்குப் பேருதவியாகவுள்ளது. "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" (மத். 5:48). மேலும் அந்த நிறைவை உரிமையாக்கிக் கொள்வதற்கு, நாம் முயற்சி எடுப்பதோடு, நாம் அவரோடு இணைந்தும் இருத்தல் வேண்டும். "உயிர்த்தெழச் செய்பவனும், வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவா. 10:11). கிறிஸ்துவோடு இணைந்த வாழ்வால் மனித வாழ்வு தூய்மை அடையும். அதற்காக, கிறிஸ்துவின் செயற்பாட்டிற்குள் தூய ஆவியின் வல்லமையால் அல்லது அருள்களினால் ஊட்டம் பெறுவதற்கு விசுவாசிகளுக்குச் சந்தர்ப்பம் அருளப்படுகிறது. கிறிஸ்துவின் மறையுடலை வளர்க்கும் பொறுப்போடு இணைவதற்கும் அழைப்பு விடப்படுகின்றது.

நம் கிறிஸ்தவ வாழ்வில் மாற்றத்தினை, வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக எமக்கு அழைப்பு விடும் அருள் அடையாளங்கள், கிறிஸ்துவுக்குள் அதனை மென்மேலும் உறுதிப்படுத்தவும் அழைப்பு விடுகின்றது. அதற்கு உதாரணங்களாக சக்கேயுவின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றத்தை, சமாரியப் பெண்ணின் சொந்த வழ்வில் ஏற்பட்ட மாற்றத்தைக் கொள்ளலாம். எனவே அருள் அடையாளங்களின் தொடக்கமும், அவற்றின் நோக்கமும், அவற்றைச் செயற்படுத்தபவரும் இயேசுக் கிறிஸ்துவே. அவரே அருள் அடையாளங்களின் மையமாகத் திகழ்கின்றார்.

## 9.2.2. இயேசுக் கிறிஸ்துவே கடவுளின் முதன்மையான அருள் அடையாளம்

திருச்சபையின் அருள் அடையாளங்கள் பற்றிய எந்தவொரு ஆய்வும் மனுவுரு எடுத்த இயேசுக் கிறிஸ்துவை விளங்கிக் கொள்வதுடன் ஆரம்பிக்க வேண்டுமென புனித தோமாஸ் அகுவைனஸ் கூறுகிறார். அருள் அடையாளம் "கண்களால் காணமுடியாத மெய்மையின், யதார்த்தத்தின் கண்ணால் காணக்கூடிய அடையாளம்" என வரைவிலக்கணம் செய்யப்படுவதை நாம் பாரத்தோம். கண்களால் காணமுடியாத கடவுளின் கண்களால் காணக்கூடிய வெளிப்பாடாகவே இறைமனிதன் இயேசுக் கிறிஸ்து இருக்கின்றார். எங்களைப் படைத்த

அந்த அன்புத் தெய்வம் தான் அன்பு செய்யும் எங்களோடு, எங்கள் மத்தியில் பிரசன்னமாயிருக்க விரும்புகிறார். காதலர்கள் ஒன்றாக இருக்க விரும்புவது இயல்பு. எங்கள் கண்களால் காணமுடியாத அல்லது கைகளால் தொடமுடியாத ஒருவரை நாங்கள் அன்பு செய்வது எவ்வளவு கடினம் என்பதைக் கடவுள் நன்கு அறிவார். எனவேதான் கண்களால் காணமுடியாத கடவுள் எங்கள் மத்தியில் வந்து, மனித உருவில் தோன்றினார். இயேசுவின் மனித அவதாரத்திலே நாம் கடவுளை, அவரது மாட்சிமையை, அவரது அன்பைக் காண்கிறோம்.

> "தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ் வாக்கு கடவுளோடு இருந்தது. அவ் வாக்கு கடவுளாயும் இருந்தது... அந்த வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சிமையை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம் மாட்சியைப் பெற்றிருந்தார்" (யோவா.1:1-14).

> "கடவுள் அன்பாய் இருக்கிறார். நாம் வாழ்வுபெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது" (1 யோவா. 4:9).

ஒருவரும் கண்ணால் கண்டிராத கடவுள், இயேசுவின் மனித உருவில் காணப்பட்டார். புனித அகுஸ்தினார் அருள் அடையாளங்கள் "கண்ணால் காணமுடியாத அருளின் காணக்கூடிய அடையாளம்" எனக் கூறுகிறார். அருளடையாளங்கள் கண்ணால் காணமுடியாததை காணக்கூடியது ஆக்குகின்றன. இயேசு தம் மனித உருவில் கண்ணால் காணமுடியாத கடவுளை காணக்கூடியவர் ஆக்குகின்றார். எனவே இயேசு கடவுளின் முதலும், முதன்மையுயான அருள் அடையாளமாக இருக்கிறார். திருச்சபையின் வாழ்வில் அருள் அடையாளங்களின் இடத்தை விளங்குவதற்கு இந்த உண்மையை நாம் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் திருச்சபையின் அருள் அடையாளங்கள் முறையானது இயேசு இன்று எங்களுக்கு யார்? என்பதை எங்களுக்கு எடுத்துரைத்து, அவரது வார்த்தையையும், ஆவியையும் அளிக்கின்றது.

இயேசுவே கடவுளின் முதன்மையான அருள் அடையாளமென ஏற்றுக்கொள்வதற்கு புதிய ஏற்பாட்டில் பல ஆதாரங்கள் உள்ளன.

கண்களால் காணமுடியாத கடவுளை, அவரது தன்மையை, இயல்பை நமக்கு உணர்த்துவதற்கு பழைய ஏற்பாட்டில் கடவுள் பல உருவகங்கள், அடையாளங்களினால் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். உதாரணமாக, ஆயன் (தி.பா. 23), பாறை (தி.பா. 18:3), அரசன் (தி.பா. 93), நடுவர் (தி.பா.7:7), கழுகு (வி.ப. 19:4), குயவன் (எரே. 18), ஆசிரியர் (தி.பா. 71:17), வார்த்தை (எசா. 6), ஒளி, உணவு, உயிர். இந்த உருவகங்கள், அடையாளங்கள் அனைத்தும் மக்களுடைய இறை அனுபவங்களிலிருந்து எழுந்தவை. கடவுளைப் பற்றி நாம் அடையாளங்கள், உருவகங்கள் மூலமே பேச முடியும். அவை கடவுளுடைய உண்மையான பிரசன்னத்தை வெளிப்படுத்துகின்றன. அதேபோன்று இயேசுவும் கடவுளின் அடையாளமாக, உருவகமாக இருக்கிறார். பழைய ஏற்பாட்டில் கடவுளுக்குக் கொடுக்கப்பட்ட உருவகங்கள், அடையாளங்களை தனதாக்கி, தான் கடவுளுக்குச் சமமானவர், கடவுளை ஒத்தவர் எனக் காட்டுகிறார். "நானே நல்ல ஆயன்", "நானே உலகின் ஒளி", "நானே வானிலிருந்த இறங்கி வந்த உயிருள்ள உணவு". மேலும் தந்தை செய்வதையே தான் செய்வதாகவும், தந்தை சொல்லுவதையே தான் சொல்லுவதாகவும், தன்னை ஏற்றுக் கொள்பவர் தந்தயை ஏற்றுக் கொள்வதாகவும், தன்னைக் காண்கிறவர் தந்தையைக் காணுவதாகவும், தானும் தந்தையும் ஒன்றே எனவும் கூறுகிறார். இவ்வாறு தானே தந்தையின் வெளிப்பாடு, அருள் அடையாளம் என எடுத்துரைக்கிறார்.

மேலும். புனித பவுல் இயேசுவை "கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளி... அவருடைய இயல்பின் அச்சுப் பதிவு" (எபி.1:3), "கட்புலனாகாத கடவுளது சாயல்" (கொலே. 1:15), "கடவுள் சாயலாய் விளங்கும் கிறிஸ்து" (2 கொர். 4:4) எனவும் வர்ணிக்கிறார். இவையெல்லாம் இயேசு கடவுளின் அருள் அடையாளம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இயேசுவின் மனித அவதாரம், அவரது வாழ்வு, பணி, செயல்கள், புதுமைகள், போதனைகள், குறிப்பாக அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு அனைத்துமே இறைவனின் குணாதிசயங்களை, இயல்பை, தன்மையை, அவரது அன்பை, இரக்கத்தை, கர்சனையை, பராமரிப்பை, வல்லமையை, ஞானத்தை எமக்கு வெளிப்டுத்துகின்றன. இயேசுவின் மனுவுருவாதலின்போது இறைவன் மனுக்குலம் முழுவதின்மேலும் கொண்டுள்ள அன்பு வெளிப்படுத்தப் படுகின்றது. "கடவுள் அன்பாய்

இருக்கிறார். நாம் வாழ்வுபெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் கடவுள் மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல, மாறாக அவர் நம்மீது அன்பு கொண்டு, தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்கியது" (1 யோவா. 4:10). "தொடக்க முதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம். கண்ணால் கண்டோம். உற்று நோக்கினோம். கையால் தொட்டுணர்ந்தோம். வெளிப்படுத்தப்பட்ட அந்த வாழ்வை நாம் கண்டோம்" (1 யோவா. 1:1). இயேசுவின் மனித அவதாரம் இறை-மனித உறவை நமக்கு வெளிப்படுத்தியது மட்டுமல்ல, அதை வளர்க்வும், நிரந்தரமாக்கவும், உறுதிப்படுத்தவும் உதவுகின்றது.

இயேசு கடவுளின் முதன்மையான அருள் அடையாளமென்பதை இன்னும் அதிகமாக விளங்கிக்கொள்வதற்கு, புதிய ஏற்பாட்டு இறையியலில் "மறைபொருள்" (Mystery) பற்றிய சிந்தனையை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். ஆரம்பத்தில் "மறைபொருள்" என்ற சொல் மறைவாயிருக்கும் ஒன்றை வெளிப்படுத்துவதை விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் புதிய ஏற்பாட்டில் இச் சொல் மறைவாயிருக்கும் ஒரு உண்மையை அல்ல, கிறிஸ்துவில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட இறையன்பைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. "பலமுறை பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்" (எபி. 1:1). "அவர் தமது திருவுளத்தின் மறைபொருளை நமக்குத் தெரியப்படுத்தியுள்ளார். இது கிறிஸ்து வழியாகக் கடவள் விரும்பிச் செய்த தீர்மானம். கால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்க்கவேண்டும் என்ற திட்டமே அம் மறைபொருள்" (எபே. 1:9-10). "சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலைநாட்டவும், விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர் வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்" (கொலோ. 1:20). இயேசுக் கிறிஸ்துவில் இறையன்பும், இறைவல்லமையும் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது.

தொடக்ககால கிறிஸதவர்கள் மத்தியில் "மறைபொருள்" என்ற சொல் இறைவனைக் குறித்தது. பின்னர் அது இறைவனின் ஞானம்,

திருவுளம், இறைத்திட்டம் ஆகியவற்றையும் குறித்தது. (1 கொரி. 2:7-12: கொலோ. 1: 26-27) இவ்வாறு முழுமையான இறைவனின் மீட்புத் திட்டத்தைக் குறிக்க "மறைபொருள்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இந்த மீட்புத் திட்டம் கிறிஸ்து இயேசுவில், அவர் வழியாக நிறைவேறியது. எனவேதான் புனித தோமாஸ் அக்குவைனஸ், இயேசுக் கிறிஸ்துவை "அடிப்படையான ஆரம்ப அருள் அடையாளம்" (Fundamental Sacrament) எனக் குறிப்பிடுகிறார். மேலும் அவரது மனித சுபாவம் இறைத் தன்மையின் அடையாளமாவதோடு, மீட்புக்கான வழியையும் காட்டுகிறதென்கிறார்.

இயேசுக் கிறிஸ்துவின் அருள் அடையாள இயல்புடன் திருச்சபையின் அருள் அடையாள இயல்பு கொண்டுள்ள நெருங்கிய உறவை நோக்குகையில், 19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட திருச்சபையியல் மறுமலர்ச்சியின் போது, இயேசுக் கிறிஸ்து "உன்னத அருள் அடையாளம்" என்ற கருத்து பரவியது. ஆனால் 20ம் நூற்றாண்டில், கார்ல் பெக்ஸ் (Carl Feckes) என்பவரால், இயேசுக் கிறிஸ்துவே "முதன்மையான அருள் அடையாளம்" என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இங்கு எல்லா அருள் அடையாளங்களும் அவரில் தங்கியிருப்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு அருள் அடையாளமும் முக்கியமாக இந்த அத்திவாரத்தின் மீது உறுதிப்படுத்தப் படுகின்றது. அவரே முதன்மையான அடிப்படையென்பது வலியுறுத்தப்படுவதோடு, விசேடமாக இறையன்பு பெருக்கெடுத்து வருகின்ற முக்கிய வழியாகவும் அவர் உள்ளார். இறையியலாளர் எட்வேட் ஸ்கிலபெக்ஸ் இயேசுவை "இறைச் சந்திப்பின் அருள் அடையாளம்" என அழைக்கிறார். வரலாற்று இயேசு இறைவனின் முழுமுதல் அருள் அடையாளம். வரலாற்றில் இயேசுவைச் சந்தித்தவர்கள் இறைவனையே சந்தித்தர்கள். வரலாற்றில் இறைவனின் அன்புப் பிரசன்னம் கிறிஸ்துவில் வெளிப்பட்டது.

### 9.2.3. திருச்சபை: இயேசுக் கிறிஸ்துவின் அடிப்படை, ஆரம்ப அருள் அடையாளம்

இயேசுக் கிறிஸ்துவே கடவுளின் முதன்மையான அருள் அடையாளம். அவரே கட்புலனாகாத கடவுளின் அசல் சாயல். அவரிலேயே நாம் கடவுளைக் காண்கிறோம். அவரைக் காண்கிறவர்கள்

கடவுளைக் காண்கிறார்கள். அவருடைய மனித அவதாரம், அவரது வாழ்வு, பணி, செயல்கள், புதுமைகள், போதனைகள், குறிப்பாக அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு அனைத்துமே இறைவனின் குணாதிசயங்களை, இயல்பை, தன்மையை, அவரது அன்பை, இரக்கத்தை, கர்சனையை, பராமரிப்பை, வல்லமையை, ஞானத்தை, அவரது மீட்புத் திட்டத்தை எமக்கு வெளிப்படுத்துகின்றன. அவரே கடவுளின் முழுமையான வெளிப்பாடு. அவரே கடவுளுக்கும் மனிதருக்கும் இடையிலான இணைப்பாளராக, பாலமாகத் திகழ்கின்றார். அவர் வழியாலன்றி எவரும் கடவுளை அடைய முடியாது.

ஆனால் இன்று நாம் அவரைக் காண முடியாது. அவர் இன்று எங்கள் மத்தியில் இல்லை. அது ஒரு தவறான கருத்து. அக் கருத்து தவறானதென்பதை உணர்வதற்கு கிறிஸ்தவர்கள் நீண்ட காலம் எடுக்கவில்லை. புனித பவுல் தமாஸ்குப் பாதையில் இயேசு இன்றும் எங்கள் மத்தியில் இருப்பதைக் கண்டு கொள்கிறார். அவரே தன் அனுபவத்தைக் கூறுகின்றார்: "திடீரென வானிலிருந்து ஒரு பேரொளி என்னைச் சூழ்ந்து வீசியது. நான் தரையில் வீழ்ந்தேன். அப்போது, "சவுலே. சவுலே, நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" என்ற குரலைக் கேட்டேன். அப்போது நான், "ஆண்டவரே, நீர் யார்?" என்று கேட்டேன். அவர், 'நீ துன்புறுத்தும் நாசரேத்து இயேசு நானே' என்றார்" (தி.தூ.ப. 22:7-8). புனித பவுல் இச் சம்பவத்தின் வழியாக இயேசுக் கிறிஸ்துவை திருச்சபையிடமிருந்து, திருச்சபையின் உறுப்பினர்களிடமிருந்து பிரிக்க முடியாதென்பதை உணர்ந்து கொண்டார். உயிர்த்த கிறிஸ்து தம்மை கிறிஸ்தவர்களுடன் எவ்வளவுக்கு ஒன்றிக்கிறாரென்றால், பவுல் கிறிஸ்தவர்களுக்குச் செய்ததை கிறிஸ்துவுக்கே செய்தார். கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவன், பவுலுடன் சேர்ந்து, "எனவே இனி வாழ்பவன் நான் அல்ல. கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா. 2:20) எனக் கூறலாம்.

எனவே இயேசு கடவுளின் முதன்மையான அருள் அடையாளமாயிருப்பதுபோல, உயிர்த்த கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களும் இயேசுவின் அருள் அடையாளமாக ஆகின்றார்கள். இன்று கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையே அருள் அடையாளமாக, கடவுளின் அன்புத் திட்டத்தின் வெளிப்பாடாக இருக்கின்றது. எனவேதான்

2ம் வத்திக்கான் சங்கம் திருச்சபை பற்றிய கொள்கைத் திரட்டிலே, “இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட இயேசு உயிரளிக்கும் தம் ஆவியானவரைச் சீடர்களுக்கு அனுப்பினார். இவர் வழியாகவே திருச்சபையாகிய தம் உடலைக் கிறிஸ்து அனைவருக்கும் நிறைவாழ்வின் அருள் அடையாளமாக நிறுவினார்” (மக்களின் ஒளி இல.48) என்று கூறுகின்றது. கிறிஸ்தவர்கள் அருள் அடையாளத்தைப் பெறுகிறார்கள் எனக் கூறுவதிலும் பார்க்க, கிறிஸ்தவர்களே அருள அடையாளமாயிருக்கிறார்கள், இன்றைய உலகில் அருளின் கருவிகளாக இருக்கிறார்களென்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அன்று இறைவார்த்தையானவர் நாசரேத்தூர் இயேசு எனும் ஆளிலும், அவருடைய செயல்களிலும் வாழ்ந்து செயல்பட்டது போல, இன்று உயிர்த்த இயேசுவும் ஆவியால் நிரபப்பெற்ற அவருடைய உடலின் உறுப்பினர்களில் வாழ்ந்து செயல்படுகின்றார். உலகில் அவரைப் பின்பற்றுபவர்களின் சமூகமாகிய திருச்சபையே இன்று உயிர்த்து மகிமைப்படுத்தப்பட்ட ஆண்டவரின் உடலாக இருக்கின்றது. எனவேதான் 2ம் வத்திக்கான் சங்கம் திருவழிபாடு பற்றிய கொள்கைத் திரட்டிலே (இல.7), “கிறிஸ்து தம் திருச்சபையிலே எப்பொழுதும் உடன் இருக்கிறார்” எனக் கூறுகிறது. திருச்சபையில் இயேசுவின் தொடர்ச்சியான பிரசன்னம், திருச்சபை எவ்வாறு உருவாகியது என்ற கேள்வியை எழுப்புகின்றது.

முதல் மனிதனின் பாவத்தினால் சீரழிந்த மனுக்குலத்தையும், படைப்புகள் அனைத்தையும் சீர்செய்து, மீண்டும் அவற்றின் ஆரம்ப நிலைக்கு கொணர இறைவன் விரும்பினார். அதற்கென ஒரு மீட்புத் திட்டத்தைத் தயாரித்து, தன் மகனிடம் அளித்து, அதை நிறைவேற்ற சகல அதிகாரங்களுடனும் அவரை உலகிற்கு அனுப்பினார். இயேசு என்ற மனித உருவில் உலகிற்கு வந்த இறைமகன், உலகில் இறைவனின் அருள் அடையாளமாக விளங்கி, தம் மனித அவதாரம், வாழ்வு, செயல், போதனை வழியாக இறைவனையும், அவரது இயல்பு, பண்பு, விருப்பம், மீட்புத் திட்டம் அனைத்தையும் வெளிப்படுத்தி, தம் பாடுகள், மரணம் உயிர்ப்பு வழியாக அத் திட்டத்தை நிறைவேற்றி வைத்தார். தான் நிறைவேற்றிய மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று, உலக முடிவுமட்டும் வாழும் அனைத்துலக மக்களுக்கும் கிடைக்கப்பெற

வேண்டுமென்றும் விரும்பினார். எனவே தம் பணியின் ஆரம்பத்திலிருந்தே அதற்குத் தேவையான சகல உட்கட்டமைப்புகள் அனைத்தையும் செய்தார். தம்மேல் நம்பிக்கை வைத்து, தம் படிப்பினைகளை ஏற்றுக்கொண்டவர்களுள் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை அப்போஸ்தலர்களென அழைத்தார். அவர்களைத் தம்முடன் ஒரு சிறிய குழுவாக வைத்திருந்து, அவர்களுக்கு தம் வாழ்விலும், பணியிலும் பங்களித்து, தமக்குப் பின் தம் பணியைத் தொடர்ந்தாற்ற அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தார். அவர்களுக்கு செயல்முறைப் பயிற்சியும் கொடுத்தார்.

மேலும், "உங்களுக்குச் செவிசாய்ப்பவர் எனக்குச் செவிசாய்க்கிறார். உங்களைப் புறகணிப்பவர் என்னைப் புறக்கணிக்கிறார். என்னைப் புறக்கணிப்பவர் என்னை அனுப்பினவரையே புறக்கணிக்கிறார்... ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார்" எனக் கூறி, தான் தந்தையின் அருளடையாளமாய் இருப்பதுபோல, அவர்களும் தன்னுடைய (கிறிஸ்துவினுடைய) அருள் அடையாளமாய் விளங்குவரென உணர்த்தினார். இறுதியில் "என் தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன். உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர்" எனக் கூறி. தம் பணியை அவர்களிடம் ஒப்படைத்தார். "இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருப்பேன்" என இறுதிமட்டும் தம் உதவியை வாக்களித்தார். பின்னர் அவர்களுக்கு தம் தூய ஆவியை வாக்களித்து, அவர் வரும்வரை அவருக்காக எருசலேமில் காத்திருக்குமாறு கூறி, விண்ணகம் சென்றார். பின்னர் பெந்தெகோஸ்தே தினத்தன்று, பரிசுத்த ஆவியின் வருகையுடன் அப்போஸ்தலர் குழுவானது கிறிஸ்துவின் அருள் அடையாளமாக, திருச்சபையாகச் செயல்படத் தொடங்கியது. ஆரம்பத்தில் அப்போஸ்தலர் குழுவே திருச்சபை என் அழைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. பின்னர் அப்போஸ்தலர் குழுவின் போதனை, செயல்பாட்டினால் இயேசுவின் மேல் நம்பிக்கை கொண்டவர்களின் தொகை பெருகி, இன்று கிறிஸதவர்கள் சமூகம் திருச்சபை என அழைக்கப்படுகிறது.

கிறிஸ்தவர்கள் சமூகம், திருச்சபை உயிர்த்த இயேசுவின் உன்னதமான, அடிப்படை, ஆரம்ப அருள் அடையாளமாக விளங்குகின்றது. மக்கள் இன்று திருச்சபை வழியாகவே உயிர்த்த, மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவுடனும், அவர் வழியாக இறைவனுடனும், இறையருளுடனும் தொடர்பு கொள்ளுகிறார்கள். உயிர்த்த இயேசுவை, இறைவனைச் சந்திக்கிறார்கள். எனவேதான் 2ம் வத்திக்கான் சங்கம் கிறிஸ்து எப்பொழுதும் திருச்சபையில் பிரசன்னமாயிருக்கிறாரெனக் கூறுகின்றது. முன்னர் இறைவார்த்தை மனுவுரு எடுத்து, நாசரேத்தூர் இயேசு என்ற ஆளில், அவரது செயல்களில் பிரசன்னமாயிருந்ததுபோல, இன்று உயிர்த்த இயேசு அவருடைய உடலின் ஆவியால் நிரப்பப்பெற்ற உறுப்பினர்களிலும், அவர்களது செயல்களிலும் பிரசன்னமாக இருக்கிறார். உயிர்த்த கிறிஸ்து ஆவி வழியாக திருச்சபையில் தங்கியிருந்து, அதன் உறுப்பினர் வழியாகச் செயல்படுகின்றார். எனவேதான் புனித பவுல் உயிர்த்த கிறிஸ்துவை திருச்சபையின் தலைவர் எனக் குறிப்பிடுகிறார். அதாவது திருச்சபை கிறிஸ்துவில் நிரந்தரமாகத் தங்கியிருக்கிறது. கிறிஸ்து திருச்சபையில், திருச்சபை வழியாக தம் மீட்புப் பணியை தொடர்ந்து செய்கிறார். அவருடைய மீட்புத் திட்டம் திருச்சபை வழியாக வெளிப்படுத்தப்பட்டு, நிறைவேறுவதால் அது ஒரு "மறைபொருள்" என அழைக்கப்படுகின்றது. திருச்சபை மீட்பின் கருவியாக, அருள் அடையாளமாக இருந்தாலும், அது பெலவீனமுள்ள மக்களால் ஆனது. அதாவது புனிதர்களையும், பாவிகளையும் கொண்டது. பரிசுத்தமாய் இருக்கும் வேளையில் பாவ நாட்டமும் உள்ளது. எனவே அதற்கு எப்போதும் சீர்திருத்தம் செய்யப்பட்டு, புதுப்பிக்கப் படவேண்டிய தேவை இருக்கின்றது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

## 9.2.4. திருமுழுக்கு அழைப்பு

"திருமுழுக்கு" என்பது "பப்ரிசெயின்" (Baptizein) என்ற கிரேக்க சொல்லின் மொழிபெயர்ப்பு. அது "நீரில் மூழ்குதல்" அல்லது "நீரில் அமுக்குதல்" எனப் பொருள்படும். திருமுழுக்கு என்பது இயேசுவால் அல்லது ஆரம்ப திருச்சபையால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புதிய சடங்கு முறை அல்ல. அது ஏற்கனவே, யேசுவின் காலத்திற்கு முன்னரே, இஸ்ராயேலர் மத்தியில் வழக்கத்திலிருந்து வந்த ஓர் பழமையான அறிமுகச் சடங்கு, ஒரு நுழைவுச் சடங்கு, ஒரு சுத்திகரிப்புச் சடங்கு.

யூதத் துறவிகளான எசீனியர் தூய்மையின் அடையாளமாக தினமும் நீரில் மூழ்கித் திருமுழுக்குப் பெற்றதாக கும்ரான் ஏடுகள் கூறுகின்றன. யூத மதத்தைத் தழுவ விரும்பிய புறவினத்தவர்களும், யூத மதத்தைத் தழுவுமுன் திருமுழுக்கினால் சுத்திகரிக்கப் பட்டனர்.

**யோவானின் திருமுழுக்கு**

இயேசுவின் பணியின் ஆரம்ப காலத்தில் செக்கரியாவின் மகனான ஸ்நாபக யோவான் யோர்தான் நதிக் கரையில் தன்னிடம் வந்த மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஆனால் யோவான் அளித்த திருமுழுக்கு யூத மக்களுக்கு பழக்கமான சுத்திகரிப்புச் சடங்கு அல்ல. அவர் யோர்தான் நதியை அடுத்துள்ள பகுதிகள் எங்கும் சென்று, "இறையரசு அண்மையில் உள்ளபடியால், பாவமன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்" எனப் போதித்தார். அவரது போதனையில் இரு முக்கிய அம்சங்கள் இருந்தன: 1. பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள். அதாவது பழைய பாவ வழியை விடுத்து, ஒழுக்க நெறிகளையுடைய புதிய வாழ்வுக்கு திரும்புங்கள். 2. உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, புதிய வாழ்வை ஏற்றுக்கொண்டதைக் குறிக்கும் திருமுழுக்கைப் பெற்றுக் கொள்ளுங்கள். அவர் போதனையை ஏற்று, மனந்திருந்தி வந்தவர்களுக்கு, அதன் அடையாளமாக திருமுழுக்கு அளித்தார். அது ஒரு சாதாரண மனித உருவாக்கமல்ல. அது மனித வாழ்வில் ஏற்பட்ட உள்மாற்றத்தினால் உருவாகும் உள்ளத் தூய்மையின் அடையாளமாகவும், இறையரசில் நுழைவதற்கு தகுந்த பாவப் பரிகார ஆயத்தமாகவும் இருந்தது. யோவானின் திருமுழுக்கில் பாவங்களுக்கு மனம்வருந்துதல், பாவஅறிக்கை, இறைவன் விருப்பத்தை நிறைவேற்றும் நல்லமனம் போன்ற அம்சங்கள் அடங்கியிருந்தன.

மேலும், யோவான் தனக்குப் பின் வரவிருக்கும் மெசியா அளிக்கப் போகும் திருமுழுக்கையும் முன்னறிவித்தார். அது தான் அளிக்கும் திருமுழுக்கிலும் பார்க்க வேறுபட்டது, மேன்மையானது எனக் கூறினார். "என்னைவிட வலிமைமிக்க ஒருவர் எனக்குப் பின் வருகின்றார். அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை. நான் உங்களுக்குத் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். அவரோ உங்களுக்குத் தூய ஆவியால் திருமுழுக்குக்

கொடுப்பார்" எனக் கூறினார். யோவான் அளித்த திருமுழுக்கு ஒருவன் உண்மையாக மனஸ்தாபப்படுகின்றான் என்பதற்கு அடையாளம். ஒருவன் பாவ வழியிலிருந்து திருந்தியதைக் காட்டியது. அது ஒரு வெளிச் சடங்கு, சுத்திகரிப்புச் சடங்கு. வெறும் நீரால் அளிக்கப்பட்டது. ஆனால் மெசியா அளிக்கப்போகும் திருமுழுக்கு பரிசுத்த ஆவியால் அளிக்கப்படும். அது உண்மையாகவே மனித பாவங்களுக்கு மன்னிப்பு அளித்து, மனிதரைத் தூய்மையாக்கி, இறைவனுக்குச் சொந்தமாக்கும். இறைவல்லமையால் அவர்களை நிரப்பும். அதன் வழியாக மனிதன் புத்துயிர் பெற்று, புதிய படைப்பாவான்.

**இயேசுவின் திருமுழுக்கு**

இயேசு யோவானிடம் சென்று, யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றதை நான்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிடுகின்றனர். அத் திருமுழுக்கு இயேசுவின் வாழ்க்கையில் இடம் பெற்ற ஒரு முக்கியமான நிகழ்வு என்பதைக் காட்டுகின்றது.

> இயேசு யோவானிடம் திருமுழுக்குப் பெறக் கலிலேயாவிலிருந்து யோர்தானுக்கு வந்தார். யோவான், "நான்தான் உம்மிடம் திருமுழுக்குப் பெறவேண்டியவன். நீரா என்னிடம் வருகிறீர்?" என்று கூறித் தடுத்தார். இயேசு, "இப்பொழுது விட்டுவிடும். கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை" எனப் பதிலளித்தார். அதற்கு யோவானும் இணங்கினார். இயேசு திருமுழுக்குப் பெற்றவுடனே தண்ணீரைவிட்டு வெளியேறினார். உடனே வானம் திறந்ததையும், கடவுளின் ஆவி, புறா இறங்குவது போலத் தம்மீது வருவதையும் அவர் கண்டார். அப்பொழுது, "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது (மத். 3:13-17)
>
> அக்காலத்தில் இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர் ஆற்றிலிருந்து கரையேறிய உடனே வானம் பிளவுபடுவதையும், தூய ஆவி புறாவைப்போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது, "என் அன்பார்ந்த மகன் நீயே. உன் பொருட்டு நான்

பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது (மாற். 1:9-11).

மக்களெல்லாரும் திருமுழுக்குப் பெறும் வேளையில் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று, இவைனிடம் வேண்டிக் கொண்டிருந்து போது, வானம் திறந்தது, தூய ஆவி புறா வடிவில் தோன்றி, அவர்மீது இறங்கியது. அப்பொழுது, "என் அன்பார்ந்த மகன் நீயே. உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது (லூக். 3: 21-22).

"இவர் யாரென்று எனக்குத் தெரியாதிருந்தது. ஆனால் இஸ்ராயேல் மக்களுக்கு இவரை வெளிப்படுத்தும் பொருட்டே நான் வந்துள்ளேன். தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தும் வருகின்றேன்" என்றார். தொடர்ந்து யோவான் சான்றாகக் கூறியது: "தூய ஆவி புறாவைப்போல வானி-லிருந்த இறங்கி இவர் மீது இருந்ததைக் கண்டேன். இவர் யாரென்று எனக்குத் தெரியாதிருந்தது. ஆனால் தண்ணீரினால் திருமுழுக்குக் கொடுக்கும்படி என்னை அனுப்பியவர் "தூய ஆவி இறங்கி யார்மீது இருப்பதைக் காண்பீரோ அவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பவர்" என்று என்னிடம் சொல்லியிருந்தார். நானும் கண்டேன். இவரே இறைமகன் எனச் சான்றும் கூறி வருகின்றேன் (யோவா. 1: 31-32). .

நான்கு நற்செய்திகளிலும் குறிப்பிடப்படும் இந் நிகழ்வு இயேசுவின் வாழ்க்கையிலே ஒரு முக்கியமான நிகழ்வு. அவர் யோர்தான் ஆற்று நீரில் மூழ்கி எழுந்து திருமுழுக்குப் பெற்றார். இயேசுவின் திருமுழுக்கு ஆழ்ந்த மதக் கருத்துக்கள் நிறைந்த ஒரு சடங்காகத் தரப்படுகிறது. கீழைத்தேயச் சடங்கான திருமுழுக்கு சுத்திகரிப்பையும், புதுச் சமூகத்தில் நுழைவதையும் குறிக்கின்றது. ஆனால் இங்கு தண்ணீரில் அமிழ்ந்துதல் பழைய வாழ்வுக்கு இறப்பதையும், புத்துயிருடன் எழுவதையும் குறிக்கின்றது. மேலும் இச் சடங்கு வழியாக இயேசு தம்மை பாவிகளுடன் ஐக்கியப் படுத்துகின்றார். பாவிகளோடு பாவியாய் வரிசையில் நின்று திருமுழுக்குப் பெற்றார். அத்துடன் தந்தையிடமிருந்து ஒரு புது வெளிபாட்டையும் பெறுகிறார். குறிப்பாக ஒத்தமை நற்செய்தியாளர்களில் விவரணையிலே மூன்று முக்கிய நிகழ்வுகள் வலியுறுத்தப்படுகின்றன. (1) வானம் திறவுபடல் (2) பரிசுத்த

ஆவி புறாவடிவில் இறங்கி வந்து இயேசுவின் மீது உறைதல். (3) வானத்திலிருந்து வந்த "என் அன்பார்ந்த மகன் நீயே" என்ற குரலொலி. பாபிலோனிய நாடு கடத்தலின் பின்னர் யூதர்கள் தங்களுக்கு வானம் மூடப்பட்டு விட்டதாகக் கருதினர, ஏனெனில் அதற்குப் பிறகு இறைவன் அவர்களுக்கு இறைவாக்கினரை அனுப்பவும் இல்லை. இறைவாக்கு அளிக்கவும் இல்லை. "எங்களுக்கு மன்னர் இல்லை. இறைவாக்கினர் இல்லை. தலைவர் இல்லை. எரிபலி இல்லை. காணிக்கைப் பொருளோ, தூபமோ இல்லை. உம் திருமுன் பலியிட்டு உம் இரக்கத்தைப் பெற இடமே இல்லை" (தானி. 3:15) என வருந்தினர். ஆனால் இப்பொழுது இயேசுவோடு ஒரு புதிய படைப்பு ஆரம்பமாகிறது. வானம் மீளவும் திறபடுகிறது. கடவுள் அவர்களுடன் மீண்டும் பேசத் தொடங்கிறாரென மத்தேயு காட்ட விளைகிறார். பழைய படைப்பின் ஆரம்பத்தில் கடவுளின் ஆவி நீர்த் திரள்மேல் ஒரு பறவைபோல அசைவாடினார். கடவுள் பேசினார். முதற் படைப்பு தோன்றியது. அதேபோல் இப்பொழுது பரிசுத்த ஆவி யோர்தான் நீரின்மேல் புறாவடிவில் அசைவாடுகிறார். கடவுள் பேசுகிறார். கிறிஸ்துவில் புதுப் படைப்பு ஆரம்பமாகிறது. இயேசுவின் இறைவாக்குப் பணியும் தொடங்குகிறது. பரிசுத்த ஆவி புறா வடிவில் இறங்கி வந்து, இயேசுவின்மேல் தங்குகிறார். முன்னர் இறைவாக்கினர் கடவுளின் ஆவியைப் பெற்றிருந்தனர். அவர்கள் தற்காலிகமாகவே பெற்றிருந்தனர். ஆனால் இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் இயேசுவில் நிரந்தரமாகத் தங்குகிறார். பழைய ஏற்பாட்டில், யூதர்கள் மத்தியில் அருள்பொழிவு செய்யப்படுதல் ஒருவர் ஒரு விசேட பணிக்காகத் தெரிவு செய்யப்படல், அவ் விசேட பொறுப்பு அவரிடம் அளிக்கப்படல், அப் பொறுப்பை நிறைவேற்ற அவர் அனுப்பப்படல் என்ற மூன்று அம்சங்களை உள்ளடக்குகின்றது. இவ்வாறாக அரசர்கள், குருக்கள், இறைவாக்கினர் அருள்பொழிவு செய்யப்படுவதை நாம் பழைய ஏற்பாட்டில் காண்கிறோம். இங்கு இயேசுவிடம் அரச, குருத்துவ இறைவாக்குப் பணிகள் ஒப்படைக்கப்படுவதைக் காண்கிறோம்.

இறுதியாக வானத்திலிருந்து ஒரு குரலொலி கேட்கிறது. "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" (மத். 3:13-17). இயேசு கடவுளின் மகனாகப் பறைசாற்றப்படுகின்றார். மாற்குவும் லூக்காவும் கடவுள் இயேசுவுடன் நேரடியாகப் பேசுவதுபோல் "என் அன்பார்ந்த மகன் நீரே" என்ற குரலொலி கேட்டதாகக்

கூறுகின்றனர். அதாவது இயேசு தந்தையின் அன்பை அனுபவமூலம் அறிந்தாரெனக் கொள்ளலாம். இவ்வசனம் அனேகமாக 2ம் திருப் பாடலிலிருந்து எடுக்கப் பட்டிருக்கிறது. "நீர் என் மைந்தர். இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்" (2:7). 2ம் சங்கீதம் அரசர் ஒருவரை அபிஷேகம் செய்யும்பொழுது பாடப்படும் சங்கீதமாகும். "இதோ! என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன். நான் தேர்ந்து கொண்டவர் அவர். அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது. அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன். அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்" (எசா. 42:1). மெசியா அரச பீடம் ஏறும்போது கடவுள் அவரைத் தம் மகனாக அறிக்கையிடுகிறார். ஆனால் இங்கு இயேசு அரசராகவும், கடவுளின் மகனாகவும் அறிவிக்கப்படுகின்றார். அவர் எத்தகைய அரசராகவிருப்பாரென்பது உணர்த்தப்படுகின்றது. அவர் ஏனைய பழைய இஸ்ரயேல் அரசர்களைப் போன்று அதிகாரம் செலுத்தும் அரசராக அல்ல, போர் புரியும் அரசராக அல்ல. மாறாக துன்புறும் ஊழியராக, பணிபுரியும் அரசராகவே அவர் செயற்படுவார். இதையே "இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்னும் வார்த்தைகள் உணர்த்துகின்றன.

அதையே இயேசுவின் திருமுழுக்கைத் தொடர்ந்து இடம்பெற்ற சோதனைகள் வெளிப்படுத்துகின்றன. சாத்தான் இயேசு தன் வல்லமையைப் பயன்படுத்தி கல்லை அப்பமாக்கும் படியும், விண்ணக தூதர்களின் உதவியுடன் மகிமையைப் பெறும்படியாகவும், பொருட் செல்வங்களின் முன் வணங்கி பொருட் செல்வத்தை ஆதாயமாக்கிக் கொள்ளும்படியும் சோதிக்கிறான். பொருட் செல்வம், வல்லமை, மகிமை என்பன அரசர்கள் வழமையாகத் தேடும் பொருட்களாகும். ஆனால் இயேசு அவற்றையெல்லாம் அடைய மறுத்தார். அவர் தமக்கு திருமுழுக்கு வழியாகத் தரப்பட்ட துன்புறும் ஊழியனாக அரசராகும் அழைப்பையே ஏற்றுக் கொண்டார். இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வு இவர் இறைவனிடமிருந்து பெற்ற அழைப்பை, பொறுப்பை எமக்கு உணர்த்துகின்றது. இயேசு தந்தையினால் (அரசர், குரு, இறைவாக்கினர்) துன்புறும் மெசியாவாக பொறுப்புக் கொடுக்கப்படுகிறார். செபதேயுவின் மக்களாகிய யாகப்பர், யோவானுடன் இயேசு உரையாடிய சந்தர்ப்பத்தில், தம் பாடுகள், மரணத்தை தம் திருமுழுக்கு என அழைப்பதைக் காண்கிறோம்.

**திருச்சபையின் திருமுழுக்கு**

திருச்சபையால் வழங்கப்படும் முதல் அருள் அடையாளம் திருமுழுக்கு ஆகும். இதன் வழியாகவே ஒருவர் திருச்சபையின் உறுப்பினர் ஆகின்றார். இதுவே ஏனைய அருள் அடையாளங்களை பெறுவதற்கு ஒரு கிறிஸ்தவனுக்குத் தகுதியை வழங்குகின்றது. அதுவே கிறிஸ்தவ வாழ்வுக்கு அடிப்படையாக அமைகிறது. திருமுழுக்கு என்ற அருள் அடையாளம் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவினால் தாபிக்கப்பட்டதென்பதில் சற்றேனும் சந்தேகம் இல்லை. ஏனெனில் கிறிஸ்துவே இறையரசில் நுழைவதற்குத் திருமுழுக்கின் அவசியததை வலியுறுத்தினார் (யோவா. 3). அவரே தம் மேல் நம்பிக்கை வைக்கின்ற-வர்களுக்கு திருமுழுக்கு அளிக்கும்படி தம் அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டார் (மத். 28:19). அவரே திருமுழுக்கு அளிக்கும்போது பயன்படுத்தப்பட வேண்டிய வார்த்தைகளை (வாய்ப்பாட்டை) அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். ஆனால் எப்பொழுது, எந்த சந்தர்ப்பத்தில் இயேசு திருமுழுக்கு என்ற அருள் அடையாளத்தை நிறுவினார் என்பதுபற்றி இறையியலாளர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அநேகமானவர்கள் இயேசு யோர்தான் நதியில் தான் நீரினாலும் பரிசுத்த ஆவியினாலும் திருமுழுக்குப் பெற்ற பொழுது, திருமுழுக்கை தாபித்தாரெனக் கூறுகிறார்கள். புனித ஜெறோமும் வேறு சிலரும் இயேசு தான் திருமுழுக்குப் பெற்றபின், தனக்கு திருமுழுக்கு அளித்த யோவானுக்கு பரிசுத்த ஆவியினால் திருமுழுக்கு அளித்ததாகக் கருதுகின்றனர். வேறு சிலர் இயேசு நிக்கதேமுவுக்கு இறையரசில் நுழைவதற்கு திருமுழுக்கின் அவசியத்தை வலியுறுத்திய-போது திருமுழுக்கை நிறுவினாரெனக் கூறுவர். அதற்கு ஆதாரமாக அதைத் தொடர்ந்து இயேசுவும், அவருடைய சீடர்களும் திருமுழுக்குக் கொடுத்தனரென யோவான் கூறுவதைச் சுட்டிக் காட்டுவர் (யோவா. 3:22-23). ஆனால் சீடர்கள் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க-வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வேறு சிலர் இயேசு விண்ணகம் செல்லு முன் நற்செய்தியைப் போதித்து, அதை நம்புகிறவர்களுக்கு திருமுழுக்கு அளிக்கும்படியாக அப்போஸ்தலர்களுக்குப் பணித்தபோது, திருமுழுக்கை தாபித்தாரெனக் கூறுவர். ஏனெனில் அப்போஸ்தலர்கள் உடனடியாக பெந்தகோஸ்து தினத்தன்று இயேசு பணித்தவாறு

செய்தனர். அப்போஸ்தலர்களும் அத் தினமே பரிசுத்த ஆவியால் நிரப்பப் பெற்று இருந்தனர்.

ஆனால் பொதுவாக இயேசு யோர்தான் நதியில் தான் திருமுழுக்குப் பெற்ற சந்தர்ப்பத்திலேயே திருமுழுக்கை ஒரு அருள் அடையாளமாக ஏற்படுத்தினாரென அதிகமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் இயேசுவே திருச்சபையின் முதல் உறுப்பினர். அவரே அதன் தலை(வர்). திருமுழுக்கு அருள் அடையாளத்தின் வழியாகவே ஒருவர் திருச்சபையின் அங்கத்தவர் ஆகின்றார். தம் திருமுழுக்கைத் தொடர்ந்து, தம் பணியின்போது, இயேசு இறையரசில் நுழைவதற்கு திருமுழுக்கின் அவசியத்தையும், அதைப் பெறுவதன் வழியாக ஒருவரில் ஏற்படும் விளைவுகளையும், கடமைகளையும் தம் சீடர்களுக்கும், மக்களுக்கும் படிப்பித்தார். இவ்வாறு சீடர்களை ஆயத்தப்படுத்தி, தாம் விண்ணகம் செல்லுமுன், உலகெங்கும் சென்று நற்செய்தியைப் போதிக்கவேண்டுமென்றும், நற்செய்தியை நம்புகிறவர்களுக்கு திருமுழுக்கு அளிக்கவேண்டுமென்றும் தம் அப்போஸ்தலர்களுக்குப் பணித்தார். அதுமட்டுமல்ல, எவ்வாறு திருமுழுக்கு அளிக்க வேண்டும், என்ன வார்த்தைகளைச் (வாய்பாட்டை) சொல்ல வேண்டுமெனவும் சொல்லிக் கொடுத்தார். ஆனால் அதைச செய்யுமுன் அவர்களே பரிசுத்த ஆவியால் திருமுழுக்குப் பெறவேண்டுமென்றும், அதற்காக எருசலேமில் காத்திருக்கும்படியும் கூறி, விண்ணகம் சென்றார்.

பெந்தெகோஸ்து தினத்தன்று இயேசு தான் வாக்களித்த படி பரிசுத்த ஆவியால் அப்போஸ்தலர்களை அருள்பொழிவு செய்து, அவர்களுக்குத் திருமுழுக்கு அளித்து வைத்தார். அதுவே திருச்சபையின் ஆரம்பமாகவிருந்தது. தொடக்கத்தில் அப்போஸ்தலர் குழுவே திருச்சபையாக அமைந்தது. திருச்சபை "அப்போஸ்தலர் குழு" என்றே அழைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அப்போஸ்தலர்கள், இயேசு தமக்கு அளித்த கட்டளையையும், அதிகாரத்தையும் கொண்டு, பெந்தெகோஸ்து திருவிழாவுக்காக எருசலேமில் கூடியிருந்த யூதர்களுக்கு நற்செய்தியை அறிவித்து, இயேசுவின்மேல் நம்பிக்கை கொண்ட ஏறக்குறைய 3000 ஆண்களுக்குத் திருமுழுக்கு அளித்து. அவர்களைத் திருச்சபையில் இணைத்தனர். இன்னொரு நாள் சொலொமோன் மண்டபத்தில் கூடியிருந்த யூதர்கள் மத்தியில் பேதுரு

ஆற்றிய மறை உரையைத் தொடர்ந்து, இயேசுவின்மேல் நம்பிக்கை-கொண்ட வேறு ஐயாயிரம் பேருக்கு திருமுழுக்கு அளிக்கப்பட்டது. நம்பிக்கை கொண்டோரின் புதிய சமூகமாகிய திருச்சபை எருசலேமில், யூதர் மத்தியில் மட்டுமல்ல, வேறு இடங்களிலும், வேற்றின மக்கள் மத்தியிலும் வளர்ந்தது. திருத்தொண்டர் பிலிப்பு காசாவில் எத்தியோப்பிய அண்ணகருக்குத் திருமுழுக்குக் கொடுத்ததை வாசிக்கிறோம். அவரே ஆபிரிக்காக் கணடத்தின் முதல் கிறிஸ்தவர். பேதுருவும், வேறு சில சீடர்களும் செசரியாவில உரோமைய நூற்றுவர் தலைவன் கொர்ணேலியுசுடைய குடும்பத்தாருக்கு திருமுழுக்குக் கொடுத்தனர்.

**திருமுழுக்கின் பேறுகள்**

திருமுழுக்கானது எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொதுவான அருள் அடையாளம். "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" (மத். 28:19) என்று இயேசு கொடுத்த கட்டளையையும், அதிகாரத்தையும் கொண்டு திருச்சபை உலகமெங்கும் சென்று திருமுழுக்கு அளிக்கிறது. சாதாரணமாக திருமுழுக்குக் கொடுக்க வேண்டிய அதிகாரமுடையவர்கள் அப்போஸ்தலரும், அவர்களைத் தொடர்ந்து ஆயரும், குருக்களும், திருத்தொண்டருமாவர். அவசியத் தேவையெனில் திருச்சபை செய்வதையே செய்யும் கருத்துடைய எவரும் திருமுழுக்கு அளிக்கலாம். திருமுழுக்கு மீட்பு அடைவதற்கு, இறையரசில் நுழைவதற்கு இன்றியமையாத மீட்பின் அருள் அடையாளமாகத் திலங்குகின்றது. "ஒருவர் தண்ணீராலும், தூய ஆவியாலும் பிறந்தாலன்றி, இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" (யோவா. 3:5). நம்பிக்கை வைப்பவர் திருமுழுக்கு வழியாக தண்ணீரிலிருந்தும் ஆவியிலிருந்தும் ஆன்மீக மறுபிறப்புப் பெறுகின்றார். புனித பவுலின் கூற்றுப்படி நம்பிக்கை வைப்பவர் திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவோடு ஒன்றிக்கிறார், இணைகிறார். அவரோடு புதைக்கப்பட்டு. அவரோடு எழுகின்றார்.

> "திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா?

இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம் (உரோ. 6:3-4).

திருமுழுக்குப் பெற்றவர் கிறிஸ்துவை அணிந்திருக்கிறார் (கலா. 3:27). திருமுழுக்கு பரிசுத்த ஆவியின் வழியாய் எம்மைச் சுத்திகரித்து, கடவுளுக்கு ஏற்புடையராக்கி, புனிதப்படுத்துகின்றது (1 கொரி. 6:11). திருமுழுக்கு எப்போதைக்கும் செல்லுபடியாகும் அருள் அடையாளம். ஒரு முறை கொடுக்கப்பட்ட திருமுழுக்கு திரும்பப் (வாபஸ்) பெற முடியாது. அல்லது அதை இன்னொரு முறை திரும்பிப் பெற முடியாது. ஏனெனில் அதனால் கிறிஸ்தவர்களில் ஒரு வித அழியாத முத்திரை, கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர் என்ற சாயல் அவர்கள் ஆன்மாவில் பதிக்கப்படுகிறது. பாவம் கூட அந்த அழியாத முத்திரையை அழிக்க முடியாது. திருமுழுக்குப் பெறும்போது நம்மிடமுள்ள பிறப்பு நிலைப் (சென்ம) பாவத்தைப் போக்குகின்றது. நம்மிடமுள்ள செயல்முறைப் (கன்ம) பாவங்களையும் அகற்றுகின்றது. மனிதரைக் கடவுளின் பிள்ளைகளாக்குகின்றது. இயேசுக் கிறிஸ்துவின் சகோதர, சகோதரியாக்குகின்றது. மேலும் நம்மையும் ஒருவர் ஒருவரை சகோதர, சகோதரியாக இணைக்கிறது. எனவேதான் நாம், "விண்ணகத்திலிருக்கிற எங்கள் தந்தையே" என்று விளித்து மன்றாடுகின்றோம்.

திருமுழுக்கு மூவொரு இறைவனின் மூன்று ஆட்களுடனும் எமக்கு நேரடி உறவை ஏற்படுத்தி விடுகிறது. எம்மை இறைவனின் ஆலயம் ஆக்கிவிடுகிறது. தூய ஆவியார் நம்மை புனிதப்படுத்தும் அருளினால் நிரப்புகிறார். அது நம்மை "இறை இயல்பின் பங்காளிகளாக்குகிறது" (2 பேது. 1:4). புனிதப்படுத்தும் அருளில் தூய ஆவியாரின் கொடைகளும் இணைந்துள்ளது. கடவுளின் ஒரே மகன் இயேசுக் கிறிஸ்து வழியாக நாம் கடவுளின் சுவிகாரப் பிள்ளைகளாகின்றோம். புனிதப்படுத்தும் அருள் நமக்கு நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய முக்கிய இறையியல் புண்ணியங்களைத் தந்து, இறைவனை நன்கு அறியவும், அவர் நம்மை அன்பு செய்வதுபோல நாம் அன்பு செய்யவும், அவருடன் வாழும் வாழ்வை எதிர்நோக்கி இருக்கவும் உதவுகிறது.

**திருமுழுக்கின் அழைப்பு, கடமை**

இயேசு திருமுழுக்குப் பெற்ற வேளையில் பரிசுத்த ஆவியால் குருவாக, இறைவாக்கினராக, அரசராக அபிஷேகம் பண்ணப்பட்டாரென ஏற்கனவே பார்த்திருக்கிறோம். திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவில் ஒன்றிக்கும் நாம் அனைவரும், (திருப்பணியாளரும், பொதுநிலையினரும்) அவருடைய திருத்தூதுப் பணியிலே, அவருடைய குருத்துவப் பணி, இறைவாக்குப் பணி, அரச பணியில் பங்காளிகளாகிறோம். அவற்றின் வழியாகவே நாம் எம்மை கடவுளுக்கு அர்ப்பணித்து, உலகினைப் புனிதப் படுத்தவும், நற்செய்திக்குச் சான்று பகரவும், உலகினை அர்ச்சிக்கவும் திருத்தூதர்களாக அழைக்கப்படுகிறோம். ஒவ்வொருவரும் தங்களுக்கே உரித்தான முறையில் இத் திருத்தூதுப் பணியை நிறைவேற்ற வேண்டும். இதையே பொது நிலையினரின் பொதுக் குருத்துவம் என அழைப்பர். உலகைச் சார்ந்திருக்கும் பண்பு பொதுநிலையினருக்கு உரியது. அது தனிப்பட்ட விதத்தில் அவர்களைச் சார்ந்தது. எனவே உலகு சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட்டு உழைத்து, அவற்றைக் கடவளின் திட்டப்படி நெறிப்படுத்துவதின் மூலம் கடவுளின் ஆட்சியை அமைக்க முயலுவது பொதுநிலையினரின் தனிப்பட்ட அழைப்பாகும். இவ்வுலகில் பல்வேறு உலக அலுவல்கள், வேலைகள், சாதாரண குடும்ப, சமூக வாழ்க்கை நிலைகள் ஆகியவற்றின் நடுவில் வாழ்கின்ற அவர்கள், அங்குதான் கடவுளின் அழைப்பை எதிர்கொள்ளுகின்றனர். அங்கு நற்செய்தி விழுமியங்கள், மனப்பான்மை-யால் வழிநடத்தப் பெற்று, தங்களுக்குரிய அலுவலை ஆற்றுவதன் மூலம் அவர்கள் புளிப்புமாவு போல உலகிலிருந்து கொண்டே உலகைத் தூய்மைப்படுத்த அழைக்கப்படுகின்றனர். மேலும் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு என்பவைகளினால் ஒளிர்கின்ற தங்கள் வாழ்வின் சான்றால் கிறிஸ்துவை பிறருக்குக் காட்டி, சான்று பகருகின்றனர்.

**கிறிஸ்துவின் திருப்பணி (குருத்துவ) நிலையில் பொதுநிலையினரின் பங்கு**

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் கிறிஸ்து உண்மையாகவே ஒரு குரு என்பதை வலியுறுத்தி, அதன் இயல்பை நமக்கு உணர்த்துகிறது. குரு என்பவர் மத்தியஸ்தம் வகிப்பவர், இறைவனுக்கு மனிதருக்கும் இடைநிலையாளர், ஒரு பாலமாக இருக்கின்றவர்.

இயேசுவின் மறைத்தூதுப் பணியில் அவருடைய இறை-மனித உறவின் நிகரற்ற மத்தியஸ்த தன்மை தெளிவாகக் காணப்படுகின்றது. அதுபோன்று பொதுநிலையினரும் தமது வாழ்வில் இந்த மத்தியஸ்த தன்மையைச் செயல்படுத்த அழைக்கப்படுகின்றார்கள். கடவுளிடமிருந்து பிரிந்து வாழும் மக்களை தங்கள் முன்மாதிரிகையான வாழ்க்கையால், நல்ல ஆலோசனை அறிவுரைகளால் மனந்திருப்பி, கடவுளிடம் ஒப்புரவாக்க முயற்சிகள் எடுத்து, கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே இடைநிலையாளராகச் செயல்பட அவர்கள் அழைக்கபடுகிறார்கள். கடவுளைக் போற்றிப் புகழ்வதும், இறை வழிபாட்டில் உதவி புரிவதும் பொதுநிலையினரின் குருத்துவ பணியாகும். மேலும் அவர்கள் மற்றவர்களுக்காக, உலக அமைதிக்காக, பாவிகளுக்காக செபிப்பதன் மூலம் தம் குருத்துவ அழைத்தலைச் செயல்படுத்துகின்றார்கள். அதைவிட தங்கள் வேலைகளையும், இறை வேண்டல்களையும், திருத்தூது முயற்சிகளையும், திருமண குடும்ப வாழ்வையும், அன்றாட வேலைகளையும், ஆன்ம உடல் ஓய்வையும் ஆவியாரில் நிறைவேற்றி, வாழ்வின் துன்பதுயரங்களை, வேதனை கஷ்டங்களை பொறுமையோடு ஏற்று, கிறிஸ்துவின் பாடுகளோடு ஒன்றித்து, கடவுளுக்குப் பலியாக ஒப்புக் கொடுத்து, தங்கள் குருத்துவ கடமையை நிறைவேற்றலாம். "நீங்கள் உயிருள்ள கற்களாயிருந்து, ஆவிக்குரிய இல்லமாகக் கட்டி எழுப்பப் படுவீர்களாக! இயேசுக் கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாகவும் இருப்பீர்களாக!" (1 பேது. 2:5).

**கிறிஸ்துவின் இறைவாக்குரைக்கும் பணியில்**
**பொதுநிலையினரின் பங்கு**

இறைவனுடைய வார்த்தையை எடுத்துரைப்பவர், அவருக்குப் பதிலாளியாய்ப் பேசுபவர், இறைவனின் செய்தி எடுத்துரைப்பவர் இறைவாக்கினர் ஆவார். ஆண்டவர் எரேமியாவுக்கு அருளிய வாக்கு: "இவ் உடன்படிக்கையின் விதிமுறைகளைக் கேட்டு, யூதாவின் மக்களுக்கும், எருசலேமில் குடியிருப்போருக்கும் அறிவிப்பாய்" (எரே. 11:1-2). கிறிஸ்து தம் வாழ்வின் சான்றினாலும், போதனையின் வல்லமை-யினாலும் தந்தையின் ஆட்சியைப் பறைசாற்றி, மாபெரும் இறைவாக்-கினராகத் திகழ்ந்தார். அவர் இறைவனுடைய செய்தியை அறிவித்தது

மட்டுமல்ல, அவரே இறைவனின் செய்தியாக, இறைவார்த்தையாக இருந்தாரென்பது குறிப்பிடத் தக்கது. அவரின் இறைவாக்குப் பணி இறையாட்சி முழு மாட்சியுடன் வரும்வரையில் தொடரும். இன்று இயேசு பொதுநிலையினரையும் இப் பணியில் பங்குபெற அழைக்கிறார். அதற்காக அவர்களின் அன்றாட குடும்ப சமூக வாழ்க்கையில் நற்செய்தியின் வல்லமை திகழும்படி, அவர்களைத் தம் சாட்சிகளாய் நியமித்து, அவர்களுக்கு நம்பிக்கை உணர்வையும், அருள் வழங்கும் வார்த்தைகளையும் அளித்துள்ளார். நாமும் உண்மைக்குச் சான்று பகரும்போது, நீதிக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கும்போது, நேர்மைக்கான தாகத்துடன் வாழும்போது, எடுத்துக்-காட்டான வாழ்வினால் கிறிஸ்தவ விழுமியங்களைப் பறைசாற்றும்போது இயேசுவின் இறைவாக்குப் பணியிலே பங்கெடுக்கிறோம். உலகக் கவலைகளுக்கிடையே வாழும்போது பொதுநிலையினர் உலகிலே நற்செய்தியை அறிவிக்கச் சிறந்த பணியாற்ற முடியும். ஆற்றவும் வேண்டும். திருப்பணியாளர் இல்லாத இடங்களிலும், திருமறையைத் துன்புறுத்தும் ஆட்சி முறைகளால் அவர்கள் தடைசெய்யப்பட்ட நேரத்திலும் பொது நிலையினர் தங்களால் இயன்றவரை சில திருப்பணிகளுக்கு உதவுகின்றனர். இவர்களில் பலர் தங்கள் முழு ஆற்றலையும் திருத்தூதுப் பணிக்கென அர்ப்பணித்தும் இருக்கிறார்கள். எனினும் அனைவரும் கிறிஸ்துவின் ஆட்சி உலகில் பரவி வளர்வதற்கு ஒத்துழைக்கக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

**கிறிஸ்துவின் அரச (மேய்ப்புப்) பணியில் பொதுநிலையினரின் பங்கு**

இஸ்ராயேல் மக்கள் வரவிருக்கும் மெசியா தாவீது குடும்பத்தில் தோன்றும் ஒரு அரசராக இரப்பாரென எதிர்பார்த்துக் காத்திருந்தனர். வானதூதர் இயேசுவின் பிறப்பை மரியாளுக்கு அறிவித்தபொழுது, அவர் என்றென்றும் அரசராக இருப்பாரெனக் கூறினார்.

> அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். ஆவர் யாக்கோபின் குடும்பத்தின்மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவரது ஆட்சிக்கு முடிவே இராது (லூக். 1:32-33).

இயேசு தம் திருமுழுக்கின்போது பரிசுதத ஆவியால் மெசியாவாக அருள்பொழிவு செய்ப்பட்ட பொழுது. கடவுள் “என்

அன்பார்ந்த மகன் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" எனக் கூறி, இயேசு எத்தகைய அரசராகவிருப்பாரென அறிவித்தார். அவர் ஏனைய இஸ்ராயேல் அரசர்களைப்போல அடக்கி ஆளுகின்ற, அதிகாரம் செலுத்துகின்ற, போர் புரிகின்ற அரசராக அல்ல, மாறாக பணி புரிகின்ற, மற்றவர்களுக்காக உயிரைக் கொடுக்கின்ற அரசராக, துன்புறும் ஊழியனாக ஆட்சி செய்வாரேனக் கூறுகிறார். இயேசுவும் அதையே தன் சோதனையின் போது வெளிப்படுத்தினதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். "ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாக தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மாற். 10:15). அதுவே அவருடைய வாழ்க்கையுமாக அமைந்தது. "நீங்கள் என்னைப் 'போதகர்' என்றும், 'ஆண்டவர்' என்றும் அழைக்கிறீர்கள். நீங்கள் அவ்வாறு கூப்பிடுவது முறையே. நான் போதகர்தான், ஆண்டவர்தான். ஆகவே ஆண்டவரும், போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்ததுபோல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்" (யோவா. 13: 13-15). கிறிஸ்துவின் அரச பணியை, அவரது ஆட்சி முறையை, தலைமைத்துவத்தை நாம் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில் அந்த அரச பணியிலேயே நாமும் திருமுழுக்கு வழியாகப பங்காளிகளாயிருக்கிறோம். "கிறிஸ்து சாவை ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்து, அதனால் தந்தையால் உயர்த்தப் பெற்று, தமது அரசின் மாட்சிமையில் நுழைந்தார்." கடவுள் அனைத்திலும் அனைத்துமாய் இருக்குமாறு. கிறிஸ்து தம்மையும், படைப்புகள் அனைத்தையும் தந்தைக்கு அடிபணியச் செய்யும் வரை, அனைத்தும் கிறிஸ்துவுக்கு அடிபணிந்தே இருக்கும். ஆண்டவர் தம் ஆட்சியை பொதுநிலையினரின் மூலமாகவும் பரப்ப விரும்புகிறார். எனவே கிறிஸ்தவர்களாகிய நாங்களும் எங்கள் தன்னல மறுப்பாலும், தூய வாழ்வாலும் எம்மில் பாவத்தின் ஆட்சியை வெல்ல வேண்டும். அதே-போல் எம் அயலாரில் கிறிஸ்துவுக்குப் பணிசெய்து, மனத் தாழ்மை-யுடனும், தாராளப் பண்புடனும் எங்கள் சகோதர சகோதரிகளையும் கிறிஸ்துவிடம் கூட்டிவர வேண்டும். இதற்காகவே கிறிஸ்து தம் அரச பதவியில் எமக்குப் பங்கு தந்திருக்கிறார். கிறிஸ்துவுக்கு ஊழியம்

செய்வதே ஆள்வதாகும். அவரது ஆட்சி உண்மையின் ஆட்சி, வாழ்வின் ஆட்சி, தூய்மையின் ஆட்சி, அருளின் ஆட்சி; நீதியின் ஆட்சி, அன்பின் ஆட்சி, அமைதியின் ஆட்சி. இந்த ஆட்சியில் படைப்பு அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். இதுவே கிறிஸ்தவர்களின் ஆட்சிப்பணி. அரசபணி.

மேலும் உலகம் கிறிஸ்துவின் மனப்பான்மையில் ஊறி, நீதியிலும், அன்பிலும், அமைதியிலும் தன் குறிக்கோள்களை சிறந்த முறையில் அடையும் வண்ணம் இன்னும் தூய்மைமிக்க வாழ்வு வாழ உலக அலுவல்களின் மூலம் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும். உலக அறிவுத் துறையிலே கிறிஸ்துவின் அருளால் உள்ளூர உயர்த்தப்பட்ட அவரகளது தகுதியையும், செயல்களையும் கொண்டு. படைத்தவரின் திட்டத்திற்கும், அவரது வார்த்தையின் ஒளிக்கும் ஏற்ப, மனித உழைப்பாலும், தொழில் நுட்பக் கலையாலும், நாட்டுப் பண்பாட்டாலும் மக்கள் அனைவருக்கும் நன்மை அளிக்கும் நிலையில் படைப்பு நலன்கள் நிறைவு பெற வேண்டும். படைப்பு நலன்கள் மனிதருக்கிடையே மிகத் தகுந்த முறையிலே பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். மேலும் இன்று உலக அமைப்புகளும், வாழ்க்கைச் சூழல்களும் பொதுவாகப் பாவத்துக்குத் தூண்டுதலாக அமைகின்றன. எனவே பொது நிலயினர் தங்கள் ஆற்றல்கள் அனைத்தையும் திரட்டி, அவற்றைத் திருத்தி அமைத்து, அதன்மூலம் அவை அனைத்தையும் நீதிநெறிக்கேற்பச் சீர்படுத்தி, நற்பண்புடைத்த வாழ்விற்குத் தடையாக அவை அமையாமல், உறுதுணையாக இருக்குமாறு செய்யவேண்டும். இதன் மூலம் மனிதப் பண்பாடும், செயல்களும் அறநெறி மதிப்புப் பெறும்படி செய்கின்றனர். இவ்வாறாக் பொது நிலைக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் அரச பணியில் தங்கள் பங்களிப்பை அளிக்கின்றனர்.

திருமுழுக்கு அருள் அடையாளம் நம் கிறிஸ்தவ வாழ்வில் ஒரு தொடக்கமாக உள்ளது. கடவுளின் கொடைக்கு ஒரு அச்சாரமாக உள்ளது. திருமுழுக்கைப் பெற முதியோர்களும், வளர்ந்தவர்களும், குழந்தைகளும் திருச்சபையினால் அழைக்கப்படுகின்றார்கள். வெகு காலத்துக்கு முன்பிருந்தே திருச்சபை குழந்தைகளின் திருமுழுக்கையும் அனுமதித்து வந்திருக்கிறது. திருத் தூதர் பணியில் செசாரியாவில் கொர்ணேலியிவின் குடும்பம் முழுவதும், பிலிப்பியில் சிறைச்சாலை

அதிகாரியும், அவரது வீட்டாரும் (குழந்தைகள் உட்பட) திருமுழுக்குப் பெற்றதை வாசிக்கிறோம். திருமுழுக்கு எனும் கடவுளின் கொடை வழியாக குழந்தைகள் இயேசுவை அணுகி வருவதை தடைசெய்வது தவறாகும். குழந்தைக்கு உயிரைக் கொடுத்த பெற்றோருடன் ஞானப் பெற்றோரும் அந்தக் குழந்தைக்கு ஞான உயிரைக் கொடுக்க விரும்பி, திருமுழுக்கிற்குக் கொண்டு வருகிறார்கள். அதனை நம்பிக்கை வாழ்விலும், திருச்சபையின் நம்பிக்கையிலும் வழிநடத்திச் செல்லவிருப்பதாக உறுதி அளிக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே திருச்சபை குழந்தைகளுக்குத் திருமுழுக்கு அளிக்கிறது. திருமுழுக்கைக் கொண்டு நாம் நமது வாழ்நாள் முழுவதும் பலன்தர முயலவேண்டும். நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு கொண்டு, கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால், நாம் திருமுழுக்கில் பெற்ற அருளுயிர் நம்மில் செயல்பட்டு வளர்ந்திடும். இந்த வகையில் திருமுழுக்கின் புனிதம் நிறைவு பெறும். இந்த வளர்ச்சிக்குத்தான் நாமெல்லோரும் திருமுழுக்கின்போது அழைக்கப்படுகின்றோம்.

## 9.2.5 நற்கருணையும் ஒற்றுமையும்

நற்கருணை என்பது திருச்சபையின் ஏழு அருள் அடையாளங்களில் ஒன்று. அருள் அடையாளமென்பது "இயேசுக் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட கண்ணால் காணமுடியாத உள்ளார்ந்த இறையருளின் (மெய்மையின்) கண்ணால் காணக்கூடிய வெளியடையாளம்" என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. நற்கருணையில் அப்பமும், இரசமும் கண்ணால் காணக்கூடிய வெளியடையாளங்களாய் உள்ளன. இயேசுவின் திரு உடலும், திரு இரத்தமும் கண்ணால் காணமுடியாத இறையருளாய் உள்ளன. நற்கருணையில் இயேசுக் கிறிஸ்துவில் நம்பிக்கை உள்ளவர்கள் அப்ப இரச வடிவிலே அவருடைய திரு உடலையும், திரு இரத்தத்தையும் உண்டு பானம் பண்ணுகின்றனர். இந்த அருள் அடையாளம் இயேசுக் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு முதலில் புனித பவுலும், அடுத்து மூன்று சமநோக்கு நற்செய்தியாளர்களும் சான்று பகருகின்றனர்.

**நற்கருணை ஒரு அருள் அடையாளம்**

புனித பவுலே முதன் முதலாக இயேசுக் கிறிஸ்துவே

நற்கருணையை ஒரு அருள் அடையாளமாக ஏற்படுத்தினாரென்பதற்குச் சான்று பகருகின்றார்.

> ஆண்டவரிடமிருந்து நான் எதைப் பெற்றுக்கொண்டேனோ அதையே உங்களிடம் ஒப்படைக்கின்றேன். அதாவது, ஆண்டவராகிய இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவில், அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, "இது உங்களுக்கான என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். அப்படியே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து, "இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும்போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" என்றார் (1 கொரி. 11:23-25).

**நற்செய்தியாளர் மாற்கு பின்வருமாறு கூறுகிறார்:**

> அவர்கள் உண்டுகொண்டிருந்த பொழுது, அவர் அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, "இதைப் பெற்றுக் கொள்ளுங்கள். இது எனது உடல்" என்றார். பின்பு அவர் கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அவர்களுக்குக் கொடுத்தார். அனைவரும் அதிலிருந்து பருகினர். அப்பொழுது அவர் அவர்களிடம், "இது என் உடன்படிக்கையின் இரத்தம். பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம்" என்றார் (மாற். 14:22-24).

**நற்செய்தியாளர் மத்தேயு பின்வருமாறு விபரிக்கிறார்:**

> அவர்கள் உணவருந்திக்கொண்டிருந்தபொழுது, இயேசு அப்பத்தை எடுத்துக் கடவுளைப் போற்றி, அதைப் பிட்டுச் சீடருக்குக் கொடுத்து, "இதைப் பெற்று உண்ணுங்கள். இது எனது உடல்" என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அவர்களுக்குக் கொடுத்து, "இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள். ஏனெனில் இது என் உடன்படிக்கையின் இரத்தம். பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்" என்றார் (மத். 26:26-28).

**நற்செய்தியாளர் லூக்கா பின்வருமாறு கூறுகிறார்:**

> பின்பு அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு. அவர்களுக்குக் கொடுத்து, "இது

உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். அப்படியே உணவு அருந்திய பின்பு, அவர் கிண்ணத்தை எடுத்து, "இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை" என்றார் (லூக். 22:19-20).

ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட நற்கருணை உண்மையாகவே ஒரு அருள் அடையாளம். நாம் கண்களால் காணும் அப்பமும் இரசமும் இயேசுவின் "இது என் உடல்", "இது என் இரத்தம்" என்ற வார்த்தைகளால், வெளித் தோற்றத்தில் எவ்வித மாற்றமுமின்றி, அவருடைய திரு உடலும், திரு இரத்தமுமாக மாற்றமடைகின்றன. அவை முற்றுமுழுவதும் இயேசுவாக மாறுகின்றன. அப்பத்தையும் இரசத்தையும் இயேசுவின் திரு உடலாகவும், திரு இரத்தமாகவும் மாற்றும் சடங்கை மட்டுமல்ல, இயேசுவின் திரு உடலாகவும், திரு இரத்தமாவும் மாறிய அப்பத்தையும் இரசத்தையும் நாம் "நற்கருணை" என்றே அழைக்கிறோம். அவை இயேசுவின் அருள் அடையாளங்களாக இருக்கின்றன. நற்கருணை அருள் அடையாளத்தில் இயேசு முழுமையாக, அதாவது அவருடைய திரு உடலோடும், திரு இரத்தத்தோடும், திரு ஆத்துமத்தோடும், தேவசுபாவத்தோடும் உண்மையாகவே அப்ப இரச தன்மைகளில் எழுந்தருளி இருக்கிறார். இதையே திரிதேந்தின் சங்கம் வலியுறுத்துகிறது. "நற்கருணையில் இயேசுவின் உண்மைப் பிரசன்னம் நமது நம்பிக்கையின் மறைபொருளாக இருக்கிறது. இந்த அர்ச்சிப்பு வாக்கிய ஆற்றலாலும், தூய ஆவியாரின் செயலாலும், பொருண்மை மாற்றத்தால் நிகழ்கிறது. அப்பம், இரசம் - கருப்பொருள் மாறி, இயேசுவின் உடல், இரத்தம் என்ற பருப்பொருளாகின்றன." புனித பவுலின் வார்த்தைகள் அதை உறுதி செய்கின்றன.: திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில பங்கு கொள்ளுதல் அல்லவா? அப்பத்தை பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா? (1 கொரி. 10:16-17). இயேசு அப்பத்தைக் கொடுத்து "இது என் உடல்" என்றார். இரசத்தைக் கொடுத்து "இது என் இரத்தம்" என்றார். படைக்கும் ஆற்றலுள்ள அவருடைய வார்த்தை அப்பத்தை அவருடைய உடலாகவும், இரசத்தை அவருடைய இரத்தமா-

கவும் படைக்கின்றது. எனவே நற்கருணையானது உண்மையான அருள் அடையாளம். அதில் இயேசு அவருடைய திரு உடலோடும், திரு இரத்தத்தோடும், திரு ஆத்துமத்தோடும், தேவசுபாவத்தோடும் உண்மையாகவே அப்ப இரச தன்மைகளில் எழுந்தருளியிருக்கிறார். எனவே நற்கருணை அதிமிக மதிப்புக்குரியது. ஆராதனைக்குரியது.

**ஆதித் திருச்சபையில் 'அப்பம் பிட்கும்' (நற்கருணை) வழிபாடு**

தொடக்க காலக் கிறிஸ்தவ சமூகத்தில், "அப்பம் பிட்குதல்" (அதுவே நற்கருணை வழிபாட்டின் தொடக்க காலப் பெயர்) ஒரு முக்கிய இடத்தை எடுத்தது. திருத்தூதர் பணி நூலில், புனித லூக்கா ஆதிக் கிறிஸ்தவர்களுடைய அன்றாட வாழ்க்கை முறையை விபரிக்கின்றபொழுது, அவர்கள் அப்பம் பிட்குதலில் நிலையாயிருந்தனர் எனக் கூறுகிறார். "அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறை வேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்-தார்கள்" (தி.தூ.ப. 2:42). மேலும், "ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள். பேருவகையோடும், எளிய உள்ளத்தோடும் அப்பத்தைப் பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள்" (தி.தூ.ப. 2:46). ஆகவே, ஆதிக் கிறிஸ்தவர்கள் எருசலேம் ஆலயம் சென்று, அங்கு நடைபெற்ற யூத செபங்களிலும், வழிபாடுகளிலும் பங்கெடுத்து வந்தாலும், அவர்களுக்கே உரித்தான வழிபாட்டின் மையமாக, அடிப்படையாக "அப்பம் பிட்கும்" வழிபாடே இருந்துவந்தது. ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாட்டில் அப்பம் பிட்குதலுக்கு அவ்வளவு முக்கிய இடம் கொடுத்ததற்குக் காரணம் இயேசு தம் இறுதி இரவுணவின்போது, அப்பத்தைப் பிட்டு, அதை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து, "இதைப் பெற்று உண்ணுங்கள் இது எனது உடல். இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்... இது என் உடன்படிக்கையின் இரத்தம். இதை என் நினைவாகச் செய்யுங்கள்" (மத். 26:26-29, லூக். 22:19) என்று கொடுத்த கட்டளையே. அதுமட்டுமல்ல, இயேசு அவர்களைவிட்டுப் பிரியுமுன், "இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்" என்று கூறிக் கொடுத்த தம் நிரந்தர பிரசன்னத்தின் உறுதிமொழியும் அதற்குக் காரணமாய் அமைந்தது.

ஆதிக் கிறிஸ்தவர்கள் "அப்பம் பிட்கும்" வழிபாட்டை ஒரு

"நினைவு" வழிபாடாக, ஒரு பிரதிநிதித்துவப்படுத்தும் செயலாக, மீளச் செயல்படுத்தும் சடங்காகக் கொண்டாடினர். இயேசு நற்கருணையை யூதரின் பாஸ்கா விழாச் சூழலிலேயே ஏற்படுத்தினார். நற்கருணை விருந்தானது பாஸ்கா விருந்தாகவே உண்ணப்பட்டது. ஆனால் ஏனைய பாஸ்கா விழாக் கொண்டாட்டங்களைப் போலல்லாமல், இயேசு தன்னுடைய இந்த இறுதிப் பாஸ்கா விழாக் கொண்டாட்டத்திலே தமது உடலையும், இரத்தத்தையும் உணவாகவும், பானமாகவும் வழங்கினார். யூதர்கள் ஆண்டுதோறும் இப் பாஸ்கா விழாவை தாங்கள் எகிப்திய அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற்றதை நினைவு கொண்டாடும் விழாவாக, அவ் விடுதலையை பிரதிநிதித்துவப்படுத்தும் நாளாக, அது மீளச் செயல்படுத்தப்படும் நாளாகக் கொண்டாடி, தாங்களும் அவ் விடுதலையிலே அப்பொழுது பங்கெடுக்கும் உணர்வுடன் நினைவு கொண்டாடினார்கள். பழைய ஏற்பாட்டில் யூதர்கள் ஆண்டுதோறும் தம் பாஸ்கா விழாவைக் கொண்டாடிய பாணியிலேயே புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களும் தம் பாஸ்காவை, அதாவது இயேசு தம் பாடுகள் மரணத்தின் வழியாய் தம்மை பாவத்தின் அடிமைத்-தனத்தினின்று மீட்ட நிகழ்வை நினைவு கொண்டாடினார்கள். அதன்பொழுது முதல் பாஸ்காவின்போது இடம்பெற்ற இயேசுவின் பாடுகள், மரணம் போன்ற நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார்கள். எனவே கிறிஸ்தவர்களின் பாஸ்காவானது, அதாவது அப்பம் பிட்கும் வழிபாடானது நம் ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணத்தினை நினைவுபடுத்தும், பிரதிநிதித்துவப்படுத்தும், மீளச் செயல்படுத்தும் வழிபாடு. இதையே புனித பவுல் தெளிவாகக் கூறுகிறார்: "ஆகவே நீங்கள் இந்த அப்பத்தை உண்டு, கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கி-றீர்கள்" (1 கொரி. 11:26). ஆதித் திருச்சபையில் ஒரு நினைவு வழிபாடாக, இயேசுவுடைய பாடுகள், சிலுவைமரணம், உயிர்ப்புடன் தொடர்புடைய நிகழ்வுகளை, அதாவது இயேசுவை மீண்டும் ஞாபகத்துக்குக் கொண்டுவரும் சடங்காகவே ஆரம்பித்தது. அதுவே ஆதிக் கிறிஸ்தவ சமூகத்தின் அப்பம் பிட்கும் வழிபாட்டின் மையமாக, முக்கிய அம்சமாக இருந்தது.

**இன்றைய திருச்சபையில் நற்கருணை அருள் அடையாள வழிபாடு**

நற்கருணை அருள் அடையாளமே இன்றைய திருச்சபையின்

வழிபாட்டின் மையமாகவும், அதன் உயிர் நாடியுமாக இருக்கின்றது. ஏனெனில், இயேசு தாம் பாடுபடுவதற்கு முந்தினநாள் இரவில் நற்கருணை என்ற அருள் அடையாளத்தை ஏற்படுத்தி, "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" எனத் தம் திருத்தூதர்களுக்கு கட்டளை-யிட்டுச் சென்றார். அதன்படியே திருச்சபையானது ஒவ்வொரு நாளும் உலகெங்கிலும் நற்கருணையை நிறைவேற்றி வருகின்றது. இந்த நற்கருணைக் கொண்டாட்டம் இயேசுவின் இறுதி இராவுணவில் வேரூன்றியுள்ளது.

இயேசு நற்கருணையை யூதரின் பாஸ்கா விழாச் சூழலிலேயே ஏற்படுத்தினார். நற்கருணை விருந்தானது பாஸ்கா விருந்தாகவே உண்ணப்பட்டது. யூதர்கள் ஆண்டுதோறும் இப் பாஸ்கா விழாவை தாங்கள் எகிப்திய அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற்றதை நினைவு கொண்டாடும் விழாவாக, அவ் விடுதலையை பிரதிநிதித்துவப்-படுத்தும் நாளாக, அது மீளச் செயல்படுத்தப்படும் நாளாகக் கொண்டா-டினர். தாங்களும் அவ் விடுதலையிலே அப்பொழுது பங்கெடுக்கும் உணர்வுடன் நினைவு கொண்டாடினார்கள். அக் கொண்டாட்டத்தின் ஆரம்பத்திலே ஒரு சிறுவன் தன் தந்தையிடம், "இக் கொண்டாட்டத்தின் பொருள் என்ன?" என்று கேட்பான் (வி.ப. 13:14). அப்பொழுது தந்தை தம் முன்னோர்கள் எகிப்திய அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்ட நிகழ்வை எடுத்துக் கூறி, மகனுக்கு அவ் விழாபற்றிய விளக்கம் அளிப்பார். பழைய ஏற்பாட்டில் யூதர்கள் ஆண்டுதோறும் தம் பாஸ்கா விழாவைக் கொண்டாடிய பாணியிலேயே புதிய ஏற்பாட்டில் கிறிஸ்-தவர்களும் நற்கருணை வழிபாட்டில் தம் பாஸ்காவை, அதாவது இயேசு தம் பாடுகள் மரணத்தின் வழியாய் தம்மை பாவத்தின் அடிமைத்-தனத்தினின்று மீட்ட நிகழ்வை நினைவு கொண்டாடினார்கள். அதன்-பொழுது முதல் பாஸ்காவின்போது இடம்பெற்ற இயேசுவின் பாடுகள், மரணம் போன்ற நிகழ்வுகளை எடுத்துக் கூறி, நினைவு கூர்ந்தார்கள். எனவே கிறிஸ்தவர்களின் பாஸ்காவானது, நற்கருணை வழிபாடானது நம் ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணத்தின் நினைவுபடுத்தும், பிரதிநிதித்துவப்படுத்தும், மீளச் செயல்படுத்தும் வழிபாடு. இதையே புனித பவுல் தெளிவாகக் கூறுகிறார்: "ஆகவே நீங்கள் இந்த அப்பத்தை உண்டு, கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்" (1 கொரி. 11:26). எனவே

நற்கருணை ஒரு நினைவு வழிபாடாக, அதாவது இயேசுவின் பாடுகள், மரணத்துடன் தொடர்புடைய ஏனைய நிகழ்வுகளை மீண்டும் ஞாபகத்துக்குக் கொண்டுவரும் சடங்காக இருக்கிறது.

**நற்கருணை அருள் அடையாளம் ஒரு உண்மையான பலி**

நற்கருணையானது இயேசுவினுடைய இறுதி இராவுணவி-னுடையவும், கல்வாரி மரணத்தினுடையவும், திருச்சிலுவைப் பலியினு-டையவும் நினைவுச் சடங்காக இருக்கின்றது. ஆனால் அது கடந்த கால நிகழ்வுகளை நினைவு கூரும் ஒன்று மட்டுமல்ல, மேற்கூறப்பட்ட நிகழ்வுகளை மீளவும் நிகழ்காலப் படுத்துகின்றது (Re-actualization). யூதர்கள் பாஸ்கா விழாவை தாங்கள் எகிப்திய அடிமைத்தனத்-தினின்று விடுதலை பெற்றதின் நினைவு விழாவாக மட்டும்ல, அவ் விடுதலை நிகழ்காலப்படுத்தப்படும் நாளாக, அது மீளச் செயல்படுத்தப்-படும் நாளாகக் கொண்டாடினர். தாங்களும் அவ் விடுதலையிலே அப்பொழுது பங்கெடுக்கும் உணர்வுடன் நினைவு கொண்டாடினார்கள். அதுபோன்றே கிறிஸ்தவர்களும் நற்கருணையை இயேசுவின் சிலுலை மரணத்தை, அவருடைய சிலுவைப் பலியை நினைவு கூரும் சடங்காக மட்டுமல்ல, கிறிஸ்துவின் சிலுவைப் பலியை நிகழ்காலப்படுத்தும், மீளச் செயல்படுத்தும் செயலாகக் கொண்டாடினர். தன் ஆரம்ப காலத்திலிருந்தே திருச்சபை நற்கருணை அருள் அடையாளத்தை ஒரு பலியாகக் கருதி வந்திருக்கின்றது. அதற்கு பல திருச்சபையின் தந்தையர்கள் சான்று பகருகின்றனர். உதாரணமாக, 90ம் ஆண்டைச் சேர்ந்த திருச்சபையின் திருவழிபாட்டின் கைநூல் ஞாயிறு நற்கருணை வழிபாட்டைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றது:

> ஆண்டவருடைய நாளில் அப்பம் பிட்கவும், நன்றி கூறவும் ஒன்று கூடுங்கள். ஆனால் அதற்கு முன்னதாக உங்கள் பலி தூயதாயிருக்குமாறு முதலில் உங்கள் பாவங்களை அறிக்கையிடுங்கள். எனினும் தன் சகோதரரோடு சண்டைபட்டுக் கொண்டிருக்கும் எவரும், தங்களுக்குள் முதலில் ஒப்புரவாகிக் கொள்ளாமல் உங்களோடு இணைந்து கொள்ள முடியாது. உங்களுடைய பலி மாசு படுத்தப்படக் கூடாது - (பன்னிரு அப்போஸ்தலரின் படிப்பினைகள் - 14).

ஒவ்வொரு நற்கருணைக் கொண்டாட்டத்திலும் கிறிஸ்து பிரசன்னமாயிருக்கிறார். தமது சாவிலிருந்து உயிர்ப்புக்குக் கடந்து-

போகும் பாஸ்கா நிகழ்வை செயல்படுத்துகிறார். தமது உடலையும், இருத்தத்தையும் எமக்கு உணவாகவும், பானமாகவும் தருகின்றார். தம் உயிரைத் தந்து, நம்மை மீட்கிறார். தம்மோடு நம்மை இணைத்துக் கொள்கிறார். எனவே நற்கருணை அருள் அடையாளமானது, சில் புரொட்டஸ்தாந்து சபையினர் கூறுமாப்போல இயேசுவின் சிலுவைப் பலியின் நினைவு மட்டுமல்ல, அது உண்மையாகவே ஒரு பலியாக இருகிறது. இயேசுக் கிறிஸ்து எப்போதைக்குமான வகையில் ஒரே முறை சிலுவையில் இரத்தம் சிந்தி, தம் உயிரைத் தந்ததை அது நிகழ்காலப்படுத்துகின்றது. கல்வாரியில் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்த அதே இயேசுக் கிறிஸ்துவே, இப்பொழுது பலிப் பீடத்தில தம்மையே பலியாக ஒப்புக் கொடுக்கிறார். அதே குரு. அதே பலிப் பொருள், அதே நோக்கம். அதே குரு: திருநிலைப்-படுத்தப்பட்ட குரு பிரதிநிதித்துவம் செய்யும் இயேசுக் கிறிஸ்துவே நற்கருணைப் பலியை ஒப்புக்கொடுக்கிறார். அதே பலிப் பொருள்: தன்னுடைய உண்மையான உடல் இரத்தத்துடனும். மனித சுயாதீனத்து-டனுமான மனித இயல்பில் உள்ள மீட்பரே பலிப் பொருளாக ஒப்புக் கொடுக்கப்படுகிறார். ஒப்புக் கொடுக்கும் முறையே வேறுபடுகின்றது. கல்வாரியில் இரத்தம் சிந்தி ஒப்புக்கொடுக்கப்பட்டார். ஆனால் நற்கருணையில் இரத்தம் சிந்தாமல் ஒப்புக்கொடுக்கப்படுகின்றார், ஏனெனில் அவர் இப்போது மகிமைப்படுதப்பட்ட நிலையில் இருக்கிறார். ஆனால் தானாக விரும்பி தன்னைத் தானே முழுவதும் இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பதே பலியில் முக்கியமானது. இறுதியாக அதே நோக்கம்: கடவுளை மகிமைப் படுத்தி, அவருக்கு நன்றி கூற, அவருடைய மன்னிப்பைப் பெற, அவரிடம் எம் தேவைகளைக் கேட்பதேயாகும். ஆனால், கல்வாரியில் அவர் எமக்கு மீட்பை பெற்றுத் தந்ததுபோல, நற்கருணை வழியாக அவருடைய மீட்பு அருளின் செலவத்தை எமக்கு பகிர்ந்தளிக்கின்றார்.

**நற்கருணை ஒரு உண்மையான உணவு விருந்து**

இயேசு நற்கருணையை ஒரு விருந்துணவு, யூதர்களின் பாஸ்கா விருந்து சூழலிலேயே ஏற்படுத்தினார். எனவேதான் அது ஆண்டவரின் திருவிருந்து என அழைக்கப்பட்டது. யூதர்கள் பாஸ்கா விழாவின்போது (நிசான் மாதத்தின் 15ம் நாள்) குடும்பமாகத் தம் பாஸ்கா உணவை உண்ணும் வேளையில், இயேசு தம் சீடர்களுடன் ஒன்றுசேர்ந்து தம்

இறுதி இரவுணவை உண்பதாக ஒத்தமை நற்செய்தியாளர்கள் காட்டுகின்றனர். அதாவது இயேசுவின் இறுதி இரவுணவை யூதர்களின் பாஸ்கா உணவுடன் தொடர்புபடுத்த விளைகின்றனர். யூதர்களின் திருவிழாக்களிலே பாஸ்காத் திருவிழா மிகமுக்கியமானது. இவ்விழா-விலே அவர்கள் இறைவன் தங்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து அற்புதமான முறையில் மீட்டதை பெருவிழாவாக நினைவு கொண்டாடி, இறைவனுக்கு நன்றி கூறினர். அந்நாளில் யூதர்கள் குடும்பம் குடும்பமாக ஒன்றுகூடி, குடுமபத் தலைவனின் தலைமையில் உண்ணும் பாஸ்கா உணவு பாஸ்காப் பண்டிகையின் முக்கிய நிகழ்ச்சியாக இருந்தது. பண்டைய நாட்களில் இஸ்ரயேலர் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைந்ததின் நினைவாக, அன்று அவர்கள் தம் இரவுணவை உண்டது போலவே, இன்றும் அந்த உணவை உண்டனர். அன்று மாவைப் புளிக்க வைக்க நேரமின்றி புளிக்கவைக்காத மாவில் சுடப்பட்ட புளியாத அப்பம், நெருப்பில் சுட்டுச் சமைத்த செம்மறியின் இறைச்சி, எகிப்திய அடிமை வாழ்வைக் குறிக்கும் கசப்புக் கீரைகள், இறைவனின் நான்கு வாக்குறுதிகளைக் (வி.ப. 6:6-7) குறிக்கும் நான்கு கோப்பை இரசம் என்பன பாஸ்கா உணவின் முக்கிய அம்சங்களாக இருந்தன. பாஸ்கா உணவு எருசலேம் நகர எல்லைக்குள் உண்ணப்பட வேண்டும். இயேசு தம் சீடர்களோடு தம் பாஸ்கா உணவை உண்பதற்கு வேண்டிய சகல ஆயத்தங்களையும் ஏற்கனவே செய்திருந்தார்.

சூரியன் மறைந்து, மாலையானதும் இயேசு தம் பன்னிரு சீடர்களுடன் தம் பாஸ்காவை உண்பதற்காகப் பந்தி அமர்ந்தார். யூதர்களின் பாஸ்கா விருந்திலே நான்கு பகுதிகள் உண்டு. ஒவ்வொரு பகுதியும் தண்ணீர் கலந்த திராட்சை இரசத்தை ஆசீர்வதிப்பதுடன் ஆரம்பமாகும். குடும்ப அல்லது குழுத் தலைவன் தண்ணீர் கலந்த இரசம் நிறைந்த கிண்ணத்தை ஆசீர்வதித்துப் பருகுதலுடன் முதல் பகுதி ஆரம்பமானது. பின்பு எல்லோரும் ஒரே பாத்திரத்தில் கை கழுவி, விழாவுக்குரிய செபம் சொல்லப்பட்டு, பாஸ்கா உணவு பரிமாறப்படும். தலைவர் கசப்புக் கீரையை உண்பார். பின்பு தலைவர் புளியாத அப்பத்தைப் பிட்டு, கையிலேந்தி, செபம் செய்வார். அடுத்து இடம்பெற்ற இரண்டாம் பகுதியில் இரசத்தோடு தண்ணீர் இரண்டாம் முறையாகக் கலக்கப்படும். அப்போது அக் குழுவில் உள்ள இளையவர் அச்சடங்கின் பொருளை வினவ, தலைவர் அதன் சரித்திரத்தைக்

கூறி, பாஸ்காச் செம்மறி, கசப்புக் கீரை, புளியாத அப்பம் என்பனவற்றின் பொருளை விளக்குவார். அதைத் தொடர்ந்து ஹல்லேல் பாடலின் (தி.பா. 113-114) முதற்பகுதி பாடப்பட்டு, தண்ணீர் கலந்த இரசம் இரண்டாம் முறையாகப் பருகப்படும். தலைவர் மீண்டும் கைகழுவி, புளியாத அப்பத்தைக் குழம்பில் தோய்த்து, கசப்புக் கீரையுடன் பகிர்ந்து அளிப்பார். அதன்பின் பாஸ்காச் செம்மறி, எலும்புகளை முறிக்காமல், முழுவதும் உண்ணப்பட்டது. அடுத்து மூன்றாம் முறையாக தண்ணீர் கலந்த இரசம் பருகப்பட்டது. இதை "ஆசீர்களின் கிண்ணம்" என்றழைப்பர். அதன்மேல் தலைவர் இறைவன் தங்களுக்குச் செய்த அரும்பெரும் செயல்களுக்கெல்லாம் நன்றிகூறிப் போற்றுவார் இந்நன்றிச் செபத்தை "பெரெக்கா" என்றழைப்பர். அதைத் தொடர்ந்து உணவுக்குப் பின் சொல்லப்படும் செபம் இடம் பெறும். இறுதியாக நான்காம் முறையாக தண்ணீர் கலந்த இரசம் பருகப்பட்டு ஹல்லேல் பாடலின் இறுதிப் பகுதி (தி.பா. 115-118) பாடப்பட்டு, விருந்தினர் கலைவர்.

இப்படியான யூதர்களின் பாஸ்கா விருந்து உணவாகவே இயேசு தம் இறுதி இராவுணவைத் தம் சீடர்களுடன் உட்கொண்டு, அதைத் தொடர்ந்து நற்கருணை என்ற அருட்சாதனத்தை ஏற்படுத்தினார். புளியாத அப்பத்தை தம் திரு உடலாகவும், "ஆசீர்களின் கிண்ணம்" என்றழைக்கப்படும் மூன்றாம் கிண்ணத் தண்ணீர் கலந்த இரசத்தை தம் திரு இரத்தமாகவும் மாற்றினார். இஸ்ராயேலரின் பாஸ்காவிழா விருந்து ஒரு மகிழ்ச்சி நிறைந்த கொண்டாட்டமாகும். இம்மகிழ்சி நிறைந்த சூழலில்தான் இயேசுவும் திவ்விய நற்கருணையை ஏற்படுத்தினார். இயேசு அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, அதைப் பிட்டு, "இதைப் பெற்றுக் கொள்ளுங்கள். இது என் உடல்" என்றார். பின்னர் கிண்ணத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, சீடர்களுக்குக் கொடுத்து, "இது என் உடன்படிக்கையின் இரத்தம். பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம். இனிமேல் இறையாட்சி வரும் அந்நாளில்தான் நான் திராட்சைப் பழ இரசத்தைக் குடிப்பேன். அதுவரை ஒருபோதும் குடிக்க மாட்டேன்" என்று உறுதியாகச் சொன்னார். "உடன்படிக்கையின் இரத்தம்" மோசே மக்கள் மேல் மிருக இரத்தத்தைத் தெளித்து, உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதைச் (வி.ப. 24:8) சுட்டி நிற்கின்றது. "பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம்" என்ற எசாயாவின் துன்புறும் ஊழியன் பற்றிய பாடலிலிருந்து எடுக்கப்பட்ட வார்த்தைகள்

(எசா. 53:12) இச்செயலுக்கு பலியின் பரிமாணத்தைக் கொடுக்கின்றன. இவ்விரு சுட்டிச் சொல்லும் இயேசுவின் மரணம் மற்றவர்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படும் பலி என்பதைக் குறிக்கின்றன. மாற்கு இயேசு தம் இறுதி இராவுணவின்போது சீடருடன் பங்குகொண்ட அப்ப இரசத்தை அவருடைய வரவிருக்கும் மரணத்தோடு தொடர்புபடுத்தி, பழைய ஏற்பாட்டுப் பலிகளின் மரபின் ஒளியிலும், இறையரசில் இடம்பெறவி-ருக்கும் மெசியாவின் விருந்தின் நம்பிக்கையிலும் விளக்குகின்றார். இஸ்ரயேலரின் பாஸ்கா உணவில் பங்குகொண்டோர், பழைய உடன்-படிக்கையில் நேரடியாகப் பங்குகொண்டது போல், நற்கருணைவிருந்தில் பங்குபெறுவோரும் புதிய உடன்படிக்கையில் பங்குகொள்கின்றனர். எனவே இயேசு நற்கருணையை ஒரு உணவு விருந்தாகவே ஏற்படுத்தினார். "எனது சதையை உண்டு. என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். எனது சதை மெய்யான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு. இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர்" என கூறிய இயேசு, இறுதி இராவுணவின்போது, "இதைப் பெற்று உண்ணுங்கள். இது எனது உடல். இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள். ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம்" என்று அப்பத்தையும், இரசத்தையும் கொடுத்து, நற்கருணையை ஏற்படுத்தினார்.

இயேசுவைப் பின் தொடர்ந்து, ஆதிக் கிறிஸ்தவர்களும் நற்கருணை வழிபாட்டை ஒரு விருந்தின் பின்னணியிலேயே கொண்டாடி-னார்கள். யூதர்கள் கொண்டாடும் "அகபே" என்ற அன்பு விருந்தின் பின்னரே நற்கருணை விருந்து கொண்டாடப்பட்டது. அகபே அன்பு விருந்தின்போது. நற்கருணை வழிபாட்டிலே பங்கெடுத்த வருபவர்கள் உணவு வகைகளை தங்கள் வீடுகளிலிருந்தே ஆயத்தப்படுத்திக் கொண்டுவருவர். நற்கருணை வழிபாட்டுக்கு முன் அவ் உணவை ஒன்று சேர்த்து, எவ்வித வித்தியாசமோ. வேறுபாடோ இன்றித் தங்களுக்குள் பகிர்ந்து உண்பர். அது அவர்களுக்குள் இருந்த ஒன்றிப்பை வெளிப்படுத்தி, ஒற்றுமையை வளர்த்தது. அது நற்கருணை வழிபாட்டுக்கு ஒரு முன் ஆயத்தமாவிருந்தது. அதைத் தொடர்நது நற்கருணை வழிபாடும், விருந்தும் இடம்பெற்றன. புனித பவுல் 1 கொரி. 11: 17-22 இல் ஆதித் திருசபையிலிருந்த இந்த அன்பு

விருந்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். பின்னர் அதில் எழுந்த சில துர்ப்பிரயோகங்களின் நிமித்தம் அது கைவிடப்பட்டது. ஆனால் திருச்சபையின் ஆரம்பத்திலிருந்தே நற்கருணையானது ஒரு விருந்துணவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

**நற்கருணை ஒற்றுமையின், ஒன்றிப்பின் அருள் அடையாளம்**

திருச்சபையின் ஆரம்ப காலத்தில நற்கருணை ஆண்டவரின் திருவிருந்து என அழைக்கப்பட்டது. ஒரு விருந்துணவானது அதில் பங்குபற்றுவோர்களுக்கு இடையில் உள்ள ஒற்றுமையைப் பிரதிபலிக்கின்றது. அது மட்டுமல்ல, அவர்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையை வளர்க்கிறது. ஒற்றுமையின் அடையாளமும், மூலமும், ஊற்றுமாய் இருக்கின்றது. தங்களுக்குள் ஒற்றுமை இல்லாதவர்கள் விருந்துக்கு அழைக்கப்படுவதும் இல்லை. அதில் பங்கெடுப்பதும் இல்லை. அது போலவே நற்கருணை விருந்தும் கிறிஸ்தவர்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையின் வெளிப்பாடாகவும், அதை வளர்க்கும் ஊற்றாகவும், மூலமாகவும் திகழ்கின்றது. தங்களுக்குள் ஒற்றுமையில்லாதவர்கள், மனத்தாங்கலுடன் இருப்பவர்கள் நற்கருணை வழிபாட்டிலிருந்து அதிக நன்மை பெற்முடியாது. எனவேதான் இயேசு, "நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிப்பீடத்தில் செலுத்த வரும்பொழுது, உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள்மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டெனஅங்கே நினைவுற்றால், அங்கேயே பலிப்பீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவருடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்" (மத். 5:23-24) எனக் கூறுகிறார். ஏனெனில் நற்கருணையானது ஒற்றுமையின் அருள் அடையாளமாக இருக்கிறது. எனவேதான் புனித பவுல் நாம் தகுந்த ஆயத்தத்துடன் நற்கருணை விருந்தில் பங்கெடுக்க வேண்டுமென எச்சரிக்கின்றார்.

> எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார். எனவே ஒவ்வொருவரும் தன்னையே சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு, கிண்ணத்தில் பருக வேண்டும் (1 கொரி. 11:28).

நற்கருணை முதலில் எங்களுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையேயுள்ள உறவை, ஒன்றிப்பை ஏற்படுத்தி வளர்க்கிறது. எங்களை கிறிஸ்தவ வாழ்விலே வளர்க்கிறது. இயேசுவின் கூற்றுப்படி: "எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு, எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன். வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன். அதுபோல் என்னை உண்போரும் என்னால் வாழ்வர்" (யோவா. 6:55-57). அதையே புனித பவுலும் வலியுறுத்துகிறார்: "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே. அது கிறிஸ்தவின் இரத்தத்தில பங்கு கொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப் பிட்டு உண்கிறோமே. அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயிருந்தாலும் ஒரே உடலாய் இருக்கிறோம். அந்த ஒரே அப்பத்தில்தான் பங்கு கொள்கிறோம். பலிப் பொருட்களை உண்கிறவர்கள் பலிக்குப் படைக்கப்பட்ட பலிப்பீடம் குறிக்கும் கடவுளோடு உறவு கொள்ளவில்லையா?" (1 கொரி. 10:16-18). எனவே நற்கருணையானது கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே உள்ள உறவை, ஒன்றிப்பை வளர்க்கிறது. எங்கள் ஆன்மீக உணவாக இருக்கிறது. 2ம் வத்திக்கான் சங்கம் "கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும், உச்ச நிலையும்" எனக் குறிப்பிடுகிறது.

கிறிஸ்தவர்களாகிய நாம் நற்கருணையிலே இயேசுவின் திரு உடலையும், திரு இரத்தத்தையும் பெற்றுக்கொள்ளும்போது, கிறிஸ்துவோடு ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் இணைக்கப்படுகிறோம். அத்தோடு இயேசுவின் உடலான அதே ஒரே அப்பத்தை நாம் உண்ணுகிறபோது, கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவர் ஒருவரோடு மிகவும் ஆழ்ந்த நெருக்கமான முறையில் இணைக்கப்படுகிறோம். நற்கருணையை சகோதர அன்பினின்று பிரிக்க முடியாது. அந்த வகையில் நற்கருணை திருச்சபையை உருவாக்குகின்றது. நற்கருணை வழியாக நமக்கு வரும் ஒன்றிப்பினால் கிறிஸ்துவின் மறை உடல் நிறுவப்படுகின்றது. எனவே நற்கருணை விருந்தில் பங்குகொள்பவர்கள் மத்தியில் அன்பு, சமாதானம், சமத்துவம், பரஸ்பர மதிப்பு. தாழ்மை போன்ற பண்புகள் இருக்கவேண்டும். புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய 1ம் திருமுகத்தில் அவர்கள் நற்கருணை விருந்தின் சமூகத்

தன்மையை வலியுறுத்தி, விருந்து குறித்துக்காட்டும் ஒன்றிப்புக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வழங்க வேண்டிய முக்கியத்துவத்தை வழங்கவில்லையெனச் சாடுகிறார் (1 கொரி. 11:17-37).

ஒரு அருள் அடையாளத்தின் முக்கிய நோக்கம் அதில இடம் பெறும் முக்கிய சடங்கின்போது சொல்லப்படும் செபத்திலே காணக்கிடக்கிறது. ஒவ்வொரு அருள் அடையாளத்தின்போதும் நாம் பரிசுத்த ஆவியைக் கூவியழைத்து. எங்களைப் புனிதப்படுத்தும் படியாக-வும், கிறிஸ்துவின் மறை உடலாகிய திருச்சபையைக் கட்டியெழுப்பும் படியாகவும் மன்றாடுகிறோம். இது அருள் அடையாளத்தை விளங்கிக்கொள்வதற்கு முக்கியம். நற்கருணை அருள் அடையாளக் கொண்டாட்டத்தில் இடம்பெறுகின்ற முக்கிய செபமாகிய நற்கருணை மன்றாட்டில் முக்கிய மன்றாட்டானது கிறிஸ்துவில் ஒன்றிப்புக்கானது. அதை உண்டு குடிப்பவர்கள் கிறிஸ்துவின் உடலாக மாறும்படி அப்பத்-தையும் இரசத்தையும் கிறிஸ்துவின் திரு உடலாகவும், திரு இரத்தமாக-வும் மாற்றுவேணுமென்று பரிசுத்த ஆவியை மன்றாடுகின்றோம்.

> உம்முடைய பரிசுத்த ஆவியைப் பொழிந்து இக் காணிக்கை-களைப் புனிதப்படுத்த வேண்டுமென உம்மை மன்றாடு-கிறோம். கிறிஸ்துவின் உடலிலும். இரத்தத்திலும் பங்கு-கொள்ளும் எங்களைப் பரிசுத்த ஆவி ஒன்று சேர்க்க வேண்டுமென உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகின்றோம் (நற்கருணை மன்றாட்டு 2).

> உம்முடைய திருமகனின் திரு உடல், திரு இரத்தத்தினால் ஊட்டம் பெறும் நாங்கள், கிறிஸ்துவின் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று, கிறிஸ்துவுக்குள் ஒரே உடலும், ஒரே மனமும் உள்ளவராக விளங்கச் செய்வீராக (நற்கருணை மன்றாட்டு 3).

ஆகவே நற்கருணையானது கிறிஸ்தவர்களுக்கிடையிலான ஒன்றிப்பின், ஒற்றுமையின் அருள் அடையாளமாக இருக்கிறது. மேலும் நற்கருணையானது விண்ணக விருந்தின் முன் சுவையாகவும், மறு-வாழ்விற்கு முன்னுறுதியாகுவும், விண்ணக ஆட்டுக் குட்டியின் திருமணவிருந்தின் (தி.வெ. 19:9) முன் சுவையாகவும் உள்ளது. "இதோ! இறைவனின் செம்மறி. செம்மறியின திருவிருந்திற்கு அழைக்கப் பெற்றோர் பேறு பெற்றோர்" என்ற அழைப்பு அதைச் சுட்டுகிறது.

**தேர்ச்சி மட்டம் 9.3.:** புதிய கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தூய ஆவியின் முக்கியத்துவத்தை விளக்குவர்.

பல கிறிஸ்தவ எழுத்தாளர்கள் தூய ஆவியானவரை "மறக்கப்பட்ட கடவுள்" என அழைக்கின்றனர். அது ஒரு மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகவோ அல்லது குறைத்துக் கூறப்பட்ட கூற்றாகவோ தோன்றலாம். ஏனெனில் சில கிறிஸ்தவர்கள் தூய ஆவியைப் பற்றி எதுவும் அறியாதவர்களாகக் காணப்படும் அதேவேளை இன்று பலர் தூய ஆவியானவரின் அருங்கொடை இயக்கங்களில் இணைந்து கிறிஸ்தவத்தின் ஏனைய கோட்பாடுகளைக் கைவிடும் அளவிற்குத் தூய ஆவியை வலியுறுத்தி, முதன்மை இடம் கொடுத்து வருகின்றார்கள். உண்மை என்னவெனில் மிகச் சிலரே பரிசுத்த ஆவியைப்பற்றிய சரியான உண்மையான இறையியல் அறிவைக் கொண்டிருக்கிறார்கள். பலர் அவரைப்பற்றிய சிந்தனையே இல்லாமல், அவரை மறந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். பலர் அவர் இருக்கிறதை வெளிப்படையாக மறுதலிக்காவிட்டாலும், அவருடைய பிரசன்னத்தை, அவருடைய செயல்படுகளை தங்கள் வாழ்க்கையில் என்றும் அனுபவியாதவர்களாக இருந்து வருகிறார்கள்.

கிறிஸ்தவர்களாகிய எங்களுடைய வாழ்க்கையில் தூய ஆவி யார்? தூய ஆவி எடுக்கும் இடம் என்ன? எங்களுக்கு அவர் ஏன் தேவை? அவருடைய செயற்பாடுகள் என்ன? அவர் எங்களுக்குச் செய்யக்கூடிய நன்மைகள் என்ன? என்பதை ஒவவொரு கிறிஸ்தனும் அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் கிறிஸ்து தம் சீடர்களை விட்டுப் பிரியுமுன் தம்மிடமாக நின்று, அவர்களுக்கு வாழ்வளிக்க, அவர்களை இயக்கி வழிநடத்த, நிறை உண்மையை நோக்கி இட்டுச் செல்ல, தமக்குச் சான்று பகர, நிலை வாழ்வை நோக்கிய அவர்களின் பயணத்தில் அவர்களுடன் இணைந்து பயணிக்க, தந்தையிடம் கேட்டு தூய ஆவியை எமக்கு அனுப்பியிருக்கிறார். எங்கள் வாழ்க்கைப் பயணத்தில் எங்களோடு பயணிக்க அவரே தன்னைவிடச் சிறந்தவரென இயேசுவே கூறியிருக்கிறார். "நான் போவதால் நீங்கள் பயனடைவீர்கள். நான் போகாவிட்டால் துணையாளர் உங்களிடம் வரமாட்டார். நான் போனால் அவரை உங்களிடம் அனுப்புவேன்" (யோவா. 16: 7). அவரே எங்களுடன் என்றென்றும் நிரந்தரமாக வாழ்பவர். எனவே

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் கிறிஸ்தவ வாழ்வின் ஆன்மாவாக இருக்கிற பரிசுத்த ஆவியை நன்கு அறிதிருக்க வேண்டும்.

மூவொரு கடவுளில் மூன்றாம் ஆள் தூய ஆவி. அவர் கடவுள். பிதாவுக்கும், மகனுக்கும் சரிசமனானவர். நித்தியர், சர்வ வல்லமை உள்ளவர். அவர் அரூபியாக இருக்கிறார். அவரை நாம் காணவோ, தொடவோ, இதோ எனச் சுட்டிக்காட்டவோ முடியாது. அவரை நம் விருப்பப்படி மாய தந்திர வேலை செய்து, நமது முன் தோன்றச் செய்ய முடியாது. அவர் கடவுள், மனித உள்ளங்களிலும், உலகிலும் இருந்து கொண்டு, நாம் புரிந்துகொள்ள முடியாதபடி செயல்படுபவர். அவர் காற்றுப் போன்றவர். அவரது பிரசன்னத்தை நாம் உணர, அறிந்து கொள்ள முடியும். ஒருவர் கடவுள்மீது நம்பிக்கைக்கு வருமாறு பேசும் போது, நற்செய்திக்காக ஒருவர் துன்புறும் போது அல்லது உயிரைக் கொடுக்கும் போது, ஒருவர் மன அமைதியையும், மகிழ்ச்சியையும் அனுபவிக்கும் போது, ஒருவர் நீதியை நிலை நாட்டுகிற போது அல்லது சுயநலமில்லாமல் சேவை செய்கிறபோது, தூய ஆவி அங்கே இருக்கிறார். இருவர் சண்டையைத் தீர்த்துக் கொண்டு, ஒப்புரவாகும் போது, தவறு செய்ததற்கு இழப்பீடு செய்கின்றபோது, மனக் கசப்பையும் வெறுப்பையும் ஏற்படுத்தியவரை மன்னித்து அவரை மறுபடி அன்பு செய்கிறபோது, சுயநலவாதி பிறர் நலனைக் காண்கிறபோது தூய ஆவி அங்கே இருக்கிறார். காற்று, நீர், இயற்கைகள் மனிதனால் பயமுறுத்தப்பட்டிருக்கும் நிலையில், இயற்கை நலனில் ஒருவர் அக்கறை காட்டும்போது, தூய ஆவி அங்கே இருக்கிறார். தூய ஆவியின் இயல்பையும், செயல்பாடுகளையும் நாம் அறிவதற்கு, கடவுளே முன்வந்து எமக்கு வெளிப்படுத்த வேண்டும். கடவுள் பரிசுத்த ஆவியைப்பற்றி எமக்கு வெளிப்படுத்தியிருக்கும் உண்மைகளை நாம் திருவிவிலியத்தில் படிக்கிறோம்.

### 9.3.1. திருவிவிலியத்தில் தூய ஆவியார்.

தூய ஆவியின் இயல்பையும், செயல்பாடுகளையும் நாம் சரியாக அறிவதற்கு, கடவுளே முன்வந்து அவரை எமக்கு வெளிப்படுத்த வேண்டும். கடவுள் பரிசுத்த ஆவியைப்பற்றி எமக்கு வெளிப்படுத்தியிருக்கும் உண்மைகளை நாம் திருவிவிலியத்தில் படிக்கிறோம்.

**பழைய ஏற்பாட்டில் தூய ஆவி**

பழைய ஏறபாட்டில் பரிசுத்த ஆவி செயல்படுவதை நாம் காண்கிறோம். உலக படைப்புடன் பழைய ஏற்பாடு ஆரம்பமாகிறது. மனிதனைப் படைக்கு முன்னரே தூய ஆவி இருந்தது. கடவுள் உலகைப் படைக்கத் தொடங்கியபோது மண்ணுலகு உருவமற்று, வெறுமையாக இருந்தது. நீர் அலை, இருள், ஒன்றுமில்லாமைதான் இருந்தது. அப்போது கடவுளின் ஆவி தண்ணீரின் ஆழத்தின்மீது அசைவாடியது. பரிசுத்த ஆவியைக் குறிக்கப் பயன் படுத்தப்படும் எபிரேயச் சொல் "RUAH" காற்றை, உயிர் மூச்சை, ஆவியைக் குறித்தது. எனவே உயிர் வந்தது. உலகில் வாழும், வளரும் அனைத்து உயிர்களிலும் கடவுள் இருக்கிறார் என்பது எமக்கு உணர்த்தப்படுகின்றது. கடவுள் இல்லாமல் படைப்பு இலலையென்பதற்கு தூய ஆவியே சான்று. முதல் மனிதனின் படைப்புப் பற்றிக் கூறும்பொழுது, கடவுள் தாமே தமது உயிர் மூச்சை மனிதன் நாசியில் ஊத, மனிதன் உயிருள்ளவன் ஆனான். அதாவது, ஆண், பெண, குழந்தைகள் ஆகிய அனைத்து மனிதரும் கடவுள் உயிரிலிருந்தே உயிரைப் பெறுகின்றனர். எனவேதான் மனிதர்கள் கடவுளின் சாயலைப் பெற்றுள்ளனர். அதனால்தான் அவர்கள் கடவுளை அறியவும், அவர் விருப்பத்தை நிறைவேற்றவும் கற்கிறார்கள்.

பின்னர் சில மனிதர்களின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் செயல்பாடுகளைக் காண்கிறோம். பழைய ஏற்பாட்டின் சில முக்கிய தலைவர்கள் மேல் பரிசுத்த ஆவி சில காலத்துக்கு வந்து தங்கி அவர்களுக்கு உதவியது. ஆனால் இவை சாதாரண நிகழ்வுகள் அல்ல. மாறாக விதிவிலக்கான, அபூர்வமான, அருமையான நிகழ்வுகள். அவை தற்காலிகமானதே. எண்ணிக்கை நூலில் ஆண்டவர் கட்டளைப்படி மோசே 70 பேரைத் தெரிந்தெடுத்து நிறுத்த, கடவுள் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அளிப்பதைக் காண்கிறோம். “மோசே மக்களின் மூப்பரில் எழுபது பேரை அழைத்துக் கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்தி வைத்தார். பின்னர் ஆண்டவர் மேகத்தில் இறங்கி வந்து அவரோடு பேசினார் அவரில் இருந்த ஆவியில் கொஞ்சம் எடுத்து, எழுபது மூப்பருக்கு அளித்தார். ஆவி அவர்கள் மேல் இறங்கவே, அவர்கள் இறைவாக்கு உரைத்தனர். அதன் பின்னர் அவர்கள் அப்படிச் செய்யவில்லை" (எண். 11:24-25). ஆனால் அது

அரிதாக, தற்காலிகமாக இடம்பெற்றது. இருந்தும் ஒரு நாள் வரும். அப்போது ஆண்டவரின் ஆவி இறைமக்கள் அனைவர்மேலும் பொழியப்படும், அப்பொழுது அனைவரும் இறைவாக்கு உரைப்பர் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் இருந்துவந்தது.

விடுதலைப்பயணம் முதல் அரசர்கள் காலம் வரை, குறிப்பாக இறைவாக்கினர் காலத்தில் பரிசுத்த ஆவி கூடுதலாகச் செயல்படுவதைக் காண்கிறோம். கெனாசின் மகன் ஒத்தானியேலுக்கு ஆண்டவரின் ஆவி வழங்கப்பட்டது. (நீதி. 3:10). அவர் இஸ்ராயேலருக்கு நீதித்தீர்ப்பு வழங்கினார். போருக்குச் சென்றார். மேலும் ஆண்டவரின் ஆவி கிதியோனை ஆட்கொண்டார் (நீதி. 6:34). அவர் எக்காளம் ஊதி, அபியேசர் குடும்பத்தவரை தன்னைப் பின்பற்ற அழைத்தார். மேலும் ஆண்டவரின் ஆவி ஆற்றலுடன் சிம்சோனின்மீது இறங்கியது (நீதி. 14:6). ஆட்டை இரண்டாகக் கிழிப்பதுபோல் சிங்கக்குட்டியை அவர் வெறும் கையால் கிழித்தார். சாமுவேல் சவுலைத் தைலத்தினால் அபிஷேகம் செய்து, “ஆண்டரின் ஆவி உன் மேல் வலிமையுடன் வரும். நீயும் இறைவாக்கினரோடு பரவசமடைந்து பேசுவாய். நீயும் வேறு மனிதனாய் மாற்றப்படுவாய்.” ஏன்றார் (1 சாமு. 10:6). சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து, தாவீதின் சகோதரர் முன்னிலையில் அவனைத் திருப்பொழிவு செய்தார். அன்று முதல் ஆண்டரின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்தது (1 சாமு. 16:13). இறைவாக்கினர் எசேக்கியேல் மேல் ஆண்டவரின் ஆவி வந்திறங்கியதையும் படிக்கிறோம் (எசே. 11:5). இவ்வாறாக ஆண்டவரின் ஆவி சில தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவர்மீது இறங்கி வந்து, தற்காலிகமாகத் தங்கியிருந்து, சில குறிப்பிட்ட பணியைச் செய்வதற்கு உதவி அளித்துச் சென்றது. அவர்கள் தீய அரசர்களைத் தைரியமுடன் எதிர்க்கவும், பொய் இறைவாக்கினர்களையும், நம்பிக்கையில்லாத குருக்களையும் கடிந்து கொள்ளவும், அவர்களது பொய்ப் போதனைக-ளையும், பாவங்களையும் அம்பலப்படுத்தவும் தயங்குவதில்லை. அவர்களின் ஆர்வம் பிறருக்கு எழுச்சி அளிக்கின்றது. அவர்களது பற்றுறுதி பிறரை உற்சாகப்படுத்துகின்றது. இவ்வாறாக காலம் காலமாக இறைவாக்கினர் வாயிலாக தூய ஆவி மக்களை நல்வழிப்படுத்தி வந்திருக்கிறது.

பெரிய இறைவாக்கினர் காலத்தில் தூய ஆவிபற்றி கூடுதலாக அறிய வருகிறோம். இறைவாக்கினர் ஏசாயா மெசியாவைப்பற்றி பேசுகையில், "ஆண்டவரின் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும். ஞானம், மெய்யுணர்வு, அறிவுரைத் திறன், ஆற்றல், நுண்மதி, ஆண்டவரைப்பற்றிய அச்ச உணர்வு, இவற்றை அந்த ஆவி அவருக்கு அருளும்" (எசா. 11:2) எனக் கூறுகிறார். தூய ஆவியின் "ஏழு கொடைகள்" என்று நாம் சொல்லும்போது இந்த இறைவாக்கையே நாம் மனதில் கொள்ளுகிறோம். ஏழு என்ற எண் நிறைவைக் குறிப்பது. ஆவியானவர் நமக்கு அளிக்கப்படுகிறபோது, அவர் நம்மை தமது ஒளியாலும், அமைதியாலும், அன்பினாலும், ஆற்றலினாலும் ஆட்கொண்டு, தமது துணையோடு நமக்கும் பிறருக்கும் செய்யவேண்டிய கடவுள் பணியை நிறைவேற்ற நம்மை அனுப்புகிறார். "இதோ! என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன். நான் தேர்ந்துகொண்டவர் அவர். அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகிறது. அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன். அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்" (எசா. 42:1). மெசியா மீது தங்கியுள்ள கடவுளின் ஆவி, ஒரு சில சிறப்பான மனிதருக்கு மட்டும் அளிக்கப்படும் கொடையல்ல. மாறாக "உமது வழிமரபினர் மீது என் ஆவியைப் பொழிவேன். உன் வழித்தோன்றல்களுக்கு நான் ஆவி வழங்குவேன்" (எசா. 44:3). மேலும், "நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன். உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர். உங்கள் முதியோர் கனவுகளையும், உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும் காண்பார்கள். அந்நாள்களில் உங்கள் பணியாளர், பணிப்பெண்கள் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்" (யோவே. 2:28-29) என்று இறைவாக்கினர் ஏங்கிக் கூறியுள்ளவாறு, தூய ஆவி எல்லாருக்கும் தம்மை முழுமையாக அளிக்கவே விரும்புகிறார்.

**புதிய ஏற்பாட்டில் தூய ஆவி**

பரிசுத்த ஆவிபற்றிய முழுமையான வெளிப்பாடு புதிய ஏற்பாட்டிலே, குறிப்பாக யோவான் எழுதிய நற்செய்தியில் காணப்படுகிறது. அது நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவினால் அளிக்கப்படுகிறது. நற்செய்தியில் இயேசு தூய ஆவியின் ஒன்றிப்பில் வாழ்கிறார், செயல்படுகிறார்.

**ஒத்தமை நற்செய்திகளில் தூய ஆவி**

ஒத்தமை நற்செய்திகளில் தூய ஆவியின் செயற்பாடுகள் சில தரப்படுகின்றன. இயேசுவின் தாய் மரியாள் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் இயேசுவைக் கருத்தரித்தார் (மத். 2:18,20, லூக். 2:34). எனவேதான் மரியாளை "அருள் நிறைந்தவளே" எனப் புகழ்கின்றோம். திருமுழுக்கு திருமுழுக்கு யோவான் பிறப்பதற்கு முன்னரே பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுகிறார் (லூக். 1:15). திருமுழுக்கு யோவானின் தாய் எலிசபெத் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, மரியாளை வாழ்த்துகிறார். (லூக். 1:45). திருமுழுக்கு யோவானின் தந்தை செக்கரியா பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு. இறைவாக்குரைக்கிறார். (லூக். 1:67). திருமுழுக்கு யோவான் வரவிருக்கும் மெசியா பரிசுத்த ஆவியால் திருமுழுக்கு அளிப்பாரென முன்னறிவிக்கிறார். "நான் தண்ணீரினால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். எனக்குப் பின் ஒருவர் வருகிறார். அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்" (மத். 3:11) எனத் தூய ஆவியாரால் இயக்கப்பட்டே கூறினார். சிமியோன் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, இறைவாக்குரைத்தார் (லூக். 2: 25-32). இயேசுவின் திருமுழுக்கின்போது வானம் பிளவுபட, பரிசுத்த ஆவி புறா வடிவில் இறங்கிவந்து இயேசுவின் மீது தங்குகிறார் (மாற். 1:11). உடனே தூய ஆவியினால் பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு இயேசுவை அவரது பணி குறிக்கோளிலிருந்து திசைதிருப்ப சாத்தான் வெவ்வேறு சோதனைகள் வழியாக ஏமாற்ற முயற்சித்தான். ஆனால் இயேசு பரிசுத்த ஆவியின் ஆற்றலால் அவனை மேற்கொண்டார். (மாற். 1:12-13). இயேசு தம் பணியை ஆரம்பிப்பதற்காக தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்து தொழுகைக் கூடம் சென்ற பொழுது, அங்கு எசாயா எழுதிய "ஆண்டவருடைய ஆவி என் மேல் உளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்" என்று எழுதப்பட்ட பகுதியை வாசித்து (லூக். 4:18-21), தம் பணியை ஆரம்பித்தார். மேற்கூறிய கருத்துக்களை நாம் ஒத்தமை நற்செய்திகளில் காண்கிறோம்.

**யோவான் நற்செய்தியில் தூய ஆவி**

யோவான் நற்செய்தியில் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, விண்ணேகம், தூய ஆவியை அளித்தல் என்பன இயேசுவின்

பாஸ்கா மறைபொருளில் அடங்குகின்றன. அவருடைய மீட்புப் பணி தூய ஆவியை தம் சீடருக்கு வழங்குவதுடனேயே நிறைவு, முழுமை அடைகிறது. ஏனைய் நற்செய்திகளிலும் பார்க்க யோவான் நற்செய்தியிலேயே இயேசு தூய ஆவிபற்றிய அதிக உண்மைகளை வெளிப்படுத்துகிறார். பரிசுத்த ஆவி, அவர் யார், அவரது இயல்பு எத்தகையது, அவர் ஆற்றும் பணி என்ன, அவரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் வேலை என்ன, நம் வாழ்வில் அவருடைய முக்கித்துவம் என்ன என்பது பற்றிய இயேசுவின் படிப்பினைகளை நாம் அங்கு காண்கிறோம்.

**தூய ஆவியின் இயல்பு**

இயேசு தம் பணியின் ஆரம்பத்திலேயே, அவருடைய திருமுழுக்கு வேளையில் தூய ஆவியால் அருள் பொழியப்படுகின்றார். “தூய ஆவி புறாவைப்போல் வானிலிருந்து இறங்கி, இவர்மீது இருக்கக் கண்டேன்... அவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பவர். இவரே இறைமகன்” (யோவா. 1:32-33). திருமுழுக்கு யோவான் தண்ணீரினால் திருமுழுக்குக் கொடுத்தார் ஆனால் இயேசு தூய ஆவியினால் திருமுழுக்குக் கொடுப்பாரெனக் கூறுகிறார். திருமுழுக்கு யோவான் அளித்த திருமுழுக்கு இயேசு அளிககவிருக்கும் திருமுழுக்குக்கு ஒரு முன்னடையாளம். தண்ணீர் தூய ஆவிக்கு அடையாளம். எருசலேம் திருக்கோவிலில் கூடாரத் திருவிழாவின் இறுதியான பெருநாளில் இயேசு மககளுக்குக் கூறியது:

> யாரேனும் தாகமாய் இருந்தால், என்னிடம் வரட்டும். என்னிடம் நம்பிக்கை கொள்வோர் பருகட்டும். மறை நூல் கூறுவதுபோல் அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும். (யோவான் 7:37-39)

இயேசு இங்கு தூய ஆவியைக் குறித்தே அவ்வாறு சொன்னதாகக் யோவான் குறிப்பிடுகின்றார். அதாவது இயேசு தூய ஆவியை தண்ணீருக்கு, தூய ஆவியின் இயல்பை தண்ணீரின் இயல்புக்கு ஒப்பிடுகிறார். இயேசுவிடமிருந்துதான் தூய ஆவி புறப்படுவார். இயேசு மாட்சிமைப் படுத்தப்பட்ட பின்னரே அவர் தூய ஆவியை வழங்குவார். பரிசுத்த ஆவி காலந்தோன்று முன்னரிலிருந்தே இருக்கிறார். அவர் நித்தியர் ஆனால் பெந்தேகோஸ்து விழாவின்போதே மக்கள் அவரை முழுமையாக அறிய வந்தனர்.

| தண்ணீர் | தூய ஆவி |
|---|---|
| * சோர்வடைந்த, உயிரற்ற சூழலை உயிருள்ளதாக்கும். | * ஆன்மாவை உயிருள்ளதாக்கும். |
| * அசுத்தத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும். | * பாவத்தை மன்னித்துத் தூய்மையாக்கும் |
| * புதுப்பிக்கும் | * புதுத் தன்மையைக் கொடுக்கும் |

பிறிதொரு இடத்தில் இயேசு தூய ஆவியின் இயல்பை காற்றின் இயல்புடன் ஒப்பிட்டு, அவர் அளிக்கப்போகும் திருமுழுக்கை தூய ஆவியானவரால் பெற்றுக்கொள்ளும் புதுப் பிறப்பாக அறிமுகப் படுத்துகின்றார் (3:5-6). கடவுளின் வலிமையாகிய ஆவியே மீள் பிறப்பு, புதுப் பிறப்பு, புத்துயிர் அளிப்பது. ஆவி ஒரு அரூபி. காற்றுப் போன்ற இயல்புடையது. கண்களால் அதைக் காணமுடியாது. அதன் செயற்பாடுகளையே நாம் காணலாம்.

> காற்று விரும்பிய திசையில் வீசுகிறது. அதன் ஓசை உமக்குக் கேட்கிறது. ஆனால் அத எங்கிருந்து வருகிறது என்றும், எங்கு செல்கிறது என்றும் உமக்குத் தெரியாது. தூய ஆவியால் பிறந்த அனைவருக்கும் இது பொருந்தும் (3:8)

| காற்று | தூய ஆவி |
|---|---|
| * உயிர்களின இருப்பு நிலைகளில் தங்கியுள்ளது | * ஆன்மாவின் உயிர் |
| * இயல்பை அறிய முடியாவிட்டாலும் செயற்பாட்டினால் அறிந்து கொள்ளலாம். | * இயல்பாக அறிய முடியாவிட்டாலும், செயற்பாட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம் |

**தூய ஆவியின் தேவை**

இயேசு யூதத் தலைவர்களுள் ஒருவரும், பரிசேயருமான நிக்கதேமுக்கு, பரிசுத்த ஆவியின் அவசர தேவையை வலிறுத்திக் கூறியிருக்கிறார்:

"ஒருவர் தண்ணீராலும், தூய ஆவியாலும் மறுபடியும் பிறந்தாலன்றி, இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன். மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர்" (யோவா. 3:5-6).

இயேசு பரிசுத்த ஆவியை "மறு பிறப்பு" அளிப்பவராக வெளிப்படுத்துகிறார். பரிசுத்த ஆவி மறுபிறப்பளிக்கும் விதத்தை வீசும் காற்றுக்கு ஒப்பிட்ட இயேசு, பரிசுத்த ஆவியினால் மறுபிறப்பு அடைந்தவர்களில் பரிசுத்த ஆவியின் செயற்பாட்டைத் தெளிவாகக் காண முடியுமெனக் கூறுகிறார்.

மேலும், இறைவனின் வார்த்தையை விளங்கிக்கொள்வதற்கு தூய ஆவியின் வழிகாட்டல். உதவி அவசியமாகும். நாம் கடவுளைப்பற்றியோ, விண்ணகத்தைப்பற்றியோ எதுவும் அறிய விரும்பினால், அவரிடமிருந்து, அல்லது அங்கிருந்து வருகின்ற ஒருவரிடமிருந்தே பெறலாம். இயேசு ஒருவரே விண்ணிலிருந்து வந்தவர். எனவே அவர் ஒருவரே கடவுளைப்பற்றியோ, விண்ணகத்தைப் பற்றியோ எமக்குச் சொல்லித் தரக் கூடியவர். இயேசு கூறுவதை நாம் விளங்குவதற்கு, இயேசுவின் ஆவி எமக்குத் தேவை.

மண்ணுலகிலிருந்து உண்டானவர் மண்ணுலகைச் சேர்ந்தவர். மண்ணுலகு சார்ந்தவை பற்றியே அவர் பேசுகிறார். விண்ணுலகிலிருந்து வருபவர் அனைவருக்கும் மேலானவர். தாம் கண்டதையும், கேட்டதையும் பற்றியே அவர் சான்று பகருகிறார். எனினும் அவர் தரும் சான்றை எவரும் ஏற்றுக்கொள்வதில்லை. அவர் தரும் சான்றை ஏற்றுக்கொள்பவர் கடவுள் உண்மையானவர் என்பதை உறுதிப்படுத்துகிறார். கடவுளால் அனுப்பப் பெற்றவர் கடவுளின் வார்த்தைகளைப் பேசுகிறார். கடவுள் அவருக்குத் தம் ஆவிக்குரிய கொடைகளை அளவின்றிக் கொடுக்கிறார் (3:31-34).

**தூய ஆவியின் பணி**

தூய ஆவி ஒரு ஆள் என்று கூறப்படுகின்றது. "துணையாளர்" என அழைக்கப்படுகின்றார். பழைய ஏற்பாட்டில் முக்கியமான ஒருவர் இறக்கும்பொழுது, தன்னிடமாக, தன் பிரதிநிதியாக நின்று, தான் செய்த வேலையைத் தொடர்ந்தாற்ற நியமிக்கப்படும் ஒருவரே

துணையாளரென அழைக்கப்படுகின்றார். உதா. மோசே யோசுவாவை தம் பிரதிநிதியாக நியமித்தார். இங்கு தூய ஆவியார் இயேசுவின் பிரதிநிதி. இயேசு தந்தையிடம் செல்லும் பொழுது, அவரின் பிரதிநிதியாக, பிரசன்னமாக கிறிஸ்தவர்களில் இருந்து, அவரின் பணியைத் தொடர்ந்தாற்றுபவர்.

> உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்.... என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார். நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார் (14:15-17)

தூய ஆவி மற்றொரு துணையாளரென அழைக்கப்படுகிறார். அப்படியாயின் அவருக்குமுன் வேறொரு துணையாளர் இருந்திருக்க வேண்டும். அந்த முதல் துணையாளர் இயேசுவே. தூய ஆவி மற்றொரு துணையாளர். இயேசுவைப்போல் தூய ஆவியும் ஒரு ஆள். அவரும் பரிசுத்த பரம திரித்துவத்தில் ஒரு ஆள். இத் தூய ஆவியார் திருச்சபையில் என்றும் இருப்பார். அவர் திருச்சபையின் ஆன்மா என்றழைக்கப்படுவார். இயேசு தந்தையின் பிரதிநிதியாகவிருந்தார். அவர் தந்தையிடம் திரும்பிப் போனபின், அவரின் நிரந்தர பிரதிநிதியாக தூய ஆவியார் இருப்பார். இயேசு தந்தையிடம் திரும்பிப் போனால்தான் அவருடைய பிரதிநிதி வருவார். எனவே இயேசுவின் பணியே தூய ஆவியாரின் பணி. தூய ஆவியார் உண்மையின் ஆவி. எனவே இயேசு படிப்பித்த உண்மைகளை அவரும் படிப்பிப்பார்..

> அவர் வந்து பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துக்கள் தவறானவை என எடுத்துக் காட்டுவார். பாவம் பற்றிய அவர்கள் கருத்து தவறானது: ஏனெனில் என்னிடம் அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. நீதி பற்றிய அவர்கள் கருத்து தவறானது. ஏனெனில் நான் தந்தையிடம் செல்கிறேன். நீங்களும் இனி என்னைக் காணமாட்டீர்கள். தீர்ப்பு பற்றிய அவர்கள் கருத்து தவறானது. ஏனெனில் இவ்வுலகின் தலைவன் தண்டனை பெற்றுவிட்டான் (16:7-11).

தூய ஆவியார் வந்து ஆற்றப்போகும் பணிகளுள் இன்னும் சில இங்கு தரப்படுகின்றன. அவர் வந்து இயேசுவின் மரணத்திலே, பாவம் யாரைச் சாரும்? நியாயம் யார் பக்கம் உள்ளது? இறைவனின் தீர்ப்பு எத்தகையது என்பதை எடுத்துக் காட்டுவார். அதாவது இயேசுவைச் சிலுவையில் அறைந்தபோது, யூதர்கள் தாங்கள் நீதிமான்களென்றும், கிறிஸ்துவே பாவியென்றும் கருதினர். ஆனால் தூய ஆவியாரோ பாவம் செய்தது கிறிஸ்துவல்ல, மாறாக யூதரே என உணர்த்துவார். திருச்சபையின் ஆரம்பத்திலேயே யூதர்கள் இதை உணர்ந்து மனம் வருந்தியதைக் காண்கின்றோம். (தி.ப. 2:37). தூய ஆவியார் யார் பக்கம் நீதி, நியாயம் உள்ளதெனவும் காட்டுவார். இயேசு கொலை செய்யப்பட்டவுடன் உயிர்த்து, தந்தையிடம் சென்று அவரால் மகிமைப்படுத்தப்பட்டார். இது இயேசுவே நீதிமானெனக் காட்டுகின்றது. தூய ஆவியார் இறைவனின் தீர்ப்பு எத்தகையதெனவும் காட்டுவார். யூதர்கள் இயேசுவுக்கு மரணத் தீர்ப்பு அளித்தனர். ஆனால் அத்தீர்ப்பு இயேசுவின் மகிமையின் காரணமாயிற்று. அவர் மரணத்தை வென்று, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் இதுவே இறைவன் அவருக்கு அளித்த தீர்ப்பு.

> நான் உங்களிடம் சொல்லவேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. உணமையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார். தாம் கேட்பதையே பேசுவார். வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார். இவ்வாறு என்னை மாட்சிப்படுத்துவார். தந்தையுடையவை யாவும் என்னுடையவையே. எனவேதான் "அவர் என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார்" என்றேன் (16:12-14)

இப் பகுதி, சீடர்களின் ஆசிரியர் என்ற முறையில், தூய ஆவியாரின் பணியைப் பற்றிப் பேசுகிறது. "நான் உங்களிடம் சொல்லவேண்டியவை இன்னும் பல உள்ளன". இயேசு வெளிப்படுத்தாத உண்மைகள் இன்னும் இருக்கின்றன என்பதல்ல இதன் பொருள். ஏனெனில் இயேசு, "என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்" என்கிறார். எனவே தூய

ஆவியார் புதுசாக வெளிப்படுத்துவதற்கு அங்கு ஒன்றும் இல்லை. ஆனால் இயேசு தம் வாழ்வு, போதனை, செயல்கள் வழியாக ஏற்கனவே வெளிப்படுத்தியற்றை தூய ஆவியார் ஆழமாக, தெளிவாக சீடர்களுக்கு விளங்கவைப்பார்.

**தூய ஆவியை வழங்குதல்**

யோவானின் இறையியலின்படி இயேசுவின பாஸ்கா மறை பொருள் அவருடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு, பரிசுத்த ஆவியை அளித்தல் அனைத்தையும் உள்ளடக்கும் ஒரு செயலாக இருக்கிறது. மேலும் அவர் காலத்தைப்பற்றியோ, கால வரிசையைப்பற்றியோ அக்கரை எடுக்கவில்லை. இறையியல் ஒற்றுமையையே காட்ட விளைகிறார். மேல் மாடி அறையில் தம் சீடர்களுக்குத் தோன்றிய போது தந்தை தம்மிடம் ஒப்படைத்த மீட்புப் பணியை அவர்களிடம் ஒப்படைத்து, அதைத் தொடர்ந்தாற்ற அவர்களை அனுப்புகிறார். அப்பொழுதே தூய ஆவியையும் அவர்களுக்கு அளிக்கிறார். திருச்சபையும் பிறக்கின்றது.

> இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியதுபோல, நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார். இதைச் சொன்ன பின் அவர் அவர்கள் மேல் ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்-களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப் படா" என்றார் (20:21-23).

இயேசு சில இடங்களில் தந்தை தூய ஆவியை அனுப்புவாரெனக் கூறுகிறார் (14:26). வேறு சில இடங்களில் தான் தந்தையிடம் கேட்டு, தந்தை தூய ஆவியை அனுப்புவாரெனக் கூறுகிறார் (14:15). இன்னும் சில இடங்களில் தந்தையிடமிருந்து தான் அனுப்பப் போவதாகக் கூறுகிறார் (15:26). இன்னும் சில வேளைகளில் தான் தந்தையிடம் திரும்பிப் போனால்தான் தூய ஆவி வருவாரெனக் கூறுகிறார் (16:7). இன்னும் சில இடங்களில் தானே தூய ஆவியை அனுப்புவதாகக் கூறுகிறார் (16:8) ஆனால் இங்கே அவர் தந்தையிடம் இன்னும் திரும்பிப் போகவில்லை. தந்தையைக் கேட்கவுமில்லை. தானாகவே தூய ஆவியை அளிக்கிறதைக்

காண்கிறோம். இயேசுவும் தந்தையும் ஒன்றே. அதேபோல் தூய ஆவியும் இயேசுவும் ஒன்றே. தந்தை செய்வதையே இயேசுவும் செய்கிறார். அதேபோல் இயேசு செய்வதையே தூய ஆவியும் செய்வாரென்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். "அவர்கள் மேல் ஊதி" தூய ஆவியை அளிக்கிறதைக் காண்கிறோம். ஆதி கடவுள் களிமண்ணிலிருந்து மனிதனைப் படைத்தபொழுது, அவன் மேல் உயிர் மூச்சை ஊதவே அவன் உயிர் பெற்றான். இறைவாக்கினர் எசேக்கியேல் ஒன்று சேர்ந்த உலர்ந்த எலும்புகளின் மேல மூச்சை ஊதவே, அவைகள் உயிர் பெற்றன. அதேபோல இங்கு இயேசு உயிர் மூச்சை சீடரகள்மேல் ஊதி, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியைச் செவ்வனே ஆற்றுவதற்கு புத்துயிர், பெலம், தைரியம், ஆற்றல் அளிக்கிறார். இவ்வாறு அளிக்கப்பட்ட கொடைகளில் ஒன்று "பாவங்களை மன்னித்தல்" ஆகும்.

**திருத் தூதர் பணி நூலில் பரிசுத்த ஆவி**

திருத்தூதர் பணி நூலில் பரிசுத்த ஆவியின் செயற்பாடுகள் அதிகம் காணப்படுகின்றன. எனவே சிலர் அந் நூலை பரிசுத்த ஆவியின் பணி நூலென அழைப்பர். இயேசுவின் பணிப்புரைக்கு அமைய அப்போஸ்தலர்கள் தம் பணியைத் தொடங்கச் செல்லுமுன் பரிசுத்த ஆவியின் வருகைக்காக எருசலேமில் காத்து நிற்கிறார்கள். "நீங்கள் எருசலேமைவிட்டு நீங்க வேண்டாம். என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள். யோவான் தண்ணீரினால் திருமுழுக்குக் கொடுத்தார். நீங்களோ இன்னும் சில நாள்களில் தூய ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள்... ஆனால் தூய ஆவி உங்களிடம் வரும்போது, நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று, எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும், உலகின் கடைசி எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.தூ.ப. 1:4-5,8). பெந்தெகோஸ்து தினத்தன்று பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள்மேல் வந்திறங்கினார். பரிசுத்த ஆவியின் வருகையானது சீனாய் மலையில் இறைவன் இறங்கி வந்ததை எமக்கு நினைவூட்டுகின்றது. கொடுங் காற்று வீசுவது போன்ற ஒரு இரைச்சல், நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் போன்ற வர்ணனை இறைமாட்சியை வர்ணிக்கப் பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள். பரிசுத்த ஆவி இறைவன் என்பதையும், அவர் மேலிருந்து இறங்கி வருவதையும் எமக்கு உணர்த்துகிறது. அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவர்மேலும் பரிசுத்த ஆவி வந்திறங்கியது வலியுறுத்தப்படுகிறது. திருச்சபையில்

ஆவியார் வந்து தங்குகிறார். யோவேல் இறைவாக்கினர், "இறுதி நாளில் எல்லோர் மேலும் ஆவியைப் பொழிவேன்" என்ற இறைவாக்கு நிறைவேறியது. பரிசுத்த ஆவியின் வருகையுடன் திருச்சபை பிறக்கின்றது, உருவாகி, உயிர்பெறுகினற்து. செயல்பட ஆரம்பிக்கின்றது. அதில பரிசுத்த ஆவியின் செயற்பாடுகளைக் காண்கிறோம்.

பரிசுத்த அவியால் நிரப்பப்பட்ட படிப்பறிவில்லாத அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவரும் அயல் மொழிகளில் பேசத் தொடங்கினர். யூதர்களுக்குப் பயந்து பூட்டிய அறையில் ஒழிந்திருந்த அப்போஸ்தலர் துணிவுடன வெளியே வந்து, அங்கே கூடியிருந்த பெருந்தொகையான மக்கள் முன்னிலையில் அச்சமின்றப் போதித்தனர். பேதுரு தங்களிலே ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு பரிசுத்த ஆவியே காரணமெனக் கூறுகிறார் (தி.தூ.ப. 2:33). தொடர்ந்து அவர்கள் இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்பவர்களுக்கு பரிசுத்த ஆவியால் திருமுழுக்குக் கொடுத்து, திருச்சபையில் சேர்க்கின்றனர். இவ்வாறு பரிசுத்த ஆவியின் கொடைகளை அவர்கள் நிறைவாகப் பெற்றிருந்ததைக் காண்கிறோம். அவர் திருச்சபையில் தங்கியிருந்து, அதன் ஆன்மாபோல் செயற்பட்டு, அதை வழிநடத்துகிறார். திருச்சபையின் வரலாற்றில் ஒவ்வொரு கட்டத்திலும், குறிப்பாக முக்கிய கட்டங்களில், அவருடைய செயற்பாட்டைக் காணகிறோம். தலைமைச் சங்கத்தின் முன் அப்போஸ்தலர்கள் நிறுத்தப்பட்டபொழுது, எத்தியோப்பிய அண்ணகனுக்கு பிலிப்பு திருமுழுக்கு அளித்தபோது, சவுலின் மனமாற்றத்தின்போது, கொர்ணேலியசின் குடும்பம் திருமுழுக்குப் பெற்றபோது, எருசலேம் சங்கத்தின்போது பரிசுத்த ஆவியின் செயற்பாடுகளைத் தெளிவாகக் காண்கிறோம். அவரே கிறிஸ்துவினிடமாயிருந்து, திருச்சபைக்குத் தலைமை தாங்கி, அதை வழிநடத்துகிறார். புனித பவுலின் மறைபோதக பயணங்களின்போதும் பரிசுத்த ஆவியே அவரை வழிநடத்துவதைக் காண்கிறோம்.

**புனித பவுலின் திருமுகங்களில் பரிசுத்த ஆவி**

புனித பவுல் பரிசுத்த ஆவியைப்பற்றியும், எம்மில் அவரது பிரசன்னம் பற்றியும் சில முக்கியமான படிப்பினைகளை தன் திருமுகங்களில் தருகிறார். அவர் மூவொரு கடவுளின் மூன்றாம் ஆளாகிய பரிசுத்த ஆவியின் இயல்பு, செயல்பாடுகளிலும் பார்க்கக்

கூடுதலாக கிறிஸ்தவர்களின் தனித்தன்மையாக (அடையாளமாக) விளங்கும் அவர்களது கிறிஸ்தவ வாழ்வில் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தை அலசுகிறார். அதாவது அவர் கிறிஸ்தவர்களின் செயல்களில் பரிசுத்த ஆவியின் தாக்கத்திலும் பார்க்க, அதிகமாக அவர்களது வாழ்வில், இருப்பில் பரிசுத்த ஆவியின் தாக்கத்தை, செல்வாக்கைப்பற்றிக் கவனம் செலுத்துகிறார். "கடவுளின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருக்கிறார்" (உரோ. 8:9), "நீங்கள் கடவுளுடைய கோயிலென்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?" (1 கொரி. 3:16)) என்றும், "கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார்" (கலா. 4:6). என்றும் கூறுகிறார். ஆவியானவர் நம் வாழ்வாக இருப்பதால், நமது செயல்களை அவரே நெறிப்படுத்துகிறார். கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்கள், கடவுளின் மக்களாக இருக்கிறார்கள் (உரோா. 8:14). எனவே புனித பவுலின் கருத்துப்படி பரிசுத்த ஆவி எங்கள் இருப்பின் ஆழத்தையே அசைக்கிறார். "கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வு தரும் தூய ஆவியின் சட்டம், பாவம், சாவு என்பவற்றுக்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்து விட்டது... மீண்டும் அச்சத்திறகு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லை மாறாகக் கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக் கொண்டீர்கள். அதனால் நாம் 'அப்பா, தந்தையே' என அழைக்கிறோம். நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார்" (உரோ. 8:2,15). ஆவியார் பழைய ஏற்பாட்டில் அழைக்கப்படுவதுபோல "கடவுளின் ஆவி", அல்லது "பரிசுத்த ஆவி" மட்டுமல்ல, அவர் "கிறிஸ்துவின் ஆவி" (உரோ. 8:9), அல்லது "கடவுளின் மகனின் ஆவி" (கலா. 4:6), அல்லது "இயேசுக் கிறிஸ்துவினுடைய ஆவி" (பிலி. 1:19). அதாவது தந்தையாகிய கடவுள் மட்டும் சுதனில் வெளிப்படவில்லை. பரிசுத்த ஆவியும் சிலுவையில் இறந்து உயிர்த்த ஆண்டவரின் வாழ்வில், செயலில் வெளிப்படுகின்றார்.

புனித பவுல் மற்றொரு முக்கிய உண்மையையும் படிப்பிக்கிறார்: பரிசுத்த ஆவி எங்களில் பிரசன்னமாக இருக்காவிட்டால் உண்மையான செபம், மன்றாட்டு இருக்க முடியாது. "தூய ஆவியார் நமது வலுவற்ற

நிலையில் நமக்குத் துணை நிற்கிறார். ஏனெனில், எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார்தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம் பெருமூச்சுக்களின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார். உள்ளங்களைத் துருவி ஆயும் கடவுள் தூய ஆவியாரின் மனநிலையை அறிவார். தூய ஆவியாரும் கடவுளுக்கு உகந்த முறையில் இறைமக்களுக்காகப் பரிந்து பேசுகிறார்" (உரோ. 8:26-27). அதாவது தந்தையினதும், மகனினதும் ஆவியான பரிசுத்த ஆவி, எங்கள் ஆன்மாவின் ஆன்மாவாக, எங்களின் மிக இரகசியமான இடத்தில் இருந்து, செபங்களை தொடர்சியாக இறைவனை நோக்கி எழுப்பிக்கொண்டிருக்கிறார். அவருடைய வார்த்தைகளை எங்களால் விளங்கிக் கொள்ள முடியாது. உண்மையில் ஆவியானவர் எங்களில் எப்பொதும் விழிப்பாயிருந்து, எங்களிலுள்ள குறைகளை நிறைவு செய்து, எங்கள் வழிபாடுகளையும், ஆசைகளையும் தந்தைக்கு ஒப்படைக்கின்றார். அதற்கு நாங்கள் ஆவியுடன் உயிருள்ள முறையில் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். எங்களில் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தை உணர்ந்து விழிப்புடன் இருக்கவும், அதை ஒரு செபமாக மாற்றவும் நாங்கள் அழைக்கப்படுகினறோம்.

புனித பவுல் பரிசுத்த ஆவியைப்பற்றி இன்னொரு உண்மை-யையும் எமக்குக் கற்பிக்கின்றார். அதாவது பரிசுத்த ஆவிக்கு "அன்பு"டன் இருக்கின்ற தொடர்பு. புனித பவுல், "அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது. ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது" (உரோ. 5:5). எனவேதான் புனித பவுல் பரிசுத்த ஆவியின் கனிகளை வரிசைப் படுத்துகையில் அன்புக்கு முதலிடம் கொடுக்கிறார். "தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை..." (கலா. 5:22). அன்பு இணைக்கிறது. பரிசுத்த ஆவியாரே கிறிஸ்தவ சமூகத்தில் நட்புறவை, ஒற்றுமையை ஏற்படுத்துகிறவர். "பரிசுத்த ஆவியார் விசுவாசிகளின் இதய உணர்வுகளையும் கிறிஸ்துவின் இதய உணர்வுகளையும் ஒருங்கிணைத்து, கிறிஸ்து அனைவரையும் அன்பு செய்வதுபோல. அவர்களையும் தம் அயலவர்களை அன்பு செய்யத் தூண்டுகிறார். அன்பு வாழ்வாக இருக்கிற இறை வாழ்வின் ஓசைநயத்தில் எம்மை ஆழ்த்தி, தந்தை-மகன் உறவிலே நாங்களும் பங்கெடுக்க

ஆற்றல் அளிக்கிறார்" எனத் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கூறுகிறார். எனவேதான் திருப்பலியின் ஆரம்பத்தில் கிறிஸ்தவ சமூகம் ஒன்று கூடும்பொழுது, "பரிசுத்த ஆவியின் நட்புறவு (அவர் ஏற்படுத்துகிற நட்புறவு) உங்களோடு இருப்பதாக" என வாழ்த்தப்படுகிறார்கள். இக்கருத்தில்தான் நம் கிறிஸ்தவ வாழ்வானது பரிசுத்த ஆவியின் வாழ்வு என்று கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலில் அழைக்கப்படுகிறது.

## 9.3.2. உலகில் தூய ஆவியின் செயற்பாடு

ஆதியில் கடவுள் மனிதனை தம் உருவாகவும், சாயலாகவும் படைத்தார். ஆனால் மனிதன் தன் ஆணவத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும் கடவுளுடைய திட்டத்தைத் தகர்த்து, தனக்கும், தன் சந்ததிக்கும் அழிவையே தேடிக்கொண்டான். இரக்கமுள்ள கடவுள் அவனை அந்த அழிவு நிலையில் விட்டுவிட விரும்பவில்லை. அவனை அந் நிலையிலிருந்து மீட்டெடுத்து, முன்னைய அவனுடைய பிறப்பு நிலைக்குத் திரும்பவும் கொண்டு வர விரும்பினார். எனவே அதற்கென ஒரு மீட்புத் திட்டத்தை வரைந்து, அதைத் தம் மகனிடம் கொடுத்து, அதை நிறைவேற்ற, சகல அதிகாரங்களுடனும் அவரை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தார். மனுவுருவில் இவ்வுலகம் வந்த இறைமகன் இயேசுக் கிறிஸ்து தந்தை தம்மிடம் ஒப்படைத்த மீட்புப் பணியை மேற்கொண்டார். தொடக்கத்திலிருந்தே தமக்குப் பின் தம் பணியை உலக முடிவு வரைக்கும் தொடர்ந்தாற்ற பன்னிருவரைத் தம் சீடர்களாகத் தெரிந்தெடுத்து, தம்முடன் வைத்துக் கொண்டார். அவர்களைத் தம் வாழ்விலும், வழியிலும், பணியிலும் பங்கெடுக்கப் பயிற்றுவித்தார். இறைத் தந்தையையும், அவர் அனுப்பிய கிறிஸ்துவையும் அவர்களுக்கு அறிமுகம் செய்து, அவர்களைப்பற்றி அவர்களுக்குக் கற்பித்தார். தம்முடைய படிப்பினைகள். செயல்கள், அருங்குறிகள், குறிப்பாக அவருடைய பாடுகள், மரணம். உயிர்ப்பு வழியாக கடவுளையும், அவர் மனுக்குலத்தின்மீது கொண்டுள்ள அளவிலா, எல்லையில்லா அன்பையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர்களை அவர்களுடைய பழைய பாவ பழக்க வழக்கங்களிலிருந்து விடுவித்து, அவர்கள் எப்படி கடவுளின் பிள்ளைகளாக இறையன்பிலும், சகோதர அன்பிலும் வாழ்வேண்டுமென்று தாமே வாழ்ந்து காட்டி, அவர்களுக்குப்

படிப்பித்தார். இறுதியாக "என் தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" எனக் கூறி, தான் அவர்களுக்குச் செய்ததை அவர்களும் உலகெங்கும் சென்று, உலக முடிவுமட்டும் வாழும் எல்லா இன மக்களுக்கும் செய்யும் படி பணித்து அனுப்பி-வைத்தார். தான் தந்தையிடம் திரும்பி விண்ணகம் சென்றதும், தன்னிட-மாக அவர்களோடு இறுதிமட்டும் நிரந்தரமாக இருந்து, அவர்களுக்கு உதவிசெய்ய தன்னைப்போன்று இன்னொரு துணையாளரை அனுப்புவதாகக் கூறி விண்ணகம் சென்றார். அதன்படியே தம்மிடமாக இருந்து தம் சீடர்கள் மத்தியில் தம் பணியைத் தொடர்ந்தாற்ற தன்னையொத்த துணையாளராக பரிசுத்த ஆவியை தம் சீடர்களுக்கு அனுப்பி வைத்தார். இச் சீடர்களின் கூட்டமே "திருச்சபை" என அழைக்கப்படுகிறது. எனவே இன்றைய உலகில் பரிசுத்த ஆவியின் செயற்பாடுகளென நாம் சிந்திக்கும்பொழுது, அன்று இயேசு தம் சீடர்கள் மத்தியில் செய்த செயல்களையே இன்று பரிசுத்த ஆவி, அவரிடமாக நின்று, திருச்சபை வழியாக உலகில் செய்து கொண்டிருக்கிறாரென நாம் உறுதியாகக் கூறலாம்.

உலகில் பரிசுத்த ஆவியின் செயற்பாடுகள் பற்றி நாம் புனித யோவான் எழுதிய நற்செய்தியிலும், திருத் தூதர் பணி நூலிலும், குறிப்பாக புனித பவுலின் திருமுகங்களிலும் ஏற்கனவே பார்த்திருக்கி-றோம். பரிசுத்த ஆவியே இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளுகி-றவர்களுக்கு திருமுழுக்கு வழியாக மறு பிறப்பு, புதுப் பிறப்பு அளிக்கின்றவர் (யோவா. 3:5-6) . ஆதிப் பெற்றோரிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட பிறப்பு நிலைப் (சென்ம) பாவத்தைப் போக்கி, நாமே கட்டிக்கொண்ட செயல்முறைப் (கன்ம) பாவங்களைக் கழுவி, பாவத்தினால் சீரழிந்து போயிருந்த இறை சாயலை மீண்டும் நம்மில் ஏற்படுத்தி, நம்மை இறை அருளால் நிரப்புகின்றவர். புனிதப்படுத்தும் அருளாகிய நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய முக்கிய இறையியல் புண்ணியங்களைத் தந்து, இறைவனை நன்கு அறியவும், அவர் நம்மை அன்பு செய்வது போல நாம் அவரை அன்பு செய்யவும், அவருடன் வாழும் வாழ்வை எதிர்நோக்கி இருக்கவும் உதவுகின்றவர். எம்மை இறைவனோடும், எம் சகோதரரோடும் மீண்டும் ஒப்புரவாக்குகின்றவர் (1 கொரி. 6:11, உரோ. 8:2-3). எம்மை இறையருளால் நிரப்பி, இவைனுக்கும் எமக்குமிடையில் முறிந்திருந்த நட்புறவை மீளவும்

ஏற்படுத்தி, எம்மை இறைவனின் பிள்ளைகளாக்குகின்றவர். எம்மை இயேசுவின் சகோதர சகோதரி ஆக்குகின்றவர். திருச்சபையின் உறுப்பினராக்குகின்றவர். மேலும் நம்மையும் ஒருவர் ஒருவரை சகோதர சகோதரியாக இணைக்கின்றவர். "நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது" (உரோ. 5:5). எம்மை இறைவனின் கோவிலாக்கி, எம்முள் தாமே தங்கியிருந்து, இந்த அன்புறவிலே எம்மை நாளுக்குநாள் வளர்த்து, உறுதிப்படுத்துகின்றவர். எம்மில் குடிகொண்டிருந்து, எம்மை இயக்குகின்றவர் (உரோ. 8:14).. அவரே நம் வாழ்வாக இருக்கின்றபடியால், நம் செயல்களை எல்லாம் அவரே நெறிப்படுத்துகின்றார் (உரோ. 5:16-25).

பரிசுத்த ஆவியே நம் நிலை வாழ்வை நோக்கிய பயணத்திலே எம்முடன் பயணித்து, எம்மை வழிநடத்தி, இட்டுச் செல்லுகின்றவர். அவரே இயேசு எங்களுக்குக் கற்பித்ததையெல்லாம் எங்களுக்கு மீண்டும் நினைவூட்டுபவர். அவரே இயேசு ஏற்கனவே எமக்கு வெளிப்படுத்தியவற்றை ஆழமாக, தெளிவாக விளங்கவைப்பவர். அவரே எங்களை நிறை உண்மையை நோக்கி வழிநடத்துகிறவர். அவர் திருச்சபையில் தங்கியிருந்து, அதன் ஆன்மாபோல் செயற்பட்டு, அதை வழிநடத்துகிறார். திருச்சபையின் வரலாற்றில் ஒவ்வொரு கட்டத்திலும், குறிப்பாக முக்கிய கட்டங்களில், அவருடைய செயற்பாட்டைக் காணகிறோம். திருமுழுக்கு வழியாக நாம் பெற்ற புதிய வாழ்வை ஊட்டம் பெறச் செய்வதற்கும், அதேபோல் நம் வாழ்வில் நாம் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழ்வதற்கும் தூய ஆவியே நமக்கு உதவி செய்து வருகிறார். பிறர் எம்மீது குற்றம் சாட்டி, எம்மைத் துன்புறுத்துகின்றபோது, எம்மைத் தைரியப்படுத்தி, எமக்கு வேண்டிய சரியான வார்த்தைகளைக் கொடுத்து, எம்மைப் பாதுகாப்பவர். தூய ஆவி நம்முள் செயல்படும்போது, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்ற கனிகளை நமக்கு அருளி, உதவுகின்றார். அன்பு இணைக்கிறது. பரிசுத்த ஆவியாரே கிறிஸ்தவ சமூகத்தில் நட்புறவை, ஒற்றுமையை ஏற்படுத்துகிறவர். பரிசுத்த ஆவியார் விசுவாசிகளின் இதய உணர்வுகளையும் கிறிஸ்துவின் இதய உணர்வுகளையும் ஒருங்கிணைத்து, கிறிஸ்து அனைவரையும் அன்பு செய்வதுபோல. எம்மையும் எம் அயலவர்களை அன்பு செய்யத்

தூண்டுகிறார். அன்பு வாழ்வாக இருக்கிற இறை வாழ்வின் ஓசைநயத்தில் எம்மை ஆழ்த்தி, தந்தை-மகன் உறவிலே நாங்களும் பங்கெடுக்க ஆற்றல் அளிக்கிறார்.

பரிசுத்த ஆவியார் எங்களுக்குச் செபிக்கக் கற்றுக் கொடுக்கிறார். எங்களோடு இருந்து, எங்களுக்குக்காகத் தந்தையிடம் பரிந்து பேசுகிறார். "தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார். ஏனெனில், எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார்தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம் பெருமூச்சுக்களின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார்" (உரோ. 8:26). அதாவது தந்தையினதும், மகனினதும் ஆவியான பரிசுத்த ஆவி, எங்கள் ஆன்மாவின் ஆன்மாவாக, எங்களின் மிக இரகசியமான இடத்தில் இருந்து, செபங்களை தொடர்சியாக இறைவனை நோக்கி எழுப்பிக் கொண்டிருக்கிறார். நாம் தவறும்பொழுது எங்கள் பாவங்களை எமக்கு உணர்த்தி, இறைவனிடம் திரும்பிவர எம்மைத் தூண்டுகிறார். மேலும் பாவம் யாரைச் சாரும்? நியாயம் யார் பக்கம் உள்ளது? இறைவனின் தீர்ப்பு எத்தகையது என்பதை எமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

திருமுழுக்கு வழியாக நாம் கிறிஸ்துவின் குருத்துவப் பணி, இறைவாக்குப் பணி, அரசப் பணியில் பங்கெடுக்கிறோம். நாம் கிறிஸ்துவுடன் சேர்ந்து நம்மையே கடவுளுக்கு அர்ப்பணிக்கவும், உலகினைப் புனிதப்படுத்தவும், நற்செய்திக்கு சான்று பகரவும், உலகினை அர்ச்சிக்கவும் அழைக்கப்படுகிறோம். இப் பணிகளை நாம் செவ்வனே ஆற்றுவதற்கு பரிசுத்த ஆவி எமக்கு உதவி செய்கிறார். ஞானம், மெய்யுணர்வு, அறிவுரைத் திறன், நுண்மதி, ஆற்றல், இறைப்பற்று, இறை அச்சம் என்ற பரிசுத்த ஆவியின் கொடைகளைப் பெறுகின்றோம். இவை பரிசுத்த ஆவியின் தூண்டுதலைப் பின்பற்ற, தாழ்ச்சியுடன் இருக்கச் செய்யும் மனநிலைகளாகும். கடவுள் விருப்பப்படி நாம் அன்பு செய்யவும், செயல்படவும், நமக்கு அனுதினமும் தேவைப்படும் கடவுளுடைய உதவியைப் பெற்றுக் கொள்ளுவதற்கான வழிவகைகளுக்கு ஆதாரமாகவும், பெரிய நம்பிக்கை தருவதாகவும் இந்தக் கொடைகள் உள்ளன. புனித பவுல் பரிசுத்த ஆவி எமக்கு அருளும் அருள் கொடைகளைப் பற்றிப் பேசும்போது பின்வருமாறு கூறுகிறார்:

அருள் கொடைகள் பலவகையுண்டு. ஆனால் தூய ஆவியார் ஒருவரே திருத் தொண்டுகளும் பலவகையுண்டு. ஆனால் ஆண்டவர் ஒருவரே. செயல்பாடுகள் பலவகையுண்டு. ஆனால் கடவுள் ஒருவரே. அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயல்படுத்துபவர். பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது. தூய ஆவியார் ஒருவருக்கு ஞானம் நிறைந்த சொல்வளத்தை அருளுகிறார். இன்னொருவருக்கோ அதே ஆவியார் அறிவுசெறிந்த சொல்வளத்தை அளிக்கிறார். அதே ஆவியார் வேறொருவருக்கு நம்பிக்கை அருளுகிறார். அந்த ஒரே ஆவியார் மற்றொருவருக்குப் பிணிதீர்க்கும் அருள்கொடையையும் அளிக்கிறார். தூய ஆவியார் ஒருவருக்கு வல்ல செயல் செய்யும் ஆற்றலையும், இன்னொ-ருவருக்கு இறைவாக்குரைக்கும் ஆற்றலையும், வேறொரு-வருக்கு ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றலையும், மற்றொருவருக்குப் பல்வகை பரவசப்பேச்சு பேசும் ஆற்ற-லையும், பிறிதொருவருக்கு அப்பேச்சை விளக்கும் ஆற்ற-லையும் அருளுகிறார். அந்த ஒரே ஆவியாரே இவற்றை-யெல்லாம் செயல்படுத்துகிறார். அவரே தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் இவற்றைப் பகிர்ந்தளிக்கிறார் (1 கொரி. 12:4-11).

**கிறிஸ்தவ பொறுப்பும் ஒத்துழைப்பும்**

"என்னுடைய சம்மதமின்றி என்னைப் படைத்த கடவுள், என்னு-டைய சம்மதமின்றி என்னை மீட்க மாட்டார்" என்பது புனித அகுஸ்தினாரின் கூற்று. கடவுள் எம்மை சுயாதீனம் உள்ள பிறவியாகப் படைத்திருக்கிறார். எனவே எங்கள் சம்மதமின்றி, எங்கள் ஒத்துழைப்பு இன்றி, அவர் எம்மில் எவ்வித மாற்றத்தையும் வளர்ச்சியையும் ஏற்படுத்த மாட்டார். ஆண்டவர் அளிக்கும் அருள் அடையாளங்களும், பரிசுத்த ஆவி அளிக்கும் அருள் கொடைகளும் எம்மில் ஒரு மாற்றத்தை, ஒரு வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்றால் எமது பொறுப்பு. ஒத்துழைப்பு இன்றியமையாதது. வேத விரோதியான சவுல் உயிர்த்த இயேசுவைத் தமாஸ்குப் பாதையில் சந்தித்தார். அந்தச் சந்திப்பு அவர் வாழ்க்கையில் ஒரு பெருந் திருப்பத்தை ஏற்படுத்தியது. அவர் இயேசுவின் அப்போஸ்தலராக மாறினார். சுமாரித்த பெண் இயேசுவை யாக்கோபுவின்

கிணற்றடியில் சந்தித்தார். அச் சந்திப்பு அவள் வாழ்க்கையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆயககாரன் சக்கேயு இயேசுவைச் சந்தித்தார். அவர் வாழ்க்கையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஆனால் வேறு பலரும் இயேசுவைச் சந்தித்தனர். ஆனால் அவர்கள் மனம்மாறவில்லை. மாறாக இன்னும் மனக் கடினமுற்றனர். அனைத்து அருள் அடையாளங்களிலும் நாம் அதே உயிர்த்த இயேசுவைச் சந்திக்கிறோம் என்பது நம் நம்பிக்கை. ஆனால் அவருடைய உயிர்ப்பை உறுதியுள்ளதாக எமது வாழ்வோடு இணைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்தல் கிறிஸ்தவர்களாகிய எமது ஓரே பொறுப்பாகும். திருமுழுக்கு வழியாக நாம் கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு, மேய்ப்புப் பணியில் பங்கெடுக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் அந்த அழைப்பு உறுதிப்பூசுதல் வழியாக மேலும் முதிர்ச்சி அடையவேண்டும். நாம் பரிசுத்த ஆவியின் பலதரப்பட்ட அருள் கொடைகளைப் பெற்றிருப்பினும், எமக்குள் நேர்மையான முயற்சியின் மீதான அடிப்படைப் பண்புகள் இல்லாவிட்டால், தூய ஆவியின் செயற்பாடு நலிவடைந்து விடும். ஆன்மீக வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்வதோடு, இறையாட்சியைக் கட்டியெழுப்பும் பணியினை எமது உள்ளங்களில் நாம் நினைவுறுத்திக் கொள்ளவேண்டும். இதன் வழியாக திருமுழுக்கின்போது நாம் பெற்ற குருத்துவ, இறைவாக்கு, மேய்ப்புப் பணி அழைத்தலை நாம் உயிர் பெறச் செய்யவேண்டும்.

கிறிஸ்தவ தனித்துவத்தின் மையம் உயிர்த்த ஆண்டவராவார். இத் தனித்துவத்தை விளங்கிக் கொள்வதற்கு ஆவியின் அருள் தேவை. தூய ஆவியானவருக்கு எமது வாழ்வில் உள்ள திறந்த தன்மை "கிறிஸ்தவ மைய வாழ்வுக்கு" எம்மை இட்டுச செல்லுகின்றது. உயிர்த்த கிறிஸ்து எம்மோடு வாழ்வதை நாம் உரிமையாக்கிக் கொள்ள வேண்டும். எமக்கு அருளப்படுகின்ற எல்லா அருள் அடையாளங்கள் வழியாகவும் உயிர்த்த ஆண்டவரை நாம் உறுதியான அனுபவமாக்கிக் கொள்வோம். அவர் எங்களோடு ஏற்படுத்திக் கொள்ளும் "நெருங்கிய அன்பு" உறவை மற்றவர்களோடும் பகிர்ந்து கொள்வது கிறிஸ்தவ தனித்துவத்தை மென்மேலும் உறுதியடையச் செய்கின்றது. கிறிஸ்தவர்களாகிய நமது நற்பண்புகளும், செயல்பாடுகளும் நிறைவடைய நாம் பரிசுத்த ஆவி அளிக்கும் கொடைகளுடன் ஒத்துழைப்போம்.

## 9.3.3. தூய ஆவியும் சான்று பகரலும்

சான்று பகருதல் என்பது எமது நம்பிக்கையை, நாம் நம்பிக்கை வைத்தவற்றை தனியே வார்த்தையில் அல்ல, செயலில், வாழ்வில் காட்டுவதாகும். ஒருவர் தன் கண்களால் கண்டதை, காதால் கேட்டதை எடுத்துக் கூறுவதையும் சான்று பகர்தல், சாட்சியம் அளித்தல் எனக் கூறுகிறோம். உதாரணமாக, தான் பணிவிடை பெறவல்ல, பணிவிடை புரியவே வந்தேன் என்று தாழ்மையைப் போதித்த இயேசு, தனது இறுதி இராவுணவின்போது, தம் சீடர்களின் பாதங்களைக் கழுவி, தன் தாழ்ச்சிக்குச் சான்று பகர்ந்தார். நம் எதிரிகளை அன்பு செய்ய-வேண்டும், பிறர் செய்யும் குற்றங்களை நாம் மன்னிக்க வேண்டும், எமக்குத் துரோகம் செய்கிறவர்களக்காக நாம் செபிக்கவேண்டுமெனத் திருத்தூதர்களுக்குக் கற்பித்த இயேசு, அவர் சிலுவையில் தொங்கிய-போது, "தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" என்று தம்மைச் சிலுவை-யில் அறைந்தவர்களுக்காக மன்றாடி, தான் கற்பித்ததற்குச் சான்று பகர்ந்து, தம் செயற்பாட்டை உறுதிப்படுத்தினார். சான்று பகரல் நம் கிறிஸ்தவ வாழ்வின் ஒரு முக்கிய அம்சமாகும். இயேசுவை ஆண்ட-வராக, இறைவனாக ஏற்று நம்பிக்கை வைக்கும் நாங்கள் அந்த நம்பிக்கையை நம் அன்றாட வாழ்வில், செயலில் காண்பிக்க, வெளிப்-படுத்த அழைக்கப்படுகிறோம். அவர் காட்டிய வழியிலே, அவர் கற்பித்த படிப்பினைகளின்படி, அவர் கடைப்பிடித்த விழுமியங்களின்படி நாம் வாழ்ந்து, நம் செயலில் அந்த நம்பிக்கையைக் காட்ட வேண்டும். அதையே நாம் கிறிஸ்தவ வாழ்வு என்றழைக்கிறோம். கிறிஸ்துவை, கிறிஸ்துவின் வாழ்வை, அவர் போதித்ததை, அவரிலே மிளிர்ந்த புண்ணியங்களை மற்றவர்கள் எங்களில், கிறிஸ்தவர்களில் காணவேண்டும்.

இயேசு தம் சீடர்களைப் பயிற்றுவித்த பொழுது. தாம் அவர்-களைப் பிரிந்து இவ்வுலகிலிருந்து சென்றதும் தம் சீடர்கள் தமக்கு, தம் போதனைகளுக்குச் சான்று பகரும்படி ஆயத்தம் செய்ததைக் காண்கிறோம். அவர்களைத் தம்மோடு வைத்திருந்து. தாம் செய்வதை அவர்கள் காணவும், தாம் போதிப்பதை அவர்கள் கேட்கவும், தம் வாழ்வை அவர்கள் அனுபவிக்கவும் சந்தர்ப்பம் அளித்தார். "நீங்களும்

(என்னைப் பற்றி) சான்று பகருவீர்கள். ஏனெனில் நீங்கள் தொடக்க முதல் என்னோடு இருந்து வருகிறீர்கள்" (யோவா. 15:37). "என் பொருட்டு ஆளுநர்களிடமும், அரசர்களிடமும் உங்களை இழுத்துச் செல்லுவார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும், பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள். இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும்பொழுது, 'என்ன பேசுவது. எப்படிப் பேசுவது' என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேசவேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார்" (மத். 10:18-20). பின்னர் பேதுருவும், யோவானும் தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்தப்பட்ட பொழுது "நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது" எனக் கூறினர். இறுதியாக விண்ணகம் செல்லுமுன், இயேசு தம் சீடர்களிடம், "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று, எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியா முழுவதிலும், உலகின் கடைசி எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" எனக் கூறிச் சென்றார். எனவே கிறிஸ்துவின் சீடர்களின், கிறிஸ்தவர்களின், திருச்சபையின் வாழ்க்கையிலே சான்று பகரல், சாட்சியம் கூறுதல் ஒரு முக்கிய கடமையாக, பொறுப்பாக இருக்கின்றது.

புனித யாக்கோபு தமது திருமுகத்தில் கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்று பகருதல் இன்றியமையாதது எனக் கூறுகிறார். கிறிஸ்தவ நம்பிக்கை செயல்களிலே காட்டப்படவேண்டும். அல்லது அது உயிரற்றது, பயனற்றது எனக் கூறுகிறார்

> தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா? ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும், அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையான ஒன்றையும் கொடாமல், உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து, "நலமே சென்று வாழுங்கள். குளிர் காய்ந்து கொள்ளுங்கள். பசியாற்றிக் கொள்ளுங்கள்" என்பாரென்றால், அதனால் பயன் என்ன? அதைப்போலவே நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும் (யாக். 2:14-17).

**பரிசுத்த ஆவியே கிறிஸ்துவின் முதன்மையான சான்று, சாட்சி**

பரிசுத்த ஆவியின் முக்கியமான பணி கிறிஸ்துவுக்கு சான்று பகருதல் ஆகும். பரிசுத்த ஆவியார் தந்தையிடமிருந்தும், மகனிடமி-ருந்தும் வந்தவர். அவர் கடவுளோடு இருந்தவர். அவர் கடவுளாயு-மிருக்கிறார். எனவே தந்தையையும், மகனையும் நன்கு அறிந்தவர். தந்தையிடமிருந்து வந்த இயேசு, தந்தையின் நன்கு அறிந்திருந்த இயேசு, தந்தையின் முதன்மையான சாடசியாயிருப்பதுபோல, அவர்க-ளிடமிருந்து வந்த தூய ஆவியும் தந்தையினதும், இயேசுவினுடையவும் முதன்மையான சாட்சியாய் இருக்கிறார். இயேசு தம் இறுதி இரவுணவின்போது ஆற்றிய பிரியாவிடை உரையில் தாம் அனுப்பப் போகும் பரிசுத்த ஆவியின் பணிபற்றிப் பேசுகிறார்.

> தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் வரும்போது என்னைப்பற்றி சான்று பகருவார் (யோவா. 15:26)

> அவர் வந்து பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துகள் தவறானவை என எடுத்துக்காட்டுவார்... "உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவார்" அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார். இவ்வாறு அவர் என்னை மாட்சிப்படுத்துவார் (யோவா. 16:8-14)

"உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்". எனவே அவர் உண்மைக்குச் சான்று பகர வேண்டும். இயேசுவே உண்மை. "வழியும், உண்மையும், வாழ்வும் நானே" (யோவா. 14:6). எனவே இயேசுவை வெளிப்படுத்தும், இயேசுவுக்கு சான்று பகரும் தூய ஆவியார். அதுவே அவருடைய முக்கிய பணி.

புனித பேதுருவும் தலைமைச் சங்கத்தின் முன்னிலையில் உரையாற்றிய பொழுது பரிசுத்த ஆவியின் சான்று பகர்தல் பற்றிக் குறிப்பிடுகிறார்:

> நீங்கள் சிலுவையில் தொங்கவைத்துக் கொன்ற இயேசுவை

நம் மூதாதையரின் கடவுள் உயிர்த்தெழச் செய்தார். இஸ்ரயேல் மக்களுக்கு மனமாற்றத்தையும், பாவ மன்னிப்பையும் அளிப்பதற்காக கடவுள் அவரைத் தலைவராகவும், மீட்பராகவும் தமது வலப்பக்கத்துக்கு உயர்த்தினார். இவற்றுக்கு நாங்களும், கடவுள் தமக்குக் கீழ்படிவோருக்கு அருளும் தூய ஆவியும் சாட்சிகள் (தி.தூ.ப. 5:31-32).

இவற்றிலிருந்து பரிசுத்த ஆவியே கிறிஸ்துவைப்பற்றி சான்று கூறத் தகுந்தவரென்றும், அவரே கிறிஸ்துவின் முதன்மையான சாட்சியென்றும் காண்கிறோம். அதுமட்டுமல்ல, அந்த ஆவியானவரே கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குச் சான்று பகர அவர்களுக்கு ஆற்றல் அளித்து, பெரிதும் உதவி செய்கிறார்.

**கிறிஸ்தவர்களின் சான்று பகரலும் பரிசுத்த ஆவியும்**

கிறிஸ்துவின் சீடர்களின், கிறிஸ்தவர்களின், திருச்சபையின் வாழ்க்கையிலே உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சான்று பகரல், சாட்சியம் கூறுதல் ஒரு முக்கிய அம்சம், கடமையெனப் பார்த்தோம். பரிசுத்த ஆவியே கிறிஸ்துவின் முதன்மையான சாட்சியென்றும் பார்த்தோம். அத்துடன் கிறிஸ்துவின் சீடர்கள், கிறிஸ்தவர்கள் உயிர்த் கிறிஸ்து-வுக்குச் சான்று பகருவதில் பரிசுத்த ஆவி பெரும் பங்காற்றுகிறார். இயேசு விண்ணகம் செல்லுமுன் தம் சீடர்களை நோக்கி, "தூய ஆவி உங்களிடம் வரும்போது, நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று, எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும், உலகின் கடைசியெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.தூ.ப. 1:8) என்று கூறிச் சென்றார். அதாவது பரிசுத்த ஆவியின் வருகைக்குப் பின், அவர் அளிக்கும் கடவுளது வல்லமையுடனேயே சீடர்கள் இயேசுவுக்குச் சான்று பகரத் தொடங்குவார்கள். உண்மையில் பெந்தெகோஸ்து தினத்தன்று பரிசுத்த ஆவி சீடர்கள்மேல் வந்திறங்கிய உடனே, அவர்கள் கடவுளது வல்லமையைப் பெற்று, உயிர்த்த இயேசுவுக்குச் சான்று பகரத் தொடங்கினர். பேதுரு பதினொரு சீடர்களின் பெயரால், "கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள். அவர் கடவுளின் வலப்பக்கத்துக்கு உயர்த்தப்பட்டு, வாக்களிக்கப்பட்ட தூய ஆவியைத் தம் தந்தையிட-மிருந்து பெற்றுப் பொழிந்தருளினார். நீங்கள் காண்பதும், கேட்பதும்

இதுதான்" (தி.தூ.ப. 2:32-33) என்று கூறினார். பரிசுத்த ஆவியின் வருகைக்கு முன் படிப்பறிவில்லாத திருத்தூதர்கள் யூதர்களுக்குப் பயந்து, பூட்டிய அறையிலே ஒழிந்திருந்தார்கள். ஆனால் பரிசுத்த ஆவியைப் பெற்றபின் வெளியிலே வந்து, அங்கே கூடியிருந்த அத்தனை ஆயிரம் யூதர்கள் முன்னிலையில் துணிவுடன் இயேசுவைப் பற்றி போதிக்கத் தொடங்கினார்கள். பெந்தெகோஸ்து தினத்தன்று பரிசுத்த ஆவியின் வருகையே உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சான்று கூறுவதை இயலுமாக்கியது.

மேலும் உயிர்த்த இயேசுவுக்குச் சான்று பகர்ந்த பேதுருவையும் யோவானையும் தலைமைச் சங்கத்தினர் கைது செய்து, "இயேசுவைப் பற்றி எதுவும் பேசவோ, கற்பிக்கவோ கூடாது" எனக் கண்டித்தனர். அதற்கு பேதுருவும் யோவானும், "உங்களுக்குச் செவி சாய்ப்பதா? கடவுளுக்குச் செவி சாய்ப்பதா? அதில் கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது" என்றனர். அவர்கள் கடவுளின் வல்லமையால் தூண்டப்படுவதைக் காண்கிறோம். திருத்தூதர்கள் தாங்கள் கிறிஸ்து-வுக்குச் சான்று பகருதலை பரிசுத்த ஆவியுடன் தொடர்புபடுத்தியே பார்த்தார்கள். பரிசுத்த ஆவி எப்பொழுதும் கிறிஸ்துவை பறைசாற்று-வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார். ஒரு முறை உயிர்த்த யேசுவைப் பற்றிப் போதித்த பேதுருவையும் திருத்தூதரையும் தலைமைச் சங்கத்தினர் கைது செய்து சிறையிலடைத்தனர். அவர்-களைத் தலைமைச் சங்கத்தின் முன் கொணர்ந்து விசாரித்த பொழுது, பேதுருவும் திருத்தூதரும் மறுமொழியாக, "மனிதர்களுக்குக் கீழ்படி-வதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் சிலுவையில் தொங்க வைத்துக் கொன்ற இயேசுவை நம் மூதாதையரின் கடவுள் உயிர்த்தெழச் செய்தார். இஸ்ராயேல் மக்களுக்கு மனம் மாற்றத்தையும், பாவமன்னிப்பையும் அளிப்பதற்காகக் கடவுள் அவரைத் தலைவராகவும், மீட்பராகவும் தமது வலப் பக்கத்துக்கு உயர்த்தினார். இவற்றுக்கு நாங்களும், கடவுள் தமக்குக் கீழ்படிவோருக்கு அருளும் தூய ஆவியும் சாட்சிகள்" (தி.தூ.ப. 5:29-32) என்றனர்.

பின்னர் அவர்கள் கண்டிக்கப்பட்டு, விடுதலைபெற்று வந்தபோது,

நம்பிக்கையுடையோர் ஒன்றுகூடி அவர்களுக்காக ஆண்டரிடம் மன்றாடினர்: "ஆண்டவரே அவர்கள் அச்சுறுத்துவதைப் பாரும். உம் அடியார் முழுத் துணிவுடன் உமது வார்த்தையை எடுத்துக் கூற, அருள்தாரும். உமது தூய ஊழியர் இயேசுவின் பெயரால் உமது கையை நீட்டி, நோயுற்றோருக்கு நலமளியும். அடையாளங்களும் அருஞ் செயல்களும் நடைபெறச் செய்யும். இவ்வாறு மன்றாடியவுடன் அவர்கள் கூடியிருந்த இடம் அதிர்ந்தது. அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய் கடவுளின் வார்த்தைகளைத் துணிவுடன் எடுத்துக் கூறினர்" (தி.தூ.ப. 4:29-31) பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதின் இயல்பான விளைவாக சான்று பகரல் காணப்படுகிறது. பரிசுத்த ஆவியே சான்று பகர்வதற்குரிய துணிவை, தைரியத்தை, ஆற்றலை அவர்களுக்கு அளிக்கின்றார். தூய ஆவியால் நிறைந்திருந்த திருத்தொண்டர் ஸ்தேவான் தலைமைச் சங்கத்தினர் முன்னிலையில் உயிர்த்த கிறிஸ்துவுக்கு அளித்த சான்றிலும், பரிசுத்த ஆவியின் தாக்கத்தைக் காண்கிறோம். "அவரது ஞானத்தையும், தூய ஆவி வாயிலாக அவர் பேசிய வார்த்தைகளையும் எதிர்த்து நிற்க அவர்களால் இயலவில்லை" (தி.தூ.ப. 6:10).

எனவே பரிசுத்த ஆவியால் நிரப்பப் பெற்று சான்று பகராத ஒருத்தரும் இல்லை. ஏனெனில் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதே பரிசுத்த ஆவியின் பணி. பரிசுத்த ஆவியால் நிரப்பப் பெற்றவர்கள் உலகிற்கு ஒரு சவாலாய் இருப்பார்கள். ஏனெனில் அதுக்காகவே பரிசுத்த ஆவி அவர்களை வழிநடத்துகிறார். எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஆசிரியர், திருத்தூதர்களைப்பற்றிப் பேசும்போது, "கடவுள் அடையாளங்கள், அருஞ்செயல்கள், பல்வேறு வல்ல செயல்கள் மூலமாகவும், தம் திருவுளப்படி தூய ஆவியின் கொடைகளைப் பகிர்ந்தளிததன் மூலமாகவும் இதற்குச் சான்று பகர்ந்துள்ளார்" (எபி. 2:4) எனக் கூறுகிறார். நற்செய்தியை அறிவிப்பதற்காகவே அவர்களுக்கு பரிசுத்த ஆவியினால் இக் கொடைகள் வழங்கப்பட்டன. இதற்கு புனித பவுல் சான்று பகருகிறார்: "அரும் அடையாளங்கள், அருஞ்செயல்களின் வல்லமையாலும், கடவுளின் ஆவியின் வல்லமையாலும் செய்து முடித்தவற்றைத் தவிர வேறெதைப்பற்றியும் பேச நான் துணியமாட்டேன். இவ்வாறு, எருசலேம் தொடங்கி, இல்லிரிக்கம் மாநிலம் வரை எங்கும் சுற்றிக் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் பணியை

முடித்து விட்டேன்". பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டமையே நற்செய்தியைப் போதிக்க அவருக்கு ஆற்றலை அளித்தது. அவ்வாறே பரிசுத்த ஆவி இயேசுவை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல. இறைமக்களுக்கு தொடர்ந்து ஆற்றல் அளிக்கிறார். நாம் நம்பிக்கை வைத்திருக்கும் இயேசுவுக்குச் சான்று பகர எம்மைச் சக்தி பெறச் செய்கிறவர் அவரே. திருத்தூதர் ஆண்டவர் செய்தவற்றையும் போதித்த-வற்றையும் சரியாக விளங்கிக் கொண்டு, அதற்குச் சான்று பகர ஈடுபடுத்தியதும் அவரே. தமது வாழ்கையை ஆண்டவருக்காகத் தியாகம் செய்வதற்குத் தேவையான சக்தியை அவர்கள் பெற்றது தூய ஆவியினாலே என்பதை எமக்கு திருவிவிலியம் எடுத்துரைக்கிறது.

**பரிசுத்த ஆவியின் ஆற்றல்**

திருமுழுக்கு வழியாக கிறிஸ்து இயேசுவோடு இணைகின்றவர்-கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுகின்றார்கள். அவர்களுக்குத் தூய ஆவியார் தன் அற்றலை, அறிவை, சக்தியை, துணிவை அளிக்கின்றார். பரிசுத்த ஆவி அளிக்கும் ஆற்றலை புனித பவுல் தன் அனுபவத்தின் அடிப்படையில் சிறப்பாக விளக்குகின்றார்.

> கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு இனித் தண்டனைத் தீர்ப்பே கிடையாது. ஏனெனில், கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வு தரும் தூய ஆவியின் சட்டம் பாவம், சாவு என்பவற்றுக்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்துவிட்டது. ஊனியல்பின் காரணமாய் வலுவற்றிருந்த திருச்சட்டம் செய்ய முடியாத ஒன்றைக் கடவுள் செய்தார். அதாவது ஊனியல்பு கொண்ட மனிதரைப் போன்றவராய்த் தம் சொந்த மகனை அனுப்பி, மனிதரிடமுள்ள பாவத்துக்கு முடிவு கட்டினார். ஊனியல்-புக்கேற்ப நடவாமல், ஆவிக்குரிய இயல்புக்கேற்ப நடக்கும் நாம் திருச்சட்டத்தின் நெறிகளை நிறைவேற்றவேண்டும் என்று அவ்வாறு செய்தார். ஏனெனில் ஊனியல்புக்கேற்ப வாழ்வோரின் நாட்டமெல்லாம் அந்த இயல்புக்கு உரியவற்றின் மீதே இருக்கும். ஆனால் ஆவிக்குரிய இயல்புகேற்ப வாழ்வோரின் நாட்டம் ஆவிக்குரியவற்றின் மீதே இருக்கும். ஊனியல் மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது சாவே. ஆவிக்குரிய மனநிலை கொண்டிரப்போருக்கு வருவது வாழ்வும், அமைதியும் ஆகும். ஏனெனில் ஊனியல் மனநிலை

கடவுளுக்குப் பகையானது. அது கடவுளின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதில்லை. இருக்கவும் முடியாது. ஊனியல்புக்கு ஏற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது. ஆனால் கடவுளின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருந்தால், நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல், ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள்".கிறிஸ்து உங்களுள் இருந்தால் நீங்கள் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுவீர்கள். அதன் பயனாக தூய ஆவி உங்களுக்குள் உயிராய் இருக்கும். ஆவியால் இயக்கப் படுகிறவர்களே கடவுளின் மக்கள். நாம் மக்களாயின், உரிமைப் பேறு உடையவர்களாய் இருக்கிறோம். ஆம், நாம் கடவுளிடமிருந்து உரிமைப் பேறு பெற்றவர்கள். கிறிஸ்துவின் பங்காளிகள். அவருடைய துன்பங்களில் நாம் பங்கு பெற வேண்டும். அப்போதுதான் அவரோடு மாட்சியிலும் பங்கு பெறுவோம்." (உரோ. 8:1-17).

இங்கு எங்கள் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. திருமுழுக்கு வழியாக ஒரு புதிய வாழ்வு எம்மில் ஆரம்பமாகிறது. இவ்வளவு காலமும் பாவ நாட்டமுள்ள ஊனியல்புக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்ந்த நாங்கள், பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரப்பப்பெற்று, ஆவிக்குரிய வாழ்வு வாழ ஆரம்பிக்கிறோம். இப்புதிய வாழ்வுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமையின் தேவை உணர்த்தப்படுகிறது. தூய ஆவியார் பற்றிய சிறந்த அறிவோடு வாழ்வது இறைவனோடு ஆழமான உறவை உரிமையாக்குவதற்கு வழிசமைத்துக் கொடுக்கிறது. திருமுழுக்கு வழியாக இயேசுவோடு இணைகின்ற நாம் கடவுளின் குடும்பத்தினுள் நுழைகிறோம். எமது வாழ்க்கை இனிமேல் ஊனியல்பினால் அல்ல, மாறாக கிறிஸ்துவின் ஆவியால், அதாவது தூய ஆவியால் இயக்கப்படுகிறது. எனவே இறைவனோடு நாம் கட்டியெழுப்பும் ஆழமான நெருங்கிய உறவை தூய ஆவியின் வல்லமை வளர்த்து உறுதிப்படுத்துகிறது. திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களாக நாம் வாழும்போது, பரிசுத்த ஆவி நம்முள் நிலையாக இருந்து, புனிதப்படுத்தும் செயலை ஆற்றுகிறார். எம் கிறிஸ்தவ வாழ்வு ஆண்டவரின் மீட்பு மறைபொருளுக்கு சான்று பகரும் வாழ்வாக அமைவதற்கு தூய ஆவியிடமிருந்து நாம் பெறும் ஆற்றல் இன்றியமையாதது.

தூய ஆவியார் தம் கொடைகள், வரங்கள், கனிகள் வழியாக தம் ஆற்றலை எமக்கு அளிக்கின்றார்.

**பரிசுத்த ஆவியின் கொடைகள்**

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்தில் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் "இயேசுவே ஆண்டவர்" என்று சொல்ல முடியாது எனக் கூறி, தூய ஆவியார் அருளும் கொடைகளை எமக்கு எடுத்துக் கூறுகிறார்:

> அருள் கொடைகள் பலவகை உண்டு, ஆனால் தூய ஆவியார் ஒருவரே. திருத்தொண்டுகளும் பலவகை உண்டு. ஆனால் ஆண்டவர் ஒருவரே. செயல்பாடுகள் பலவகை உண்டு. ஆனால் கடவுள் ஒருவரே. அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயல் படுத்துபவர். பொது நன்மைக்-காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது. தூய ஆவியார் ஒருவருக்கு ஞானம் நிறைந்த சொல்வளத்தை அருளுகிறார். இன்னொருவருக்கோ அதே ஆவியானவர் அறிவுசெறிந்த சொல்வளத்தை அளிக்கிறார். அதே ஆவியார் வேறொருவருக்கு நம்பிக்கை அருளுகிறார். அந்த ஒரே ஆவியார் மற்றொருவருக்குப் பிணிதீர்க்கும் அருள் கொடையையும் அளிக்கிறார். தூய ஆவியார் ஒருவருக்கு வல்ல செயல் செய்யும் ஆற்றலையும், இன்னொருவருக்கு இறைவாக்குரைக்கும் ஆற்றலையும், வோறொருவருக்கு ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றலையும், மற்றொருவருக்குப் பல்வகைப் பரவசப் பேச்சு பேசும் ஆற்றலையும், பிறிதொருவருக்கு அப்பேச்சை விளக்கும் ஆற்றலையும் அருளுகிறார். அந்த ஒரே ஆவியாரே இவற்றையெல்லாம் செயல்படுத்துகிறார். அவரே தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் இவற்றைப் பகிர்ந்தளிக்கிறார் (1 கொரி. 1:4-11).

**தேர்ச்சி 10.0** : நவீன சமூக போராட்டங்களின் மத்தியில் மனித நேயத்துடன் செயற்படுவர்

**தேர்ச்சி மட்டம் 10.1**: மானிட சமூக வாழ்வு பற்றிய கிறிஸ்தவ சிந்தனையை விளக்குவர்

"தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன். தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" (யோவா. 20:21-22). "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவு வரை எந்நாளும் உங்களுடன் இருக்கிறேன்" (மத். 28:19-20). இயேசுவின் இவ் வார்த்தைகளே திருச்சபைக்கு உருக்கொடுத்தது. திருச்சபையை உருவாக்கியது. எனவே யேசுக் கிறிஸ்துவின் தொடர்ச்சியே திருச்சபை. அவரது பணியே திருச்சபையின் பணி. இறையரசை அறிவித்து, அதை அமைத்து, அதில் மக்களைக் கொண்டு சேர்ப்பதற்காகவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இறையரசில் மக்கள் நுழைவதற்கு அவர்கள் பயன்படுத்தும் ஏணிப்படியே அவர்களின் இவ்வுலக வாழ்வு. எனவே கிறிஸ்துவின் இடமாக இருந்து, அவரது பணியைத் தொடர்ந்தாற்றும் திருச்சபை, மக்களை அவர்களின் இவ் உலக வாழ்வில் நல்வழிப்படுத்தி, இறையரசில் கொண்டு சேர்க்க வேண்டும். மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டுள்ள திருச்சபை, அவர்களின் நலம், அன்றாட வாழ்க்கைத் தேவைகள், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவர்கள் ஏக்கங்கள், கவலைகள் பற்றி கரிசனையின்றி இருக்க முடியாது. மக்களின் பிரச்சினைகள் அனைத்தும் திருச்சபையின் பிரச்சினையே. ஏனெனில் மக்களால் ஆனதே திருச்சபை. எனவே அவற்றில் பங்கெடுப்பதும், அத்தகையச் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு வேண்டிய அறிவுரை, ஆலோசனை வழங்குவதும், தன்னால் இயன்ற முறையில் உதவுவதும் திருச்சபையின் கடமையும், உரிமையும் ஆகும். அதன் விளைவே திருச்சபையின் சமூகப் படிப்பினைகள், கோட்பாடுகள் ஆகும்.

திருச்சபையின் சமூகப் படிப்பினைகள், கோட்பாடுகள் அனைத்தும் இறை வார்த்தையை, குறிப்பாக கிறிஸ்துவின் படிப்பினைகளையே அதன் அடித் தளமாகக் கொண்டுள்ளன. திருச்சபை கிறிஸ்துவின் படிப்பினைகளை இன்றைய காலத்துக்கும், தேவைகளுக்கும் ஏற்ப தழுவி அமைத்து எமக்கு அளிக்கிறது. அவற்றை நாம் பின்வரும் பகுதிகளில் காண்போம்.

## 10.1.1. மனித மாண்பு

உலகிலுள்ள அனைத்துப் படைப்புகளுக்கும் பொருட்களுக்கும் மனிதனே மையமாக, சிகரமாக இருக்கிறான் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். மனிதனின் இருப்பு, அவனின் முன்னேற்றம், சமூக செயற்பாடு போன்றவற்றை அவதானிக்கும்போது, உலகிலுள்ள அனைத்து மிருகங்களிலும், உயிரினங்களிலும் பார்க்க அவனே கூடிய அறிவு, ஞானம், கூர்மையான சிந்திக்கும் ஆற்றல், சிறந்த தொடர்பாடலை நிறைவாகக் கொண்டிருக்கும் உயர்ந்த உயிரினம் என்பது தெளிவாகிறது. இவ்வுலகில் ஒரு மனிதனாகப் பிறப்பதன் காரணமாக, ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாகவே விசேட மாண்பும், உயர்ந்த தன்மையும் உரித்தாகிறது.

**திருவிவிலியத்தில் மனிதனின் மாண்பு**

திருவிவிலியம் மன்தனின் மிக உயர்ந்த மாண்பை, தன்மையை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதைக் காண்கிறோம். இதுவே மனிதத் தன்மையின் மிக உயர்ந்த மாண்புபற்றிய கிறிஸ்தவ கண்ணோட்டத்துக்கும், திருச்சபையின் படிப்பினைகளுக்கும் அடிப்படையாக உள்ளது. விவிலியத்தின் முதல் நூலாகிய தொடக்க நூலின் முதல் அதிகாரத்திலேயே மனிதனின் மாண்பு வலியுறுத்தப்படுகிறது. கடவுள் "மானிடரை நம் உருவிலும், சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால் நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" (ஆதி. 1: 26) எனக் கூறிப் படைத்தாரெனப் படிக்கிறோம். மீண்டும் "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்" (தொ.நூ. 1:27) எனக் கூறுகிறது. உலகம் அனைத்தினதும் படைப்பைப்பற்றிக் கூறும் முதலாம் அதிகாரத்தில்,

படைப்புக்கள் அனைத்தையும் ஏறு வரிசையில படைத்த கடவுள், அவற்றின் சிகரமாக மானிடரை இறுதியாகப் படைப்பதைக் காண்கிறோம். எல்லா ஆயத்தங்களையும், அலங்காரங்களையும் செய்து முடித்துவிட்டு, படைப்புகளின் சிகரமாகிய மனிதனைக் கொணர்ந்து நிறுத்துகிறார். மேலும் எல்லாவற்றையும் "உண்டாகட்டும்", "தோன்றட்டும்" என்று ஒரு வார்த்தையால் கட்டளையிட்டுப் படைத்த கடவுள், மானிடரைப் படைக்குமுன், கூட்டம் கூடி. ஆலோசனை செய்து, தீர்மானம் எடுத்து, "நாம் உண்டாக்குவோம்" எனத் தன்மை பன்மையில் கூறிப் படைத்தாரென வாசிக்கிறோம். இவ்வாறு கூறுவதன் வழியாக விவிலிய ஆசிரியர் மானிட படைப்பின் முக்கியத்துவத்தை, மகத்துவத்தை, தனித்துவத்தை எடுத்துக் காட்டுகிறார். ஏனைய அனைத்துப் படைப்புகளையும் "பூமி பிறப்பிப்பதாக", "நிலம் தோற்றுவிப்பதாக" எனக் கூறிப் படைத்த கடவுள், மானிடரை "நாம் உண்டாக்குவோம்" எனக் கூறிப் படைத்ததாகக் காட்டி, ஆசிரியர் ஏனைய படைப்புகளெல்லாம் கீழிருந்து பிறக்க, மானிடரோ மேலிருந்து பிறந்ததாகக் காட்டி, மானிடர் கடவுளின் உன்னத படைப்பு என்பதை உணர்த்துகிறார். ஏனைய படைப்புகளெல்லாம் வெவ்வேறு இனங்களாகப் படைக்கப்பட, மானிடரோ ஒரு இனமாகப் படைக்கப்பட்டனரெனக் கூறப்படுகிறது. இதன் வழியாக ஆசிரியர், கடவுளின் திட்டப்படி மானிடருள் சாதி, இனம், குலம், கோத்திரம், மதம் என்ற வேறுபாடுகள் எதுவும் இல்லை. மனித மாண்பைப் பொறுத்த வரையில் அவர்கள் அனைவரும் சமமென்பதைக் காட்டுகிறார். மனிதர்கள் அனைவரும் மாண்புள்ளவர்கள்.

மேலும் மானிடர் "கடவுள் சாயல்" ஆகப் படைக்கப்பட்டவர்களெனக் கூறப்படுகிறது. ஒருவரின் சாயல் என்பது அது அவரைப் பற்றிய பிரமாணிக்கமான கருத்துக்களை வெளிப்படுத்துகின்றதெனப் பொருள்படும். அதாவது மானிடரைக் காண்கின்றவர்கள் கடவுளைக் காண்கின்றனர். மானிடரை அறிகின்றவர்கள் கடவுளை அறிய வருகின்றனர். மானிடர் கடவுளின் வெளிப்பாடாக இருக்கின்றனர். அத்துடன் கடவுளுக்கும் மானிடருக்குமிடையே விசேட, நெருங்கிய உறவு, தொடர்பு உள்ளது. கடவுளும் மானிடரும் ஒருவரோடு ஒருவர் உறவாட, உரையாட, உறவுகொள்ள முடியும். இத் தொடர்பின் நிமித்தம் மானிடர் கடவுளின் பிரதிநிதிகளாகவிருந்து, அனைத்துப் படைப்பு-

களையும் ஆண்டு நடத்துவர். அவர்கள் படைப்புக்கள் அனைத்தினதும் தலைவர்களாக, அரசர்களாக, சிகரமாக இருக்கிறார்கள்.

தொடக்க நூலின் இரண்டாம் அதிகாரத்தில் காணப்படும் படைப்புபற்றிய இரண்டாவது கதையிலும் (தொ.நூ. 2:4-25) மனிதனின் மாண்பு வலியுறுத்தப்படுகிறது. இங்கு படைப்பு இறங்கு வரிசையில் இடம்பெறுகிறது. முதலில் மனிதன் படைக்கப்பட்டு, அவனுக்குப் பணிபுரிய ஏனைய அனைத்துப் படைப்புகளும் படைக்கப்படுகின்றன. மனிதனின் உடல் தரையின் தூசியிலிருந்து படைக்கப்பட்டாலும், இறைவனின் தனிப்பட்ட செயலினால் அவன் உயிர் பெறுகிறான். "ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிருள்ளவன் ஆனான்" (தொ.நூ. 2:7). இது மனிதனின் மாண்பை, மேன்மையைக் காட்டுகின்றது.

திருப் பாடல் நூலின் ஆசிரியர் மனிதரின் மாண்பை பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்:

> மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனிதப் பிறவிகளை நீர் ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம்? ஆயினும், அவர்களைக் கடவுளாகிய உமக்குச் சற்றே சிறியவர் ஆக்கியுள்ளீர். மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்படுத்தியுள்ளீர் (தி.பா. 8:4-6).

புதிய ஏற்பாட்டில், புனித பவுல், மனிதனுக்குள் இறைவனின் ஆவியார் பிரசன்னமாக இருப்பதால், மனித உடல் இறைவனின் ஆலயமாகும். மனிதரை மிக உயரிய நிலையில் வைத்த இறைவன் தனது மக்களுடன் வாழ்ந்தார். எனவே மனிதன் மாண்புள்ளவன் என்கிறார்.

> "நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் தெரியாதா? ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால், கடவுள் அவரை அழித்து விடுவார். ஏனெனில் கடவுளின் கோவில் தூயது: நீங்களே அக்கோவில்" (1 கொரி. 3:16-17)

> உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார் (1 கொரி. 6:19-20).

> வாழும் கடவுளின் கோவில் நாமே. "என் உறைவிடத்தை அவர்கள் நடுவில் நிறுவுவேன். அவர்கள் நடுவே நான் உலவுவேன். நானே அவர்கள் கடவுள்! அவர்கள் என் மக்கள்! என்று கடவுளே சொல்லியிருக்கிறார்" (2 கொரி. 6:16).

திருத்தூதரான புனித யோவான் கீழ்படியாமை எனும் பாவத்தினால் இறையருளிலிருந்து விலகி, பாவத்தில் விழுந்த பலவீனமான மனிதனுக்கு மீட்பைக் கொடுக்க இறைவன் மனுவுரு எடுத்து மனித உடலோடு இவ்வுலகிற்கு வருகை தந்தார். இந்த இறைமகன் மனுவுரு எடுத்தலின் மறைபொருள் வழியாக மனிதத் தன்மையை மேலும் மிக உயரிய நிலையில் வைத்த இறைவன், தனது மக்களுடன் வாழ்ந்தாரெனக் கூறுகிறார். இறைவனின் கணிப்பில் மனிதன் எத்துணை மாண்புள்ளவன், உன்னதமானவன் என்பது தெளிவாகத் தென்படுகிறது.

> "வாக்கு மனிதர் ஆனார். நம்மிடைய குடிகொண்டார்" (யோவா. 1:14). "நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார்". நம்மீது அன்பு கொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார்" (1 யோவா. 4:9-10).

புனித பேதுரு எங்களை மீட்பதற்கு இறைவன் கொடுத்த விலை தம் மகனுடைய விலைமதிப்பில்லாத இரத்தமாகும் எனக் கூறி, கடவுள் எவ்வளவு தூரம் மனிதனை மதிக்கிறாரெனக் கூறுகிறார். மனிதனின் பெறுமதியைக் காட்டுகிறார்.

> "உங்கள் மூதாதையரிடமிருந்து வழிவழியாய் வந்த வீணான நடததையினின்று உங்களை விடுவிக்கக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது பொன்னும் வெள்ளியும் போன்று அழிவுக்குட்பட்டது அல்ல. மாறாக, மாசு மறுவற்ற ஆட்டுக் குட்டியைப் போன்ற கிறிஸ்துவின் உயர்மதிப்புள்ள இரத்தமாகும்" (1 பேது. 1:18).

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஆசிரியர், இறைமகனாகிய இயேசு நலிவான, பலிவினமான, பாவியான மனிதனுக்கு தனது திரு இரத்தத்தினால் மீட்பைப் பெற்றுத் தந்து, அவனை தூய நிலையில் வைத்தாரெனக் கூறி, இயேசு மனிதனை எவ்வளவு மதிக்கிறாரெனக் காட்டுகிறார்.

> அவர் பலியாகப் படைத்த இரத்தம் வெள்ளாட்டுக் கடாக்கள், கன்றுக் குட்டிகள் ஆகியவற்றின் இரத்தம் அல்ல. அவரது சொந்த இரத்தமே. அவர் ஒரே ஒரு முறை தூயகத்துக்குள் சென்று, எக்காலத்துக்குமென அதைப் படைத்து, நமக்கு என்றுமுள்ள மீட்பு கிடைக்கும்படி செய்தார் (எபி. 9:12).

எனவே திருவிவிலியத்தின் சிந்தனைக்கேற்ப மனிதனின் மாண்பு. உயரிய தன்மையானது ஏனைய படைப்புகளின் மத்தியில் முதன்மை-யான இடத்தை வகிப்பது இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்ட மாபெரும் கொடையென்பது மிகத் தெளிவாகிறது.

**திருச்சபையின் படிப்பினைகளில் மனிதனின் மாண்பு**

திருவிவிலியத்தில் காணப்படும் சிந்தனைகளின்படி படைப்பின் சிகரமாக, கடவுளின் பிரதிநிதியாக, கடவுள் சாயலில் படைக்கப்பட்ட மனிதன் உன்னதமானவன், மேன்மையானவன், மாண்புள்ளவன் எனப் பார்த்தோம். திருச்சபையானது மனிதன் மாண்புள்ளவனாகக் கருதப்படுவதற்கு வேறு சில காரணங்களையும் எமக்குத் தருகிறது. அவற்றை நாம் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் வெளியிட்ட "இன்றைய உலகில் திருச்சபை" என்ற கொள்கைத் திரட்டில் காண்கிறோம். அதன் முதல் அதிகாரத்திலேயே (இல.12-18) மனிதனின் மாண்பு, மனிதத் தன்மையின் உயர்ந்த நிலை பற்றிக் கவனம் செலுத்தப்படுகிறது. மனிதன் உடல், ஆன்மா, அறிவு, மனச்சான்று, சுதந்திரம் போன்ற பல அம்சங்களை தன்னகத்துள் ஒருங்கே கொண்டவன். இறைவன் மனிதனைப் படைத்தபொழுது அவனுக்கு அறிவையும், சுதந்திரத்தையும், அழியா ஆன்மாவையும், மனச்சான்-றையும் கொடையாகக் கொடுத்துள்ளார். வேறு படைப்புகளுக்குக் கொடுக்கப்படாத மனிதனுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட இவை அனைத்தும் அவனுடைய மாண்புக்கு மெருகு ஊட்டி, அவனது

மேன்மையை, பெறுமதியை இன்னும் உயர்த்துகின்றன என்பது இங்கு காணப்படும் முக்கிய கருத்தாகும்.

**மனித உடல்**

மனிதன் கொண்டிருக்கும் அவனது உடல் அவனுடைய மாண்புக்கு ஒரு காரணமாக அமைகிறது. பாவத்தின் விளைவாக மனிதனின் உடலில் சில தீய உணர்வுகள் தென்பட்டாலும், அவனது உடல் தன்னிலே நல்லது. அது அவனுக்கு மேன்மை அளிக்கின்றது. ஏனெனில் அவன் தன் உடலின் வழியாகவே அனைத்துப் படைப்புகளையும் தன்னகத்தே உள்ளடக்கிக் கொண்டிருக்கிறான். அவன் தன்னிலே ஒரு பிண்டமாக, ஒரு சிறிய உலகமாக இருக்கின்றான். அவனிலே சடப் பொருளின் தன்மை, தாவரங்களின் தன்மை, விலங்குகளின் தன்மை அனைத்தும் காணப்படுகின்றன. மேலும் மனித உடலே உலகப் பொருட்கள் அனைத்திற்கும் அர்த்தத்தை, பொருளை, மதிப்பைக் கொடுக்கின்றது. உதாரணமாக, ஒரு மலரின் அழகிற்கு பெரும் மதிப்பைக் கொடுப்பது அவற்றைப் பார்த்து ரசிக்கும் மனித கண்களே. அதுபோல மலரின் நறுமணத்தை நுகர்வதிற்கு மனித நாசி இல்லாவிடில் அதற்கு மதிப்பென்ன? அதேபோல பழங்களின் உருசிக்கு மனிதனின் நாவும், சங்கீத இசைக்கு மனித செவிகளும் மதிப்பைக் கொடுக்கின்றன.

மேலும் மனிதனின் வாய் வழியாகவே படைப்புக்கள் அனைத்தும் கடவுளைப் போற்றிப் பாடுகின்றன. அதுமட்டுமல்ல, மனித உடல் கடவுளால் படைக்கப்பட்டது. கடவுள் அது நல்லதெனக் கண்டார். அந்த உடல் பரிசுத்த ஆவியின் ஆலயமாகவும் திகழுகின்றது. திருமுழுக்கு என்ற அருள் அடையாளத்தின் வழியாக பரிசுத்த ஆவி அவனிடத்தில் இறங்கி வந்து, அவனது உடலில் வாழுகின்றார். மனிதனின் அந்த உடல் இறுதி நாளில் உயிர்பெற்று மாட்சி பெறவுள்ளது. எனவே மனித உடல் மதிப்புள்ளது. அதை மனிதன் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். அத்தகைய மதிப்புள்ள உடலைக் கொண்டிருக்கும் மனிதன் மாண்புள்ளவனே.

**மனித ஆன்மா**

மனிதன் உடலோடு மட்டுமல்ல, அழியாத ஆன்மாவோடும்

படைக்கப்பட்டுள்ளான். இந்த ஆன்மாதான் மனிதனைச் சடப் பொருட்களுக்கு மேம்பட்டவனாக உயர்த்துகின்றது. இங்கு மனிதத் தன்மையில் இறைவனுடைய பிரதிபலிப்பு நன்றாகத் தெரிகிறது. "அப்போது கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, அவன் உயிருள்ளவன் ஆனான்" (தொ.நூ. 2:7). இந்த ஆன்மாவில்தான் கடவுள் மனிதனுக்காகக் காத்திருக்கிறார். இங்குதான் மனிதனும் கடவுளின் திட்டத்தில் தன்னுடைய இடத்தை அறியவருகிறான். இந்த அழிவுறாத ஆன்மா இருப்பதால் மனிதன் இயற்கை, சமூகச் சூழ்நிலைகளால் அதிகம் அலைக்கழிக்கப் படுவதில்லை. தன்னை எவரும் முற்றாக, எக்காலத்துக்கும் அழிக்க முடியாதென்ற துணிவுடன் இருக்கிறான். இந்த ஆன்மா மரணத்தின் பின் கடவுளோடு இணைவது இறைவனின் திட்டமாகும். அதுவே மனிதனின் நிலையான மகிழ்ச்சியும் ஆகும். "என் நெஞ்சம் உயிருள்ள இறைவன்மீது தாகம் கொண்டுள்ளது. எப்பொழுது நான் கடவுள் முன்னிலையில் வந்து நிற்கப் போகிறேன்" (தி.பா. 42:2). புனித அகுஸ்தினார் கூறுவார். "இறைவா! என்னை உமக்காகவே படைத்தீர். என் ஆன்மா உம்மை அடைந்தாலன்றி இளைப்பாற்றி அடையமாட்டாது". இத்தகைய இயல்புள்ள ஓர் ஆன்மாவை கொண்டுள்ள மனிதன் மாண்புள்ளவன்.

**மனித புத்தி, ஞானம்**

மனிதன் புத்தி, அறிவு உள்ளவன். அப் புத்தியும் அவனது மாண்புக்கு மெருகு ஊட்டுகிறது. மனித அறிவும், ஞானமும் அனைத்து ஞானத்தின் ஊற்றாகியவரும், முழுமையானவருமான இறைவனிட-மிருந்தே உருவாகின்றன. படைப்புகளுக்கு இல்லாததும், மனிதன் பெற்றுள்ளதுமான இந்த அறிவு இறைசாயலின் பண்பாகும். ஏனெனில் மனிதன் தன் புத்தியால் இறைவனின் அளவிலா அறிவில், ஞானத்தில் பங்கு கொள்கிறான். இப் புத்தியைக் கொண்டுதான் தான் ஏனைய படைப்புக்கள் அனைத்திற்கும் மேலானவன் என்பதை உணர்ந்து கொள்கிறான். இப் புத்தியைப் பயன்படுத்தியே மனிதன் புதிய படைப்புகளை உருவாக்குகிறான். இறைவனின் படைக்கும் செயலிலும் பங்கெடுக்கிறான். அறிவிலும், நுட்பக் கலையிலும் முன்னேறி, படைப்பனைத்தையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து, அவற்றை

ஆட்சி செய்வதிலும் மிக முன்னேறுகிறான். அதன் வழியாகவே அவன் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட உண்மைகளை அறிய வருகிறான்.

மேலும் பரிசுத்த ஆவியானவரின் கொடையாகிய ஞானம் அவனது மனித அறிவை நிறைவுசெய்கிறது. உண்மையையும், நன்மையையும் விரும்பித் தேட அவனைத் தூண்டுகிறது. மேலும் காணக்கூடியவற்றினின்று காணக்கூடாதவற்றிற்கு அவனை இட்டுச் செல்கிறது. உண்மையானவரும், நன்மையானவருமாகிய இறைவனைத் தேடிச் செல்ல உதவுகிறது. மனிதனது புதிய கண்டுபிடிப்புகளை இன்னும் மனிதத் தன்மை வாய்ந்தவையாக ஆக்குகின்றது. இத்தகைய அறிவு, புத்தி, ஞானம் என்பன மனித மாண்பை அதிகரிக்கின்றன.

**மனித ஒழுக்க மனச்சான்று**

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது ஆழ்மனதில் ஒரு குரல் ஒன்று இருக்கிறது. மனிதன் தன் உள்ளத்தில் நல்லதை விரும்பவும், தீயதைத் தவிர்க்கவும் அவனை வலியுறுத்தும் கடவுளின் சட்டத்தைக் கொண்டிருக்கிறான். அவன் தன் உள்ளத்தில் கேட்கும் அவ் இறைவனின் குரலொலியையே "ஒழுக்க மனச்சான்று" என அழைக்கின்றோம். அது மனிதனிடமுள்ள இறைவனின் சாயலின் அடையாளம். அந்தக் குரல் அவன் செய்யும் செயலை மதிப்பீடு செய்ய உதவுகிறது. மனிதன் கடவுள் தன்னிடம் எதை எதிர்பார்க்கிறார் என்பதை தனது மனச்சான்று வழியாக அடையாளம் காண்கிறான். மனிதன் மனச்சான்றின் குரலுக்குச் செவிசாய்த்து, நன்மையையும் உண்மையையும் விளங்கிக்கொண்டு, இறைவனை நோக்கிப் பயணம் செய்வது இறைவனது திட்டமாகும். அம் மனச்சான்றுக்கு அமைந்து ஒழுகுவதே மனிதனின் மாண்பாகும். அதற்கு அமையவே அவன் இறுதிநாளில் தீர்ப்பிடப்படுவான்.

மனிதனின் ஒழுக்க மனச்சான்று அவனின் மறைவான மையமும், புனிதமான இடமும் ஆகும். ஏனெனில் மனச்சான்று மனிதனுள் ஒரு கட்டுப்பாட்டறைபோல் நடுநிலையமாகச் செயற்பட்டு, மனிதனின் வாழ்வைக் கொண்டு நடத்துகிறது. அங்கேயே மனிதன் கடவுளுடன் தனித்து இருக்கிறான். அங்கேயே கடவுள் மனிதனுடன் தனிமையில் பேசுகிறார். மனிதனும் கடவுளின் குரலைக் கேட்கிறான். அம் மனச்சான்றுதான் மனிதனுக்கு கடவுளின் அன்புக் கட்டளையை வெளிப்படுத்துகிறது. அந்த மனச் சான்றுதான் உண்மையைத் தேடும்

மனிதரை, தனி, பொது, சமூக வாழ்வுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உழைக்கும் மக்களை, ஒன்று சேர்க்கிறது. மனிதரை ஒழுங்கு விதிகளுக்கு அமைந்து நடக்கச் செய்கிறது. மனிதன் அம் மனச்சான்றைப் பாதுகாத்து, வளர்க்கக் கடமைப்பட்டுள்ளான் அத்தகைய மனச்சான்றை கொண்டுள்ள மனிதன் மாண்புள்ளவன்.

**மனித சுதந்திரம்**

கடவுள் மனிதனைப் படைத்த பொழுது, அவர் அவனுக்குக் கொடுத்த முக்கிய கொடைகளுள் ஒன்று "நன்மை தீமை அறியும் மரம்" என உருவகிக்கப்படும் மனித சுதந்திரமேயாகும். எனவே மனிதன் இயல்பாகவே சுதந்திரம் உள்ளவன். இன்று மக்கள் இறைவனின் கொடையாகிய அச் சுதந்திரத்தை மிகவும் மதித்து, அதை அடைய, அதைக் கொண்டிருக்க முயற்சிக்கின்றனர். மனித சுதந்திரம் என்பது மனிதன் விரும்பும் எதையும், தீமையைத் தானும், செய்யும் ஓர் கட்டுப்பாடற்ற உரிமையல்ல. அது மிருக சுதந்திரமாகும். ஆனால் உண்மையான மனித சுதந்திரம் நல்லதை அறிந்து, தானாகவே அதை விரும்பித் தேடுகின்றது, தீயதை அறிந்து, தானாகவே அதை வெறுத்துத் தள்ளுகின்றது. இந்தச் சுதந்திரம்தான் நமது மனிதத் தனமைக்கு அதன் அழகையும், மாண்பையும் அளிக்கிறது. மனிதர் தம் மாண்பிலிருந்து பிரிக்க முடியாத முறையில் சுதந்திரம் இணைந்திருப்பதால், ஒவ்வொருவருக்கும் அதைப் பயன்படுத்தம் உரிமை உண்டு. எனவே இவ்வுரிமை எப்போதும், சிறப்பாக அறநெறி, சமயம் சார்ந்தவற்றில் மதிக்கப்பட் வேண்டும். "இறைவனே தொடக்கத்தில் மனிதரை உண்டாக்கினார். தங்கள் விருப்புரிமையின்படி செயல்பட அவர்களை விட்டுவிட்டார். நீ விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடி. பற்றுதியுடன் நடப்பது உனது விருப்பத்தைப் பொறுத்தது. உனக்கு முன் நீரையும், நெருப்பையும் அவர் வைத்துள்ளார். உன் கையை நீட்டி உனக்கு விருப்பமானதை எடுத்துக் கொள். மனிதர் முன் வாழ்வும் சாவும் வைக்கப்பட்டுள்ளன. எதை அவர்கள் விரும்புகிறார்களோ அதுவே அவர்களுக்குக் கொடுக்கப்படும்" (சீரா. 15:14-17).

உண்மையான மனித சுதந்திரம் தானாக தன்னைப் படைத்த அந் நல்ல கடவுளைத் தேடுவதிலும், அவருக்குப் பிரமாணிக்கமாக இருப்பதிலும், அதன் விளைவாக தன் நிறைவை எய்துவதிலும்

அடங்கியுள்ளது. எனவே உண்மையான மனித சுதந்திரம் மனிதன் தன்னிலே நல்லதையே என்றும் விரும்பும் கடவுளின் சாயலைக் கொண்டிருக்கிறான் என்பதற்குச் சிறந்த அத்தாட்சியாகும். அது மனிதன் கடவுளை ஒத்தவனாக இருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. மனிதன் தீய உணர்வுகளின் அடிமைத்தனத்தினின்று தன்னை விடுவித்து, உள்ளிருந்து இயக்கப்பட்டு, தானாக உணர்வோடு தன் கதியாகிய கடவுளையும், அவரை அடையும் வழிகளையும் தேடிப் பெற்றுக் கொள்ளும்போது மனித சுதந்திரம் அவனை மாண்புள்ளவன் ஆக்குகின்றது. எனவேதான் உண்மையான மனித சுதந்திரத்தை கொண்டுள்ள மனிதன் மாண்புள்ளவன்.

மனித சுதந்திரம் பாவத்தினால் சீர்குலைந்திருப்பதால், கடவுளின் அருள் கொண்டு அதை ஒழுங்கு செய்ய வேண்டும். அதனால் மனிதன் தன் வாழ்வின் முடிவில் கடவுளிடம் தன் செயல்களுக்குக் கணக்குக் கொடுக்க முடியும்.

**மனித சாவு**

பாவத்தின் விளைவு, தண்டனை சாவு ஆகும். பாவத்தினால் பாதிக்கப்பட்ட மனிதன் ஒருநாள் சாகவேண்டும் என்பது இயற்கை நியதி. இச் சாவு மனிதனுக்குத் தவிர்க்க முடியாத பயங்கரப் பிரச்சினையாக இருந்து வந்திருக்கிறது. நிரந்தரமாக அழிந்துவிடுவோம் என்ற பயம் மனிதனை வாட்டி வதைக்கிறது, ஏனெனில் தனது ஆளுமை முற்றாக, முழுமையாக அழிவதை மனிதன் வெறுக்கிறான். மனிதன் சாகவேண்டியவனாக இருந்தாலும், அவன் ஒரு போதும் முற்றாக அழியப் போவதில்லை, ஏனெனில் அவன் என்றும் அழியா ஆன்மாவொன்றைத் தன்னுள் கொண்டுள்ளான். அவன் தன்னுள் நித்திய வித்தொன்றைப் பெற்றிருக்கிற படியால், அவன் ஒருபோதும் முற்றாக அழியமாட்டான் எனத் திருச்சபை போதிக்கின்றது.

கடவுள் இவ்வுலக கஷ்ட துன்பங்களுக்கு அப்பால் உள்ள ஒரு பேரின்ப வாழ்விற்காகவே, தமது நிலையான வாழ்விலே பங்குபெறவே மனிதனைப் படைத்துள்ளார். பாவத்தினால் மனிதன் சாவுக்கு ஆளானாலும், பாவத்தினால் கடவுளின் திட்டத்தை அழிக்கவோ, மாற்றவோ முடியாது, கிறிஸ்து சாவை வென்று, வெற்றி வீரனாக உயிர்த்தெழுந்து, மனிதனையும் சாவினின்று விடுவித்தார். பாவத்தின்

தண்டனையாகிய சாவை இப்போது இயேசு நிலை வாழ்வின், நித்திய மகிமையின் வாயிலாக மாற்றியுள்ளார். ஆகவே மனிதன், கிறிஸ்து வழியாக, இறந்த தன் உற்றார் உறவினருடன் மீண்டும் இணையும் வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கின்றது. இவ்வாறு பாவத்தின் தண்டனையாகிய சாவும் இப்பொழுது ஒருவகையில் மனிதனின் மாண்புக்குக் காரணமாகின்றது.

**இறைவனோடு இணைந்து வாழ இறைவன் விடும் அழைப்பு**

மனிதன் தன்னுள் கொண்டிருக்கும் இறைவனின் சாயல், படைப்புக்கள் அனைத்தையும் ஆளும் உரிமை, உடல், ஆன்மா, புத்தி, மனச்சான்று, சுதந்திரம், ஏன் அவன் சாவு தானும் அவனது மாண்புக்கு, மேன்மைக்கு காரணங்களாகுகின்றன எனப் பார்த்தோம். எனினும் இறைவன் தம்மோடு இணைந்து வாழ மனிதனுக்கு விடும் அழைப்பே அவனது மாண்புக்கு அடிப்படைக் காரணமாயிருக்கிறது. மனிதன் கடவுளுடன் உரையாட, உறவாட, அவர் வாழ்வில் பங்குகொள்ள, அவரோடு ஒன்றித்திருக்க அழைக்கப் பட்டுள்ளான். மனிதனைப் படைக்க கடவுள் எண்ணின அந்தக் கணமுதலே முடிவில்லா மகிழ்சிக்கு மனிதர் முன்குறிக்கப்பட்டுள்ளனர். இறை சாயலாகவும், பாவனையாகவும் படைக்கப்பட்ட மனிதன் ஒருவனே இறைவனுடன் இணைந்த வாழக் கூடியவன். எனவேதான் இறைவனோடு இணைந்து வாழ கடவுள் மனிதனுக்கு விடும் இவ் அழைப்பே அவனது மாண்புக்கு, ஏனைய காரணங்களை விட, முக்கிய காரணமாக இருக்கின்றது.

**கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலில் மனிதனின் மாண்பு**

திருவிவிலியத்திலும், திருச்சபையின் படிப்பினைகளிலும் மனிதனின் மாண்பு பற்றி நாம் கற்ற கருத்துக்களையே கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலும் வலியுறுத்துகிறது. இறைவன் படைத்த படைப்புகள் அனைத்திலும் மனிதனே முதன்மையான இடத்தை வகிப்பவன். மண்ணில் மனிதர்கள் என்ற படைப்பை மட்டும் கடவுள் அவர்களின் பொருட்டே படைக்கத் திருவுளம் கொண்டார். ஏனைய படைப்புகள் அனைத்தையும் மனிதருக்காகவே படைத்தார். மனிதரைப் படைக்கத் தீர்மானித்த கணமே, அவர்களை முடிவில்லா மகிழ்ச்சிக்கு முன்குறித்து வைத்தார். மனிதர் இறைவனின் உருவிலும் சாயலிலும்

படைக்கப்பட்டிருப்பதன் அடிப்படையிலேயே அவர்களின் மாண்பு அடங்கியுள்ளது. ஆவிக்குரியதும், அழியாததுமான ஆன்மா, அறிவுத் திறன், விருப்புரிமை அகியவற்றைப் பெற்றுள்ள மனிதர் கடவுளுக்காகப் படைக்கப்பட்டுள்ளனர். விவேகத்தினால் படைப்பிலுள்ள ஒழுங்குக் கிரமத்தை மனிதனால் புரிந்துகொள்ள முடிகிறது. தனது சுதந்திர மனதினால் நல்லதை நாடிச் செல்ல முடிகிறது. எது சரியானது, எது நல்லது எனத் தேடிக் கண்டு பிடித்து, தம் நிறைவைக் காண்கின்றனர்.

கண்களுக்குப் புலப்படுகின்ற படைப்புகள் அனைத்திலும் மனிதன் ஒருவனே படைத்தவரை அறிந்து, அவரை அன்பு செய்யக் கூடியவன். அவன் ஒரு 'பொருள்' அல்ல. மாறாக ஒரு 'ஆள்', ஒரு 'நபர்'. சுய அறிவு நிறைந்த ஏனைய நபர்களோடு உறவு கொள்ளக் கூடிய அவன், படைத்தவருடன் நம்பிக்கையோடும், அன்போடும் உறவுகளைக் கட்டியெழுப்பக் கூடிய உடன்படிக்கை வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளான். அவனைத் தவிர வேறெந்தப் படைப்பும் இவ்வாறு உடன்படிக்கை வாழ்வுக்கு அழைக்கப்படவில்லை. இறைவன் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் ஒரே முறையில் உடலையும் ஆன்மாவையும் கொண்டுள்ளான். கடவுள் "அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத", மனிதன் நிறைவுள்ளவனாக, முழுமையாக இறைவனின் திட்டத்திற்கு உரியவன் ஆனான். மனிதனுடைய ஆன்மா இறைவனால் நேரடியாகப் படைக்கப்படுகிறது. பெற்றோரினால் உருவாக்கப்-படுவதில்லை. அது நித்தியமானது. மரணத்தில் உடலை விட்டுப் பிரிந்தாலும், அது அழிவதில்லை. இறுதி உயிர்ப்பின்போது அது மீண்டும் உடலோடு இணையும்.

கடவுள் மனிதனைப் பகுத்தறிவுள்ளவனாக, தன்னைத் தானே அடக்கி ஆளக்கூடிய ஆள் தன்மையுடைய மாண்பைக் கொண்டவனாகப் படைத்திருக்கிறார். அதாவது, தன்னைப் படைத்தவரை தானே தேடிக் கண்டடையவும், அவரைப் பற்றிக் கொண்டு, அதன வழி தனது அழைப்பின் நிறைவை எய்தவுமான ஆற்றலை மனிதன் பெற்றுள்ளான். இந்த சுதந்திரம்தான் நமது மனிதத் தன்மைக்கு அதன் அழகையும், மாண்பையும் அளிக்கிறது. மேலும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது ஆழ் மனதில் ஒரு குரல் ஒன்று இருக்கிறது. அதையே நாம் மனச்சான்று என அழைக்கிறோம். அது நமக்குள் இருக்கும் நெருக்கமான, இரகசிய,

மையமான இடம். அங்குதான் நாம் தனிமையில் கடவுளோடிருந்து கடவுள் குரலைக் கேட்கிறோம். மனிதன் தன் ஆழ்ந்த மனதில் தான் நிர்ணயிக்காத சட்டம் ஒன்று இருப்பதைக் கண்டு பிடிக்கிறான். அது அவனுக்கு எது நல்லது, எது கூடாது, எது சரி, எது தவறு எனச் சுட்டிக் காடடுகிறது. கடவுள் தன்னிடம் எதை எதிர்பார்க்கிறார் என்பதை மனிதன் தன் மனச்சான்று வழியாக அடையாளங் காண்கிறான். அதற்கு தான் கட்டுப்பட்டு, கீழ்படிய வேண்டுமென உணர்கிறான். எனவே ஒவ்வொரு மனிதனும் தனது மனச்சான்று குரலொலி என்ன சொல்லுகிறது என்பதைக் கவனிக்கக் கடமைப் பட்டிருக்கிறான்.

கடவுள் ஆதியில் மனிதனைப் படைத்தபோது, அவனைத் தம்முடைய உருவிலும் சாயலிலும் படைத்தார். ஆனால் மனிதனின் பிறப்பு நிலைப் பாவத்தினால் அந்த தொடக்க நிலை அழகும், மேன்மையும் கெட்டுப் போனது. எனவே மனிதன் தனது மேலான அழைத்தலை, தான் கடவுளின் உருவிலும், சாயலிலும் இருப்பதன் உண்மைப் பொருளை உணர்ந்து. புரிந்து கொள்ள முடியவில்லை. மனுவுருவில் வந்த கிறிஸ்துவிலேயே அவன் தன்னுடைய தொடக்க நிலை உருவை, சாயலை, தன் அழைப்பின் மேன்மையைக் காண்கிறான். ஏனெனில் இயேசுவே "கடபுலனாகாக் கடவுளின் சாயல்" (கொலோ.1:15). பிறப்பு நிலைப் பாவத்தினால் பாதிப்படையாத இயேசுவிலேயே நாம் மனிதனின் தொடக்க நிலை மேன்மையைக் காண்கிறோம்.

## 10.1.2. பெண்கள் பற்றிய கிறிஸ்தவ சிந்தனை

மனிதனின் மாண்பு, உயர்ந்த தன்மை பற்றி நாம் ஆராய்ந்த பொழுது, ஆணும் பெண்ணும் சம மாண்பு உடையவர்கள் எனப் பார்த்தோம். கடவுள் ஆண் பெண் இருவரையும் தம் உருவிலும் சாயலிலும் படைத்தாரென்றும், அவர்கள் இருவரிடமும் மண்ணுலகு முழுவதையும் ஆண்டு, அபிவிருத்தி செய்யும் பொறுப்பையும் ஒப்படைத்தாரென்றும் கண்டோம். ஏனைய படைப்புகளைப் படைத்தபொழுது அவற்றை நல்லதெனக் கண்ட கடவுள், மனிதனை ஆணும் பெண்ணுமாக தம் நாயலிலும் உருவிலும் படைத்தபோது அவர்கள் மிகவும் நன்றாய் இருந்ததைக் கண்டாரெனச் சொல்லப்படுகிறது. ஆனால்

இன்று நாம் காண்பது என்ன? ஆண் பெண் சமத்துவம், சம மாண்பு எல்லாம் கேள்விக் குறியாக மாறிவிட்டன. இன்று பெண்கள் மாண்பு குறைந்தவர்களாக, இழிவானவர்களாகக் கருதப்பட்டு, ஆண்களின் அடிமைகளாக, பணிவிடைக்காரர்களாக, சுகபோக இயந்திரங்களாக நடத்தப்படுகிறார்கள். பெண் அடிமை, பெண்களை இம்சித்தல், துன்புறுத்தல், பெண் கொலை, பாலியல் வல்லுறவு, பெண் சிசு அழிப்பு என்றெல்லாம் பேசப்படுகின்றது. பெண்கள் தங்களுக்கு சட்ட ஒழுங்கு, தொழில், அரசியல் துறைகளில் வேறுபாடு காட்டப்படுவதாகப் புகார் செய்கிறார்கள். பெண்களே தாங்கள் பெண்களாக இருத்தல் ஒரு இழிவுவெனக் கருதத் தொடங்கிவிட்டார்கள். இவையெல்லாம் இன்றைய சமூதாயத்தில், திருச்சபையில் பெண்களின் நிலைபற்றி சிந்திக்கத் தூண்டுகிறது.

**திருவிவிலியத்தில் பெண்கள் நிலை**

**பழைய ஏற்பாடு**

திருவிவிலியத்தின் முதல் நூலில் காணப்படும் முதல் படைப்புக் கதையில், மனித மாண்பு அடைப்படையில், உயர்ந்த மனிதத் தன்மை அடிப்படையில் ஆண்களும், பெண்களும் சரியொத்தவர்கள், சமமானவர்களென வலியுறுத்தப்படுகிறது.

> அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், காலநடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார். கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார் (தொ.நூ. 1:26-27).

ஆணும் பெண்ணும் கடவுளின் சாயலில், உருவில் படைக்கப்பட்டவர்கள். அவர்கள் மனித ஆட்கள். அறிவுள்ளவர்கள். இறைவனோடு உரையாடி, உறவாடி, நட்புறவு கொள்ளக் கூடியவர்கள். இறைவன் முன்னிலையில், இறைவனோடு அவர்கள் கொண்டுள்ள உறவில், ஏனைய படைப்புகள் மட்டில் அவர்களுக்குள்ள உறவுகள், பொறுப்புகளில், இறைவனிட-மிருந்து அவர்கள் பெற்ற ஆசீர்களில் அவர்களுக்குள் எவ்வித வேற்று-

மையோ வேறுபாடோ கிடையாது. மண்ணுலகை ஆளும் பொறுப்பில் சரி நிகரானவர்கள். இருவரும் கடவுளின் பிரதிநிதிகளாகவிருந்து, படைப்புகள் அனைத்தயும் ஆண்டு நடத்தி, அபிவிருத்தி செய்யும் பொறுப்பும், உரிமையும் உடையவர்கள். எனவே இங்கு ஆண் பெண் சமத்துவம், சம மாண்பு தெளிவாக வலியுறுத்தப்படுகிறது. மனிதர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் சமமானவர்கள். இந்த சம நிலையும் அதிகாரமும், ஆசீரும் அவர்களுடைய சந்ததிக்கும் கையளிக்கப்படுகிறது. "கடவுள் அவர்களுக்கு ஆசீ வழங்கி, பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார்.

தொடக்க நூலின் இரண்டாம் அதிகாரத்தில் காணப்படும் மற்றொரு படைப்பின் கதையில் (2:18-25), வேறுபட்ட மொழி, இலக்கிய மரபு, அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டாலும், பெண்களின் மாண்பு பற்றிய அதே கருத்துக்களே காணப்படுகின்றன. 2:18-25 இல் காணப்படும் படைப்பின் கதை 1:27-28 இல் காணப்படும் கதையைத் தெளிவாக விளங்கிக் கொள்ள உதவுகிறது. படைப்பின் முதலாவது கதை இரண்டாவது கதையோடு சேர்த்து வாசிக்கப்பட்டால், ஆணும் பெண்ணும் கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டது பற்றிய அடிப்படை உண்மையை நாம் மேலும் ஆழமாக விளங்கிக் கொள்ளலாம். இரண்டாவது கதையில் ஆணுடைய விலா எலும்பிலிருந்து பெண் படைக்கப்பட்டு, உலக உயிரினங்கள் மத்தியில் தனக்குத் தகுந்த துணையின்றித் தனித்து நிற்கும் ஆணுக்கு அருகில் இன்னொரு 'ஆள்' ஆக, தகுந்த துணைவியாக நிறுத்தப்படுகிறாள். இவ்வாறு படைக்கப்பட்ட பெண்ணை ஆண் கண்டவுடனே, அவளைத் "இதோ! இவளே என் எலும்பின் எலும்பும், சதையின் சதையும் ஆனவள்" (2:23) என இனம் கண்டு கொள்கிறான். அக் காரணத்துக்காக "இவள் பெண் என்று அழைக்கப்படுவாள்" என்கிறான். விவிலிய மொழியில் இப் பெயர் (பெண்) அவள் ஆணுடன் அடிப்படையில் ஒன்றித்திருக்கிறாள், சமமாயி-ருக்கிறாள் எனப் பொருள்படும். "ஆணிடமிருந்து (ளை) எடுக்கப்பட்டதால், இவள் பெண் (issah) என்று அழைக்கப்படுவாள்"(2:23).

ஆணும் பெண்ணும், மனிதர் என்ற ரீதியில், அடிப்படை

சமத்துவம் உடையவர்கள், சம மாண்பு உடையவர்கள் எனக் கொள்வதற்கு விவிலியதின் இக் கூற்றில் பல ஆதாரங்கள் உண்டு. ஆரம்பத்திலிருந்தே ஏனைய உயிருள்ள படைப்புகளைப் போலல்லாமல், அவர்கள் இருவரும் 'ஆள்'கள். பொது மனித வர்க்கத்தில், மானிடத்தில், பெண் ஒரு ஆள், நபர். ஆரம்பத்திலிருந்தே அவர்கள் 'இருவரும் ஒன்றித்து', ஒருவராய் இருக்கிறார்கள். அதாவது, தனக்கு ஒத்த துணை கிடையாமல் ஆரம்பத்தில் ஆணுக்கு இருந்த தனிமை இப்பொழுது அற்றுப் போய்விட்டது. பெண் உலகை அடக்கி ஆள்வதில் (தொ.நூ. 1:28) மட்டுமல்ல துணை, ஆனால் வாழ்க்கைத் துணை, அதாவது ஆண், தன் தாய் தந்தையை விட்டுப் பிரிந்து, பெண்ணோடு இணைந்து, அவளோடு ஒரு உடல் ஆகிறான் (தொ.நூ. 2:24). கடவுள் ஆணையும் பெண்ணையும் படைத்த அதே நேரத்தில், சந்ததியைப் பெருகச் செய்யும் நோக்குடன் திருமணத்தையும் ஏற்படுத்துகிறார். "பலுகிப் பெருகி, மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்" (1:28).

இரண்டாம் கதையில் இறைவன் முதலில் மனிதனைப் படைத்துவிட்டு, பின்னர் ஏனைய படைப்புகளையும் படைத்து. கடைசியாக பெண்ணைப் படைத்தாலும், அதாவுது படைப்பின் செயற்பாட்டில் மனிதனுக்குப் பின் பெண் படைக்கப்பட்டாலும், பெண் ஒரு பொழுதும் ஆணைவிடத் தாழ்ந்தவள் அல்ல. இருவரும் இறைசாயலிலேயே படைக்கப்பட்டனர். இருவரும் அறிவும், சுதந்திரமும் உள்ளவர்கள். இறைவனை அறிந்து அன்பு செய்யக் கூடியவர்கள். இருவருக்கும் ஒரே ஆசீரே வழங்கப்பட்டது. எனவே ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் சமமான தன்மை உள்ளது. ஒருவர் மற்றவரை விட உயர்ந்தவர் அல்லர். "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று. அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்" (தொ.நூ. 2:18). எபிரேய மொழியில் "மனிதன் தனியாக இருப்பது நல்லதன்று" என்பது சமூக ரீதியாக தனித்திருப்பது, துணையில்லாதிருப்பது அல்லது முழுமையற்ற நிலை எனப் பொருள்படும். இந்த துணையற்ற நிலையையும், தனிமையையும் நிறைவு செய்வதற்காக "தகுந்த துணை" என இறைவன் பெண்ணை ஆணுக்குப் படைத்துக் கொடுத்தார். எனவே பெண் என்பவள் ஆணுடைய பணியாள் அல்ல. சேவகி அல்ல. மாறாக ஆணோடு வாழ்க்கைப் பயணத்தில் ஈடுபடும் சமமான

தன்மையுடைய துணையாவாள். எபிரேய மொழியில் "துணை" என்பது ஏதோ வழியில் ஒன்றை நிறைவு, முழுமையடையச் செய்வதாகும். தனிமையில் இருக்கும் ஆணின் தனிமையை இல்லாமற் செய்வதும், முழுமையடையச் செய்வதும் மிருகங்களாலும் மரஞ்செடிகளாலும் அல்ல, 'துணை' என்னும் பெண்ணாலேயாகும். "மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச் செய்து, அவனிடமிருந்து எடுத்த விலா எலும்பிலிருந்து பெண்ணைப் படைத்தார்" என்பதன் கருத்து சமூக ரீதியாக முழுமையற்ற ஆண் பெண் வழியாக முழுமை அடைந்தான் என்பதாகும்.

இறைவன் பெண்ணை ஆணின் விலா எலும்பிலிருந்த படைத்தாரெனக் கூறப்படுகிறது. விவிலிய அறிஞர்களின் கருத்துப்படி விலா எலும்பு இரத்த உறவை, பிரிக்க முடியாத நெருங்கிய உறவைக் குறிப்பதாகும். ஆணின் விலாவிலிருந்து படைக்கப்பட்ட பெண் ஆணுடைய சதையே. அவள் அவனுடனேயே கட்டுப்பட்டிருப்பவள். இது முதல் முறையாக ஒரு ஆண் ஒரு பெண்ணைக் கண்டபோது கூறிய வார்த்தைகள் அதை வெளிக்காட்டுகின்றன. "இவளே என் எலும்பின் எலும்பும், சதையின் சதையும் ஆனவள்" (தொ.நூ. 2:23). அனைத்தையும் படைத்த பின், எல்லா விலங்குகளுக்கும், ஆகாயத்தின் எல்லாப் பறவைகளுக்கும் பெயரிடும்படி இறைவன் மனிதனிடம் ஒப்படைத்தார். பெயரிடல் அப் படைப்புகளின் மேல் அதிகாரம், செல்வாக்குச் செலுத்துவதின் அடையாளமாகும். ஆனால் ஆண் . ஏனைய படைப்புகளுக்குப் பெயரிட்ட முறை பெண் தொடர்பாகக் காணப்படவில்லை. ஆனால் "இவள் ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால், இவள் பெண் என்று அழைக்கப்படுவாள்" எனக் கூறியதாகக் குறிப்பிடப்படுகிறது. விவிலித்தில செயற்பாட்டு வினையைப் பயன்படுத்துவது இது இறைவனின் செயல் எனக் குறிப்பிடுவதற்காகவே. இறைவனே அவளைப் பெண் என அழைத்தவர். ஆகவே அவள் இறைவனுக்குக் கீழ்ப்பட்டவள். ஆனால் பெண் ஆணுக்குக் கீழ்ப்பட்ட பணியாள் அல்ல, மாறாக ஆணின் முழுமைத் தன்மைக்கு மிக உதவியாகவுள்ள துணையென்பதே வலியுறுத்தப்படுகிறது.

**புதிய ஏற்பாடு**

இயேசுவின் வாழ்க்கையை நாம் நற்செய்திகளில் படிக்கும்போது, இயேசு பெண்கள் மட்டில் கொண்டிருந்த மன நிலையை நன்கு

அறிய வருகிறோம். இயேசுவின் காலத்து மக்கள் அவரை பெண்களின் உயர் மாண்பை பறைசாற்றுகிறவராகக் கண்டனர். இயேசு பெண்களிடம் நடந்துகொண்ட முறையை கண்டு அவர்கள் ஆச்சரியமும் வியப்பும் அடைந்தனர் ஏனெனில் அது அக்காலத்தில் மக்களால் ஏற்றுக்கொள்ளப்ட்ட முறையிலிருந்து வேறுபட்டதாக இருந்தது. "பெண் ஒருவரிடம் அவர் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் வியப்புற்றனர்" (யோவா. 4:27). பாவிகளான மனித சந்ததியைப் பாவத்திலிருந்து மீட்க இவ்வுலகிற்கு வந்த இறைமகன் இயேசுவின் பிறப்புக்காகத் தேர்ந்தெடுக்கப் பேறுபெற்ற என்றும் கன்னிகையான மரியன்னையின் வாழ்க்கை விசேடமானது, அவர் "காலம் நிறைவேறியபோது" இறைவனால் தேர்ந்தெடுக்கப்ட்ட பெண்ணாவார். இயேசு அவளை மதித்து, அன்பு செய்து, அவளுக்குப் பணிந்து வாழ்ந்தார்.

இயேசு பெண்களை சமுதாயத்தில் அவர்களுக்கிருந்த அடிமைத் தனங்களிலிருந்து விடுவித்து, உறுதிப்படுத்துவதை நறசெய்திகளில் அடிக்கடி காண்கிறோம். அக்காலத்தைய சமூக கட்டுப்பாடுகளுக்கு எதிராக அவர் பெணகளுடன் பகிரங்கமாகவும், வெளிப்படையாகவும் உரையாடி, உதவி செய்கிறார். சமுதாயத்தில ஒதுக்கி வைக்கப்பட்டவர்களை அவர் தேடிச் செல்கிறார். அவர்களின் சீடர்களில் பெண்களும் இருந்தனர். மார்த்தாவின் சகோதரியான மரியா இயேசுவின் பாதத்தடியில் அமர்ந்திருந்து, அவர் கற்பித்ததைக் கேட்டறிந்தாள். அது யூத மதத்தில ஆண்களுக்கு மட்டுமே உரிய உரிமையாகும். கல்வாரிப் பயணத்தின்போது, எருசலேம் பட்டணத்துப் பெண்களுக்கு இயேசு ஆறுதல் கூறத் தரிக்கிறார். அவர் சிலுவையில் இறந்தபோது அவருடைய பெண் சீடர்களுள் சிலர் அவரருகே நின்றனர். மரிய மகதலாவே உயிர்த்த இயேசுவை முதலில் காணும் பாக்கியம் பெற்றிருந்தாள்.

> இயேசு பொதுவாக பெண்களுக்கு, அனைத்துப் பெண்களுக்கும் உயர்ந்த மதிப்பும், மரியாதையும் அளித்தார். குறிப்பாக அவர் பெண்களின் வேதனை, துன்பங்களில் கர்சனை எடுத்தார். அக்காலத்தைய சமய, சமூக தடைகளுக்கு அப்பால் சென்று, பெண்ணை தான் ஒரு மனித ஆள் என்ற மனித மாண்புடன் கடவுள் முன்னிலையிலும், மனிதர் முன்னிலையிலும் நிற்கச் செய்தார். நற்செய்தியில் நாம் காணும் இயேசுவின் வார்த்தைகளும், செயல்களும் பெண்களின் மாண்பை இழிவுபடுத்து-

கின்றவற்றை எதிர்ப்பவையாகவே இருந்தன (**திருத்தந்தை 2ம் யோண் போல்**)

இயேசுவைத் தொடர்ந்து, ஆரம்ப காலத் திருச்சபையில், திருத்தூதர்கள் பெண்கள் மட்டில் மிகுந்த மரியாதையும், மதிப்பும் கொண்டிருந்தனர். அவர்களையும் தம் குழுவுக்குள் இணைத்துக் கொண்டனர். "அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரு மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்" (தி.தூ.ப. 1:14). திருத்தூதரின் திருத்தூதுப் பணியில் அவர்களுக்கு உதவிய பெண்கள் பற்றித் திருத்தூதர் பணி நூலிலும், திருமுகங்களிலும் வாசிக்கிறோம். புனித பவுலின் திருமுகங்களில் அவருடன் பணிபுரிந்த பெண்களின் பெயர்களையும், அவர்கள் செய்த பணிகளையும் பற்றி வாசிக்கிறோம். "நம் சகோதரியாகிய பெயிபாவைக் குறித்து நற்சான்று அளிக்க விரும்புகிறேன். இவர் கெங்கிரேயாவில் இருக்கும் சபையில் திருத்தொண்டராய் இருக்கிறார்". கிறிஸ்து இயேசுவுக்காக என்னோடு சேர்ந்து உழைக்கின்ற பிரிஸ்காவுக்கும், அக்கிலாவுக்கும் என் வாழ்த்து. அவர்கள் என் உயிரைக் காக்கத் தலை கொடுக்கவும் முன்வந்தார்கள். அவர்கள் வீட்டில் கூடும் திருச்சபைக்கும் வாழ்த்துச சொல்லுங்கள. "...உங்களுக்காக பாடுபட்டு உழைத்த மரியாவுக்கு வாழ்த்துத் தெரிவியுங்கள். என் உடன் கைதிகளான அந்திரோனிக்கு, யூனியா ஆகியவர்களுக்கும் என் வாழ்த்துக்கள். திருத்தூதர்களுள் இவர்கள் பெயர்பெற்றவர்கள்" அன்பார்ந்த பேர்சிக்கும் என் வாழ்த்துக்கள். இவரும் ஆண்டவருக்காக மிகவும் பாடுபட்டு உழைத்தார்." (உரோ. 16:3- 12). புனித பவுல் கூறுகிறார்: "உங்களில் ஆண் என்றும், பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா. 3:28). இவ்வாறாக திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கண்ணோட்டத்தின்மீது கட்டியெழுப்பப்பட்ட கிறிஸ்தவ சிந்தனையில் பெண்ணும் ஆணைப் போன்று சமமான மாண்புடனும், தன்மையுடனும் கவனிக்கப்படுகிறாள்.

**திருச்சபையின் படிப்பினையில் பெண்கள் நிலை**

பெண்ணின் மாண்பும், அவளின் அழைப்பும் இன்று கிறிஸ்தவ சிந்தனையில் முக்கிய இடத்தைப் பிடித்து வருகிறது. ஒரு சில

இறையியல் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், கிறிஸ்துவின் படிப்பினையையும், முன்மாதிரிகையையும் பின்பற்றி, கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் பொதுவாக பெண்களை, ஆண்களைப்போல அவர்களும் இறைவனின் சாயலில் படைக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில், மிக மதிப்புடனும், மரியாதையுடனும் நோக்குகிறார்கள். ஏனைய மதங்களுடனும். சமூகங்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கையில், கிறிஸ்தவர்கள், திருச்சபை பெண்களை மிக உயர்ந்த நிலையில் வைத்து மதிப்பளிக்கிறது என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். பிற மதத்தினர் வாழும் நாடுகளை விட, கிறிஸ்தவ நாடுகளில் பெண்கள் கூடிய மரியாதையுடன் நடத்தப்படுவதைக் காண்கிறோம். பெண்கள் திருச்சபையில், கிறிஸ்தவ சமூகத்தில் முக்கிய இடங்களை வகித்து வந்திருக்கிறார்கள். திருநிலைப்படுத்தப்படுவதற்கு உள்ள கட்டுப்பாடுகள் தவிர, தொடர்ந்தும் வகித்து வருகிறார்கள். அவர்களின் நிலையை இன்னும் உயர்த்துவதற்கு திருச்சபை முயற்சிகள் எடுத்து வருகின்றது. இதையே நாம் திருச்சபையின் படிப்பினைகளிலும், அதன் ஆசிரியத்திலும் அதிகமாகக் காண்கிறோம்.

உதாரணமாக, 2ம் வத்திக்கான் பொதுச் சங்கம் தன் இறுதிச் செய்தியில் பின்வருமாறு கூறுகிறது:

> "நீங்கள் அறிந்துள்ளது போல் திருச்சபை பெண்ணின் மாண்பையும், சுதந்திரத்தையும் வலியுறுத்தி உள்ளது. பற்பல காலங்களில் பற்பல முறைகளில் ஆணோடு பெண் கொண்டிருக்கும் அடிப்படைச் சமநிலையையும், திருச்சபை தெளிவாக்கி உள்ளது என்பதை நினைத்து அது பெருமை அடைகிறது. பெண் தன் அழைத்தலின்படி முழுமையாக வாழும் காலம் இதோ வந்து கொண்டிருக்கிறது. ஏன் ஏற்கனவே வந்தும் விட்டது. சமூகத்திலே என்றுமே பெற்றிராச் செல்வாக்கையும், நிலையையும், அதிகாரத்தையும் பெண் அடையும் நாள் இதோ வந்துவிட்டது. எனவேதான் மனித குலம் இப்பெரிய மாற்றங்களுக்கு உட்பட்டிருக்கும் இவ்வேளை நற்செய்தியின் உளப் பாங்கிலே ஊறித் திளைத்திருக்கும் எந்தப் பெண்மணியும் மனித இனம் தன் கடமைகளைச் செய்ய ஆற்றலற்றதாக மாறிவிடாதிருக்கப் பெரிதும் துணை புரிய முடியும்"

வத்திக்கான் சங்கம் "இன்றை உலகில் திருச்சபை" என்ற அதன் கொள்கைத் திரட்டிலே ஆணும் பெண்ணும் கொண்டிருக்கும் சரிசமனான மாண்பு, ஆள் நிலையைப் பற்றிப் பேசுகின்றது:

> "ஆணும் பெண்ணும் சரிசமமான ஆள்நிலை சார்ந்த மாண்புடையவர்கள் என்பது ஒருவரொருவர் மட்டில் காண்கின்ற முழுமையான அன்பின் வழியாக எண்பிக்கப்படும்போது ஆண்டவரால் உறுதிப்படுத்தப் பெற்ற திருமணத்தின் ஒற்றுமைப் பண்பு தெளிவாகத் துலங்கும்" (இ.உ.தி 49).

அதேபோன்று "பொது நிலையினரின் அப்போஸ்தலப் பணி" என்ற வெளியீட்டில், இன்றைய சமூக வாழ்வுத் துறையில் பெண்கள் பெருமளவு பங்கெடுப்பது போல், திருச்சபையிலும் பல்வேறு அப்போஸ்தலப் பணியிலும் பங்கெடுக்க அழைப்பு விடப்படுகிறது

> இன்று சமூக வாழ்வு முழுவதிலும் பெண்கள் அதிகமாகக் குறிப்பிடத்தகுந்த வகையில் பங்கு கொள்கின்றனர். எனவே, திருச்சபையின் பல்வேறு அப்போஸ்தலப் பணித் துறையிலும் இவர்கள் அதிகமாய்ப் பங்கு கொள்வது மிக முக்கியமானது (பொ.அ.ப. 9).

திருத்தந்தை 6வது பவுல் தன் உரைகளில் ஒன்றிலே பின்வருமாறு கூறினார்:

> உலகில் உள்ள ஏனைய அனைத்து மதங்களிலும் பார்க்க, கிறிஸ்தவத்தில, அதன் ஆரம்ப காலத்திலிருந்து, பெண்கள் உயர்ந்த மாண்புள்ளவர்களாக மதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அதற்குப் புதிய ஏற்பாட்டு நூல் பல சான்றுகளை வழங்குகின்றது. கிறிஸ்தவத்தின் வாழ்வு செயற்பாட்டு அமைப்பிலே பெண்கள் முக்கிய இடம் பெறுகிறார்களென்பது வெளிப்படையாகக் காணப்படுகிறது. எனினும் அவர்களால் இயலுமான ஆற்றல்கள் அனைத்தும் இன்னமும் முற்றும் வெளியாகவில்லை.

வேறு சில சுற்று மடல்களிலும் பெண்களின் மாண்பு வலியுறுத்தப்பட்டு, பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள், அடக்கு துறைகளுக்கு எதிராகப் போராட அழைப்பு விடப்படுகின்றது.

எல்லா மனிதர்களிலும் மிளிர்கின்ற இறைசாயலுக்கு சரியான மதிப்புக் கிடைக்கும்படியாகவும், பெண்களுக்குக் காட்டப்படுகிற பாகுபாடுகள், மற்றும் பால் ரீதியான தாக்கங்களிலிருந்து விடுவிப்பதற்காகப் பொருத்தமான இறை வழிநடத்தல் பணிகளை ஆரம்பிப்பது நம் எல்லோரினதும் கடமையாகும் (Familiaris Consortio 24)

திருச்சபையிலும் சமூகத்திலும் பெண்களின் தனித்துவம் வளரும் இக்காலத்தில் தலைமைத்துவப் பொறுப்புகளை பெண்கள் ஏற்க வேண்டும் (Christi Fidelis Laici 24).

மனிதனையும் பெண்ணையும் படைத்தல் இறைவனுடைய விருப்பமாகும். மனிதன் என்ற மட்டில் முழுமையான சாயலாகவும், 'ஆண்', 'பெண்' என தமக்குப் பரம்பரையாய் வரும் உருவிலும் இருவருக்கும் படைத்தவரான இறைவனிடமிருந்து கிடைக்கப்பெறும் உயரிய மதிப்பு உரித்தாகும். இருவருக்கும் ஒரே சமனான மிக உயர்ந்த தன்மையும் உரித்தாகிறது. இது 'இறை சாயலாகும்'.

## 10.1.3. மனிதனின் சமூக வாழ்வு

தொடக்க நூலில் காணப்படும் முதல் படைப்புக் கதையில் ஆதியில் கடவுள் படைப்புகள் அனைத்தின் சிகரமாக மனிதனைப் படைத்தாரென்றும், அவனைத் தன் உருவிலும், சாயலிலும், அவனை ஆணும் பெண்ணுமாகப் படைத்தாரென்றும் பார்த்தோம். நாம் வழிபடும் கடவுள் மூவொரு கடவுளாய் இருக்கிறாரென்று நம் ஆண்டவர் இயேசு வெளிப்படுத்தியிருக்கிறார். அவரிலே தந்தை, மகன், தூய ஆவி என்ற மூன்று ஆட்கள் இருக்கிறார்கள். இதுவே எங்கள் நம்பிக்கை. எனவே கடவுள் ஒரு சமூகமாக வாழ்கிறார். அப்படியெனில், அக் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டிருக்கும் மனிதனும் ஒரு சமூகப் பிறவியாகவே படைக்கப்பட்டிருக்கிறான். எனவேதான் கடவுள் மனிதனை தனியனாகப் படைக்காமல், ஆணும் பெண்ணுமாகப் படைத்தாரென்று கூறப்படுகின்றது. அவன் சமூக இயல்பிலேயே படைக்கப்பட்டிருக்கிறான்.

மனிதன் சமூக இயல்புடையவன் என்ற கருத்து இரண்டாம் படைப்பின் கதையில் இன்னும் தெளிவாகக் காணப்படுகிறது. இங்கு கடவுள் முதலில் மனிதனை ஒரு ஆணாகத் தனியப் படைத்தார்.

அவன் சந்தோசமாக, மகிழ்வுடன், எக்குறையுமின்றி வாழவேண்டுமென்று விரும்பிய கடவுள், அவன் வாழ்வதற்கென்று கண்ணுக்கு அழகானதும், உண்பதற்குச் சுவையானதுமான எல்லா மரங்களையும் கொண்ட ஒரு அழகான இன்ப வனத்தை அமைத்து, அவனை அங்கே வாழவைத்தார். அவனுக்குச் சாகா வரத்தையும், சுதந்திரத்தையும் கொடையாக அளித்தார். அத்தனையும் செய்த பின்னரும் கடவுள் மனிதன் முழுமையான மகிழ்சியுடன் வாழ்வதற்கு ஒரு பெரிய குறை இருப்பதை உணர்ந்து, அதை உடனே நிறைவு செய்ய விரும்பினார். "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று. அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்". எனவே கடவுள் வேறு உயிரினங்களை, எல்லா காட்டு விலங்குகளையும், வானத்துப் பறவைகளையும் உருவாக்கி, அவன் முன் நிறுத்தினார். ஆனால் அவற்றுள் தனக்கு தகுந்த துணையைத் தேடிய மனிதன தனக்குத் தகுந்த துணையை அவற்றுள் காணவில்லை. எனவே கடவுள் இன்னொரு முறை முயற்சி எடுத்தார். மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச் செய்து, அவனுடைய விலாவிலிருந்து ஒரு எலும்பை எடுத்து, அதை ஒரு பெண்ணாக உருவாக்கி, அவளை மனிதனிடம் கொணர்ந்தார். அவளைக் கண்டதும், மனிதன், "இவளே என் எலும்பின் எலும்பு, இவளே என் சதையின் சதை" என்று மகிழ்வுடன் அவளைத் தனக்குத் தகுந்த துணையாக, தன்னுடைய மற்றப் பாதியாக ஏற்றுக்கொண்டான். அவளிலே அவனுடைய வாழ்வு முழுமை பெறுகிறது, அவனுடைய மகிழ்ச்சி நிறைவு அடைகிறது. இங்கு மனிதனின் சமூக இயல்பைத் தெளிவாகக் காண்கிறோம்.

இறைவனுடைய படைப்புத் திட்டத்தின்படி மனிதன் ஒரு சமூகப் பிராணி. ஒரு சமூகமாக வாழும் மூவொரு கடவுள் தம்முடைய சாயலில், உருவில் மனிதனைப் படைத்தபோது, அவனும் ஒரு சமூகப் பிறவியாக, சமூகமாகவே வாழவேண்டுமென்று விரும்பினார். பரம திருத்துவத்தில் காணப்படும் நெருங்கிய ஒன்றிப்பு, மனிதர் மத்தியிலும் காணப்பட வேண்டுமென்பதே கடவுளின் திருவுளம். "தந்தாய்! நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பதுபோல், அவர்களும் ஒன்றாயிருப்பார்களாக" (யோவா. 17:21). மனிதன் தன்னை ஒத்த, சம இயல்புடைய, சம தன்மையுடைய, சம மாண்புடைய சக மனிதருடன் இணைந்து, ஒரு சமூகமாக வாழ வேண்டும். அதையே நாம் மனிதனின் சமூக இயல்பு

என்றழைக்கின்றோம். அதாவது மனிதன் தனித்து வாழவோ, வளரவோ, தனித்து நின்று தன் திறன்களை ஆற்றல்களை வளர்க்கவோ அவனால் முடியாது. அவன் வாழ், வளர, தன் திறன்களை ஆற்றல்களை வளர்க்க அவனுக்கு ஒரு சமூகம் இன்றியமையாதது. இறைவனும் மனிதனுடன் ஒரு சமூகச் சூழலிலேயே தொடர்பு கொள்கிறார். அவனைப் படைத்த பொழுத ஒரு சமூகமாகப் படைக்கிறார். அவனை மீளப் படைக்க, மீட்க விரும்பியபோது அவனை ஒரு சமூகமாக, இஸ்ராயேல் இனமாக, இறைமக்கள் சமூகமாக உருவாக்குகிறார். மனிதனை தம் மகன் வழியாக கல்வாரியில் மீட்ட பொழுது, மீட்கப்பட்ட மக்களை ஒரு சமூகமாக, கிறிஸ்தவ சமூகமாக, திருச்சபையாக ஏற்படுத்தி, அதன் வழியாகவே தம் மீட்புத் திட்டத்தை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். மனிதனும் சமூகத்திலேயே, சமூகமாகவே இறைவனை அனுபவித்து வந்திருக்கிறான். சமூகமாகவே இறைவனோடு தொடர்பு கொண்டு, அவருடன் பேசி. இறைவெளிபாட்டைப் பெற்று வநதிருக்கிறான்.

மனிதன் சமூக இயல்புள்ளவன். அவன் வாழ, வளர, தன் திறன்கள், ஆற்றல்களை வளர்க்க அவனுக்கு ஒரு சமூகம் வேண்டும். தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு, உறவு உண்டு. தனி மனிதனின் வளர்ச்சியும், சமுதாயத்தின் வளர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றன. அதாவது, மனிதனை உருவாக்குவது அவன் வாழும் சமுதாயமே. உதாரணமாக, எனக்குப் பாடும் திறன் இருக்கிறது. நான் பாடுவதைக் கேட்டு, ரசித்து, கரகோஷம் எழுப்பி, என்னைப் பாராட்ட எவரும் இல்லாவிட்டால் நான் அத் திறனை வளர்க்க முடியாது. அதை மற்றவர்ன் பாராட்டி என்னை ஊக்குவித்தால், நான் மேலும் முயற்சிகளை எடுத்து, இன்னும் முன்னேறுவேன். அதேபோல் "பன்றியோடு கூடின கன்றும் மலந் தின்னும்" என்பார்கள். அதேவேளை அச் சமுதாயத்தை உருவாக்குபவன் மனிதனே. ஏனெனில் மனிதர்களால் ஆனதே சமுதாயம். சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் மனிதர் நல்லாயிருந்தால், சமுதாயம் நல்லாயிருக்கும். மாறாக, சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் மனிதர் தீயவராயிருந்தால், அச் சமுதாயமும் தீயதாகவே இருக்கும். அதாவது, மனிதர் வாழும் சமுதாயம் நல்லாயிருந்தால், அச் சமுதாயம் அதில் அங்கம் வகிக்கும் மனிதரில் நல்ல விளைவை, நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும். மனிதன் தான் வாழும் சமுதாயத்தின் மட்டில் தன் பங்களிப்பை பொறுப்புடன

அளித்து, அதை வளர்த்தால், இறுதியில் அவனே வளருகிறான். ஆகவே மனிதனே அனைத்து சமூக நிறுவனங்களினதும் முதலும், பொருளும், முடிவுமாய் இருக்கிறான். சமுதாயம் மனிதனுக்காகவே அன்றி, மனிதன் சமுதாயத்திற்காக அல்ல. ஆகவே அனைத்து சமூகங்களுக்கும் மனிதனின் ஆள் தன்மையின் வளர்ச்சிப் பணி அவசியமானது.

மனித வளர்ச்சிக்குத் தேவையான சமூகப் பிணைப்புகளில் குடும்பம், அரசியல் சமுதாயம் என்பன மனிதனுக்கு இன்றியமை-யாதவை. ஏனெனில் அவை மனித இயல்போடு நெருங்கிய, உடனடித் தொடர்பு உடையவை. ஆனால் அவற்றைவிட வேறு சமூகங்களும் இருக்கின்றன. அவை மனித சுய விருப்பத்திலிருந்து பிறக்கின்றவை. இன்று மனிதன், தன்னால் தனித்து அடையமுடியாத பல நன்மைகளை, அதே தேவைகளையுடைய வேறு பிறருடன் இணைந்து, ஒரு குழுவாக, சமூகமாகச் செயல்பட்டு அடைவதைக் காண்கிறோம். இவ்வாறு மனிதர் தன்னால் தனித்து அடைய முடியாத நன்மைகளை அடைவதற்கு தன் போன்ற மற்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்து உழைப்பதையே நாம் "சமூக மயமாக்கல்" என அழைக்கிறோம். உதாரணமாக, என்னால் தனித்து உதைபந்து விளையாட முடியாது. எனவே உதை பந்து விளையாட விரும்பும் ஏனையவருடன் இணைந்து ஒரு விளையாட்டுக் கழகத்தை அமைக்கிறேன். அதுபோலவே, கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், வெண்காயச் சங்கங்கள் போன்ற புதுச் சமூகங்கள் அமைக்கப்படுகின்றன. மனிதனின் சமூக இயல்பே அத்தகைய சமூகங்களை ஏற்படுத்த மனிதரைத் தூண்டுகின்றது. சமூக மயமாக்கலால் ஆபத்தொன்றும் இல்லையெனச் சொல்ல முடியாது. இருந்தும் அத்தகைய சமூகங்கள் தனிமனிதன் பல்வேறு நன்மைகளைப் பெறவும், நீதி, நேர்மை, எதிர்பார்ப்பு, தேவைகளை நிறைவேற்றவும், அவனின் வாழ்கை நிலையை மேம்படுத்தவும், மனிதப் பண்புகளை உறுதிப்படுத்தி வளர்க்கவும், உரிமைகளைப் பாதுகாக்கவும் உதவுகின்றன. அவனது மறை வாழ்விலும் அவை பெரிதும் துணை நிற்கின்றன.

இவ்வாறு மனிதன் பலதுறை நன்மைகளைப் பெற அமைத்து வரும் சிறு சிறு சமூகங்கள், குழுக்கள் நாளுக்கு நாள் அதிகரித்த

வண்ணமிருக்கின்றன. சமூகத்தின் ஒவ்வொரு குழுவும் ஏனைய குழுக்களின நியாயமான தேவைகள், விருப்பங்களை மதிக்க வேண்டும். தனி மனிதனது உரிமைகளையோ, கடமைகளையோ அவை அழிக்கக் கூடாது. ஏனெனில் மனித மாண்பு எல்லாப் பொருட்களையும் விட மேலானது. இன்று மனிதர் ஒருவரோடு ஒருவர் கொண்டிருக்கும் சார்பு நெருங்கி வருகிறது. அதன் விளைவாக தனி மனித நலன் இன்று அனைத்துலக தன்மைகொண்ட பொதுநலனாக மாறிவிட்டது. எனவே குழுக்களும், தனி உறுப்பினர்களும் தத்தம் நிறைவை முழுமையோடும், எளிதிலும் பெற உதவிசெய்ய வேண்டும். குறிப்பாக உணவு. உடை, உறைவிடம், வாழ்கை நிலையைத் தெரிந்துகொள்ளும் சுதந்திரம், குடும்பம் அமைக்கும் உரிமை, கல்வி உரிமை, தொழில் உரிமை, நன்மதிப்பு உரிமை, மரியாதை உரிமை, சரியான தகவல் உரிமை, தனி வாழ்வுப் பாதுகாப்பு உரிமை, மதச் சுதந்திரம், மருத்துவ வசதி போன்ற அடிப்படை உரிமைகளை அனைவரும் அனுபவிக்கக்கூடிய சூழலை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும். ஒவ்வொரு மனிதனும் மனிதத் தன்மையோடு வாழத் தேவையானவை அனைத்தும் அவனுக்குக் கிடைக்க வழிசமைக்க வேண்டும். இவ்வாறு குழுக்களும், தனி நபர்களும் தத்தம் நிறைவை முழுமையோடும் எளிதாகவும் அடைவதற்கு உதவுகின்ற சமூக வாழ்வுச் சூழ்நிலைகளின் தொகுப்பையே நாம் “பொது நலன்” என்று அழைக்கிறோம்.

எனவே ஒவ்வொரு குழுவும் தனி மனிதனின், ஏனைய குழுக்களின், மனித குடும்பம் முழுவதின் பொதுநலனை தம் கண்முன் கொண்டு செயல்பட வேண்டும். சமுதாயம் மனிதனுக்காக இருக்கிறதே-யன்றி, மனிதன் சமுதாயத்திற்காக வாழ்வதில்லை என்பதை எக் கட்டத்திலும் மறந்து விடக்கூடாது. ஆகவே சமூக அமைப்பும், அதன் வளர்ச்சியும் மனித ஆட்களின் நலனுக்குப் பயன்படும் முறையில் அமைய வேண்டும். எனவே அவை நீதியினால் கட்டப்பட்டு, அன்பில் இயங்க வேண்டும். அவை சுதந்திர உணர்ச்சியில் மக்களை நாளுக்கு நாள் பண்படுத்தி, அவர்களைச் சம நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும். பரிசுத்த ஆவி அத்தகைய வளர்ச்சிக்கு உதவிபுரிகிறார். மனிதன் பேராவலோடு அடைய விளையும் தன்மான உணர்ச்சியை எழுப்ப நற்செய்தியும் உதவுகிறது.

சமூக வாழ்வினால் மனிதன் பல நன்மைகளைப் பெற்று வருகின்றபோதிலும், இன்று பல முறைகளில் அவன் வாழும் சமூகச் சூழல்கள் அவனை நன்மையை விடுத்து, தீமையைத் நாடத் தூண்டுவதைக் காண்கிறோம். இன்று சமுதாயத்தில் காணப்படும் குழப்பங்களெல்லாம் பொருளாதார, அரசியல், சமூக அமைப்புகளிடையே நிலவுகின்ற இழுபறிகளின் விளைவே. உண்மையில் இவற்றின் அடிப்படைக் காரணம் மனிதனின் தன்னலமும், தற்பெருமையுமே ஆகும். பாவத்தின் விளைவாக பிறப்பிலிருந்து தீமையில் நாட்டமுள்ள மனிதன், இன்னும் பாவம் புரிய இத்தகைய சூழல் ஏதுவாக உள்ளன. இந் நிலையிலிருந்து விடுபட, எமக்கு இறை அருளும், இடைவிடா முயற்சியும் அவசியம்.

## 10.1.4. மனித வளர்ச்சியும் கிறிஸ்தவ பங்களிப்பும்

தொடக்கத்தில் இறைவன் மனிதனைப் படைத்தபோது, அவனைச் ஒரு சமூகப் பிராணியாக, சமூக இயல்புடன் படைத்தார். அவன் தனியனாக, தனித்துநின்று வாழ்வது அவனுக்கு நல்லதல்ல, அது இறைவனுடைய விருப்பமுமல்ல. "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று" (தொ.நூ. 2:18). அவன் சமூகத் தன்மையுடையவன் என்பதால், தன் இனத்தை விருத்தி செய்வதும், அடுத்தவருடன் இணைந்து வாழ்வதும், ஒருவர் மற்றவரின் நல் வாழ்விற்காக பணிபுரிவதும் இன்றியமையாதவை ஆகின்றன. மேலும் இறைவன் மனிதனைப் படைத்த பொது, தான் படைத்த அனைத்துப் படைப்புகளையும் அவனிடம் ஒப்படைத்து, அவற்றை விருத்தி செய்யவும், ஆண்டு நடத்தவும் அவனைப் பணித்தார். "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். கடல் மீன்கள், வானத்துப் பறவைகள் நிலத்தில் ஊர்ந்து உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள். என்றார்" (தொ.நூ. 1:28). மேலும் "ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்" (தொ.நூ. 2:15) என்றும் வேதநூலில் படிககிறோம்.

இத் திருவிவிலியப் படிப்பினைக்கு அமைய, மனிதர் தம் உழைப்பாலும், திறமையாலும் தம் வாழ்வை மென்மேலும் வளமாக்க முயன்று வந்துள்ளனர். அத்துடன், தனி மனிதனுக்கும், மனித

சமுதாயத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு. உறவு உண்டு. மனிதன் அனைத்துலக மனித குடும்பத்தின் வளர்ச்சி, முன்னேற்றம், அபிவிருத்தி என்பனவற்றிற்காக செயலாற்றும் பொறுப்பும், கடமையும் உரியவனாகிறான். அதேவேளையில், அதன் வழியாக அவன் இறைவனின் படைப்பை வளர்ச்சியடையச் செய்து, அவரின் படைக்கும் பணியிலும் பங்காளியாகிறான். இவ்வாறு அவன் மனித சமூகத்தின் வளர்ச்சி, முன்னேற்றம், அபிவிருத்திக்காக உழைக்கும்போது, கடவுளின் அன்புக் கட்டளையை நிறைவேற்றுவதுமன்றி, தன்னையும், தன் தனிப்பட்ட வாழ்வையும் வளர்த்து, மேம்படுத்திக் கொள்கிறான். ஏனெனில் "மனிதனின் முன்னேற்றமும் சமூகத்தின் வளர்ச்சியும் ஒன்றின்மேல் ஒன்று சார்ந்திருக்கின்றன" (இ.உ.தி. 26). அதாவது மனிதனை உருவாக்குவதும், அவனை அழிப்பதும் அவன் வாழும் சமுதாயமும் சமூக சூழலுமே. "மலரோடு கூடிய நாரும் மணம் வீசும்", "பன்றியோடு கூடிய கன்றும் மலந் தின்னும்". அதேவேளையில் சமுதாயத்தை உருவாக்குபவன் மனிதனே. ஏனெனில் மனிதர்களால் ஆனதே சமுதாயம். ஆகவே நாம் மனித சமுதாயத்தை முன்னேற்ற, அபிவிருத்தி செய்ய உழைக்கும்போது, நாமே வளர்கிறோம், முன்னேறுகிறோம். இதையே நம் மூதாதையர், "பிறர் பிள்ளை தடவ, நம் பிள்ளை தானே வளரும்" என்று சொல்லி வைத்தனர்.

மனிதன் சமூக இயல்புள்ளவன். அவனால் தனித்து வாழ, வளர, தன் திறன்களை ஆற்றல்களை வளர்க்க, வாழ்க்கையில் முன்னேற முடியாது. அதற்கு ஒரு சமூகம் அவசியம். எனவேதான் மனிதன் இந்த சமூக இயல்பினால் உந்தப்பட்டு, பல்வேறு சமூகங்களை தானே அமைத்துக்கொள்கிறான். மனித வளர்ச்சிக்குத் தேவையான சமூகப் பிணைப்புகளில், குடும்பம், கிராம சமூகம், அரச சமூகம் போன்றவை அவனுடைய மனித இயல்போடு நெருங்கிய உடனடித் தொடர்புடையவை, அவனுக்கு இன்றியமையாதவை. ஏனையவை மனிதன் தானாக விரும்பி, தன் தேவைகளைகளை நிறைவு செய்ய அமைத்துக் கொள்பவை. தன்னால் தனித்து அடைய முடியாத பல நன்மைகளை அடைவதற்கு, அதே தேவைகளைக் கொண்ட வேறு சிலருடன் இணைந்து, ஒரு சமூகமாகச் செயற்பட்டு, அவற்றை அடைந்து கொள்கிறான். அதையே சமூக மயமாக்கல் என அழைப்பர். உதாரணமாக, விளையாட்டுக் கழகம், கூட்டுறவுச் சங்கம், தொழில்

சங்கம். சமூகம் மனிதனுக்காகவே அன்றி, மனிதன் சமூகத்திற்காக அல்ல என்பதை நாம் மனிதில் கொள்ள வேண்டும். எனவே இச் சமூகங்கள் தனி மனிதனின் மாண்பையோ, உரிமைகளையோ, கடமைகளையோ அழிக்கக் கூடாது. மாறாக அவற்றின் ஒரே கடமையும் நோக்கமுமாக அச் சமூகத்தின் உறுப்பினரின் பொது நன்மை, பொதுத் தேவையே இருக்கின்றது. பொது நன்மை என்பது சமூகத்தின் நன்மையையும், ஒருவரொருவருடனும் சமூகத்தோடும் இணைந்துள்ள தனி நபரின் நன்மையையும் கருத்தில் கொள்வதாகும். மனிதனே அனைத்துச் சமூக நிறுவனங்களினதும் முதலும், பொருளும், முடிவுமாயி-ருக்கிறான்.

இன்று மனிதர் தம்முடைய உழைப்பாலும் திறனாலும் தாம் வாழும் சமுதாயத்தை மேம்படுத்தி, அதன் விளைவாக தம் வாழ்வை மென்மேலும் வளமாக்கி வந்துள்ளனர். சிறப்பாக புதிய அறிவியல், தொழில் நுட்பத் துறைகளைப் பயன்படுத்தி ஏறக்குறைய இயற்கை முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொணர்ந்துள்ளனர். கொண்டுவந்து கொணடிருக்கின்றனர். சிறப்பாக பல வகைத் தொலைத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி, நாடுகளிடையே பலவகைத் தொடர்புகளை ஏற்படுத்தி, மனித குடும்பத்தை ஒரு அனைத்துலக குடும்பமாக ஆக்கி வருகின்றனர். இதன் விளைவாக முன்னர் தமக்கு மேலான சக்திகளிட-மிருந்து பெரும்பாலும் எதிர்பார்த்த பல நன்மைகளை, இன்று மனிதர் தாமே தம் உழைப்பால் பெற்று வருகின்றனர்.

**திருவிவிலியத்தில் மனித வளர்ச்சியும் கிறிஸ்தவ பங்களிப்பும்**

மனித சமூகத்தின் அபிவிருத்திக்காகவும், மக்களின் முன்னேற்-றத்திற்காவும், வளர்ச்சிக்காகவும் உழைக்க கிறிஸ்தவனுக்கு இருக்கும் பொறுப்பை திருவிவிலியம் வலியுறுத்துகிறது. ஆதியில் கடவுள் மனிதனை தம் உருவிலும், சாயலிலும் ஆணும் பெண்ணுமாகப் படைத்தபோது, "நீங்கள் பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்" என ஆசீர்வதித்து,

> "மண்ணுலகை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், கால்நடைகள், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்று கூறி, முழுப் படைப்பையும் விருத்தி

செய்வதற்கும், ஆட்சி செய்வதற்கும் அதிகாரம் அளித்தார் (தொ.நூ. 1:28).

கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்த பொழுது, தான் மற்றவர்களுக்கு நிறைவான, குறைவில்லாத வாழ்வு அளிக்கவே வந்தேனென்று கூறுகிறார். அதேபோல் தம் சீடர்களை தம்மிடமாக அனுப்பும்போது அதே நோக்கத்துடனேயே அனுப்பி வைத்தார்.

> "நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்" (யோவா. 10:10-11)..

மேலும் இயேசு தம் பணியை இவ்வுலகில் ஆரம்பித்தபோது, தம்முடைய பணியை எடுத்துக் கூறுகிறார்.

> 'ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடையவும், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலைசெய்து அனுப்பவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்... நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" (லூக். 4:18-21).

பின்னர் சீடர்களை அனுப்பும்போது, பேய்களையெல்லாம் அடக்கவும், பிணிகளைப் போக்கவும், வல்லமையும், அதிகாரமும் கொடுத்து, இறையாட்சிபற்றி பறைசாற்றவும், உடல் நலம் குன்றியோரின் பிணிதீர்க்கவும் அவர்களை அனுப்பினார் (லூக. 9:1-2). ஒரு நாள் திருமுழுக்கு யோவானின் சீடர்கள் இயேசுவிடம் வந்து, "வரவிருப்பவர் நீர்தாமா? அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமா? என்று கேட்டார்கள். அந்நேரத்தில் பிணிகளையும், நோய்களையும், பொல்லாத ஆவிகளையும் கொண்டிருந்த பலரைக் குணமாக்கி, பார்வையற்ற பலருக்குக் பார்வை அருளிக் கொண்டிருந்த இயேசு மறுமொழியாக:

> நீங்கள் கண்டவற்றையும், கேட்டவற்றையும் போய் யோவானிடம் அறிவியுங்கள். பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர். கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர். தொழு நோயாளர்

> நலமடைகின்றனர். காது கேளாதோர் கேட்கின்றனர். இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுகின்றனர். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது (லூக். 7:20-22).

என்று கூறி, அதுவே தம் வாழ்வு எனக் காட்டுகிறார். அதையே அவர் தம் சீடர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார். ஏனெனில் இறுதி நாளில் அதைக் கொண்டுதான் தம் சீடர்களை இனம் கண்டுகொள்வார்.

> மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் (மாற். 10:45).

> "ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர் (யோவா.13:34-35).

> "நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை. நான் அன்னியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அளிக்கவில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை" என்பார். ஆதற்கு அவர்கள் "ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருக்கக் கண்டு, உமக்குத் தொண்டு செய்யாதிருந்தோம்" எனக் கேட்பார்கள். அப்பொழுது அவர், "மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்குச் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" எனப் பதிலளிப்பார். இவர்கள் முடிவில்லாத் தண்டனை அடைவார்கள் (மத். 25:42-46)

சமூகத்திலே துன்பப்படும் நம் சகோதர சகோதரிகள் மட்டில் எமக்கு உள்ள கடமை, பொறுப்பு பற்றி நல்ல சமாரித்தன் உவமையிலும் (லூக். 10:25-27), செல்வரும் இலாசரும் பற்றிய உவமையிலும் (லூக். 16:19-31) இயேசு வலியுறுத்துகிறார். துன்பப்படுபவர்களின் வேதனையைத்

தணித்து, கண்ணீரைத் துடைத்து, கவலையைப் போக்கி, தேவைகளைப் நிறைவு செய்து, அவர்களை மகிழ்வுடன் வாழவைக்கச் செயலாற்றுவது நம் ஒவ்வொருவரினதும் கடமையும், பொறுப்புமாகும்.

இயேசு தம் இறுதி இராவுணவு வேளையில் தம்முடைய சீடர்களின் பாதங்களைக் கழுவி, அவர்கள் பிறர் நலப் பணியில், சமூக சேவையிலே ஈடுபட வேண்டுமெனக் கற்பித்தார்.

> "ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப் பட்டிருக்கிறீர்கள். நான் செய்ததுபோல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு மாதிரி காட்டினேன்" (யோவா. 13:14-15).

திருச்சபையின் தொடக்கத்திலிருந்தே, திருத்தூதரின் காலத்தில், கிறிஸ்தவ சமுதாயத்தில் அறப் பணி முக்கிய இடம் பெற்றிருந்தது. அனாதைகளும், கைம்பெண்களும், ஏழைகளும் கவனம் செலுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தார்கள். இந்த அறப் பணியைத் தொடர்நது முறையாக ஆற்றவெனத் திருத்தொண்டர்கள் திருத்தூதர்களால் நியமிக்கப்பட்டார்கள்.

> "அன்பர்களே, உங்களிடமிருந்து நற்சான்று பெற்றவர்களும், தூய ஆவி அருளும் வல்லமையும், ஞானமும் நிறைந்தவர்களுமான எழுவரைக் கவனமாய்த் தெரிந்தெடுங்கள். அவர்களை நாம் இந்தப் பணியிலே நியமிப்போம்... திருத்தூதர் தங்கள் கைகளை அவர்கள்மீது வைத்து, இறைவனிடம் வேண்டினர்" (தி.தூ.ப. 6:3.6).

திருத்தூதரான புனித யோவான் நாம் கண்களாலே காணும் சகோதரரை அன்பு செய்யாமல், கண்ணால் காணாத இறைவனுக்கு அன்பு செலுத்த முடியாது என்கிறார்:

> தம் கண் முன்னேயுள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் சகோதர சகோதரிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும். இதுவே நாம் அவரிடமிருந்து பெற்ற கட்டளை (1 யோவா. 4:20-21).

திருத்தூதரான புனித யாகப்பர். நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை செயலில் காட்டப்பட வேண்டும் என்கிறார்.

> ஒரு சகோதரன் அல்லது சகோதரி போதிய உடையும், அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையான எவற்றையும் கொடாமல், உங்களுள் ஒருவர் அவரைப் பார்த்து, "நலமே சென்று வாருங்கள். குளிர் காய்ந்து கொள்ளுங்கள். பசியாற்றிக் கொள்ளுங்கள்" என்பாரென்றால், அதனால் பயன் என்ன? அதைப் போலவே நம்பிக்கை செயல் வடிவம் பெறாவிட்டால், தன்னிலே உயிரற்றதாயிருக்கும் (யாக். 2:15-17).

திருத்தூதரான புனித பேதுரு நாம் ஒவ்வொருவரும் இறைவனிடமிருந்து வெவ்வேறு அருள் கொடைகளைக் பெற்றுள்ளோம். அதை நாம் பயன்படுத்தி நாம் வாழும் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்று அறிவுரை கூறுகிறார்.

> நீங்கள் கடவுளுடைய பல்வகை அருள் கொடைகளின் சீரிய பொறுப்பாளர்கள். எனவே உங்களுள் ஒவ்வொருவரும் தாம் பெற்றுக்கொண்ட அருள் கொடையைப் பயன்படுத்தி, ஒருவருக்கொருவர் பணிபுரியுங்கள். ஒருவர் பேசும் கொடையைப் பெற்றிருந்தால், அவரது பேச்சு கடவுளுடைய வார்த்தையைப்போல் இருக்கட்டும். ஒருவர் பணிசெய்யும் கொடையைப் பெற்றிருந்தால், கடவுள் அருளும் ஆற்றலைப் பெற்றவர்போல் பணி செய்யட்டும். இவ்வாறு இயேசுக் கிறிஸ்துவின் வழியாகக் கடவுள் அனைத்திலும் பெருமை பெறுவார். (1 பேது. 4:10-11).

புனித பவுல் தூய ஆவியார் நம் ஒவ்வொருவருக்கும் அருளும் அருள்கொடைகளைப் நாம் பயன்படுத்தி, பொதுநன்மைக்காக உழைக்க அழைக்கப்பட்டிருக்கிறோம் எனக் கூறுகிறார்.

> கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப்பட்டுள்ளது... அவரே சிலரைத் திருத்தூதராகவும், சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளர்களாகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார். திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்பவும் இவர்களை அவர் ஏற்படுத்தினார் (எபே. 4:11).

> பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது. தூய ஆவியார் ஒருவருக்கு ஞானம் நிறைந்த சொல்வளத்தை அருளுகிறார். இன்னொருவருக்கோ அதே ஆவியார் அறிவுசெறிந்த சொல்வளத்தை அருளுகிறார். அதே ஆவியார் வேறோருவருக்கு நம்பிககை அருளுகிறார். அந்த ஒரே ஆவியார் மற்றொருவருக்கு பிணிதீர்க்கும் அருள் கொடையையும், அளிக்கிறார். (1 கொரி. 12:7-9).

மேற்கூறப்பட்ட திருவிவிலிய சிந்தனையில் இறைப் படைப்பை விருத்தி செய்வது, அதாவது, மானிட குடும்பத்தின் அபிவிருத்தியும் பொதுநன்மைக்கான அர்ப்பணிப்பும் இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்டிருக்கும் அழைத்தல், பொறுப்பு எனபது தெளிவாகிறது. இது திருச்சபையின் பாரம்பரிய வழக்கத்திலும், படிப்பினைகளிலும் காணப்படுகிறது.

**சமூகப் பணிபற்றிய திருச்சபையின் படிப்பினைகள்**

மக்களின், குறிப்பாக கிறிஸ்தவர்களின் வாழ்வில் பிறர் நலப் பணிகள், சமூக சேவைகள் எடுக்கும் முக்கிய இடத்தை திருச்சபையின் சமூகப் படிப்பினைகள் வலியுறுத்துகின்றன. திருந்தந்தையரால் வெளியிடப்பட்ட பல சுற்று மடல்களிலும், திருச்சபையின் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் கொள்கைத் திரட்டுகளிலும் அவற்றை நாம் காண்கிறோம்.

திருத்தந்தை 23ம் அருளப்பர் 1963இல் வெளியிட்ட “அவனியில் அமைதி” என்ற சுற்று மடலில், மனிதன் தன் கடமைகளை பரிவுடனும், அன்னியோன்னியம் மிக்க ஒத்துழைப்புடன் ஒவ்வொருவரினதும் நலனுக்காக நிறைவேற்ற வேண்டுமெனவும், மனிதன் பொறுப்புள்ளவனாக சமூகத்தின் நல்வாழ்வுக்காகவும், நலனுக்காகவும் செயல்படுதல் முக்கியமாகுமெனவும் கூறுகிறார்.

> மனிதர் இயற்கையாகவே சமூக இயல்புள்ளவர்கள். அவர்கள் மற்றவர்களோடு ஒன்றித்து வாழ்வதும், ஒருவரொருவரின் நலன்கருதி செயலாற்றுவதும் முக்கியமாகும். ஒருவரொருவரின் அன்னியோன்னிய உரிமைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றிற்கு மதிப்பளிப்பதும், கடமைகளை உணர்ந்து அவற்றை நிறைவேற்றுவதும் முறையான மனித சமூகத்தின்

> விசேட பண்புகளாக இருத்தல் வேண்டும் (அவனியில் அமைதி - 31-33).

> சுதந்திரமாகவும், பொறுப்புடனும் செயலாற்றுவது மனித மாண்புக்குப் பொருத்தமான அம்சமாகும். எனவே, சமூகத் தொடர்புகளின் போதும், உரிமைகளைச் செயல்படுத்தும் போதும், கடமைகளை நிறைவேற்றும் போதும் முக்கியமாக தனது சுதந்திரமான பொறுப்பு, மற்றும் நிறைவேறக்கூடிய ஆற்றலுக்கு ஏற்ப செயலாற்றுவதற்கு அவனுக்கு சந்தர்ப்பம் இருத்தல் வேண்டும். (அவனியில் அமைதி - 34).

இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட "இன்றைய உலகில் திருச்சபை" என்ற கொள்கைத் திரட்டில், மனிதன் சமூக இயல்புள்ளவன். அவனால் தனித்து வாழ, வளர, தன் திறன்களை, ஆற்றல்களை வளர்க்க இயலாது. அதற்கு ஒரு சமூகம் வேண்டும். அந்தச் சமூகம் அவனை ஆக்கலாம் அல்லது அழிக்கலாம். ஆக்குவதற்கு அவன் முதலில் அச் சமூகத்தை வளர்த்து கட்டியெழுப்ப வேண்டும். ஏனெனில் தனித மனித வளர்ச்சியும் சமூக வளர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்திருக்கிறது எனக் கூறுகிறது.

> மனிதனின் முன்னேற்றமும் சமூகத்தின் வளர்ச்சியும் ஒன்றின் மேல் ஒன்று சார்ந்திருக்கின்றன என்பது மனிதனின் சமூகப் பண்பிலிருந்து தெளிவாக விளங்குகிறது (இன்றைய உலகில் திருச்சபை - 25).

மனிதர் சமூக இயல்புள்ளவர்கள். ஒருவரோடுரொருவர் சார்ந்திருக்க வேண்டியவர்கள். சமூகமாய் வாழவேண்டியவர்கள். இன்று மனிதர் ஒருவர் ஒருவரோடு கொள்ளும் சார்பு மேன்மேலும் நெருங்கி, படிப்படியாகப் பாரெங்கும் பரவி, ஒரு அனைத்துலக சமூகமாக மாறிவருகின்றது. இதன் விளைவாக சமூகத்தின் நோக்காகிய பொது நலன் மேன்மேலும் அனைத்துலகத் தன்மை கொண்டதாக மாறிவிட்டது. அதாவது, அது மனித குலம் முழுவதையும் சார்ந்த உரிமைகளையும், கடமைகளையும் உள்ளடக்குகிறது.

> குழுக்களும், தனி உறுப்பினர்களும் தத்தம் நிறைவை முழுமையாகவும், ஏற்ற முறையிலும் அடைய உதவும் சமூக வாழ்வின் சூழ்நிலைகள் அனைத்தின் தொகுப்பே இன்று பொதுநலன் என்று அழைக்கப்படுகின்றது. மனிதர் உண்மை-

யிலேயே மனிதத் தன்மையோடு வாழத் தேவையானவை எல்லாம் அவர்களுக்குக் கிடைக்குமாறு செய்ய வேண்டும். இவை உணவு, உடை, உறைவிடம், தம் வாழ்கை நிலையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம், குடும்பம் அமைக்கும் உரிமை, மரியாதை உரிமை, சரியான தகவல் உரிமை, மதச் சுதந்திரம் என்பனவாகும். (இன்றைய உலகில் திருச்சபை - 26)

சமூகமென்பது ஒற்றுமையை நோக்காகக் கொண்டு, ஒன்றாக இணைந்த நபர்களின் கூட்டமாகும். அது இறந்த காலத்தைப் பற்றிக் கற்று, எதிர்காலத்தைத் திட்டமிடுகின்ற ஒரு சமூகமாகும். சமூகத்தின் வழியாக எல்லா மனிதர்களும் அதன் "உரிமையுடையவர்கள்" ஆகின்றனர். இதேபோன்று அவனது "தாலந்து"களின் வழியாக தமது எதிர்காலத்தை முன்னேற்றிக் கொண்டு, அவற்றை வளர்த்துக் கொள்வர். (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி 1880).

"மனித அபிவிருத்திக்காக" பங்குபற்றல் என்று அழைக்கப்படுவது ஒருவரோடொருவர் சமூக நல்வாழ்வுக்காகவும், பொது நன்மைக்காகவும் தன்னார்வத்தோடும், அர்ப்பணிப்போடும் முன்வருவதாகும். பொதுநன்மைக்காக ஒவ்வொருவரும் தமது நிலைமைகளுக்கும், வகிபாகத்துக்கும் ஏற்ப பங்களிப்புச் செய்ய வேண்டும். இக் கட்டாய கடமையானது மனிதத் தன்மையோடும், இயற்கையோடும் இணைந்து காணப்படுகிறது (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி 1913).

மனித அபிவிருத்தி, கிறிஸ்தவ பங்களிப்பு ஆகியன பற்றிப் பேசும்போது, சமூகத்தின் பொது நன்மை, மக்களின் முன்னேற்றம் என்பவற்றுக்காக அர்ப்பணித்தல் முக்கியமானதொரு விடயமாகும். சமூக, பொருளியல், கலாசார, அரசியல் ஆகிய அம்சங்கள், கிறிஸ்தவ பங்களிப்புகள், இறையாட்சி விழுமியங்களால் ஊட்டம் பெறும்போது, மனித சமூகம் இவ்வுலகை இறையாட்சி நிலவுகின்ற இடமாக மாற்றுகிறது. இறையாட்சியின் உதயத்துக்காக செயலாற்றுவது கிறிஸ்தவ அழைப்பாகும். இங்கு முதலாவதாக தனி நபருக்கு மதிப்பளிப்பது, இரண்டாவதாக சமூக நலனுக்காகவும், அபிவிருத்திக்காகவும் செயலாற்றல், மூன்றாவதாக சமூக அமைதிக்காகவும், ஒற்றுமைக்காகவும் உழைத்தல் எனும் மூன்று அம்சங்களும் மிகவும் முக்கியமானவை ஆகும்.

**தேர்ச்சி மட்டம் 10.2.** : தற்கால சமூக முரண்பாடுகளையும், கிறிஸ்தவர்களின் பொறுப்பையும் பற்றி விளங்கிக் கொள்வர்.

ஆதியில் தம் படைப்புகள் அனைத்தின் சிகரமாக மனிதனை தம் உருவாகவும் சாயலாகவும் படைத்த இறைவன், அனைத்துப் படைப்புகளையும் ஆண்டு நடத்தும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தார். அவன் அனைத்து வன்செயல்களையும், இம்சையையும் தவிர்த்து, எல்லாப் படைப்புகளோடும், இயற்கையோடும் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் ஒன்றிணைந்து வாழவேண்டுமென்பதே அவரது விருப்பம். அதுவே அவர் மனிதனுக்காக அமைத்து, அவனை வாழவைத்த "இன்பவனம்" என்ற உருவகத்தின் பொருளாகும். ஆனால் மனிதன் தன் ஆணவத்தினால், கீழ்ப்படியாமையினால் பாவத்தைக் கட்டினான். கடவுளிடமிருந்து பிரிந்து, அவருடைய கோபத்துக்கு ஆளானான். இன்பவனத்திலிருந்து விரட்டப்பட்டான். இன்பவனம் குறித்த அமைதி, மகிழ்வு, நிறைவு, அன்பு, ஒற்றுமை, ஒன்றிப்பு, ஒத்துழைப்பு அனைத்தையும் இழந்தான். மாறாக அவன் வாழ்க்கையில் பயம், அமைதியின்மை, தற்பெருமை, அகங்காரம், வெறுப்பு, பொறாமை, போட்டி, கோபம், பகை, சண்டை, கொலை போன்ற சகல தீய பண்புகளும் நுழைந்தன. மன அமைதியும், இயற்கையின் ஒத்துழைப்பும், விலங்கினங்களின் நட்புறவும் மறைந்தன. கடவுளிடமிருந்து பிரிந்த மனிதன் தனக்குள்ளும் பிளவுபடத் தொடங்கினான். மனித இனத்துக்குள்ளே போட்டியும், பூசலும், அவநம்பிக்கையும், முறுகல்களும், முரண்பாடுகளும், சண்டைகளும், போர்களும் தோன்றின. இந்த அவல நிலையிலிருந்து தன்னை விடுவிக்க, மறுபடியும் தன் தொடக்க நிலையை அடைய, இன்பவனம் குறித்த அமைதி, மகிழ்வு, நிறைவு, அன்பு, ஒற்றுமை, ஒன்றிப்பு, ஒத்துழைப்பைக் கொண்ட உலகைக் கட்டியெழுப்ப முயற்சிகள் பல செய்தான். ஆனால் அவனால் முடியவில்லை. ஏனெனில் இன்பவனத்தின் வாசலில் கடவுள் சுற்றிச் சுழலும் சுடரொளி வாளுடன் கெருபுகளை காவலுக்கு வைத்திருந்தார். எனவே கடவுள் ஒருவர்தான் அவனை தொடக்க நிலைக்கு மீளவும் கொண்டு சேர்க்க முடியும். அவனை மீட்க முடியும்.

நீதியுள்ள கடவுள் மனிதனை அவனின் கீழ்ப்படியாமைக்காகத்

தண்டித்தாலும், அவனுடைய பரிதாப நிலையைக் கண்டு அனுதாபம் கொண்டு, அவனைத் தொடக்க நிலைக்கு மீளவும் இட்டுச் செல்ல விருப்பம் கொண்டார். எனவேதான் ஆதியிலே தம்மோடு இருந்து மனிதனையும் உலகையும் படைத்த மகனை, மனிதனையும் உலகையும் இந்த அவல நிலையிலிருந்து மீட்டு, புதுக்கப் படைக்க. மீண்டும் தொடக்க நிலைக்கு அழைத்துச் செல்ல உலகிற்கு அனுப்பினார். மனித அவதாரம் எடுத்து உலகிற்கு வந்த இறைமகன் இயேசு, தம்முடைய வாழ்க்கை, போதனை, பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக மனிதனைக் கடவுளோடும், மனிதனை மனிதனோடும், இயற்கையோடும் ஒப்புரவாக்கி, மனிதனை அமைதி வாழ்வுக்கு இட்டுச் செல்லும் முயற்சியை மேற்கொண்டார். இந்த மனுக்குலத்திலே உலக முடிவுமட்டும் இந்த ஒப்புரவு முயற்சியை, அமைதியை ஏற்படுத்தும் வேலையைத் தொடர்ந்தாற்ற திருச்சபையை ஏற்படுத்தி, அப் பொறுப்பைக் கையளித்துச் சென்றார். எனவே இன்று உலகில் பதற்றங்களையும், முரண்பாடுகளையும் போரையும் களைந்து, அமைதியை, ஒற்றுமையை ஏற்படுத்துவது திருச்சபையின் உறுப்பினராகிய ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையும், பொறுப்புமாகும். இதையே திருச்சபை எங்களுக்குக் கற்பிக்கிறாள்.

## 10.2.1. முரண்பாடுகளைக் களைதலும், அமைதியைப் பேணலும்

மனித இனம், கடந்த காலங்களை விட, தற்காலத்தில் தன் ஒற்றுமையை அதிகமாக உணர்ந்துள்ளது. இன்று மக்களிடையே, குழுக்களிடையே, நாடுகளிடையே நெருங்கிய தொடர்புகளும், உறவுகளும் காணப்படுகின்றன. இன்று மனிதத் தன்மை கொண்ட ஒரு உலகினை மண்ணுலகில் உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவையெல்லாம் பாராட்டுக்கு உரியவையே. ஆனால் அதேவேளை போர்களையும், போர்க் களத்திலிருந்து வரும் தொல்லைகளையும், கவலைகளையும், அச்சுறுத்தல்களையும் இன்றைய உலகம் நாளாந்தம் சுவைத்து வருகின்றது. உலகின் எத்திசையிலும் போரும், போர்த் திகிலும், போர் அச்சுறுத்தல்களும் பரவலாகக் காணப்படுகின்றன. இதை நாம் அன்றாடப் பத்திரிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சி செய்திகளிலும் நாளாந்தம் படித்து, கேட்டு வருகிறோம்.

**இன்றைய போரின் கோரத் தன்மை**

விஞ்ஞானம், தொழில் நுட்பம், அறிவியலின் வளர்ச்சியால் பெரிதும் மாற்றமடைந்துள்ள இன்றைய போர் முறையானது மிகவும் கொடியது. புது வகையான சூழ்ச்சிகள், மறைந்திருந்து கவிழ்க்கும் சதித் திட்டங்கள், மிரட்டல் முறைகள், கொரில்லாப் போர்த் தந்திரங்கள் போன்றவையால் இன்றைய போர் மிகவும் கொடியதாக்கப்பட்டுள்ளது. அணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள், கிருமி ஆயுதங்கள் போன்ற புதிய போர்க் கருவிகளால் போரின் கோர விளைவுகள் மேன்மேலும் அதிகரித்துள்ளன. இவைகளை ஒரு முறை பாவித்தால் மக்களினமே முற்றாக அழிந்துவிடும். அண்மைக் காலங்களில் இடம்பெற்ற போர்களினால் பாரிய பொருள் அழிவுகளும், உயிர் அழிவுகளும், அறநெறி ஒழுக்க சீரழிவுகளும் ஏற்பட்டன. இதை கடந்த பல வருடங்களாக நம் நாட்டில் நடந்த உள்நாட்டுப் போரில் கண்டு அனுபவித்திருக்கிறோம். ஆனால் இன்று அணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள், கிருமி ஆயுதங்களின் உற்பத்தியினால் போரினால் ஏற்படக்கூடிய கோர விளைவுகள் நினைத்துப் பார்க்கவும் முடியாத அளவிற்கு மிகவும் மோசமடைந்துள்ளன. அது மட்டுமன்றி, இன்று ஒரு நாட்டில் போர் ஏற்பட்டால், இது பல நாடுகளுக்கும் உடனே பரவக்கூடிய ஆபத்தும் இருக்கின்றது.

**படைக் கலப் பந்தயம்**

இன்று பல நாடுகள் ஏட்டிக்குப் போட்டியாக பயங்கர ஆயுதங்களை பெருந் தொகையாக உற்பத்தி செய்தி, ஆயுதக் கிடங்குகளில் குவித்து வைத்திருக்கின்றன. பயங்கர ஆயுதங்களை ஏட்டிக்குப் போட்டியாகத் திரட்டி, ஆயுத வலிமையில் ஓரளவு சமநிலையை பிற நாடுகளுடன் கொண்டிருந்தால், வரக்கூடிய எதிரியின் தாக்குதலை இலகுவாக தடுத்து நிறுத்தலாமென இதற்குக் காரணம் கூறுகின்றனர். இக் கருத்து தவறானது. ஏனெனில் இவ் ஆயுதக் குவிப்பு தற்செயலாக, எதிர்பாராத போரைக் கிளப்பிவிடக் கூடிய சந்தர்ப்பத்தை, ஆபத்தை உருவாக்குகின்றது. இவ்வாறு போர்க் கருவிகளின் குவிப்பு அமைதியைக் குலைக்கக்கூடிய போர்ப் பயத்தை நிலைக்கச் செய்கின்றது.

திருச்சபையானது இப் போர்க் கருவிகளின் குவிப்பை "மனித

குலத்தைப் பீடித்திருக்கும் புரையோடிய புண்" எனக் கருதுகின்றது. நீதி, மற்றும் அமைதியை வளர்ப்பதற்கான திருத்தந்தையின் பணிக் குழு, "படைக்கலக் குவிப்பு ஓர் ஆபத்து... ஓர் அநீதி, ஒரு திருட்டு.... ஒரு தவறு... ஒரு குற்றம்... ஓர் அறிவற்ற செயல்" எனக் கண்டனம் செய்கின்றது. இப் படைக் கலப் பந்தயம் மனுக்குலத்தின் மேல் விரிபட்டிருக்கும் ஒரு பயங்கரச் சதி வலை. போர்க்கலக் குவிப்பால் ஏற்படும் சமநிலை போர்க்கான காரணங்களை ஒரு போதும் அழித்து விடுவதில்லை. மாறாக, ஆயுதங்கள் கைவசமிருப்பது. எடுத்ததற்கும் கொடிய தீர்வு முடிவுகளை எடுக்க, உடனுக்குடன் அவற்றைப் பாவிக்க மனிதரைத் தூண்டிவிடக் கூடும். ஆகவே ஆயுதக் குவிப்பு மனிதரை ஓர் நிரந்தரப் போர்த் திகிலுடன் வாழச் செய்கின்றது.

இன்று வல்லரசுகளின் ஆயுதக் கிடங்குகளில் குவிந்து கிடக்கும் போர்க் கருவிகள் முழுமையாகப் பாவிக்கப்பட்டால், எதிரிகள் இரு தரப்பினரும் மட்டுமல்ல, மனுக் குலம் முழுவதுமே முற்றாக அழிந்து-விடும். மேலும் இப் படைக்கலக் குவிப்பு ஏழைகளைத் துன்புறுத்தி வாட்டுகின்றது. இது அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி. ஏனெனில் ஏழைகளின் துயரத்தையும், வறுமையையும் துடைக்கப் பயன்படுத்தக் கூடிய பணம் போர்க் கருவிகளாக மாற்றப்பட்டு, ஆயுதக் கிடங்குகளில் குவிக்கப்பட்டுக் கிடக்கின்றன. போர்க் கருவிகளை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பெருந் தொகையான பணம் மக்களின் முன்னேற்றத்திற்காகச் செலவிடப்படுவது எத்துணை நன்மை பயக்கும். இந் நிலையில் இன்று போர் ஏற்படுவது தடைசெய்யப்பட வேண்டியதன் அவசர அவசியத்தை மக்கள் பலரும் உணர்ந்துள்ளனர். போர் ஏற்படு-வதைத் தடைசெய்யும் பொருட்டு இன்று பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காகத் துணிவுடன் உழைப்போரை நாம் பாராட்ட வேண்டும்.

**அமைதியின் இயல்பு**

போர் நிகழாதிருக்கும் நிலைமையே அமைதியெனக் கூற-முடியாது. சில வேளைகளில் இரு நாடுகளிடையே வல்லமையும், சக்தியும் ஈடு இணையாக இருப்பதால், போர் நிகழாமல் தடைப்படுகிறது. இது போர்த் தடையே அன்றி, அமைதி அல்ல. ஊரடங்கு போன்ற அடக்கியாளுகின்ற ஆட்சியினால் உருவாகுவதும் அமைதி அல்ல. அமைதியானது நீதியிலிருந்து உருவாகுகின்றது. நீதியின் அடிப்படையில்

இயங்குகின்றது. பழைய ஏற்பாட்டில் "அமைதி"யைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் சொல "சலோம்" (Shalom) ஆகும். அது போர் இல்லாத, வன்செயல்கள், முரண்பாடுகள் இம்சைகளற்ற சூழலை மட்டுமல்ல, அதற்கு மேலாக ஒருவரின் நியாயமான பொது எதிர்பார்ப்பு, சிந்தனைகளை நிறைவேற்றுவதன் வழியாக ஏற்படுகின்ற மன நிறைவால், திருப்தியால் பிறக்கின்ற மகிழ்ச்சியைக் குறிக்கிறது. அது ஒரு தனி மனிதரின் இதயத்தில் உண்டாகும் உணர்வைவிட, மக்கள் சமூகம் குழுவாகவும், ஒன்றாகவும் பெறுகின்ற அனுபவமாயிருக்கிறது. அனைவரினதும் தேவைகள் நிறைவேற்றப்படல், அனைவருக்கும் சம உரிமைகள் பெற்றுக்கொடுக்கப்படல், பகிர்ந்து கொள்ளப்படல் வழியாக நீதி நிறைவேற்றப்படுவதன் மூலம் பிறக்கின்ற முழுமையான திருப்தியை, மகிழ்ச்சியைக் குறிக்கிறது. "அமைதியானது நீதியினால் விளையும் பயன்" என்கிறார் இறைவாக்கினர் எசாயா (எசா. 32:17). அமைதியானது சகோதர அன்பிலும், இறையன்பிலும், பாரபட்சமற்ற தன்மையிலும் கட்டியெழுப்பப் படுகின்றது. "அவனியில் அமைதி" என்ற தம் சுற்று மடலில், "மனித இனத்தைப் படைத்த இறைவன், மனித சமுதாயத்தில் ஒரு ஒழுங்குமுறையையும் புகுத்தியிருக்கிறார். தனி மனிதர், குழுக்கள், நாடுகள் அனைத்தும் எல்லா மனிதருடையவும், குழுக்களுடையவும், மற்றும் நாடுகளுடையவும் உரிமையை மதித்துப் போற்ற வேண்டுமென்பதே இந்த ஒழுங்குமுறையின் கோரிக்கையாகும். இதுவே அமைதிக்கு வழியுமாகும். இந்த ஒழுங்குமுறையின் முதிர்ந்த கனியாகப் பிறப்பதுதான் அமைதி" என்கிறார் திருத்தந்தை 23ம் அருளப்பர். இறைவாக்கினர எசாயா அமைதிக்கு ஒரு புதிய வரைவிலக்கணம் தருகிறார்: "ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும். அக் குட்டியோடு சிறுத்தைப் புலி படுத்துக் கொள்ளும். கன்றும், சிங்கக் குட்டியும், கொழுத்த காளையும் கூடி வாழும். பச்சிளம் குழந்தை அவற்றை நடத்திச் செல்லும். பசுவும் கரடியும் ஒன்றாய் மேயும். அவற்றின் குட்டிகள் சேர்ந்து ஒன்றாய் படுத்துக்கிடக்கும்" (ஏசா. 11:6-9).

நீதியை ஆவலோடு தேடி அலையும் மக்கள் இவ் ஒழுங்குமுறையை நடைமுறையில் செயலாக்குகின்றனர். இதன் வழியாகத் தோன்றுவதே அமைதியாகும். மனித ஆட்களின் நலன் பாதுகாக்கப்பட்டு, மனிதர் ஒருவரொருவரின் மாண்பை மதித்து, தங்கள்

ஆன்மீக வளங்களை, திறன்களைப் பகிர்ந்து, சகோதர அன்புடன் உறவாடுவதன் வழியாகவே அமைதியை ஏற்படுத்தலாம். இவ் அமைதியை அனைவரும் கண்ணும் கருத்துமாய் வளர்க்க வேண்டும். மேலும், "உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் ஆகிய நான்கும் அமைதி-யைத் தாங்கி நிற்கும் நான்கு தூண்கள்" என்கிறார் திருத்தந்தை 23ம் அருளப்பர். தொடர்ந்து. "உலக அமைதிக்கு அடித்தளம் மனித உரிமைகள்... மனித உரிமைகள், குறிப்பாக சிறுபான்மையோரது உரிமைகள், மதிக்கப்படாத வரை உலகில் அமைதி ஏற்பட முடியாது" என்கிறார். இன்று அநேகமாக எல்லா நாடுகளிலும் பல தருணங்களில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. பல நாடுகளில் இனப் பாகுபாடு தாண்டவம் ஆடுகிறது. இந் நிலை மாறாமல் அமைதி ஏற்படப் போவதில்லை. மெசியாவின் படிப்பினைகளின்படி அமைதியை நிலை நாட்டுவதற்கு இரு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். (எசா. 9:7,11): (1) நீதி: ஒருவருக்கு உரித்தாக வேண்டிய பொதுவான உரிமைகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். (2) தார்மீகம்: இறைவனுடைய விருப்பத்தை ஆராய்ந்து அறிந்து, அதற்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டும். இதன்படி அமைதி என்பது தானாக உருவாகும் ஒன்றல்ல. நீயாயம், நீதி என்பவற்றை நிறைவேற்றுவதனால் வருவதாகும். நீதி எங்கே எங்கே நிறைவேற்றப் படுகின்றதோ, அங்கே அமைதி உதயமாகும்.

திருத் தந்தை 6ம் சின்னப்பர், "மக்களின் முன்னேற்றம்" என்ற தம் சுற்று மடலில், "அமைதிக்குப் புதுப் பெயர் மனித முன்னேற்றம்" என்கிறார். மேலும் மனித தேவைகள் காலத்துக்குக் காலம் மாறுபடு-கின்றமையாலும், மனித உள்ளங்கள் பாவத்தால் புண்பட்டிருப்பதாலும், அமைதியை நாம் எப்போதைக்கும் ஒரேமுறையாக அடைந்துவிட முடியாது. அப்படி அடைந்துவிட்டதொன்றாகக் கருதவும் முடியாது. மாறாக மீண்டும், மீண்டும் அதை அடைய இடையறாது உழைக்க-வேண்டும். அமைதிக்கு நீதி அடித்தளமாய் இருக்கின்றது. அன்பு அதனை வளர்க்கின்றது. அன்பினால் ஒவ்வொருவரும் பிறரையும், பிறரின் பழக்கவழக்கங்களையும், உரிமைகளையும் மதிக்க வேண்டும். அமைதியின் அரசராம் இயேசுக் கிறிஸ்து அன்பின் நிமித்தம் மனிதருக்காகச் சிலுவையில் இறந்து, அவர்களை மீண்டும் கடவுளோடு ஒன்றிக்கச்செய்தார். தங்கள் உரிமைகளுக்காக போராடிய பொழுதிலும்,

அன்பினால் ஏவப்பட்டு, அரக்கத்தனமான வழிகளை ஒதுக்கி வாழும் மக்களை பொதுச் சங்கம் பாராட்டுகின்றது.

**முரண்பாடுகள், போருக்கான அடிப்படைக் காரணங்கள்**

போரைத் தடைசெய்வதற்கு முதலில் போருக்கான அடிப்படைக் காரணங்கள் ஆராய்ந்து அறியப்பட்டு, அவை முற்றாக அகற்றப்பட வேண்டும். அநீதி, பொருளாதார ஏற்ற தாழ்வு, பொறாமை, அவநம்பிக்கை, என்பனவே முரண்பாடுகள், போர்ப்பூசலுக்கான பொதுவான காரணங்கள். அமைதியின் அடித்தளம் நீதியென்றால், அநீதியைக் களைவது அமைதியை நோக்கிச் செய்யும் பயணமாகும். மனித உரிமைகளை மதித்து, நீதிக்காக உழைக்கவேண்டும். நாடுகளிடையே காணப்படும் பொருளாதார ஏற்ற தாழ்வுகளை அகற்றி, பின்தங்கிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டும். ஏழை நாடுகள் எல்லாத் துறைகளிலும் ஒட்டுமொத்தமான முன்னேற்றம் காண விரும்புகின்றன. அது முறையானதே. எனவே பணக்கார நாடுகள் ஏழை நாடுகளுக்கு உதவ முன்வரவேண்டும். முற்றிலும் அமைதிக்காக உழைக்கும் அனைத்துலக நிறுவனங்களை அமைப்பதன் மூலமாகவும் போருக்கான காரணங்களை ஒழிக்க முடியும்.

எனவே மக்கள் தேவையான அளவு உணவு, உடல் நலம், கல்வியறிவு பெற இவ் அனைத்துலக நிறுவனங்கள் முயற்சி எடுக்க-வேண்டும். நம் நாட்டுத் தலைவர்களும், திருச்சபையின் தலைவர்களும் எவ்வளவு முயற்சிதான் எடுத்தாலும், மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படாமல் பயனில்லை. ஏனெனில் மனிதனும் மனுக்குலமும்தான் அமைதியை உருவாக்குபவர்கள். அதை வாழ்வில் வாழ்பவர்கள். ஒவ்வொரு மனிதனும் போரைத் தடைசெய்ய வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து, அதற்குத் தங்கள் சிறிய சிறிய அன்புப் பணியினால் தங்கள் பங்களிப்பை, ஒத்துழைப்பை நல்க வேண்டும். எனவே போரைத் தவிர்ப்பதற்கு மனித மனநிலையில் ஒரு மாற்றத்தைக் கொணர்வது இன்றியமையாதது. மக்களுக்கு, குறிப்பாக இளைஞருக்கு, அமைதியைக் கட்டியெழுப்பத் தூண்டும் உணர்வுகளைக் கற்பிக்க வேண்டும். முக்கியமாக பாவத்தால் சீர்கெட்டுள்ள மனித உள்ளங்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்கு இறையருளும், இடைவிடா முயற்சியும் தேவை.

மேலும் படைக்கலப் பந்தயத்துக்கு ஒரு முடிவு காண உழைக்க வேண்டும். மக்களினம் ஒன்றின் மேல் ஒன்று கொள்ளும் நம்பிக்கையிலிருந்துதான் அமைதி பிறக்கவேண்டுமேயொழிய, போர்க் கருவிகளைக் காட்டிப் பயமுறுத்தி நாடுகளின்மேல் அமைதியைத் திணிக்க முடியாது. எனவே போர்க் கருவிக் குவிப்புக்கு முடிவுகட்ட வேண்டும். சில நாடுகள் ஒரு தலைப் பட்சமாக நடவடிக்கை எடுத்து, படைக்கலக் குறைப்புச் செய்வது அவர்களின் எதிரிகளுக்குச் சாதகமாக அமைந்துவிடும். ஆகவே அனைத்துலக அதிகாரம் கொண்ட நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு. நாடுகளுக்கிடையே ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, படைக்கலக் குறைப்புக்காக உழைக்க வேண்டும். நாடுகளிடையே பகைமையும், அவநம்பிக்கையும், அவமதிப்பும் நிலவும் வரையில் அமைதிக்கான முயற்சிகள் அனைத்தும் பயனற்றவை. எனவே நாடுகள் மத்தியில் காணப்படும் பகைமை, அவநம்பிக்கை, அவமதிப்பு போன்றவற்றை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் போரினால் ஏற்படும் கோர விளைவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். உதாரணமாக, போரில் காயமுற்றவர்களையும், போர்க் கைதிகளையும் மனிதாபிமானத்துடன் நடத்த சர்வதேச ஏற்பாடுகளை உருவாக்குவதன் வழியாக போரின் கோர விளைவுகளை ஓரளவு குறைக்க முடியும். திருத் தந்தை 6ம் சின்னப்பர் படைக்கலக் குறைப்போடு முன்னேற்.றமும், புதிய உலக ஒழுங்கமைப்பும் இடம்பெற வேண்டுமெனக் கூறுகிறார். படைக்கலங்களை உற்பத்திசெய்யச் செலவிடப்படும் பணம் மக்களின் முன்னேற்றத்திற்காக செலவிடப்பட வேண்டும். அதேவேளையில் வளர்ச்சியடைந்த நாடுகளும், வளர்ந்துவரும் நாடுகளும் தங்களுக்கிடையிலான சமூக-பொருளாதார உறவுகளை நீதி, சமத்துவத்தின் அடிப்படையிலான புதிய ஒழுங்கமைப்பாக மாற்றிடவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக எல்லா நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அனைத்து நாடுகளையும் கட்டுப்படுத்தும் சட்டங்களை ஆக்க வல்லதும், அமைதியை நிலைநாட்டக் கூடியதுமான அனைத்துலக பொது அதிகார நிறுவனம் ஒன்று நிறுவப்பட வேண்டும். அதன் அவசியத்தை அனைவரும் உணர்ந்து, அதற்காக உழைக்க வேண்டும். அவ்வாறு ஒரு நிறுவனம் உருவாகு மட்டும், அமைதியின் வழியைப் பின்பற்ற தற்போதுள்ள பெலம் வாய்ந்த ஐக்கிய நாடுகள் சபை,

அதனுடன் தொடர்புள்ள நிறுவனங்களான அனைத்துலக தொழிலாளர் சம்மேளனம், உலக வங்கி, உலக சுகாதார நிறுவனம், ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனம், புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் போன்ற உலக நிறுவனங்கள் அனைத்தும் முன்வர வேண்டும். இத்தகைய அனைத்துலக நிறுவனங்களில் கிறிஸ்தவர்களும் பிற மதச் சகோதரர்களுடன் இணைந்து உழைக்க வேண்டும்.

**அமைதியை ஏற்படுத்துவதில் கிறிஸ்தவர்களின் பொறுப்பு, பங்களிப்பு**

கடந்த காலங்களைவிட இன்று மனித குலம் உலகில் அமைதியின் அவசியத்தை நன்கு உணர்ந்திருக்கிறது. உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்கு தனியாகவும், குழுக்களாகவும் இணைந்து பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடவுளின் அருளும், ஆசீரும், இரக்கமுமின்றி அவர்கள் முயற்சிகள் பயனளிக்க மாட்டா. ஏனெனில் கடவுளே அமைதியின் அரசர். உலகில் மனிதன் இழந்து தவிக்கும் அமைதியை ஏற்படுத்தவே கடவுள் தம் மகன் கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினார். மனிதரை கடவுளோடும், மனிதரை மனிதரோடும், மனிதரை அனைத்து உயிரினங்கள், இயற்கையோடும் ஒப்புரவாக்கி, அவர்கள் மத்தியில் நல்லுறவையும், அமைதியையும் ஏற்படுத்தவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். அவர் உலகில் பிறந்தபொழுது, வானதூதர்கள் “உலகில் கடவுளுக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக” எனப் பாடின.ர். இறைவனின் விருப்பத்தை அறிந்து, அதன்படி வாழ்வோருக்கு மட்டுமே இறைவனிடமிருந்து வருகின்ற அமைதியை அனுபவிக்கவும், அமைதியை உருவாக்கவும் இயலும். தம்மேல் நம்பிக்கை வைத்த ஒரு சிலரை அவர் தம் சீடர்களாகத் தேர்ந்தெடுத்து, அவர்களை தம்மோடு வைத்திருந்து ஒரு குழுவாக அமைத்து, தாம் செய்ய வந்த ஒப்புரவுப் பணியிலே தம்மோடு ஒத்துழைக்கவும், தமக்குப் பின் அப் பணியை உலகமெங்கும், உலக முடிவுமட்டும் தொடர்ந்தாற்றவும் அவர்களைப் பயிற்றுவித்தார். “அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்களெனப்படுவர்” எனக் கூறி, அமைதிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தல் அவர்களின் முக்கிய பொறுப்பு என்பதை உணர்த்தினார். “என்மீது அன்பு கொண்டுள்ளவர், நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார்.

என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம். அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றதல்ல". இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு, அதன் படி வாழ்கிறவர் இதயத்தில் அமைதியை அனுபவிப்பர். மனிதர்களுடைய தேவைகள். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்போது அவர்கள் தங்கள் இதயங்களில் அமைதியை அனுபவிப்பார்கள். இயேசு எமக்கு அளிப்பது உலகி-லுள்ளோர் அளிக்க முடியாத இதுபோன்ற உயர்ந்த அமைதியாகும். உலகம் அளிக்கும் அமைதியானது பிரச்சினைகள் இல்லாமல், பிரச்சினைகளை எதிர்கொள்ளாமல் விலகி வாழ்வதன் வழியாக ஏற்படும் அமைதி. ஆனால் இயேசு தரும் அமைதி எந்தப் பிரச்சினைகள், கவலைகள், துன்பங்கள் தானும் அழிக்க முடியாத அமைதி. இது வெளியிலிருந்து வராதது. இயேசு மற்றவர்களுக்காக வெறுமையாகி, தமது வாழ்வையே பலியாக்கி, அமைதிக்கு வழிவகுத்தார்.

> ஒரு காலத்தில் தொலையில் இருந்த நீங்கள் இப்போது இயேசுக் கிறிஸ்துவோடு இணைந்து, அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள். ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்ற சுவரை, தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து, அவர்-களை ஒன்று படுத்தினார். பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட யூதச் சட்டத்தை அழித்தார். இரு இனத்தவரையும் தம்மோடு இணைந்திருக்கும் புதியதொரு மனித இனமாகப் படைத்து, அமைதி ஏற்படுத்தவே இவ்வாறு செய்தார் (எபே. 2:14-16).

தம்முடைய பாடுகள், மரணம், உயிர்ப்பின் வழியாக தான் செய்ய வந்த ஒப்புரவுப் பணியை நிறைவேற்றி, அமைதியை ஏற்படுத்திய கிறிஸ்து, தம் சீடரகளைப் பலமுறை சந்தித்து, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என வாழ்த்தி, அந்த உயர்ந்த அமைதிக் கொடையை அவர்களுக்கு அளித்தார். இறுதியில், "தந்தை என்னை அனுப்பியது போல, நானும் உங்களை அனுப்புகிறேன்" எனக் கூறி, தான் நிறைவேற்றிய ஒப்புரவுப் பணியை மேலெடுத்துச் செல்லும், உலகில்

அமைதியை ஏற்படுத்தும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்து விண்ணேறினார். எனவே நாம் வாழும் சமுதாயத்தில் அமைதியை உருவாக்கி, கட்டியெழுப்பும் பொறுப்பு கிறிஸ்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் அன்புடன், அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். அர்ப்பணிப்பின்றி அமைதி பிறக்காது. "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா. 15:1-13). அன்பும், அர்ப்பணமும், அமைதியும் தொடர்புடையவை. கிறிஸ்தவத்தில் வனசெயல்களுக்கும், போர் மோதல்களுக்கும் இடம் இல்லை. துன்புறுத்தல்களுக்கு அகிம்சையால் பதிலளித்து, துன்புறுத்தல், வன்செயல்களைத் தோல்வியடையச் செய்வது கிறிஸ்தவர்களின் கடமையாகும். "உங்கள் வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" (மத். 5:39).

## 10.2.2. சூழல் பாதுகாப்பும் கிறிஸ்தவனின் பொறுப்பும்

அண்மைக் காலங்களில் திருச்சபை உலகச் சூழல், சுற்றாடல் மட்டில் தன் கவனத்தைச் செலுத்தி, அதைப் பாதுகாப்பதில் அரசாங்கத்துக்கும், குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கும், உரிய கடமைகள், பொறுப்புகளை வலியுறுத்தி வருகின்றது. இது பற்றி பல நூல்கள், கட்டுரைகள் எழுதப்பட்டு, எச்சரிக்கைகள் விடப்பட்டு. கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. ஏனெனில் இறைவன் இவ் இயற்கை உலகைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பை மனிதனுக்கு அளித்திருக்கின்றார். ஆனால் இன்று மாசடைந்து வரும் உலகச் சூழல், சுற்றாடல் மனிதனின் சுக வாழ்விற்கு, பாதுகாப்பிற்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக மாறிவருகிறது.

கல்வின் டெவிற் என்ற எழுத்தாளர் தான் எழுதிய "சுற்றாடலும் கிறிஸ்தவனும்" என்ற நூலில், இன்று பரவலாக இடம்பெற்றுவரும் ஏழு பூமியின் சீரழிவுகள் பற்றி எச்சரிக்கிறார். பாலைநிலமாக இருந்த நிலங்கள் விவசாய நிலமாக மாற்றப்பட்டு, பின்னர் விவசாய நிலத்திலிருந்து நகரங்களாக வெகு துரிதமாக மாற்றமடைந்து வருகின்றது. நாளொன்றுக்கு மூன்றுக்கு மேலான உயிரினங்கள் அழிந்து போகின்றன. நிலங்கள் கிருமிநாசினி, களைநாசினி, செடி கொல்லிகள், செயற்கை

உரங்கள் போன்ற பலவிதமான இரசாயனப் பொருட்களின் பாவனையால் சீரழிந்து வருகின்றன. வீசப்படும் இந்த அபாயகரமான இரசாயனப் பொருட்களும், கழிவுகளும் அவை புதைக்கப்படும் கிடங்குகளிலிருந்து தண்ணீருக்குள் கசிந்து வடிந்து தண்ணீரை மாசுபடுத்துகின்றன. சூழல் மாசடைதல் இன்று ஒரு உலகப் பிரச்சினையாக வளர்ந்து வருகிறது. மனித கழிவுப் பொருட்கள் கடற்கரைகள் எங்கிலும் ஒதுங்கி, அவற்றை மாசுபடுத்தி வருகின்றன. காலநிலை மாற்றமடைந்து வருகின்றது. பூமி வெப்பமடைந்து வருகிறது. இயற்கையானது அழிக்கப்பட்டு வருகிறது எனக் கூறுகிறார்.

இன்று உலக படைப்பானது மனிதனுடைய சுயநலத்திற்கும், பேராசைக்கும் அடிமையாக்கப்பட்டு வருகின்றது. பணக்காரர் தொழிற்சாலைகள் அமைக்க நிலத்தை அபகரித்தல், சோலைகளையும், காடுகளையும் அழித்தல், ஆறுகள், வாவிகள், ஏரிகள் போன்ற நீர் வளங்களை இரசாயனப் பொருட்களால் மாசுபடுத்தல், நிலத்தின் மேல்மண்ணை அகற்றி தரையின் செழிப்பை அழித்தல் போன்றவைகளால் உலகச் சூழல் நாளுக்குநாள் சீரழிந்துகொண்டே போகின்றது. அபிவிருத்தியின் பெயரால் நாடுகள் பாலைவனங்களாக மாறி, மக்கள் வசிக்க முடியாத இடங்களாக மாறுகின்றன. மேலும், இயந்திரத் தொழில் முறை போன்ற சில அபிவிருத்தி நடவடிக்கைகள் சுற்றாடலை மாசுபடுத்தி, மக்களுடைய இயல்பான வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கின்றன. அபிவிருத்தி வலயங்களுக்கு உள்ளும், வெளியிலும் உள்ள தொழிற்சாலைகள், சுற்றாடல் மாசடைவதால் மனிதருக்கும், விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் ஏற்படும் தீங்குகள் பற்றிய எவ்வித அக்கறையுமின்றிச் செயல்படுகிறார்கள். இரசாயனத் தூள்கள், நச்சுப் புகைகள், கிருமி நாசினிகள் போன்றவை நகரச் சூழலில் வசிப்பவர்களுக்கு, குறிப்பாக ஏழைகள், உதவியற்றவர்களின் வாழ்வில், பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இன்று தொடர்பு சாதனங்கள் வழியாக பூமி வெப்பம் அடைதல், சுற்றாடல் மாசடைவதால் அழிந்து போகின்ற உயிரினங்கள், தாவரங்கள், மழையைக் கொணரும் சோலைகள், காடுகளின் அழிப்புகள், அணுசக்தி விபத்துகள், கால நிலை மாற்றங்கள், கடல் நீர் மட்டம் உயருதல், பூமி அதிர்ச்சிகள், சுனாமிப் பேரலைகள், பூகம்பங்கள் போன்ற

பேராபத்துகள் பற்றிய பல்வேறு செய்திகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. என்றுமில்லாதவாறு பூமியானது இன்று மனிதர்களால் அழிவடைந்து வருகிறது. அது எவ்வளவு காலம் நீடிக்குமோ என்பது எவருக்கும் தெரியாது. ஆனால் கிறிஸ்தவர்கள் மத்தியில் அவைபற்றிய அக்கறையோ, கர்சனையோ காணப்படுவதில்லை. தங்களுக்கு வேறு பல பிரச்சினைகள் உள்ளதால், சுற்றாடல், சூழல் மாசுபடுதல் பிரச்சினை பெரும்பாலும் வேறு யாருடையதோ வேலையெனக் கருதி வாழ்கின்றனர். அதிகமான கிறிஸ்தவர்கள் சூழல் பிரச்சினையின் ஆபத்துபற்றிய அறியாமையில் வாழ்ந்து வருகிறார்கள். பூமியின் பாலும், அதில வாழும் படைப்புகள் பாலும் தங்களுக்குள்ள புனித கடமை, பொறுப்பை அவர்கள் உணர்வதில்லை.

**சூழல், சுற்றாடல் பாதுகாப்பு மட்டில் கிறிஸ்தனின் பொறுப்பு**

திருவிவிலியமானது படைப்புகள் மட்டில், சூழல், சுற்றாடல் மட்டில் மனிதனுக்குள்ள கடமை, பொறுப்புப் பற்றிய தெளிவான கருத்துக்களைக் கொண்டுள்ளது. தொடக்க நூலில் காணப்படும் முதல் படைப்பின் கதையிலே படைப்புகள் அனைத்தின்மீதும் கடவுளின் அதிகாரத்தையும், வல்லமையையும் வெளிப்படுத்தி, உறுதிப்படுத்துவதே ஆசிரியரின் நோக்கமாக இருக்கிறது. ஆதலால் படைப்பின் தொடக்கத்தில் காணப்பட்ட ஒழுங்கற்ற, அமைப்பற்ற, வெறுமையான தன்மையைக் குறிப்பிட்டு, எப்படி கடவுளின் படைப்பாற்றலால், ஒரு வார்த்தையால் ஒழுங்கு, அமைவு, நிறைவு ஏற்பட்டது எனக் கூறுகிறார். "தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்த பொழுது மண்ணுலகு உருவமற்று வெறுமையாக இருந்தது" (தொ.நூ. 1:1). படைப்பு அனைத்தும், இயற்கையும், சூழலும் இறைவனின் அதிகாரத்தினாலேயே உண்டாக்கப்பட்டன. பின்னர் இறுதியாக இறைவனின் சாயலாகவும், உருவாகவும் படைக்கப்பட்ட மனிதன், சூழலின் பொறுப்பாளியாகவும், தலைவனாகவும் நியமிக்கப்பட்டான். படைப்பைப் பாதுகாப்பதற்கு மனிதன் இறைவனால் நியமிக்கப்பட்டான். "மானிடரை நம் உருவிலும், சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" (தொ.நூ. 1:26). அவை அனைத்தும் மனிதனுக்கே முன்பே உண்டாக்கப்பட்டவை. பின்னர் இறுதியாக இறைவனின் சாயலாகவும்

உருவாகவும் படைக்கப்பட்ட மனிதன் சூழலின் பொறுப்பாளியாகவும், தலைவனாகவும் நியமிக்கப்பட்டான். படைப்பைப் பாதுகாப்பதற்கு மனிதன் இறைவனால் நியமிக்கப்பட்டான். மனிதன் அவன் செய்த பாவத்திற்காகச் சபிக்கப்பட்ட பின்னரும், அவனிடமிருந்து அப் பொறுப்பு ஒருபொழுதும் விலக்கிக் கொள்ளப்படவில்லை. கடவுள் மனிதரிடம் ஒப்படைத்த சூழலைப் பாதுகாக்கவேண்டியது இன்றும் மனிதராகிய எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

மேலும் இறைவன் தனது படைப்பு அனைத்தும் "மிகவும் நன்றாக" இருந்ததாகக் காண்கிறார் (தொ.நூ. 1:31). இந்த நன்றான தன்மையை, அழகான தன்மையை, இயற்கையின் அழகை மாசடையச் செய்யாமல், அழிவுக்கு உட்படுத்தாமல் பாதுகாப்பதும், அதை மென்மேலும் அழகுள்ளதாக்குவதும் மனிதனது கடமையாகும். முழுப் படைப்பையும் மனிதனிடம் ஒப்படைத்து, அதனைப் பாதுகாப்பதற்கு இறைவன் மனிதனோடு உடன்படிக்கை செய்து கொண்டார. "ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்." (தொ.நூ. 2:15). எனவே சூழலின் பொறுப்பை ஏற்பது மட்டுமல்ல, அதனை விருத்தி செய்வதும், பண்படுத்துவதும், அழகு படுத்துவதும், பாதுகாப்பதும் மனிதனது முக்கிய பொறுப்பாகும்.

படைப்பைப் பற்றிய இரண்டாம் கதையில் (தொ.நூ. 2:3-3:24), இறைவன் ஒரு தோட்டம் அமைத்து, அங்கு பார்ப்பதற்கு அழகானதும், உண்பதற்குச் சுவையானதுமான பழங்களைக் கொண்ட எல்லாவித மரங்களையும் வளரச் செய்து, மனிதனை அங்கே வைத்தார் (தொ.நூ. 2:9). இங்கு ஆசிரியர் "ஆதாம்" என்ற சொல்லை மண்ணுக்கும் மனிதனுக்கும் பயன்படுத்தி, மனிதன் மண்ணோடு எவ்வளவு தொடர்புடையவன் என்பதை உணர்த்துகிறார். மனிதன் நிலத்தின் மண்ணால் படைக்கப்பட்டுள்ளான். நிலத்தின் செறிவு செழிப்புள்ள பலனைத் தருகிறது. எனவே அது பண்படுத்தப்பட வேண்டும். நிலம் பண்படுத்தப்பட வேண்டுமெனில், அது பாதுகாக்கப்பட வேண்டும். அதனை மனிதனே பாதுகாக்க வேண்டும். இங்கு நிலத்தை, பூமியை, இயற்கையை, சூழலைப் பாதுகாப்பது மனிதனின் பொறுப்பு என்பது மீண்டும் உணர்த்தப்படுகிறது.

திருவிவிலியத்தின் கண்ணோட்டத்துக்கு இணங்க நிலத்தைப் பண்படுத்துவது, இறைவனை மகிமைப்படுத்தும் செயல். அதாவது இறைவனைப் புகழ்வதாகும். சூழலையும், இயற்கையையும் விருத்தி செய்வதும், பாதுகாப்பதும் இறைபுகழ்ச்சியென்பதால், அதன் பொறுப்பின் சிறப்பான தன்மையை நாம் விளங்கிக் கொள்ளலாம். மனிதனுக்கும் சூழலுக்கும் இடையில் இருப்பதுபோல, மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையேயும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மனிதன் மண்ணால் படைக்கப்பட்டான். அதேபோல் விலங்குகளும் மண்ணிலிருந்து படைக்கப்பட்டன. (தொ.நூ. 2:7,19). சில விவிலிய வல்லுநர்களின் கருத்துப்படி, தொடக்க நூலின் 2ம் அதிகாரத்திலுள்ள படைப்புக் கதை, 9ம் அதிகாரத்திலுள்ள நோவாவுடன் செய்துகொண்ட கடவுளின் உடன்படிக்கையோடு தொடர்பு படுத்தி விளங்கிக் கொள்ள வேண்டும். "எனக்கும் உங்களுக்கும், உங்களுடன் இருக்கும் உயிருள்ள எல்லாவற்றுக்குமிடையே தலைமுறைதோறும் என்றென்றும் இருக்கும்படி நான் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாக என் வில்லை மேகத்தின் மேல் வைக்கிறேன். எனக்கும் மண்ணுலகுக்கும் இடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது இருக்கட்டும்" (தொ.நூ. 9:12-13). இந்த உடன்படிக்கையானது இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே மட்டும் ஏற்படுத்தப்பட்ட ஒன்று அல்ல. மாறாக மண்ணுலகும், சூழலும், இயற்கையும் இதில் இணைக்கப்பட்டுள்ளபடியால், மனிதன் படைப்பு அனைத்தினதும் பொறுப்பை ஏற்றுள்ளான்.

**திருப்பாடல்களில் சூழல் ஆன்மீகம்**

இறைவனுடைய படைப்பில் மனிதனே முதலிடத்தை வகிப்பதாக திருப்பாடல்களும் உணர்த்துகின்றன.

> அவர்களைக் கடவுளாகிய உமக்குச் சற்றே சிறியவர் ஆக்கியுள்ளீர். மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர். ஆடுமாடுகள், எல்லா வகையான காட்டு விலங்குகள், வானத்துப் பறவைகள், கடல் மீன்கள், ஆழ்கடலில் நீந்திச் செல்லும் உயிரினங்கள் அனைத்தையும் அவர்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் (தி.பா. 8:4-7).

இம் மாபெரும் படைப்பின் வழியாக மனிதன் இறைவனை மகிமைப்படுத்துகிறான். இயற்கையினால் செய்ய முடியாத புகழ்ச்சி, நன்றி என்பனவற்றை, மனிதன் தனது வழிபாட்டினாலும், புகழ்ச்சிப் பாடல்களினாலும் நேரடியாகச் செய்வதின் ஊடாக முழுப் படைப்பிலும் முதன்மைப் படைப்பு அவனே என்பதை திருப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. அதிலுள்ள நன்றி, புகழ்ச்சிப் பாடல்களில் காணப்படும் ஒளி, வானம், நிலம், மரம், செடிகள், சூரிய சந்திர மண்டலங்கள், மீன்கள, பறவைகள், மலைகள், மலைச் சிகரங்கள், சமுத்திரங்கள், நிலத்தின் அடித்தளம், ஆழங்கள், பள்ளத்தாக்குகள், மலைத் தொடர்கள் போன்றவற்றை மனிதன் நினைத்துப் பார்க்கும்போது, இறைவனின் படைப்பின் மீதுள்ள அதிகாரத்தை ஆழமாகப் புரிந்து கொள்கிறான்.

திருவிவிலியத்தில் கடவுள் நாம் எவ்வளவு கவனத்துடன் படைப்பைப் பாதுகாத்து, பயன்படுத்தவேண்டுமென எதிர்பார்க்கிறாரென உணர்த்தும் உதாரணங்கள் பல உள்ளன. இஸ்ரயேலர் ஆண்டவர் கொடுத்த பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டு நிலத்தை எப்படி தாபரிக்க வேண்டுமென அறிவுரை வழங்குகிறார்:

> நான் உங்களுக்கு வழங்கும் நாட்டில் நீங்கள் வந்து சேரும்போது, நாடு ஆண்டவருக்கென்று ஓய்வு நாளைக் கொண்டாட வேண்டும். ஆறு ஆண்டுகள் வயலைப் பயிரிட்டுத் திராட்சைக் கொடிகளை கிளைநறுக்கி, அவற்றின் பலனைச் சேர்ப்பாய். ஏழாம் ஆண்டு ஆணடவருக்காக ஓய்ந்திருக்கும் ஆண்டு. நிலத்துக்கும் ஓய்வு வேண்டும். வயலைப் பயிரிடாமலும், திராட்சைக் கொடிகளை கிளைநறுக்காமலும் இருங்கள். தானாய் விளைந்த பயிரை அறுக்காமலும், கிளைநறுக்காத திராட்சைக் கொடியிலிருந்து பழங்களைச் சேர்க்காமலும் இருக்க வேண்டும். அது நிலத்துக்கு ஓய்வு நாள் (லேவி. 25:2-5).

இஸ்ரயேலர் வீட்டு மிருகங்களையும், காட்டு விலங்குகளையும் எவ்வாறு கவனிக்க வேண்டுமெனக் ஆண்டவர் கூறுகிறார்.

> போர் அடிக்கும் மாட்டின் வாயைக் கட்டாதே... உன் இனத்தவன் ஒருவனின் ஆடோ, மாடோ வழிதவறித் திரிவதைக் கண்டும், அதைக் காணாதவன்போல் இருந்துவிடாதே. அதை உன் இனத்தவனிடம் திருப்பிக் கொண்டு போ. அவன் வெகு தொலைவிலிருந்தால், அல்லது அவன் யாரென்று நீ

அறியாதிருந்தால், அதை உன் வீட்டுக்குள் கொண்டுபொய் உன்னோடு வைத்துக் கொள். அவன் அதைத் தேடி வரும்போது அதை அவனிடம் திரும்பக் கொடு. உனக்கு அடுத்திருப்பவனின் கழுதையோ, மாடோ வழியில் விழுந்து கிடப்பதைக் கண்டும், காணாதவன்போல் இருந்து விடாதே. அதைத் தூக்கிவிட அவனுக்கு உதவி செய். வழியோரமாய், மரத்திலோ, தரையிலோ குஞ்சுகள் அல்லது முட்டைகள் உள்ள பறவைக் கூட்டையும், அந்தக் குஞ்சுகள் அல்லது முட்டைகள் மேல் தாய் உட்கார்ந்து கொண்டிருப்பதையும் கண்டால், குஞ்சுகளோடு தாயைப் பிடிக்காதே. தாயைப் போகவிடு. குஞ்சுகளை உனக்கென எடுத்துக்கொள் (இ.ச. 25:2, 22:6-7)

**கடவுள் எவ்வளவு கவனத்துடன் தன் படைப்புகளைப் பராமரித்து வருகிறாரென்று உணரத்தப்படுகிறது:**

வெள்ள த்திற்குக் கால்வாய் வெட்டியவர் யார்? இடி மின்னலுக்கு வழிவகுத்தவர் யார்? மனிதர் வாழா மண்ணிலும், மாந்தர் குடியிராப் பாலையிலும் மழை பெய்வித்துப் பாழ்வெளிக்கும் வறண்ட நிலத்திற்கும் நீர் பாய்ச்சிப் பசும்புல் முளைக்கச் செய்தவர் யார்? மழைக்குத் தந்தை உண்டோ? பனித் துளிகளைப் பிறப்பித்தவர் யார்? (யோபு 38:25-28).

**கிறிஸ்துவின் சூழலுடனான தொடர்பு**

நமக்கு வாழ்வும், வழியும், வழிகாட்டியுமாக வந்த நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் வாழ்வும், படிப்பினைகளும் அவர் வாழ்ந்த பாலஸ்தினா நாட்டின் அழகிய சூழலுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்ததை நாம் நற்செய்திகளில் படிக்கிறோம். பாலஸ்தினாவின் பாலைவனம், மலைத் தொடர்கள், மரஞ்செடிகள், மிருகங்கள், பறவைகள், பூக்கள், பழங்கள், குளம் குட்டை, நதிகள், ஆற்றுப் படுக்கைகள், கடல், வானம், சூரியன், சந்திரன் காற்று, என்பன அவரது வாழ்வில் ஒருபோதும் புறம்பாக இருக்கவில்லை.

அவருடைய பிறப்பின்போது விண்ணகமும், மண்ணகமும் மகிழ்ச்சியில் மிதந்தன. “உடனே விண்ணகத் தூதர் பேரணி அந்தத் தூதருடன் சேர்ந்து, “உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக’ என்று

கடவுளைப் புகழ்ந்தது" (லூக். 2:14). விண்மீன்கள் வானில் ஒளிர்ந்தன. "அவரது விண்மீன் எழக் கண்டோம். இதோ! முன்பு எழுந்த விண்மீன்தோன்றிக் குழந்தை இருந்த இடத்திற்கு மேல் வந்து நிற்கும்வரை அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது" (மத். 2:2,9-10). அவர் யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றபோது, வானம் திறக்கப்பட்டு. தூய ஆவியார் புறா வடிவில் வந்திறங்கினார். "அவர் ஆற்றிலிருந்து கரையேறிய உடனே வானம் பிளவுபுடுவதையும், தூய ஆவி புறாவைப் போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார்" (மாற். 1:10). தம் பணியின் போது அவர் இயற்கைக்கும், சூழலுக்கும் அதிபதியாயிருந்தார். இயற்கை அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்தது (மாற. 4:35-41, மத். 14:22-35). வாழ்க்கையைப் பற்றியும், நாளைய நாளைப் பற்றியும் கவலைப்பட வேண்டாமென நிகழ்த்திய போதனை இயற்கையோடு அற்புதமாகத் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. "வானத்துப் பறவைகளை நோக்குங்கள். அவை விதைப்பதுமில்லை. அறுப்பது-மில்லை. களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ண-கத் தந்தை அவற்றுக்கும் உணவளிக்கிறார்" (மத. 6:26). "காகங்களைக் கவனியுங்கள். காட்டுச் செடிகள் எப்படி வளர்கின்றன எனக் கூர்ந்து கவனியுங்கள்" (லூக். 12:24-27). சூழல், இயற்கை என்பன வழியாக இறைவெளிப்பாடு நிகழ்கிறது. அதன் வழியாக இறை வல்லமையை உணர முடிகிறது. "துன்ப நாட்கள் முடிந்த உடனே கதிரவன் இருண்டு விடும், நிலா தன் ஒளி கொடாது, விண்மீன்கள் வானத்திலிருந்து விழும், வான்வெளிக் கோள்கள் அதிரும்" (மத். 24:29-31). அவருடைய பாஸ்கா மறைபொருளுக்கும் ஒலிவ மலை, கெஸ்தமானித் தோட்டம், கொல்கொத்தா, கீதேன் குளம், சிலுவை மரணத்தின்போது உண்டான காரிருள், நில நடுக்கம், பாறைகள் பிளத்தல், கல்லறைகள் திறத்தல் ஆகிய செயல்கள், சூழல் என்பனவற்றிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது.

திருவிவிலியத்தின் மேற்கூறப்பட்ட பகுதிகளில் நாம் காணும் இறைவனின் கொடையாகிய இயற்கை பற்றி சிந்திக்கும்போது, சூழலைப் பேணல், இயற்கையைப் பாதுகாத்தல், விருத்தி செய்தல் கிறிஸ்தவனின் கடமை, பொறுப்பென்பது தெளிவாக விளங்குகிறது. எனவே சூழலை மாசடையச்

செய்தல், அழித்தல், என்பன கிறிஸ்தவ கண்ணோட்டத்துக்கு முரணானவை. ஆகவே தாம் வாழும் சூழலின் தூய்மையைப் பேணுதல், பாதுகாத்தல், சூழலின் அழகைப் பேணுதல் ஆகியவற்றிற்கு கிறிஸ்தவன் கடமைப்பட்டுள்ளான். அது இயற்கையின் நீதியை நிறைவேற்றுவதாகும். எனவே இரசாயன உலகம், தாவர உலகம், விலங்குகள் உலகம், மற்றும் மனித உலகம் ஆகியவற்றைப் பாதுகாத்து, அபிவிருத்தி செய்வதற்கு மனிதன் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். அவன் இறைவனுடனும், ஏனைய மனிதர்களுடனும், இயற்கையுடனும் நெருங்கிய உறவைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பது இங்கு தெளிவாகியுள்ளது.

**சூழல் சுற்றாடல் மட்டில் கிறிஸ்தவனின் பொறுப்பு பற்றிய திருச்சபையின் படிப்பினை**

இயற்கையை அழித்தல், சூழல் சுற்றாடலை மாசுபடுத்துதல் என்பன இன்று மனுக்குலத்தின் மீது போடப்பட்டுவரும் ஒரு பெரும் பயங்கர வலை எனப் பார்த்தோம். அதே வேளையில் இயற்கையையும், அதன் சுற்றாடல் சூழலையும் பாதுகாக்கும் பொறுப்பைப் பெற்றுள்ள மனிதரும், குறிப்பாகக் கிறிஸ்தவர்களும், அதுபற்றிய எவ்வித அக்கரையோ, கர்சனையோ இன்றி, வாழாவிருப்பதும் நாம் காணும் ஒரு பரிதாப நிலை. இந்நிலையில்தான் திருச்சபை இயற்கை, சுற்றாடல் சூழல் மட்டில் கிறிஸ்தவர்களின் பொறுப்பையும் கடமையையும் எடுத்துரைத்து, விழிப்புடன இருந்து, ஆவனவற்றைச் செய்யும்படியாக வலியுறுத்தி வருகின்றது. அண்மைக் காலங்களில் வெளிவந்து கொண்டிருக்கும் திருத்தந்தையரின் சுற்று மடல்களும், கூற்றுக்களும். மற்றும் அறிக்கைகளும் இப்பாரிய பொறுப்பையே எடுத்துக் கூறுகின்றன.

மனிதன் உலகப் படைப்புகளின் உரிமையாளன் அல்ல. கடவுள் தாம் படைத்த உலகைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பை மட்டுமே மனிதனிடம் ஒப்படைத்திருக்கிறார். ஆகவே மனிதன் படைப்பின் மேல் கொண்டிருக்கும் அதிகாரம் தன் விருப்பப்படி படைப்புகளைத் துர்ப்பிரயோகம் செய்யவோ, அல்லது அவற்றை அழிக்கவோ, அல்லது வீண்விரயம் செய்யவோ அவனுக்கு உரிமை அளிக்கவில்லை. அவன் கடவுளுக்கும், தன் சக மனிதருக்கும் இதுபற்றி கணக்குக் கொடுக்க-வேண்டும். எனவே கிறிஸ்தவர்கள் கடவுள் நம்மிடம் ஒப்படைத்திருக்கும்

கொடைகளாகிய இயற்கை, சூழல், சுற்றாடலை பெறுமதி மிக்கவையாகக் கருதி, நேசித்து, மதிக்கவேண்டும். அவற்றை அழிக்காமல், அவற்றின் மேல் தன் அதிகாரத்தைச் செலுத்த வேண்டும் எனத் திருச்சபை எச்சரிக்கின்றது.

ஆனால் இன்று நடப்பது என்ன? காலம் சென்ற திருத் தந்தை ஆறாவது சின்னப்பர், "எவ்வித நிதானமுமின்றி இயற்கையைச் சுயநலத்திற்காக உபயோகிப்பதனால், மனிதன் இயற்கையை அழித்து, அதன் விளைவாகத் தானே அதற்குப் பலியாகி, தானே தனக்குக் கேட்டைத் தேடிக்கொள்கிறான். சுற்றாடல் மாசு அடைதல், கழிவுப் பொருட்கள், புதிய நோய்கள், முற்றிலும் அழிவு ஆற்றல் வளர்ந்துவரும் இன்றைய உலகச் சுற்றாடல் மனிதனுக்கு நிலையான அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது. அதுமட்டுமல்ல, மனித திட்டங்கள் மனிதனுடைய கட்டுப்பாட்டையே மீறி, எவராலும் சகித்துக் கொள்ள முடியாத ஒரு பயங்கரச் சூழலை ஏற்படுத்துகிறது" என எச்சரிக்கின்றார்.

இந் நிலைபற்றிய தம் கவலையை வெளிப்படுத்தும் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர், "வரையறைக்கு உட்பட்ட இயற்கை மூலவளங்கள் அருகி வருவதால், நாம் அவற்றைக் கட்டுப்பாடின்றிப் பயன்படுத்தக் கூடாது" என்றார். சுற்றாடலை மதித்து வாழ்ந்த புனித பிரான்சிஸ்கு அசீசியாரை கத்தோலிக்கருக்கு ஒரு முன்மாதிரிகையாக முன்வைத்தார். அவர் பறவைகளையும், விலங்குகளையும், காடுகளையும், இயற்கையையும், சூழலையும் மிகவும் நேசித்தார். மேலும் சுற்றாடலை அழித்தல், மாசுபடுத்தல் தலையான பாவங்களில் ஒன்று என எச்சரித்த திருத்தந்தை, காலநிலை வெப்பமடைதல், நிலம் கரைதல், காடுகள் அழிப்பு, கனிப்பொருள், கடல் மூலதனங்களைச் சூறையாடுதல் போன்றவற்றை எதிர்த்துப் போராடுவது கிறிஸ்தவர்களின் பாரிய பொறுப்பு என்றார்.

மேலும் வேறொரு உரையில், "இன்றைய சமுதாயத்தை வாட்டிவதைக்கும் முக்கிய பிரச்சினை சூழல், சுற்றாடல் பிரிச்சினை ஆகும். இப் பிரச்சினைக்கான காரணிகளை நாம் அறிவோம். இன்றைய மனிதன் வாழ்வதிலும் வளர்வதிலும் பார்க்க, சொந்தமாக்குவதிலும் அனுபவிப்பதிலும் மிகுந்த ஆசையுள்ளவனாக இருக்கிறான். எனவே தன் வாழ்வினதும் பூமியினதும் மூலவளங்களை ஒழுங்கின்றியும், அளவின்றியும் அழித்து விழுங்குகிறான். அவை இருப்பதற்கான காரணத்-

தையும், கடவுள் அவற்றைப் படைத்த நோக்கத்தையும் அவன் சிந்திப்ப-தில்லை. தன் விருப்பங்களைக் கட்டுப்படுத்தாமல், தான் விரும்பியமாதிரி பூமியையும், அதன் மூலவளங்களையும் அப்படி அழிக்க அவனுக்கு முடியாது. அவற்றை அழிப்பது அல்ல, மாறாக அவற்றை பாதுகாப்பதும், வளர்ப்பதுமே அவன் பொறுப்பு. சுற்றாடலைப் பாதுகாப்பது மனித உயிரைப் பாதுகாப்பதாகும்." என்றார்.

பிறிதொரு உரையில், "உலக அமைதியானது . ஆயுதப் போரினாலும், பிரதேச முரண்பாடுகளினாலும், மக்களிடையேயும், நாடுகளிடையேயும் தொடர்ச்சியாக இடம்பெறும் அநீதிகளினாலும் மட்டுமல்ல, இன்று இயற்கைக்குரிய மதிப்பை, அதற்குரிய முக்கியத்து-வத்தை அளிக்காததினாலும், இயற்கை வளங்களைச் சூறையாடுவ-தனாலும், வாழ்க்கையின் தரம் குறைவடைவதினாலும் அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இந்நிலை ஏற்படுவதற்கான காரணம் பொதுவான தன்னலம், மற்றவர்களைப்பற்றிய கர்சனை இல்லாமை, நேர்மையற்ற தன்மை என்பனவாகும். சுற்றாடல் பரவலாக மாசுபடுத்தப்பட்டு. அழிக்கப்பட்டு வருவதனால், மக்கள் தாங்கள் முன்னர் இயற்கைப் பொருள்களைப பயன்படுத்தியதைப்போல் இன்று தொடர்ந்து இயற்கைப் பொருள்களைப் பயன்படுத்த முடியாதென்பதை உணர்கின்றனர். பொது மக்களும், அரசியல் தலைவர்களும் இப் பிரச்சினைபற்றி மிகவும் கவலைப்படு-கின்றனர். வெவ்வேறு துறைகளிலுமுள்ள நிபுணர்கள் கூடி, இதற்கான காரணங்களை ஆராய்ந்து வருகின்றனர். அதன் விளைவாக பூமி பற்றிய ஒரு புது விழிப்புணர்வு ஏற்பட்டு வருகின்றது. அது வளர்ந்து உறுதியான உருப்படியான திட்டங்களாகவும், செயற்பாடுகளாகவும் மாற கிறிஸ்தவர்கள் ஊக்குவிக்கவேண்டும்."

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர், தான் வெளியிட்ட "ஆசியாத் திருச்சபை" என்ற சுற்று மடலிலே பினவருமாறு கூறுகின்றார்: "பொருளாதார தொழில் நுட்ப வளர்ச்சிகள் சுற்றுப்புறச் சூழலின் சமநிலை பற்றிய அக்கரையின்றிச் செல்லும்போது, நமது பூமி அதிகமான சுற்றுப்புறப் பாதிப்புகளுக்கு உள்ளாகிறது. இது தொடர்ந்த மனிதர்களைப் பாதிக்கின்றது. பூமியிலுள்ள செல்வங்கள் நுகரப்படவும், இன்பத்திற்காகச் சுரண்டப்படவும் உள்ள பொருட்களே என்ற எண்ணம் உள்ளவரை சுற்றுப்புறச் சூழல் மதிக்கப்படாத நிலை ஏற்படும்.

கிறிஸ்தவர்கள், மற்றும் படைப்புக் கடவுளை ஏற்றுக்கொள்ளும் அனைவரும் படைப்புலகின் மேல் மரியாதை கொண்டு, இயற்கையையும், சுற்றுச் சூழலையும பாதுகாக்கும் கடமையைக் கொண்டுள்ளார்கள். படைப்புக் கடவுள் மனிதனை இயற்கையை அறிவுடனும் பொறுப்புடனும் நடத்தும் நிர்வாகியாகப் பணித்தாரேயொழிய, இரக்கமற்ற சுரண்டல்-காரனாக அதனை அழிக்க அல்ல. சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பது வெறும் தொழில் நுட்பப் பிரச்சனை அல்ல. இது எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு அறநெறிப் பிரச்சனை. தங்களுடைய நலனுக்காக மட்டுமன்றி, எதிர்காலத் தலைமுறையினரின் நலன்களுக்காகவும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது அனைவரினதும் கடமையாகும்" (இல.41).

இரண்டாம் வத்திக்கான் சங்கம் அதனுடைய "இன்றைய உலகில் திருச்சபை" என்ற கொள்கை திரட்டிலே, "ஒவ்வொரு மனிதருக்கும், மக்கள் யாவருக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காகவே கடவுள் மண்ணுலகையும், அதில் உள்ள அனைத்தையும் ஆக்கினார். எனவே படைப்பு நலன்கள் அனைத்தும் நீதியை வழிகாட்டியாகவும், அன்பைத் துணையாகவும் கொண்டு, அடிப்படையில் சரிசமமாக எல்லா மனிதருக்கும் சென்று சேர வேண்டும். மண்ணுலகின் நலன்கள் அனைத்து மனிதருக்கும் பொதுவானவை என்பதை எல்லோரும் கருத்தில் கொள்ளவேண்டும். இந்நலன்களைப் பயன்படுத்தும் மனிதர்கள் முறையான வழியில் தாம் உடைமையாகக் கொண்டிருக்கும் பொருள்க-ளைத் தமக்கே உரியனவாக மட்டுமன்றி, எல்லாருக்கும் பொதுவான-வையாகவும் கருதவேண்டும். அதாவது, தமது உடைமைகள் தமக்கு மட்டுமன்றி, பிறருக்கும் பயன்படுவதற்காகவே உள்ளன எனக் கொள்ள-வேண்டும்" என எச்சரிக்கிறது.

சுற்றாடல் மாசடைவதையிட்டு அடிக்கடி குரல் எழுப்பிவரும் இன்றைய திருத்தந்தை 16ம் பெனடிக்ற், அண்மையில் வட இத்தாலியில் குருக்களுக்கு உரையாற்றும்போது, "படைப்புகளின் பொறுப்பை இறைவன் மனிதரிடத்தில் ஒப்படைத்துள்ளார்" என்றார். மேலும், "படைப்புகளின் மேல் மனிதனுக்கு கடவுள் அதிகாரம் வழங்கியி-ருக்கிறார்" என்ற திருச்சபையின் படிப்பினைதான் சுற்றாடலின் சீரழிவுக்கு ஒரு காரணம் என்று சிலர் கூறும் குற்றச்சாட்டை மறுத்த திருத்தந்தை, சூழல் அழிவடைவதற்கு முக்கிய காரணம் இன்று உலகில் காணப்படும்

கடவுள் இல்லையென்ற உலகாயுதப் கொள்கையே. கடவுள் இல்லையென்று வாழும் மனிதர் இலகுவாகத் தங்களை அனைத்துப் படைப்புகளினதும், இயற்கையினதும் சர்வதிகாரி ஆக்கிக்கொள்கின்றனர்" என்றார்.

இவற்றிற்கு எதிராகக் கிறிஸ்தவர்கள் குரல் கொடுக்க வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய ஆபத்தான விளைவுகளை மக்கள் உணரச் செய்தல் வேண்டும். சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு ஏதுவான சட்டங்களை ஏற்படுத்த அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். இவற்றை மீறுபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். ஏனெனில் மனித சமுதாயத்தில் ஏதேது உண்மையோ, நல்லதோ, அழகுடையதோ அவற்றையெல்லாம் ஏற்று, உயர்த்தி வளர்க்கத் திருச்சபை கடமைப்பட்டுள்ளது.



VADO·PARARE
VOBIS·LOCVM

**தேர்ச்சி மட்டம் 10.3.** : கிறிஸ்தவ ஒன்றிப்புக்காவும், பல்வேறு சமயங்களுடன் உரையாடலுக்காகவும் மிகப் பொறுப்புடன் செயற்படுவர்.

அனைத்து மதங்களும் மனிதரை நல்வழிப்படுத்தவும், அவர்களை ஒழுக்கமாக வாழப் பயிற்றவும், இறைவனிடம் இட்டும் செல்லவுமே உலகில் தோன்றின. ஆனால் நாம் இன்று வாழும் உலகை சற்று உற்று நோக்குகையில், உலகெங்கும் நடைபெற்று வரும் பதற்ற நிலைகளுக்கும், முரண்பாடுகளுக்கும், போர்பூசல்களுக்கும் மதங்களே முக்கிய காரணமாக இருப்பதை அவதானிக்கிறோம். மதமானது இலகுவில் உணர்ச்சிகளைக் கிளப்பிவிடக் கூடிய, சண்டையைத் தூண்டிவிடக்கூடிய ஒரு விடயமாக இருக்கிறது. மதத்துடன் மனிதனின் மீட்பு, நிலைவாழ்வு, மறுவுலக வாழ்வு என்பன சம்பந்தப்பட்டிருப்பதால், அதில விட்டுக்கொடுப்பது, இணக்கப்பாட்டுக்கு வருவது கடினமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, பலருடைய தனித்துவம் அவர்கள் பின்பற்றும் மதத்தோடு ஒன்றித்திருக்கிறபடியால், மத நம்பிக்கையை தாக்குவது அல்லது எதிர்ப்பது ஒருவரின் உயிரையே தாக்குவதற்கு, எதிர்ப்பதற்கு ஒத்ததாக மதக் கடும்போக்காளரால் கருதப்படுகிறது. மேலும் மதங்களில் இருக்கும் சில அம்சங்களும் முரண்பாடுகளுக்கு மறைவான காரணங்களாக அமைகின்றன. ஒவ்வொரு மதத்திலும் அவர்கள் எவ்வித கேள்வியும் எழுப்பாமல், விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்ளவேண்டிய சத்தியங்களும், உண்மைகளும் உள்ளன. அவை ஏனைய மதங்களில் ஏற்றுக்கொள்ளும் விசுவாச உண்மைகளுக்கு இடமளியாத, விட்டுக்கொடுக்காத மனநிலைக்கு இட்டுச் செல்கின்றன. அவை கடவுளின் வார்த்தைகளென்றால், எப்படி அவற்றை விட்டுக் கொடுப்பது?

மேலும் வேத நூல்களும், சத்தியங்களும் தெளிவில்லாதவை. எனவே அவற்றிற்கு விளக்கங்கள் தேவைப்படுகின்றன. இதனால் யார் கொடுக்கும் விளக்கம் சரியெனக் கேள்வி எழும்புகிறது. பொதுவாக அநேகமானோர் மிதமான விளக்கத்தை ஏற்றுக் கொண்டாலும், சில கடும்போக்காளர்கள் அதனை ஏற்க மறுத்து, குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள். சிலவேளைகளில் ஒரு மதத்துக்குள்ளேயே பிரிவினைகள், பிளவுகள் உண்டாகின்றன. ஒவ்வொரு மதத்திலும் அடிப்படைவாதிகள்,

கடும்போக்காளர்கள் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் தங்கள் மதத்தை வலியுறுத்தி, மிகைப்படுத்தி, அரசியலுடன் தொடர்பு படுத்தி, தேசீயவாதத்துக்கு இட்டுச் செல்கிறார்கள். இதன் விளைவாக மதங்களுக்கிடையில் முறுகல் நிலைகள் ஏற்படுகின்றன. சில மதத்தவர்கள் தங்கள் மதத்தைப் பரப்பி, அதைப் பின்பற்றுவொரின் தொகையை அதிகரிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். வேறு சிலர் மற்ற மதங்கள் பரவுவது தங்கள் மதத்துக்கு ஆபத்து என்று கருதி, மற்ற மதங்களைத் தடைசெய்கிறார்கள். மதங்களுக்கிடையிலான இத்தகைய முரண்பாடுகளின் நிமித்தம் பலர் மதங்களில் விசுவாசத்தை இழந்து, கடவுள் மறுப்புக் கொள்கைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இத்தகைய மோதல்கள், முரண்பாடுகள் பெருபாலும் ஏனைய மதத்தைப் பற்றிய போதிய அறிவில்லாமையாலும், புரிந்துணர்வு இல்லாமையாலும், வீண் சந்தேகங்கள் வழியாக ஏற்படுகின்றன. எனவே அதைத் தவிர்க்கவேண்டும். இன்று உலகில் காணப்படும் பல் வேறு மதங்களில் கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து, புத்த மதம் என்பன முக்கிய மதங்களாகக் கணிக்கப்படுகின்றன. அவற்றைப் பின்பற்று-கிறவர்கள்: கிறிஸ்தவர்கள் 2.1 பில்லியன், 33ூஇ இஸ்லாமியர் 1.5 பில்லியன் , 21ூஇ இந்துக்கள் 900 மில்லியன் , 16ூஇ புத்த மதத்தினர் 376 மில்லியன், 6ூ. இம் மதங்களுக்கிடையே கலந்துரை-யாடல்களை ஏற்படுத்தி, ஏனைய மதங்களைப் பற்றிய அறிவை வளர்த்து, புரிந்துணர்வை வளர்த்து, ஏனைய மதங்களை மதித்து, அவற்றிலுள்ள நல்லவைகளை ஏற்று, அவற்றுடன் நல்லுறவை ஏற்படுத்த திருச்சபை விரும்புகிறது. இரண்டாம் வத்திக்கான சங்கம் இதை ஊக்குவிக்கிறது. அதன் விளைவாக இன்று மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

## 10.3.1. இலங்கையிலுள்ள முக்கிய கிறிஸ்தவ சபைகள்

**கத்தோலிக்க திருச்சபை**

இன்று இத் திருச்சபை பொதுவாக உரோமன் கத்தோலிக்க திருச்சபை என்று அழைக்கப்படுகிறது. இத் திருச்சபை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக, எருசலேமில், நம்

ஆண்டவரும், இறைமகனும், மீட்பருமாகிய இயேசுக் கிறிஸ்துவினால் ஆரம்பிக்கப்பட்டது (மத் 16:18-19). அனைத்துலக மீட்பராகிய இறைமகன் இயேசுக் கிறிஸ்துவின்மேல் விசுவாசம் கொண்டு, அவருடைய போதனைகளை ஏற்று, அவர் பெயரால் திருமுழுக்குப் பெற்று, அவர் ஏற்படுத்திய அதிகாரத்தின் வழிநடத்துதலின்கீழ் வாழ்வோரின் சமூகத்தையே நாம் இன்று உரோமன் கத்தோலிக்க திருச்சபையென்று அழைக்கிறோம். இத் திருச்சபையின் சிறப்புப் பண்புகளாக ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தொலிக்கம் என்னும் நான்கு இலட்சணங்கள் உள்ளன.

**ஏகம்** என்னும் பதம் சபையினர்களுக்கிடையில் உள்ள ஒருமைப்பாட்டைக் குறிக்கிறது. இந்த ஒற்றுமை அவர்கள் ஏற்று விசுவசிக்கும் மறை உண்மைகளிலும், அவர்கள் கீழ்படிந்து வாழும் தலைமைத்துவத்தின் ஒருமைப்பாட்டிலும், அவர்கள் பங்கெடுக்கும் பொதுத் திருவழிபாடுகளிலும், திருவருட்சாதனங்களிலும் காணக் கிடக்கின்றன.

**பரிசுத்தம்** என்பது திருச்சபையின் மாசுமறுவற்ற தன்மையைக் குறிக்கிறது. திருச்சபை பாவிகளைத் தன் உறுப்பினர்களாகக் கொண்டிருந்தாலும், அது தன்னிலே மாசுமறுவற்றது. மேலும் அது பாவிகளாகிய தன் உறுப்பினர்களைப் பரிசுத்தமாக்கும் போதனை-களையும், திருவருட்சாதனங்களையும் கொண்டுள்ளது.

**கத்தோலிக்கம்** என்பது திருச்சபை எந்தவொரு நாட்டினருக்கும், இனத்தவருக்கும், பண்பாட்டுக்கும் மட்டுப்படுத்தப் பட்டதல்ல. அது அனைத்து நாட்டினருக்கும், அனைத்து பண்பாடுகளுக்கும், அனைத்து மொழியினருக்கும், அனைத்துக் காலத்துக்கும் உரியது என்ற திருச்சபையின் பொதுத் தன்மையைக் குறித்து நிற்கிறது.

**அப்போஸ்தொலிக்கம்** என்பது இறைமகன் இயேசுக் கிறிஸ்துவால் தாபிக்கப்பட்ட திருச்சபை, அப்போஸ்தலர் காலந்தொட்டு, இன்று வரை தொடர்ச்சியாக இருந்து வருவதைக் குறிக்கிறது. அதன் தலைமைத்துவமும் அப்போஸ்தலர்களைத் தொடர்ந்து, முறிவின்றி நீடித்து வருவதையும் உணர்த்துகிறது.

இந் நான்கு இலட்சணங்களையும் தன்னகத்தே ஒருங்கே

கொண்டுள்ள கிறிஸ்தவர்களின் சமூகத்தையே நாம் கத்தோலிக்க திருச்சபையென அழைக்கிறோம். அதன் முதன் தலைவராகிய திருத்தூதர் பேதுருவைப் பின்தொடர்ந்து, உரோமையின் ஆயராக நியமனம் பெறுபவரையே ஆரம்பகாலம் தொட்டு இன்று வரை இச் சபையினர் தம் தலைவராக ஏற்று வருகின்றனர். இன்று கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகம் உரோமையில் உள்ளது. அதன் தலைவராக திருத்தந்தை 16வது பெனடிக்ற் இருக்கிறார். அவரது தலைமைத்துவத்தின் கீழ் 3000 மேற்பட்ட ஆயர்கள் உலகமெங்கும் வாழும் 2.1. பில்லியனுக்கு மேற்பட்ட சபையினருக்குத் தலைமை தாங்கி, அவர்களை வழிநடத்தி வருகிறார்கள். உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான மறைமாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மறை மாவட்டமும் ஒரு ஆயரின் கீழ் இயங்குகிறது. மறைமாவட்டங்கள் பல பங்குகளாகப் பிரிக்கப்பட்டு, பங்குத் தந்தையினரால் வழிநடத்தப்படுகிறது.

கத்தோலிக்க திருச்சபையானது இலங்கைக்கு 1505 இல் போர்த்துக்கேயரால் கொண்டுவரப்பட்டது. சிலருடைய கருத்தின்படி புதிய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே கிறிஸ்தவம் இலங்கையில் இருந்துவருகிறது. இன்று இலங்கையில் 11 மறைமாவட்டங்களும், 18 ஆயர்களும், 391 பங்குகளும், 955 குருக்களும், 2926 துறவிகளும், 1.4 மில்லியன் (7%) விசுவாசிகளும் இருக்கிறார்கள். ஆயர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, 1899 இல் இலங்கை ஆயர் மன்றத்தை அமைத்திருக்கிறார்கள். இந்த ஆயர் மன்றத்தின் வழிநடத்துதலின் கீழ் பலவேறு கத்தோலிக்க தேசிய ஆணைக் குழுக்களும், தேசிய அமைப்புகளும், இயக்கங்களும் ஆரம்பிக்கப்பட்டு, மக்களுக்கு பல்வேறு துறைகளில் அரும்பணி ஆற்றி வருகிறது. இதுவே இலங்கையிலுள்ள மிகப் பெரியதும், பழமை வாய்ந்ததுமான கிறிஸ்தவ சபையென்பது குறிபிடத்தக்கது.

**இலங்கைத் (அங்கிலிக்கன்) திருச்சபை:**

அங்கிலிக்கன் சபையானது 16ம் நூற்றாண்டில் இங்கிலாந்து அரசர் 8வது ஹென்றியினால் ஆரம்பிக்கப்பட்டது. அச் சபையைச் சேர்ந்த கிறிஸ்ரியன் டேவிட் தலைமையில், 1801ம் ஆண்டு வந்த "கிறிஸ்தவ அறிவை வளர்க்கும் சபை"யே முதலில் இலங்கை வந்த கிறிஸ்தவ சபையினராகும். தொடர்ந்து லண்டன் மிஷனறிச் சபையைச்

சேர்ந்த நான்கு முன்னோடி மறைபரப்பாளர்கள் 1805ம் ஆண்டில் வந்து, அவர்களுடன் இணைந்து கொண்டனர். அவர்கள் தம் மறைபரப்புப் பணியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தனர். அவர்கள் அங்கிலிக்கன் சபையை "இலங்கைத் திருச்சபை" என ஒரே திருச்சபையாக அறிமுகப்படுத்தினர். அவர்கள் பல ஆலயங்களையும், பாடசாலைகளையும் கட்டியெழுப்பினர். அத் திருச்சபையின் முதல் ஆலயமாக "பந்தேகம கிறிஸ்து" ஆலயம் கட்டப்பட்டது. 1840 இல் இலங்கையில் குருக்களைப் பயிற்றுவிப்பதற்காக பயிற்சி நிலையமொன்றையும் ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் இலங்கைத் திருச்சபையின் நிர்வாகமானது பிரித்தானிய ஆயர்களுக்குக் கீழ் இருந்தது. 1845 இல் இலங்கை ஒரு தனிமாவட்டமாக உருவாக்கப்பட்டது. இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் முதல் ஆயராக அதி வந்தனைகுரிய ஜேம்ஸ் சாப்மன் அடிகளார் நியமிக்கப்பட்டார். 1945 ஒரு இலங்கையரை ஆயராக நியமிக்க அனுமதி கிடைத்தது. முதல் சுதேச அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயராக அதி வந்தனைக்குரிய லக்தாஸ் டி மெல் நியமிக்கப்பட்டார். அவர் இலங்கை அங்கிலிக்கன் திருச்சபைக்கு தேசிய முகத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். 1950 இல் குருநாகல் மறைமாவட்டம் உருவாகியது. இந்த மறைமாவட்டங்கள் சுயாதீனமாகச் செயல்படுகின்றன. ஆயர்கள், குருக்கள், பொது நிலையினரை உள்ளடக்கிய மறைமாவட்ட ஆலோசனை சபையின் வழியாக மாவட்டங்களுக்குரிய திட்டங்களும், தீர்மானங்களும், கொள்கைகளும் மேற்கொள்ளப் படுகின்றன. இன்று ஏறக்குறைய 30,000 உறுப்பினர்கள் இலங்கைத் திருச்சபையில் இருக்கின்றனர்.

**பப்ரிஸ்ற் திருச்சபை:**

பப்ரிஸ்ற் திருச்சபையானது 1609 இல் ஒல்லாந்து நாட்டில ஆம்ஸ்ரர்டோமில் ஆரம்பமாகியது. இவர்கள் குழந்தைகளுக்கு திருமுழுக்கு அளிக்கப்படாதென்றும். வளர்ந்தவர்களுக்கே. அதுவும் தண்ணீரில் அமிழ்த்தியே அளிக்கப்படவேண்டுமென்றும் வலியுறுத்தினர் மேலும் விசுவாசத்தின வழியாகவே மீட்பு என்றும், திருவிவிலியமே விசுவாச வாழ்வுக்கான ஒரே அதிகாரமென்றும், திருச்சபைகளின் தனிச் சுதந்திரத்தையும் அறிக்கையிட்டனர். அத்துடன் விசுவாசப் பிரமாணங்களை எதனையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1812ம் ஆண்டில் இச் சபையைச் சேர்ந்த வண. ஜேம்ஸ் சாட்டரின் தலைமையில்

பர்மாவிலிருந்து வந்த பப்ரிஸ்ற் சபையினர் (அவருடைய மனைவியும் நான்கு பிள்ளைகளும்) கொழும்பிற்கு வந்து, அங்கு தம் நடுநிலையத்தை அமைத்தனர். ஜேம்ஸ் சாட்டர் கொழும்பில், பெற்றாவில் தம் பணியை ஆரம்பித்து, 1829 வரை துரித மறைதூதுப் பணியில் ஈடுபட்டார். பெற்றா அந்நாட்களில் ஒரு சிறிய கிராமமாகவே இருந்தது. ஆங்கிலத்தில் நடைபெற்ற வழிபாட்டிற்கு சில ஆங்கில படை வீரரும், பறங்கியருமே வந்தனர். 1851 இல் ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டது. அந்தச் சிறிய குழுவினர் ஞாயிறு தோறும் வழிபாட்டுக்கு ஒன்று கூடினர். அவர்களில் ஒருவரான கென்றிக் சியேர்ஸ் என்பவர் சிலேவ் ஐலண்டில் போதிக்கத் தொடங்கினார். சிங்கள மொழியைக் கற்ற சாட்டர், கிராண்ட் பாசில் ஒரு சிறிய சிங்கள குழுவை ஆரம்பித்தார். அவர்களுடைய ஆரம்பம் சிறிதாகவிருந்தாலும் பின்னர் அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும், குறிப்பாக இரத்தினபுரி, தங்காலை, கடவத்தை, கண்டி, மாத்தளை போன்ற இடங்களில் ஆலயங்களையும், பாடசாலைகளையும் அமைத்தனர். கொழும்பில் அவர்கள் அமைத்த கேரி பப்ரிஸ்ற் கல்லூரி குறிப்பிடத் தக்கது. பப்ரிஸ்ற் சபையின் குருவான சாள்ஸ் காடர்கேவின் முயற்சியின் நிமித்தம் சிங்கள-ஆங்கிலம், ஆங்கிலம்-சிங்களம் அகராதிகள் எழுதப்பட்டு, வெளியிடப்பட்டன. பின்னர் வந்த சபையின் மறைத் தூதுப் பணியினர் அப்பணிகளைத் தொடர்ந்து செய்தனர். இன்று இச் சபையில் 2,200 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

**மெதடிஸ்ற் திருச்சபை:**

மெதடிஸ்த சபையானது வண. யோண் வெஸ்லி என்பவரால் அங்கிலிக்கன் சபையின் ஒரு பிரிவாக ஆரம்பிக்கப்பட்டது. 1814ம் ஆண்டில் இலங்கை வந்த ஆறு பேர் அடங்கிய வெஸ்லியன் மறைபரப்பாளர்கள் மேற்குக் கடலோரமாக காலித் துறைமுகத்தை வந்தடைந்து, வலிகம என்ற கிராமத்திற்குச் சென்றனர். அவர்களுக்குத் தலைமைதாங்கி வந்த கோக் அடிகளார் கடற் பயண்தின்போது மரணமடைந்தார். எஞ்சியவர்கள் தம் நிலையத்தை வலிகமவில் அமைத்து, மேற்குக் கரையோரப் பகுதிகளில் தம் பணியை ஆரம்பித்தனர். மறை பரப்புதல், பாடசாலைக் கல்வி, சுகாதாரப் பணி போன்றவற்றில் விசேட கவனம் செலுத்தினர். 1828ம் ஆண்டளவில், 54 பாடசாலைகளையும், ஒரு அச்சுக்கூடத்தையும், சில சுகாதார நிலையங்களையும், அனாதை இல்லங்களையும் அமைத்து நிர்வகித்தனர். அவற்றுள் கொழும்பில்

வெஸ்லி, மெதடிஸ்ற் கல்லூரிகள், கண்டியில் கிங்ஸ்வூட், காலியில் றிச்மொன்ட் போன்ற பாடசாலைகள் குறிப்பிடத் தக்கவை. அவர்கள் கொழும்பு டாம் வீதியில் அமைத்த ஆலயமே இன்று ஆசியாவில் பழமை வாய்ந்த மெதடிஸ்ற் ஆலயமாகும். பலவேறு கஷ்டங்களின் மத்தியிலும் பின்தனை போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த மக்களை தம் திருச்சபையில் சேர்த்துக்கொள்ள முயற்சிகள் எடுத்தனர். இன்று இச் சபையில் 17,049 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

**பிறெஸ்பிற்றேரியன் திருச்சபை**

பிறெஸ்பிற்றேரியன் திருச்சபையானது 1707ம் ஆண்டில் ஸ்கொட்லாந்தில் ஆரம்பமாகியது. இச் சபை பொதுவாக கல்வினின் இறையியல் கொள்கைகளைப் பின்பற்றுகிறது. அவர்கள் கடவுளே அனைத்துலகின் ஆண்டவரென்றும், திருவிவிலியமே நம் விசுவாசத்தின் ஒரே அதிகாரமென்றும், விசுவாசத்தின் வழியாக மட்டுமே மீட்பு என்றும் நம்புகின்றவர்கள். இவர்கள் திருத்தந்தையை திருச்சபையின் தலைவராக ஏற்றுக்கொள்வதில்லை. இச் சபையானது ஒல்லாந்தர் காலத்தில் 1712 இல் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு, காலியில் தன் பணியை ஆரம்பித்தது. அது ஒல்லாந்தரின் வரவேற்புடனும், ஆதரவுடனும் மிக விரைவாகப் பரவியது. கொலோனித்துவ காலத்தில் அது வளர்ச்சி அடைந்திருந்தது. அதன் மறைத்தூதுப் பணி கொழும்பு கண்டி ஆகிய பிரதேசங்களில் நடைபெற்றது. பல பாடசாலைகளைக் கட்டி மாணவருக்குக் கல்வி புகட்டினர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து சமூக மாற்ற காரணங்களின் நிமித்தம் அச் சபை நலிவடைந்தது. இன்று இலங்கையில் அவர்களுக்கு ஒரேயொரு ஆலயம்தான் உண்டு - கொழும்பிலுள்ள புனித அந்திரேயா பிறெஸ்பிற்றேரியன் ஆலயம். ஒரு மிக அழகான ஆலயமாகக் கருதப்படுகிறது. அது கொழும்பில் வாழும் ஸ்கொட்லாந்து மக்களின் மையமாக இருந்துவருகிறது. வழிபாடுகள் ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றது. அதில் எவரும் பங்கெடுக்கலாம். அதன் அங்கத்தவர்களுள் சில இலங்கையர்களும், இலங்கையில் குடியேறிய சில வெளிநாட்டவர்களும், சர்வதேச உல்லாசப் பயணிகளும் அடங்குவர். அவர்கள் அதிகமாக சமூகப் பணியிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

**அமெரிக்க மிஷன் திருச்சபை:**

அமெரிக்க மிஷன் சபையைச் சேர்ந்த சாமுவேல் நியுவெல் என்பவர் தன் குடும்பத்துடன் 1813ம் ஆண்டில் இலங்கைக்கு வந்தார். காலியில் வந்திறங்கிய அவர்கள் யாழ்ப்பாணம் சென்றனர். ஏனெனில் சில அரசியல் காரணங்களின் நிமித்தம் முதல் 40 வருடங்களுக்கு அவர்கள் சிறிய யாழ்ப்பாண குடாநாட்டிலேயே பணிபுரிய அனுமதிக்கப்பட்டனர். எனவே ஆரம்பத்தில் 1813-1850 வரை தம் பணியை குடா நாட்டிலேயே செய்தனர். 1816 இல் எட்வேட் உவாறன் என்பவரும் அவர்களுடன் இணைந்து கொண்டார். அவர்கள் தம் மறையைப் பரப்புவதற்றகாக மிகவும் பாடுபட்டனர. கல்விக்குப் பிராதான இடமளித்து, கல்வியின் மூலம் தம் மறையை ஒளிபெறச் செய்தனர். பல இடங்களில், சிறப்பாகக் கிராமப் புறங்களில், வதிவிட, ஆரம்ப, உயர்தர, கிராம, மத்திய, மத்திய நேர, பெண்களுக்கென்று வெவ்வேறான பாடசாலைகளை ஆரம்பித்தனர். அவர்கள் சுதேச சிறுவர்களின் கல்வியிலேயே கூடிய கவனம் செலுத்தினர். மாணவ மாணவிகள் பாடசாலைகளில் இலவசமாக தங்கியிருந்து கற்கக்கூடிய விடுதி வசதிகளைச் செய்து கொடுத்தனர். நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து, அச்சிட்டு, வெளியிட்டனர். அவர்களே 1820இல் யாழ்ப்பாணத்தில் முதல் அச்சகத்தை ஆரம்பித்தவர்கள். தெல்லிப்பளை அமெரிக்க மிஷன் பாடசாலை 1816 இல் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் பெண்களின் கல்வியிலும் அக்கரை எடுத்தனர். உடுவில் பெண்கள் கல்லூரி 1824 இல் கரியற் வின்ஸ்லோ எனபவரால் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1848 க்கு முன் யாழ்ப்பாணத்தில் 105 தமிழ் பாடசாலைகளும், 16 ஆங்கிலப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1823ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் திறனுள்ள மாணவர்களுக்கென ஒரு மத்திய உயர்தர பாடசாலையையும், ஒரு குருமடத்தையும் அமைத்தனர். திறனும் அறிவாற்றலும் உள்ள சுதேச ஆண்களையும், பெண்களையும் தெரிந்தெடுத்து, தம் பாடசாலைகளில் கற்பிக்க ஆசிரியர்களாகப் பயிற்றுவித்தனர். வெவ்வேறு இடங்களில் ஒன்பது மறைப்பணி மையங்களும் திறக்கப்பட்டன. சுகாதாரத் துறையிலும் அவர்கள் தங்கள் பங்களிப்பைச் செய்தனர். பண்டத்தரிப்பிலும், மானிப்பாயிலும் வைத்தியசாலைகளை அமைத்தனர். அவர்களின் கல்வித் தாபனங்களும், சுகாதார நிலையங்களும் இன்றும் நினைவு கூரப்படுகின்றன. யாழ்ப்பாணத்

தமிழர்களின் அறிவுத் திறனுக்கு அவர்கள் ஒரு முக்கிய காரணமாய் விளங்குகின்றனர். அவர்கள் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பல சமூக சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தனர்.

**திருச்சபை மறைத்தூதுப் பணி சங்கம் (CMS):**

இங்கிலாந்து அங்கிலிக்கன் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட "சேர்ச் மிஷனறி சபை" (CMS) யைச் சேர்ந்த நான்கு மறைபரப்பாளர்கள் திரு. லம்பிறிக், திரு. நைற், திரு. திருமதி வாட், திரு. திருமதி மேயர், நைற் என்பவர்கள் 29 ஆனி 1818ம் ஆண்டில் இலங்கைக்கு வந்து காலியில் இறங்கினர். முன் ஒழுங்கு செய்திருந்தபடி லம்பிறிக் கண்டிக்கும், நைற் யாழ்ப்பாணத்துக்கும், மேயர் தம்பதியினர் படேகமவுக்கும், வாட் தம்பதியினர் கல்பிட்டிக்கும் சென்று, தம் பணிகளை ஆரம்பித்தனர். அவர்கள் தம் மறையைப் பரப்புவதற்றகாக மிகவும் பாடுபட்டனர். கல்விக்குப் பிராதான இடமளித்து, கல்வியின் மூலம் தம் மறையைப் பரப்ப முயற்சிகள் செய்தனர். இதற்கிடையில் வேறு மறைபரப்பாளர்களும் வந்து, அவர்களுடன் இணைந்து கொண்டனர். 1822 இல் கோட்டேயில் ஒரு மறைப்பணி மையமும், 1853 இல் கண்டியில் ஒரு மறைப்பணி மையமும், 1855 தேயிலைத் தோட்டங்களில் ஒரு மையமுமாக மூன்று மறைப்பணி மையங்கள் அமைக்கப்பட்டன. யாழ்பர்ணத்தில் ஒரு உயர் தரக் கல்லூரி (St. John's) 1851 இல் ஆரம்பித்தனர். 1853 இல் கோப்பாயில் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைத் தாபித்தனர். 1857 இல் கண்டியில் திரித்துவக் கல்லூரியைத் தொடக்கினர். மேலும் பெண்களுக்கென விடுதி வசதிகளுடன் நல்லூர் (1842), போரளை (1869), கோட்டை (1870), படேகம (1888), கேகாலை (1895) போன்ற இடங்களில் பல பாடசாலைகளை ஆரம்பித்தனர். யுவதிக்களுக்கென 1896 இல் சுண்டிக்குளியில் ஒரு உயர் தர பாடசாலையையும் (St. John's Girl's College), கொழும்பில் 1900 இல் மற்றொரு உயர் தர பாடசாலையையும் (Ladies' College) ஆரம்பித்தனர். பெரதேனியாவில் சிங்களப் பெண்களுக்கென ஒரு ஆசிரிய பயிற்ச்சிக் கல்லூரியும் திறக்கப்பட்டது. ஒரு கைத் தொழில் பேட்டையையும் ஆரம்பித்தனர். இவ்வாறாக கல்வித் துறை வழியாக தங்கள் மறைப்பணியை மேற்கொண்டனர்.

**கிறிஸ்தவ சீர்திருத்தச் சபை**

இச் சபை கல்வினால் ஒல்லாந்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஒல்லாந்தரின் வருகையுடன 1642 இல இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஒல்லாந்த சீர்திருத்த சபையே 2007 இலிருந்து கிறிஸ்தவ சீர்திருத்த சபை என அழைக்கப்படுகிறது. ஒல்லாந்தருக்குப் பதிலாக கிறிஸ்தவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கிலேயே இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. இதுவே முதல்முதல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட மிகப் பழமை வாய்ந்த புரொட்டஸ்தாந்து சபையாகும். ஆரம்பத்தில் அது ஒல்லாந்த இனத்தவருக்கே உரிய சபையாக இருந்த போதிலும், பின்னர் சிங்கள, தமிழ், பறங்கி மக்கள் மத்தியிலும் பரவியது. இலங்கையில் ஐந்து மாகாணங்களில், குறிப்பாக கொழும்பு மாகாணத்தில் இச் சபை பணிபுரிகிறது. இவர்கள் கல்வினின் போதனைகளையே பின்பற்றுகின்றனர். இச் சபை அவ்வளவு பெரிதாக இலங்கில் வளரவில்லை. இச் சபையில் 2000 பேர் அங்கம் வகிக்கின்றனர். அவர்களுக்கு 20 பணியாளர்கள் சேவை செய்கின்றனர். அவர்கள் இன்று பொதுவாக சமூகப் பணிகளில் ஈடுபட்டு, வறிய மக்களுக்கு உதவி புரிகின்றனர்.

**இரட்சணிய சேனை:**

இங்கிலாந்தில் வில்லியம் பூத், அவருடைய மனைவி கத்தரின் பூத் என்பவர்களினால் 1865 இல் ஆரம்பிக்கப்பட்ட இரட்சணிய சேனையின் மறைத் தூதுப் பணியினர் கப்ரன் வில்லியம் கிளாட்வின் தலைமையில் 26 தை 1883 இல் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் ஏனைய சபையினரிலிருந்து வேறுபட்டவர்கள். ஒரு வகையான இராணுவ அமைப்பைக் கொண்டவர்கள். அவர்களது பணியின் நோக்கம் எங்கெல்லாம் எவரும் சமூகப் பணியில் ஈடுபடவில்லையோ அங்கெல்லாம் தம் மதத்தை எடுத்துச் சென்று, சமூகப் பணியில் ஈடுபடுவதாகும். அதற்கேற்ப, இலங்கையில் மக்களின் துயர் துடைக்கும் பணியில் கவனம் செலுத்தினர். தெருப் போதனையின் வழியாகப் பாடல்கள், வாத்தியங்களுடன் இறைவார்த்தையை அறிவித்து, அதன் மூலம் மனிதனை நிறைவுடையவனாக வளர்ச்சியடையச் செய்தனர். ஏழை எளியவர்களின், பசியைப் போக்குதல், தூய்மைப்படுத்துதல், மீட்பு போன்ற கருப் பொருளுடன் இயங்கினர். கைவிடப்பட்டோர், புத்தி

சுயாதீனமற்றோர், அனாதைகள், வழி தவறிச் சென்றோரின் வாழ்வை ஒளிமயமாக்குவதற்கும், துன்புறுவோரின் வாழ்வைச் சீர்படுத்துவதற்கும், நல்வழிப்படுத்துவதற்கும் பணியாற்றினர். எனவே பல விடுதிகளையும், சிறுவர் பராமரிப்பு நிலையங்களையும், சமூக நிலையங்களையும், வைத்திய நிலையங்களையும், புனரமைப்பு நிலையங்களையும் உருவாக்கினர். கிராமங்களில் மட்டுமல்ல, நகரங்களிலும் இவ்வாறான பணிகளைச் செய்தனர். இன்று அவர்கள் இலங்கையில் 2,900 உறுப்பினர்களையும், 45 ஆலயங்களையும் கொண்டுள்ளனர்.

இவ்வாறு இலங்கையில் பணிபுரிய வந்த ஐரோப்பிய, அமெரிக்க மிஷனறி சபைகள் கல்வியை அடிப்படைாகக் கொண்டே தங்கள் மறைத் தூதுப் பணியில் ஈடுபட்டனர். இலங்கையின் பல பாகங்களிலும் பாடசாலைகளைக் கட்டினர். தங்களின் மதத் தலைமைப் பீடங்களினதும், இலங்கை ஆங்கில அரசாங்கத்தினதும் நிதி உதவிகளைக் கொண்டு, மாணவர்களைச் சிறந்த முறையில் பயிற்றுவித்தனர். எனவே மாணவர்கள் பெருந் திரளாக அவர்களின் பாடசாலைகளையே முற்றுகையிட்டனர். பல கத்தோலிக்க் பெற்றோரும் தம் பிள்ளைகளைப் புரொட்டஸ்தாந்து பாடசாலைகளில் சேர்த்தனர். சிறந்த கல்விமான்களான புரொட்டஸ்தாந்து மிஷனறி ஆசிரியர்கள், தங்கள் பணிக்கு தங்களை முழுவதும் அர்ப்பணம் செய்து, அருமையான சேவை செய்தனர். இருபது வருடங்களுக்குள் அவர்கள் இலங்கை எங்கும் 235 பாடசாலைகளுக்கு மேல் அமைத்து, 10,000 மாணவர்களுக்குக் கல்வி ஊட்டினர்.

**தென் இந்தியத் திருச்சபை**

தென் இந்தியத் திருச்சபையானது தென் இந்தியாவின் நான்கு மாநிலங்களில் பணிபுரிகின்ற புரொட்டஸ்தாந்து சீர்திருத்த திருச்சபைகள் இணைந்து அமைத்த ஒரு சபையாகும். மக்கள் மத்தியில் பணியாற்றுகின்ற மறைபணியாளர்கள் மத்தியில் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் நிலவ வேண்டும் என்ற எண்ணக்கருவில் இது உருவாகியது. இதன் முதற் கட்டமாக 24 ஆடி 1908 இல் பிறெஸ்பிற்றேரின் மற்றும் பப்ரிஸ்ற் சபைகள் இணைந்து, தென் இந்திய ஐக்கிய சபையை உண்டாக்கினார்கள். அதன் இரண்டாம் கட்டத்தில், முதலாம் உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து, ஒற்றுமை அமைப்பு அரும்பப் தொடங்கியது. இப் பணியில் ஈடுபடுகின்ற பொழுது, பல்வேறான இறையியல்

சிக்கல்கள் தலைதூக்கின. உதாரணமாக, ஆயர் வழி வந்த திருச்சபை, அப்போஸ்தொலிக்க பாரம்பரியம் என இன்னும் பல. ஆயினும் 1946 இல் தென் இந்திய ஐக்கிய திருச்சபை மெதடிஸ்த, அங்கிலிக்கன் திருச்சபைகளோடு இணைய விரும்பியது. இதுவே தென் இந்திய திருச்சபை உருவாக வழிகோலியது. இச் சம்பவம் 27 புரட்டாசி 1947 இல் சென்னையில் இடம் பெற்றது. தென் இந்தியத் திருச்சபை ஆயர்களின் ஆன்மீக வழிகாட்டலின் கீழ் செயற்படுகிறது. மறைமாவட்டப் பேரவை (Synod) ஆயர்களைத் தெரிவு செய்கிறது. 14 மறைமாவட்டங்களோடு ஆரம்பித்த தென் இந்தியத் திருச்சபையானது இன்று 21 மறைமாவட்டங்களாக மாற்றங் கண்டுள்ளது. அதில 3.8 மில்லியன் உறுப்பினர்களும், 1214 மறைபணியாளர்களும் உள்ளனர். இன்று இலங்கையில் 5,000 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

## 10.3.2. கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான ஒன்றிப்பு

தொடக்கத்தில் இறைவன் மனிதனை தம் உருவாகவும், சாயலாகவும் படைத்தார். அவனுக்கு வேண்டியதெல்லாம் கொடுத்து, அவனை ஒரு இன்பவனத்தில் எக்குறையுமின்றி, மகிழ்சியுடன் வாழ வைத்தார். மனிதன் மகிழ்வுடன் என்றும் வாழவேண்டுமென்பதே அவரது விருப்பம். ஆனால் மனிதன் தன் ஆணவத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும் கடவுளின் கனவைத் தகர்த்தெறிந்து, இன்பவனத்தை இழந்து, தனக்கும், தன் சந்ததிக்கும் அழிவைத் தேடிக்கொண்டான். எனினும் இரக்கமுள்ள கடவுள் அவன் அந்தப் பரிதாப அழிவு நிலையில் தொடர்ந்து வாழ்வதை விரும்பவில்லை. அவனை அந் நிலையிலிருந்து மீட்டெடுத்து, முன்னைய அவனுடைய பிறப்பு நிலைக்குத் திரும்பவும் கொண்டு வர விரும்பினார். எனவே அதற்கென ஒரு மீட்புத் திட்டத்தை வரைந்து, அதைத் தம் மகனிடம் கொடுத்து, அதை நிறைவேற்ற அவரை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தார்.

### ஒற்றுமை திருச்சபையின் இன்றியமையாத ஒரு இயல்புக் கூறு

மனுவுருவில் இவ்வுலகம் வந்த இறைமகன் இயேசு தந்தை தம்மிடம் ஒப்படைத்த மீட்புத் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கினார். தொடக்கத்திலிருந்தே தமக்குப் பின் தம் பணியை அனைத்துலக மக்களுக்கும் உலக முடிவு வரைக்கும் தொடர்ந்தாற்ற பன்னிருவரைத்

தம் சீடர்களாகத தெரிந்தெடுத்து, தம்முடன் வைத்துக் கொண்டார். அவர்களைத் தம் வாழ்விலும், வழியிலும், பணியிலும் பங்கெடுக்கப் பயிற்றுவித்தார். இறைத் தந்தையையும், அவர் அனுப்பிய கிறிஸ்துவையும் அவர்களுக்கு அறிமுகம் செய்து, அவர்களைப்பற்றி அவர்களுக்குக் கற்பித்தார். தம்முடைய படிப்பினைகள். செயல்கள், அருங்குறிகள், குறிப்பாக அவருடைய பாடுகள், மரணம். உயிர்ப்பு வழியாக கடவுளையும், அவர் மனுக்குலத்தின்மீது கொண்டுள்ள அளவிலா, எல்லையில்லா அன்பையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர்களை அவர்களுடைய பழைய பாவ பழக்க வழக்கங்களிலிருந்து விடுவித்து, அவர்கள் எப்படி கடவுளின் பிள்ளைகளாக இறையன்பிலும், சகோதர அன்பிலும் வாழ்வேண்டுமென்று தாமே வாழ்ந்து காட்டி, அவர்களுக்குப் படிப்பித்தார். இறுதியில் அவர்களை ஒரு குழுவாக அமைத்து, அதற்குப் பேதுருவைத் தலைவராக நியமித்தார். அவர்களைத் தம் ஆவியால் நிரப்பி, "என் தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன். உலகெங்கும் சென்று எல்லா இனத்தாரையும் என் சீடராக்குங்கள்" எனக் கூறி, உலகெங்கும் சென்று, உலக முடிவுமட்டும் வாழும் எல்லா இன மக்கள் மத்தியிலும் தந்தையின் மீட்புத் திட்டத்தை தனக்குப் பின் அமுல் செய்யப் பணித்து, அவர்களை அனுப்பி வைத்தார். இச் சீடர்களின் கூட்டமே "திருச்சபை" என அழைக்கப்படுகிறது.

இயேசு தம் சீடர்களைப் பயிற்றுவித்து, திருச்சபையாக அவர்களை நிறுவியபோது, அவர்களிடம் இருக்கவேண்டுமென்று அவர் மிகவும் வலியுறுத்திய முக்கிய பண்பு சகோதர அன்பு, ஒற்றுமை, ஒன்றிப்பு. அவர்கள் "ஓரே மந்தையும் ஒரே மேய்ப்பனும்" ஆக என்றும் வாழ வேண்டும். அதையே தம் சீடர்களுக்குகத் திரும்பத் திரும்பக் கற்பித்தார்.

> "என் தந்தை என்மீது அன்பு கொண்டுள்ளதுபோல, நானும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளேன். நான் என் தந்தையின் கட்டளைகளை கடைப்பிடித்து, அவரது அன்பில் நிலைத்திருப்பதுபோல, நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால், என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்".நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல, நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என்

> கட்டளை. தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை. நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள். நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை (யோவா. 15:9-14,17).

அன்புதான் கிறிஸ்தவர்களின் வாழ்வு மட்டுமல்ல, அன்பே அவர்களது பணியுமாகும். அவர்களிடம் காணப்படும் அன்பும் ஒற்றுமையும்தான் அவர்கள் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் சீடர்கள் என்பதற்கு சிறந்த அத்தாட்சி. கிறிஸ்தவர்களின் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு அவர்கள் பயன்படுத்தக்கூடிய சிறந்த, வலிமையான கருவி, ஆயுதம்.

> ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவ-ருக்குச செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர் (யோவா. 13:34-35).

> இதனால் நீரே என்னை அனுப்பினீர் என உலகம் நம்பும் (யோவா. 17: 21),

> இதனால் நீரே என்னை அனுப்பினீர் எனவும், நீர் என்மீது அன்பு கொண்டுள்ளதுபோல் அவர்கள்மீதும் அன்பு கொண்-டுள்ளீர் எனவும் உலகு அறிந்து கொள்ளும் (யோவா. 17:23).

தன் சீடர்களை அன்பிலும், ஒற்றுமையிலும் வளர்த்து உருவாக்-குவதுதான் கிறிஸதுவின் வாழ்வும், படிப்பினையுமாக மட்டுமன்றி, அவரது முக்கிய பணியாகவும் இருந்தது. தம் பணியின் முடிவில் தம் பணிபற்றிய அறிக்கையைத் தந்தையிடம் சமர்ப்பித்தபோது, "நான் அவர்களோடு இருந்துபோது, நீர் எனக்கு அளித்த பெயரின் ஆற்றலால் அவர்களைக் (ஒற்றுமையில்) காத்து வந்தேன். நன்கு பாதுகாத்தேன். எவரும் அழிவு-றவில்லை" (யோவா. 17:12). எனக் கூறுகிறார். தம்முடைய சீடர்கள் குழு, திருச்சபை ஒற்றுமையாக, ஒன்றிப்பில் வாழவேண்டுமென்பதே

இயேசுவின் விருப்பமாக, அவருடைய சிந்தனையாக, திட்டமாக இருந்துது. அவர்கள் பிரிவதை, பிளந்து போவதை அவர் ஒருபோதும் விரும்பவில்லை. அது அவர்களுடைய பணிக்குப் பெரும் இடைஞ்சலாக அமையும். அதுவே அவருடைய இறுதி மன்றாட்டாகவும் இருந்தது.

"நான் அவர்களோடு இருந்துபோது, நீர் எனக்கு அளித்த பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்து வந்தேன். நன்கு பாதுகாத்தேன். இனிமேல் நான் உலகில் இருக்கப் போவதில்லை. அவர்கள் (சீடர்கள்) உலகில் இருப்பார்கள். நான் உம்மிடம் வருகிறேன். தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்கு அளித்த பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும். உலகம் அவர்களை வெறுக்கிறது. அவர்களை உலகிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று நான் வேண்டவில்லை. தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன்" (யோவா. 17:11).

"அவர்களுக்காக மட்டும் நான் வேண்டவில்லை. அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் (திருச்சபை) வேண்டுகிறேன். எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அளித்த மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்.. இவ்வாறு நான் அவர்களுள்ளும், நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக!" (யோவா. 17:20-23).

கிறிஸ்தவர்கள் இறை அன்பிலும், சகோதர அன்பிலும், விசுவாசத்திலும் ஒன்றாயிருக்க வேண்டும் என்பதுதான் என்பது தான் இயேசுவின் ஆசையும், எதிர்பார்ப்பும், செபமும், வேண்டுதலுமாக இருந்தது. இயேசுவின் இந்த ஆசை, விருப்பம், எதிர்பார்ப்பு, கனவுக்கு அமைய ஆதிக் கிறிஸ்தவர்கள் ஒற்றுமையிலும், ஒன்றிப்பிலும் வாழ்ந்து வந்தார்களென திருத்தூதர் பணி நூலில் படிக்கிறோம்.

அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றா-

யிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களும், பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு, கோவிலில் தவறாது கூடிவந்தார்கள். பேருவகையோடும், எளிய உள்ளத்தோடும், வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு. உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள்." (தி.தூ.ப. 2:42-47).

நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் ஒருவரும் தமது உடைமைகளை தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுப் பொருளாய் இருந்தது. அவர்கள் அனைவரும் மக்களின் நல்லெண்ணத்தை மிகுதியாய்ப் பெற்றிருந்தனர் (தி.தூ.ப. 4:32-33).

ஆதிக் கிறிஸ்தவர்களின் அன்பான, பகிர்ந்து வாழும், ஒற்றுமையான வாழ்வும், அதனால் அவர்கள் மக்களின் மிகுந்த நல்லெண்ணத்தைப் பெற்று, அவர்களைக் கவர்ந்ததும் வலியுறுத்தப்படுகிறது.

புனித பவுலும் கிறிஸ்தவர்களின் வாழ்வில் இந்த ஒற்றுமையை, ஒன்றிப்பை பல முறைகளில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். ஆண்டவர் பரிசுத்த ஆவியின் வழியாக திருச்சபையை நம்பிக்கை, எதிர்நோக்கு, ஆகியவற்றின் ஒருமைப்பாட்டிற்கு அழைத்து ஒன்று சேர்த்திருக்கிறார் என்கிறார். "நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப் பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல, உடலும் ஒன்றே. தூய ஆவியும் ஒன்றே. அவ்வாறே ஆண்டவரும் ஒருவரே. நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே" (எபே. 4:4-5). அவ்வாறெனில், "கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள். கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (கலா.3:27-28).

**இன்று திருச்சபையின் நிலைமை**

ஒற்றுமை திருச்சபையின் இன்றியமையாத ஓர் இயல்புக் கூறு.

கடவுள் ஒருவரே. அவன் மகன் இயேசுக் கிறிஸ்துவும் ஒருவரே. அவர் தாபித்த திருச்சபையும் ஒன்றே. அவர் படிப்பித்த படிப்பினைகளும் ஒன்றே. அதன் தலைவரும் ஒன்றே. அதன் நம்பிக்கையும் ஒன்றே. ஆனால் இன்று கிறிஸ்தவம் சுக்கு நூறாகப் பிரிந்து, பிளவுபட்டு நிற்கிறது. இன்று ஆயிரக்கணக்கான சபைகள் தங்களைத் திருச்சபைகள் என்று அழைத்துக்கொண்டு, வேறுபட்ட நம்பிக்கைகள், கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள், ஆட்சி அமைப்புகள், தலைமைத்-துவங்கள், செயற்பாடுகளுடன், ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு நிற்கின்றன. அதுமட்டுமல்ல, அவை ஒன்றிற்கு ஒன்று முரணாகவும், எதிராகவும்கூட செயல்பட்டும் வருகின்றன. கிறிஸ்தவத்தின் இந்த பிளவுபட்ட நிலை அதன் தன்மை, உண்மை இயல்பிற்கும், உயரிய நோக்கத்திற்கும், அனைத்திற்கும் மேலாக அதை நிறுவியரின் விருப்பத்துக்கும் முரணானது. உலக மக்கள் அனைவரும் ஒரே இறைத்-தந்தையின் பிள்ளைகள் எனும் உண்மைக்கு திருச்சபை அடையாளம். அவர்களை ஒரே குடும்பமாகச் சகோதர உறவுடன் வாழ்வைக்கும் கடவுளின் கருவி அது. இவ்வாறு மக்கள் அனைவரின் ஒற்றுமைக்கும், சகோதர உறவிற்கும் சிறந்த ஒரு சின்னமாகவும், செயல்திறனுள்ள கருவியாகவும் விளங்கவேண்டிய திருச்சபை தன்னுள் ஒற்றுமையின்றிப் பிளவுபட்டு இருப்பது அதன் இயல்புக்கு எதிரானது. அதன் தாபகரின் நோக்கத்திற்கும், விருப்பத்திற்கும் முரணானது. அவருக்கு அவமானத்-தையும், வேதனையையும் அளிப்பது.

மேலும் திருச்சபையின் பிளவுபட்ட நிலை அதன்மேல் சுமத்தப்பட்டிருக்கும் பாரிய நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு ஒரு பெரும் தடை, இடைஞ்சல். இயேசு போதித்த ஒரே நற்செய்தியை பல்வேறு சபைகளின் பணியாளர்கள் வெவ்வேறு பொருள்பட போதிப்பதும், மக்களைத் தங்கள் சபைகளிலேயே சேர அழைப்பதும், ஒருவருக்-கொருவர் போட்டி மனப்பான்மையுடன் பணிகளில் ஈடுபடுவதும் இன்று நாம் பல இடங்களில் காணும் நிகழ்வு. இது மக்களின் மனதில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. நற்செய்தியின் நம்பகத் தன்மையை அழிக்கிறது. நற்செய்தியை மக்கள் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் கேட்டுக் கடைப்பிடிப்பதற்கும் தடையாக உள்ளது. இயேசு கிறிஸ்த-வர்களின் ஒற்றுமையே நற்செய்திப்பணியின் அதிசிறந்த கருவியெனக் கூறியிருக்கிறார்.

> எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக. இதனால் நீர என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும் (யோவா. 17:21).

> நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்கு-மாறு நீர் எனக்கு அளித்த மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்.. இவ்வாறு நான் அவர்களுள்ளும், நீர் என்னுள்-ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்-பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் எனவும், நீர் என்மீது அன்பு கொண்டுள்ளதுபோல் அவர்கள்மீதும் அன்பு கொண்டுள்ளீர் எனவும் உலகு அறிந்து கொள்ளும் (யோவா. 17:23).

**பிளவுகளும் ஒன்றிப்பு முயற்சிகளும்**

கிறிஸ்தவ சமூகத்தில் காணப்படும் பிளவுகள் இன்றோ, நேற்றோ திடீரெனத் தோன்றியவை அல்ல. திருச்சபையின் வரலாற்றை நாம் படிக்கும்போது, புதிய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே திருச்சபையில் பிளவுகளைக் காண்கிறோம். உதாரணமாக, கொரிந்திய திருசபையில் ஏற்பட்ட பிளவுபற்றி புனித பவுல் குறிப்பிடுகிறார்.

> உங்களிடையே சண்டை சச்சரவுகள் இருப்பதாகக் குலோயி வீட்டார் எனக்குத் தெரிவித்துள்ளனர். நான் இதைச் சொல்லக் காரணம், உங்களுள் ஒவ்வொருவரும் "நான் பவுலைச் சார்ந்துள்ளேன்" என்றோ, "நான் அப்பொல்லோவைச் சார்ந்துள்ளேன்" என்றோ, "நான் கேபாவைச் சார்ந்துள்ளேன்" என்றோ, "நான் கிறிஸ்துவைச் சார்ந்துள்ளேன்" என்றோ சொல்லிக் கொள்கிறீர்களாம் (1 கொரி. 1:11).

காலப்போக்கில், நான்காம், ஐந்தாம் நூற்றாண்டில், ஆரியுஸ், நெஸ்தோரியுஸ், பெலாஜியுஸ் போன்றோருடைய திரிபுக் கொள்கைகள் காரணமாகவும் பிளவுகள் ஏற்பட்டன. 11ம் நூற்றாண்டில் திருச்சபையில் ஏற்றபட்ட கிரேக்க சபை, உரோமை சபை என்ற கீழைய நாட்டுப் பிளவு மிகப் பெரியது. அது இன்றும் நீடிக்கிறது. 16ம் நூற்றாண்டில், மதச் சீர்திருத்தம் எனக் கூறிக்கொண்டு, மார்டின் லூதர், சுவிங்கிளி, கல்வின், 8வது ஹென்றி போன்றவர்களின் தலைமையில் ஐரோப்பாவில் பல சீர்திருத்த, புரொட்டஸ்தாந்துப் பிரிவினைச் சபைகள் தோன்றின.

சில காலத்துக்குப் பின் திருச்சபையில் பிரிவினையை ஏற்படுத்தியவர்கள் தங்களை பிழைகளை உணர்ந்து, மனம் வருந்திச் திருச்சபையுடன் இணைந்து கொண்டனர். உதாரணமாக, மார்ட்டின் லூதர் தன் இறுதிக்காலத்தில் தன் தவறுகளை உணர்ந்தார். தான் திருச்சபையை சீர்திருத்தப் புறப்பட்டு, இறுதியில் அதைச் சீர்குலைத்ததையிட்டு மனம் வருந்தினார். தனது இறுதி உரைகளில் ஒன்றில், "பாப்புவின் ஆட்சியிலிருந்ததை விட மக்கள் ஏழு மடங்கு இன்று மோசமாக உள்ளனர். அவர்கள் அதிக துன்மார்க்கராயும், கற்பில்லாதவராயும், பொறாமையுள்ளவர்களாயும், நேர்மையற்றவர்களாயும் காணப்படுகின்றனர்" என்று கூறினார். அவரது சொந்த விட்டன்பேர்க்கிலிருந்த சீர்கேடான நிலை அவரை மனம் வருந்தச் செய்தது. அதுபற்றி அவர் தம் மனைவிக்கு 1545 இல் "நாம் இந்த சோதோமைவிட்டு வெளியேறுவோம். இந்த அவல நிலையைவிட வீடுவீடாகச் சென்று பிச்சை எடுத்து உண்பதையே விரும்புகிறேன்" என எழுதினார். தோமாஸ் முன்ற்சரும் தம் இறுதி நாட்களில், தம் பேதகத்தை விட்டு, மனம் வருந்தி, திருச்சபையுடன் ஐக்கியமாகி இறந்தார். எனினும் அவர்களைப் பின்பற்றியவர்கள் மனந்திரும்பவில்லை. "எங்களுக்கு நற்செய்தியை அறிவித்து, திருமுழுக்குத் தந்து, கடவுள் மக்களாக்கிய சபையை எப்படி நாங்கள் கைவிடுவது" என்று கூறி, அப்பிரிவினைச் சபைகளில் தொடர்நது இருந்து வருகின்றனர். அவை தொடர்ந்து வளர்ந்து, இன்னும் பல்லாயிரத்துக்கு மேற்பட்ட சபைகளாகப் பிரிந்து கொண்டிருக்கின்றன. இதுவே திருச்சபையின் இன்றைய பரிதாப நிலை.

இவ்வாறு திருச்சபையில் பிளவுகள் தோன்றி தொடர்ந்து வளர்ந்தாலும், கிறிஸ்துவின் ஒற்றுமைக் கனவு கிறிஸ்தவத்தில் ஒருபோதும் மறைந்து விடவில்லை. "எல்லோரும் ஒன்றாய் இருப்பாரகளாக, "ஒரே மந்தையும் ஒரே மேயப்பனும் உருவாகும்" என்ற இயேசுவின் இலட்சிய நெருப்பு திருச்சபையில் எப்போதுமே பற்றி எரிந்து வந்துள்ளது. திருச்சபையின் 0ஆன்மாவாக விளங்கும் அனைத்தையும் இணைக்கும் ஆவியானவரின் தூண்டுதலால் அழிந்துபோன ஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு புதுப்புது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றால் பல நன்மையான விளைவுகளும் ஏற்பட்டு வருகின்றன. ஆனால் புரொட்டஸ்தாந்து சீர்திருத்தச் சபைகளின் பிரிவுக்குப் பின்பு.

அச்சபையினரை மனமாற்றி கத்தோலிக்க திருச்சபைக்குக் கொணரும் முயற்சிகள் அவ்வளவு பயனளிக்கவில்லை. அச்சபைகளுள் நான்கு நூற்றாண்டுகளாக நிலைத்து வரும் தங்களைப்பற்றிய பாதுகாப்பு உணர்வும், பிற சபைகள்பால் இருக்கின்ற பகையுணர்வும், சபைகளுக்கிடையே நிலவுகிற எதிர்வாதப் போக்கும் அதற்கு முக்கிய தடையாக இருந்துவருகின்றன.

திருச்சபையின் வரலாற்றில் ஏற்பட்ட பிரிவினைகளை நாம் படிக்கும்போது, அவை ஏற்படுவதற்கு மனிதர்களின் பெலவீனங்களும், போட்டி மனப்பான்மையும், பாவ இயல்புமே பொதுக் காரணிளென்பதை நாம் காண்கிறோம். இந்தப் பிரிவினைகள் துரதிஷ்டமானவை. கிறிஸ்துவின் விருப்பத்துக்கும், திருச்சபையின் இயல்புக்கும் முரணானவை. அவ்வாறாயின், இன்று பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு சபைகளாகவும், குழுக்களாகவும் பிளவுபட்டு இருக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் பிரிவினைகளையும், அதற்கான காரணிகள் அனைத்தையும் அழித்தொழித்து, ஒரே கிறிஸ்துவின் ஒரே திருச்சபையைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டும். கிறிஸ்துவின் விருப்பத்தை நிறைவேற்றி, அவர் கனவை நனவாக்க வேண்டும். இந்தப் பிளவுகள், பிரிவினைகளுடன் நாம் கிறிஸ்தவர்களாக வாழ முடியாதென்றும், கிறிஸ்துவின் திருச்சபைக்காக உழைக்க முடியாதென்றும், அதற்கு நாம் சான்று பகர முடியாதென்றும் நாம் உணரவேண்டும்.

> முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள். அதன்பின் உங்கள் சகோதரர் சகோதரியின் கண்ணிலிருந்து துரும்பை எடுக்க உங்களுக்குத் தெளிவாய்க் கண்கள் தெரியும் (மத். 7:5).

வரலாற்றின் ஒடுங்கிய எல்லைகளையும், பழைய பிழைகளையும் பற்றிக் கொள்ளாமல், திருச்சபையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு எனபவற்றுக்காகச் செயலாற்ற, கிறிஸ்துவின் இறுதி விருப்பம் நிறைவு பெறச் செய்ய நாம் முன்னின்று உழைக்க வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கிறிஸ்தவர்களின் சிந்தனையில் சில சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியிருக்கின்றன. அதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது, 1910ம் ஆண்டில் அங்கி-

லிக்கன் சீர்திருத்த சபையினரினால் ஆரம்பிக்கப்பட்ட "கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம்" ஆகும். இந்த இயக்கம் அங்கிலிக்கன் சபையினர் எடின்பர்க்கில் கூடிய அனைத்துலக நற்செய்தி அறிவிப்பு மாநாட்டிலிருந்து பிறந்தது. அதற்கு முன்னர் 1908 இல் அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த பவுல் வாட்சன் என்ற பணியாளர் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தைத் (தை 18-25) தொடக்கி, அதைப் பரப்பி வந்தார். இந்த வாரத்தில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காகச் சிறப்பாகச் செபிக்க வேண்டும். இவ் வழக்கம் 1916ம் ஆண்டில் திருத்தந்தை 15ம் பெனடிக்றினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கத்தோலிக்க திருச்சபை முழுவதும் விரிவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1947 இல், தென் இந்தியாவிலிருந்த அங்கிலிக்கன் சபையும், ஏனைய சில சீர்திருத்த சபைகளும் இணைந்து, தென் இந்திய திருச்சபையை அமைத்தது கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு ஒரு பெரும் தூண்டுதலாகவும், மாதிரிகையாகவும் அமைந்தது. 1948 இல் திருச்சபைகளின் உலகப் பேரவை உருவாக்கப்பட்டது அது கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு புதிய ஊக்கம் கொடுத்தது. கத்தோலிக்க திருச்சபை அதில் உறுப்பினர் ஆகவில்லை. அதைத் தொடர்ந்து, 1949 இல் உரோமையிலுள்ள நம்பிக்கைக் கோட்பாட்டுப் பேராயம் "ஒற்றுமை இயக்கம் பற்றிய அறிவுரை" என்ற அறிக்கையை வெளியிட்டது.

கத்தோலிக்க திருச்சபையின் சிந்தனையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான புதிய ஆர்வத்தையும், ஆழமான ஈடுபாட்டையும் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்படுத்தியவர் "கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருத்தந்தை" என அழைக்கப்படும் 23வது யோவான் ஆவார். தமது ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே அவர் கிறிஸ்தவ ஒன்றிப்பில் தனிப்பெரும் அக்கறை காட்டி வந்தார். ஒன்றிப்புப் பணிகளை ஊக்குவித்து நெறிப்படுத்த உரோமையில் "கிறிஸ்தவ ஒன்றிப்புச் செயலகத்தை" நிறுவினார். தமது எளிமை, இனிமை, மனத்தாழ்மை எனும் பண்புகளால் 'எதிர்ப்பாளர்' எனக் கருதப்பட்ட ஏனைய சபைக் கிறிஸ்தவர்களையும் 'சகோதரர்களாக' அணைத்துக் கொண்டார். அவர் 2ம் வத்திக்கான சங்கத்தைக் கூட்டியபோது, அதன் ஒரு முக்கிய நோக்காக கொண்டிருந்தது கிறிஸ்தவ ஒன்றிப்பே. அவருக்குப் பின் வந்த திருத்தந்தை 6ம் பவுலும் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்காக பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். தமது ஆட்சியின் துவக்கத்-

திலேயே கீழைச் சபை மறைத்தந்தை அத்தனாகோரசைச் சந்தித்தார். வத்திக்கான் சங்கத்தின் 2ம் அமர்வின் தொடக்கவுரையில் "எவ்வகையிலேனும் நாங்கள் (கத்தோலிக்கர்) இப் பிரிவினைகளுக்குக் காரணமாய் இருந்திருந்தால் தாழ்மையுடன் கடவுளிடம் மன்னிப்புக் கேட்பதுடன், எங்களால் புண்பட்டவர்களாகத் தங்களைக் கருதும் சகோதரரின் பொறுத்தலையும் வேண்டுகிறோம்" என மன்னிப்புக் கேட்டார். கத்தோலிக்க திருச்சபையின் இத்தகைய ஒன்றிப்பு முயற்சிகள் அனைத்திலும் முக்கியமானதாக அமைவது கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகளைத் தரும் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட "கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித் தொகுப்பு" என்ற ஏடாகும்.

**கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய திருச்சபையின் படிப்பினை**

கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய கத்தோலிக்க திருச்பையின் அறிக்கை அல்லது வெளியீடு இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட "கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித் தொகுப்பு" ஆகும். இங்குதான் கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய திருச்சபையின் கண்ணோட்டம், கருத்து, படிப்பினை, ஆதரவு, ஊக்குவிப்பு என்பவற்றைக் காண்கிறோம். இந்த அறிக்கை கிறிஸ்தவ சபைகளுக்கு இடையே ஒன்றிப்பின் ஒளி மயமான ஒரு புதுக் காலத்தின் துவக்கமாகக் கருதப்படுகிறது. ஆஸ்கார் கூல்மான் எனும் சீர்திருத்த சபை அறிஞர் கூற்றுப்படி, "இது ஒற்றுமைக்கு வழி திறந்து வைக்கும் ஒரு ஏடு மட்டுமல்ல, இது ஒரு புதிய சாதனை. கத்தோலிக்கர் அல்லாதோரைப்பற்றி இதுவரை வேறு எந்த ஏடுமே இதுபோல் பேசியது இல்லை". இந்த ஏட்டிலுள்ள மூன்று முக்கிய சிறப்புக் கருத்துக்களை நாம் குறிப்பிடலாம்:

(1) கத்தோலிக்க திருச்சபையைச் சாராத ஏனைய சபைகளுக்கும், அவற்றைச் சார்ந்த கிறிஸ்தவர்களுக்கும் அது காட்டும் அன்பும், மதிப்பும். இதுவரை திரிபுவாதச் சமூகங்களாகவும், பிரிவினைச் சமூகங்களாகவுமே கருதப்பட்டு வந்த ஏனைய சபைகளை இவ்வேடு திருச்சபைகள், திருச்சபைச் சமூகங்கள் என ஏற்றுக்கொள்கிறது. இயேசுவின் உண்மையான திருச்சபையின் பல பண்புகள் இச் சபைகளிலும் இருக்க முடியும். இருக்கின்றன. எனவே "மீட்பின் மறைத்திட்டத்தில் அவைகள் தங்கள்

சிறப்பையும், முக்கியத்துவததையும் இழந்து விடவில்லை" (எண்.3) என இவ்வேடு வெளிப்படையாக அறிக்கையிடுகிறது. அதுபோல் இச்சபைகளின் உறுப்பினர்கள்மேல் இவ்வேடு காட்டும் அன்பும் பெரிது. இதுவரை 'எதிர்ப்பாளர்கள்', 'பிரிவினைக்காரர்' என வர்ணிக்கப்பட்ட அவர்களை, இவ்வேடு 'ஆண்டவரில் சகோதரர், சகோதரிகள்' என அன்புடன அழைக்கிறது.

(2) கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றி இதற்கு முன்பு கத்தோலிக்க திருச்சபையில் நிலவிய கண்ணோக்கிலிருந்து இவ்வேடு முன்வைக்கும் கருத்து வியப்பளிக்கும் முறையில் வேறுபடுகிறது. இவ்வளவு காலமும் உரோமைத் திருச்சபையே ஒன்றிபின் மையமெனவும், ஏனைய சபைகள் அதில் வந்து இணைவதே கிறிஸ்தவ ஒன்றிப்பு எனக் கருதப்பட்டது. அத்தகைய கருத்து இவ் வேட்டில் மாற்றம் கண்டு, ஏனைய சபைகளிலும் இயேசுவின் ஆவி செயலபடுகிறாரென்பது ஏற்கப்பட்டு, கத்தோலிக்க திருச்சபை அல்ல, கிறிஸ்துவே அனைத்துச் சபைகளின் ஒன்றிப்பின் மையம் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

(3) கிறிஸ்தவத்தில் ஏற்பட்டுள்ள பிளவுகளுக்கு ஏனைய சபைகளையே குற்றஞ் சாட்டும் போக்கு கைவிடப்பட்டு, மாறாக பிளவுக்கு இரு சாராருமே பொறுப்பு என்பது வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே சீர்திருத்தம் எலலாச் சபைகளுக்கும் தேவை. அதுவே கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு முக்கிய வழி என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மேலும் நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து ஒரே திருச்சபையையே நிறுவினாரென்றும், கிறிஸ்தவ ஒன்றிப்பில் அனைவரும் அக்கறை கொள்ளவேண்டும் என்றும் அனைத்துக் கத்தோலிக்கருக்கும் அழைப்பு விடப்படுகின்றது. அதற்கு இதய மாற்றமும், இறைவேண்டுதலும் கலந்துரையாடலும் அவசியமென்று அறிவுரையும் அளிக்கப்படுகின்றது. இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எச்சுமைகளையும் பிற சபைகளின்மேல் சுமத்தக் கூடாதெனவும் ஆலோசனை வழங்குகின்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 16 வெளியீடுகளும் கிறிஸ்தவ சபைகளுடனான உரையாடல், ஒன்றிப்பு பற்றிய கத்தோலிக்க

திருச்சபையின் படிப்பினைகளை வெளிப்படுத்துகின்றன. அவற்றில் குறிப்பாக "திருச்சபை பற்றிய கோட்பாடு விளக்கம்" என்ற வெளியீட்டில் பிற கிறிஸ்தவ சபைகளுக்குள் உள்ள நல்ல பண்புகள் எடுத்துக்-காட்டப்பட்டு, கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பு பரிந்துரைக்கப்பட்டி-ருக்கிறது. திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் எழுதிய "ஒருமைப்பாடு ஏற்படுவதற்கான" (Ut Unum Sint'' என்ற சுற்று மடலில் கிறிஸ்தவ சீடர்களின் மனிதப் பெலவீனங்களினால் கடந்த காலங்களில் ஏற்பட்ட பிழைகள், விளக்கமில்லாத கருத்துக்கள், சபையின் பிரிவினைகள், பிரிந்து செல்லல் ஆகியன ஏற்பட்ட போதும், இவை மென்மேலும் பிரிந்து வேறாகச் செல்வதற்குக் காரணமாகாமல், மனமாற்றத்தாலும், சகோதர உணர்வினாலும், இறை விருப்பத்துக்கும், தூய ஆவியின் செயல்பாட்டுக்கும் இடமளித்துச் செயலாற்றினால் இறைவன் தமது விருப்பத்திற்கேற்ப, தகுதியான பொருத்தமான சந்தர்ப்பத்தில், கிறிஸ்தவ சபைளின் ஒற்றுமை, ஒருமைப்பாடு எனும் இவ்வுலகிற்கு அப்பாலுள்ள கொடையை எமக்குத் தருவார் என்பதில் சந்தேகமில்லை என எடுத்து-ரைகிறார். ஆகவே கிறிஸ்தவ சபைகளுக்கிடையில் இறையியல் ரீதியா-கவும், உறுப்பினர்கள் அனுபவிக்கின்ற ஒன்றிப்பினை அடிப்படையாகக் கொண்டும், உரையாடலொன்றில் ஈடுபட்டு, சபைகளின் ஒற்றுமையை முன்னிட்டு செபிப்பதும், அதற்காக உழைப்பதும் கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும், "ஒரே ஆயரின் கீழ் ஒரே மந்தை" ஆவதற்கு இறைவன் எம்மை அழைத்துள்ளார்.

ஆசிய ஆயர் மன்றம் அண்மையில் கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிப் பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது: "முழுமையானதும், கண்களால் காணக்கூடியதுமான திருச்சபையின் ஒன்றிப்பே எங்கள் மட்டில் கடவுளின் திருவுளமாக இருக்கிறது. பல்வேறுபட்ட மதங்களும், இனங்களும், கலாச்சாரங்களும் நிறைந்துள்ள ஆசியாக் கண்டத்தில், கிறிஸ்துவில் எங்கள் ஒன்றிப்பின் காணக்கூடிய வெளிப்பாடு உதயமாகவிருக்கிற புதிய மானிடத்திற்கான எதிர்பார்ப்பின் வலிமையான அடையாளமாக விளங்கும். இந்த நம்பிக்கையை முழுமையான இதயத்துடன் நாம் வலுவாக வலியுறத்தி, இது நிறைவேற அனைத்து ஆசியக் கிறிஸ்தவர்களும் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று அழைக்கிறோம்". மேலும் "ஆசியத் திருச்சபை" என்ற மடலிலே, "மக்கள் கிறிஸ்தவர்களிடமிருந்து ஒற்றுமையின் தெளிவான அடையாளமொன்றை

எதிர்பார்க்கும் ஆசியாவில், எல்லா மக்களும் ஒன்றிணைய முதலில் இயேசுக் கிறிஸ்துவை தமது விசுவாசத்தில் ஆண்டவராக ஏற்றுக் கொண்டவர்களிடம் இந்த ஒன்றிப்பு நிகழவேண்டும். தந்தை அவரை உலகிற்கு அனுப்பினார் என்று உலகம் ஏற்றுக் கொள்வதற்காகஈ அவரது சீடர்கள் அனைவரும் வெளிப்படையாகவும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று இயேசுவே அழைப்பு விடுத்துள்ளார். அதற்காக செபித்துள்ளார். பிளவுபட்ட கிறிஸ்தவம் என்னும் இடறல் ஆசியாவில் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு மிகப் பெரிய தடையாக உள்ளது. ஆசியாவில் தங்கள் மறைகள், மற்றும் பண்பாடுகள் வழியாக ஒற்றுமையையும் இசைவையும் தேடும் மனிதர்கள் கிறிஸ்தவர்களிடையே ஏற்படும் பிளவுகளை இயேசுக் கிறிஸ்துவுக்கு எதிரான எதிர்சாட்சி-களாகக் கருதுகின்றனர்" எனக் கூறியிருக்கிறார்.

**கிறிஸ்தவ சபைகளுடனான ஒன்றிப்பு முயற்சிகள், உரையாடல்களின் பேறுகள்**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வெளியீடுகள், குறிப்பாக "கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித் தொகுப்பு" கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கு ஒரு புதிய தெம்பையும், உத்வேகத்தையும் கொடுத்திருக்கிறது. இதை நாம் நம் கண்களாலே பார்க்கக் கூடியதாக இருக்கிறது. பல்வேறு கிறிஸ்தவ சபைகளுக்கிடையே நிலவிய பகை, வெறுப்பு, சந்தேகம், போட்டி மனப்பான்மை, ஒன்றயொன்று பற்றிய இழிவான விமர்சனம் என்பன கடந்த முப்பது ஆண்டுகளில் பெரிதும் குறைந்துள்ளன. நல்லெண்ணமும், நல்லுறவும் சிறிது சிறிதாக அவற்றிற்கிடையே அரும்பத் துவங்கியுள்ளன. அந் நல்லுறவின் வெளிப்பாடாக பல துறைகளில் பல்வேறு சபைகளின் ஒத்துழைப்பும், கூட்டு முயற்சிகளும் மலர்ந்துள்ளன. கூட்டு இறை வேண்டல்கள், கூட்டு வழிபாடுகள் நடை-முறைக்கு வந்துள்ளன. வேறு சபைப் போதகர்களை தங்கள் சபைக் கூட்டங்கள், வழிபாடுகளுக்கு அழைப்பது, மறை உரையாற்ற வைப்பது ஆங்காங்கே நிகழ்ந்துள்ளன.

அண்மையில் கூட்டு முயற்சியாக, புதிய தமிழ் மொழிபெயர்ப்-பாகப் பொதுத் திருவிவிலியம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து திருவிவிலிய நூல்களுக்கு பொது விளக்கவுரைகள் எழுதும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசிடமிருந்து தங்கள்

பொது உரிமைகளைப் பெற பல சபைகள் ஒருங்கிணைந்து முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு, கலந்துரையாடல், மன்றாடுதல், ஒற்றுமைக்கான வழிபாடுகள் போன்றவற்றை ஒழுங்கு செய்து நடத்தி வருகிறார்கள். உலக சபைகளோடு தொடர்பு கொண்டு, ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் ஒற்றுமை வாரம் அறிவிக்கப்பட்டு, அனுசரிக்கப்பட்டு வருகின்றது. கல்வி பொதுத் தராதர உயர்தர வகுப்புக்குரிய பொதுக் கிறிஸ்தவ பாடத்திட்டதனை தயாரித்து, அமுல் செய்தல், குருமடங்களில் கற்பிப்பதற்கு வேறு சபைகளிலிருந்து விரிவுரையாளர்களை வரவழைத்தல் போன்ற பல விடயங்கள் நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்தவ ஒன்றிப்பு இயேசுவின் கனவு. நமது கடமை. அதனை வளர்க்கும் பணி அதிகாரிகள், அறிஞர்களுக்கு மட்டும் உரியது அன்று. எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒன்றிப்பின் பணியாளர்களே. ஏனைய சபையினரைப்பற்றி அதிகம் தெரிந்து கொள்ளுதல், அவர்களுடன் நல்லுறவுடன் பழகுதல். அவர்கள் நம்பிக்கைகளை அறிதல், அவர்களின் நடைமுறைகளைப் பற்றி அவர்கள் மனதைப் புண்படுத்தும் விமர்சனங்களைத் தவிர்த்தல், அவர்களுடன் நட்புறவை உருவாக்குதல், அவர்கள் குடும்ப, சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதல், சமய சடங்குகளிலும், விழாக்களிலும் அனுமதிக்கப்படும் அளவு பங்கேற்றல் என்பன எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒற்றுமைக்காகச் செய்யமுடிந்த சாதாரண முயற்சிகளே. இவ்வாறு ஒரு மக்கள் இயக்கமாக மாறும்போதுதான் கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கம் தன் இலட்சியத்தை இறையருளால் அடைய முடியும்.

## 10.3.3. பல்வேறு சமயங்களுடனான உரையாடல்

"படைத்தவன் எல்லாம் படைத்தான் மனுவுக்காகப் படைத்தான். மனுவைப் படைத்தான் தனை வணங்க" என்பது நம் முதியோர் வாக்கு. அனைத்து உலகையும் மனிதனுக்காகப் படைத்த இறைவன், மனிதனைத் தனக்காக் படைத்தான். அக் கருத்தையே புனித அகுஸ்தினார், "இறைவா! எம்மை உமக்காகவே படைத்தீர், உம்மை அடைந்தாலன்றி எங்கள் இதயங்கள் இளைப்பாற்றி அடைய மாட்டா" எனக் கூறி வெளிப்படுத்துகிறார். அதையே தத்துவ ஞனிகள், "மனிதன்

இயல்பாகவே இறைவனைத் தேடுபவன்" எனக் கூறியுள்ளனர். மனிதன் உலகில தோன்றிய காலம் முதல் தன்னைப் படைத்து, தனக்கு உயிரளித்து, தன்னைப் பாதுகாத்து வரும் அந்தப் பரம்பொருளை, பராசக்தியைத் தேடுகிறான். இன்னும் தேடிக்கொண்டே இருக்கிறான். தனக்கு அப்பாற்பட்ட சக்திகளை, தன்னால் கட்டுப்படுத்த முடியாத சக்திகளாகிய நெருப்பு, நீர், வெள்ளம், காற்று, புயல், சூரியன், இடி, மின்னல் போன்றவற்றிலே கடவுளைக் கண்டான். இயற்கையின் போக்கில், சீற்றத்தில், மனித வாழ்வின் நிகழ்ச்சிகளில் மறைந்திருக்கும் பராசக்தியைக் கண்டான். சிலர் கடவுளை ஒரு தந்தையாகவும், வேறு சிலர் ஒரு தாயாகவும், இன்னும் சிலர் ஒரு அரக்கனாகவும், கொடியவனாகவும் கண்டனர். இந்த தேடுதல் முயற்சியின் கனிகளாகத் தோன்றியவைதான் மதங்கள். இவை "இயற்கை மதங்கள்" என அழைக்கப்பட்டன. சில வேளைகளில் தம்மைத் தேடும் மனிதனுக்கு கடவுளே முன்வந்து தம்மை வெளிப்படுத்தியும் இருக்கிறார். அவற்றை "வெளிபாட்டு மதங்கள்" என அழைப்பர். இம் மதங்கள் தங்கள் தேடுதலின் வழியாகப் பெற்ற அறிவுகள், அனுபவங்கள், படிப்பினைகளின் அடிப்படையில் மனிதரின் பல்வேறு வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு, கேள்விகளுக்கு விடை அளித்து, வாழ்வுக்கு வழிகாட்டி, உலகிறகு உதவி வருகின்றன.

எனவே உலகின் பல்வேறு சமயங்களும். தத்துவங்களும் தத்தமது படிப்பினைகள். அனுபவங்கள், அறிவுகளின் துணையுடன், உண்மையைத் தேடி, கடவுளைத் தேடிச் செல்லும் பயணத்தில் ஈடுபட்டுள்ளன. அனைத்து மதங்களும் மனிதரை நல்வழிப்படுத்தவும், அவர்களை ஒழுக்கமாக வாழப் பயிற்றவும், இறைவனை அனுபவிக்கவும், இறைவனிடம் இட்டும் செல்லவுமே உலகில் தோன்றின. ஆனால் நாம் இன்று வாழும் உலகையும், அங்கு நடைபெறும் நிகழ்வுகளையும் சற்று உற்று நோக்குகையில், உலகெங்கும் காணப்படும் பதற்ற நிலைகளுக்கும், முரண்பாடுகளுக்கும், போர்பூசல்களுக்கும் அநேகமாக மதங்களே முக்கிய காரணமாக இருப்பதை அவதானிக்கிறோம். ஆக்க சக்தியாக இருக்கவேண்டிய மதங்கள் இன்று அழிவுச் சக்திகளாக மாறியிருக்கிறதையும் நாம் தெளிவாக உணர்கிறோம். இன்று உலகெங்கும் மத அடிப்படைவாதம் பரவியுள்ளது. அதைப் பயன்படுத்தி, இலாபம் தேடி மதங்கள் வியாபாரக் கூடங்களாகவும்,

மக்களை ஒடுக்கும் வன்முறைச் சக்திகளாகவும் மாற்றப்படுகின்றன. அதனால் மதங்கள் உருவாக்கி வளர்க்க வேண்டிய ஒற்றுமையையும், சாந்தியையும், சமாதானத்தையும் மனுக்குலம் இழந்து வருகிறது.

மதமானது இலகுவில் மனிதரின் உணர்ச்சிகளைக் கிளப்பிவிடக் ஒரு விடயம். ஏனெனில் மதத்துடன் மனிதனின் மீட்பு, நிலைவாழ்வு, மறுவுலக வாழ்வு என்பன சம்பந்தப்பட்டிருக்கின்றன. அதில விட்டுக்-கொடுப்பிற்கு .இடம் இல்லை. அதுமட்டுமல்ல, பலருடைய தனித்துவம் அவர்கள் பின்பற்றும் மதத்தோடு ஒன்றித்திருக்கிறபடியால், ஒருவரின் மத நம்பிக்கையை தாக்குவது அல்லது எதிர்ப்பது ஒருவரின் உயிரையே தாக்குவதற்கு, எதிர்ப்பதற்கு ஒத்ததாகக் கருதப்படுகிறது. மேலும் மதங்களில் இருக்கும் சில அம்சங்களும் முரண்பாடுகளுக்கு மறைவான காரணங்களாக அமைகின்றன. ஒவ்வொரு மதத்திலும் அவர்கள் எவ்வித கேள்வியும் எழுப்பாமல், விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்ளவேண்டிய சத்தியங்களும், உண்மைகளும் உள்ளன. அவை ஏனைய மதங்களில் ஏற்றுக்கொள்ளும் விசுவாச உண்மைகளுக்கு இடமளியாத, விட்டுக்-கொடுக்காத மனநிலைக்கு இட்டுச் செல்கின்றன. அவை கடவுளின் வார்த்தைகளென்றால், எப்படி அவற்றை விட்டுக் கொடுப்பது?

மேலும், ஒவ்வொரு மதத்திலும் அடிப்படைவாதிகள், கடும்போக்காளர்கள் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் தங்கள் சுய இலாபத்திற்காக, மதத்தை வலியுறுத்தி, மிகைப்படுத்தி, அரசியலுடன் தொடர்பு படுத்தி, தேசியவாதத்துக்கு இட்டுச் செல்கி-றார்கள். இதன் விளைவாக மதங்களுக்கிடையில் முறுகல், மோதல் நிலைகள் ஏற்படுகின்றன. உலகெங்கும் மதப் பூசல்கள், மதச் சண்டைகள், பிணக்குகள் நிகழுகின்றன. மத கடும்போக்காளர்களும், அரசியல்வாதிகளும் அதைப் பயன்படுத்தி, தங்களுடைய ஆதிக்கத்தையும், செல்வாக்கையும் தக்கவைத்துக்கொள்ள மக்களின் மத உணர்வுகளைப் கிளப்பி விடுகின்றனர். சில மதத்தவர்கள் தங்கள் மதத்தைப் பரப்பி, அதைப் பின்பற்றுவோரின் தொகையை அதிகரிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். வேறு சிலர் மற்ற மதங்கள் பரவுவது தங்கள் மதத்துக்கு ஆபத்து என்று கருதி, மற்ற மதங்களைத் தடைசெய்கிறார்கள். பிற மதவழிபாடுகளைக் குழப்புகிறார்கள். மதங்களுக்கிடையிலான இத்தகைய முரண்பாடுகளின் நிமித்தம் பலர்

மதங்களில் விசுவாசத்தை இழந்து, கடவுள் மறுப்புக் கொள்கைக்குத் தள்ளப்பட்டு வருகிறார்கள்.

இத்தகைய மோதல்கள், முரண்பாடுகள் பெருபாலும் ஏனைய மதங்களைப் பற்றிய போதிய அறிவில்லாமையாலும், புரிந்துணர்வு இல்லாமையாலும், வீண் சந்தேகங்கள் வழியாகவும் இலகுவாக ஏற்படுகின்றன. எனவே அவை தவிர்க்கப்பட வேண்டும். அன்றேல் ஒழிக்கப்பட வேண்டும். இன்று உலகில் காணப்படும் பல் வேறு மதங்களில் கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து, பௌத்த மதம் என்பன முக்கிய மதங்களாகக் கணிக்கப்படுகின்றன. அவற்றைப் பின்பற்றுகிறவர்கள்: கிறிஸ்தவர்கள் 2.1 பில்லியன் - 33%, இஸ்லாமியர் 1.5 பில்லியன்- 21%, இந்துக்கள் 900 மில்லியன் - 16%, பௌத்த மதத்தினர் 376 மில்லியன் - 6%. இந்தப் பல்மதச் சூழல் ஒரு நாட்டிலோ, ஒரு பகுதியிலோ மட்டும் நிலவும் ஒன்றல்ல. இன்று இது அனைத்துலகச் சூழல் ஆகிவிட்டது. எனவே இன்றைய உலகில் மதச் சந்திப்புகள், மத உரையாடல்கள், மத நல்லிணக்கம் அவசியம் தேவை என்பதை அனைத்துலக மக்களும் உணர்ந்து வருகின்றனர். அது சமூக ஒருமைப்பாட்டிற்கு மட்டுமல்ல, உலக அமைதிக்கும் கூட அடிப்படை நிபந்தனை என்பதில் சந்தேகமில்லை. கத்தோலிக்க திருச்சபையும் இதன் அவசியத்தை நன்கு உணர்ந்திருக்கிறது. எனவே, மதங்களுக்கிடையே கலந்துரையாடல்களை ஏற்படுத்தி, ஏனைய மதங்களைப் பற்றிய அறிவை வளர்த்து, புரிந்துணர்வை ஏற்படுத்தி, ஏனைய மதங்களை மதித்து, அவற்றிலுள்ள நல்லவைகளை ஏற்று, அவற்றுடன் நல்லுறவை ஏற்படுத்த திருச்சபை விரும்புகிறது. இரண்டாம் வத்திக்கான சங்கம் வெளியிட்ட புரட்சிகரமான "கிறிஸ்தவமல்லாத சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு" பற்றிய அறிக்கை, அதற்குரிய வழியை அதற்குத் திறந்து விட்டிருக்கிறது. அதன்வழியாக திருச்சபை கிறிஸ்தவ சபைகளோடு மட்டுமல்ல, பிற சமயத்தவர்களோடும், ஏன் கடவுள் நம்பிக்கையில்லாதவர்களோடும் கூட உரையாட அழைக்கப்படு-கிறது. இத்தகைய அணுகு முறை திருச்சபையின் வரலாற்றிலே ஒரு திருப்பு முனை எனலாம். உறவு உரையாடலுக்கும், உரையாடல் புரிந்துணர்வுக்கும், பகிர்வுக்கும் இட்டுச் சென்று, மீட்புப் பணியின் நிறைவை நோக்கிப் பயணம் செய்யும் ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்பட திருச்சபை இன்று முனைந்துள்ளது.

**பழைய ஏற்பாட்டில்:** திருவிவிலியமானது யூதர்களினதும் (பழைய ஏற்பாடு), கிறிஸ்தவர்களினதும் (பழைய, புதிய ஏற்பாடுகள்) வேத நூலாகும். பழைய ஏற்பாட்டில் அதன் ஆசிரியர்களின் நோக்கம் தங்கள் இனத்தவராகிய யூத மக்கள் தங்கள் வரலாற்றிலே தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு, தாங்கள் அறிந்து, அனுபவித்துவரும் இறைவனை தங்கள் சந்ததியினருடன் பகிர்ந்து கொள்வதாகும். அவர்களின் கண்ணோட்டத்தில் அக்காலத்திலிருந்த யூதரல்லாத பிற மதங்கள் பற்றிய படிப்பினை இடம் பெறவில்லை. அப்படி இடம்பெற்றிருந்தாலும் எதிரமறையான கருத்திலேயே பார்க்கப்பட்டன. பிறமதங்களை அவர்கள் திறந்த மனதுடன் நோக்கவில்லை. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகிய யூதர்களைத் தவிர, ஏனையோர் அனைவரும் அழிவுக்குரியவர்கள் என்பதே அவர்கள் கருத்தாகவிருந்தது.

எனினும், ஆபிரகாமின் அழைத்தலோடு தொடங்கும் யூத வரலாற்றுக்கு முற்பட்ட பகுதியானது (தொ.நூ. 1-11) மனுக்குலம் அனைத்துக்கும் உரியது. அங்கே இறைவன் அனைத்து மக்களுக்கும் மீட்பரை அனுப்புவதாக வாக்களிக்கிறார். "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும்" (தொ.நூ. 3:15). அனைத்து மனுக்குலத்துக்கும் ஒரே மீட்பு வரலாறு, ஒரே மீட்பர். இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில அது இன்னும் தெளிவாகக் காணப்படுகிறது. "இதோ! நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் வழிமரபினரோடும், மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும் என் உடன்படிக்கையை நிலை நாட்டுகிறேன்" (தொ.நூ. 9:10-11). இஸ்ரயேலின் இறைவனின் விருப்பமானது ஒரு சிலருடைய மீட்பு அல்ல. மாறாக அனைவரும் அவர் அளிக்கும் மீட்பை அனுபவிக்கவேண்டும் என்பதே. இறைவனுடைய செயற்பாடானது எவ்வித வேறுபாடுமின்றி, எல்லையின்றி, எல்லா இனத்தவருக்கும், எல்லா மதங்களுக்கும், தத்துவங்களுக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

**புதிய எற்பாட்டில்:** பிறமதத்தவர்கள் மட்டில் கிறிஸ்துவின் கண்ணோட்டம் வேறுபடுகின்றது. அவர் பிறந்த பொழுது வானதூதர், "நல் மனத்த-

வருக்கு அமைதி உண்டாகுக" என வாழ்த்தினர். அந்நிய நாட்டு ஞானிகள் அவரை வழிபட வருகை தந்தனர். வந்து வழிபட்டு, காணிக்கை கொடுத்தனர். கிறிஸ்து தம் பணியின்போது, பிற சமயங்களையும், பிற சமயத்தவர்களையும் ஏற்றுக் கொண்டு, அவர்களின் கருத்துக்களை பொறுத்துக் கொண்டு, அவர்களுடன் உரையாடலில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களைக் காண்கிறோம். பழைய ஏற்பாட்டில் காணப்படும் பிற மதங்களுக்கு எதிராகக் காணப்பட்ட தடைகளை இயேசு அகற்றுகின்றார். உதா. சமாரியப் பெண்ணோடு கிணற்றடியில் உரையாடுகிறார். அவளிடம் தண்ணீர் வாங்கிக் குடிக்கிறார். "குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்" (யோவா. 4:1-11). கானனேயப் பெண்ணுடன் உரையாடி, அவளுடைய மகளைக் குணமாக்குகின்றார். "அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்" (மத். 15:37-38). உரோமைய நூற்றுவத் தலைவனின் மகனைக் குணமாக்குகிறார். அவனுடைய விசுவாசத்தைப் பாராட்டுகிறார். "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை. கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் விண்ணரசில் பந்தியில் அமர்வர்" (மத். 8:5-13).

இயேசுவின் இறையரசு பற்றிய படிப்பினைகள் யூத இனத்தவர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல. அது அனைவருக்கும் திறந்த செய்தியாகும். "அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி" (யோவா. 1:9). "இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்" (யோவா. 1:29). "தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீரப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்" (யோவா. 3: 16-17). "நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன்" (யோவா. 12:32). "இக் கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் என் குரலுக்குச் செவி சாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்ற நிலை ஏற்படும்" (யோவா. 10:16). இயேசு உலகிற்கு வந்தது யூதருக்காக மட்டுமல்ல,

அனைத்துலக மக்களுக்கும் மீட்பைப் பெற்றுக் கொடுக்கவே வந்தார். இயேசு கொண்டுவந்த மீட்பு யூத இனத்தவருக்கு மட்டும் உரியதொன்றல்ல. சகல மனித குடும்பங்களையும் சேர்ந்த எல்லோருக்குமென அவரது படிப்பினைகள், உவமைகள், உருவகங்கள் வழியாகவும் விளக்கப்பட்டுள்ளன. "அழைக்கப் பெற்றவர்களோ தகுதியற்றுப் போனார்கள். எனவே நீங்கள் போய்ச் சாலையோரங்களில் காணும் எல்லாரையும் அழைத்து வாருங்கள்" (மத். 11:20-24 25:31-32, 22:2-14)

திருத்தூதர் பணி நூலில், பேதுரு கொர்ணேலியுஸ் வீட்டில், "கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை என்பதை நான் உண்மையாகவே உணர்கிறேன். எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து, நேர்மையாகச் செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர்" (தி.தூ.ப. 10:34-35). இங்கு கிறிஸ்தவர்கள் அல்லாதோர் மட்டில் கடவுளின் மனநிலையைக் காண்கிறோம். எந்த மதத்தவரும் கடவுளுக்கு ஏற்புடையதைச் செய்தால் அவர்கள் யாவேக்கு ஏற்புடையவர்கள். புனித பவுல் பிற இனத்தவர்களின் சிறப்பு அப்போஸ்தலராக நியமிக்கப்படுகிறார். அவர் அத்தெனஸ் நகரில் அரயோப்பாகு மன்றத்தில் கிரேக்கர்களிடம், நீங்கள் மிகுந்த சமயப்பற்று உள்ளவர்களென்பதை நான் காண்கிறேன். "நீங்கள் அறியாமல் வழிபட்டுக் கொண்டிருக்கும் தெய்வத்தையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்" (தி.தூ.ப. 17:22-23). கிரேக்கர்களின் மதப் பற்றை பாராட்டுகிறார்.

**பிறமதங்களைப்பற்றிய திருச்சபையின் படிப்பினைகள்.**

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் பல வெளியீடுகள் கிறிஸ்தவம் அல்லாத பிற மறைகள் பற்றிய திருச்சபையின் கண்ணோட்டம், மனப்பாங்கு, தொடர்புகள் பற்றிக் கவனம் செலத்துகின்றன. முதலாவதாக, "கிறிஸ்தவம் அல்லாத மதங்களோடு திருச்சபைக்குள் உறவு" என்னும் வெளியீடு உலக மதங்களில் உள்ள உண்மைகளைக் கண்டு, அவற்றைப் பாராட்டுகிறது. அவ்வுண்மைகளைத் தேடிப் பார்த்து விளங்கிக்கொள்ள கிறிஸ்தவர்களுக்கு அழைப்பு விடுகிறது. இந்து. இஸ்லாம், பௌத்த, யூத சமயங்களில் பொதிந்த உண்மைகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அவற்றை மெச்சுகிறது. "இச் சமயங்களிலே காணக்கிடக்கின்ற உண்மையானதும், தூயதுமான எதையுமே கத்தோலிக்க திருச்சபை வெறுத்து ஒதுக்கவில்லை. தன்னுடைய கொள்கையிலிருந்தும் போதனைகளிலிருந்தும் பலவற்றில் மாறுபடினும்,

எல்லா மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையின் ஒளிச்சுடரை மீண்டும், மீண்டும் பிரதிபலிக்கின்ற செயலமுறைப் பாணிகள், வாழ்க்கை முறைகள், நெறிகள், கோட்பாடுகள் ஆகியவற்றைக் கத்தோலிக்க திருச்சபை உண்மையாகவே மதித்துப் பொற்றுகின்றது" (இல.2).

மேலும் "கத்தோலிக்க திருச்சபை தன் மக்களுக்கு அறிவுறுத்துவது என்னவென்றால்: கிறிஸ்தவர்கள் தம் நம்பிக்கைக்கும், வாழ்விற்கும் சான்று பகரும்கால், கிறிஸ்தவமல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களோடு முன்மதியுடனும், அன்புடனும் உரையாடல் நிகழ்த்த வேண்டும். அவ்வாறே அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். மேலும் கிறிஸ்தவமல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களிடத்தில் காணப்படுகின்ற அருள் நெறி, மற்றும் அறநெறி சார்ந்த நலன்களையும், சமூக-பண்பாட்டு விழுமியங்களையும் ஏற்றுக்கொண்டு, அவற்றைப் பேணி வளர்ச்சியுறச் செய்ய வேண்டும்" (இல.2).

அத்துடன் பிறமதத்தவர்களைச் சகோதர அன்போடு அணுக வேண்டுமெனக் கூறுகின்றது: "யாவரும் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். அவர்களில் சிலரை நம் உடன்பிறப்புகளாக நாம் நடத்த மறந்தோம் என்றால் கடவுளை அனைத்து மக்களின் தந்தையென அழைத்து நாம் மன்றாட இயலாது. "அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை" (1 யோவா. 4:8)

என விவிலியம் கூறுமளவிற்குத் தந்தையான கடவுளோடு மனிதர் கொண்டுள்ள உறவும், அவர்களின் உடன்பிறப்புகளான மற்ற மனிதரோடு அவர்களுக்குள்ள உறவும் நெருங்கிப் பிணைந்துள்ளன. (இல.5).

மேலும் "திருச்சபை" பற்றிய வெளியீட்டிலே, கிறிஸ்தவம் அல்லாத சமயங்களை விசுவசிப்பவர்களும் கடவுளின் மக்களோடு பல்வேறு முறைகளில் தொடர்பு கொண்டவர்கள். எனவே அவர்களுக்கும் நல்ல உள்ளமும், தூதுப் பணியை நிறைவேற்றுவதற்கு அழைப்பும் உண்டு (இல.16.17). அதைத் தொடர்ந்து, "இன்றைய உலகில் திருச்சபை" என்ற வெளியீடு, திருச்சபைக்கு இடையூறுகள் செய்பவர்கள் மட்டிலும் நல்ல உள்ளமும், மீட்பை அறிவிப்பதற்கும் திருச்சபைக்கு

அழைப்பொன்று உண்டென இப் பொதுச்சங்கம் எடுத்துக் காட்டுகிறது (இல.92).

பிற சமயங்களில் உள்ள உண்மைகள், மதிப்பீடுகள் ஆகியவற்றைத் திருச்சபை பாராட்டி மதிப்பளிக்கின்றது என்பதனால் அந்த சமயங்களில் பெலவினங்கள், பூரணமற்ற தன்மை என்பன இல்லையென நினைக்கக்கூடாது. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் மனிதன் தான் விரும்பிய மதத்தை விசுவசிக்க முடியுமென்னும் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்கிறது. இச் சுதந்திரம் தனிநபருக்கும, குழுக்களுக்கும் இருக்கவேண்டும் என்பதோடு, எவரும் ஒரு சமயத்தை ஏற்றுக்கொள்வதில் இன்னுமொருவரை கட்டாயப் படுத்தாதிருத்தல் வேண்டுமெனவும் கூறுகிறது (மதச் சுதந்திரம் 2).

சில பிரதேசங்களில் கிறிஸ்தவ மக்கள் மிக் குறைவாகவே உள்ளனர். உததாரணமாக இலங்கையில் பௌத்தர்கள் 70% இந்துக்கள் 15%, இஸலாமியர் 7.5%, கிறிஸ்தவர்கள் 7.5% உள்ளனர். அநேக பிறமதத்தினர் மத்தியில் நாம் வாழ்வதால், பிறமதத்தினரோடு நாம் கௌரவமாகவும், அன்பாகவும் தொடர்பு கொள்ள வேண்டும். சமயங்களுக்கிடையிலான நல்லுறவு, உரையாடல் எமக்கு முக்கியமாகும். இது அமைதியான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். இறைவனுடைய மீட்புக் கொடையை நாம் அனுபவிக்கக் கூடியதாயிருக்கும். எல்லா மதங்களுடனும் ஏற்படுகின்ற உரையாடலின் காரணமாக உருவாகின்ற அன்னியோன்னியம், விளங்கிக்கொள்ளும் தன்மை, நட்புறவு, உதவிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு அன்பு நிறைந்த சமூகமும் உருவாகும். திருத்தந்தை 2ம் யோண் போல் அனைத்துலக பிற மதங்களின் பிரதிநிதிகளை புனித பீரான்சிஸின் நகராகிய அசீசியில் 27.10.1986 இல் ஒன்று கூட்டி, பல்வேறு மதங்களைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் அவர்களுடைய மரபுகளைக் கைவிட்டுவிடாது மனித குலத்தின் நன்மைக்காகவும், அமைதிக்காகவும் இணைந்து செபிக்கவும், உழைக்கவும் இயலுமென எண்பித்திருக்கிறார்.


**உரையாடல் வழியாகக் கிட்டியுள்ள நன்மைகள்**

இரண்டாம் வத்திக்கான் சங்கம் அறிமுகம் செய்துள்ள பிற மதங்களுடனான உரையாடல் அணுகு முறை உறவுச் செடியாய் வளர்ந்து வருவதை எவரும் மறுக்க முடியாது. அதிர்ச்சி தரும் பெரும்

மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டாலும், பல பலன்களை அளித்துள்ளது. கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக நடந்துவரும் இந்த உரையாடல்கள் வழியாக கிறிஸ்தவர்கள் பிற சமயங்களை அதிகம் அறிந்து கொள்ளவும், மதிக்கவும், அச் சமயங்களைப் பின்பற்றுபவர்களோடு ஒத்துழைக்கவும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். பிற சமயங்கள் பற்றிக் கிறிஸ்தவர்களிடையே நிலவிவந்த தவறான கருத்துக்கள் மறைந்து, நல்லெண்ணமும், நல்லுறவும் உருவாகி வருகின்றன. இருதரப்பிலும் ஒருவரையொருவர் அறியவும், ஏற்றுக் கொள்ளவும் வேண்டிய திறந்த மனப்பான்மை வளர்ந்து வருகிறது. ஒரு சில இடங்களில் இன்னமும் சமயப் பூசல்கள் இருப்பினும், பொதுவாக சங்கம் அறிமுகம் செய்த புதிய நோக்கு பரவி வருகிறது.

மேலும் கிறிஸ்தவர்களின் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கும் சமய உரையாடல் பணிக்கும் உள்ள தொடர்பும், உறவும் தெளிவாகி வருகிறது. இன்றைய கிறிஸ்தவ சாட்சியத்திற்கு பிறசமய உரையாடல் இன்றியமையாதது என்பதும் வெளிப்படுகிறது. பல் சமய உரையாடல் திருச்சபையின் நற்செய்திப் பணியின் ஒரு பகுதியாகும். ஏனெனில் இன்று பிற சமயத்தவரோடு உறவின்றி நாம் தனித்த தீவுகளாய்ச் சாட்சிய வாழ்வு நடத்த முடியாது. எனவேதான் உரையாடல் அனுபவம் பெற்ற ஒருவர் கூறுகிறார்: "இன்று சமய நம்பிக்கை கொண்டுள்ளோர் பிற சமய உறவு கொண்டவராகத்தான் வாழவேண்டும்". ஏனெனில் இறைநம்பிக்கை வாழ்வு என்பது ஓர் உறவு வாழ்வு, அழைப்பிற்குக் கூறும் பதில் மொழி. அத்துடன் சமய உரையாடல் திருச்சபையின் பண்பாட்டு மயமாக்கல் முயற்சிக்கும் பெரிய உதவியாக இருக்கிறது.







அருட்பணி பிலிப் இம்மானுவேல் இயேசுதாசன் அ.ம.தி. அடிகளார் யாழ் மறை மாவட்டத்தின் பருத்தித்துறைப் பங்கைச் சேர்ந்த புலோலி என்ற கிராமத்தில் 1940ம் ஆண்டில் உதித்தவர். 1958இல் அமல மரித் தியாகிகள் சபையில் இணைந்து துறவற வாழ்வை மேற்கொண்ட அவர், 1964இல் இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தனது குருத்துவ வாழ்வில் பதினெட்டு ஆண்டுகள் தியான போதகராகப் பணி புரிந்த அவர், நாட்டின் பல் வேறு பாகங்களிலுமுள்ள தமிழ்ப் பங்குகளில் மறைபோதகம் செய்துள்ளார். தொடர்ந்து இருபது ஆண்டுகளுக்கு மேலான காலத்தை அமல மரித் தியாகளின் குருமாணவர்களின் உருவாக்கத்திற்கென அர்ப்பணித்து, அரும்பெரும் பணியாற்றியிருக்கிறார். திருவிவிலியத்தில் சிறப்புப் பாண்டித்தியம் பெற்றுள்ள அவர், கண்டி, அம்பிற்றியாவிலுள்ள தேசிய குருமடத்திலும், யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புனித பிரான்சீஸ்கு சவேரியார் பெரிய குருமடத்திலும், சிரேஷ்ட வேதாகமப் பேராசிரியராக பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியிருக்கிறார். மேலும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக க.பொ.தா உயர் தர மாணவர்களுக்குரிய கிறிஸ்தவ நெறியில் ஈடுபாடு கொண்டுவந்திருக்கும் அடிகளார் காலத் துக்காலம் மாறுபடும் பாடத் திட்டத்திற்கு அமைய, அவர்களுக்குரிய பாடநூல்களையும் தயாரித்து வெளியிட்டு வந்திருக்கிறார். அதே வரிசையில்தான் இப்பொழுது அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் புதிய க.பொ.தா. உயர்தர கிறிஸ்தவ பாடத்திட்டத்துக்கு அமைய **"விதையொன்று வளர்கிறது"** என்ற பாட நூலை தயாரித்து நமக்கு அளிக்கிறார். அவருடைய முதிர்ந்த அறிவு, நீண்ட அனுபவத்தின் கனியாக வெளிவருகின்றது இந்நூல்.

**ஆசிரியரின் ஏனைய ஆக்கங்கள்:**

- சிலுவையில் சிந்தை (திருப்பாடுகள் தியானம்)
- வேதாகமம் தோன்றிது எவ்வாறு?
- வேதாகத்தைப் படிப்பது எப்படி?
- எச்சபையும் திருச்சபையா?
- "உன் பெயர் பாறை"
- மரியன்னைப் பக்தி
- புனிதர் வழிபாடு சிலை வழிபாடுதானா?
- இறுதி அஞ்சலி (இறந்தோர்க்கான செப வழிபாடுகள்)
- பரிசுத்த ஏடுகளைக் கற்றல்
- கிறிஸ்தவ வாழ்வு
- மனுவார்த்தையில் இறைவார்த்தை
- கடுகு மரம்
- இயேசுவின் நான்கு முகங்கள்
- Our Tribute (5 Vols) Biographies of the deceased Oblates)